தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1981 ஏப்ரல் 4, 6, 7, 8 மற்றும் 9-ம நாட்கள்

தொகுதி XVIII எண்கள் 1 முதல் 5 வரை

©
தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

[ரு. 2]

D
N2(1,3) N8
N83.185
122192

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

(1981 ஏப்ரல் 4, 6, 7, 8 மற்றும் 9-ஆம் நாட்கள்)

(தொகுதி 18 எண்கள் 1 முதல் 5 வரை)

## உள்ளடக்கம்

பக்கங்கள்


தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் — i—iv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். — v—vi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர் பட்டியல் (தொகுதிகள் உட்பட அகர வரிசையில்). — vii—ix

அரசினர் சட்ட முன்வடிவுகள்—

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு, 1981 — 233—250, 336—354, 392—393

கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 — 57—78

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 1981 — 78—90

...ரின் அடையாளங்களைப் பதிவு செய்தல் ...ருத்த) சட்டமுன்வடிவு, 1981 — 90—106

...திட்ட அமைப்பு (திருத்த) சட்டமுன் — 107—122

...) சட்டமுன்வடிவு, 1981 — 195—231

...(நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) ...முன்வடிவு, 1981 — 355—392

...சட்ட முன்வடிவு, 1981 — 714—715

...(திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 57

பக்கங்கள்

அரசினர் தீர்மானங்கள்—

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியவர்கள் மீது நடவடிக்கை 232—233

விதி 31-ஐத் தளர்த்தல் 392

அரைமணி நேர விவாதம்—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் பாதிப்பு 250—

அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை 401

விதி 103 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை 179—180

அறிவிப்புகள்—

அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்திற்கேற்ப கட்சிகளுக்கு ஒதுக்கப்பெறும் நேரம் 404—405

இந்தோனிசியா பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவேற்பு 102

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.)

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது 222—23

பேரவை அலுவல் 177—179

மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு 1981, (ஆ.இ.) 195

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது—தீர்ப்பு 700—701

வினாப்பட்டியல் தேதி மாற்றம் 392

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

எஸ். எஸ். எல். சி., தேர்வு எழுத பணம் கட்டிய மாணவர்கள் சிலருக்குத் தேர்வு எழுத என், ஹால் டிக்கட் கொடுக்கப்படாதது

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர்கள் போராட்டம்

பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல்





பக்கங்கள்

ஒழுங்குப் பிரச்சினை—

கன்னவலியோடு உறுப்பினர் அவைக்கு வருதல் 360

கவன ஈர்ப்புகள்—

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து 45—46

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம் 315—329

கோவை சேரன் போக்குவரத்து ஊழியர்களுக்கும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும் மோதல் 704—714

கோவை மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைகளில் அடைமானம் வைக்கப் பெற்ற நகைகள் களவு 701—704

சங்கரன்கோவில் கைத்தறி நெசவாளர்கள் போராட்டம் 329—336

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் 47—56

பவானி சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்களது வேலை நிறுத்தம் 192—195

வருமானம் அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்குச் சர்க்கரை வழங்கல் 180—192

தகவல் கோரல்—

அரசுப் பேருந்தில் ஜாஸ் இசை ஒலி பரப்பப்பெறுவது 684

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 38—42, 683

...ாலைபேசி ஆண்டுக் கட்டணத்தை அரசு 305—306

683—684

...பாசச் சுவரொட்டி 305

...கனின் சுருக்க வெளியீடு

...ன்வடிவு குறித்து சில பத்திரிகைகளில் 303—305

123—265,

...க்கப்பெற்ற ஏடுகள் 393—400,

540—541

792

பக்கங்கள்

வரவு-செலவுத் திட்டம், ——————கெடுப்பு—(தொடர்ச்சி).

கோரிக்கை என் 1—நிலவரித்துறை

கோரிக்கை என் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கோரிக்கை என் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 715—791

கோரிக்கை என் 18—மருத்துவம் 401—403

கோரிக்கை என் 19—பொதுச் சுகாதாரம் 405—540

வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 1—38, 129—162, 267—302, 659—683



## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்டமுன் வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப்பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் 'ப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் ‌கின்றன.

ாகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப்பெற்றுள்ள சில ் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :—

அறிக்கை

அறிவிப்பு

அரை மணி நேர விவாதம்

குறுகிய கால விவாதம்

பொது விவாதம்

| | |
|---|---|
| ஆ.உ. | ஆளுநர் உரை |
| உ.பி. | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.ஆ.நி. | சட்டமுன் வடிவின் அறிமுக நிலை |
| ச.மு.ஆ. | சட்ட முன்வடிவின் ஆய்வுநிலை—இந் நிலையில் (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்த படி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற் கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச.பிரி.ஆ. | சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்தல். |
| ச.பே. | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | தகவல் கோரல் |
| த.வி. | தன்னிலை விளக்கம் |
| தீ. | தீர்மானம் |
| உ.தீ. | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே.அ. | பேரவையின் அலுவல் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

(1981 ஏப்ரல் 4, 6, 7, 8 மற்றும் 9 ஆம் நாட்கள்)

(தொகுதி 18—எண்கள் 1 முதல் 5 வரை)

### அ.


| | பக்கங்கள் |
|---|---|
| **அங்காடிகள்—** | |
| கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலைநிறுத்தம் (க.ஈ.) | 315—329 |
| **அங்குசாமி, திரு. ச.—** | |
| தேவகோட்டை அரசு மருத்துவ மனை, புகார்கள் | 665—666 |
| **அப்பாதுரை, திரு. மு.—** | |
| எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, மாணவர்களுக்கு ஹால் டிக்கட் கொடுக்கப்படாமை (ஒ.தீ.) | 43 |
| கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981. | 70—71 |
| கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.). | 315—329 |
| தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (க.ஈ.). | 47, 50, 51 |
| ...செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— | |
| ...தாரம் | 402 |
| ...மூ.— | |
| ...ணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, | 228, 244—249, 349—350 |
| ...தேர்வு, மாணவர்களுக்கு ஹால் டிக்கட் ...ரமை, (ஒ.தீ.). | 43 |

பக்கங்கள்

அம்பிகாபதி திரு. மு.—தொடர்ச்சி.

கன்வலியோடு உறுப்பினர் அவைக்கு வருதல், (ஒ.பி.) 360

கோவை சேரன் போக்குவரத்து கழகம், ஊழியர்—தொழிலாளர் மோதல், (க.ஈ.) 704

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம் (ஒ.கி.) 163

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து, (ஒ.கீ.) 306, 309—311

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் 476—480

அரங்கநாதன், திரு. எஸ்.—

தர்மபுரி அக்ரோ சர்வீஸ் சென்டர், ஆழ்கிணறு தோண்டும் இயந்திரங்கள் 161

அரங்கநாயகம், திரு. செ.—

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, மாணவர்களுக்கு ஹால் டிக்கட் கொடுக்கப்படாமை, (ஒ.கீ.) 43—4

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (க.ஈ.அ.) 47—56

அரங்கராசன், திரு. வெ.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள், (த.கோ.) 683

துறையூர், மருத்துவமனை விஸ்தரிப்பு 293

அரைமணி நேர விவாதம்—

கன்னியாகுமரி மாவட்டம், முந்திரித் தொழிலாளர்கள் பாதிப்பு 250—26

அலுவலகங்கள்—

சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் கட்டுதல், அவராங்குரிச்சி

சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் கட்டுதல், பெருநாழி

வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலக மாற்றம்







பக்கங்கள்

அலுவலர்கள்—

தேவகோட்டை அரசு மருத்துவ மனை, புகார்கள் 665—666

அழகர்சாமி, திரு. சோ.—

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 349—350

உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை, (த.கோ.) 38—42

கைத்தறி நெசவாளர்கள் போராட்டம், சங்கரன்கோயில், (க.ஈ.) 329—330, 335—336

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம், (ஒ.கீ.) 162, 166—170, 177

நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 114—115

பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு, (த.கோ.) 305

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 372—376

வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல், (க.ஈ.) 180, 183—184

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல், (ஒ.கீ.) 690—692

அன்பழகன், திரு. க.—

இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 1981 210—212, 345—346, 351—353, 354

...மைப்பு (திருத்த) சட்ட முன் 108

...குறித்து சில பத்திரிகைகளில் 303—304

...டமுன்வடிவு, 1981 201—203

பக்கங்கள்

அன்பழகன், திரு. க.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் 493—515, 522

அன்பழகன், திரு. தி.—

திருப்பத்தூர்-குப்பம் (ஆந்திர மாநிலம்), பேருந்து விடுதல் 669—670

ஆ.

ஆசிரியர்கள்—

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி, போராட்டம், (க.ஈ.) 47—56

ஆண்டி அம்பலம், திரு. மெ.—

தமிழ்நாடு திரையரங்குக் கழகம், கடன் தொகையை அதிகரித்தல் 14—19

மிகப் பின் தங்கியோர், விகிதாச்சார ஒதுக்கீடு 129—133

ஆண்டித்தேவர், திரு. எஸ்.—

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம் (ஒ.தீ.) 162

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல், (ஒ.தீ.) 688—689

ஆதிதிராவிடர் நலன்—

பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கல் 660—662

ஆலயங்கள்—

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயம், முள்புதர்களை அகற்றுதல் 662—663

சௌந்திரராசப்பெருமாள் கோயில் மண்டபம் கட்டும் பணி வட்டமறை

ஆறுமுகம், திரு. எம்.—

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு, மாணவர்களுக்கு ஊரல் கொடுக்கப்படாமை, (ஒ.தீ.)





பக்கங்கள்

ஆறுமுகம், திரு. எம்.—தொடர்ச்சி.

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.) 315, 317—318, 319

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 85—86

கோவை சேரன் போக்குவரத்துக் கழகம், ஊழியர்-தொழிலாளர் மோதல், (க.ஈ.) 704, 709—710

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம், (ஒ.தீ.) 162

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (க.ஈ.) 47, 51

பவானி, சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.) 192, 194—195

ஆறுமுகம், திரு. சேலம் மு.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் 414—421

ஆறுமுகம், திரு. த.—

அகரம்-சிகூர், வெள்ளாற்றில் பாலம் கட்டுதல் 20—22

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், தலைமை அலுவலகம் மாற்றம் 673—675

இ

... எஸ்.—

... கள் போராட்டம், சங்கரன்கோவில், 330—332, 333, 334, 336

... அமைப்பு (திருத்த) சட்ட முன் ... 107, 108, 109, 110, 111, 121—122

இராகவானந்தம், திரு. எஸ்.—தொடர்ச்சி.

பக்கங்கள்

பவானி, சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.அ.) 192—193, 194, 195

இராசகுமார், திரு. மே. அ.—
தியாகதுருகம், சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் கட்டுதல் 267—268

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை.
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 733—735

இராசமாணிக்கம், திரு. இரெ.—
உறுப்பினர்களின் தொலைபேசி ஆண்டுக் கட்டணத்தை அரசு ஏற்பது (த.கோ.) 305
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (க.ஈ.) 47
வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல் (ஒ.நி.) 694—696

இராசரத்தினம், திரு. து.—
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (க.ஈ.) 47, 56

இராசாம்பாள், திருமதி தா.—
ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர், பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு 660—662

இராசாராமன், திரு. எஸ்.—
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை.
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்



பக்கங்கள்

இராசு, திரு. ஜே. எஸ்.—
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (க.ஈ.) 47, 54—55

இராமச்சந்திரன், திரு. எம். ஜீ.—
இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 344, 346

இராமச்சந்திரன், திரு.ச.—
இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 1981 221—224, 223—224
பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியவர் மீது நடவடிக்கை (நி.) 232—233
பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் நிகழ்ந்த விபத்து (ஒ.நி.) 312—315
மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 355, 382—392, 392
விதி 31-ஐத் தளர்த்தல், (நி)

இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந.—
தென்னாற்காடு மின் திட்டம், இரண்டாகப் பிரித்தல் 559—560

இராமசாமி, திரு. எஸ். என்.—
அரசுப் பேருந்துகள் புதிய வழிதடங்களில் விடுதல் 294—303
கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் ...தம் (க.ஈ.) 315

...ர் கே. பி.—
...தவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு, 61—62

... திரு. எல்.—
... பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 249—250

## இ—தொடர்ச்சி.


பக்கங்கள்

இளையபெருமாள், திரு. எல்.—தொடர்ச்சி.

கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 62—63

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 — 82—85

நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 116—117

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 — 379—382, 382

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

நிலவரித்துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் — 773—774, 780—781


## ஈ.


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

ஒகேனக்கல் மின் திட்டம், காமதத்திற்கான காரணம் — 137—139

கைத்தறி நெசவாளர்கள் போராட்டம், சங்கரன்கோவில் (க.ஈ.) — 329—330, 333—334

கோவை சேரன் போக்குவரத்துக் கழகம், ஊழியர்-தொழிலாளர் மோதல் (க.ஈ.) — 704

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம் (ஒ.தி.) — 162—165

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (க.ஈ.) — 4

தீப்பெட்டி காகிதம், தொழிற்சாலை அமைத்தல்

பாபநாசம் லோயர் கேம்ப், மின் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையில் கையாடல்

பாலிடெக்னிக்குகள் அமைத்தல்




## ஈ—தொடர்ச்சி.


ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—தொடர்ச்சி.

பக்கங்கள்

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் நி விபத்து (ஒ.தி.) — 306—307

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

நிலவரித்துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் — 716—717, 402

மருத்துவம்—

பொதுச் சுகாதாரம்

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல் (ஒ.தி.) — 692—693

வாதம்சேரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோவை), கையாடல் — 681—683

வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகம், மாற்றம் — 271—272


## உ.


உகம்சந்த், திரு. எஸ். டி.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

நிலவரித்துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் — 753—756

உணவுப்பொருள்கள்— தொழிற்சாலை, போச்சம்பள்ளி — 268—271

...ரிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, — 349—350, 163

... நெசவாளர்கள் போராட்டம், (ஒ.தி.)

...அடையாளங்களைப் பதிவு செய்தல் ... சட்ட முன்வடிவு, 1981 — 95—3..., 30

...மின் நிலையத்தில் ... (ஒ.தி.)

உ—தொடர்ச்சி.

பக்கங்கள்

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு
நிலவரித்துறை
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்
மருத்துவம், பொதுச் சுகாதாரம் 403

உமாநாத், திரு. ரா.—
இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 206—209, 220, 221, 226, 227, 229—230, 349—350
உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை (த.கோ.) 40
சந்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம் (ஒ.நி.) 162
சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 103
பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து (ஒ.நி.) 306, 311
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
நிலவரித்துறை
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 773

ஊனமுற்றோர்—
பயிற்சிக் கூடம் ஆரம்பித்தல், சப்பளூர் 37—38

ஏ.

ஏடுகள்—
பேரவைமுன் வைக்கப்பெற்றவை 123, 26



ஒ.

பக்கங்கள்

ஒலி, ஒளிக் காட்சி—
மாமல்லபுரம் 283—288

ஒழுங்குப் பிரச்னைகள்—
பார்க்க—தலைவர்

க.

கணேசன், திரு. இ.—
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
மருத்துவம்
பொதுச் சுகாதாரம் 466—473

கருணாநிதி, டாக்டர் மு.—
இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டமுன்வடிவு, 1981 229
மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 205

கருப்பையா, திரு. இரா.—
இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டமுன்வடிவு, 1981 209—210
கோவை சேரன் போக்குவரத்துக் கழகம் ஊழியர்-தொழிலாளர் மோதல் (க.ஈ.) 704
சந்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம் (ஒ.நி.) 162
வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல், (க.ஈ.) 180, 185—186, 187
வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல் (ஒ.நி.) 684

கருப்பையா, திரு. ஏ. டி.—
பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து, (ஒ.நி.) 306
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
மருத்துவம்
பொதுச் சுகாதாரம் 444—447

பக்கங்கள்

கருப்பையா, திரு. ஏ. டி.—தொடர்ச்சி
- வறட்சியால் மாநிலம் பாதிக்கப் பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல், (ஒ.நீ.) — 684
- வால்பாறை, அக்காமலையிலிருந்து குடிநீர் கொணர்தல் — 159

கல்விக்கூடங்கள்—
- பாலிடெக்னிக்குகள் (புதிதாக) அமைத்தல் — 142
- பாலிடெக்னிக்குகள், பெண்களுக்கு தனியாக அமைத்தல் — 143—146

கவன ஈர்ப்புகள்—
- ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து — 45—46
- கைத்தறி நெசவாளர்கள் போராட்டம், சங்கரன்கோவில் — 329—336
- கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி-ஊழியர்கள் வேலை நிறுத்தம் — 315—329
- கோவை சேரன் போக்குவரத்துக் கழகம் ஊழியர்—தொழிலாளர் மோதல் — 704—71
- கோவை மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள், நகைகள் களவு — 701—70
- தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் — 47—5
- பவானி, சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் — 192—195
- வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல் — 180—192

கழகங்கள்—
- தமிழ்நாடு திரையரங்குக் கழகம், கடன் தொகையை அதிகரித்தல் — 14—19

காட்டுவளம்—
- மரம் நடுவிழா, திட்டங்கள் — 7

கிட்டப்பா, திரு. என்.—
- தமிழ்நாடு பால்வள நிறுவனம், தாக்கட்டுப்பாடு முறை



பக்கங்கள்

கிருட்டிணமூர்த்தி, திரு. சா.—
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
  - மருத்துவம்
  - பொதுச் சுகாதாரம் — 473—475

கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—
- கன்னியாகுமரி மாவட்டம் முந்திரித் தொழிலாளர்கள் பாதிப்பு, (அ.வி.) — 258—265
- துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம் (அ.) — 179—180

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—
- இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 — 351
- நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 109, 117—120
- மின்சாரம் வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 — 355—359, 362, 380—381, 387
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
  - மருத்துவம்
  - பொது சுகாதாரம் — 405—414

கிருஷ்ணன், திரு. ரா.—
- கைத்தறி நெசவாளர்கள் போராட்டம், சங்கரன்கோவில், (க.ஈ.) — 329—330, 332, 333
- சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம், (ஒ.நீ.) — 102
- சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 94—95
- [illegible]இன்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து, (ஒ.நீ.) — 306
- [illegible]யால் மாநிலம் பாதிக்கப் பெற்றிருக்கும்போது [illegible]வுக் கடன்களை வசூலித்தல் (ஒ.நீ.) — 684

பக்கங்கள்

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி—தொடர்ச்சி.

குடிநீர்—
சென்னை மாநகராட்சி 153—156
வால்பாறை, அக்காமலையிலிருந்து குடிநீர் கொணர்தல் 159
வேடந்தவாடி, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல் 19—20

குப்புசாமி, திரு. கே.—
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
நிலவரித்துறை.
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 751—752
மருத்துவம்
பொதுச் சுகாதாரம் 440—444

குமரி அனந்தன், திரு.—
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ஆசிரியர் பட்ட மேற் படிப்பின் தரம் 140—141
இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டமுன்வடிவு, 1981 215—217
மனைவி தாய்-சேய் நல விடுதி, மருத்துவ வசதி 27
மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 203

குலசேகர், திரு. ஏ. டி.—
கோயம்புத்தூர், சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.) 315, 322, 323
கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 78—80

குழந்தைவேலு, திரு. ப.—
கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981



பக்கங்கள்

குழுக்கள்—
பொதுக் கணக்குக் குழு, எட்டாவது அறிக்கை அளித்தல் 401

கூட்டுறவு—
கோவை மத்திய வங்கி, நகைகள் களவு, (க.ஈ.) 701—704
திருவில்லிபுத்தூர் ஆண்டாள் நெசவாளர் சங்கம், சமபங்கு சிக்கன நிதி 680—681
நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுதல், திருவில்லி புத்தூர் 31—32
மின்தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையில் கையாடல், பாபநாசம் லோயர் கேம்ப் 146—148
மென்னந்தி-நாகாச்சி பால் வழங்கும் சங்கம், கடன் இடைக் காமை 1—3
வாதம்சேரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோவை), கையாடல் 681—683

கேசவ ஆதித்தன், திரு. சி.—
காயல்பட்டினம் அரசு மருத்துவமனை, வசதிகள் 26

கைத்தறி—
துணி இரகங்கள், விசைத்தறியில் நெய்ய தடை 32—35
துணிகள் விற்பனை, சின்னாளப்பட்டி 675—679
நெசவாளர்கள் போராட்டம், சங்கரன்கோவில் (க.ஈ.) 329—336

கோமதி சீனிவாசன், திருமதி—
கால்நடை மருத்துவர் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 57, 71—74, 76—78

கோவைத் தம்பி, திரு.—
இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு, 1981 344—345
கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.) 315, 32[illegible]—323
மருத்... வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) ... சட்ட முன்வடிவு, 1981 364—367

A 20

பக்கங்கள்

**சங்கரய்யா, திரு. என்.—**
இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 1981 — 222, 225—226, 231, 233—244, 349—350
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
மருத்துவம் பொதுச் சுகாதாரம் — 436—440, 504—505

**சட்ட முன்வடிவுகள்—**
இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 1981 (ஆ.நி.) — 206—231, 235—250, 336—354, 392—393
கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981, ஆ.நி. — 57—74
பிரி.ஆ. — 74—78
நிறைவேற்றுதல் — 78
கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 :
ஆ.இ. — 78
ஆ.நி. — 78—89
பிரி.ஆ. — 89
நிறைவேற்றுதல் — 90
சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 :
ஆ.நி. — 90—[illegible]
பிரி.ஆ.
நிறைவேற்றுதல்



பக்கங்கள்

**சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**
நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981—
அ.நி. — 107
ஆ.நி. — 107—122
பிரி.ஆ. — 122
நிறைவேற்றுதல்
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981—
ஆ.இ. — 195,
அ.நி. — 195—206
மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981—
ஆ.நி. — 355—360, 361—392
பிரி.ஆ. — 392
நிறைவேற்றுதல்
வன (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 :
அ.நி. — 714—715
வாடகை வண்டி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 :
அ.நி. — 57

**சமரசம், டாக்டர் கே.—**
மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 — 362—364

**சமூக நலன்—**
மகளிர் சங்கங்கள், கறவை மாடுகள் வாங்க நிதி உதவி — 35—37

**சாகுல் ஹமீது, திரு. ஏ.—**
இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 1981 — 217
கோட்டாறு சேக்குத் தம்பி பாவலருக்கு நினைவு மண்டபம் — 288—290
மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 199—200, 204

சாலைகள்— பக்கங்கள்

கிருஷ்ணகிரி—ஓசூர் நெடுஞ்சாலை, பழுது பார்த்தல் 22—23

சித்தன், திரு. என். எஸ். வி.—

கப்பலூர், உடல் ஊனமுற்றோருக்கு பயிற்சிக் கூடம் 37—38

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.) 325—326

315, 325—326

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர்கள் போராட்டம் (ஒ.தி.) 163

சித்தையன் கோட்டை, மருத்துவமனை கட்டுதல் 291—292

டோரா பாறை நதி, பாசனத்திற்குத் திருப்புதல் 161—162

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து (ஒ.தி.) 306, 308—309, 310, 311

பொதுக் கணக்குக் குழு எட்டாவது அறிக்கை, அளித்தல் 401

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

நிலவரித் துறை,

இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு

இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

மருத்துவம் 715

பொதுச் சுகாதாரம் 402, 403

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல், (ஒ.தி.) 684—688

சிவசாமி, திரு. செ.—

இருக்கு இராமநாதபுரம், போர்வெல் போடக் கடன் 148—151

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து, (ஒ.தி.) 306

மேன்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் வழங்கும் சங்கம், கடன் கிடைக்காமை

சிவப்பிரகாசம், திரு. சி.—

மகளிர் சங்கங்கள், கறவை மாடுகள் வாங்க நிதி உதவி







பக்கங்கள்

சின்னசாமி, திரு. எம்.— 368

தாந்தோணி மலை மார்க்கெட்டிங் கமிட்டிக்கு நில ஆர்ஜிதம் 28—30

போக்குவரத்துக் கழகம், மாவட்டந்தோறும் அமைத்தல்

சின்னராசு, திரு. மா.—

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.) 315, 326—327

80—82

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 268—271

சனோலா என்ஜின் தொழிற்சாலை, போச்சம்பள்ளி

சுந்தரம், திரு. கே. ஆர்.—

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.) 315

86—87

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு, 1981 306

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து (ஒ.தி.)

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

நிலவரித் துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு 715

இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

மருத்துவம் 408

பொதுச் சுகாதாரம்

சுந்தரம், திரு. ப.— 22—23

கிருஷ்ணகிரி-ஓசூர் நெடுஞ்சாலை, பழுதுபார்த்தல்

சுந்தரம், திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

மருத்துவம் 421—426

பொதுச் சுகாதாரம்

| | பக்கங்கள் |
|---|---|
| **சுந்தரராஜ், திரு. நா.—** | |
| இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 1981 | 212 |
| | 224—225 |
| கன்வலியோடு உறுப்பினர் அவைக்கு வருதல் (ஒ.பி.) | 360 |
| கன்னியாகுமரி மாவட்டம் முந்திரித் தொழிலாளர்கள் பாதிப்பு (அ.வி.) | 253—255 |
| தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் (க.ஈ.) | 47 |
| மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 | 200—201 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— | |
| மருத்துவம் | |
| பொது சுகாதாரம் | 485—493 |
| **சுப்பிரமணியன், திரு. உ.—** | |
| அரசுப் பேருந்தில் ஜாஸ் இசை ஒலிபரப்பப் பெறுவது, (த.கே.) | 684 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— | |
| நிலவரித் துறை, | |
| இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு, | |
| இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 716, |
| | 725—733 |
| **சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.—** | |
| பொட்டிபுரம் பகுதி, கட்டபொம்மன் கண்மாயைச் சீர்படுத்துதல் | 23—24 |
| **சுப்பிரமணியன், திரு. ஜி. கே.—** | |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— | |
| மருத்துவம் | |
| பொதுச் சுகாதாரம் | |





| | பக்கங்கள் |
|---|---|
| **சுற்றுலா—** | |
| கும்பகோணம், சுற்றுலா மையமாக்குதல் | 11—14 |
| தாரமங்கலம், தங்கும் விடுதி கட்டுதல் | 664 |
| திருச்செங்கோடு, மாளிகை கட்டுதல் | 664—666 |
| **செங்கோட்டையன், திரு. கு. அ.—** | |
| சிறுவலூர், ஆரம்பச் சுகாதார நிலையத்தில் குடிநீர் கிணறு அமைத்தல் | 293—294 |
| **செம்மலை, திரு. செ.—** | |
| தாய்-சேய் நலத் திட்டம், டென்மார்க் அரசு உதவி | 27—28 |
| தாரமங்கலம், சுற்றுலா வாரியம் மூலம் தங்கும் விடுதி கட்டுதல் | 664 |
| மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 | 376—378 |
| வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு— | |
| நிலவரித் துறை | |
| இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு | |
| இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 735—738 |
| வறட்சியால் மாநிலம் பாதிக்கப் பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல் (ஒ.பி.) | 684 |
| **சேதுராமன், ஏ. எம்.—** | |
| ஆற்காடு தொகுதி, மருத்துவ மனைகளை விரிவுபடுத்துதல் | 667—668 |
| **சோமசுந்தரம், திரு. எஸ். டி.—** | |
| ஆலவாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து (க.ஈ.அ.) | 46 |
| மதுவிலக்கு சட்டமுன்வடிவு குறித்து சில பத்திரிகைகளில் வந்த செய்தி (த.கே.) | 303—304 |
| மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 | 195, 203 |
| | 205 |

## ச.—தொடர்ச்சி

பக்கங்கள்

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—தொடர்ச்சி.**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 715—716
717
768—791

**சோமு, திரு. என் வி. என்.—**

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.) 315

**சௌரிராஜன், டாக்டர் கே.—**

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 195—197

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
மருத்துவம்
பொதுச் சுகாதாரம் 451—457

## த.

**தங்கமணி, திரு. கே. எம்.—**

கோவை சேரன் போக்குவரத்துக் கழகம், ஊழியர்-தொழிலாளர் மோதல் (க.ஈ.) 704

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 359—360,
361—362

**தங்கராசு, திரு. ஏ.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்



## த—தொடர்ச்சி.

பக்கங்கள்

**தலைவர்—**

அறிவிப்புகள்—

அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்திற்கேற்ப கட்சிகளுக்கு ஒதுக்கப்பெறும் நேரம் 404—405

அலுவல் வரிசையில் மாற்றம் 177—179

இந்தோனேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவேற்பு 102

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது 231—233

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது-தீர்ப்பு 700—701

வினாப் பட்டியல், தேதி மாற்றம் 392

**தலைவர்—**

தீர்ப்புரைகளும்—குறிப்புரைகளும் :

உரிமைப் பிரச்சினை :

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும் 231—233

வானொலி நிலையத்தில் அவை நிகழ்ச்சிகளை அறிவிப்பதில் தவறு ஏற்படாதிருக்க அவர்கள் தங்களது நிலையத்தின் நிருபர்களையே பேரவைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாக வானொலி நிலையம் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்று அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்தின் மீது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

வானொலி நிலையத்தாருக்கு இது குறித்து எழுதப்பட்டது. அவர்களிடமிருந்து வந்துள்ள கடிதத்தைப் பார்க்கையில் இது அனைத்திந்திய அளவில் கையாளப்படும் ஒரு முறையாகத் தெரிகிறது. எனவே, இது குறித்து அரசு அளவில் உயர் மட்டத்தில் மைய அரசுடன் தொடர்பு கொண்டு வழி காண்பது முறையாக இருக்கும் 700—701

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

எஸ்.எஸ்.எல்.சி., தேர்வு எழுத பணம் கட்டிய மாணவர்களுக்குச் சரியான ஹால் டிக்கட் கொடுக்கப்படாததாலும், தேர்வு எண் கொடுக்கப்படாததாலும் மாணவர்கள் தேர்வு எழுதாமல் பாதிக்கப்பட்டுள்ளதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து—

அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 43—45

தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் கூட்டுறவு வங்கிகளும் நிலவள வங்கிகளும், விவசாயிகள் வாங்கியுள்ள பழைய கடன் பாக்கிகளுக்காக ஜப்தி நடவடிக்கை எடுப்பது குறித்து.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 684—700

முகவை மாவட்டம் சத்திரப்பட்டி, வட்டாரத்திலுள்ள சுமார் ஒரு கோடி தேங்கியுள்ள கைத்தறி துணிகளை அரசு கொள் முதல் செய்யக்கோரி 30—3—1981 முதல் உண்ணாவிரதம் நடைபெற்று வருவதாலும் ஆர்ப்பாட்டம் செய்த நெசவாளர்கள்மீது 2—4—1981 அன்று காவல் துறையினர் கண்ணீர் புகை பிரயோகம் செய்து, கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ளதாலும், கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து.

அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது. 162—177

வடசென்னையிலுள்ள பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் 6—4—1981 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் ரூபாய் 1 கோடிக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாலும், இளநிலைப் பொறியாளர் மற்றும் ஐவர் படுகாயம் அடைந்துள்ளதாலும் மின் உற்பத்தி தடைபட்டுள்ளதாலும் அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து

அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது.





தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்னைகள்—

உறுப்பினர் வருகைப் பதிவேட்டைப் புரட்டி, யார் யார் வந்துள்ளார்கள் என்கிற விவரத்தை, வெளியார்கள் பார்க்கலாமா என்கிற ஒழுங்குப் பிரச்னை எழுப்பப் பெற்றபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

"உறுப்பினர்கள் வருகைப் பதிவேட்டை வெளி அதிகாரிகளோ, மற்றவர்களோ பார்க்கக்கூடாது ; நடைமுறையில் அனுமதிக்கப்படுவது இல்லை." (அ.ச.மு.) 204

"விடையாக அவைமுன் வைக்கப்பெற்ற அறிக்கையில் அமைச்சருக்குப் பதிலாக அதிகாரியின் கையொப்பம் இருக்கலாமா" என்று பிரச்னை எழுப்பப்பெற்றபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"அறிக்கையில் அதிகாரி கையொப்பமிட்டிருந்தாலும் அவையில் அமைச்சர் அந்த விடையை அளிக்கிறாரே தவிர அதிகாரி அவையில் அளிப்பதில்லை. எனவே, அதில் தவறு ஒன்றுமில்லை ; எனினும், அமைச்சர் கையொப்பம்தான் அறிக்கையில் இருக்க வேண்டுமென்று உறுப்பினர் வற்புறுத்துவதால் இதுபற்றிப் பரிசீலித்து விரைவில் முடிவை அறிவிக்கிறேன்." (வி.வி.) 17—19

கண் வலி போன்ற தொற்று நோய் உடையவர்கள் அவையில் இல்லாமல் இருப்பது நல்லது 360

குறுக்கீடு—

"உறுப்பினர்கள் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அமைதியாக பேரவையை நடத்துவதற்கு ஒத்துழைக்க வில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்." 192

சட்ட முன்வடிவுகள்—

உறுப்பினர்களின் திருத்தங்கள் வழிமொழியப்பெறாத காரணத்தால் ஏற்கப்பெறவில்லை. 77

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—

'அவசரச் சட்டம் ஒன்று காலாவதியான பிறகு அதுபற்றிய சட்ட முன்வடிவைக் கொண்டு வர முடியுமா' என்கிற பிரச்சினை எழுப்பப்பெற்றபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"ஆர்டினன்ஸ் இருக்கும்போதே இந்தச் சட்ட முன்வடிவு அவையில் அறிமுகம் செய்யப் பெற்று விட்டது. எனவே, இப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறபோது அந்தப் பிரச்சினை எழவில்லை." (அ.ச.மு.) 220

உறுப்பினர்கள் கொடுக்கின்ற அறிவிப்புகள், சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப் பெறுகின்றன. அவர்களிடமிருந்து பதில்கள் வந்தவுடன் முறையாக எடுத்துக் கொள்கிறோம். உறுப்பினர்களது அறிவிப்புகள் பேரவைத் துறைக்கு வந்தவுடன் அவற்றை உடனுக்குடன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வது மரபல்ல. அதை எடுத்துக் கொள்ள வேண்டும், இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்கள் பேரவையில் வற்புறுத்த ஆரம்பித்தால் அவையை ஒழுங்காக நடத்திச் செல்ல முடியாது. தங்களது அறிவிப்புகள் பற்றி உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் அறையில் அவரைச் சந்தித்துப் பேச வேண்டுமே தவிர பேரவையில் அப்பிரச்னையை எழுப்புவது முறையல்ல, (த.கோ.) 38—42

"ஒரு சட்ட முன்வடிவுக்கு அரசு தரப்பில் கொடுக்கப்படுகிற திருத்தங்கள், அச்சட்ட முன்வடிவில் கொடுக்கப் பெற்றுள்ள காரண காரிய விளக்கத்தையே பயனற்றதாக செய்யும்படி இருக்கலாமா ?" என்கிற ஒழுங்குப் பிரச்னை எழுப்பப் பெற்றபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

"காரண காரிய விளக்கம் என்று கொடுக்கப் பெறுவது உறுப்பினர்கள் அதன் மீது பேசுவதற்கு ஒரு கைட் லைன்சே தவிர, வேறல்ல. அது சட்டத்தில் ஓர் பகுதியும் அல்ல. அவையில் திருத்தங்கள் கொண்டு வரப்



பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

பெற்று, நிறைவேறுகையில், காரண காரிய விளக்கம் மாறியும் போகலாம். அதிலும் மாறுதல்கள் ஏற்படும். எனவே அதையும் இதையும் சேர்த்துக் கொள்ளத் தேவையில்லை." 225—226

சட்ட முன்வடிவு விவாதத்திற்கு வரும் நேரத்தில் திருத்தம் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லை என்றால் அவரது திருத்தம் திரும்பப் பெறப்பெற்றதாகப் பொருள் 390—392

பேசும் முறை—

அவை முன்னுள்ள பிரச்சினை பற்றி மட்டும் பேச வேண்டும், (அ.ச.மு.) 70, 120

உறுப்பினர்கள் உணர்ச்சிவசப்படக்கூடாது. கேள்வியாகக் கேட்க வேண்டும் 718

குறிப்பிட்ட பொருள் பற்றி மட்டும் பேச வேண்டும், (அ.ச.மு.) 343, 345

செய்தித் தாளிலே வந்த செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசக் கூடாது 344—346

வினாக்கள்—விடைகள்—

கொள்கை பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும். (து.வி.) 3

சுருக்கமாக, கேள்வியாகக் கேட்க வேண்டும் (து.வி.) 275—302

மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாதவற்றைக் கேட்க வேண்டுமானால் அவைத் தலைவரிடம் எழுதிக் கொடுத்து, பதிலைப் பெற வேண்டும், (து.வி.) 662—663

மூலக் கேள்வியை ஒட்டி இருக்க வேண்டும், (து.வி.) 30, 380, 661

தனுக்கோடித் தேவர், திரு. கே.—

பெருநாழி, சப்-ரிஜிஸ்தரார் அலுவலகம் கட்டுதல் 273

தாமரைக்கனி, திரு. இரா.—

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஒப்பந்தத்தை அமுலாக்குதல் 158

[illegible]த்தறித் துணி இரகங்கள், விசைத்தறியில் நெய்ய தடை 32—35

த—தொடர்ச்சி.


பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தாமரைக்கனி, திரு. இரா.—தொடர்ச்சி.

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.) 315, 324

கோவை மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள், நகைகள் களவு, (க.ஈ.) 701, 703—704

சென்னை மாநகராட்சி, குடிநீர் 153—156

திருவில்லிபுத்தூர், ஆண்டாள் நெசவாளர் சங்கம், சமபங்கு சிக்கன நிதி 680—681

திருவில்லிபுத்தூர், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுதல் 31—32

மாமல்லபுரம், ஒலி-ஒளிக் காட்சி 282—283

தியாகராசன், திரு. ஆர்.—

விருத்தாசலம் அணைப் பகுதி, நெய்வேலி நீரைப் பயன்படுத்துதல் 160—161

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 351

திருவேங்கடம், திரு. பெ. சு.—

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து, (ஒ.தீ.) 306

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1981 368—370

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

நிலவரித் துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

வேடந்தவாடி, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல்





பக்கங்கள்


த—தொடர்ச்சி.


பக்கங்கள்

தீர்த்தராமன், திரு. ப.—

கோயம்புத்தூர் சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.) 315, 325

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

நிலவரித் துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 752—753

தீர்மானங்கள்—

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பார்க்க—தலைவர்

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியவர் மீது நடவடிக்கை 232—233

விதி 31-ஐத் தளர்த்தல் 392

துரைசாமி, திரு. பி. எஸ்.—

கிருஷ்ணகிரி, சுற்றுலா மாளிகை கட்டுதல் 664—665

துரைமுருகன், திரு.—

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 345, 350

கன்வலியோடு உழைப்பவர் அவைக்கு வருதல் (ஒ.பி.) 360

கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 57, 61, 74—76

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 391

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

நிலவரித் துறை 756—767

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.
மருத்துவம்
பொதுச் சுகாதாரம் 538

துறைமுகங்கள்—
நாகை, மேம்பாடு 295—299

தொழிலாளர்கள்—
ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஒப்பந்தத்தை அமுலாக்குதல் 158
கன்னியாகுமரி மாவட்டம், முந்திரித் தொழிலாளர்கள் பாதிப்பு, (அ.வி.) 250—265
சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர் வேலை நிறுத்தம், பவானி, (க.ஈ.) 192—195
தோல் பதனிடும் தொழிலாளர்கள் பாதிப்பு, வடாற்காடு மாவட்டம் 156—157
வேஸ்ட் காட்டன் மில்கள், குறைந்தபட்ச கூலி 151—153

தொழிற்சாலைகள்—
தீப்பெட்டி காகிதம், தொழிற்சாலை அமைத்தல் 6

ந

நல்லப்பன், திரு. தி. கா.—
கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.) 315
கோவை சேரன் போக்குவரத்துக் கழகம் ஊழியர்-தொழிலாளர் மோதல் (க.ஈ.) 704
சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம், (ஒ.நீ.) 163
பவானி, சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், (க.ஈ.) 192, 194
பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து, (ஒ.நீ.) 306
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—
நிலவரித் துறை
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்



ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர்.—
கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.) 315

நாராயணசாமி, திரு. கே.—
வடாற்காடு, நரிக்குறவர் முன்னேற்றத் திட்டம் 133—137

நிதி அலுவல்கள்—
வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
நிலவரித் துறை
இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 715—792
மருத்துவம் ;
பொதுச் சுகாதாரம் 401—403, 405—539

நிலங்கள்—
மார்க்கெட்டிங் கமிட்டிக்கு நில ஆர்ஜிதம், தாந்தோனிமலை (கரூர் தாலுக்கா) 238

நினைவுச் சின்னங்கள்—
சேக்குத் தம்பி பாவலர்க்கு நினைவு மண்டபம், கோட்டாறு 288—290

நீக்கம்— 195, 324, 338, 683, 762, 767, 792

நுகர்பொருள்—
வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல், (க.ஈ.) 180—192

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—
உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை (த.கோ.) 42
உறுப்பினர்களின் தொலைபேசி ஆண்டுக் கட்டணத்தை அரசு ஏற்பது, (த.கோ.) 306

ந—தொடர்ச்சி.


பக்கங்கள்

நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—தொடர்ச்சி.

சந்திரப்பட்டி கைத்தறி நெசவாளர்கள் போராட்டம் (ஒ.நீ.) 170—176, 177

வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்குச் சர்க்கரை வழங்கல், (க.ஈ.அ.) 180—183, 184—185, 186—187, 188, 189—190, 191—193

நெடுமாறன், திரு. ப.

இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டமுன்வடிவு, 1981 313—315, 228

மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1981 197—198, 303—304

ப.

பக்கீர்முகமது, திரு. இ. எஸ். எம்.—

கும்பகோணம், சுற்றுலா மையமாக்குதல் 11—14

பனைப் பயிர்கள்—

முந்திரி வாரியம் அமைத்தல் (அறி.) 179—180

பல்கலைக் கழகங்கள்—

அண்ணாமலை பல்கலைக் கழகம், ஆசிரிய பட்ட மேற்படிப் பின் தரம் 140—141

பலராமன், திரு. இல.—

எலத்தூர் தொழுநோய் மருத்துவ மனை, விரிவுபடுத்துதல் 24—25

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 371—372

பழனிமுத்து, திரு. சி.—

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (க.ஈ.)




ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

பழனியப்பன், திரு. கு. பா.—

கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு 1981 63—67, 78

பழனிவேல், திரு. என்.—

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981 367—368

வறட்சியால் மாநிலம் பாதிக்கப் பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல், (ஒ.நீ.) 684

பாசனம்—

கட்டபொம்மன் கண்மாயை சீர்படுத்துதல், பொட்டிபுரம் பகுதி 23—24

டோராபாறை நதி பாசனத்திற்குத் திருப்புதல் 161—168

விருத்தாசலம் அணைப் பகுதி, நெய்வேலி நீரைப் பயன் படுத்துதல் 160—161

பாபு ஜனார்த்தனன், திரு.—

கன்னியாகுமரி மாவட்டம், முந்திரித் தொழிலாளர்கள் பாதிப்பு (அ.வி.) 257

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (க.ஈ.) 47, 53—54

பாரமலை, திரு. க.—

காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் ஆலயம், முள் புதர்களை அகற்று தல் 662—663

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் 462—466

பால்வளம்—

தமிழ்நாடு பால்வள நிறுவனம், தரக்கட்டுப்பாடு முறைகள் 3—5

ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

பாலகிருஷ்ணன், திரு. ச.—

நாகர்கோவில், வானொலி நிலையம் அமைத்தல் 290—291

பாலங்கள்—

அகரம்-சிகூர் வெள்ளாற்றில் கட்டுதல் 20—29

பாலசுப்பிரமணியன், திரு. க.—

சீர்காழி அரசு மருத்துவமனை, எக்ஸ்-கதிர் கருவி 669

பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி.—

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ச.) 315

திருச்சி மலைக்கோட்டை, இழுவை இரயில் விடுதல் 663

மின்சாரம், சூரிய ஒளியில் தயாரித்தல் 139—140

வடமதுரை, சௌந்திரராசப்பெருமாள் கோவில் மண்டபம் கட்டும் பணி 9—11

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

நிலவரித் துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 721—725

பாலன், திரு. அ.—

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து. (ஒ.தீ.) 306, 307—308

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு—

நிலத்துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ;

இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 710, 717

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் 403

பிற்பட்டோர் நலன்—

மிகப் பின்தங்கியோர், விகிதாச்சார ஒதுக்கீடு 129

வடார்க்காடு, நரிக்குறவர் முன்னேற்ற திட்டம்




ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

புருஷோத்தமன், திரு. து.—

தினசரி பத்திரிகைகளில் அரசு விளம்பரங்கள், செலவு 273—282

நாகைத் துறைமுகம், மேம்பாடு 295—299

மாம் நடுவிழா, திட்டங்கள் 7—9

வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல், (க.ச.) 180, 187—189

பூங்காவனம், திரு. என். ஏ.—

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 349—350

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

நிலவரித் துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ;
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 741—744

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல் (ஒ.தீ.) 684

பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—

சென்னை நகரில் ஆபாசச் சுவரொட்டி, (த.கோ.) 683—684

பாலிடெக்னிக்குகள், பெண்களுக்கு தனியாக அமைத்தல் 143—146

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

நிலவரித் துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ;
இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 747—751

பொன்னுரங்கம், திரு. ப.—

உறுப்பினர்களின் தொலைபேசி ஆண்டுக் கட்டணத்தை அரசு ஏற்பது, (த.கோ.) 305

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (க.ஈ.) 47

பேசின்பிரிட்ஜ் அனல் நிலையத்தில் தீ விபத்து (ஒ.தீ.) 306

ப—தொடர்ச்சி.


பக்கங்கள்

**பொன்னையன், திரு. சி.—**

இன்றியமையாப் பயணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 — 218—219, 220, 224, **337, 343, 347—349, 353, 354, 392—393**

கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம் (க.ஈ.அ.) — 315—317, **318—329**

**கோவை மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள், நகைகள் களவு (க.ஈ.அ.)** — **701—704**

**சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981** — **30, 97—102, 103—106**

மதுவிலக்கு சட்டமுன்வடிவு குறித்து சில பத்திரிகைகளில் வந்த செய்தி (த.கோ.) — 304—305

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல் (ஒ.தீ.) — 696—700

போ.

**போக்குவரத்து—**

அரசுப் பேருந்துகள், புதிய வழித்தடங்களில் விடுதல் — **299—302**

கழகம், மாவட்டந்தோறும் அமைத்தல் — 38—39

காஞ்சிபுரம்-பெங்களூர், விரைவுப் பேருந்துப் பணி — 671—673

திருச்சி மலைக்கோட்டை, இழுவை இரயில் விடுதல் — **662**

திருப்பத்தூர்-குப்பம் (ஆந்திர மாநிலம்), பேருந்து விடுதல் — 669—670

**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், தலைமை அலுவலகம் மாற்றம்** — **673—675**

ம.

**மக்கள் நல்வாழ்வு—**

**"கதண்டை வண்டுகள்" கடி, தாராபுரம்** — **234—2[illegible]**

தாய்-சேய் நலத் திட்டம் டென்மார்க் அரசு உதவி — 2[illegible]




ம—தொடர்ச்சி.


பக்கங்கள்

**மணி, திரு. டி.—**

**கன்னியாகுமரி மாவட்டம் முந்திரித் தொழிலாளர்கள் பாதிப்பு (அ.வி.)** — 255—257

கைத்தறி நெசவாளர் போராட்டம், சங்கரன்கோவில் (க.ஈ.) — 329—330

**மணிமாறன், திரு. ஆர்.—**

**மதுவிலக்கு சட்டமுன்வடிவு குறித்து சில பத்திரிகைகளில் வந்த செய்தி (த.கோ.)** — 303

**மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1981** — **204—205**

**மருத்துவமனைகள்—**

அரசு மருத்துவமனை காயல்பட்டினம், வசதிகள் — 26

ஆரம்ப சுகாதார நிலையம், சிறுவலூர், குடிநீர்க் கிணறு அமைத்தல் — 293—294

ஆற்காடு தொகுதி விரிவுபடுத்துதல் — 667—668

சித்தையன்கோட்டை கட்டுதல் — 291—293

சீர்காழி, எக்ஸ்-கதிர் கருவி — 669

துறையூர், விஸ்தரிப்பு — 293

தொழுநோய் மருத்துவமனை, எலத்தூர் விரிவுபடுத்துதல் — 24—25

பொனமல்லூர் தொகுதி, மருத்துவமனை அமைத்தல் — 666—667

மணலி தாய்-சேய் நலவிடுதி, மருத்துவ வசதி — 27

**மாரிமுத்து, திரு. த.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

நிலவரித் துறை

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு; இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் — 738—741

**மின்சாரம்—**

ஒகேனக்கல் மின்திட்டம், தாமதத்திற்கான காரணம் — 137—139

சூரிய ஒளியில் தயாரித்தல் — **139—140**

தென்னாற்காடு மாவட்டம், இரண்டாகப் பிரித்தல் — 559—560

## மு.

பக்கங்கள்

முகமது இஸ்மாயில், திரு. பி.—
- இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு, 1981 — 217—218
- கன்னியாகுமரி மாவட்ட முந்திரித் தொழிலாளர்கள் பாதிப்பு, (அ.வி.) — 257—258
- மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 — 199, 204

முத்துக்கிருஷ்ணன், திரு. சு.—
- ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து (க.ஈ.) — 45—46
- தாராபுரம், " கதண்டை வண்டுகள் " கடி, — 294—295
- நாகர்கோவில், வானொலி நிலையம் அமைத்தல் — 290—291
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
  - மருத்துவம்
  - பொதுச் சுகாதாரம் — 483—485
- வாடகை வண்டி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 57

முனுசாமி, திரு. மு. ப.—
- ஒகேனக்கல் மின்திட்டம், தாமதத்திற்கான காரணம் — 137—139
- வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :
  - நிலவரித் துறை
  - இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
  - இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் — 718—721

மொக்கையன், திரு. பி.—
- சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம், (ஒ.தீ.) — 163

ரகுமான்கான், திரு. அ.—
- இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 — 219—220, 223, 224, 336—344, 346—347, 349, 350, 351,



## ர—தொடர்ச்சி.

பக்கங்கள்

ரகுமான்கான், திரு. அ.—தொடர்ச்சி.
- சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 90—94, 98, 99, 104, 105—106
- தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (க.ஈ.) — 47, 51—53
- நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 107, 108, 110—114
- மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 — 204
- மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1981 — 390, 391
- வரவு-செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு :
  - மருத்துவம்
  - பொதுச் சுகாதாரம் — 533
- வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல், (க.ஈ.) — 180, 190—191

ரமணி, திரு. கு.—
- இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 — 349—350
- கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி, ஊழியர்கள் வேலைநிறுத்தம் (க.ஈ.) — 315, 320—321
- கோவை சேரன் போக்குவரத்துக் கழகம், ஊழியர்-தொழிலாளர் மோதல், (க.ஈ.) — 704, 711—713
- பேசின்ட்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து, (ஒ.தீ.) — 306
- வடாற்காடு மாவட்டம், தோல் பதனிடும் தொழிலாளர் பாதிப்பு — 156—157
- வேஸ்ட் காட்டன் மில்கள், குறைந்தபட்ச கூலி — 151—153

## வ.


பக்கங்கள்

**வரதராஜன், திரு. என்.—**

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 — 349—350

வறட்சியால் மாநிலம் பாதிக்கப் பெற்றிருக்கும்போது கூட்டுறவுக் கடன்களை வசூலித்தல், (ஒ.தீ.) — 684

**வானொலி—**

நிலையம் அமைத்தல், நாகர்கோவில் — 290—291

**விபத்துக்கள்—**

ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து (கன்னியாகுமரி), (க.ஈ.) — 45—46

**விளம்பரம்—**

தினசரி பத்திரிகைகளில் அரசு விளம்பரங்கள், செலவு — 273—283

**வின்சென்ட், திரு. மி.—**

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 — 339

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள், (த.கோ.) — 683

**விஜயபாலன், திரு. என்.—**

வரவு-செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு :

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் — 426—429

**வீரப்பன், திரு. ஆர். எம்.—**

வன (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 — 714—715

**வீராசாமி, திரு. தா.—**

நாகைத் துறைமுகம், மேம்பாடு — 295—299

**வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.—**

காஞ்சிபுரம்-பெங்களூர், விரைவு பேருந்துப் பணி — 671—673

**வெங்கடேசன், திரு. பி. எம்.—**

பொனமல்லூர் தொகுதி, மருத்துவமனை அமைத்தல் — 666




## வ—தொடர்ச்சி.


பக்கங்கள்

**வெள்ளைச்சாமி, திரு. ஆ.—**

சித்தையன் கோட்டை, மருத்துவமனை கட்டுதல் — 291—292

சின்னாளப்பட்டி, கைத்தறித் துணிகள் விற்பனை — 675—673

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் — 457—462

**வெளிநடப்பு—**

[illegible] — 204 201

203 204

354 204

**வேளாண்மை—**

கிழக்கு இராமநாதபுரம், போர் வெல் போடக் கடன் — 146—151

தர்மபுரி அக்ரோ சர்வீஸ் சென்டர், ஆழ்கிணறு தோண்டும் இயந்திரங்கள் — 161

## ஜ

**ஜான் வின்சென்ட், திரு. மு.—**

வரவு-செலவுத் திட்டம், 1981-82, வாக்கெடுப்பு :

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் — 447—451

## ஹ

**ஹண்டே, டாக்டர் எச். வி.—**

வரவு-செலவுத் திட்டம் 1981-82, வாக்கெடுப்பு :

மருத்துவம்

பொதுச் சுகாதாரம் — 401, 402, 403,

**ஹேமச்சந்திரன், திரு. ஜே.—**

இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981 — 349—350

கன்னியாகுமரி மாவட்டம், முந்திரித் தொழிலாளர்கள், பாதிப்பு (அ.வி.) — 250—253,

கால்நடை மருத்துவர்கள் பதிவு, (திருத்த) சட்டமுன்வடிவு, 1981 — 67—70

மேற்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம், (க.ஈ.) — 47, 56

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது,பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிபணியாளர்,மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு. பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு,: மீன்வளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படதொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியல்யி.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள் சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu

## Thiru SADIQ ALI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural) Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Pesmits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedeness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.



## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்),

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21 6-1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

**பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்**

திரு. பி. கோதண்டராமன்.

**தலைமை நிருபர்**

திரு. மா. சந்திரசேகரன்.

**விவாதப் பதிப்பாளர்**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.



**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.**

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 8 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ. வ.) |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 | அன்பழகன். திரு. க. | புரசைவாக்கம் |
| 12 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ.) |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 18 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 22 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ |
| 24 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 25 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 | இராசு. திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ. |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே. கே. | .. சாத்தூர் |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | .. பண்ருட்டி |
| 31 | இராமச்சந்திரன், திரு. ந. செஞ்சி. | .. செஞ்சி |
| 32 | இராமசாமி, திரு. த. | .. இராமநாதபுரம் |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | .. ஸ்ரீவைகுண்டம் |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | .. இராசிபுரம் |
| 36 | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. | .. இராதாகிருஷ்ணநகர் |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | .. தல்லி |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | .. ஆண்டிப்பட்டி |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | .. எழும்பூர் (செ. வ.) |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | .. அம்பாசமுத்திரம் |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | .. மதுராந்தகம் |
| 43 | உச்சி, திரு. கே. | .. கூடலூர் |
| 44 | உத்திராபதி, திரு. பொ. | .. திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 45 | உமாநாத், திரு. ரா. | .. நாகை |
| 46 | கண்ணன், திரு. ம. | .. கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். | .. சிதம்பரம் |
| 48 | கணேசன், திரு. இ. | .. இடைப்பாடி |
| 49 | கணேசன், திரு. சி. | .. அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | .. கிணத்துக்கடவு |
| 51 | கந்தசாமி, திரு. பி. | .. பொங்கலூர் |
| 52 | கபாலி, திரு. டி. கே. | .. மைலாப்பூர் |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. | .. அண்ணாநகர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | .. பாளையங்கோட்டை |
| 55 | கருப்பையா, திரு. இரா. | .. குளித்தலை |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. | .. வால்பாறை (செ. வ.) |
| 57 | கல்லன், திரு. கே. | .. உதகமண்டலம் |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. | .. சங்கராபுரம் |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. | .. மங்களூர் (செ. வ.) |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | .. நன்னிலம் (செ. வ.) |
| 61 | காளிமுத்து, திரு. கா. | .. திருப்பரங்குன்றம் |
| 62 | கிட்டப்பா, திரு. என். | .. மாயவரம் |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | .. காங்கேயம் |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. ஆயிரம் விளக்கு |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | .. ஆண்டிமடம் |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | .. நெல்லிக்குப்பம் |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. சேலம்-1 |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் |
| 69 | குப்புசாமி, திரு. என். | .. மொரப்பூர் |
| 70 | குப்புசாமி, திரு. கே. | .. ஒட்டன்சத்திரம் |
| 71 | குப்புசாமி, திரு. செ. | .. வந்தவாசி (செ. வ.) |
| 72 | குமரிஅனந்தன், திரு. | .. திருவொற்றியூர் |
| 73 | குருசாமி, திரு. ப. | .. அந்தியூர் (செ. வ.) |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | .. திருவரும்பூர் |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | .. சிங்காநல்லூர் |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | .. வாணியம்பாடி |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | .. உடுமலைப்பேட்டை |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி. | .. திருச்செந்தூர் |
| 79 | கோபால், திரு. சி. | ... சோளிங்கர் |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | ... பெரியகுளம் |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. | ... கம்பம் |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி. | .. வலங்கை (செ. வ.) |
| 83 | கோவேந்தன் திரு. எம். ஆர். | .. பேராவூரணி |
| 84 | கோவைத்தம்பி, திரு. | ... பேரூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 சக்கரபாணி, திரு. ஆர். | .. | பொன்னேரி |
| 86 சங்கரய்யா, திரு. என். | .. | மதுரை (கிழக்கு) |
| 87 சட்டநாத கரையாளர் திரு. கி. | .. | தென்காசி. |
| 88 சண்முகம், திரு. இரா. | .. | திருத்தணி |
| 89 சண்முகம், திரு. ஏ. சி. | .. | ஆரணி |
| 90 சத்தியமூர்த்தி, திரு. வ. | .. | கடலாடி |
| 91 சந்திரசேகரன், திரு. ஏ. | .. | சோழவந்தான் |
| 92 சபாபதி, திரு. சி. | .. | அரூர் (செ. வ.) |
| 93 சமரசம், டாக்டர் கே. | .. | காவேரிப்பட்டணம் |
| 94 சாகுல் ஹமீது, திரு. ஏ. | .. | கடையநல்லூர் |
| 95 சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம் |
| 96 சித்தன், திரு. என். எஸ். வி. | .. | திருமங்கலம் |
| 97 சிதம்பரம், திரு. சி. த. | .. | காரைக்குடி |
| 98 சிவசாமி, திரு. செ. | .. | இளையான்குடி |
| 99 சிவஞானம், திரு. ந. | .. | திருவோணம் |
| 100 சிவப்பிரகாசம், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 சிவபெருமான், திரு. மு | .. | ஓமலூர் |
| 102 சிவராமன், திரு. எஸ். | .. | சின்னசேலம் |
| 103 சின்னசாமி, திரு. எம். | .. | கரூர் |
| 104 சின்னதுரை, திரு. ஏ. | .. | மேல்மலையனூர் |
| 105 சின்னராசு, திரு. க. இரா. | .. | கிருஷ்ணகிரி |
| 106 சின்னராஜ், திரு. எம். | .. | தொண்டமுத்தூர் |
| 107 சுந்தரம், திரு. கே. ஆர். | .. | குடியாத்தம் |
| 108 சுந்தரம், திரு. ப. | .. | திருப்பத்தூர் |
| 109 சுந்தரம், திரு. மு. | .. | ரிஷிவந்தியம் |
| 110 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | .. | முகையூர் |
| 111 சுந்தரராஜ், திரு. நா. | .. | திருமயம் |
| 112 சுந்தரராஜன், திரு. மு. | .. | விருதுநகர் |
| 113 சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை |
| 114 சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | .. | போடிநாயக்கனூர் |
| 115 சுப்பிரமணியன், திரு. மா. | .. | திருவையாறு |
| 116 சுப்பிரமணியன், திரு. வி. | .. | திருநாவலூர் |
| 117 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | .. | பவானிசாகர் |
| 118 சுவாமிநாதன், திரு. வி. வி. | .. | புவனகிரி |
| 119 செங்கோட்டையன், திரு. கு. அ. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 120 செம்மலை, திரு. செ. | .. | தாரமங்கலம் |
| 121 செல்லமுத்து, திரு. எம். | .. | திருவாரூர் (செ. வ.) |
| 122 செல்வராசன், திரு. அ. | .. | துறைமுகம் |
| 123 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | .. | அரவக்குறிச்சி |
| 124 சேதுராமன், திரு. ஏ. எம். | .. | ஆற்காடு |
| 125 சொக்கலிங்கம், திரு. கே. | .. | திருப்போரூர் |
| 126 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | .. | பட்டுக்கோட்டை |
| 127 சோமு, திரு. என். வி. என். | .. | பூங்காநகர் |
| 128 சௌந்திரராசன், திரு. கே. | .. | திருச்சி—2 |
| 129 டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | .. | தி. நகர் |
| 130 தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | .. | திண்டிவனம் |
| 131 தங்கராசு, திரு. ஏ. | .. | குறிஞ்சிப்பாடி |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 133 தங்கவேலு, திரு. பி. | .. | செயங்கொண்டான் |
| 134 தவசி, திரு. ஆர். | .. | பரமக்குடி (செ. வ.) |
| 135 தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ. வ.) |
| 136 தனுக்கோடித் தேவர், திரு. கே. | .. | முதுகளத்தூர் |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 138 தியாகராசன், திரு. ஆர். | .. | விருத்தாசலம் |
| 139 திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | .. | ஸ்ரீரங்கம் |
| 140 திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி |
| 141 திருமாறன், திரு. பெ. | .. | ஆலங்குடி |
| 142 திருமான், திரு. | .. | ஏற்காடு (செ.வ.) |
| 143 திருவேங்கடம், திரு. பெ. சு. | .. | கலசப்பாக்கம் |
| 144 தீர்த்தராமன், திரு. ப. | .. | பென்னகரம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 145 துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146 துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 147 துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 148 துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |
| 149 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 150 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151 நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152 நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153 நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154 நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155 நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156 நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 157 நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி |
| 158 நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159 பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161 பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 162 பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 பலராமன், திரு. இல. | போளூர் |
| 164 பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165 பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 166 பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 167 பழனிவேல், திரு. என். | பழனி (செ. வ.) |
| 168 பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169 பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ. வ.) |
| 172 பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 173 பாலகிருஷ்ணன், திரு. | சிவகாசி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 174 பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ. வ.) |
| 175 வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ. வ |
| 177 பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ. வ.) |
| 178 பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180 புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181 பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182 பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ. வ.) |
| 183 பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ) |
| 184 பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185 பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186 பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 187 பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 188 பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189 மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190 மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191 மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192 மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ. வ.) |
| 193 முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 194 முசிறிப்புத்தன், திரு. ம. | திருச்சி-11 |
| 195 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197 முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 முத்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 199 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி |
| 201 முனுசாமி, திரு. மு. ப | பாலக்கோடு |
| 202 மூர்த்தி, திரு. ஜீ. | பேரணாம்பட்டு (செ. வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 203 | மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 | யசோதா, திருமதி டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 206 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 207 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 | ராமசாமி, திரு. எஸ். என். .. | சாத்தான்குளம் |
| 210 | ராஜமாணிக்கம், திரு. எஸ். கே .. | முசிறி |
| 211 | ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 212 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 213 | (வெற்றிடம்) | |
| 214 | விசயலட்சுமி, செல்வி. வி. .. | வீரபாண்டி |
| 215 | வின்செண்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 216 | விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ) |
| 217 | விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 218 | விஜயரெகுநாத தொண்டமான், திரு. .. | புதுக்கோட்டை |
| 219 | விஜயராகவன், திரு. பொ. .. | கிள்ளியூர் |
| 220 | விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 221 | வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 222 | வீராணம்பலம், திரு. க. வெ. .. | மேலூர் |
| 223 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. .. | காஞ்சி |
| 224 | வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர் |
| 225 | வெங்கடேசன், திரு. பி. எம். .. | பேரணமல்லூர் |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 227 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 228 | வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர்மலை |
| 229 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 230 | ஜான் வின்செண்ட், திரு. மு. .. | நாங்குனேரி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 231 | ஜெகதீசன் ஆனூர், திரு. பு. கோ. ... | செங்கல்பட்டு |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. .. | தேனி |
| 233 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. .. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 | மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். — அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். — அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. — அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. — அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி — தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1981 ஏப்ரல் 4.

பங்குனி 22, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.''

ஒருவனுடைய உள்ளத்தைக் குறிப்பால் அறிந்து அவனுக் குற்றதை உணரக் கூறியவரைப் பெற்றால், அவன், அவர் முகம் நோக்கி நிற்றல் ஒன்றே போதும். வாயினாலோ, செய்கையி னாலோ வேறு எத்தகைய குறிப்பினாலோ அவருக்குத் தன் நிலையை அவன் தெரிவிக்க வேண்டியதே இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

மென்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

*வினா எண். 632—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பரமக்குடி தாலூக்கா, மென்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் சங்கத்தின் மெம்பர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் கேட்டும் கிடைக்காததால் சங்கம் 6, 7 ஆண்டுகளாக செயல் படாமல் இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நட வடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) சங்க நிர்வாகக் குழு கடந்த 7 ஆண்டுகளாக சங்க உறுப்பினர் களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் பெற எவ்வித நடவடிக்கை யும் மேற்கொள்ளவில்லை. தற்பொழுதுள்ள சங்க நிர்வாகக் குழுவை புதுப்பித்து அவர்கள் பரிந்துரையின் மூலம் அங்கத்தினர் களுக்கு கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய விருதுநகர் துணைப் பதிவாளர் (பால் பதம்) அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, கடந்த 6, 7 ஆண்டுகாலமாக இந்தச் சங்கம் செயல்படவில்லை என்பதை அமைச்சரவர்களே ஒத்துக்கொண்டார்கள். என்ன காரணத் தால் அது செயல்படவில்லை? ஆண்டு முடிகின்ற நேரத்திலே அந்தச் செயல் நடந்திருக்கின்றது. இதற்கு அரசியல் உள் நோக்கம் உண்டா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். மீண்டும் அந்தச் சங்கம் செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, அதனுடைய நிர்வாகத்தைப் புதுப்பித்து புதிய நிர்வாகக் குழுவினுடைய வாயிலாக அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் வாயிலாகவும் கடன் பெறுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அத்தி பூத்தது போன்று 28—2—81 அன்று அந்தச் சங்கத்திற்குத் தேர்தல் நடந்து நிர்வாகஸ்தர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். ஏனென்றால் சமீப காலத்திலே கூட்டுறவு அமைப்புகளுக்கே தேர்தல் நடத்தப்படாத நிலைமையில் இந்தச் சங்கத்திற்கு தேர்தல் நடத்தப்பட்டது குறித்து நான் வரவேற்கிறேன். மேலும் கடந்த 6, 7 ஆண்டு காலமாக அந்தச் சங்கத்திற்கு எந்தவிதமான பாக்கியும் கிடையாது. சென்ட்ரல் வங்கியிலேயும் பாக்கி கிடை யாது, வேறு எந்த வங்கியிலேயும் பாக்கி கிடையாது. மேலும் அந்தச் சங்கத்திற்கு 800 ரூபாய் ஷேர் கேப்பிட்டல் இருக்கின்றது. இந்த நிர்வாக சொசைட்டியை வேண்டுமென்றே தடுத்திருக் கின்றார்கள். ஆகவே மீண்டும் நேரடியாக இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன். அதோடு கறவை மாடுகள் வாங்கிக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் கொடுக்கின்றபோது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் சரியான முறையைக் கடைப்பிடிப்பது இல்லை. ஆகவே கடன் கிடைக் காதவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இதுபற்றிய விவரங்களைக் கொடுத்தால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, ஏற்கெனவே அரிசன கூட்டுறவு பால் சங்கங்களுக்கு போதுமான கடன்கள் கூட்டுறவு வங்கிகளிலே இருந்து கொடுக்கப்படுவது கிடையாது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்துதான் கடன் தரப் பட வேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்த வங்கிகள் ஆதி திராவிட-மக்களுக்குக் கடன் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அதை நிவர்த்திக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா? அல் லது அவ்வாறு கொடுக்கப்படுகின்ற கடனுக்கு அரசாங்கம் கேரண்டி கொடுத்தால் அந்த வங்கிகள் கடன் கொடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்கும். மேலும் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் தனித் தனியாக கூட்டுறவு பால் சங்கத்தை ஆரம்பிக்க அரசு முயற் சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பரமக்குடி தாலுக்கா மென்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் சங்கம் செயல்படாமல் இருப்பது குறித்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேறு விவரங்கள் தேவை என்றால், தனிக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு பால் சொசைட்டிகளின் மூலம் லோன் கிடைப்ப தில்லை. அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு அரசு செய்யுமா என்று நான் பொதுவாகத்தானே கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது கொள்கை யைப் பொருத்தது. அதனால் தனிக் கேள்வியே போட வேண்டும்..

## Quality control methods in Tamil Nadu Dairy Development Corporation.

*Q. No. 633— Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether quality control methods are adopted by Tamil Nadu Dairy Development Corporation ; and

(b) If so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) பால் கூட்டுறவுச் சங்கங்களில் பாலை வாங்கும்போது பால் பரிசோதனை செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு குளிரூட்டும் நிலையத்தில் பாலைப் பெறும்பொழுது அதில். மாதிரிகள் எடுக்கப்பட்டு [illegible]லத்திலுள்ள பாலின்

உள்ள கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் பரிசோதிக்கப்படுகிறது. குளிரூட்டும் நிலையத்திலிருந்து மத்திய பண்ணைக்கு அனுப்பப்படும்பொழுது பாலின மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது. பால் பண்ணையில் பெறப்படும்போது மீண்டும் பாலை பரிசோதிக்கிறார்கள். அங்கிருந்து பாலை வெளியே கொண்டு செல்லும்போது பரிசோதிக்கிறார்கள். பால் விநியோகிக்கும் இடங்களிலும் மாதிரி பால் எடுக்கப்பட்டு அதன் தரம் பரிசோதிக்கப்படுகிறது. ஆக இவ்வாறு பால் கையாளப்படும் எல்லா இடங்களிலும் பாலின் தரக்கட்டுப்பாடு பரிசோதனையை பால்வள நிறுவனம் செய்கிறது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கூட்டுறவுச் சங்கங்களில் பாலை வாங்கும் போது பேட்—கொழுப்புச் சத்து, எஸ்.என்.எப். எனப்படும் புரதச்சத்து போன்றவைகள் பரிசோதிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சில்லிங் செண்டருக்கு (குளிரூட்டும் நிலையம்) பாலை எடுத்துக் கொண்டு செல்லும்போது சேம்பிளை கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு சென்டருக்கு எடுத்துச் சென்று விநியோகிக்கும் முன் பேட்—எஸ்.என்.எப். போன்றவைகளை பரிசோதனை செய்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால், சென்டரில் பல இடங்களிலிருந்து பாலைக் கொண்டு வந்து ஒன்றாகச் சேர்த்து பிறகு விநியோகம் செய்கிறார்கள். எனவே முதலில் சேம்பிளை பெற்று விட்டு, பிறகு சென்டர் பிளேசில் இவைகளைப் பரிசோதனை செய்தால் நலமாக இருக்கும். அப்படிச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறைப்படி எல்லா இடங்களிலும் பாலின் தரக்கட்டுப்பாடு பரிசோதனையை பால்வள நிறுவனம் செய்கிறது என்று எனக்குக் குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஏதாவது சில இடங்களில் அவ்வாறு இல்லாமல் இருந்தால், அந்த இடங்களைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அங்கேயும் இந்த முறைகளை நடைமுறைப்படுத்து ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வள நிறுவனம் தரக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்கும்போது கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்படும் பாலில் கொழுப்புச் சத்து, புரதச் சத்து போன்றவைகளை அறிய சில டெஸ்டுகளைச் செய்கிறார்கள். அப்படி அந்த டெஸ்டுகளில் கொழுப்பு, புரதம் போன்ற கண்டென்ட்ஸ் ளில் வரக்கூடிய அளவுகள் மிகப் பெரிய அளவில் வித்தியாசப்படுகின்றன. அதுமட்டும் அல்லாமல் லிட்டருக்கு 2.20 பைசா என்று வெளியே விற்கிற பால், இங்கே லிட்டருக்கு 1.20 பைசா



கூட கிடைக்க மாட்டேன் என்கிறது. அதற்குக் காரணம், இந்த டெஸ்டுகளை பல முறைகளிலே எடுத்துக் கொண்டு, குறைத்துப் போட்டு தருவதினால்தான், அதை தடுப்பதற்கு ஆங்காங்கே உள்ள கூட்டுறவு சங்கங்களிலேயே டெஸ்டுகள் செய்து, பேட்—கொழுப்புச் சத்துக்களின் கண்டென்ட்ஸ்களின் அடிப்படையிலேயே விலையை தருவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனையின் அடிப்படையில்தான் இப்பொழுதும் விலை கொடுக்கப்பட்டு வருகிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே சில இடங்களிலே பாலிதின் ரேப்பர் பாக்கெட்டுகளில் பால் விநியோகம் செய்யப்படுகிறது. அது தரமாக இருக்கிறது. அதுபோலவே எல்லா இடங்களிலும் கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** படிப்படியாக அந்த முறை மேற்கொள்ளப் பெற்று வருகிறது.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** பால் தரக் கட்டுப்பாடு என்று குறிப்பிட்டு அதிலே வழங்கப்படுகிற பாலில் அதிகமாக பால் பவுடரைக் கலப்பதால் பாலின் தரம் குறைந்துவிடுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணம் பரிசீலிக்கப்படும்.

**திரு. செ. சிவசாமி :** தரக்கட்டுப்பாட்டில் பாலில் கொழுப்புச் சத்து எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றிச் சொன்னார்கள். பாலில் அதிகப்படியாக கொழுப்புச் சத்து எவ்வளவு இருக்கிறது? குறைந்தபட்சம் கொழுப்புச் சத்து எவ்வளவு இருக்கிறது ? இந்த ஸ்டான்டர்டைஸ்ட் செய்த பாலில் எவ்வளவு கொழுப்பு சத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஒவ்வொரு இடத்திலும் இடத்தைப் பொறுத்து கொழுப்புச் சத்து, புரதச் சத்து இவை வித்தியாசப்படுகிறது. அது அந்தந்த இடத்தில் கிடைக்கும் பாலின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.

[1981 ஏப்ரல் 4

## தீப்பெட்டிகள் தயாரிப்பதற்குத் தேவையான காகித ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 634— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தீப்பெட்டிக்குத் தேவையான காகிதங்களை தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க தமிழக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) நெல்லை மாவட்டத்தில் துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) சாத்தூரிலுள்ள தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு ரூ. 120 இலட்சம் செலவில் சிறிய காகித ஆலை நிறுவ அனுமதி கேட்டுள்ளது. இத் திட்டத்திற்கு கீழ்காணும் அரசு உதவி தேவைப்படுகிறது:—

(1) அரசு பங்கு மூலதனம் ரூ. 5 இலட்சம்.

(2) ஒரு உதவித் தொழில் வணிக இயக்குநர்; ரூ. 0.11 இலட்சம்; இத்திட்டத்தை 1981-82ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பாகப் பணிகளின் கீழ் கொண்டுவர முடிவு செய்யப்பட்டு உதவித் தொகையும் 1981–82 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்திற்கு சட்ட மன்றம் ஒப்புதல் அளித்த பிறகு இத்திட்டம் அமுல் செய்யப்படும். துவங்க வேண்டிய இடம் ஆய்வில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: ஏற்கெனவே இந்தத் திட்டத்திற்கான அனுமதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி, கழுகுமலை சுற்றுவட்டாரங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே கோயில்பட்டியை மையமாக வைத்து தயாரிக்கப்படுகிற தொழிற்சாலை ஒன்றை கூடுதலாகத் துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு காகித ஆலையை எங்கு நிர்ணயம் செய்வது என்பதைப் பற்றி அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை. ஆனால் எங்கு அதற்குத் தேவையான மூலப்பொருள்கள், வைக்கோலும் தேவையான தண்ணீரும் கிடைக்கிற ஆற்றுப் படுகை இருக்கிறதோ அந்தப் பகுதியை ஆராய்ந்து அப்போது முடிவு எடுக்கப்படும்.



1981 ஏப்ரல் 4]

## தமிழகத்தில் மர நடு விழா.

*வினா எண். 635—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மரநடு விழா பெருமளவில் கொண்டாட அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம். விவரங்கள்* அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. புருஷோத்தமன்: இந்த மரம் நடும் திட்டம் மறைந்த சஞ்சய் காந்தியின் ஐந்து அம்சத் திட்டத்தில் உள்ள ஒன்று. நம் நாட்டில் மரம் நடும் விழாவை விரிவாக அமல்படுத்த வேண்டி இந்தத் திட்டத்தை பரவலாக நாடு முழுவதும் அமலாக்க ஒரு விழா ஏற்பாடு செய்து அதற்கு நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும், உள்துறை அமைச்சர் திரு. ஜெயில்சிங் அவர்களையும் கொண்டு வந்து விழா நடத்த ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த மரநடு விழா அல்லது இந்தக் கருத்து பதினைந்து ஆண்டுகளாகவே இந்தியத் துணைக் கண்டத்தில் நாம் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை விடையிலேயே தெரிவித்திருக்கின்றேன். சஞ்சய் காந்தி அவர்கள் அதில் தீவிர ஆர்வம் காட்டினார்கள் என்பதுதான் உண்மை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களையும், உள்துறை அமைச்சர் அவர்களையும் வரவழைத்து விழா நடத்த வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகிறார். இல்லை மரம் நடுகின்ற அந்த நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டவேண்டும் என்று விரும்புகிறாரா என்று தெரியவில்லை. பொதுவாக பாரதப் பிரதமர் அவர்கள் மரம் நடுகிற நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டி குடும்பத்திற்கு ஒரு மரம் என்ற அந்தத் திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்தவேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார்கள். அதில்தான் இந்த அரசு வனத்துறை கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது.

திரு. து. புருஷோத்தமன்: பாரதப் பிரதமரை அழைத்து வந்து விழா நடத்த வேண்டும் என்பது மரங்கள் நட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான் சொல்கிறேன். ஆகவே, எல்லோருடைய கவனத்தை ஈர்க்கும் விதத்தில் பாரதப் பிரதமர் அவர்களை வரவழைத்து, அதே போல் உள்துறை அமைச்சர் திரு. ஜெயில்சிங் அவர்களையும் வரவழைத்து விழாவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

* 126 ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1981 ஏப்ரல் 4

அதே போல் ஒருவருக்கு ஒரு மரம் என்ற வகையில் திட்டம் வகுத்து எந்த அளவிற்கு இதுவரை நம் அரசு செயல்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இங்கே விவரங்களைத் தெளிவாக அவையிலே வைத்திருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் வந்திருக்கின்றார்கள் என்று எண்ணுகின்றேன். அந்த விடை அநேகமாக 3, 4 பக்கங்களில் இருக்கிறது. அதை ஓய்வாக இருக்கின்றபோது படித்துப் பார்த்தால், எல்லா விவரங்களும் அவருக்குக் கிடைக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய உணவுத் துறை அமைச்சராக இருந்த திரு. கே. எம். முன்ஷி அவர்களால் கொண்டுவரப்பட்ட மரம் நடு விழா, தற்போது பருவ மழை தவறியதன் காரணமாக, அதைத் தீவிரப்படுத்துவதற்கு வனத் துறையின் மூலமாக பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மரங்கள், நாற்றுக்கள் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாற்றுக்களை உருவாக்கி, அதை வழங்குகின்ற வியாபாரம் லாப அடிப்படையில் நடத்தப்படுவது இல்லை. குறைந்த விலையில் இப்போது வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வறட்சி நிலவுகின்ற நேரத்தில், தற்போதுள்ள மரங்களை அங்கேயிருக்கின்ற மக்கள் வெட்டுகிறார்கள். அதற்குத் தடை விதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மரங்களை வெட்டுகிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு எல்லா இடங்களிலும் போய்த் தடுப்பதைவிட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு உதவி செய்யும் வகையில், மக்களுக்கு எடுத்துச் சொல்லி, இருக்கின்ற மரங்களை வெட்டி விடாதீர்கள், வெட்டினால் பெய்கின்ற மழைகூட பெய்யாமல் போய்விடும் என்கின்ற விவரத்தை எடுத்துச் சொல்லுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. பழ. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் மரம் நடு விழாவிற்காக அரசு எல்லா ஏற்பாடுகளையும், முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. அதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே மதுரை மாவட்டத்தில், கொடைக்கானல் பகுதியிலே ஏராளமான மரங்கள் பெரிய அளவில் வெட்டப்படுகின்றன. முறையற்ற முறையிலும் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். கொடைக்கானலுக்கு அழகு தந்துகொண்டிருக்கின்ற பேரிஜம் ஏரியைச் சுற்றி இருந்த ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டிவிட்டு, அதனால் அந்த ஏரியே அழிந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. இதுபோன்ற சமூக விரோதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், மரங்களை அனுமதியில்லாமல் வெட்ட முற்படுகின்றவர்கள் மீதும் அரசு இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரங்களை அனுமதியில்லாமல் வெட்டுகின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு விரும்பி, அதற்காகச் சில சட்டத் திருத்தங்களை செய்து, வனத்துறை அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவை பிறப்பித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது கிடைக்கக்கூடிய தகவல்களின்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். என்றாலும், இப்படிப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. "கள்வன் பெரிதா, காப்போன் பெரிதா" என்ற ஒரு பழமொழி இருக்கிறது. அதிலும் குறிப்பாக வனத் துறையைப் பொறுத்தவரை இது காவல் இல்லாத, வேலி இல்லாத வனத்துறையாக இருக்கின்ற காரணத்தினால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு ஒருவர் இருவர் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். இந்த நிலையிலே இதிலே சமுதாய விரோதிகள் என்கிற பெயராலே சிலர் ஈடுபட்டு மரங்களை வெட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அரசு கடுமையான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக ஏதாவது தகவல் அவரிடத்திலே இருந்து தருவார்களேயானால், அதை விசாரித்து தடுப்பதற்கும் வசதியாக இருக்குமென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் கோயில்.

*வினா எண். 636—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம் வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் திருக்கோயிலின் முன் மண்டபம் கட்டும் பணி நீண்ட நாட்களாக காலதாமதம் ஆகக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் ஆலயத்தின் முன் மண்டபம் கட்டும் பணி மேற்படி

ஆலய நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால் நீண்டகாலமாக நடைபெறாதிருந்து வருகிறது. இருப்பினும் விரைவில் இவ் வேலையைத் தொடங்க தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணி 1965-லே தொடங்கப் பட்டு, அதற்கு நிதி வசதி சரியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிதி நிலை சரியில்லை என்பதால், நிதி நிலை வசதியாக இருக்கின்ற கோவில்கள் கடன் கொடுத்து, அந்தத் திருப்பணியை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நிதி நிலை சரியில்லாத கோவில்கள் பல்லாயிரம் தமிழகத்திலே இருக்கின்றன. நிதிநிலை சரியாக இருக்கின்ற கோயில்கள் சிலதான்; அதுவும் 100, 150 தான் இருக்கின்றன. இப்படி நிதிநிலை இல்லாத கோயில்களுக்கு நிதி நிலை சரியாக இருக்கின்ற கோயில்களிலிருந்து அந்தத் தொகை திருப்பிவிடுவதென்றால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதுவும் நிதிநிலை சரியில்லாத கோயிலாக மாறிவிடுவதற்கு வாய்ப்பிருக் கிறது. இருந்தாலும், இந்தத் திருப்பணியைப் பொறுத்தவரை மேலும் நடவடிக்கை எடுப்பதற்கு, ஒரு புதிய திருப்பணிக் குழுவை அமைத்து, இந்த வேலையை விரைவுபடுத்துவதற்கான முயற்சியில் அறநிலையத் துறை ஈடுபட்டிருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் வட்டம் வடமதுரை அருள்மிகு சௌந் திரராசப் பெருமாள் கோயில் மட்டுமல்லாமல் தமிழ் நாட்டில் பல கோயில்கள் இப்படி முடியாத நிலையில் இருப்பதால் திருப் பணி வேலைகள் தடைப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அரசே தன்னுடைய நிதியிலிருந்து பொருளாதார வசதி செய்து திருப் பணி வேலைகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அரசே தன்னுடைய நிதியிலிருந்து அப்படிப்பட்ட திருப்பணிகளை நடத்த முடியாது. விரும்பவும் முடியாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமதுரை சௌந்திரராசப் பெருமாள் கோயில் வரு மானம் இல்லாத காரணத்தால் திருப்பணி வேலைகள் தடைப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். வருமானம் இல்லாத தொழில் களையே அரசு கைவிட்டுக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் வருமானம் இல்லாத சுவாமிகளை, வருமானம் உள்ள இடத்தில் கொண்டு போய் வைத்து விட அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருப்பது திருப்பணி செய்வதைப்பற்றிய கேள்வி. அதற்குத்தான் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன்.

கும்பகோணத்தை சுற்றுலா மையமாக்கல்.

*வினா எண்: 637—திரு. இ. எஸ். எம். பக்கீர்முகமது: மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கும்பகோணம் சுற்றுலா இடமாக அறிவிக்கப்படுமா?

(ஆ) அரசு சுற்றுலா மாளிகை ஏற்படுத்த செயற்குறிப்பு உண்டா ?

(இ) எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கும்பகோணத்தில் சுற்றுலா மாளிகை கட் டும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. ஆனால், அங்கு ஒரு சாலை ஓர தங்கும் விடுதி (Motel) அமைப்பது பற்றிய திட்டம் ஒன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரி சீலனையில் உள்ளது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "இல்லை" என பதில் சொன்னார்கள். கோவில்கள் அதிகமாக இருக்கிற கும்ப கோணம் 12 சிவ ஸ்தலங்களையும், 12 விஷ்ணு ஸ்தலங்களையும் கொண்டிருக்கிறது. வருடா வருடம் மாசி மகம் திருவிழாவும், 12 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் திருவிழா வும் நடைபெற்று வருகின்றன. இதை ஒரு 'நேஷனல் பெஸ்டி- வல்' ஆக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். சுற்றுலா இடமாக அறிவிப்பதற்கு இல்லை என்று சொல்லியிருப்பதை அறிந்து வருத்தப்படுகிறேன். ஆகவே மீண்டும் பரிசீலித்து சுற்றுலா இடமாக அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மக்கள் விரும்பிச் செல்கிற இடங்கள் தான் சுற்றுலா மையமாக மாறுகிறதே தவிர அரசு சுற்றுலா

இடமாக அறிவித்து விடுகிறதாலே அது சுற்றுலா மையமாக
ஆகிவிடுவதில்லை. கும்பகோணத்தை மக்களே ஒரு சுற்றுலா
மையமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பக்தி ஸ்தலம் ஆக்கிக்
கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கூடுகிற மக்களுக்கு
செய்ய வேண்டிய பணிகளைத்தான் அரசு எந்தத் துறையின் மூல
மாவது ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆகவே சுற்றுலாத் துறையின்
மூலம் எந்த அளவு அந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்
என்பது தான் பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்து
நிதிநிலையையும் பரிசீலிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.
சாலை ஓர தங்கும் விடுதி, அதாவது 'மோட்டல்' போகிற
பயணிகளுக்கு தங்கிச் செல்கிற வகையில் அமைப்பதைப் பற்றி
சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலனை செய்து கொண்டிருக்கி
றது. மற்ற திட்டங்கள் காலப்போக்கில் இந்த ஐந்தாண்டுத்
திட்டத்திலே 'பயணி வழித் திட்டம்' 'ட்ராவல் சர்க்யூட்'
என்று சுற்றுலாத் துறை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அடிப்படை
யின் மீது கும்பகோணத்தை இரண்டாவது திட்டப் பகுதியில்
சேர்க்கலாம் என்ற திட்டமும் இருக்கிறது.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கும்பகோணம் நம்முடைய தமிழகத்தில் மட்டும்
அல்ல, இந்தியாவிலேயே பிரசித்தமான இடம். மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும், அது வியாபாரத்திலே
யும் சரி, மற்றத் தொழிற் துறைகளிலும் சரி மிகவும் பிரசித்த
மான இடம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பக்கீர் முகமது
அவர்கள் குறிப்பிட்டதைப் போல 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை
நடைபெறும் மகாமகத்தின்போது பல இலட்சக்கணக்கான மக்
கள் அங்கே திரள்வதும், மகாமகத்தின் குளத்திலே குளிப்பதும்
இன்றைக்கும் பக்தர்கள் பக்தியோடு நடத்திக் கொண்டிருக்
கிறார்கள். ஆகையால் அந்த இடத்தில் அரசு 'ஸ்பெஷல் அட்
டென்ஷன்' செலுத்தி சுற்றுலா விடுதி அமைப்பதற்கு—மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் சாலை ஓர விடுதி என்று சொன்னார்
கள்—அதற்கு பதிலாக சுற்றுலா விடுதியாகவே அமைப்பதற்கு
அரசு பரிசீலிப்பதற்கு முன்வருமா என்பதை தெரிந்து கொள்ள
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலை
வர் அவர்களே, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்ற
மகாமகத்தின்போது அரசாங்கம் மிகப் பெரிய அளவிலே அக்கறை
எடுத்துக் கொண்டது. கடந்த மகாமகத்தின்போது கூட நம்
முடைய அரசு சுமார் 50 இலட்சம் அளவிலே செலவு செய்து
பல்வேறு ஆக்கப்பணிகளை மக்களுக்காக ஏற்படுத்தித் தந்தது.
சுற்றுலாப் பயணிகள் விடுதி கட்டப்படுகிற முறை என்பதோ
அல்லது திட்டம் என்பதோ அந்த ஊரிலே தங்குகிறவர்களைப்
பொறுத்தும், வருமானத்தைப் பொறுத்தும் கட்டப்படுகிறது.
கும்பகோணம் மாத்திரமல்ல, தஞ்சை மாவட்டத்திலே ஒவ்வொரு



முக்கிய நகரத்திலேயும் மக்கள் போய் 1, 2 நாட்கள் தங்குகிற முயற்சியிலே ஈடுபடுகிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. அங்கே உள்ள ஊர்களுக்கு—அவைகள் எல்லாம், 15,20 மைல்களுக்குள்ளே இருக்கிற காரணத்தினால்—போய் போய் திரும்பி வருகிறார்கள், ப்ளோட்டிங் பாப்டலேஷன் என்று சொல்லப்படுகிறதே அந்த முறைதான் இருக்கிறதே தவிர, விடுதி கட்டினால் வருமானம் வருமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. எனவே சாலையோர பயணிகள் விடுதி அமைத்துப் பார்த்துவிட்டு பின்னாலே நிரந்தரமாக பயணிகள் விடுதி கட்டலாமா என்பதுபற்றி பரிசீலிக்கலாமா என்றுதான் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எண்ணிக் கொண்டிருக்கிறது.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கூடிய விரைவில் அதை அமைத்துக் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே, ஏன் இந்தியாவிலேயே பிரம்மாவுக்கு கோயில் கும்பகோணத்திலேதான் இருக்கிறது. அதைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் பஸ்களிலே வருகிறார்கள். ஆகவே அங்கே தங்குவதற்காக பயணிகள் விடுதி கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே தான் இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு, தமிழகத்திலே இல்லாத அளவுக்கு பிரம்மனுக்கு கோயில் இருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. பக்கீர் முகமது அவர்கள் இந்து ஆலயங்களைப் பற்றிய இவ்வளவு கணக்குகளையும் வைத்துக்கொண்டு கருத்துத் தெரிவித்திருப்பது நாம் எல்லோரும் மகிழ்ச்சியடையக்கூடியதாக இருக்கிறது. அங்கே பிரம்மன் கோயில் இருப்பது மாத்திரமல்ல, கும்பகோணம் பழமைவாய்ந்த தொன்மை வாய்ந்த சரித்திரப் புகழ் பெற்ற நகரம், தஞ்சை மாவட்டத்திலே தலைநகராக இல்லாவிட்டாலும் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிற நகரம். அந்த நகரத்திற்குச் செல்கின்றவர்களுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டியது கடமை. அதையொட்டித்தான் அந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, சுற்றுலா துறையின் மூலமாக இல்லாவிட்டாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறநிலையத் துறை அமைச்சராகவும் இருக்கிற காரணத்தினாலே, புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலமாக கும்பகோணம் இருப்பதால், அறநிலையத் துறையிலிருந்து அம்மாதிரி விடுதியைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா ?

[1981 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே; அந்தக் கருத்தை முன்பே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே தெரிவித்திருக்கிறோம். அறநிலையத்துறையில் அப்படி செய்ய முடியுமா என்று பரிசீலிக்க அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே தான் கோயில்கள் அதிகம், அவைகளுக்கு சொத்துக்களும் அதிகம். அங்கே தான் கோயில்களை வறுமையிலே வைத்திருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே அவைகளை யெல்லாம் ஜாக்கிரதையாக அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்திலே சுற்றுலா மாளிகை ஏற்படுத்த வேண்டுமென்று திரு. பக்கீர் முகமது அவர்கள் கேள்வி எழுப்பி அங்கே சிவ ஆலயங்கள் எத்தனை இருக்கின்றன, விஷ்ணு ஆலயங்கள் எத்தனை இருக்கின்றன பிரமனுக்கு எத்தனை ஆலயம் இருக்கிறது என்றெல்லாம் இஸ்லாமிய சகோதரர் மாண்புமிகு பக்கீர் முகமது அவர்கள் இந்து ஆலயங்களைப் பற்றி விவரமாகத் தெரிவித்த பிறகுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன் என்று ஒரு வார்த்தை சொல்லாமல் இருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள முன் வருவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் காரியங்கள் நடக்கும் என்று சொல்லிவிட முடியாது. சட்டியிலே இருந்தால் தான் அகப்பையிலே வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான் கொஞ்சம் ஜாக்கிரதையோடு பதிலைச் சொல்லிக்கொண்டு இருக்கிறேன்.

(முற்பகல் 9—30.)

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் வழங்கும் கடன்.

*வினா எண் 638—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு திரையரங்கு கழகம் மினி தியேட்டர்கள் கட்ட அளிக்கும் ரூ. 1,00,000 கடன் தொகையை ரூ. 2,00,000 ஆக உயர்த்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.



1981 ஏப்ரல் 4]

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டில் மினி தியேட்டர்கள் கட்ட ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது ஒன்றுக்கு இரண்டாக விலைவாசி உயர்ந்திருக்கிறது. எனவே, அந்த தொகையை இரண்டு இலட்சமாக உயர்த்திக் கொடுப்பதற்கான உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை ஏற்படுத்திய காலத்திலே, மூன்றில் இரண்டு மடங்கு அல்லது 1,20,000 ரூபாய் இதில் எது குறைந்த தொகையோ அதைக் கொடுப்பது என்ற திட்டத்தை அமல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இப்பொழுது விலை உயர்ந்துள்ள சூழ்நிலையைக் கருதி, இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டு அரசுக்கு அந்தக் கழகம் தன்னுடைய வேண்டுகோளை வைத்திருக்கிறது. இதற்கிடையே தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் இயக்குநர் குழு தற்காலிகமாக இந்தக் கடன் வழங்கும் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று முடிவெடுத்தது. காரணம், கடனை வாங்கியவர்கள் அதைத் திருப்பிக் கட்டாமல் வழக்கு மன்றத்திற்குப் போய், வாதாடிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, தமிழ்நாடு திரையரங்கு கழகத்தின் சார்பில் கழிந்த ஆண்டு எத்தனை தியேட்டர்கள் கட்ட கடன் அளிக்கப்பட்டது ? அளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை எவ்வளவு ? இன்னும் வசூலாக வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் விவரமாக விடை தயாரித்துத் தர முடியும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடன் வாங்கிய ஒருசிலர் கட்ட மறுத்து விட்டார்கள் என்ற காரணத்திற்காக அடுத்துக் கேட்கக் கூடியவர்களுக்குக் கடன் மறுக்கப்படுகிறது என்ற கருத்தில் சொன்னார்கள். கடன் வாங்கியவர்கள் மீது தீவிர நடவடிக்கை யெடுத்து, புதிதாகக் கடன் கேட்கக் கூடியவர்களுக்குக் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, கடன் வாங்கியவர்களிடத்திலே வசூலிக்கத் தீவிர நடவடிக்கை எடுத்துத்தான் அரசாங்கம் ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் வசூலிக்கின்ற முயற்சிகளை மேற்கொண்டது.

அதை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலே தடை ஆணை பெற்றிருக்கிறார்கள். அந்தத் தைரியத்திலே கட்ட வேண்டிய தவணை முறையிலே கூடக் கட்டாமல் இருந்து வருகிறார்கள். தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும்போழுது அவர்கள் எப்படியெல்லாம் அதைத் தடுப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, தீவிர முயற்சிகளிலே அரசாங்கம்—அந்தக் கழகமும் நிச்சயமாக ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மினி தியேட்டர்கள் கட்டுவதற்குத்தான் இந்தச் சலுகை உண்டா ? அல்லது பர்மனென்ட் தியேட்டர்கள் கட்டுவதற்கும் இந்தச் சலுகை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, மினி தியேட்டர்களுக்குக்கூட இப்பொழுது அந்தச் சலுகை—அந்தக் கடன் வழங்கும் திட்டம் இல்லை. இப்பொழுது இருக்கின்ற திட்டம் செமி பர்மனென்ட் தியேட்டர்—பகுதி நேர நிரந்தர திரையரங்கு என்கின்ற அந்தத் திட்டத்திற்குத்தான் கடன் வழங்குகின்ற முறை இருக்கிறது. நிரந்தர தியேட்டர்களுக்கும் அப்படி வழங்க வேண்டுமென்ற எண்ணத்தை மத்திய அரசு கூட இப்பொழுது தெரிவித்திருக்கிறது. இதைப் பரிசீலிக்க முதல்படியாக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற உணர்வாவது வர வேண்டும். அதைப் பொறுத்துத்தான் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கின்ற நிலைமையில் இருக்கிறது.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, மினி தியேட்டர்களைக் கட்டுபவர்களுக்குச் சொத்து அடிப்படையிலே ஆதாரம் வைத்துக் கொண்டு கடன் வழங்குகிறார்களா அல்லது தனிப்பட்ட நபர் ஜாமினிலே கடன் வழங்குகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் . மாண்புமிகு தலைவரவர்களே, சொத்துக்களைப் பொறுத்தும், கட்டப்படுகின்ற அந்த அரங்குகளினுடைய ஃபர்ஸ்ட் சார்ஜ், அதையும் காட்டியும் தான் கடன் வழங்கப்படுகிறது. எதைக் காட்டினாலும் பணம் தான் அங்கேயிருந்து பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதே தவிர சொத்துக்களையெல்லாம் பெற்றுக்கொண்டு உடனடியாகக் கடனை அடைத்துவிட முடியாது என்பதை அவர்களும் தெரிந்திருக்கிறார்கள் ; நடத்துகின்ற நிர்வாகிகளுக்கும் அந்தக் கஷ்டம் புரிகிறது. அதனாலேதான் அந்தச் சிக்கல்கள் எழுந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 639.





திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அடுத்த அமைச்சருடைய கேள்விக்குச் செல்வதற்கு முன்னால் இந்த அமைச்சர் அவர்கள் விடையளிக்கிற முறையிலே ஏற்பட்ட ஒரு குறையைப் பற்றி தங்களிடத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. புருஷோத்தமன் அவர்கள் தமிழகத்தில் மரம் நடு விழாபற்றி கேட்ட ஒரு கேள்விக்கு விடை இங்கே ஒரு அறிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விடை, அரசு ஆணையாளர் மற்றும் செயலாளர் திரு. லட்சுமிகாந்தன் பாரதி அவர்கள் கையொப்பமிட்டு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அவைக்கு விடை அளிக்க வேண்டிய முழுப் பொறுப்பும், அளிக்க வேண்டிய எந்த அறிக்கையாக இருந்தாலும், அதிலே கையொப்பமிட வேண்டியதும் அமைச்சர் அவர்களே தவிர, அந்தத் துறைச் செயலாளரோ அல்லது ஆணையரோ கையொப்பமிட்டு இந்த அவைக்கு விடை அளிப்பது என்பது முறை அல்ல. ஏனென்றால், அவை அமைச்சர் மூலமாகத்தான் இயங்குகிறதே தவிர, வேறு யார் மூலமாகவும் அல்ல. எனவே, அப்படி...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் :: அதிகாரிகள் மூலமாக அறிக்கை வைக்கலாம் என்பதற்கு ரூலிங்கே இருக்கிறது.

"With reference to a point of order raised by a member about the answer to a question laid on the table of the House bearing the signature of Additional Societary to Government and not that of the Minister who, under the Rules should answer the questions the Chair ruled that it was not a point of order, as the Minister himself replied in the House, not the Secretary."

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது ஒரு ஒழுங்குப் பிரச்னையாகாவிட்டாலும், அவையினுடைய தகுதிப் பிரச்னையாக ஆகிறது. அவையினுடைய தகுதிப் பிரச்னை என்றால், அமைச்சர்களைத்தான் நாங்கள் கேள்வி கேட்கலாமே தவிர, செயலாளர் அவர்களை, அவர்கள் தந்த அறிக்கை மீது நாங்கள் கேள்வி எழுப்புவது என்பது முறை அல்ல. ஏற்கெனவே தரப்பட்ட கருத்து பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையிலே எழுப்புவதற்கு உரியதல்ல என்று சொல்லப்பட்டாலுங்கூட, அவையிலே உள்ள உறுப்பினர்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை அமைச்சர்களுக்கு உள்ளதே தவிர, செயலாளர்களுக்கு அல்ல. எனவே, செயலாளர் கையொப்பமிட்டு ஒரு அறிக்கையை அவையிலே வைப்பது என்பது அமைச்சருடைய பொறுப்புக்கு நேராக உகந்தது ஆகாது. இப்படி ஏற்கெனவே வேறு சில அவைகளிலே இந்தப் பிரச்னைகள் எழுப்பப்பட்டுள்ளன. அமைச்சர் பெயரிலேதான் அறிக்கை இருக்க வேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே செயலாளர் பெயரிலே அறிக்கை அமைச்சருக்கு வந்து, அமைச்சரும் கையொப்பமிட்டு, அதற்குப் பின்னாலே இங்கே வரவேண்டும்.

அமைச்சர் அந்த விடைத் தாளிலே, விடைகளாக வருகிற அந்தக் கருத்துக்களிலே கையொப்பமிட்டிருப்பாரானால், அந்தக் கையொப்பத்தின் மீதுதான் இங்கே அறிக்கை வைக்கப்பட வேண்டுமே தவிர, செயலாளர் கையொப்பத்தோடு வைப்பது என்பது ஏதோ அனுமதிக்கப்பட்டாலுங்கூட, அது அவையினுடைய மதிப்புக்கு ஏற்றதாகாது. உரிமைக்கும் ஏற்றதாகாது. அதைத் தாங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இருந்த பேரவைத் தலைவர் அவர்கள் அப்படி ஒரு முடிவை அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்ததைத்தான் நான் படித்தேன். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்களானால், அதை மறுபரிசீலனை செய்து, நடவடிக்கை எடுத்து, அமைச்சர் பெயரிலேயே அது வர வேண்டுமென்றால், அதன்படி செய்வதிலே ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்னைக்கு என்னுடைய விளக்கத்தைத் தந்து விடுகிறேன். அதற்குப் பிறகு தாங்கள் இனிமேல் எப்படி நடைபெற வேண்டுமென்று அறிவிப்பீர்களானால் அந்த அறிவிப்புப்படி நாங்கள் நடந்து கொள்கிறோம்.

இங்கே அரசு ஆணையாளர் மற்றும் செயலாளர் எனக் கையெழுத்திட்டு அறிக்கை வைக்கப்பட்டிருந்தாலும் அதைப் பதிலாக ஏற்றுக் கொள்வதில்லை. நான் எழுந்து இந்த அவையிலே விவரமான அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறேன். அது குறிப்பேட்டிலே பதிவாகியிருக்கிறது. அதன் மூலம் நான்தான் அந்தப் பதிலைத் தெரிவிக்கிறேன் என்பதை இப்பொழுது தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, முன்னாலேயும் இங்கே நீங்கள் குறிப்பிட்டிருக்கிற நடைமுறையும் இருந்திருக்கிறது. இனிமேல் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சபைக்கு நீங்கள் தெரிவிப்பீர்களானால் அதன்படி நாங்கள் நடந்துகொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். வழக்கமாகவே, செயலாளர்கள் அறிக்கை தந்து விடுவதும், அமைச்சர்கள் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதும் அதற்குப் பிறகு அமைச்சர்கள் தங்களுடைய பதிலைச் சொல்வதும் சபையிலே இதுவரையிலே கடைபிடிக்கப்பட்டு வந்த ஒன்றாக இருக்கிறது. இப்பொழுது ஒரு புதிய பிரச்னை வந்திருப்பதாலே அதைப்பற்றி நான் யோசித்து நடவடிக்கை எடுக்கிறேன். அதை ஏற்றுக் கொள்வதிலே





ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், இதுவரையிலே ஏற்கனவே இருந்த பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். அதை நான் எடுத்துப் படித்தேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் சொல்கிற கருத்திலே மாறுபாடு இல்லை. ஆனால், இன்னொரு அறிக்கை, அமைச்சர் பெயராலேயும் வைக்கப்பட்டிருக்கிறது. திரு. செ. அரங்கநாயகம், பெயராலே, கல்வி அமைச்சர் பெயராலே, ஆனால் அறிக்கைகள் அமைச்சர் பெயராலேயும் வைக்கப்படும், செயலாளர் பெயராலேயும் வைக்கப்படும் என்றால், அப்புறம் எதிர் காலத்திலே துணைச் செயலாளர் பெயராலேயும் வைக்கப்படுகிற நிலையும் வரக்கூடும். எனவே, அவையினுடைய கண்ணியத்தை, மதிப்பை அதேபோல அமைச்சருடைய பொறுப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஏதுவான வழிமுறையைத் தாங்கள் கண்டறிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் துணைத் தலைவருடைய கருத்தை ஏற்றுக் கொண்டு நான் அதைப் பற்றி பரிசீலித்து விரைவிலே அறிவிக்கிறேன்.

வேடந்தவாடியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

*வினா எண். 639—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், வேடந்தவாடி கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டும் வேலை துவக்கப் பெற்று முடிவு பெறாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணியை முடிவுற செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) வேடந்தவாடி கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் வேலை ரத்து செய்யப்பட்டு ஒரு தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டிக் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9·40.]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வேடந்தவாடி கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு, பேஸ்மென்ட் வரையில் போடப்பட்டு இருக்கிறது. அந்த கிராமத்தில் கிட்டத்தட்

3,000 மக்கள் இருக்கிறார்கள். அங்கே தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டினால் அந்த மக்களுடைய தேவைக்குப் போதாது. ஆகவே, அதை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே ஏற்கனவே ஒரு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்காக ஊராட்சித் தலைவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டு, அந்த வேலை செய்யப்படாமல், ஒரு பகுதி வேலை செய்ததற்காக ரூ. 1,726 பெற்று இருக்கிறார். அந்த வேலையை அப்படியே நிறுத்திவிட்ட காரணத்தால் மீண்டும் தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ரூ. 20,000 ஒதுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, சீக்கிரம் முடிக்கப்பட்டுவிடும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்காக பேஸ்மென்ட் வரையில் வேலை நடந்து இருக்கிறது. எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்கிற விவரம் எனக்குத் தெரியாது. தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி அந்த கிராமத்து மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்கிற காரணத்தால், அதை மாற்றி மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி கட்டித் தருகிற வகையில் அந்தத் திட்டத்தை மாற்ற வேண்டும். அப்போதுதான் பொதுமக்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டமாக மாற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஊராட்சியின் நிதிநிலையைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.

அகரம்—சிகூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 640—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி—தென்னாற்காடு மாவட்டத்தை இணைக்கும் வகையில் அகரம்—சிகூர் அருகில் ஓடும் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த வேலை எப்பொழுது துவக்கப்படும்?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசிடம் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பாலம் கட்டும் திட்டம் எதுவுமில்லை. ஆனால் மங்களூர் ஒன்றிய பொது நிதியிலிருந்து ஒரு தரைப் பாலம் கட்டுவதற்கு தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்ட கருத்துரு பரிசீலிக்கப்பட்டு ஒன்றியத்தின் உபரி நிதியிலிருந்து மேற்சொன்ன பணியினை மேற்கொள்ளும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மங்களூர் ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஒரு தரைப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். அந்தப் பாலம் திருச்சி மாவட்டத்தையும், தென்னாற்காடு மாவட்டத்தையும் இணைக்கும் பாலமாகும். இந்தப் பாலம் மிக முக்கியப் பாலமாக இருப்பதால், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட இது குறித்து முடிவு எடுக்கப்பட்டு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரும், தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து ஒரு அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். அந்த மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஏற்றுக் கொண்டு அந்தப் பாலம் கட்டுவதற்காக எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒரு உயர் மட்டப் பாலம் கட்ட வேண்டும் என்று சொன்னால் ஏறத்தாழ 40 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று ஏற்கனவே எஸ்டிமேட் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பணம் நம்மிடத்தில் அதிகமாக இல்லை என்ற காரணத்தாலேயும், பிற சாலை திட்டத்தின்கீழ் அந்தத் திட்டம் வரவில்லை என்ற காரணத்தாலேயும், அந்தத் தரைப் பாலம் கட்டும் திட்டத்தை மங்களூர் ஒன்றியப் பொது நிதியில் இருந்து 10,000 ரூபாய் செலவில் தரைப் பாலமாகக் கட்டலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரை மட்டப் பாலம் கட்டினால், அந்தப் பாலம் நீண்ட நாட்களுக்கு இருக்காது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்வது தன்னிறைவுத் திட்டத்தில் வரகூர் தொகுதி எடுக்கப்பட்டு இருக்கிறது. அதே மாதிரி மங்களூர் தொகுதி எடுக்கப்பட்டால் அந்த இரண்டும் தொகுதிகளின் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இந்தப் பாலத்தை கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

[1981 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திலே பெரிய பாலங்களை—இது போன்று எடுத்துக் கொண்டால், நிதிநிலை சரிப்படாது. ஆனால், அந்தப் பாலத்தையும் கூட இன்று அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிற கொள்கையின் அடிப்படையில் தரை மட்டப் பாலமாகக் கட்டுவதைத் தவிர்த்து, உயர் மட்டப் பாலமாகக் கட்டுவதற்கு ஏற்கனவே, நெடுஞ்சாலைத்துறை அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் கூட அந்தத் தரை மட்டப் பாலம் கட்டுவதைத் தவிர்த்து, உயர் மட்டப் பாலமாக எவ்வளவு ரூபாய் செலவானாலும் அதைப் போக்குவரத்துக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய திட்டத்தின் அடிப்படையில் உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது உயர் மட்ட பாலமாகக் கட்டப்படும் என்று சொன்னார்கள். அது எப்போது கட்டப்படும் என்று அறிய விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிலேகூட அங்கே கட்டக் கூடிய பாலம் உயர் மட்ட பாலமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர தரை மட்டப் பாலமாக இருக்கக் கூடாது என்று சொல்லியிருப்பதாக அறிகிறேன். மேலும் அந்தப் பாலம் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களையும் இணைக்கக் கூடிய ஒரே வழியாக இருப்பதால் இந்த நிதியாண்டிலே அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இதர மாவட்டங்களை இணைக்கின்ற பாலம் என்பதால்தான் இந்தக் கருத்தைச் சொன்னேன். ஏனென்றால் 20 ஆண்டுகளுக்குப் பின்னால் எவ்வளவு ஜனத் தொகை ஏற்படும், எவ்வளவு வசதி தேவைப்படும் என்பதை கணக்கில் கொண்டுதான் ஒரு பாலம் கட்டுவதாக இருந்தாலும் அல்லது வேறு திட்டம் போடுவதாக இருந்தாலும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஏற்கனவே அரசு குறிப்பு இருக்கிறது. அதனால் இந்த தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக கட்டினால் இன்னும் எவ்வளவு காலத்தில் முடிக்கப்படும் என்பதை பரிசீலிக்கிறோம்.

கிருஷ்ணகிரி—ஓசூர் நெடுஞ்சாலை.

*வினா எண் 641—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூருக்குப் போகும் நெடுஞ்சாலை பழுதுபட்டுள்ளதா?

(ஆ) பழுது பார்க்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



1981 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : நெடுஞ்சாலை பழுதுபட்டிருக்க வில்லை. இருந்த போதிலும், தற்பொழுது உள்ள வாகனப்போக்கு வரத்திற்கு ஏற்றபடி மேம்படுத்தப்பட்டு வருகிறது.

பொட்டிப்புரம் பகுதியிலுள்ள கட்டபொம்மன் கண்மாயினைச் சீர்படுத்தும் திட்டம்.

*வினா எண் 642—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடி பொட்டிபுரம் பகுதியில் கட்டபொம்மன் கண்மாய் சீர்படுத்த நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அந்தப் பணி எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1979ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப் பெற்றுள்ளது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்தக் கண்மாயை வெட்டுவதற்கு அங்குள்ள விவசாயிகளிடமிருந்து நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகவும் அதற்கு இன்னும் பணம் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்றும் புகார் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் உடனடியாக அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்புதான் இருக்கிறது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு இன்னும் நஷ்டஈட்டுத் தொகை கொடுக்கவில்லை என்ற குறிப்பு இல்லை. ஆனாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த கட்டபொம்மன் கண்மாய் அந்தக் காலத்தில் கட்டபொம்மன் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஒளிந்து இருந்த போது அவரும் இந்தக் கண்மாய் கட்ட உதவி செய்தார் என்பதால்தான் அந்தக் கண்மாய்க்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த கட்டபொம்மன் கண்மயை மீண்டும் தூர் எடுத்து, இன்னும் 'பஜ ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1981 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, உரிமைக்குப் போராடிய, மானமே பெரிது என்று நினைத்த கட்ட பொம்மன் பெயரிலே இந்தக் கண்மாய் இருப்பது கண்டு உள்ள படியே மகிழ்ச்சியடைகிறோம். அதே நேரத்தில் இந்தக் கண் மாயின் பரப்பளவு 27 ஏக்கர், இதனால் பாசனம்பெறும் பரப்பு 68 ஏக்கர்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எலத்தூர் தொழுநோய் மருத்துவமனை.

* வினா எண் 605—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் வட்டம் எலத்தூர் தொழுநோய் மருத்துவமனையை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) தற்போது உள்ள படுக்கைகள் எவ்வளவு?

(இ) மருத்துவர்கள் எத்தனை பேர் ?

(ஈ) சிகிச்சை பெறும் வெளி உள் நோயாளிகள் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) தற்போது கட்டுப்பாடு நிலையத்தில் படுக்கைவசதி கள் ஏதும் இல்லை.

(இ) ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிகின்றார்.

(ஈ) தற்போது சிகிச்சைப்பெறும் வெளிப்புற நோயாளிகளின் களின் எண்ணிக்கை : 6,082.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஏற் கெனவே அந்த எலத்தூரில் இருக்கிற தொழுநோய் சென்டரைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஏற் கெனவே அந்த ஆஸ்பத்திரியை கட்டும்போது படுக்கை வசதி செய்யப்பட்டிருந்தது. பிறகு, போதிய கட்டிட வசதி இல்லை என்று சொல்லி, டி.எம்.ஓ. அங்கிருந்த படுக்கைகளை பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கு கொடுத்துவிட்டார். இப்போது அமைச்சர் அவர்கள் கட்டிடம் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். கட்டிடம் கட்டிய பிறகு, அரசாங்கம் அங்கே படுக்கை வசதி செய்துதருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி லெப்ரசி கன்ட்ரோல் யூனிட் பற்றியதாகும். ஒவ்வொரு ஆண்டும் அந்த இடத்திற்கு வந்து நோயாளிகள் தங்



1981 ஏப்ரல் 4]

கள் பெயர்களை ரெஜிஸ்தர் செய்கிறார்கள். அந்த அடிப்படை யிலே பார்த்தால் சென்ற ஆண்டு 542 பேர் பதிவு செய்திருக் கிறார்கள். அந்த நோயாளிகளுக்கு படுக்கை வசதி தரவேண்டு மென்று லெப்ரசி கன்ட்ரோல் யூனிட் கருதினால் உடனடியாக அதற்குப் பக்கத்தில் இருக்கிற திருவண்ணாமலை லெப்ரசி கன்ட் ரோல் யூனிட், திருப்பத்தூர் அர்பன் லெப்ரசி சென்டர், வெல் லூர், செயின்ட் தாமஸ் ஆஸ்பத்திரி, சேத்துப்பட்டு ஆகிய படுக்கை வசதியுள்ள இடங்களுக்கு அனுப்புவார்கள்.

[முற்பகல் 9–50 ]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு அமைச்சர், அவர்கள் பதில் சொல்லி இருக்கின்றார்கள். ஆனால், இந்த கன்ட்ரோல் யூனிட் அங்கே ஆரம்பிக்கின்றபோதே இந்த நோயி னால் அவதிப்படுபவர்கள் அதிகமான பேர் இருக்கின்றார்கள் என்ற ஒரே காரணத்தால்தான் படுக்கை வசதி ஏற்படுத்துவதற்கு அரசாங்க உத்தரவு இடப்பட்டது. ஆனால், இன்றைக்கு வேறு ஏதோ காரணத்தாலோ அல்லது பொலிட்டிக்கல் பிரஷர் கார ணத்தாலோ அங்கு கட்டடங்கள் கட்டப்படாமல் நிறுத்தப்பட்டது என்பது அரசுக்கு தெரியுமா ? மேலும், அங்கு, 6,000 பேர் களுக்கு மேற்பட்ட நோயாளிகள் வருகின்றனர். அவர்களில், மிகக் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பின்தங்கின சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தங்கு வதற்கு உரிய வசதிகள் இல்லை. இதுபற்றி அரசு யோசித்து அந்த இடத்திலே படுக்கை வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, 1963-லே 783 பேர்கள் அந்த இடத்திற்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கை 1979-லே 542 பேர்கள் வந்தனர். 1978-லே 414 பேர்கள் வந்தனர். 1977-லே 86 பேர்கள் வந்தனர். ஆகவே, தற்போது நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டுதான் வருகின்றது.

மேலும், அங்கு வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை 1979 ஆம் ஆண்டு 1,000 -க்கு 2.9 பேர்கள் என்று இருந்தது. 1980 ஆம் ஆண்டில் 1,000 க்கு 2 பேர்களாக குறைந்துள்ளது. ஆகவே அங்கே படுக்கைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.- அப்படி அங்கே படுக்கைகள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன் னால் கொஞ்சம் ஆராயலாம். ஆனால், இப்போதிருக்கிற நிலை மையில் அங்கே படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்குரிய வாய்ப்பு இல்லை.

[1981 ஏப்ரல் 4

காயல்பட்டினம் அரசு மருத்துவ மனை

*வினா எண். 606—திரு. சி. கேசவஆதித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி காயல்பட்டினம் அரசினர் மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) அந்த மருத்துவமனைக்கு தனியார் ஒருவர் நன்கொடையாக வழங்கிய மருத்துவக் கருவிகள் பயன்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) அப்படியானால் அதற்கான பரிகாரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 25 (இருபத்தைந்து).

(ஆ) அந்த மருத்துவமனைக்கு தனியார் எவராலும் எந்த வித மருத்துவக் கருவிகளும் நன்கொடையாக வழங்கப்படவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கேசவ ஆதித்தன் : தலைவரவர்களே, காயல்பட்டிணம் மருத்துவமனையைச் சுற்றி திருச்செந்தூர், குறும்பூர் போன்ற ஊர்கள் இருக்கின்றன. சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர் அந்தப் பகுதிகளில். இவர்கள் எல்லாம் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றால் 40 மைலுக்கு அப்பாலுள்ள திருநெல்வேலிக்கோ அல்லது 25 மைலுக்கு அப்பாலுள்ள தூத்துக்குடிக்கோ தான் செல்ல வேண்டி இருக்கின்றது. எனவே, காயல்பட்டிணம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையின் முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் சேர்ந்து அந்த மருத்துவ மனையைப் பார்த்து இருக்கிறோம். அங்கே அறுவை சிகிச்சைப் பிரிவு நன்றாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே என்னென்ன ஆபரேஷன் செய்யப்படுகின்றது என்ற லிஸ்ட் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றது. அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கையினை அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 4]

மணலி தாய்-சேய் நல விடுதி

வினா எண். 607— திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலி தாய்-சேய் நல விடுதியில் மருத்துவ வசதி இருக்கிறதா ?

(ஆ) இல்லையெனில் அந்த விடுதியை தேவையான வசதிகளுடன் இயங்கவைக்க முயற்சி உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டென்மார்க் அரசு உதவியுடன் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம்.

* வினா எண். 608 திரு. செம்மலை : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டென்மார்க் அரசின் உதவியுடன் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் மக்கள் நலவாழ்வுத் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் என்ன ?

(இ) இத்திட்டம் எத்தனை மாவட்டங்களில் செயல்படுகின்றது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ), (ஆ) மற்றும் (இ) ஆம். ஒரு திட்ட செயற்குறிப்பு டென்மார்க் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த டேனிட்டா திட்டம் எவ்வளவு காலத்திற்கு அங்கே செயல்படுத்தப்பட உள்ளது என்ற விவரத்தையும் இந்த திட்டத்திற்கான டென்மார்க் அரசு எந்த அளவுக்கு உதவித் தொகை வழங்கி இருகின்றது என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, டேனிஷ் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் ஏஜென்சி அதாவது டேனியா என்பது அவர்களால் நடத்தப்படுகின்ற ஒரு திட்டம். 5 ஆண்டுகளுக்கு சேர்த்து ஏற்படுத்தப்பட்ட

திட்டம். ஒவ்வொரு ஆண்டுக்கும் குறிப்பிட்ட தொகை என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். முதல் ஆண்டு 2 கோடியே 25 இலட்சம். அடுத்த ஆண்டு 3 கோடியே 56 இலட்சம். மூன்றாவது ஆண்டு 3 கோடியே 69 லட்சம், 4வது ஆண்டு 2 கோடியே 13 லட்சம், 5-வது ஆண்டு, 2 கோடியே 10 லட்சம். ஆக மொத்தம் 13 கோடியே 76 லட்சம் இதற்கென போடப் பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் இப்போது பைனல் ஸ்டேஜில் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. அதைப் பார்த்து டேனிஷ் கவர்ன்மென்ட் ஒப்புதல் கொடுத்த பிறகு அது செயல்படுத்தப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டென்மார்க் அரசின் உதவியோடு தாய்-சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம் உள்ளது போன்று, ஏனைய வெளிநாடுகளின் உதவி வேறு ஏதாவது இந்த தாய்-சேய் நல மேம்பாட்டிற்காக இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த நாடுகள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

## மாவட்டந்தோறும் தனித்தனி போக்குவரத்து கழகங்கள் அமைக்கும் திட்டம்

* வினா எண். 643—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக போக்குவரத்துக் கழகம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி:** (அ) மற்றும் (ஆ) பேருந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்பட்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும், தனித்தனி போக்குவரத்துக் கழகங்களை அமைக்கலாம் என்ற பரிந்துரையை கொள்கையளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதன் பேரில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. பி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தால், மிகப் பெரிய அளவிலான நிர்வாகத்தை நடத்த மிகவும் சிரமப்படுவதால், அதை இரண்டாகப் பிரித்து, வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒன்றும், தென்னாற்காடு மாவட்டத்திற்கு ஒன்றுமாகப் பிரித்து, வேலூரை



தலைமையிடமாகக் கொண்டு இயங்குவதற்கான ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதாக அறிகிறேன். அது எப்போது செயலுக்கு வரும்,

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்சம் ஒரு போக்குவரத்துக் கழகத்தில் 600-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இருந்தால் தான் அதை பிரிப்பதினாலே பயன் ஏற்படும். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மிகப் பெரிய போக்குவரத்துக் கழகம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உண்மை அது அல்ல. 387 பேருந்துகள்தான் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. நிர்வாகத்தில் பிரச்னை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். ஆனால் அதன் அடிப்படையில்தான் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் புறநகர்ப் பிரிவையும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தையும் ஒன்றாகச் சேர்த்து, முறையாக அதை பிரித்து விடலாமா என்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கும் போது, கண்ணியம் மிகுந்த காயிதே மில்லத் அவர்கள் பிறந்த மாவட்டம் ஆதலால் அவருடைய பெயரை பிரிக்கப்பட்ட அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு சூட்டுவதற்கு அரசு முயலுமா அந்த அடிப்படையில் அரசு அதை பரிசீலனை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பதைப் பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். பெயர் வைப்பதைப் பற்றி அல்ல. இருந்தாலும் அப்படிப் பிரித்த பிறகு அந்தந்த மாவட்டத் தலைவரின் பெயரை வைப்பதில் மக்களுடைய விருப்பத்தை அறிந்து வரத்துக் கழகத்தைப் டும். கட்டபொம்மன் போக்கு ள்ள்பேய பொருத்தவரையில், அதைப் பிரிக்கும் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும். அவர் சொன்ன அந்த அடிப்படையிலேயே அரசுக்கும் அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான ஆலோசனை இருக்கிறதா? அப்படி பிரிக்கப்படுமேயானால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தை, அந்த மாவட்டத்தின் தந்தையாகிய திரு. நேசமணி................

[1981 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பதை பற்றித்தான் கேள்வி. பெயர் வைக்கப்படுவது பற்றி அல்ல.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கார்ப்பொரேஷனை இரண்டாகப் பிரிப்பதைப் பற்றி அறிவிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள். அது எப்போது பிரிக்கப்படும் கூடிய வரையில் இந்த நிதி ஆண்டிலேயே அதைப் பிரிப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 675 பேருந்துகள் இருக்கின்றன. அதைப் பிரிக்கலாம் என்ற அடிப்படையில் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் படிப்படியாக இருக்கிற பேருந்துக் கழகங்களைப் பிரித்துக் கொண்டு வரும்போது, இந்தக் கழகத்தை காலதாமதமாகத்தான் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி சேலம் ஆகிய இரு மாவட்டங்களிலும் ஓடிக் கொண்டிருக்கும் அண்ணா போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து தர்மபுரி மாவட்டத்தில் ஓடக் கூடிய கார்ப்பரேஷனுக்கு, அதியமான் அவர்களின் பெயரை வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. கோபால் : மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். அப்படி அமைக்கிறபோது நிர்வாகம் சரிவர இயங்க பிரதிநிதிகள் சார்பாக ஆலோசனைக் குழு ஒன்று அமைக்க அரசாங்கத்திடம் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அப்படி பிரிக்கிறபோது தான் அமைக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தேவை என்றால் இப்பொழுதுகூட அமைக்கலாம். அது நடைமுறையில் கூட இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் சில போக்குவரத்துக் கழகங்களுக்கு அந்த அமைப்பதாய் இருக்கிறது.



1981 ஏப்ரல் 4]

## திருவில்லிபுத்தூரிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

*வினா எண். 644— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிபுத்தூர் நேதாஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் கோவிந்தன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம், எனில் இரு சங்கமும் செயல்படுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) திருவில்லிபுத்தூரில் உள்ள நேதாஜி கூட்டுறவு சங்கமும், கோவிந்தன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கங்கள் செயல்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆரம்பத்தில் இருந்த மெம்பர்கள் இப்போது குறைந்து கொண்டே வருகிறார்கள். 1976 ஆம் ஆண்டு அந்த சொஸைட்டி தலைவர் டைரக்டர் இலட்சக்கணக்கில் கையாடல் பண்ணிவிட்டதாக அவர்கள் மேல் வழக்கு நடந்து வருகிறது. அவர்கள் பினாமி பெயரில் நூல்களை எடுத்து அந்த சொஸைட்டி இயங்காமல் செய்துவிட்டார்கள். ஆதலால், அந்த சொஸைட்டி இயங்குவதற்கு பினாமி பெயரில் நூல் உற்பத்தி செய்து கொடுக்காத அந்த மெம்பர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற வினாவிற்காக குறிப்புகள் இங்கே இல்லை. 1976 ஆம் ஆண்டு அதன் தலைவர் அவர்கள் கையாடல் செய்து வழக்கு நடைமுறையில் இருப்பதாகக் கூறுகிறார்கள். இன்னும் பல தவறுகள் செய்து வருவதாகக் கூறுகிறார்கள். அப்படி இருக்குமானால் நிச்சயமாகத் தவறுகள்செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : இந்தச் சங்கத்தில் புது உறுப்பினரையும் சேர்த்து அந்த உறுப்பினர்கள் நெய்யக்கூடிய வகையில் புதுப்புது இரகங்களை அவர்களுக்குக் கொடுத்து உடனக்

குடன் உற்பத்தி செய்த துணிகளை கோவாப்டெக்ஸ் மூலம் கொள் முதல் செய்து, அதோடு அது நலிந்த சங்கமாக இருப்பதால் கடனை அதிகமாகக் கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் ஊழல் நடந்துள்ளதாகச் சொன்னார்கள். அந்தச் சங்கத்திற்குப் பணம் கொடுத்தால் என்னாகிறது ?

கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துணி இரகங்கள்

*வினா எண். 645 —திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படாமல் தடை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு எஸ். திரு. என். இராசேந்திரன் : கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத் தறிகளில் உற்பத்தி செய்யப்படாமல் தடை செய்ய, கைத்தறி ஆய்வாளர், கைத்தறி அலுவலர், துணிநூல் கட்டுப்பாடு அதிகாரிகள் ஆகியவர்கள் அவ்வப்போது விசைத்தறிகளில் துணி உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு திடீர் விஜயம் செய்து கண்காணித்து வருகின்றனர். தடையை மீறுபவர்கள்மீது நீதி மன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா தாமரைக்கனி : கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள காஸ், பாண்டேஜ் துணி விசைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் ஆணை பிறப்பித்தும் விசைத் தறிகளில் இன்னும் அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ? எவ்வளவு வழக்குகள் இதுவரை தொடரப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : கைத்தறிக்கு, அதன் மேம்பாட்டிற்கு 11 இரகத் துணிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் தவறு செய்கிற பவர்லூம்ஸ் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளை நல்ல முறையில் செயல் படுத்த முடியவில்லை. அதற்கான காரணங்கள், நீதி மன்றங்களில் இந்த உத்தரவுகள் செல்லுபடியாகாது என அடிக்கடி வழக்குகள் போடப்பட்டுள்ளன. விசைத்தறிகள், கைத்தறிகளைவிட குறைந்தவிலையில் துணிகள் உற்பத்தி செய்வதாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் ஓர் உற்பத்தியாளர் தகுந்த காரணங்களை எடுத்துக்கூறினால், மேற்குறித்த உத்தரவு





களில் இருந்து விலக்களிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. இரண்டாவதாக, இந்த உத்தரவுகளை செயல்படுத்துவதற்காக அதற்காகத் தனி அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. மூன்றாவதாக, ஒதுக்கீடு உத்தரவுகளில் பல தொழில் நுட்ப விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் உத்தரவுகளை நன்முறையில் செயல்படுத்த தடையாய் உள்ளன. மேலே சொன்ன குறைபாடுகளை தவிர்த்து ஒதுக்கீடு உத்தரவுகளை மாற்றியமைப்பதற்காக மத்திய அரசு பஞ்சாலை ஆணையர் தலைமையின்கீழ் ஒரு குழுவை நியமித்துள்ளது.

குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. வழக்குகள் சம்பந்தமாக 1977-இல் இருந்து 1980 வரை பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகள் எண்ணிக்கை 1,181. தண்டனை அளிக்கப்பட்ட கேஸ்களின் எண்ணிக்கை 691.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளுக்குத் தேவையான பாண்டேஜ், காஸ் துணிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெய்யப்பட்ட துணிகளை, கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்ய, அரசு திட்டவட்டமான ஆணையைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பிரைமரி சொசைடிகளிலே தயாரிக்கின்ற துணிகளை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து, மருத்துவ மனைகளுக்கு விநியோகித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி இரகங்களுக்கு ஒதுக்குவது சம்பந்தமாக ஏற்கெனவே அமரர் இராஜகோபாலாச்சாரி அவர்கள் இருந்த காலத்தில் இங்கே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது—கரை போட்ட வேட்டி, சேலைகள் கைத்தறிக்கு ஒதுக்குவதென்று அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கைத்தறியைக் காப்பாற்றும் பொருட்டு, நூல் துணிகள் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு, 36 இஞ்ச் அகலத்திற்கு மேல் நெய்யப்படும். இந்த இரகங்களை விசைத் தறிகள் மூலமாக உற்பத்தி செய்வதைத் தடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது விசைத்தறிகள் மூலம் எந்தவித இரகமான துணிகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்?

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சங்கங்களுக்கு வழங்கப்படும் கறவைமாடுள் திட்டத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கறவை மாடுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? ஆம் எனில் இது வரையில் மகளிர் சங்கங்களிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள யூனிட்டுகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களும் உறுப்பினர்களாகச் சேரலாம். ஆனால் அவர்களின் மொத்த எண்ணிக்கை பற்றிய குறிப்பு தற்சமயம் என்னிடம் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் கண்டிப்பாகக் கூறுகிறேன்.

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சங்கங்களுக்கு வழங்கப்படும் கறவை மாடுகள் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு கடன் வழங்கப்படுகிறது. அதில் எவ்வளவு மானியம்? எவ்வளவு திருப்பிக் கட்ட வேண்டும் வட்டியில்லாத கடனா? வட்டி இருந்தால் எத்தனை சதவீதம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி. கோமதிசீனிவாசன்:** தனிக் கேள்வி போடவும்.

**திரு. ந. குலசேகர பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மகளிர் மாடுகளை வைத்துப் பால் கறவை செய்து வருவதை ஒரு தொழிலாகக் கொண்டுள்ளார்கள். கிராமங்களில் உள்ள மகளிர் இப்படிப்பட்ட சங்கங்களை அமைத்து அவர்கள் அரசின் மூலமோ, தேசிய வங்கிகளின் மூலமோ கடன் பெற அரசு ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலில் கூறும்பொழுது மகளிர் சங்கங்களுக்குக் கறவை மாடுகள் வாங்க அரசு எதுவும் நிதியுதவி அளிக்கவில்லை; மாநில சமூக நல வாரியத்தின் மூலம் மத்திய சமூக நல வாரியம் நிதியுதவி அளித்து வருகிறது. அவர்களுக்கு கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. கிராமங்களில் வசிக்கிற மகளிர்களும் இப்படிப்பட்ட மகளிர் மன்றங்களில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு கறவை மாடுகள் வழங்குவதற்கு மத்திய அரசாங்கம் நிதியுதவி அளிக்கும்.





**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது 342 யூனிட் என்று சொன்னார்கள். எந்த எந்த ஜில்லாக்களில் எத்தனை யூனிட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த ஜில்லாக்கள் என்பது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மன்றங்கள் அமைப்பது இன்றைக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும் இருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மேல்தட்டு மக்களிடத்திலே போய் இந்த மாதிரியான சங்கங்களை அமைக்கிறார்கள். சாதாரண ஏழை, எளிய அரிசன மக்களிடத்திலே போவதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே போய், அவர்களிடம் கலந்துரையாடி, அந்த மக்கள் இந்த மாதிரியான மகளிர் மன்றங்கள் அமைத்தால் அவர்கள் பலன் அடைவார்கள்; அவர்களுக்கு உதவியாக இருக்கும். இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எங்காவது மேல் மட்டத்தில் மகளிர் மன்றங்களுக்கு சேர்த்து இருப்பார்களானால் அந்த விவரங்களை அளித்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### கப்பலூரில் உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சிக்கூடம் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண் 647 ; **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் தொகுதி கப்பலூரில் உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சிக்கூடம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டத்திலே கப்பலூரிலும் சேலத்திலும் உடல் ஊனமுற்றோருக்கு இரண்டு பயிற்சிக் கூடங்களைத் துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கும்போது கப்பலூரில் தொழிற்பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடமாக துவக்கலாம்

எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்தக் கருத்தையொட்டி சமூகநலத் துறை இயக்குநரின திருந்திய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இயக்குநரின் அறிக்கை வரப்பெற்றவுடன் அரசு விரைவாக முடிவு செய்யும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அமைச்சரவையின் சமூக நலத்துறை அமைச்சராக இருந்த செல்வி பி. டி. சரஸ்வதி 1979 ஆம் ஆண்டு இந்த மானியக் கோரிக்கையிலே பதில் அளிக்கிற நேரததிலே அந்த 2 மாவட்டங்களில் உடல் ஊனமுற்றோருக்கு பயிற்சிக் கூடங்கள் அமைப்பது பற்றி அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது மதுரை திருமங்கலம் பகுதியில் கப்பலூரில் அது ஆரம்பிப்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது உடல் ஊனமுற்றோர் காரியமாக இருப்பதாலும் இது உடல் ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதாலும் முன்னாள் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியாக இருப்பதாலும் விரைவிலே பரிசீலித்து இந்த ஆண்டு அது வருவதற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பரிசீலனை விரைவாக செய்யப்பட்டு இந்த ஆண்டு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு) ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சாலையிலே தங்களுடைய அறையிலே வந்து பேசியபோது சத்திரப் பட்டியிலே தடியடி நடந்திருக்கிறது, ஒருவர் இறந்திருக்கிறார் என்கிற முக்கிய விஷயமாய்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அறையிலேயே சொன்னேன். தினசரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தான் எடுத்துக்கொள்கிறோம். சத்திரப்பட்டி சம்பந்தமாக இன்னும் பதில் வரவில்லை.



திரு. சோ. அழகர்சாமி: அங்கே போலீஸ் படை குவிக்கப்பட்டிருக்கிறது, ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய உணர்ச்சிகளை நான் மதிக்கிறேன். பதில் வந்தால் தான் எடுத்துக் கொள்ள முடியும். அவையில் எடுத்துக் கொள்கிற வரையில் தாங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: அங்கே ஒரு நெசவாளி இறந்திருக்கிறார். போலீஸ் போய் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குத் தந்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுவும் உங்கள் கட்சிக்காரர் கொடுத்ததுதான்.

திரு. சோ. அழகர்சாமி: அது நான்கு நாட்களுக்கு முன்னாலே கொடுக்கப்பட்டது. எது அவசரமோ அதை உடனுக்குடன் எடுத்துக் கொள்ள வேண்டாமா?

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்கிறோம் எல்லாவற்றையும் சட்டசபையிலே உடனுக்குடன் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வது மரபல்ல. முறையும் அல்ல. அது முடியவும் முடியாது.

ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அதை மூன்று மாண்புமிகு உறுப்பினர்கள் சேர்ந்து கொடுத்திருக்கிறார்கள். பதட்ட நிலையைப்பற்றித் தான் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: ஒரு ஆண் இறந்திருக்கிறார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படியெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு பேசிக்கொண்டே சென்றால் பிறகு அவற்றை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டியதாயிருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: வேண்டுமென்றே புறக்கணித்து வருவதாகக் குற்றஞ்சாட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் குற்றச்சாட்டை நான் முழுமையாக மறுக்கிறேன். அறையிலே பேசவேண்டியதை இந்த அவையிலே கொண்டு வந்து விவாதிக்கின்ற மரபுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்வது முறைக்கு மாறானது. இதை திரு. அழகர்சாமி அவர்கள் தம் கவனத்திற்கொள்ள வேண்டுமென்றே.

திரு ரா. உமாநாத் : தலைவரவர்களே, இதிலே உள்ள விஷயம் என்னவென்றால், நீங்கள் சொன்னீர்கள் அதற்கான தகவல் வர வேண்டுமென்று

We cannot allow such things absolutely to the description of the Minister concerned.

பிரச்னையின் முக்கியத்துவத்தைப் பொறுத்து அது இருககிறது. நீங்களே லோக்சபாவிலே பார்த்திருப்பீர்கள்.

Important thing

என்றால், வெயிட் பண்ணிப் பார்ப்பார்கள், பதில் வரவில்லையென்றால்

The Hon. Speaker himself will rise to the occasion and take up the matter

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு லோக்சபா நடவடிக்கையை நான் சொல்கிறேன். நேற்று எட்டுபேர் பெங்காலிலே கொல்லப்பட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அறிக்கை வைப்பதற்கு அனுமதியில்லை என்று சொல்லி முழுக்க மறுத்திருக்கிறார்கள். எனவே, லோக்சபா நடவடிக்கை மாதிரி நடக்கச் சொன்னீர்கள் என்றால் நான் நடத்துகிறேன். நான் ரொம்ப லீனியண்டாக இருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : ஒரு சம்பவம் நடந்தால் உங்கள் ஆபீசிலேயிருந்து நோட்டீஸ் செய்வதற்கு முன்னதாகவே அமைச்சர்கள் தமிழ்நாட்டிலே நடக்கும் சம்பவங்களைப் பொறுத்த வரையில்,

They must be ready even before notices are received.

அப்படியென்று ரூலிங்கும் முந்தைய சபையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது அப்பொழுது இந்தமாதிரி பிராப்ளம் வருவதற்கு வாய்ப்பிருக்காது அவர், கட்சிப் பிரச்னையாகப் பார்க்கவில்லை என்பதற்கு ஒரேயொரு உதாரணம், நீங்கள் இப்பொழுது கிளப்பியது அவருடைய கட்சியிலிருந்து கொடுத்திருக்கிறவர்தான். ஆகவே, அவர் கட்சிப் பிரச்னையைப் பார்க்கவில்லை. என் கட்சிக்குக் கொடுக்காமல் வேறு கட்சிக்குக் கொடுத்தல் என்ற நிலைமையில் அவர்பார்க்கவில்லை. சொந்தக் கட்சிக்குக் கொடுத்தும் கூட விஷயத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி இதை ரெய்ஸ் செய்திருக்கிறார்கள். இன்னும் இன்டென்சிவ்வாக ஆகிக் கொண்டிருக்கிறது. என்று சொல்கிறார்கள்.

This is really a relevent thing.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Irrelevent things எதுவும் சபைக்கு வரவில்லை. ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு பிரச்னையிலே இதுதான் முக்கியம் என்று கருதுகிறார்கள். இவ்வாறு அவரவர்கள் கருதுவதற்கு, எண்ணுவதற்கு





உரிமை இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், ஒருநாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு வருகிறோம். பதிலே வருவதில்லை என்று பொத்தாம் பொதுவிலே குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இரண்டு மாணவர்கள் இறந்தார்கள் என்பது பற்றி 30 உறுப்பினர்கள் கொண்டு வந்த பிரச்னை பற்றி பரிகாரம் காணப்பட்டு, பதில் சொல்லப்பட்டிருக்கிறது ; ஒரு மணி நேரம் விவாதிக்கப் பட்டிருக்கிறது. எனவே, நேற்று அனுமதிக்கப்பட்டதையெல்லாம் மறந்துவிடக் கூடாது. சத்திரப்பட்டிபற்றிய அவருடைய பிரச்னை வரவில்லை என்பதற்காக எல்லாமே சரியில்லை என்று சொன்னால் இதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

திரு. சோ. அழகர்சாமி : ஒரு வாரகாலமாக இந்த இடத்திலே உண்ணாவிரதம், மறியல் ஆர்ப்பாட்டம், 25 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான துணி தேங்கியிருக்கிறது, அனுப்பிய துணிகளுக்கு பணம் வராமல் இருக்கிறது, தொடர்ந்து வேலையில்லாமல் இருக்கிறது. கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னால் போலீஸ் போய் அடக்குமுறை நடந்து இறந்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எடுத்துக்கொள்கிறேன். எடுத்துக்கொள்வதற்கு சில முறைகளை நாம் கடைபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. தினசரி ஒன்று எடுத்துக் கொள்கிறோம். ஒவ்வொன்றுக்கும் பதில் வரவேண்டியிருக்கிறது. உங்களுக்கு அவசரம் என்பதாலே உடனடியாக எடுத்துக் கொள்ள முடியாது அதோடு, அவையிலே இதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் வற்புறுத்த ஆரம்பித்தால், நான் சபையை நடத்தவும் முடியாது. அது முறையும் ஆகாது. இரண்டு மாநிலங்களில் உங்கள் கட்சியினரும் அரசாங்கத்தை நடத்துகிறார்கள். ஏறத்தாழ எல்லாக் கட்சிகளும் அரசாங்கத்தை நடத்துகிறார்கள். அரசாங்கம் நடத்திப் பார்த்த கட்சியும் இருக்கிறது அரசாங்கத்தை நடத்துகிற, நடத்திய கட்சிகள்தான் இங்கே இருக்கின்றன. ஆகவே சில மரபுகளை முறைகளை ஒத்துக் கொள்ளவேண்டுமே தவிர. உணர்ச்சி வசப்பட்டு இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அது எப்படி முடியும் ? அதே மாதிரி, காலையிலே 4 பேர் செத்துப் போய்விட்டார்கள், பஸ் ஆக்சிடெண்ட்டில் ஆகவே அதை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். அதை எப்படி எடுத்துக்கொள்ள முடியும் ? கம்ப்யூட்டரிலே மிஸ்டேக் மாணவர்கள் மத்தியிலே பதட்ட நிலைமை, அப்பிரச்சினையை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைப் பற்றிச் சொல்லி, உடனடியாக பதட்ட நிலைமை என்று சொல்கிறார்கள். ஒவ்வொன்றாகத்தானே எடுத்துக்கொள்ள முடியும் ?

திரு. சோ. அழகர்சாமி : நூற்றுக்கணக்கானவர்கள் சிறைச்சாலையிலே இருக்கிறார்கள், ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவோ இருக்கலாம். நாடாளுமன்றத்திலே, வெஸ்ட் பெங்காலிலே ஒரு பெரிய பிரச்னை, பந்த் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் அதை எடுத்துக்கொள்ளவில்லை., மறுத்து விட்டார்கள். திரு. பல்ராம் ஜக்கர் மறுத்திருக்கிறார் உரிமையோடு மறுத்துப் பேசியிருக்கிறார்கள். இதைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று என்னை வற்புறுத்த முடியாது. எனக்குச் சில உரிமைகள், இருக்கின்றன. என் அறையிலேயே, அதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களே, இந்த அவையிலே நாம் அனைவரும் சேர்ந்து கடைபிடித்த வருகின்ற விதிமுறைகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் கேட்டுகொண்டார். ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் என்று எடுத்துக் கொண்டுவருகிறோம். எந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுப்பது என்பதை முடிவு செய்யும் பொறுப்பு பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது. ஆகவே உரிய பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கிறார், பதில் சொல்லக் கூடாது என்பதல்ல. உரிய அமைச்சரிடமிருந்து அதற்குரிய பதில் வந்தவுடன் அநேகமாக, திங்கட்கிழமைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறார்கள். அதற்கிடையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி இந்தப் பிரச்னையைப் பற்றி இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதன் மூலமாகத்தான் தீர்வு காண வேண்டுமென்பதில்லை. உரிய அமைச்சர் அவர்களே, உரிய அதிகாரிகளை எல்லாம் சந்தித்து நடவடிக்கை எடுக்கலாம். அமைச்சரைச் சந்தித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுக்கவும் வழியிருக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானம் உரிய முறையில், உரிய நாளில் உரிய முறையில் எடுத்துக்கொள்ளப்படும். அதில் காலதாமதம் செய்ய வேண்டுமென்பது நோக்கமல்ல. திங்கட்கிழமையே பதில் வந்துவிடும் என்று சொல்கிற காரணத்தால், திங்கட்கிழமையே கூட எடுத்துக்கொள்ளப்படலாம்.



## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத பணம் கட்டிய மாணவர்கள் சிலருக்குத் தேர்வு எழுத எண், ஹால் டிக்கெட் கொடுக்கப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம் திருவாளர்கள் மு. அப்பாதுரை, எம். ஆறுமுகம், மு. அம்பிகாபதி ஆகியோர் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத பணம் கட்டிய மாணவர்களுக்குச் சரியான ஹால் டிக்கட் கொடுக்கப்படாததாலும் தேர்வு எண் கொடுக்கப்படாததாலும் மாணவர்கள் தேர்வு எழுதாமல் பாதிக்கப்பட்டுள்ளதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதியை கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாக விளக்கவேண்டும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ் நாட்டில் உயர்நிலைப் பள்ளிகளுக்கான தேர்வுக்காக விண்ணப்பித்துள்ள பல மாணவர்களின் தேர்வுகளுக்கான ஹால் டிக்கட் நம்பர் வராத காரணத்தால், பல மாணவர்கள் இன்றைக்குத் தேர்வு எழுத முடியாத நிலைமையில் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்தில் பல இலட்சக்கணக்கான மாணவர்கள் தேர்வு எழுதக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் பல மாணவர்களுடைய வாழ்க்கை பிரச்சினை அதில் அடங்கி இருக்கிற காரணத்தால் அது போன்ற பல சம்பவங்கள் இன்னும் தொடர்ந்து அந்த கல்வித் துறையில் இருக்கிற காரணத்தால் இருக்கிற நிலையைக்கருதி அப்படிப்பட்ட தவறுகள் வருங்காலத்தில் நிகழாமல் இருப்பதற்கும் பாதிக்கப்பட்ட மாணவர்களுடைய தேர்வைப்பற்றி ஆழமாகப் பரிசீலித்து அந்த மாணவர்களுடைய வாழ்வைப் பறிக்கக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிற காரணத்தாலும், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் 1981 எஸ். எஸ். எல். சி. பொதுத் தேர்வுக்கு 50,777 மாணவ மாணவிகள் தனித் தேர்வாளர்களாக விண்ணப்பம் செய்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும், அவர்களின் விண்ணப்பங்களில் கொடுத்திருந்த முகவரிக்கு உரிய காலத்தில் கம்ப்யூட்டரில் அச்சிடப்பட்ட தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. தனித்தேர்வாளர்

கள் நுழைவுச் சீட்டுகளைப் பெற்றுத் தேர்வு மையங்களில் 24--3--1981 முதல் தேர்வுகளை எழுதி வருகின்றனர். ஆண்டு தோறும் உள்ள நடைமுறைப்படி இவ்வாண்டும் நுழைவுச் சீட்டுகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. எம்முறையிலும் நுழைவுச் சீட்டுப் பெறாத தனித் தேர்வாளர்கள் தேர்வு எழுத இயலாமை பற்றி இதுவரை தேர்வுத் துறை இயக்ககத்திற்கு நேரிலோ, மடல் மூலமோ எவ்வித முறையீடும் வரவில்லை. அரசுத் தேர்வுகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்ட சில தனித் தேர்வாளர்களுக்கு பதிவெண்களும், தேர்வு மையமும் உடனுக்குடன் தந்தி மூலமும், மடல் மூலமும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேர்வு மையத் தலைமைக் கண்காணிப்பாளர்களுக்கும் நுழைவுச் சீட்டின்றி வரும் தனித் தேர்வாளர்களை தேர்வுக்கு அனுமதிக்குமாறு ஆணையும் அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது. நுழைவுச்சீட்டுப் பெறாதவர்கள் நேரில் தேர்வு மையங்கட்குச் சென்று தலைமை கண்காணிப்பாளரிடம் ஒரு வேண்டுகோளும் உறுதிமொழியும் கொடுத்தால் அவற்றின் அடிப்படையில் அவர்கள் தேர்வு எழுத வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சில தனித் தேர்வாளர்கள் தங்கள் விண்ணப்பங்களில் முகவரி களைக் கொடுக்கத் தவறிவிட்டுள்ளனர். சிலர் தவறான முகவரிகளை அளித்துள்ளனர். அச்சிலரின் முகவரி இல்லாமையால் அவர்களோடு தொடர்பு கொள்ளவோ, அவர்களின் சரியான முகவரிகளை அறிந்து நுழைவுச் சீட்டுகளை அனுப்பவோ இயல வில்லை.

விண்ணப்பத்திற்குரிய கடைசி நாளுக்குப் பிறகு பல வாரங்கள் கழித்தும் சில விண்ணப்பங்கள் வந்துள்ளன. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கூடத் தனித் தேர்வாளர்களுக்கு நுழைவுச் சீட்டு களையும் அவர்கள் பெயர் முதலிய விவரங்களையும், அவர்கள் தேர்வு எழுத வேண்டிய மையத் தலைமையாசிரியர் அல்லது தலைமைக்கண்காணிப்பாளருக்கு அனுப்பி, இத்தனித் தேர்வாளர் கள் நேரில் வரும்போது அவர்களிடம் நுழைவுச் சீட்டுகளைக் கொடுத்து அவர்களைத் தேர்வுக்கு அனுமதிக்குமாறும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. தனித் தேர்வாளர்கள் தேர்வு எழுதும் வாய்ப்பு இழக்காமலிருக்க எல்லா ஏற்பாடுகளும் போதிய முன்னெச்சரிக் கையாக செய்யப்பட்டுள்ளது

பள்ளியில் பயின்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் மாணவர் களைப் பொறுத்த மட்டில் தலைமையாசிரியர் மூலமாகப் பெயர் பட்டியல் அனுப்பப்படுகிறது. அவர்களுக்குத் தனியே நுழைவுச் சீட்டுகள் அளிப்பது இல்லை.





நுழைவுச் சீட்டு கிடைக்கவில்லை என்ற குறைபாடு பிரைவேட் கேண்டிடேட்ஸுக்கு சில இடங்களில் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர் மானம் கொடுத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன்

கல்வி இலாகாவில் சில விதிமுறைகள் வைத்து இருக்கிறார் கள். அவைகள் பின்பற்றப்பட வேண்டும். அதைப் பின் பற்றத் தவறிவிடுவோமானால் ஒருவருக்குப் பதில் இன்னொருவர் பரிட்சை எழுத நேரிடும். பிறகு அந்தத் தேர்வே அர்த்தமற்ற தாகிவிடும். அந்தத் தேர்வுத் துறை இயக்ககத்திற்கு யார்யார் தேர்வு எழுத விண்ணப்பித்து இருந்தார்களோ அவர்களுக்கு எல் லாம் நுழைவுச் சீட்டு அனுப்பப்பட்டுள்ளது. நுழைவுச் சீட்டு பெறாதவர்கள் கூட நேரில் தேர்வு மையங்களுக்குச் சென்று அதற்கான விண்ணப்பத்தையும், உறுதிமொழியையும், கொடுத் தால், தேர்வு எழுதும் வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கான எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கிறது. நுழைவுச்சீட்டு கிடைக்கவில்லை என்று எந்தவித மான புகாரும் இதுவரையில் வரவில்லை. பள்ளிகளில் படித்து பரிட்சை எழுதுகிற மாணவர்களைப் பொறுத்தவரையில், தலைமையாசிரியர்கள் மூலம் நுழைவுச் சீட்டுகள் கொடுக்கப்படு கின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை. என்வே இந்தப்பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச் சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலு வல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்

அ. கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழியில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஆதிதிராவிடர்களுக்குச் சொந்தமான 113 வீடுகள் சேதமுற்றது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1981 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுகா, ஆரல்வாய் மொழி கிராமத்திலுள்ள அழகியநகர் அரிசனக் குடியிருப்பில் 5-3-1981 அன்று தீ விபத்து ஏற்பட்டது. 81 குடியிருப்புகள் முழுவதுமாகச் சேதமடைந்தன. 18 குடியிருப்புகள் பகுதியாகச் சேதம் அடைந்தன. மொத்த சேத மதிப்பு சுமார் ஒரு இலட்சம் ரூபாய். உயிர்சேதமோ, கால்நடை சேதமோ இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு அருகிலுள்ள ஒரு பள்ளியில் தங்க இடவசதி செய்து கொடுக்கப்பட்டது; உணவும் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல; அரிசி, வேட்டி மற்றும் புடவையும் வழங்கப்பட்டது.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** தலைவரவர்களே, ஆரல்வாய் மொழியில் நடைபெற்ற இந்த தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டிருக்கிறது. அதிலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏறத்தாழ 99 வீடுகள், குறிப்பாக அரிசனப்பகுதி ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு இதிலே கவனம் கொண்டு, 200 ரூபாய் உடனடியாகத் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இருந்தாலும் அந்தப் பகுதியிலே அவர்கள் ஏழை மக்கள் என்பதால் தங்கள் உபயோகத்திற்கு குறைந்த அளவு தானியங்களே வைத்திருந்தார்கள். அவர்களுக்கு ஏறத்தாழ 2,000 ரூபாய், 3,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த 99 வீடுகளுக்கும், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அரசின் சார்பிலே 2,000 ரூபாய் கடன் வழங்க வேண்டுமென்று அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் அரசிடமும் முறையிட்டிருக்கிறார்கள். ஆனால் இது வரை அந்தக் கடன் வழங்கப்படவில்லை. ஆகவே, அரசு உடனடியாக கடன் வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தம் :** தலைவரவர்களே, அவர்களுக்கு ஆதிதிராவிடர்கள் என்ற முறையிலே வட்டி இல்லாத கடன் 2,000 ரூபாய் வரையிலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அவர்கள் இந்தக்கடனை வழங்குவதற்காக அதிகாரிகளிடம் முறையிட்டபோது அவர்கள் ஜாமீன் வேண்டுமென்று கேட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஜாமீன் கொடுப்பதற்கு பாதிக்கப்பட்ட அந்த ஏழை எளிய மக்களால் இயலவில்லை. ஆகவே, அவர்களுக்கு அந்த நிபந்தனையைத் தளர்த்தி, கடன் கொடுக்க அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.



1981 ஏப்ரல் 4]

### ஆ. தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்" பற்றி திருவாளர்கள் மு. அப்பாதுரை, எம். ஆறுமுகம், ... ரகுமான்கான், சி. பழனிமுத்து, நா. சுந்தரராஜ், பாபு ஜனார்த்தனன், இரெ. இராசமாணிக்கம், ஜே. எஸ். இராசு, ப. பொன்னுரங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஜே. ஹேமச்சந்திரன், து. இராசரத்தினம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதனை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. மு. அப்பாதுரை :** தலைவரவர்களே, "தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தங்களது 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் 30-1-981 முதல் தொடர் மறியல் செய்வது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, பேரவையின் முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை

திரு. க. மீனாட்சிசுந்தரம் எம். எல். சி., அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்ட தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் 10 அம்ச கோரிக்கைகளை அரசின் முன் வைத்துள்ளது. இக் கோரிக்கைகளை வற்புறுத்தி எழிலகத்திலிருந்து நேப்பியர் பாலம் தென்புறம் வரை 1981-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30ஆம் நாள் முதல் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் வரை ஊர்வலமாகச் செல்ல, சென்னைக் காவல் துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுள்ளதாகத் தெரிகிறது. இதன்படி, 1981-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30-ஆம் நாள் காலை 10-30 மணி அளவில் 15 ஆசிரியைகள் உட்பட 125 பேர் ஊர்வலமாகச்சென்றனர். அவர்கள் நேப்பியர் பாலம் தென்புறத்தைக் கடந்து மேற்கொண்டு கோட்டையை நோக்கிச் செல்ல முயன்றபோது அவர்களில் 21 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டு காவல் துறையினரின் பாதுகாப்பில் 1981-ஆம் ஆண்டுஏப்ரல் திங்கள் 19-ஆம் நாள் வரை வைக்கப்பட்டுள்ளனர் என்று அறியப்படுகிறது. இதே போல், 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் அன்று ஊர்வலமாகச் சென்ற ஆசிரியர்களில் 31 பேரும், 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் அன்று

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 ஏப்ரல் 4

ஊர்வலம் சென்றவர்களில் 21 பேரும், 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2-ஆம் நாள் அன்று 39 பேரும் கைது செய்யப்பட்டு முறையே 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் வரைக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான ஆசிரியை ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கொடுத்துள்ள 10 அம்ச கோரிக்கைகள் பின்வருமாறு:—

(1) மத்திய அரசு தன் ஊழியர்கட்கு வழங்கியுள்ள இரு அகவிலைப்படி உயர்வையும், அதே தேதிகளிலிருந்து மாநில அரசு தன் ஊழியர்கட்கும், ஆசிரியர்கட்கும் வழங்கிடவேண்டும்.

(2) ஒரு நபர் குழு அறிக்கையை வெளியிடவேண்டும்.

(3) ஓய்வு பெறும் அனைவருக்கும் ரூபாய் 10,000 வழங்க வேண்டும்.

(4) அனைத்துப் பள்ளிகளையும் அரசுடைமையாக்க வேண்டும். அரசு ஊழியர்களைப் போல ஆசிரியர்கட்கும் ஈட்டிய விடுப்பு அளிக்கப்பட வேண்டும். முதல் மூன்று குழந்தைகள் வரை மூன்று மாத மகப்பேறு விடுப்பும், ஏனையோருக்கு இரண்டு மாத மகப் பேறு விடுப்பும் அளிக்க வேண்டும். 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் நிறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு ஊக்க ஊதிய உயர்வை மீண்டும் வழங்க வேண்டும். தொடக்கக் கல்விக்கென தனி இயக்குனர் நியமனம் செய்ய வேண்டும்.

(5) தற்போது தொடங்கப்பட்டுள்ள திட்டத்தை விரிவாக்கி அனைத்து இளநிலை ஆசிரியர்களையும் ஈராண்டுக்குள்ளேயே இடைநிலை ஆசிரியர்களாக மாற்ற வேண்டும்.

(6) ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குத் தனியான ஊதிய விகிதம் வேண்டும். நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கட்கும் பணிப்படி வழங்க வேண்டும். பணிமூப்புடைய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கட்கு நான்கு வெய்ட்டேஜுடன் ஊதியம் நிர்ணயம் செய்து தர வேண்டும். தகுதிக்கேற்ற ஊதியம் மற்றும் விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு அளிக்க வேண்டும். அனைத்து நடுநிலைப்பள்ளிகளிலும் தமிழாசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(7) எல்லா நிலைப் பணிக் காலங்களையும் கணக்கில் கொண்டு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்க வேண்டும்



1981 ஏப்ரல் 4] [திரு. செ. அரங்கநாயகம்]

(8) அனைத்து ஆசிரியர் குழந்தைகட்கு அனைத்து மட்டத்திலும் இலவசக் கல்வியும், பயிற்சி நிலைகளிலும், வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும். காவல் துறையினருக்கு வழங்கப்படுவதைப்போல ஆசிரியர்கட்கும் மலிவு விலையில் உணவுப் பொருள்கள் வழங்க வேண்டும்.

(9) நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி, மற்றும் மருத்துவப் படி வழங்குதல் வேண்டும்.

(10) பகுதி நேரத் தொழிலாசிரியர்களை முழு நேரத் தொழிலாசிரியர்களாக்கிவிட வேண்டும். 3 ஆண்டுகள் பணி புரிந்த முழு நேரத் தொழிலாசிரியர் இடைநிலை ஆசிரியர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டும். நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முழு நேரத் தொழிலாசிரியர்கட்கு உயர்நிலைப் பள்ளி தொழிலாசிரியருக்குரிய ஊதிய விகிதம் அளித்தல் வேண்டும்

2. இக் கோரிக்கைகளில் அகவிலைப்படி வழங்குதல், ஒரு நபர் குழு அறிக்கையை வெளியிடுதல், ஓய்வு பெறும் அனைவர்க்கும் ரூபாய் 10,000 வழங்குதல், மூன்று குழந்தைகள் வரை மூன்று மாத மகப்பேறு விடுப்பு வழங்குதல், ஏனையோர்க்கு 2 மாத மகப்பேறு விடுப்பு வழங்குதல், நிறுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு ஊக்க ஊதிய உயர்வை மீண்டும் வழங்குதல் மற்றும் மலிவு விலையில் ஆசிரியர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குதல், நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி மற்றும் வீட்டு வாடகைப் படி வழங்குதல் போன்ற கோரிக்கைகள் ஆசிரியர்கட்கு மட்டும் அல்லாமல் மற்ற ஊழியர்களுக்கும் பொதுவானவையாகும். வரும் ஆண்டில் அரசு அலுவலர்களுக்கு வழங்க இருக்கும் சலுகைகள் பற்றி 1981-82-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1981 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 21 ஆம் நாள் அன்று நிதி அமைச்சர் ஆற்றிய உரையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதன்படி ஒரு தவணை அகவிலைப் படி 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு சில சலுகைகளையும் வழங்கியுள்ளது. அதன்படி சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய விகிதங்களை மாற்றியமைக்கவும், ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்பு ஊதியத்தில் வாடகைப்படி, நகர ஈட்டுப்படியைச் சேர்த்து அளிப்பதற்கும் தேர்வு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் இருப்பவர்களுக்கு தேக்க நிலை ஊதிய உயர்வு அளிப்பதற்கும், தேர்வுநிலை அளிக்கப்படாத சாதாரண நிலைப் பதவியில் உள்ளவர்களுக்கும் தேக்க நிலை ஊதிய உயர்வு அளிப்பதற்கும், தேர்வு நிலையில் அலுவலரின் ஊதியத்தை நிர்ணயம் செய்யும்போது ஊதியத் தரங்கள் 8 முதல் 11 வரையில் உள்ளவர்களுக்கு ரூபாய் 20-ம், 12 முதல் 18 வரையில் உள்ளவர்களுக்கு ரூபாய் 10-ம் குறைந்த பட்ச நன்மை அளிக்கவும், கூடுதல் பொறுப்புக்களை உடைய

உயர் பதவிக்கு அலுவலர் பதவி உயர்வு பெறும் போது, இந் பதவியில் பெற்ற ஊதியத்தைவிட 5 சதவீதம் குறைந்தபட்ச நன்மை பெறும் வகையில் ஊதிய நிர்ணயம் செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு அலுவலர்களுக்கு அளிக்கவிருக்கும் இச்சலுகைகள் எல்லாம் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படும்.

3. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களையும் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் நாள் முதல் அரசு ஊழியர்களாக அரசு அறிவித்து, அவ்வாறே ஆணையிட்டுள்ளது. மற்ற தனியார் பள்ளிகளையும் அரசு ஏற்றுக் கொள்வதில் சிறுபான்மையினர் பிரச்சினை போன்ற சில சிக்கல்கள் இருப்பதால் இதை இப்பொழுது ஏற்பதற்கில்லை. தமிழ்நாடு மாநில மற்றும் கல்வி ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி பெற்று இடைநிலை ஆசிரியர் தகுதி பெற வேண்டியவர்கள் ஏறத்தாழ 75,000 பேர்கள் உள்ளதால் 2 ஆண்டுகளில் அனைவர்க்கும் பயிற்சி அளிப்பது நடைமுறைக்குச் சாத்தியமானதாக அமையாது. வரும் ஆண்டில் 250 கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் பதவிகளை பகுதி நேர நிலையிலிருந்துமுழு நேர பதவிகளாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. மேலும், வரும் ஆண்டில் தொடக்கப்பள்ளி நிலையில் 1,000 ஆசிரியர்களும், உயர்நிலைப்பள்ளியில் 200 பி. டி. தர ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளிகளுக்கு 200 பி.டி. கிரேட் தலைமை ஆசிரியர்களும், 250 உடற்பயிற்சி ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளிகளில் 500 தமிழாசிரியர்களும் உருவாக்கப்பட அரசு முடிவு செய்துள்ளது.

4. தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தைத் தவிர பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசின் முன் வைத்துள்ளது. எல்லா கோரிக்கைகளையும் அரசு தீவிரமாக ஆராய்ந்து நிதி நிலைமைக்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியர் நலத்திற்காக பல திட்டங்களை அண்மைக் காலத்தில் நிறைவேற்றி உள்ளது. இந்த அரசு நியாயமான கோரிக்கைகளை ஏற்று உரிய காலத்தில் ஆணை வழங்கும் என நம்பலாம். எனவே; மாணவர் வருடாந்திர தேர்வு நடக்கும் நேரத்தில் ஆசிரியர் போராட்டம் செய்வது தேவையற்றது என அரசு கருதுகிறது.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையிலே பார்த்தால் மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கியுள்ள அகவிலைப்படி உயர்வை அதே அடிப்படையில் தமிழகத்தில் வழங்கவில்லை என்பது தெரிகிறது. மத்திய அரசு வழங்கியிருப்பதற்கும் தமிழக அரசு வழங்கியிருப்பதற்கும் 2, 3 ஆண்டு இடைவெளி இருக்கிறது. இந்த அகவிலைப்படி தமிழகத்தில், இருக்கிற எல்லோருக்கும் பொதுவாக இருப்பதால் மத்திய அரசு அறிவித்துள்ளபடி தமிழக அரசு கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது அரசு ஊழியர்களின் பொதுவான கோரிக்கையாகும். அதற்காக ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட வேண்டியதில்லை.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, 3ஆவது ஊதியக் குழுவின் குறைபாடுகளைக் களைய ஏற்பட்ட ஒரு நபர் குழு சிபாரிசு அடிப்படையில் சில சலுகைகளை இங்கே வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஒரு நபர் குழுவின் முழு அறிக்கையை அரசு எப்போது வெளியிடும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதற்கெல்லாம் தனியாகக் கேள்வி போட்டு, உரிய துறையிலிருந்து பதில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் வைத்திருக்கிற கோரிக்கைகளில் ஒருசிலவற்றை அரசாங்கம் கவனித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கு நன்றி சொன்னாலும்கூட இந்தப் போராட்டத்தில் இன்னும் பல்வேறு சங்கங்கள் இருப்பதால் இந்தப் போராட்டத்தைத் தவிர்க்கக்கூடிய முறையில் அந்தச் சங்கங்களை அழைத்துப்பேசி ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு. திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஆசிரியர்கள் சங்கங்களோடோ அல்லது வேறு எந்த சங்கங்களோடோ அரசாங்கம் பேசாமல் இருக்கின்றபோது கேட்கப்பட வேண்டிய கேள்வி இது. ஆனால், நாங்கள் தொடர்ந்துபேசிக் கொண்டுதான் இருக்கிறோம். மேலவையில் அனுதினமும் இந்தப் பிரச்சினை பற்றி பேசி விளக்கங்கள் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறோம். அப்படித் தேவையான விளக்கங்கள் பெற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் அரசு பரிசீலித்து சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இன்றைக்கு, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் இந்த அரசாலே பரிசீலிக்கப்படவில்லை. முக்கியமாக இந்த விவர அறிக்கையில் கூட அந்த ஆசிரியர்கள் சங்கத்திற்கு அங்கீகாரம் இல்லாத நிலையில் அவர்கள் தங்களது கோரிக்கைகளை டிப்பார்ட்மெண்ட் மூலமாகத்தான் தரவேண்டும் என்று இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அவர்களது கோரிக்கைகள் நியாயம் என்ற நிலையில், அவர்கள் வேலை நிறுத்தங்கள் கூட செய்ய

முடியாத நிலையில் அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை. தனி நபர்கள் பாதிக்கப்பட்டால் அதைக் கூட எடுத்துச் சொல்ல முடியாத அளவுக்கு அதைப்பற்றி பத்திரிகைகளிலே கூட வெளியிடக் கூடாது என்று செய்திருப்பது ஒரு ஜனநாயக விரோதப் போக்கல்லவா? ஆகவே இதுகுறித்து அரசு என்ன சொல்ல விரும்புகிறது? இந்த அறிக்கையிலே அதுபற்றி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, ஆசிரியர்கள் சங்கங்களுக்கு என்று சில விதிமுறைகள் வகுத்து அது இப்போது நடைமுறையிலே இருக்கின்றது. பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் போன்றவற்றிற்கெல்லாம் என்னென்ன விதிமுறைகள் வைத்து இருக்கின்றோமோ அந்த விதிமுறைகளின்படிதான் ஆசிரியர்கள் சங்கங்களுக்கும் அனுமதி தந்திருக்கிறோம். ஆனால், இப்போது மாண்புமிகு திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களின் தலைமையிலே நடைபெறுகின்ற சங்கத்திற்கு அனுமதி தரப்படவில்லை. ஆனால் ஆசிரியர்களுக்கு சங்கம் வைக்கின்ற உரிமை இருக்கின்றது. அந்த உரிமையை வழங்குகிறோம். ஆனால், நாம் அதிலே குறிப்பிட்டிருக்கின்ற ஒரு முக்கியமான நிபந்தனை என்னவென்றால் அந்தச் சங்கங்களின் பொறுப்பிலே வெளியார்கள் இருக்கக்கூடாது என்பதுதான். அதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால் ஆசிரியர்கள் பொறுப்பிலே இருந்தால் ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்காக அந்த சங்கம் நடைபெறும். ஆசிரியர்களுக்குரிய நன்மைக்காகவும் அவர்களுடைய கோரிக்கைகளுக்காகவும் செயல்படுகின்ற சங்கமாக அது இருக்கும். ஆனால், வெளியார் பொறுப்பிலே இருந்தால் வெளியாரின் ஆசைகளுக்காகவும் செயல்படுகின்ற ஒரு நிலை ஏற்படும். ஆகவே அந்தத் தீமையை அகற்றுவதற்காகத்தான் அரசு ஊழியர்கள் சங்கங்களுக்கு என்ன நிபந்தனை வைத்திருக்கிறோமோ அதே நிபந்தனையை ஆசிரியர்கள் சங்கத்திற்கும் வைத்திருக்கின்றோம்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, ஆசிரியர்கள் சங்கங்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாக நம்முடைய அமைச்சர் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அந்த உரிமை மறுக்கப்படுகின்றது என்பது வேறு பிரச்சினை. ஆனால் நான் முக்கியமான ஒரு பிரச்சினை பற்றி கேட்க விரும்புகிறேன். ஆசிரியர்கள் வைத்திருக்கின்ற முக்கியமான கோரிக்கைகள் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவைகளைப்பற்றியெல்லாம் நான் திரும்பவும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் சொல்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டால் அதாவது மூன்று குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்கள் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டால் அவர்களுக்கு இன்கிரிமெண்ட் தரப்படும் என்ற முறை அரசு ஊழியர்களுக்கு மட்டும்தான் இருக்கின்றது. அந்த இன்கிரிமெண்ட் கூட ஆசிரியர்களுக்கு தர





முடியாது என்று கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்து அரசு ஊழியர்களுக்கு அதன்மூலம் இன்கிரிமெண்ட் தருகின்றபோது ஆசிரியர்களுக்கும் அந்த இன்கிரிமெண்ட் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, இப்போது ஆசிரியர்கள் எல்லோருமே அரசு ஊழியர்கள் அல்ல என்று மொத்தமாகச் சொல்ல முடியாது. ஆசிரியர்களும் அரசு ஊழியர்களாக ஆகி இருக்கிறார்கள். வருகின்ற ஜூன் 1 ஆம் தேதியிலிருந்து பெரும்பாலான ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக இருக்கிறார்கள். அப்போது அது நடைமுறைக்கு வருவது பற்றி அந்த சூழ்நிலையில்தான் பரிசீலிக்க வேண்டும்.

ஆனால் இப்போது ஆசிரியர்கள் சங்கத்திற்கு உரிமை வழங்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். இதுவரையில் அந்த உரிமை அவர்களுக்குத் தரப்படவில்லை. இந்த அரசு தான் அந்த உரிமையினை அந்தச் சங்கங்களுக்கு தந்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்தப் போராட்டம் காரணமாகத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 200-க்கு மேற்பட்டவர்கள் சிறையிலே இருக்கின்றார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் நாள் அன்றும் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாள் அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நிதியமைச்சர் அவர்களையும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால் இப்படிப்பட்ட போராட்டங்கள் எல்லாம் வந்திருக்காது. ஆகவே இன்றைய தினம் சிறையிலே இருக்கின்ற அந்த 200-க்கு மேற்பட்ட ஆசிரியர்களை விடுதலை செய்து ஒரு சுமுகமான முறையில் அவர்களுடைய கோரிக்கைகளைத் தீர்த்து வைக்க அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் சங்கம் என்பது இது ஒன்று மட்டும் அல்ல. வேறு பல சங்கங்களும் இருக்கின்றன. இவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளார்கள். போராட்டத்திலே ஈடுபட்டிருக்கக் கூடிய அவர்களுக்கு இதற்குமுன்னாலே அரசை சந்தித்துப் பேசுகிற வாய்ப்பைப் பெறவில்லை என்ற நிலைமை நிச்சயமாகக் கிடையாது. பல்வேறு சூழ்நிலைகளில் பேசியிருக்கிறார்கள். பேசக்கூடிய வாய்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். நான் கூறிக்கொள்வது எல்லாம், ஆசிரியப் பெருமக்கள் அத்தகைய போராட்டங்களில் ஈடுபடு

குறைபட்டு அரசாங்கத்தின்மீது யாரும் குறை சொல்ல முடியாது எல்லாருக்கும் அந்த வாய்ப்பு தந்திருக்கிறோம். அந்த வாய்ப்பு களைப் பயன்படுத்திக் கொண்டு விளக்கங்களைப் பெறவும், விளக்கங்கள் தரவும் பிரச்னைகள் தீர ஒத்துழைப்புத் தர வேண்டுமே தவிர இது போன்று நேரடி நடவடிக்கைகளில் ஆசிரி யர்கள் ஈடுபடுவது என்பது நல்லதல்ல.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆசிரி யர்கள் அடிக்கடி அவர்கள் கோரிக்கைகளை வைத்து போராட்டத் தில் ஈடுபடவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என கூறப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களையுடைய பிரதிநிதிகளை யும் சம்பந்தப்பட்ட மற்ற ஆள்களையும் அழைத்து ஒரு முக்கூட்டு மாநாடு நடத்தி அவர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்னைகளை ஆய்ந்து தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அதே போன்று இன்று ஒரு நபர் கமிஷன் அறிக்கையைப் பொறுத்து அரசாங்கத்திற்கு தேவையானதை மட்டும் நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறது. அந்த அறிக்கை முழுமையாக வெளி யிடப்படவில்லை. என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக கல்வித் துறை சம்பந்தமான அறிக்கைகளையாவது இந்த அவையில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கோரிக்கைகள் பொறுத்த நியாய அநியாயங்களைப் பற்றி நான் பேசவில்லை. நியாயமான கோரிக்கைககளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண் டிருக்கிறது. என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அறிக்கையில் பார்த்திருப்பார்கள்., என் பேச்சின் மூலமாகவும் காண்கிறார்கள். ஆகவே பேசுவதற்கு வாய்ப்பு தரப்படவில்லை என்பதை மறுக்கிறேன். அப்படிப்பட்ட வாய்ப்புகள் நிறைய தரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில் இரு சாரார்தான் பேசவேண்டிய நிலை இருக்கிறதே தவிர முக்கூட்டுப் பேச்சுக்கு இங்கே இடமில்லை.

திரு. கு. இராசரத்தினம்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மன்றம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்களிடமும் முறையாக பேசவேண்டும் என்று கேட்டுக்கொண் டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம் என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசுவதன்மூலம், இன்றைக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் அவர்களை அழைத்துப் பேசி முடிவுகாண அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உடனடியாகப் போராட்டத்தை நிறுத்திவிட்டு பேசுவதற்கான முயற்சி களில் அவர்கள்தான் ஈடுபடவேண்டும்.



## 5 அரசினர் சட்ட முன்வடிவுகள்

### அ. வாடகை வண்டி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981

மாண்புமிகு திரு கு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாடகை வண்டி (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு கு. முத்துசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### ஆ. கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். 1981 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள பதிவு (திருத்தச் சட்ட முன்வடிவு) சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு) எண். 16–1981 *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.'

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல விரும்பு கிறேன். நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை வலியுறுத்து என் கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை சாதாரணமாகப் பார்க்கிறபோது, மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோது இது ஒரு சாதாரண சட்டத்திருத்த மாகத்தென்படும். மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரியது என்று சொல்வதுபோல் பல்வேறு விவகாரங்களை உள்ளடக்கி இருக்கிறது இந்தச் சட்டமுன்வடிவு.

எதற்காக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறார் கள் என்பதற்கு, இந்த மசோதாவினுடைய காரண காரிய நோக்கத்தில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். 1957ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர் பதிவுச் சட்டம் தமிழ் நாட்டில் இயற்றப்பட்டு, கடந்த 24 ஆண்டு காலமாக இந்த பராமரிப்புத் துறையிலே பல்வேறு மாறுதல்கள் செய்யப்

*1981-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பட்டிருக்கின்றன' என்று சொல்லிவிட்டு, அதிலே அடுத்து ஒரு முக்கியமான விவகாரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 'சில ஆண்டுகளாக செயல்பட்ட இந்தக் கால்நடை மருத்துவ மன்றம், 1976ஆம் ஆண்டில் மீண்டும் செயல்பட தொடங்கியிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு வேறு சில வற்றை பின்னாலே சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு 9 (1)(2) என்று பல்வேறு உட்பிரிவுகளுக்குப் போய்விடுகிறது. நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், கால்நடை மருத்துவ மன்றம் அதாவது கால்நடை மருத்துவ கவுன்சில் என்ற ஒரு கவுன்சில் இருக்கிறது. இது 24 ஆண்டுகளாக செயல் படவில்லை என்கிறார்கள். ஆனால், 1976ஆம் ஆண்டிலே இருந்து செயல்படத் தொடங்கியிருக்கிறது என்கிறார்கள். ஆனால், அங்கே தேர்தல் நடைபெற வேண்டுமென்று சொன்னால், அதன்படி கால்நடை மருத்துவர்களால் வாக்களிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 4 பேர்கள் இந்த மன்றத்திற்கு வருகிறார்கள். அவர்களுக்கு அப்போது தேர்தல் நடைபெறவில்லை. 20–7–78 அன்று தேர்தல் நடைபெறுகிறது. அப்படி 20–7–78-ல் இந்தத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. ஆனால், அது செயல்பட தொடங்கியது 76லே என்று சொல்லப்பட்டு, அதற்கு ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்பட்டு, வண்டி பின்நோக்கி ஓடுகிறது. தேர்தல் நடந்தது 78லே ; ஆனால் செயல்படத் தொடங்கியது 76லே. அதைப்போலவே யார் யார் இந்தக் கவுன்சிலுக்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதற்கு அதிலே அந்தந்த பிரிவுகளிலே குறிப்பிட்டு காட்டியிருக்கிறார்கள். கால்நடை மருத்துவக் கல்லூரி சார்பாக 2 உறுப்பினர்கள் ; அரசு நியமனமாக 2 உறுப்பினர்கள் வரலாம் என்று சொல்லிவிட்டு, கல்லூரி முதல்வர் அவர்கள் அலுவல் காரணமாக வருகிறார்கள். மொத்தம் 9 உறுப்பினர்கள் இது வரையிலே இந்தக் குழுவிலே இருக்கிறார்கள். ஆனால் கவுன்சில் நடைபெறவில்லை. ஏற்கெனவே நடைபெற்ற தேர்தலில் எந்தவித வேலையும் நடைபெறாமல் 2½ ஆண்டுகளாக அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. ஆனால், திடீரென்று ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். என்ன முடிவு ? இந்த 9 பேர்கள் மட்டும் போதாது, இன்றைக்கு டைரக்டர் ஆப் அனிமல் அஸ் பெண்டரியையும் ஒரு நியமன உறுப்பினராக்கி, அவர்தான் அந்தக் கவுன்சிலின் பிரசிடெண்ட் ஆக இருப்பார் என்று சொல்லுகிறார்கள். இது என்ன ஜனநாயகம் என்பது புரியவில்லை. உறுப்பினர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனால், பிரசிடெண்ட் மட்டும் எப்படி வருவாராம் ? அவர் அரசின் நியமனம் மூலமாக வருவாராம். அப்படி அவரை நியமிக்க வேண்டுமென்று எந்த ஜனநாயகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது ? எந்தத் தத்துவ மேதை இப்படிச் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார் என்பதும் புரியவில்லை. உலகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில், அதன் உறுப்பினர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால், அதன்





தலைவர், சேர்மன் நியமிக்கப்பட வேண்டும் என்று எந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது ? இதற்கு என்ன ஆதாரம் ? அப்படி என்ன அத்தியாவசிய நிலைமை அவர்களுக்கு உருவாகியிருக்கிறது ? இது நியாயமா ? அதற்கு என்ன காரணம் என்பதை காரண காரிய விளக்கத்திலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. எந்த நோக்கத்திற்காக அவர்கள் நியமிக்கிறார்கள் என்று வரும்போது, அந்த இடத்தில் அப்படியே மழுப்பிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். நாட்டில் பல கவுன்சில்கள் இருக்கின்றன. மெடிகல் கவுன்சில் இருக்கிறது ; அதேபோல் பார்மசிஸ்ட் கவுன்சில் இருக்கிறது ; பார் கவுன்சில் இருக்கிறது. அந்தக் கவுன்சில்களில் எல்லாம் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதற்கு, அதிலேயே சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக, இந்தியன் மெடிகல் கவுன்சில்

"president or Vice-President of the Council shall be selected by the Members of the Council from among themselves.

இதே போல் பார் கவுன்சில். துணைத் தலைவர் அவர்களுக்கு இதைப்பற்றி நன்கு தெரியும்

"There shall be a Chairman and Vice-Chairman to each State Bar Council seelected by the Council in such a manner as may be prescribed."

இதேபோல் பார் கவுன்சில் ஆப் இந்தியா. அங்கேயும் இது மாதிரிதான்.

"There shall be a Chairman and Vice-Chairman to the Bar Council of India elected by te Council in such a manner as may be prescribed.

இதே மாதிரி பார்மசிஸ்ட் கவுன்சில். அதிலேயும் இப்படியிருக்கிறது.

"The President or Vice President of the Council shall be elected at the meeting of the Council."

எல்லா இடங்களிலும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கவுன்சிலுக்கு வருவார்கள். இன்றைக்கு நாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கே சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறோம். சபாநாயகர், துணை சபாநாயகர் ஆகியோர் எப்படி வருகிறார்கள். ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால், இந்த கவுன்சிலில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களாம். ஆனால் அதனுடைய தலைவர் மட்டும் நியமிக்கப்படுவாராம். 20ஆம் நூற்றாண்டில், எந்த வரலாற்று அறிஞர், அரசியல் மேதை இப்படி சொல்லியிருக்கிறார் ? இந்தப் புதுத் தத்துவத்தை அவர்கள் புகுத்துவதற்கான காரண காரியங்கள் என்ன என்பதைச் சொல்லியிருக்க வேண்டாமா ? அவர்கள்

அப்படி சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை. அடுத்து, இது ஆட் நெம்பரில் இருக்கவேண்டும். ஈவன் நம்பரில் இருக்கக் கூடாது. ஈவன் நம்பரில் இருந்தால் எப்படி ஒரு டெசிஷன் எடுக்க முடியும் ?

(முற்பகல் 11-00)

கவுன்சிலில் 10 பேர்கள் இருந்தால் இந்த பக்கம் 5 பேர் அந்த பக்கம் 5 பேர் எப்படி முடிவு எடுக்கப்படும். 9 பேராக இருந்தால் இந்த பக்கம் 4 பேர், அந்த பக்கம் 4 பேர், போய் விட்டால் ஒரு ஓட்டு டிசைடிங் ஓட்டாக வரும். ஆகவே தான் மெடிகல் கவுன்சிலிலே எத்தனை பேர், 15 பேர்கள் ; பார்மசி கவுன்சிலில் எத்தனை பேர், 13 பேர்கள் ; இப்படி யெல்லாம் இருக்கிறபோது இதை மாத்திரம் இப்படி மாற்றி அமைத்து இருக்கிறீர்களே அதிலே இருக்கிற நிலைமை என்ன ? எதுவுமே புரியவில்லை. புரியும்படியாகவாவது நீங்கள் சொல்லி யிருக்கிறீர்களா என்றால் அதுவும் இல்லை.

ஒன்றை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அரசாங் கத்திலே இருக்கிறவர்களுக்கு சில நேரங்களில் இந்த அரசியல் தத்துவம்தெரியாமல் இருக்கலாம். தெரியவேண்டிய கட்டாயமும் இல்லை. ஆனால் இப்படி ஒரு 'நோட்' அமைச்சர் அவர்களிடமிருந்து போகிறது என்றால், அப்போது தமிழ் நாட்டிலே மிக கீர்த்திப் பெற்றிருக்கிற சட்ட இலாகா என்ன தூங்கிக்கொண்டிருக்கிறதா ? உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். பிரசிடெண்ட் நாமினேட் செய்வது என்பது ஜனநாயகத்திற்கே புறம்பானது. அது சர்வாதிகார முறை. ஜனநாயகத்தின் ஆணிவேரையே கிள்ளி எறிகிற காரியம் ஆகும். இது கூடாது என்று அறிவுறுத்துவது அல்லவா அந்த இலாக்கா வின் வேலை, Shame to Law Department வெட்கப்படுகிறேன் அந்த சட்ட இலாக்காவின் தவறான போக்கைக் குறித்து. ஆகவே அமைச்சருக்கு அறிவுறுத்தி இருக்கவேண்டும். மெடிக்கல் கவுன்சிலில் இப்படித்தான் இருக்கிறது ; பார் கவுன்சிலில் இப்படி தான் இருக்கிறது ; மற்ற கவுன்சில்களில் இப்படி இருக்கிறது. நீங்கள் மட்டும் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பது, தலைவரை கொண்டு போய், அதுவும் வெட்டர்னரி டிகிரி வாங்காத ஒருவரை, சட்டத்தில் ஷெட்யூல் 1, 2 முதலியவற்றிற்கு மாறாக ஐ.ஏ.எஸ். ஆபீசரைக் கொண்டு போய் அங்கே திணிக்கிறீர்களே, இது என்ன நியாயம்? நாளைக்கு அமைச்சர் பால் கறக்கிற காளை மாடுகளுக்கெல்லாம் 10 ரூபாய் வரி என்று சொன்னால் காளை மாடு பால் கறக்காது அமைச்சர் அவர்களே, என்று சொல்ல வேண்டாமா ? பால் கறக்கிற காளை மாட்டிற்கு 10 ரூபாய் வரி என்று நாளைக்கு ஒரு பில் கொண்டு வந்து எழுதிக் கொடுப்பதா சட்ட இலக்காவின் வேலை. சட்ட இலாகா என்ன செய்கிறது ? தூங்குகிறதா ? எதைச் சொன்னாலும் எழுதிக் கொடுத்துவிட்டு போவதா ? ஆகையால் ஒன்றைச் சொல்கிறேன், ஜனநாயகத்திற்கு இது புறம்பானது.





ஏன் தேர்தல் என்றாலே உங்களுக்கு ஜன்னி வருகிறது ?ஏன் தேர்தலை கண்டு அஞ்சுகிறீர்கள் ? எங்கு பார்த்தாலும் நியமனம், நியமனம் என்று சொன்னால் ஒரு காலத்திலே இந்த சர்க்காரையே ஒரு நியமனம் ஆக்கிவிட போகிறீர்களா ? எந்த ஒரு அறிவுள்ளவனும் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு செய்கையை இந்த மசோதாவில் செய்திருக்கிறீர்கள். ஆகவே ஜனநாயகத்தின் பெயராலே கேட்கிறேன், இதை அமைச்சர் அவர்கள்—மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள அவரைக் கேட்டுக் கொண்டு, அவருடைய 'நாலெஜ்'க்கே போயிற்றா, இல்லையா, என்பது தெரியவில்லை. உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் கவனத்திற்கு வந்து தான் இங்கே வந்திருக்கிறது. பதில் சரியாக வரும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கால்நடை மருத்துவர்கள் பதிவு சட்டத்தை திருத்த மசோதாவை வரவேற்கிறேன். 1957ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் சில திருத்தங் கள் இன்றைக்கு அமுல் படுத்துவதை வரவேற்கிறேன். பல வருடங்களாக செயல்படாதிருந்த இந்த சட்டம் செயல் முறைக்கு வர—மாண்புமிகு முதல் அமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்தியதற்கு இன்றைக்கு பவழ விழா கொண்டாடுகிற இந்த நல்ல நாளிலே செயல்படுத்த ஆரம்பித்த தற்கு மீண்டும் அவர்களுக்கு நன்றி கூறி கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொல்லிய கருத்திலே சில உண்மைகளும் இருக்கின்றன என்பதை பற்றி நானும் அதை ஒட்டி பேச ஆரம்பிக்கிறேன். காரணம் என்னவென்றால் 1957ஆம் ஆண்டு இந்த சட்டத்திலே குறிப்பிட்டபடி கால்நடை உதவி மருத்துவராக இருப்பவரோ, கால்நடை மருத்துவராக இருப்பவரா தான் அதனுடைய தலைவராக வரமுடியும் என்று இருந்ததை மாற்றியமைத்து இன்றைக்கு இயக்குநராக இருப்பவர் திருமதி லட்டிகா படால்கர், ஐ.ஏ.எஸ். அதிகாரி.

இந்த சட்டத்தினுடைய பெயரே கால்நடை மருத்துவர்கள் பதிவு சட்டம் என்பது ஆகும். இந்தக் கால்நடை மருத்துவர்கள் பதிவுச் சட்டத்தின் கீழ்வரும் தமிழக கால்நடை மருத்துவர் மன்றத் னுடைய தலைவராக கால்நடை மருத்துவர் அல்லாத ஒருவரை நியமித்தது எப்படி நியாயம் ஆகும் என்ற வாதத்தை இங்கே எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். பார் கவுன்சிலைப் பொறுத்தவரையில் அதனுடைய தலைவராக சட்டமேதை வழக்கறிஞர் ஒருவர் தான் வரமுடியும், அதேபோல மெடிகல் கவுன்சிலில் ஒரு மருத்துவர் தான் தலைவராக இருக்கிறார். கால்நடை மருத்துவத்துறைக்கு மட்டும் ஏன் இப்படி மாற்றம், காரணம் என்ன என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மற்ற

]டாக்டர் கே. பி. இராமலிங்கம்[ [1981 ஏப்ரல் 4

ஏனைய திருத்தங்களை எல்லாம் வரவேற்று இந்த டி.டி. பிரிவு கால்நடை மருத்துவப் பிரிவின் தலைவராக அதனுடைய இயக்குநரை நியமிப்பது என்பதை மாற்றி அதனுடைய தலைவராக கால்நடை பராமரிப்புத் துறையினுடைய இயக்குநராக கால்நடை மருத்துவம் படித்த ஒரு பட்டதாரியை நியமித்து இந்த பிரிவினுடைய தலைவராக நியமிக்க வேண்டுமென்று சட்டத்தை திருத்த வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1957 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு சட்டத்தைத் திருத்துகின்ற விவாதத்திலே, கலந்துகொள்வதிலே நான் மகிழ்ச்சி அடைகின்றேன். 24 ஆண்டுகளாக செயல்படாமல் இருந்தது ஏன் என்று தெரியவில்லை. எனக்கு முன்னாலே பேசிய திரு. துரை முருகன் அவர்களும் ஆளுங்கட்சி நண்பர் அவர்களும சொன்னதைப் போன்று, பார்மஸிஸ்ட்ஸ் கவுன்சில், மெடிக்கல் கவுன்சில், பார்கவுன்சில் இவைகளிலே தலைவர்களாக உள்ளவர்கள் எல்லாம் அந்த அந்தத் துறையிலே பட்டம் பெற்றவர்களாக அனுபவம் உள்ளவர்களாக இருக்கின்றபோது ஏன் இத்துறையில் மட்டும் கால்நடை துறையில் பயிலாதவர்களை தலைவராக வைக்கவேண்டும் என்று தெரியவில்லை. இந்த விளக்கத்திலேயும் அதைப்பற்றிச் சொல்லவில்லை. செயல்படாது இருந்தது என்று சொல்கிறார்கள், ஏன் என்று சொல்லவில்லை. ஏன் செயல்படாமல் இருந்தது, என்ன காரணம், காலதாமதத்திற்கு என்ன காரணம், இந்தத் துறையை அலட்சியப்படுத்தியதற்கு என்ன காரணம் என்பவைகளையெல்லாம் இந்தக் காரண நோக்க விளக்கத்திலே குறிக்கவில்லை.

இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டிலே தான் போலீஸ் துறையிலேயும், சட்டத் துறையிலேயும் திறமையானவர்கள் இருக்கிறார்கள் என்ற நிலைமை இருந்தும் என்ன காரணத்தினால் இந்த கவுன்சிலை அமைப்பதிலே கால்நடை மருத்துவத்திலே பயிற்சி பெற்ற அனுபவம் பெற்ற முதிர்ந்தவர்களை போடவில்லை, அவ்வாறு போடுவதில் அரசுக்கு என்ன நட்டம் என்று புரியவில்லை. தேர்தல் முறையன்றி, நியமன முறையிலே ஏன் அமைக்கவேண்டும், அதனால் அரசுக்கு லாபம் இருக்கிறதா ? நட்டம் தான் இருக்கும். இது சம்பந்தமாக கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கடந்த 3 ஆண்டுகளாக அரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் அதற்காக உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ஏன் அரசு இடம் கொடுக்கிறது என்று புரியவில்லை. சென்னை வேளாண்மை பல்கலைக் கழகம் என்பதற்குப் பதிலாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் என்று சேர்த்திருப்பதிலே பெருமை அடைகிறோம். நியாயமான குறைபாடுகளை மாணவர்கள் பல முறைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்தி



1981 ஏப்ரல் 4] (திரு. எல் இளையபெருமாள்)

னாலோ அரசு அலட்சியப்படுத்தியதாலோ அல்லது கவனக்குறை
வாலோ தெரியவில்லை. நான் அரசை வேண்டுவது எல்லாம்,
இத்துறையில் உள்ளவர்களின் நியாயமான கோரிக்கைகளை
ஐ. ஏ. எஸ். இருப்பதால் கெட்டுவிட்டது என்று நான் குறைவாக
சொல்லவில்லை ஜனநாயகத்திலே இவர்கள் விரும்புகிறார்கள
அவர்கள் விருப்பத்தை ஏற்றுக் கொண்டால் நமக்கும் நல்லது
துறைக்கும் நல்லது; அவர்களும் தெம்பாகப் பணியைச் செய்
வதற்கு நம்பிக்கை ஏற்படும். இந்த நிலையிலே கால்நடை மருத்து
வத்திலே தகுதி பெற்றவர்கள், அனுபவம் உள்ளவர்கள நல்லவர்
களை அமைப்பதிலே அரசு நிச்சயமாக ஒத்துக் கொள்ளவேண்டும
என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டதுறையிலே இருக்கின்ற
வல்லுநர்களும் என்ன காரணத்தினால் இதை விட்டு விட்டார்கள
என்று விளக்கத்திலே சொல்லப்படவில்லை. நான் அரசை
கேட்டுக் கொள்வது எல்லாம், பார் கவுன்சிலைப் போல,
மெடிக்கல் கவுன்சிலைப் போல தேர்வு முறையிலே இந்தத் துறை
யிலே அனுபவம் உள்ளவர்களைப் போடுவதற்கு வழிவகை செய்ய
வேண்டும் என்றும் அந்த வகையிலே சட்டத்தைத் திருத்த
வேண்டுமென்றும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கி
றேன்.

*திரு. கு. பா. பழனியப்பன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த கால்நடை மருத்துவர்கள் பதிவுத் திருத்தச் சட்டத்திலே என்னுடைய திருத்தத் தீர்மானத்தை முன் மொழிந்து சில கருத்துக்களை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உயிருள்ள மனிதர்கள்தான் வயதைக் குறைத்துச் சொல்லு
வார்கள் என்று பார்த்திருக்கிறோம். ஆனால் பவள விழா கொண்
டாடுகிற இந்த கால்நடை மருத்துவக் கல்லூரி 1978 ஆம் ஆண்டு
கொண்டாடியிருக்கவேண்டும். ஆனால், மூன்று ஆண்டுகள் கழித்து
78 வயதாகிறபோது 75 வயது என்று குறைத்து சொல்லக்கூடிய
நிலைமை இருக்கிறது.

இந்தப் பதிவுச் சட்டத் திருத்தப் [illegible]ங்கே கொண்டு வரப்பட்டு
இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிற அரசு,
வாயில்புறக் கதவுகள் திறந்திருக்கின்றன, அதன் வழியாக நுழைந்
திருக்கலாம், ஏனோ தெரியவில்லை கோட்டத்து பக்கம் உள்ள
கதவு வழியாக நுழைந்து இருக்கிறார்கள். பின்புறம் நுழைந்
திருக்கவேண்டியதில்லை. அதற்கும் காரணம் இருக்கிறது. இதிலே
கொடுக்கப்பட்டிருக்கின்ற காரண காரிய விளக்க நோக்கத்தில்
இருந்து நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். [illegible]திலே
1976 ஆம் ஆண்டு மீண்டும் செயல்படத் துவங்கியிருக்கிறது.
என்று சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே செயல்பட
துவங்கவில்லை, 2, 3 உறுப்பினர்களை நாமினேஷன் செய்திருக்
கிறார்கள், அவ்வளவுதான். ஆனால், இந்த மன்றம் செயல்
படத் தொடங்கியதா என்றால் இல்லை.

[திரு. எல். இளையபெருமாள்] 1981 ஏப்ரல் 4

(முற்பகல்11-10)

அதற்கடுத்த இரண்டு மூன்று பிரிவுகளை சற்று கூர்ந்து கவனிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். 9 (i) (ii) உட்பிரிவுகளின் கீழ், பதிவாளர் முடிவுக்கு எதிராக, மேல்முறையீடுகள் செய்து கொள்வதற்கும் கால்நடை மருத்துவர் மன்றத்தின் முடிவுக்கு எதிராக அரசுக்கு மேல் முறையீடு செய்து கொள்வதற்கும் இப்படி இரண்டு காரணங்களுக்காக மாத்திரம்தான் வகைசெய்து திருத்தங்கள் செய்வதன் மூலம் இந்தச் சட்டத்தைத் திருத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று இதிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய முழு முதல் நோக்கமே யாரேனும் ஒரு மருத்துவர் தனியாக பதிவு செய்துக் கொள்ள முடியாத சூழ்நிலை வந்து, பதிவாளர் மறுத்து விட்டார்கள் என்று சொன்னால், அதற்கு மேல்முறையீடு செய்வதற்கான வழி வகை காண மாத்திரம்தான் இந்தச் சட்டம். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய நோக்கம் வேறு ஏதாவது இருந்தால் அது பின்புற வாயில் வழியாக வருவதாகத்தான் நாம் சொல்ல வேண்டும். ஏனென்றால், கொடுத்திருக்கிற நோக்கத்திற்கும் இங்கேகொண்டு வந்திருக்கின்ற திருத்தத்திற்கும் முற்றிலும் முரண் பாடாக இருக்கிறதென்பதை அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

9 ( ), 9 ( ), என்ற பிரிவுகளைப் பற்றி சற்று விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 9 (i) என்பதிலே, persons entitled to register என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே முதன் முறையாக தகுதிகளைப் பெற்று, கல்வித் தகுதியோடு வந்திருப்பவர்கள் அதைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்பதுதான் 9 (i) பிரிவு. அதிலே 9 (i) என்ன சொல்கிறது? ஏற்கெனவே பல்வேறு இடங்களிலே பதிவாகி அந்தப் பதிவுகளின் அடிப்படையில் இங்கே பதிவு செய்து கொள்ள முடியுமா என்பதை விளக்குகிறது. ஆகவே, முதன் முறையாக வந்து பதிவு செய்து கொள்வதற்குத் தடை ஏதும் இருந்தால், அல்லது மறுத்து விட்டால், அல்லது வேறு எங்காவது பதிவு செய்து அந்தப் பதிவை ஏற்றுக் கொண்டு இங்கே பதிவு செய்ய மறுத்து விட்டால், அந்த இரண்டு காரணங்களுக்காக, பதிவு செய்வதை மறுத்து விட்டால் மாத்திரம் மேல் முறையீடு எப்படி செய்ய வேண்டுமென்பதற்காக மாத்திரம்தான் சட்டத்திருத்தம் என்று சட்டத் திருத்தத்தின் காரண, நோக்க விளக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே அவர்கள் வெகு லாவகமாக வேறு சில திருத்தங்களை உடன் சேர்த்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், அதிலே சென்னைப் பல்கலைகழகம் என்பதை தமிழ்நாடுவேளாண்மை பல்கலைக் கழகம் என்று மாற்றுவதிலே எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. 1957லே எழுதிய சட்டத்திலே, அடிப்படையான சில நோக்கங்களை வைத்து எழுதி இருக்கிறார்கள், மிகக் குறிப்பாக சொல்ல வேண்டு



1981 ஏப்ரல் 4] [திரு. கு. பா. பழனியப்பன்]

மென்றால், 6 பேர்களைத் தேர்தல் மூலமாகவும், 3 பேர்களை நாமினேஷன் மூலமாகவும் ஏற்படுத்தி, அந்த மன்றம் இயங்க வேண்டுமென்பது அடிப்படை நோக்கம். ஆனால், இன்றைக்கு இருக்கிற நிலைமை—இப்பொழுது அமைச்சர் கொடுத்திருக்கிற திருத்தத்திலே இருக்கின்ற நிலைமை—முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. 6 பேர்களைத் தேர்ந்தெடுத்தால், 5 பேர்களை நாமினேஷனில் போட்டுக் கொள்ளலாம் எனச் சட்டத் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். 6 பேரைத் தேர்ந்தெடுத்தால், 3 பேரைத்தான் நாமினேஷன் செய்யலாம் என்பது ஏற்கெனவே இருந்த விதிமுறை. இப்பொழுது அந்த அடிப்படையை விதிமுறைகளுக்கு மாறுதலாக புதிய விதியைப் புகுத்த இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

அது மட்டுமல்ல, திருத்தங்கள் முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலே 12-வது ஷரத்தை இதோடு ஒப்பிட்டு நோக்குவது தேவை என்று சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இந்தக் காரண நோக்கத்திலே, எதற்காக அப்படிப்பட்டத் திருத்தங்கள் கொண்டு வரலாம் என்பதற்கு அரசாங்க அதிகாரியை வைத்தால், அவரையே தலைவராக ஆக்க வேண்டுமென்று நோக்கத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியை கால்நடை மருத்துவ மன்றத்திற்குத் தலைவராக ஆக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். ஆனால், இது வேறு எங்கும் இல்லாத புதுமை என்று ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூடச் சொன்னார்கள். ஏற்கெனவே, இருக்கிற 12-வது பிரிவிலே என்ன காரணங்களுக்காக ஒரு அரசு இதைக் கண்காணிக்க முடியும் என்று விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள். Control by Government என்றுள்ளதைக் கவனிக்காமலேயே அரசு சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறது. 12-வது ஷரத்தில் பின்வருமாறு கொடுத்திருக்கிறார்கள்.

"*Control by Government* : If at any time it shall appear to the Government that the Council has neglected to exercise or has exceeded or abused any power conferred upon it under this Act, or has neglected to perform any duty imposed upon it by this Act, the Government may notify the particulars of such neglect, excess or abuse to the Council and if the Council fails to remedy such neglect, excess or abuse, within such time as may be fixed by the Government in this behalf the government may, for the purpose of remedying such neglect, execss or abuse, cause all or any of the powers and duties of the Council to be exercised and performed by such agency and for such period as the government may think fit

ஏதாகிலும் அத்து மீறல்கள் இருந்தால், முறைகேடுகள் இருந்தால் அவைகளைத் தவிர்ப்பதற்காக அரசாங்கமே கண்காணிக்க ஒரு தன்னிச்சையான ஒரு முகவரை நியமித்து வைத்து அந்த மன்றத்தை இயங்கச் செய்யலாம் என்று நோக்கம் இருப்பதாக

சொல்கிறார்கள். ஆனால் இங்கே காரண நோக்கம் சொல்கிற போது இந்த மன்றம் பல. ஆண்டுகாலமாக இயங்காமல் இருந் தது என்பதாலே அதைச் செயல்பட வைப்பதற்காக இப்போது மறுபடியும் சட்டத்திருத்தம் என்ற பெயரிலே ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியை தலைவராக ஆக்குகிறோம் என்று சொல்கிறார்கள் செயல்படவில்லை என்றால் எப்படி செயல்படுவதற்கு நடவடிக்கை என்பது குறித்து ஏற்கெனவே உள்ள சட்டத்தில் குறிப்பிடப் பட்டு இருக்கிறது. புதிய சட்டத் திருத்தத்தில் ஐ. ஏ. எஸ். அதிகாரியை போட வேண்டும் என்று சொல்கிற நோக்கம் காண வில்லை. ஐ. ஏ. எஸ். அதிகாரி போடவேண்டும் என்று நோக்கத் தைச் சொல்லாமலேயே சட்டத் திருத்தம் கொண்டு வருகிறார்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரி யைபோடக்கூடாது என்று சொல்வதிலே உள்ள முக்கியமான நோக்கம், தமிழ்நாடு தவிர, வேறு எந்த மாநிலத்தி லும் டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பண்டரி பதவியில் ஐ. ஏ. எஸ் அதிகாரி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

இங்கேதான் ஒரு அதிசயமான நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஒரு டெக்னிகல் சப்ஜெக்டில் ஒரு நான்— டெக்னிகல் அதிகாரியைப் போடுவது பொருத்தம் கிடையாது. அதையே கண்டிக்கின்ற இந்த நேரத்தில், அதனுடைய கவுன் சிலின் தலைவராகவும் அவரையே நியமிப்பது கேலிக்குரியது ஆகும். கூடாரத்திற்குள்ளே ஒரு ஒட்டகம் என்று சொல்வார்கள், அதைப்போல் கால்நடை மருத்துவக் துறையில் நிலைமை இருக் கிறது. அதைக்கண்டிக்கவும்., வன்மையாக எதிர்க்கவும் நாம் கடமைப்பட்டு இருக்கிறோம். இது ஜனநாயகத்திற்கு விரோத மான சட்டம். முன்னுக்குப்பின் முரணான சட்டம். மற்ற சட்டங்களுக்கு முற்றிலும் மாறான சட்டம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவித்ததுபோல் வழக்கறிஞர்கள் மாமன்றம், மருத்துவர்கள் மாமன்றம், மருந் தாளுனர்கள் மாமன்றம் ஆகியவற்றிற்கெல்லாம் உள்ள சட்டங் களுக்கு முற்றிலும் முரண்பாடானதாக இது இருக்கிறது. இன் னும் சொல்லப்போனால், இந்தியன் மெடிகல் கவுன்சில் ஆக்ட் 1956 பிரிவு 5 (1)-ல் குறிப்பாகச் சொல்லியிருப்பது

> 'No person shall be eligible under sub-section (1) for the election as President or Vice President, unless he possesses any other medical qualification included in the first and second schedules'

என்று மிகத் தெளிவாக இருக்கிறது. ஆகவே, மெடிக்கல் கவுன்சில் தலைவராக ஒருவர் இருக்கவேண்டும் என்று சொன் னால், அவர் அந்த மெடிக்கல் கவுன்சிலின் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதி பெற்றவராக இருக்கவேண்டும். ஆனால் இந்தக் கால்நடை மருத்துவர்கள் சங்கத்திற்கு மட்டும் யாரை, வேண்டுமானாலும் தலைவராகக் கொண்டு வரலாம் என்று





சொன்னால் **அது சரியானதல்ல. அது** ஒரு மிகப்பெரிய ஆபத்து. அதை இப்போதே களைந்து எறியாவிட்டால் நாளைக்கு ஏற்படும் விளைவுகள் மிக பயங்கர மானதாக, மோசமானதாக, இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நோக்கமே நியாயமற்றது என்பதையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே பல்வேறு நாட்களில் அரசு சார்பாக அமைச்சர்கள் எல்லாம் சில வாக்குறுதிக ளத் தந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளைச் செயல்படுத்தாமல் எப்படியாவது விணடித்து விட வேண்டும் என்ற நோக்கத்திலே இப்படி ஒரு அதிகாரியைத் தலைவராகப் போடுவதற்கு அரசு எல்லா நடவடிக்கையும் எடுத்து இருக்கிறது என்று கருதுகிறேன்.

அடுத்ததாகச் சம்பளம் குறித்து ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். மற்ற மாநிலங்களைப்போல் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்காவிட்டாலும், மற்ற துறையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அளவிற்குச் சம்பளம் கொடுத்து இருக்கலாம். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மாற்று முறை களைக் கையாண்டு இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சில பதவிகளில் உள்ளவர்களுக்கு 400 ரூ. கொடுக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச் சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கான நோக்கம் அந்தச் சங்கத்தைச் செயல் படுத்துவதற்குத்தான் என்று கேள்விப்படுகிறேன். அதே நேரத்தில் இந்தச் சட்டம் உண்மையான அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான யதார்த்தத்திலே கொண்டு வரப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதிலே

> "The Director of Animal Husbandry, ex-officio who shall be the President of the Council"

என்று சொல்லி, நிரந்தரமாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை—அந்த டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பன்டரி பொறுப்பில் இருப்பவர் களை நிரந்தரமாகத் தலைவராகப் போட்டு இருப்பது ஜனநாயக நடவடிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பார் கவுன்சில் மெடிகல் கவுன்சில் என்று இப்படி பல தொழில் சம்பந்தமான கவுன்சில்களில் அந்த தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடியவர்களைத்தான் அதற்குத் தலைவராகத் தேர்ந் தெடுப்பது வழக்கம்.

[திரு ஜே. ஹேமச்சந்திரன்] [1981 ஏப்ரல் 4

[முற்பகல் 11-20)

அதற்கு மாறுபட்டு ஒரு வழக்கத்தை இங்கே ஏற்படுத்தி இருக்கின்றது. அட்மினிஸ்ட்ரேட்டிவ் பிராப்பிளம் இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். இதற்கு முன்னால் அரசு கொண்டு வந்திருந்த மூலச்சட்டத்தில் 3-வது ஷரத்தில்

"Provide that for a period of 3 years from the date of the establishment of the Council under this Act, the President shall be a person nominated by the Government and if he is not already a member of the Council shall be an ex-officio member of the Council in addition to the members specified in sub-section', என்று இருக்கிறது. அந்த மாதிரி ஏதாவது திருத்தம் கொண்டு வந்திருக்கலாமே தவிர, ஒரு குறிப்பிட்டக் கால அளவில் அந்த மாதிரி பிரசிடெண்டை வைத்துக்கொள்ளலாமே தவிர நிரந்தரமாக உரிமை பறிக்கக் கூடிய முறையில் திருத்தம் கொண்டு வருவது ஜனநாயக முறையே அல்ல. இந்த நேரத்திலே யதார்த்தமாக இருக்கக்கூடிய பிரச்சினை என்ன? கிராமங்களில் இன்றைக்கு கால்நடைகளைப் பொறுத்த வரையில் போதிய அளவில் வைத்திய உதவி கிடைக்கவில்லை. இன்றைக்கு நேரடியாக படித்து வெட்டரினரி டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இருப்பது மட்டுமல்ல; 10 வருஷம், 20 வருஷம் லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களும் இந்த பிராக்டிஸ் செய்துவருகிற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதில்லை; அவர்களை ரெஜிஸ்டர்டு பிராக்டிஷனர்களாக மாற்றுவதற்கு என்ன வழி என்று அரசு பரிசிலனை செய்திருக்க வேண்டும். இந்த மூலச் சட்டத்தின் ஷெட்யூலிலே 9-வது விதியின்படி சிலர் பதிவு செய்துகொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக,

"The Licensed Veterinary Practitioners in Punjab".

அது மட்டுமல்ல. இங்கே பல்வேறு பணிகளுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நேரடியாக வருகிறார்கள். அது அல்லாமல் 10 வருஷம், 15 வருஷம், 20 வருஷம் சர்விசிலே இருந்து அனுபவம் பெற்றவர்களும், திறமையானவர்களும் "கன்ஃபர்டு ஐ.ஏ.எஸ்" என்ற முறையில் வருகிறார்கள். அதைப்போலவே நீதித் துறையிலும் நியமிக்கப்படுகிறார்கள். நேரடியாக நீதிபதியாக வரக்கூடியவர்களும் இருக்கிறார்கள். 10 வருஷம், 15 வருஷம் வக்கீலாக பிராக்டீஸ் செய்தவர்களும் நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள். அதைப்போலவே, 10, 15 வருஷம் சர்வீசிலே இருக்கக்கூடிய, பிராக்டீசும் செய்கிற லைஃப் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கு ஏதாவது ஒரு பயிற்சியை கொடுத்தாவது, அவர்களையும் ரெஜிஸ்தர் செய்துகொள்வதற்கு அந்த அரசாங்கம் வாய்ப்பு கொடுத்திருக்க வேண்டும். அது தான் உண்மையான நடவடிக்கையாக இருக்கும். அதில் கூட அரசு ஏற்கனவே கொடுத்திருக்கிற வாக்குறுதியை [illegible]



1981 ஏப்ரல் 4] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

முறைக்குக் கொண்டுவர இந்தச் சட்டத் திருத்தத்திலே வழி வகை செய்திருக்க வேண்டும்; அதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

"The Government of Tamil Nadu has also informed in their letter No. 6297/AS/S/79-2, Agriculture dated 23-6-1979, the question regarding amendment of Madras Veterinary Practitioners Act 1953 on lines of Section 18 (2) of the Maharashtra Veterinary Practitioners Act 1971 is under the consideration of the Government of Tamil Nadu" என்று இருக்கிறது.

18 (2)-ல் மகாராஷ்டிரா கவர்ன்மென்ட் என்ன சொல்லியிருக்கிறது?

"The State Government may after consulting the Registering Officer or the Council as the case may permit the registration of any person who has been actually conducting the Veterinary Practice in the State of Maharashtra on such conditions as may be provided for by regulations may for this purpose notwithstanding the fact that he may not be in possession of qualifications entitling him to have his name entered in the register,"

இந்த மாதிரியான ஒரு நடவடிக்கையைத்தான் இந்த அரசு எடுத்திருக்க வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட ஜனநாயக விரோதமான திருத்தத்தை இந்தச் சட்டத்திலே கொண்டு வந்திருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிறது அட்மினிஸ்ட்ரேட்டிவ் ப்ராப்ளம் மட்டுமல்ல. நம்முடைய நாட்டிலே கிராமப்புறங்களிலே இருக்கிற கால்நடைகளுக்கு நோய் வரும்போது, அந்த நோய்களை நீக்குவதற்கும் ஆள் இல்லாமல் போய்விடுகிறது. காரணம் என்னவென்றால், இந்த வெட்டரினரி காலேஜில் இருந்து பட்டம் பெற்று வெளியே வரக்கூடியவர்கள் மட்டும் காணாது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, 10 வருஷம், 15 வருஷம் நடைமுறையில் பிராக்டிஸ் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் நேரடியாக வெட்டரினரி காலேஜில் இருந்து வரக்கூடியவர்களைவிட புதிதாக வரக்கூடிய பட்டதாரிகளை விட அனுபவத்தில் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என்ற உண்மையை கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களும் ரெஜிஸ்டர்டு மெடிக்கல் பிராக்டிஷனர்ஸ் ஆவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கக்கூடிய முறையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கவேண்டும்.

பொதுவாக கிராமங்களிலே இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் நான் ஒன்று சொல்லிக்கொள்ள முடியும். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது இந்தத் துறையினயைப் பற்றிய விவாதம் நடக்கவில்லை. பில்லைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : இதனைச் சரியாகப் பரிசீலனை செய்யாததன் காரணமாக அந்த நிர்வாகங்களை இன்று நல்ல முறையில் நடத்த முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே எந்த அளவுக்கு இந்த பிரேக்டிஷனரைக் கொண்டு வருவதற்கு இடம் கொடுக்க முடியும் என்று அரசு சிந்தனை செய்ய வேண்டும். ஆகவே ஆலோசிக்காமல் இப்படிப்பட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எடுப்பது நல்லதல்ல .... (மணி யடிக்கப்பெற்றது)

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தமசோதாவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக பவள விழா கொண்டாடுகின்ற இன்றைய நிலைமையில் தமிழ்நாட்டில் வேளாண்மை பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்ற பெயரால் ஜனநாயகத்துக்கு விரோதமான ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் மறுக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். பொதுவாகத் தமிழகத்தில் பார் கவுன்சில் போன்றவைகளுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக இருக்கின்ற அனுபவங்களை எல்லாம் மறுத்துவிட்டு ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் அந்தத் துறையிலே அனுபவம் இல்லாத ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு, அந்தத் துறையைச் சீர்திருத்த வேண்டும் என்பதற்காக நாம் இப்போது நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அதை முழுமையாக செயல்பட விடாமல் செய்வதாகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது கூட்டுறவுத் துறையிலே ஸ்பெஷல் ஆபீஸர்ஸ் போன்றவர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டு அவை எல்லாம் தற்போது என்ன நிலைமையில் இருக்கின்றது என்பதை நாம் அனுபவபூர்வமாகக் கண்டு கொண்டிருக்கிறோம். அந்த நிறுவனங்கள் இப்போது எப்படி சிரழிந்து கொண்டிருக்கின்றன என்பதும் நமக்குத் தெரிகின்றது. ஆனால் அதே நேரத்தில் செயல்படாமல் இருக்கின்ற மன்றத்தை செயல்படுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு ஜனநாயகத்துக்கு விரோதமான இந்த திருத்தத்தை கொண்டு வந்திருப்பதை நாங்கள் கண்டிக்கிறோம். அந்தத் துறையில் இருப்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், மற்றும் துணைத் தலைவர் அவர்களால் அந்த மன்றம் முழுமையாகச் செயல்படக் கூடிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்





குறிப்பாக இன்றைக்கு இருக்கின்ற பார் கவுன்சில், மெடிக்கல் கவுன்சில், பார்மஸிஸ்ட்ஸ் கவுன்சில் போன்றவற்றில் பின்பற்றக் கூடிய முறையினையே இதற்கும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மீது 6 உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பலவிதமான கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். 1957 ஆம் ஆண்டு மருத்துவர்கள் பதிவுச் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின்படி தமிழ்கத்திலுள்ள எல்லா மருத்துவர்களும் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்தச் சட்டம் இயற்றப்பட்டு சுமார் 24 ஆண்டுகள் ஆகின்றன. மாண்புமிகு துரை முருகன் அவர்கள் கூறும்போதுகூட இந்தச் சட்டம் இயற்றப்பட்டு 24 ஆண்டுகள் ஆகின்றன என்றும் இது செயலற்ற நிலையில் இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்கள். இந்த இடைக் காலத்திலே கால்நடை பராமரிப்பு துறையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அந்த மாறுதல்களைக் கொண்டுதான் மூலச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு இப்போது முடிவு செய்து உள்ளது. அந்த மூலச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற அடிப்படையில் 6 வகையான திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த திருத்தங்களில் ஒன்று கால்நடை மருத்துவர்கள் கவுன்சில் பற்றியது. இரண்டாவதாக 1958-ல் ஆரம்பிக்கப்பட்ட அந்த கவுன்சில் 1976 ஆம் ஆண்டு வரை செயலற்று இருந்தது. அப்படி செயலற்று இருந்த அதன் பொறுப்பை 1976 ஆம் ஆண்டில் அரசு ஏற்றுக் கொண்டது. கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநராக இருந்தவரையே அதற்குத் தனி அதிகாரியாகப் போட்டு அந்தப் பொறுப்பை அவர் ஏற்று பணியாற்றி வந்தார். அதன் வழியாகத்தான் கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநரையே கவுன்சிலின் உறுப்பினராகவும், அதன் தலைவராகவும் நியமிக்க அரசு கருதிற்று.

1958 ஆம் ஆண்டில் இந்தக் கவுன்சில் ஆரம்பிக்கப்பட்டபோது அப்போதிருந்த கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநர் தான் கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். அப்போது இருந்த கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநர் ஒரு கால்நடை மருத்துவர். ஆனால் தற்போது இருக்கின்ற கால்நடை பராமரிப்பு துறையின் இயக்குநர் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. அந்த அடிப்படையில் தான் அவரை அதாவது கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநரை கவுன்சிலின் உறுப்பினராகவும், தலைவராகவும் அரசு நியமனம் செய்திருக்கின்றது. பின்வரும் காலத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநர் கால்நடை மருத்துவராக நியமிக்கப்பட்டால் அவரே கால்நடை கவுன்சிலின் தலைவராகவும் உறுப்பினராகவும் நியமிக்கப் படுவார்.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1981 ஏப்ரல் 4

[முற்பகல் 11-30]

உறுப்பினர்கள் தேர்வு மூலமாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூறினார்கள். தேர்வு மூலமாக கவுன்சிலின் தலைவரைத் தேர்ந்தெடுத்தால் நல்லது என்று அரசு கருதினால் அப்போது தேர்வு மூலமாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்க அரசு வழிவகை செய்யும். அதைத்தான் இங்கு பேசிய உறுப்பினர்கள் தேர்வு மூலமாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், கால்நடை மருத்துவர்தான் கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களும் இந்தக் கவுன்சிலில் உள்ள உறுப்பினர்கள் 10 பேர்கள் என்று தவறாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார். ஆனால் கவுன்சிலில் உள்ள மொத்த உறுப்பினர்கள் 11 பேர்கள் தான். அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 4 பேர்கள். வெட்டர்னரி காலேஜின் டீன் அவர்கள் அதிலே ஒரு உறுப்பினர். அரசால் நியமனம் செய்யப்பட்டவர்கள் 4 பேர். ராணிப்பேட்டை இயக்குநர் ஒருவர். கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநரும் அதிலே ஒரு உறுப்பினர். மொத்தம் 11 பேர்கள். இப்படி மொத்தம் 11 பேர்களை அந்தக் கவுன்சிலின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம்.

கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநர் அவர்களை ஏன் அரசு நியமனம் செய்திருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் குறிப்பிட்டுக் கேட்டார்கள். அந்த மன்றத்தின் தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அதே நேரத்தில் அந்த மன்றம் ஆரம்பிக்கப்பட்ட முதல் மூன்று ஆண்டுகளுக்கு தலைவரை நியமனம் செய்யலாம் என்பதற்கும் மூலச் சட்டத்திலே வழிவகை இருக்கின்றது. அந்த சட்டத்தின்படி தான் இன்றைக்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநராக இருப்பவரை கவுன்சிலின் தலைவராகவும், உறுப்பினராகவும் நியமித்திருக்கிறோம். ஆனால் கவுன்சிலின் உறுப்பினராக ஏன் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க வேண்டும்? அவருக்கு அனுபவம் இருக்கின்றதா? என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். அவரை ஏன் நியமனம் செய்கின்றோம் என்றால் சிறந்த நிர்வாகத்தை மனதிலே கொண்டும், அதிலே இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதால் அவைகளை எல்லாம் மனதிலே கொண்டும்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமனம் செய்கின்றோம். கால்நடை இல[illegible] பொறுத்த வரையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளை எல்லாம் மனதிலே கொண்டுதான் யாரை நியமனம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் தற்போது அரசு கால்நடை பராமரிப்புத் துறையின் இயக்குநராக இருக்கின்ற அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை இப்போது கவுன்சிலின் தலைவராகவும், உறுப்பினராகவும் நியமனம் செய்திருக்கிறோம்.



1981 ஏப்ரல் 4] [திருமதி கோமதி சீனிவாசன்]

அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் சில திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரை கவுன்ஸில் நிர்வாகப் பதவியில் இருந்தும் கவுன்ஸில் தலைவர் பதவியில் இருந்தும் நீக்கிவிட வேண்டும் என்று ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டு முதல் கால்நடை மருத்துவ மன்றத்தின் தனி அலுவலராக கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் பணியாற்றி வருகிறார். ஆகவே அவர்களை மன்றத்தின் உறுப்பினராக்குவதோடு மட்டுமல்லாமல் தலைவராக ஆக்குவது அவசியம் என்று அரசாங்கம் கருதுகிறது. 24 ஆண்டுகளாக செயல்படாதிருந்த இந்த மன்றம் இப்போதுதான் நல்ல முறையில் செயல்பட இருக்கிறது. அப்படியிருக்கிற சமயத்தில் தனி அலுவலராக பணியாற்றி வருகிற இயக்குநரை உறுப்பினராகவும் தலைவராகவும் நியமிக்க அரசு கருதிற்று. கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநராக இருக்கிற ஐ.ஏ.எஸ். அதிகாரியை ஏன் இந்தக் கவுன்ஸிலில் ஒரு உறுப்பினராகவும் தலைவராகவும் நியமிக்கிறோம் என்றால் அந்த கவுன்ஸிலில் நியமித்திருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் வெளியில் இருந்து எடுக்கப்படுவதால், ஒருவர் வெட்டரினரி காலேஜ், அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டவர்கள் நான்கு பேர்கள், இராணிப்பேட்டையிலுள்ள இயக்குநர் என்று தேர்ந்தெடுத்திருக்கிறோம். கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து ஒருவர் அந்தக் கவுன்ஸிலில் இடம் பெற வேண்டும் என்பதற்காக கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து ஒருவர் அங்கம் வகிக்க இது வழிவகை செய்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்கள் கொடுத்த திருத்தத்தை ஏற்பதற்கில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய் தடுப்பு நிலைய இயக்குநர் கவுன்ஸில் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று திரு. பழனியப்பன் கூறுகிறார்கள். இராணிப்பேட்டையிலுள்ள இந்த நிலையத்தில் கால்நடைகள் நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. அப்படி மருந்துகளை தயாரிக்கும்போது கால்நடைகளுக்கு என்ன நோய்கள் என்று கண்டறிந்து அந்த நோய்களுக்கான மருந்துகளை அவர்கள் கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் இராணிப்பேட்டையில் உள்ள இயக்குநரை கவுன்ஸிலில் உறுப்பினராகப் போட்டால் நல்லதொரு ஆலோசனையை, கால்நடைகள் பற்றிய நல்ல ஆலோசனைகளை அந்தக் கவுன்ஸிலில் தெரிவிப்பார் என்பதற்காகத்தான் அவரை அந்தக் கவுன்ஸிலில் நியமனம் செய்ய இருக்கிறோம்.

அடுத்து, கவுன்ஸிலில் தலைவரை தேர்ந்தெடுக்கும் முறையில் மூலச்சட்டப் பிரிவு 4 (3) நீக்க வேண்டாம் என்று சொல்கிறார்கள். மூலச் சட்டப்படி மன்றத் தலைவரை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் எனவும், அதே நேரத்தில் கவுன்ஸில்

[திருமதி கோமதி சீனிவாசன்] [1981 ஏப்ரல் 4

ஆரம்பிக்கப்படும் காலத்திலிருந்து மூன்று ஆண்டுகள் அர
சாங்கம் தலைவரை நியமனம் செய்ய வேண்டும் என்பதற்கும்
இது வழிவகை செய்கிறது. ஆகவே இதுவரை செயல்படாமல்
இருந்த இந்த கவுன்ஸில் தற்போது புதிய உறுப்பினர்களைக்
கொண்டு செயல்பட இருக்கிறது. ஆகவேதான் தற்போது
கவுன்ஸில் தலைவரை அரசாங்கமே நியமனம் செய்ய இருக்
கிறது. பின் ஒரு காலத்தில் கவுன்ஸில் தலைவரை தேர்வு மூலம்
தேர்ந்தெடுத்தால் நல்லது என்று கருதினால் அவர்களை தேர்வு
மூலம் தேர்ந்தெடுத்து கவுன்ஸில் நல்ல முறையில் நடைபெற
அரசு வழிவகை செய்யும். கால்நடை மருத்துவர் கால்நடை
பராமரிப்புத் துறை இயக்குநராக வரவேண்டும் என்ற நிலை
வந்தால் அதேபோல் கால்நடை பராமரிப்புத்துறை இயக்கு
நரே அந்த கவுன்ஸில் தலைவராகவும் நியமிக்கப்படுவார் என்று
தெரிவித்துக் கொண்டு இந்தத் திருத்தங்களை ஏற்பதற்கில்லை
என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்
னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள்
பதிவு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண். 16/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற
வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்
னுள்ள கேள்வி :

" பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்
பெறவேண்டும்."

THIRU DURAI MURUGAN: Mr. Deputy Speaker Sir, I move the following amendment:—

(1) In clause 2, in sub-clause (a), in the proposed clause (d) after the words, 'ex-officio' add the following words, " who shall be the President of the Council"

(2) In the proposed clause (dd), after words, 'ex-officio' omit the words, "who shall be the President of the Council."



1981 ஏப்ரல் 4] [திரு. துரை முருகன்]

தலைவர் அவர்களே, என் பெயரால் இருக்கிற திருத்தத்தை
ஒட்டி நான் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒன்றைத்
தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்போது டைரக்டர்
ஆப் அனிமல் ஹஸ்பென்ட்ரியை நாம் நியமித்திருக்கிறோம்.
ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை பின் ஒரு காலத்தில் டைரக்டர்
ஆப் அனிமல் ஹஸ்பென்ட்ரியாக வெட்டரினரி படித்தவர்
வந்தாலும் வருவார்; இப்போது எப்படியிருக்கிறது என்றால்
நாங்கள் தேர்தல் வைக்க மாட்டோம், ஆனால், சர்க்கார்
என்றைக்காவது நினைத்தால் அன்று வைக்கும் என்றால்
உங்கள் விருப்பப்படி ஜனநாயகம் நடத்தக்கூடாது. கவுன்ஸில்
பிரசிடென்ட்டாக இருக்கிற ஒருவர் வெட்டரினரி டிக்ரீ படித்த
டாக்டராக இருப்பதில் உங்களுக்கு என்னகுறைந்து போயிற்று?

[முற்பகல் 11-40]

ஆகவேதான் சொல்கிறேன். இவரை வைப்பதைவிட,
டீனைப் போடுங்கள், அவர் எக்ஸ்-அபிஷியோவாகவும் இருக்
கிறார். வெடரினரியும் படித்திருக்கிறார். எனவேதான் அவ்
ரைப் போடுங்கள் என்று சொல்கிறேன். அப்படி 3 ஆண்டு
காலத்திற்கு நியமனம் செய்வதிலே உங்களுக்கு விருப்பம்
இருந்தால், வெடரினரி படித்தவராக இருக்க வேண்டுமென்ப
தால், அந்தப் பதவியில் டீன் மட்டும் இருப்பார் என்று செய்
தால்,

In cl use 2, in sub-clause (a), in the proposed cl use (d), after the words, "ex-officio", add the following words, "who shall be the President of the Council".

அவரே அந்தக் குழுவின் பிரசிடெண்டாக இருக்கட்டும்,
அதே மாதிரி அவரைப் போட வேண்டுமென்றால், அவரை
வேண்டுமானால் எக்ஸ்-அபிஷியோவாகப் போட்டுக் கொள்ளுங்
கள். அப்படியிருந்து அவர் அனிமல் அஸ்பென்டரி அட்மினிஸ்ட்
ரேஷனைப் பற்றிச் சொல்வதற்குப் போட்டுக் கொள்ளுங்கள்.
ஆனால்,

In the proposed cl use (dd), after the words, 'ex-officio' omit the words, "who shall be the President of the Council.

அப்படிச் சொல்லியிருப்பதை omit பண்ணி விடுங்கள். டீன்
அந்தக் குழுவின் பிரசிடெண்டாக இருப்பார் என்று மாற்றுங்
கள். இந்த 3 ஆண்டு காலத்திற்கு இடையிலே தேர்தல்
வைக்காமல், நீட்டித்துக் கொள்ளலாம் என்று மூலச் சட்டத்திலே
இருக்கின்றது என்று சொன்னால், அதிலே வெடரினரி படித்தவ
ராக இருக்க வேண்டும் என்று ஷெடியூல் 1, 2 ஆகியவைகளிலே
இருக்கிறது. அதை முறியடித்து, கடைசியிலே இதைக்
கொண்டு வருகிறீர்கள். ஆனால், அதற்கு என்ன அடிப்
படைக் காரணம் என்பதைச் சொல்லவில்லை. எனவேதான்
இதிலே மோடிவ் இருக்கிறது, இந்த மன்றத்திற்கு தெரிவிக்காத
மோடிவ் இருக்கின்றது என்று சொல்கிறேன். ஆகவேதான்,

உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், இப்போதுகூட உங்கள் திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று.

*திரு. கு. ப. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்தை நான் மொழிகிறேன்,

"In clause 2, in sub-clause (a), in item (ii), omit the proposed clause (dd)".

In the proposed Government Amendment to clause 2, in sub clause (a), in item (ii), omit clause (dd i).

In clause 2, omit sub clause (b).

மேலும் அதையொட்டி ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இத்துறையிலே ஐ.ஏ.எஸ். படித்த அதிகாரி போடப்பட்டிருக்கிறார் என்பதை இண்டியன் வெடர்னரி ஜர்னல் என்ற பத்திரிகை மிக வன்மையாகக் கண்டனம் தெரிவித்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவிலேயே வேறு எங்கும் அது கிடையாது என்று கண்டனம் தெரிவித்திருக்கிறது. அது போல அதுமட்டுமல்ல, பிரிவு 4 (3)-ன்கீழ் அப்படி நியமனம் செய்து கொள்ளலாம் என்று விதியிருக்கும்போது, இந்த புதிய விதி எதற்காக ? ஏற்கனவே உள்ள 4 (3) விதியிலே 3 ஆண்டுக் காலம் இருக்கலாம் என்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். அப்படி நியமனம் செய்துகொள்ள வசதியும், வழிவகையும் சட்டத்திலே இருக்கின்ற போது, இந்தப் புதிய திருத்தம் கொண்டு வருவது, முன்னுக்குப் பின் முரணான வாதம் ; பொருத்தமற்ற வாதமாக இருக்கிறது. எனவேதான், அமைச்சர் அவர்களை அவரது சட்டத் திருத்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause 2, in sub-clause (a), for item (ii), substitute the following item, namely :—

(ii) for clause (d), the following clauses shall be substituted, namely :—

(d) the Dean of the Madras Veterinary College, ex-officio ;

(dd) the Director of Animal Hubandry, ex-officio who shall be the President of the Council ;

(ddd) the Director of Institute of Veterinary Preventive Medicine, Ranipet, ex-officio and; "



மூலச் சட்டத்தின்படி கவுன்ஸில் ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தல் மூலமாக தலைவர் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டத் திருத்தத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதைத் தான் நான் உங்களிடம் கூறினேன். அதை இப்போதே செய்தால் என்ன என்று குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே பேசும் போது சொன்னேன், நியமனம் என்கின்றபோது சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை மனதிலே கொண்டும், இன்னும் பல பிரச்சினைகளை மனதிலே கொண்டும், அரசு யாரையும் நியமிக்கலாம் என்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொழிந்த திருத்தத்திற்கு, 1957 ஆம் ஆண்டு 21 ஆம் சட்டத்தின் பிரிவு 4, உப பிரிவு (3)-ன்படி 1957-ல் அரசால் நியமிக்கப்பட்டவரே கவுன்ஸிலின் தலைவராக இருந்திருக்கிறார். ஆனால், அந்தக் கவுன்ஸிலில் 1957 ஆம் ஆண்டிலிருந்து பணி புரியாமல், செவ்வனே செயல்படாமல், செயலிழந்ததாகி விட்டது. 1957 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே இருந்து, பின்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 1976 ஆம் ஆண்டு வரை எல்லா இலாகாக்களும், அரசும் தூங்கிவிட்ட காரணத்தினால் தான், 1957 ஆம் ஆண்டிலிருந்து இந்த மூல சட்டத்திற்கு விதிமுறைகள்கூட வகுக்கப்பட வில்லை. பின்னர் 1976-ல் ஸ்பெஷல் ஆபீசர் அரசால் போடப்பட்டு, 1957-லிருந்து கவுன்ஸில் செயலிழந்து கவனிக்கப்படாமல் இருந்த காரணத்தை ஆய்ந்து விதிமுறைகள் வகுப்பது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அரசின் நேரடி கண்காணிப்பில் இருக்கும்போது தான் 1957—லிருந்து செயலிழந்து, துரதிருஷ்ட நிலையிலே இருந்து, அந்த மாற்றியமைக்கின்ற வகையிலேதான், பிரிவு 4 (3)-ஐ மாற்றி, அரசு நியமனமாக கவுன்ஸில் தலைவரை நியமனம் செய்துகொள்ளலாம் என்று செய்யப்பட்டதே தவிர, இதிலே எந்தவிதமான உட்கருத்தோ, சட்டபிரச்னையோ அல்லது வேறு எந்தவிதமான உள்நோக்கமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் துரைமுருகன், கு. ப. பழனியப்பன் ஆகியோரின் திருத்தங்கள் வழிமொழியப் பெறாத காரணத்தால் ஏற்கப் பெறவில்லை. அமைச்சரின் திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி—

"In clause 2, in sub-clause (a), *for* item (ii), *substitute* the following item, namely:—

(ii) for clause (d), the following clauses shall be substituted, namely;—

(d) the Dean of the Madras Veterinary College, *ex-officio*;

(dd) the Director of Animal Husbandry, *ex-officio* who shall be the President of the Council;

(ddd) The Director of Institute of Veterinary Preventive Medicine, Ranipet, Ex-officio.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்] [1981 ஏப்ரல் 4

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 3 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்) சட்ட முன்வடிவு 1981 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1981) திருத்தப்பெற்றப்படி நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

## 6. அறிவிப்புகள்

அ. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு 1981, (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 5 அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

இ. கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு 1981

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''198 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

**திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். கோவை நகராட்சி, மாநகராட்சி ஆக்கப்படுவதை நான் மனதார வர

*1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது



1981 ஏப்ரல் 4] [ஏ. டி. குலசேகர்]

வேற்கிறேன். நீண்ட நாட்களாக கோவை நகராட்சிக்கு மக்களால் நேர்ந்தெடுக்கப்பட்ட மேயர், கவுன்சிலர்கள் இல்லாது இருக்கிறது; இவ்வாறு இல்லாத மாநகராட்சியாக இருக்கக் கூடாது என்று கூறுகிறேன். கோவை நகராட்சி மாநகராட்சியாக ஆக்கப்படுவதின் மூலம் அதன் எல்லைகள் விரிவடைந்து, அதன் மரியாதையும் உயர்த்தப்படுகிறது. மக்கள் நகராட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து, மாநகராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் வந்து பலவித கட்டுப்பாடுகளுக்கு உட்பட வேண்டியிருக்கும். இவற்றையெல்லாம் மக்கள் மறக்கக்கூடிய அளவிற்கு மாநகராட்சி பலவிதமான நன்மைகளை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையில் மாநகராட்சிக்கு கிடைக்கும் வருமானம் முழுவதும் அதனுடைய நிர்வாக இயந்திரத்தை பராமரிப்பதற்கே செலவு செய்கின்ற நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும். நகராட்சி, மாநகராட்சியாக மாற்றப்படும்போது அதிகார வர்க்கத்தின் அதிகாரங்கள் அதிகரித்துக் கொண்டே போகும்.

அதிகாரிகளால் தயாரிக்கப்படுவதுதான் வரவு-செலவு திட்டம். இந்தத் திட்டத்தை மாற்றுவதற்கு மக்கள் பிரதிநிதிகள் மாநகராட்சியில் இல்லை. அவர்கள் பொறுப்பிற்கு வரும்பொழுது மக்களுக்கு ஏற்ற வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியும். மக்களுடைய குறைகளை சுட்டிக்காட்ட முடியும்.

தற்போது தமிழகத்தில் உள்ளாட்சி மன்றங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கிடையாது, மதுரையைத் தவிர. எல்லா இடங்களிலும் தனி அதிகாரிகளை நியமிப்பதிலும் தனி உறுப்பினர்களை நியமிப்பதன் மூலமாகவே உள்ளாட்சித் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. இது மாற்றப்பட வேண்டும் (குறுக்கீடு).

**திரு மு. அம்பிகாபதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். பெரிய சீரியஸ் சிட்சுவேஷன். மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறதாம். அரசாங்கத்திற்கு இதுபற்றி ஏதாவது தகவல் இருக்கிறதா? உயிர் சேதம் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதெல்லாம் ஒன்றும் இல்லை. சின்ன சிலிண்டர் வெடித்ததிலே லேசாகத் தீ வந்திருக்கிறது. அணைத்து விட்டார்கள். ஒருவருக்குத் தான் சிறிய காயம் ஏற்பட்டுள்ளது. பெரிதாக ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. டி. குலசேகர்:** தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை தள்ளிப் போடுவது வழக்கம் ஆகிவிட்டது. சட்டமன்றத்திலே பெரும்பான்மை

யாக இருக்கிறது என்ற ஒரே காரணத்தாலே அரசாங்கம் உள்ளாட்சித் தேர்தல்களை, மாநகராட்சித் தேர்தல்களை தள்ளிப் போட்டுக்கொண்டே வருகிறது. இந்த முறையில் உள்ளாட்சித் துறைகள் உருக்குலைந்து, அவற்றின் குரல்வளையை நெருக்கி, ஜனநாயக அமைப்புகள் சீர்குலைய செய்து விட்டது. இவை எதிர்காலத்தில் நிகழாது, இந்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த நிலையில் ம நில சுயாட்சி வேண்டும் என்றோ, திக அதிகாரம் வேண்டுமென்றோ, அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்றோ ஆளும் கட்சி கேட்பது என்பது, வெறும் கேலிக் கூத்து ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

கோவை நகராட்சியின் நிலமைகளை எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிங்காநல்லூர், சங்கனூர் பேரூராட்சி, கணபதி போன்ற இடங்களில் சாலை வசதிகள் சரியாக இல்லை. கோவை நகரத்திலே தொலைபேசி கேபிள் கள் பொருத்துவதற்காகவும், பைப்புகள் பொருத்துவதற்காகவும் தோண்டப்பட்டு ரோடுகள் சரியாக இல்லை. அவைகளை யெல்லாம் சீரமைத்துக் தந்து, மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்து இதிலே கூறப்பட்டுள்ளவைகளை நிறைவேற்று வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு கொண்டு கர்நாடக மாநிலத்திலே பெங்களூர் மாநகர ட்சியிலே தொழிலாளர்களுக்கு என்று தனித் தொகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல— கோவை நகரமும் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி, அமைச்சர் அவர்களும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்—தேர்தல் நடக்கிறபோது தொழிலாளர்களுக்கு தனித் தொகுதி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். சின்னராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியாக மலர இருக்கும் இந்த கோவை மாநகராட்சி சட்ட முன்வடிவை வரவேற்று வெகு விரைவில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுடைய திருக் கரத்தால் துவக்கிவைக்கப்பட இருக்கின்ற அம்மாநகராட்சியி னுடைய துவக்க விழாவை கோவை நகரத்து மக்கள் மட்டுமல்ல, கோவை மாவட்டத்தை சேர்ந்த மக்கள் அனைவரும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் கோவை அந்த மாவட்டத்தின் சிறந்த நகரம் என்பது மாத்திரமல்ல, மற்ற பல வகைகளிலேயும் அது சிறந்த நகரமாக இருக்கிறது. தொழில் துறையிலேயும், உழவுத் தொழிலிலேயும் அதைப் போன்ற உழைப்பாளிகளை கொண்ட நகரத்தை இந்தியாவிலேயே எங்கும் காணமுடியாது. அந்த அளவுக்கு பெருமை சேர்க்கிற வகை யிலே அது மாநகராட்சியாக மலர இருக்கிறது. அதை அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மாத்திரமல்ல, கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற





முறையிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இது தமிழ் நாட்டிலேயே இரண்டாவது பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நகரமாகவும் இருக்கிறது. எனவே பிரச்சினைகளும் மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் வளர்ந்திருக்கின்றன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. மக்களின் அன்றாடத் தேவைகள், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் விரிந் திருக்கிற அந்த நகரத்திற்கு சுகாதார வசதிகளை விரிவுபடுத்து வதும் இன்றியமையாததாக இருக்கிறது. கல்விக் கூடங்களும் நிரம்ப துவக்கப்பட வேண்டும். இணைக்கப்பட்டிருக்கின்ற ரத்தினபுரி போன்ற பகுதிகளிலே உயர்நிலைப் பள்ளிக்கூட வசதிகள் இல்லை. இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் 10 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டு நடத்தப்படுகின்றவை தானே தவிர புதிய உய நிலைப் பள்ளிகள் வரவேயில்லை. புதிதாக இணைக்கப்பட்டு இருக்கின்ற பகுதிகளுக்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளையும், மற்ற உயாநிலைப் பள்ளி களையும் துவக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். சிறுவாணி குடிநீர்த் திட்டம் நிறைவேறும் தறுவாயில் இருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பொறுத்துத் தான் இதரப்பகுதிகளின் வளர்ச்சியே அமைந்திருக்கிறது, என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில் கோவை நகருக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டுவருவது வரையிலும் முடிவடைந்து இருக்கிறது. ஆனால் கேரளத்திலே கட்டப்படுகிற அணைக் கட்டு காலதாமதப்படுத்தப்படுகிறது. தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் அல்லது போராட்டத்தின் காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது அல்லது காலதாமதப்படுத்தப்பட்டிருக் கிறது என்ற நிலையை உணர்ந்து கேரள அரசை நம்முடைய அரசு வற்புறுத்தி உரிய காலத்திலே அதை முடிவடையச்செய்வ தற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கோவையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சிறுவாணி, மருதமலை போன்ற பகுதிகளை சுற்றுலா மையங்களாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அங்கே வந்து போகின்றவர்கள் தங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கிற முறையிலே சுற்றுலா மையமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியின் முதல் தேர்தலை நடத்துவதற்கு முன்னாலே அந்த மாநகரத்திற்கு அணிசேர்க்கின்ற அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரை யில் அது மேலும் ஒரு சிறப்பைப் பெற்றிருக்கிறது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளை தமிழர்களோடு பேசி வாழ்கின்ற மக்கள் நிறைய இருக்கிறார்கள். அந்த மாநகராட்சியின் மேயர் பதவிக்கு அனைத்துப் பிரிவினரும்

வருகின்ற முறையிலே விதிகளை அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரை யிலே அது நகரமாக இருப்பதால் அங்கே நெரிசலைக் குறைப் பதற்காக அந்த மாநகராட்சிப் பகுதியிலே வீட்டு வசதிகளை அதிகமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கொள்கிறேன்.

அதேபோல் கோவை நகரத்தைச் சுற்றியிருக்கிற, கோவை நகரத்தோடு இணைந்திருக்கிற நகர்ப்புறங்களின் வளர்ச்சிக் காகவும், நகர மேம்பாட்டுத் திட்டத்தை ஒரு சிறப்பான பணியாக நமது அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அதை மாநகராட்சியாகக் கொண்டுவந்தமைக்கு, கோவை மாவட்ட மக்கள் சார்பிலும், கோவை நகர மக்கள் சார்பிலும் நன்றியையும் வணக்கத்தையும், கூறி மாநகராட்சி மிகச் சிறப்பாக செயல்பட வழி வகுக்கிற தொழிலாளர் துறை அமைச்சருக்கும் உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் நான் நன்றியைச், செலுத்தி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

*திரு எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், இன்று கோயம்புத்தூர் மாநக ராட்சி ஆகப்போவதற்காக நான் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால், அதே சமயத்திலே வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்டபொழுது, சென்னை கார்ப்பரேஷன் அமைப்பு வந்த பொழுது, மைனாரிட்டி சமுதாயத்திலிருக்கிற மக்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று வழி செய்தார்கள். அவர்கள் மேயராக வருவதற்கு வசதி வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக, நம்முடைய அங்கத்தினர்கள் நம்மை ஆளுகிறபொழுது, மதுரை மாநகராட்சியானபொழுது, அன்றைய ஆளும்நிலையிலிருந்த திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கமும் இன்றைய தினம் பிரிந்து வந்திருக்கிற, அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களாக இருந்த சகோதரர்கள், இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற் றக்கழக நண்பர்களாக இருக்கின்றவர்கள், அவர்கள் மறந்து விட்டார்கள் சொந்த சகோதரர்களை இவர்களும் மறக்கக் கூட என்பதை நினைவூட்டத்தான் நான் மாநகராட்சி அமைப்பு சட்ட விதியில் பேச ஆசைப்பட்டேன். அந்த முறையிலே காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் இந்த நாட்டு விடுதலைக் காலத்திலேயே விடுதலை பெறுவோமோ, மாட்டோமோ என்று கூட அறிருந்தவர்களுக்குத் தெரியாது. அப்படி இருந்த காலத்திலேயே நாடு சுதந்திரம் பெற்றால், ஜமீன் முறையை ரத்து செய்வோம், இந்த நாடு சுதந்திரம் பெற்றால் ஜனநாயகம் கொண்டு வருவோம், இந்த நாடு சுதந்திரம் பெற்றால் சிறு பான்மை மக்களுக்கு வாழ்வு அளிப்போம். இந்த நாடு சுதந்திரம் பெற்றால், குறிப்பாக, கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு, அவர்





களுடைய நிலையை சட்ட சபையிலே சொல்வதற்கு, அவர் களும் அரசாங்கத்திலே பங்கு கொள்வதற்கு, இன்றைக்கிருக்கிற அரசியலமைப்பிலே அவர்களுக்கு உரிமை வழங்குவோம் என்று சுதந்திரத்திற்கு முன்பே சொன்னார்கள். பெற்ற பின் அதைச் செய்தார்கள். ஆனால், தெரிந்தோ, தெரியாமலோ' 1970 ஆம் ஆண்டுக்குப் பிறகு மதுரையில் மாநகராட்சி தோன்றியபொழுதும், இன்று கோயம்புத்தூரிலே தோன்றுகிற பொழுதும் ஏன் மறந்து விட்டார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறபொழுது, சொந்தச் சகோதரர்கள், சொந்த நாட்டை ஆளுகிறவர்கள் பெரும்பான்மையான சமுதாய மக்களுக்கு வாய்ப்பு கொடுப்பதற்கு, வசதிகள் செய்வதற்கு இடம் அளிக்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் நான் பேசியிருக்கிறேன், முதலமைச்சரிடம் பேசியிருக்கிறேன். பக்கத்திலே இருக்கிற அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதே சத்திலும், கர்நாடகப் பிரதேசத்திலும், ஜில்லா பரிஷத், பஞ்சாயத்து சமிதிகள் ஆகியவற்றில் எல்லாம் இந்தச் சமுதாய மக்களுக்கு, இந்தப் பதவிகளுக்கு 18 சதவீதம் ரிசர்வேஷன் கொடுப்போம் என்று சட்டத்திலே வழி செய்திருக்கிறபொழுது, நம்முடைய மாநிலத்தில் அதைச் செய்வதற்கு என்ன சிரமம் இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால், கேட்டால், ஜாதி என்ற பெயர் சொல்லக்கூடாது என்று சொல்வார்கள். ஆனால், உண்மையை மறைத்துக்கொள்வதிலே பயன் இல்லை. ஜாதி உணர்வு தெரிந்தோ, தெரியாமலோ, தேர்தல் காரணத்தினால், விஷம் போல் ஏறிக் கொண்டிருப்பதை அரசியல்வாதிகளாக இருப்பவர்கள், அரசியல் தலைவர்கள், அல்லது படித்த வல்லுநர்கள் நிச்சயமாக ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அதற்கு இரண்டே வழிகள். ஒன்று, அவர்களுக்குக் கிடையாது என்று தைரியமாகச் சொல்வதற்கு நாம் முன் வர வேண்டும். நீங்களும் இந்தியர்கள், நீங்களும் தமிழர்கள், நீங்களும் போட்டி யிட்டுக் கொள்ளுங்கள் என்று தைரியமாகச் சொன்னால், அதிலே ஒன்றும் எனக்கு ஆட்சேபணை இல்லை. அல்லது அவர்கள்பால் பரிவு காட்டுவதாகச் சொல்லி, அவர்களுக்குச் செய்வதாகச் சொல்லி அவர்களிடம் நாம் மாற்றாந்தாய் மனப் பான்மையோடு நடந்து கொள்வது மிக பாவமானது. நாம் வருங்காலச் சந்ததிகளுக்குப் பதில் சொல்லவேண்டிய கட்டாய நிலையிலே அவர்கள் நம்மை கேட்கும் வகையில் குறிப்பிட்டச் சமுதாய மக்களை நிறுத்த வேண்டாம் என்று அரசுக்கு எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, தமிழகத்திலே 374 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஓரிடத்திலேகூட இச்சமூகத்தினர் வர முடிய வில்லை. தஞ்சை ஜில்லாவிலே, தலைவர் போட்டியிலே தகராறு வந்த நேரத்தில் ஒரு கம்யூனிஸ்ட் சகோதரர் யூனியன் சேர்மனாக வர முடிந்தது. பிறகு அரசியல் தலைவர்கள்

ஒன்று சேர்ந்தவுடன் அந்தப் பதவியும் பறி போய்விட்டது. அதை ஏன் உங்களுக்குச் சொல்கிறேன் என்றால், அரசியல் சாசனத்தைத் தீட்டிய அறிவுதேர்ந்த பெரியவர்கள் அதை நினைத்துப் பார்த்துத்தான் தனித் தொகுதி முறைக்கு வகை செய்தார்கள்.

காலஞ் சென்ற அண்ணா அவர்களோடு நான் பேசுகின்ற பொழுது, அவர்கள் ராஜ்ய சபாவிலே இருக்கிற பொழுது அந்தச் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமா, எடுக்கப்பட வேண்டுமா என்று கேட்டபொழுது, நான் எடுக்க வேண்டுமென்று சொன்னேன். காரணம், அதைக் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, அரசியலிலும் உத்தியோகத் துறையிலும், நீதி மன்றத்திலும், அவர்களில் படித்தவர்களுக்கு ஏதும் செய்யாமல், அரசு சால்ஜாப்பு சொல்லி, மாற்றாந்தாய் மனப் பான்மையோடு இருந்து கொண்டிருக்கும் மனப்போக்கை விடவில்லையென்று சொன்னேன்.

[நண்பகல் 12-00]

கோவை மாநகராட்சிக்காகக் கொண்டு வரக்கூடிய இந்தப் புதிய சட்டத்திலே, புதிய அமைப்பிலே மேயர் என்ற பதவியை 39-வது விதியிலே சேர்த்து இருக்கிறார்கள். அந்த மேயர் தேர்தலிலே இந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தினரும் பங்கு பெற அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்டதை கௌரவித்து சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சிங்காநல்லூர், கணபதிபுரம், மருதமலை போன்ற இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள், பின்தங்கிய மக்கள் இப்பகுதியில் அதிகம்பேர் உள்ளார்கள். அவர்கள் கவுன்சிலில் மெம்பர்களாக வருவதற்கு வசதிகள் செய்ய யோசிக்கவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் அவர்கள் அங்கே பஞ்சாயத்துக்களாக இருப்பதிலே, முனிசிபாலிட்டிகளாக இருப்பதிலே ரிசர்வேஷன் இருந்ததாலே ஒருவராவது அங்கே மெம்பர்களாக வருவதற்கு வாய்ப்பு இருந்தது. அவைகளையும் நாம் கூர்ந்து கவனித்து முடியுமானால் அவர்களும் உறுப்பினராக வருவதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டியது நம்முடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு இந்த மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது நம்முடைய சென்னை மாநகராட்சியில் இருப்பதைபோல், சுழற்சி வகை இருக்க வேண்டும். சமுதாய ரீதியில்-நான் ஆதி திராவிட சமுதாயத்தை மட்டும் சொல்லவில்லை. மைனாரிட்டி சமுதாயத்தினர் அனைவரையும் சொல்கிறேன் சென்னையில் இருப்பதுபோல் சுழல்முனையில் கொண்டு வரவேண்டும். மதுரையிலும், கோவையிலும் கொண்டுவர இயலவில்லையென்றால் சென்



னையில் இருக்கிற முறையை எடுக்கவேண்டும். இந்த இரண்டும் கெட்டான் முறையில் இருந்தால் வெள்ளையனே தேவலாம், நம்மீது இரக்கம் காட்டினான் என்று பழியான சொல் வரக்கூடும் என்பதைக்கூறி, அப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டு வர இன்னும் காலம் கடந்து விடவில்லை. மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஆளும் கட்சியினர், மற்ற எதிர் கட்சியினர் எல்லாம் சேர்ந்து கலந்து பேசி இதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் கால வெள்ளத்தில் அந்தச் சமுதாய மக்களை அழித்த பழியை நாம் செய்தவர்கள் ஆவோம். அந்தப் பாவமான காரியத்தைச் செய்யக்கூடாது. முன்பு இருந்த தி.மு.க ஆட்சிக்குத்தோன்றவில்லை என்றால், இப்போது இருக்கிற அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி ஏழைகள் அரசு என்று சொல்கிற காரணத்தால் இந்தக் கருத்தை எண்ணிப்பார்க்கவேண்டும், அப்படிச் செய்கிற நடவடிக்கைகள் மூலம் நிச்சயமாக அந்த மக்களின் அவல நிலையைப் போக்கமுடியும் என்று சொல்லி உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு எம். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, கோவை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கான சட்ட முன்வடிவு கொண்டு வந்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பாராட்டக்கடமைப்பட்டு இருக்கிறேன். மாநகராட்சி ஆன பின்னாலே, அரசு அறிவிக்கும் தேதியில் தேர்தல்கள் நடைபெறும் என்பது தெரிவிக்கப்பட்டு இருந்தாலும் கூட, தேர்தல் நடைபெறும் காலம் வரையில் அந்த மாநகராட்சியில் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள ஒரு சில பிரச்சினைகளை மக்கள் குழு அமைப்பதன் மூலமோ அல்லது தனியாக இருக்கும் அதிகாரிகள் மூலமோ, அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த பிரதிநிதிகள் அந்தப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு தீர்வு காணுவதற்கு முன்பாகவோ அந்தப் பிரச்சினைகளை கவனிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கையும், தனிக்கவனமும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

கோவை நகராட்சியைப் பொறுத்தவரையில், பெரிய பெரிய தொழிற்சாலைகள், பஞ்சாலைகள், இன்ஜினீரிங் தொழிற்சாலைகள் இருக்கிற காரணத்தால் அதிகமான தொழிலாளர்கள் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். இரண்டு மூன்று சட்டமன்றத் தேர்தல்களாக அந்தத் தொகுதி தொழிலாளர்கள் தொகுதி என்று ஒதுக்கப்பட்டு, அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் பி. இராமமூர்த்தி அவர்களும் தொழிலாளர்கள் பிரதிநிதி என்கிற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தாலே, அந்த கோவை மாநகராட்சிப் பகுதியில் தொழிலாளர்கள் தொகுதி என்று தனியாக தொகுதி ஒதுக்கித்தர ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகராட்சியைப் பொறுத்தவரையில், கழிவு நீர் ஆங்காங்கு தேங்கியிருப்பதால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஏற்கனவே கொசு ஒழிப்பதற்கான திட்டம் டிருந்தது. அதை அரசாங்கம் நிறுத்தி வைத்து இருப்பதால், ளவகைத் தொல்லை இப்போது தாங்க முடியவில்லை. அந்த அிவ்றகுச் சூழ்நிலை இருப்பதால் அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாநகராட்சிக்கு உட்பட்டு புதிதாக எடுக்கப்பட்டு இருக்கும் இடங்களில் ஒருசில தனியார் அரசு வேலைகளில் இருக்கிறார்கள், தனியார் நிறுவனங்களில் இருக்கிறார்கள். வீடுகள் கட்டியிருக்கிறார்கள். சாயிபாபா காலனி போன்ற இடங்களில் அவர்கள் கட்டியிருக்கும் வீடுகள் நல்ல முறையில் கட்டப்பட்டு இருந்தபோதிலும், ரோடுகள் போடுவது, தண்ணீர் வசதி செய்வது, அல்லது மின்சார வசதி அளிப்பது போன்றவை செய்து தரப்படாமல் இருக்கின்றன. கேட்டால், அவைகள் அப்ரூவ் செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மாநகராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னாலே இப்படிப்பட்ட பிரச்னைகளில் அதிகாரிகள் கவனத்தைச் செலுத்தி நடவடிக்கை எடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சியை மாநகராட்சியாக்கும் அரசின் ஆலோசனையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் மாநகராட்சியின் ஆயுள் காலத்தை 6 ஆண்டாக இருப்பதை 5 ஆண்டாக குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மாநகராட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்த பட்சம் 48-லிருந்து 80 என்று சொல்லியிருப்பது மிகவும் குறைவாக இருப்பதால் குறைந்தபட்சம் 60-லிருந்து 80 என்று இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல மாநகராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு இடைப்பட்ட காலத்தில் அந்த மாநகராட்சியின் வேலைகள் சிறப்பாக நடக்கவும், ஆலோசனைகள் கூறவும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அங்கே சமூக சேவையில் ஈடுபட்டிருக்கின்ற முக்கியமானவர்கள் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைத்து, வேலைகள் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அது மட்டுமல்ல, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் தெரிவித்தபடி கோவை மாநகராட்சி ஆவதற்கு முன்னால் குடிநீர்ப் பிரச்சனையைச் சீர்படுத்த வேண்டும். சிறுவாணித் திட்டத்தின் மூலம் கோவை குடிநீர் பிரச்சனை தீர்க்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றும் தீர்க்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆரம்பப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளுக்கு இன்றைக்கும் கூட போதிய தளவாடங்கள் இல்லை. ஆசிரியர்கள், மாணவர்கள் உட்கார இருக்கைகள் சரியாக இல்லை. அவைகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகரைப்பற்றி மாண்புமிகு அமைச்சருக்கும் நன்றாகத் தெரியும். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கோவை ஒரு தொழில் நகராக இருக்கிறது. தொழில் வளர்ச்சியில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு நகரத்தில் இன்றைக்கு போதிய அளவில் தெரு விளக்குகள் இல்லை; தண்ணீர் வசதி இல்லை; சாக்கடை வசதி சரியாக இல்லை; அதனால் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய குறைப்பாடுகளை உடனடியாகப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேலைகளை எல்லாம் சரியாகச் செய்வதற்கு உடனடியாக ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற ஒரு சட்ட முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே தாக்கல் செய்யப்படும் என்று நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் அறிவித்திருந்தேன். அதற்கேற்ப இந்தச் சட்ட முன்வடிவு மதுரை மாநகராட்சி சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதிலே சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மதுரை, சென்னை போன்ற மாநகராட்சிகளில் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் அடிப்படையில் 18 வயது அடைந்தவர்களுக்கு எல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல மாநகராட்சி உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 5 ஆண்டிலிருந்து 6 ஆண்டாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அத்தகையத் திருத்தங்கள் இந்தச்சட்ட முன்வடிவிலும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன

[திரு. ப. குழந்தைவேலு] [1981 ஏப்ரல் 4

ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், பொது மக்களும் நீண்டநெடுங்காலமாக கோவை நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள். ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்திலும், அதற்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் அந்தத் தொழில் நகரை சௌத் இந்தியன் மான்செஸ்டர்' என்று சொல்லக்கூடிய கோவை தொழில் நகரை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அப்போது இருந்த அரசுகள் இதிலே கவனம் செலுத்தவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்புக்கு வந்தபிறகு இன்றைக்குக் கோவை நகராட்சியை மாநகராட்சியாக்குவதற்குரிய வழி வகைகள் செய்யப்பட்டு, இந்தச் சட்ட முன்வடிவை இந்த மாமன்றத்திலே நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம்.

[பிற்பகல் 12·10]

குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குலசேகர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஏன் இந்தச் சட்டத்தோடு நீங்கள் மாநகராட்சிக்குரிய தேர்தலையும் அறிவித்து இருக்கக்கூடாது என்று கேட்டார்கள். ஏற்கெனவே நான் இந்த மாமன்றத்தில் அறிவித்ததைப்போல இந்த நகராட்சியை, மாநகராட்சியாக்கி, 18 வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்களிக்கும் உரிமையை அளிக்கின்ற நிலைமையை, உருவாக்கி, அதன் மூலமாக 18 வயது வந்தவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கின்ற வாக்காளர்கள் பட்டியலை தயாரிக்க வேண்டிய நிலைஇருக்கிறது. அதற்குப் பின்னாலேதான் தேர்தலை நடத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் குலசேகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்தக் காரணத்தின் விளைவாகத்தான் உடனடியாக தேர்தலை அறிவிக்க முடியவில்லை என்று.

மேலும் இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக, குறிப்பாக தொழிலாளர்களுக்கென்று ஒரு தனி தொகுதி வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை இன்னும் இந்திய உப கண்டத்திலே எந்த இடத்திலும் இருப்பதாக எனக்கு இதுவரையில் தகவல் இல்லை. சிங்காநல்லூரைப் பொறுத்தவரையில், அது நல்ல நகராட்சியாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அந்த நகராட்சியை இந்த நகராட்சியோடு சேர்த்துத்தான், இது மாநகராட்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது. சிங்காநல்லூர் பகுதியிலே தொழிலாளர்கள் அதிகமாக இருந்தாலும் கூட, தொழிலாளர்களின் தலைவர்கள், அல்லது அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேர்தலிலே நின்று வெற்றி பெறுவதற்கு வழி வகைகள் அரசியல் சட்டத்திலே இருக்கிறது. எனவே தொழிலாளர்கள்தான் அந்தத் தொகுதியில் நிற்க வேண்டும் என்ற நிலை இல்லாமல், எல்லோருக்கும்



1981 ஏப்ரல் 4] [திரு. ப. குழந்தைவேலு]

வாய்ப்பு ஏற்படுகிற நிலையில் அரசியல் சட்டத்திலேயே வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தனி தொகுதி வேண்டாம்.

நாம் இந்த மாநகராட்சிக்காகப் பல்வேறு பணிகளைத் தொடங்க இருக்கிறோம். அப்பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தும் அளிப்பதற்கான திட்டங்கள் போட இருக்கிறோம். இந்தச் சட்ட முன்வடிவிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து ஒரு குறிப்போடு அனுப்பியிருக்கிறார்கள். அதில் மத்திய அரசின் ரெயில்வே சொத்துக்கள் போன்ற சொத்துக்கள் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு, வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி, இந்தச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது, திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவு சட்டமன்ற பேரவை, மேலவை ஆகிய இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்று, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற மத்திய அரசுக்கு அனுப்பப்பெறும். இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றபிறகுதான் சட்டம் நிறைவேற்றப்பெறும். அப்படி நிறைவேற்றப்பெற்ற பிறகு, அரசு அறிக்கை மூலமாக வெளியிடப்பெற்று, அப்படி வெளியிட்ட நாளிலிருந்து செயலுக்கு வந்து, கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியாகச் செயல்படத் தொடங்கும்.

இந்தச் சட்ட முன்வடிவினை உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்று இருக்கிறார்கள். உங்கள் மேலான யோசனைகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. முறைப்படுத்தப்படும் அளவில் அவைகளைப் படிப்படியாகச் செயல்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்படும். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவினை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தரும்படி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி .

''1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 513 வரை, அட்டவணைகள் ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

ஈ. சிறைக்கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

†1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1981) ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்,†

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, சிறைக்கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்வது பற்றிய சட்ட முன்வடிவை சட்டமாக்குவதற்கான மசோதாவை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய முக்கிய அம்சம் என்னவென்று கேட்டால், இங்கே ஃபிங்கர்ப்ருண்ட்ஸ் என்று சொல்லக்கூடிய கைரேகைகளைப் பதிவு செய்யவும், புட் ப்ரின்ட்ஸ் என்று சொல்லக்கூடிய அடிச்சுவட்டைப் பதிவு செய்யவும் அளவு எடுப்பதற்காக இதற்கு முன்னால் காவல் துறையில் சப் இன்ஸ்பெக்டர் ராங்கில் இருக்கக்கூடியவர்கள் டெஸ்டர் சப் இன்ஸ்பெக்டர்ஸ் என்ற பதவியின் அடிப்படையில் இருப்பவர்கள்தான் இவற்றையெல்லாம் கவனித்துவந்தார்கள். இப்போது டெஸ்டர் சப்-இன்ஸ்பெக்டர்ஸ் என்று சொல்லக்கூடிய அந்தப் பதவி நீக்கப்படுகிறது. அப்படி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பிங்கர் ப்ரிண்ட் எக்ஸ்பெர்ட்ஸ் போஸ்ட்ஸ் என்று உருவாக்கப்படுகிறது. கைரேகைகளைச் சிறப்பாக அளவு செய்யக்கூடிய அந்தத் துறையிலே பயிற்சி பெற்ற நிபுணர்களை இன்று டெஸ்டர் சப்-இன்ஸ்பெக்டர்ஸ் என்பதற்குப் பதிலாகப் போட்டிருக்கிறார்கள். அதுதான்

---

* 1981 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



இந்தச் சட்டமுன்வடிவில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஒரு முக்கியமான அம்சமாகும். இந்தமாதிரி கைரேகைகளை அதேபோல் அடிச்சுவடுகளை பதிவு செய்வது யாருக்கு என்று கேட்டால் கன்விக்டட் ப்ரிஸனேர்ஸ், அதாவது நீதி மன்றத்தில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பெற்ற அத்தனை பேர்களுக்கும் என்று போடப்பட்டிருக்கிறது.

இன்னொரு அம்சமும் இதில் போடப்பட்டிருக்கிறது. அரெஸ்டட் பெர்ஸன்ஸ்,—கைது செய்யப்பட்டு உள்ளே இருக்கக் கூடிய—எல்லோருக்கும் இது உண்டு என்று போடப்பட்டிருக்கிறது. இதுதான் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதாவின் முக்கிய அம்சம். இதில் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கூறவிரும்புவது, இன்றைக்கு இருக்கக்கூடிய இந்தச் சிறைச்சாலைகள் சட்டம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் இருந்தபோது இங்கிருக்கக்கூடிய மக்களை அடக்குவதற்காக ஒரு அடக்குமுறைக் கருவியாக போடப்பட்ட சட்டம்தான் அன்றையதினம் போடப்பட்ட சிறைச்சாலைகள் சட்டம். அன்றைக்கு மகாத்மா காந்தி போன்ற பெரிய தலைவர்கள் எல்லாம் இந்த நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டபோது அந்தச் சுதந்திர போராட்ட வீரர்களை அடக்குவதற்காக அந்த விடுதலைப் போராட்டத்தை அவர்கள் நடத்தாமல் ஒழிந்து போகவேண்டும் என்பதற்காகத்தான் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்த வேண்டும் என்ற முறையில் மனிதாபிமானமற்ற அநாகரீகமான பல்வேறு ஷரத்துக்கள் அடங்கிய இந்தச் சட்டத்தை பிரிட்டிஷ்காரர்கள்தான் கொண்டுவந்தார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும்கூட. வெள்ளைக்காரன் அன்றைக்கு ஆண்டபோது பல நல்ல காரியங்களை, விஞ்ஞான முன்னேற்றங்களைச் செய்திருக்கிறார்கள். மின்சார விளக்குகள், ரெயில்வே போன்றவைகளைச் செய்திருந்தாலுங்கூட சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் அன்றைக்கு நம்மை அடக்குவதற்காக எதைக் கொண்டுவந்தார்களோ அவற்றை, இன்றைக்கு சுதந்திரம் பெற்ற பிறகும் கூட அந்தச் சட்டத்தின் பெரும்பாலான அம்சங்களை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அம்சங்களில் ஒன்றுதான் இன்று கால்சுவட்டையும் கைரேகைகளையும் பதிவு செய்கிற ஒரு அமைப்பாக இருந்து வருகிறது. இதில் நான் கூற விரும்புவது என்னவென்றால், இன்றைக்கும் இந்தச் சட்டப்படி குற்றவாளிகள் என்று சொல்லக்கூடியவர்கள் யார் என்று பார்க்கவேண்டும். திருட்டு வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்கள், கொலைவழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்கள், சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு ஐ.பி.ஸி. படி அஃபென்ஸ் என்று சொல்லக்கூடிய கடுமையான குற்றங்களைச் செய்தவர்கள் என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கக் கூடிய க்ரிமினல் ப்ரிஸனர்ஸைப் பொறுத்தவரையில் அவர்கள் அடிச்சுவடுகளை அல்லது கைரேகைகளை எடுப்பதுகுறித்து எந்த

[திரு. அ. ரகுமான்கான்] [1981 எப்ரல் 4

விதமான ஆட்சேபணையும் இருக்கமுடியாது. ஆனால் இங்கே சொல்லப்பட்டிருப்பது அரெஸ்டட் பர்ஸன்ஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் அத்தனை பேர்களும் என்றிருக்கிறது. இந்தச் சர்க்காரை எதிர்த்து நாங்கள் இன்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம். நாளை நான் கூட உள்ளே போகலாம். நம் அமைச்சர் அவர்கள் கூட உள்ளே போகலாம். முதல் அமைச்சர் அவர்கள்கூட உள்ளே போகலாம். சிறைச்சாலை என்பது ஒருவழிப்பாதையல்ல. அங்கே எல்லோரும் போகலாம். அப்படிப் போகிறபோது என்ன நிலைஏற்படுகிறது என்றால் இன்று சட்ட அமைச்சராக இருந்தாலும் முதல் அமைச்சராக இருந்தாலும் அவர்கள் கைரேகையும் எடுக்கவேண்டுமென்ற ஒரு சூழ்நிலை வருகிறது. அவர்கள் நாளைபோகலாம். அது வேறு விஷயம். நான் கூற விரும்புவது, பொலிட்டிகல் ப்ரிஸினர்ஸ் என்று சொல்லக்கூடிய அரசியல்வாதிகளுக்கு அரசியல் கைதிகளுக்கு அந்தமாதிரியான முறை இருப்பது முறையாகாது. காரணம், அரசியல்வாதிகள் கொள்கைரீதியாக வித்தியாசப்பட்டவர்கள். பொது வாழ்க்கைக்கு வந்தவர்கள் இடையே கொள்கை ரீதியாக கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். அவர்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைப்படி சர்ககாரை எதிர்த்து போராட்டம் அல்லது வேறு காரியங்களில் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசியல்வாதிகள் சமுதாய விரோத சக்திகள் அல்ல, அவர்கள் கள்ளச்சாராயம் அல்லது சாராய சாம்ராஜ்யத்தின் சொந்தக்காரர்கள் அல்ல. அரசியல் காரணங்களுக்காக சிறைக்குள்ளே போகும்போது, அப்படி போகக்கூடிய கைதிகளுக்கும் இது இருக்கவேண்டும். அவர்கள் கை ரேகைகளையும் பதிவு செய்யவேண்டும் அல்லது அடிச்சுவடுகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இருக்கக்கூடிய தன்மை கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12·20]

இது போன்ற சிறைச்சாலை சீர்த்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறபோது, நான் மாண்புமிகு மாற்றுத் தலைவர் மூலமாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதெல்லாம், இதுபோன்ற சாதாரண காரியங்களை நீங்கள் செய்கின்றபோது, இந்தச்சீர்த்திருத்தச் சட்டம்கொண்டுவரப்படுகிறது. உங்களாலேயே தமிழ்நாடு அரசின் சார்பாக, சிறைச்சாலை சீர்த்திருத்தக் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே, எவ்வளவோ காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் அமுல் நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் ஒரு சாதாரண விஷயத்தைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன். இந்த டெஸ்டர் சப் இன்ஸ்பெக்டர்களை மாற்றிவிட்டு, ஃபிங்கர் ப்ரிண்ட் எக்ஸ்பெர்ட்களைப் போடுவதால், மிகப் பெரிய மாற்றம் வந்துவிடப் போவதில்லை



1981 ஏப்ரல் 4] [திரு. அ. ரகுமான்கான்]

ஆனால், அதே நேரத்திலே இன்றைக்கு நீங்கள் போட்டிருக்கிற தமிழ்நாடு சிறைச்சாலைகள் சீர் திருத்தக் கமிஷன் அறிக்கையிலே திரு. நரசிம்மன், திரு. டயஸ், திரு. வெங்கோபராவ் ஆகியோர் கொண்டு வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையிலே பல் களைக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையிலே பல்வேறு அம்சங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இன்றைக்குச் சட்ட அமைச்சர் இருக்கிறார்கள் ; முதலமைச்சர் இருக்கிறார்கள் ; நாளைக்கு அரசியல் காரணமாக வித்தியாசம் ஏற்படலாம். சிறைச்சாலைக்குச் செல்லுகின்ற நிலைமை ஏற்படலாம். அப்போது ஆடையை மாற்றவேண்டுமென்றோ, அங்கே கொடுக்கப்படுகின்ற உடையைத் தான் போட்டுக்கொள்ள வேண்டுமென்றோ, அவர்கள் தருகின்ற குல்லாயைத் தான் அணிந்துகொள்ள வேண்டுமென்றோ சொல்வது அநாகரிகமானது என்பது என் அபிப்பிராயம். காரணம் என்னவென்றால், அவர்கள் சமூகவிரோதமான காரியங்களில் ஈடுபட்டவர்கள் அல்ல. அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது ; அதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்தச் சிறைச்சாலை சீர்த்திருத்த கமிஷன் அறிக்கையிலே பல்வேறு குறிப்புகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, அரைஞாண்கயிறு அணிந்திருந்தால், அதை கழற்றிவிட வேண்டுமென்று சொலலப்படுகிறது. நான் கேட்கிறேன், இதற்கு ஒரு சீர்திருத்தம் வேண்டாமா ? இதற்கு என்ன சொல்லப்படுகிறதென்றால், அதன்மூலம் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. அதேபோல், தாலி கயிறுகூட இருக்கக்கூடாது என்று பல இடங்களிலே, சிறைச்சாலைகளிலே வலியுறுத்தப்படுகிறது. இது எந்தவிதத்திலே நியாயம்? புனிதமாகக் கருதப்படுகின்ற ஒன்று என்ற உணர்வு எல்லோருக்கும் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இது போன்றவைகளையெல்லாம் மாற்ற வேண்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல, தமிழ்நாடு சிறைச்சாலை சீர்திருத்த கமிஷன் அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. நீண்டகால குற்றவாளியாக சிலர் இருந்தார்கள் என்றால், ஆயுட் கைதிகளாக இன்னும் சொல்லப்போனால், ரிமாண்டுபிரிசனர்களாக ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அப்படி சிறைச்சாலையிலே உள்ளவர்கள் பல்வேறு வசதிகள் எல்லாம் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அங்கே வசதிகளைச் செய்வதற்கு சட்டத்திலே திருத்தம் கொண்டுவந்தால், அவற்றை வரவேற்பதற்கு வசதியாக இருக்கும். சிறைச்சாலை என்பது ஒருவழிபாதையல்ல. எல்லோரும் செல்லக்கூடிய பாதையாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அரசியல்வாதிகள் தரிசிக்க வேண்டிய மெக்கா ; அரசியல்வாதிகள் தரிசிக்க வேண்டிய ஜெருசலம், அரசியல்வாதிகள் தரிசிக்க வேண்டிய ஹரித்துவார். ஆகவே,

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஏப்ரல் 4

அப்பேர்பட்ட புனிதமான சிறைச்சாலைகள் சிறப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், இதுபோன்ற சில்லறைத் திருத்தங்களுக்குப் பதிலாக, நிரந்தரமான திருத்தங்களைக் கொண்டு வந்தால், அது உங்களுக்கே கூட உதவியாக இருக்கும் என்று கூறி அமைகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் சொன்ன அடிப்படையில் டெஸ்டர் சப் இன்ஸ்பெக்டர் பதவியை நீக்குவதுடன், இப்போது துணை ஆய்வாளர்களோடு பிங்கர் பிரிண்ட் எக்ஸ்பர்ட்டுகளையும் ஒன்றாக, சிங்கில் டிஜிட் பிங்கர் பிரிண்ட் செக்ஷன் ஆப் தி தமிழ்நாடு என்ற பதவியோடு இணைத்துக் கொள்வதற்கு இந்தத் திருத்தம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பொதுவான ஏற்கனவே சொன்ன அடிப்படையில் பிரிவு 2 (ஏ)-ல் அதாவது 3 (ஏ)-வில் ஓராண்டு சிறைத் தண்டனை கொடுக்கக்கூடிய அல்லது அதற்கு மேல் தண்டனை கொடுக்கக்கூடிய குற்றமாக இருந்தாலும், மேலும் அப்படி தண்டிக்கக்கூடியவர்கள் நன்னடத்தை ஜாமீன் எக்சிகூட் பண்ணினாலும், அவர்கள் கை ரேகைகள், கால் சுவடுகள் எல்லாம் பதிவு செய்யக்கூடிய ஏற்பாடு செய்யப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னபடி, அரசியல் காரணத்திற்காக குறிப்பாக இன்றைக்குத் தொழிற்சாலைகளிலே வேலை நிறுத்தம் ஏற்படுகின்றபோது, சிறைச்சாலைக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஓராண்டு அல்லது அதற்குமேற்பட்ட குற்றமாகவும் இருக்கலாம். அப்படி தொழிற்சங்க இயக்கத்திலே சம்பந்தப்பட்டவர்கள் அல்லது அரசியல்வாதிகள் ஆகியோர்களுக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவது நியாயமல்ல. இதை இந்த அரசு பரிவோடு கவனிக்க வேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு ஒரிஜினல் ஆக்ட் 33/1920-ல், 7-ஆவது பிரிவிலே,

"Destruction of photographs and records of measurements, etc. on acquittal:

Where any person, who, not having been previously convicted of an offence punishable with rigorous imprisonment for a term of one year or upward, has had his measurements taken or has been photographed in accordance with the provision of this Act is released without trial or discharged or acquitted by the Court, all measurements and all photographs (both negative and copies) so taken shall, unless the court (in a case when such person is released without trial) the District Magistrate or Sub Divisional Magistrate for reasons to be recorded in writing otherwise directs be destroyed or made over to him" என்று இருக்கிறது.



1981 ஏப்ரல் 4] [திரு. ரா. கிருஷ்ணன்]

ஆக குற்றம் சாட்டப்பட்டவர்கள், நீதிமன்றங்கள் மூலமாக குற்றவாளி அல்ல, அல்லது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த 'நெகட்டிவ்' உள்பட அதைக் கொளுத்திவிட வேண்டும்; அழித்து விட வேண்டும் என்பது தான் இங்கே இருக்கக்கூடியது; ஆனால் பொதுவாக அது நடைபெறுகிறதா என்றால், நடைபெறுவது இல்லை. ஏற்கனவே இப்படிப்பட்ட நெகட்டிவ், பிங்கர் பிரிண்ட் காப்பிஸ், காவல்துறை அலுவலகத்திலே இருக்கிறது. குறிப்பாக சொல்வதானால் மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் இப்படிப்பட்ட டாக்குமெண்ட்ஸ் எப்போதும் நிரந்தரமாக இருக்கிறது. நீதிமன்றத்தில், குறிப்பாக டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் அழிக்கக்கூடிய முறையிலே டிரக்ஷன்ஸ் கொடுக்க வேண்டியது மிக மிக அவசியம். அந்த ஏற்பாடுகள் செய்யப்படாமல் இருக்கிறது அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே இதுசம்பந்தமாக 8-வது பிரிவிலே எப்படி இந்த ரெக்கார்ட்ஸ் எல்லாம் பாதுகாப்பு செய்து, 'சேப் கஸ்டடி'யில் வைப்பது, அதை அழிப்பதற்கு எந்த முறைகளை பயன்படுத்த வேண்டுமென்று 'ஸ்பெசிபிக்காக' குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நிரந்தரமாக ஒருசில இயக்கங்களில் இருப்பவர்கள், அரசியல்வாதிகள் முதலியவர்களை கேடிகளாக்க காவல் துறை இந்த ரெக்கார்டுகளை சாதகமாக வைத்திருப்பதை அனுமதிக்கக் கூடாது. இந்த அரசு நீதிமன்றங்களுக்கு 'டிரக்ஷன்ஸ்' கொடுக்க வேண்டியது மிக அவசியம். ஏற்கனவே சொல்லியதின் அடிப்படையிலே அதாவது 'புரொஃபஷனல் தெப்ட்ஸ்' பிக் பாக்கெட்ஸ், செய்யக்கூடிய 'புரொஃபஷனல் அபெண்டரஸ்' இவர்களுடைய கை ரேகை இருப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் அரசியல் சம்பந்தமாக, இயக்கம் சம்பந்தமாக இருக்கக்கூடிய இவர்களுடைய கைரேகையை எப்போதும் வைத்திருப்பது சரியல்ல. இதற்கு தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தற்காலிக தலைவர் அவர்களே, சிறை கைதிகளுடைய அடையாளங்கள் பதிவு செய்வது என்ற மசோதாவின் மேல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தை 1920 ஆம் ஆண்டு சட்டத்திலிருந்து தொடர்ச்சியாக திருத்திக்கொண்டே வருகிறோம். 1920 ஆம் ஆண்டு கொண்டு வந்ததற்குக் காரணம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். இந்த நாட்டிலே சுதந்திர குரலே எழுப்பக்கூடாது; என்று சுதந்திரத்தை கேட்கக்கூடியவர்களை அடக்குவதற்கும், ஒடுக்குவதற்கும் பலவித கேடிகளாக நடத்துவதற்கும் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் கொண்டு வந்த சட்டம். அதிலிருந்து தொடர்ச்சியாக திருத்திக் கொண்டே வருகிறோம். இப்படிச் சுதந்திரத்திற்கு போராடுகிற போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், காந்தி, பகவத் சிங், இராஜகுரு, ஜீவா போன்றவர்களை எல்லாம் கிரிமினல் கைதிகளாகத்

தான் நடத்தினார்கள். அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சிவந்த பிறகு, அவர்கள் காலத்திலே போராடக்கூடிய அரசியல்வாதிகள், பஞ்சாலை தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் இப்படி யார் போராடினாலும் அதே சட்டத்தைத் திருத்திப், திருத்தித் பயன்படுத்தினார்கள். தமிழகத்தில் தமிழ் பண்புக்கு விரோதமாக 1969 ஆம் ஆண்டு விவசாய தொழிலாளர் பிரச்சினையில் கீழ்த் தஞ்சையில் கூலி கேட்டு போராடுகிறபோது 4,200 பேர்கள் சிறைக்குப் போனார்கள்.

[பிற்பகல் 12-30.]

அதில் 200 பேர்கள் தாய்மார்கள். தமிழ் நாட்டிற்குப் பெருமைதரக்கூடியது தாய்மார்களின் தாலிக்கயிறும் தாலியும் தான். அதுகூட கழற்றி வைக்கப்பட்டது என்று சொன்னார்கள். சமீபத்திலேகூட இந்த அவையிலே அமைச்சராக இருந்த சுப்புலட்சுமி அவர்கள் தங்க தாலி சரடை கழற்றிவிடச் சொன்னார்கள் என்று கூட பத்திரிகைகளிலே எல்லாம் வந்தது. கைரேகை வைத்து அடையாளம் வைப்பது எல்லாம் சமூக விரோதிகள் என்ற லிஸ்டில் வரக்கூடியவர்களுக்கு அந்த மாதிரி செய்ய வேண்டுமே தவிர அரசியல் கைதிகளாப் போகக் கூடியவர்களுக்கு இன்றைக்கு அமைச்சராக இருக்கக்கூடியவர்களில் பலர் அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்தபோது அரசியல் கைதியாக சிறைச்சாலைகளுக்குச் சென்றவர்கள் இவ்வாறு செய்வது சரியல்ல. இன்றைக்கு ஆசிரியர்கள் மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் எல்லாம் போராடுகிறபோது இன்றைக்குக் காலம் மாறி, நீதிபதிகள், டாக்டர்கள், என்ஜினியர்கள் பெரிய பதவிகள் வகிப்பவர்கள்கூட போராடிச் சிறைக்குப் போய்க் கொண்டிருக்கின்ற காட்சியை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு அரசியல் கைதிகளை எப்படி நடத்த வேண்டும், சுதந்திரத்துக்காக போராடுகிறவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு எல்லாம் ஒரு விதியை வைத்துக்கொண்டு அதுமாதிரிச் செய்ய வேண்டுமே தவிர ஒட்டுமொத்தமாக எல்லோரையும் சமூக விரோதிகளாக அமைச்சர் அவர்கள் பார்க்கவில்லை என்றாலும்கூட இதையெல்லாம் சட்டம் காட்டுகிறது என்பதால் எதிர்காலத்திலே அதையெல்லாம் நீக்கி அரசியல் கைதிகளைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே இதைச் சட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு இந்த மசோதவை திருத்திக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி வணக்கம்.





(மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக்ட் 33 ஆப் 1920
சிறைக் கைதிகளின் அடையாளங்களை பதிவு செய்கின்ற இந்த
மைய சட்டம் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்
காட்டியதைப் போல் கைரேகைப் பதிவுக்கும், அடிச்சுவடு பதி
விற்கும் அதை யார் மேற்கொள்வது என்பது குறித்து சில மாற்
றங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகக் கொண்டு
வரப்பட்டிருக்கிறது. ஆக்ட் 33 ஆப் 1920 என்ற மையச்
சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் சப் இன்ஸ்பெக்டர் என்ற
காவல் துறை அதிகாரியின் தகுதிக்குக் கீழ்ப்படாத அதிகாரிதான்
ரேகை பதிவு செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். ஆனால்
நடைமுறையில் 1971 ஆம் ஆண்டு டெஸ்ட்டர் சப் இன்ஸ்பெக்டர்
அத்தகைய பரிசோதனையை மேற்கொள்ளலாம் என்று சட்
டத்தின் அடிப்படையிலே ஆரம்பத்திலே நியமிக்கப்பட்டிருந்தா
லும், அது கூடாது என்ற முடிவுக்கு வந்து, கைரேகை நிபுணர்கள்
அந்தப் பணிக்கு சிறந்தவர்கள் என்ற முடிவுக்கு வந்து, இப்
போது அல்ல, 1971 ஆம் ஆண்டிலேயே அப்படி முடிவுக்கு வந்து
அந்த அடிப்படையிலே 3 சோதனை சப் இன்ஸ்பெக்டர்களை
அமர்த்தி விட்டார்கள் ; அந்த 3 சப் இன்ஸ்பெக்டர்களை மாற்ற
முடிவு எடுத்துவிட்டு கைரேகை நிபுணர்களை நியமித்தார்கள்.
1971 ஆம் ஆண்டிலே கைரேகை நிபுணர்களை காவல் துறை
யினருக்குப் பதிலாகக் கொண்டுவர வேண்டுமென்று முடிவு
எடுக்கப்பட்டபோது சட்டத்தை திருத்த வழிவகை செய்யவில்லை.
இது மைய சட்டம், மாநிலச் சட்டம் அல்ல, அப்போதே திருத்தி
யிருக்க வேண்டும். எனவே 1971 இல் டெஸ்ட் சப் இன்ஸ்
பெக்டர்களுக்குப் பதிலாக கைரேகை நிபுணர்களைப் போடலாம்
என்று முடிவு செய்து அந்தப் பதவியை ஏற்படுத்திச் சிலரையும்
நியமித்து ஆனால் சட்டரீதியாக அவர்கள் செயல்படக்கூடிய
நிலையை தராத காரணத்தால் ஏற்படுத்தப்பட்ட பதவியில்
போடப்பட்டவர்கள் எல்லாம் செயலிழந்த நிலையில் 1971-
லிருந்து 1981 வரையில் இருந்திருக்கிறார்கள். இதை மாற்றத்
தான் இந்தச் சட்டத் திருத்தத்தைத் தற்பொழுது நாம் கொண்டு
வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசு
கின்ற பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்ய அடக்கு முறைச் சட்
டத்தைப்போல இருக்கிறது என்று இந்தச் சட்டத்தைக் குறிப்
பிட்டார்கள். Political Prisoners-க்கு கூட பல இன்னல்களை
விளைவிக்கக்கூடிய சட்டமாக இது இருக்கிறது என்று சொன்
னார்கள். இது மாநில சட்டம் அல்ல, மைய அரசுச் சட்டம்,
எந்த அளவிற்கு இதில் மாற்றம் செய்ய வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூறியு
ள்ளதைப்போல, அவரைச் சார்ந்திருக்கின்ற இயக்கத்தைச் சேர்ந்த

[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 4

Members of Parliament டெல்லியிலே கொண்டு வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன், அவ்வாறு கொண்டு வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்களுக்குத் தெளிவாகவே எல்லா விவரங்களும் தெரியும் ; தெரியாது என்பது அல்ல, நிச்சயமாகத் தெரியும். மத்திய சர்க்கார் சட்டங்களும் இருக்கின்றன ; தமிழ்நாடு சர்க்கார் சட்டங்களும் சில இருக்கின்றன. இன்றைக்கு மத்திய அரசினுடைய முழுமையான சட்டத்திற்கு, அதன் ஆளுகைக்கு உட்பட்டதல்ல ; தமிழ்நாடு சர்க்காருக்குச் சில அதிகாரங்கள் இருக்கின்றன. அந்தத் தமிழ்நாடு சட்டத்தின் அடிப்படையில் எவ்வளவு சீர்திருத்தங்களைக் கொண்டு வர முடியுமோ அவ்வளவு சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் மாண்புமிகு உறுப்பினவரவர்கள் கூறுவது இரண்டு பிரச்சனைகளைப்பற்றியவை. ஒன்று, இந்த மையச் சட்டத்திலே Act 33/1920 என்னென்ன திருத்தங்களைச் கொண்டு வர வேண்டுமென்பது. மற்றொன்று, சிறை சீர்திருத்தத்தைப்பற்றிச் சொல்கிறார்கள். அது தனிப்பட்ட பிரச்சனை. அதற்கும் இந்தச் சட்ட முன்வடிவிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சில பிரச்னைகளை எழுப்பி இருப்பதால் அதற்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். 1975 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலை சிறைச்சாலைகளில் தற்போது இல்லை. காரணம், சிறை சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரை தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. அதைத்தீவிரப்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகள் சிறைக்குச் செல்லலாம். ஆகவே, சிறைச்சாலைகள் நல்ல நிலைமையில் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1975 ஆம் ஆண்டுக்கு முன்பாக சிறைகளில் இருந்த நிலைமை எப்படி என்பதை 1976-லே மாண்புமிகு



1981 ஏப்ரல் 4] [திரு. சி. பொன்னையன்]

உறுப்பினர்கள் உணர்வார்கள். ஆனால் நிலைமை தற்பொழுது அப்படி இல்லை. சிறைச் சீர்திருத்தக் குழு செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் குறைகள் படிப்படியாக நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகுஉறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும் பொழுதுசிறைச்சாலை ஒரு புனிதமான இடம், மெக்காவிற்குச் சமமாகக் கருதுவதைப்போலக் கூடப் பேசினார்கள். இது உண்மையிலேயே வருந்தத் தக்க ஒன்று. இத்தகைய எண்ணங்களை மக்கள் மத்தியிலே நாம் பரப்புவது கூட பெருங்குற்றங்களைச் செய்கின்ற குற்றவாளிகள் கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களே கூடச் சொல்லிவிட்டார்கள் சிறை ஒரு புனிதமான இடம் என்று. ஆகவே, எப்படிப்பட்ட தவறுகளை வேண்டுமானாலும் செய்துவிட்டு அந்தப் புனிதமான இடத்திற்குச் சென்று பரிகாரம் காணலாம் என்று நினைத்துக் கொண்டு விடுவார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நான் சிறைச்சாலை பற்றிச் சொல்லிய கருத்தை நம்முடைய அமைச்சரவர்கள் தவறான அர்த்தத்தில் எடுத்துக்கொண்டு விட்டார்கள். மகாத்மா காந்தி அவர்கள் ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள். போராட்டத்திற்கும், சிறைக்கும் செல்பவர்கள் எப்படியிருக்க வேண்டுமென்றால், திருமணமான தம்பதிகள் முதலிரவில் ஒருவரையொருவர் சந்திக்கப் போகும் ஆர்வத்தோடு இருக்க வேண்டும் என்று தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அரசியல்வாதிகள் சிறைச்சாலைகளில் தங்களுடைய இலட்சியங்களுக்கு எதிரான அடக்குமுறை இருக்குமானால் அதை அப்படிக் கருத வேண்டுமென்ற அர்த்தத்தில்தான் அப்படிச் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசியல் கைதிகள் என்ற ஒரு பிரிவைத் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லி, கொள்கை அடிப்படையில் போராட்டங்களை மேற்கொண்டு சிறைச்சாலைகளுக்குச் செல்வது என்பது தவறு. ஆனால் அரசியல் வாதிகளில் சிலர் கூட, மக்களால் ஏற்றுக்

[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 4

கொள்ளப்படக் கூடாத தவறுகளான கொலை, திருட்டு, போன்றவைகளில் ஈடுபட்டு சிறைக்குச் சென்றால் அவர்களுக்கும் இத்தகைய பாதுகாபபைத் தந்துவிட முடியாடு. எனவேதான் பொதுவாக அத்தகைய எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

[பிற்பகல் 12.40]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற பொழுது இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். பனியனையும் ஹாப் பேண்டையும் போட்டுக் கொண்டு உள்ளே இருக்கக் கூடிய சூழ்நிலை அனைவருக்கும் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும், சிறையிலே தற்கொலைகள் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் அரசியல் கைதிகள் தற்கொலை செய்து கொள்வதற்காக சிறைக்குச் செல்ல மாட்டார்கள். அது தனிப்பட்ட பிரச்சனை ஆனால்கைதிகள் என்றால், இங்கு தெளிவாக, சட்ட முன்வடிவிலே அதற்காக உள்ள பிரிஆம்பிளிலே, ஸ்டேட்மென்ட் ஆக்ப் ஆப்ஜக்ட்ஸிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினர் கன்விக்டட் பெர்சன்சுக்குப் பரவாயில்லை என்று சொன்னார். ஆனால், அரஸ்டட் பெர்சன்ஸ் என்பதைப் பொறுத்த வரையிலும், அரசியல் கைதிகள் மட்டுமே அரஸ்டட் பெர்சன்ஸ் அல்ல. அரசியல் கைதிகள் அரஸ்டட் பெர்சன்ஸாகச் செல்வது மிகமிகக் குறைந்த அளவிலேதானிருக்கிறது. ஆனால், மிகப் பாதகமான குற்றங்களைச் செய்துவிட்டு, சிறைக்குச் செல்கின்ற குற்றவாளிகள் அதிகமாக இருக்கிற காரணத்தால்தான் அரஸ்டட் பெர்சன்ஸ் என்று இருக்கிறது. அப்படி அரஸ்டட் பெர்சன்ஸ் உள்ளே செல்கின்றபோது, அவர்கள் வேட்டியும் பேண்டும் போட்டுக் கொண்டு செல்லலாம் என்றால், அவர்கள் குற்றத்தைச் செய்து விட்டு, பிறகு சமுதாயத்திற்கு அஞ்சுகின்ற நேரத்தில், சிறையிலே தூக்கு போட்டுக் கொள்ளக் கூடாது என்பதற்காக அரைஞாண் கயிறு, வேட்டி, பேன்ட் போன்றவற்றையெல்லாம் கூடப் போடக் கூடாது என சிறை விதிகளின் அடிப்படையில், தமிழகத்தில் மட்டுமல்ல, பாரதம் தழுவிய அளவிலே, இன்று மட்டுமல்ல, பன்னெடும் ஆண்டுகளாக அது நடைமுறையிலே இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது, குற்றத்தைச் செய்துவிட்டு, சிறையிலே மனம் உடைந்து பிறகு சமுதாயத்திற்கு அஞ்சி தற்கொலை செய்து கொள்வதற்கு வசதியாக அமைந்து விடும்.





தாலிக் கயிறைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். தாலிக் கயிறை எடுக்க வேண்டுமென்பது சரியில்லை. ஆனால், தங்கச் செயின் ஓரளவிற்கு நீளமாக இருந்து, அதுகூட எங்கேனும் கொக்கிபோல் இருந்து, அதில் தொங்குவார்களானால் தூக்கு போட்டுக் கொள்ள வேண்டுமென்று நினைப்பவர்களுக்கு, தூக்கு போட்டுக் கொள்வதற்கு அது கூட ஒரு சமயத்தில் வசதியாக அமைந்து விடும். அந்தச் சிக்கல் கூட ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக தங்கச் செயின் வேண்டாம் என்று சொல்லலாம். ஆனால், தாலி கயிறு வேறு, தங்கச் செயின் என்பது வேறு என்பதற்காகத்தான் அதை மாறுபடுத்தி சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசும்பொழுது சிறையிலே Arrested Persons and Convicted Persons உடைய கை ரேகைகளையெல்லாம் எடுத்து, அதை அழிக்க வேண்டுமென்று ஆண்டாண்டுக் காலமாக விதிமுறையிருந்தும், அழிக்காமல் வைத்திருப்பது பிற்காலத்திலே அரசியல் உணர்வோடு சிலருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு விடுமோ என்ற அச்சத்தைக் கூட அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். விதிமுறை கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அப்படி குறிப்பிட்ட காலத்திற்கு மேல் என்றால், ஒரு சாதாரண கீழே இருக்கிற டிரையல் கோர்ட்டிலே வழக்கு முடிந்து விடுமேயானாலும், அந்த டிரையல் கோர்ட்டிலே ஒருவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுவிடுவாரானால் உடனே அதை அழித்து விட வேண்டுமென்று சட்டத்திலோ, விதிமுறையிலோ இல்லை. அதற்குப் பிறகு அப்பீல் இருக்கிறது. செஷன்ஸ் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம், பிறகு ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். எனவே, வழக்கிலே இருக்கிற அப்பீல் கட்டம் எல்லாம் முடிந்த பிறகு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் வைத்திருக்கக்

Y211,31 N81
N83-183

கூடாது என்பதுதான் அதன் பொருள். அந்த அடிப்படையை மீற விதிமுறைகளை மீறி, அத்தகைய ரெக்கார்டுகள் வைக்கப்படுமானால், அவையெல்லாம் அழிக்கப்பட வேண்டும், அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறையிலே சப்-இன்ஸ்பெக்டர்ஸ் என்ற நிலைக்குப் பதிலாக, அந்த கை ரேகைகளையெல்லாம் பதிவு செய்யக் கூடியவர்கள் 1971 ஆம் ஆண்டிலேயே ஃபிங்கர் பிரின்ட்ஸ் எக்ஸ்பர்ட்ஸ் தான் அந்தப் பணியினை மேற்கொள்வார்கள் என ஒரு முடிவினைச் செய்து, பதவியினையும் ஏற்படுத்தி, அந்தப் பதவியிலே உள்ளவர்கள் சட்டத்தின் அடிப்படையில் அத்தகைய கை ரேகைகளைப் பதிவு செய்ய தற்போது இயலாத காரணத்தாலே, அந்த இயலாத நிலையை மாற்றுவதற்குத்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. தற்சமயம் போலீஸ் ஆஃபீசர்கள் என்பதற்குப் பதிலாக,

"It includes Finger Print Experts of the Finger Print Bureau, Madras and of the single Digit Finger Print Section in the State of Tamil Nadu" என்னும் ஒரு புதிய திருத்தம் செக்ஷன் 2 (பி) ஆஃப் 33/1920-வது ஆண்டு மைய அரசு சட்டத்திற்கு கொண்டு வரப்படுகிறது. அவை அதை ஏற்கவேண்டுமென வேண்டுகிறேன்.

6. அறிவிப்புகள்— தொடர்ச்சி

**ஆ. இந்தோனேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவேற்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தோனேசிய நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அம்மன்றத்தின் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. கார்டியோ அவர்கள தலைமையில் இங்கு வருகை புரிந்து நமது மாமன்றத்தின் நிகழ்ச்சிகளைப் பார்த்து கொண்டு இருக்கின்றனர். பேரவையின் சார்பில் அவர்களை வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

A Parliamentary Delegation from Indonesia under the Leadership of the Deputy Speaker of the Indonesian Parliament, His Excelleny, Mr. R. Kartidjo, are now witnessing the proceedings of this House. I extend to them a warm welcome on behalf of this House.



5. அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி.

இ. சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1981 — தொடர்ச்சி

திரு. ஏ. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது சொன்னதை நாங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு சில விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன். ப்ரொபஷனல் கிரிமினல்ஸ் இடத்தில் பிங்கர் பிரிண்ட் எடுப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அது அல்லாமல் இன்று இருக்கும் அந்த டர்ம்ஸ்ஸில் — பழைய ஆக்டாக இருந்தாலும் சரி; இப்போது கொண்டு வந்து இருக்கும் ஆக்டாக இருந்தாலும் சரி — அரெஸ்டெட் பர்சன்ஸ் என்று சொன்னால் பல்வேறு டிமாக்கிரட்டிக் மூவ்மென்ட் — அவை பொலிட்டிக்கலாகவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்— உதாரணமாக தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள் அவர்களுக்கும் கைரேகை எடுக்கவேண்டும் என்று வரும். வெள்ளைக்காரன் காலத்தில் எங்களிடத்தில் கைரேகை எடுக்க வருவார்கள். 'வீ ரெஃப்யூஸ்' நாங்கள் அதைக் கொடுப்பது இல்லை. அதை ஒரு அவமானமாகக் கருதுகிறோம். அதனால் ஜெயிலில் பே ராட்டம் வரும். அதனால் நாங்கள் சஃபர் ஆவோம். இன்று இருக்கும் சட்டத்தில் உள்ள ஷரத்துக்களில் அதற்கு இடம் இருக்கிறது. அதை மாற்றவேண்டும் என்பதிலே நியாயம் இருக்கிறது. இந்த ஷரத்துக்களை ஃபரொஷனல் கிரிமினலுக்கு அப்ளை செய்வதில் அர்த்தம் உண்டு. ஆகவே, பொலிடிகல் பிரிசனர்களைப் பொறுத்தவரையில் அதற்கு இடம் கொடுக்காத வகையில் இந்த ஷரத்துக்களை மாற்றுவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகளுக்கென்று தனியாக ஷரத்து எதுவும் இல்லை. அரெஸ்டெட் பர்சன்ஸ் என்பதற்கு சில ஷரத்துக்கள் உண்டு. கன்விக்டெட் பர்செனஸ் என்பதற்குச் சில ஷரத்துக்கள் உண்டு. கைரேகை எடுப்பது என்பதைப் பொறுத்தவரையில் — வெதர் இட் ஈஸ் பிங்கர் பிரிண்ட் இம்ப்ரெஷன் ஆர் புட் பிரின்ட் இம்ப்ரெஷன் எடுப்பது எத்தகைய குற்றங்களுக்கு என்பது வரையறை செய்யப்பட்டு இருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 4

அரசியல் கைதிகள் எல்லோருமே சாதாரணமாக ஒரு கொள்கை ரீதியாக போராட்டம் நடத்துகிறபோது அத்தகைய அரசியல் கைதிகளுக்கு சிறைசெல்கிற நேரத்தில் பிங்கர் பிரின்ட் எடுக்க வேண்டும் என்று ஷரத்து இல்லை. முறையும் இல்லை. அந்த முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : If prisoners include political prisoners there is a legal lacuna. I would submit some points on the type of culprits. கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய சட்டத்திருத்தத்திலே 'கான்விக்டெட் பர்சன்ஸ் அன்ட் அரெஸ்டெட் பர்சன்ஸ்' என்று தான் போடப்பட்டு இருக்கிறது. அரெஸ்டெட் பர்சன்ஸ் கன்விக்டெட் பர்சன்ஸ்ஸாக இருக்கத் தேவையில்லை. அவர்கள் ரிமான்ட் கைதிகளாகவும் இருக்கலாம். அவர்கள் ப்ரொபஷனல் அபென்டர்ஸ்ஸாகவும் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆகவே, இதிலே அரசியல் கைதிகளையும் கட்டுப்படுத்தி பிரிவு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது ப்ரொபஷனல் கைதிகளிடம் மட்டும் தான் எடுக்கவேண்டும் என்பதுபோல் இருக்கிறது. திடீரென்று ஒருவர் கொலை செய்து விட்டால் அவரை விட்டு விடவேண்டும் என்ற நோக்கம் வந்து விடும். நோக்கம் அது அல்ல. அரெஸ்டெட் என்கிறபோது எத்தகையவர்களுக்கு, எத்தகைய குற்றங்களைச் செய்தவர்களுக்கு அந்தக் கைரேகை எடுக்கவேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின் அடிப்படையில் அந்தக் கைரேகைகள் எடுக்கப்படுகின்றன. அரசியல் கைதி என்கிற போர்வையில் ஒருவர் கொலை செய்து விட்டால் அவர் அரசியல் கைதி என்கிற காரணத்திற்காக விட்டு விடமுடியாது. ஆகவே, குற்றங்களின் தன்மையின் அடிப்படையில் அந்தக் கைரேகை பதிவு எத்தகைய குற்றங்களுக்குத் தேவை என்கிற அடிப்படையில், அது அதற்கு உரிய வரைமுறைகளுக்கு ஏற்ப எடுக்கப்பட்டு வருகிறது. அப்படித்தான் நடைமுறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 4]

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, ஐ.பி.சி.யில் உள்ள கிரிமினல் குற்றங்களான கொலை, கொள்ளை, ரேப் போன்றவற்றைச் செய்த கைதிகளுக்கு எடுப்பதைப் பற்றிய ஆட்சேபணை இல்லை. ஆனால் நான் சொல்லவிரும்புவது பொலிடிக்கல்லாக — அவரவர்கள் கொண்டிருக்கிற அரசியல் கட்சிகளின் கொள்கைகளுக்கு, லட்சியங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு அரசியல் இயக்கங்களும் ஜனநாயக முறையில் போராட்டங்களை நடத்தி சிறைக்குச் செல்லக்கூடிய நேரத்தில், சமூகவிரோதிகள் அல்லாதவர்களைப் பொறுத்தமட்டில், இது தேவையில்லை என்பதைத்தான் என்னுடைய கருத்தாக இங்கே தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பொலிட்டிக்கல் பிரிசனர்ஸ் செய்கிற குற்றங்களுக்கு என்று தனியாகச் சட்டம் இல்லை. ஐ.பி.சி. ஆர் கிரிமினல் ப்ரொசீஜர் கோடிலே கூட இல்லை— தனியாக எந்தச் சட்டத்திலும் இல்லை. அவர்கள் செய்கிற குற்றம் ஐ.பி.சி., அல்லது கிரிமினல் ப்ரொசீஜர் கோட் அல்லது எனி அதர் ஆக்டின் அடிப்படையில் இருந்தால்தான், அதற்கு உட்பட்டு அவர்கள் அரெஸ்ட் செய்யப்படுகிறார்கள். பிறகு அந்தக் குற்றத்தின் தன்மை அடிப்படையில் அந்தக் கைரேகை பதிவு செய்யவேண்டிய தேவையை ஆய்ந்து பதிவு செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் பார்த்தால் பொலிட்டிகல் பிரிசனர்ஸ் செய்கிற தவறுகளுக்கு அல்லது குற்றங்களுக்கு தனியாக போடவேண்டும் என்று சொல்கிறார்கள். யார் குற்றங்கள் செய்தாலும் அது ஐ.பி.சி. அல்லது கிரிமினல் ப்ரொசீஜர் கோடிற்கு உட்பட்டுத்தான் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பிறகு ஏன் அரசு சிறை சீர்திருத்தக் கமிஷன் அமைக்கவேண்டும், அதனிடமிருந்து அறிக்கை பெறவேண்டும், அவைகளை அமல் நடத்தப்போகிறோம் என்று சொல்லவேண்டும்? ஐ.பி.சி.-க்கு உட்பட்டு என்று சொன்னால் எல்லாம் சட்டம் ஒழுங்குப்பிரச்னைதான். அப்படி இருக்கிறபோது சர்க்கார் சிறை சீர்திருத்தக் கமிஷன் போட்டது வேஸ்ட், அதற்காக அறிக்கை தயாரிக்க செலவழிக்கப்பட்ட பொதுமக்கள் பணம் வேஸ்ட், அவர்கள் செய்த காரியங்கள் அனைத்தும் வேஸ்ட்?

ஆகவே எந்த அடிப்படையில் அந்தச் சீர்திருத்த கமிஷன்
நியமிக்கப்பெற்று அறிக்கை பெறப்பட்டுள்ளதோ அதன் அடிப்
படையில் மாறுதல்கள் செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே
சிறை சீர்திருத்தக் கமிஷன் என்பது வேறு.. ஆக்ட் 33/1920
என்பது வேறு. சிறை சீர்திருத்த கமிஷன் அளித்துள்ள அறிக்கை
யின் அடிப்படையில் சென்ற ஆண்டிலிருந்து சில நடை
முறைகள் மாற்றப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையில்
அரசியல் கைதிகளுக்கு என்று கடந்த காலத்தில்இருந்ததைப்போல்
கொடுமையான நடவடிக்கைகள் இல்லாமல் சாதாரணமாக
சிறையில் அவர்களை நல்ல முறையில் நடத்தப்படுவார்கள் என்று
சொல்லி நடைமுறைகளை அரசு திருத்திக்கொண்டு இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி—

"1981 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்
களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1981)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்றது; சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே,
நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "1981 ஆம்
ஆண்டு சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு
செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1981) நிறைவேற்றப்
பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.



## உ. நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே,
நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்
நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்ட
அமைப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்
பெற்று ஆய்வுக்கு* எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

*திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சரவர்கள் இந்த மசோதாவை பிரேரேபித்திருக்கிறார்கள்.
இது மிகவும் முக்கியமான ஒரு சட்டமாக இருப்பதால் ஏற்கெனவே
'லரண்ட் சீலிங் ஆக்ட்'டும் இருக்கிறது. அமைச்சரவர்கள்
இதுபற்றி சுருக்கமாகவும், சுவையாகவும் மூன்று நிமிடங்கள்
அளவுக்கு விளக்கம் கொடுத்தால் நாங்கள் கருத்துக்கள்
சொல்ல வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே,
நான் இறுதியில் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். அவர் பேசியதற்கு பிறகு
நான் பதில் உரையில் தெளிவாகச் சொல்லுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மசோதாவின் நோக்கங்களை
அவை தெரிந்து கொள்வதற்காக, இன்டரஸ்ட் ஆஃப் தி ஹவுஸ்,
அமைச்சரவர்கள் சிறு விளக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் இறுதியில்
உறுப்பினர்களின் கருத்துகளைத் தெரிந்து, பதில் சொல்லு
கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: நாங்கள் பேச அனுமதி கேட்கும்
போது கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள். ஆனால், 'இப்போது
விளக்கம் இல்லை' என்று திரும்பத் திரும்பச் சொல்வதற்கு
நேரம் கொடுக்கிறீர்கள்.

---

*1981-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதியிட்ட தமிழ்
நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1981 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்க வேண்டிய நேரத்தில் கேட்டால் நிச்சயமாக அனுமதி கொடுப்பேன். நேரம் ஒதுக்க முடியாத நேரத்தில் கேட்டால் எப்படி அனுமதிக்க முடியும்?

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இது மிகவும் முக்கியமான ஒரு மசோதா. நான் சட்டம் படித்தவன் என்பதாலே எல்லாவற்றையும் நுணுக்கமாகத் தெரிந்திருப்பேன் என்று எண்ணத் தேவையில்லை. இந்த மசோதாவை ஆங்கிலத்திலே படித்துப் பார்த்தாலும், தமிழிலே படித்துப் பார்த்தாலும் கூட நாங்கள் சில விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. நாங்கள் தெரிந்து வைத்துக்கொண்டு அமைச்சருக்கு தெரிகிறதா இல்லையா என்று பார்ப்பதற்காக அல்லது விளையாடுவதற்காக விளக்கம் கேட்கவில்லை. இதைப் புரிந்துகொள்வதிலே சிரமம் இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டங்களை எல்லாம் நல்லமுறையிலே தெரிந்து வைத்திருக்கிறவர்கள். ஆகவே, நாங்கள் புரிந்துகொள்வதற்காக அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று மிக்கப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, 'ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துவிட்டு அவர்கள் பேசட்டும். அதற்கு அப்புறம் விளக்கம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டால், அப்போது சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் வேண்டுமென்று கேட்கிறார்கள்; இரண்டு வரியில் சுருக்கமாக விளக்கிவிட்டால் பிரச்சினை தீர்ந்து போகிறது.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இருக்கிற ஒரு சட்டத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவருகிறபோது அதனுடைய நோக்கங்களை தவறாகப் புரிந்துகொண்டு, வேறு கோணத்திலே பேசாமல் இருப்பதற்கு உங்கள் நோக்கம் என்ன என்று கேட்கிறார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சர் சட்டம் கொண்டுவருவதன் நோக்கத்தைச் சொல்லலாம்; அதிலே தவறு இல்லை. 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸில்' புரிந்து கொள்ளும் அளவுக்கு நோக்கங்கள் இல்லாமல் இருக்கலாம், அல்லது புரிந்துகொள்வதில் சிரமம் இருக்கலாம். ஆகவே, அமைச்சரவர்கள் உண்மையான நோக்கம் என்ன என்று சொல்லாவிட்டால் இதற்கு சம்பந்தப்படாமல் இருக்கிற கருத்துக்களை எல்லாம், உறுப்பினர்கள் புரிந்துகொண்ட அடிப்படையில் சொல்லுவதை நீங்கள் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருக்க வேண்டியது வரும். ஆகவே, அரசாங்கத்தின் கருத்துக்களை, நோக்கங்களை முதலிலே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் பேசவேண்டும் என்று நினைப்பதை எல்லாம்பேசட்டும். நான் பொறுமையாகக் காத்திருந்துவிட்டு இறுதியாகப் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் இருந்தால் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லலாம். பிரச்சினை தீர்ந்துவிடும்.

THRU V. KRISHNAMURTHY: Mr. Speaker Sir, When the Minster is piloting the Bill, the Minster has got a duty to explain what are the provisions, why the Bill has been brought here. For consideration of all these things, in the Statement of Objects and reasons, there are certain things which need clarification by the Minster. For example, the Madras Corporation has sanctioned some schemes, for which proposals were pending in the Government. So, the Act is in conflict and that is why the Bill has come. What are the proposals, what are the schemes, that are pending with the Government? Why the Corporation has sanctioned such of those schemes, it is not known. Those are the explanations which the Minster has to give. When he is coming forward to bring this Bill, he has to explain the circumstances under which the Bill has been brought before this House and he has got a duty to explain. I request the Speaker to kindly pullup the Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாக அந்த பில்லைப்பற்றிச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு எம்.ஏ., பி.எல்., படித்தவர்கள். அவர்கள் நன்றாக இதைப் படித்திருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்காக அதிலே உள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே அவர்கள் பேசட்டும், பேசுகின்றபோது சந்தேகம் இருந்தால் இறுதியாக பேசுகிறேன். எனவே அவர்கள் இப்போது பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். விளக்கம் ஏதாவது இருந்தால் சொல்ல வேண்டியதுதான். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே,

"1938 Novembe: 28—Town Planning—Corporation of Madr s—Cathedral Road South Area—Town Planning Scheme—Sanction."

என்று இருக்கின்றது. அந்த ஏரியாவில் இருக்கின்றது ஒரு சைட். சைட் என்றால் நாம் சொல்லக்கூடியது ஒரு கிரவுண்டோ அல்லது எவ்வளவு நிலமாக இருந்தாலும் வீடு கட்டுவதற்கு என்று இருக்கக்கூடிய நிலத்தில் ஒரே கட்டிடம் தான் கட்டவேண்டும் என்று அந்த விதி இருந்தது. மற்ற விவரங்களை நான் பிறகு சொல்கிறேன். ஆனால் அங்கே இருந்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டிடங்களைக் கட்டுவதற்கு கார்ப்பரேஷனிடம் அனுமதி கேட்டார்கள். அப்போது கார்ப்பரேஷன் ரிகேக்வேஷனுக்காக அரசுக்கு எழுதிவிட்டு அரசினுடைய பதில் வருவதற்கு முன்னதாகவே பெர்மிஷன் கொடுத்துவிட்டார்கள். அவர்கள் வீட்டையும் கட்டிவிட்டார்கள். இப்போது கார்ப்பரேஷன் செய்த அந்தக் காரியத்திற்காக நாம் ரேட்டிஃபை செய்யவில்லை என்றால் கதிட்ரல் ரோட்டிலே உள்ள அந்த கட்டிய வீடுகளை எல்லாம் இடிக்க வேண்டிய நிலைமை வந்துவிடும். எனவே கார்ப்பரேஷன் செய்ததை ரேட்டிஃபை செய்வதற்காக 34-ஏ என்ற ஒரு புது விதியை இப்போது இணைக்கிறோம். இதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு டவுன் ப்ளானிங் அண்ட் கன்ட்ரி ப்ளானிங் ஆக்ட் என்று ஒரு சட்டப் பிரிவை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த மசோதா சட்ட வடிவம் ஆகவேண்டும் என்பதற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே முக்கியமான அம்சம் என்னவென்றால் தமிழ்நாடு டவுன் ப்ளானிங் ஆக்ட் 1920ஆவது வருஷ சட்டம் தான் ஏற்கெனவே நடைமுறையில் இருந்தது. ஆனால் இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் 1938ஆவது வருஷ சட்டம் என்று சொல்கிறார். அது எந்த சட்டம் என்று விளங்கவில்லை. அது எந்த சட்டம் என்பதை அவர்கள் விளக்கவேண்டும். ஆனால் தமிழ்நாடு டவுன் ப்ளானிங் ஆக்ட், 1920 என்பதில் இருந்துதான் மசோதாவே ஆரம்பிக்கின்றது. அதற்குப் பிறகு 1972ஆம் வருஷச் சட்டம்தான். அதாவது தமிழ்நாடு டவுன் அண்ட் கன்ட்ரி ப்ளானிங் ஆக்ட் 35/1972. நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது இந்த சபைக்கு என்ன தகவலைக் கொடுத்திருக்கிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. மாண்புமிகு தலைவர் அவர்கள் அருள்கூர்ந்து நான் சொல்வதைக் கவனிக்க வேண்டும். நான் ஒரு முக்கியமான பிரச்சினையை எழுப்புகிறேன்.



[பிற்பகல் 1-00]

1938ஆவது வருஷ சட்டம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இதிலே குறிப்பிட்டிருப்பது 1920ஆவது வருஷ சட்டம். 1972ஆவது வருஷச் சட்டம், அதற்குப் பிறகு இந்த சர்க்கார் இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தம். ஆனால் 38ஆவது வருஷ சட்டம் என்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆகையினால் அந்தச் சட்டத்திலே எந்தப் பிரிவிலே எந்த செக்ஷனிலே என்ன சொல்லியிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்ல வேண்டும். காரணம் சபைக்கே ஒரு தவறான தகவலை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதற்கு நீங்கள் தான் ரூலிங் கொடுக்க வேண்டும் என்று தலைவர் அவர்களே, உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, 38ஆவது வருஷ சட்டம் என்று ஏதோ ஒரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இதிலே கூறப்பட்டிருப்பது 1920ஆவது வருஷச் சட்டம் தான். 1922ஆவது வருஷச் சட்டம் 1974லே அமுலுக்கு வருகிறது. 74-லே அமுலுக்கு வந்ததற்குப் பிறகு தான், இந்த பில்டிங் பிளான் சம்பந்தமாகவும், அதைப்போலவே, இந்த டவுன் பிளானிங் சம்பந்தமாகவும் கார்ப்பரேஷனுக்கும் சர்க்காருக்கும் உள்ள பிரச்னை சம்பந்தமான மற்ற விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளை எல்லாம் 'பின்னர் வெள்ளித் திரையில் காண்க' என்பது போல பின்னால் பேசிக் கொள்ளலாம். நாங்கள் கேட்பது எல்லாம் 38ஆவது வருஷச் சட்டம் பற்றியது—அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1920ஆம் ஆண்டு சட்டம் அமுலில் இருக்கும்போது டவுன் பிளானிங் ஸ்கீம் பற்றி 28–11–1938-ல் அரசு ஆணை இட்டது. அது 38-வது ஆண்டு சட்டம் அல்ல. இந்தஆணையை—

Town Planning, Corporation of Madras. Cathedral road, South Area Town Planning Scheme Sanction.

அதிலே 16(3) பிரிவில்—

Not more than one dwelling house which is essential out-building shall be built on one site. என்று இருக்கிறது. அப்போது அமுலில் இருந்தது 1920-வது ஆண்டு சட்டம்தான்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் திறமையை நான் பாராட்டுகிறேன். முடிந்தால் குழப்புவார்கள். இல்லையென்றால் குழம்புவார்கள். பரவாயில்லை. ஆனால் இந்தச் சட்டத்திலே என்ன விசேஷம் என்று கேட்டால், 1920வது வருஷம் தமிழ்நாடு

டவுன் பிளானிங் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் இன்றைக்கு அமுலில் இல்லை. காரணம் அந்தச் சட்டத்தை நீக்கிவிட்டார்கள். This Act s been abolish d. ஏன் நீக்கிவிட்டார்கள் என்று கேட்டால், 1972-வது வருஷம் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, ஏற்கனவே 20-வது ஆண்டில் கொண்டு வரப்பட்ட சட்டம் நீக்கப்பட்டு விட்டது. அந்த 72-வது ஆண்டு சட்டம் 74-லே அமுலுக்கு வந்தது. அந்தச் சட்டத்தினுடைய முக்கியமான அம்சங்கள் என்ன என்று கேட்டால், இன்றைக்கு சென்னை நகராட்சியில் பல்வேறு இடங்களிலே சைட்டுகள்—மனைகள் இருக்கின்றன. பல்வேறு இடங்களிலே வீடுகள் கட்டப்படுகின்றன. அதே போல ஓபன் ஸ்பேஸ் இருக்கிறது. சில இடங்களில் சில சைட்டுகளில் எக்ஸ்டென்ஷனும் செய்கிறார்கள். இவைகளையெல்லாம் கன்ட்ரோல் செய்ய தமிழ்நாடு டவுன் பிளேனிங் ஆக்ட் என்று தனியாக இருக்கிறது.

அதைப்போலவே பில்டிங் ஆக்ட் என்று தனியாக இருக்கிறது. அதன் அடிப்படையில்தான் மாநகராட்சியினர் வரைபடம் தருகிறார்கள். அந்த வரைபடம் தருவதற்கும், பிளானிங் ஆக்ட்டுக்கும், பில்டிங் ஆக்ட்டுக்கும் இடையிலே இருக்கக் கூடிய அந்த வேரியேஷன்களை சரி செய்வதற்கு மாநகராட்சிக்கு அதிகாரம் கிடையாது. அதாவது, அந்தச் சட்டத்தினுடைய பிரிவின் படி. கட்டிடங்கள் கட்டியிருந்தாலும், கட்டிடங்கள் கட்டுவதற்கான சூழ்நிலையில், அவைகளுக்கெல்லாம் வரைபடங்கள் வழங்கியிருந்தாலும்—அப்படிப்பட்ட எந்த பிரச்னைகளாக இருந்தாலும் அரசுதான் அதைச் செய்யவேண்டும். மாநகராட்சிக்கு அந்த அதிகாரம் உண்டா என்று கேட்டால், இல்லை. ஏனென்றால் சட்டத்திலே இடம் இல்லை.

பிள ன் கொடுத்துவிட்டாலும், பில்டிங்கே கட்டிவிட்டாலும் கூட அவைகளை எல்லாம் அரசு அனுமதித்தால்தான் நிறைவேற்ற முடியும். பின் எப்படி அதை மாநகராட்சி செய்தது என்று கேட்டால் In ant c pation of app val from the Governm nt, அதை செய்திருக்கிறார்கள். ஏற்கனவே மாநகராட்சி வரைபடம் கொடுத்து, கட்டிடங்கள் கட்டுவதற்கான அனுமதியை வழங்கியிருந்தாலும் கூட—சட்டத்திலே அதற்கு இடம் இல்லாவிட்டாலும்கூட, அப்படி செய்திருக்கிறார்களே, அந்தக் காரியங்களை சட்ட பூர்வமாக சரி செய்வதற்காகத்தான் இந்த மசோதாவை இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்

இதிலே நான் சொல்ல விரும்புவது, லேண்ட் சீலிங் ஆக்ட் இருக்கிறது. சென்னை நகரத்திலே இருக்கிறது. அந்த லேண்ட் சீலிங் ஆக்ட்டுக்கு ஒரு விதி விலக்கும் இருக்கிறது. எதாவது பிளான்கள் ஏற்கனவே வாங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவைகள் அந்தச் சட்டத்தின் கீழ் வராது. அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு. அந்தப் பிள ன்களை இன்றைக்கு சட்டப்பூர்வமாக ஆக்குகிறார்கள். இப்பொழுது நான் கேட்பது,



அப்படிச் சட்ட பூர்வமாக ஆக்குகிறபோது இதனால் பலன் அடைகிறவர்கள் யார்? அண்டர் கன்ஸ்டிரக்ஷனில் இருப்பவர்களா யார் பலன் அடைகிறார்கள் என்றால் ஏற்கனவே மாநகராட்சியிலே அனுமதி பெற்றவர்கள், வரைபடம் பெற்றவர்கள் பலன் அடைகிறார்கள் என்று சொல்கிறபோது நீங்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய லேண்ட் சீலிங் ஆக்ட்டை, எந்த காரணத்திற்காக கொண்டு வந்தீர்களோ, அந்த நோக்கம் நிறைவேற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. நான் அமைச்சரைக் கேட்கிறேன். இப்படி எத்தனை பேர்கள் சென்னை மாநகராட்சியில் மிகப் பெரியயிடங்களில் வீடுகள் கட்டி அனுமதி வரைபடம் தரப்பட்டிருக்கிறது மாநகராட்சியால்? அவர்கள் யார் யார்? இன்று அந்தக் கட்டடங்கள் எந்த நிலையில் இருக்கின்றன? இன்றைக்கு எவ்வளவு கட்டடங்கள் கட்டிக்கொள்ளலாம் என்று நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள்? அந்தப் பட்டியலை அந்த விவர அறிக்கையை சபையில் வைக்கவேண்டும். காரணம் மாநகராட்சி செய்த, சட்டத்திலே இடமில்லாத ஒரு காரியத்தை அனுமதித்திருக்கிறபோது அதை கேட்கிறேன். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நாளையோ மறுநாளோ, உங்கள் அனுமதியோடு சொல்கிறேன், அந்த மசோதா கொண்டு வரக்கூடும். அப்படி வருகிறபோது டிபால்டேர்ஸ், மின் கட்டணம் செலுத்தாதவர்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டு அவர்களுடைய பட்டியல் எல்லாம் வைக்கப்படும் புகைப்படங்களுடன் வெளியிடப்படும் என்று சொன்னார்கள். ஆகவே நான் கேட்க விரும்புவது சென்னை மாநகராட்சி மூலமாக வரைபடம் பெற்று கட்டிடங்கள் கட்டிக் கொண்டிருக்கக் கூடியவர்கள் யார் யார் என்ற புள்ளி விவரத்தை வைக்க வேண்டும். எனது குற்றச்சாட்டெல்லாம் ஏழை எளியவர்கள் பயன் அடைவார்கள் என்று சொன்னால், அதில் ஆட்சேபணையே கிடையாது. ஆனால் பெரிய பெரிய வசதி படைத்தவர்கள் கறுப்புப் பணக்காரர்கள் பயன்அடைய இடம் தரக்கூடாது. நம்முடைய சபாநாயகர் அவர்களை பேச்சில் குறிப்பிடக்கூடாது. நல்ல கருத்தாக இருப்பதால் சொல்கிறேன். ஒரு பொது நிகழ்ச்சியில் நமது சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள், சென்னை நகரில் ஒரு வீடுகூட வாங்கமுடியாது யாரும் என்ற நிலை இருக்கிறது. காரணம் கறுப்புப்பண முதலாளிகள் அந்த வீடுகளை ஏராளமான தொகை கொடுத்து வாங்கி, உண்மையில் மார்க்கெட் விலை குறைவாகயிருந்தாலும்கூட ஏராளமான தொகை கொடுத்து வீடுகளை வாங்கிவைத்துவிட்டு பம்பாய், டெல்லி, கல்கத்தாவுக்கு போய்விடுகிறார்கள், ஆகவே வீட்டுப்பிரச்னை மிகப் பெரிய பிரச்னையாக இருக்கிறது என்று நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். வரவேற்கத்தக்க கருத்து அதில் அவர்களை நாம் பாராட்டத்தான் வேண்டும் மிகச் சிறப்பான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் கறுப்புப் பணக்காரர்கள், வசதி

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஏப்ரல் 4

படைத்தவர்கள் இந்தமாதிரி ப்ளான் வாங்கிக்கொண்டு இன்றி
ருக்கக்கூடிய லான்ட் ஸீலிங் ஆக்ட்டுக்கு விரோதமாக சர்க்காரி
டத்திலிருந்து எப்படி அங்கீகாரம் வாங்கினார்கள்? அப்படி
கட்டடங்கள் கட்டிக்கொண்டு அந்த இடங்களைக் காப்பாற்றிக்
கொள்ள வாய்ப்பு கொடுக்கக்கூடாது. ஆகவே இதை அரசு
மறுபரிசீலனை செய்து சுரண்டல் பேர்வழிகளுக்கு வாய்ப்பு
கிடைக்கிற வழி இருக்குமானால் அதை தடுக்கிற அளவில்
ஏதாவது முடிவு எடுக்கவேண்டும் என்ற என் கருத்தைத்க்
கூறி முடிக்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த மசோதா சம்பந்தமாக நான் என்னுடைய ஒரு
சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எந்தவிதமான
அனுமதியும் இல்லாமல் கட்டடங்களை நகரில் கட்டிக்கொண்டு
வருவதன் மூலம் மிகப் பெரிய அளவில், பாதையே இல்லாத
அளவிற்கு அல்லது இனிமேல் ஆங்காங்கே கொஞ்சம் இடம்
வைத்திருக்கக்கூடியவர்கள் வீடுகள் கட்டினால் அந்த இடத்
திற்கு போகக்கூடிய வழியில்லாமல் பின்னால் அவர்கள் கஷ்டப்
படக்கூடிய ஒரு நிலை இப்போது ஏற்பட்டிருப்பதைப் பார்க்
கிறோம்.

சென்னை நகரில் அனுமதி இல்லாமல் பல கட்டடங்கள்
கட்டப்பட்டிருப்பதை நான் பலயிடங்களில் பார்த்தேன். அந்தக்
கட்டடங்கள் கட்டும்போது இவ்வளவு இடம் விட்டுவிட்டு கட்ட
வேண்டும் என்று விதிகள் சில இருக்கின்றன. கட்டடங்கள்
கட்டும்போது பக்கத்தில் இருப்பவர்களுக்கு இடைஞ்சல் இல்லா
மல் கட்டவேண்டும் என்றிருக்கிறது. ஆனால் ஒன்றரை க்ரவுண்ட்
இருந்தால் அந்த ஒன்றரை க்ரவுண்ட் முழுவதிலும் வீடு கட்டப்
பட்டிருக்கிறது. ஒரு க்ரவுண்ட் இடம் இருக்கிறது என்றால்
எந்தவிதமான இடமும் காலியாக விடாமல் அந்த ஒரு க்ரவுண்ட்
முழுவதிலும் வீடு கட்டப்படுகிறது. அனுமதியில்லாமல் கட்டி
யிருக்கிறீர்களே என்று சிலபேர்களிடம் கேட்டால் அவர்கள்
சொல்கிறார்கள், அனுமதி இல்லாமல் கட்டினோம், அதிகாரி
கள் வருவார்கள், சரிக்கட்டிக் கொள்வோம், பிறகு கட்டியது
சரிதான் என்று அனுமதி வந்துவிடும் என்று சொல்கிறார்கள்.
இப்படி நகரில் பலயிடங்களில் கட்டியிருக்கிறார்கள். 12
ஆண்டுகளுக்கு முன்பு வெறும் இடமாகயிருந்தது இப்போது பல
கட்டடங்களாக மாறியிருக்கிறது. அப்படி கட்டடங்கள்
வந்தது மட்டும் அல்ல சிறிது அளவுகூட இடம் விடாமல் முழுமை
யாகக் கட்டியிருக்கிறார்கள். இரண்டடி கூட விடாமல் முழு
இடத்திலும் கட்டி, கீழே இடம் விட்டு மேலே உயர்த்தி தெரு
அளவில் கட்டப்பட்டிருக்கின்றன வீடுகள். பக்கத்து வீட்
டுக்கும் இந்த வீட்டிற்கும் இடைவெளியில்லாமல் பல வீடுகள்
கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கு எப்படி அனுமதி கொடுத்
தார்கள்? இப்போது சட்டரீதியாக சரிதான் என்று எப்படி
அனுமதி கொடுப்பது? ஆகவே இந்தமாதிரி அனுமதியில்லாமல்



1981 ஏப்ரல் 4] [திரு. சோ. அழகர்சாமி]

கட்டிய கட்டடங்களுக்கு அங்கீகாரம் தருவது சரியல்ல.
ஏன் அனுமதி இல்லாமல் கட்டுகிறார்கள்? அதிகாரிகள் லஞ்சம்
வாங்கிக் கொண்டு, அல்லது நகரசபையிலுள்ள அதிகாரிகள்
அல்லது மாநகராட்சி அதிகாரிகள்—அனுமதி இன்றி கட்டடங்
கள் ஏழை எளிய மக்கள் கட்டினால் அவர்கள் மேல் கேஸ்
போடுகிறார்கள்—வசதி படைத்தவர்கள் பெரியவர்கள் வீடுகள்
கட்டினால் இவர்கள் போவார்கள் பணம் வாங்கி வருவார்கள்.
பிறகு வீடு கட்டினால் அனுமதி கிடைக்கும் என்றால் என்ன
அர்த்தம்?

[பிற்பகல் 1-10]

ஆகவே, இந்த அனுமதி கொடுப்பது சரியல்ல. அதற்காக
ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும். இது மாதிரி தமிழகத்திலே
பல நகராட்சிகளிலே, கோவில்பட்டி நகராட்சியிலே கூட, ஒரு
இடத்திற்கு நியாயமாக அனுமதி வேண்டுமென்று கேட்டால்,
அதற்கு அனுமதி வருவது கிடையாது. ஆனால், அவர்கள்
இஷ்டப்படி கட்டிக் கொண்டு, பின்னர் அனுமதி வந்து விடு
கிறது. அதனாலே தான் இந்த மாதிரி ஏன் முன் அனுமதி
இல்லாமல் கட்டினார்கள் என்பதை கவனிக்க வேண்டும் என்று
நான் இந்த ந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். காரணம், இம்மாதிரி பல இடங்களில்
இன்று நகராட்சிகளில் அல்லது மாநகராட்சிகளில் அனுமதி
இல்லாமல் கட்டப்பட்டிருக்கிறது அதிகாரிகள் ஏன் இப்படி
அனுமதி இல்லாமல் கட்டினார்கள் என்று உடனடியாகக் கேட்கக்
கூடாதா, அதைத் தடுத்திருக்கக் கூடாதா அல்லது அவர்கள்
மீது ஏன் நடவடிக்கை எடுக்காமல் விடுகிறார்கள், அனுமதி
இல்லாமல் கட்டுவதால், பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. காற்
றோட்டம் இல்லாமல் இருப்பது, பாதை வசதியில்லாமல்
இருப்பது, இன்னும் பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன.
ஆகவே, நகராட்சியின் முன் அனுமதியில்லாமல் ஏன் கட்டப்
பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த மசோதாவின்,
சம்பந்தப்பட்ட இந்த பில்லின் மூலம் இவைகள் முழுமையையும்
பரிசீலனை செய்து, நியாயமாக, உண்மையிலேயே அனுமதி
பெறுவதில் காலதாமதமானதால் கட்டப்பட்டதா அல்லது
வேண்டுமென்றே வம்புக்காக கட்டப்பட்டதா என்பதைப் பார்ப்ப
தோடு, இனி அப்படி நடக்காமல் இருப்பதற்கு வேண்டிய நட
வடிக்கைகள் என்ன என்பதை எல்லாம் பரிசீலிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு
வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்த அளவிலே முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமாக மாநகராட்சிக்கு உட்பட்ட இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் பற்றியும் அதற்கு நியாயம் செய்ய வேண்டிய அளவிலேயும் அமைச்சர் அவர்களால் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர், அதிகாரிகளைப் பற்றிச் சொன்னார்கள். இதிலே அதிகாரிகள் மட்டுமல்ல ; அரசியல்வாதிகளும் தவறு செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே நாம் இந்த உண்மையை மறுப்பதற்கு இல்லை. எனவே, அமைச்சர் அவர்கள் இதிலே நன்றாக, தீர்க்கமாக சிந்தித்து, செயல்பட வேண்டும். இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதால் மட்டும் பயனில்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது என்பது, அரசியல்வாதிகளுக்காகவோ அல்லது அரசாங்கத்தைச் சார்ந்தவர்களுக்காகவோ அல்லது அரசியல் காரணம் காட்டி எதிரிகள் என்பதற்காகவோ பார்க்காமல், நியாயமான காரியங்களை நாம் செய்ய வேண்டும். தவறானவற்றைப் புறக்கணிப்பது நல்லது. ஆகவே இதிலே அரசியல்வாதிகளுக்கும் பங்கிருக்கிறது ; அதிகாரிகளுக்கும் பங்கிருக்கிறது. இதை நிலை நாட்டுவதற்காகத்தான் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற நியாயத்தை கற்பிக்க வேண்டாம் ; அது நிச்சயமாக இல்லை. செல்வாக்குள்ளவர்களுக்குப் பயன்படுவதற்காக, நம்முடைய அதிகாரிகளிடத்திலே, அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி பின்னால் உத்தரவைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கைக்குப் பயன்படுமானால், அத்தகைய செல்வாக்கிற்கு இது பயன்படுமானால், நிச்சயமாக அது மறுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் சட்டம் கொண்டு வருவதிலே நியாயமில்லை.

முக்கியமாக, பம்பாய் போன்ற நகரத்திலே அத்து மீறி கட்டிடம் கட்டப்படுமானால், தடுக்க கடுமையான சட்டம் அதற்கிருக்கிறது. ஆனால், சென்னையைப் பொறுத்த வரை அப்படி கடுமையாகச் செய்வதற்கு சட்டமில்லை என்று அமைச்சர் அவர்களே என்னிடத்தில் நேரில் பேசும் போது சொன்னார்கள். நான் இதை வரவேற்றாலும், இதைச் செய்கிறபோது ஜாக்கிரதையாக செய்ய வேண்டும். அரசாங்கம் அனுமதி கொடுப்பதற்கு முன்னால், யார் எல்லாம் இப்படிச் செய்தார்கள் என்பதிலே நாம் நியாய உணர்வோடு செயல்படவேண்டும். தங்களுடைய அரசியல் அதிகாரத்தைப் பயன் படுத்தி பெற்றுக் கொள்ளலாம் என்றோ அல்லது அன்பளிப்பு அல்லது லஞ்சம் என்கின்ற பெயராலே கொடுத்தாலும் சரி, இதிலே அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி அல்லது அதிகாரிகளாக இருந்தாலும் சரி, எந்த முறையிலே பயன் படுத்தினார்கள் என்பதை தீர்க்கமாக நாம் விசாரித்து, அதன் மீது நடவடிக்கை எடுப்பது நல்லது. குறிப்பாக, நகரத்திலே பல இடங்களில் ஏழை எளிய மக்கள் வசிக்கின்ற இடங்களிலே சாதாரணமாக ஒரு லே-அவுட் அமைக்கின்ற நிலை வருகின்றபோது, அதிகாரிகள்



மறுக்கின்ற நிலை இருக்கிறது. ஆனால், இதுபோன்ற மிக முக்கியமான, பெரிய சாலைகளிலே, நல்லதொரு இடத்திலே காற்றோட்ட வசதியில்லாமல் அல்லது நல்ல முறையிலே பயன் படுத்த வேண்டுமென்று அரசு நினைத்தாலும், அதை ஒழுங்கு படுத்துவதற்கு முடியவில்லை என்று அமைச்சர் அவர்களே கூறுகிறார்கள். 1920 ஆம் ஆண்டில் கொண்டு வந்த சட்டத்திற்கு பல்வேறு நோக்கத்திற்காக 1971–72 ஆம் ஆண்டிலே பல மாற்றங்கள் கொண்டு வந்திருந்தாலும், அவைகளுக்கு கார்ப்பரேஷனுக்கு பவர் அதிகாரம் கிடைக்கக் கூடிய அளவிற்கு, இந்தச் சட்டத்திலே வழிவகைகள் இருந்தாலும், குறிப்பாக அதிகார துஷ்பிரயோகம் இல்லாமல் இருக்கின்றதா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

வசதி உள்ளவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள், பலம் உள்ளவர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கு அரசாங்கத்தைக் கட்டாயப் படுத்துகின்ற நிலையிலே கூட வருவார்கள் என்ற அச்சம் எனக்குத் தோன்றுகிறது. இந்தக் குறிப்பிட்ட இடங்களிலே அமைச்சரோடு பேசுகின்றபோது பல சங்கடங்கள், அதிகாரிகள் அரசிலே ஆணை பிறப்பிப்பதற்குக் கூட அச்சப்படுகிறார்கள், அவர்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாத அவல நிலை இருக்கிறது என்று கூடச் சொன்னார்கள். ஆகவே, இந்தச் சட்டத்திலே கண்டபடி நாம் முறைப்படி அதிகாரத்தை வாங்குவது மட்டுமல்லாமல், இதன் பயன் உரியவர்களுக்கு உரிய முறையில் எளிய முறையில் கிடைப்பதற்குப் பார்த்துக் கொள்ள வேண்டும், பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வசதியும் வாய்ப்பும் படைத்தவர்களுக்கு உபயோகப்படும் அளவிற்கு இந்தச் சட்டம் வருவதாகச் சந்தேகப்படும் நிலைமைகளுக்கு நாம் இடம் அளித்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத்தில் எங்களுடைய கட்சியின் சார்பிலே அருமைச் சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் எங்களுடைய கருத்தை எடுத்து வைத்தார்கள். அதைத் தொடர்ந்து நானும் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று உங்கள் முன்னால் நிற்கிறேன். கிட்டத்தட்ட பத்து, பதினைந்து நாட்களுக்கு முன்னதாகச் சென்னையிலே எஞ்ஜினியர்கள் அசோசியேஷனிலே ஒரு தீர்மானம் போட்டார்கள். என்ன தீர்மானம் போட்டார்கள் என்றால், சென்னையிலே இருக்கும் கட்டிடங்களில், புதிதாகக் கட்டும் கட்டிடமாக இருந்தாலும் சரி அல்லது இடித்துவிட்டு மீண்டும் கட்டுகின்ற கட்டிடமாக இருந்தாலும் சரி, பாதிக்கு மேற்பட்ட கட்டிடங்கள் கார்ப்பரேஷனுடைய அனுமதியில்லாமலேயே கட்டப்படுகிறது என்று, சாதாரணமானவர்கள் அல்ல, இந்தத் துறையிலே, கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டிலே இருக்கும்

என்ஜினியர்களே, அவர்களுடைய அசோசியேஷனிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இது அரசாங்கம் பரிசீலிக்க வேண்டிய காரியம். முறையற்ற முறையில் கட்டிடங்களைக் கட்டுவதும், நகரத்தின் வளர்ச்சிக்கு, எம்.எம்.டி.ஏ. விதித்துள்ள விதிகளுக்குப் புறம்பாகக் கட்டிடங்கள் கட்டுவதும், நகரத்தின் நிலைமைகளுக்கு ஏற்றதாக அமையாது என்ற கருத்தில் இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன செய்யப் போகிறது ? இவர்கள் இதுவரையிலே கட்டியிருக்கும் கட்டிடங்களை இடிக்க வேண்டுமென்று கூட அருமைச் சகோதரர் சொன்னார். வரைபடம் இல்லாமல், சேங்ஷன் இல்லாமல் கட்டிய கட்டிடங்களை இடிக்கலாம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவரவர்கள் இங்கே சொன்னார்கள். அது எவ்வளவு தீங்காக முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : இடிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை ; பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்றுதான் சொன்னேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி சாதாரணமாக கார்ப்பரேஷனிலேயும், சரி, முனிசிபாலிட்டியிலேயும் சரி, ஒவ்வொரு வீட்டிலும் ரீ-மாடலிங் என்றால், அங்கேயிருக்கும் பில்டிங் இன்ஸ்பெக்டர் வருவார். வெளிப்பக்கத்திலே எந்தவிதமான மாறுதலையும் செய்யாமல், உள் பக்கத்திலேயே சில மாறுதல்களைச் செய்து கொண்டே இருப்போம். அந்த பில்டிங் இன்ஸ்பெக்டர் எழுதி வாங்கிக் கொண்டு போய் விடுவார், ஒரு காகிதத்திலே We are doing only small repairs) என்று, ஏனென்றால், மேலதிகாரிகள் கேட்கும் சமயத்தில் ரிப்பேர் என்று தான் சொன்னார்கள் என்று அவர் தப்பித்துக் கொள்வதற்காக எழுதி வாங்கிக் கொண்டு போய் விடுவார். ஆனால், மேஜர் ரீ-மாடலிங் எல்லாம் நடக்கும். அந்த வரை படத்திற்கு ஒவ்வாத வகையில், சட்டத்திற்குப் புறம்பான வகையிலேகூட நடக்கும். ஆனால், நாம் இவைகளையெல்லாம் ஒரு நிலைப்படுத்த வேண்டும். இம்மாதிரி நடக்க அனுமதிக்கக் கூடாது. அப்படியே கட்டிவிட்டிருந்தாலும் அவைகள் எம்.எம்.டி.ஏ ரூலுக்கு விரோதமாக இருந்தாலும் கூட அவைகளுக்கும் எக்ஸ்செம்ப்ஷன் கொடுத்து, இனிமேல் கட்டக் கூடாது என்ற முறையில், இதுவரையில் கட்டிய கட்டிடங்களை ரெகலைஸ் செய்ய வேண்டும், முறைப்படுத்த வேண்டும், அதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது அவை முன்னால் இருக்கும் பிரச்சினை, ஒரு கிரவுண்டிலே ஒரு கட்டிடம் தான் இருக்க வேண்டும் என்ற நிலையிலே, ஒரு கட்டிடம் தான் இருக்க வேண்டும் என்ற நிலையிலேயிருந்து (குறுக்கீடு) ஒரு சைட்டிலே ஒரு கட்டிடம்



தான் இருக்க வேண்டும், ஒரு பிளாட் தான் இருக்க வேண்டுமென்பதற்குப் பதிலாகப் பல பிளாட்டுகள் அல்லது பல குடியிருப்புகள் கட்டியது சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறது என்று உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து விட்ட காரணத்தினால், அதிலும் கார்ப்பரேஷனிலே இருக்கக் கூடியவர்களே இதற்குச் சொல்லிக் கொடுத்து, இந்த வழக்குக்கு மூல காரணமாக இருக்கின்ற காரணத்தால் இதை ரெகுலரைஸ் செய்ய வேண்டுமென்ற கட்டாயத்திற்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

கார்ப்பரேஷன் அரசாங்கத்தினுடைய ஒரு செயலாற்றக் கூடிய ஒரு பகுதியாகும். அவர்கள் ஒரு திட்டத்தை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தால் அரசாங்கம் உடனடியாக அதற்கு பர்மிஷன் கொடுத்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. எவ்வளவு காலம் அரசாங்கத்திலே அது இருந்ததோ, அதை எதிர்பார்த்து செய்து விட்டிருப்பார்கள், அதை அப்ருவ் செய்வார்கள் என்ற நல்ல எண்ணத்திலே தான் கார்ப்பரேஷன் இந்த வரை படத்திற்கு அனுமதி கொடுத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 1—20)

திரு. ப. நெடுமாறன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், கார்ப்பரேஷன் அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருந்தால் இந்த சிக்கல், வந்திருக்காது என்று — அப்போது எந்த அரசாங்கம் இருந்தது? இது எந்த ஆட்சி காலத்தில் நடந்தது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : : மாண்புமிகு துணைத் தலைவர்அவர்களே, அதை நான் அல்லவா சொல்ல வேண்டும். 1972—75-ல் திராவிட முன்னேற்ற கழகம் தான் ஆட்சியில் இருந்தது. அனுமதி தராதது திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். தருவதில் காலதாமதம் ஆனதும் அந்த அரசு ஆட்சியில் தான். நான் அதைச் சொல்ல விரும்பவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கு எத்தனையோ 'பைல்கள்' வருகின்றன. இது அமைச்சரிடத்தில் போகிற பைலா' என்பது பிரச்சினை. உதாரணமாக நான் சொல்ல வேண்டுமென்றால் அண்ணா சிலைக்குப் பக்கத்திலே பல மாடிக் கட்டிடம் ஒன்றை கார்ப்பரேஷன் இன்ஜினியர்ஸ், ஆட்கள் எல்லாம் வந்து 5-வது மாடி, 6-வது மாடி முதலியவற்றை இடித்தார்கள். ஏனென்றால் அவர்கள் பெர்மிஷன் வாங்கினது 4 மாடி வரை கட்டுவதற்குத் தான். அன்ஆதாரைஸ்ட்டாக 5, 6 என்று கட்டினார்கள். ஆகையால் 'கார்ப்பரேஷன் சிப்பந்திகள் வந்து கடப்பாரையை

வைத்து இடித்தார்கள். ஆனால் அதையே நீங்கள் எல்லோருக்கும் செய்திருக்கிறீர்களா என்றால் இல்லை. எஸ்.ஐ.ஈ.டி. காலேஜ் இருக்கிறதே ....(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப்பற்றியெல்லாம் மானியத்தில் பேசலாம். இது சட்ட முன்வடிவு.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : : துணைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்காகச் சொல்கிறேன். எஸ்.ஐ.ஈ.டி. காலேஜ் பலமாடிக் கட்டிடம் கட்ட பெர்மிஷன் கொடுத்தது யார் ? எப்போது கட்டினார்கள் ? அதை இடித்தார்களா ? உங்கள் ஆட்சி வந்து 2, 3 வருடமாக இருக்கிறது. ஆகவே இதெல்லாம் பிரச்சினை இல்லை. ஆனால் சட்டத்தை மீறுகிறவர்கள் இருந்து கொண்டே இருக்கிறார்கள். உயர் நீதி மன்ற ஜட்ஜாக இருந்து கொண்டு சட்டத்தை மீறிக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய கட்டிடத்தில் கடப்பாரை ஏறியதா ? நடவடிக்கை ய அதிகாரிகள் எடுத்தார்க , ஒன்றும் இல்லை. ரெகுலராக 10 மாடிக் கட்டிடம் இருந்து கொண்டு தானே இருக்கிறது, மவுண்ட் ரோடிலே, தேனாம்பேட்டையிலே, அதை இடித்தார்களா, சட்டத்தை படித்தவர் மீறுகிற போது அந்த சட்டம் தூங்குகிறது. படிக்காதவன் மீறுகிற போது அந்த சட்டம் செயல்படுகிறது. உடனே கட்டிடத்தை இடித்து தரை மட்டம் ஆக்குகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும் என்பது தான் என்னுடைய பிரச்சினையே தவிர வேறு அல்ல. இதற்கு அனுமதி ந டி கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே அதிகமாக எனக்கு வேறுபாடுகள் இல்லை. ஆகவே சட்ட அனுமதியை தாராளமாக நாங்கள் தருகிறோம். எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறி அமர்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிற போது அண்ணா சிலைக்கு அருகே இருந்த கட்டிடத்தை இடித்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது நடந்தது என்ற பொருள்படக் கூறினார்கள். ஆளுநர் அவர்களுடைய ஆட்சி இருக்கிறபோது நடந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சி என்பதில்லை. அது இடிக்கப்பட்டது ஆளுநர் ஆட்சியோ, அ.தி.மு.க. ஆட்சியோ, தி.மு.க. ஆட்சியோ அதை நான் சொல்லவில்லை. மூன் வருடமாக அந்த பில்டிங் இருக்கிறதே, எஸ்.ஐ.ஈ.டி. காலேஜ்....(மணியடிக்கப்பட்டது)





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிற போது, 'லேன்ட் சீலிங் ஆக்ட்டை' பற்றி சொன்னார்கள். நில உச்ச வரம்புச் சட்டம் 3–8–1976-ல் வந்தது. அதற்குப் பின்னர்ல் கொடுக்கப்பட்ட அனுமதிகள் எல்லாம் ஒழுங்காகவும், சீராகவும் தான் கொடுக்கப்பட்டன.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே ......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, உட்கார்ந்து கொண்டு கையைத் தூக்கிப் பேசுவதென்பது சரியா? துணைத்தலைவர் அவர்கள் பேசுங்கள் என்றால் பேச வேண்டும். இங்கு ஒரு பழக்கம் நீங்கள் இப்படி எழுந்து பேசிவிடுகிறீர்கள். அதுவும் இங்கு நடந்து கொண்டு தான் இருக்கிறது. எப்போது பார்த்தாலும் அவர் இதுபோலத் தான் செய்து கொண்டிருக்கிறார். நான் வேண்டுமானால் உட்கார்ந்து கொண்டு விடுகிறேன். என்ன மிஸ்டர் ரகுமான் கான். நீங்கள் எல்லாம் இப்படிச் செய்யலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம். சீக்கிரம் நீங்களே பேசி முடித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தை எல்லோரும் புரிந்து கொள்ளும் அளவிற்கு நான் சொல்லவில்லையே என்று வருத்தப்படுகிறேன். கெதிட்ரல் ஏரியாவிலே, அங்கு பிளானிங் ஸ்கீம், ஒரு 'சைட்' எவ்வளவு பெரியதாக இருந்தாலும் , ஒரு கட்டிடத்திற்கு மேல் கட்டக் கூடாது என்று ஸ்கீம் ஏரியா விதி , நான் சொன்ன தேதி 28–11–1938-ல் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அங்கு இருக்கக் கூடியவர்கள் அதிகமாக வீடுகள் கட்டவேண்டுமெ று மனுக் கொடுத்தார்கள். அது 1972 ஜூன் மாதத்தில் கார்ப்பரேஷன் அரசின் அனுமதிக்கு அனுப்பியது. அரசு அனுமதி வருவதற்கு முன்பே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூறியதைப் போல 'இன் ஆண்டிசிபேஷன் ஆப் சாங்ஷன்' லைசன்ஸ் கொடுத்தாகி விட்டது. பில்டிங் லைசென்ஸ் வாங்கி அவர்கள் கட்டி விட்டார்கள். அரசிடம் இருந்து கார்ப்பரேஷனுக்கும் பதில் போகவில்லை. கார்ப்பரேஷனிலிருந்து அரசாங்கத்திற்கு ஜனவரி 1975 இல் ரிமெய்ன்டர் வருகிறது. ஜூன் 1972 இல் நாங்கள் பெர்மிஷன் கேட்டோமே அது என்ன ஆயிற்று என்று 1975 இல் தான் கேட்டிருக்கிறார்கள். அதற்குள்ளாக எம். எம். டி. ஏ. வந்து விட்டது. உடனே அது எம். எம். டி. ஏ.க்கு அனுப்பப்பட்டது. அங்கே ஜனவரி 1978 இல் பதில் அளித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் ஆர். டி. எல். ஏ. டிபார்ட்மென்டிலே வரவில்லை என்று சொல்கிறார்கள். இதுதான் இருக்கக் கூடிய நிலைமை. யார் யார் குற்றவாளி என்ன நடவடிக்கை எடுப்பது என்பது

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 ஏப்ரல் 4

எல்லாம் வேறு விஷயம். ஆனால் இந்தச் சட்டம் டவுன் அன்ட் கன்ட்ரி பிளானிங் ஆக்ட் அமலுக்கு வந்ததே. 15—8—1974 இல் அதிலிருந்து 1—10—1980 வரைக்கும் டீடெய்ல்டு டெவலப்மென்ட் பிளான் அங்கீகரிக்கப்பட்ட வரையில் இடையிலே உள்ள கட்டடங்கள் கட்டப்பட்டன, கட்டப்படுகின்றன, அரசு அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் 20 ஆம் ஆண்டுச் சட்டம் இருக்கையிலே கொடுத்தாலும் அது செல்லும் என்று இருக்கிறது. ஆனால் அரசாங்க அனுமதி இல்லாமலேயே கட்டி விட்டதால் இன்றைக்குள்ள நிலைமை என்ன என்றால் எல்லா கட்டிடங்களும் கார்ப்பரேஷன் லைசென்ஸ் வாங்கிக் கட்டிக் கொண்டவர்கள், கட்டியவர்கள், கட்டிக் கொண்டிருக்கிறவர்கள், கட்டிடங்களைக் கூட இடிக்க வேண்டி வரும். எனவே தான் 34-ஏ என்ற செக்ஷனைக் கொண்டு வந்து அந்த பீரியடுக்கு கட்டியதை ரேடிபிகேஷன் செய்கிறோம்.

இதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகவே இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன் வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர- நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை 6—4—1981 ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

106. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத்திட்ட (திருத்த) சட்டமுன் வடிவின் நகல்.

107. கீழ்க்காணப்பெறும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் சொத்துக்கள் பற்றிய விவர அறிக்கை (28—8—1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மேலவை உறுப்பினர்களால் ஏற்பளிக்கப்பட்ட தீர்மானத்தை ஒட்டி, பேரவையில் வைக்கப் பெற்றது).

30—6—1979 ஆம் தேதியன்றுள்ளவாறு : திரு. ஜி. சுவாமிநாதன்

31—3—1980 ஆம் தேதியன்றுள்ளவாறு :

1. திரு. டி. சந்தோசம்
2. திரு. ஏ. ஆர். தாமோதரன்
3. திரு. சி. ஆர். இலட்சுமிகாந்தன்

இணைப்பு.

[7-ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 635க்கான விடையைக் காண்க].

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, மரம் நடுவிழா ஆண்டு தோறும் பெருமளவில் கொண்டாடப்பட்டு வருகிறது.

2. 1976 ஆம் ஆண்டிலிருந்து, நகரம் மற்றும் கிராமப் பகுதிகளில் வனவளம் பெருக்கும் வகையில் அரசு மற்றும் தனியார்த் தொழில் நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், முதலான அமைப்புகளில் பெருமளவில் மரநடு விழா கொண்டாட திட்டமிட்டு செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்தில் வெற்றிபெற, வனத்துறை அதிக அளவில் நாற்றங்கால்களை, வைத்து கீழே கண்டுள்ள பல வகையான மரக் கன்றுகளையும் நாற்றுக்களையும் உற்பத்தி செய்து விற்பனைக்கு வழங்குகிறது :

மரம் மற்றும் நாற்று வகைகள்.

| | Popular name. | Botanical name. |
|---|---|---|
| 1. | பலா | (Artocarnus intrgri folia) |
| 2. | மந்தாரை | (Bauninia species) |
| 3. | பெருமூங்கில் | (Bambosa arundinacea) |
| 4. | இலவம் பஞ்சு | (Bombex malaberi-cum) |
| 5. | சவுக்கு | (Casurinra equisetifilia) |
| 6. | கல்மூங்கில் | (Dendrocalamus Stricts (Small Bamboo) |
| 7. | தைலமரம் | (Eucalyptus hybrid) |
| 8. | சில்வர் ஓக் (வெண் தேக்கு) | (Gerevillea robusta) |
| 9 | தேன்மரம்—தேன் பூச்சி மரம் | (Gaauznma tomentosa) |
| 10. | பூ மருது | (Legerstroemia flos reginae) |
| 11. | முருங்கை | (Moringa lindogia) |
| 12. | கடுக்காய் | (Terminalia Chebula) |
| 13. | பைன் | (Pinus patula) |







| | Popular name (1) | Botanical name (2) |
|---|---|---|
| 14. | கொடைவேலன் | (Accacia planifrons) |
| 15. | மலைச்சவுக்கு | (Accia Melanozvlon) |
| 16. | வேம்பு | (Azadirachta Indica) |
| 17. | முந்திரி | (Anacardium occiden-tale) |
| 18. | கருங்கொன்னை | (Cassia marginata) |
| 19. | பப்பையா | (Carica papaya) |
| 20. | குலமொஹர் | (Poinciana regia) |
| 21. | நெல்லி | (Einblica officinalis) |
| 22. | சந்தனம் | (Santalum album) |
| 23. | மாதுளம் | (Punica granatum) |
| 24. | அசோகா | (Polvalthia longifolia) |
| 25. | புளி | (Tamarindus indica) |
| 26. | செம்மரம் | (Pterocarpus Sonatali nes) |
| 27. | மரமல்லி | (Milingitonia horten. sis) |
| 28. | நீலகிரித் தைல மரம் | (Eucalyptus globulus) |
| 29. | தேக்கு | (Tectona grandis) |

மேலே கூறிய திட்டச் செயலாக்கத்தின், சுருக்கத்தை அடியில் கண்ட அட்டவணையில் காணலாம் :

| | பணி (இலட்சத்தில்) | | நிதி (இலட்சம் ரூபாய்கள்.) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1976—77 | 6.00 | 23.00 | 2.30 | 1.98 |
| 1977—78 | 22.60 | 33.15 | 3.92 | 2.67 |
| 1978—79 | 25.00 | 20.19 | 4.25 | 2.08 |
| 1979—80 | 27.50 | 25.16 | 4.075 | 2.51 |

1980–81 ஆம் ஆண்டில், வனத்துறைக்கு நாற்றுக்கள் உற்பத்தி இலக்கு 50 இலட்சத்திற்கு நிர்ணயிக்கப் பெற்றது. இது வரையில், 42.05 இலட்சம் நாற்றுக்களை ரூ. 9 இலட்சம் செலவிட்டு, விற்பனைக்காக உற்பத்தி செய்துள்ளது.

விபரம் பின்வருமாறு

1980–81 ல் நாற்றுக்கள் உற்பத்தி.

| (1) | இலக்கு (இலட்சங்களில்) (2) | விற்பனைக்காக. (இலட்சங்களில்) (3) |
|---|---|---|
| மதுரை .. .. .. .. | 8.00 | 10.90 |
| கோவை முதன்மை வனவிலங்கு வட்டம் | 1.00 | 0.74 |
| ஆராய்ச்சி வட்டம் .. .. .. | 4.00 | 2.96 |
| வேலூர் .. .. .. .. | 7.00 | 8.12 |
| திருநெல்வேலி .. .. .. | 7.00 | 4.81 |
| செயல்திட்டம் .. .. .. | 1.00 | 0.40 |
| கோவை .. .. .. .. | 8.00 | 4.60 |
| திருச்சி .. .. .. .. | 8.00 | 6.90 |

மேலும், தொழிலகங்கள், தொழிற்பேட்டைகள், கல்வி நிலையங்கள், வீட்டு வசதி வாரியம், சென்னை மாநகர் மேம்பாட்டு நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள், மருத்துவமனைகள் முதலியவைகளின் நாற்றுக்கள், தேவையை அதிகரித்துள்ளதால், ரூ. 14.82 இலட்சம் செலவில் 105 இலட்சம் நாற்றுக்களை உற்பத்தி செய்ய அரசிற்கு செயற் குறிப்பு ஒன்றை வனத்துறைத் தலைவர் அளித்துள்ளார். இது, அரசின் பரிசீலனையில் உள்ளது. 1978–79 ஆம் ஆண்டில், விளம்பரப் பலகைகள் (Hoardings) மற்றும் ஒட்டிகள் (stickers) முதலியவைகள் மூலம், மரம் நடுதல் பற்றி விளம்பரம் செய்யப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிலும், இவ்வாறே விளம்பரப் பணிகள் செய்யப்படும். 1980ல், நமது பிரதமர் 'ஒரு குழந்தைக்கு



ஒரு மரம்'' என்ற திட்டத்தினை செயல் படுத்த நம் முதல்வருக்கு கருத்துரை வழங்கியுள்ளார். இத்திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படும் போது, அதற்குத் தேவையான மரக் கன்றுகளையும் நாற்றுக்களையும் வனத்துறை வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

———

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

---

திங்கட்கிழமை, 1981 ஏப்ரல் 6.

பங்குனி 24, ரௌத்திரி — திருவள்ளுவர் ஆண்டு 2012.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.''

ஒரு செயலைக் குறித்து ஆராய்ச்சி செய்வதன் முடிவு, அச் செயலைச் செய்து முடிக்கத் துணிவு கொள்ளுதலே ஆகும். அவ்வாறு செய்வதற்குத் துணிந்த செயலில் காலந்தாழ்ந்து நிற்பது குற்றமாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்,

*உடுக்குறியிட்ட வினாக்கள்.*

மிகப் பின்தங்கியோருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் விகிதாச்சார ஒதுக்கீடு.

*வினா எண் 648—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகப் பின்தங்கியோருக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் ஒதுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ): பிற்பட்ட வகுப்பினருள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும் சேருவதற்குத் தனியாக ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் ஒதுக்கீடு செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1981 ஏப்ரல் 6

திரு என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, மிகப் பின்தங்கியோருக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் ஒதுக்கீடு செய்வதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த விகிதாச்சாரம் எந்த அளவு என்பதை யும் மிகப் பிற்பட்டவர்களில் எந்தெந்த சாதியினர் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார் களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மிகவும் பிற்பட்ட பிரிவினர்களுக்கு தனியாக இட ஒதுக்கீடுகள் செய்யவேண்டும் என்கிற ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. இப்பொழுது பிற்பட்ட வகுப்பினருக்கு எந்தக் கல்லூரிகளிலே சேர்வதாக இருந்தாலும், வேலைகளிலே சேர்வதாக இருந்தாலும் 50 சதவீதம் அவர்களுக்கும், 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கும், மிகுதியுள்ள 32 சதவீதம் எல்லா வகுப் பினருக்கும் சேர்த்துமாக என்று நாம் வைத்திருக்கிறோம். பிற்பட்ட இனத்தினர் மட்டும், இப்பொழுது பிறப்பிக்கப்பட்டி ருக்கிற வகையில், ஒப்புக்கொள்ளப்பட்ட பிரிவுகள் 213 இருக் கின்றன. அதிலே 39 பிரிவுகள் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் என்று நாம் பிரித்து வைத்திருக்கிறோம். வண்ணார், நாவிதர், வலையர், ஒட்டர், மீனவர், வன்னியர், போன்றவர்கள் இந்த 39 பிரிவில் அடங்குகிறார்கள். ஆனால் இவர்களுக்குத் தனி ஒதுக்கீடு செய்வதற்கு இப்பொழுது அரசமைப்புச் சட்டம் இடம் தர வில்லை. அரசியல் சட்டம் 15 (4)வது பிரிவின்படி மிகவும் பிற்பட்ட மக்களுக்கு என்றுதனி ஒதுக்கீடு செய்ய இயலாது என்று சட்ட இலாக்கா ஆலோசனை கூறுகிறது. இப்பொழுது நாம் ஒதுக்கியிருக்கிற அளவிற்கு, ஓரளவிற்கு அதற்குள்ளே பிற்பட்டவர் களுக்கு என்று தனி ஒதுக்கீடு செய்யலாமா என்பது பற்றித்தான் நாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். சட்டத் துறையும் அனுமதித்து, அரசமைப்புச் சட்டத்தினுடைய விதிமுறைகளுக்கு முரண்பாடாக இல்லாமல் இருக்குமேயனால் அதை நடைமுறைப் படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது. இன்னும் பரிசீலனை முடியவில்லை. சட்டத் துறையினுடைய பரிசீலனை முடிந்த தற்குப் பிறகு அதுபற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. கே. குப்புசாமி : தலைவரவர்களே, அரசினுடைய கணிசமான உதவியைப்பெற்று தனியாரால் நடத்தப்படும் தொழிற்சாலைகளில் இது போன்ற தாழ்த்தப்பட்ட பின்தங்கிய மக்களுக்கு ரிசர்வேஷன் முறையை அமல்படுத்த வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா ? மத்திய அரசாங்கத்தால் கட்டுப் படுத்தப்படுகின்ற பப்ளிக் அன்டர்டேக்கிப் கம்பெனிகளிலும் இந்த ரிசர்வேஷன் முறையைப் பின்பற்றுகின்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களை, இப்போழுது இருக்கிற அரசமைப்புச் சட்ட விதி களின்படி நாம் தனியார் நிறுவனங்களைக் கட்டுப்படுத்த அல்லது வற்புறுத்த இயலாது. நம், பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப் பட்ட வகுப்பினர், பொது என்று மூன்றாகப் பிரித்து வைத்திருக் கிறோம். ஆனால், மத்திய அரசானது இரண்டே வகையாகத்தான் பிரித்திருக்கிறது. அவர்கள் பழங்குடியினர்கள், தாழ்த்தப்பட்ட வர்களை என்று மட்டும் குறிப்பிட்டு, மற்றவர்களைப் பொது என்று வைத்திருக்கிறார்கள். நாம் பிற்பட்டவர்கள் என்று கருது கிறவர்களை, பொதுப் பட்டியலில் சேர்க்கிற அளவிற்கு மத்திய அரசு வைத்திருக்கிறது. மத்திய அரசு சார்பான நிறுவனங்களில் அவர்கள் கடைப்பிடிக்கிற விதிமுறைகளின்படி சேர்க்கிறார்கள். மத்திய அரசு சார்பு அல்லாத தனியார் நிறுவனங்களுக்கு சிபாரிசு தான் செய்யமுடியுமே தவிர, வற்புறுத்துகிற அளவுக்குச் சட்டத் தில் வழியில்லை. வற்புறுத்துகிற அளவு மத்திய அரசு சட்டம் கொண்டு வருமானால் அதை நிறைவேற்ற நாம் முற்படலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்ய அரசு ஆலோசிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். அப்படி ஒதுக்குகிறபொழுது, அரசாங்கம் ஏற்கெனவே பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கிய இடங்களிலிருந்து ஒதுக்கப் போகிறார்களா ? அல்லது. பொதுவாக இருக்கிற இடங்களி லேயிருந்து ஒதுக்கி வசதி செய்து தரப்படுமா ? அடுத்து, பொரு ளாதாரத்திலே பின் தங்கியவர்களுக்கும், அல்லது சமுதாயத்தி னுடைய வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும் அப்படி இட ஒதுக்கீடு செய்ய அரசாங்கத்திடம் யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; தலைவர் அவர்களே, அதை இரண்டு விதமாக நீங்கள் கருதவேண்டும். பிற்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதிலே பொருளாதாரத்தைப் பார்த்தால், ஏழ் மைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள், வசதியில்லாதவர்கள் என்று பார்த்தால், அதற்கென்று தனி விழுக்காடுகள் பிரிக்க வேண்டும். ஆனால், பிற்பட்ட வகுப்பினரிலே சமூக அளவிலும் வசதியில்லாது, பொருளாதார அளவிலும் வசதியில்லாதிருக்கும் மிகமிக பின்தங்கியவர்கள் எவ்வளவு என்றும் நாம் கணக்கிட் டிருக்கிறோம். 1975-வது ஆண்டு கணக்கிட்டபடி 53.63 சத விகிதத்தினர் பிற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதிலே மிகவும் பிற்பட்டவர்களாக 22.37 சதவிகிதத்தினர் இருக்கிறார்கள். மற்றவர்கள் 31 சதவிகிதமாக இருக்கிறார்கள். நாம் இந்த பிற்பட்ட வகுப்பினர், மற்றவர்கள் என்ற வகையில் அதற்குள்ளாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றால், கிட்டத்தட்ட

31 சதவிகிதம் மற்றவர்களுக்கென்றும், 23 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கென்றும் பிரிக்க வேண்டியிருக்கும். ஆகவே, மாநில அரசு அதைப்பற்றி எல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. தக்க நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பிறகு அதைப் பற்றி முடிவு தெரியும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு, கல்வி, இவைகளிலே மேலும், மேலும் வசதிகள் சுருங்கி வருவதாலே, தேசத்திலே கொந்தளிப்பான நிலைமை ஏற்படுகிற காலம் இது. அமைச்சர் அவர்கள் பின்தங்கியோருக்கு, கல்வி, வேலை வாய்ப்புகளிலே ஒதுக்கீடு செய்ய அரசு ஆலோசித்து வருவதாகச் சொன்னார்கள். அரசமைப்புச் சட்டம் நமக்கு இடும் கட்டளைப்படி மிகப் பின்தங்கியோராகிய ஆதி திராவிடர்கள், பழங்குடியினருக்கு, ஒதுக்கிய பிறகு, பாக்கியிருக்கும் இடங்களில், பொருளாதார வசதி இல்லாதவர்களுக்கும் ஒதுக்கும் ஆலோசனையை அரசு மேற்கொள்ளுமா? அப்படி அரசு ஆலோசனை மேற்கொள்ளும்போது, முடிவெடுப்பதற்கு முன்னாலே, அனைத்துக் கட்சிகளை அழைத்து கலந்து பேசி ஒரு முடிவெடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிசீலனை எதுவும் அரசினிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 32 சதவிகிதத்திலே அப்படிப்பட்டப் பொருளாதார பாகுபாடு வைத்து, அதே மாதிரி 50 சதவிகிதத்திலே, அப்படிப்பட்ட பொருளாதாரப் பாகுபாடு வைத்து ஒதுக்கப்படுமா என கேட்கிறார். 50 சதவிகிதம் பிற்பட்டவருக்குத்தான் என வைத்து, அதிலே பொருளாதாரப் பாகுபாடு வைத்துச் செய்யலாம். அதே மாதிரி 32 சதவிகிதம் எல்லோருக்கும் என்று வைத்து, பொருளாதாரப் பாகுபாடு வைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று, அனைத்துக் கட்சியினரைக் கூப்பிட்டு, ஒட்டுமொத்தமாக முடிவை எடுக்கலாம். அதற்கான முயற்சியைக் கூட அரசு செய்யும்.

[முற்பகல் 9—10]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்தில் 11 இலட்சத்திற்கு மேல் வேலையில்லாமல் இருக்கக்கூடிய இந்த சிக்கலான நிலைமையில் இட ஒதுக்கீடு மிகமிக முக்கியமானது. பிற்பட்ட வகுப்பினருக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களை அந்த பிற்பட்ட சமூகத்திலேயே பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளோருக்குக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். ஏனென்றால் தற்போது அந்த பிற்பட்ட வகுப்பினரிலே யார் வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறார்களோ



அவர்களே தான் அந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களை ஆக்கிரமித்து வருகின்றனர் என்கிற ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே, மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு நியாயமான முறையில் இடம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதைப் பற்றித்தான் நான் முதலிலே எடுத்துச் சொன்னேன். சட்டநாதன் குழுவினர் கூட இதைப் பற்றி ஆராய்ந்ததில் 213 பிற்பட்ட வகுப்பினர் பிரிவு இருக்கின்றன என்று சொன்னாலும் கூட, அந்தப் பிரிவினருக்கு என்று அந்த இடங்கள் ஒதுக்கப்பட்டாலும் கூட, ஒரு சில குறிப்பிட்ட பிரிவினரே அந்த ஒதுக்கீட்டை முழுமையாக அனுபவிக்கின்றனர் என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அது மிகவும் பிற்பட்ட நிலைமையில் இருப்பவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்கிற நிலைமையும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொருளாதாரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் அந்த ஒதுக்கீட்டை மாற்றி அமைத்தால் நல்லது என்று தெரிவித்ததைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்களும் தெரிவித்தார்கள். அனைத்துக் கட்சியினரையும் அழைத்து அது பற்றிக் கலந்து ஆலோசித்து முடிவு செய்யுமா என்றும் கேட்டார்கள். அதை அரசு பரிசீலிக்கும்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : தலைவர் அவர்களே, பிற்பட்டோருக்கு ஒதுக்கீடு ஒவ்வொரு சமுதாயத்திற்கும் எத்தனை சதவிகிதம் என்று அரசு நிர்ணயித்துள்ளது ? அதனை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சமுதாயம் என்கிற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. பிற்பட்டோருக்கு 50 சதவிகிதம், தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு என்று 18 சதவிகிதம், எல்லோருக்கும் 32 சதவிகிதம் என்கிற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

## நரிக்குறவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான திட்டம்.

*வினா எண். 649— திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் நரிக்குறவர்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) மற்றும் (ஆ) : வடாற்காடு மாவட்டத்தில் உள்ள அரும்பருதி என்னும் கிராமத்தில் வசிக்கும் 70 நரிக்குறவர் குடும்பங்களுக்கு, பாசன கிணறுகள் தோண்டுவதற்கு சென்னை பிற்பட்டோர் நல இயக்குநர் அனுப்பிய கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. அக்குடும்பங்களில் பலவற்றிற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் கருத்து ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. நாராயணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை டவுனில் 50—60 நரிக்குறவர்கள் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்கள் நாடோடிகளாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்காக நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா ? அதாவது, விருத்தாசலம் தொகுதியில் அந்த நரிக்குறவர்களுக்கு என்று ஊர் அமைத்துக் கொடுத்து, அங்கே வீடுகள் கட்டிக்கொடுத்து, நிலங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதைப்போலவே திருவண்ணாமலை நகரத்தில் உள்ள நரிக்குறவர்களுக்கும் செய்துகொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் பரவலாக குறிப்பாக போளூர், திருவண்ணாமலை மற்றும் செங்கம் வட்டங்களில் சுமார் 1,000 நரிக்குறவர்கள் குடும்பங்கள் இருக்கின்றன. அம் மாவட்டத்தில் உள்ள அரும்பருதி என்னும் ஊரில் வசிக்கும் 70 நரிக்குறவர்கள் குடும்பத்திற்கு பாசன கிணறு தோண்டுவதற்கு, சென்னை பிற்பட்டோர் நல இயக்குநர் அனுப்பிய கருத்து ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்ட வினாவிற்கு ஏற்கனவே பதில் அளித்து இருக்கிறேன். நரிக்குறவர்கள் இடம்விட்டு இடம் செல்லும் தன்மை வாய்ந்தவர்கள். அவர்களில் பெரும்பான்மையோர் நிரந்தரமான ஒரு இடத்தில் வசிப்பது இல்லை. அவர்களைப் பிடித்து வைத்து இங்கே வாழுங்கள், வளருங்கள் என்று சொன்னாலும் கேட்கிற நிலைமையில் இல்லாத தன்மையைத்தான் நாம் பார்க்கிறோம்.

வடாற்காடு மாவட்டம், செங்கம் வட்டம் தென்பள்ளிப்பட்டு கிராமத்தில் நரிக்குறவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அந்நிலங்களை அவர்கள் விற்றுவிட்டு, மேற்படி மாவட்டம், திருவண்ணாமலை வட்டம் காரியந்தல் கிராமத்தில் தற்காலிகமாக குடியேறிவிட்டார்கள். செங்கற்பட்டு மாவட்டம் உத்திரமேரூர் வட்டம், ஓலையூர் மற்றும், புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம், இரங்கம்மா சத்திரம் கிராமங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. அவ்வீடுகளில் அவர்கள்





வசிக்காததால் அவை இடிந்து போயின. மதுரை மாவட்டம் விளாத்தூர் கிராமத்தில் தனியார் நிறுவனம் ஒன்று அங்கு வசித்த நரிக்குறவர்கள் வசிக்கக் கட்டிக்கொடுத்த வீடுகளில் அவர்கள் குடியிருக்கவில்லை. ஆகவே தான் அவர்களை ஒரு இடத்தில் நிரந்தரமாக வைத்து, அவர்கள் அங்கேயே தொழில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்பதை அரசு யோசித்து வருகிறது. வீடுகள் கட்டிக் கொடுத்து, நிலம் ஒப்படை செய்தால் மட்டும் போதாது. அவர்களாகவே தொழில் செய்து வாழ்கின்ற அளவிற்கு, அந்த இடத்தை விட்டு நகராமல் அவர்கள் அங்கேயே வாழ்கிற அளவிற்கு என்ன செய்யலாம் என்பது குறித்து அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவரவர்களே, அரும்பருதி என்பது செய்யார் வட்டத்தில் இருக்கிற ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் 70 பாசனக் கிணறுகளுக்கு பம்புசெட் வைக்க நரிக்குறவர்கள் மனு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வசதியைச் செய்து கொடுத்தால், மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல், அவர்கள் அங்கேயிருந்து நகராமல், குடும்பம் நடத்திக்கொண்டு விவசாயம் நிரந்தரமாகச் செய்து வருவார்கள். இப்போதும் விவசாயம் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு பம்புசெட் போன்றவைகளுக்கு மானியங்களும் கடன் வசதியும் செய்துதர அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதைப்போன்று நரிக்குறவர்களை ஒரு பகுதியிலிருந்து நகராமல் இருக்கச்செய்ய, அவர்களுக்கு தொழில் வசதி, மற்ற பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் வேறு என்ன செய்யலாம் என்பதுகுறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது. அங்கே அவர்கள் நிரந்தரமாக இருந்து பணியாற்றும் நிலைமை ஏற்படும்போது பாசனக் கிணறுகள் வெட்டிக் கொடுக்கவும், வீடு கட்டிக்கொடுக்கவும் அரசு முயலலாம். அதுபற்றி பரிசீலனை செய்கிறோம்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி:** தலைவரவர்களே, நரிக்குறவர்களுக்கு கல்வித் துறையிலும் வேலைவாய்ப்பிலும் என்னென்ன சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன? மேலும் நரிக்குறவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்கிறார்கள் என்பதால் இப்போது ஆங்காங்கே சுற்றுலா விடுதிகள் இருப்பதைப்போல அவர்களுக்கும் சுற்றுலா விடுதிகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சுற்றுலா செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் போய் புதிதாக தங்கிப் பார்க்க வேண்டிய நிலைமை இல்லை. நரிக்குறவர்களின் நன்மையைக் கருதி, அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசு அதை பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகவும், அந்தப் பட்டியலை தெளிவாக அமைத்து, திருத்தச் சட்டம் வரும்போது இதையும் கவனிப்பதாக மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அவர்கள் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டால் இன்னும் கூடுதல் வசதிகளை அவர்களுக்கு செய்துகொடுக்க முடியும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, ஊசி, பாசி விற்கின்ற நரிக்குறவர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு தொழில் வசதி அடிப்படையிலே எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி ஒரு நரிக்குறவர் நகரை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதற்கென்று தனியாக ஏற்படுத்த முடியாது. ஆனால் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அவர்கள் தொழில் செய்கின்ற முறையினை ஏற்படுத்தி பணியாற்ற முன்வந்தால், ஒரே இடத்தில் 100, 200 நரிக்குறவர்கள் குடும்பங்கள் தங்கியிருந்து தொழில் செய்கின்ற நிலைமை ஏற்படுமானால் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முயற்சி செய்யலாம். இப்போதும் அரசு அப்படிப்பட்ட செயற்குறிப்பு பற்றிதான் பரிசீலனை செய்துவருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, நம்முடைய நிதி அமைச்சரவர்கள் கூறியதுபோல வடாற்காடு மாவட்டத்திலும் தென்பள்ளப்பட்டி என்ற கிராமத்தில் காங்கிரஸ் ஆட்சியில் நரிக்குறவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டு, கிணறு வெட்டப்பட்டு பள்ளிக்கூடமும் அங்கே கட்டப்பட்டது. ஆனால் அங்கே யாரும் குடியிருக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்யவேண்டுமென்று இங்கே கேட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்வதைவிட அவர்களை நிரந்தரமாக ஒரு இடத்தில் தங்க வைத்து, விவசாய வேலைகள் அல்லது வேறு வேலைகள் கொடுத்து, அந்த இடத்தை விட்டு அவர்கள் வெளியே போகாமல் இருக்கச் செய்ய தனியாக ஒரு திட்டம் தீட்டி, அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அந்தச் சமுதாயத்தைக் காப்பாற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், தலைவரவர்களே, இப்போது ஏற்பட்ட அனுபவத்தை வைத்துதான் சொன்னேன். அவர்களுக்கு உதவிசெய்து, நிலத்தைக் கொடுத்துவிட்டால் மட்டும் அவர்களுடைய வாழ்க்கைக்குப் போதாது. ஆகையால் வேலைகள் கொடுத்து, அவர்களிடம் வேலை வாங்கி, அந்த இடத்தைவிட்டு அவர்கள் நகராமல் இருக்க அரசு ஆராய்ந்து வருகிறது. எங்கெங்கே அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அந்தப் பகுதிகளில் இந்த ஏற்பாடுகளைச் செய்யலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஒகேனக்கல் மின்திட்டம்

*வினா எண். 650—திரு. மு. ப. முனுசாமி: திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் மின்சாரத் திட்டம் பல ஆண்டுகளாக எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதற்கான காரணம் யாது?

(ஆ) இது துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாக இருப்பதாலும் காவிரி நீர் பங்கீட்டுடன் தொடர்பு கொண்டதாக இருப்பதாலும் தாமதமேற்படுகிறது. இத்திட்டத்தை மத்திய அரசின் கீழ் அமைப்பது குறித்து கர்நாடக மாநிலத்துடனும், மத்திய அரசுடனும் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

திரு. மு. ப. முனுசாமி: தலைவரவர்களே, சுமார் 15 ஆண்டுகளாக இந்தத் திட்டம் நிலுவையில் இருக்கிறது. இப்போதுகூட 58 கோடி ரூபாய் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஆண்டாண்டு காலமாக நிலுவையில் இருந்தால் 58 கோடி என்பது 580 கோடி ஆகிவிடும். சர்க்கார் நலனையும், அந்தப் பகுதி பொதுமக்கள் நலனையும் கருதி இதை ஒரு அத்தியாவசியமான முக்கியமானத் திட்டமாக எடுத்து நடத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 6–20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளாக அல்ல. 20 ஆண்டுகளாக இந்தத் திட்டம் காலதாமதமாக இருக்கின்றது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற கர்நாடக அரசும் முன்வரவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆகிவிட்டது என்று சொன்னார்கள், காலம் கடந்து கொண்டே போகிறது ஆனால் இரண்டு அரசுகளுக்கும் மோதல் வராமல் இருக்கவேண்டும் என்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் கர்நாடக அரசு அவர்களுடைய எல்லைகளிலே அவ்வப்போது அணைகளைக் கட்டிக்கொள்கிறார்கள். ஆகவே ஒகேனேக்கல் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது நம்முடைய எல்லைக்குள்ளே இருப்பதால் நாமாகவே ஏன் அணையினைக் கட்டிக்கொள்ளக் கூடாது. மேலும் தண்ணீர் நமது எல்லைக்கு வந்த பிறகுதானே வந்த தண்ணீரைத் தேக்குகின்ற வகையில் கட்ட வேண்டி இருக்கின்றது. எனவே நாமாகவே முன் முயற்சி எடுத்து இதைக் கட்டுகின்ற வகையில் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கர்நாடக அரசை நாம் வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறோம். கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் மார்ச் 80-ல் இந்தத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றலாம் என்பதை கொள்கை அளவில் ஒப்புக் கொண்டார்கள். அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சரும் இதுகுறித்து கடிதம் எழுதினார்கள். அதற்கு கர்நாடக முதல் அமைச்சர் அவர்களும் இப்பொருள் குறித்து விரைவில் எழுதுவதாக கூறினார்கள். ஆனால் ஒன்றும் வரவில்லை. ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்னாலே பத்திரிக்கையிலே பேட்டி பற்றிய ஒரு செய்தி வந்தது. அது உண்மையா என்பது தெரியவில்லை. அதிலே மத்திய அரசு இத்திட்டத்தை நிறைவேற்றுவதை கர்நாடக முதலமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவித்ததாக கருத்து வந்திருக்கின்றது. ஆகவே மார்ச் 80-ல் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இத்திட்டம் மார்ச் 81-ல் கொள்கை அளவில் விடப்பட்டுவிட்டதோ என்று நாம் ஐயுறவேண்டிய நிலை இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்று சொன்னார்கள், எப்படி கர்நாடக அரசு தனது எல்லைக்குள்ளே பல அணைத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்களோ அதேபோல் நாமும் ஏன் நிறைவேற்றக்கூடாது என்று சொன்னார்கள். நாம் அரை மணி நேரம் கூட தாங்க முடியாத அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.





திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, நாம் அரை மணி நேரம் கூடத் தாங்க முடியாத அரசு என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாம் அவ்வளவு பலவீனம் உடையவர்கள் அல்ல. மக்களின் ஆதரவு இருக்கும் வரை அரை மணிநேரம் அல்ல, 50 ஆண்டுகள் வரை கூட நாம் ஆட்சிக்கு வர முடியும். ஆகவே உதுபற்றி நினைக்கவேண்டாம். இபபோது கர்நாடக அரசு மாறி மாறி கருத்து தெரிவிக்கின்ற நிலைமையில் நாமே மத்திய அரசை மீண்டும் வற்புறுத்தி ஏற்பாடு செய்யவேண்டும், 80 மார்ச்சில் கர்நாடக அரசு ஒப்புக்கொண்டது. இப்போது மாறுகின்ற நிலை இருக்கிறது என்றால் நாமே அந்த அணையைக் கட்டிக் கொள்வதற்குரிய வகையில் மத்திய அரசோடு வாதாடி போராடி அனுமதி பெறுவதற்குரிய வகையில் அரசு என்ன முயற்சி எடுக்கும் என்பதைச தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கவேண்டியவர்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். கொடுக்க வேண்டியவர்கள் இன்னும் கொடுக்கவில்லை.

சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 651—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பரிசோதனை தமிழகத்தில் நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில் பரிசோதனையின் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(ஆ) பெல் நிறுவனம் சூரிய வெப்பத்தில் இயங்கும் ஜெனரேட்டர் அமைப்பினை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இத் திட்டம் ஆராய்ச்சி நிலையில் உள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தைத் தயாரித்துப் பயன்படுத்துவதற்கான சாதனங்களையும், கருவிகளையும் மின் வாரியமே, குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க முன்வருமா? அதேபோல் அண்மையில் கட்டப்பட இருக்கின்ற மின் வாரியத்தின் பல மாடிக் கட்டிடத்தின் முழு மின்சாரத் தேவையையும் சூரிய ஒளியின் மூலமே பெறுவதற்குரிய வகையில் பரிசோதனையாக முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, சூரிய வெப்பத்திலே இருந்து மின்சாரம் பெறுவது என்பது ஆய்வுக்கட்டத்திலேதான் இருக்கின்றதே தவிர வணிக ரீதியாக இன்னும் செயல்படவில்லை. மேலும் அண்மையிலே கட்டப்பட இருக்கின்ற மின் வாரியத்தின் பல மாடிக் கட்டிடத்தில் சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்துவதற்குரிய ஒரு திட்டம் இருந்தது. ஆனால் அதற்கு ஏராளமாக செலவு பிடிக்கும் என்று அரசு கருதுகிறது. ஆகவே அதுபற்றி மறுபரிசீலனை செய்து வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறுவது ஆய்விலே இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஜப்பான் நாட்டிலே சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் பெற்று பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஆகவே மின் வாரியம் இதிலே தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் சொன்னது பல இடங்களிலே அது பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டு வருகின்றது என்பதுதான். ஆகவே இது ஜப்பான் நாட்டிலே மட்டுமல்ல. அமெரிக்காவிலேயும் அவ்வாறு சோதனை முறையில் செய்யப்பட்டு வருகின்றது. நம்முடைய நாட்டிலேயும் சூரிய வெப்பத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி நம்முடைய விஞ்ஞானத் தொழில் கூடங்களும் ஆய்ந்து வருகின்றன. ஆகவே இது இயலாது என்பது அல்ல. அதற்கு எவ்வளவு செலவு பிடிக்கும் என்பது தான் பிரச்சினை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் பட்ட மேற் படிப்பு.

*வினா எண். 652—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியப் பட்ட மேற் படிப்பு தரம் குறைந்ததென்று கேரளப் பல்கலைக் கழகம் கூறியுள்ள குற்றச்சாட்டு பற்றி அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேரளப் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 1979-80 பி.எட். பட்டத்தை மீண்டும் அங்கீகரித்துள்ளது என்றும், இந்தப் பட்டத்திற்கு உரிய அங்கீகாரத்தை நிலையாக அளிக்க கேரளப்



பல்கலைக் கழகத்துடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆவன செய்து வருகிறது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியம் பட்ட மேற்படிப்புப் பட்டத்தை, கேரளப் பல்கலைக் கழகம் அங்கீகரித்து இருப்பதைப் பற்றிய தகவலைச் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால் பாட திட்டத்தைப் பொறுத்த அளவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கென வகுக்கப்பெற்ற பாட திட்டத்தையும் கேரளப் பல்கலைக் கழகத்திற்கென வகுக்கப்பெற்ற பாட திட்டத்தையும் ஒப்பு நோக்கியதால், அதிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கென வகுக்கப்பெற்ற பாட திட்டம், பலவற்றாலும், உயர்ந்தது, சிறந்தது என்ற கருத்து அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்னை பாட திட்டத்தினுடைய தரத்தைப் பற்றியது அல்ல. அஞ்சல் வழி கல்வித் திட்டம் என்ற அடிப்படையிலேதான் கேரள பல்கலைக் கழகம் இதை எதிர்த்திருக்கிறது. நாமே கூட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட வேண்டாமென்று கேட்டிருக்கிறோம். ஏனென்றால், பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தவர்கள், அஞ்சல் வழி மூலம் பி.எட். படிக்கக்கூடிய ஒரு திட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வைத்திருந்தது. அது அவ்வளவு நல்லதல்ல. தொழில் நுட்பக் கல்வி போன்றவைகள் எல்லாம், சேர்ந்து படித்து அனுபவத்தினால் தெரிந்து கொள்ள வேண்டியவைகள். எனவே அஞ்சல் வழி கல்வி முறை இவைகளுக்குச் சிறந்தது அல்ல என்று நாமே கூட அதை எதிர்த்திருக்கிறோம். இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதனைத் திருத்திக் கொண்டிருக்கிறது. பணியில் வேலை செய்து கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு மட்டுமே இந்த அஞ்சல் வழி தற்போது அனுமதிக்கப்படுகிறது.

ஆகவே, பிரச்சனை தரத்தைப் பற்றியது அல்ல. யாருக்கு அந்தக் கல்வி அளிக்கப்படுகிறது என்பதைப் பற்றியதேயாகும். அதன் அடிப்படையில் தான் கேரளப் பல்கலைக் கழகமும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. நாமும் கிட்டத்தட்ட அதையேதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வற்புறுத்திச் சொல்லியிருந்தோம். இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அந்தப் பாட அமைப்பில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு மட்டும் என்ற வகையில் திருத்தம் கொண்டுவந்ததால், கேரளப் பல்கலைக் கழகமும் அதை மீண்டும் அங்கீகரித்துள்ளது.

[1981 ஏப்ரல் 6

பல் தொழில் பயிற்சி பயிலகங்கள் அமைத்தல்.

*வினா எண் 653—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிதாக ஐந்து பாலிடெக்னிக்குகள் துவக்கலாமென்று தொழில் நுட்பக் கல்வி வாரியம் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் பெண்களுக்கென ஒரு பாலிடெக்னிக் துவக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): 28—11—1980 அன்று நடந்த மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரிய கூட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பல்தொழில் பயிற்சி பயிலகங்கள் அமைக்க கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது :

(1) பட்டுக்கோட்டை : அரசினர் பாலிடெக்னிக்.

(2) திருச்சி: திரு. நாராயணசாமி அய்யர் அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.

(3) கோவை குன்னியமுத்தூர்: வி. எல். வி. நாயுடு அறக்கட்டளை பாலிடெக்னிக்.

(4) சேலம்: திரு. சௌடேஸ்வரி மகாஜன அறக்கட்டளை மகளிர் பாலிடெக்னிக்.

(5) சேலம் குமாரபாளையம்: ஜே. கே. ரங்கம்மாள் அறக்கட்டளை பாலிடெக்னிக்.

(6) மதுரை சுலைமான்; ருக்மணி அறக்கட்டளை பாலிடெக்னிக்.

(இ) இல்லை.



1981 ஏப்ரல் 6]

மாவட்டத் தலைமையிடங்களில் பெண்களுக்கான தனி தொழிற் பயிற்சி பயிலகங்கள்.

வினா எண் 654—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டத் தலைமை இடங்களில் பெண்களுக்கென தனி பாலிடெக்னிக்குகள் ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :—(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, 5 பாலிடெக்னிக்குகளுக்குப் பதிலாக 6 ஆரம்பிக்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெண்களைப் பொறுத்த வரையில் எந்தவிதத் தொழில் நுட்பக் கல்விக்கும் வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே, இதையே ஒரு கோரிக்கையா ஏற்றுக்கொண்டு பாலிடெக்னிக்குகளை அந்த மாவட்டங்களில் ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நிறுவனங்கள் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளை, தொழில் நுட்பக் கல்வி சம்பந்தப்பட்ட வாரியம் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, அவைகளை அரசு சார்பாகத் தொடங்கப் போகிறோம் என்ற அடிப்படையில் சொல்லவில்லை.

அதற்கு அடுத்து அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டையில் ஒன்றும், நீலகிரியில் ஒன்றும் ஆக இரண்டு பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதாக இருக்கிறோம். அதற்குப் பிறகுதான், அரசுத் துறையில் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க வேறு எந்த இடத்திலே ஆரம்பிப்பதாக இருந்தாலும் அதைப் பற்றிய ஆலோசனை எடுக்கவிருக்கிறோம். ஏனென்றால் அந்த இரண்டு மாவட்டங்களிலும் ஒரு பாலிடெக்னிக்குகள் கூட இல்லை என்ற காரணத்தால் அரசு அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

[1981 ஏப்ரல் 6

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு மறுமுறையும் நினைவூட்டுகிறேன். திருநெல்வேலி மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் எந்தவித பாலிடெக்னிக்குகளும் பெண்களுக்கென்று இல்லை. இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, சங்கர் பாலிடெக்னிக் என்று ஆண்களுக்கு மட்டுமே ஒன்றுதான் இருக்கிறது. பெண்களுக்குகென்று எந்த வித வழியும் இல்லை. ஆகவே அரசின் முயற்சியிலோ, அல்லது தனியார்களின் முயற்சியிலோ, எந்த வகையிலாவது பெண்களுக்கென்று தனியார் பாலிடெக்னிக்கை அந்த மாவட்டங்களில் ஏற்படுத்த அரசு முயற்சிசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில், தொழில் நுட்பக் கல்வி, தொழிற்கல்வி போன்றவைகள் பரவலாக மாணவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதன் விளைவாக இன்று கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பல மாறுதல்களை அனைவரும் அறிவார்கள். சென்ற ஆண்டு இதுவரையில், இல்லாத வகையில், 5 பாலிடெக்னிக்குகளை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. சாதாரணமான கலைக் கல்லூரி பட்டங்களைத் தருவதினால் மாணவர்களுக்கும் நாட்டிற்கும் பயன் இல்லை என்ற காரணத்தினால்தான், தொழில் கல்வியை வளர்க்க அரசாங்கம் பெரு முயற்சி செய்து கொண்டு வருகிறது. இந்தப் பாலிடெக்னிக்குகளைப் பொறுத்த மட்டில் தனியார் நிறுவனங்கள் முன் வந்தாலும் அதை நாங்கள் பரிசீலிக்கிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாவட்டங்களிலிருந்து வருமேயானால் அவர்களுடைய கோரிக்கைகள் முறையாகப் பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 9-30]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : நமது அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து பல பாலிடெக்னிக்குகள் பெண்களுக்காக அமைத்திருப்பதாக அறிவித்தார்கள். இருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் பி.ஏ., எம்.ஏ., படித்து விட்டு பி.யு.சி., எஸ்.எஸ்.எல்.சி., படித்துவிட்டு நல்ல மார்க்கு வாங்கியிருக்கக் கூடிய பெண்கள் கூட வேலையில்லாமல், ஒரு தொழிலும் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு, வாழ்க்கை நடத்த முடியாது தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பெண்களுக்குத் தனியாக பால்டெக்னிக்குகள் ஆரம்பிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு அளிக்கலாம் என்பது பற்றியும் ஆராய்ந்து ஒரு புதிய முறையை அரசாங்கம் உருவாக்குமா?



1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெண்களுக்கு தொழில் நுட்பக் கல்வி தரவேண்டும் என்பதை அரசு ஏற்றுக்கொண்டிருப்பதன் விளைவாகத்தான் நாகப்பட்டிணத்தில் இருக்கிற பாலிடெக்னிக்கில் தனியாகப் பெண்களுக்கு ஒரு விங் ஆரம்பித்திருக்கிறோம், தூத்துக்குடியிலும் தனியாக ஒரு விங் ஆரம்பித்திருக்கிறோம். தஞ்சையில் தனியாக மகளிர் பாலிடெக்னிக் சென்ற ஆண்டு ஆரம்பித்திருக்கிறோம். கோவையில் பெரியநாயக்கன் பாளையத்தில் பெண்களுக்கு ஒரு பாலிடெக்னிக் ஆரம்பித்திருக்கிறோம். ஆரம்பிக்கப்பட்ட பாலிடெக்னிக்கில் பெண்கள் சேர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகிறோம். பயன் உள்ள கல்வியைத் தருவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை தொடர்ந்து எடுக்கும்.

திரு. சு. பாலசுப்பிரமணியன் : அமைச்சரவர்களின் பதிலில் தமிழ்நாட்டில் புதிதாக நிறுவப்படுகிற தொழில் நுட்பக் கல்லூரிகள் அறக்கட்டளைகள் மூலம் நிறுவப்படுகின்றன என்று அறிவித்தார்கள். ஏற்கனவே தனியார் நிறுவியிருக்கிற அறக்கட்டளைகள் மூலம் செயல்படுகிற இந்தத் தொழில் நுட்பக் கல்லூரிகள் சரிவர இயங்கவில்லை அவை இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கின்றன. அரசாங்கமும் தன்னிச்சையாக செயல்படமுடியாமல் தனியாரும் தன்னிச்சையாக செயல்படமுடியாமல் மந்த நிலையில் இருக்கின்றன. ஆகவே அரசு துரித நடவடிக்கைகள் எடுத்து அரசே ஏற்று நடத்தவோ அல்லது தனியாரிடத்தில் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் துண்டித்துக்கொள்ளவோ தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீர்காழியில் இருக்கிற பாலிடெக்னிக்கை மனதில் வைத்துக்கொண்டு தமிழ்நாடு பூராவும் அப்படி இருப்பதுபோல் ஒரு உணர்வை வைத்துக்கொண்டு கேள்வி கேட்டிருக்கிறார்கள். தனியார் நிறுவனங்கள் என்று வருகிறபோது பாலிடெக்னிக்ஸ், என்ஜினீயரிங் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் அவை ஏறக்குறைய அரசாங்கக் கட்டுப்பாட்டுடன், நம் கொள்கைப்படி, கவர்னிங் கவுன்சில் என்று வைத்துக் கொண்டு அதிலே அரசாங்கப் பிரதிநிதியை வைத்துக்கொண்டு அந்த கவர்னிங் கவுன்சில்தான் அந்த நிறுவனத்தை நிர்வகிக்கக் கூடியது. மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதாக இருந்தாலும் கூட என்ஜினியரிங் கல்லூரியைப் பொறுத்தவரையில் 100 க்கு 100 நாமேதான் செலக்ட் செய்கிறோம். அவர்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. கோடிக்கணக்கான ரூபாய் போட்டிருக்கிற அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பக் குழந்தைகளுக்கும் கூட ஒரு ஸீட் கொடுக்க முடியாது. ஆனால் பாலிடெக்னிக்குகளைப் பொறுத்தவரையில் 10 சதவிதம்

அவர்களுக்காகத் தந்திருக்கிறோம். 90 சதவீதம் நம்முடைய கொள்கை அடிப்படையில்தான் அங்கே அனுமதி அளிக்கப் படுகிறது. ஆகவே ஏறக்குறைய இவைகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய பெருமளவு கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகின்றன. சீர்காழி பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையில் அதன் பிரச்சினையை அரசு தனியாகக் கவனித்து அதற்கான தீர்வை காணும்.

திரு. இரா. கருப்பையா : திருச்சியில் பெண்களுக்கென பாலிடெக்னிக்கில் ஒரு தனிப்பிரிவு இந்த ஆண்டு ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அது குறித்து ஆராய்வோம்.

### திருநெல்வேலி-பாபநாசம் மின் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை.

*வினா எண் 655—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட பாபநாசம் லோயர் கேம்பில் இருக்கும் மின்தொழிலாளர்களுக்காக நடைபெறும் கூட்டுறவு பண்டகசாலையில் சுமார் ரூ. 32 ஆயிரத்துக்கு மேல் கையாடல் நடைபெற்றுள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) பண்டகசாலையில் 1977–78-ல் ரூ. 1202.41-ம், 1978–79-ல் ரூ. 3533.53-ம் ஆக மொத்தம் ரூ. 4735.94 கையாடல் செய்யப்பட்டிருப்பதாகக் கூட்டுறவுச் சட்டப்பிரிவு 65-ன் கீழ் நடந்த விசாரணையின் போது தெரியவந்தது.

(ஆ) பண்டகசாலையின் கணக்கர் திரு. பி. ஆவுடையப்பன் என்பவரும், பாபநாசம் மின் திட்ட கோட்டப் பொறியாளர் அலுவலக காசாளர் திரு. கே. கணபதி என்பவரும் இக் கையாடலில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும், கடன் விற்பனை தொகை வசூலை முழுவதுமாக பண்டகசாலைக் கணக்கில் வரவு வைக்காது, கையாடல் செய்திருப்பதாகவும் விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார்.



(இ) பண்டகசாலைச் செயலாளரின் முறையீடு தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்களின் கோரிக்கை மற்றும் மாவட்ட கூட்டுறவு தனி அலுவலரின் சிறப்பு அறிக்கையின் பேரில் இது விஷயமாக கூட்டுறவுச் சட்டப்பிரிவு 65-ன் கீழ் விசாரணைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு சிறப்பு விசாரணைக் குழுவால் விசாரணை செய்யப்பட்டு, விசாரணை அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் வித்தியாசமே தவிர, கையாடல் ஏற்பட்டிருக்கின்றது என்பது உண்மை. தொழிலாளர்கள் சம்பளத்திலிருந்து பிடிக்கப்பட்ட பணம் சரிவர கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. அதன்காரணமாக, அவர்கள் சரியான முறையிலே சாமான்கள் வாங்கமுடியாமல், இன்னும் பல குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், அந்த கூட்டுறவுக்கு மின்சார வாரியத்தினுடைய ஒரு என்ஜினியர்தான் தலைவர். அவருக்கும் இதிலே உடன்பாடு இருப்பதாக குற்றச்சாட்டிருப்பதாக எனக்குத் தகவல், அந்த என்ஜினியர் இதிலே உடன்பட்டுள்ளாரா? அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திட்ட வட்டாரப் பொறியாளர் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதற்கு ஆதாரம் கிட்டவில்லை. ஆனால், மின்சார வாரியத்தினுடைய காசாளர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று தெரிய வந்தது. அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் கையாடல் சம்பந்தமாக 65-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, இதில் அவர்மீது, பணம் வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதோடு அவர்மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 ஏப்ரல் 6

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி 65-வது விதியின்படி என்கொயரி நடந்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணம் வசூலிப்பதுடன், கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆழ்துளை கிணறுகள் வெட்டக் கடன்.

வினா எண் 656—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் விவசாயத்திற்கென விவசாயிகளுக்கு போர்வெல் போடுவதற்கு நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்சமயம் ஏதுமில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயம் ஏதுமில்லை என்று சொன்னார்கள். ஆனால், இன்றைய நிலையில் அந்தப் பகுதி கடுமையான வறட்சியாலும், பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஜனங்கள் அத்தனைபேரும் வெளியே சென்று கொண்டிருக்கிறார்கள் அந்தச் சூழ்நிலையில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலையில், அந்தப் பகுதியில் போர்வெல் போட்டு, அதன் மூலமாக விவசாயத்திற்கும் குடிப்பதற்கு குடிநீரும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிணறுகளைத் தோண்டுதல், இருக்கின்ற கிணறுகளை ஆழப் படுத்துதல், விசையேற்றுதல் போன்ற பணிகளுக்கு தாராளமாக நிதி உதவி தந்து, அப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. துளைக் கிணறுகளைப் பொறுத்தவரை சற்று பிரச்சினை இருக்கிறது.



1981 ஏப்ரல் 6]

அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் 35 அடிக்கு மேல் துளைக் கிணறு போட்டு தண்ணீர் எடுக்கும்போது, உப்புத் தண்ணீர்தான் வருகிறது என்ற காரணத்தினால், அது விவசாயத்திற்கு உதவியாக இராது. அந்தக் காரணத்தினால் துளைக் கிணறு போடும் வேலை மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் சில பகுதிகளில் வாங்கிய கடனையே திருப்பித் கொடுக்காத நிலை; கிட்டத்தட்ட 97 சதவீதம் நிலுவை இருப்பதன் காரணமாக, ரிசர்வ் வங்கியின் வரையறையை மீறிவிட்ட காரணத்தினால் மீண்டும் கடன் கொடுக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆனாலும் வறட்சிப் பகுதி என்பதற்காக, இதையெல்லாம் தளர்த்தி அரசே அட்வான்ஸ் கொடுத்து கிணறுகளைத் தோண்டுவதற்கு உத்தரவு போட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நேற்றல்ல; கிழக்கு இராமநாதபுரம் கிட்டத்தட்ட 72 லேஇருந்து தொடர்ச்சியாக இயற்கையின் சீற்றதால் பாதிக்கப்பட்டதன் காரணமாக, ஜனங்கள், மட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய வங்கிகளும் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் இருக்கிறது. இன்றைய சூழ்நிலையை கணக்கில் கொண்டு, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு லோன் கொடுத்து, உடனடியாக போர் வெல் போடும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்தப் பகுதிகள் முழுமையுமே ஏரியா சர்வே செய்யவேண்டும். நிலத்திற்கு அடியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 30 அடிக்கு கீழே தண்ணீர் எடுத்தால், உப்புத் தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள். ஆனால், அதற்கும் கீழே 1,000 அடி தோண்டினால், நல்ல தண்ணீர் வருகிறது என்று, பல இடங்களில் தெரிய வந்திருக்கிறது. ஆகவே, தற்சமயத்தில் இந்த அடிப்படையில் 1,00 அடிக்கு கீழே தண்ணீர் எடுக்க போர் வெல் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலம் விவசாயிகளுக்குக் கடனுதவி தந்து, துளைக் கிணறுகள் போடுவதற்கு

[1981 ஏப்ரல் 6

கிரவுண்ட் வாட்டர் செல்லை கூட்டுறவுத் துறை கேட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்கு கீழே சென்று விட்டால், நல்ல தண்ணீர் கிடைக்கின்றது என்ற ஒரு கருத்து இருக்கின்றது. கிரவுண்ட் வாட்டர் செல் அதை ஆய்ந்து வருகிறது. அந்த ஆய்வின் முடிவின் அடிப்படையிலே, நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 9-40]

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பொழுது கடன்களை சற்றுத் தளர்த்தி இருப்பதாக சொல்கிறார்கள். கூட்டுறவு வங்கிகளில் கடன் கொடுக்கப்பட்டு, கிணறுகள் தோண்டப்பட்டு தண்ணீர் வராத சூழ்நிலை. விவசாயமும் செய்யமுடியவில்லை, கடனையும் திருப்பித் தர முடியவில்லை. ஆகவே இம்மாதிரியான நிலைமையில் உள்ள கடனை ரத்து செய்ய அரசாங்கம் பரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறு தோண்ட நிலவள வங்கி மூலம் கடன் பெற்று, கிணறு தோண்டி தண்ணீர் வராமல் இருந்துவிடுமேயானால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல், அதிகப்படியான பணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, அது நடைமுறையில் இருக்கின்றது. வேறு எங்காவது இதுபோன்ற பிரச்சினை இருக்குமானால், அது அரசாங்கத்திற்கு தெரிய வந்தால் இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 97 விழுக்காடு இந்தக் கடன்கள் திரும்ப வருவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். சில நேரங்களில் கடனைப் பெறுவதற்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகுந்த சிரமம் இருக்கிறது. அப்படி சிரமப்பட்டு பெற்றாலும் கடன் முழுமையாக வருவதில்லை. முழுமையாகப்



1981 ஏப்ரல் 6]

பெறுகின்ற பணத்தை கிணறு வெட்ட பயன்படுத்துவதில்லை. அப்படி முழுமையாகப் பயன்படுத்தினாலும் தண்ணீர் வருவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அரசே கிணற்றை வெட்டிக் கொடுத்து தவணை முறையில் விவசாயீகளிடம் பணத்தை அரசு பெற்றுக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனத் துறையின் கீழ் ட்யூப்வெல் கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பினை நிறுவி, அதன் மூலம் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளின் இன்னல்களைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கழிவுப் பஞ்சுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச கூலி.

*வினா எண். 657—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள 150-க்கு மேற்பட்ட வேஸ்ட் காட்டன் மில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ)-(இ) தமிழகத்தில் உள்ள வேஸ்ட் காட்டன் மில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 5-4-1969 முதல் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறைந்த பட்ச ஊதிய விகிதத்தை திருத்தி அமைப்பதற்காக அரசுக்கு ஆலோசனை வழங்க 1977-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. கழிவுப் பஞ்சுத்

தொழில் சார்பாக இக்குழுவில் உறுப்பினர்கள் இல்லையாதலால் இத்தொழில் சார்பாக தொழிலாள தொழிலதிபர்சார்பாக மேலும் ஒவ்வொரு உறுப்பினரை நியமிப்பதுபற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில்இருந்தது. எனவே இக்குழு தனது கூட்டத்தை 24-5-1977 நடத்தி விட்டு, கூடுதல் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பிறகு கூட்டத்தை மேலும் நடத்தலாம் என முடிவு செய்தது. கூடுதல் உறுப்பினர்களை நியமித்து 8—4—1980-ல் ஆணை வெளியிடப் பட்டது. ஆனால் இந்தக் குழுவில் தொழிலாளர் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட திரு பாலன் என்பவர் இறந்து விட்டதால் அவருக்குப் பதிலாக கோவை மாவட்ட ஆலைத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எம். நஞ்சப்பன் என்பவர் இக் குழுவில் மாற்று உறுப்பினராக, 18—2—1981-ல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். குழுவின் பரிந்துரைகளை திரு. நஞ்சப்பன் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதத்தில் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் வந்த பின்பு அதனை ஆராய்ந்து குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள் விரைவில் திருத்தியமைக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மில்களுக்கு ' வேஸ்ட் காட்டன் மில்கள் ' என்ற பெயர் வைத்திருப்பதே ' மிஸ் நாமாராக ' இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார் என்று நினைக்கிறேன். உண்மையிலே இதிலே உபயோகப்படுத்துவது வேஸ்ட் காட்டன் அல்ல ; நல்ல பஞ்சினை உபயோகப்படுத்தி 60 கவுண்ட், 40 கவுண்ட், 80 கவுண்ட் என்று நூல்களை நெய் கிறார்கள். பெரிய மில்கள் அவற்றை வாங்கி அவர்களின் ' பிராண்டை ' போடுகிறார்கள். ஆகவே பஞ்சாலைதொழி லாளர்களுடைய ஊதியத்தை, அந்த 'ஸ்டாண்டர்டை' பிரேக் பண்ணுவதற்கு முதலாளிகள் அப்படி ஒரு தந்திரம் பின்பற்றுவதன லே அந்த ' லெவலில் ' இவர்களுக்கு அந்த நூலுக்கு உற்பத்தி கொடுப்பதற்கு இந்த பிரத்யேக நிலைமையை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு பரிந்துரை, இந்த கமிட்டி புரொசீடிங்ஸ் முன்னாலே அவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே யோசனை கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே, தமிழகத்தில் உள்ள 150-க்கு மேற்பட்ட வேஸ்ட் காட்டன் மில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்வது குறித்துத் தான். வேஸ்ட் காட்டன் மில்லைப் பற்றியது தான்.

திரு. ரா. உமாநாத் : வேஸ்ட் காட்டன் மில் என்று தான் கேள்வி போட்டேன்; ஆனால்...



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேஸ்ட் காட்டன் மில் என்று சொல்கிறார்களே, ஆனால் அவைகளிலே புதிதாக பஞ்சை வாங்கி உற்பத்தி செய்கிறார்களே, அது ஏன் என்று தான் கேட்டார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதைத் தனியாக இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டும், அதற்குக் கேள்வி தனியாகப் போட வேண்டும். இந்தக் கேள்வியிலே வேஸ்ட் காட்டன் மில்லிலே வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் பற்றித்தான் கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : இன்வெஸ்டிகேஷன் பற்றிய பிரச்சினையல்ல.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போட வேண்டும் என்று சொல்லி விட்டார்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, நான் கேட்க இருந்த துணை வினாவை தோழர் உமாநாத் அவர்கள் கேட்டுவிட்டார்கள், இருந்தாலும் ஒன்றிரண்டு கருத்துக்களை பற்றி கேட்க விரும்புகிறேன். வேஸ்ட் காட்டன் என்ற பெயரை வைத்துக் கொண்டு அங்கே அதிகம் உயர்ந்த ரக நூலைத்தான் உற்பத்தி செய்கிறார்கள். தொழிலாளர்களுக்குரிய ஊதியத்தைக் கொடுக்காமல் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய பணத்தை முறையாகக் கொடுக்காமல் ஏமாற்றுகிற நிலைமை இருக்கிறது, அதை முறையாகப் பரிசீலனை செய்து அந்த மில்களுக்கு அதிகாரிகளை அனுப்பி அங்கே வேஸ்ட் காட்டன் உண்மையிலேயே உற்பத்தி செய்கிறார்களா என்பதைப் பார்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் இருக்குமானால் அதைப் பற்றி பரிசிலனை செய்யலாம். தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் குடிநீர் வசதியினை அதிகப்படுத்தும் திட்டம்.

*வினா என். 658—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் குடிநீர் வசதியை அதிகப்படுத்தி தரும் செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1981 ஏப்ரல் 6

(ஆ) ஆம், எனில் மேற்படி செயற் குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சென்னை நகருக்கு காவேரி ஆற்றினின்று குடி நீரைக் கொண்டு வருவதற்கு ரூ. 459 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள ' காவேரி குடிநீர் கால்வாய்திட்டம் ' பற்றிய அறிக்கைகள் உலக வங்கியினை அணுகி நிதி உதவி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இத் திட்டம் ஐந்தாண்டு களில் நிறைவேற்றப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, தனி நபர் தேவையைப் பூர்த்தி செய்ய இந்த குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளதா ? புதிதாக அமைந்திருக் கின்ற நகரப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் பொருந்துமா? ரெட்ஹில்ஸிலே உள்ள நீர் போதுமானதாக இருக்கிறதா? கடலோரப் பகுதிகளிலே ஆழ் கிணறுகள் தோண்டுவதற்கு அரசு முயற்சிகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தைப் பற்றி சட்டமன்றத்திலே உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற திலே அறிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் சி.ஐ. பைப்புகள் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறதே, இந்தத் திட்டத்திற்காக அந்த பைப்பு கள் இருப்பு இருக்கிறதா? அல்லது அரசு வேறு ஏதேனும் முயற்சி செய்துள்ளதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாக் கட்சிக் தலைவர் களோடும் கலந்து பேசி முடிவு எடுத்த பிறகு தான் பைப் விஷயமே வரும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்னை மாநகராட்சியில் குடிநீர் வசதியை அதிகப் படுத்தித் தரும் செயற் குறிப்பு பற்றியதாக இருக்கிறது. ஏற் கெனவே அதிகப்படுத்தாமல் கொடுக்கப்படுகிற அளவு மிகக் குறைவாக இருக்கிறது, கடந்த பத்து நாட்களாக சென்னையில் பல்வேறு இடங்களிலே சைதாப்பேட்டையிலே அறவே குடிநீர் வரவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதற்கு மாற்றுத் திட்டங்கள் கொண்டுவர அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?



1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, சைதாப்பேட்டை பிரச்சினை பற்றி எனக்குத் தெரியாது. யாரும் என்னிடத்திலே முறையீடு செய்யவில்லை.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, நிரந் தரத் திட்டமாக ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக குடிநீர்கொண்டு வரப்படுகிற திட்டத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். சென்னை மாநகராட்சியோடு 1978-ஆம் ஆண்டிலே இணைக்கப்பட்ட பகுதிகள், இன்றைக்கு மாநகராட்சியின் எல்லை யிலே உள்ள அந்தப் பகுதிகளுக்கு குடிநீர் இல்லாமல் மக்கள் அல்லலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். வில்லிவாக்கம் 32, 33 வட்டங்களிலும், விருகம்பாக்கம் 76-வது வட்டத்திலேயும் தாய்மார்கள் குடிநீர் பிரச்சினையால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளார்கள் தற்காலிகத் திட்டமாக அரசின் பரிசிலனையில் வேறு ஏதாவதுதிட்டம் இருக்கிறதா அல்லது இருக்கின்ற தண் ணீர்த் தொட்டிகளை அதிகமாக வைப்பதன் மூலமாக இந்தக் குறை தற்காலிகமாகத் தீர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பது சென்னை பகுதியிலுள்ள 150 டிவிஷன்களுக்கும்தான். வில்லி வாக்கம் பகுதிக்கு தனியாக இடைக் காலத்தில் தண் ணீர் கொடுக்க வேண்டுமா என்பதைப்பற்றிப் பரிசிலனை செய்யப் படுகிறது.

திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பில் கேட்கும் கேள்விகள் சென்னை மாநகராட்சி சென்னைக்குக் குடிநீர் தருவது என்பதைப்பற்றி நான் அறிந்தவரையில் சென்னை மாநகராட்சி குடிநீர் வசதி செய்து தரவில்லை என்றுதான் கருதுகிறேன் போர்டு நியமிக்கப் பட்டு, அந்த போர்டு வழங்குவதாக அறிகிறேன். ஆகவே, அந்த போர்டு சென்னைவாழ் மக்களுக்குக் குடிநீர் தருவதற்குப் போது மான சேவையில் ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, கேள்வி சென்னை மாநகராட்சியில் குடிநீர் வசதி என்பது சென்னை மாநகராட்சி எல்லைக்குள் என்று பொருள் படுகிறது என்று கருதித்தான் பதில் தரப்பட்டது. ஏற்கனவே சொன்னதைப்போல் திட்டத்தைத் தயார் செய்திருக்கிறோம். முதல்வரவர்கள் சொல்லியிருப்பதைப்போல் இங்கேயுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களோடும் கலந்து பேசி இறுதி முடிவெடுக்க வேண்டும். இறுதி முடிவெடுக்கப்பட்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது குடிநீர் வசதித் திட்டம் என்று மட்டும் சொன்னார்கள். 1978ஆம் ஆண்டு பல்வேறு பஞ்சாயத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாட்டர் போர்டு என்று அமைக்கப்பட்டும், கார்ப்பரேஷன் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது, யார் கொடுப்பது, யார் பெரியவர் என்ற போட்டா போட்டி நிலைமை இருக்கிறது. இதனால் மிகுந்த தண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்கும் தெரியும். எம். எம். டி. ஏ.விலும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, எல்லா அமைப்புகளும் ஒன்று சேர்ந்து, 1978ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும், சென்னை நகரத்திலே தண்ணீர் கிடைக்காத பகுதிகளுக்கும், இப்பொழுது இருக்கின்ற அவல நிலையைப் போக்குவதற்கு எதிர்காலத்திலாவது ஒன்று சேர்க்க வேண்டுமென்பதை அரசு கருத்தில் எடுத்துக் கொள்ளுமா என்பதையும், எடுத்துக் கொண்டு எப்படி நடக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவரவர்களே, எம். எம். டி. ஏ. மூலம் அல்ல மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல M. M. W. S. S. B. மூலம் நீர் வழங்குவது கவனிக்கப்படுகிறது. இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் புதிய கருத்தைச் சொல்லுகிறார்கள். இந்தக் கருத்தை எழுப்ப வேண்டிய நேரத்தில் எழுப்ப வேண்டிய முறையில் எழுப்பினால் பரிசீலிக்கலாம். வேண்டுமானால் மாநகராட்சித் தேர்தல் முடிந்த பிறகு இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யலாம்.

**வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிலில் நவீன இயந்திரங்களைப் புகுத்தும் திட்டம்.**

*வினா எண். 659—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்திலும் மற்றும் சில இடங்களிலும் தோல் பதனிடும் தொழிலில் நவீன இயந்திரங்கள் புகுத்தப்பட்டதால் பல சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது ?

(இ) அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) நவீன இயந்திரங்கள் புகுத்தப்பட்டதால் வட ஆற்காடு மாவட்டத்திலோ மற்ற இடங்களிலோ வேலை இழப்பு ஏற்பட்டதாக தகவல் ஏதும் பெறப்படவில்லை. ஆனால் வேறு சில இடங்களில் புதிய இயந்திரம் நிறுவியுள்ளதால் 1980ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் நாள்முதல் திண்டுக்கல்லில் உள்ள ஸ்ரீதனலட்சுமி அன் கோ., நிறுவனம் நான்கு தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டதாக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் நாள் அன்று விபரம் கிடைத்துள்ளது.

(ஆ) நான்கு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(இ) தொழில் தகராறு சட்டத்தின்கீழ் ஆட்குறைப்பு ஈட்டுத் தொகையைத்தந்த பின் ஊழியர்களை நீக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உள்ளது. ஊழியர்களை வேலையை விட்டு நீக்குவதற்கு முன் தொழிலாளர் துறை ஆணையரிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற பிரிவு 25 (என்) ஷரத்து சென்னை உயர்நீதி மன்றத்தால் நீக்கப்பட்டுள்ளது.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிலில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் பணியாற்றுகிறார்கள். இந்தத் தொழிலிலே நூற்றுக்கு எண்பது பங்கு அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தோல் உற்பத்தி தமிழ்நாட்டில் இருக்கிறது. இயந்திரங்கள் அதிகமாகப் புகுத்தப்பட்டதால் 75 சதவிகிதத்தினர் பத்தாண்டுகளிலே இந்தத் தொழிலிலே வேலையை விட்டு வெளியே போய் இருக்கிறார்கள் அதைவிடப்பெரிய சங்கடம் இப்பொழுது என்னவென்றால், மத்திய அரசு முழுவதும் பதனிடும் தோலைத்தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டிருப்பதால் இயந்திரமயமாகியும் பயனற்ற வகையில் ஏற்றுமதி இல்லை என்ற நிலையில் தொழில் சிக்கல் இருக்கிறது. தொழில் தகராறு சட்டம் என்று இதைப் பார்க்காமல் மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்னையாக இது இருப்பதால் இந்த ஏற்றுமதிக் கொள்கை மாற்றப்பட வேண்டும் ; மூன்று நான்கு ஆண்டுகளுக்காவது இந்தப் பாதி பதினிட்ட தோலை ஏற்றுமதி செய்வதற்கு மாநில அரசுக்கு அனுமதி வேண்டுமென்று மத்திய அரசோடு மாநில அரசு வாதாடி இந்த உரிமையைப் பெறுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே தொழில்துறை அமைச்சருக்குப் போடவேண்டியகேள்வி, எனக்கு அல்ல.

[1981 ஏப்ரல் 6

### ஆலங்குளம் சிமெண்ட் ஆலை.

*வினா எண் 660—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் நாளில் ஏற்பட்ட ஒப்பந்தம் இன்னும் நடைமுறைக்கு வராமல் இருப்பதற்கான காரணம் யாது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் 1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் நாள் அன்று தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்னிலையில் தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன்கீழ் ஏற்பட்ட ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிமெண்ட் ஆலை அலுவலக ஊழியர்களுக்கு நடுவர் தீர்ப்பை ஆலை நிர்வாகம் எந்த முறையில் அமுல்படுத்தியது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நடுவர் தீர்ப்பைப் பற்றியது அல்ல. ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தம் 12 (3) பிரிவின்கீழ், அந்த ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒருதலைப்பட்சமாக, இருவிதமான கொள்கைகளை நிர்வாகம் கடைபிடிப்பதாக தொழிற் சங்கத்திடமிருந்து அரசுக்கு ஏதேனும் புகார் வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்பட்ட ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது என்ற செய்திதான் எங்களுக்கு வந்துள்ளதே தவிர, வேறு புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை.



1981 ஏப்ரல் 6]

### அக்காமலையில் இருந்து வால்பாறைக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டம்.

*வினா எண் 661—திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அக்காமலையிலிருந்து வால்பாறைக்குக் கொண்டுவரும் குடிநீர்த் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) நிதி எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) மற்றும் (ஆ) காரமலை தோட்டத்தின் மேல்புறம் நடுவர் ஆற்றை ஆதாரமாகக் கொண்டு வால்பாறை நகரியத்திற்குச் செயலாக்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் 1981ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஏ. டி. கருப்பையா:** தலைவர் அவர்களே, அக்காமலை என்ற குறிஞ்சி மலையிலிருந்து, ஊசிமலை, கருமலை, வெள்ளமலை, பச்சைமலை வழியாக வால்பாறைக்குத் தண்ணீர் கொண்டுவரும் குழாய்கள், பஸ் ரூட்டிலே, பூமிக்கடியில் தோண்டப்பட்டு, புதைக்கப்பட்டு வருவதால், குறிஞ்சி மலையிலிருந்து வால்பாறைக்கு பஸ் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு, அந்தத் தண்ணீரை மிக வேகமாக, உடனடியாக, சுறுசுறுப்பாக, வால்பாறைக்குக் கொண்டு வருவதோடு, வால்பாறையைச் சுற்றியிருக்கக் கூடிய கக்கன் காலனி, வாழைத் தோட்டம் எம்.ஜி.ஆர். நகர், சிலோன் காலனி, பி.ஏ.பி. காலனி, காமராஜர் நகர் போன்ற பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டும். அதோடு, வால்பாறையிலே, இருக்கிற, ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கிற மேல்நிலைப் பள்ளியிலே தண்ணீரே இல்லையென்பதை உணர்ந்து, அதோடு, அங்கே உள்ள மருத்துவமனையில் நோய்வாய்ப்பட்டிருக்கிற ஜனங்களுக்குத் தண்ணீரே இல்லை என்பதை உணர்ந்து, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அமுல்படுத்தி, இந்த 1981ஆம் ஆண்டுக்குள்ளேயே அந்த ஜனங்களுக்குத் தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் வால்பாறை நகரியத்திற்குக் குடி தண்ணீர் கொடுப்பதைப் பற்றியது. இத்திட்டப் பணிகள் 1981ஆம் வருட இறுதிக்குள் பூரணமாக முடிவு பெற்று வால்பாறை நகரிய மக்களுக்குப் பயன் தரத்தக்க அளவுக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1981 ஏப்ரல் 6

### நெய்வேலி நீரைப்பாசனம் குடிநீர் தேவைகளுக்குப் பயன்படுத்தும் திட்டம்.

*வினா எண். 662—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி நீரை அப்பகுதியில் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்குக் கொடுக்க வேண்டும் என்று விருத்தாசலம் அணைப்பகுதி விவசாயிகள் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கோரி வருவதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் எந்தெந்த ஊருக்கு அந்த நீர் கொண்டு செல்லப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசு முடிவு எடுக்கும்போது எந்தெந்த ஊர்கள் பயன் பெறும் என்பவை நிச்சயிக்கப்படும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளியேற்றப்படும் நீர் எவ்வளவு கன அடி ? அதனால் எவ்வளவு நகரங்களுக்கு, அல்லது பாசனத்திற்கு உபயோகிக்கப் படும் என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தற்போது பருவ மழை நீருடன் நெய்வேலியிலிருந்து நிலக்கரி வாரியம் செலவின்றி வழங்கும் உபரி நிலத்தடி நீரை 23 கிராமங்களில் 2,400 ஹெக்டேர் நிலங்களில் இருபோக சாகுபடி செய்வதற்காக இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது முதலாவதாக சுரங்கத்திலிருந்து கிடைப்பது. இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுகிறபோது ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 220 முதல் 360 லட்சம் காலன் வரையில் தண்ணீர் கிடைக்கும் என்று இப்போது மதிப்பிடப்பட்டு இருக்கிறது. அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அரசு பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். நெய்வேலி



1981 ஏப்ரல் 6]

நிலக்கரிச் சுரங்கம் வந்தபிறகு அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. ஆகவே, அந்தச் சுரங்கத்தில் இருந்து வீணாகச் சென்று கடலில் கலக்கிற கழிவு நீரை அந்தப் பகுதி மக்களின் குடிநீர் வசதியைப் பூர்த்தி செய்வதற்காக அரசு முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்வதில் அரசு ஏன் காலதாமதம் செய்கிறது, உடனடியாக அதைச் செய்வதற்கு, துரிதமாகப் பரிசீலிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்போதே கூட கழிவு நீர் கிட்டத்தட்ட 10,000 காலன் ஒரு நிமிடத்திற்கு வெளியேறுவது அந்த ஆற்றிலே திருப்பிவிடப் பெற்று, அந்தப் பகுதியில் உள்ள நிலத்தடி நீர் பாதிக்கப்படாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கேள்வி இரண்டாவது சுரங்கம் நெய்வேலியில் வெட்டப்படுகிற போது கிடைக்கிற உபரி நீரைப் பற்றியதாகும். அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்று சிந்திக்கிறபோது குடிநீர் கொடுப்பது என்பது எல்லாம் சேர்த்துத்தான் அரசு பரிசிலித்து வருகிறது.

### தர்மபுரி விவசாயக் கருவிகள் பழுது பார்க்கும் நிலையத்திலுள்ள ஆழ்கிணறு தோண்டும் இயந்திரங்கள் இடமாற்றம்

*வினா எண். 663—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் உள்ள அக்ரோ சர்வீஸ் சென்டரில் உள்ள ஆழ் கிணறு தோண்டும் இயந்திரங்கள் வேறு மாவட்டத்திற்கு மாற்றிச் செல்லப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் இம் மாவட்டம் பயன்பெறும் வகையில் திரும்ப அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

### 'பேரா பாறை' நதியை கிழக்கே திருப்பிவிடும் திட்டம்

*வினா எண். 664—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக் கடலில் கலக்கும் 'பேராபாறை' நதியை மேற்கு மலையைக் குடைந்து கிழக்கே திருப்பித் தமிழகத்தின் பாசனத்துக்கு ஏற்பாடு செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1981 ஏப்ரல் 6

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக்கடலில் கலக்கின்ற நதிகளை கிழக்கே திருப்பி தமிழகத்தின் பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய வேறு ஏதாவது திட்டங்களையோ அல்லது முயற்சிகளையோ அரசு மேற்கொண்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கெனவே மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைத் திருப்பி விடுவதைப் பற்றிய தனியான முயற்சி அரசு எடுத்துக்கொண்டு வருவதை மன்றம் அறியும். இப்போது இந்தக் கேள்வி 'டேரா பாறை' பற்றியதாகும். இந்த 'டேராபாறை' என்கிற சிற்றாறு பாம்பாறு என்கிற பம்பையாற்றின் கிளை நதியாக இருப்பதால் ஏற்கெனவே நாம் விவாதத்தில் வைத்து இருக்கிற 6 நதிகளில் ஒன்றாக இருப்பதால், அதைப் பற்றி பேசுகிறபோதுதான் அது இடம்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதால்தான் இந்த பதிலைச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 665, 666, மற்றும் 667 ஆகியவை மாண்புமிகு ஆதித் திராவிடர் நல அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

உ. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சத்திரப்பட்டி கைத்தறி நெசவாளர் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மு. உமாநாத், ஆர். கிருஷ்ணன், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, மு. ஆறுமுகம், எஸ். ஆண்டித்



1981 ஏப்ரல் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்]

தேவர், மு. அம்பிகாபதி, பொ. உத்திரபதி, பி. மொக்கையன், தி. கா. நல்லப்பன், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர், "முகவை மாவட்டம் சத்திரப்பட்டி வட்டாரத்திலுள்ள சுமார் ஒரு கோடி பெறுமான தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை அரசு கொள் முதல் செய்யக் கோரி 30—3—1981 முதல் உண்ணாவிரதம் நடைபெற்று வருவதாலும், ஆர்ப்பாட்டம், செய்த நெசவாளர்கள் மீது 2—4—81 அன்று காவல் துறையினர் கண்ணீர் புகை பிரயோகம் செய்து, கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ளதாலும், கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே இந்தச் சத்திரப்பட்டி வட்டாரத்தில், குறிப்பாக இராஜபாளையம் சுற்றியுள்ள பகுதிகளில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் உற்பத்தி செய்யும் துணியை அதிலும் குறிப்பாக, அரசே அந்தத் தொழிலுக்கென்று ஒதுக்கியிருக்கிற அந்தத் துணி வகைகளை அரசே கொள்முதல் செய்து கோ-ஆப்டெக்ஸ் மூலம் விற்று வரும் பழக்கம் இருந்து வந்தது. அந்தப் பழக்கத்தின் காரணமாக அந்த மக்கள் பல்வேறு வகையான அப்படிப்பட்ட துணிகளை தயாரித்து வைத்து இருக்கின்றனர். அந்த வட்டாரத்திற்கு வந்திருந்த டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் அவர்களிடத்தில் இப்படி கொள்முதல் செய்யாதது குறித்து தெரிவிக்கப்பட்டபோது, அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகள் அனைத்தும் அரசு ஏற்றுக் கொள்ளும் என்று அவர் வாக்குறுதியும் அளித்து, அவர் இங்கே வந்தபிறகு அரசாணைகூட பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஆணைக்கிணங்க அவர்கள் தொடர்ச்சியாக உற்பத்தி செய்து கொண்டுவருகிறார்கள்.

இப்போது அந்தத் துணி முழுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வது மட்டுமல்ல, அந்தத் துணி முழுவதையும் நாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஜனதா அடிப்படையில்தான் எடுத்துக் கொள்ள முடியும் என்று சொல்லி, விலையைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மட்டுமல்ல, 9 சதவீத இலாபம்தான் தரமுடியும் என்றும் சொல்கிறார்கள். ஆனால் கோவாப்டெக்ஸ் 30 சதவீதம் தான் லாபம் அடைகிறது. இதன் காரணமாக அந்தத் தொழிலில் கிராக்கி இல்லாமல், தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் பல இலட்சக் கணக்கான ரூபாய்க்கான துணி தேங்கிக் கிடக்கிறது.

இரண்டாவதாக அரசாங்க உத்தரவு பிறப்பட்டிருப்பதன் காரணமாக அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமை வந்து, அவர்கள் அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும் நம்முடைய கஷ்டத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக போராட்டம் நடத்துகிறார்கள். ஏற்கெனவே சென்ற அரசு கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்த சட்டம் பரிசீலனை செய்யப்படுவதற்காக பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, பொறுக்குக் குழு சுற்றுப்பயணம் நடத்திக் கொண்டிருக்கும்போது அரசாங்கத்தைக் கலைத்து விட்டார்கள். அதன் காரணமாக அந்தச் சட்டம் நின்றுபோய் விட்டது. அதன் பிறகு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பரிசீலிக்கப்பட்டு, பொறுக்கு குழுவுக்கு விடப்பட்டு, அது இன்றைக்கு முடியும் தருவாயில் இருக்கிறது. ஆனால் இந்த கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டம் மட்டும் அரசாங்கத்தரப்பில் இந்த சட்டமன்றத்தில் வைக்கப்படவில்லை. எப்போது வரும் என்று அரசாங்கம் சொல்லவும் இல்லை. இப்படிப்பட்ட சம்பவங்களை எல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக 30—ந் தேதி முதல் அந்த வட்டார கைத்தறி நெசவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இதிலே அண்ணா தி.மு.க. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.க., இந்திரா காங்கிரஸ் மற்றும் உள்ள கட்சிகள் எல்லாம்



சேர்ந்து இந்தப் பிரச்சனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதிலே ஒரு முடிவு காணவேண்டும் என்ற முறையிலே 30-ந் தேதியும், 31-ந் தேதியும் உண்ணா விரதம் இருந்தார்கள் பலன் இல்லை. ஆகவே, 1—4—1981 முதல் மறியல் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு அதிலும் அரசாங்கம் தலையிடாததால் 1—4—1981 முதல், தாலுகா அலுவலகம், பாங்க் முன்பு மறியல் டத்தினார்கள். அதனால் 200-க்கு மேற்பட்டவர்கள் கைதுச் செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். தொடர்ந்து மறியல் நடந்து வருகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் போராட்டம் நடத்துபவர்கள் தாலுகா அலுவலகத்திற்குப் போவதற்கு முன்னாலேயே போலீசார் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, லத்தி சார்ஜ் செய்து, கொடுமைகள் செய்து அதன் காரணமாக ஒருவர் இறந்திருக்கிறார். ஒரு பெண் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார், நான் வேறு வகையிலே இதைச் சொல்வதாக இருந்தால், இதை இந்த அவையில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, பெண் அவமானப்படுத்தப்பட்டார் என்று சொல்கிறேன். மேலே இருக்கிற துணியை எல்லாம் கிழித்து, அந்தப் பெண் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். அந்த வகையிலே கடுமையான நடவ்டிக்கை எடுத்திருக்கிறது போலீஸ்.

அது மட்டுமல்ல; சந்தானம் என்பவர் இறந்து இருக்கிறார் மேலும் 20-க்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். நேற்று கூட 141 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் சுமார் 300 க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு காராகிரகத்தில் இருக்கிறார்கள். ஆண்களும் பெண்களும் கைது செய்யப்பட்டிருகிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான நடவடிக்கைகளில் போலீஸார் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. அதனால் தேக்கமடைந்திருக்கிற கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்வது பற்றியும், கைத்தறித் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருவது பற்றியும், வேறு பல பிரச்சினைகள் பற்றியும் விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த சத்திரப்பட்டிக் கிராமம் பல்லாயிரக் கணக்கான நெசவாளர்கள் தங்கியிருக்கிற ஒரு கிராமமாகும். ஏற்கெனவே அங்கே 6 பெரிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அங்கிருந்து 3, 4 மாதங்களுக்கு முன்னால் அனுப்பப்பட்ட கைத்தறி ஜவுளிகளுக்கு இங்கே இருக்கிற ஸ்டேட் சொசைட்டியிலிருந்து பணம் போகவில்லை. இப்போது அதிகமாக அங்கே கையிருப்பு இருக்கிறது. சுமார் 26 அல்லது 30 இலட்சம் மதிப்புள்ள துணி தேங்கி இருக்கிறது. ஆகையால் மேற்கொண்டு நூல் வாங்க பணம் இல்லை. நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை ; அதனால் அவர்கள் பட்டினி கிடக்கிறோம் என்ற நிலை வந்து, அது பற்றி அரசுக்கு ஒவ்வொரு வாரமும் தபால் அனுப்பியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. நேரில் வந்து பார்த்திருக்கிறார்கள் ; இருந்தபோதிலும் பயனில்லை. ஆகையால் இந்த முக்கியமான பிரச்சனையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக 30-3-1981 அன்று ஒரே ஒரு நாள் மட்டும் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆண், பெண் அத்தனை பேர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அனைத்துக் கட்சியினரும், அண்ணா தி.மு.க. உட்பட, உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை.

[முற்பகல் 10-10]

மறுநாள் இந்தப் போராட்டத்தினுடைய தன்மையை பொது மக்களுக்கு விளக்குகின்ற வகையில் ஒரு பொதுக்கூட்டம் நடத்த வேண்டும் என்றும் மேலும் போராட்டத்தை எப்படி நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. 31ஆம் தேதி நடந்த அந்தக் கூட்டம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைப்பாளரும் தற்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பிரமுகருமான திரு அ. ந. குருசாமி அவர்களின் தலைமையில் நடந்தது. அதற்குப் பிறகு மறுநாள் 1—4—1981 அன்று எல்லோரும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற வகையில்





கடைகள் எல்லாம் மூடப்பட்டன. மேலும் அர்த்தால் பண்ணுவதற்கு ஆதரவு தாருங்கள் என்ற வகையில் ஒரு கூட்டுறவு பாங்கின் கிளை முன்பும், பாண்டியன் பாங்கு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாங்கின் முன்பும் ஆயிரம் பேர் மறியல் செய்தார்கள். அதிலே ஆண்களும், பெண்களும் இருந்தார்கள். அப்போது போலீஸ் படையோடு சென்று அவர்களைக் கைது செய்யச் சென்றார்கள். அப்போது போலீஸார் நாங்கள் 50 பேரைத்தான் கைது செய்வோம் மீதிப்பேர் எல்லாம் கலைந்து செல்லுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் மறியல் செய்தவர்கள், நாங்கள் எங்கள் பிரச்சினை குறித்து அரசிடம் கேட்டோம், கிடைக்கவில்லை, ஆகவே எங்கள் எல்லோரையும் கைது செய்யுங்கள். அப்படி ஆயிரம் பேரைக் கைது செய்தாலாவது உண்மை நிலையை அரசு புரிந்துகொள்ள வசதியாக இருக்கும். எங்களின் கஷ்டத்தை உணர்ந்து நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே எங்கள் எல்லோரையும் கைது செய்து கொண்டு போய் சாப்பாடு போடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்போது போலீஸ் படையோடு சென்ற கலெக்டர் அவர்களும், டி. எஸ்.பி. அவர்களும் ''அதெல்லாம் முடியாது, 50 பேரைத்தான் கைது செய்வோம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது அவர்கள் அதெல்லாம் முடியாது கைது செய்தால் எல்லோரையும்தான் கைது செய்ய வேண்டும் என்று 3 மணி நேரம் போராடி இருக்கிறார்கள் இதைச் சொன்னவுடன் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். உடனடியாக அங்குள்ளவர்கள் போலீசாரின் அடக்குமுறை ஒழிக என்று கோஷம் போட்டிருக்கிறார்கள். அப்படி அடக்குமுறை என்று சொன்னவுடன் போலீசாருக்கும் கோபம் வந்து அவர்களை எல்லாம் கண்டபடி அடித்திருக்கிறார்கள். மிகக்கொடுமையான முறையிலே அவர்கள் எல்லாம் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றி இன்றைக்குக் கூட ஒருவர் வந்து என்னிடம் சொன்னார்.

அதுமட்டுமல்ல ; நான் கூட நேராகப் ஃபோன் மூலம் விஷயத்தைக் கேட்ட போது அவ்வளவு கடுமையாக அடித்திருக்கிறார்கள் என்பது தெரியவருகின்றது. அடி என்றால் மிகக்

கடுமையான முறையிலே அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டிற்குள்ளே எல்லாம் புகுந்து அங்குள்ள பெண்களையும், குழந்தைகளையும் கூட அடித்திருக்கிறார்கள். அவ்வளவு பயங்கரமான முறையிலே போலீசார் நடந்துகொண்டதன் காரணமாக அந்த ஊரிலேயே இப்போது மக்கள் இல்லை 10, 12 பேர்கள்தான் உண்ணாவிரதம் என்ற நிலையிலே அங்கே இருந்துகொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் எல்லாம் அடி தாங்காமல்தான் அந்த ஊரை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். அந்த அடி தாங்காமல் சந்தானம் என்பவர் இறந்தே போய்விட்டார். ஏற்கெனவே அவர் ஒரு டி.பி. பேஷன்ட். அவர் இறந்ததற்குப் பிறகு அவருடைய வீட்டுக்குள்ளே புகுந்து அவருடைய மனைவியை மிரட்டி அவர் சாதாரணமாகத்தான் இறந்து விட்டார் என்று போலீசார் எழுதி வாங்கியிருக்கிறார்கள் அங்குள்ள ஒரு சினிமாக் கொட்டகையின் உள்ளே புகுந்து பலரை அடித்திருக்கிறார்கள். அப்படி அடிக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் இவர். அந்த அடியின் காரணமாக இவர் மயங்கி விழுந்து விட்டார். மயங்கி விழுந்தவரை அப்படியே போட்டுவிட்டுப்போய் விட்டார்கள். மறுநாள் அவர் இறந்துவிட்டார். அவர் இறந்தவுடன் அவர் சாதாரணமாகத்தான் இறந்துவிட்டார் என்று எழுதி வாங்கிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படி வீடு புகுந்து அடிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. குமரன் சினிமாக் கொட்டகைக்குள் போலீசார் புகுந்து பலரை அடித்து இருக்கிறார்கள். பலரை வேனிலே ஏற்றிக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அதிலே ஆளும் கட்சியைச் சேர்ந்த தவசி ஆனந்த் என்பவர் மருத்துவத்திற்குரிய துணிகளைத் தயாரிக்கின்ற ஒரு கூட்டுறவு நிறுவனத்தைச் சேர்ந்தவர். அவரும் உள்ளே தான் இப்போது இருக்கிறார். ஆகவே போலீசார் அந்தக் கட்சி இந்தக் கட்சி என்று பார்ப்பது இல்லை. எதிர்க்கட்சியினருக்கு எல்லாம் ஒருஅடி என்றால் ஆளும் கட்சியினருக்கு 2 அடி என்ற முறையில் தான் அடித்து நொறுக்குகிறார்கள். அப்படி போலீசின் நடவடிக்கை காரணமாக அங்குள்ள மக்கள் எல்லாம் பயந்து ராஜபாளையத்திற்குச் சென்றுவிட்டார்கள். அதற்கு அடுத்தபடியாக தபால்ஆபீஸ் முன்னால் உள்ள போர்டை போலீசாரே அடித்து நொறுக்கி விட்டு இவர்கள் தான் உடைத்தார்கள் என்று சொல்கிறார்கள்.



அதிலே பலபேர் அடிபட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் இப்பொழுது சிறையிலே இருக்கிறார்கள். அடிபட்டு அவதிப்படுவது மட்டுமல்லாமல் கைதாகி இப்போது சிறையிலே வேறு இருக்கிறார்கள். நான் கேட்பது என்னவென்றால், போலீஸ் இப்படிப்பட்ட அடக்கு முறையை பிரயோகித்தது பற்றி, ஒரு விசாரணை நடத்த வேண்டியது மிக மிக அவசியம். அது மட்டும் அல்லாமல், இந்தக் கலவரத்தினால் அடிபட்டு நெசவாளி-தொழிலாளி சந்தானம் என்பவர் இறந்திருக்கிறார். சினிமா கொட்டகையில் ஓடி போன பிறகும் அங்கேயும் அடிபட்டு அந்த அடி தாங்க முடியாமல் இறந்திருக்கிறார். அவர் ஏற்கனவே நோயாளி, பலமாக அடிபட்டதன் விளைவாக இறந்து விட்டார். எப்படி இருந்தாலும், அவர்களுடைய குடும்பத்திற்கு ஏதாவது நஷ்ட ஈடு தரவேண்டும். சிறையிலே அடைபட்டு இருப்பவர்கள் அத்துனை பேரரையும் விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் மீது போடப்பட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும்.

அந்த துணிகள் பூராவும் 26 லட்சத்திற்கு கொள்முதல் செய்யப்போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பாக்கியும் கொடுத்தாகிவிட்டதாக சொல்கிறார்கள். இதை முன்பே சொல்லியிருந்தால் இவ்வளவு கலவரங்கள் ஏற்பட்டிருக்காது. இருந்தாலும் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டாக வேண்டும். இறந்தவரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். இத்தனை கலவரங்களுக்கும் அங்கே இருந்த டி.எஸ்.பி, சப்-கலெக்டர் ஆகிய இரண்டு பேர்கள் தான் காரணம் என்று சொல்கிறார்கள். அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அங்கே என்ன நடந்தது என்பதை தீர விசாரிக்க வேண்டும். பூராவும் தெரிந்து விசாரித்து தப்பாக நடந்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், நெசவாளத் தொழிலாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கியை கொடுக்கச் செய்யவேண்டும். அப்படி கொடுக்கவில்லை என்றால் அவர்கள் கடைசி முயற்சியான மறியல் வரை போகிறார்கள். அப்படிப் போன பிறகுதான் அரசாங்கம் அதை கவனிக்கிறார்கள். இனி மேல் அப்படி நடக்காத அளவில் முன்பே விசாரணை நடத்தி

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யவேண்டும். கடைசிமுறையாகவும் கேட்கிறேன். கைது செய்யப்பட்ட நெசவாளத் தொழிலாளர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், அவர்கள் பெயரில் பதிவுசெய்யப்பெற்ற வழக்குகள் வாபஸ் வாங்கப்பட வேண்டும். இறந்தவரின் குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும். ஆக இவைகள் பற்றியெல்லாம் இன்னும் விரிவான முறையில் விவாதிக்க, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சத்திரப்பட்டி, சங்கரபாண்டியபுரம், சமுசிகாபுரம் கிராமங்களைச் சார்ந்த கைத்தறி நெசவாளர்சள், தங்களது கோரிக்கைகளான, கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் தேங்கிக் கிடக்கும் துணிகளை கூட்டுறவுத் துறை வாங்க வேண்டும், மருத்துவ விடுதி திறக்கப்பட வேண்டும், உணவுப் பொருட்களை குறைந்த விலையில் விநியோகம் செய்யவேண்டும் என்பவைகள் உள்ளிட்ட பதினாறு கோரிக்கைகளை முன் வைத்து, கோரிக்கை நிறைவேறும்வரை காலவரம்பற்ற போராட்டத்தை 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் அன்று துவக்கினர். 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30ஆம் நாள் அன்று ஊர்வலமும், அதனைத் தொடர்ந்து உண்ணாவிரதத்தையும் சத்திரப்பட்டியில் கைத்தறி நெசவாளர்கள் நடத்தினர். 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் அன்று, சத்திரப்பட்டியில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கொண்ட போராட்டக் குழு அமைக்கப்பட்டது. போராட்டக் குழுவினர் தங்களது கோரிக்கைகளுக்காக 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் அன்று சத்திரப்பட்டியில் முழு கடையடைப்பு நடத்துவது என்றும், வங்கிகள் மற்றும் தபால் நிலையங்கள் முன் மறியல் நடத்துவது என்றும் முடிவு செய்தனர்.





மேற்கண்ட முடிவிற்கேற்ப, சத்திரப்பட்டியில் அனைத்துக் கடைகளும், விசைத்தறிக் கூடங்களும், 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1நாள் காலையில் மூடப்பட்டிருந்தன. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் அன்று காலை 9 மணி அளவில் அனைத்துக்கட்சி போராட்டக் குழு தலைவர்கள் தலைமையில் 150 பெண்கள் உள்ளிட்ட சுமார் 1,000 கைத்தறி நெசவாளர்கள் ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலக் கூட்டம் சிறிது நேரத்தில் அதிகமாகப் பெருகிற்று. காலை சுமார் 10–30 மணி, அளவில் 5,000 பேர்களடங்கிய ஊர்வலம் திறந்திருந்த வங்கிகளையும் தபால் நிலையத்தையும் மூட வேண்டும் என்று கோரிக்கையிட்டனர். கலவரத்திலும் ஈடுபட்டனர். மேலும், சிலர், தபால் நிலைய பெயர்ப் பலகையைச் சேதப்படுத்தினர். உள்ளே நுழைந்து நாற்காலி மற்றும் மரச் சாமான்களைச் சேதப்படுத்தினர். வங்கிகள் தபால் நிலையம் மற்றும் காவல் துறையினர் மீது கற்களை வீசினர். வங்கிகள் தபால் நிலையம் மூடப்படாவிடில், அங்குள்ள அலுவலர்களையும், காவல்துறையினரையும், கொலை செய்வதாகச் சத்தமிட்டனர். இத்தாக்குதலில், ஆயுதந்தாங்கிய காவல் துறையினர் சிலர் காயமுற்றனர். மேற்கண்ட கலவரம் கட்டுக்கடங்காமல் போவதைக் கண்ணுற்ற சிவகாசி கோட்டாட்சி தலைவர் காவல்துறை உதவி கண்காணிப்பாளரைக் கொண்டு மேற்கண்ட கூட்டத்தை சட்ட விரோதமான கூட்டம் என அறிவித்து, அவர்களைக் கலைந்து செல்லுமாறு பணித்தார். ஆயின், அவர்கள் அதனைப் பொருட்படுத்தாமல் மேலும், மேலும் கலவரத்தில் ஈடுபட்டனர். எனவே, அவர்களை எச்சரிக்கை விடுத்த பிறகு, கண்ணீர்ப்புகை குண்டுகள் வெடிக்கப்பட்டன. ஆனால், கூட்டத்தினர் மேலும் வன்முறையில் இறங்கினர். எனவே, தகுந்த முன் எச்சரிக்கைக்குப் பிறகு, அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டு, கூட்டம் கலைக்கப்பட்டது.

[முற்பகல் 10-20]

பதினெட்டு பெண்கள் உள்ளிட்ட 139 பேர்கள் கைது செய்யப்பட்டு கீ.பூ. ராஜகுலராமன் காவல் நிலையத்தில் அவர்கள் மீது கு.எ. 29/81-இல் இ.த.ச. என். 147, 148, 336, 332

427 மற்றும் 307 பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. கைது செய்யப்பட்ட பெண்கள் அனைவரும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். மற்றவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட நிகழ்ச்சியில் ஆயுதக் காவல் படையினர் மூவருக்கு சில காயமேற்பட்டது. அவர்கள் புறநோயாளியாக சிகிச்சை பெற்றனர்.

மேற்கண்ட நிகழ்ச்சி பற்றிய காவல்துறை விசாரணையை மேற்கொண்ட இராஜபாளைய பிரிவு துணை ஆய்வாளர் அவர்களால் மேலும் 15 பேர்கள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2ம் நாள் அன்று கைது செய்யப்பட்டனர். மேற்படி நிகழ்ச்சியின் போது கைது செய்வதைத் தடுத்தவர்கள் மீது சிறிது பலப்பிரயோகம் செய்யப்பட்டது. அவர்கள் பின்னர், இராஜபாளையம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் இலட்சுமணன் என்பவர் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார். மீதி 14 பேரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைத்தறி நெசவாளர்கள் போராட்டக்குழு 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2ஆம் நாள் அன்று இராஜபாளையத்தில் கூடி காவல் துறை துணை கண்காணிப்பாளர், மற்றும் சிவகாசி கோட்டாட்சித் தலைவர் மாற்றப்பட வேண்டும் என்றும் சத்திரப்பட்டியிலுள்ள காவல்துறை பந்தோபஸ்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தங்களுடன் கலந்து, தங்கள் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்றும் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் அன்று, காவல் துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையை கண்டித்து பொதுக் கூட்டம், ஊர்வலம் நடத்துவது என்றும் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். அதன்படி, இராஜபாளையத்தில் 1981ஆம், ஆண்டு ஏப்ரல் திங்கள் 2 ஆம் நாள் அன்று ஊர்வலமும் அனைத்துக்கட்சி பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

மேற்கண்ட ஊர்வலத்தின்போது சிலர் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2ஆம் நாள் அன்று மாலை காவல் துறையினரின் தாக்குதலினால் சத்திரப்பட்டியைச் சார்ந்த சதுரகிரி என்று



அழைக்கப்படுகிற சந்தானம் என்பவர் இறந்து விட்டார் என்ற வதந்தியை கிளப்பிவிட்டனர். இதுபற்றி எந்தவிதமான புகாரும் சத்திரப்பட்டி காவல் நிலையத்திலோ, காவல் துறை அலுவலரிடமோ தெரிவிக்கப்படவில்லை. எனவே, இதுபற்றி அப்பகுதியைச் சார்ந்த வருவாய் ஆய்வாளர் சத்திரப்பட்டி கிராமத்திற்குச் சென்று மேற்கண்ட மரணம் பற்றி நேர்முக விசாரணை நடத்தியதில் கீழ்க்கண்ட உண்மை தெரியவந்துள்ளது.

" சதுரகிரி என்று அழைக்கப்படும் சந்தானம் கீழராஜகுலராமன் காவல் நிலைய பதிவேட்டில் கேடியாகக் குறிக்கப்பட்டு உள்ளவர் என்பதும், அவர் தற்பொழுது அமைதியாக உள்ளதால், அவர்மீது உள்ள பதிவேடு முடிக்கப்பட்டுள்ளதும் தெரிய வந்துள்ளது. மேலும், அவர் சுமார் 17 ஆண்டுக்காலமாக காச நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் அதற்காக அவர் ஆசாரி பள்ளம், இராஜபாளையம் மற்றும் திருவில்லிபுத்தூர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றார் என்பதும் தெரிய வந்துள்ளது. 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் அன்று சுவாசக் கோளாறு காரணமாக மேற்படி சந்தானம் அய்யனாபுரம் கம்பவுண்டர் ஒருவரிடம் ஊசிப்போட்டுக்கொண்டுள்ளார். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2ஆம் நாள் அன்று மேற்படி சந்தானம் மனைவி பத்ரகாளியிடம் அவரது கணவர் சத்திரப்பட்டி சினிமா திரையரங்கில் கிடப்பதாக ஒரு சிறுவன் கூற, அவர் அவ்விடத்திற்கு மருந்துகளுடன் சென்றுள்ளார். மேற்படி சந்தானம் ஊசிமருந்தை எப்போதும்போல் தானாகவே செலுத்திக்கொண்டுள்ளார். ஊசி செலுத்திய இடத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டேயிருந்ததால் அவரால் அவ்விடத்திலிருந்து செல்ல முடியவில்லை. அருகிலிருந்தவர்கள் அவருக்கும் அவரது மனைவிக்கும் தேவையான உதவிகளைச் செய்துள்ளனர். 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2ஆம் நாள் அன்று மதியம் 2 மணிக்கு மேற்படி சந்தானம் இறந்து விட்டார். இதனைக் கேள்விப்பட்ட வேலை நிறுத்தம் செய்பவர்களில் ஒருவர் தங்களுடைய போராட்டத்திற்கு சாதகமாக மேற்படி சந்தானத்தின் மரணம் காவல்துறையினரின் தாக்குதலினால் ஏற்பட்டது என்ற வீண்வதந்தியைக் கிளப்பி விட்டார். இந்தக் கூற்றை மரணமுற்ற திரு. சந்தானத்தின் மனைவி பத்ரகாளி மற்றும் ஊர் பெரியவர்கள் மறுத்துள்ளனர்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 6

இத்தகைய கெட்ட நோக்கத்திற்கு நாங்கள் உடன்படமாட்டோம் என்றும் வேலை நிறுத்த நெசவாளர்களிடம் கூறியுள்ளார். இது பற்றி மரணமுற்ற திரு. சந்தானம் அவர்கள் மனைவி பத்ரகாளி மற்றும் பொதுமக்கள் சிலரிடம் கையெழுத்துடன் கூடிய அறிக்கையினை வருவாய்த்துறை ஆய்வளார் பெற்றுள்ளார்.

எனவே, மேற்படி சந்தானம் என்பவரின் மரணம் இயற்கையாக ஏற்பட்டது என்பதும் மேற்கண்ட கலவரத்தினாலோ அல்லது காவல் துறையினரின் தாக்குதலினலோ நிகழவில்லை என்பதும் தெளிவாகிறது.

நெசவாளர் போராட்டக்குழு 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ஆம் நாள் முதல் காலவரம்பற்ற உண்ணாவிரதத்தை இராஜபாளையம் வட்டாட்சியர் அலுவலகம் முன்னர் தொடங்குவதாக அறிவித்துள்ளது. இதற்கிடையில், சிவகாசி கோட்டாட்சித் தலைவர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். அங்கே இப்போது அமைதி நிலவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள்.

மேலும் நெசவாளர்கள் கோரிக்கைகளில் முக்கியமானவை சத்திரப்பட்டி பகுதியிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருக்கும் ரூபாய் 30 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய வேண்டும். தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து, இப்பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்படவேண்டிய பாக்கி தொகையினை உடனடியாக கொடுக்க வேண்டும். ஜனதா ரகங்கள் உற்பத்தி செய்வதற்கு தேவையான நூலை சலுகை விலையில் வழங்க வேண்டும். இவை முக்கியமான கோரிக்கைகள். நாளது தேதியில் (1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள்) சத்திரப்பட்டி பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 26.76 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றில் 13 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஜனதா ரகங்கள் ஆகும். இந்த ஜனதா ரகங்கள் கோ-ஆப்டெக்ஸினால் நிர்ணயிக்கப்பட்ட முறையில் தயாரிக்கப்படாமல் தரக்குறைவாக இருந்



1981 ஏப்ரல் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ததால் கோஆப்டெக்ஸினால் கொள்முதல் செய்யப்படாமல் தேங்கிக் கிடந்தவையாகும். இந்த ஜனதா ரகங்கள் மேற்கூறிய, காரணங்களால் கோ-ஆப்டெக்ஸினால் அவை விலை குறைத்து கொள்முதல் செய்ய விரும்பியபொழுது, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இருப்பினும் நெசவாளர்களின் நலனைக் கருதி கோ-ஆப்டெக்ஸ் அங்கு தேங்கும் துணிகளில் ரூபாய் 25 இலட்சம் மதிப்புக்கு (செயற்கைப் பட்டு மற்றும் விற்பனையாகாமல் பழுதடைந்து கிடந்த துணி இரகங்கள் தவிர) உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டுமென்று அறிவுரைகள் அளிக்கப்பட்டு, சரக்குகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

போராடுவோரின் இரண்டாவது முக்கிய கோரிக்கையைப் பொறுத்த அளவில், சத்திரப்பட்டியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19-ஆம் நாள் முதல் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2-ஆம் நாள் முடிய இதுவரை ரூபாய் 20.96 இலட்சம் பட்டுவாடா செய்துள்ளது. பொதுவாக, கோ-ஆப்டெக்ஸ் இப்பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கியினை கொடுப்பதில் தனிச் சலுகை காட்டி வருகிறது. நாளது தேதியில் கோ-ஆப்டெக்ஸினால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்படவேண்டிய நிலையிலுள்ள தொகை ரூபாய் 4 கோடியாகும். சத்திரப்பட்டி பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸிலிருந்து ஒப்புதல் பெறப்பட்ட எல்லா இனங்களுக்கும் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டதால் இந்த நான்கு கோடியில் எவ்வித நிலுவையும் கிடையாது. கோ-ஆப்டெக்ஸினால் ஓராண்டில் 37 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் கொள்முதல் செய்யப்படும்போது 4 கோடி நிலுவை என்பது மிகச் சாதாரணமான ஒன்றே. கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய நிதிநிலையைப் பொறுத்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு அவ்வப்போது பணம் பட்டுவாடா செய்து வருகிறது.

மூன்றாவது கோரிக்கையான ஜனதா ரகங்களுக்குத் தேவையான நூல் வகையினை சலுகை விலையில் வழங்க வேண்டும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஏப்ரல் 6

என்பது தொடர்பாக கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது. தமிழ் நாட்டில் ஜனதா ரக உற்பத்திக்குத் தேவையான நூல் ரகங்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 20ஆம் நெம்பர் | .. | .. 65 பேல். |
| 26ஆம் நெம்பர் | .. | ..330 பேல். |
| 40ஆம் நெம்பர் | .. | ..455 பேல். |

ஜனதா ரகங்களுக்குத் தேவையான நூல் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கைத்தறி இயக்குநரால் குறைந்த விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாலும், வெளிச் சந்தையின் விலையைவிட குறைவான விலையில் இந்த ரக நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஜனதா ரகங்கள் மற்றும் மருத்துவ காஸ் துணிகள் உற்பத்தி முதலியவைகள் தொடர்பாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், கோ-ஆப்டெக்ஸின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கூட்டத்தை கூட்டி இதற்கான ஒருதிட்டத்தை தீட்டுவதற்கான வழிமுறைகளை இராமநாதபுரம் மாவட்ட உதவி இயக்குநர் மேற்கொண்டுள்ளார். மேற்கூறிய முக்கியமான கோரிக்கைகள் நெசவாளர்களுக்கு சாதகமாகவே தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, இப்போது இருக்கின்ற நிலைமையில் நெசவாளர்களுடைய குறைபாடுகளை நீக்குகின்ற முறையிலே முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, போராட்டத்தின் மூலமாக அல்லாமல், அந்த போராட்டத் தலைவர்கள் உரிய அதிகாரிகளைச் சந்தித்து விவாதிப்பதன் மூலமாக அத்தகைய நடவடிக்கையிலே ஈடுபடுவார்களானால், அதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதையும், இதிலே குறைபாடுகள், தவறுகள் நடைபெற்றிருக்குமானால், அதுபற்றி நடவடிக்கை எடுக்க, இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. கொடுக்கப்பட்ட அறிக்கை தெளிவாக இருக்கிறது என்பதால், மேற்கொண்டு இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தினால் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 6]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே பெண்களை ஜாமீனில் விட்டிருப்பதாகவும், மற்றவர்களைச் சிறையிலே வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். அது மட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் தந்த அறிக்கையிலும், எனக்குக் கிடைத்த தகவலிலும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. இது சம்பந்தமாக எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், போலீஸ் அதிகாரி இல்லாமல், வேறு ஒரு அதிகாரியை வைத்து விசாரித்து, நடவடிக்கை எடுப்பதோடு, கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றி இப்போது சொல்வதற்கில்லை. நிலைமைகளை விசாரித்து, தக்க முடிவை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகின்றது.

## 3. அறிவிப்புகள்.

### (அ) பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது :—

(1) 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாளன்று எடுத்துக் கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மானிய கோரிக்கைகளுக்குப் பதிலாக அன்று (16-4-1981) 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்; 27—கதர்த் தொழில்; 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்? .. 38—பொதுப்பணிகள்—பணியாளர்

அமைப்பும், கருவிகளும், தளவாடங்களும்; 51-பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பெறும்.

ஏற்கனவே 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்; 11—மாவட்ட நிர்வாகம். 1981ஆம் ஆண்டு மேத் திங்கள் 8ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப் பெறும்.

(2) 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் மற்றும் 20ஆம் நாள் ஆகிய நாட்களில் எடுத்து கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த 15—காவல் துறை 16—தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள், 1981ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாள் மற்றும் 6ஆம் நாள் ஆகிய நாட்களில் எடுத்துக் கொள்ளப்பெறும்.

(முற்பகல் 10–30)

1981ஆம் ஆண்டு மேத் திங்கள் 5ஆம் நாள் மற்றும் 6ஆம் நாள் ஆகிய நாட்களில் எடுத்துக் கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்து 20—வேளாண்மை; 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள், 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாள் மற்றும் 20ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப் பெறும்.

(3) 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாளன்று தமிழ்நாடு மதுவிலக்கு பற்றிய சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்று, 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாளன்று அச்சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும்.

1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாளன்று எடுத்துக் கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த 2—மாநில ஆயத்தீர்வுத் துறை; 4—பொது விற்பனை வரியும், ஏனை



வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 5—முத்திரை தாள்கள்—நிர்வாகம்; ஆகிய மானியக் கோரிக்கைகள் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்30ஆம் நாளன்று ஏற்கனவே எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப் பட்டிருந்த 13—நீதி நிர்வாகம் 14—சிறைச் சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளுக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப் பெறும்.

அன்று வினாக்கள்-விடைகள் நேரம் கிடையாது. தேவைப் படின் அன்று (30–4–1981) பேரவை மாலையில் கூடும்.

மற்ற அலுவல்கள் ஏற்கனவே அறிவித்தபடி நடைபெறும்.

4. அறிக்கை அளித்தல்.

விதி 107 (1)-இன் கீழ் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1981ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண். 225 (பழைய எண் 1454) தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது, உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாவினைக் கேட்டிருந்தார்—

"இந்திய முந்திரிக் கழகம் விநியோகிக்கிற கச்சா முந்திரியை ஒழுங்காக உபயோகப்படுத்தவில்லை என்று புகார் இருப்பதால் சென்ட்ரல் காஷ்யூ [முந்திரி] கார்ப்பரேஷனிடமிருந்து நேரடியாக முந்திரியை மாநில அரசு பெற்று கேரளா மாநிலத்தில் செய்வது போல ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தி அந்த நிறுவனத்தின் வழியாக அந்த முந்திரியை ஆலைகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

இதற்கு—

"மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் முந்திரி தொழில் வளர்ச்சி, முந்திரி ஏற்றுமதி இவைகளை நோக்க

மாக க்கொண்டு ஒரு முந்திரி வாரியம் அமைக்க செயற் குறிப்பு ஒன்றை தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பி அது மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது ''.

என்பதற்குப் பதிலாக, கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்க விரும்புகிறேன்.

'' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் முந்திரி தொழில் வளர்ச்சி, முந்திரி ஏற்றுமதி இவைகளை நோக்க மாகக் கொண்டு, ஒரு முந்திரி வாரியம் அமைக்கும் செயற் குறிப்பு மத்திய அரசின் ஆய்வில் உள்ளது. இச்செயற் குறிப்பின் மீது இம்மாநில அரசின் கருத்துக்களை மைய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது ''.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுகளுக்கு சர்க்கரை வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர் சாமி, இரா. கருப்பையா, து. புருஷோத்தமன், அ. ரகுமான் கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்பு மிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' வருமான அடிப்படையில் ரேஷன் கார்டுதாரர் களுக்கு சர்க்கரை வழங்கப்படுவது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்;



அறிக்கை.

1979ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17ஆம் நாள் முதல் மத்திய அரசு லெவி சர்க்கரை முறையை செயற் படுத்தியது. நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் மொத்த உற்பத்தியில் 65 சதவிகிதம் மாநிலங்களிடையே லெவி சர்க்கரையாக மத்திய அரசால் விநியோகிக்கப்படுகிறது. தமிழகத்திற்கு மாதந்தோறும் ஏறத்தாழ 19,790 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடாக செய்யப் படுகிறது.

2. இச்சர்க்கரை 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் நாளுக்கு முன்னர் குடும்ப அட்டை ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு, சென்னை நகரம் அதனைச் சார்ந்த புறநகர்ப் பகுதி மற்றும் மாவட்ட தலைநகர் ஆகியவற்றில், 5 கிலோ சர்க்கரை வீதமும், மற்ற நகராட்சிகள் மாவட்ட தலைநகர்களின் புறநகர்ப்பகுதிகள் ஆகியவற்றில் 3 கிலோ சர்க்கரை வீதமும் ; நகர பஞ்சாயத்துக் கள், கிராமப்புற பகுதிகள் ஆகியவற்றில் 1 கிலோ சர்க்கரை வீதமும் வழங்கப்பட்டு வந்தது.

3. நம் மாநிலம் முழுவதும் ஏறக்குறைய 1.05 கோடி குடும் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் கிராமப்புற பகுதி களிலும், நகரிய பஞ்சாயத்து பகுதிகளிலும் மட்டும் ஏறத்தாழ 77 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமப் புற பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ஒரு கிலோ சர்க்கரை மிக குறைவாக உள்ளதென்றும், நகரப் பகுதிகளில் வழங்கப்படுவதைப் போலவே ஒரே சீரான விகிதத்தில் கிராமப் புறங்களிலும் வழங்க வேண்டும் என்றும் பலமான கோரிக்கைகள் வந்தன. ஏறத்தாழ 77 லட்சம் குடும்ப அட்டைகள் கிராமப் பகுதிகளில வழங்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த பகுதிகளில் வழங்கப்பட்டு வந்த 1 கிலோசர்க்கரையை 2 கிலோவாகஉயர்த்தி னால்கூட கூடுதலாக நமக்கு 7,700 டன்லெவி சர்க்கரை தேவைப் படும். மத்திய அரசு நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையின் அளவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் சிறிதும் இல்லை. இந்நிலையில் பல்வேறு மாற்றங்களையும் ஆலோசித்து இறுதியில்மேலேகுறிப்பிட்டவாறு விநியோகம்செய்ய

முடிவு செய்யப்பட்டது. ஆனால் கிராமப்பகுதிகளில் உள்ளவர்களுக்கு மிகவும்குறைவாக சர்க்கரை கிடைக்கிறெது என்றமுறையீடு பரவலாக இருந்துவந்தது. கிராமப்பகுதிகளிலும், நகரியம், பஞ்சாயத்துப் பகுதிகளிலும் 1 கிலோ சர்க்கரை பெற்று வந்தோர்க்கு மேலும் 1 கிலோ அதிகப்படுத்தி இரண்டு கிலோ என வழங்க முற்பட்டால் கூடுதலாகத் தேவைப்படும் சர்க்கரையின் அளவு சுமார் 7,700 டன்கள் ஆகும் என முன்னால் கூறப்பட்டுள்ளது. அரை கிலோ அளவு சர்க்கரையை கூட்டித்தருவது என்றால்கூட கூடுதலாகத் தேவைப்படும் சர்க்கரையின் அளவு மாதம் ஒன்றுக்கு 3,850 டன்கள். தற்போது உள்ள சர்க்கரை தட்டுப்பாடு நிலைமையில், மைய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு எதையும் எதிர் பார்க்க முடியாது. தற்போது நம் மாநிலத்துக்கு ஒதுக்கீடாக கிடைத்துவரும் 19,790 டன்கள் சர்க்கரையில் எல்லா தரப்பினரையும் திருப்திப்படுத்தும் வகையில், சர்க்கரை விநியோகத்தை நிர்ணயிப்பதென்பது கடினமானதாகும். இருப்பினும் வருவாய் அடிப்படையில் சர்க்கரை விநியோகம் அமையலாம் என பரவலாக கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தாலும், அம்முறை ஓரளவுக்கு எல்லோருக்கும் திருப்தியளிக்கும் என்பதாலும், நகர்ப்புற மக்களுக்கு அளிக்கப்பட்ட சர்க்கரையின் அளவுக்கும், கிராமப்புற மக்களுக்கு அளிக்கப்பட்ட சர்க்கரையின் அளவுக்கும் இடையே இருந்தமிகப்பெரிய ஏற்றத்தாழ்வு ஓரளவுக்கு குறைக்கப்படும் என்பதாலும், 1—3—81 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வருமான அடிப்படையில் சர்க்கரை விநியோகம் செய்யலாம் என நன்கு ஆய்ந்த பிறகே அரசு முடிவு எடுத்தது.

4. மேற்கண்ட முடிவின்படி நகர்ப்புறத்தில், ஒரு குடும்ப அட்டைக்கு, ஒரு மாதத்திற்கு, மாத வருமானம் ரூ. 1,000-ம் அதற்கு மேலும் உள்ளோர்க்கு 5 கிலோ சர்க்கரையும்; ரூபாய் 500 முதல் ரூபாய் 999 வரை மாத வருமானம் உள்ளோர்க்கு 3 கிலோ சர்க்கரையும்; ரூபாய் 499 வரை மாத வருமானம் உள்ளோர்க்கு 2 கிலோ சர்க்கரையும் வழங்கப்படுகின்றது. கிராமப் பகுதிகளில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு மாத வருமானம் ரூபாய் 1,000-மும் அதற்கு மேலும் உள்ளோர்க்கு 3 கிலோ சர்க்கரையும், ரூபாய் 500 முதல் ரூபாய் 999 வரை மாத வருமானம் உள்ளோர்க்கு 2 கிலோ சர்க்கரையும், ரூபாய் 499 வரை மாத வருமானம் உள்ளோர்க்கு 1 கிலோ சர்க்கரையும் வழங்கப்படுகிறது. இப் புதிய முறையினால் கிராமத்தில் உள்ளோர்க்கு விநியோகிக்கும் சர்க்கரையின் அளவு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.



5. சர்க்கரை தட்டுப்பாடு இருக்கும் வரை எந்த விதக் கட்டுப்பாடு முறையைப் பின்பற்றினாலும் ஒரு சில புகார்களுக்கு இடம் ஏற்படத்தான் செய்யும். குடும்பத்தினர் எண்ணிக்கையின் அடிப்படையிலும் நுகர்வோர் வாழும் பகுதிகளின் அடிப்படையிலும், சர்க்கரை விநியோக முறையை நம்மாநிலத்தில் முன்பு நடத்திப் பார்த்தோம். அப்போதும் சிலர் அதிருப்தி தெரிவித்தார்கள். அந்த அனுபவங்களைக் கருத்தில் கொண்டும், நகர்ப்புற மக்களுக்கு அளிக்கப்படும் சர்க்கரையின் அளவுக்கும், கிராமப்புற மக்களுக்கு அளிக்கப்படும் சர்க்கரையின் அளவுக்கும் இடையே உள்ள மிகப் பெரிய ஏற்றத் தாழ்வை ஓரளவு குறைப்பது நியாயமானது மட்டுமல்ல, அவசியமானதுமாகும் என்று கருதியதால், வருமான அடிப்படையில் சர்க்கரையை விநியோகிக்கும் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு விநியோக முறையை சீர்படுத்துவதில் எந்த மாற்றமும் முழு மன நிறைவை அளிக்காது என்பதையும் தங்களுக்குக் கிடைத்து வந்த சர்க்கரையின் அளவு குறைந்து விட்டதை நகர்ப்புற மக்கள் வரவேற்கமாட்டார்கள் என்பதையும். அரசு உணர்ந்தேதான் செயல்பட்டது. மைய அரசிடமிருந்து கூடுதல் அளவு சர்க்கரை ஒதுக்கீடு கிடைக்கும் வரை இந்த நிலை நீடிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சர்க்கரை விநியோகத்தில் ஏகப்பட்ட அதிருப்தி ஏற்பட்டுள்ளது. ஜனதா கவர்ன்மெண்ட் இருக்கிற நேரத்திலே அத்தனை பேருக்கும் ஒரே மாதிரியாக, வீட்டிலே உள்ள நபர்களுக்கு, எண்ணிக்கை அடிப்படையிலே ஒரு ஆளுக்கு 450 கிராம் என்ற அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டது. ஓரளவுக்கு அது எல்லோருக்கும் திருப்தியாக இருந்தது. இப்பொழுது நகரத்தில் உள்ளவர்களுக்கு 5 கிலோ என்றும், கிராமங்களில் பஞ்சாயத்திலே வசிக்கிறவர்களுக்கு 1 கிலோ என்ற முறையிலே ஒரு மாற்றம் கொண்டுவந்து அதிலே ஒரு அதிருப்தி நாட்டிலே உள்ளது. இப்போது என்னவென்று சொன்னால் வருமானத்தின் அடிப்படையிலே, ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ என்றும்; 500-க்கு மேல் இருப்பவர்களுக்கு 3 கிலே என்றும், அதற்கு கீழே உள்ளவர்களுக்கு ஒருகிலோ என்றும் இப்படி மாற்றம் கொண்டு வரப்பட்டதின் காரணமாக பழைய கார்டு வைத்

திருப்பவர்கள் எல்லாம் வருமானத்தை யாரிடம் சென்று மாற்றி வாங்குவது என்று தெரியவில்லை. வருமானத்தை எந்த கணக்கு வைத்து, எப்படி கொடுக்கிறது என்று தெரியவில்லை. கிராமத்தில் உள்ளவர்களுக்கு என்ன கணக்கு வைத்து கொடுக்க முடியும். ஒரு வருடம் வருமானம் வரும், இன்னொரு வருடம் வருமானம் வராது. உத்தியோகம் பார்க்கிறவர்கள், சம்பளம் பெறுகிறவர்கள் இப்படிப்பட்டவர்கள் இவ்வளவு வருமானம் என்று கொடுத்து விடுவார்கள். ஆகவே வருமானம் எவ்வளவு என்ற கணக்குக் கொடுக்க முடியாத வியாபாரிகளும் மற்றவர்களும் வருமானக் கணக்கைக் கொடுத்து சக்கரையை வாங்கமுடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்படுவதிலே குழப்பம் ஏற்படுகிறது. வருமானத்தின் அடிப்படையிலே என்று சொல்கிறபோது நகரத்திலே அது ஒரு மாதிரியும், கிராமத்திலே அது ஒருமாதிரியும் இருக்கிறது. வருமானம் அதிகமாக உள்ளவர்கள் அதிக விலைகொடுத்து வாங்கிக் கொள்ள முடியும். இம்மாதிரி குழப்படியான நிலைமை உள்ளதால் ஒரேமாதிரியாக கொடுக்கக்கூடிய முறையிலே வியோகம் செய்ய அரசு முன் வருமா? வசதியுள்ளவர்கள் அதிகம் வேண்டுமானால் மீதியை கள்ள மார்க்கட்டிலே வாங்கிக்கொள்ளட்டும், ஆகவே அந்த அடிப்படையிலே ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒரேமாதிரியான நியாயத்தின் அடிப்படையிலே கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையிலேதான் முடிவு எடுக்கப்பட்டது. சென்னை நகரத்திலேயும், சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலேயும் வசதி படைத்தவர்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சர்க்கரை பயன்படுத்தாத குடிசை வாழ் மக்களுக்கும் 5 கிலோ சர்க்கரை என்று வைக்கப்பட்டிருந்தது. மாவட்டத் தலைநகர்களில் புறநகரப் பகுதிகளிலேயும் யாராக இருந்தாலும் 3 கிலோ என்று இருந்தது. டவுன் பஞ்சாயத்துக்களிலேயும் சிற்றூர் பஞ்சாயத்துகளிலேயும் ஒரு கிலோ என்று இருந்தது. அங்கே உள்ளவர்கள் ஒரு கிலோவை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றும் டவுன் பஞ்சாயத்துகளிலே இருக்கிறவர்களும், தஞ்சை, திருச்சி போன்ற பெருநகர்களிலே, நகராட்சிகளிலே இருக்கிறவர்கள் 3 கிலோ எங்களுக்குப் போதாது என்றும் தெரிவித்த குறைபாட்டின் அடிப்படையிலேயும், வேறு பல மாநிலங்களிலே உள்ள முறைகளின் அடிப்படையிலேயும் வருமானத்தின் அடிப்படையிலேயும் வைத்தோம். அதிகமான அளவுக்கு சர்க்கரை கிடைக்குமானால் 5 கிலோவோடு விட்டு விடலாம். இன்றைக்கிருக்கிற நிலைமைகள் என்னவென்றால்



5 கிலோ வாங்குகிறவர்கள் சாதாரண மக்கள் பயன்படுத்தாத மக்கள் ஓட்டல்களுக்கும் மற்றவர்களுக்கும் அதை கள்ளச்சந்தையிலே விற்று காசு சம்பாதிக்கிற நிலைமை எல்லாம் இருக்கிறது என்று சொன்னார்கள். நமக்கு 19,790 டன்தான் ஒதுக்கிவருகிறார்கள். எவ்வளவு கேட்டும் கூடுதலாக ஒதுக்குகிற நிலைமை இல்லை. ஆகவேதான் ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு வருமானம் வாங்குகிறவர்களுக்கு 5 கிலோ என்றும் 500 ரூபாய் முதல் 999 ரூபாய் வரையில் உள்ளவர்களுக்கு 3 கிலோ என்றும் 500 ரூபாய்க்கு கீழே உள்ளவர்களுக்கு 2 கிலோ என்றும் சென்னையிலே ஆக்கியிருக்கிறோம். அதிலே மிச்சப்படுகிற சர்க்கரையை எடுத்து வேறு எந்த வகையிலும் பயன்படுத்துவது இல்லை. கிராமப் புறங்களிலேயும் வெளியில் கேட்பவர்களுக்குப் பயன்படுத்துகிற அளவுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு 3 கிலோ சர்க்கரையும் அதற்குக் குறைவாக 500 ரூபாய் முதல் 999 ரூபாய் வரையில் உள்ளவர்களுக்கு 2 கிலோ சக்கரையும் 500 ரூபாய்க்கு கிழே வருமானம் உள்ளவர்களுக்கு 1 கிலோ சக்கரையும் கொடுக்கிறோம். 19,790 டன்னையும் அவ்வாறு பகிர்ந்து அளிக்கிற முறையினை நாம் மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே மேற்கொண்டு சர்க்கரை கிடைக்கிற நிலைமை ஏற்பட்டால் கூடுதலாக்கலாம். ஒவ்வொரு குடும்ப அட்டையிலும் வருமானத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வருமானத்தைத் திருத்திக் கொள்வதற்கு வாய்ப்புத் தந்திருக்கிறோம். குடும்ப அட்டையிலே 4, 5 பேர்களுக்கும் சேர்த்து 1000 ரூபாய் வருமானம் என்று கொடுத்தால் அந்த அடிப்படையிலே 5 கிலோ வழங்கலாம் என்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது. சீரான முறையை ஏற்படுத்த வேண்டுமென்று தான் இந்தத் திட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையிலே நம் மாநிலம் முழுவதும் ஏறக்குறைய 1 கோடியே 50 ஆயிரம் குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. அவற்றில் கிராமப் பகுதிகளிலேயும் நகரியப் பஞ்சாயத்துப் பகுதியிலேயும் 77 லட்சம் குடும்ப அட்டைகளும், நகரப் புறங்களிலே 28 லட்சம் குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களிலே வழங்கப்படுகிற சர்க்கரையின் அளவு 7,700 டன் தான், அதாவது 77 லட்சம் அட்டைகளுக்கு 7,700 டன்கள்தான், ஆனால் நகரப் புறங்களிலே 28 லட்சம் அட்டைகளுக்கு வழங்கக்கூடிய சர்க்கரையின் அளவு 12,090 டன் ஆகும். இந்தப் பாரபட்சத்தை அடிப்படையிலே போக்க வேண்டுமென்றுதான் இப்படிப்பட்ட மாற்றங்கள் செய்யப் பட்டிருக்கிறது என்று சொல்லப் படுகிறபோது கிராமப் புறங்களிலே உள்ளவர்களுக்கு 3, 2, 1 கிலோ என்றும் நகரப்

புறங்களிலே 5, 3, 2 என்றும் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது இதன் விளைவு எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி ஏற்கனவே கிராமப்புறங்களிலே எந்த அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதற்கு பாதி அளவுக்குத்தான் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதுதான். சர்க்கரை அங்கே அதிகமாக மிஞ்சுகிறது என்ற நிலைமை ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கக்கூடிய முறையிலே அரசாங்கம் ஒரே சீரான முறையை கையாள்கிற முறையிலேயும் அதிகமான வருமானம் உள்ளவர்கள் அதிகப் பணம் கொடுத்து சர்க்கரை வாங்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள் என்பதால் நபர்கள் அடிப்படையிலே சர்க்கரையை விநியோகம் செய்யக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

[முற்பகல் 10—40]

இரண்டாவதாக, எது எது நகர்ப்புறம், எது எது கிராமப் புறங்கள் நகரப் பஞ்சாயத்துக்கள் என்பது நகர்ப்புறத்தில் அடங்குமா, அடங்காதா நகரப் பஞ்சாயத்துக்கள் நகர்புறத்தில் அடங்கும் என்ற முறையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஏற்கனவே எல்லோருக்குமே 5 கிலோ கொடுக்கப் பட்டது. ஆனால் இப்பொழுது 1,000 ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ கொடுக்கப்படுகிறது. 500 ரூபாய் முதல் 999 ரூபாய் வரை மாத வருமானம் உள்ளவர்களுக்கு இரண்டு கிலோவை இப்பொழுது எடுத்து விட்டோம். 500 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களுக்கு ஏற்கனவே 5 கிலோ கொடுக்கப்பட்டதிலிருந்து 3 கிலோவை எடுத்து விட்டோம். அந்த 3 கிலோ, 2 கிலோக்களைக் கிராமப்பகுதி மக்களுக்குத் தான் தருகிறோம். டவுன் பஞ்சாயத்துக்களிலும், முக்கியமான நகரங்களிலும் ஆயிரம் ரூபாய்க்குமேல் வருமானம் உடையவர்கள் இருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ ஏன் தருகிறோம் என்றால், அதிகப்படியான காப்பி குடிக்க வேண்டிய அவசியத்தில் சர்க்கரையைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் வருகின்ற விருந்தாளிகளைப் பார்த்து காப்பி குடிக்கிறீர்களா என்று கேட்க வேண்டிய அவசியம் இருப்பதாலும் தான் கொடுக்கிறோம். ஆனால் எல்லா உறுப்பினர்களும் ஒப்புக் கொண்டால் 1,000 ரூபாய்க்கும் மேல் வருமானம் உடையவர்களுக்கு இந்த ரேஷனே கிடையாது என்று முடிவு கட்டி விட்டு, அதற்குக் கீழே இருப்பவர்களுக்குத்தான் ரேஷன் என்று வைக்கலாம் என்பதை எல்லா உறுப்பினர்களும் ஒப்புக் கொண்டால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இதனால்



அவர்கள் இடர்ப்படுவார்கள், வெளியே வாங்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படும் என்பதால் யோசித்துச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். கூடுமானவரையில் பங்கீட்டு முறையில் ஒதுக்கீட்டை அதிகப்படுத்தும் படியாகக் கேட்டிருக்கிறோம். 19,790 டன் என்பது 30,000 டன் என்ற அளவிற்கு வளருமேயானால் இந்தக் குறைபாடுகளை ஓரளவுக்கு நிவர்த்திக்க முடியும். அதை வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

**திரு. இரா. கருப்பையா :** நகரப் பஞ்சாயத்தையும் நகரத்தோடு சேர்ப்பது பற்றிக் கேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சென்னை நகரம், சென்னை நகரத்தை சுற்றியுள்ள பகுதிகள் என்று ஒரு இனத்திலே சேர்க்கிறோம் பெரு நகரங்கள், நகராட்சிப் பகுதிகள் எல்லாம் நகராட்சி என்று வருகிறது. டவுன் பஞ்சாயத்து என்பதில், நகரப் பஞ்சாயத்தாக இருக்கிற நகர நகரியத்தை நகரத்தோடு சேர்க்கிறோம், பஞ்சாயத்து நகரியத்தை பஞ்சாயத்தோடு சேர்க்கிறோம்.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அவையிலே வைக்கப்பட்ட அறிக்கையின்படி, மத்திய அரசு நம்முடைய மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்து வருகின்ற அளவு குறைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் சம்பள அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுவதால், 5 கிலோ வாங்கியவர்களுக்கு 3 கிலோதான் கிடைப்பதால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். 1975ஆம் ஆண்டு சம்பளத்தின் அடிப்படையில் முன்பு ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுடைய வருமானத்தில் கணிசமான உயர்வு ஏற்பட்டிருப்பது நமக்கெல்லாம் தெரியும். இப்பொழுது அந்த வருமான உயர்வின் அடிப்படையில்; ரேஷன் கார்டுகளில் மாற்றம் செய்ய வேண்டுமென்று உதவி ஆணையாளர் (சிவில் சப்ளைஸ்) அலுவலகத்திற்குச் செல்லும்பொழுது சர்க்கார் அலுவலகங்களில் கொடுக்கப்படுகின்ற சம்பளச் சான்றிதழை ஏற்று கொள்கிறார்கள். ஆனால் அசோக் லேலண்ட், சிம்சன் போன்ற தனியார் கம்பெனிகள், தனியார் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் வேலை செய்யும் சாதாரணத் தொழிலாளர்கள்கூட ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், அவர்கள் கொடுக்கின்ற சான்றிதழ்கள் ஏற்கப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி. ஆகியவற்றை மட்டும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் வீட்டு வாடகைப்படி, சிட்டி அலவன்ஸ், மாதாமாதம் பெறுகின்ற இன்செண்டிவ் போனஸ், ஆண்டு தோறும் பெறுகின்ற போனஸ் ஆகியவை கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் வருமான வரி இலாகா

வினர் இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். மாநகராட்சியிலும்கூட தொழில் வரிக்குக்கூட இதை கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். எனவே, இதற்காக வேறு ஏதாவது உத்தரவு இட்டு, அந்த வருமானத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று—கிராஸ் இன்கம்மை ஏற்று கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டிலே அல்லது 1977 ஆம் ஆண்டிலே அவர்கள் குறிப்பிட்ட வருமானத்தை எழுதி, அதற்குப் பிறகு மாற்றாமல் இருக்கிறார்கள். அதை உடனே மாற்றி, இப்பொழுதுள்ள வருமானத்தை அவர்கள் குறிக்கலாம் என்று எடுத்துச் சொல்லி இருக்கிறோம். ஒரு குடும்பத்திலே 4, 5 பேர் இருந்தால், குடும்ப அட்டை என்பதால், அந்த 4, 5 பேருடைய வருமானத்தைச் சேர்த்து, கூட்டியும் தரலாம் என்று சொல்லியிருக்கிறோம்.

வருமானத்தை இப்படிதான் வைக்க வேண்டும் என்பதற்கு ஒரு பொது நியதி இருக்கிறது. ஸ்காலர்ஷிப் தருவதாக இருந்தாலும் வருமானத்தினுடைய அளவு எவ்வளவு என்று நிர்ணயிக்க ஒரு நியதி இருக்கிறது. மற்றவைகளுக்கெல்லாம் வருமானம் என்ன என்று கேட்கும்போது, அதை நிர்ணயிக்க ஒரு நியதி இருக்கிறது. அந்த விதிமுறைகளின் அடிப்படையிலேதான் இதற்கும் வருமான அடிப்படை கொடுக்கப்படுகிறதே தவிர, இதற்கென்று ஒரு தனி வருமான நியதிகளை வைத்து , மற்றவைகளுக்கு வேறு விதிமுறைகள் என்றில்லை. அவையெல்லாம் மாற்றப்படுமேயானால், இதற்கும் நாம் மாற்றலாம். ஆகவே, இதற்கு மட்டும் மாற்றி, ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு விதமான வருமான விதிமுறைகளை வைக்க இயலாது. அடிப்படை வருமானம் எவ்வளவு என்பதை அறிந்துகொள்ள இருக்கிற விதிமுறைகள் என்னவோ, அதைத் கடைப்பிடித்து வருகிறோம்.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் வருமான அடிப்படையை இதற்கென்று தனியாக மாற்ற வேண்டுமென்று சொல்லவில்லை. வருமான வரி கணக்கிட எடுத்துக் கொள்வதைப் போல், நம்முடைய மாநகராட்சித் தொழில் வரி வசூலிக்கக் கணக்கிடுவதை போல இதற்கும் பொதுவாக இருக்க வேண்டுமென்றுதான் சொல்கிறோம். இதிலே மட்டும் தனிக்கவனம் செலுத்தி, அடிப்படைச் சம்பளம் பஞ்சப்படி மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். அது கூடாது மற்றவைகளுக்கு பொதுவாக இருப்பதைப் போல் இதற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

தனியார் நிறுவனங்களிலே, தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்றவர்கள், அந்நிறுவனங்கள் கொடுக்கும் சான்றிதழ்களைக் கொடுத்தால், அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை ஏற்றுக்கொள்ள அரசு ஆவன செய்ய வேண்டுமென்றுதான் முதலிலே கேட்டேன்.



அடுத்து, இப்பொழுது நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், குடும்பத்திலே பலர் வேலை செய்தாலும், ஒட்டு மொத்தமாக அந்தக் குடும்பத்திலே வருகின்ற வருமானத்தை எடுத்து கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவல்படி அது தவறான தகவல். ஒரு குடும்பத்திலே ஆண், பெண் இருவரும் வேலை செய்தால், அதில் அதிகமாக வருமானம் பெறுகின்றவருடைய வருமானத்தைத் தான் எடுத்து கொள்கிறார்கள். மொத்தமாக, ஒரு குடும்பத்திலே வருகிற அத்தனை பேருடைய வருமானத்தை கணக்கிடவில்லையென்று எனக்கு உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலையிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த நிலையை நிச்சயமாகக் கடைப்பிடிக்கிற அளவுக்கு உத்திரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த நிலை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கடைபிடிக்காவிட்டால், அதைக் கடைப்பிடிப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம். குடும்ப அட்டை என்று ஒருவருக்கு மட்டும் நாம் தரவில்லை. குடும்பம் என்று சொல்லும்போது, அதிலே வருகின்ற 4, 5 பேருக்கும் சேர்த்துத்தான் அட்டை தருகிறோம். 4, 5 பேருக்கு ஒரு குடும்பக் கார்டு என்றால், அந்த 4, 5 பேருடைய வருமானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அது எடுத்துக்கொள்ளப்படாமலிருக்குமேயானால், அதைப்பற்றி அரசு கவனித்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, வருமான வரியினர் என்ன வருமானம் என்று எந்த அடிப்படையில் கேட்கிறார்களோ, அல்லது, மாநகராட்சி மன்றம் என்ன வருமானம் என்று எந்த அடிப்படையில் கேட்கிறதோ, அதே அடிப்படையில், இதைக் கேட்பதற்கான முயற்சிகளை அரசு செய்யும். ஆக, என்ன நிலைமை என்பதை ஆராய்ந்து, வருமான வரியினர் வருமானத்தை நிர்ணயிக்க என்ன அடிப்படை என்பதை வைத்திருக்கிறார்களோ, அதை இதற்கும் வைத்துக்கொள்ள ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. து. புருஷோத்தமன் :** அரசு அலுவலர்களில் கொடுக்கிற சான்றிதழை ஏற்றுக் கொள்கிறார்கள். தனியார் அலுவலகங்களிலே கொடுக்கின்ற சான்றிதழை ஏற்றுக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வருமான வரித்துறையினர் எப்படி எடுத்துக்கொள்கிறார்களோ, மாநகராட்சிமன்றம் எந்த விதியின் அடிப்படையிலே எடுத்துக்கொள்

கிறதோ, அதே விதிமுறைகளின் அடிப்படையிலே, இதையும் எடுத்துக்கொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. அதைப் பற்றி விசாரித்து, ஆராய்ந்து, தக்க முடிவுகளை எடுக்கலாம் என்று நான் சொன்னேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே நான் கவனப்படுத்த விரும்புவது, இன்றைக்கு நகர்ப்புறங்களிலே வாழக்கூடிய குறைந்த வருமானமுடையவர்கள், மிடில்கிளாஸ் என்று சொல்கிற, மத்திய குடும்பத்தினர், அதைப் போலவே, அப்பர் மிடில் கிளாஸ், மத்திய தர வகுப்பினருக்கு சற்று மேலே வருமானம் பெறக்கூடியவர்கள், இவர்களுக்கெல்லாம் சர்க்கரையிலே ரொம்ப தூரம் அக்கறை ஏற்பட்டிருக்கிறது. காரணம், குறைந்த வருமானம் இருக்கிற காரணத்தாலே, குடும்பத்திலே ஏராளமான உறுப்பினர்கள் இருக்கிறபொழுதும் கிடைக்க வேண்டிய சர்க்கரை கிடைக்காமல் போகிறது. ஏற்கனவே இருந்த விதிமுறைப்படி 5 கிலோ சர்க்கரை எல்லா குடும்பத்தினருக்கு கொடுத்து வந்ததை மாற்றி, இப்பொழுது வருமானத்தின் அடிப்படையிலே, ஆயிரம் ரூபாயும், அதற்கு மேலும் வருமானம் உள்ளவர்களுக்கு 5 கிலோ சர்க்கரை என்றும், ரூ. 500-க்கு மேல் ரூ. 999 வரை வருமானம் வந்தால் அவர்களுக்கு 3 கிலோ சர்க்கரை என்றும், அதே போல் , ரூ. 499 வரைக்கும் வருமானம் உள்ளவர்களுக்கு 2 கிலோ சர்க்கரை என்றும் குறைக்கப்பட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. காரணம், இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர்களிலே பலபேர் வசதியானவர்கள் அல்ல. மாளிகைக்காரர்கள் மட்டும்தான் அரசியலிலே இருந்த நிலை மாறி, மண் குடிசையிலே உள்ளவர்கள்கூட சட்டமன்ற உறுப்பினர்களாக வருகின்ற இந்தக் கால கட்டத்திலே, அவர்களுடைய மாத வருமானம் ரூ. 750 தான். வேறு வழிகளில் வருமானமில்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் கூட இருக்கிறார்கள். வசதியான வருமானத்தைப் பெறுகின்ற வாய்ப்பில்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களாக பொதுப் பணியிலே இருப்பவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு மாத வருமானம் ரூ.750 தான். நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அடிப்படையைப் பார்த்தால் , ரூ. 1,000-க்குக் கீழே வருமானம் கிடைக்கக்கூடியவர்களுக்கு 5 கிலோ சர்க்கரைக் கூடக் கிடைக்காது. 3 கிலோ சர்க்கரைதான் கிடைக்கிறது. அதை வைத்து சமாளிக்க முடியாது. அதைப் போல், நடுத்தர வகுப்பினர் நகரப்புறத்திலே ஏராளமாக இருக்கிறார்கள். ரூ. 800-க்குக் கீழே, ரூ. 500-க்குக் கீழே வருமானம் பெறுகிறவர்கள் இருக்கிறார்கள். அதே போல், ரூ. 300 ரூ. 400 வருமானம் பெறுகின்றவர்களுடைய குடும்பங்களிலே, அவர்கள் செய்யக்கூடிய காரியம் வருமானத்தைப் பெருக்குவதுதான். அதிகமான உறுப்பினர்கள் இருக்கின்ற சூழ்நிலையிலே அந்தக் குறைந்தபட்ச



வருமானத்தை வைத்துக்கொண்டு, ஓப்பன் மார்க்கெட்டிலே சர்க்கரை வாங்க இயலவில்லை. ஓப்பன் மார்க்கெட்டிலே சர்க்கரை விலை ரூ. 13, 12-ஆக இருக்கிறது. ரேஷன் கார்டுக்குக் கொடுக்கப்படும் சர்க்கரையின் விலை கூட உயர்ந்திருக்கிறது. ஆகையினாலே, நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து கேட்க விரும்புவதெல்லாம், குடும்ப அடிப்படையிலே உறுப்பினர்களுடைய கணக்கு அடிப்படையிலேதான் தரவேண்டும். தவறு இருந்தாலும் அதைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், ஆகவே, வருமான அடிப்படையிலே சர்க்கரை கொடுக்கும் இந்தத் திட்டத்தை ரத்து செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

[முற்பகல் 10-50]

ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். இன்றைக்கு—குறிப்பாக—குடிசையில் வாழ்பவர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள் ஆகியோர்க்கு எல்லாம் சர்க்கரையைக் காட்டிலும் அரிசிதான் மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு எல்லாம் அரிசி கொடுப்பதை அதிகப்படுத்தி, மிடில் கிளாஸ், அப்பர் மிடில் கிளாஸ் போன்றவர்களுக்குக் கொடுக்கப்படும் சர்க்கரை கோட்டாவை அதிகப்படுத்திக் கொடுக்கவும் அரசு முன்வருமா ? அதைப்போலவே வருமான அடிப்படையில் இல்லாமல், குடும்ப உறுப்பினர்களின் அடிப்படையில் சர்க்கரை வழங்க அரசு முன்வருமா என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சென்ற சில பல ஆண்டுகளாக இங்கே சென்னையில் இருந்துவருகிற நிலைமை ஒரு குடும்ப அட்டைக்கு 5 கிலோ சர்க்கரை என்றும், மற்ற இடங்களில் ஒரு கிலோ என்றும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல், எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் என்று வைத்துக்கொண்டால் அத்தனை பேருக்கும் 5 கிலோ தரவேண்டும். அத்தனை பேருக்கும் 5 கிலோ தரவேண்டும் என்று சொன்னால் எனக்கு 90,000 டன் சர்க்கரை வழங்கப்படுமானால் செய்யலாம். ஏற்கனவே இருக்கின்ற நிலையில் கூடுதலாக நியாயம் செய்ய வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இந்த மாற்றங்களைச் செய்து இருக்கிறோம். இத்தகைய முறையில் நியாயம் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடி மட்டத்தில் இருப்பவர்களுக்குச் சர்க்கரைக்குப் பதிலாக அரிசி கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அது சாத்தியமற்றதாக இருக்கிறது. அரிசிக்கும் சர்க்கரைக்கு உள்ள நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவேதான் முன்பு 30 கிலோ அரிசி கொடுக்கப்பட்டு வந்ததை,

24 கிலோ அரிசி என்று குறைத்து இருக்கிறோம். உணவுக்கு வேலை திட்டத்திற்காக மத்திய அரசு ஒதுக்கி வந்த அரிசிக்குப் பதிலாக, எங்களிடத்தில் அரிசி ஸ்டாக் இல்லாததால் பணம் கொடுத்து விடுகிறோம், அந்த மாநிலத்தில் உள்ள உணவுப் பொருள்களை வாங்கிக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழும் அரிசி வராததால் இரண்டாவது கருத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தற்போது பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்க முடியாது.

திரு என். வி. என். சோமு : தலைவர் அவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் சில விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்து கொள்ளப்பட்டு விவாதத்தில் இருக்கிற நேரத்தில் 10.15 மணிக்கு வந்து விட்டு, உடனே ஒரு பிரச்னையை அனுமதிக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அமைதியாகப் பேரவையை நடத்துவதற்கு ஒத்துழைக்கவில்லை என்றால், நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(ஆ) பவானி சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்களது வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் தி. கா. நல்லப்பன், எம். ஆறுமுகம் ஆகியோர் ஒரே பொருள் பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, "பவானியிலுள்ள சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்துவருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,





அறிக்கை

பெரியார் மாவட்டம் பவானி வட்டாரத்திலுள்ள கைத்தறி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். அந்தப் பகுதியில் சுமார் 150 ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிக்கும் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் ஏறக்குறைய 10,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

தற்போதுள்ள விலைவாசி உயர்வைக் காரணம் காட்டி, அடிப்படை ஊதியத்தில் அதிகப்படியாக 25 சதவீதம் உயர்வு கோரி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இத்தொழிற்தகராறில் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளார். நிர்வாகத்தினர், பவானி வட்டார கைத்தறி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்போர் மற்றும் வியாபாரிகள் சங்கம் மூலமாகவும், தொழிலாளர்கள் ஏ. ஐ. டி. யூ. சி., அண்ணா தொழிற்சங்கப் பேரவை, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை மற்றும் சி. ஐ. டி. யூ. ஆகியவற்றுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் மூலமாகவும் இத்தொழிற்தகராறு குறித்த சமரசப் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்கிறார்கள்.

கோவை தொழிலாளர் துறை ஆணையர் முன், கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் அன்று நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தைகளின்போது நிர்வாகத்தினர் 10 சதவீதம் ஊதிய உயர்வு கொடுக்க முன் வந்தனர். இதனை தொழிலாளர்கள ஏற்க மறுத்துவிட்டனர். எனவே ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை, பேச்சு வார்த்தைகள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இடையில் நிர்வாகத்தினருக்கும், ஏ. ஐ. டி. யூ. சி. நீங்கலாக மற்ற தொழிற்சங்கங்களும் நடத்திக் கொண்ட நேரடிப் பேச்சு வார்த்தைகளின் விளைவால் 15 சதவீதம் ஊதிய உயர்வுக்கு இருதரப்பாரும் ஒப்புக் கொண்டு இரண்டு வருட காலத்துக்கு ஒப்பந்தமிட்டுக்கொள்ள சம்மதித்து, இதன் அடிப்படையில் தொழிற்தகராறு சட்டம், 1947 பிரிவு 12 (3)-ன் கீழ் ஒப்பந்தம் கையொப்பமிட கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று ஆஜரானார்கள். ஏ. ஐ. டி. யூ. சி. யுடன் சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஒப்பந்தத்தில் விடுபட்டுப் போகும் நிலையிருந்தால் கோவை தொழிலாளர் துறை ஆணையர் 12 (3) ஒப்பந்தம். கையொப்பமிடுவதை ஒத்திவைத்து இரு தரப்பினரையும் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாளன்று பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார். வேலை நிறுத்தம் தொடர்கிறது. நிலைமை சீராக உள்ளது.

[1981 ஏப்ரல் 6

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, கடந்த 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாள் நடைபெற்ற ஒரு ஒப்பந்தத்தில் 1980 ஆம் ஆண்டு தீபாவளிக்குப்பின் கூலி என்றும் அதற்கு பிறகு பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்றும் ஈரோடு தொழிலாளர் நல அதிகாரி முன்னிலையிலும், ஈரோடு பெரியார் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி முன்னிலையிலும் கோவை வட்டாட்சியர் முன்னிலையிலும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தீபாவளிக்கு முன்னால் தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, தீர்வு கண்டிருக்க வேண்டும். அப்படி தீர்வு காணத் தவறிவிட்டதால் பவானி வட்டத்தில் கைத்தறி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் பிறகு தொழிலாளர்கள் 25 சதவீதம் கூலி உயர்வு வேண்டுமென்று கேட்டு, முதலாளிகள் 10 சதவீதம் அதிகமாக கொடுக்கமாட்டேன் என்று கூறி இடையிலே தொழிலாளர் நல அமைச்சர் 15 சதவீதம் கூலி உயர்வு என்று பேசித் தீர்க்கப்பட்டு இருப்பினும் அந்த உயர்வு இரண்டு ஆண்டுக் காலத்திற்கு என்று ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று உரிமையாளர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இன்று ஏறிவருகின்ற விலைவாசி காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு என்பது சாத்தியமில்லை என்று சொல்லி, தொழிலாளர்கள் மறுத்திருக்கிறார்கள். ஆகவே 10,000, தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த வேலை நிறுத்தத்தை முடிவாக்க அரசுத் தரப்பில் சரியான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சனைகள் எல்லாம் மனதிலே கொள்ளப்பட்டு, இன்றையதினம் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் அன்று கோவை தொழிலாளர் துணை ஆணையர் முன்னால் பேச்சுவார்த்தை நடக்க உள்ளது.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, பவானியில் நடைபெற்று வரும் ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்பு தொழிலாளர்கள் போராட்டம் சம்மந்தமாக அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையில் ஏ. ஐ. டி. யு. சி. சங்கத்தைத் தவிர மற்ற அனைத்துச் சங்கங்களும் இரண்டு ஆண்டுக்கு 15 சத வீதம் சம்பள உயர்வுக்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள் என்றும் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாளன்று பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், பவானி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்புத் தொழிலாளர்கள் இன்று ஏறி



1981 ஏப்ரல் 6] [திரு. எம். ஆறுமுகம்]

இருக்கிற விலைவாசி காரணமாக மெஜாரிட்டி சங்கமான ஏ. ஐ. டி. யு. சி. இந்த ஒப்பந்தத்திற்கு மறுப்பு தெரிவித்திருக்கிற போது மீண்டும் கோவையில் இருக்கிற ஸ்பெஷல் டிபுடி கமிஷனர் முன்னால் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு ஒரு சுமுகமான தீர்வு காண அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஒரு பெரிய சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால், அனைவரும் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டால் நலமாக இருக்கும் என்று கருதி, கோவை துணை ஆணையர் இன்றையதினம் பேச்சுவார்த்தை நடத்த எல்லோரையும் அழைத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (ஆ) மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவ பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் குறிப்பிட்ட எதுவும் அவைக்குறிப்பில் இடம்பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

#### (அ) மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற நிலையிலேயே இதை நான் சார்ந்திருக்கிற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் எதிர்க்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

I want to express that this Government has neither the moral nor the legal sanction to introduce the Bill.

[முற்பகல் 11.00]

அந்த சட்டத்தின் அடிப்படையிலே இந்த அரசாங்கத்திற்கு இந்த சட்ட முன்வடிவை இந்த அவையின் முன் அறிமுகம் செய்வதற்கு உரிமை இல்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த சட்டத்தினுடைய தலைப்பிலே

Further to amend the Tamil Nadu Prohibition Act 1937.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் அந்த சட்டம் திறம் பட செயல்படுவதற்குரிய வகையிலே சட்டத்திலே ஒப்புக்கொள்ளப்பட்ட வகையிலேதான் சட்ட திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமே அல்லாது அதனுடைய அடிப்படை நோக்கத்தையே தகர்க்கக்கூடிய அளவிலே கொண்டுவரப்படக்கூடாது. அப்படிக் கொண்டு வருவது சட்டப்படி எப்படி நியாயமாகும் என்பதை நான் இங்கே தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

1937 ஆம் ஆண்டு மாண்புமிகு ராஜாஜி அவர்கள் இந்த சட்ட முன்வடிவை இங்கே அறிமுகம் செய்கின்றபோது

The Bill is intended to authorise and facilitate a real step towards the removal of the drink evil in this Province.

என்று சொல்லித்தான் அறிமுகம் செய்திருக்கிறார்கள். ஆனால் இப்போது கொண்டுவரப்படுகின்ற சட்டத்தின் மூலம் குடியை நியாயம் செய்வதற்கு கொண்டு வரப்படுகின்றது. தயவு செய்து காந்தியத்தின் அடிப்படையிலே இதை சிந்தித்துப்பார்க்கவேண்டும் ஆர்டிக்கிள் 39 ஆஃப் தி கான்ஸ்டிட்யூஷன் என்பதிலே

The State shall in particular, direct its policy towards securing that children are given opportunities and facilities to develop in a healthy manner and in conditions of freedom and dignity and that childhood and youth are protected against exploitation and against moral and material abandonment.





என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடிக்கலாம் என்று நாம் அனுமதி வழங்கினால் அது வருங்கால தலைமுறையினருக்கு எவ்வளவு பாதகமான ஒன்று என்பதைப்பற்றி நாம் எல்லாம் சிந்தித்துப் பார்க்க கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருவது ஏதோ தாலியைக் கட்டிக்கொண்டு விபசாரம் செய்வதற்கு அனுமதி கொடுப்பதுபோல் இருக்கின்றது. ஆகவே இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்யாமல் உடனடியாகவே இதை வாபஸ் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இதைச் சட்டமாகச் செய்ய வேண்டும் என்றால் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் செய்தது போல்,

either to suspend or repeal the entire Act

என்ற வகையில் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டி இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிற்கு தமிழ்நாடு காமராஜ் காங்கிரசின் சார்பிலே என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னதுபோல் இது மதுவிலக்குச் சட்டத்தின் அடிப்படை நோக்கத்திற்கு எதிராகும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அரசியல் சட்டத்தின் வழிகாட்டும் நோக்கங்கள் 47-வது பிரிவிலே தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"47. The State shall regard the raising of the level of nutrition and the standard of living of its people and the improvement of public health as among its primary duties and in particular, the State shall endeavour to bring about prohibition of the consumption except for medicinal purposes of intoxicating drinks and of drugs which are injurious to health."

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த நோக்கத்திற்கு எதிராக, அரசியல் சட்டத்திற்கு எதிராக இந்த சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வருவதை நான் எதிர்க்கிறேன்,

இந்த மன்றத்திலே மிகப்பெரிய தலைவர்களின் படங்களை எல்லாம் மாட்டியிருக்கிறார்கள். இங்கே வள்ளுவரின் படம் இருக்கின்றது. வள்ளுவர் என்ன சொல்லி இருக்கிறார் ?

" ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி "

என்று சொல்லி இருக்கிறார்.

ஒருவன் மது அருந்திவிட்டு வருவானேயானால், அதை அவனுடைய பெற்ற தாய் பார்த்தாலும் சகித்துக் கொள்ள மாட்டாள் என்று சொல்லி, பெற்றத் தாயே சகித்துக் கொள்ளாத ஒன்றை சான்றோர்கள் எப்படி சகித்துக் கொள்வார்கள் என்று இங்கே படமாக வீற்றிருக்கிற வள்ளுவர் பெருமான் கேட்டிருக்கிறார்.

அவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தலைக்கு நேராக இருக்கிற தேசத் தந்தை மகாத்மா காந்தி அடிகள் இந்த மதுவிலக்குக் கொள்கையை அவருடைய உயிர்க் கொள்கையாக கொண்டிருந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். அவருடைய படத்தை இங்கே மாட்டிக் கொண்டே மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்துகின்ற ஒரு சட்ட முன்வடிவினை அறிமுகம் செய்ய அவைத் தலைவர் அவர்கள் எப்படி அனுமதிக்கிறார்களோ என்று எனக்குத் தெரியவில்லை.

இந்தப் பக்கத்திலே மூதறிஞர் இராஜாஜி அவர்களும் பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் அவரவர்களது உருவப்படங்களில் நின்று கொண்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் இருக்கிறார். அறிஞர் அண்ணா அவர்கள் இருக்கிறார்கள். பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் அவர்களின் உருவப் படம் இருக்கிறது. மதிப்பிற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்களுடைய உருவப் படம் இருக்கிறது. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படம் இருக்கிறது. இந்த மாபெரும் தலைவர்கள் எல்லாம் எப்படி மதுவை வெறுத்தார்கள், எப்படி, மதுவிலக்கைப் பூரணமாக அமுல் நடத்த பாடுபட்டார்கள் என்பதை எல்லாம் தெரிந்து கொண்டே, அந்த மாபெரும் தலைவர்களின் உருவப்படங்களை எல்லாம், இந்த அவையிலேயே வைத்துக் கொண்டு, அவர்களுடைய எதிரில், மது விலக்கை தளர்த்துகின்ற ஒரு சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்ய நீங்கள் எப்படி அனுமதிக்கிறீர்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. அந்த மாபெரும் தலைவர்களின் ஆன்மா நிச்சயமாக இந்தக் காரியத்தை மன்னிக்காது என்பதையும் இந்தச் நேரத்திலே சுட்டிக்காட்டி, அரசுக்கு உண்மையிலேயே மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கையிருக்குமேயானால், அவர்கள் இந்த சட்ட முன்வடிவினை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும் என்று தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அன்புடனும் உரிமையுடனும் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.



திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை முன் மொழிகின்ற இந்தக் கட்டத்திலே அதை ஜனதா கட்சி முழுமையாக எதிர்க்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத் திருத்தங்கள் ஆளப்படுகிற கட்சியின் இரட்டை வேடத்தை மிகத் தெளிவாக அமுல்படுத்திக் கொண்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஒரு புறம் மதுவிலக்குக் கொள்கையில் ஆழமான அசைக்க முடியாத நம்பிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம் என்று பறையறிவித்துச் சொல்லிவிட்டு, அந்தக் கொள்கையை கைவிடுகிற உத்தேசம் இல்லை என்று பகிரங்கமாக கூறிவிட்டு, இப்பொழுது இந்தச் சட்டத்திருத்தங்களை இந்த சபைமுன் கொண்டு வர முயற்சி செய்கிற சூழ்நிலை, அந்தச் சட்டத்திலே கலப்படம் செய்வதற்கு ஒப்பாக இருக்கிறது என்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

மக்களுடைய விருப்பத்தின் பெயரால் அல்லது தாய் குலத்தின் பெயரால் இந்தச் சட்டம் தளர்த்தப்படுகிறது என்று காரணம் சொல்லப்படுமேயானால், அந்தத் தாய்க் குலத்தின் கண்ணீரைத் துடைப்பதற்கு தண்ணீரே போதும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். அதற்கு சாராயம் தேவையில்லை என்று சொல்லி, மதுவிலக்குச் சட்டத்தை மிக வேகமாகவும், உறுதியாகவும் அமுல் நடத்தப் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசே அதை தளர்த்தி, வளர்ந்து வருகிற இளைஞர் சமுதாயத்தை கெடுத்து விட வேண்டாம் என்று கேட்டு, இந்த மசோதவை தாக்கல் செய்ய வேண்டாம் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு திருத்த சட்டத் திருத்தத்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக எதிர்க்க விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையை ஆதரித்து மதுவிலக்கை பூரணமாக அமுல் செய்து, இந்த நாட்டிலே ஒரு நல்ல ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் பேரறிஞர் அண்ணாவினுடைய கொள்கை. அண்ணாவின் வழியை பின்பற்றுவதாக சொல்லும் இந்த அரசு இதனை முதற் கொள்கையாக ஏற்றுக் கொண்டு இந்த மதுவிலக்குச் சட்டத்தை தளர்த்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு கல்லூரி மாணவர்கள்தான் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதா சட்டமாக்கப்படுமேயானால், ஹைஸ்கூல் செல்லும் பிள்ளைகளும் குடிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். குறிப்பாக இது தாய்மார்களின் வாழ்வை பெரிதும் பாதிக்கும். வறுமை கோட்டிற்குக்கீழே உள்ள மக்களின் வாழ்வு இன்னும் மோசமான நிலையை அடையும் வகையில் பாதிக்கப்படும் என்று கூறி, இந்த

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1981 ஏப்ரல் 6

திருத்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும் என்று என்னுடைய இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக, வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் இங்கே இந்தச் சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 1981ஆம் ஆண்டு மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தை தாக்கல் செய்வதை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் எதிர்க்கிறேன், என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம் இந்த நாட்டிலே பல்வேறு நேரங்களிலேயும் பல்வேறு சூழ்நிலைகளிலேயும், மதுவிலக்கைப் பொறுத்த அளவில் காங்கிரஸ் கட்சியினுடைய மனப்பூர்வமான கருத்து, மதுவிலக்கு தமிழ்நாட்டிலே தீவிரமாக அமுல் நடத்தப்படவேண்டும் என்பது தான். அதை நாங்கள் பல்வேறு கட்டங்களில் வலியுறுத்திச் சொல்லி வந்தபோது எல்லாம் இந்த அரசாங்கம் நாங்கள் மது விலக்கை தீவிரமாக அமுல்படுத்த வேண்டும் என்றுதான் நினைக்கிறோம், தமிழக மக்களின் குடிபழக்கத்தை தடுக்க வேண்டும் என்றுதான் எண்ணுகிறோம், ஆனால், எங்களால் முடியவில்லை அதனால் அந்த மதுவிலக்கு சட்டத்தைத் தளர்த்தியிருக்கிறோம் என்று சொல்லி இந்த சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நாங்கள் மதுவிலக்குக் கொள்கையில் தீவிர நம்பிக்கை வைத்திருக்கிறோம். அதனால்தான் தீவிரமாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்காக 1 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் மதுவிலக்கை தளர்த்தினால் பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானமாக வரும். அதனால் அதை தளர்த்தியிருக்கிறோம் என்று சொல்வது, நீங்கள் தமிழக மக்களை ஏமாற்றுவதற்கான சூழ்ச்சியை செய்கிறீர்கள் என்று சொல்ல மாட்டேன், தமிழக மக்களின் அறிவை திசை திருப்பி அவர்களை மீண்டும் மது அரக்கனின் கையிலே ஒப்படைப்பதற்கான ஒரு குற்றத்தை செய்யவிருக்கிறீர்கள் என்று சொல்கிறேன்.

[முற்பகல் 11-10]

எனக்கு முன்னால் பேசியவர்கள் இங்கே பல கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்கள். நீங்கள் பல சந்தர்ப்பங்களில் திருவள்ளுவரை எடுத்து, காந்திஜியை எடுத்து, காமராஜர் அவர்களை எடுத்து, அண்ணா அவர்களை எடுத்து இவர்கள் உதாரணங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இந்த மதுவிலக்குக் கொள்கையில் மட்டும் இவர்களையெல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டு அது எங்கள் தனியான கொள்கை என்று சொல்லி அதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்போம் என்று கூறியிருப்பது எங்களுக்குப் புரியவில்லை, நீங்களும் குழம்பி நாட்டு மக்களையும் குழப்பி



1981 ஏப்ரல் 6] [திரு. லா. சுந்தரராஜ்]

அதன் மூலம் இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று நான் உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, எங்கள் கட்சி சார்பில் இந்தச் சட்டத் திருத்தத்தை கடுமையாக நாங்கள் எதிர்க்க விரும்புகிறோம். எதிர்க்கிறோம், தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருப்போம். அதற்கு எடுத்துக் காட்டாக நாங்கள் இந்தச் சட்ட முன்வடிவை அமல் செய்வதை எதிர்த்து எங்கள் கட்சி சார்பில் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று வெளியேறுகிறோம்.

[காங்கிரஸ் (இ) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டம் இன்றைக்கு அரசின் சூழ்நிலை காரணமாக அதைத் திருத்துவதற்காக இந்தச் சட்டம் இங்கே இன்றையத் தினம் அவையிலே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதை எதிர்ப்பதற்கான கடப்பாடு எனக்கு இருக்கிறது. என்னுடைய கட்சிக்கும் இருக்கிறது. காரணம், இந்த மதுவிலக்கு திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டப் பகுதிகளில இருக்கிற அத்தனை கருத்துக்களும் மதுவிலக்குக்கு நேர் எதிரான கருத்துக்களாகும். மதுவிலக்கோடு உடன்பட்டு அந்த உடன்பாட்டின் கீழ் சில திருத்தங்கள் செய்யப்படுவதாக இருந்தால் மதுவிலக்குச் சட்டத்தின் திருத்தம் சட்டம் என சொல்லப்படுகின்ற கருத்து பொருத்தமாகயிருக்க முடியும். ஆனால், மதுவிலக்குக்கு நேர் மாறாக, மது எந்தெந்த வகையில் அனுமதிக்கப்படும், எந்தெந்த முறையில் விற்கலாம், எந்தெந்த வகையில் உரிமை பெறலாம், என்னென்ன வகையான மதுக்களைப் பெறலாம், எவை எவை உள்நாட்டு மது, எவை எவை வெளிநாட்டு மது அப்படி விற்கிறபோது செய்யப்படுகிற தவறுகளுக்கு என்ன தண்டனை என்று இந்த விவரங்கள் முழு அளவிற்குத தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மதுவிலக்குச் சட்டத்தின் திருத்தச் சட்டம் என்று சொல்லப்படுவதை விட இந்தச் சட்டத்திற்கு மது அனுமதிச் சட்டம் என்று பெயர் வைப்பது முறையாக இருக்குமே தவிர, மதுவிலக்கு திருத்தச் சட்டம் என்று சொல்வது உள்ளபடியே தலைப்புக்கு பொருத்தமில்லாத கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கிய ஒன்று என்று சொல்லலாம். குதிரையைக் காட்டிவிட்டு கழுதையை விற்கிற வியாபாரம் நடப்பது முறையல்ல. அதேபோல் மதுவிலக்குச் சட்டம் என்று தலைப்பைச் சொல்லி அதிலே ஏதோ நுணுக்கமான திருத்தங்களைச் செய்வதுபோல் காட்டி இந்தத் திருத்தங்கள் முழுவதும் மதுவிலக்கை அடியோடு எதிர்க்கின்ற ஒழிக்கின்ற மது விற்பதை முறைப்படுத்துகின்ற அதாவது மதுவிலக்குக்கு மாறான காரியங்களையெல்லாம் முறைப்படுத்துகிற அரசாங்கத்திற்கு வருமானத்தைத் தேடித் தருவதற்கான ஒரு காரியமாக இருப்பதால் தலைப்பே தவறு என்ற மனக்குறையை, என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரப்படுத்து
வதற்கு அரச ங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்
இங்கே கொண்டுவந்த ஒரு சட்டம் இருக்கிறது. இதிலே எந்தக்
குறிப்பிலும் அது இந்தச் சட்டத்தில் இடம் பெறவில்லை. அந்தக்
சட்டம் இன்றைக்கு இந்த அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாகச்
சொல்லப்படுவது உண்மை. நடைமுறைகளுக்கு முற்றிலும்
மாறானதாகும். ஏனென்றால், இங்கே மது குடிக்க ஏதாவது ஒரு
வகையில் பெர்மிட் வழங்க அனுமதிக்கலாம் என்று ஒப்புக்கொள்
ளப்பட்ட பிறகு, தென்னை மரத்தில் கள் இறககுவதாக இருந்
தால் அப்படி இறக்க அனுமதி பெறவேண்டும் என்று சொன்ன
தற்குப் பின்னால், குத்தகை எடுப்பவன் அல்லது தோட்டக்காரன்
இப்படி முன் அனுமதி பெறவேண்டும் கள் இறக்க என்று குறிப்
பிட்ட பிறகு குடிப்பவர்கள் யாராவது கைது செய்யப்பட்டால்
அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேணடும், தொடர்ந்து,
குடித்தால் அவர்களை அந்த மாவட்டத்திலிருந்து இன்னொரு
மாவட்டத்திற்கு அனுப்ப வேண்டும், நாடு கடத்திவிடவேண்டும
என்று சொல்லப்படுகிற ஒரு சட்டத்தை இந்த அரசு இன்றைக்குக்
கூட ஒப்புக்கொண்டு உண்மை நிலையைக் கைவிடப்படாத சட்ட
மாக, நீக்கப்படாத சட்டமாக இருக்குமானால் அவ்வளவு
கடுமையான சட்டம் ஒரு பக்கம் உள்ளபோது அடிப்படையில்
மதுவை ஒழிக்கக் கொண்டுவரப்பட்ட சட்டம என்ற அந்தப்
பேரவைக்குள்ளே இன்றையதினம் மதுவைக் கைவிடுகிற சட்டம்
கொண்டுவருவது என்றால் அது முறையல்ல. ஒரு வேளை சட்ட
வாசகங்களை ஒட்டிவருகிறது. இப்படியெல்லாம சட்டம் செய்
வது முறைதான் என்று ஒரு வேளை அரசு சொல்லிவிடக்கூடும்.
ஆனால் அரசின் கடமை இந்தச் சட்டத்தின் நோக்கத்தை வெளிப்
படையாக ஒப்புக் கொள்வதாக இருக்க வேண்டும்.

அப்படி ஒப்புக்கொள்வதாக இருந்தால், தலைப்பிலே இருந்து
முடிவு வரை, இடையிலே கொண்டு வரப்பட்ட இடையிலே இந்த
அரசே கொண்டு வந்த சட்டம் இருக்கிறபோது, இது முற்றும்
முரணாக ஆகிறது. ஆகவே, இடையிலே கொண்டுவரப்பட்ட
சட்டத்தை கைவிட வேண்டும். இல்லையானால், அந்தச் சட்டத்
தினை இந்தச் சட்டத்தோடு ஒன்றாக இணைத்து, அதைப்பற்றி
பரிசீலித்து, மொத்தமாக ஒரே சட்டமாக வரக்கூடிய அளவிற்குச்
செய்ய வேண்டும். காரணம், 1937-லே ஒரு சட்டம். அதற்குப் பின்
னர் 1977-78-லே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது, அதற்குப்
பின்னர் 1981-லே என்று இந்தச் சட்டங்கள் எல்லாம் இருக்கின்ற
காரணத்தினால், இவைகளின் கருத்துக்களை எல்லாம் ஒன்றாக
இணைத்து, ஒரே சட்டமாக வரக்கூடிய அளவிற்கு வழி செய்
வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமே தவிர, இப்படிச் செய்வது
நல்லதல்ல. ஒருவகையிலே நான் எண்ணுகிறேன், தங்களுடைய
நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதிலே ஒரு அவசரம்,
ஆர்வம் இருக்கிறதே தவிர, உண்மைகளை மொத்தமாக ஒப்புக்
கொண்டு சட்டத்தை முழு வடிவமாகக் கொண்டு வர வேண்டு
மென்ற எண்ணம் இல்லை. மதுவிலக்கைக் கைவிடுவதற்காகக்





கொண்டு வரப்படுகின்ற இந்தச் சட்டம், அரசாங்கத்தினுடைய
நோக்கத்திற்கு ஏற்பது என்ற எண்ணத்திலே கொண்டு வரப்படு
கின்ற இந்தச் சட்டத்தை முழுமையாக எதிர்க்கிறோம் என்று
தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இந்தச் சட்டம் கொண்டு
வருவது நல்லதல்ல என்ற என் வேண்டுகோளையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பதில் எதுவும் சொல்ல விரும்ப
வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி.

''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்
வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**திரு. குமரி அனந்தன் :** இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு
வர வேண்டாம் என்று எங்கள் கட்சியும் மற்றக் கட்சிகளும்
எவ்வளவோ வாதாடிய பின்னரும், இங்கே அதனைக் கொண்டு
வருவது என்று அரசாங்கம் முடிவெடுத்திருப்பது மிக வருந்தத்தக்க
ஒன்றாகும். மதுவிலக்கைத் தளர்த்தக் கூடாது என்பதிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொற்பொழிவு வேண்
டாம். உங்கள் நடைமுறை என்ன என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. குமரி அனந்தன் :** எத்தனையோ காரியங்களை மத்திய
அரசு செய்து வருகின்றபோது, இதையும் மத்திய அரசு எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தலாம். இல்லை, இதற்கான
முழு நஷ்ட ஈடு தாருங்கள் என்று வலியுறுத்தினால், அதற்கு
நாங்கள் துணை நிற்போம். அத்தகைய முயற்சியிலும் ஈடுபடாமல்
இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வருகின்ற காரணத்தினால்,
காந்தி காமராஜ தேசிய காங்கிரஸ், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்
கின்ற வகையில் வெளிநடப்பு செய்கின்றது என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன்.

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்
வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ப. நெடுமாறன் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர்
அவர்களே, இந்த அவையிலே கடுமையான எதிர்ப்பு தெரிவித்தும்
கூட, அரசு பிடிவாதமாக இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு
வருவது, தமிழகத்திலே உள்ள கோடிக்கணக்கான ஏழை எளிய
மக்களின் எதிர்காலத்தை நாசப்படுத்தும் காரியமாகும் என்ற

முறையிலே, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற வகையிலே, இந்த அவையிலே இருந்து வெளி நடப்பு செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).

திரு. பி. முகமது இஸ்மாயில் : இந்த வரிசையிலே இருக்கின்ற தோழமை உணவர்வுள்ளவர்கள் எடுத்துச் சொன்னதையும் ஏற்றுக்கொள்ளாமல் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதிலே முனைந்து நிற்கின்ற இந்த அரசின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து இது ஒருவேளை ஆளுங் கட்சியின் அரசியல செல்வாக்கின் வீழ்ச்சிக்கு அறிகுறியாகும என்று எச்சரிக்கை தந்து, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. ஏ. சாகுல் ஹமீது : இந்த மதுவிலக்குச் சட்டம் கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டு, இது பேரறிஞர் அண்ணா அவர்கள் கருத்திற்கு விரோதமானது என்றும் அப்படி இந்த மதுவிலக்குச் சட்டத்தை கொண்டு வருவதற்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே எதிர்ப்பு தெரிவித்து, வெளிநடப்பு செய்கிறேன்.

(இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் வெளி நடப்புச செய்தார்).

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வருகை தருகின்றபோது, அவர்கள் கையெழுத்துப் போடுவதற்கு ஒரு ரிஜிஸ்தர் லாபீயில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது நீங்கள் பார்க்கலாம். நம்முடைய ஆளுங் கட்சியின் கொறடாவின் பி.ஏ. என்று கருதுகிறேன். சப் ஜக்ட் டு கரெக்ஷன், அவர் யார், யார் வந்திருக்கிறார்கள் என்ற குறிப்பை எடுத்துக் கொண்டிருக்கிறார். அப்படி செய்வது அநாகரிகமானது ; சட்டவிரோதமானது. டி.ஏ. செக்ஷன் தான் அதைக் குறிக்கவேண்டும். அதற்கு மாறாக அப்படிச் செய்யலாமா? அப்படிப்பட்ட காரியம் நடைபெறுவதை இன்றைக்குப் பார்க்கலாம். இதற்கு விளக்கம் தேவை.

[முற்பகல் 11-20]

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த தகவல் மீது, நான் அங்கு போய் என்ன நிலைமை என்று பார்த்த





தால்தான் விவரம் தெரியும். அவ்வாறு இருப்பின் அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் கண்டிப்பாக ஈடுபடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறை தவிர்த்துக்கொள் கிறேன் என்று ஒத்துக் கொண்டதாலே, இனிமேல் யாரும் இப்படிப் பார்க்கக் கூடாது. உறுப்பினர்கள்தான் அவற்றைப் பார்க்கலாமே தவிர, வெளி அதிகாரிகளோ மற்றவர்களோ, யார் யார் வந்திருக்கிறார்கள் என்பதைக் குறித்துக்கொள்வது நடைமுறைக்கு ஏற்றதல்ல, நடைமுறையில் அனுமதிக்கப்படுவதும் இல்லை.

* டாக்டர் மு. கருணாநிதி : இந்தச் சட்ட முன்வடிவுபற்றி பல்வேறு கட்சிகளின் சார்பில் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில், அதனுடைய துணைத் தலைவர், பேராசிரியர் அவர்கள் அமைச்சரிடத்திலே கேட்டிருக்கிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட அந்தக் கடுமையான சட்டமும் இருக்கிறது ; இதுவும் இருக்குமென்றால் முரண்பாடாக இருக்கிறதே, என்று இது பற்றி விளக்கம் கேட்டிருக்கிறார். அதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்காமல் இருக்கிறார். அவர்கள் பதில் அளிக்க நாங்கள் எல்லாம் விரும்பிக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளும் பொழுது நான் பதில் சொல்கிறேன். இப்போது நான் எதுவும் சொல்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் புரியாமல் அன்றைக்குச் சொல்கிறேன் என்று சொல்ல வில்லை. இன்றைக்கு சொல்வதற்குத் தேவையில்லை என்பதால் தான் நான் அப்படிச் சொல்கிறேன்.

இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக மத்திய திட்ட அமைச்சர்திரு. திவாரி அவர்கள் அனைத்து மாநிலங்களின் அமைச்சர்களையும் அழைத் திருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய திட்ட அமைச்சர் அவர்கள் அழைத்தது எல்லாம் சட்டமன்றத்தில் விவாதத்திற்கு வராது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, அனைத்து மாநிலங்களிலிருந்தும் கலந்து கொண்டிருக்கிறார்கள், தமிழகத்தைத் தவிர, அதனால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு திட்டக் குழு துணைத் தலைவர் திரு. சீனிவாசன் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார். பத்திரிகையிலே செய்தியும் வந்திருக்கிறது. படமும் வந்திருக்கிறது.

(ஆ) இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டமுன்வடிவு 1981

மாண்புமிகு திரு, சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, '' தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் '' என்று மொழிகிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கே சட்டப்படி தகுதி இல்லை என்பது என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, திருத்தத்தை ஸ்டெடி பண்ணி, சம்பந்தப்பட்ட ரூல்ஸை ஸ்டெடி பண்ணி தான் நான் வந்திருக்கிறேன். ஆகவே அது சட்டப்படி செல்லாது ஆய்விற்கு எடுத்துக் கொள்வது என்பது. இன்றைக்கு வடிவில் இருக்கக்கூடிய அந்த பில்லானது, ஆய்விற்கு எடுத்துக் கொள்வது என்பது மலைக்கும் மடுவிற்கும் உள்ளதைப் போன்ற ஒரு நிலைமை இருக்கிறது.

அதை இண்ட்ரடியுஸ் பண்ணுகிறபோது இன்று அமலில் இருக்கக்கூடிய அவசரச் சட்டத்தை அமலாக்குவதற்காக என்ற நோக்கத்தோடு இந்த வடிவத்திலே கொண்டுவந்து இந்த பில் டிஸ்கஷனுக்கு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சட்ட அமைச்சர் கூறுகிறார். இதிலே சொல்லப்பட்டிருக்கிற அந்த ஆர்டினஸ்னஸ் ஏற்கெனவே செத்துபோய்ப் விட்டது. அந்த ஆர்டினன்ஸே காலாவதியாகிறபோது, அந்த

*1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



ஆர்டினன்ஸை ஒட்டியதாகக் கொண்டுவரப்படுகிற இந்த பில்லும் காலாவதியாகி விடுகிறது. வேண்டுமானால் செப்பரேட்டாக, ப்ரஷ் பில்லாகத்தான் கொண்டுவரலாம்.

அடுத்து, அமென்மென்ட் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. ரெகுலரைஸ் பண்ணுவதற்கு சட்டபூர்வமாக்குவதற்காக என்று சொல்லி அமென்மென்ட் சீப் மினிஸ்டர் பெயரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த அமென்மென்ட் என்ன சொல்கிறது என்றால் 'ஒமிட் கிளாஸ் 10' என்பதுதான். கிளாஸ் 10-ஐ நீக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிளாஸ் 10 என்ன சொல்கிறது என்றால் Tamil Nadu Essential Services Maintenance Ordinance, 1981 (Tamil Nadu Ordinance 2 of 1981) is hereby repealed. என்று சொல்கிறது. அந்த கிளாஸை எடுத்துவிடவேண்டுமென்ற முறையிலே அமென்மென்டைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி அமென்மென்டை கொடுத்தவுடனே அமலுக்கு வந்துவிடுகிறதா என்றால் வராது. அது நோட்டீஸ் ஆப் அமென்ட்மெண்டுதான். நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான் It is only a notice of amendment ஆகவே அந்த அமென்ட்மென்ட் அமுலுக்கு வரவில்லை. இதன்மேல் ஜெனரல் டிஸ்கஷன் நடந்து, பிறகு கிளாஸ் பை கிளாஸ் டிக்ஸ்கஷன் நடந்து அந்த கிளாஸ் வருகிற போது அந்த அமென்ட்மெண்ட் பாஸானால்தான் அது அமலுக்கு வரும். அதுவரைக்கும் இந்த பில் தான், அமென்ட்மென்ட் அதிலே வராது. இது ஒரு சீரியஸ் மேட்டர். தலைவர் அவர்கள் தயவுசெய்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறபோது தான் அந்த கிளாஸையும் டிஸ்கஸ் பண்ணலாம். அதுவரையிலும் செத்துப்போன பில்லையொட்டித்தான் இந்த பில் இருக்கிறது என்கிற நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். அதோடு இல்லாத ஒரு ஆர்டினன்ஸை ரிப்பீல் பண்ணக்கூடிய நிலைமை இருக்கிறது. Non-existence of Ordinance is sought to be repealed in the discussion of this bill ஆகவே இந்த பாயின்ட்டிலே இந்த பில் இந்த வடிவத்திலே இன்றைக்கு நிற்காது. நீங்கள் அமென்ட் பண்ணுவது தப்பு. இந்த அமென்ட்மென்ட்டைப் பொறுத்தவரைக்கும் நெகட்டிவ் தன்மையுடையதாக இருக்கிறது. கிளாஸை டெலீட் பண்ணுவதற்கு அமென்ட்மென்ட் கொடுத்தால் அதை அட்மிட் பண்ண முடியாது. ஏதாவது சப் கிளாஸ் என்று இருந்தால்தான் அவ்வாறு செய்யமுடியும். நீங்கள் இதுவரைக்கும்

[திரு. ரா. உமாநாத்] [1981 ஏப்ரல் 6

உங்கள் ஆபீசிலே கடைப்பிடித்து வந்திருக்கின்ற முறை அது தான். நெகட்டிவ் அமென்மென்ட்டாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைமைதான் இருந்திருக்கிறது.

Practice and Procedure of Parliament states :

"An Amendment which has merely the effect of negative voting is not allowed."

On this principle, amendments purporting to omit a clause of a Bill are disallowed ;

... The proper course is to vote against the Clause.

அப்புறம் என்ன போடுகிறார்கள் என்றால் "எகெய்ன்ஸ்ட் தி கிளாஸ்" என்றால் கிளாஸ் வருகிறபோது எதிர்த்து ஓட்டுப்போடலாம் என்று அர்த்தம். ஆகவே சட்ட அமைச்சர் பிரஸ்டிஜிலே நிற்கக்கூடாது. வேண்டுமென்றால் பிரஷ் பில் கொண்டுவாருங்கள் அப்போது எங்கள் பொசிஷனைச் சொல்கிறோம். ஆகவே அமென்மென்ட் நிற்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலே என்ன சொல்கிறார்கள் என்றால் பில்லைப் பொறுத்தவரையிலும் கான்ஸ்டிட்யூஷனல் அப்ளிகேஷன் அரசியல் சட்டதிட்டப்படி அவசியமானது. நான் மறுபடியும் Practice and Procedure of Parliament, Page 465 லிருந்து சொல்கிறேன். பேஜ் நாலிலிருந்து படிக்கிறேன்.

"The proof copy is scrutinized in the Secretariat with a view to ensuring that the Bill conforms to the various Constitutional provisions and the rules, viz, whether this Bill contains a statement of Objects and Reasons"

இது ஒரு கான்ஸ்டிட்யூஷனல் அப்ளிகேஷன். ஆனால் ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்டு ரீஸன்ஸில் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அது என்ன சொல்கிறது என்றால் "The Bill seeks to replace the said Ordinance," என்று சொல்கிறது. இது தான் ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ். ஆர்டினன்ஸ் போயிற்று என்கிறபோது இல்லாத ஆர்டினன்ஸ்க்கு "which is not in existence" you are bringing a Bill என்ற நிலைமை வருகிறது. இந்த பில் 'ஆர்டினன்ஸை ரீப்ளேஸ் பண்ணுவதற்கு' என்று வருகிறது.



1981 ஏப்ரல் 6] [திரு. ரா. உமாநாத்]

ஆர்டினன்ஸை இக்னோர் செய்தால் அந்த Constitutional obligation அடிபட்டு விடுகிறது.

[முற்பகல் 11-30]

There must be a statement of objects and reasons in the Bill which must be consistent with the Clause in the Bill; அந்த சட்டத்திற்கு உட்பட்டிருக்கும் கிளாஸை ஒட்டிய நோக்கம் என்ற முறையில் வரவேண்டும். ஆனால் பிரதான நோக்கமே போன பிறகு To replace the Ordinance (Objects and Reasons) செய்வது என்பது பிரதான நோக்கமே போன பிறகு, பில்லுக்கும் அது போகிறது. It is out of rule and it is out of order. If the Government wants to bring, let them bring a fresh bill காலாவதியான பில்லை எப்படி விவாதிக்கலாம்? இந்தப் பாயின்ட்டை சீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த பாரமிலே விவாதிப்பது சரியல்ல. Till the amendment is passed we cannot discuss about the Bill இந்த அமென்மென்டைக் கொண்டு வந்தால் ரெகுலரைஸ் செய்ய முடியாது. டிஸ்கஷனை நாம் இந்த பில்லிலேதான் பண்ண வேண்டியிருக்கும். ஆர்டினன்ஸை ஒட்டியதாக இந்த பில் இருக்கிறது என்று கருதுகின்ற காரணத்தால் இதை எடுக்கக கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அலுவலில் அரசினர் சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்) என்பதிலே சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/1981 என்பதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். இங்கே நம் முன் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கும் சட்டமுன்வடிவில் 21/1981 என்பது ஏற்கெனவே தமிழக அரசு 1981ஆம் ஆண்டு இரண்டாம் எண்ணுள்ளதை அவசரச்சட்டத்தின் சட்டமாக ஆக்க வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதைத் குறிப்பிட்டுக் கொடுக்கப்பட்ட சட்ட முன்வடிவை அதையேதான் Statement of Objects and Reasons என்பதில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

With a view to ensure public safety and the maintenance of supplies and services necessary for the normal life of the community, it was considered necessary that the Government should have adequate powers to deal promptly and effectively with strikes in essential services. Accordingly, the Tamil Nadu Essential Services Maintenance Ordinance, (Tamil Nadu Ordinance 2 of 1981) was promulgated by the Governor.

என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன் வடிவை அவையிலே ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு விவாதித்து நிறைவேற்ற வேண்டுமென்று கூறுவது முறையற்றது. அது முறையானது அல்ல. ஆகவே, நம்முடைய பேரவைத் தலைவ ரவர்கள் அரசாங்கம் இதை முறையாக, புதிதாகச் சட்டமுன் வடிவைத் தயாரித்து இந்தச் சபை முன் வைத்து அதை ஆய்வுக்கு எடுத்து நிறைவேற்றுவதுதான் முறையாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, ஏற் கனவே இரண்டு முறை இந்த அரசால் கைவிடப்பட்ட, நாங்கள் வற்புறுத்த மாட்டோம் என்று ஒப்புக்கொண்ட அப்படிப்பட்ட ஒரு சட்டம் இன்றையதினம் இந்த அவையிலே கொண்டுவரப் பட்டிருக்கிறது. அப்படிக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இது சட்டமாக ஆக்கப்பட வேண்டும் என்று விவாதிக்கப்பெறுவதற் கான தகுதியை இழந்துவிட்டது என்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஏன் இந்தச் சட்டம் அந்தத் தகுதியை இழந்து விட்டது என்றால், எந்தவொரு சட்டமும் கொண்டுவரப்படும்பொழுது அந்தச் சட்டத்திற்கு நியாயமான நோக்கங்களை எடுத்துச் சொல்ல வேண்டிய கடப்பாடு இருக்கிறது. அப்பொழுது இன்றையதினம் நடைமுறையிலே இல்லாத ஒரு அவசரச் சட்டத்தைக் காட்டி, அந்த அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதை காரணமாக இந்தச் சட்டத்தை இந்த அவையிலே கொண்டுவர நேரிடுகிறது என்று, ஏற்கெனவே அந்த அவசரச் சட்டம் நடை முறையிலே இருந்தபொழுது சொல்லப்பட வேண்டிய காரணங் கள் இன்றையதினமும் சொல்லப்பட்டிருப்பதால், திருத்தப் படாத காரணத்தால், முன்கூட்டியே மாற்றியமைக்கப்படாத காரணத்தால், தவறான அடிப்படையை உருவாக்குகின்ற



நோக்கத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில் இது முறை தவறான காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதோடுமட்டுமல்லாமல், இதிலே உள்ளே வருகின்ற பத்தாவது விதி மொத்தமாகக் கைவிடப்படலாம் திருத்தப் படலாம் என்று முதலமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற ஒரு திருத்தம், அனுமதிக்கிறது என்றாலும் கூட அந்தத் திருத்தம் அரசாங்கத்தாலே கொண்டு வரப்படுகின்ற திருத்தம், புதிதாகச் சட்டம் வருகின்றபொழுது முன்கூட்டியே இடம் பெற்றிருந்தால் அந்தச் சட்ட நோக்கமேகூட மாற்றி எழுதப்பட்டிருக்கும். ஆனால், அந்தத் திருத்தம் இப்பொழுது வருகின்றபொழுது, அந்தத் திருத்தம் இப்பொழுது இடம் பெறாத ஒன்று, இனி எதிர்காலத்திலே இடம் பெறக்கூடும். அப்படி இடம் பெற்றா லும்கூட, இது கைவிடப்பட்டாலுங்கூட, அப்பொழுதும் கூட இதிலுள்ள நோக்கம் என்ற பகுதி திருத்தப்படுவதாக, கைவிடப் படுவதாகச் சொல்வது முறையல்ல. இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தையே திருத்துவதாக இருந்தால், சட்டமே புதிதாக வரத்தான் வேண்டும். நோக்கம் மாறுகிறபொழுது, சட்டத் துடைய வடிவம் மாறும். இவை எல்லாவற்றையும் விட இந்த அரசாங்கம் ஏற்கெனவே ஒப்புக்கொண்டிருக்கின்ற ஒரு கொள்கை என்று நான் சொல்கிறேன். இன்னும் சொல்லப் போனால், அரசாங்கம் ஒப்புக்கொள்கிற ஒரு நியதியின் அடிப் படையில், எல்லாவிதமான தொழிலாளர்களையும் பாதிக்கிற ஒரு சட்டத்தை கொண்டுவர விரும்பவில்லை என்றும், இன்றியமையாத பணிகளை முறையாகச் செய்தால் இடையூறு ஏற்படாமல் இருக்கும் என்பதற்காகத்தான் சட்டம் என்றும் சொல்லிவிட்டு, அதற்காக, ஏற்கெனவே இந்த மன்றத்திலே வாதாடுகிறபொழுது, அதிலே எல்லோரையும் சேர்த்துக் குறிப் பிடாமல், எல்லா தொழிலாளர்களையும் உட்படுத்தாமல், பலரைக் கைவிட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொன்ன இந்த அமைச்சர்களின் சார்பில், அமைச்சரவை சார்பில், மறுபடியும் இந்தச் சட்டத்திலே எல்லா வகையான தொழிலாளர் களையும், எல்லாவிதமான அரசாங்கத்துறை அலுவலர்களையும், எல்லாப் பணிகளிலே உள்ளவர்களையும், அது உள்ளடக்கியதாக இருக்கிற காரணத்தால், அரசாங்கம் சொன்ன கொள்கைக்கு முரண்பாடுடையதாக இருக்கிறது. அந்தக் கொள்கையைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லாத நிலைமை இருக்குமானாலுங்கூட சட்டம் கொண்டு வருகிற முறையிலிருந்து மாறி இருக்கிறது. தவறி இருக்கிறது ; சட்டம் கொண்டு வரப்படுகிறபொழுதே இந்த

[திரு. க. அன்பழகன்]

அவையிலே அப்படி ஒரு தவறு ஏற்பட ஒருமுறை இடம் தந்து விடுவோமானால், அது மேலும் பல தவறுகளுக்கும் வழிவகுக்கும் என்ற காரணத்தால், இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதையே அரசு கைவிட வேண்டும். அதேபோல், சபாநாயகர் அவர்கள் இந்தச் சூழ்நிலையில், இந்தச் சட்டத்தை, இங்கே வாதிக்க எடுத்துக்கொள்ளாமல் தடுத்து நிறுத்த வேண்டிய கடைமையை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சில இன்றி யமையாப் பணிகள் ஒழுங்குமுறையை மேலும் கண்டிப்பாகச் செயல்படுத்தும் சட்ட முன்வடிவை இங்கே தாக்கல் செய்திருக் கிறார்கள். அதற்காக விவாதத்திற்கும் அவர்கள் தயாராக வந்து விட்டார்கள். ஆனால், அதற்கு முன்னதாக, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு புதிய பிரச்னையை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, அவருடைய கருத்தெல்லாம், இறந்துபோன அவசரச் சட்டத்தை, அதை பேஸ் பண்ணியே இந்தச் சட்ட முன்வடிவு இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான். முன்பு இரண்டுமுறை, இதுபோன்ற இன்றி யமையாப் பணிகளுக்கான அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டு, அவை இந்த அவையிலே கடுமையான வாதங்களுக்குப் பின்னால், முதலமைச்சர் அவர்கள் அது தானாகவே செத்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால், இங்கே தானாகவே இறந்துபோன அவசரச் சட்டத்தை அடிப்படையாக வைத்து, மீண்டும் அவசர சட்டத்திற்கு உயிர் ஊட்டும் வகையிலே இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதன்மீது எங்களுடைய கட்சியின் கருத்துக்களை, பின்னாலே முறையாக இந்த அவையிலே விவாதத்திற்கு வரும்போது சொல்லத் தயாராக இருக்கிறோம். ஆகவே, இது முக்கியமான சட்டப் பிரச்னை, டெக்னிக்கல் பிரச்னை. இதை இந்த அவையிலே தாக்கல் செய்து, ஒருக்கால் உங்களுடைய மெஜாரிட்டி காரணமாக நிறைவேற்றப்படும் என்றால், பின்னாலே சட்டச் சிக்கல் ஏற்படும் என்று நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

அதுபோன்று இந்த அவையிலே இருக்கிற சூழ்நிலை, இந்த அவைக்குச் சரியான ஆலோசனை இல்லை. அல்லது திறமை சட்டத் துறை சரியான ஒத்துழைப்பு தந்தோ, முழுமை யாகவோ செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் இந்த மசோதாவைத் தாக்கல் செய்வதற்கு முன்பாக, முழுமை யாக பரிசிலனை செய்து, மீண்டும் வேறொரு சட்ட முன்வடிவை இந்த அவையிலே தாக்கல் செய்ய சபாநாயகர் அவர்கள் உத்தர விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[முற்பகல் 11–40]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமை யாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவை ஏற்கனவே இந்த அவையிலே இருக்கின்ற அனைத்து எதிர்கட்சிகளும் எதிர்த்து இருக்கின்றனர். அது தொழிலாளர்களின் உரிமையை பாதிக்கும் சட்டம் என்பதையும் நாங்கள் சுட்டி காட்டி இருக்கிறோம். அதிலும் குறிப்பாக அன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற நேரத்தில் எல்லாக் கட்சிகளும் தங்களுடைய ஆட்சேபணைகளையும், எதிர்ப்புகளையும் சுட்டிக்காட்டிய நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய முக்கியமான கோரிக்கைகளை மனதிலே கொண்டு அந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு, இந்த அவையிலே அளிக்கப்படும் என்ற வாக்குறுதியைச் சொன்னார்கள். ஆனால் அதிலே எந்தவிதமான மாற்றமும் செய்யாமல், அப்படியே அந்தச் சட்டம் இந்த அவையிலே ஆய்வுக்கு வைக்கப் பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்களானாலும் சரி, அதே போல் நகராட்சி ஊழியர்களானாலும் சரி, யாராக இருந் தாலும் அவர்களுக்கு இருக்கக்கூடிய நியாயமான உரிமைகள் இந்தச் சட்டத்தின்மூலம் பறிக்கப்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

'எசன்சியல் சர்வீஸ்' என்கிற அந்த ஒரு வார்த்தை மூலம் எல்லாவற்றையும் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் உள்ள ஊழியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் அத்தனை பேர் களையும் இந்த ஒரு வார்த்தை அடக்கிவிடுகிறது. அவர் களுடைய குறைகளை வெளிப்படுத்துவதற்காக நியாயமான போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு உரிமைகள் இருந்தபோதிலும், இந்தச் சட்டம் கொண்டு வருவதன் மூலம் அவர்கள் தங்கள் குறைகளை வெளிப்படுத்த எந்தவிதமான போராட்டத்திலும் ஈடுபட முடியாது என்கிற வகையில் இந்தச் சட்டம் இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

அதிலும் குறிப்பாக இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடு படுகிறவர்களுக்கு பல்வேறு முறைகள் இருக்கின்றன.

[திரு. ப. நெடுமாறன்] [1981 ஏப்ரல் 6

அதாவது, வேலைக்கு வராமல் இருப்பது அல்லது உள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்வது, அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பது அல்லது அடையாள பேட்ஜ் அணிந்து வேலைக்கு வருவது போன்ற நிலைமைகள் உண்டு. அத்தகைய நிலைமைகளைக் கூட இந்தச் சட்டம் அனுமதிக்கவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு எத்தகைய கடுமையான தண்டனைகள் இங்கே அளிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கிறபோது இது எவ்வளவு கொடிய சட்டம் என்பது நமக்குப் புரிகிறது. அதுமட்டுமல்ல— அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறவர்கள் அல்லது வேலை நிறுத்தத்தில் ஈடுபட உத்தேசிக்கிறவர்கள் ஆகியோரை 'வித் அவுட் வாரண்ட்'' பிடித்து உள்ளே வைக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது. இது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு அந்தத் தொழிற்சங்கத்தை சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆதரவு தெரிவித்தால் அவர்கள் வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடுகிறார்கள் என்ற காரணத்திற்காக, எந்தவிதக் காரணமும் காட்டாமல் பிடித்து உள்ளே போட இந்தச் சட்டம் வகை செய்கிறது. இது அரசியல் கட்சிகளுக்கும், தொழிற்சங்கத்திற்கும் இருக்கும் நியாயமான உரிமைகளை பறிக்கும் சட்டமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே வேலை நிறுத்தம் செய்கிறவர்களுக்கு யார் எப்படி உதவி செய்தாலும் அவர்கள் மீது இந்தச் சட்டம் பாயும். அவர்களுக்கு யார் உணவு கொடுத்தாலும் அல்லது பணவுதவி செய்தாலும் அல்லது வேறு எந்த உதவி செய்தாலும், அவர்கள் மீதும் இந்தச் சட்டம் பாயும். இப்படிப்பட்ட முறையில் இந்தச் சட்டத்தின் பிரிவுகள் இருப்பதால் இந்தச் சட்டம் ரொம்பக் கடுமையானது, கொடுமையானது என்று சுட்டிக்காட்டி, இந்த



1981 ஏப்ரல் 6] [திரு. ப. நெடுமாறன்]

சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று என்னுடைய கட்சியின் சார்பாக எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சில இன்றியமையாப் பணிகளில், அதனைச் செம்மைப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சொல்லி, பொது மக்களுக்கு அத்தியாரசியமாக உள்ள சேவைகள் தடைபட்டு விடக்கூடாது என்பதற்காக இதனை இங்கே அவையில் வைக்கிறோம் என்று இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. இத்தகைய சட்டங்களை நிறைவேற்றுவதால் மட்டுமே சமுதாயத்திற்குத் தேவையான அனைத்தும் செய்து விடமுடியாது என்பதை இதற்கு சில நிமிடங்களுக்கு முன்னாலே கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவு— அதாவது மது விலக்கைத் தளர்த்தவேண்டும் என்கிற அடிப்படையில் கொண்டு வரப்பட்ட சட்ட முன்வடிவு—மூலம் நாம் அறிந்து இருக்கிறோம். சட்டம் கொடுமையாக இருந்த பிறகும் கூட, சமுதாயத்திலே விரும்புகின்ற மாற்றங்களை ஏற்படுத்த முடியாது, முடியவில்லை என்பதற்கு ஒரு பக்கத்திலே நாம் விளக்கம் கொடுத்துக் கொண்டு இருக்கிறபோது, இன்னொரு பக்கத்திலே வேறு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே, சட்டத்தின் கொடுமை மூலம் சமுதாயத்தின் தேவையை நிறைவு செய்யமுடியவில்லை என்று ஒரு சில நிமிடங்களுக்கு முன்னாலே ஒப்புக்கொண்டு, அரசு சட்டம் கொண்டு வந்தபிறகு, இங்கே ஒரு சட்டத்தை கொடுமையான —சட்டத்தை கொண்டு வந்து, அதன் மூலம் யாருக்கும் எந்த வித உரிமையும் இல்லை என்கிற சூழ்நிலை உருவாகுமானால், அது மக்களுக்கு நன்மை பயக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, இந்த இரண்டு கருத்துக்களுக்கும் இடையே இருக்கிற முரண்பாட்டை இந்த அரசு உணரும் என்று நான் கருதுகிறேன். தொழிலாளர்கள் பணிபுரிகின்ற தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, அலுவலர்கள் பணி புரிகின்ற அலுவலகமாக இருந்தாலும் சரி, பணி நடந்து அதன் மூலமாக பொது மக்களுக்கு சேவை தொடர வேண்டுமென்ற ஆசை எங்கள் கட்சிக்கு இருக்கிறது.

ஆனால் அதை சட்டத்தின் மூலம்தான் நிறைவேற்ற வேண்டுமா
அல்லது எல்லாத் தரப்பினர்களுடைய சம்மதத்தின் மூலம் நிறை
வேற்ற வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கிறோம்.

ஒரு காலத்தில் கடுமையான சட்டங்கள் இல்லாமல் இருந்த
போதிலும் குடித்தல் பாவம் என்ற எண்ணம் இருந்தபோது
குடி குறைந்திருந்தது என்பதைப் பார்த்தால், நிர்வாகத்தில்
இருக்கிறவர்களும் அந்த நிர்வாகத்தோடு இணைந்து பணியாற்று
கிறவர்களும் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு வாழ்கின்ற
வாழ்க்கைக்கு நாம் வழிவகுக்க முடியாதா என்று சிந்தித்துப்
பார்க்கிறோம். தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கேற்று,
அதன் மூலம் அவர்கள் தொழில் செய்கிறது மட்டுமல்ல. அலு
வலகத்திலே பணியாற்றுகின்ற மிகப்பெரிய அதிகாரியாக
இருந்தாலும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கேட்டு,
கலந்து உரையாடி, இந்த இந்தத் திட்டங்களை நிறைவேற்ற
லாம், அல்லது இப்படி இப்படிச் செய்யலாம் என்பதைச் பேச்சு
வார்த்தை மூலம் உருவாக்க முடியும் என்ற நிலையை அவர்கள்
உருவாக்கினால் இத்தகைய சட்டங்கள் அதிகமாக தேவை இருக்
காது. ஏனென்றால், குறிப்பிட்டுச் சொல்வதாக இருந்தால்
பல அலுவலகங்களிலே பணியாற்றும் பணியாளர்களின் குறை
களை கேட்பதற்குக்கூட பெரிய அதிகாரிகள் செவி கொடுப்ப
தில்லை. அதனால் விரக்தி ஏற்பட்டு, மனக் குமுறல் வெளிப்
படுகிறது வேலை நிறுத்தமாக. எனவே பேச்சு வார்த்தை
மூலம் எல்லாவற்றையும் நிறைவேற்ற முடியும் என்ற நிலை
மையை விட்டுவிட்டு, அரசு இத்தகைய சட்டங்களைக்
கொண்டுவர விரும்புகிறது.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்,
இப்பே.து விவாதம் ஆரம்பித்துவிட்டதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை. அவர்கள்
உரையை முடிக்கப் போகிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : ஆகவே, நாங்கள் இதை எதிர்க்
கிறோம். தொழிலாளர்களும், அலுவலர்களும் தங்களுடைய
ஜீவாதார உரிமைக்காக ஜீவாதாரப் போராட்டம் நடத்தி,



தங்களுடைய உரிமையை நிலை நிறுத்துவதற்கும், தங்களுடைய உரிமையைப் பெறுவதற்கும், எது நியாயம் என்று சொல்வதற்கு முடியாமல் அரசியல் தலைவர்களுக்கும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் வாய்ப் பூட்டுப் போடும் இந்தச் சட்டத்தை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஜனநாயகத்திற்கு மாறுபட்டது என்று சொல்லி, இது சம்பந்தமாக ஏற்கெனவே நடைபெற்ற விவாதத்தின் அடிப்படையில் இதை ஆய்வுக்கு வைக்க வேண்டாம் என்று பணிவோடும் கனிவோடும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டம் என்ற தொழிலாளர் விரோத சட்டத்தை இந்த அரசு கொண்டுவர விரும்புகிறது. இந்தக் கறுப்புச் சட்டத்தின் மூலம் தொழிலாளர்களின் உரிமைகள் தடுக்கப்படுகின்றன ; அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அது மட்டுமல்ல. எதிர்க்கட்சித் தலைவர்களையும் மற்றுள்ள பிரதிநிதிகளையும் சிக்கலில் மாட்டுவதற்கு இந்தச் சட்டம் வழி வகுக்கும். ஆக, தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கின்ற இந்தச் சட்டத்தை அனுமதிக்க வேண்டாம் என்று இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கிற சட்டத்தைப் படித்துப் பார்க்கும்போது அரசாங்கத்தின் உள் நோக்கத்தில் எங்களுக்கு சந்தேகம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தின் எண்ணம் ஏதோ தொழில் நிறுவனங்கள் தங்குதடையின்றி செயல்பட வேண்டுமென்று மட்டும் சொல்லியிருக்கிறதோ என்று பார்த்தால், இங்கே 'டெபஃனிஷன்' என்ற பாராவில் 1வது பிரிவில் 7 வது இனத்தில் இருக்கிற உட்பிரிவைச் சேர்த்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. 7 வது உட்பிரிவின்படி அரசு சட்டம் இயற்றுகிற அதிகாரம் பெற்றிருக்கிற எந்த நிறுவனத்தையும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியும் என்ற விதி அங்கே தோன்றுகிறது. ஆகவே, இநதச் சட்டத்தின் மூலம் அனைத்து நிறுவனங்களையும் அனைத்துப் பிரிவு ஊழியர்களையும் கட்டுப்படுத்துகிற நிலை இருக்கிறது. இந்தச் சட்டத்தின் நோக்கம் எசன்ஷியல் சர்வீஸில் இருப்பவர்களைக் கட்டுப்படுத்துவது என்று இல்லை. ஆகவே, இந்தச் சட்டத்தின் தலைப்பை மாற்றியிருக்கலாம். தேசிய சேவை என்று சொல்வதற்குப் பதிலாக அனைத்துச் சேவைகளிலும் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய வேலை நிறுத்தத் தடைச் சட்டம் என்று

இருந்தால் பொருத்தமாகஇருக்கும். ஆகவே, நான் சுட்டிக்காட்டிய கருத்தின் அடிப்படையிலே இந்தச் சட்டத்தை அரசு கொண்டு வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

[முற்பகல் 11-50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் The very bill has no legal validity என்ற அடிப்படையில் ஆர்டினன்ஸ் லேப்ஸான பிறகு தற்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் நிலையில் இது ஒரு புதிய பில்லாகத்தான் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும் என்று தனது கருத்தைச் சொல்ல மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் உட்பட அனைத்து எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் அந்தக் கருத்தையே வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆனால் இதிலே முக்கியமான சட்டப் பிரச்சினை என்ன என்பதை எல்லாம் ஆய்ந்த பிறகு தான் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் இதை இப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன்மொழிந்து இருக்கிறோம் காரணம் at the time of introduction of the Bill, the ordinance in question was actually in force. Only subsequently the ordinance expired அதன் காரணமாகத்தான் இந்த பில்லை அவையிலே இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முன்மொழிந்திருக்கிறோம். அதாவது அறிமுகம் செய்கின்றபோது ஆர்டினன்ஸுக்கு உயிர் இருந்தது. அதற்குப் பிறகு தான் அது எக்ஸ்பயர் ஆகி இருக்கின்ற காரணத்தால்தான் தற்போது அதற்கு மட்டுமே கொண்டு வரப்பட்டிருக்கின்றது. திரு. உமாநாத் அவர்கள் ஒன்றை சுட்டி காட்டினார்கள். அந்த மோஷன் will amount to negative vote என்று சொன்னார்கள். இன்ட்ரோடக்ஷனுக்கு விடப்பட்டது என்பதைப் பொறுத்த வரையில் under Sub-rule (2) of Rule 100 of Tamil Nadu Legislative Assembly Rules

> "An amendment may not be moved which has merely the effect of a negative vote"

ஆனால் நான் குறிப்பிட விரும்புவது it is only with reference to substance with reference to purpose, not with reference to form.



ஆகவே இங்கே இப்போது ஃபார்ம் மாற்றம் தான் செய்திருக்கிறோம். சப்ஸ்டன்ஸை மாற்றவில்லை என்பதால் அது சட்ட ரீதியாகச் செல்லும் என்று நான் கூற விரும்புகிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசும் போது ஒன்று சொன்னார்கள். 'நோக்கத்திற்காக ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள், அப்படி நோக்கத்திற்காக கொண்டு வரப்படுகின்ற போது அது செல்லாது. என்று சொன்னார்கள். ஆனால் நோக்கத்திற்கு திருத்தம் என்றுகூட எடுத்துக்கொள்ள முடியாது. காரணம் இதில்

at the time of introduction of the Bill, the ordinance was actually in force.

அடுத்தபடியாக, in the Statement of Objects and Reasons

என்ற பிரிவை பேராசிரியர் அவர்கள் படித்து அதிலே

> With a view to ensure public safety and the maintenance of supplies and services necessary for the normal life of the community, it was considered necessary that the Government should have adequate powers to deal promptly and effectively with strikes in essential services

அதுதான் நோக்கமாக இருப்பதால் ஆங்கு நோக்கம் அதாவது பர்ப்பஸ் என்பதற்காக ஒரு திருத்தம் கொண்டுவரப்படவில்லை. ஆகவே சட்ட ரீதியான பிரச்சினை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்களின் அரிய ஆலோசனைகளையும் கருத்தையும் கேட்டு விட்டு இறுதியிலே பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். ஆனால் ஒரு மசோதா சட்டமாகின்றபோது அது எதற்காக சட்டமாகின்றது என்று சொன்னால்

There should necessarily be existing ordinance. That is condition precedent.

ஆகவே ஆர்டினன்ஸுக்கு உயிர் இருக்க வேண்டும். ஆர்டினன்ஸ் உயிரோடு இருந்தால் தான் சட்டமாக்கவேண்டும் என்ற கொஸ்டினே ஏற்படுகின்றது. ஆகவே ஆர்டினன்ஸுக்கு உயிரே இல்லை என்ற நிலையில் எப்படி பில் வருகின்றது. எப்படி சட்டம் வரும் ? ஆர்டினன்ஸ் லேப்ஸ் ஆனதற்குப் பிறகு சட்டம் வர முடியாது. ஆனால் ஆர்டினன்ஸிக்கு உயிர் கொடுப்பதற்

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஏப்ரல் 6

காகத்தான் இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். ஆர்டினன்ஸ் லேப்ஸ் ஆனதற்குப் பிறகு அதைச் சட்டமாக்குவதற்கு இங்கே சட்ட முன்வடிவு கொண்டுவர முடியாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூறுகின்ற பிரச்சினை

That will arise at the time of introduction of the Bill, not at the time of consideration of the Bill. At the time of introduction of the Bill, the ordinance was in force.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, சப்ஸ்டன்ஸை மாற்றவில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். The substance of the Bill itself is substance of the ordinance, which has lapsed. அவ்வளவு லேசாக They cannot get away with this thing.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆர்டினன்ஸ் இருக்கும் போதே சட்ட முன்வடிவு அவையில் அறிமுகம் செய்யப் பெற்றுள்ளது என்று அமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அப்படி ஆர்டினன்ஸ் இருக்கும் போதே சட்டம் கொண்டு வரப் பட்டு விட்டதால் இப்போது ஆய்வுக்குத்தான் எடுத்துக் கொள்ள படுகின்றது. ஆகவே ஆய்வுக்கு எடுத்துக் கொள்கின்றபோது அந்தப் பிரச்சினை வருவதில்லை என்பதுதான் அமைச்சரின் விளக்கம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, ஆர்டினன்ஸ் இருக்கின்றபோதே இதை டிஸ்கஷனுக்கு எடுத்திருக்க வேண்டும். ஆனால் போர்ஸிலே இருக்கக் கூடிய ஆர்டினன்ஸை ரீப்பீல் பண்ணுவதற்கு தான் இந்த பில் என்று ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்ற இடத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே ஆர்டினன்ஸே இல்லாமல் போய்விடுகிறபோது பில் எப்படி வரும் ?

When there is no ordinance, how can there be this Bill ? How can we discuss it or consider it ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

Consideration of the Bill by the House will be only consequent to the introduction of the same in the House. That is the stand taken.



1981 ஏப்ரல் 6]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். இன்டிரடக்ஷன் என்று இருக்கிறபோது இருந்த சர்கம்ஸ்டேன்ஸஸ் வேறு. இப்போது இருக்கிற சூழ்நிலையில் அந்தச் சட்டம் கன்சிடரேஷனுக்கு வருகிறபோது, அந்தச் சூழ்நிலை காலாவதியாகி விட்டது. இன்டிரடக்ஷனும் போய் விட்டது. ஆர்டினன்ஸ் [illegible] அமுலில் இருந்தது. ஆகவே அதை ரிபீளேஸ் செய்கிறோம். ரிபீல் செய்கிறோம் என்கிற நிலை அப்போது. அது போய் விட்டது. இப்போது அந்த ஆர்டினன்ஸும் இல்லை. அது காலாவதியாகி விட்டது என்கிற போது, இந்த சட்ட முன் வடிவிற்கு இன்டிரடக்ஷனுக்கும் கன்சிடரேஷனுக்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் இந்தச் சட்ட முன் வடிவிலே ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்ஸை பார்த்தால் தெரியும். இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில், ஒரு பில்லை கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான முழு உரிமையையும் படைத்திருக்கிறது. இங்கே கொண்டு வந்திருக்கிற சட்ட முன் வடிவிலே திருத்தங்கள் கொண்டு வருவதற்கோ அல்லது திருத்தங்களை நிராகரிப்பதற்கோ, வேண்டுமானால் சட்டத்தையே வேண்டாமென் நிராகரிப்பதற்கோ இந்த மன்றம் முழு உரிமையையும் படைத்திருக்கிறது. ஆர்டினன்ஸ் என்பது சட்டமன்றம் இல்லாத போது எடுக்கப்படுகிற ஒரு நடவடிக்கை. ஆனால் சட்டமுன் வடிவு என்கிற போது, இந்தச் சட்டமுன் வடிவிற்குரிய எல்லா உரிமைகளையும் அது பெற்றிருக்கிறது. இதிலே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல மிகத் தெளிவாக இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு எந்த நோக்கத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது மிகத் தெளிவாக இருக்கிறது.

There is no law empowering the government to deal promptly and effectively with strikes in essential services to ensure public safety and maintenance of supplies and services necessary for the normal life of the community. In the context of certain persons employed essential services it was considered necessary that Government sould have adequate powers to deal promptly and effectively with strikes in essential services.

[1981 ஏப்ரல் 6

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் படிப்பது இச்சட்ட முன் வடிவின் காரண விளக்க நோக்கத்திலிருந்து அல்ல. இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலிருந்து படிக்கிறார்கள். காரண விளக்க நோக்கத்திலே அது தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அவசர சட்டத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று. ஆகவே, இந்தச் சட்டம் அந்த வகையிலே ஊறு பட்டிருக்கிறது, குறைபட்டிருக்கிறது என்பதுதான் எங்களுடைய வாதம். அதை நிறைவேற்றுவதன் மூலம், இந்தச் சட்ட மன்றம் ஒரு சட்ட விரோதமான காரியத்தை செய்கிறதோ என்கிற ஒரு கோட்டிலே நிற்கக் கூடிய நிலைமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் தீர்ப்பு கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவில் உள்ள ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்ஸை படிக்கிறேன்.

"With a view to ensure public safety and maintenance of supplies and services necessary for the normal life of the community it was considered necessary that the Government should have adequate powers to deal promptly and effectively with strikes in essential services. That is the primary objective."

ஆக இந்த நோக்கத்தை எய்துவதற்காகத்தான் ஏற்கெனவே அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

'Accordingly' is not the object. 'Accordingly' is the method to achieve the object. The object is very clear—viz. ensuring public safety. That is why the Bill is brought. Accordingly ordinance was brought. Law Minister's point is clear.

அந்த அடிப்படை நோக்கம் அப்படியே இருக்கிறது. அந்த அவசரச் சட்டம் என்கிற பகுதி நீக்கப்பட்டாலும் எப்படி அந்தச் சட்ட முன்வடிவு முதலிலே அறிமுகப்படுத்தப்பட்டபோது எந்த அடிப்படை நோக்கம் இருந்ததோ அதே அடிப்படை நோக்கம் தொடர்ந்து இருக்கிறது. ஆகவே அரசியல் சட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ள, ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் என்ற பகுதி இல்லாமல் போய்விடுகிறது என்ற பிரச்னையே எழவில்லை. அதனுடைய ஸப்ஸ்டேன்ஸ் என்ன? அதற்கு ஒரு சட்டம்



1981 ஏப்ரல் 6] [திரு. ச. இராமச்சந்திரன்]

வேண்டும். அந்த சட்ட முன்வடிவு அப்படியே இருக்கிறது. அதை எய்துவதற்கு ஏற்கெனவே ஒரு வழி இருக்கிறது. அந்த வழி இப்போது தேவையில்லை. சட்ட முன்வடிவே போதும் என்கிறோம் நாம். ஆகவே ஆப்ஜெக்டிலேயோ, ஸப்ஸ்டேன்ஸிலேயோ சேஞ்ச் இல்லை.

[நண்பகல் 12-00]

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் ஆண்ட் ரீசன்ஸ்-ல் சொல்கிறபோது சட்டம் கொண்டுவருவதற்கான இரண்டு நோக்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதல் நோக்கம் மட்டும்தான் தெரிகிறது. முதல் நோக்கம், எதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று சொல்கிறபோது அத்தியாவசிய சர்வீஸ்களில் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது., பொது மக்களுடைய நன்மைக்காக ஒழுங்குக்காக இது கொண்டு வரப்படுகிறது என்று ஒரு நோக்கம். அது ஒரு காரணம். அதற்கு இணையான, அதிலிருந்து எந்தவிதத்திலும் குறையாத இரண்டாவது காரணம்,

'The Bill seeks to replace the said Ordinance.'

ஏற்கெனவே ஒரு ஆர்டினன்ஸ் இருக்கிறது. ஆளுநர் அவர்களால் சட்டமன்ற கூட்டத்தொடர் நடைபெறாதபோது இதுமாதிரி ஒரு அவசரச் சட்டம் பிறபிக்கப்பட்டிருக்கிறது. அந்த அவசரச் சட்டத்தை திருத்துவதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் பொறுத்தமட்டில் முதல் நோக்கம் 'எக்ஸிஸ்டிங்'-ல் இருக்கிறது. திரு. உமாநாத் அவர்களும், எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்களும் எடுத்துச்சொல்லியதைப்போல இரண்டு நோக்கங்கள் முக்கியமானவை. ஏற்கெனவே ஆர்டினன்ஸ் இல்லை. குழந்தை இல்லை என்று சொல்கிறபோது குழந்தைக்கு எப்படித் திருமணம்? அதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இரண்டு நோக்கம் அல்ல, ஒரே நோக்கம்தான்.. ஒரே நோக்கம்தான் இருக்கிறது. இரண்டாவது, 'அக்கார்டிங்லி' அதற்கேற்ப. இரண்டாவது என்பதை ஒரு தனி நோக்கம் என்று சொல்லமுடியாது. அது அதன் தொடர்பாக வருகிற ஒன்று. அதனால்தான் சொன்னேன். நோக்கம் தெளிவாக இருக்கிறது: இந்தச் சட்ட முன்வடிவில் தெளிவாக இருக்கிறது. அதை அடைவதற்கு ஏற்கெனவே அவசரச் சட்டம் பிறபிக்கப்பட்டது. அந்த அவசரச் சட்டம் இதிலே ஏன் போடப்பட்டது என்றால்

அறிமுகப்படுத்தப்பட்டபோது போடப்பட்டது. ஆனால் இன்று அந்த அவசரச் சட்டம் இல்லை என்ற காரணத்தால் அதைத் திருத்துகிற முழு உரிமை நம்முடைய மன்றத்திற்கு உண்டு.

திரு. அ. ரகுமான்கான் : இதில் 'ஆப்ஜெக்ட்' என்று போடவில்லை, 'ஆப்ஜெக்ட்ஸ்' என்று போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சட்ட முன்வடிவில் ஆப்ஜெக்ட்ஸ் ஆன்ட் ரீஸன்ஸ் என்று போடுவது சாதாரண சம்பிரதாயம். ஆப்ஜெக்ட்ஸ் என்று போடுவதால் பல நோக்கங்களைக் குறிப்பிட்டாக வேண்டும் என்று சட்டம் இல்லை. ஆப்ஜெக்ட்ஸ் என்பது பொதுப்படையாகச் சொல்வது. ஆப்ஜெக்ட்ஸ் ஆன்ட் ரீஸன்ஸ் என்றால் காரணங்கள் காரியங்கள் என்று சொல்வது வழக்கம். 'எஸ்' என்று போட்டதால் புது வியாக்கியானம் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

THE HON. THIRU C. PONNAIYAN : A Bill when it is introduced, it need not be consequent to an Ordinance alone. It can even be a fresh one. For Raghumankhan, I want to make it clear.

பேரவைத் தலைவர் அவர்களே, இதிலுள்ள முழுப் பிரச்னை என்னவென்றால், ஆர்டினன்ஸ் லாப்ஸாகி விட்டது என்பதை யாரும் மறுக்கவில்லை. அது தெரிந்த ஒன்றுதான். எப்போது லாப்ஸ் ஆனது என்பதுதான். பில் இன்ட்ரொட்யூஸ் செய்தவுடன் அது லாப்ஸாகிறது.

"The whole point is whether the bill has lapsed. It has not been lapsed." பில்லைப் பொறுத்தவரையில் அது உயிரோடு இருக்கிறது. even though the Ordinance elapsed. தற்போது கன்ஸிடரேஷன்-க்கு எடுத்துக்கொள்வது When the Bill is alive, we are taking it up for consideration. The legal point is very clear.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, நான் இப்போது தெரிந்து கொள்ள விரும்புவது, இதை இன்ட்ரொட்யூஸ் செய்கிற போது அந்த அவசரச் சட்டம் உயிரோடு இருந்தது. இன்று கன்ஸிடர் செய்யும்போது, கன்ஸிடரேஷன்-க்கு என்று வரும் போது அந்த அவசரச் சட்டம் இல்லை. இப்போது புதிய சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இடையில் ஒரு சம்பவம் ஏற்பட்டு, இன்ட்ரொட்யூஸ்



செய்த நேரத்தில், கன்ஸிடரேஷன் செய்த நேரத்தில் இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று விரும்பியிருந்தால், எங்கேயாவது ஸ்ட்ரைக் செய்கிறார்கள், அதை தடை செய்ய வேண்டும் என்று விரும்பியிருந்தால் இந்தச் சட்டத்தை அமல்படுத்தியிருக்க முடியுமா ? இந்தச் சட்டம் மூலம் நடவடிக்கைகள் எடுத்திருக்க முடியுமா ? நடவடிக்கை எடுத்திருக்க முடியாது. எனவே இந்தச் சட்டத்தை இறந்து போனதாகத்தான் கருத வேண்டும். ஆகவே புதிதாக ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வரவேண்டும் என்றுதான் எதிர்க்கட்சியினர் கேட்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டால் சட்ட சம்மதமாக இருக்குமா என்பதைதான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசாங்கம் 10-வது விதியை மட்டும் ரத்து செய்வதற்கான திருத்தத்தை கொடுத்தார்கள். ஆகவே இப்போது நம் முன்னால் இருக்கக்கூடிய சட்டத்தில் என்ன இருக்கிறது என்றால் காரண விளக்க நோக்கம் அப்படியே இருக்கிறது. அவர்கள் திருத்தம் மட்டும் கொடுத்திருக்கிறார்கள். அதை நீக்கவேண்டுமென்று. காரண விளக்க நோக்கம் என்பது திருத்தப்படவில்லை. அந்த காரண விளக்க நோக்கத்தில் இரண்டாவது பாராவில் இந்தச் சட்ட முன்வடிவு .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காரண விளக்க நோக்கம் என்பது பில்லின் பகுதியல்ல. பில்லின் விளக்கம் சட்ட முன்வடிவின் பகுதி அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசி பல அமென்ட்மென்ட்ஸ் கொடுத்து அந்த அமென்மென்ட்ஸ்-ல் காரண விளக்க நோக்கம் மாறியும் போகலாம். ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ் என்பதை பில்லின் பார்ட் ஆன்ட் பார்ஸலாக எடுத்துக்கொள்ளக்கூடாது. விளக்கம் அளிக்கப்படுகிறது. முடிவில் விளக்கத்திலும் மாறுதல்கள் வரக்கூடும். ஆகவே அதுதான் முடிந்த முடிவு என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

திரு. என். சங்கரய்யா : ஒரு சட்ட முன்வடிவிலுள்ள காரண விளக்க நோக்கம் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு வந்ததற்குப் பிறகு மாற்றப்பட்டது கிடையாது.

இதுவரையில் எனக்குள்ள ஞாபகம், ஒரு சட்டம் கொண்டு வந்த பிறகு, அதற்கான காரண காரிய விளக்கம் என்பது அந்தச் சட்டத்தின் பகுதியாகும். ஆனால், நீங்கள் இங்கே சொல்கிறீர்கள், இந்த காரண காரிய விளக்கம் சட்டத்தின் பகுதி அல்லவென்று. அப்படியானால், இந்த அரசாங்கம் அதை நீக்கிவிடலாமே ?..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காரண காரிய விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு ஒரு வரைமுறை, கைட் லைன்சே தவிர, வேறல்ல. அது சட்டத்தின் ஒரு பகுதி அல்ல. பில்லுக்காக அறிமுகம் செய்வது ; வேறல்ல. எனவே, அதையும் இதையும் சேர்த்துக் கொள்ளத் தேவையில்லை. ஏன், சட்டங்கள் பல முறை மாற்றப் பட்டிருக்கின்றன. மாறியிருக்கின்றன. நாம் உருவாக்கிய அரசியல் நிர்ணய சட்டத்திலே எத்தனையோ மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கான காரணங்கள், பின்னாலே சொல்லப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, சட்டம் என்பது நிரந்தரமானதல்ல. அவ்வப்போது மாறக்கூடிய வாய்ப்புக்கள் சட்டத்திற்கு உண்டு.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் பற்றிய பொசிஷனை நீங்கள் சொன்னீர்கள். ஆனால், நான் படித்துக் காட்டியபடி [பார்லிமெண்ட் புரொசீஜரில் ஒரு பில் என்கிறபோது அது கான்ஸ்டிடியூஷன் நெசசிடி என்று போட்ட லிஸ்டிலே, பர்ஸ்ட் நெசசிடி ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் என்பது. பில் ஸ்டேஜில்லே, சட்டத்திலே கட்டாயமாக செய்யவேண்டியது — இந்தக் கன்டிஷன் வேண்டாம் என்பது. நான் என்ன சஜஸ்ட் பண்ணுகிறேன் என்றால், இது ஒரு சீரியசான லீகல் பாயின்ட். இதுவரைக்கும் இந்த அவையிலே இந்த மாதிரியான பொசிஷன் எப்போதுமே வந்ததில்லை. பிரத்தியோகமான பொசிஷனாக வந்திருக்கிறது. அதனுடைய லீகாலிடி பாயின்ட் டை கன்சிடரேஷனுக்கு எடுக்கலாமா என்பது பற்றி எல்லா அப்போசிஷன் பார்டிகளும் சீரியசாக விவாதம் பண்ணியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதிலும் கன்வின்சிங்காசு இல்லை. இந்தச் சூழ்நிலையில் பார்லிமென்டிலே ஒரு





ஒன்றிருந்தால், அதை ரீ-பிளேஸ் பண்ண முடியும். ஒன்றிருந்தால்தான் அதைமாற்ற முடியும். ஒன்றில்லாதபோது, அதை ரீ-பிளேஸ் பண்ணுவதற்கு இடமில்லை. இன்னொன்றை அளிக்க முடியாது. இதிலே சொல்லப்பட்டிருக்கிறது.'

'The bill seeks to replace the said Ordinance.

ஏற்கெனவே இருக்கின்ற ஆர்டினென்சை ரீ-பிளேஸ் பண்ணுவதற்கு சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்டினென்ஸ் இல்லையென்று சொல்லும்போது, அதை ரீ-பிளேஸ் பண்ணுகிற பிரச்னை வரவில்லை. ஆகவே, இந்த சட்ட முன்வடிவை கொண்டு வருவதென்பது சட்டவிரோதமானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சட்டப் பிரச்னைபற்றி,

It has been very vividly explained by me and by the Hon. Minister for Electricity. There is no change at all as to the Objects and Reasons.

ஆனால், நான் ஏற்கெனவே சொன்னதுபோல், லாப்ஸ் ஆகிவிடுவதற்கு முன்னால் பில் இன்டர்டியூஸ் செய்யப்பட்டது.

The Bill which was introduced is still alive. On that basis, this Bill was taken up for consideration. There is no legal hurdle and legal consultations have been heard and it is in perfect order.

திரு. ரா. உமாநாத் : அட்வகேட் ஜெனரலைக் கூப்பிட்டுப் பேசுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவர்ன்மெண்ட் டெசிஷன் இல்லை, என்று சொல்லிவிட்டார்கள்.

1981 ஏப்ரல் 6] [திரு. ரா. உமாநாத்]

மெதட் கையாளப்படுகிறது. அது லீகல் மெதட். நமக்கும் அது பொருந்தும். அங்கே அட்டார்னி ஜெனரலைக் கூப்பிட்டு, லீகல் பொசிஷனை விளக்கச் சொல்வார்கள். இன்திஹோல் அவுஸ் இங்கே அட்டார்னி ஜெனரல் அல்ல; அட்வகேட் ஜெனரல். அந்த அட்வகேட் ஜெனரலைக் கூப்பிட்டு, விளக்கம் கேட்கலாம். ஹரிபரி பண்ண வேண்டாம். அப்படிச் செய்தால், ஓர்கர்சுடைய டெமாக்ரடிக் ரைட்சை டெமாலிஷ் செய்யப்படும் முறையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்போது இதிலே லீகல் ஆஸ்பெக்ட் வரும்போது, நான் வேண்டுகோள் விடுவது நீங்கள் அவசரப்பட்டு ரூலிங் கொடுக்காமல், தயவுசெய்து அட்வேகேட் ஜெனரலைக் கூப்பிட்டு அவரிடம் லீகல் பொசிஷனை கிளியர் பண்ணிய பிறகு நீங்கள் ரூலிங் கொடுப்பது நல்லதாக இருக்கும், என்பது என் அபிப்பிராயம்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே இறந்துபோன ஒரு சட்டத்திற்குப் பிறகு மறு சட்டம் என்கின்ற முறையிலே அமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். இங்கே அத்தனை எதிர்க்கட்சிகளும் இதைப்பற்றிப் பேசினார்கள். கவர்ன்மென்ட் ஒரு நல்ல காரியத்தைச் செய்யலாம். அது இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கி விட்டால், இந்தப் பிரச்னை தீரலாம். அதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு நேரமும் அதைப்பற்றித் தான் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

*திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே, இரண்டாவதாக

'The Bill seeks to replace the said Ordinance' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'If there is one thing, it has to be replaced by another thing,



1981 ஏப்ரல் 6]

[பிற்பகல் 12-10]

டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆபத்தாகி விடுமே என்று நான் கருதுகிறேன். இப்பொழுது இந்தச் சட்டம் சரியாக சிந்திக்கப்படாமல் கொண்டு வருகிற காரணத்தால் இதில் சிக்கல் ஏற்பட்டு, ஒரு காலத்தில் நிற்காமல் போய் விடக்கூடும் என்று யூகம் எதிர்க்கட்சியில் உள்ளவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு இங்கே அட்வகேட்-ஜெனரலை அழைத்து சட்டத்தை மிக செம்மையாக ஆக்கிவிட்டால் அது தொழிலாளர்களுக்கு ஆபத்தாக ஆனாலும் ஆகிவிடும். ஆகவே அட்வகேட்-ஜெனரல் வந்து அதை தெளிவாக்கத் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரச் சட்டம் காலாவதி ஆனபிறகு இந்த சட்டமுன்வடிவு கொண்டு வரலாமா என்பதுதான் இந்த சபைக்கு முன்னாலே இருக்கக்கூடிய ஒரு பிரச்னை. அரசைப் பொறுத்தவரை எந்த ஒரு பொருள் குறித்து வேண்டுமானாலும் இந்த சபைக்கு முன்னால் ஒரு அரசின் சட்ட முன்வடிவு கொண்டு வருவதற்கு உரிமை பெற்றுள்ளது. ஆகவே கொண்டு வரலாம். அவசரச்சட்டம் கலாவதி ஆகிவிட்ட காரணத்தாலே மட்டும் அந்த உரிமை பாதிக்கப்படுவதில்லை. அரசியல் சட்டம் அதைத்தான் சொல்கிறது. ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்ட ஒரு சட்டமுன்வடிவு சில திருத்தங்களுடன் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. நடைமுறையைப் பொறுத்த ஒன்றுதான் அதோடு.

'Any lacuna in the Statement of Objects and Reasons must be pointed out at the time of introduction of the Bill. A point raised in that regard at the consideration stage of the Bill is not valid.'

என்று விளக்கமாகவே 460-ஆம் பக்கத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த சட்டமுன்வடிவு எடுத்துக்கொள்வதில் எந்தத் தடையும் இல்லை. இதை எடுத்துக் கொள்வதில் தவறில்லை என்று தீர்ப்பளிக்கிறேன். விவாதம் துவங்கலாம்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, ரூலிங் கொடுத்து, கன்சிடரேஷனுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். கன்சிடரேஷனுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற 'பொசிஷனுக்குப்' பிறகு ஒரு ''சீரியஸ் அப்ஜெக்ஷன்' பாயின்ட் அப் ஆர்டர். சட்டமன்ற பேரவை விதி 121 என்ன சொல்கிறதென்றால்,

Rule 121: Tamil Nadu Legislative Assembly Rules.

[திரு. ரா. உமாநாத்] [1981 ஏப்ரல் 6

'A Bill involving expenditure shall be accompanied by a financial memorandum which shall invite particular attention to the clauses involving expenditure and shall also give an estimate of the recurring and non-recurring expenditure involved in case the Bill is passed into law:

Provided that the clauses in a Bill involving expenditure shall be printed in thick type or in italics, so as to draw the attention of the Members to the same.

என்னுடைய கருத்து இந்த பில் 'எக்ஸ்பெண்டிச்சர்' வரக்கூடியது, என்று சொல்ல விரும்புகிறேன். இந்த சட்டப்படி இது சட்டமானால் வேலை நிறுத்தம்—முன்பு எல்லாம் 10 பேர் 20 பேர் என்று கைது செய்கிறபோது இருப்பது வேறு—சட்ட விரோதமாக 'ஸ்ட்ரைக்' 'டிக்ளேர்' பண்ணினால் இரண்டாயிரம் பேர்கள் ஒரு பாக்டரியில் 'இல்லீகலாக' ஸ்ட்ரைக் டிக்ளேர் பண்ணினால் இரண்டாயிரம் பேரையும் கைது செய்யவேண்டியிருக்கும். அது மட்டுமல்ல தூண்டி விடுபவர்களை கைது செய்யவேண்டியிருக்கும். இந்நிலே வருகிறது. பணம் உண்டியலிலே போட்டால்—டிரேட் யூனியனில் வாங்குகிறார்கள்—அவர்களை கைது செய்ய வேண்டியிருக்கும். இது ஆக்ட் ஆனால்

'thousands will have to be arrested, We cannot wait.

என்ற ஒரு நிலைமை அரசாங்கத்திற்கு வருகிறபொழுது, அடிஷனல் போலீஸ் போர்ஸ் வேண்டியிருக்கும். ஜெயிலிலே நிச்சயமாக இந்த மாதிரி ஆயிரக்கணக்கானவர்கள் போகிறபோது. அதற்கு செலவு என்று நிச்சயமாக 'எக்ஸ்ட்ரா' வரும்; 'எக்ஸ்ட்ரா' ஸ்டாஃப் வேண்டியிருக்கும். ஆகவே 'அடிஷனல் எக்ஸ்பெண்டிச்சருக்கு' அவர்கள் மெமோரண்டம் 'சப்மிட்' பண்ணவில்லை. 'Nor have they printed in italics' ஆகவே அதைச் செய்ய வேண்டும். செய்யாமல் இருக்கிறபொழுது அது செல்லுபடி ஆகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை பொறுத்தவரை இவ்வளவும் நடந்தால், இது வரும்; நடந்தால் செலவு வரும் அந்த வாதம் ரொம்ப சரியான வாதம். இரண்டாயிரம் பேர் ஸ்ட்ரைக் செய்தால், போலிஸ் நடவடிக்கையெடுத்தால், செலவு வந்தால், எல்லாம் வரும், நடந்தால் நடந்தால் என்று போனால் அதற்கு வரைமுறையே கிடையாது. Financing Bill அதில் add ஆகாது.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, ரூலே சொல்கிறது, ஆக்ட் ஆனால், 'எக்ஸ்பெண்டிச்சருக்கு' மெமோரண்டம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் . . .



1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடைமுறையிலே வருகிற சிக்கல். ''லா அண்ட் ஆர்டர்' என்று மற்ற இனங்களிலே வருமே தவிர நிதி சம்பந்தமான பிரச்சினையில், பணச் செலவு பற்றி இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டது, அதுபோல் வராது என்று நான் கருதுகிறேன். ஆகவே விவாதத்தை இதில் துவங்கலாம்.

திருவாளர்கள் என். சங்கரய்யா, ரா. உமாநாத், கு. ரமணி, என். வரதராஜன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் இந்த சட்டமுன்வடிவை சட்டமன்றத்தின் கூட்டு பொறுக்கு குழுவின் ஆய்வுக்கு அனுப்பவேண்டுமென்ற பொதுத்திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள். அதைப்போலவே திருவாளர்கள். சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, என். ஏ. பூங்காவனம். மு. அம்பிகாபதி ஆகியோர்களும் ஒரு பொதுத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு, 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1981)

(i) மக்களின் கருத்தறிய சுற்றுக்கு விடப்பெற வேண்டும்.

(ii) சட்ட மன்றத்தின் கூட்டுப் பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப் பெறவேண்டும்''.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே. நான் அதை வழிமொழிகிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (6—4—1981 பகல் சுமார் 10-25 மணிக்கு) பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பிய

[பேரவைத் தலைவர்] [1981 ஏப்ரல் 6

(1) திரு. கே. பஞ்சாட்சரம் (எஸ். கன்னையன் மகன்)

(2) திரு. ஆறுமுகம் (சீனிவாசன் மகன்).

ஆகிய இருவரும் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். அவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவருக்கு அனுமதிச் சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்களின் பரிந்துரையின் மேல். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டுவருவார்கள்,

7. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''இன்று (6—4—1981) பகல் சுமார் 10-25 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள—

(1) சென்னை, வியாசர்பாடி, கென்னடி நகர் 474-ம் எண் வீட்டிலிருக்கும் எஸ். கன்னையனின் மகன் கே. பஞ்சாட்சரம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்,

(2) சென்னை, வியாசர்பாடி, கென்னடி நகர் 420-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. சீனிவாசனின் மகன் ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.



1981 ஏப்ரல் 6] [திரு. ச. இராச்சந்திரன்]

அவர்கள் ஒருநாள் வெறும் காவல் (simple imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981—தொடர்ச்சி.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1981) சட்டமன்றத்தினுடைய கூட்டுப் பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பவேண்டுமென்று என்னுடைய திருத்தத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவு நியாயமற்றது, பொருத்தமற்றது, உசிதமற்றது என்பதை நான் முதலிலே தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே அமைதியாக தொழிலாளர்களும், உழைப்பாளிகளும் மத்திய தர மக்களும் தங்கள் கோரிக்கைகளை பல இயக்கங்கள் வாயிலாகக் கொண்டுவருகிற சூழ்நிலையில் எந்த விதமான ஆத்திரமூட்டுதலும் இல்லாத காலத்திலே, அமைதிக்கு எந்தவிதமான பங்கமும் இல்லாத காலத்திலே இப்படிப்பட்ட கடுமையான ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருப்பது கோடிக்கணக்கான உழைப்பாளிகள் அவர்களின் உரிமைகளை அடிப்படையிலே பறிப்பதாக அமைந்திருக்கிறது.

[பிற்பகல் 12—20]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கோடிக்கணக்கான் மக்கள் என்று ஏன் நான் கூறுகிறேன் என்று சொன்னால், இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால், யார் யாருக்கு இது பொருந்

[திரு. என். சங்கரய்யா] [1981 ஏப்ரல் 6

தும் என்பதைப்பற்றி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பார்க்கும்பொழுது, குடிநீர் வழங்கல் மட்டுமல்ல, மின் சக்தி வழங்கல் என்பது மட்டுமல்ல, பயணிகளை ஏற்றிச் செல்லுகின்ற மோட்டார் வண்டிகள் என்பது மட்டுமல்ல, சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான போக்குவரத்துப் பணி என்பது மட்டுமல்ல, மருத்துவமனைகள், மருந்தகங்கள் உட்பட என்பது மட்டுமல்ல, இவைகளெல்லாம் போக அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது, இந்தச் சட்டமுன்வடிவிலே இரண்டாவது பிரிவில் 7-வது உப பிரிவில், அரசியலைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையில் இரண்டாம் பட்டியலின் கீழ், மாநிலச் சட்டமன்றத்துக்கு எந்தவொரு பணி அல்லது வேலை அல்லது அதன்யாதொரு வகை குறித்துச் சட்டமியற்ற அதிகாரமுள்ளதோ, அந்தப் பணி அல்லது வேலை அல்லது அதன் யாதொரு வகை என்று பொருள்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பார்த்தால் ரொம்பச் சுருக்கமாக வருவதைப்போலத் தோன்றும், ஆனால், இந்திய அரசியலைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையில் இரண்டாம் பட்டியலின்கீழ், மாநில சர்க்காரினுடைய அதிகாரங்கள் என்று இருக்கும் பிரிவைப் பார்த்தால் இந்தச் சட்டமுன்வடிவு எவ்வளவு பயங்கரமானதாக இருந்து, எவ்வளவு இலட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கும் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 66 அயிட்டங்கள் இருக்கின்றன. மாநிலச் சட்டமன்றம் அதிகாரம் இயற்றுவதற்கான வரம்பு 66 பொருள்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த 66 இலாக்காக்களிலே பணியாற்றக்கூடிய அத்தனைபேர் சம்பந்தமாகவும் இந்தச் சட்டத்தை கொண்டுவருவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டமுன்வடிவு அளிக்கிறது.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், நீதித் துறை, சிறைச் சாலைகள், ஸ்தலஸ்தாபனம், பொதுச் சுகாதாரம் என்பவை மட்டுமல்ல, ஊர் சுற்றிக் பார்க்கும் காரியங்கள்—பில்கிரிமேஜ், அதுபற்றிக்கூட மாநில சட்டமன்றம் இயற்ற முடியும். ஆகவே அதிலே ஈடுபட்டிருப்பவர்களும் உட்படுத்தப்படுவார்கள்.



1981 ஏப்ரல் 6] [திரு. என். சங்கரய்யா]

அதுமட்டுமல்லாமல், மயானத்தில் வேலை செய்பவர்கள், கல்வித் துறையிலே வேலை பார்க்கக்கூடியவர்கள், நூலகங் களிலே பணியாற்றக் கூடியவர்கள், மியூசியம்—பொருட்காட்சி யிலே பணியாற்றக் கூடியவர்கள், தெரு வேலை செய்பவர்கள், கட்டிட வேலை செய்பவர்கள், பாலத்தில் வேலை செய்பவர்கள், தோணி ஓட்டுபவர்கள், ஆகிய இவர்களெல்லாம் இந்தச் சட்ட முன்வடிவிலே கொண்டுவரப்படுவார்கள். நான் மெக்கானிக்கல் வெஹிகில்ஸ் என்று சொல்லப்படக்கூடிய, அதாவது இயந்திர சக்தியால் இழுக்கப்படாத ஜட்கா வண்டிகள், பாறை வண்டிகள் இழுப்பவர்கள், சைக்கிள் ரிக்‌ஷாக்காரர்கள் ஆகிய இப் படிப் பணியாற்றுபவர்கள்கூட வேலை நிறுத்தம் செய்தால் தண் டிக்கப்படும் வாய்ப்பு இந்தச் சட்டத்தினால் ஏற்படும்.

அடுத்து விவசாயம். இது தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களை மட்டும் பாதிக்கின்ற சட்டம் என்று கருதி விடக் கூடாது என்பதற்காகத்தான் ஏழாவது அட்டவணையில் இருக்கும் இரண்டாவது லிஸ்டைப்பற்றிச் சொல்கிறேன். விவ சாயம் சம்பந்தப்பட்ட சகல பகுதிகளிலும் ஈடுபட்டிருக்கும் அனைவரையும் இதற்குள்ளே கொண்டு வரலாம்.

ஆடுமாடுகளின் சிகிச்சையிலே ஈடுபட்டிருப்பவர்கள் இதற் குள்ளே வருவார்கள்.

கேட்டில் டிரஸ்பாஸ் என்ற வகையில் ஆடு மாடுகள் கிராமங் களில் அத்துமீறி நடந்தால் அதை அடைக்கின்ற பவுண்டிலே வேலை செய்பவர்கள், நீர்ப்பாசனத்துறை, சாக்கடைத் துறை, நிலம் டென்யூர்ஸ் என்று போட்டு, டெனென்ட்ஸ் என்று போட்டு குத்தகைதாரர்களாக இருந்து நிலச்சுவான்தாரர்களுக்கு அவர்கள் குத்தகை கொடுக்க வேண்டியது பாக்கியிருந்தால் அது சம் பந்தமாகவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. காடுகள், மீன ளம், கோர்ட் சம்பந்தமாகவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும்விட சுரங்கத்திலே பணியாற்றுகின்ற தொழி லாளர்கள் கொண்டு வரப்படுவார்கள். அந்தத் தொழில் சம் பந்தமாகப் போட்டிருக்கும் ஒரேயொரு ஷரத்து என்னவென் றால், முதல் பட்டியலில் பாராளுமன்றத்திற்குச் சட்டம் இயற் றும் அதிகாரம் என்று சொல்லுகிறார்கள். அந்த லிஸ்டிலே 7 மற்றும் 52 என்ற இந்த இரண்டு அயிட்டங்களைத் தவிர பாக் கித் தொழில் சம்பந்தமாக சகல தொழில்கள் சம்பந்தமாகவும் இதிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. டெக்ஸ்டைல் வியா

பாரிகள் ஜவுளிக்கடை தொழிலும் அத்தியாவசியமான தொழில் தான், அதில் ஈடுபட்டிருப்பவர்களும் இதிலே வருவார்கள் இப்படிச் சகல வியாபாரிகள், சிறுகடைகளில் வேலை செய்பவர்கள் ஆகியோர்கூட இந்த அத்தியாவசியமான பணிகள் என்ற சட்ட வரம்பிலே கொண்டு வரப்படுகிறார்கள்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நடக்கக்கூடிய சந்தைகள். அந்தச் சந்தைகளிலே பணி புரியக்கூடியவர்களையும் இந்த அத்தியாவசியமான பணியிலே ஈடுபடக்கூடியவர்கள் என்று கருதி, அவர்கள் வேலை நிறுத்தம் செய்தால், அவர்களுக்கும் இந்த ஆறாண்டு தண்டனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்றைக்கு தியேட்டர்ஸ் அன்ட் டிராமா. நாடகத் துறையிலே பணியாற்றக் கூடியவர்களும், அத்தியாவசியப் பணியிலே ஈடுபடக்கூடியவர்கள் என்று கருதி, அவர்கள் ஒரு வேளை, கோரிக்கைகளுக்காக வேலை நீக்கம் செய்தால் அவர்களையும் தண்டிப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டம், இன்றைக்கு மாகாண சர்க்கார் மாநிலச் சட்டமன்றத்திலே சட்டம் இயற்றுவதற்கான அதிகாரத்தின் கீழ் பெற்றுள்ள 66 துறைகளிலே பணி புரியக் கூடிய அத்தனை பேரையும் பாதிக்கக்கூடிய மிகக் கடுமையான ஒரு சட்டம். இன்றைக்கு நான் கேட்க விரும்புகிறேன். இப்படி கோடிக் கணக்கான மக்களை பாதிக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டுவரும் போது, அவர்கள் என்ன சொல்கிறார்கள், அவர்களுடைய க்ருத்து என்ன ? இந்தச் சட்டம் தேவைதானா என்பதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் ? இதிலே உள்ள ஷரத்துகளைப்பற்றி அவர்களுடைய கருத்து என்ன என்பதைக் கேட்டறிய ஒரு செலக்ட் கமிட்டி போட்டால், அது இந்த மாகாணத்திலே உள்ள பல்வேறு இடங்களுக்குச் சென்று, அதனாலே, பாதிக்கப்படக்கூடிய மக்களிடத்திலே, இந்தச் சட்டத்தைப்பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால், அரசாங்கத்திற்கு நன்மைதானே ? அவர்கள் கொடுக்கக்கூடிய ஆலோசனைகளிலே, அவர்கள் கொடுக்கக் கூடிய யோசனைகளிலே, நியாயம் என்று தோன்றக் கூடிய யோசனைகள் இருந்தால், இந்த அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டு, தகுந்த முறையிலே இந்தச் சட்ட முன்வடிவை மாற்ற வாய்ப்பு ஏற்படுமே ? அந்தக் கதவை அடைத்து விட்டால், இது அவர்களை எவ்வளவு பாதித்தாலும் நாங்கள் கேட்க மாட்டோம் என்று அரசாங்கம் இதனை நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்தினால், இதனால் ஏற்படக் கூடிய ஒரு கேடு என்னவென்றால், கோடிக்கணக்கான மக்கள் மனதிலே கடுமையான கோபம் ஏற்படும் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.





இன்னொன்று, நான் கூற விரும்புகிறேன். வேலை நிறுத்தம் செய்தால் தண்டனை—லாரித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் தண்டனை என்று இதில் உள்ளது. ஆனால், லாரி வைத்து இருக்கக்கூடிய முதலாளிகள் பணி முடக்கம் செய்தால், அவர்களுக்குத் தண்டனை கொடுப்பதைப் பற்றி இந்த அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறதா ? தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் தண்டனை. ஆனால், முதலாளிகள் கதவடைப்பு செய்தால், கிடையாது. சமீபத்திலே, மாண்புமிகு மணிமாறன் அவர்கள் கூட, திருப்பூரிலே ஏராளமான பனியன் தொழில் முதலாளிகள் ஒப்பந்தத்தை அமுல் நடத்தாத முறையில் தொழிலாளர்களுக்குத் துன்பத்தை அதிகரித்தார்கள் என்று கூறினார். அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கச் சட்டம் கொண்டு வரப்படுகிறதா ? இன்று சிறு சிறு தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய முதலாளிகள் லாக் அவுட் செய்யலாம்.. அதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது சட்டம் கொண்டு வந்திருக்கிறதா ? அவர்கள் குளோஷர் செய்கிறார்கள். தங்களுக்கு லாபம் வரவில்லையென்று மூடி விடுகிறார்கள். மூடி விடுகிறபொழுது, அத்தியாவசியமான பணிகளைப் பாதிக்கும், அதற்கு ஓராண்டு தண்டனை என்று ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறதா என்றால், கொண்டு வரப்படவில்லை. ஆகவே, சுரண்டக்கூடிய கூட்டத்தினர், முதலாளிகள் அவர்கள் சுரண்டுகிற நேரத்திலே, கதவுகளை மூடலாம். தொழிற்சாலையை மூடலாம் தொழிலாளர்களுக்கு வேலையில்லையென்று சொல்லலாம். ஆட்குறைப்புச் செய்யலாம். இதெல்லாம் இந்த மாநிலத்திலே அமைதியைப் பாதிக்காது என்றால், ஒரு கண்ணிலே சுண்ணாம்பு, ஒரு கண்ணிலே வெண்ணெய் என்றுதான் பொருள். உழைக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்கள், தங்களுடைய நியாயமான உரிமைகளுக்காக கிளர்ச்சி செய்தால், தண்டனை. ஆனால், அந்த முதலாளிகள் சுரண்டினாலும், தொழிலாளர்களை ஒடுக்கினாலும் அதற்காக, தங்களுடைய பாக்டரிகளை மூடினாலும் எந்தத் தண்டனையும் இல்லை. இது என்ன சட்டம் என்பதை இந்த அரசாங்கம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு, லாக் அவுட் செய்பவர்களுக்கு, தொழிற்சாலைகளை மூடுபவர்களுக்கு, அது அத்தியாவசியமான தேவைகளை மீறுவதாகும் என்று தண்டனை அளிக்கிற சட்டம் இல்லாதபொழுது, தொழிலாளர்களைத் தண்டிக்கும் சட்டத்தைக் கொண்டு வருவது மிகவும் பாரபட்சமானது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு எல்.ஐ.சி. யில் ஸ்டிரைக் நடக்கிறது. 45,000 ஊழியர்கள், நியாயமான கோரிக்கைக்காக, சுப்ரீம் கோர்ட் டைரக்ஷனை, மத்திய சர்க்கார் நிறைவேற்ற மறுக்கிறது என்ற காரணத்திற்காக, வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அதுகூட சட்ட விரோதம் என்று மத்திய அரசால் இன்னும் அறிவிக்கப்ப

பட்வேயில்லை நான் மாநில அரசாங்கத்தினுடைய கவனத்
திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு அவர்கள்
சொல்லியிருக்க முடியும் அல்லவா? ஆரம்பிப்பதற்கு முன்னா
லேயே, சட்ட விரோதம் என்று சட்டம் கொண்டு வரப்பட
வில்லை.

அப்படியானால், இருக்கிற ஏற்பாடே, இன்றைக்கு மத்திய
சர்க்கார் கூட நாட்டிலே உள்ள நிலைமையைக் கருதி, தொழி
லாளர்களுடைய கோபத்தைக் கருதிகொ டு வராமல் இருக்கும்
போது, நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். 1 இலட்சம் தொழி
லாளர்கள் பெங்களூரிலே வேலை நிறுத்தம் செய்தார்கள். 70
நாளைக்கு மேலாக நடந்தது. அப்பொழுதுகூட, இந்த அத்தியா
வசியமானப் பணிச் சட்டம் என்ற பெயராலே கொண்டு வந்து,
அதைத் தடை செய்யவில்லையே. அப்படியிருக்கும்போது, இந்த
தமிழ்நாட்டிலே இன்றைக்கு நாம் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக்
கொண்டு வருவது, முற்றிலும் நியாயமற்றது, என்பதைத்தான்
நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னொன்று பார்க்கலாம், இன்டியன் பாங்க் ஆஃபீஸர்ஸ்
அசோசியேஷன் ஒர்க் டு ரூல் அஜிட்டேஷன் நடத்துகிறார்கள்.
யார் சொல்லிக் கொடுத்தார்கள்? தமிழகத்திலே இருக்கக்கூடிய
வருமான வரி ஆஃபீசர்கள், முடிவு செய்து நாங்கள் இந்த மாதிரி
தான் வேலை செய்வோம், கோரிக்கைகள் நிறைவேறவில்லை
யென்று கூறுகிறார்கள். ஆகவே, தொழிலாளி மட்டுமல்ல,
மத்திய தர மக்கள் கருத்தாலும், கரத்தாலும் பாடு படக்கூடிய
வர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகள் திர்க்கப்படாத
பொழு, கிளர்ச்சி செய்தால், அந்தக் கிளர்ச்சிக்கான காரணங்
கள் என்ன என்பதை ஆராய்ந்து அதைத் தீர்ப்பதற்குப் பதிலாக,
இன்றைக்கு தடியெடுத்து, அடக்குமுறை எடுத்து, நான் உங்
களுக்கு ஓராண்டு தண்டனை கொடுப்பேன் என்று சொன்னால்,
இந்த அரசாங்கம் யாருடைய ஆதரவினாலே தேர்ந்தெடுக்கப்
பட்டதோ, எந்தக் கோடிக்கணக்கான மக்கள் சாதாரண உழைப்
பாளி மக்களின் ஆதரவினாலே தேர்ந்தெடுக்கப்பட்டதோ, அவர்
களுடைய மனதிற்கே ஏற்காத வகையில் ஒரு பயங்கரமான சட்ட
முன்வடிவைக் கொண்டு வந்தால், அது மிகவும் தவறானது,
மக்களுடைய அந்தக் கட்டளைக்கு முரணானது என்பதை உங்
களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

இன்றைக்கு என்.ஜி.ஓ.க்கள் போராடுகிறார்கள். ஆசிரியர்
கள் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம்
கிட்டத்தட்ட 7 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அந்த 7
இலட்சம் பணியாளர்கள் இல்லை என்றால் இந்த அரசாங்கம்
நடக்குமா? அவர்கள் கோரிக்கை வைத்தால் என்ன? அந்தக்





கோரிக்கைகளில் எவையெவை நியாயம் என்பதைப் பார்த்து,
எதையெதை ஏற்றுக் கொள்ள முடியுமோ அவற்றை ஏற்றுக்
கொண்டு, மற்றவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்
வதில் அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. அந்த முறையைப்
பின்பற்றலாம். அதை விட்டு விட்டு, இப்படி எந்தத்
தொழிலாக இருந்தாலும் சரி, அரசாங்க ஊழியர்களாக இருந்
தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அதற்கும் இந்தச் சட்டம்
பொருந்தும் என்று சொல்வது சரியல்ல. அரசாங்கம் இதை
யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் இன்றைக்கு
முதலாளிகள் சொல்கிறார்கள்—அரசாங்கமே, தமிழ் நாட்டில்
இருக்கும் அரசாங்கமே நீங்கள் கடுமையாகத் தொழிலாளர்களை
அடக்கி, எங்களுக்கு அடிமைகளைப் போல் வேலை செய்யச்
செய்து உற்பத்தியைப் பெருக்க உதவி செய்தால், அதற்கு எங்க
ளுக்கு ஆதரவு கொடுத்தால்தான் தொழிற்சாலைகளை
நடத்துவோம் என்று அவர்கள் சொன்னதற்கு பயந்து கொண்டு,
இதைக் கொண்டு வந்து இருக்கிறீர்களோ என்று எங்களுக்குத்
தோன்றுகிறது. தொழிலாளர்களின் உண்மையான ஒத்துழைப்
பின் பேரில்தான் தொழில் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று பாரதி,
பாடினான். ஆனால் இந்தச் சட்டம் என்ன சொல்கிறது என்றால்
உழவுக்கும், தொழிலுக்கும் நிந்தனை செய்வோம், வீணில் உண்டு
களித்திருப்பேரை வந்தனை செய்வோம் என்பதுபோல் இருக்
கிறது. இங்கே பல்வேறு விதமான திருத்தங்களைக் கொடுத்து
இருக்கிறோம். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை,

ஆனால் நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்,
இந்தச் சட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றாவிட்டால் என்ன
கெடுதல் ஏற்படும்? ஆகவே, இன்றைக்கு இந்தச் சட்டத்தை
நிறைவேற்றுதைற்கு பதிலாக இந்த இரு சட்டமன்றங்களில்
இருக்கக்கூடிய பல்வேறு உறுப்பினர்களைக் கொண்ட—ஆளும்
கட்சி உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள்—
ஒரு பொறுக்குக் குழு அமைத்து, இந்தச் சட்டத்திலே போட்டு
இருக்கிற பிரிவுகளை பற்றி மக்கள் மத்தியில் அவர்கள் மூலம்
விசாரிக்கச் செய்து, அதற்குப் பிறகு நிதானமாக இந்தச் சட்டத்
திலே நீங்கள் திருத்தம் செய்தோ அல்லது இந்தச் சட்டத்தைக்
கைவிட வேண்டும் என்று உங்களுக்குப் பட்டால் கைவிடுவதற்கோ
வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதை இன்றைக்கு நிறைவேற்றா
மல் ஒத்திவைத்து, இதைப்பற்றி ஆழமாக, அமைதியாக பரி
சிலனை செய்ய வேண்டும் என்ற ஒரு காரியத்திற்காகத்தான்
நாங்கள் இன்றைக்கு எங்கள் சார்பில் இந்தத் திருத்தத்தை
கொண்டு வந்து இருக்கிறோம்.

[திரு. என். சங்கரய்யா] [1981 ஏப்ரல் 6

இன்றைக்கு ஒன்று சொல்லாம் ஏதோ அவசரமான நிலைமை இருக்கிறது, உடனடியாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றாவிட்டால் இங்கே சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விடும் நிலைமை இருக்கிறது என்று இருந்தால், இந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றலாம். ஆனால் தமிழகத்தின் சரித்திரத்தைப் பார்த்தால், பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகத்திலேதான் தொழிலாளர்கள் இயக்கம், உழைப்பாளர் இயக்கம், மக்கள் இயக்கம் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும், நடந்து வரும் பாரம்பரியம் இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் இவ்வளவு பெரிய ஆயுதத்தை எடுத்துக்கொண்டு வந்து அவர்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் உருவாக்குவது சரிதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, இதைப் பொறுக்குக்குழுவிற்கு விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த பொறுக்குக்குழு மாநிலத்தில் உள்ள எல்லா தொழில் சென்டர்களுக்கும்போய், மற்ற இடங்களுக்கும் போய் அங்கேயுள்ள சங்கத்தினர் கருத்துக்களையும், மக்கள் கருத்துக் களையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் அதைக்கொண்டு வரவேண்டும்.

மற்றொரு சட்டம் இங்கே முன்பு கொண்டு வரப்பட்டது. விவசாயிகளைத் தூண்டிவிட்டால் அவர்களுக்கு தண்டனை கொடுக்கும் சட்டம் வந்தபோது அரசாங்கம் சொன்னார்கள். அவர்களுக்குக் கிடைத்து இருக்கும் சட்ட ஆலோசனை பொதுஅமைதிக்கு ஆபத்து என்று சொன்னால் மட்டும் போதாது, நாட்டுப் பாதுகாப்புக்கு ஆபத்து என்று நிலைமை இருக்கவேண்டும் என்று சேர்த்துச் சொன்னால்தான் அது சட்டம் செல்லும் என்பதால் அந்தக் கருத்தைச் சட்டத்திலே சேர்த்தார்கள். இந்தியாவின் சுதந்திரத்திற்கும், அரசுடைமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய முறையில் தூண்டிவிட்டால் என்று சேர்க்கப்பட்டது. ஆனால் இதில் அப்படிப் போடவில்லை. வெறும் அமைதி; மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தியாவின் அமைதிக்கு பாதகம் ஏற்படக்கூடிய முறையிலே இருந்தால் இந்தச் சட்டம் பயன் படுத்தப்படும் என்றுசொல்லவில்லை. சாதாரணமான நிலைமைக்குக் கூட பயன்படுத்தவேண்டும் என்று சொல்கிறார்கள். இன்றைக்குக் காலையில் தான் பேசினோம்.

சகல கட்சியினரும் சேர்ந்து திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கைநெசவுத் தொழிலாளர்களின்மீது நடைபெறும் அடக்குமுறை பற்றி பேசினோம். எங்கேயிருந்து வருகிறது இந்த அணுகுமுறை? அரசாங்கம் தெளிவாகச் சொல்லவேண்டும். நாங்கள் உழைப்பாளர்கள்பால் நிற்போம், மத்தியதர



1981 ஏப்ரல் 6] [திரு. என். சங்கரய்யா]

மக்கள், உழைப்பாளர்கள் மத்தியில் நிற்போம் என்று
சொன்னால், இந்த அணுகுமுறை இருக்காது. இப்படிப்பட்ட
இயக்கங்கள் வராது. அதற்குப் பதிலாக அரசாங்கமே இப்படிப்
பட்ட கொடுமையான நடவடிக்கை எடுக்கப் பார்த்தால்,
கீழே இருக்கும் அதிகாரிகள் 10 மடங்கு உயரம் எம்பிக் குதிப்
பார்கள், அடக்குமுறை காட்டுவார்கள். ஆகவே நான் சொல்
கிறேன். அரசாங்கமே இதைப் பொறுக்குக்குழுவிற்கு விடுவதன்
மூலம் எல்லா நன்மைகளும் கிடைக்குமே தவிர, பாதகம்
ஏற்படாது என்ற காரணத்தாலே இன்றைக்கு இந்தச்
சட்ட முன்வடிவை நிறைவேற்றாமல், அரசாங்கம் இன்று கூட
யோசிக்கலாம். இதை பொறுக்குக் குழுவிற்கு விட்டு, அதன்
மூலம் ஒரு சரியான முடிவு எடுக்கவேண்டும். அப்படி
செய்யவில்லையென்றால், பெரிய மனக்கசப்பு ஏற்படும் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். நாம்
பெற்றிருக்கிற வாக்குகளின் எண்ணிக்கையை நீங்கள் பார்க்க
வேண்டும். வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்று நாம்
வந்திருக்கிறோம். நீங்கள் மெஜாரிட்டி என்று நினைக்கலாம்.
ஆனால் நீங்கள் பெற்றிருக்கிற வாக்குகள் எவ்வளவு? மற்றுள்ள
கட்சிகள், எதிர்க்கட்சிகள் பெற்றுள்ள வாக்குகள் எவ்வளவு
என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த
அடிப்படையில் இன்றைக்கு அண்ணா தி.மு.க. பெற்ற
வாக்குகளையும் பாருங்கள். இந்தச் சட்டத்தை எதிர்க்கின்ற
கட்சிகளின் வாக்குகளையும் பாருங்கள். ஆக, உங்களை விட
இவ்வளவு அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கிற எதிர்க்
கட்சிகள் எதிர்க்கின்ற இந்த சட்டத்தை நீங்கள் கொண்டு
வருவது பற்றி சிந்திக்க வேண்டாமா? நீங்கள் எண்ணிக்கையிலே
அதிகமாக இருக்கலாம். ஆனால் கோடிக்கணக்கான வாக்குகளைப்
பெற்றிருக்கிற மற்றவர்களுடைய எதிர்ப்புகளை நீங்கள் மதிக்க
வேண்டும். ஏறத்தாழ முழுமையாக இந்த வரிசையில் இருக்கிற
கட்சிகள் எல்லாம் இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்
கின்றன. மதுவிலக்குப் பிரச்சனையிலே எங்களுக்கு கருத்து
வேறுபாடு இருந்தாலும் இந்தப் பிரச்சினையிலே இந்த
வரிசையில் இருக்கிற அத்தனை பேர்களுக்கும் ஒரே கருத்துதான்.
ஆகவே, இந்தச் சட்டம் மிகவும் கொடுமையானது, பாதக
மான சட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி ஸ்ட்ரக்சுரல்ஸ் பிரச்சினையைப்பற்றி அரசு
கூட்டிய ஒவ்வொரு கூட்டத்திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
வந்திருக்கிறது. எங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்
கிறோம். அதேமாதிரி போக்குவரத்துத் துறை கல்வித் துறை
யில் கூட்டப்பட்ட கூட்டமானாலும். மற்ற கன்சல்டேடிவ்
கமிட்டிகள் கூட்டமானாலும் எங்கள் சார்பிலே ஒவ்வொரு
கூட்டத்திற்கும் வந்து, கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால் இத்தகைய ஒரு பாதகமான சட்டத்தைக் கொண்டு

வரக்கூடிய நேரத்தில் இது வேண்டுமா, வேண்டாமா ? இதில் திருத்தம் செய்யலாமா, கூடாதா ? உங்கள் கருத்து என்ன என்று கேட்கவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் மாற்றுக்கட்சிகளின் கருத்துக்கள் அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிற நேரத்தில் அவர்களுடைய கருத்துக்களைக் கேட்பது, ச கட்சிகளின் கருத்தறிய வேண்டுமென்று சொல்வது மற்ற பிரச்சினைகளி எல்லாக் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்தாலும், கடுமையாக விமரிசித்தாலும் இப்படிப்பட்டச் சட்டங்களை நிறைவேற்ற முற்படுகிறீர்கள், இது சரியல்ல. இப்போது இதிலே நீங்கள் சர்வ கட்சிகளின் ஆலோசனையைக் கேட்காவிட்டாலும் இந்தச் சட்டத்தை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்புங்கள். இந்த மன்றத்திலுள்ளவர்களும், மேல் சபையில் உள்ளவர்களும் அந்தக் குழுவிலே இருப்பார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சரும் இருப்பார். அங்கே இது பற்றி விவாதிக்கலாம். என்னென்ன வகையிலே பாதுகாப்பு கொடுக்கலாம், எப்படி திருத்தலாம் என்பதுபற்றி கருத்துக்களை அனைவரும் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும். கருத்து விமர்சனங்கள் ஏற்பட்ட பின்னால் ஒருவேளை இந்தச் சட்டம் தேவையில் ல என்று வரக்கூடும். ஆகையால் இதிலே அரசாங்கத்தின் கௌரவப் பிரச்சினையைப் பார்க்காமல் இதை பொறுக்குக்குழுவிற்கு அனுப்புங்கள்.

தொழிலாளர்கள் யார்? உழைப்பாளர்கள் யார்? இந்த அரசின் நண்பர்கள்தான். அவர்கள் வேறு யாரும் அல்ல. ஆகவே, அரசாங்கம் இதிலே ஆணவம் என்றோ, கௌரவம் என்றோ பார்க்கத் தேவையில்லை. இன்றைக்கு காங்கிரஸ் அல்லாத மற்ற அரசுக ள எந்த நேரத்தில் கலைக்கலாம் என்ற எண்ணம் மத்தியிலே உருவாகிக் கொண்டிருக்கிறது அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்திலே இந்த அரசின் நண்பர்களை தொழிலாளர்களை பகைத்துக்கொள்ள வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குகூட அரை மணி நேரத்தில் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் காங்கிரஸ் அல்லாத அரசாங்கத்தை என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் உங்களுக்கு ஆதரவாக இருக்கின்ற உழைக்கின்ற அடித்தளத்து மக்கள், அந்த மக்கள் மத்தியிலே என்ன நிலைமை ஏற்படும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி எல்லாக் கோணங்களிலும் பார்க்கும்போது தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருந்தாலும், ஜனநாயக உரிமைக்கு மதிப்பு அளித்திருந்தாலும் வேலை நிறுத்தம் என்பது இந்திய அரசியல் சட்டத்தின்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற ஒன்று. தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருந்தபோதிலும் அன்றைக்கு 1927-ல் டாக்டர் வாடியா, சக்கரைச் செட்டியார், கல்யாண சுந்தரம் போன்றவர்கள் மீது கொடிய வழக்குத் தொடரப்



பட்டது. பி. அண்டு. சி. மில் சங்கம் விவகாரத்தில் அவர்கள் மீது 'கான்பிரசி'—ராஜத் துரோகம் குற்றம் சாட்டப் பட்டது. பாதுகாப்பு இருக்கும்போதே இப்படிப்பட்ட குற்றம் சாட்டப்பட்டது என்றால் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் நாளை எப்படிப்பட்ட நிலைமைகள் வரும் என்பதை நாங்கள் நினைத்துப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நீண்ட கால அனுபவத்தை வைத்து நாங்கள் இப்படிச் சொல்கிறோம். இதன் உண்மை என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

வேலைநிறுத்தம் செய்யக்கூடாது என்றால், இன்றைக்கு 1,000 பேர், 2,000 பேர் ஈடுபட்டிருக்கிற அத்தியாவசிய சர்வீஸ் என்றால் பரவாயில்லை; அவர்களுடைய உணர்வுக்கும் மதிப்பு அளிக்க வேண்டும். இருந்தாலும் ஓரளவுக்கு பரவாயில்லை. ஆனால் இந்தச் சட்டத்தின்படி இங்கே இருக்கிற சபாநாயகர் அனுமதியோடு சட்டசபை பணியாளர்களையும் கைது செய்யலாம். நீங்கள் அறிவித்திருக்கிற 66 தொழில்களில் எதையும் விட்டுவிடவில்லை. நாளை நீதிமன்றத்திலே இருக்கிற நீதிபதிகள் கேட்டால் அங்கேயும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம். நீதிமன்றத்திலே இருக்கிற ஊழியர்கள் எல்லாம் பயங்கரமாக இருக்கிறார்கள்; தமிழக அரசே எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டால் உடனே போய்விடலாம். ஆக சட்டசபை ஊழியர்களுக்கும் பாதுகாப்பு இல்லை, நீதிமன்ற ஊழியர்களுக்கும் பாதுகாப்பு இல்லை.

[பிற்பகல் 12-40]

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்களும் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

"நோய் நாடி, நோய் முதல் நாடி" என்பது பற்றி அமைச்சர்கள் எல்லாம் பேசுகிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் போன்ற படித்த மக்கள் எல்லாம் இறுதியாக வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி இந்த அரசு ஆராய வேண்டாமா ? அதற்குரிய காரணத்தைத் துடைக்க வேண்டாமா ? அவர்களைத் துன்புறுத்துவது என்பது மட்டுமல்ல. அவர்களுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை என்றும் அவர்களுக்கு பண உதவி செய்பவர்களுக்கும் அபராதம், தண்டனை என்றெல்லாம் கொண்டுவரப்படுகின்ற இந்த சட்டம் மிகவும் பாதகமானதொரு அரசியல் விளைவைத் தான் ஏற்படுத்தும். ஆகவே, ஜனநாயக விரோதமான விளைவை ஏற்படுத்தக்கூடிய இந்த சட்ட முன்டிவை அவசரப்

பட்டு நிறைவேற்றாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதற்கு வாய்ப்புக் கொடுத்து அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு தொழிலாளர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதைப்பற்றியும் அறிவதற்காக ஒரு செலக்ட் கமிட்டி இதற்காகப் போட்டு இந்தப் பிரச்சினை பற்றி ஆராய வேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்தை ஆதரித்து அமருகிறேன்.

* திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டமன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை கூட்டாய்வுக்கு விடவேண்டும் என்று கொடுக்கப்பட்ட திருத்தத்தை வழிமொழிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் பேசுகிறேன்.

இந்த சட்டம் அவசியமற்ற சட்டம் என்று எனக்கு முன்னால் பேசிய மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் சங்கரய்யாஅவர்கள் விவரமாகப்பேசி இருக்கிறார்கள். தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக சட்டங்களைக் கொண்டுவர வேண்டிய நிலையில் இந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்களுக்கு எதிரான சட்டத்தைக் கொண்டு வரும் என்று நாங்கள் எண்ணவில்லை. ஆகவே இந்த சட்ட முன்வடிவைப் பார்த்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு பதிலாக ஏதோ தொழிலாளர்கள் எல்லோரும் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்பவர்கள் போலவும், அவர்கள் எல்லாம் நாணயமற்றவர்கள் போலவும், அவர்கள் எல்லாம் படுமோசமானவர்கள் போலவும், அவர்களைக் கட்டுப்படுத்தவே முடியாது என்பது போலவும் ஒரு கடுமையான சட்டம் வேண்டும் என்றும் இந்த அரசு ஏன் கருதுகின்றது என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. தமிழகத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள் எல்லோரும் எவ்வளவு பொறுப்பானவர்கள், எவ்வளவு நாணயமானவர்கள், எவ்வளவு நேர்மையோடும் நாணயத்தோடும் நடந்துகொள்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். பிறமாநிலங்களிலே என்ன நடக்கின்றது என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், தமிழகத்தின் தொழிலாளர்கள் எவ்வளவு நாணயமாக நடக்கிறார்கள்? அப்படிப்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் மிக அத்தியாவசியப் பணிகளில் என்று கூறி கடுமையான சட்டங்கள் மூலம் அவர்களுக்கு ஓர் ஆண்டு ஜெயில் தண்டனை என்றும் ஆயிரம் ரூபாய் அபராதம்கட்டவேண்டும் என்று, சொல்லி அவர்களைத் தூண்டுகின்றவர்களுக்கு அபராதம் என்று நடத்துகின்றவர்களுக்கு அபராதம் என்றெல்லாம் சட்டம் கொண்டு வந்திருப்பது எவ்வளவு மோசமானதொரு நிலை என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்."





என்று வள்ளுவர் சொல்லி இருக்கின்றார். எனவே இடித்துச் சொல்ல வேண்டிய நேரம் வந்திருக்கின்றது. எனவேதான் நாங்களும் இந்த விஷயத்தை இடித்து எடுத்துச் சொல்கிறோம். இந்தச் சட்ட முன்வடிவை கூட்டாய்வுக் குழுவிற்கு விடவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே திருத்தங்கள் கொடுத்திருகிறோம். தொழிலாளர் வர்க்கம் தொழிற் சங்கங்களைக் கண்டு பயப்படுவதே கிடையாது. அவர்கள் போராடி போராடிப் பழக்கப்பட்டவர்கள். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஸ்பாட்டகஸ் என்ற ஸ்லேவ்ஸ் சொசைட்டியிலே ரோமன் எம்பையர் இருக்கின்றபோது போராடினார்கள். அவர்கள் 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போராடினார்கள். ஆனால் அன்றைய தினம் அந்த ஸ்லேவ்ஸ் ஒடுக்கப்பட்டார்களா என்றால் இல்லை. அவர்களை அடக்கி வைத்திருந்த அந்த சாம்ராஜ்ஜியங்கள்தான் நொறுங்கி தவிடுபொடியாகியதே தவிர தொழிலாளி வர்க்கத்தை ஒடுக்குகின்ற சக்தி யாருக்கும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி) ஏனென்றால் அவர்கள் பிரம்மாக்கள். அவர்கள் சிருஷ்டிகர்த்தாக்கள். அப்படிப்பட்ட தொழிலாள வர்க்கத்தை எந்தச் சட்டத்தைப் போட்டாலும் ஒடுக்க முடியாது. 1880-ல் சிகாகோ நகரில் கலகப் போராட்டம். துப்பாக்கிச் சூடு, அடுத்து 8 மணி நேர வேலை 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உல்லாசம் என்று கேட்டார்கள். அப்படிப் போராடிப் போராடி இன்றைக்கு தொழிலாள வர்க்கம் உலகத்திலே ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றி கொண்டிருக்கக்கூடிய காலத்திலே, தமிழக சட்டமன்றத்திலே 1981ஆம் ஆண்டில் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்றால் நீங்கள் எந்த நூற்றாண்டிலே இருக்கிறீர்கள். 200 ஆண்டுகளுக்கு முன்னாலே இருப்பதாக நினைப்பா? தொழிலாள வர்க்கம் தங்கள் உரிமைக்காக, இந்தச் சட்டத்தை எதிர்த்து எந்தவித தியாகத்தையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தொழிலாள வர்க்கத்தை ஒடுக்கவே முடியாது. எப்படி முட்டையிலே இருக்கிற வெள்ளைக் கருவும் மஞ்சள் கருவும் ஒன்று பட்டு உடைத்துக் கொண்டு, ஓட்டை நொறுக்கிக் கொண்டு வெளியே வருகிறதோ அப்படி அந்த வர்க்கத்தினுடைய ஒற்றுமை இருக்கிறது. யூனிட்டி அன்ட் ஸ்டிரக்கிள் — சொல்லிக் கொடுத்தது காரல் மார்க்ஸ். ஒன்று பட்டு போராடுங்கள். ஒன்றுபடுவதே போராட்டம். ஒன்றுபடுவது உரிமைக்காக.

எனவே இதிலே போராட்டம் என்று சொல்கிறீர்களே என்ன பொருள்? கருவிலே இருக்கிற பிள்ளை தாயினுடைய வயிற்றிலேயிருந்து வெளியே வர போராடுகிறது. துடிக்கிறது. எல்லாமே போராட்டம்தான். நீங்கள் எதைப் போராட்டம் என்று சொல்கிறீர்கள். அத்தியாவசியத் தேவைகளான தண்ணீர் கொடுப்பதை, மின்சாரம் கிடைப்பதை தடை செய்வது என்று சொல்கிறீர்கள். அந்த அத்தியாவசியத் தேவைகளை

நீங்களே கொடுக்காமல் இருக்கும்போது என்ன செய்வது? மின்சாரத் தடை வருகிறது. அப்போது மின்துறை அமைச்சரை ஜெயிலுக்கு அனுப்புவதா? சென்னையிலே தண்ணீர் பைப்பிலே வரவில்லை என்று சகோதரர் புருஷோத்தமன் சொன்னார். அப்படியென்றால் நம்முடைய மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை ஜெயிலுக்கு அனுப்புவதா? நீங்களே அடிப்படைத் தேவைகளை கொடுக்க மறுக்கிறீர்களே. அப்படி இருக்க, சாதாரண தொழிலாளி ஏன் போய் தண்ணீரை நிறுத்தப்போகிறான்? மின்சாரத்தை நிறுத்தப் போகிறான்? அவைகள் தானாகவே நிற்கிறதே. இதிலே என்ன அத்தியாவசியப் பணிகளுக்குப் பாதுகாப்பு? அத்தியாவசியப் பணிகளை பாதுகாக்க வேண்டும் என்பது தொழிலாளிகளுக்கும், மக்களுக்கும் தெரியாதா? அவர்கள் என்ன புரியாமலா இருக்கிறார்கள்? அவைகளை பாதுகாப்பது தொழிலாள வர்க்கத்தினுடைய கடமையல்லவா?

இந்த நேரத்தில் ஒன்று ஞாபகம் வருகிறது, சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் நல்ல நேரம் என்ற படத்தில் ஒரு பாட்டுப் பாடி நடித்திருக்கிறார். அந்தப் பாட்டை எழுதியவர், சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவர் மதிப்பிற்குரிய சகோதரர் புலமைப்பித்தன் அவர்கள். அந்தப் பாட்டிலே,

"வலிமை உள்ளவன் வச்சது எல்லாம் சட்டம் ஆகாது தம்பி
பிறர் வாழ நினைப்பவர் எண்ணுவதெல்லாம் சட்டம் ஆகணும் தம்பி"

என்று சில வரிகள் வருகிறது. இந்தப் பாட்டைப் பாடித்தானே ஆட்சிக்கு வந்தீர்கள். அதை நம்பித்தானே ஜனங்கள் ஓட்டு போட்டார்கள்.

"பிறர் வாழ நினைப்பவர் எண்ணுவதெல்லாம் சட்டம் ஆகணும் தம்பி" என்ற அந்தக் கருத்து ஜனங்களுக்கு மனதிலே பதிந்து, சரி இவர் ஆட்சிக்கு வந்தால் நல்லது செய்வார் போலிருக்கிறது என்று தானே ஓட்டு போட்டிருக்கிறார்கள். ஆனால் இன்று சட்டமன்றத்திலே யார் அந்த ஓட்டைப் போட்டார்களோ, அவர்களுக்கு எதிராக சட்டம் கொண்டு வருகிறீர்களே என்ன நியாயம்?

நாங்களும் தோழமை கட்சிதான். நாங்களும் ஆதரித்து ஒன்றாக நின்றுதான் பிரச்சாரம் செய்து ஓட்டுக் கேட்டோம். ஜனங்கள் ஓட்டு போட்டிருக்கிறார்கள். இங்கே வந்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு ஜனங்களிடத்திலே அப்படி ஓட்டு கேட்கப் போகும்போது, நாங்கள் வேலை நிறுத்தம் செய்தால் ஒரு வருஷம் சிறை தண்டனை கொடுப்போம். தூண்டிவிட்டால்





இரண்டு வருஷம் கொடுப்போம் ரூ.5,000 அபராதம் கொடுப்போம். உணவுப் பொருள்களின் விலையை எல்லாம் ஏற்றுவோம். என்னெய்க்கெல்லாம் ரேஷன் வைப்போம், எனவே எங்களுக்கு ஓட்டு போடுங்கள் என்று யாராவது கேட்க முடியுமா? கேட்க யாருக்காவது தைரியம் இருக்கிறதா? வேலை நிறுத்தம் செய்தால் ஜெயில் தண்டனை கொடுப்போம் எனவே எங்களுக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்க யாருக்காவது தைரியம் இருக்கிறதா? எப்படி போடுவார்கள்? அப்படிக் கேட்டால், அப்புறம் எதை போட்டாலும் போடுவார்கள். எனவே நல்ல நேரம் திரைப்படத்தில் முதலமைச்சர் அவர்கள் பாடியதை நம்பி, அந்தக் கருத்தை எல்லாம் ஏற்று, இவர் நமக்கு நல்லது செய்வார் என்று ஓட்டு போட்டு அனுப்பிய மக்களுக்கு எதிராக நீங்கள் இப்படிப்பட்ட பயங்கரமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கூற விரும்புகிறேன்.

மிக் பயங்கரமான சட்டம். போலீஸ் வாரண்ட்டே இல்லாமல் பிடிக்கலாம்என்றால், ரோடில் யாராவது நடக்க முடியுமா? அத்தியாவசியப் பொருள்கள் என்றால் எது? எல்லாம்தான். நாளைக்கு இன்னொன்று வரலாம். விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு போராட்டம் நடத்தலாம் — நடத்துகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உடனே அதற்கு என்ன வியாக்கியானம் வரும்? நாத்தை நிலத்திலே நட்டால்தான் அதுவிளையும். விளைந்தால்தான் கதிர் வளரும். கதிர் வளர்ந்தால்தான் நெல் கிடைக்கும். நெல் கிடைத்தால்தான் அதை அரைக்க முடியும். அரைத்தால்தான் அரிசி கிடைக்கும். அரிசி கிடைத்தால்தான் சாப்பிடலாம். சாப்பிட்டால்தான் மனிதன் உயிரோடு இருப்பான். எனவே விவசாயத் தொழிலாளர்களின் போராட்டம் அத்தியாவசியப் பணிகளுக்கு, பொருள்களுக்கு எதிரானது என்று அதுவும் அத்தியாவசியமாக ஆகிவிடலாம்.

மேலும் இந்தச் சட்டத்திலே 8-வது பிரிவிலே வாரண்ட் இல்லாமலே பிடிக்கலாம் என்று இருக்கிறதே, அது மிக பயங்கரமான நிலைமையை ஏற்படுத்தப் போகிறது.

இந்த 8-வது பிரிவிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால், "பிடி ஆணை இல்லாமல் கைது செய்வதற்கான அதிகாரம் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில், மத்திய சட்டம் 2/74, என்ன சொல்லியிருப்பினும், காவல் துறை அதிகாரி ஒருவர் இச்சட்டத்தின் கீழ், இக்குற்றத்தை ஒருவர் செய்திருப்பார் என்று சந்தேகிக்க நியாயம் இருந்தால் அவரை பிடி ஆணை இல்லாமல் கைது செய்யலாம்."

[திரு. மு. அம்பிகாபதி] [1981 ஏப்ரல் 6

(பிற்பகல் 12-50)

குற்றங்களே செய்யவேண்டாம். சந்தேகித்தாலே போதும். இது காவல் துறை அதிகாரிகளே முடிவுசெய்வதுதான். இவர் குற்றம் செய்திருப்பாரோ என்று சந்தேகம் ஏற்பட்டால் பிடியாணை இல்லாமலேயே அவரை உள்ளே பிடித்துப்போடலாம் என்று போட்டால் இது என்ன என்று புரியவில்லை. இது பிரிட்டீஷ்காரன் காலத்தில் வரவேண்டிய சட்டம். இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் ஆட்சியில் இருக்கிறோம். எந்த நேரத்தில் எந்த ஆட்சி இருக்கும், எந்த நேரத்தில் போகும் என்று சொல்லமுடியாத ஒரு காலம். மத்தியில்கூட கொஞ்ச நாட்களுக்கு முன்னால் ஜனதாக் கட்சி ஆட்சியில் இருந்தது. அவர்களாகவே போய்விட்டார்கள். Nusance is better than non-sence. என்று சொல்லி மறுபடி ஒரு சர்க்காரை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். இது ரொம்ப மோசமாக இருக்கிறது, ஆகவே இதுவே இருக்கட்டும் என்று தேர்ந்தெடுத்தார்கள். (மணியடிக்கப்பட்டது.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று ஒரு மிகவும் பயங்கரமான சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதுவரை தமிழ் நாட்டில் இம்மாதிரியான ஒரு பயங்கரமான ஆள்தூக்கிச் சட்டம் செய்தது கிடையாது. இதற்குப் பெயர் ஆள்தூக்கிச் சட்டம். ஒன்றுமே வேண்டியதில்லை, காவல்துறை அதிகாரிகள் சந்தேகித்தால் போதும் உள்ளே அடைத்துவிடலாம். காவல் துறை அதிகாரிகள் நினைத்தல் போதும் என்றால் அவர்கள் யாரை வேண்டுமானாலும் நினைப்பார்கள். அவர்கள் மனதில் எது படுகிறதே அதை நினைப்பார்கள். இந்த ஆள்தூக்கிச் சட்டத்திற்கு கறுப்புச் சட்டம் என்று பெயர் வைக்கலாம். அவ்வளவு மோசமான சட்டம் இது. இந்தச் சட்டம் தமிழ்நாட்டிலுள்ள ஜனநாயக இயக்கங்களையே. பாழாக்கிவிடும்என்றுதெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய வேண்டுமென்று விரும்புவார்கள். தேவையில்லாமல் வேலை நிறுத்தத்தை தூண்டுகிறார்கள் என்று சொல்லலாம். நான் பி. டி. ஸி.க்கு சென்று காரணமின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுங்கள் என்று சொன்னால் என்னை பயித்தியக்காரன் என்று சொல்வார்கள். வேலைநிறுத்தம் செய்ய அதற்கான காரண காரியங்கள் இருத்தல் வேண்டும். காரணம் இல்லாமல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால் காரணத்தோடுதான் ஈடுபடுகிறார்கள். மதிப்பிற்குரிய முன்னாள் முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குச் சொல்கிறேன். அண்ணா அவர்கள் என்ன கருதினார்கள், என்ன சொன்னார்கள்? தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது, ஊதிய உயர்வு கேட்பது அவர்கள் மூன்றா



1981 ஏப்ரல் 6] [திரு. மு. அம்பிகாபதி]

வது மாடியில் மார்பிள்ஸ்டோன் போடுவதற்காக அல்ல, மேலும் ஒரு பிடி சாதம் அதிகமாகச் சாப்பிடுவதற்காக என்று கூறினார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் தொழிலாளி இம்பாலா காரில் போகவா வேலைநிறுத்தம் செய்கிறான்? மேலும் இரண்டு இட்டிலி, பிள்ளைகளுக்கு துணி என்று அவன் வாழ்க்கையை சிறிய அளவிற்கு செம்மைப்படுத்திக் கொள்ளத்தான் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறான் தொழிலாளி. நினைத்தவுடன் வேலை நிறுத்தம் செய்துவிடமுடியாது. கோரிக்கைகளை வைத்து பேச்சுவார்த்தை நடத்தி, டெப்டி லேபர் கமிஷனர், லேபர் கமிஷனர் இவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்திய பிறகு வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்து, பிறகும் பேச்சுவார்த்தைகள் நடத்தி இவ்வளவுக்கும் பிறகுதான தொழிலாளர்கள் அறிவிப்பு கொடுத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது) ஆகவே அத்தியாவசியப் பாதுகாப்பு என்ற பெயரால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் கடுமையாக கண்டிக்கிறேன். இதை பொறுக்குக் குழுவிற்கு விடவெண்டுமென்று வலியுறுத்துகிறேன். இந்த ஆள்தூக்கி கறுப்புச் சட்டம் தமிழகத்தில் நிறைவேற்றப்படுமானால் தொழிலாளர் வர்க்கம் கோடிக்கால் பூதம் என்று கொதித்தெழுந்து இந்தச் சட்டங்களை தவிடுபொடியாக்குவார்கள் என்று அரசுக்கு எச்சரிக்கை செய்து முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தியாவசியப் பணிகள் செய்கிறவர்கள் சம்பந்தமான இந்த மசோதாமீது நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும் என்று என் கட்சி சார்பில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் ஏற்படுகிற கஷ்டங்களைப்பற்றியெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அதேசமயத்தில் அரசாங்கத்தில் பணி புரிகிறவர்கள் அரசாங்கக் கொள்கைகளை நிறைவேற்றுவதில், துரிதமாக அவற்றை அமல்செய்வதில் தெரிந்தோ தெரியாமலோ நாடு பின்னோக்கிக் கொண்டு இருக்கிறது என்பதை அரசியல் தலைவர்கள் மறைத்துக்கொள்வதில் பயன் இல்லை.

அரசாங்கத்தை நடத்துவது அரசியல்வாதிகள் மட்டுமல்ல; அவர்களால் மட்டும் அரசாங்கத்தை நடத்த முடியாது. தேசத்தின் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளே, தேர்தல் காலமாக இருந்தாலும் சரி, சட்டத்தின் மூலமாக இருந்தாலும் சரி, அவைகளை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திலே பணி செய்கின்ற சிப்பந்திகளுக்கும் இருக்கிறது. ஆனால் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, தெரிந்தோ தெரியாமலோ அவைகளை நல்லமுறையில் செய்யவில்லை என்பதற்கு அரசியல் வாதிகளும் பொறுப்பாளி என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையிலே அரசியல் வாதிகள் ஒட்டுப் பெற

வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, எதை வேண்டுமானாலும் செய்வோம் என்று சொன்னாலும் அதை செய்யவேண்டுமென்பதற்கு வாய்ப்பு, வசதி, ஒட்டு அல்லது அன்பளிப்பு மறுபெயரால் லஞ்சம் என்பதற்கு இடம் கொடுத்தால், இந்த நாட்டின் கதி என்ன ஆவது? நாளுக்கு நாள் நாட்டின் நிலைமை சீர்குலையும். நாட்டிலே நல்லமுறையில் அரசாங்கத்தின் ஆணைகள் உறுதியாக்கப்படுவதில்லை. கொள்கைகள் செயல்படுத்தப்படுவதில்லை. காலாகாலத்தில் வேலைகள் நடைபெறுவதில்லை. இவைகளையெல்லம் எமர்ஜென்சி காலத்திலேயும் அதற்கு முன்னாலேயும் ஆளுங் கட்சி அரசாங்கமாக இருந்தாலும் சரி, எதிர்கட்சியாக இருந்தாலும் சரி, இந்தக் குற்றத்திலே அரசியல்வாதிகளுக்கு பங்கிருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஒத்துக்கொள்ளத் தவறினால் நாடு நிச்சயமாக நலம் பெறாது. குறிப்பாக, இந்த சப் கிளாஸ் 8 வது விதியை எடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அன்று எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், நிச்சயமாக நாங்கள் தேவையான திருத்தத்தை ஏற்றுக் கொள்வோம் என்று சொன்னதால், அதை விட்டுவிட வேண்டுமென்று நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். தேசத்தின் நிர்வாசம் நல்ல முறையிலே இருக்க வேண்டுமென்றால், இந்த கிளாஸ் 8ஐ எடுக்க வேண்டுமென்று கூறி, என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்பிமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்ட முன் வடிவின்மீது விவாதம் நாளை தொடரும்.

இப்போது அரை மணி நேர விவாதம், பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள்குறித்து அரைமணி நேர விவாதத்தை திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைப்பார்கள்.

இந்த விவாதத்தின்மீது 3 பேர்கள் பேச வேண்டும். உறுப்பினர்களுக்கு 5 நிமிடம் அமைச்சருக்கு 15 நிமிடம்.

## 8. அரைமணி நேர விவாதம்

### கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு.

*திரு ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த அவையில் இதுவரை இப் பொருள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவில்லை. இன்றைய தினம் தமிழகத்திலே வேலை செய்யக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் கச்சா முந்திரி தட்டுப்பாட்டின் காரணமாக முந்திரி தொழிற்சாலைகள் மூடப்





பட்டுள்ளதால் தொழிலாளர்கள் இன்னல் குறித்த இந்தப் பிரச்னை விரிவாக இந்த மன்றத்தில் இதுவரையில் விவாதிக்கப்படாத ஒரு பிரச்னை. குறிப்பாக, தமிழகத்திலே வேலை செய்யக்கூடிய ஏறத்தாழ ஒரு இலட்சம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னையை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்' இந்தத் தொழில் வழியாக இந்த முந்திரியைப் பயிரிடுவதன் வழியாக' ஏறத்தாழ பல கோடிக்கணக்கான ரூபாய் அந்நிய செலாவணியாக தமிழகத்திற்கு கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும்' இன்று தமிழகம் அதை இழந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன் அது என்னுடைய கருத்து. இதுசம்பந்தமாக 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7 ஆம் நாள் அன்று, ஒரு கேள்வி கேட்ட நேரத்

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

திலே அதற்குப் பதிலளித்தநேரத்தில், ஊரகத்தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு முந்திரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றும். அது மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதே நேரத்திலே, நான் ஒன்றை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

பிப்ரவரி 8 ஆம் நாள் வெளிவந்த 'சன்டே ஸ்டான்டர்டு' பத்திரிகையில்,

"The Centre today approved the implementation of a Rs. 39·63 crores cashew development project which will cover 60·275 hectares in Karnataka, Andhra Pradesh, Kerala and Orissa."

என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இதுசம்பந்தமாக தமிழகம் சேர்க்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்ற விவரத்தை தமிழக அரசும் கொடுக்கவில்லை, மத்திய அரசும் சொல்லவில்லை, என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். 180 பாக்டரிகள் இன்று தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் 156 பாக்டரிகள் குமரி மாவட்டத்தில் இருக்கின்றன. சராசரியாக ஒரு ஆலைக்கு 400 தொழிலாளர்கள் என்று வைத்தாலும், ஏறக்குறைய 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குமரி மாவட்டத்தில் இந்த தொழிலை நம்பி வாழ்க்கை நடத்துகிறார்கள்.

[பிற்பகல் 1—00].

சென்ற வருடத்தில் 12 ஆலைகளுக்குத் தான் முந்திரி, சென்ட்ரல் காஷ்யூ கார்ப்பரேஷனால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறத்தாழ நான்கு

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே 51 பாக்டரிகள் தேவைக்கு 26 ஆயிரம் டன்கள் கச்சா முந்திரி குமரி மாவட்டத்திற்கு கொடுக்கப்பட வேண்டுமென்று சென்ட்ரல் கேஷ்யூ கார்ப்பரேஷன் முடிவு எடுக்கப்பட்டதற்கு பிறகும் அந்த கச்சா முந்திரி ஒழுங்காக வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. இந்த நேரத்தில் இந்த தொழில் சம்பந்தமாக சில விவரங்கள் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருவது தவறாகாது என்று நினைக்கிறேன். 1980 ஆம் வருடத்தில் 32,943 டன்கள் அதாவது 134 கோடி ரூபாய்க்கு மேல விலை மதிப்புள்ள பதனிடப்பட்ட முந்திரி இந்த நாட்டிலிருந்து வெளியே அனுப்பப்பட்டிருக்கிறது. 1979 இல் 95 கோடி ரூபாய்க்கு விலை மதிப்புள்ள 33,228 டன்கள் முந்திரி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி ஆகியிருக்கிறது. இந்த 134 கோடி, அல்லது 95 கோடியின் அன்னியச் செலாவணி விகிதம் தமிழகத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை நாம் கூர்மையாக பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல இது சம்பந்தமாக சொல்கிற நேரத்திலே 1978-ல் 4.02 இலட்சம் டன்கள் உலக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவிலே 39 சதவீதம், அதாவது 1.60 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வளவு உற்பத்தி செய்வதற்கு 4 இலட்சத்து, 17 ஆயிரம் எக்டேர் நிலங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலிருந்து கிடைக்கிற உற்பத்தியை பார்கிறபோது, 4 இலட்சத்து 17 ஆயிரத்திற்கும் மேற்கொண்ட நிலங்களில் கிடைக்கப்பெறுகிற உற்பத்தி ஏறத்தாழ இரண்டு இலட்சம் டன்கள் தமிழகம் 11 ஆயிரத்து 470 டனகள் கேரளா ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ; கர்நாடகம் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டது ; ஆந்திரா 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டது ; மகாராஷ்டிரம் 3,633 ; ஒரிஸ்ஸா 940 டன்கள் ; ஆனால் தமிழகம் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே இன்று தகவல் கொடுக்கப்படுகிற அடிப்படையிலே நாம் விடுபட்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல, கேரளா, கர்நாடகம், ஆந்திரா, ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்களில் உலக வங்கி உதவியோடு இந்த முந்திரி பயிரிடுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் தமிழகம் விடுபடுகிறதென்றால், நாம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறோம, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல் போகிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

ஆகவே தமிழகத்திலே சென்ற வருடத்திலே வன இலாகா மட்டும் 10 இலட்சத்திற்கு மேற்பட்டு அதிகமான ரூபாய் மதிப்புள்ள கச்சா முந்திரியை விற்று அதிக இலாபம் பெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட, தொழிலை தமிழகம் இன்று அலட்சியம் பண்ணுகிறதன் விளைவாக இன்று தமிழகத்திற்கு ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே கிடைக்க வேண்டிய இடம் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு ஒரிஸா உட்பட, தமிழகத்தைத் தவிர மற்ற





எல்லா கார்ப்பரேஷன்களும் முந்திரி வளர்ச்சிக்காக கேஷ்யூ டெவலப்மென்ட் கார்ப்பரேஷன்கள் அமைத்து பயன் பெற்றிருக்கிறார்கள். 1979 ஆம் ஆண்டுக்கு முன்னாலேயே அமைக்கப்பட்டன. ஆனால் 1975 ஆம் ஆண்டிலிருந்து நாம், முந்திரி வளர்ச்சி நிறுவனத்தை தமிழகம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் 1979 வரை அமைக்கவில்லை. தமிழகத்தைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களும், முன்குறிப்பிட்ட நான்கு மாநிலங்களும் அமைத்த காரணத்தினாலே 6 வது ஐந்தாண்டுத் திட்டத்திலே முந்திரி வளர்ச்சிக்கான இடம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முந்திரித் தொழிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் சாதாரண வருவாய் அல்ல. ஒரு மூடை முந்திரி பாகம் செய்ய செலவு 634.50 அதே நேரத்திலே அதிலிருந்து கிடைக்கிற வருவாய் 1,806.25 காசுகள். ஒரு மூடை பாகம் செய்வதின் விளைவாக 1,171.75 ரூபாய் முந்திரி ஆலை முதலாளிகளுக்கு கிடைக்கிறது. அதே நேரத்திலே முந்திரி ஆலைகளிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு ஒரு மூடை கச்சா முந்திரி பாகஞ் செய்வதற்கு 5 ரூபாய்தான் கூலி கொடுக்கப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். அவர்களுக்காக குறைந்த பட்ச கூலி ஏற்படுத்தப்படவில்லை. நான் அரசின் கவனத்திற்கு கீழ்க்கண்ட கோரிக்கைகளைக் கொண்டுவர விரும்புகிறேன். வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்குத் தேவையான முந்திரியை இறக்குமதி செய்ய மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். தமிழகத்தின் சுயதேவையைப் பூர்த்தி செய்ய அதிகப்படியான ஏக்கர் முந்திரியைப் பயிரிடுதல வேண்டும். தமிழகத்தில் உற்பத்தியாகும் முந்திரி மற்ற மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்க வேண்டும். தமிழகத்திலே உற்பத்தியாகும் முந்திரியை அரசு நிறுவனங்களே சேகரித்து முந்திரி ஆலை தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விநியோகம் செய்ய வேண்டும். மத்திய முந்திரிக் கழகத்தில் தமிழகப் பிரதிநிதியை இடம்பெறச் செய்ய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். தமிழகத்திலேயே முந்திரி கழகம் அமைக்கப்பட வேண்டும். ஒரு முந்திரி ஆலைக்குக் கொடுக்கக்கூடிய முந்திரியை....... (மணியடிக்கப் பெற்றது) கோட்டா இல்லாத அடுத்த முந்திரி ஆலைகளுக்கு எடுத்து செல்ல அனுமதி வழங்கக்கூடாது. மத்திய அரசு கொண்டு வந்துள்ள முந்திரி அபிவிருத்தி திட்டத்தில் தமிழகத்தையும் இணைக்க வற்புறுத்த வேண்டும். தொழிலாளிகளுக்கு குறைந்த பட்ச கூலி ஏற்படுத்த வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கச்சா முந்திரி தட்டுப்பாட்டின் காரணமாக முந்திரித் தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலே தொழி

லாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் அரை மணி நேரம் விவாதத்தை துவக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பது கடமை என்ற முறையிலே ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம் நாட்டிலே குறிப்பாக முந்திரி அதிகமாக உற்பத்தியாவது கேரளா மாநிலத்திலேதான், கேரளா மாநிலம் முதலிடத்தை வகிக்கிறது, இரண்டாவது இடத்தை தமிழ்நாடும பிறகு கர்நாடகமும், ஆந்திரபிரதேசம், ஒரிஸா ஆகிய மாநிலங்களிலும் அதிகமாக உற்பத்தியாகிறது. ஆனால் மையத்திலே சென்ட்ரல் கேஷ்யூனட் இம்போர்டிங் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்திலே ஏனைய மாநிலங்கள் எல்லாம் அங்கீகாரம் பெறுகிற வகையிலே பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு அதற்கான முயற்சியை எடுத்திருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. நம் மாநிலம் அதிலே அங்கீகாரம் பெறவில்லை என்று கருதுகிறேன். காரணம் தமிழ்நாட்டிலே எவ்வளவு உற்பத்தி செய்தாலும் அது தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யப்பட்டதாகக் கணக்குக் காட்டப்படாமல் கேரளத்திற்கு அனுப்பப்பட்டு அங்கேயுள்ள துறைமுகங்கள் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டிலே உற்பத்தியாவதாக கணக்குக் காட்டப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற 150 முந்திரி தொழிற்சாலைகளுக்குச் சொந்தக்காரர்கள் யார் என்றால் அவர்கள் கேரளத்திலிருக்கிறவர்கள் தான், திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டங்களிலே ஆலைகளுக்குச் சொந்தக்காரர்கள் அங்கே இருக்கிறார்கள். ஒருவர் பல தொழிற்சாலைகளை பினாமி பெயரால் வைத்துக்கொண்டு கோடிக்கணக்காக கொள்ளையடிக்கக்கூடிய நிலைமையில் அந்தத் தொழிற்சாலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் கிட்டத்தட்ட அவர்களிலே 950 பேர்கள் பெண்களாகவும் சிறுவர்களாகவும் தான் இருக்கிறார்கள். அமர்த்தப்படுகிறார்கள்.

[பிற்பகல் 1—10.]

மீதமுள்ள 50 பேர்தான் ஆண் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் 950 பேர்களின் உழைப்பையும் சுரண்ட, அவர்களுக்குத் தர வேண்டிய ஊதியத்தைச் சுரண்ட ஏதுவாக பெண்களையும், சிறுவர்களையும் நியமனம் செய்து அதன் பயனை முதலாளிகள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், அரசாங்கம் உடனடியாக இது சம்பந்தமாக முழு விசாரணை செய்து, அங்கேயிருக்கின்ற சிரமங்கள், சிக்கல்கள் என்னவென்பதையும்





பொருளாதார ரீதியில் நடக்கும் மோசடிகள் பற்றியும் ஆராய குழு ஒன்றினை அமைக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கிருக்கின்ற முக்கியமான பிரச்னை என்னவென்றால், வெளிநாடுகளிலேயிருந்து நம்முடைய தமிழ்நாட்டுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான முந்திரி கிடைப்பதில் சற்றுச் சிரமங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். காரணம் இங்கே அதிகமான முந்திரி ஆப்பிரிக்க நாடுகளிலேயிருந்து வர வேண்டியதாயிருக்கிறது. ஆனால் தற்பொழுது ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் முந்திரித் தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய ஆற்றலைப் பெற்றுவிட்ட காரணத்தால் அங்கேயுள்ள முந்திரித் தொழிசாலைகளிலேயே அவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் தமிழ்நாட்டிற்கு இறக்குமதியாக முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தமிழ்நாட்டில் பரப்பளவு அதிகமாக இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள், காட்டிலாக்கா மூலம் அதிகமான முந்திரித் தோப்புகளை உருவாக்கி அதன்மூலம் கிடைக்கக்கூடிய முந்திரியின் மூலம் அந்நியச் செலாவணி நம் நாட்டிற்குக் கிடைக்க இந்த அரசாங்கம் வழி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

முந்திரி சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒன்றைத் தனியாகத் தமிழ்நாட்டில் ஆரம்பித்து, ஏற்றுமதியானாலும் சரி, இறக்குமதியானாலும் சரி அந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொண்டு, இறக்குமதியாகும் முந்திரியைத் தொழிலாளர்களின் விகிதாச்சாரப்படி, தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதை ஆதரித்து என்னுடைய கருத்தைக் கூறி முடிக்கிறேன்.

*திரு. டி. மணி : பேரவை மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கும் முந்திரி ஆலைத் தொழிலாளர்கள் பிரச்னை சம்பந்தமாக, குமரி மாவட்டத்திலிருக்கும் முக்கால் இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தினால், கடந்த மாதம் 20 ஆம் தேதியிலிருந்து இந்த மாதம் 4 ஆம் தேதி வரையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் நூற்றுக்கணக்கான பெண்கள் மகத்தான முறையில் சாத்வீகமான முறையில் போராட்டத்தை நடத்தியுள்ளார்கள். அந்தப் பிரச்னை சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசியவர்கள் சில காரியங்களைச் சொன்னாலும்கூட, ஒரு சில காரியங்களை நானும் கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே, தமிழ்நாட்டில், குமரி மாவட்டத்தில் உள்ள முந்திரி ஆலைகளில் உற்பத்தியாகும் முந்திரிப் பருப்பு ஏற்றுமதியாவது கேராளாவில் கொச்சி ஹார்பாரிலிருந்துதான். அதன் காரணமாக 1977 ஆம் ஆண்டிலேயும், 1978 ஆம் ஆண்டிலேயும், 1979 ஆம் ஆண்டிலேயும் உள்ள பொதுவான கணக்கைப் பார்க்கின்றபோது, கேரள மாநிலத்தில் 1977 ஆம் ஆண்டில் இரண்டு மாத வேலையும், தமிழ்நாட்டில் அந்தக் காலக் கட்டத்தில் நான்கு மாத வேலையும் நடந்திருக்கிறது. 1978 ஆம் ஆண்டிலே ஒரேயொரு மாதம் ஒரு ஆண்டில் கேரளாவில் வேலை நடந்திருக்கின்றது ; தமிழ்நாட்டில் 5 மாதங்கள் வேலை நடந்திருக்கின்றது. 1979 ஆம் ஆண்டிலேயும் கிட்டத்தட்ட அதே நிலைதான். ஆகவே, மொத்த உற்பத்திக் கணக்கைப்பார்த்தால், கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கான முந்திரிப்பருப்பு தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஏற்றுமதியாகிறது. வெளிநாட்டுச் செலவாணி பூராவும் கேரள மாநில அரசு மத்திய அரசோடு பேரம் பேசி அதிகமான பங்கைப் பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள குமரி மாவட்டத்தில் இருக்கும் இயற்கையாக அமைந்திருக்கின்ற கொளச்சல் ஹார்பர் வழியாக ஏற்றுமதி இறக்குமதியானால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் முந்திரி பருப்பு 1977-1978-1979 ஆம் வருடங்களில் தலா 40—50 கோடிக்கு ஏற்றுமதியாகியுள்ளது, இதனுடைய பயனை நாம் அடையமுடியாதவர்களாகியிருக்கிறோம். எனவே, அதிகப்படியாக அயல் நாட்டு செலாவணியை ஈட்டித் தருகின்ற தொழில் என்ற முறையில் மத்திய அரசோடு ஐந்தாண்டுத் திட்டத்திற்கான சரியான பங்கை பெறவும் ஏனைய உதவிகளை பெறவும் நாம் இதை பயன்படுத்த முடியாதவர்களாக இருக்கிறோம்.

இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். குளச்சல் ஹார்பாரிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்க்கான மணல் ஜப்பான் தாய்லாண்ட் இங்கிலாந்து போன்ற இதர அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அப்படிப்பட்டவகையில் அயல்நாட்டு செலாவணியைப் பெற்றுத்தருவதற்கு ஏதுவாக அமைந்திருக்கின்ற துறைமுகமாக இது இருக்கிறது. ஆகவே, இந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும் அபிவிருத்தி செய்து——கொள்ளவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமான பிரச்சினை என்னவென்றால், குமரி மாவட்ட முந்திரி ஆலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் என்பது மிகவும் கம்மியாக இருக்கிறது. ஒரு கிலோ முந்திரி உடைத்தால் 60 காசுதான் கிடைக்கிறது. ஆனால், முந்திரி தொழிலில் இருந்து கொள்ளை இலாபம் கிடைக்கின்றது. அமெரிக்காவிலே ஒரு கிலோ முந்திரி பருப்பு சுமார் ரூபாய் 120 வரையிலும் கிடைக்கிறது. நம்முடைய மாநிலத்தில் ஒரு கிலோ முந்திரி கொட்டையைப் பக்குவப்படுத்துவதற்கு கொடுக்கின்ற கூலி மிகக் குறைவானது. மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்





போதுமுன்னால் சொன்னார் ஒரு கிலோ முந்திரி கொட்டை நாம் விற்கும்போதுகூட, அதனுடைய விலை ரூபாய் 10 தான் என்று. அப்படித் தமிழகத்திலே கொள்ளை இலாபம் அடிக்கின்ற தொழில் துறை என்ற முறையிலே இது அமைந்திருக்கிறது, ஆனால் அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் தான் கொடுத்து வருகிறார்கள். ஒரு நாளைக்கு 11 மணி நேரம் வேலை வாங்கப்படுகிறார்கள். காலை 7 மணியிலிருந்து மாலை ஆறு மணி வரைவேலை செய்தால் கூட அவர்களுக்கு ரூபாய் 3, ரூபாய் $3\frac{1}{2}$ தான் கூலி கிடைக்கிறது. ஆகவே, அந்த நிலையை மாற்றுவதற்கு விரைவாக குறைந்தபட்சக் கூலிக் கிடைக்கச் சட்டம் கொண்டு வர வேண்டும். நம்முடைய மாநிலத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்து இந்தத்தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் காரணங்களையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு வெளி நாட்டுச் செலாவணியை பெற்றுக் கொள்ளவும், இந்தத் துறையிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தைப் பெற்றுத் தரவும் தகுந்த ஏற்பாட்டைச் செயய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கச்சா முந்திரி தட்டுப் பாட்டின் காரணமாக, முந்திரித் தொழில் மூடப்பட்டுள்ளதால், இலட்சக் கணக்கான தோழர்கள் அங்கே இன்னல்படுகிறார்கள். அந்த நிலையில் நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர்அண்ணா அவர்கள் சிந்திரி வளர்கிறது. இங்கே முந்திரித் தொழிற்சாலை இல்லை, முந்திரித் தொழிற்சாலையெல்லாம் இங்கே வர வேண்டும், வளர வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். அப்பேர்ப்பட்ட தொழிற்சாலை இன்றையத்தினம் மூடப்பட்டுள்ள காரணத்தால், அங்கே தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அர்களுடைய இன்னலைத் தீர்க்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திற்கு முழுமையான ஆதரவை நானும் தந்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே அவர் சுட்டிக்காட்டிய சில குறைபாடுகள், இதற்கு முன்னே இந்தப் பெருமன்றத்தில், நாங்கள் அரசங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தது உண்டு. முந்திரித் தொழில் வளர்ச்சிக்கு ரூபாய் 38 இலட்சத்தை மத்திய அரசு வழங்குகிற பொழுது, 187 முந்திரித் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்ற நம்முடைய மாநிலத்திற்கு, அதில் ஒரு பைசா கூட அனுமதிக்கப்படவில்லையென்பதைக் கேட்க நாம் வேதனைப்படுகிறோம். காரணம், அரசாங்கத்தின் கவனம் முழுமையாக இந்தப் பிரச்னையைத் தொட்டு நிற்கவில்லையென்பதை நாங்கள் உணருகி

றோம். இங்கே சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளில் ஒன்று, முந்திரிக் கார்ப்பரேஷனில் தமிழகத்தினுடைய பிரதிநிதி இல்லையென்பது. எனவே, இங்கே இருக்கின்ற தொழிற்சாலைகள் பற்றி, அவற்றுக்கு ஏற்படும் குறைபாடுகள் பற்றி, தொழிலாளர்களைப் பாதிக்கிற நிலைகளைப் பற்றி, நம்முடைய குரலை ஒலிக்க, நம்முடைய பிரதிநிதி அங்கே இல்லாத குறையைச் சுட்டிக் காட்டினார்கள். அந்தக் குறையைத் தீர்க்கும் வகையில் நம்முடைய பிரதிநிதியும் ஏற்கெனவே இருக்கிற குழுவில் இடம் பெறுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 187 தொழிற்சாலைகள் இயங்கி வந்தாலும், இங்கே ஏற்றுமதி செய்யப்படுகிற பொருள்கள், கேரளாவிலே இருக்கிற துறைமுகம் வழியாகச் செல்கின்ற காரணத்தால், உற்பத்தி அந்த மாகாணத்தில் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டு, தொழிற்சாலைகளுக்கு அதிகமான கச்சா முந்திரிகளைப் பெறுவதற்கான வழிவகைகளை அங்கே இருக்கின்றவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். எனவே, அந்த நிலையை மாற்றி, தமிழகத்தில் உற்பத்தியாகிற முந்திரி, நம்முடைய கணக்கில் வருகின்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, குளச்சல் துறைமுகம் வழியாக, அதை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்வதாக இருந்தால் நம்முடைய கணக்கில் அது வரும், அதற்கான கச்சா முந்திரியை நாம் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும். அதைக் கவனத்திற்கொண்டு அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்து, அதனை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களது மேலான உணர்வுகளை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் சுமார் 55 ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்டு 171 முந்திரி பக்குவப்படுத்தும் தொழில் நிறுவனங்கள் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 156 தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் தற்பொழுது 12 தொழிற்சாலைகள் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதமுள்ள 144 தொழிற்சாலைகள், கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தினால் மூடப்பட்டுள்ளன. சுமார் 20,000 தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். தேவையான அளவிற்கு உள் நாட்டில் கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தினால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இந்திய அரசு கேஷ்யூ கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்னும் நிறுவனம் மூலம் முந்திரியினை இறக்குமதி செய்து முந்திரி தொழிற்சாலைகளுக்குப்





பகிர்ந்து கொடுக்கிறது. இவ்வாறு முந்திரி இறக்குமதி செய்து பகிர்ந்து அளிப்பதில் மாநில அரசுக்குப் பங்கு ஏதும் இல்லை. எனவே, எல்லாத் தொழிற்சாலைகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க இயலாதிருக்கிறது. இருப்பினும், தமிழக அரசு தன்னால் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் கடந்த 3 ஆண்டு காலமாக எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, இன்றைக்குத் தமிழ் நாட்டில் கிடைக்கும் கச்சா முந்திரியையும், ராஜமுந்திரி, கோவா முதலிய இடங்களில் இருந்து கிடைக்கும் கச்சா முந்திரியையும் கொண்டு இத்தொழிற்சாலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு வெளி மாநிலங்களில் இருந்து கிடைத்த கச்சா முந்திரியைக் கொண்டு பெரும்பாலான தொழிற்சாலைகள் ஆண்டில் ஒரு சில மாதங்களே தொழில் நடத்த முடிகின்றது. 4—9—1975 அன்று கேரள அரசு விதித்த போக்குவரத்துக் கட்டுப்பாடு காரணமாக, கேரள கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தால் பெரும்பாலன தொழிற்சாலைகள் குமரி மாவட்டத்தில் இன்றைக்கு மூடப்பட்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டில் முந்திரித் தொழிலுக்கு மொத்தமாக 1,24,000 டன் முந்திரிக் கொட்டைகள் தேவைப்படுகின்றது. தமிழ் மாநிலத்தில் சுமார் 10 ஆயிரம் டன் உற்பத்தியாகின்றது. இறக்குமதி மூலம் தமிழ்நாட்டிற்குக் கிடைத்து வந்தது சுமார் 19 ஆயிரம் டன். இதனால் 95 ஆயிரம் டன்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. இத்தொழிற்சாலைகள் மூடப்படாமல் தொடர்ந்து செயல்பட வேண்டுமானால், இதர இடங்களில் இருந்து முந்திரிக் கொட்டைகள் பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இதனையொட்டி தமிழக அரசு எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

சுமார் 156 முந்திரி தொழிற்சாலைகள் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் 80 சதவிகித தொழிற்சாலை உரிமையாளர்கள் கொல்லத்தில் அவர்களது தலைமை தொழிற்சாலையைக் கொண்டுள்ளனர். அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் முந்திரி பக்குவப்படுத்தும் நிலையத்தை அமைப்பதற்குரிய முக்கியக் காரணம் தமிழ்நாட்டில் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைப்பதாகும். கொல்லத்திலுள்ள தலைமைத் தொழிற்சாலைகளிலிருந்து தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளுக்கு மூல முந்திரிக் கொட்டைகள் அனுப்பப்பட்டு, இங்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் பக்குவப்படுத்தப்பட்டு, மீண்டும் கொல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதனால், கேரள தொழிற்சாலைகளில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிக்கப்பட்டு, தொழிற் சங்கங்களின் உதவியுடன் கேரளாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு மூல முந்திரிக் கொட்டைகள் எடுத்து வருவது தடுத்து நிறுத்தப்பட்டது.

கேரளாவிலிருந்தோ அல்லது வேறு மாநிலங்களில் இருந்து கேரளா வழியாகவோ தமிழ்நாட்டிற்கு முந்திரிக் கொட்டையைக் கொண்டு வருவதை 4—9—1975 முதல் தடை செய்து கேரள அரசு சட்டம் பிறப்பித்துள்ளது.

இது பற்றி அன்றைய மத்திய வணிக அமைச்சர் திரு. மோகன் தாரியா அவர்களுக்கு தமிழக அரசு 24—5—1978 அன்று எழுதிய கடிதத்தில் 31—8—1970 தேதிக்குப் பின்னர் கேரள அரசு முந்திரி போக்குவரத்தை தடை செய்த நாள் 4—9—1975 வரை செயல்பட்டு வந்த எல்லா முந்திரி ஆலைகளுக்கும் கச்சா முந்திரிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக் கொண்டது. கேரள அரசு முந்திரி போக்குவரத்துக்கு தடை பிறப்பித்தற்கு முன்னால் தமிழ்நாடு 95 ஆயிரம் டன்கள் கச்சா முந்திரி பெற்று வந்தது எனவும், அதனால் தமிழ்நாட்டிற்கு குறைந்த பட்சம் 50 ஆயிரம் டன்கள் கச்சா முந்திரியானது கிடைக்க வகை செய்யும்படியும், கேரள அரசு முந்திரி போக்குவரத்துக்குத் தடை செய்த உத்தரவை திரும்பப் பெறாவிட்டாலும் அதனைத் தளர்த்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது அதற்கு முன்னாள் மத்திய அமைச்சர் திரு. மோகன் தாரியா அவர்கள் 6—6—1978-ஆம் தேதியிட்ட கடிதத்தில், கேரள அரசு பிறப்பித்துள்ள தடைச் சட்டத்தை நீக்குமாறு அநேக முந்திரி பதனிடுவோர் உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதால், அது பற்றி இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை எனவும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா முந்திரியின் அளவு குறைந்து விட்டதால் இன்னும் அதிகப்படியாக கச்சா முந்திரியை ஒதுக்கீடு செய்வது சாத்தியமில்லை எனவும், இந்தச் சூழ்நிலையில் உள் நாட்டில் முந்திரி உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு மத்திய அரசு தெரிவித்தது.

இதே பொருள் பற்றி, மத்திய அரசுக்கு எழுதிய 24—5—1978 அன்றே முன்னாள் கேரள முதலமைச்சர் திரு. ஏ. கே. அந்தோணி அவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதப்பட்டது. அவர்களும் இதைப்போன்ற ஒரு பதிலையே அன்றைக்கு எழுதி னார்கள். ஆனால் இன்றைக்கு கச்சா முந்திரியில் இருக்கிற பற்றாக்குறைக்கு மத்திய அரசு எடுத்த ஒரு நடவடிக்கையும்



காரணமாக இருந்திருக்கிறது. 8—11—1975 அன்று அறிவிக்கப் பட்ட மத்திய அரசின் பொது அறிவிப்புக் கொள்கைப்படி இந்திய அரசு இறக்குமதி செய்யப்பட்ட முந்திரிக் கொட்டையை இந்திய முந்திரி நிறுவனம் மூலம் பங்கீடு செய்வதை முறைப்படுத்தி உள்ளது. இதன்படி முந்திரி இறக்குமதியில் ஈடுபட்டிருந்த மற்றும் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைகளில், 19-8-1969 ஆம் ஆண்டிலிருந்து 31—8—1970 வரை இயங்கிவந்த தொழிற் சாலைகளே இறக்குமதி செய்யப்பட்ட முந்திரிக் கொட்டையைப் பெற தகுதியுடையவை. இதன்படி தமிழ்நாட்டில் 52 தொழிற் சாலைகள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்ட முந்திரிக் கொட்டைகளைப் பெறத் தகுதி பெற்றிருக்கின்றன.

இந்திய அரசு 3—11—1973-ல் வெளியிட்ட பொது அறிக்கையின்படி, இறுதி நாளான 31—8—1970-ஐ 4—9—1975 ஆக அதாவது தமிழ்நாட்டிற்கு முந்திரிக்கொட்டை கொண்டுவருவதை கேரள அரசு தடை செய்த நாளிலிருந்து, மாற்றும்படி இந்திய அரசை இம்மாநில அரசு நவம்பர் 1977-ல் கேட்டிருந்தது. இதனால், தமிழ்நாட்டிலுள்ள மேலும் பல முந்திரி தொழிற் சாலைகள், இறக்குமதி செய்யப்பட்ட முந்திரியினைப் பெற தகுதிபெற்று, அவற்றுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையையும் ஓரளவு நீக்கிக்கொள்ள ஏதுவாய் இருக்கும். ஆனால் இக் கோரிக்கையை மைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இருந்தாலும் இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சி தலைவர் அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் முந்திரிக் கொட்டை பயிராகும் மொத்த நிலப் பரப்பு 5 இலட்சம் ஹெக்டேர்தான். குறிப்பாக, இது கேரளத்தில் 1.50 இலட்சம் ஹெக்டேர்; கர்நாடகத்தில் 1.00 இலட்சம் ஹெக்டேர், தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் ஹெக்டேர் ; மற்ற மாநிலங்களில் 1.50 இலட்சம் ஹெக்டேர் என்ற அளவில் இன்றைக்கு முந்திரிக் கொட்டை பயிராகிறது.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1981 ஏப்ரல் 6

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் உற்பத்தியினுடைய அளவு 1.90 இலட்சம் டன். இதில் கேரளத்தில் மட்டும் ஒரு இலட்சம் டன், தமிழ் நாட்டில் 10,000 டன், மட்டுமே உற்பத்தியாகிறது. பிற மாநிலங்களில் 80,000 டன் உற்பத்திச் செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ ஒரு இலட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பில் முந்திரி பயிரிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் வெளி நாடுகளிலிருந்து முந்திரி இறக்குமதி செய்வது குறைந்துகொண்டு வருவதால், தமிழ் நாட்டில் முந்திரி பயிரிடுவதை பரந்த நிலப் பரப்பில் பெருமளவில் மேற்கொள்ளுவதுதான் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வழியாகும் என்று தமிழக அரசு கருதுகிறது.

1979-80 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் ஒரு இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் 10,000 மெட்ரிக் டன் முந்திரி உற்பத்தி ஆகியது. ஆனால் அதேநேரத்தில் கேரளத்தில் 1.50 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் 84,000 மெட்ரிக் டன் முந்திரி உற்பத்தி ஆகியிருக்கிறது.

தமிழ்நாட்டில் ஒரு ஹெக்டேருக்கு 110 கிலோ முந்திரி கிடைக்கிறது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைவு. கேரளத்தில் 1,060 கிலோ, ஆந்திராவில் 621 கிலோ, கர்நாடகத்தில் 324 கிலோ என்ற அளவில் கிடைக்கிறது.

தமிழ் நாடு முந்திரி அபிவிருத்தியை ஒரு ஹெக்டேரில் மற்ற மாநிலங்களைப்போல் அதிக அளவு உற்பத்திச் செய்ய 'தமிழ் நாடு முந்திரி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போதுள்ள முந்திரி பயிரிடும் நிலங்களில் முந்திரி செடிகளுக்கு உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் மற்றும் நல்ல தரமான முந்திரி செடிகளை நடுதல் மூலமாக இத் திட்டத்தைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் 840 இலட்சம் செலவில் 1981-82 முதல் 1985-86 வரை ஐந்தாண்டு காலங்களில் செயல்படுத்த அரசு ஆய்வு செய்துக்கொண்டிருக்கிறது.



1981 ஏப்ரல் 6] [திரு கே.ஏ. கிருஷ்ணசாமி]

இத்திட்டம் செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கொச்சியிலுள்ள இந்திய முந்திரி நிறுவனத்தில் தமிழ் நாட்டிற்கு பிரதிநிதித்துவம் பற்றி பலமுறை எடுத்துச்சொன்னோம். தற்சமயம் கொச்சி இந்திய முந்திரி கழகத்தில் மூன்று இயக்குநர்களும் ஒரு தலைவரும் உள்ளனர். அதில் இரண்டு இயக்குநர்கள் மத்திய அரசைச் சேர்ந்தவர்கள். மூன்றாவது இயக்குநர் கேரள அரசு சார்பாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவரால் கழக விதி 60-ன்கீழ் நியமிக்கப்பட்டவர்கள். தமிழ் நாட்டிற்கு, இந்திய முந்திரி நிறுவனத்தில் பிரதிநிதித்துவம் இல்லை. மேற்படி நிறுவனத்தை நியமித்ததன் முக்கிய நோக்கம், இறக்குமதி செய்யப்பட்ட கச்சா முந்திரியை எங்ஙனம் விநியோகிப்பது என்பதாகும். கொச்சியிலுள்ள இந்திய முந்திரி நிறுவனத்தில் தமிழ் நாட்டிற்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 1-30]

அடுத்து 27—9—1980 அன்று கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தென்மண்டல குழுக் கூட்டத்தில் இப்பொருள் பற்றி விவாதிக்கப்பட்டபொழுது, தமிழக அரசின் பிரதிநிதி மைய உள்துறை அமைச்சர் அவர்களை மைய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதன் தொடர்பாக மாநிலத்திலுள்ள முந்திரி தொழிற்சாலைகளுக்கு அதிக அளவு கச்சா முந்திரி ஒதுக்க வேண்டுமென்று இந்தியமுந்திரி நிறுவனத்திற்கு கட்டளை பிறப்பிக்குமாறு மைய வணிக அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

அடுத்ததாக விரைவில் மத்திய அரசினுடைய சார்பாக ஒரு முந்திரி வாரியத்தை நிறுவ இருக்கிறார்கள். முந்திரி வளர்ச்சிக் கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசின் வேளாண்மை மற்றும் பாசன அமைச்சகம் காப்பி வாரியம், தேயிலை வாரியம், ஏலக்காய் வாரியம் போன்றவைகளின் மாதிரியில் முந்திரி பயிரிடுவோரின் நலனுக்கும், முந்திரி தொழிலில் ஈடுபட்டுள்ளோர் நலனுக்காகவும் ஒரு வாரியம் அமைக்க உத்தேசித்துள்ளது.

மாண்புமிகு மாற்று தலைவர்: திரு வி.வி. சுவாமிநாதன் அவையின் முன் அனுமதியோடு பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தமிழக அரசின் கருத்துக்களை 16—3—1981 அன்று மைய அரசுக்கு தமிழக அரசு தெரிவித்துள்ளது. அப்படி தெரிவிக்கப்பட்டுள்ளதில் உள்ள முதல் கருத்து : முந்திரி வாரியம் அமைக்கப்படுமானால், மாநிலங்களின் உரிமைகள் பாதிக்கப்படாமல், உரிமைகள் நலக் குழுவாக அது அமைக்கப்பட வேண்டும்.

இரண்டாவது கருத்து : முந்திரி கழகத்தில் இந்த மாநிலத்திற்கு உயர்மட்ட அளவில் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் :

மூன்றாவது கருத்து : முந்திரிக்கான கழகத்தின் தலைமை இடத்தை நாகர்கோவிலில் அமைக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது தலைமை அலுவலகம் கேரளத்தில் அமைக்கப்பட்டால், மாற்றுவழியாக வட்டார கிளை அலுவலகம் ஒன்றினையாவது நாகர்கோவிலில் அமைக்கவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசுக்கு தன்னுடைய பரிந்துரைகளை கடந்த மார்ச் மாதம் 16-ஆம் தேதி அன்று எழுதி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. போதுமான முந்திரி உற்பத்தி ஆகவில்லை என்பது ஒரு காரணம். அடுத்தது கொச்சிலே இருக்கின்ற இந்திய





முந்திரி நிறுவனம் நமது மாநிலத்திற்குத் தேவையான முந்திரிய நியாயமான அளவுக்கு போதுமான அளவுக்குத் தராதது ஒரு குறையாக இருக்கின்றது. இந்த இரண்டு குறைகளும் நிவர்த்திக்கப்பட்டால் இன்றைக் இருக்கின்ற பதட்டநிலை போகும். என்பதுதான் தமிழக அரசின் கருத்து. ஆகவே அதைச் சீர் செய்ய வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதி இருக்கின்றது. மற்ற முறைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வி. வி. சுவாமிநாதன்): பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7-4-1981) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

247. தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைத் தீர்ப்பாய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 20—2—1981 ஆம் தேதியிடப்பெற்ற 390 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

108. 1979 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பொருளாதார மதிப்பீடு பற்றிய பிரதி (Tamil Nadu—An Economic Appraisal 1979).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1981, ஏப்ரல் 7 ஆம் நாள்
பங்குனி 25, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.''

மனத் தெளிவுடன் ஆராய்ந்து கொண்டிருக்கிற செயல்களைச் சோர்வு கொள்ளாமல், காலம் கடத்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

துவரங்குறிச்சி சார் பதிவாளர் அலுவலகக் கட்டிடம்.

*வினா எண் 668—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு வணிகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகக் கட்டிடம் புதிதாக கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் திட்டம் மதிப்பீடு என்ன ?

(இ) அதன் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) துவரங்குறிச்சியில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டிடம் கட்ட கருத்துரு ஒன்றும் இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. மே. அ. இராசகுமார்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உள்ள துவரங்குரிச்சியில் பல்வேறு அரசாங்க அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த நிலையைப் போக்கி விரைவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களிலேயே அலுவலகங்கள் நடைபெறும் வகையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்து கோரிக்கை வந்தால் அரசு அதனைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் வேண்டுகோள் பேரில் அவரது வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

தாந்தோணி மலைக்கு அருகில் மார்க்கெட்டிங் கமிட்டிக்கான நில ஆர்ஜிதம்.

*வினா எண் 674—**திரு. எம். சின்னசாமி** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தாலூக்கா தாந்தோணி மலைக்கு அருகில் மார்க்கெட்டிங் கமிட்டிக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஏக்கர் எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** : (அ) ஆம்.

(ஆ) 8.25 ஏக்கர்.

போச்சம் பள்ளியிலுள்ள சனோலா எண்ணெய் தொழிற்சாலை.

* வினா எண் 675—**திரு. மா. சின்னராசு** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டம் போச்சம்பள்ளியில் தமிழ்நாடு வேளாண் தொழிற்கழகத்தின் மூலம் செயல்பட்டு வரும் சனோலா ஆயில் தொழிற்சாலை மாதத்தில் எவ்வளவு நாட்கள் இயங்கி வருகிறது ?



(ஆ) இத் தொழிற்சாலையை லாபகரமாக நடத்துவதற்கு அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன ?

(இ) அவைகளின் பலன் என்ன ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** : (அ) போச்சம்பள்ளியில் உள்ள சனோலா எண்ணெய் தொழிற்சாலை மாதத்தில் சராசரி நான்கு அல்லது ஐந்து நாட்கள் இயங்கி வருகிறது.

(ஆ) இத்தொழிற்சாலை லாபகரமாக நடக்க கீழ்க்கண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(1) அதிக அளவு சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு இத்தொழிற்சாலையின் பிழிந்தெடுக்கும் திறனை முழுமையாகப் பயன்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

(2) கடலெண்ணெய் சுத்திகரிக்கப்படும் பணி மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

(3) சூரிய காந்தி விதைகள் மட்டுமன்றி பருத்தி விதைகளைப் பயன்படுத்த இந்திய பருத்தி கழகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. நிலக் கடலை வதையிலிருந்து கடலெண்ணெய் எடுக்கவும் மத்திய அரசின் அனுமதி பெற ஆவன செய்யப்பட்டு வருகிறது.

(இ) அதிக அளவு சனோலா எண்ணெய் தயாரிப்பதன் மூலமும் கடலெண்ணெய் சுத்திகரிப்பதன் மூலமும் இத்தொழிற் சாலை லாபத்தில் இயங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு 1981–82-ம் ஆண்டில் ரூ. 43,000 லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. மா. சின்னராசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இருக்கும் இந்த சனோலா ஆயில் தொழிற்சாலை மாதத்தில் 5 நாட்கள் தான் நடைபெறு கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மாதம் முழுமைக்கும் இயங்குவதற்கு ஏற்ப போதுமான சூரிய காந்தியைப் பயிரிடும் வேலை தமிழ்நாட்டில் மேற்கொள்ளப் பெறவில்லை என்று தெரிகிறது. அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா, அத்தோடு மற்ற கடலை எண்ணெய் போன்ற எண்ணெய்களையும் எடுப்பதற்கு மத்திய அரசின் அனுமதி தமிழ் நாட்டிற்குக் கிடைத்து விட்டதா ? இல்லையென்றால் விரைவில் அது கிடைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** : தலைவர் அவர்களே, அந்த ஆலை, 4, 5 நாட்களுக்கு மட்டுமே இயங்குவதற்கு காரணம் தொழிற்சாலைக்குத் தேவையான சூரிய காந்தி விதைகள் கிடைக் காததுதான். அது போதிய அளவிற்குக் கிடைக்காததற்கு என்ன

காரணம் என்றால், கொள்முதல் விலை 1980-ல் கிலோவிற்கு ரூ. 3.60 பைசா என்று இருந்ததை, ரூ. 4.20 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருப்பதேயாகும். 1981–82-ல் 1,200 மெட்ரிக் டன் விதைகளைக் கொள்முதல் செய்யலாம் என்றும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. அதைப்போல கடலை எண்ணெய் எடுப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் புஞ்சைப் பயிர்கள் பயிரிடக்கூடிய நிலங்கள் இருக்கின்றனவே, அந்த நிலங்களில் சூரியகாந்தி விதைகளைப் பயிரிட உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் முறையில் உதவிகளை அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியெல்லாம் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய காந்தி விதையின் விலை ரூ. 3.60 என்று குறைவாக இருப்பதினால், அதை ரூ. 4.50-க்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கேட்டு வருவதினால்தான், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அந்த சனோலா ஆயில் தொழிற்சாலை இயங்க முடியாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் கேட்பது போல் உயர்த்திக் கொடுக்கக் கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கனவே நான் என் பதிலில் குறிப்பிட்டிருக்கிறேன். ரூ. 3.60 என்பதை ரூ. 4.20 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று.

திரு. சோ. அழகர்சாமி : மற்ற எல்லா எண்ணெய்களைவிட இந்த சூர்யகாந்தி எண்ணெய் உடலுக்கு மிகவும் நல்லது, அதைச் சாப்பிடுவதன் மூலம் பல நோய்கள் தீருகின்றன என்று சொல்லப் படுகிறது. ஏற்கனவே இந்த எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளுக்கு போதுமான சூரியகாந்தி விதைகள் கிடைக்கவில்லை என்பதுதான் இப்போதைய நிலை. கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்கவில்லை என்பதற்காக பலயிடங்களில் சென்ற ஆண்டு சூரியகாந்தி சாகுபடி செய்தவர்கள் கூட அதை நிறுத்தியிருக்கிறார்கள். ரூ. 4.20 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எனவே கூடுதல் விலை நிர்ணயம் செய்து எந்த எந்த இடங்களில் இந்த விதைகள் உற்பத்தியா



கின்றனவோ அவற்றை அரசாங்கமே நேரடியாக வாங்கி அந்த ஆலைகள் முழுமையாக இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரூ. 4.20 என்பது இப்போதுள்ள நிதிநிலைமைக்கு ஏற்ப உயர்த்திக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருப்பது. அதை மேலும் உயர்த்துவதற்கு வாய்ப்புகள் பின்னால் வருமானால் அதை அரசு பரிசீலிக்கும்.

## வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை மதுரைக்கு மாற்றுதல்.

*வினா எண். 676—திரு. பி. செல்வராமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை 1–4–1981 முதல் மதுரைக்கு மாற்றுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மாற்றுவதற்கான காரணம் என்ன ?

(இ) பலன் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையின் வேலைகள் பரவிக்கிடக்கும் முக்கிய மாவட்டங்களைக் கருத்திற்கொண்டு மதுரையை இத்துறையின் தலைமையிடமாக அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இதன் தலைமை அலுவலகத்தை அமைக்க தகுந்த கட்டிடம் மதுரையில் தற்போது கிடைக்கவில்லை என்ற காரணத்தாலும் தகுந்த கட்டிடம் கிடைத்து சில மாதங்களுக்குப் பின் மாற்றம் செய்தால், இம்மாற்றம் கல்வி ஆண்டின் இடைக்காலத்தில் ஏற்படுமாதலால் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும் என்ற காரணத்தாலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமையிடத்தைச் சென்னையிலிருந்து மதுரைக்கு மாற்றப்படுவதை இன்னும் ஓராண்டுக்குப் பின் ஆராயலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(இ) இத்துறையின் தலைமைப் பொறியாளர் குறைந்த கால அளவில், ஏனைய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இத்துறையின் வேலைகளை நேரில் சென்று கண்காணித்து, வேளாண்மைப் பொறியியல் சாதனங்களின் புதிய கண்டு பிடிப்புகளையும், மண் வளப் பாதுகாப்பு முறைகளையும் முனைந்து செயல்படுத்தி வேளாண்மை வளத்தை இன்னும் சிறந்த முறையில் பெருக்க இது வழி வகுக்கும்.

[1981 ஏப்ரல் 7

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஒரு வருடம் ஒத்திவைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக இந்த வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்கள் எந்தெந்த மாவட்டங்களில் அதிகமாக இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை, நெல்லை மாவட்டங்களில் இந்தப் பணிக்குரிய வேலைகள் பரவி இருக்கின்றன. சென்னையில் உள்ள தலைமை இடத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று வந்தபோது மதுரை சிறந்த இடமாக விளங்கியதால் அந்த மாறுதல் செய்யப்பட்டது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : வேளாண்மைத் துறை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது உண்மை தானா? அதற்கான காரணங்கள் என்ன? அதன் அடிப் படையில் கிடைக்கக்கூடிய பலன் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அது பற்றிய தகவல் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமை அலுவலகத்தை மதுரைக்கு மாற்றியது ஒரு ஆண்டு நிறுத்தி வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கனவே வேளாண்மைத் துறையின் மார்க்கட்டிங் பிரிவு திருச்சிக்கு மாற்றப்பெற்றது. சென்னையில் தலைமையகம் இயங்கும்போது மற்ற மாவட்டத் தலை நகரங்களுக்கு மாற்றுகிறபோது அங்குள்ள பெரிய அதிகாரிகள் அரசுத்துறை செயலாளரையும், அமைச்சர் அவர்களையும், சந்திப்பதற்காக அடிக்கடி சென்னைக்கு வருகிற நேரத்தில் அந்த அலுவலர்கள் தங்கள் வேலைகளை ரெயிலிலேயே பார்ப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட சிரமங்களைப் போக்குவதற்குத் தலைநகரிலேயே எல்லா தலைமை அலுவலகங்களும் இருக்கும்படி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேளாண்மைத் துறை நான்கைந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டபோது ஒவ்வொன்றின் தலைமையகமும் வெவ்வேறு மாவட்டத் தலைநகரில் இடம் பெற்றால்தான் இந்தப் பணி சிறப்புற மாநிலம் முழுவதும் நடக்க முடியும் என்ற வகையில் எடுக்கப்பட்ட கொள்கைப்படி, அந்த முடிவின்படிதான் இந்த மாறுதல் செய்யப்பட்டது.



1981 ஏப்ரல் 7]

பெருநாழியில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 669—திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பெருநாழியில் சப்-ரெஜிஸ்தரார் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் துவக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) அலுவலகம் அமைக்கத் தேவையான சாத்தியக் கூறுகள் இருப்பின் அடுத்த ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்த்துக் கொள்வதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

அரசு விளம்பரங்களுக்கான செலவு

*வினா எண். 670—திரு து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978–1979, 1979–1980 ஆண்டுகளில் தினசரி பத்திரிகைகளில் தமிழக அரசு விளம்பரங்களுக்கென செலவளிக்கப் பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இக்கேள்விக்கான விடை குறிப்பு ஒன்று* அவையில் வைக்கப்படுகிறது.

திரு து. புருஷோத்தமன் : இந்த விவர அறிக்கையில் எல்லா தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் அல்லது எல்லாப் பத்திரிகைகளுக் கும் கொடுக்கப்பட்ட, விளம்பரச் செலவு பற்றிய பணத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த விவர அறிக்கையைப் பார்க் கிறபோது ஆட்சியை ஆதரிக்கிற பத்திரிகைகள் அல்லது ஆளும் கட்சியை ஆதரிக்கும் பத்திரிகைகள் அதிகமான விளம்பரம் பெற்றி ருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. குறிப்பாக 1978–79 ஆம் ஆண்டில் தினத்தந்திக்கு ஏறக்குறைய ஒன்பது இலட்சம் ரூபாய் அளவிற்கு விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் தினகரனுக்கு ரூ. 55,000-க்கு விளம்பரம் கொடுக்கப்

* 394-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

பட்டிருக்கிறது. அந்த ஆண்டு முரசொலிக்கு ரூ. 32,000-க்கு மட்டும்தான் விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1979—80-ல் தினத்தந்திக்கு ரூ. 13,24,799-க்கு விளம்பரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. தினகரனுக்கு ரூ.24,116-க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முரசொலிக்கு அந்த ஆண்டு ரூ. 11,418-க்குத்தான் விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஆளும் கட்சியை ஆதரித்தால்தான் அல்லது ஆளும் ஆட்சியின் கருத்துக்களை ஆதரித்து எழுதினால்தான் விளம்பரம் கிடைக்கும் என்ற வகையில் பத்திரிகைகள் தங்கள் நியாயமான எண்ணங்களை மாற்றி திசை திருப்பக்கூடிய வகையில் இருக்கிறது என்று மக்கள் கருதுகிறார்கள். அந்த எண்ணத்தைப் போக்க நியாயமான வகையில் எல்லோருக்கும் சமமான வகையில் பொதுவாக அரசு விளம்பரங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வரவேண்டும், எல்லோரும் படிக்க வேண்டும், விளம்பரமாக வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இனிமேலாவது அப்படி பகிர்ந்தளிக்கிற முறையில் பாரபட்சமற்ற ஒரு நிலையை அரசு ஏற்படுத்த ஆவன செய்யுமா ?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையைச் சார்ந்த பல்வேறு நிறுவனங்கள், கழகங்கள், கைத்தறித் துறை நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் எல்லாம் தனித்தனியாக விளம்பரங்கள் தருவது செய்தித் துறையின் மூலமாக ஒருங்கிணைத்துத் தரப்படுகிறது. கொடுக்கப்படுகின்ற விளம்பரங்கள் அந்தந்தத் துறைகளை, நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், அவர்களாக ஒதுக்குவதன் காரணமாக, எந்தப் பத்திரிகைக்குத் தர வேண்டுமென்று குறிப்பிடுகிறார்களோ, அந்தப் பத்திரிகைக்குத் தரப்படுகிறது. அதிகமான விற்பனையுள்ள பத்திரிகைகள் முதலிலே கணக்கிலே எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றிற்குத் தரப்படுகிறது. அதற்கு அடுத்தாற்போல், எந்தப் பத்திரிகையில் வந்தால் மக்களுக்குப் பயன்படும் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதற்குத் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஏதோ ஆளுகின்ற கட்சிக்கு ஆதரவான பத்திரிகைகளுக்குத் தரப்படுகின்றது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் பழைய விவரங்களை இங்கே குறிப்பிட்டால், அவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும், நான் அந்த விவரங்களுக்குள் எல்லாம் போக விரும்பவில்லை. முன் காலத்தில், மிகுந்த அனுபவம் உள்ளவர்கள் ஆட்சி செய்த காலத்தில், எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதையெல்லாம் பார்த்துத்தான், அவர்களிடத்திலே இருந்து பாடம் கற்றுக் கொண்டுதான், நல்லவைகளை எதிர்க் கட்சியிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் நல்லவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டுதான் நாங்கள் இப்போது பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.





திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த அறிக்கையிலே அதிகமான விளம்பரங்கள் பெற்ற பத்திரிகைகள் என்று சொல்கிறபோது, நமக்கெல்லாம் தெரியும், மக்களுக்கும் தெரியும், தினத்தந்தி, தினமலர், மக்கள் குரல், தென்னகம், அண்ணா, மாலை முரசு போன்ற பத்திரிகைகள் எப்படி தங்கள் கருத்துக்களை வெளியிடுகின்றன என்பது நன்கு தெரியும். அதே நேரத்தில், அலை ஓசை பத்திரிகை முன்னாலே தங்களுடைய கருத்தை நடுநிலைமையாக எடுத்து வைத்தது நமக்குத் தெரியும். 1978—79 ஆம் ஆண்டு அவர்கள் பெற்ற விளம்பரத் தொகை ரூ. 23,990. ஆனால். அதே நேரத்தில் 1979—80 ஆம் ஆண்டு அவர்கள் ஏறத்தாழ 7,000 ரூபாய்தான் விளம்பரமாகப் பெற்றிருக்கிறார்கள். எந்த நியாயத்தின் அடிப்படையிலே இது கொடுக்கப்பட்டது ? முன்னாலே இருந்த அரசு என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி பார்க்கிறபோது, அந்த அளவுக்கு நாங்கள் இல்லை என்று சொன்னார்கள். அதே நேரத்திலே இந்தி பத்திரிகையான நவ பாரத் டைம்ஸ் என்ற பத்திரிகைக்கு 1978—79 ஆம் ஆண்டில் ரூ. 56,000-க்கு விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்ன என்பதைச் சொல்லுங்கள். அதிகமாக எந்தப் பத்திரிகைக்கு கொடுக்க வேண்டுமென்பதைச் சொல்லுங்கள்.

திரு. து. புருஷோத்தமன் : அதிகமாக யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, விளம்பரம் எது அதிகப்படுத்துகிறதோ, அதற்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நவ பாரத் டைம்ஸ் என்ற பத்திரிகையைவிட தினகரன், முரசொலி ஆகிய பத்திரிகைகள் குறைந்த அளவுக்கு விளம்பரப்படுத்துகின்ற பத்திரிகைகள் அல்ல என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? இனிமேலாவது நல்ல காரியங்களை யார் செய்தாலும், அதற்குக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சியில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. து. புருஷோத்தமன் : ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று பாகுபாடு செய்யும் நிலைமை இருக்கிறது. இனிமேலாவது, இந்தக் குறை நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒன்றும் குறை ஏற்படவில்லை; குறையான எண்ணங்களோடு நடத்தப்படவும் இல்லை. அதிகமாக விற்பனை செய்கிற பத்திரிகைகளுக்கு ஏன் விளம்பரம் தரப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அவர் முரசொலி என்று பெயரிட்டு சொன்ன காரணத்தினாலே இதையும் சொல்லி விடுகிறேன். முரசொலி எதிர்க்

[1981 ஏப்ரல் 7

கட்சி பத்திரிகை என்கிற அளவில் அதற்கு தர வேண்டிய விளம்பரங்களை அவ்வப்போது தந்துகொண்டிருந்தோம். ஒரு குறிப்பிட்ட விளம்பரத்தை அரசின் சார்பிலே கொடுத்தபொழுது முரசொலி போட முடியாது என்று மறுத்தார்கள். அரசு தருகிற விளம்பரத்தைப் போட முடியாது என்று மறுக்கிற உரிமை அவர்களுக்கு இருக்கிறது. குறிப்பாக உலக தமிழ் மாநாடு பற்றிய விளம்பரந் தக்கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு விளம்பரத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறாம். பத்திரிகையாளர்களுக்கு அரசினுடைய விளம்பரத்தை மறுக்கிற உரிமை எப்படி இருக்கிறதோ, அதேபோல எந்த, எந்தப் பத்திரிகைகளுக்கு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கிற உரிமையும் அரசுக்கு இருக்கிறது.

இன்னொன்றையும் சொன்னார்கள். ' நவ பாரத டைம்ஸ் ' என்ற இந்தி பத்திரிகைக்குத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தி, மலையாளம், தெலுங்கு என்று பிரித்துத் தருவதில்லை. சில விளம்பரங்கள் இந்திய துணைக்கண்டம் முழுவதற்கும் தரப்படுகிறது. சில டெண்டர் விளம்பரங்கள், அரசு கொள்கைகள் பற்றிய சில குறிப்புகள் என்று வருகிறபோது, எல்லா மாநிலங்களிலும் அந்த விளம்பரங்கள் தரப்படுகின்றன. அதற்கு அடுத்தபடியாக ஆங்கிலம், தமிழ் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இங்கே அதிகமாக விற்பனை ஆகிய பத்திரிகைகளுக்கு ஏன் தரவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் முன்னாலே இருந்த ஆட்சி கடைபிடித்து வந்த கொள்கைகளை எல்லாம் பார்த்து, அவைகளில் நல்லவைகளைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். மக்கள் குரல் என்ற பத்திரிகை 39,404 பத்திரிகைகள் விற்பனை ஆனது. ஆனால் ஏதாவது விளம்பரம் தரப்பட்டதா என்று 1973, 1974, 1975-ல் பார்க்கிறேன், ஒரு அணாவுக்கு கூட விளம்பரமாக தரப்படவில்லை. தினமலர் என்ற பத்திரிகை ஏறத்தாழ 34,000 விற்பனை ஆகியது. அதற்கு 1973, 1974, 1975-ல் என்ன தரப்பட்டது என்றால் 1,269; 1,624; 916 ரூபாய்கள் என்ற அளவுதான். தென்னகம் என்று அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின், எதிர்கட்சி பத்திரிகை அதற்கு எவ்வளவு விளம்பரம் தெரியுமா ? 1973–74-ல் 1,185 ரூபாய்—மிகவும் தாராளமனப்பான்மையுடன் தந்திருக்கிறார்கள். 1974, 75-ல் அது கூட கிடையாது. ஆனால் இன்றைக்கு இந்த அரசு எதிர்க் கட்சி பத்திரிகைகளுக்கும், எல்லா பத்திரிகைகளுக்கும் விளம்பரத்தை ஒரு பக்கம் கொடுத்து விட்டு, நாங்கள் ஒரு ஆட்சியினுடைய ஆண்டு நிறைவு என்பதைத் தெரிவிக்கிற வகையில் இவைகளை தருகிறோம். முரசொலி அந்த விளம்பரத்தைப் போட்டு விட்டு, அதற்குப் பக்கத்திலே அதை கேலி செய்தும், விளம்பரத்தைப் போல செய்தியைப் போட்டார்கள். அதையும் பொறுத்துக் கொண்டு விளம்பரங்களைத் தந்தோம். அதற்கு பிறகு, நீங்கள் கொடுக்கிற விளம்பரத்தை, நாங்கள் போட



1981 ஏப்ரல் 7]

மாட்டோம் என்ற ஒரு கட்டத்திலே, தெரிவித்த பிறகு நாங்களே எந்த பத்திரிகைக்கு, எப்போது கொடுப்பது என்பதை முடிவெடுத்து கொடுக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு அளித்திருக்கிற இந்த அறிக்கையிலே அண்ணாவுக்கு 1 இலட்சத்து 54 ஆயிரம், தினகரனுக்கு 24 ஆயிரம் சொச்சம், முரசொலிக்கு 11 ஆயிரம் என்ற அளவிற்கும், நீதியின் குரலுக்கு 43 ஆயிரம், நவசக்திக்கு 5 ஆயிரம், 1979-80-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார். அந்தப் பத்திரிகைகள் எத்தனை அச்சாகிவிற்பனை ஆனது என்பதை அறிவிப்பதற்குமுடியுமா? இனி வருங்காலத்தில் இதுபோன்ற புகார்களுக்கு இடமில்லாமல் அதிகமாக விற்பனையாகிற ஏடுகளுக்கு அதிக அளவிற்கு விளம்பரம் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவசக்திக்கு குறைவாக இருப்பதற்கு காரணம், அப்போது நவ சக்தி நிறுத்தப்பட்டு விட்டது. அதனால் அந்தப் பட்டியல் அதிக அளவில் இல்லை. பத்திரிகை விற்பனை எண்ணிக்கை என்பது தவிர்க்க முடியாமல், எப்படி வியாதிக்காக கசப்பு மருந்து சாப்பிடுகிறோமோ, அதைப்போல ஒன்று. அடுத்தப்படியாக பத்திரிகையின் தரம், அது எடுத்துக் கொண்டிருக்கிற கொள்கை, அது நாட்டிற்கு எந்த அளவிற்கு பயன்படுகிறது என்பது. சிறிய பத்திரிகையானாலும், அதை வளர்க்க வேண்டுமென்று, உற்சாகப்படுத்த வேண்டுமென்று சில இலட்சியங்களின் அடிப்படையிலே விளம்பரங்கள் தரப்படுகின்றது. குறிப்பாக நான் சுதேசமித்திரனை சொல்ல விட்டுவிட்டேன். ஏறத்தாழ 32 ஆயிரம் பத்திரிகைகள் போகிற போது அதற்கு ரூபாய் 6,600—1973–74-ல் 21,995 ரூபாய்; 74–75-ல் 1975–76-ல் 8,762 ரூபாய் தான். இப்போது அப்படியெல்லாம் நாங்கள் பார்ப்பதில்லை. எந்த நேரத்திலே, எந்த பத்திரிகையிலே விளம்பரம் வரவேண்டுமோ—இதிலே நான் கொடுத்திருக்கிற கணக்கு அரசு மாத்திரம் நேரடியாக கொடுக்கிற விளம்பரம் அல்ல

[முற்பகல் 9–20]

அரசுக்கு உட்படுத்தப்பட்ட துறைகள் அனைத்தும், பொறுப்புக் கழகங்கள் அனைத்தும் கோ ஆப்–டெக்ஸ் போன்ற கைத்தறிக் கழகங்கள் அனைத்தும் தருகின்ற விளம்பரங்கள் எல்லாம் அதிலே சேர்க்கப்படுகின்றன. அவரவர்கள் பட்ஜெட்டை—இவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது—என்பதைக் காட்டி இவ்வளவு விளம்பரம் எங்களுக்கு தினத்தந்தியிலே வந்தால் போதும் அல்லது இந்தப் பத்திரிகையிலே வந்தால் போதும் என்று அவர்கள் குறிப்பு அனுப்புகிறார்கள். செய்தித் துறை அதை ஒழுங்குபடுத்தி, அந்த ஒழுங்குபடுத்தி பத்திரிகைகளுக்குத் தந்து, அந்த பணத்தை வாங்கிக் கொடுக்கிற வேலையைச் செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங் கட்சியை, அரசாங்கத்தை மிகப் பகிரங்கமாக ஆதரித்துக் கட்டுரைகள் மூலமாகத் தெளிவுபடுத்தி வருகிற மக்கள் குரல் பத்திரிகைக்கு கொடுத்த விளம்பரங்களைக் காட்டிலும் தினத் தந்தி போன்ற பத்திரிகைகளுக்கு அதிகமாக விளம்பரங்கள் கொடுத்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அரசினுடைய கொள்கைகளைக் கண்டித்து செய்தியாக வெளியிட்ட அதே செய்தியை விளம்பரமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்ற முறையிலே செய்தியை விளம்பரமாக வெளியிடுவதற்கு முன்வருகிற பத்திரிகைகளுக்கு அரசினுடைய சார்பிலே விளம்பரங்கள் கொடுப்பது மறுபரிசீலனை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : 'பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகள் எந்தக் கருத்தை வெளியிடுகின்றன. அரசை எந்தக் கருத்திலே ஆதரிக்கின்றன, எந்தக்கருத்திலே எதிர்க்கின்ற என்பது அந்த விளம்பரங்கள் கொடுப்பதற்கான அடிப்படையல்ல. ஆனால் அந்த விளம்பரம் எந்தப் பத்திரிகையிலே தரப்படவேண்டும், எந்தப் பத்திரிகையிலே வந்தால் பலன் உள்ளதாக இருக்கும் என்று அரசு மற்றத் துறைகள் அவரவர்களுக்கு ஏற்ற சூழ்நிலையில் பொருளாதார அடிப்படையில் முடிவுகள் எடுக்கப் படுகின்றன. தினத்தந்திக்கு ஏன் கூடுதல், மக்கள் குரலுக்கு ஏன் குறைவு என்பது பிரச்சினை அல்ல. நான் முன்னாலேயே குற்றிப்பிட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழ்ப் பத்திரிகைகளிலே தினத்தந்திதான் அதிகமான சர்குலேஷன், விற்பனையாகிற பத்திரிகை. ஆகவே நாம் ஒரு செய்தியை தமிழகத்திற்கு உடனடியாக விளம்பரப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறபோது முதல் இடத்தை தினத்தந்திக்குத் தரவேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். அந்த அடிப்படையிலே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் தெரிவித்தார்கள். ஆளும்கட்சியை ஆதரிக்கிற பத்திரிக்கைகளுக்கு எல்லாம் தருகிறார்கள் என்று, நான்கூட பழைய கணக்குகளை எடுத்துப் பார்த்தேன். முரசொலிக்கு 1974, 75, 76, இந்த மூன்று ஆண்டுகளிலே சுமார்10 லட்சத்திற்கு விளம்பரம் தரப் பட்டிருக்கிறது.' அதாவது 2,52,301; 3,75,493; 3.46,110 இதை யெல்லாம் நான் ஆளுகிற கட்சிக்கு ஆதரவாக அந்தப் பத்திரிக்கையிலே விளம்பரம் தந்தார்கள் என்று குறிப்பிடமாட்டேன். நியாயமாக அன்றைக்கு நடந்திருக்கிறார்கள், அந்த அடிப்படையிலே நாங்களும் நியாயமாக நடந்து கொண்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சிறிய பத்திரிக்கைகள் 8 ஆயிரம், 10 ஆயிரம், 15 ஆயிரம் என்று சர்குலேஷன் ஆகிற பத்திரிக்கைகளாக இருந்தாலும் கூட, அதை வாசிக்கின்ற தொழிலாளர்கள், உழைப்பாளி மக்கள் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தப் பத்திரிக்கைக்கு





6,500 என்றுதான் விளம்பரத்திலே நிற்கிறது. நான் அந்தப் பெயரைச் சொல்லவில்லை, இன்றைக்கு பத்திரிக்கை காகிதத்தின் விலை ஏறியிருக்கிறது, வரியும் உயர்ந்திருக்கிறது, அந்தப் பத்திரிக்கைகள் மூடப்படக்கூடிய அபாயம் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அதை உத்தேசித்து அந்தப் பத்திரிக்கைகள் உயிரோடு இயங்குவதற்கும் அதிகப்படியாக மக்கள் சேவை செய்வதற்கும் விளம்பரம் அதிகமாகத் தரப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முன்னாலே அரசினுடைய கொள்கையை அறிவித்திருக்கிறேன். எண்ணிக்கை என்பதை மாத்திரம் முக்கியமாக எடுத்துக் கொள்வது இல்லை. அவர்கள், பெயரைச் சொல்லவில்லை. நான் பெயரைச் சொல்கிறேன், தீக்கதிர், ஜனசக்தி போன்ற பத்திரிக்கைகள் எந்த அளவுக்கு, எத்தனை ஆயிரம் விற்பனையாகிறது என்பது பிரச்சினையல்ல, அது எவ்வளவு பெரிய செக்ஷனுக்குப் போகிறது என்பதை அரசாங்கம் உணர்ந்து கொண்டிருக்கிறது. அந்த சிறிய பத்திரிக்கைகளுக்கு விளம்பரங்களைத் தந்து ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. ஆனால் பத்திரிக்கை நடத்துகிறவர்களுக்கும் கொஞ்சம் வியாபார முறை தெரிந்திருக்க வேண்டும், உணர்வு தெரிந்திருக்க வேண்டும். அது தெரியாமல் சில கட்சிகள் பத்திரிக்கைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். சில கட்சி சார்பாக, அல்லது கட்சி சார்பற்ற முறையிலே சிறிய பத்திரிக்கைகளை நடத்துகிறவர்கள் முறையாக அரசாங்கத்தை அணுகி விளம்பரங்களைக் கேட்டுப் பெறுகிற முயற்சியிலே ஈடுபட்டால்—நாம் என்ன கொள்கை முடிவு எடுத்தாலும் கூட—அவர்களுக்கு தக்க நேரத்திலே அந்தப் பலன் கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாராந்திரப் பத்திரிக்கைகளுக்கு விளம்பரம் கொடுப்பதைப்பற்றி இந்தக் குறிப்பிலே இல்லை. ஜனசக்தி போன்ற பத்திரிக்கைகளுக்குக் கொடுக்கப்படுகிறதா ? அது வாராந்திரப் பத்திரிக்கை. தீக்கதிர், ஜனசக்தி போன்ற பத்திரிக்கைகள் பற்றி அமைச்சர்ரவர்கள் ஒத்துக் கொண்டதை வரவேற்கிறோம். அது நல்ல முடிவு. வாராந்திரப் பத்திரிக்கைகளுக்கு விளம்பரம் கொடுக்கப்படுகிறதா ? ஜனசக்திக்கு விளம்பரம் கொடுத்து வருகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கேயிருக்கின்ற வினாவில் தினசரிப் பத்திரிக்கைகளைப் பற்றிக் கேட்டிருக்கின்ற காரணத்தினால் தினசரிப் பத்திரிக்கைகளைப் பற்றிய தகவல்களைத்தான் தந்திருக்கிறார்கள். வாரப் பத்திரிக்கைகளுக்கும் இதே அடிப்படைதான். வாரப் பத்திரிக்கைகள் முக்கியமாக இந்த நாட்டிலே, சமுதாயத்திலே நல்ல தமிழ் மொழிப் பயிற்சியையும், பழக்க

வழக்கங்களையும், பண்புகளையும், கொள்கைகளையும் விளக்குவதற்காகப் பயன்படுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மிகப் பெரிய பேரியக்கம் உருவாகி இந்த மாநில அரசையே கைப்பற்றுகின்ற அளவிற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பயன்படுத்திய ஆயுதமே திராவிட நாடு என்ற வாரப்பத்திரிக்கைதான். ஆகவே, வாரப் பத்திரிக்கைகளை அலட்சியப்படுத்திவிட முடியாது. ஆனால் அவற்றை நடத்துகின்றவர்கள் முறையோடு நடத்த வேண்டும். குறைந்தது ஆறு மாதங்களாவது நடத்த வேண்டும் என்ற விதிகளெல்லாம் வைத்திருக்கிறார்கள். அப்படி நடத்தப்படுகின்ற பத்திரிக்கைகள் முறையாக அரசை அணுகினால் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, 1979–80ஆம் ஆண்டில் அரசு எல்லாப் பத்திரிக்கைகளுக்கும் அளித்த விளம்பரத்தின் மொத்தத் தொகை ரூ. 1,14,22,152. இதிலே குறிப்பிட்ட ஆறு அல்லது ஏழு பெரிய பத்திரிக்கைகளுக்கு கிட்டத்தட்ட 90 இலட்சம் ரூபாய்க்கு விளம்பரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பாக்கி எல்லாப் பத்திரிக்கைகளுக்கும் சேர்ந்து 25 இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக அளிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிக்கைகளிலே அரசு விளம்பரங்களைத் தருவதன் மூலமாக மக்களுக்கு அந்தச் செய்திகள் எட்டுவது என்பது மட்டுமல்ல; இப்பொழுது குடும்பக் கட்டுப்பாடு அல்லது சத்துள்ள உணவு சாப்பிடுங்கள் என்பது போன்ற விளம்பரங்களை எல்லா பத்திரிக்கைகளுக்கும் கொடுக்கலாம். ஆகவே, இதைச் சமமாகப் பகிர்ந்து அளித்து குறிப்பாக, சிறிய பத்திரிக்கைகளுக்குப் பெருந்தொகையை ஒதுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல வாரப் பத்திரிக்கைகளுக்கும், அதே போன்று மாதம் இருமுறை வருகின்ற பத்திரிக்கைகளுக்கும், மாதப் பத்திரிக்கைகளுக்கும் இது போன்று விளம்பரங்களைக் கொடுத்து சிறிய பத்திரிக்கைகள் வளர்ச்சியடைய வேண்டுமென்கின்ற நோக்கம் அரசுக்கு இருக்குமேயானால் சிறிய பத்திரிக்கைகளுக்கு 75 சதவீதம் தொகையை ஒதுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விளம்பரங்களுக்குப் பணம் ஒதுக்குவது, செலவு செய்வது என்பது ஏதோ பத்திரிக்கைத் துறையைக் காப்பாற்ற வேண்டுமென்கின்ற இலட்சியத்தினால் மட்டும் ஒதுக்குவது அல்ல. நம்முடைய அரசினுடைய திட்டங்கள், அரசு ஏற்றிருக்கின்ற பொறுப்புக் கழகங்கள், பல்வேறு துறைகள், டான்சி போன்ற வியாபார நிறுவனங்கள், கோவாப்டெக்ஸ் போன்ற கைத்தறி நிறுவனங்கள் தங்களது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகப் பல நேரங்களில் விளம்பரம் செய்கிறார்கள். ஆகவே, விளம்பரம் தருவதை மேற்கொள்ளும்பொழுது, அவைகள் மக்களைச் சென்றடையக் கூடிய அளவிற்கு உள்ள பத்திரிக்





கைகள் என்னென்ன என்பதைப் பார்த்துத்தான் விளம்பரங்களைக் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். பெரும் பகுதி தொகையை சில முக்கியமான பத்திரிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதற்குக் காரணமே, அந்தப் பத்திரிக்கைகளின் விற்பனை—சர்க்குலேஷன் என்பது ஒன்று. அதற்காக அவர்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற விளம்பரக் கட்டணம் என்பது மற்றொன்று. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்து பத்திரிக்கையில் ஒரு செ.. டிமீட்டருக்கு 1979–80 ஆம் ஆண்டில் 45 ரூபாய் இருந்தது; 1980–81 ஆம் ஆண்டில் 5/0 ரூபாய் ஆகியது. அதைப்போல மற்றப் பத்திரிக்கைகளுக்கும் அவைகளுக்கேற்ற நிலைமைகள் இருக்கின்றன. அதிக விற்பனை ஆகின்ற பத்திரிக்கைகள் இருக்கின்றன. தினத்தந்திக்கு 24 ரூபாய் என்று இருந்தது, அடுத்த ஆண்டு 35 ரூபாய் என்று விளம்பரக் கடடணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது இந்திய அரசும் ஏற்றுக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம். அவையொட்டித்தான் தொகையும் வளர்கிறதே தவிர, ஏதோ இவைகளுக்கிடையே ஏற்படுகின்ற வித்தியாசம்—இடைவெளி என்பது கொடுக்கப்படுகின்ற விளம்பரத்தினால் மட்டுமல்ல. பத்திரிக்கைகள் விற்பனையாகின்ற எண்ணிக்கை, வைத்திருக்கின்ற கட்டணம் ஆகிய இவைகள்ளயொட்டித்தான் தொகையும் அதிகமாகச் செலவிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல, சிறு பத்திரிகைகளைக் காப்பாற்ற வேண்டும், ஆதரவு அளிக்க வேண்டும், பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பது அரசினுடைய கொள்கையாக இருந்தாலும், அதற்கு ஓரளவுக்குத்தான் நம்முடைய செயலிலே காட்ட முடியும், அப்படி வரும்பொழுது அந்தப் பத்திரிக்கைகளின் கட்டண விகிதத்தின்படி அந்தக் கட்டணங்களைப் பெற்றுக் கொள்ள இயலும், அப்பொழுதும்கூட இந்த ஏற்றத்தாழ்வுகளை நாம் ஈடு செய்துவிட முடியாது.

[முற்பகல் 9–30]

திரு. நோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாரபட்சம் காட்டாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இனியாவது, அலை ஓசைப் பத்திரிக்கைக்கு அதிகமாக விளம்பரம் தருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு அலை ஓசையின் மேல் ஏன் இவ்வளவு அக்கறை என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமனுக்கு தினகரன் மேல் இருக்கிற அக்கறை எனக்கு புரிகிறது. இருந்தாலும் நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். அது தினகரன் ஆனாலும் சரி, அலை ஓசையானாலும் சரி, எந்தப் பத்திரிக்கையானாலும் சரி, அந்தப் பத்திரிக்கைக்கு அரசு அல்லது அரசைச் சேர்ந்த

துறைகள் அல்லது இந்த வியாபாரத் துறையிலே ஈடுபட்டிருக்கிற
அந்தக் கழகங்கள், என்ன விளம்பரங்களைத் தர வேண்டுமென்று
விரும்புகி... எனவே, அவை இந்த அரசு மூலம் விளம்பரங்கள
தரப்படும். தரமான பத்திரிக்கைகள், நல்ல பத்திரிக்கைகள், மக்
களுக்குப் பயன்படுகிற பத்திரிக்கைகள் என்கிற அடிப்படையிலே
அது பரிசீலிக்கப்படும்.

## மாமல்லபுரத்தில் ஒலி-ஒளி காட்சிகள்.

*வினா எண் 671—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு
செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை.
யளிப்பாரா—

மாமல்லபுரத்தில் ஒலி-ஒளிக் காட்சிகள் ஏற்படுத்து
செயற் குறிப்பு எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஒலி—ஒளிக் காட்சி
அமைப்பது பற்றிய திட்டங்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்
பட்டு இந்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
மத்திய அரசு பரிசீலித்து அனுப்பிய பின் முடிவு எடுக்கப்படும்

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தவைலர் அவர்களே,
மாமல்லபுரத்தில் ஒலி-ஒளி காட்சி அமைப்பதற்கு 1968வது
ஆண்டு, மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல், அதாவது
அஷூரன்ஸ் வந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது காலதாமதப்
படுவதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புவதோடு,
மத்திய சர்க்காரால், மாமல்லபுரத்திலே ஒலி-ஒளி காட்சி அமைக்க
காலதாமதம் ஏற்பட்டாலும், தமிழக அரசே ஒலி—ஒளிக்காட்சி
அமைக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, டாக்டர் கரன்சிங் அவர்கள் முன்பு மத்திய
அரசிலே சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்தபொழுது,
1971ஆம் ஆண்டு, சென்னை வந்தபொழுது, அவர்கள் மதுரையிலே
மீனாட்சியம்மன் கோவில் ஆலயத்திலே, அப்படிப்பட்ட ஒரு,
ஒலி—ஒளிக் காட்சி அமைக்கலாம் என்று அறிவித்த திட்டத்தை
அங்கே சிலர் எதிர்த்ததன் காரணமாக, அதை மாற்றி, மாமல்ல
புரத்திலே அமைக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.
அதற்குப் பிறகு, இந்த மாநில அரசு, பல்வேறு முறைகளில்,
நேரங்களில், வற்புறுத்தியுங்கூட, அந்தத் திட்டத்தைப்பற்றி,
நாடாளுமன்றத்திலே அறிவித்தும், அது செயல்படவில்லை.
பின்னாலே, 1977ஆம் ஆண்டு ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த
தற்குப் பிறகு, நமது தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித்



தலைவர் அவர்கள், 30—8—1977 தேதியன்று, மாமல்ல
புரத்திலே அந்த ஒலி-ஒளிக் காட்சி அமைக்கப்பட வேண்டியதன்
அவசியத்தை வற்புறுத்தி கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்குப்
பிறகு டெல்லியிலே நடைபெற்ற சுற்றுலாத் துறை அமைச்சர்கள்
மாநாட்டிலே நான் கலந்து கொண்ட பொழுது வற்புறுத்தினேன்.
அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்கள். இதுவரை
நடவடிக்கை எடுப்பது பரிசீலனையிலேதான் இருந்து வருகிறது.
இருந்தாலும், மாமல்லபுரத்திற்காக ஒரு பொது திட்டத்தை
நாம் வரைந்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதிலே,
இந்த ஒலி—ஒளிக் காட்சியும் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற
திட்டம் அனுப்பப்பட்டிருக்கிறது. அது மத்திய அரசின்
பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தவைலர் அவர்களே,
மத்திய சர்க்காரின் பரிசீலனையில் சுமார் 5 வருஷம், 10 வருஷம்
ஆக இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால். தமிழக அரசே
எஸ்டிமேட் போட்டு, தமிழக அரசாலேயே அந்த ஒலி-ஒளிக் காட்சி
அமைக்கப்படுமா ?

அது மட்டுமல்லாது, சுற்றுலாத் துறையிலிருந்து சுற்றுலா
பயணிகளை அழைத்துச் செல்லும், டூரிஸ்ட் பஸ் கைட்கள்,
ஒழுங்கான முறையில், அந்த மாமல்லபுரம், நரசிம்ம பல்லவ
ருடைய வரலாற்றையும், சிற்பக் கலையையும் நல்ல முறையில்
சொல்கிறார்கள். அங்கே உள்ள கெய்ட் என்று சொல்லக் கூடிய
வர்கள், ஸ்பெஷலாக, கற்பனை கதைகளைக் உருவாக்கி அங்கே
உள்ள சுற்றுலாப் பயணிகளுக்குச் சொல்லிக் கொண்டிருக்
கிறார்கள். ஆதலாலே, தனியாக அரசாங்கமே கைடுகளை நிறுவ
அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பிலே
இப்பொழுதுதான் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, மதுரை
யிலே திருமலை மன்னர் மகாலிலே, அந்த வரலாற்று ஒலி-ஒளிக்
காட்சி சுமார் ரூ. 35, 40 இலட்சம் செலவிலே அமைக்கப்பட்டி
ருக்கிறது. மீண்டும் மாமல்லபுரத்திலே அமைப்பது உடனடி
யாக முடியாது என்று அரசு கருதுகிறது. மாமல்லபுரத்திற்கு
வேறு சில திட்டங்களை, இங்கே இந்த நிதிநிலை அறிக்கையிலே
கூடத் தெரிவித்து இருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங்கள்
எல்லாம் உருவாகிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், அதன்
தொடர்ச்சியாக வேண்டுமானால், ஒலி-ஒளிக் காட்சியை
அமைப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க இயலும். அதே நேரத்திலே,
மத்திய அரசு அதைச் செய்யாது என்று நாம் அவநம்பிக்கை
யோடு கைவிடுகிற நிலையிலும் மாநில அரசு இல்லை.
மத்திய அரசு செய்யும் என்ற நம்பிக்கையோடுதான் நாங்களும்

இருந்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு சித்தன் அவர்களும் வெகு வேகமாகத் தலையை ஆட்டுகிறார்கள் அகவே, அவருடைய உதவியும் நமக்குக் கிடைக்கும்.

அடுத்து, இந்த கைட் என்ற வழிகாட்டியைப் பற்றி சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி சொல் ன்றபொழுது அந்த கைட் என்பதையே, செய்ட், கெய்ட் என்றே சொன்னார்கள். அவர்கள் கேடுதான் அங்கே செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தி, நாம் ஏற்றுக் கொண்டு, ஒழுங்குப்படுத்தப்பட்ட கைட்களை, வழிகாட்டிகளை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது, அங்கே சில பிரச்னைகள் வருகின்றன. அவர்கள் எல்லாம் அதை வைத்து பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வயிற்றிலே மண்ணைப் போடுகிறீர்களே என்று அங்கே ஒரு கிளர்ச்சியே தோன்றுகிறது. ஆகவே, மாமல்லபுரத்தினுடைய திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறபொழுது, இந்த வழிகாட்டிகள் பிரச்னையும் தீர்க்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சொக்கலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் ஒலி—ஒளிக் காட்சி அமைப்பது பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தின் பெரும் சுற்றுலா நகரமாக மாமல்லபுரம் இருப்பதால், அங்கே விரைவில் ஒலி—ஒளிக் காட்சிகளை அமைக்க அரசு முன் வருமா? இந்தக் கேள்வியில் இன்னொன்றையும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மாமல்லபுரத்தில் ஆண்டுக்கு ஒரு முறை சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் புலிக்குகையில் விழா நடத்தி வந்தார்கள். இப்போது அந்த விழாவை புலிக் குகையில் நடத்தாமல், மாமல்லபுரம் டவுனில் நடத்துகிறார்கள். ஏன் இந்த மாற்றம் செய்யப்பட்டது? எப்போதும் போல் புலிக்குகையிலேயே அந்த விழாவை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் உள்ள மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், மாமல்லபுரத்திற்குத் தொடர்புடையதாக இருப்பதால் தெரிந்த விவரங்களைக் கொண்டு பதில் சொல்கிறேன் ஆண்டுதோறும் மாமல்லபுரத்தைச் சுற்றியுள்ள இடங்களில் சுற்றுலா விழா நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு, முதன் முதலாக அந்தப் புலிக்குகையில் நடத்துவதற்கான ஏற்பாடு தற்போதுள்ள மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் சுற்றுலா வாரிய அமைச்சராக இருந்த நேரத்தில் செய்யப்பட்டது. அந்த இடத்திலேயே ஒவ்வொரு ஆண்டும் நடத்த வேண்டும் என்று முடிவு இல்லை. ஒவ்வொரு ஆண்டும் மால்லபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுப் பயணிகளைக் கவரத் தக்க இடங்களில் அந்த விழா நடத்தப்படுகிறது. அந்த வகையில் மாமல்லபுரத்தில் சென்ற ஆண்டு நடத்தப்பட்டது,



இந்த ஆண்டு எந்த இடத்தில் நடத்தினால் அது பயணிகளை அதிக அளவில் ஈர்க்கத் தக்க வகையில் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பக்கத்திலேயே இருக்கிற காரணத்தால் எடுத்துத் தெரிவித்தால், அங்கேயே அதை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வரும்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, மகாபலிபுரத்திற்குத் தினந்தோறும் சராசரியாக எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர் ? இரவு நேரங்களில் அங்கே தங்குபவர்கள் எவ்வளவு பேர் ? சித்திரைத் திருவிழா மிகவும் சிறந்த விழா. ஆகவே, அந்த விழாவை அங்கே நடத்துவதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே மாமல்லபுரத்திற்கு எவ்வளவு பயணிகள் வருகிறார்கள் என்கிற விவரம் இங்கேயிருக்கிற விவரக் குறிப்புகளில் இல்லை. தனியாகக் கேள்வி போடுவார்களானால், அந்தக் குறிப்புகளைச் சேகரித்துத் தர முடியும். சித்திரைத் திருவிழா மாமல்லபுரத்தில் நடத்துவதில் பொருள் இல்லை. ஆகவேதான் ஜனவரி மாதத்தில் பொங்கல் விழாவைச் சுற்றுலா விழாவாக ஆண்டுதோறும் அங்கே நடத்திக்கொண்டு வருகிறோம்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திர மணம் கமழும் அந்த மாமல்லபுரத்தில் மாமல்லனின் வரலாற்றை ஒலி—ஒளி காட்சிகளாக அமைப்பதோடு, தமிழகத்தின் கலாச்சாரம். தமிழர்களின் பண்பாடு, தமிழகத்தில் நடத்தப்படுகிற திருமணமுறை ஆகியவற்றையும் வெளிப்படுத்துகின்ற வகையில் $1\frac{1}{2}$ மணி நேரம், 2 மணி நேரம் என்கிற அளவில் கலை நிகழ்ச்சிகள் தயாரித்து, அங்கே வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சுற்றுலா விழாவில் காண்பிப்பதற்கு அரசு முன்வருமா? ஏனெனில் மேல் நாடுகளில்—குறிப்பாக—தாய்லாந்தில் உள்ள ரோஸ் கார்டனில் அந்த நாட்டின் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அந்த முறையை தமிழக அரசும் கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் இருக்கும் சிறப்புகள் நமக்குத் தெரிகிறது. அதே நேரத்தில் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று அப்படிப்பட்ட குறைபாடுகள் அங்கே இருப்பதும் நமக்குத் தெரிகிறது. அந்த மாமல்லபுரத்தில் உள்ள அழகிய கலைச் சின்னங்களைக் காணவேண்டும் என்று

வருகின்ற பல்லாயிரக்கணக்கான மேல்நாட்டினர், அங்கே வந்து
சேர்ந்த ஒரு சில மணி நேரங்களிலேயே அவற்றையெல்லாம்
பார்த்து விட்டு திரும்புகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அவர்
களை எல்லாம் அங்கே இரவு நேரங்களில் தங்குவதற்கு வேண்டிய
முறையில் வசதிகளைச் செய்துவைத்தால்தான் அங்கே வருகின்ற
பயணிகள் அந்தக் கடற்கரையின் இரவு நேர உல்லாச சூழ்
நிலையை அனுபவிக்க முடியும். அந்த உணர்வுகளை அவர்கள்
அடையவேண்டும் என்று சொன்னால், அவர்களை 2, 3 நாட்க
ளாவது அங்கே தங்கவைக்க வேண்டும். அவர்களை அங்கே
தங்க வைக்கிற ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டால்தான் அந்த
வெளிநாட்டுப் பயணிகள் மூலம் நமக்கு நல்ல வருமானம் கிடைக்க
வழி ஏற்படும். ஆகவே, அவர்கள் காலையில் அங்கே சென்று
மாலையில் திரும்பி வரவேண்டிய கட்டாய சூழ்நிலையை மாற்று
வதற்கு சுற்றுலாத் துறை முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.
அதிலே ஒன்று, அங்கேயுள்ள "கடற்கரைக் கோவிலுக்கு அருகில்"
(ஷோர் டெம்பிள்) நிலம் ஆர்ஜிதம் செய்து இருக்கிறோம். அங்
கேயொரு திறந்த வெளி அரங்கம் கட்டி, கலை நிகழ்ச்சி நடத்து
வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இருக்கிறோம். அது மட்டு
மல்லாமல், இந்தியாவிலேயே இதுவரையில் இல்லாத வகையில்
ஒரு திறந்த வெளி அருங்காட்சியகம் (ஒப்பன் ஏர் மியூசியம்)
அமைக்க இருக்கிறோம், அப்படி அமைக்கப்படுமனால் அங்கே
செல்லுகின்ற அந்த சுற்றுலாப் பயணிகளுக்கு இரவு நேரத்திலே
தங்கி நம்முடைய நாட்டு கலை நிகழ்ச்சிகளையும் கலாச்சாரங்
களையும் மற்றுமுள்ள சிறப்புகளையும் தெரிந்துகொள்ள வசதியாக
இருக்கும் என்று சுற்றுலாத் துறை திட்டமிட்டு இருக்கிறது.

[முற்பகல் 9—40]

திரு. ப. தீர்த்தராமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில்
இந்த ஆண்டு வறட்சி அதிகமாக இருப்பதால்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாமல்மபுரம் சுற்றுலா
வளர்ச்சிக்கும் வறட்சிப் பணிக்கும் சம்பந்தமில்லை. திரு. சித்தன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, பண்டைத்
தமிழர்களுடைய சிற்பக் கலைக்கும் கட்டிடக் கலைக்கும் சான்று
கூற இருக்கும் இந்த மாமல்லபுரத்தில் மேம்பாட்டுத் திட்டத்தை
மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா?
ஒருங்கிணைந்தத் திட்டத்திலே வேறு என்ன பரிந்துரை செய்யப்
பட்டிருக்கிறது. மாமல்லபுரத்திற்கு வருகின்ற நடுத்தர மக்கள்
தங்கிச் செல்ல வசதியான விடுதிகளை சுற்றுலாத் துறை கட்ட
முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
சுமார் 9 கோடி ரூபாய் செலவில் ஒரு 'மாஸ்டர் பிளான்' மாமல்ல
புரத்திதைப்பற்றித் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்





பட்டுள்ளது. அதில் மாலல்லபுரத்திற்கு உள்ளே கடை வீதி
களுக்கு உள்ளே போய் நெருக்கடி ஏற்படுத்தாமல், இருக்க 'ரிங்
ரோடு' நகரத்தைச் சுற்றி பாதை அமைக்கும் திட்டம் இடம்
பெற்றிருக்கிறது. நடுத்தர வருவாய் உடையவர்கள் அங்கே தங்கு
வதற்கு ஏற்ற முறையில் 'டார்மிட்டரி சிஸ்டம்— அது இப்போது
யூத் ஆஸ்டல் என்று அழைக்கப்படுகிறது—விடுதிகளை அமைப்பது;
அதைபோல குடும்பத்தோடு செல்கிறவர்கள் தங்குவதற்கு ஏற்ற
விடுதிகளை அமைப்பது; தெருக்களை ஒழுங்குபடுத்துவது; கடை
களை ஒழுங்குபடுத்துவது; வெளிநாட்டுக்காரர்கள் அந்த கடை
களையும் தெருக்களையும் பார்க்கும்போது 1,300 ஆண்டுகளுக்கு
முன்னால் தோன்றிய இந்த நகரம் இவ்வளவு அழகாக பராமரிக்கப்
படுகிறது என்ற உணர்வை பெறுகின்ற வகையில் பல்வேறு திட்டங்
கள் அந்த மாஸ்டர் பிளானில் இடம் பெற்றிருக்கின்றன. அது
மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவை பற்றிய
குறிப்புகள் என்னிடம் இல்லை! இருந்தாலும் நினைவில் இருக்
கிறதை வைத்துச் சொல்லுகிறேன்; இந்த அடிப்படையிலேதான்
திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சரவர்கள் மாமல்லபுரத்தின் வளர்ச்சிக்கு ஏறத்தாழ ஒரு
சிறு நகரத்தைப்போல் அதிலே ஏற்படுத்தவிருக்கும் வளர்ச்சியை
எடுத்துச் சொன்னார்கள். நகரத்தைப்போன்ற வளர்ச்சி சுற்
றுலா முக்கியத்துவத்தை நாளடைவில் குறைத்துவிடுகிறது
என்பது இன்றைக்கு சுற்றுலாத் துறை பற்றி பொதுவாக உருவாகி
இருக்கும் ஒரு கருத்தாகும். அந்தக் கடற்கரை நகரைச் சுற்றி
ஏறத்தாழ ஒரு மைல் அல்லது ஒன்றரை மைல் தொலைவில் ஒரு
சிறு காடு, சமுதாயக் காடு வளர்ப்பதன் மூலம் அந்த இடத்தின்
முக்கியத்துவத்தை, 1,300 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய
அந்த நகரின் அக்காலச் சூழலை எடுத்துக்காட்டுகின்ற வகை
யில், மாண்புமிகு அமைச்சரவர்கள் வனத் துறைக்கும் அமைச்
சராக இருக்கின்ற காரணத்தால், ஒரு மைல் அல்லது ஒன்றரை
மைல் வட்டாரத்தில் ஒரு சமுதாயக் காடு வளர்க்கும் பணியை
இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : : தலைவரவர்களே,
எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்
கள் தெரிவித்த குறிப்பின் அடிப்படையில்தான் முயற்சிகள் மேற்
கொள்ளப்படுகின்றன. அங்கே புதிய நகரத்தை உருவாக்கும்
திட்டம் எதுவும் இல்லை. அங்கே ஒழுங்கற்ற முறையில் அமைந்
திருக்கிற கடைகளை ஒழுங்கு படுத்துதல், மற்றும் தெருக்கள்,
கட்டிடங்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற முயற்சிகள்தான்
மேற்கொள்ளப்படுகின்றன. புதிய கட்டிடங்களோ, வளர்ச்சித்
திட்டங்களோ புதிதாகப் போடப்படவில்லை. இப்போது இருக்கிற
இயற்கை சூழ்நிலை கெட்டுவிடாத அளவுக்கு மேம்பாட்டுப்

[1981 ஏப்ரல் 7

பண்கள் நடைபெறும் இப்போதே திருவான்மியூரிலிருந்து சிலமைல்
களுக்கு அப்பாலிருந்தே புதிய கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது
என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம்; யாருக்கும் இப்போது
அனுமதி வழங்குவதில்லை. ஆகவே, 15 மைல் அல்லது 20மைல்
தூரத்திலிருந்தே இயற்கைச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டு
மென்பதுதான் திட்டம். அது அல்லாமல் புதிய நகரம் உருவாக்
கும் திட்டம் இல்லை. இப்போது இருக்கிற அமைப்புக்களை
ஒழுங்குபடுத்தி, சுற்றிலும் மரங்கள் வளர்க்க வேண்டுமென்பதை
முக்கியமானத் திட்டமாக இன்றைக்கு அரசு மேற்கொண்டிருக்கி
றது. மாமல்லபுரத்தில் மட்டுமல்ல; எங்கெங்கே வாய்ப்பு
இருக்கிறதோ அங்கெல்லாம் சாலைகள் சீரமைக்கப்பட்டு, மரங்
கள் வளர்க்கப்பட வேண்டும் என்பதை இந்த அரசு நோக்க
மாகக் கொண்டிருக்கிறது, குறிப்பாக மாமல்லபுரத்தில் இயற்கைச்
சூழ்நிலையை உருவாக்குகின்ற வகையில் வனத்துறை மரங்களை
நட சுற்றுலாத் துறை ஆலோசனை வழங்கும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தை உருவாக்கிய நரசிம்ம
பல்லவனின் உறுதுணையான சிவகாமி அம்மையாரின் பெய
ரினை அங்கு ஏற்படும் அரங்குக்கு வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, முதலிலே குழந்தை பிறக்கட்டும்;
அதற்குப் பிறகு பெயர் வைப்பது பற்றி யோசிக்கலாம்.

கோட்டாற்றில் சேக்குத் தம்பி பாவலருக்கு நினைவு மண்டபம்.

*வினா எண். 672— திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு
செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சேக்குத் தம்பி பாவலரின் நினைவாக நாகர்கோவிலை
அடுத்த கோட்டாறில், நினைவு மண்டபம் அமைக்க அரசுக்கு
உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) சேக்குத் தம்பி
பாவலருக்கு நினைவு மண்டபம் அமைக்கும் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளது.

(ஆ) வரைபடம் தயாரித்து, மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்
பட்டபின் நினைவு மண்டபம் அமைக்கும் முயற்சி மேற் கொள்
ளப்படும்.



1981 ஏப்ரல் 7]

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, இந்தியாவிலேயே
சதாவதானி என்று பெயர் எடுத்த தமிழ்க் கவிஞர் சேக்குத் தம்பி
பாவலருக்கு புரட்சித் தலைவரின் அரசு வந்த பிறகுதான் பிறந்த
நாள் விழா எடுக்கப்பட்டது. ஆனால் அது மாவட்ட அளவில்
எடுக்கப்பட்ட விழாவாதலால் மாநில அளவிலே ஒரு விழா எடுப்
பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய அரசு முன்வருமா?

மேலும், அமைக்க இருக்கின்ற நினைவு மண்டபத்தில் ஒரு
நூல் நிலையத்தையும் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே,
நினைவு மண்டபத்தை எப்படி அமைப்பது என்ற முடிவு எடுக்கப்
பட்டதற்குப் பிறகு, அந்த மண்டபத்திலே நூலகம் அமைக்க முடி
யுமா அல்லது வேறு ஏதாவது அமைக்க வேண்டுமா என்பதைப்
பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சதாவதானி என்று பெயர் எடுத்த சேக்குத் தம்பி
பாவலர் அவர்கள் மிகப் பெரிய ஒரு மேதை. அப்படிப்பட்ட
மேதைகளைக் கவுரவிப்பதற்கு அரசாங்கம் நினைவு மண்டபம்
அமைக்க எடுத்திருக்கின்ற முயற்சியை வரவேற்கிறேன். ஆனால்,
விரைவிலே அதைச் செய்வதற்குரிய நடவடிக்கையை அரசாங்கம்
எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே,
நம்முடைய உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களே ஒரு
அரைக் கவிஞர்தான். (ஆரவாரம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவிஞர் என்பதற்குப் பல
பொருட்கள் உண்டு. அந்த மாதிரி ஏதாவது வந்துவிடப் போகின்
றது. (ஆரவாரம்).

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே,
நான் பாதிக் கவிஞர் என்ற பொருளில்தான் சொன்னேன்.
திரு. அம்பிகாபதி அவர்களுக்கு உள்ள அக்கறையைக் காட்டு
வதற்காகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.
சேக்குத் தம்பி பாவலர் அவர்களின் மீது நமது உறுப்பினர்
ஆகவே இந்தக் கேள்விக்குத் தான் நான் முன்னாலேயே பதில்
சொல்லி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: தலைவரவர்களே, நினைவு
மண்டபம் அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்
கள். அவ்வாறு நினைவு மண்டபம் அமைப்பதற்கு எவ்வளவு
ரூபாய் ஒதுக்கீடு செய்ய அரசு உத்தேசித்துள்ளது?

[1981 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பெரியோர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைப்பது என்று கொள்கை முடிவாக எடுக்கப்பட்டிருக்கின்றது. எப்படிப்பட்ட மண்டபங்கள் அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று துறையிலே இருந்து வரைபடங்கள் எல்லாம் கேட்டு இருக்கிறோம். ஆகவே எவ்வளவு செலவு என்பதை முன்னாலேயே கணக்கிட்டுக் கொண்டுதான் இப்படிப்பட்ட தலைவர்களுக்கு மண்டபம் அமைக்க வேண்டும் என்பதில்லை. காலுக்குத் தகுந்த செருப்புத்தான் வேண்டுமே தவிர, செருப்புக்குத் தகுந்த கால் என்பது சரியல்ல. ஆகவே அப்படிப்பட்ட கொள்கையை இப்படிப்பட்ட தலைவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்புகின்றபோது கைக்கொள்வதில்லை. ஆகவே திட்டங்கள் எல்லாம் வந்ததற்குப் பிறகு, வரை படங்கள் எல்லாம் வந்ததற்குப் பிறகு தான் எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

நாகர்கோவிலில் புதிய வானொலி நிலையம்.

*வினா எண். 673—திரு. சு. முத்துகிருஷ்ணன், திரு. ச. பலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டம் நாகர்கோவிலில் புதிய ரேடியா நிலையம் அமைக்க மத்திய அரசு தமிழக அரசின் உதவி ய நாடி உள்ளதா ?

(ஆ) இதற்கான இடத்தை அரசு இனாமாகக் கொடுத்து உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) ஆறாவது திட்டக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில், மாவட்ட அளவிற்கு ஒலிபரப்பும் சக்தி கொண்ட சிறிய வானொலி நிலையம் (Loc l R dio St t on) ஒன்றினை அமைக்கும் உத்தேசம் மத்திய அரசிடம் உள்ளது.

திரு சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவரவர்களே, மத்திய அரசு நாகர்கோவிலிலே ஒரு ரிலே ஸ்டேஷன் அமைப்பதற்கு முயற்சிகள் எடுப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் அதற்காக இடத்தைத் தேர்வு செய்கின்ற விதத்தில் தகுந்த இடம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றதா ? அப்படி இல்லை எனில் அதற்கான இடத்தை இனாமாகத் தருவதற்கு மாநில அரசு முன் வந்துள்ளதா ? அல்லது அப்படி இடத்திற்காக மத்திய அரசு மாநில அரசிடம் கேட்டுள்ளதா ?



1981 ஏப்ரல் 7]

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; மத்திய அரசு அப்படி வானொலி நிலையங்களை அமைப்பதற்காக இடங்கள் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில், தமிழக அரசு, எந்தவிதமான தடையும் இன்றி உடனடியாக, அந்த இடங்களை வழங்குகிற முயற்சிகளைத்தான் இதுவரை மேற்கொண்டிருக்கிறது. நாகர்கோவிலிலே இடம் வேண்டும் என்று இன்னும் மத்திய அரசிடமிருந்து தகவல் வரவில்லை. அப்படி வருமேயானால் உடனடியாகத் தக்க இடத்தைத் தருவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 677 முதல் 681 முடிய உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

சித்தையன் கோட்டையில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண். 682—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் சித்தையன் கோட்டையில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு இலவசமாக இடம் கொடுப்பதற்கு ஒருவர் முன்வந்துள்ளாரா ?

(ஆ) ஆம் எனில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில் எவ்வளவு காலத்திற்குள் வேலை துவங்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) மதுரை மாவட்ட மருத்துவ அலுவலர் அவர்கள் இதற்காக கருத்துருவை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளார்கள். அவரது கருத்துரு கிடைத்தவுடன் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்தையன் கோட்டை பகுதி வளர்ந்து வருகிற ஒரு நகரம். அரசு மருத்துவமனை கட்டுவதற்கு இலவசமாக இடம் கொடுக்கிறேன் என்று யார், சொன்னார்கள் ? எப்பொழுது சொன்னார்கள் ? அமைச்சர் அவர்கள் கூறிய பரிசீலனை எப்போது முடிவடையும் ? கட்டிடம் கட்டுவதற்கான துவக்க வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் இடத்தையும், 13,000 ரூபாய் ரொக்கத்தையும் திருவாளர்கள் கே. என். காதிர் மீரான் ராவுத்தர், எம். என். நூர்முகமது ராவுத்தர் கொடுத்திருக்கிறார்கள். நான் மூலக் கேள்விக்கான விடையில் ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதைப் போல அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த இடத்திலே மருத்துவமனையை ஏற்படுத்தி நல்ல முறையில் செயலாற்றும் விதத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு பெருமக்களும் அரசுக்கு எப்போது தங்களது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்கள். எவ்வளவு காலம் அதனை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வதற்கு அரசு எடுத்துக் கொண்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30—9—1980 அன்று அவர்களின் விருப்பத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்போது 6 மாதம் தான் ஆகிறது. அங்கே மருத்துவமனை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க விரைவில் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்தையன் கோட்டை என்னுடைய தொகுதியைச் சார்ந்தது ஆகும். இந்த இரண்டு பெருமக்களும் 2 ஆண்டுகளுக்கு முன்பே தங்களது விருப்பத்தை அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே உள்ள கோட்டாட்சித் தலைவர் கூட மக்களை சந்தித்து உடனடியாக அங்கே மருத்துவமனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்து வந்தார்கள். இங்கேயும் 2, 3 முறை பேசியிருக்கிறேன். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவில் ஆய்ந்து, அந்தப் பக்கத்திலே மருத்துவ மனையை ஏற்படுத்த அரசு உடனடியாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே தந்திருக்கும் ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் சொன்னேன். அந்த உத்தரவைப் பற்றிய விவரங்களை வேண்டுமானாலும் படித்து விடுகிறேன். 13,000 ரூபாயையும் 5 ஏக்கர் நிலத்தையும் ஏற்றுக் கொண்டு, 30—9—1980 அன்று ஆணையிடப்பட்டது. ஆணை எண். ப. வ. 1634, நலம், தேதி 30—9—1980. ஆகவே அதை நாம் 30—9—1980 அன்றே ஏற்றுக் கொண்டிருக்கிறோம். விரைவில் அந்தப் பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.



### துறையூர் அரசினர் மருத்துவமனை

*வினா எண். 683— திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் அரசினர் மருத்துவமனையை மேலும் அதிக படுக்கைகள் கொண்டதாக விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை படுக்கைகள்? இட்ட மதிப்பீடு எவ்வளவு? பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) 24 கூடுதல் படுக்கைகள். இட்ட மதிப்பீடு ரூபாய் 2.05 இலட்சம். திருச்சி மாவட்ட மருத்துவ அதிகாரி, பொதுப்பணித் துறையினரிடம் அதற்கான அமைப்புப் படமும், மதிப்பீடும் கோரியுள்ளார். அது பெறப்பட்டு மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர், அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி அரசு அனுமதி வழங்கிய பின்னர் தான் பணி தொடங்கும்.

திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29—2—1980 அன்று அனுமதி அளித்துள்ளதாகத் தெரிகிறது. அதாவது வரைபடம் கோரியுள்ளதாகத் தெரிகிறது. வரைபடம் கேட்பதற்கே 1½ ஆண்டுகாலமானால், திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் ஆகும்? எனவே, விரைவில் வரைபடம் வாங்கி அங்கே மருத்துவமனையை அமைக்க அரசு முயலுமா? ஏனென்றால் அந்த இடம் ஆதிவாசிகள் அதிகமாக வாழும் இடம். ஆகவே அவர்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ மனையைக் கட்ட அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: விரைவில் அந்தத் திட்டத்தை முடித்துவிடுவதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறோம். வெகு விரைவில் அது முடிக்கப்படும் என்று அரசு கருதுகிறது.

### சிறுவலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் கிணறு அமைக்கும் திட்டம்

*வினா எண். 684— திரு கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

[1981 ஏப்ரல் 7

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) பவானிசாகர் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளரிடமிருந்து இதற்கான திட்டம் எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: அங்கே கட்டப்பட்டிருக்கிற விடுதியில் தண்ணீர் இல்லாத காரணத்தால் அங்கே மருத்துவர்கள் தங்கிப் பணியாற்றமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அவர்கள் விடுப்பில் சென்று விடுகிறார்கள். ஆகவே விரைவில் அந்தக் கிணறுகளை வெட்டி அங்கிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்து தரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பப்ளிக் வொர்க்ஸ் டிப்பார்ட்மெண்ட், பவானிசாகர், எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியருக்கு கடிதம் 10—11—1980-ல் எழுதியிருக்கிறோம். அதற்குப் பிறகு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வெகு விரைவில் அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று, கிணறு கட்டி முடிக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். சீக்கிரத்தில் முடித்துவிடுவோம் என்ற வாக்குறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தருகிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: வெகு விரைவில் என்று சொன்னார்கள். அங்கே உடனடியாக ஒரு குழாய்க்கிணறு அமைக்க அரசு திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இப்போது அந்தத் திட்டம் இல்லை.

### தாராபுரத்தில் கதண்டை வண்டுகளால் கடிக்கப்பெற்றோர்

*வினா எண் 685—திரு சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரத்தில் புல் அறுக்க வயலுக்குச் சென்ற மூன்று பெண்களை 'கதண்டை வண்டுகள்' துரத்தி கடித்து அவர்கள் ஆபத்தான நிலையில் தாராபுரம் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த வண்டுகள் கொடிய விஷத்தன்மை உடையன என்று மருத்துவர்கள் கூறியதன் அடிப்படையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



1981 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) கதண்டை வண்டு கடித்ததால் இரண்டு பேர் தாராபுரம் அரசு மருத்துவ மனையில் சனவரி மாதம் மத்தியில் புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றனர்.

(ஆ) கதண்டை வண்டுவின் நஞ்சுத் தன்மையைப் பற்றி மருத்துவத் துறைக்கோ பொது சுகாதாரத் துறைக்கோ எந்தத் தகவலும் வரவில்லை.

திரு சு. முத்துக்கிருஷ்ணன்: இந்த வண்டுகள் கடித்து பாதிக்கப்பட்டவர்களில் பெண்கள் மட்டும்தான் உண்டா ஆண்களை அந்த வண்டுகள் கடிக்கவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

### நாகை துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டம்

*வினா எண். 686—திரு து. புருஷோத்தமன், திரு. த. வீராசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகை துறைமுகத்தை மேம்படுத்தும்படி மத்திய அரசை தமிழக அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: இல்லை.

திரு. து. புருஷோத்தமன்: தமிழகத்தில் ஆண்டுதோறும் ஏற்படும் புயல் அல்லது கடும் மழை காரணமாக தமிழ்நாட்டில் பாதிக்கப்படுகிற முதல் இடம் நாகப்பட்டணம்தான். ஆகவே இப்படிப்பட்ட புயல் அல்லது கடும் மழை காரணமாக பாதிக்கப் படாமலிருக்க இந்தத் துறைமுகத்தை மேம்படுத்த இந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்த மத்திய அரசிடம் இந்த அரசு அதன் அவசியம் கருதி கோரிக்கை விட முன்வருமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி சில பொருள்கள் அங்கு அதிகமாகத் தேவைப்படுகிறது என்று எழுதினோம். 125 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சில பொருள்கள் வேண்டுமென்று கேட்டோம். இருந்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணத்தையும் தெரிவிக்கிறோம்.

[முற்பகல் 10-00]

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய சென்னை துறைமுகத்தில் சரக்குகள் உடனுக்குடன் இறக்குமதி செய்யப்படாமல், பல மாதங்களாக,

பல வாரங்களாக, அங்கே கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தமிழ் நாட்டிற்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்கள் எல்லாம் இறக்குமதி செய்யப்படாமல் இருக்கின்றன ..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு அ. புருஷோத்தமன் : அப்படி இறக்குமதி செய்யப்படாததன் காரணமாக, உதாரணமாக சிமெண்ட் கடந்த ஒரு மாதமாக அங்கேயே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே **நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்தினால், மக்களுக்குத்** தேவையான அத்தியாவசியமான பொருள்களை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில், மத்திய அரசுக்கு வேகம் வேகமாக இதைப்பற்றி வலியுறுத்த மாநிலஅரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வேகம் வேகமாக என்று சொன்னார்கள். எவ்வளவு வேகம் என்பது புரியவில்லை. இருந்தாலும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நாகைத் துறைமுகத்தைப் பற்றி அனுப்பியும், அதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, உங்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வேகம் வேகமாக வலியுறுத்த இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு த. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகைத் துறைமுகம் தமிழகக் கடற்கரைப் பகுதியில் மத்தியிலே இருக்கிறது. தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி, தென்னாற்காடு போன்ற மாவட்டங்கள் இதனால் அதிகம் பயன்பெற முடியும். எனினும் இந்தத் துறைமுகத்தில் கப்பல் கரைக்கு வரமுடியாமல் 2 மைல்களுக்கு அப்பால் நிறுத்தப்படுவதால் பிரயாணிகளைப் படகிலே கொண்டுவருவது உயிருக்கு உயிருக்கு ஆபத்து என்று எண்ணுகிறார்கள், தவிர, அந்தத் துறைமுகத்திலே படகின் மூலம் சரக்குகள் ஏற்றி இறக்கப் பெறுவதால் பொருள்களின் விலையும் உயருகின்றது. எனவே, இந்தத் துறைமுகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதை மேம்படுத்தும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழக அரசின் மூலமாக மத்திய அரசை வலியுறுத்துவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மிக தூரத்திலே இருந்து பொருள்களை எடுத்து வருகின்ற காரணத்தினால்தான், 10 புதிய படகுகள் அதிகமாக வேண்டுமென்று கேட்டு, இதை 6 வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எழுதியிருந்தோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணப்படி மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசு வலியுறுத்தும்.





திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே 1977 ஆம் ஆண்டு புயலுக்குப் பிறகு அந்தத் துறைமுகத்திலே இருக்கக்கூடிய புட் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா ஓட்டம் பிடித்தது. இன்னும் திரும்பவில்லை. அதற்குப் பிறகு, அங்கேயிருந்த கோ-டவுன் இம்ப்ரூவ் செய்யப்பட்டிருக்கிறது. 10,000 டன் ஸ்டோரேஜ் பெசிலிடி இப்போது அங்கே உண்டு. 6 வது ஐந்தாண்டுத் திட்டத்திலே நீங்கள் போர்ட் இம்ப்ரூவ்மெண்ட்டைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். நான் சொல்கிறேன், இப்போது இருக்கிற பெசிலிடியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். உரக் கப்பலை, இங்கே டைவர்ட் பண்ணிவிடுவதற்கு சென்ட்ரல் கவர்ன்மென்ட்டை நீங்கள் அப்ரோச் பண்ணுவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற பெசிலிடிசைப் பயன்படுத்திக் கொள்ள சரக்குக்கப்பல்களை அங்கே அனுப்பிவைப்பது பற்றிச் சொன்னார்கள். அங்கே எந்த அளவுக்கு வசதிகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, மத்திய அரசாங்கத்திற்கு அந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த நாகை துறைமுகம் ராஜராஜ சோழன் காலத்திலே இருந்து பன்னெடுங்காலமாக, பல நூற்றாண்டுகளாக சோழ நாட்டிற்குப் பயன்படக் கூடிய ஒரு பெரிய துறைமுகமாக விளங்கி வந்திருக்கிறது. அதைப்போலவே, பாண்டிய நாட்டிலே, தொண்டி துறைமுகம் இருக்கிறது. இந்த 2 துறைமுகங்களும் சரிவரப் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன, உதாசீனப் படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த 2 துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் சென்னை துறைமுகத்திலே இருக்கக்கூடிய பளு குறையும். பாண்டி மண்டலப் பகுதியும், சோழ மண்டலப்பகுதியும் இதனால் பல்வேறு வசதிகள் அடையும். ஆகவே, இந்த இரண்டு துறைமுகங்களையும் உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, இந்த மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே இந்த அரசும் அப்பேர்ப்பட்ட எண்ணத்தைக் கொண்டிருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் எண்ணத்தை முழுமையாக மத்திய அரசுக்கு தெரிவிக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில், நாகைத் துறைமுகம் தவிர, வேறு சிறு துறைமுகங்களின் அபிவிருத்தி திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளதா

குறிப்பாக, எல்லா இயற்கை வசதிகளும் பெற்றிருக்கிற குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், நாகை துறைமுகங்களைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நாம் 6 வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, அவை சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இருந்தாலும்கூட, நீங்கள் சொல்லிய இந்தத் துறைமுகத்தை எடுத்துக் கொள்வதற்கு மத்திய அரசை நாம் மீண்டும் வலியுறுத்துவோம்.

**திரு பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகைத்துறைமுகம் என்பது தமிழகத்தில் ஒரு முக்கியமான துறைமுகம். இந்தத் துறைமுகத் த மத்திய அரசு கவனிக்கும் சூழ்நிலை படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது. ஏறக்குறைய 5,000 தொழிலாளர்களின் வாழ்க்கை இந்த துறைமுகத்தை நம்பியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மத்திய அரச கேட்டுக் கொண்டே இருப்பதாகச் சொன்னார்கள். இந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கும், இதை நம்பியிருக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு பாதுகாப்பளிக்கும் வகையிலும் மத்திய அரசை வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை இந்த அரசு போடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கேட்டுக் கொண்டே இருக்கிறோம் என்று சொல்லியது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்து அதிக படகுகள் அனுமதிக்க வேண்டுமென்றும் என்பதைப்பற்றி தான் தீர்மானம் போடவேண்டுமென்று சொன்னார்கள். சட்டமன்றத்திலே இப்போது வந்துள்ள கேள்விகளே தீர்மானத்தை விட முக்கியமானது என்று தான் மத்திய அரசு கருத வேண்டும். இதை மத்திய அரசுக்கு பிரதிபலிக்க தயாராக இருக்கிறோம்.

**திரு ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை துறைமுகத்தைப் பொறுத்த வரையில் கடலிலிருந்து, ஆற்றுக்கு வருகிற வழி (பேசேஜ்) அடிக்கடி அடைத்துக் கொண்டு விடுகிறது. அதுவும் வேலை நடக்காமல் இருப்பதற்கு, தடங்கலாக இருப்பதற்கு ஒரு காரணம். இன்னொன்று அங்கு இருக்கக்கூடிய மணல் வாரும் இயந்திரம் (டிரெட்ஜர்) பல இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ளது. அது வேலை செய்யாமல் இருக்கிறது. அங்கே மட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். கடலூரிலும் இதுபோன்ற டிரெட்ஜர் வேலை செய்யாமல் இருக்கிறது. துறைமுகம் இயங்குவதற்கே தடங்கலாக இருக்கிறது. ஆகவே



அந்த 'பேசேஜை' 'கிளியர்' செய்வதற்கும், எல்லா நாட்களிலும் பயன்படுகின்ற அளவில் அந்த 'டிரெட்ஜர்' வேலை செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொல்லிய 75 இலட்ச ரூபாய் செலவில் அந்த 'டிரெட்ஜர்' கொடுக்க வேண்டுமென்று சொல்லி, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு எழுதியிருந்தோம். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் மீண்டும் வலியுறுத்துவோம்.

**திரு கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மைனர் போர்ட்ஸ்' என்பது ஸ்டேட் சப்ஜெக்ட். சென்ட்ரல் கவர்ன்மெண்ட், மாநிலத்திற்கு மானியமாக ஏதாவது கொடுப்பார்களே தவிர, 'டெவலப்மென்டை' ஸ்டேட் தான் செய்ய வேண்டும். நாகப்பட்டிணம் ஒரு மைனர் போர்ட். ஸ்டீமரஸ் எல்லாம் வந்து பெ றுத்தவரையில் ஏற்றுமதி, இறக்குமதி வேலைகள் நடக்கின்றன.

The difficulties are about bars and the dredging of the bars would be continuous. The Port would develop very well, if that is undertaken by the State Government.

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாநில அரசாங்கத்திற்கு சேர்ந்ததாக இருந்தாலும், இப்படிப்பட்ட பெரிய திட்டங்களை செய்கின்ற பொழுது, மத்திய அரசாங்கம் தான் நிதியுதவி செய்யவேண்டும். எனவே மத்திய அரசாங்கத்தை நம்பித்தான் செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை உறுப்பினர் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

### புதிதாகப் போடும் வழித்தடங்கள் அனைத்திலும் அரசுப் பேருந்துகள் விடும் திட்டம்.

*வினா எண் 687— **திரு எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

புதிதாகப் போடும் வழித்தடங்கள் அனைத்திலும் அரசுப் பேருந்துகளையே விட நடவடிக்கை ஏதும் எடுக்கப்பெற்றுள்ளதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: இதற்கான தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980—81-ல் புதிய வழித் தடங்களில் எத்தனை அரசு பேருந்துகள் விடப்பட்டுள்ளன? புதிய வழித்தடங்களில் அரசு பேருந்துகள் தான் விடப்படுமா? இல்லையென்றால் வழித்தடங்களை செப்பனிட்டு தரும் தனியாருக்கும் பேருந்துவிட அரசு அனுமதி கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980—81-ல் 400 புதிய வழித்தடங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் புதிதாக பேருந்துகளை விடுவதற்கு இருக்கின்றன. பாதைகளை செப்பனிட்டு கொடுப்பதைப் பொறுத்தவரை, நாம் ஏற்கனவே கருத்தைச் சொல்லி, யாரும் முன் வராத காரணத்தால் அது விடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித்தடங்களில் பேருந்துகளை விடுவதற்கு முயற்சி செய்கிற போது, ஏற்கனவே நம்முடைய போக்குவரத்து இருக்கும்படியான வழித்தடங்களில் தனியார் துறைப்பேருந்துகளும் ஓடிக்கொண்டிருக்கின்றது ; இப்படி போட்டியிட்டுக் கொண்டு ஓடுவதால் போதுமான வருவாய் இல்லாமல், 100 பயணிகளை மூன்று வண்டிகளில் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு ஆபத்தான நிலைமை இருக்கிறது. ஆகவே தனியார் துறையை இந்த வழித்தடங்களில் முற்றிலும் நீக்கி விடுவதற்கு அரசு முயற்சி செய்யுமா? இதுபற்றி சரியான கொள்கையை வகுப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10].

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இப்போதே ஒரு சரியான கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. பேருந்துகளைப் பொறுத்தவரையில் இனிமேல் தனியாரிடமிருந்து எடுப்பதை உடனடியாகக் கொஞ்சம் நிறுத்தி வைப்பதற்கு, தாற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆங்காங்கே பேருந்துகள் இல்லை என்று சொல்லப்படுகிற நிலைமை இருப்பதால் பேருந்துகளை போக்குவரத்துக் கழகங்கள் மூலமோ அல்லது அரசின் மூலமோ கொடுத்த பின்புதான் அப்படிப்பட்ட கோரிக்கைகளைப் பற்றி சிந்திக்க முடியும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, புதிதாகப் போடப்படும் வழித்தடங்களிலே அரசின் பேருந்துகளையே விட நடவடிக்கை எடுக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்



தார்கள். ஏற்கனவே தனியார் பேருந்துகளை விடக்கூடிய முறையிலே—அரசினுடைய பேருந்துகள் ஓடிக் கொண்டிருந்தாலும். அவர்கள் வழக்கு மன்றங்களிலே தடையைப்பெற்று ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் தனியார்கள் ஜன நெருக்கம் உள்ள இடங்களிலே கூட பல தடவைகள் பேருந்துகள் விடாமல் நிறுத்துகிறார்கள், சில தடங்களை மாற்றி பேருந்துகளை விடுகிறார்கள், இதனால் பொதுமக்களுக்குபாதிப்பு அதிகமாக ஏற்பட்டு இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்கள் சரியாக பேருந்துகளை விடாமல் இருந்தால் அவர்களுடைய அனுமதியை உடனடியாக ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நீதிமன்றத்திலே இருக்குமானால் நாம் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. நீதிமன்றம் தான் முடிவு எடுக்க வேண்டும். ஆனால் அரசாங்கத்தினுடைய அனுமதியில்லாமல் அவர்கள் ஒரு பேருந்தை 20 நாட்களுக்கு மேல் நிறுத்த முடியாது. 20 நாட்களுக்கு மேல் நிறுத்த வேண்டுமானால் அரசின் அனுமதியைப் பெற்றாக வேண்டும். அவர்கள் அனுமதியைப் பெறுகிறபோது போக்குவரத்துக் கழகமோ அல்லது அரசோ பேருந்துகளை விடுகிறது. உடனடியாக தனியார்களிடமிருந்து பேருந்துகளை எடுத்துவிட வேண்டும் என்பது அடிப்படையில் சில பிரச்சினைகளை உருவாக்கும். எத்தனையோ இடங்களிலே கிராமங்களிலே பேருந்துகள் விடப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பேருந்துகள் கொடுக்கக் கூடிய நிலைமை இல்லை, காரணம் தேவையான சேஸீஸ்கள் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தனியார்களிடமிருந்து நாம் எடுத்து அதற்காகச் செலவழிப்பது பொருத்தமாக இருக்காது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசு கிராமங்களிலே நிறைய பஸ்களை விட்டாலும் கூட, கிராமங்களிலே உள்ள ரோடுகள் சரியாக இருக்கின்றன என்று சம்பந்தப்பட்ட எஞ்சினியர் சர்டிபிகேட் கொடுத்தாலும் கூட அந்த ரோடுகளிலே பஸ்கள் விடப்படாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று சேஸிஸ் கிடைக்கவில்லை என்றும் போதுமான அளவுக்கு பஸ்கள் கிடைக்கவில்லை என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொன்னார்கள் நிலைமைகள் எப்படி இருந்தாலும் சேஸிஸை அதிகமாக உற்பத்தி செய்து எங்கே ரோடுகள் நல்ல முறையிலே இருக்கின்றனவோ அங்கே பஸ்களை விடுவதற்கு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : சேஸிஸ் கிடைக்கவில்லை என்பது மட்டும் காரணமல்ல, பணம் இல்லை என்பதும் ஒரு காரணம். உலக வங்கியும் பணம் கொடுப்பதற்கு தாமதித்துக்

கொண்டிருக்கிறது. அரசாங்கத்திடமிருந்து தேவையான அளவுக்கு பணம் வாங்குவது என்பதும் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதற்காக சில முடிவுகளை எடுக்க நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். கிராமங்களிலே பேருந்து வசதிகள் இல்லை என்ற நிலைமையை மாற்றியமைப்பதற்காக ஒரு குழுவை அமைத்து அதன் மூலமாக 3 ஆண்டுகளுக்குள்ளாக எல்லாக் கிராமங்களிலேயும் பேருந்து வசதிகளை ஏற்படுத்துகிற உணர்வோடு நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, புதிய வழித் தடங்களிலே பேருந்துகளை விடுகிறபோது போக்குவரத்துக் கழகங்களுக்கு அனுமதியை வழங்கி தனியார்களுக்கும் அதே வழித் தடங்களிலே மார்க் அடிப்படையிலே பேருந்துகளை விடுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அந்த மார்க் அடிப்படையில் வழங்குகின்ற முறையை மாற்றியமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? புதிதாகத்துவங்கப்படும் எல்லா வழித் தடங்களிலும் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை மட்டுமே விட வேண்டுமென்று அரசு முடிவு செய்யுமா என்பதோடு, இந்த அரசின் சார்பில் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியை ஓரளவோடு நிறுத்தத் தெரிய வேண்டும். கேள்வியும் வழித்தடம் மாதிரி போய்க்கொண்டிருந்தால் என்ன செய்வது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருடைய பேருந்துகளுக்குத்தான் அதிகமான வழித்தடங்கள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அந்தக் கருத்து முழுக்க முழுக்கத் தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், இப்பொழுது தனியார் வழித்தடங்களுக்குக் கொடுக்கின்ற சூழ்நிலையை இந்த அரசு மாற்றியமைத்திருக்கிறது ; தற்காலிகத் தடை விதித்திருக்கிறது. தற்காலிக அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்களுக்குத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அடுத்து, மார்க் அடிப்படையில் கொடுக்கப்படுவதை மாற்றியமைக்க வேண்டுமென்ற உத்தேசம் இல்லை. காரணம், கொஞ்சம் ஜனநாயக அடிப்படையில் அரசாங்கம் நடக்க வேண்டுமென்பதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.].



## 2. தகவல் கோரல்

### அ. மதுவிலக்கு சட்ட முன்வடிவு குறித்து சில பத்திரிகைகளில் வந்த செய்தி.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான விவரத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களுடைய கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றைய தினம் மதுவிலக்கு பிரச்சினை பற்றிய, மதுவிலக்கு சம்பந்தப்பட்ட ஒரு சட்ட முன்வடிவு அமைச்சரவர்களால் இந்த மாமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. அதில் மது விற்பதற்கான உரிமம் லைசென்ஸ் முறையிலேயா அல்லது ஏலத்திலேயா என்ற விவரங்கள் இல்லாமல் இருந்தாலும், நேற்று மாலை சில பத்திரிகைகளிலேயும், இன்று காலையில் சில பத்திரிகைகளிலேயும் லைசென்ஸ் முறைதான், ஏலம் விடுவது இல்லை என்ற முறையில் செய்தியாக வெளியிடப்பட்டிருக்கிறது. சட்டமுன் வடிவில் இல்லாத அந்த விவரத்தை, விவரம் இல்லாத சூழ்நிலை இருக்கும் பொழுது, அதைப் பற்றிய விவரத்தை, சட்டமுன் வடிவில் சொல்லாததைப் பத்திரிகைகள் செய்திகளாக வெளியிட்டிருக்கின்றன. இதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதைப் பற்றிய விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, பத்திரிகையிலே வந்தது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமுன்வடிவில் ஏலத்திலா இல்லையா என்று சொல்லப்படாமல் இருக்கும் பொழுது சட்டமுன்வடிவில் இல்லாததை உண்மைக்கு மாறாகச் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது சம்பந்தப்பட்ட சட்டமுன்வடிவு 10 ஆம் தேதி வருகிறது. அன்றைக்கு விளக்கமாகச் சொல்லிக் கொள்ளலாமே.

**திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவரவர்களே, எடுத்து வைக்கப்பட்ட பிரச்னைக்கு அமைச்சரவர்கள் இன்றைக்கு விளக்கம் சொன்னார்கள். ஆனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற மசோதாவைப் பத்திரிகைகள் வெளியிடக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால் கருத்துக்களை அவர்கள் உணரும் வகையில் விளக்கமாக வெளியிட்டிருப்பார்கள். அந்த விளக்கங்களை எல்லாம், நேற்றைய தினம் அந்தச் சட்டமுன் வடிவை எதிர்த்துப் பல பேர் பேசிய நேரத்தில் அமைச்சரவர்கள் சொல்லி இருப்பார்களேயானால் அந்தக் கருத்துக்களை வெளியிடுகின்ற

[திரு. க. அன்பழகன்] [1981 ஏப்ரல் 7

வாய்ப்பு அந்தப் பத்திரிகைகளுக்குக் கிடைத்திருக்கும். ஆனால் இப்பொழுது, அந்தப் பத்திரிகைகள் வெளியிட்ட கருத்து உண்மைக்கு மாறானது என்றும், அரசாங்கம் சொல்லாத கருத்தைத் திரித்து வெளியிட்டு விட்டன என்றும் சொல்வதில் அரசாங்கத்தின் பக்கம் அவ்வளவு நியாயம் இருப்பதாகத் தோன்றவில்லை. காரணம், இன்பரன்ஸ் என்ற முறையில் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்களே தவிர, அமைச்சர் ஒரு கருத்தைச் சொல்லி, அதற்கு மாறான கருத்துக்களை வேண்டுமென்றே அந்தப் பத்திரிகைகள் வெளியிட்டு விட்டதாகத் தோன்றவில்லை. நான் மசோதாவைப் படித்துப் பார்த்த அளவில் வேண்டுமென்று திரித்துப் போடப்பட்ட செய்தியாக அவைகள் தோன்றவில்லை. ஒரு வேளை அது, அரசாங்கம் விளக்காத காரணத்தினால் ஏற்பட்ட குறையாக இருக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்பரன்ஸ் என்று சொல்லி விட்டு எதையும் போட்டுவிடலாம் ; இன்பரன்ஸ் என்று எதற்கும் சொல்லலாம் : அதற்கு ஒரு வழிமுறை, கட்டுப்பாடு என்பது இல்லை. இது முக்கியமான பிரச்னை. சட்டத்திலே ஏலமா, லைசென்ஸா என்பது மிகவும் முக்கியமான பிரச்னை. அந்தச் சொல்லாமல் இருக்கும்பொழுது வேண்டுமென்றால் அதைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அது மட்டுமல்ல சட்டப் பேரவையில் நான் சொல்லாததை வெளியிலே கேட்டாலும் சொல்லக் கூடாது என்பது விதிமுறை என்பது நமக்குத் தெரியும். சட்டம் பற்றிய விவாதம் பத்தாம் தேதி வருகின்ற பொழுது சொல்கின்ற வரையில் பொறுத்திருந்திருக்கலாம். அல்லது கேட்டிருந்திருக்கலாம். சட்டமுன் வடிவிலே இல்லாவிட்டாலும் ரூல்ஸ்லே விளக்கமாக எல்லாம் போடப்படும் என்பதையும், எல்லோரும் நினைக்கின்ற வகையில், நல்ல முறையில் அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இன்னும் கூட, அரசாங்கத்தின் கொள்கையை ஒரு மசோதா வந்த பிறகும் கூட அதைச் சொல்வதற்குப் பின் வாங்குவதால்தான் இந்தக் குழப்பம் ஏற்படுகிறது. ஏனென்றால், மசோதாவைப் பார்க்கின்றபொழுது, பத்திரிகைகளைக் குற்றம் சாட்டுவதைவிட அரசு பொறுப்பேற்றுக் கொண்டு விளக்கம் சொல்லியிருக்க வேண்டுமென்பதை நான் இந்த அவைக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20].

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திலே கொண்டு வந்திருக்கின்ற திருத்தம் என்பது வேறு. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்னை வேறு. அது ரூலிலே வரக்கூடிய ஒன்று.



1981 ஏப்ரல் 7] [திரு. சி. பொன்னையன்].

நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது சட்டத்தினுடைய திருத்தங்கள். சட்டத்தினுடைய திருத்தங்களில் அது லைசன்ஸ் முறையா, ஏலம் முறையா என்பது வராது. அது ரூலில் வரும். விவாதத்தின்பொழுது, என்ன, என்ன ஆலோசனைகள் அவை சொல்கிறதோ, அவற்றை கருத்திலே கொண்டு பிறகு முடிவெடுக்கப்படும்.

## ஆ. பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு சட்டமன்ற நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு என்று சொல்லக்கூடிய வெளியீட்டிலே நேற்று நடந்த சம்பவங்களிலே முழுமையாக ஒரு கட்சியே விடப்பட்டிருக்கிறது. எங்கள் கட்சியின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பேசியது ஒன்றுமே வராமல், அதெல்லாம் விடப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? எப்படி விடுபட்டது? அவர் 15 நிமிடம் பேசியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விசாரிக்கிறேன். என்னுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் கொண்டுவந்தார்கள். அதைத் திருத்துவதற்காக ஏற்பாடுகளைச் செய்யும்படி என்னுடைய அலுவலகத்திற்கு ஆணை பிறப்பித்திருக்கிறேன்.

## இ. உறுப்பினர்களின் தொலைபேசி ஆண்டுக் கட்டணத்தை அரசு ஏற்பது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்மீது சென்ற முறை பேசுகிற பொழுது, உறுப்பினர்கள் வைத்திருக்கக்கூடிய தொலைபேசிகளுடைய ஆண்டுக் கட்டணத்தை, வாடகையை அரசாங்கம் செலுத்தும் என்று அறிவித்தார்கள். இதுவரை, அந்தத் தொகையைச் செலுத்தாமல், உறுப்பினர்கள் உடனடியாகச் செலுத்த வேண்டுமென்று நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்களே, அதை அரசு செலுத்துமா, அல்லது உறுப்பினர்கள் செலுத்த வேண்டுமா என்பதை இப்பொழுது அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர், மாண்புமிகு நிதியமைச்சரிடத்திலே, நேரடியாகக் கடிதம் எழுதிக் கொடுக்கலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : இது 6 மாதத்திற்கு மேலாகிறது. அதற்கு இன்னும் எஃபெக்ட் கொடுக்கவில்லையென்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் எதுவுமே
தெரிவிக்கின்ற நிலையிலே இப்பொழுது நான் இல்லை. மாண்பு
மிகு உறுப்பினர் அதுபற்றிய குறிப்புகளை என்னிடம் தரும்படி
யாகக் கேட்டுக்கொள்கிறேன். நான் என்ன,சொன்னேன், என்ன
முடிவெடுக்கப்பட்டது? என்னை மீறி நடக்கிற நிலைமை ஏற்படு
மானால், அந்தத் தடையை நீக்கி, அந்த முறை ஏற்படுவதற்கு
முயற்சி செய்யலாம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவ ள ்கள், பி. சொரணம்,
கே. ரமணி, ரா. உமாநாத், ஆர். கிருஷ்ணன், கே. ஆர்.
சுந்தரம், சு. பாலன், பெ. சு. திருவேங்கடம், என். எஸ். வி.
சித்தன், மு. அம்பிகாபதி, எஸ். சிவசாமி, பொ. உத்திராபதி,
டி. கே. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, மற்றும் ப. பொன்னு
ரங்கம் ஆகியோர் "வடசென்னையிலுள்ள பேசின் பிரிட்ஜ் அனல்
மின் நிலையத்தில் 6–4–81 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் சுமார்
ரூ. 1 கோடிக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாலும், இளநிலைப்
பொறியாளர் மற்றும் ஐவர் படுகாயம் அடைந்துள்ளதாலும்
மின் உற்பத்தி தடைப்பட்டுள்ளதாலும் அப்பகுதி மக்களிடையே
எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து, விவாதிக்க, பேரவையின்
இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும" என்ற தீர்
மானத் த மொழிய, என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்
துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்
தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி
கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
தலைவர் அவர்களே, சமீபத்திலே வட சென்னையில் இருக்கக்
கூடிய பேசின் பிரிட்ஜினுடைய அனல் மின் நிலையம் தீ பிடித்
திருக்கிறது. தீ பிடித்ததனுடைய விளைவாக ரூ. 1 கோடிக்கு
மேல் மெஷின்கள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அந்தத்
தீ பிடித்த உடனே, உடனடியாக, அதை அணைப்பதற்காக,
காலாகாலத்தில் செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படா
ததன் விளைவாக, தீ பரவலாக பரவி, ½ மணி நேரத்திற்குப்
பிறகு, தீயணைப்பு நிலையம் செயல்பட்டு, அதற்குப்பிறகு
தீ அணைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே,
பேசின் பிரிட்ஜிலும் அதைச் சுற்றுப் புறத்திலும் பல தொழிற்
சாலைகள் இருக்கின்றன. அந்த வட்டாரத்திலே அப்படிப்பட்ட
பெரிய தொழிற்சாலைகள் இருக்கிறபொழுது, ஒரு பெரிய தீ
அணைப்பு நிலையம் இருக்கிறதா, இல்லையா என்ற சந்தேகம்
கூடப் பலமாக ஏற்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, சமீ



பத்திலே எல்லா இடங்களிலும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டு வரு
கிற இந்த நேரத்திலே அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு, அதன்
காரணமாக சேதாரம் மாத்திரமல்ல, மெஷின்களும் பாழ்பட்டு,
மெஷின்களும் செயல்படாத நிலை ஏற்பட்டதன் காரணமாக,
மின் உற்பத்தி தடைப்பட்டதன் விளைவாக மேலும் மின் தட்டு
பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு அபாயம் ஏற்பட்டிருக்கிறது.
இன்னும் சொல்லப் போனால், மின்சார அமைச்சருடைய பார்வை
யிலே சொல்லப்போனால், அது மின்சாரத் தட்டுப்பாடு என்ற
நிலை மாறி, மின்சார நெருக்கடி ஏற்படக்கூடிய இக்கட்டான
நிலை ஏற்பட்டு, ஆகவே, அரசாங்கம் மின்சாரம் வழங்க முடியாத
நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அரசாங்கத்திற்கு ஒரு கெட்ட
பெயரை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே கூட, சில சதி
வேலைகள் ஏற்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் கூட ஏற்படக்
கூடிய ஒரு இக்கட்டான நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்
கிறது.

அங்கே ஏற்பட்ட இந்தத் தீவிபத்துக் காரணமாக, அங்கே
வேலை செய்து கொண்டு இருந்த, அந்தத் தீயை அணைக்க
முயன்ற ஒரு இளநிலைப் பொறியாளர் திரு. பாலசுப்பிரமணியம்
அவர்களும், மற்றும் நான்குபேரும் பாதிக்கப்பட்டு, மருத்துவ
மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சேதம் அதிகமாக
ஏற்பட்டு இருக்கிறது என்று அறிகிறோம். எல்லாவற்றிற்கும்
மேலாக, அந்தத் தீயணைப்புப் பணிகள் காலாகாலத்தில் மேற்
கொள்ளப்படாத காரணத்தால் அதில் ஏதாவது சதி வேலைகள்
இருக்குமோ என்கிற ஐயப்பாடும் எழுகிறது. அதைத் தவிர்க்க
வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் மிக விரிவாகப் பேச
வேண்டி இருக்கிறது. அதேபோல், பாதிக்கப்பட்டவர்களுக்கு
என்ன அடிப்படையில் நிவாரணம் தர இருக்கிறோம் என்பதைப்
பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது என்கிற காரணத்
தால், இதை அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது
குறித்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

* திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,
நேற்றையதினம் காலை 10½ மணி அளவில் சென்னை பேசின்
பிரிட்ஜ் மின் நிலையத்தில் உள்ள நான்கு ஜெனரேட்டர்களில்,
3-வது ஜெனரேட்டரின் டர்பைன் செக்ஷன் திடீரென்று தீப்பிடித்
துக் கொண்டதால், அங்கே பணிசெய்து கொண்டிருந்த 6 பேர்
கள் படுகாயம் அடைந்து, இன்றைய தினம் மருத்துவ மனையில்
இருந்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள்
அங்கேயுள்ள அதிகாரிகளின் கவனக் குறைவால் அடிக்கடி ஏற்
பட்டுக் கொண்டு இருக்கின்றன. சென்ற முறை இத்தகைய ஒரு
விபத்து ஓராண்டு காலத்திற்கு முன் ஏற்பட்டு, அதிலே 9 பேர்
உயிர் இழந்து இருக்கிறார்கள். அங்கேயுள்ள மெஷின்களை
அதிகாரிகள் சரிவரப் பராமரிப்பதில் கவனம் செலுத்தாதகாரணத்

தால் தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன என்று அங்கேயுள்ள தொழிலாளர்கள் எல்லாம் சொல்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கூட இதைப் பற்றிக் கேட்கிற நேரத்தில் அங்கேயுள்ள மெஷின்கள் எல்லாம் நீண்டகாலமாக வேலை செய்து கொண்டு இருக்கிற காரணத்தால் அங்கே பல மெஷின்கள் மாற்றி அமைக்க வேண்டிய நிலையில் உள்ளன என்று சொல்கிறார்கள். இப்படிபட்ட பழைய மெஷின்கள் இருப்பதால்தான் இங்கே அடிக்கடி இப்படிப்பட்ட நிலைமகள் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுகின்றன. நல்லகாலமாக அங்கேயுள்ள காற்று விசை நிறுத்தப்பட்டதால் அந்தத் தீ மேலே சென்று பரவாமல், அதை கட்டுப்படுத்தியதன் காரணமாக, அருகில் உள்ள குடிசைப் பகுதிகளுக்கு அந்த தீ பரவாமல் இருந்து இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை அடிக்கடி நிகழுமோ எந்த நேரத்தில் நம்முடைய குடிசைகள் தீக்கிரையாகுமோ என்கிற ஒரு பதட்ட நிலை அந்தப் பகுதியில் உள்ள குடிசைவாழ் மக்களிடையே இருக்கிறது. ஆகவே, அங்கேயுள்ள மெஷின்களை பழுதுபார்க்கவும், அல்லது புதிய மெஷின்களாக அவற்றை மாற்றியமைக்கவும் வழிவகை செய்ய மாண்புமிகு அமைச்சர் உடனடியாக அங்கே ஒரு குழு அமைத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கடந்த முறை இப்படிப்பட்ட விபத்து ஏற்பட்டு, 9 பேர் உயிர் இழந்த நேரத்தில், ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை என்ன? அந்த அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்கிற நிலைமைகளைத் தெரிவித்தால் தான் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க முன்கூட்டிய நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே, இன்றைக்கு அந்த மின் நிலையத்தில் தீ பிடிக்க என்ன காரணம் என்பதைக் கண்டறிய ஒரு குழு அமைக்க வேண்டியும், பக்கத்திலேயே பல குடிசைப் பகுதிகள் இருப்பதால், இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்படுவதால் அவர்கள் குடிசைகளும் இரவு-பகல் எந்த நேரத்திலும் தீ பிடிக்கக்கூடிய அபாயம் இருப்பதால், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தவிர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து விவாதிக்கவும், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—30)

* திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, நேற்றைய தினம் காலையில் சென்னையிலே நடைபெற்ற நிகழ்ச்சி ஒரு துரதிர்ஷ்டமான நிகழ்ச்சி என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். காலை 10 மணிக்கு ஏற்பட்ட பேசின்பிரிட்ஜ் அனல் மின்சார நிலைய தீ விபத்தில் அரசுக்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று செய்தி ஏடுகள் தெரிவித்திருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய பொது உடைமைக் கட்சித் தோழர் சொன்னதுபோல் விபத்துக்கு காரணம் என்ன ?



நர்ச வேலையா அல்லது வேறு காரணங்களா? இதற்கு முன்னால்-இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்-இதைப் போன்ற விபத்து ஏற்பட்டு, உயிரிழப்பும் பொருள் சேதமும் ஏற்பட்டு இருப்பதால் அங்கே இருக்கிற குறைபாடுகள் களையப்படாமல் இருக்கிறதா ? சரியான முறையில் அந்த மின் நிலையம் பராமரிக்கப்படுகிறதா? எதிர்காலத்தில் இந்த மாதிரி நடைபெறாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை எல்லாம் நாம் தெரிந்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நேற்று நடைபெற்ற விபத்தில் ஒரு இளநிலைப் பொறியாளரும் மற்றும் 5 பணியாளர்களும் பாதுக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்களுடைய நிலைமை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது போன்ற பிரச்சினைகள் எல்லாம் இன்றைக்கு எழுந்துள்ளன.

நேற்றைய தினம் என்னுடைய தொகுதிக்கு நான் சென்றிருந்த போது முன்னால் விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் ; இப்போது 3 மணி நேரம் தான் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். வறட்சி காரணமாக தமிழ்நாட்டில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை, குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்கிறபோது கிராமங்களில் இருக்கிற மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்கு ஏற்கெனவே 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்பட்டு வந்தது இப்போது 3 மணி நேரமாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அரசுத் துறையில் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வருகின்ற மாதங்களில் மின்சாரப் பற்றாக்குறை மிகக் கடுமையாக இருக்கும். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?. இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கும்போது பேசின்பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து சென்னை மாநகர மக்களுக்கு மட்டுமல்ல ; தமிழ்நாடு முழுவதிலும் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு பதட்ட நிலையை உருவாக்கியிருக்கிறது. ஆகவே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவரவர்களே, நேற்றைய தினம் பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையம் காலை 10 மணிக்கு தீ பிடித்து எரிந்திருக்கிறது. கடுமையாக எரிந்து, அதனுடைய சேதம் ஒரு கோடி ரூபாய் என்று அரசு கருதினாலும் கூடுதலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 6 பேர்கள் படுகாயம் அடைந்திருக்கிறார்கள் ; அவர்கள் இன்றைக்கு மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அனல் மின்சார நிலையத்தில் தீ பிடித்து, அதன் விளைவாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு, இப்போது இருக்கிற மின்சார நெருக்கடியை மேலும் மோசமடையச் செய்திருக்கிறது.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 ஏப்ரல் 7

இப்போதே தொழிற்சாலைகளுக்கு காலம் நிர்ணயித்து மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த நேரத்தில் மேலும் மின் பாதிப்பு, மின் துண்டிப்பு என்றால் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு 'லே ஆஃப்', வேலை இழப்பு போன்றவை வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல விவசாயிகளுக்கு சரியாக மின்சாரம் கிடைக்கவில்லை. நானும் தோழர் திரு. உத்திராபதி அவர்களும் திருத்துறைப்பூண்டிக்கு சென்றிருந்தோம். அங்கே இரவு 2 மணிக்கு சில பெண்கள்வந்தார்கள். சினிமாவுக்கு போய்விட்டா வருகிறீர்கள் என்று கேட்டபோது அவர்கள் நெல் அரைத்துக் கொண்டு வருகிறோம்; என்று சொன்னார்கள். இரவு பத்து மணிக்கு மேல்தான் நெல் அரைப்பதற்கு மின்சாரம் கொடுக்கிறார்கள். இதன் காரணம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும்.

அனல் மின்சார நிலையங்களில் தொடர்ந்து இப்படி ஏற்படுகிறது. வெஸ்ட் பெங்காலில் கூட சில மின்சார நிலையங்களில் சதி வேலை நடந்து, பவ்வர் பிரேக் செய்யப்பட்டிருக்கிறது. அந்தமாதிரி இங்கும் இருக்கிறதா? நான் ஏற்கெனவே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்; அதுபற்றிய விவரத்தைச் சொல்லிவிட்டால் சபாநாயகர் ஒரு வேளை அனுமதி மறுத்துவிடுவார் என்பதால் ஜாக்கிரதையாக அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றிச் சொல்லாமல் இதிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

பேசின்பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தில் இவ்வளவு கடுமையான சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றால் இது என்ன காரணத்தால் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி தீவிரமாக நாம் ஆராய வேண்டும். அனல் மின்சார நிலையங்களுக்கு நிலக்கரி பற்றாக்குறை இருப்பதால் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுகிறது. நிலக்கரி கொண்டு வர வாகன்கள் இல்லை என்று வாகன் கனக்ஷன் இல்லை என்று ஒரு பக்கம் சொல்லப்படுகிறது. வாகன் இருக்கிறது; மேலும் அனுப்புகிறோம் என்று மத்தியிலே இருக்கிறவர்கள் சொல்கிறார்கள். வாகன் அனுப்புகிறோம் என்றால் 'பிளேய்னில்' வரும்போல் இருக்கிறது. வாகன் பிளேயினில் வரும், அப்புறம் நிலக்கரி வரும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். உண்மைக்கு மாறான தகவலைச் சொல்கிறார். வாகன் நிறைய இருக்கிறது என்று மத்திய அமைச்சர் சொல்லியிருக்கிறார். இவர் இல்லை என்கிறார். அது ஒரு பக்கம் இருந்தாலும் இப்படிப்பட்ட பிரச்சினைகளில் எல்லாம் கூட மத்திய அரசை இழுக்க வேண்டிய அவசியம் என்ன? அது சரிதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாகன் ரெயில்வே துறையைப் பற்றியது. திரு. அம்பிகாபதி பேசட்டும்.



1981 ஏப்ரல் 7]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் அடிக்கடி இதைப்போல மத்திய அரசுக்கு கச்சைக் கட்டிக் கொண்டு வருகிறார்.....

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இதை ஏன் அனுமதிக்கிறீர்கள்? இப்படி அவர்கள் பேசுவதை அனுமதித்தால் எங்களையும் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே எரிந்துபோய் இருக்கின்றது. மேலும் ஏன் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும்?

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கரித் தட்டுப்பாட்டினால் ஏற்கெனவே மின்சார உற்பத்தி...

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, போதிய நிலக்கரி கிடைக்கவில்லை என்று சொல்கின்றபோது இதிலே என்ன objection இருக்கின்றது? We have got every right to get clarification.

Thiru N.S.V. CHITTHAN : This is not the proper time.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்ன உரிமை உறுப்பினர்களுக்கு உண்டு. ஆனால் அதை எந்த நேரத்திலே சொல்வது என்பதுதான் பிரச்சினை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மத்திய அரசிடத்திலே இருந்து நிலக்கரி கிடைத்தாலும், வேகன்கள் கிடைப்பதில்லை, வேகன்கள் கிடைத்தாலும் அது வந்து சேருவதில், தாமதம் ஏற்படுகின்றது. அதனால் எண்ணூர் அனல் மின் நிலையத்திலே மின் உற்பத்தி தாமதப்படுகின்றது என்று நான்கைந்து நாட்களுக்கு முன்னாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மழைக் காலத்திலேயும் நிலக்கரி அனுப்ப வேண்டும், மற்ற காலங்களிலே அவர்கள் அனுப்பினால் அதைச் சேமித்து வைத்துக் கொள்ள முடியாது, ஆகவே மத்திய அரசுக்கு பொறுப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறிக்கை கொடுத்திருக்கின்ற இந்த சூழ்நிலையில் மின் நிலையங்களில் தீப்பற்றி எரிகின்ற சூழ்நிலை வேறு ஏற்பட்டால் நிலைமை என்னவாகும்? எப்படி தமிழக மக்களுக்கு மின்சாரம் அளிக்க முடியும். ஆகவே ஒரு பதட்டமான நிலை, ஒரு கொந்தளிப்பான நிலை இருக்கின்றது. மின்சாரம் வருமா, வராதா, அதன் மூலம் விவசாயம் நடக்குமா நடக்காதா என்கின்ற கொந்தளிப்பான நிலைமை இருப்பதால் இது குறித்து விவாதிப்பதற்கு, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1981 ஏப்ரல் 7

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சுமார் காலை 10½ மணி அளவில் பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டத்திலே உள்ள மூன்றாவது யூனிட் என்று அழைக்கப்படுகின்ற ஒரு 30 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட டர்கோ ஆல்டர் நேட்டர் சற்றும் எதிர்பாராத வகையிலே தீப்பிடித்தது. அந்த டர்கோ ஆல்டர்நேட்டர் 30 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக இருந்தாலும் 20 மெகாவாட் உற்பத்தியை செய்து கொண்டிருந்தது. ஆனால் அதன் உற்பத்தித் திறனை ஏற்று வதிலேயும் இறக்குவதிலேயும் இருந்த சிரமத்தைப் போக்கு வதற்காக நீராவி வால்வினை மூடுவதற்கு அங்கே உள்ள அலுவலர் கள் முயற்சித்து இருக்கிறார்கள். அந்த நீராவி வால்வை மூடுகிற போது அந்த நீராவியானது வேகமாக டர்பைனுக்குள்ளே நுழைந்துஅது பல்லாயிரம் ரெவலூசன்ஸ் என்று சொல்கிற ஓரு நிலைமைக்கு மிகப் பெரிய வேகத்தை அடைந்து அந்த இயந்திரமானது வெடித்து அதிலே இருந்த பொருட்கள் சிதறி விட்டன. ஆக இது எப்படி இந்த அளவுக்கு நீராவி தப்பித்து போய் அந்த இயந்திரத்தைச் சுழலச் செய்து இவ்வளவு பெரிய சேதத்தை விளைவித்திருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த இக்கட்டான விபத்திலே நல்ல வேளை எந்தவித உயிர் சேதமும் இல்லை. நேற்றையதினம் நானும் பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைச் சென்று பார்த்தேன். அந்த இயந்திரம் எப்படி சேதம் அடைந் திருக்கின்றது என்பதையும் நேரிலேயே பார்த்தேன். அதற்குப் பிறகு ஸ்டான்லி மருத்துவமனையிலே சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டிருக்கின்ற தொழிலாளர்களையும் நான் சென்று பார்த்தேன். சுமார் 7 பேர் இதிலே காயமுற்று இருக்கிறார்கள். 6 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பலத்த காயங்கள் ஒன்றும் இல்லை. நான் மருத்து வரையே நேரிலே விசாரித்தபோது கூடிய சீக்கிரத்தில் அவர்கள் குணம் அடைந்து திரும்பி விடுவார்கள் என்றும்; எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நல்ல செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அவசியத்தைப் பற்றி பேசுகிற போது இந்த இயந் திரம் சேதம் அடைந்ததன், காரணமாக சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று குறிப்பிட்டார் கள்.

[முற்பகல் 10–40]

அந்த இயந்திரமானது 1958-ல் நிறுவப்பெற்றது. அப்போது அதை 57 லட்சம் ரூபாய்க்கு வாங்கினோம். இன்றைக்கு அதனுடைய புக் வேல்யூ தேய்மானம் ஆகியவை போனபிறகு- புக் வேல்யூ என்று பார்க்கிறபோது 8.4 லட்சம் ரூபாய்தான். சாதாரணமாக இத்தகைய இயந்திரங்கள் 25 ஆண்டுகள்வரை





சர்வீஸில் இருக்க வேண்டும். 1958-ல் வாங்கப்பட்டது என்று சொல்கிறபோது 22 ஆண்டுகள் வரைதான் இயங்கி யிருக்கிறது. 25 ஆண்டுகள் பணிபுரியவேண்டிய இயந்திரம் 22 ஆண்டுகள் தான் பணிபுரிந்திருக்கிறது. அது மட்டும் அல்ல; வெடித்து விடுவதற்கான இன்ஷ்யூரன்ஸும் செய்திருக்கிறோம். ஆகையினால் மிகப்பெரிய அளவு இழப்பு என்று கருத தேவையில்லை. ஆனால் அதே இயந்திரத்தை இன்றைக்கு வாங்க வேண்டுமென்றால் 2 கோடி ரூபாய் ஆகும். இழப்பு என்று சொல்கிறபோது 8.4 லட்சம் ரூபாய்தான். அந்த இயந்திரத்தைப் புதிதாக வாங்கவேண்டியிருந்தால் 2 கோடி ரூபாய் ஆகும். ஆனால் நல்ல வேளையாக அத்தகைய இயந்திரம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை.

ஏனென்றால், இந்த இயந்திரம், அதைப்போன்று வேறு இரண்டு இயந்திரங்களையும் சேர்த்து மாற்றிவிட்டு, ஒரு 110 மெகாவாட் உற்பத்தி திறன்கொண்ட ஒரு இயந்திரத்தை நிர்மாணிக்க வேண்டும் என்றுசொல்லி, நவம்பர் மாதம் 1980 ஆம் ஆண்டிலேயே மத்திய அரசிற்கு ஒரு திட்டத்தை அனுப்பியிருக்கிறோம். ஏனென்றால் 30,35 மெகாவாட் திறன் என்று சொல்கிறபோது, பொருளாதார ரீதியிலேயும் பலன் அளிப்பதில்லை, போதுமான மின் உற்பத்தியும் தருவது இல்லை. ஆகையயினால் இந்த இயந்திரத்தையும், இதை போன்ற இன்னும் 2 இயந்திரங்கள் 15 மெகாவாட் திறன் கொண்டவைகள் இவைகளை மாற்றிவிட்டு அவற்றிற்கு பதிலாக 110 மெகாவாட் வேண்டும் என்று கேட்டு நவம்பர் மாதத்திலேயே கருத்துரு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசும் அதை பரிசீலனை செய்து வருகிறார்கள். ஆகையினால் அந்த யூனிட்டை நாம் வாங்கவேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் அதே நேரத்தில், சுமார் 20, அல்லது 25 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கிடைத்துக் கொண்டிருந்தது. இன்றைக்கு கிடைக்காமல் போய்விட்டது என்ற நிலைமை யையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைப் பொருத்தவரையில், அங்கே இன்னொரு யூனிட் இருக்கிறது. 7-வது யூனிட் என்று ஒன்று வைத்திருக்கிறோம். அதற்கு இப்போது போதுமான அளவு நீராவி கிடைக்காத தினால் சும்மா இருந்துக் கொண்டிருக்கிறது. ஆக்வே, 110 மெகாவாட் சேங்ஷன் கிடைக்கிற வகையில், நாம் சும்மா இருக்கிற இந்த யூனிட்டை பயன்படுத்திக் கொள்ளலாம். இருந்தாலும் கூட மொத்தத்தில் மின் இழப்பு என்று சொல் கிறபோது, பெரும் அளவு பாதிக்காது, 60 மெகாவாட் அளவு சாதாரணமாக பெற்று வந்த இந்த பேஸின்பிரிட்ஜ் பிராஜக்டிலிருந்து, 50 மெகாவாட் கிடைக்கக் கூடும் என்று எதிர் - பார்க்கப்படுவதால் கிட்டத்தட்ட 10 மெகாவாட்தான் இதனால் நமக்கு நஷ்டம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்திற்கான காரணங்கள் என்ன? இங்கே
மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, ஏற்கனவே
இதைப்போல விபத்து நடைபெற்றிருக்கிறது. அது சம்பந்த
மான அறிக்கையும் அரசாங்கத்திற்கு வரப்பெற்றிருக்கிறது.
அந்த அறிக்கையிலே, அது ஒன்றும் சதிவேலை இல்லை
என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள்
தேவைப்பட்டால் அந்த அறிக்கையை கேள்வி மூலமோ,
அல்லது வேறு ஏதாவது கோரிக்கைகள் வைத்தோ கேட்டு
பெற்றுக் கொண்டு பார்த்துக் கொள்ளலாம். இந்த விபத்தைப்
பொருத்த அளவில் கூட சதி வேலையா என்ன என்றெல்லாம்
ஆராய வேண்டியிருக்கிறது. நிச்சயமாக சதி வேலை இல்லை.
வால்வு மூடியிருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்
கள். ஆனால் அது சரியாக மூடப்பெறவில்லை என்பதுதான்
இந்த விபத்திற்கு காரணம் என்பது மேலெழுந்த வாரியாகத்
தெரிகிறது. என்றாலும், அதைப்பற்றி விசாரித்து அறிந்து
இந்த மாதம் 15 ஆம் தேதிக்குள் அறிக்கை கொடுக்கப் பெற(
வேண்டும் என்று 3 சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர்களை
கொண்ட குழு ஒன்றை அரசாங்கம் மின் வாரியத்தின் மூலமாக நிய
மிக்க ஏற்பாடு செய்துள்ளது. திரு. சின்னசாமி திரு. நரசிம்மன்
திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூன்று சூப்பிரண்டெண்டிங் என்ஜினி
யர்களை கொண்ட குழு ஒன்றை இந்த விபத்து எப்படி நடந்தது
என்பதைப்பற்றிய விவரங்களை கண்டறிந்து இந்த மாதம் 15 ஆம்
தேதிக்குள் அறிக்கை தரவேண்டும் என்று சொல்லி,
மின்வாரியம் ஏற்கனவே அமர்த்தியிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் த. ல. ம)

ஆகையினால் மின் இழப்பை பொருத்த அளவிலே நமக்கு
மிகப் பெரிய அளவில் பாதிப்பில்லை. பொருளாதார இழப்பு
என்று சொல்கிறபோதும், மீண்டும் அந்த வாங்கவேண்டிய
அவசியம் இல்லாததால் பாதிப்பு கிடையாது. அதேபோல
நல்ல வேளையாக உயிர் சேதமும் ஏற்படவில்லை. பாதிப்பு
அடைந்த தொழிலாளர்களுக்கு ஏதேனும் நிவாரணம் தர
முடியுமா என்று கேட்டார்கள். அதைப்பற்றி நிச்சயமாக
அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஆகையினால் ஏதோ "தலைக்கு வந்தது
தலைப்பாகையோடு போயிற்று" என்று சொல்வார்களே,
அதைப்போல இந்த விபத்து மிகப் பெரிய அளவில் சேதத்தை
விளைவிக்காமல் சென்ற வகையில் நாம் நிம்மதி அடையலாம்
என்று எடுத்துச் சொல்லி, இங்கே 3 மணி நேரத்திற்குத்
தான் மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்று
மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி
அவர்கள் பேசுகிறபோது இரவு 2 மணிக்கு வருகிறார்கள் என்று
சொன்னார்கள். ஒரு வேளை செகண்ட்ஷோ விட்டு வருகிறார்



களோ என்று கேட்கிறபோது அரிசி ஆலையிலிருந்து வருகி
றோம் என்று தாய்மார்கள் சொன்னார்கள் என்றார்கள்
ஆக, எப்படியோ பயனுள்ள வேலைகள் நடக்கின்றன
என்பது இதிலிருந்து தெரிகிறது. என்ன இருந்தாலும்
கிராமப்புறங்களில் ஆறு மணி நேரம் சப்ளை தவறாமல்
கிடைப்பதற்கு தேவைப்பட்டால் தொழிற்சாலைகளுக்கு இருக்
கிற மின்சாரத்தை குறைப்பதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை
எடுக்குமே தவிர எந்தக் காரணத்தைக் கொண்டும் கிராமப்
புறங்களில் இருக்கிறவர்களுக்கு அப்படிப்பட்ட பாதகம்
ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வோம் என்று எடுத்துச்
சொல்லி இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து
விவாதிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை
தலைவர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு வி வி சுவாமிநாதன்:
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்
பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்
தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால்,
இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்

### கோயம்புத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி ஊழியர்கள் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :
திருவாளர்கள் எம். ஆறுமுகம் மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்
பன், கு. ரமணி, கே. ஆர். சுந்தரம், எம் செல்லமுத்து,
ஏ. டி. குலசேகர், என். வி. என். சோமு, இரா. தாமரைக்கனி,
ஆர். நவநீதகிருஷ்ணன் பாண்டியன், எஸ். என். இராமசாமி,
ப. தீர்த்தராமன், என். எஸ். வி. சித்தன், மா. சின்னராஜ்,
கோவைத்தம்பி, வேடசந்தூர், வி. பி. பாலசுப்பிரமணியன்
ஆகியோர். ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானங்கள்
கொடுத்திருக்கிறார்கள். திரு. எம். ஆறுமுகம் இதை மாண்புமிகு
கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வருவார்.

**திரு. எம். ஆறுமுகம் :** பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, "கோயம்பத்தூர் சிந்தாமணி சிறப்பு அங்காடி
ஊழியர்கள் வேலை நிறுத்தம் குறித்த" அவசரப்பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு-
சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்.

[1981 ஏப்ரல் 7

அறிக்கை.

கோவை கூட்டுறவு சிறப்பங்காடி உட்பட கோவை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனை சங்கத்தில் பணிபுரியும் சிப்பந்திகள் நகரஈட்டுப்படி உயர்வு, பஞ்சப்படி உயர்வு, வீட்டு வாடகைப்படி உயர்வு கேட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாளில் இருந்து வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

(2) சுமார் 1,400 ஊழியர்கள் இந்த சங்கத்தில் பணி புரிகிறார்கள். இந்த ஊழியர்களுக்கு 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாளில் இருந்து மாதம் ரூ. 90 ஊதிய , உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் அச் சங்கத்திற்கு ஆண்டு தோறும் ரூபாய் 20.39 இலட்சம் அதிகப் படியான செலவு ஆகின்றது. 1979 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் அன்று தொழில் தகராறு சட்டத்தின் கீழ் ஏற்பட்ட மூன்று ஆண்டிற்கு அமுலில் இருக்கக்கூடிய ஒப்பந் தத்தின்படி தொழிலாளர்கள் 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதி வரையில் எவ்வித கோரிக்கைகளும் முன்வைத்தல் கூடாது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடவும். கூடாது. ஆகவே இவ்வேலை நிறுத்தம் சட்ட விரோதமாகும். இதை தொழிலாளர் சங்கங்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(3) 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் தேதி அன்று கோவை துணை தொழிலாளர்கள் நல ஆணையர் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தையின் போது சங்க நிர்வாகத்தின் கருத்தை தொழிலாளர் சங்கத்திற்கு எடுத்துக் கூறி துணை ஆணையாளர் அவர்கள் தொழிலாளர் சங்கங்களை 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நளிால் இருந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாமெனவும், 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் தேதி அன்று பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். ஆனால், தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் தேதி அன்று நடந்த பேச்சு வார்த்தையின்போது வேலை நிறுத்தம் சட்ட விரோத மென்பதாலும், மேலும் பேச்சுவார்தைகளுக்கு வாய்ப்பிருப்ப தாலும் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு வேலையில் சேரும்படி தொழிலாளர்கள் நலத்துறை துணை ஆணையாளர் கேட்டுக் கொண்டார். அவர்கள் அதை பொருட்படுத்த வில்லை. வேலை நிறுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

(4) இச்சங்கத்தின் தனி அலுவலர், 50 எழுத்தர்கள், 90 விற்பனையாளர்கள் மற்றும் 60 உதவியாளர்களை நியமனம் செய்வதற்கான நேர்முக தேர்வில் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் தேதி அன்று காலை 11 மணியளவில் கலந்துகொள்ளும்படி பத்திரிக்கைகளில் விளம்பரம் செய் துள்ளார்.



1981 ஏப்ரல் 7] [திரு. சி. பொன்னையன்]

(5) 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாள் அன்று காலை 11—30 மணியளவில் நேர்முகத் தேர்வுக்கு வருபவர்களை தடை செய்ததற்காக நான்கு பெண்கள் உள்பட 126 ஊழியர்கள் கைது செய்யப்பட்டு, நான்கு பெண்கள் தவிர 122 பேர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். அன்றைய தினம் 641 பேர்களை நேர்முகத் தேர்வு செய்து தகுதியுள்ளவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. ஏனைய கூட்டுறவு சங்கங்களின் தொழி லாளர்களின் ஊதியத்துடன் ஒப்பிடும்போது கோவை மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனை சங்கத் தொழிலாளர்கள் அதிகமாகவே ஊதியம் பெறுகிறார்கள்.

(6) இச்சங்கம், 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரையில் ரூபாய் 28.18 இலட்சம் நட்டம் (Tentative) அடைந்து இருக்கிறது. ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற் பதனால் மறுபடியும் இச்சங்கத்திற்கு ஆண்டுக்கு ரூபாய் 25 இலட்சம் அதிகச் செலவு வரும். அது சங்கத்தின் திறனுக்கு அப்பாற்பட்டதாகும். அதுமட்டுமல்லாது ஊழியர்கள் கோரும் நகர ஈட்டுப்படி வேறு எந்த கூட்டுறவு மொத்த விற்பனை சங்க ஊழியர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. மேலும் முன்பு ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரையில் அமுலில் உள்ளது.

(7) கோவை விநியோக விற்பனைச் சங்கத்தின் மூலம் 71 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளும் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைகளும் தங்களுடைய தேவைகளைப் பெற்று வந்தன. இந்த வேலை நிறுத்தத்தால் நுகர்வோர் நலன் பாதிக்கப்படாமல் இருக்க இந்த 71 பண்டகச் சாலைகளில் 62 பண்டகசாலைகளை கோவை, பொள்ளாச்சி, திருப்பூர் மற்றும் சேலத்தில் உள்ள பிற கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 9 கூட்டுறவு பண்டகசாலைகளை ஈரோடு கூட்டுறவு மொத்த பண்டகசாலையுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய அறிக்கையில் சொல்லியிருக்கக்கூடிய கருத்துகள் உண்மையாகவே இருக்கின்றன. தற்போது சிந்தாமணி சிறப்பு அங்காடியில் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது என்றால் சாதாரண மாக வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள அல்ல. சிந்தாமணி சிறப்பு அங்காடியில் இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லக்கூடியவர்களால் ஏவப்பட்டு அங்கே வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. இங்கே இதைச் சொல்கிறநேரத்தில் வேலை நிறுத்தம் செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு எதிராக சொல் வதாகக் கருதக்கூடாது. அங்கே நடைபெறுகிற வேலைநிறுத்தப்

அந்தக் கூட்டுறவு சிறப்பங்காடியில் நடைபெற்றிருக்கக் கூடிய ஊழலை மறைப்பதற்காக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சிந்தாமணி சிறப்பங்காடியில் இருக்கக்கூடிய பல பேர்கள் இந்த ஊழல் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், அந்த அங்காடியில் பணி புரிந்த செயலாளர் என்று சொல்லக் கூடியவர் தற்போது தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவரது தூண்டுதலின் பேரில்தான் அங்கிருக்கக் கூடிய பர்சேஸ் ஆபீஸர், இன்னும் சம்பந்தப்பட்டவர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு சாதாரண தொழிலாளர்களும் பாதிக்கக்கூடிய வகையில் செய்திருக்கிறார்கள். எனவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த கூட்டுறவு சிறப்பங்காடியில் இருக்கக்கூடிய ஊழல் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அனுப்பியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஸ்பெஷல் ஆபீஸர் என்று சொல்லக்கூடியவர்களும் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்த ஊழலைப் போக்காமல் இந்தியாவில் முன் உதாரணமாக, விளங்கக்கூடிய கூட்டுறவு சிறப்பங்காடிகளை திறமையாக நடத்த வேண்டுமென்றால் அதில் சிரமம் இருக்கிற காரணத்தால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது. அந்த ஊழல் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நபர்கள்மீது இந்த அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் இந்தப் போராட்டம் சட்ட ரீதியான போராட்டம் அல்ல. காரணம், இந்த சிந்தாமணியில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு 1—7—1979 ஒப்பந்தம் கையெழுத்தாகி 30—6—1982 வரை அது அமலில் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கிடையில் அவர்கள் இந்தப் போராட்டத்தை தற்போது துவங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஊதிய உயர்வு வேண்டும் என்று, டி. ஏ. உயர்வு வேண்டும் என்று சொல்லி சில, அடிப்படைப் பிரச்னைகள் எழுப்பப்பட்டன.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் சுட்டிக்காட்டியதுபோல், ஆங்கு முறைகேடுகள் நடந்து, கிட்டத்தட்ட 7, 8 மாதங்களுக்கு முன்னால் நான் கோவைக்குச் சென்றிருந்தபோது, பொது மக்களிடமிருந்து மனுக்கள் வரப்பெற்று, அவைகள் அரசுக்கும் வரப்பெற்று, அதன் அடிப்படையில் திடீர் சோதனையிடப்பட்டு, அதிலே சில ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்



பட்டிருக்கிறது. தொடர்ந்து நல்ல லாபத்திலே இயங்கிவந்த சிந்தாமணி சிறப்பங்காடி அதிக நட்டத்தில் இயங்குவதற்குக் காரணம், ஆங்கு ஸ்டாக் டெபிசிட் என்ற பெயரால் மிஸ் அப்ரோப்பிரியேஷன் போன்ற ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போராட்டம் என்ற அளவிலே அல்லது எந்த வித்த்திலும் அவர்கள் ஊழலிலிருந்து தப்புவதற்கான எண்ணம் இருக்குமானால், அதற்கு எந்த அளவும் அரசு அனுமதிக்காது, கடும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஊழல் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் போராட்டத்திலே முக்கியமான ஒரு அம்சம் என்னவென்றால், அங்கே ஏற்கனவே ஒரு தனியார் நிறுவனம் நடத்தி வந்த இந்த கூட்டுறவு சிறப்பு அங்காடியை இப்போது தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள செயலாளர், மீண்டும் முன்உதாரணமாக, கூட்டுறவுக்கு களங்கம் ஏற்படுகின்ற முறையிலே, தொடர்ந்து அந்த நிறுவனம் நட்டத்திலே ஓடும் முறையிலே, அது தனியார் கைக்கு எப்படியாவது கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், இப்படிப்பட்ட தூண்டுதலின் பேரிலே நடவடிக்கை எடுத்து, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், சிமெண்ட் ஊழலில், இன்னும் இருக்கக்கூடிய பாக்கிங் கோடவுன் இருக்கக்கூடிய பகுதியிலே உள்ள ஆபீசர்கள், பர்சேசிங் ஆபிசர்கள், இன்னும் பல உத்தியோகஸ்தர்கள் எல்லாம் மிகப் பெரிய அளவில் இந்த ஊழலிலே சம்பந்தப்பட்டிருப்பார்களேயானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை வைத்து கூட்டுறவு நிறுவனம் தமிழகத்திலே ஒரு முன் உதாரணமாக விளங்குவதற்கான முறையிலே அதைப் பரிசீலிப்பதற்கு, அப்பேர்பட்ட நபர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு, வேலை நீக்கம் செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அங்கே சிமெண்ட், மற்றும் சரக்குகள் குறைப்பு போன்ற குற்றச்சாட்டுகள் அரசுக்கு மனுக்களாக வந்தபிறகு, இங்கிருந்து அடிஷனல் ரிஜிஸ்திரார் திடீரென பிரத்தியேகமாக ஒரு ஸ்பெஷல் ஸ்குவாட் மூலமாக அனுப்பி, திடீர் சோதனையிட்டுத் தான் அங்கே கிட்டத்தட்ட 8,000 ரூபாய் மதிப்புள்ள சிமெண்டில் தவறு நடந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 10 இலட்சம் ரூபாய் வரை கடந்த 5, 6 ஆண்டுகளாக ஸ்டாக் டிபிசிட் என்ற பெயரால் மிஸ்-அப்ரோப்ரியேஷன் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று ஏற்கனவே நான் இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். அங்கே மருந்துகளை

[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 7

வெளியே கொண்டுவந்த, வெளியே உள்ளவர்களுடன் தொடர்பு கொண்டு. சிலர் மருந்து கடைகளை ஆரம்பிக்கக்கூடிய அளவிற்கு தவறுகள் நடத்தியதால், இந்தச் சிந்தாமணி அங்காடி நஷ்ட நிலையில் இயங்கி வந்திருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எண்ணப்படி, கடுமையான நடவடிக்கை தொடரப்படும், எந்த விதத்திலும் தளர்த்தப்பட மாட்டாது.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், இதுபோன்று தமிழகத்திலே பல்வேறு சிந்தாமணி சிறப்பங்காடிகளிலே எல்லாம் அதிகாரிகள் தவறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில், இந்த கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய சிந்தாமணி சிறப்பங்காடி சிறப்பாக செயல்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த பல தினங்களாக வேலைநிறுத்தம் நடைபெறுவதால், உடனடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு தொழிலாளர்கள் நலனைக் கருதி, உடனடியாக இந்த சிந்தாமணி சிறப்பங்காடியைத் திறப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்கள் வினா, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் வினாவிற்கு சற்று மாறுபட்டிருக்கிறது. தொழிலாளிகள் தங்கள் கோரிக்கைகள் சம்பந்தமாக 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இந்தச் சிந்தாமணி சிறப்பங்காடி தொடர்ந்து இருந்து வருகிறது. நஷ்ட நிலைக்கு காரணம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அங்குள்ள பணியாளர்களும், மற்றும் சிலரும் நட்டத்தில் நடத்தி ரெக் கூடிய அளவில் சில தவறுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள என்ற பொருள்பட சுட்டிக்காட்டினார்கள். அனைத்தையும் கருத்தில் கொண்டு, அனைத்தையும் ஆய்ந்து அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணியில் ஊழல்கள் நடந்து, அத்தியாவசியப் பொருளான சிமெண்ட் திருட்டுப் போனதைப் பற்றி பொதுமக்களால் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, அந்த ஊழலிலே ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நல்லதுதான். பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள், அங்கே வேலை செய்யும் ஊழியர்கள், மற்றும் சகலவிதமான ஊழியர்கள் அனைவரும் சிறந்த முறையில் சிறப்பங்காடியை நடத்திய அந்தத் தொழிலாளர்களை பாதுகாக்கும் முறையில். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் இது. அப்



1981 ஏப்ரல் 7] [திரு. கு. ரமணி]

போதுதான், கெட்டவர்களை நல்லவர்களிடமிருந்து பிரித்து, இந்த ஸ்தாபனத்தின் பெயரிலே மக்களுக்குச் சேவை செய்ய முடியும். அந்த முறையில் அமைச்சர் அவர்கள் சொல்லும் போது, இந்த அறிக்கையிலே, 3 ஆண்டுகளுக்காக செய்யப்பட்ட அந்த ஒப்பந்தம் 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதி முடிவடைவதால், இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. வேலைநிறுத்தத்தில் ஈடுபடவும் கூடாது என்று அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒப்பந்தம் செய்கிற காலத்திலே 3 வருட காலத்திற்கு எந்தவிதமான வேலை நிறுத்தமும் செய்ய மாட்டோம் என்றும், எந்தவிதமான கோரிக்கைகளும் முன்வைக்க மாட்டோம் என்றும் சாதாரணமாக நல்ல தொழிற்சங்கங்கள் ஒப்பந்தம் செய்யமாட்டார்கள். ஒப்பந்தத்தில் அப்படி வாசகங்கள் இருக்கிறதா என்று தெரியாது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் தெரிவிக்க வேண்டும். அந்தக் கோரிக்கைகளைப் பற்றி தொழிலாளர்களிடத்தில் கேட்டபொழுது அவர்கள் நகர ஈட்டுப்படி போன்ற விஷயங்கள் பழைய ஒப்பந்தத்தில் இல்லை; அவற்றை நாங்கள் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, பழைய ஒப்பந்தத்தில் வராத புதுக் கோரிக்கைகள் நியாயமானதாக இருக்குமானால், அந்தத் தொழிலாளிகளை மோசடிக்காரர்களிடத்திலே இருந்து பாதுகாக்க வேண்டி உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, இந்த தொழிலாளிகளின் உண்மையான பிரதிநிதிகளைக் கூப்பிட்டு வைத்துப் பேசி முடிவு செய்வதற்கு முன் வருவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணியிலே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல சிமெண்ட் துறையிலே ஏற்பட்ட ஊழல் குறித்து — அவர்களும் எனக்கு மனு கொடுத்தார்கள் — உடனடியாக சென்னையிலிருந்து ஒரு அடிஷனல் ரெஜிஸ்ட்ரார் அனுப்பி ஆய்வு நடத்திய பிறகுதான் கிட்டத்தட்ட 86 ஆயிரம் மதிப்புள்ள அளவிற்கு சிமெண்ட்டில் தவறுகள் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதிகாரிகள் குறிப்பாக முத்துமாணிக்கம், தனசேகரன், மனோகரன் போன்றவர்கள் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டு, கிரிமினல் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளிகளை அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் எழுப்பிய கோரிக்கைகள் குறித்து ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அது 1982 ஆம் ஆண்டுவரை இருக்கிறது. இப்போது எழுப்பிய கோரிக்கைகள் ஏதேனும் புதியதாக இருக்குமேயானால் அது குறித்து ஆர்.சி.எஸ். அவர்கள் பரிசீலனை செய்யுமாறு பணிக்கப்படுவார்கள்.

[1981 ஏப்ரல் 7

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறப்பு அங்காடியில் ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் கிரிமினல் வழக்கும் அவர்கள் மீது தொடரப்பட இருக்கிறது.

**திரு. ஏ. டி. குலசேகர் :** தலைவர் அவர்களே, சிந்தாமணி கூட்டுறவு ஊழியர்களுடைய தொழில் தகராறு பற்றி 1979 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 1 ஆம் நாளில் ஊழியர்களுக்கு ரூபாய் 90 ஊதிய உயர்வு கொடுத்ததாக விவர அறிக்கையில் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சங்கத்தில் தொழிற் தகராறு 12(3) செட்டில்மென்ட் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக 10(2)-க்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் தடை வாங்கியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? 12(3) செட்டில்மெண்ட் மீது திருப்பூர் பனியன் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும், சன்-ப்ளவர் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளதா? ஆம் எனில், அந்த 12 (3) செட்டில்மெண்ட்டை தனி அதிகாரி அவர்கள் மீறி இருக்கிறார் அல்லவா? அப்படி மீறியிருந்தால், இதன் அடிப்படையிலே இப்போது வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி, பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி, போக்குவரத்துப்படி முதலியவற்றை ஏன் தரக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11-00]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிந்தாமணிக்கு உட்பட்டிருக்கின்ற உட்பிரிவான திருப்பூர் பனியன் தொழிற்சாலையைப் பொறுத்தவரைக்கும் ஆங்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப்போல ஊதிய உயர்வு தரப்படவில்லை: மாறாக, 100 டஜன் பனியன் விற்பனைக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூபாய் பத்து முன்பு வழங்கப்பட்டு வந்தது. அதைத் தற்பொழுது 15 ரூபாயாக உயர்த்தி, இன்செண்டிவ் அலவன்ஸ் என 15 ரூபாயாக ஆங்கு பிரத்யோகமாக அந்தத் தனிப்பிரிவுக்குத் தரப்பட்டிருக்கிறதே ஒழிய மற்றபடி ஊதிய உயர்வு என ஒன்றும் தரப்படவில்லை.

சன் ப்ளவர் ஆயில் பொறுத்தவரைக்கும் தொடர்ந்து அது நஷ்ட நிலையிலே இயங்கி வருகிறது. சன் ப்ளவர் போதுமான அளவிற்குக் கிடைக்காத காரணத்தினாலே அதில் கிரவுன்ட் நட் ஆயிலைத் தற்போது உற்பத்தி செய்யலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்து, படிப்படியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாகத்தான் தற்பொழுது சிந்தாமணிக்கு இழப்பு என்று கருதுவது தவறு, காரணம் 1979 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 1 ஆம்



1981 ஏப்ரல் 7] [திரு. சி. பொன்னையன்]

நாளில் அவர்கள் புதிய ஒப்பந்தத்தை மேற்கொண்ட பொழுது சிந்தாமணியில், அதுவும் குறிப்பாக சன் ப்ளவர் ஆயில் விங்கைப் பொறுத்தவரைக்கும் 21,96,000 ரூபாய் நஷ்டம் இருந்திருக்கிறது. அதற்கும் முந்தைய ஆண்டு, 1977—78-இல் 19,57,000 ரூபாயும், 1976—77-இல் 13,14,000 ரூபாயும் நஷ்டமாக இருந்தது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு அந்த நஷ்டம் குறைந்து 1979—80-இல் 10,50,000 ரூபாயாகவும் 1980—81-இல் 8,65,000 ரூபாயாகவும், சன் ப்ளவருக்குப் பதிலாக கிரவுண்ட நட் ஆயிலை அங்கே எக்ஸ்ட்ராக்ட் பண்ணலாம் என்று முடிவு செய்து அது நடைமுறைப்படுத்தப்படுவதால் குறைந்து வருகிறது.

சிந்தாமணியைப் பொறுத்தவரைக்கும் தொடர்ந்து இலாபத்திலே இயங்கிவந்த சிந்தாமணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போலக் கிழ் மட்டத்தில் சில தவறுகள் நடந்த காரணத்தால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் கண்டுபிடித்துத்தான் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுக்குப் பதில் கூறியதைப்போல, 1979 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு உட்படாத கோரிக்கைகள் ஏதும் எழுப்பப்பட்டிருக்குமேயானால் அதுபற்றி ஆய ஆர். சி. எஸ். அவர்கள் பணிக்கப்படுவார்கள்.

**திரு. ஏ. டி. குலசேகர் :** தலைவரவர்களே, தற்சமயம் இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே ஒரு கோடி ரூபாய்க்கு மேலே அத்தியவாசியப் பொருட்கள் முடக்கப்பட்டிருக்கிறது என்றும், குறிப்பாக 22,000 அரிசி மூட்டைகள் அங்கே கிடப்பிலே உள்ளன என்றும். அதில் 18,000 அரிசி மூட்டைகள் பச்சரிசி என்றும், அந்தப் பச்சரிசியைக் கோவை மாவட்டத்தில் 5 சதவீதம் மக்கள்தான் பயன்படுத்துகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இருப்பிலே உள்ள அந்த 18,000 பச்சரிசி மூட்டைகளையும் விற்பதற்குக் கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளாகும் என்று கூறுகிறார்கள். அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா? இப்படிப்பட்ட தவறு செய்தவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொண்டு, 71 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளும், தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைகளும், பொள்ளாச்சி, திருப்பூர், ஈரோடு, சேலம் போன்ற இடங்களிலிருந்து பொருட்களை வாங்குவதால் போக்குவரத்துச் செலவு அதிகமாகிற காரணத்தினாலே அந்தச் செலவுகள் தொழிலாளர்கள் வாங்குகின்ற அத்தியாவசியப் பொருட்களின் மீதுதான் அதிகமாக வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த இழப்புத் தொழிலாளர்கள் மீது வராமல், அந்தப் பண்டகசாலைகளை ஏற்கச்செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பச்சரிசி அதிகமாக வாங்கி கிடங்கிலே வைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பச்சரிசி அதிகமாக வாங்கியது ஒரு குற்றம் என்று கருதவில்லை. பச்சரிசி தேவைக்கேற்ப வாங்கியிருக்கவேண்டும். பச்சரிசியை அதிகமாக உண்ணுகின்ற மக்கள் அங்கே இல்லை என்ற காரணத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். தேவைக்கு அதிகமாகப் பச்சரிசி அங்கே இருக்குமேயானால் பச்சரிசி அதிகமாக உபயோகப்படுத்துகின்ற சென்னைக்கு அதை வாங்க கன்ஸ்யூமர் பெடரேஷன் மூலமாக உத்தரவு இடுவோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கோவை சிறப்பங்காடி 28.18 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கே வேலைபார்க்கின்ற ஊழியர்கள் ஊழியர்களாக வேலைபார்க்காமல்

* * * *

செயல்படுகிறார்கள். எனவே, இப்பொழுது இருக்கின்ற ஊழியர்களை சஸ்பென்ட் செய்து விட்டுப் புதிதாக ஊழியர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா? மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படுவதால்.....

திரு. ரா. உமாநாத் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஊழல் என்று குறிப்பிட்டுச் சொல்வதைப்பற்றி ஆட்சேபணை இல்லை ஆனால் ஊழியர்கள் பூராவையும் பற்றி.

* * * *

என்று சொல்லி அதை நம்முடைய அவை ஏட்டிலே ஏற்றுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு வி. வி. சுவாமிநாதன்) :

* * * *

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி சொன்னதை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுவதால் மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். ஆகவே, அவசரச் சட்டம் ஆய்வில் இருப்பதால் இப்படிப்பட்ட வேலை நிறுத்தத்தைத் தடை செய்ய இன்றிலிருந்து அவசரச் சட்டம் அவர்கள்மீது பயன்படுத்தப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

---

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை உட் மாற்றுத் தலைவர் அவர்களே, சிந்தாமணியினுடைய பிரிவுகள் பலவற்றில் பணியாற்றுகிற பணியாளர்கள் அனைவருமே தற்பொழுது அந்த ஊழலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற பொருள்பட பேசக் கூடாது. ஆனால் சிமென்ட் விங்க் ஸ்டாக் டெஃபிஸிட் மருந்தகம் போன்ற பல பிரிவுகளில், சிலர் அந்தத் தவறுகளில் ஈடுபட்டு, அவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு, கிரிமினல் வழக்குகள் தொடர்வது முதற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகையால் சட்டத்தின் அடிப்படையிலேயே தவறு செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது சிந்தாமணியில் ஊழல் நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. எனவே, அந்த ஊழலக்குக் காரணமானவர்களால்தான் அந்தப் போராட்டமே நடைபெறுகிறது என்பதும் தெரியவருகிறது. எனவே, ஊழலுக்குக் காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதோடு, அடி மட்டுமல்லாமல், சாதாரணமாக இருக்கின்றவர்கள், மட்டத்திலே பாதிக்கப்பட்டவர்கள், தெளிவில்லாத நிலையிலே, அவர்களுக்குப் பின்னணியாகச் சென்று கொண்டிருக்கிறார்கள் அவர்களைப்பேச்சு வார்த்தைக்கு அழைத்து, உடனடியாக வேலை வாய்ப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊழலுக்குக் பின்னணியாக இருக்கின்றவர்களை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்த முடியாது. ஆனால் இந்த ஊழல் நிகழ்கிற நேரத்தில் அங்கு நிரபராதிகள் பாதிக்கப்பட்டிருப்பார்களானால், அவர்களுடன் பேசி, அவர்களுக்குப் பரிகாரம் தரப்படும்.

திரு. ப. தீர்த்தராமன் : ஊழலுக்குப் பின்னணியாக இருப்பவர்கள் என்று நான் சொல்லவில்லை. தெளிவில்லாமல் ஊழல் செய்தவர்களுக்குப் பின்னணியாக இருக்கின்றவர்கள் என்பதைத்தான் நான் தெரிவித்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடியிலே ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குகிற முயற்சியாக இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு இன்று சிறைக்கூடங்களிலே இருக்கிற 122-க்கும் அதிகமான தொழிலாள நண்பர்களை விடுதலை செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, அதிலே

சற்று சிரத்தை எடுத்துக்கொண்டு, சம்மந்தப்பட்டவர்களை,
பாதிக்கப்பட்டவர்களை நேரிலே அழைத்து, பேச்சுவார்த்தை
நடத்த முன்வருவார்களா என்பதை அறிவதோடு அங்கே இருக்கிற
பொதுமகக்ளுக்கு இந்தப் பேரட்டத்தினாலே அல்லது இந்த
ஸ்டிரைக்கினாலே எந்தவிதமான இடர்பாடும் இல்லாமல்,
நல்லமுறையிலே வியாபாரம் நடைபெறுவதற்கு அரசு என்ன
நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கு இன்னலை
இழைக்கக்கூடிய அளவுக்கு இந்தப் போராட்டம் அமைந்து
விட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே எவ்வாறு
உணர்கிறார்களோ அந்த அளவுக்கு நானும் உணர்ந்து, ஏற்
கனவே அந்தத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளோடு
சென்ற வாரம் நானும் பேசி, ஆர். சி. எஸ். அவர்களைத்
சந்தித்துப் பேசுமாறு பணித்து. ஆர். சி. எஸ். அவர்கள்கூட
கோவை சென்று அது குறித்து, நேரடியாக விசாரணை செய்து,
நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல், சுமுகமான
சூழ்நிலை உருவாக, சிறைக்கூடங்களிலே இருக்கிற அந்தத்
தொழிலாளர்களை விடுதலை செய்ய அரசு முன் வருமா என்று
அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் சில மறியல் போன்ற
வற்றில் ஈடுபட்ட காரணத்திற்காகவும், சில கடைகளில் தொழி
லாளர்கள், மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் சொன்னதுபோல்,
கட்சிப் பேதமில்லாமல், அந்த அங்காடிகள் எல்லாம் நடக்க
வேண்டுமென்ற நோக்கோடு வந்த பணியாளர்களைக் கூடச்
செல்லவிடாமல் தடுத்து, அந்தக் கடையையே மூடக்கூடிய
அளவுக்கு ஈடுபட்டு, ரேஷன்ட் கமாடிட்டீஸ்கூட கிடைக்க
முடியாத அளவுக்கு ஈடுபட்ட காரணத்தால்தான் கைது செய்யப்
பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தற்
பொழுது பெயிலிலே வரலாம். பேச்சு வார்த்தை நடந்து, பேச்சு
வார்த்தையின் முடிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்
படும்.

***திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, கோவை சிறப்பங்காடியைப் பொறுத்த
அளவில், இன்று எழுகின்ற பிரச்னையை, தொழிலாளர்களுக்கும்
நிர்வாகத்திற்கும் ஏற்பட்ட பிரச்னையாக மட்டும் கருதாமல்,
அதை நம்பியிருக்கிற கோவைத் தொழிலாளர்கள், பல்லாயிரக்
கணக்கான வாடிக்கையாளர்கள் ஆகியோருடைய நலனையும்
கருத்திலே கொண்டு, அரசு விரைவில், அந்தக் கூட்டுறவுச்



சிறப்பங்காடியைத் திறப்பதற்கான முயற்சியை மேற்கொள்
வதோடு இன்று யார் மீது நாமெல்லாம் பழி சுமத்துகிறோமோ
அவர்கள் காரணமாக இருந்து, பல தொழிலாளர்கள் மீது
ஏற்கனவே பல குற்றங்கள் சுமத்தப்பட்டு வெளியேற்றப்
பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய குறைகள் எல்லாம்
நீங்குகிற அளவுக்கு, அவர்களுடைய தனிப்பட்ட குறைகளை,
அவர்களிடமிருந்து மனுவாகப் பெற்று, அவைகளை விசாரித்து
அவர்கள் பழி வாங்கப்படுகிற நோக்கத்தோடு வெளியேற்றப்
பட்டிருக்கிறார்களா என்பதை ஆராய்ந்து அவர்களெல்லாம் தனிப்
பட்ட ஒரு தொழிலாளியாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு
அநீதி வழங்கக்கூடாது என்பதற்காக, ஏற்கனவே
இருந்த நிர்வாகத்தினரின் தூண்டுதல் காரணமாக அல்லது
அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாக அவர்கள்
பழி வாங்கப்பட்டிருந்தால், அவர்களை மீண்டும் எடுத்துக்
கொள்வதற்கும் ஒரு சுமுகமான சூழ்நிலை அதனால் ஏற்பட்டு
விரைவில் அந்தச் சிறப்பங்காடியைத் திறக்கும் முயற்சியை
அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10.]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, சிந்தாமணி கூட்டுறவு
அங்காடியின் கிளைகளை எல்லாம் அரசு திறக்கவேண்டும் என்று
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அரசு அவற்றை
மூடவில்லை. பணியாற்ற வரமாட்டோம் என்று ஊழியர்களில்
ஒரு பிரிவு சொல்லி, பணியாற்ற வருகிறோம் என்று சொல்லி
வந்த ஒரு பிரிவு ஊழியர்களையும், போராட்டத்தில் ஈடுபட்
டுள்ளவர்கள் தடுத்ததன் விளைவாக மூடப்பட்டு இருக்கின்றன.
இன்றைக்கும் அதைத் திறக்க அரசு தயாராக இருக்கிறது. இது
குறித்து கடந்த இரண்டு மூன்று நாட்
களாக ஆர். சி. எஸ். மூலமாக நடவடிக்கை நடைபெற்று வருகிறது.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல சுமூகமான
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆர்.சி.எஸ். அவர்கள்
பணிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

***திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, புகழ்மிக்க அந்தச் சிந்தாமணி
இன்று சுடுகாடுபோல் காட்சியளித்துக்கொண்டு இருக்கிறது.
அதற்குப் பல காரணங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது
எல்லாம் இவைகள் எல்லாம் அடிப்படைக்காரணங்களாக உங்க
ளுக்குத் தெரிந்தாலும், முன்பு இருந்த அரசு செய்த தவறான
போக்கு காரணமாகவும், முன்பு சிந்தாமணியை நிர்வகித்து
வந்தவர்களை வெளியேற்றிவிட்டு, வேறுமுறையில் நிர்வாகத்தை

அமைத்த காரணத்தாலும், அந்தச் சிந்தாமணி பலவித கோணங் களில் மிகவும் மோசமான அளவிற்கு ஆளாக்கப்பட்டு இன்றைக்கு நஷ்டத்தில் அது இயங்கி வருகிறது. ஆகவே, அரசு அதைப் பரிசீலிப்பதற்கு முன்பு, தொழிலாளார்களை விடுதலை செய்யவேண்டுமா அல்லது அங்கே பணியாற்றுகின்ற தொழி லாளர்கள் தவறு செய்து இருக்கிறார்களா, அல்லது அங்கே யுள்ள தொழிலாளர்களில் ஒரு சிலர் சிமென்ட் போன்ற பொருள் களை திருடி இருக்கிறார்களா என்பதையெல்லாம் சிந்திப்பதற்கு முன்பாக, முன்பு அந்த சிந்தாமணியை நடத்தியவர்களிடத்தில்— ஏனெனில் மத்திய அரசே சிந்தாமணி நல்ல முறையில் செயல் பட்டதற்காக பரிசு கொடுத்து இருக்கிறார்கள்—அப்படி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் சிந்தாமணியை நடத்தியவர் களிடத்தில்—அந்த நிர்வாகத்தை மறுபடியும் கொடுப்பதற்கு, அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் அழைத்து, இது உங்களுடைய மாவட்டம், உங்களுடைய ஏரியா, உங்க ளுடைய பகுதி, ஆகவே, இந்தச் சிந்தாமணி முன்பு எப்படி எப்படி நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும், ஆகவே, இந்தச் சிந்தாமணியை எப்படி நல்ல முறையில் நடத்துவது என்பதைத் குறித்த ஆலோசனையை அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் இருந்து பெறுவதற்கு அரசு ஆலோசிக்குமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, கோவை சிந்தாமணி கூட்டுறவு அங்காடி தனியார் கையில் முன்னால் இல்லை, ஆனால் நிர்வாகக் முழுவின் தலைவராக தனியார் ஒருவர் இருந்து வந்த காரணத் தால், 'நான்-அஃபிசியல்' இருந்து வந்த காரணத்தால், அவர் பொறுப்பில் அது இருந்தது. அந்த 'போர்ட் சூப்பர்சீட்' செய்யப் பட்டு, ஸ்பெஷல் ஆபீசர் போடப்பட்டு விட்டதாலே அது தற்போது ஸ்பெஷல் ஆபீசர் கன்ட்ரோலில் இருக்கிறது. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல, கீழ் மட்டத்தில் பணியாளர்கள் மத்தியில் சில நேரங்களிலும், அதிகாரிகள் மத்தியில் சில நேரங்களிலும் தவறு நடந்து, அது குறித்து நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். விரைவில் புதிய கூட்டுறவுச் சட்டமுன்வடிவு கொண்டு வந்தவுடன் அதற்குத் தேர்தல் நடத்த உத்தரவிட அரசு இருக்கிறது. அதற்கு முன்பாக நிர்வாகக் குழுவை—அங்கேயுள்ள ஸ்பெஷல் ஆபீசருக்கு பதிலாக— —போடவேண்டுமானால், அது குறித்தும் அரசு மீண்டும் ஆய்வு செய்யவேண்டி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சீர்திருத்த சட்டம் வந்த பின்னால் அந்தச் சிந்தாமணி கூட்டுறவு சங்கத்திற்குத் தேர்தல் நடத்துவது பற்றி உத்தேசித்தாலும், ஏற்கெனவே நோய் வந்து புரையோடிபோய்



உள்ள சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியை எந்த வகையில் பாதுகாக்கமுடியும் என்பதே அங்கே இருக்கும் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரிதிநிதிகள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர் கள் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தினால், அது அந்தச் சிந்தாமணியின் எதிர்கால வளர்ச்சிக்கு கால்கோள் விழா நடத்தி யதுபோன்று அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே ரூ. 100 ரூ. 1,000 பங்கு மூலதனம் போட்டு நிர்வகித்து வந்த அந்த சிந்தாமணி இன்று மிகவும் மோசமான நிலையில் இருப்பதை மாற்ற ஒரு போர்க்கால நடவடிக்கை போல அமைச்சர் அவர்கள் ஏதேனும் செய்வார்களா ? ஏனெனில் அது வளர்ந்த குழந்தை. இப்போது நோய் வந்த காரணத்தால் புரையோடிப்போய் செத்து விடுகின்ற நிலைமையில் இருப்பதால், அந்த நிலைமையை மாற்றுவதற்குரிய வழிமுறைகளைத் தீவிரமாக ஆராய்ந்து, ஏதாவது ஒரு திட்டத்தைத் தீட்டி அதற்குப் பொறுப்பு ஏற்று அந்தச் சிந்தாமணியைத் திறப்ப தற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் கூட பழைய போர்டை கான்ஸ்டிடியூட் பண்ணலாமா என்று கேட்கிறார்கள். அங்கே ஸ்பெஷல் ஆபீசர் வந்த பிறகு, அடிமட்டத்தில் இருக்கிற பணியாளர்கள் தவறு செய்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு, தவறு செய்தவர்கள் வெளியிலே இருந்து, இந்தப் போராட்டத்தை தீவிரப்படுத்த முயற்சி செய்கிறார்கள். சுடுமையான நடவடிக்கைகள் மூலம் குறைபாடுகளை களைய முடியும் என்று கருதுகிறேன்.

'சன் ஃபிளவர் ஆயில் மில்லை'ப் பொறுத்த வரையில் அதிக மாக நஷ்டம்தான் ஏற்பட்டது. காரணம் தமிழகத்தில் சன் ஃபிளவர் உற்பத்தி மிகக் குறைவாக இருக்கிறது. போதிய அளவுக்கு உற்பத்தி இல்லாததால் நஷ்டம் ஏற்பட்டது. 1979-ல் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னாலேயே 18 இலட்சம், 19 இலட்சம் அதிலே நஷ்டம் வந்திருக்கிறது. அந்த நஷ்டத்தைக் குறைப்பதற்காக கடலை எண்ணெய் உற்பத்தித் தொடங்கப் பட்டது. 19 இலட்சம் நஷ்டத்தில் இருந்தது, கடலை எண்ணெய் உற்பத்தி செய்யத் தொடங்கிய பின்னால், தற்போது 8 இலட்ச மாக குறைந்திருக்கிறது. ஆகவே, துரித நடவடிக்கை எடுத்து, நிர்வாகச் சீர்திருத்தம் செய்து, நல்ல முறையில் அந்த அங்காடியை இயங்கச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. சங்கரன்கோவில் கைத்தறி நெசவாளர்கள் போராட்டம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :** திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, தோ. அழகர்சாமி ஆகியோர் ஒரே பொருள்

[மாற்றுத் தலைவர்] [1981 ஏப்ரல் 7

குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, ''சங்கரன் கோவில் கைத்தறி நெசவாளர்கள் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி போராட்டம் நடத்தி வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சங்கரன் கோவிலிலுள்ள கைத்தறி நெசவு நிறுவனங்கள் மற்றும் அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் பற்றிய தொழிற்தகராறில் 24—5—1975 அன்று திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலரின் முன்பு தொழிற்தகராறு சட்டம் பிரிவு 12 (3)ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தில் மேற்கூறிய ஊதிய உயர்வு மற்றும் இதரப் பிரச்சினைகளை மதுரை தொழிலாளர் துறை து[illegible]ணை ஆணையாளரின் முடி[illegible] இரு தரப்பினரும் சம்மதித்தனர். இது தவிர 2 -3- [illegible]975 [illegible]வே கோவில்பட்டி கோட்ட ஆட்சியாளர் [illegible]ஸர், மற்றும் கோவில்பட்டி காவல் [illegible] முன்பு ஏற்கப்பட்ட ஒரு தீர் ம[illegible]னத்து[illegible] [illegible]க்தறி மற்றும் கைத் தறி நெசவு நிறுவ[illegible] [illegible]ன் ஊதிய உயர்வு மற்ற பிரச்சினைக[illegible] [illegible] துணை ஆணையரின் முடிவிற்குவிட ஒ[illegible] [illegible] விரு ஆதாரங்களையும் கருத்திற் கொண்டு மதுரை [illegible] துறை துணை ஆணையர் 30—[illegible]—1980 அன்று விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவுத் தொழிலாளர் ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் பற்றி தனது முடிவை அறிவித்தார்.

2. இதற்கிடையில் சண்முகம் அன்ட் கோ என்னும் நிறுவனத்தார் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட்மனு தாக்கல் செய்து கீழ்க்கண்ட காரணங்களுக்காக மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரின் முன்பு நிலுவையிலுள்ள நடுவர் நடவடிக்கைகளை தடை செய்ய வேண்டும் என்று கோரினர்.

(1) தொழிலாளி—முதலாளி உறவு இல்லை.

(2) முதலாளிகள் சங்கம் 24—5—1975 ஒப்பந்தத்திலே சேர அதிகாரம் இல்லை.

(3) தொழிற்தகராறு சட்டம் பிரிவு 10ன் முறைகளை பின்பற்றவில்லை.



1981 ஏப்ரல் 7] [திரு. எஸ். இராகவானந்தம்]

ஆனால் இந்த மேல் முறையீட்டு மனுவை writ சென்னை உயர்நீதி மன்றம் நிராகரித்து, மேற்கூறிய ஆட்சேபணைகள் நடுவர் முன்பு எழுப்பப்பட வேண்டியவை என்றும், அன்னார் இவற்றை முடிவு செய்வார் என்றும் குறிப்பிட்டுத் தீர்ப்பு கூறியது.

3. சங்கரன் கோவில் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கம் மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு மீண்டும் மனு செய்து அன்னாரது முடிவை மறு பரிசீலனை செய்யுமாறும் விசைத்தறி நிறுவனங்களை அன்னாரது தீர்ப்பிலிருந்து நீக்குமாறும் கேட்டுக் கொண்டனர். இம்மனுவின் மீது திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர், மனுவில் கண்ட கோரிக்கையை ஏற்க இயலாது என்று 25—[illegible]—1981 அன்று ஆணை பிறப்பித்தார்.

மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரின் 30—1—1980-ம் தேதிய முடிவின்படி தொழிலாளர்கள் சாதாரண ரகம் தவிர மற்ற ரகங்களுக்கு 20 சதவீதம் ஊதிய உயர்வும் மற்றும் 4½ கஜம் சேலைகளுக்கு ஒரு சேலைக்கு 0.40 பைசா ஊதிய உயர்வும் பெறுவர். இந்த உயர்வுகள் 19—4—1979 லிருந்து ஒரு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும். ஊதிய பாக்கி 1—3—1980 அல்லது அதற்கு முன்போ கொடுக்கப்பட வேண்டும்.

4. கைத்தறி நெசவு நிறுவனங்கள் மேற்கூறிய தீர்ப்பில் கண்டுள்ளவாறு ஊதிய உயர்வு கொடுப்பது சாத்தியமில்லை என்று கூறுகின்றனர். ஆனால் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்கள் இத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டுமென்று கோரி கீழ்க்கண்டவாறு நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(1) 9—3—1981 அன்று சங்கரன்கோவில் வட்டாட்சி அலுவலர் முன்பு ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம்.

(2) 16—3—1981 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் ஊர்வலம், பொதுக் கூட்டம்.

(3) 19—3—1981 முதல் 25—3—1981 முடிய ஒவ்வொரு கைத்தறி மற்றும் விசைத்தறி நிறுவனங்கள் முன்பு மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை தர்ணா போராட்டம்.

(4) 26—3—1981 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம்.

(5) 30—3—1981 அன்று கைத்தறி மற்றும் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கங்களின் செயலாளர்களின் வீட்டின் முன்பு மறியல் போராட்டம்.

5. சுமார் 5,000 விசைத்தறி தொழிலாளர்களும், சுமார் 3000 கைத்தறி தொழிலாளர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

6. தொழிலாளர்கள் கீழ்க்கண்ட சங்கங்கள் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 ஏப்ரல் 7

(1) நெல்லை மாவட்ட பொதுத் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.) சங்கரன்கோவில்.

(2) தொகுதி அண்ணா கைத்தறி நெசவாளர் சங்கம், (அண்ணா தொழிற்சங்கப் பேரவை) சங்கரன்கோவில்.

(3) கைத்தறி அண்டு விசைத்தறி தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை) சங்கரன் கோவில்.

(4) எம். எஸ். டி. எஸ். பேக்டரி சங்கம், சங்கரன்கோவில்

(5) சங்கரன்கோவில் தாலூகா கைத்தறி விசைத்தறி அண்ட் பொதுத் தொழிலாளர் சங்கம், ஏ.ஐ.டி.யு.சி., சங்கரன் கோவில்.

7. கைத்தறி மற்றும் விசைத்தறி உரிமையாளர்கள் கீழ்க் கண்ட சங்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.

(1) கைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கம் (மாஸ்டர் வீவர்ஸ் அசோஷியேஷன்), சங்கரன்கோவில்.

(2) விசைத்தறி உரிமையாளர் சங்கம், சங்கரன்கோவில்.

8. 26—3—1981 அன்று திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலர் தொழிற்சங்கங்களை சந்தித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டா,மென்று அறிவுறுத்தியும் தொழிற்சங்கங்கள் ஏற்கவில்லை. 30—3—1981 அன்று இது சார்பாக திருநெல்வேலி தொழிலாளர் துணை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தைகளினால் சமரசம் ஏற்படாததால் 6—4—1981 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முன்பு சமரச பேச்சு வார்த்தை நடக்க உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த சங்கரன் கோயில் நகரத்தில் சுமார் 2,300 விசைத்தறிகள் இருக்கின்றன. அதில் 5,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அங்கே, கைத்தறி நெசவாளர்கள் 3,000 பேர்கள் இருக்கிறார்கள். ஏற் கெனவே அவர்களுக்கு சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளை வைத்து 24—5—1975-ல் நடுவர்கள் தீர்ப்புக்கு விட்டு, 12 (3) செட்டில்மெண்ட் போடப்பட்டது. அந்தத் தீர்ப்பு 30–1–1980 ல் தான் சுமார் 5 ஆண்டுகள் கழித்து வந்தது; அவ்வளவுவேகமாக செயல்பட்டிருக்கின்றார்கள். 5 ஆண்டுகள் கழித்து அறிவிப்பு கொடுத்து, அதன் பிறகு அவர்கள் உயர்நீதிமன்றத்தில் "ரிட் மனு" தாக்கல் செய்து, அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டு 23—1—1981-ல் அது நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே 30—1—1980-ல் நடுவர் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பிறகும் இது வரை அமுல்படுத்தவில்லை. அதை உடனடியாக ரெவின்யூ ரெக்க வரி மூலம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் நேற்றைய தினம் 6—4—1981-ல் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்றதாக இங்கே குறிப்பு இருக் கிறது. அது என்னவாயிற்று என்பதையும் அறிய விரும்புகிறேன்.



1981 ஏப்ரல் 7]

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே 6—4—1981 நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு சமரசப் பேச்சு வார்த்தை நடைபெற்றது. அதில் ஒரு ஒப்பந்தம் ஏற்படவில்லை. அதனால் மீண்டும் சமரச பேச்சு வார்த்தை நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, நான் கேட்ட ரெவின்யூ ரெக்கவரி பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஏற்கெனவே நடுவர் தீர்ப்புக்கு விட்டு, ஒப்பந்தம் போடப்பட்டு, அதுபற்றி உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு போட்டு உயர்நீதிமன்றத்தல் அது தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு, அந்த ஒப்பந்தம் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. அதனால் போராட்டம் நடைபெற்று 142 பேர் கைதாகி இருக்கின்றார்கள். அதிலே 51 பேர் சிறுவர்கள், அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்து, ஏற்கெனவே 1980-ல் வெளியிடப்பட்ட நடுவர் தீர்ப்புப்படி தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே மாவட்ட ஆட்சித் தலைவர் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த, இருக்கின்ற காரணத்தால், அதனுடைய முடிவுகளைப் பார்த்து அதன் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி அரசு ஆலோசனை செய்யும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த விவர அறிக்கையில் 4-வது பாராவில் "கைத்தறி நெசவு நிறுவனங்கள் மேற்கூறிய தீர்ப்பில் கண்டுள்ளவாறு ஊதிய உயர்வு கொடுப்பது சாத்தியமில்லை என்று கூறுகின்றனர்; ஆனால் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்கள் இத்தீர்ப்பை அமுல்படுத்த வேண் டும் என்று கோரி கீழ்க்கண்டவாறு நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்." என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஏற்கெனவே, நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது; தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது; 12 (3) செட்டில்மெண்டு போடப் பட்டிருக்கின்றது. அது அமுல் படுத்தப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பாணியிலே சொல்வதாக இருந்தால் இந்த 12 (3) செட்டில்மெண்ட் புனிதமானது. அந்த புனிதத் தன்மை காப்பாற்றப்படவில்லை; தீர்ப்பு அமுல் படுத்தப்படவில்லை. இதுவரை அமுல்படுத்தாத அந்த நிர்வாகிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது? அதனுடைய பலன் என்ன? இன்னும் சொல்லப்போனால் நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னால் நடை பெற்ற பேச்சுவார்த்தையில்கூட அவர்கள் சம்மதிக்கவில்லை, ஆகவே, அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, உடனடி யாக அந்தப் பணத்தை ரெக்கவர் செய்து, அந்தத் தொழிலாளர் களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா?

[1981 ஏப்ரல் 7

[முற்பகல் 11-20]

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய கேள்விக்கு நான் பதில் சொன்னதைப் போன்று பேச்சு வார்த்தை இறுதியாக முடிந்துவிட்டது என்ற நிலை வராமல் மீண்டும் இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இது குறித்து பேச இருப்பதால் அதனுடைய விளைவுகளைப் பார்த்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, எனக்கு பாதுகாப்பு தரவேண்டும். நான் கேட்ட கேள்விக்கு பதில் வரவில்லை. முதலாளிகள் 12 (3) செட்டில் மெண்டை மீறி இருக்கிறார்கள். அப்படி அவர்கள் மீறியதின் காரணத்தால் சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது ? இந்தக் கேள்விக்கு தங்கள் மூலமாகப் பதில் வர வேண்டும் என்று தங்களிடம் நான் பாதுகாப்பு கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே. அரசு தலையிடுவது என்பது அதாவது என்னுடைய மட்டத்திலே தலையிடுவது என்பது எல்லா வகையிலும் பேச்சுவார்த்தை நடந்து முடிந்துவிட்டது இனிமேல் ஒன்றும் நடக்காது என்ற நிலை வந்ததற்குப் பிறகுதான் முடியும். நேற்றையத்தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து வந்த தகவல் அங்கே ஒப்பந்தம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் நிரம்ப இருக்கின்றன என்பது தான். ஆகவே இரண்டு மூன்று தினங்களில் மீண்டும் பேச்சு வார்த்தை நடக்கும். அதைப் பார்த்துவிட்ட பிறகுதான் என்ன செய்வது என்பது பற்றி நாம் முடிவு செய்ய வேண்டும். (குறுக்கீடு) சொல்கிறேன் பதில், அவர்கள் 33 சி (2) பெட்டிஷன் போட்டு கூட தாங்கள் பெறவேண்டிய பணத்தை வாங்கிக்கொள்ள வழி இருக்கின்றது. ஆனால் அரசைப் பொறுத்த வரையில் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது மாவட்ட ஆட்சித் தலைவரின் ரிப்போர்ட் வந்த பிறகுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கின்ற சொரணம் : தலைவர் அவர்களே, 12 (3) செட்டில்மெண்ட் அமல் நடத்தப்படவில்லை என்று முதலாளிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை அரசு என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் இந்தக் கேள்விக்கு பதில் பெற்றுத் தர வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : திரு. வி. வி. சுவாமிநாதன் : அமைச்சரவர்கள் இப்படித்தான் பதிலளிக்கவேண்டும் என்று என்னால் வற்புறுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 7]

*திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகளின் காரணமாக இந்தத் தகராறு 24—5—1975-லே இருந்து இருந்து வருகின்றது. அப்போது ஆரம்பிக்கப்பட்டு 6 வருஷமாக இந்தப் பிரச்சினை இழுத்துக் கொண்டு வந்து பின்னர் நடுவர் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும் என்று இருதரப்பாரும் கேட்டுக் கொண்டார்கள். ஆர். டி. ஓ., டி. எஸ். பி. அவர்கள் முன்னிலையில் தொழிலாளர்கள் நல இயக்குநரிடத்திலே இந்தத் தாவாவை விட்டுவிடுவது என்றும் அவர்கள் சொல்வதைக் கேட்பது என்றும் இருவரும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் 5 வருஷம் கழித்து அதாவது 31—1—1980-லே தான் தீர்ப்பு சொல்லி இருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை அமல் நடத்த மாட்டோம் என்று சொல்லி ஒருவர் ஹைக் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார். ஆனால் ஹைக் கோர்ட்டிலே அதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். நடுவர் தீர்ப்பின்படிதான் நடந்துகொள்ள வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திலே தீர்ப்பு சொல்லப்பட்டு விட்டது. ஆகவே, தொழிலாளர்கள் நல இலாக்காவின் துணை இயக்குநர் சொல்வதையே நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள் முதலாளிகள். ஆனால் நீங்கள் கட்டாயம் கொடுக்கத்தான் வேண்டும் என்று துணை இயக்குநர் அவர்கள் சொன்னதற்குப் பிறகும் நாங்கள் ஊதிய உயர்வு கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அப்படியானால் தொழிலாளர் நல இலாகாவிலே சொல்லப்பட்ட தீர்ப்பினை அமல் நடத்த மறுப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க சட்டங்களிலே விதிகள் இல்லையா ? அப்படி விதிகள் இல்லை என்றால் ஏன் அதற்காக ஒரு விதியை ஏற்படுத்தி தீர்ப்பை அமல் செய்யாத முதலாளிகள் குறைந்தது ஒரு நாள் அல்லது 5 நாட்கள் உள்ளே இருப்பதற்குரிய வகையில் சட்டம் செய்தால் என்ன ? இன்றைக்கு தொழிலாளர்களை மட்டும் அவர்களுடைய குழந்தைகளை எல்லாம் சேர்த்து சிறையிலே தள்ளுகிறோமே; அதுபோன்று ஏன் முதலாளிகளைத் தண்டிக்கின்ற சட்டம் ஏற்படுத்தக்கூடாது?

நடுவர் தீர்ப்புப்படி அவர்களுக்குரிய ஊதியத்தைக் கொடுக்க வேண்டும் என்று முடிவு வந்ததற்குப் பிறகும் முதலாளிகள் தகராறு செய்வதும் கோர்டுக்குப் போவதும் எப்படிச் சரியான காரணம் ஆகவே, 6 வருஷமாக இந்தப் பிரச்சினை இழுத்துக் கொண்டிருக்கின்றது. சமீபத்தில் நான் கோவில்பட்டிக்குப் போய்விட்டு வருகின்றபோது தொழிலாளர்களை கைது செய்து லாரிகளில் கொண்டு செல்வதைப் பார்த்தேன். அப்போது நடுவர் தீர்ப்பை அமல் நடத்து. முதலாளிகளை கைது செய் என்று கோஷம் போட்டுக் கொண்டிருந்தார்கள். என்னைப்பார்த்தவுடன் கூடுதலாக கோஷம் போட்டார்கள். என்ன நடந்தது என்று நான் விசாரித்ததற்கு, சங்கரன்கோவிலில் இது மாதிரி சம்பவம் நடைபெற்றிருக்கிறது நீங்கள் போய் பார்த்து ஏதாவது செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். இது விஷயமாக என்ன சொல்கிறேன் என்றால் 6 வருஷமாக

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஏப்ரல் 7

இப்படி ஒரு தொழில் தகராறு பிரச்சனை இருந்து வருகிறதே. அதைப்போக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாதா ? நடுவர் தீர்ப்பு என்னவோ வந்து விட்டது. அந்த தீர்ப்பை அமுல் நடத்த வேண்டியது தானே ? சரி அமுல் நடத்தவில்லை என்று சொன்னால், அமுல் நடத்தாத முதலாளிகளைத்தானே ஏன் என்று கேட்டு 2 அல்லது 5 நாட்கள் உள்ளே வைக்க வேண்டும் ? அதை விட்டு நியாயமாக நடுவர் தீர்ப்பை அமுல் நடத்து என்று கேட்ட தொழிலாளர்களை கைது செய்து சிறையில் தள்ளியிருக்கிறீர்களே ? இது என்ன நியாயம் ?

அது மட்டும் அல்லாமல் நேற்றைய தினம் கலெக்டருடன் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தவிருப்பதாக அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். பேச்சு வார்த்தையில் என்ன நடந்தது ? தேவையான ஏற்பாடுகள் செய்யப்பெற்றதா ? இல்லையென்றால் என்ன காரணம் ? கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் விடுதலை செய்ய பெற வேண்டும். 6 வருஷமாக தீர்ப்பை அமுல் நடத்தாமல் இருந்ததற்கு காரணமானவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையெல்லாம் அறியவிரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கலெக்டர் பேச்சு வார்த்தை நடத்தியதில் என்ன முடிவு ஏற்பட்டது என்பதை நான் செயலாளர் மூலமாக கேட்டு அறிந்தேன். கிட்டே நெருங்கி வந்திருக்கிறார்களே தவிர இன்னும் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்று தெரிகிறது. மேலும் முயற்சி செய்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்தப் பேச்சு வார்த்தைகளில் முடிவு ஏற்பட்ட பிறகு, அதன் முடிவைப் பார்த்து அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும், அடுத்து, முதலாளிகளை திடீரென்று 2 நாட்கள் கைது செய்து சிறையில் தள்ள வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படி திடீரென்று 2 நாட்கள் சிறையிலே போடுவதற்கான சட்டம் இதுவரையில் இயற்றப்படவில்லை. அரசு அதுபற்றி பரிசீ[illegible]

[illegible]முன்வடிவுகள்.

[illegible]மையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு 1981.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆவது ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட மசோதா சட்டமாக ஆக்கப்பெற வேண்டும் என்பதற்காக இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது.



1981 ஏப்ரல் 7] [திரு. சோ. அழகர்சாமி]

இது குறித்து பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் தோழமை கட்சிகள் கூட, இந்தச் சட்டம் திரும்பப் பெற வேண்டும், இது தொழிலாளர்களுடைய உரிமைகளை பறிக்கக் கூடிய சட்டம் என்று நாங்கள் இடித்துக் கூற வேண்டியவர்களாக இதில் இருக்கிறோம். ஆகையினால் இடித்துரைக்கிறோம் என்று நல்ல முறையில் இடித்துரைத்தார்கள். அப்படி தோழமைக் கட்சிகளே கூட, இந்த சர்க்கார் இன்றைக்கு கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் தொழிலாள வர்க்க விரோதச் சட்டம், ஜனநாயக விரோதச் சட்டம், ஆகையினால், இது சட்டமாக வரக்கூடாது என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு பிற்போக்கான சட்டம், ஜனநாயக விரோதச் சட்டம், தொழிலாள வர்க்க விரோதச் சட்டம், இந்த மன்றத்திலே மசோதாவாக கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டமன்றத்தினுடைய வரலாற்றிலே இன்றைக்கு சோக நாள், ஒரு துக்க நாள், ஒரு கறுப்பு நாள் என்பதை குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் தொழிலாளர்களுடைய உரிமைகளுக்கு சாவு மணி அடிக்கக்கூடிய இந்த மசோதாவை நிறைவேற்றித் தாருங்கள் என்று சொல்லக் கூடிய இந்த நாள் சட்டமன்ற வரலாற்றிலே ஒரு கறுப்பு நாள் தான். ஒரு துக்க நாள்தான்.

ஜனநாயகம் என்று சொல்லக்கூடிய புனித தேவதையை படுகொலை செய்து, சவப்பெட்டி தயாரித்து, சவ ஊர்வலம் நடத்துவதற்கு, பெரும்பான்மையான ஆளும்கட்சிக்காரர்களோடு நீங்களும் கலந்துக் கொண்டு துணை வரவேண்டும், அந்த ஜனநாயகப் படுகொலையின் சவ ஊர்வலத்தில் நீங்களும் கலந்துக் கொள்ள வாருங்கள் என்று அழைக்கிறபோது, தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக இங்கே வீற்றிருக்கிற நாங்கள், அந்த சவ ஊர்வலத்தில் கலந்து கொள்ள ஒருபோதும் வர முடியாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அத்தியாவசியப் பணிகளில் வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதமானது என்று மசோதாவைக் கொண்டு வந்திருக்கக்கூடிய நேரத்திலே, தொழிலாளர்களின் நண்பன் என்று சொல்லக்கூடிய இந்த சர்க்கார் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பசிக்கிறது என்று பட்டினியால் வாடுபவனுக்கு பசியைப் போக்க முயற்சிகளை எடுக்க வேண்டுமே தவிர, நீ பசிக்கிறது என்று எப்படி சொல்லலாம் ? உன்னை ஒரு வருஷம் உள்ளே தள்ளுகிறேன், ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கிறேன் என்று சொல்லி சட்டங்கள் கொண்டுவந்தால், அந்தச் சட்டத்தை கோமாளித்தனமான சட்டம், கறுப்புச் சட்டம், அராஜகமான சட்டம், ஹிட்லர் ஆண்டபோது கூட, முசோலினி ஆண்ட போதுகூட இந்த விதமான சட்டத்தைக் கொண்டுவரவில்லை என்பதை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஏப்ரல்

இந்த மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக இந்த மன்றத்தில் உள்ள தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்கு ஒன்..ற கொண்டுவர விரும்புகிறேன் நமது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மிகவும் சுவை யாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கே ஒரு முறை பேசும்போது சிறப்பான முறையிலே ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். 1979ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 21ஆம் தேதி என்று நினைக்கிறேன்.—எங்கே ஆதாரம் என்று கேட்கக் கூடிய சிரமங்களை எல்லாம் நமது சிலம்பச் செல்வர் அமைச்சர் இராகவானந்தம் அவர்களுக்கு கொடுக்க விரும்பவில்லை.

[பிற்பகல் 11–30]

* * * என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): இந்தக் குறிப்பை அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

* * *

திரு. அ. ரகுமான்கான்: சட்டமன்றக் குறிப்பில் அவர்கள் சொல்கிறார்கள், It is the bi t.. ı g.t cf .. worker to strike என்று சட்டமன்றத்தில் சொன்ன ஆட்சி, புரட்சித் தலைவர் ஆட்சி; அப்படிச் சொன்னது ரிக்கார்டில் இருக்கிறது. தொழி லாளர்கள் வேலைநிறுத்தம் செய்யலாம், அது அவர்கள் பிறப் புரிமை என்று சொல்லியவர் எங்கள் புரட்சித் தலைவர் என்று இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். இதைச் சொல்லி விட்டு நான் அப்படிச் சொல்லவில்லை, என்னுடைய பேச்சு தவறாக பத்திரிகைகளில் வந்துவிட்டது, நான் சொன்ன கருத்து வேறு என்று சொல்லமாட்டேன் என்று தெளிவாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி இந்தச் சர்க்கார் சார்பாக புரட்சித் தலைவரைப் பாராட்டுகிறவர்கள், தொழி லாளர்கள் வேலைநிறுத்தம் செய்வது அவர்கள் பிறப்புரிமை என்று சொல்லியவர்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமானது என்று சொன்னால் உங்கள் சின்னம்தான் இரட்டை இலை, கொள்கையுமா இரட்டை நிலையில் இருப்பது? முரண்பாடே உன் பெயர்தான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரா என்று கேட்பதைத் தவிர வேறு என்ன என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர் களை; நான் குறைவாகச் சொல்வதாகக் கருதக்கூடாது. அவர்கள் மீது எனக்கு மரியாதை உண்டு. தொழிற்சங்கத்தில் நீண்டகாலமாக திராவிடர் இயக்கத்தில் இருந்து தொழிலாளர் கள் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர். என்னைப் போன்ற

***மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 ஏப்ரல் 7] [திரு. அ. ரகுமான்கான்.]

இளைஞர்களையெல்லாம் உற்சாகப்படுத்தியவர். அவர்களிடம் எனக்கு மரியாதை உண்டு. ஆனால் இன்று துரதிருஷ்ட வசமாக பதவியில் இருக்கிறார். இன்று அவர் சூழ்நிலைக் கைதியாக இருக்கிறார். அவர் இன்று இதுபோன்ற தொழிலாளர் கள் விரோதக காரியங்களைப் பார்த்து சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். பதவியைத்தான் முக்கியமாகக் கருதுகிற காரணத்தால் தொழிலாளர் நல அமைச்சர் என்று அவர்களுடைய அலுவலகத்திற்கு முன்னால் போர்ட் இருக்கிறது, அந்தத் தொழி லாளர் நல அமைச்சர் என்ற போர்டை மாற்றிவிட்டு தொழிலாளர் விரோத அமைச்சர் என்று போட்டால் சிறப்பாக இருக்கும். காரணம், அவர்கள் சூழ்நிலைக் கைதியாக இருக்கிறார்கள்.

அடுத்து நான் இன்னொன்றை இந்த மன்றத்தின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பல் வேறு சட்டங்களை எல்லாம் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. மி. வின்சென்ட்: ஒரு அமைச்சரைப் பார்த்து தொழிலாளர் விரோத அமைச்சர் என்று சொல்லலாமா, அது சட்டசபைக் குறிப்பில் இருக்கலாமா ?

திரு. அ. ரகுமான்கான்: நான் கையில் வைத்திருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை. நான் அதிக நேரம் ஆக்கிரமிக்கவில்லை. தொழிலாளர் பகுதி பற்றி மட்டும் சொல்கிறேன். சட்ட திருத் தங்கள் செய்து தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்பட் டுள்ளன. தொழிலாளர் நல ஆலோசனைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்று மேலும் சில சட்டங்களைக் கொண்டுவர இருந்த நேரத்தில் அரசாங்கம் கலைக்கப்பட்டது, அத் தகைய நல்ல சட்டங்களை மீண்டும் கொண்டுவந்து நிறை வேற்ற முயற்சிப்போம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது அன்று பல்வேறு முற் போக்கான சட்டங்களை நிறைவேற்ற முடியாததொரு சூழ் நிலை ஏற்பட்டு விட்டது. ஆட்சி கலைக்கப்பட்டது, ஆனால் மீண்டும் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் தொழிலாளர் களைப் பாதுகாக்கக்கூடிய நல்ல சட்டங்களைக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். இப்போது ஆட்சிக்கு வந் திருக்கிறார்கள். வந்ததற்குப் பிறகு சட்டங்கள் கொண்டு வந் தார்கள். எப்படிப்பட்ட சட்டம்? தொழிலாளர் நலச் சட்டங்களா என்றால் தொழிலாளர் விரோத சட்டங்களாகத் தான் இன்று இருந்துகொண்டிருக்கின்றன. சட்ட ஷரத்துக் களைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் இவற்றை ஏன் சொல் கிறேன் என்றால்—நான் சொல்வது சட்டமுன்வடிவிற்கு புறம் பான விஷயம் அல்ல. பில்லுக்கு இர்ரெலவன்ட் அல்ல.

ஆப்ஜெக்ட்ஸ் ஆன்ட்ஸ் ரீஸன்ஸில் தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்கிற உரிமை வேண்டாம் என்ற அடிப்படையில் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களிடம் எனக்கு மரியாதை உண்டு. அவர்கள் சபைக்கு வெளியே பல்வேறு கட்டடங்களை, அரசாங்கக் கட்டடங்களையெல்லாம் திறந்து வைக்கிறபோது கொத்தனாரை திறந்துவைக்கச் சொல்லி மரியாதை செலுத்துவதற்கு காரணம் கூட சொன்னார்கள். கட்டடம் கட்டுவது கொத்தனார். அவர் உழைப்பால் கட்டப்பட்டுள்ள கட்டடத்தை கொத்தனாரை வைத்து திறக்கச் சொல்வது என்பது உழைக்கும் வர்க்கத்திற்கு மதிப்பு செய்வதாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கத்தக்க கருத்துதான். பொற்கொல்லர்கள் தாலி செய்கிறார்கள். அவர்கள் உழைப்பை மதிக்க வேண்டும், அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கிறதோ! கொத்தனாரை வைத்து கட்டடம் திறப்பது என்றிருக்கிறது, இதில் என்ன பாணி கையாளப்பட்டிருக்கிறதோ, தெரியாது, அது வேறு விவகாரம். அதே கொத்தனார்கள் அண்ணாசாலையில் எங்களுக்கு ஹவுசிங் போர்டில் வீடுகள் கட்டித்தரவேண்டும், கூலி உயர்வு வேண்டும் என்று கேட்டபோது—கொத்தனார்கள் உழைப்பை மதிக்க வேண்டுமென்று கட்டடங்களை திறக்கச் சொல்கிறார்கள், நான் திறக்கமாட்டேன், சர்க்கார் கட்டடங்களை அவர்களே திறக்கட்டும் என்று சொல்கிறார்கள்—அண்ணாசாலையில் அவர்கள் ஊர்வலம் வந்தபோது அவர்களைப் பிடித்து சிறையில் போட்டுவிட்டார்கள். காரணம், வழக்குகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் முன்னுக்குப் பின் முரண்பட்டதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், நம்முடைய கற்றறிந்த அமைச்சர், லேணர்ட் பிரண்ட், மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, இந்த எஸ்ஸென்சியல் சர்வீஸ் மெயின்டனென்ஸ் ஆக்ட் கொண்டுவர இருக்கிற நீங்கள், ஒரு எஸ்ஸென்யஷில் சர்வீசை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். அது என்ன எஸ்ஸென்ஷியல் சர்வீஸ், இன்றியமையாதப் பணி என்றால், நீங்கள் இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்குவதுதான். இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும். இந்த சட்டத்திலே இருக்கக்கூடிய ஷரத்துக்கள், பிரிவுகள் எல்லாம் முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமானது. இன்னும் சொல்லப் போனால், நிலப் பிரபுத்துவ முதலாளிகளுக்கு ஏற்றதாக இருக்கிறது. சமூக அமைப்பிற்கு ஏற்றதாக இல்லை. தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் ஏராளமான பிரச்னைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், சோஷலிச அமைப்பிற்கு மதிப்பளிக்கின்ற சட்டமாக இல்லை. இன்றைக்கு போனஸ் கேட்டு ஸ்டிரைக் நடத்தப்படுகிறது. யாரும் தூண்டி விடவில்லை. அப்படியிருக்கும் போது ஏன் ஸ்டிரைக் நடக்கிறது என்று சொன்னால், சமூக அமைப்பிற்கு ஏற்றதாக இல்லை; முதலாளிக்கு ஏற்றதாகவும், நிலப் பிரபுக்களுக்கு ஏற்றதாகவும் இருக்கிறது. தனியார் சொத்துரிமை, பன்டமென்டல் ரைட் என்று சமுதாய அமைப்பிலே வருகின்றபோது, தொழிலாளர்களுக்கு பிரச்னைகள் இருக்கின்றன. அதை அவர்கள் தீர்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கடல் அலை ஓய்வதில்லை. அப்படியானால் தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்னைகளை தனியார் துறையாக இருந்தாலும் அல்லது பொதுத் துறையாக இருந்தாலும், எப்படி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக ஒருசில கோரிக்கைகளை வைக்கிறார்கள்; அதைப் பற்றி பிரதிநிதிகள் வாதாடலாம்; எடுத்துச் சொல்லலாம். ஆனால், அப்படி வாதாடும்போது தோல்வியடைந்தால், எடுத்துச் சொல்லுகின்ற கருத்திற்கு மரியாதை தந்து, ஏற்கவில்லையானால், தொழிலாளர் சமுதாயம், உழைக்கும் வர்க்கம் போராட்டம் என்ற ஒரு ஆயுதத்தை தவிர, அவர்களுக்கு வேறு வழி உண்டா? நிச்சயமாகக் கிடையாது. அந்த அடிப்படை உரிமைகளை மறுப்பது எந்தவிதத்திலே நியாயம்? இந்தச் சட்டப் பிரிவில் இவ்வளவு கெட்டிக்காரத்தனமாகச் சொல்லியிருக்கிறார்கள். எஸ்ஸென்ஷியல் சர்விஸ், அத்தியாவசியப் பணி என்னவென்று சொன்னால், நீங்கள் அத்தியாவசியப் பணி என்று எதையெல்லாம் கருதுகிறீர்களோ, அதையெல்லாம் அத்தியாவசியப் பணி என்று ஒரு பட்டியலிலே போட்டு காட்டியிருக்கிறீர்கள். வாட்டர் போர்டு ஒரு அத்தியாவசியப் பணி; அதைபோல் எலக்ட்ரிசிடி போர்டு அத்தியாவசியப் பணி; மருத்துவ மனைப் பணிகள் ஒரு அத்தியாவசியப் பணி; அதேபோல் மாநகராட்சி, பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளும் அத்தியாவசியப் பணி என்று சொல்லப்பட்டு, அதுவும் போதாது என்று, இந்தச் சட்டத்திலே ஒரு பிரிவைப் போட்டிருக்கிறீர்கள். இந்த சர்க்கார், அரசியல் சட்டத்தின் கீழ் 7-வது பட்டியலில் இரண்டாவது பார்ட்டிலே இந்த சட்டசபையில் எதில் எல்லாம் சட்டம் இயற்றும் அதிகாரம் இருக்கிறதோ, அதிலே எல்லாம் முழுமை. இந்த சர்க்கார் விரும்புகிறதை எசென்ஷியல் சர்வீஸ் என்று சொல்லி, ஒரு நோடிபிகேஷன் கொடுக்கலாம். மூன்று மாதங்களுக்குப் பிறகு புதுப்பிக்கலாம். இப்படி புதுப்பித்துக் கொண்டே, இந்த சட்டத்தை நீட்டித்துக் கொண்டே போகலாம். நான் கேட்கிறேன், இது என்ன நியாயம்? இந்த 3 மாதங்கள் என்பது, பிரசவத்திற்கு தாய்மார்கள் கெடு வைப்பது போல் இருக்கிறது. மொத்தத்தில், இது நீடிப்பதற்குத் தான் வழி செய்கிறது. ஆகவே, இந்த சர்க்கார் எதை எசன்ஷியல் சர்வீஸ் என்று சொல்லுகிறதோ அதை எல்லாம் எசன்ஷியல் சர்வீஸ் என்று சொல்லி, அவர்கள் உரிமையைப் பறிப்பதாகத் தான் இந்தச் சட்டம் இருக்கிறது. அதைத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து வருகிறது; கையாண்டிருக்கிறது. இது தவறானது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு, இந்த தவற்றிற்காக ஓராண்டு சிறை, 2,000 ரூபாய் அபராதம் என்று சொன்னால் என்ன நியாயம்? ஏற் கனவே, தொழிலாளர்கள் பல சிக்கல்கள்ளில் இருந்து கொண் டிருக்கிறார்கள். இருக்கின்ற சிரமத்தில், கோரிக்கைகள் எதுவும் இல்லை. கதவடைப்பு நடத்தப்பட்டு, தொழிலாளர்கள் வீட்டிலே பூனை உறங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் குழந்தைகளை கல்லூரிக்கு அனுப்ப முடியவில்லை; பள்ளிக் கூடங்களுக்கு அனுப்ப முடியவில்லை, வறுமை தாண்டவ மாடுகிறது. தங்கள் கோரிக்கைக்கு நியாயம்! கற்பிப்பதற்காக அவர்கள் வேலை நிறுத்தம் செய்வது தப்பு என்று சொல்வதும், ஒரு வருஷம் சிறைத்தண்டனை, 2,000 ரூபாய் அபராதம் என்று சொன்னால், அதற்கு என்ன பெயர்? இது கறுப்புச் சட்டம் அல்லவா? அராஜகத்தனமான சட்டம் அல்லவா? சர்வாதி காரியான ஹிட்லர் காலத்திலேகூட இப்படிப்பட்ட ஒரு சட்டம் போடப்படவில்லை என்பதை இந்த உழைக்கும் வர்க் கத்தின் சார்பாக உணர்ச்சிப் பூர்வமாக தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வேலை நிறுத்தத்தை வலியுறுத்தி, தொழிலாளர்கள் கூட்டம் நடத்தினால், அதற்கு போஸ்டர் அடித்தால், அல்லது உண்டியலிலே பணம் போட்டால் அதுவும்கூட தண்டனைக் குரியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலை எங்காவது இருக்க முடியுமா என்பதைத் தெளிவாக எண்ணிப் பார்க்கவேண்டும். அது மட்டுமல்ல. வாரண்டு இல்லாமல் போலீஸ் அதிகாரி யாரையும் கைது செய்யலாம் என்று மாண்பு மிகு சட்ட அமைச்சர், திரு. பொன்னையன் அவர்கள் நல்ல முறையில் கூறியிருக்கிறார்கள். 'ரெஸ்ஜுடிகேடா' என்று சட்டத்திலே சொல்லுவார்கள். நான் அறிந்த வரையில், ஒரு தவறுக்காக சட்டத்திலே இரண்டு முறை தண்டிக்கக் கூடாது. ஒரு கொலை செய்திருக்கலாம். அதற்கு இரண்டு கோர்ட்டு களிலே தண்டனை கிடையாது. ஆனால், சட்டத்திற்குப் புறம் பாகவோ, ஆங்கிலேய சட்டத்திலே சொல்வதுபோல், 'ரெஸ்ஜுடி கேடா' என்று சொல்வார்களே, அந்தப் பிரிவின் அடிப்படை யிலே, ஏற்கனவே டிபார்டுமெண்டிலே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது ஒரு புறத்தில். இன்னொரு புறத்திலே, இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, அதன்மீது தண் டிக்கப்படுவது. அந்த தண்டனையை அனுபவிக்கவேண்டும். ஒரு புறத்திலே டிசிப்பிளினரி ஆக்ஷனை டிபார்டுமெண்டிலே எடுப்பார்கள். மற்றொரு புறத்திலே, சட்டத்தின் அடிப் படையிலேயும் தண்டனை இருக்கும் என்று சொல்வது தவறு.

[முற்பகல் 11—40]

அப்படி சொன்னால் ஒரு தவறுக்கு இரண்டு தண்டனை கொடுப்பது the very basic of legality என்று இல்லவே இல்லை என்பதை.......





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, The rule of *Res Judicata* will not be applicable to departmental action.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொல்வதை தவறாக புரிந்து கொண்டார்கள் என்று கருதுகிறேன். நான் 'டாக்ட்ரின் ஆப் ரெஸ்ஜிடிகேட்டா' என்று சொல்கிறபோது, ஏற்கன்வே டிபார்ட்மெண்ட்டிலே அந்த தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். அதனாலே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :** இந்த மசோதாவைப் பற்றி பேசுங்கள். நேரமாகி விட்டது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாற்றுத் தலைவர் அவர்களே, டிசிப்ளினரி ஆக்ஷன் எடுத்து தண்டிக்கப்படுகிறார்கள்; இந்த சட்டத்தின் மூலமும் தண்டிக்கப்படுவார்கள் என்ற ஒரு நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் இதை நான் இங்கே குறிப்பிட்டேன். இன்றைக்கு டி.யூ.சி.எஸ், காமதேனு ஆனாலும் சரி, பால்வள நிறுவனமானாலும் சரி, சுற்றுலா ஊழியர்களாக இருந்தாலும் சரி, கருவூல ஊழியர்களாக இருந்தலும் காடம்பறை இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷனில் போராடுகிறவர் களாக இருந்தாலும், கார்ப்பரேஷன் ஊழியர்கள், சேலம் மாக்னசைட்டிலே போராடுகிறவர்களாக இருந்தாலும் இவர்கள் எல்லாம் ஏன் வேலை நிறுத்தம் செய்கிறார்கள்? வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்பதற்காக இல்லை. காரணம் பிரச்சினைகள் இருக்கின்றன. பிரச்சினைகளை, மானேஜ்மெண்ட்டோ, தனியார் துறையோ தீர்த்து வைக்காத காரணத்தாலே தான் அவர்கள் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பி. அண்ட் சி. மில்லை பார்த்தோம். போராடிய தின் காரணமாக தான் இன்றைக்கு அவர்களுடைய கோரிக்கை களில் வெற்றி பெற முடிந்திருக்கிறது. அதேபோல இன்னும் பலவித பிரச்சினைகளை இன்று பார்த்திருக்கிறோம். ஏற்கனவே இன்றைக்கு சட்டம் இருக்கிறது. இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட் இருக்கிறது. ''இல்லீகலாக'' ஸ்ட்ரைக் என்று சர்க்காரே நோட்டீஸ் தரமுடியும். அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. டெக்னிக்கல் பொசிஷனில், அந்த ஸ்ட்ரைக்கை தடைபடுத்த முடியும். ஆனால் ஜனநாயக உரிமைகளை பறிக்கிற விதத் திலே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு முதலாளிகள் 'லாக் அவுட்' செய்கிறார்கள். இது தொழிலாளி களுக்கு விரோதமாகச் செய்யப்படுகிறது. அதை இந்த சர்க்கார் சட்ட விரோதம் என்று அறிவிப்பார்களேயானால், இந்த சர்க்காரை நாம் பாராட்டலாம். தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்வதை சட்ட விரோதம் என்று சொல்வது எந்த

விதத்திலேயும் நியாயம் இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள் கூட ஸ்ட்ரைக் செய்யலாம், அதற்கு உரிமை கொடுக்கலாம் என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னார். சட்டமன்ற தேர்தலின்போது, தேர்தல் அறிக்கையிலே காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு, ஸ்ட்ரைக் பண்ணுகிற உரிமை இருக்கும் என்று சொன்னார்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தற்காலிகத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சட்ட நுணுக்கத்தைத் தெரிந்தவர், ரகுமான்கான் அவர்களுக்கு சொல்கிறேன். தயவுசெய்து எது உண்மையோ, அதைச் சொல்லுங்கள். எப்படியோ சொல்லி விட்டு, பதிலை பெறுவது, அல்லது கொடுத்தால் போகட்டும் பேப்பருக்கு என்பது வேண்டாம். தேர்தல் அறிக்கையிலே அப்படிப்பட்ட வாசகங்கள் இல்லை என்பது என் நினைவு. இருந்தால் அதை அவர் படித்து காட்டலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவல் துறையினர் நலம். தமிழக காவல்துறைக்கு இந்தியா முழுவதிலும் ஏற்பட்டிருக்கிற சிறப்பையும் — தங்களுடைய சம்மதத்துடன் பேசுகிறேன்—புகழையும் கருணாநிதி அவர்கள் ஆட்சிக்காலத்தில் காவல்துறை. . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):** எந்தப் பத்திரிகை என்பதைத் தெரிவியுங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். இப்படி பத்திரிகைகளிலே வந்ததை வைத்துக் கொண்டு, அல்லது இருப்பதாகச் சொல்லிக் கொண்டு படிப்பதை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ளப்போகிறதா என்பதை தயவுசெய்து தெரிவிக்க வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணா பத்திரிகையில் வந்திருக்கிறது, தேர்தல் அறிக்கையில்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):** உறுப்பினர் தயவுசெய்து உட்கார வேண்டும். அண்ணா பத்திரிகையாக இருந்தாலும், வேறு எந்த பத்திரிகையாக இருந்தாலும் செய்தித் தாளிலே வருவதை வைத்துப் பேசக் கூடாது என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். ஆகவே செய்தி தாளில் வந்த செய்தியை வைத்துப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** இது செய்தித் தாளல்ல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை.

**திரு. கோவைத் தம்பி:** மாண்புமிகு தாற்காலிகத் தலைவர் அவர்களே, நடைபெற்ற விவாதத்திலே தாங்கள் எந்தப் பத்திரிகை என்று கேட்காவிட்டால் அவர் பொதுக்கூட்டங்களிலே





சென்று சபாயநாயகருக்கும் தனக்கும் நடைபெற்ற விவாதங்களை திருத்தி சபாநாயகருக்கு இழுக்கு ஏற்படுகிற விதத்தில் பேசுகின்றார் என்றும், இதற்கு முன்பு கூட திரு. ரகுமான்கான் அவர்கள் பொள்ளாச்சியில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்திலே சபாநாயகர் உட்காரப்பா என்று சொன்னபோது உட்காருகிறேன் அப்பா என்று பேசிய பேச்சுக்கள் இருக்கின்றன, நான் அந்த டேப் ரிக்கார்டை வேண்டுமானால் போட்டுக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):** நான் ஏற்கெனவே அதுபற்றி அபிப்பிராயம் சொல்லி விட்டேன். ஆகவே அதைப்பற்றி மேலும் விவாதிக்காமல் திரு ரகுமான்கான் மசோதாமீது பேசி முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** திரு. ரகுமான்கான் பேசினார். முதலமைச்சர் நீங்கள் பேசுவதற்கு ஆதாரம் உண்டா என்று கேட்டார். அவர் கேட்டதற்குப் பிறகு தன்னிடமுள்ள ஆதாரத்தை அவர் படிக்கிறார். அதைப் படிக்காமல் எப்படிச் சொல்ல முடியும்? அவர் சொல்கிறார். கட்சியின் பத்திரிகை, அது மட்டுமல்ல; அந்தக் கட்சிப் பத்திரிகையிலே அது சாதாரண செய்தியல்ல, தேர்தல் பிரகடனத்திலே இருக்கிற ஒரு பகுதியை முதலமைச்சருக்கு விளக்குவதற்குப் படிக்கிறார். ஆகவே அதிலே தவறு ஒன்றும் கிடையாது. அவர் படித்து முடித்த பிறகு சந்தேகம் இருந்தால் முதலமைச்சர் மறுக்கலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):** ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்தித் தாளில் வருவதை வைத்துக் கொண்டு இங்கே பேசலாமா என்று கேள்வி கேட்டார்கள். அந்தக் கேள்விக்கு நான் பதில் அளித்தேன் அண்ணா பத்திரிகையாக இருந்தாலும் வேறு எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் செய்தித்தாளிலே வருகிற செய்தியை வைத்துக் கொண்டு இங்கே பேசவேண்டாம் என்று. அதுபற்றி இங்கே ஏற்கெனவே விவாதம் ஆகி முடிவு ஆகியிருக்கிறது என்பதைத்தான் நான் சொன்னேன்.

**திரு. துரை ராமசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே பத்திரிகையிலே வந்ததை இங்கே படிக்க வேண்டுமென்றாலும் முன்பே உங்களுடைய அறைக்கு வந்து உங்களிடம் அதைக் காட்டி முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அப்படியில்லாமல் திடீரென்று படிப்பதை அனுமதிப்பது இந்தச் சபையின் மரபல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):** அனுமதிக்கவில்லை.

**திரு. க. அன்பழகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தித் தாள்களில் வருகிற செய்திகளைத் தங்களிடத்திலே காட்டாமல் படிப்பது முறையல்ல. செய்தித் தாள்களிலே

வருவது எல்லாம் செய்திகள் அல்ல, ஒரு கட்சியினுடைய அறிக்கைகள், தேர்தல் அறிக்கை அப்படிப்பட்ட கருத்துக்கள் வருமானால் அந்தக் கருத்துக்களை முதலமைச்சர் ஒப்புக்கொள்ளலாம் ஒப்புக்கொள்ளாமல் மறுக்கவும் செய்யலாம். அது என்னுடைய கருத்தல்ல என்றும் சொல்லலாம். ஆனால் அறிக்கையைப் படிக்கிறபோதே அந்தக் கருத்தை தெரிந்துகொள்கிறபோது அது ஒரு வெறும் செய்தி என்று சொல்வது முறையல்ல. அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றுகூடச் சொல்லலாம், அது வேறு-பத்திரிகையிலே வந்தது தவறு என்றுகூட சொல்லலாம் ஆதாரம் காட்டச் சொன்னதால் அவர் அதைப் படிக்கிறார். அதை அனுமதிப்பதும் அனுமதிக்காமல் இருப்பதும் தங்களுடைய விருப்பம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்):** அந்தக் கட்சியின் ஸ்தாபகர் என்ற முறையிலே அந்தத் தேர்தல் அறிக்கையிலே இல்லை என்று சொன்னதற்குப் பிறகும் அதற்கு ஒரு ஆதாரம் இருப்பதாகச் செய்தித் தாளிலே வருவதை ஆதாரமாகக் காட்டக் கூடாது என்றுதான் சொன்னேன்.

**திரு. க. அன்பழகன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அதை ஆதாரமாகக் காட்டக் கூடாது என்று சொல்வதைவிட பத்திரிகையிலே வந்த அந்த அறிக்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லலாமே தவிர சொ லக் கூடாது என்று சொன்னால் வாதமே நடத்த முடியாது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்வதற்கு நான் இப்போது தயாராக இல்லை. காரணம், நான் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்வதற்கும் ஒரு எல்லை உண்டு. ஆனால் வேண்டுமென்றே பிரச்சினையை திசைமாற்ற எதை எதைச் சொல்லக் கூடாதோ அதையெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** இன்றைக்கு மேற்கு வங்கத்திலேகூட இருக்கக்கூடிய சூழ்நிலை என்னவென்றால், இடதுசாரி சர்க்கார்கள் இந்தியா முழுவதும் பல மாநிலங்களிலே இருக்கின்றன, அங்கேகூட இதுபோன்ற தடைச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. ஆனால் இங்கே முதலமைச்சரும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தொழிலாளர்களுக்கு நண்பனாக இருப்போம் என்று சொல்லிவிட்டு தொழிலாளர்களுக்கு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைகூட எடுத்து சொல்வதுகூடாது என்ற முறையிலே அப்படிச் சொல்வது கூட சட்ட விரோதம், ஒரு வருடம் ஜெயில், 2 ஆயிரம் ரூபாய் அபாராதமென்று கொண்டுவரப்படுகிற இந்தச் சட்டம் சரியான





தல்ல. கோரிக்கைகளை வைப்பது சட்டத்திற்கு விரோதமானது அல்ல. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் ஆலமரத் தடியில் உள்ள கிளி ஜோசியரிடம் உள்ள கிளிகூட இன்றைக்கு எனக்கு போனஸ் கொடு என்று கேட்கிற காலம் இது. ஆகவே இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கடுமையாக எதிர்கிறோம்., இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லி இருப்பதுகூட ஒரு வார்த்தைக்குத் தானே தவிர வேறல்ல. இதை வாபஸ் வாங்கி இன்னும் சொல்லப்போனால் நம்முடைய முதலமைச்சர் கொண்டுவந்து இருக்கிறோம் காலாவதியாகிவிட்டது என்று சொன்னார், ஏதோ இந்தச் சட்டத்தை கொண்டு வந்தாலும் யாரிடத்திலேயும் பயன்படுத்தமாட்டோம், ஒரு துப்பாக்கியைப்போல செல்ப்-டிபென்ஸ்க்காக வைத்திருக்கிறோம், சுட்டுவிடமாட்டோம் என்று சொல்லலாம்.

[முற்பகல் 11-50]

நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், சாதாரணமாக செல்ப் டிபென்ஸ் என்று சொல்லி, துப்பாக்கியானது புத்திசுவாதீனம் இல்லாதவர்ளிடத்திலே இருந்தாலும்கூட எல்லாரையும் சுட்டுவிடக் கூடிய நிலைமை ஏற்படும், எனவே, இந்தச் சட்டமே கூட வாபஸ் பெறப்பட வேண்டும், இந்தச் சட்டம் அசுரச் சட்டம், இந்தச்சட்டம் கறுப்புச் சட்டம், சட்டமன்ற வரலாற்றில். துக்க நாள் என்பதைச் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவினைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சங்கரய்யா உள்ளிட்ட பலர் பல்வேறு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக இதில் உள்ள பல பிரச்சினைகளைப் பற்றி, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டுமென்றுகூடக் குறிப்பிட்டு அது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி போன்றவர்களெல்லாம் பேசியிருக்கிறார்கள்.

இந்த அரசினுடைய கொள்கையைப் பொறுத்தவரைக்கும் கடந்த காலத்திலேயும் சரி, தற்போதும் சரி, தொழிலாளர் நலனைப் பேணிப் பாதுகாப்பதைப் பொறுத்தவரையில் மிகவும் அக்கறையுடன் இருக்கின்ற அரசு என்ற அடிப்படையில் எண்ணற்ற சலுகைகளைத் தொழிலாளர் நலன் கருதி வழங்கியிருப்பதை இந்த மன்றம் அறியும்.

ஆனால், இந்தச் சட்ட முன்வடிவினுடைய முக்கியமான நோக்கம் என்னவென்றா . When we have to take care of the sectional interest of the working class, we have to simultaneously take care of the interest of the community at large என்ற அடிப்படையில் ஓர்க்கிங் கிளாஸினுடைய நலனைப் பேணி பாதுகாக்கின்ற அதேநேரத்தில், பொது மக்களின் நலனையும்

[திரு. சி. பொன்னையன்] [1981 ஏப்ரல் 7

பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக்கின்ற காரணத்தினாலே சிற்சில நேரங்களில் உண்மையான தொழிலாளர்களுக்கு பொதுமக்களுக்கு இன்னல் விளைவிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாதபொழுதும் தூண்டுதலுக்கு ஆளாகி, ஆட்சிக்குத் தொல்லை தருவது, மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னலைப் பற்றி மனதில் சிறிதும் எண்ணாத நிலை, அதைப்பற்றிக் கவலைப்படாத நிலை என்றெல்லாம் வருகின்றபொழுது பொதுமக்கள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆட்சியின் எண்ணம், பொதுமக்களுக்கு வேண்டிய இன்றியமையாத தேவைகள் தங்குதடையின்றிக் கிட்டியாக வேண்டும். சில சுயநலமிகள் நடவடிக்கைகள் காரணமாகத் தொழிலாளர் வர்க்கம் அதிலே ஈடுபடுத்தப்பட்டு, அதன் விளைவாக அவர்களின் நடைமுறை பொதுமக்களின் நன்மைகளுக்குத் தடைக் கல்லாக இருந்துவிடக்கூடாது என்றுதான் இந்தச் சட்டமுன் வடிவில் பல ஷரத்துக்களைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனாலும் இந்த அரசினுடைய எண்ணத்தைப் பொறுத்தவரைக்கும் பொதுமக்களுக்கும் நன்மை கிட்டியாக வேண்டும், பெரும்பான்மையான பொதுமக்களுக்கு அத்தியாவசியத் தேவைகள் எந்தவிதத்திலேயும் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமென்பது.

அதிலும் குறிப்பாக 80 சதவீதம், 90 சதவீதம் மக்கள் நமது மக்கள் தொகையில் சாதாரண மக்கள், நகரப்புறத்திலே வாழ்கின்றவர்கள் 55 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழ் நிலையில் இருக்கும் மக்களாகவும், கிராமப் புறங்களிலே கிட்டத்தட்ட 60 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழ் நிலையில் இருக்கின்ற மக்களாகவும் இருக்கின்ற காரணத்தினால், மக்களின் பொதுவான இன்றியமையாத் தேவைகளுக்குத் தடங்கல் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை மனத்திற்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு எதிராக எதையும்.... [குறுக்கீடு] நான் பேசிய பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம்.

I will complete. I am not now yielding. The hon. Member may take it up later.

எனவே தொழிலாளர்களுக்கு கடந்த காலத்தில் இது காறும் இந்த அரசு எந்த அளவிற்கு அவர்கள் நலன் கருதி நடவடிக்கைகளை மேற்கொண்டதோ அதேபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அரசு கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தொழிலாளர் நலன் கருதி அக்கறையோடு பேசியிருக்கின்றபொழுது



1981 ஏப்ரல் 7] [திரு. சி. பொன்னையன்]

அதேநேரத்தில், பொதுமக்களின் நலன் குறித்தும் நாம் கருத்து செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, இந்த இரண்டு பிரச்னைகளும் இதிலே இருப்பதால் இவற்றையெல்லாம் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்காக, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள், சங்கரய்யா, கருப்பையா, அம்பிகாபதி, குமரி அனந்தன், நெடுமாறன் ஆகியவர்கள் பேசிய கருத்துக்களையொட்டி இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பலாம் என மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களை நான் வேண்டுகின்றேன். பொறுக்குக் குழுவிலே யார் யார் இருப்பார்கள் என்ற பட்டியல் பின்னர் அவைக்குத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்பதற்கு ஒரு தீர்மானத்தை அமைச்சர் மொழிய வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1981) சட்டப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும்"

(உறுப்பினர்கள் எண்ணிக்கையும் பெயர்களும் பின்னர் அறிவிக்கப்படும்.)

Thiru A. RAHMANKHAN: I have already moved an amendment. As the mover of the amendment, I have to say some points.

Mr. SPEAKER: The hon. Member has not given any amendment.

Thiru A. RAHMANKHAN: I have given an amendment and I have spoken on the amendment. Please refer the matter. How can I get a chance, if I have not moved the amendment? I have got a chance.

Mr. SPEAKER: The hon. Member is getting chance even otherwise. That is immaterial.

Thiru A. RAHMANKHAN: I am sorry. I have to make my submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே திரு. என். சங்கரய்யா. திரு. ரா. உமாநாத், திரு. கே. ரமணி, திரு. என். வரதராஜன், திரு. ஹேமச்சந்திரன், திரு. சோ. அழகர்சாமி, திரு.

[பேரவைத் தலைவர்] [1981 ஏப்ரல் 7

பொ. உத்திராபதி, திரு. பூங்காவனம், திரு. மு. அம்பிகாபதி ஆகியோர்தான் பொதுத் திருத்தத் தீர்மானத்தைக் கொடுத்தி ருக்கிறார்கள்.

Thiru A. RAHMANKHAN : Hon. Deputy Speaker has put his signature when I gave my amendment yesterday.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'பில்லை' விவாதத் திற்கு எடுத்துக் கொண்ட பிறகு எதை வேண்டுமானாலும் கொண்டு வரலாம் என்றால் அது முறை அல்ல.

திரு. துரைமுருகன்: 'அமென்ட்மென்ட்' எப்பொழுது வேண்டுமானாலும் கொடுக்கலாம், 'தேர்ட் ர்டிங்குக்கு' உள்ளே கொடுக்கலாம், (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மன்றத்திலே சில முறை கள் உண்டு. திரு. ரகுமான்கான் எழுதிக் கொடுத்த அமென்ட் மென்ட் என் அலுவலகத்திற்கு வரவே இல்லை. நேற்று கொடுத்திருக்கிறேன் என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளலாமே தவிர, அந்த அமென்ட்மென்ட் என்னுடைய அலு வலகத்திற்கு வந்து சேரவே இல்லை

திரு. அ. ரகுமான்கான்: பின், என்னை எப்படிப் பேசக் கூப்பிட்டார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களை எப்படிப் பேசக் கூப்பிட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதையே ஆராய்ச்சி பண்ண வேண்டும் போலிருக்கிறது. (கூச்சல், குழப் பம்) ஒவ்வொரு சட்ட முன்வடிவிலும் ஒவ்வொரு கட்சியிலும் சாதாரணமாக ஒருவர், இருவர் பேசுவது வழக்கம். எல்லாச் சட்டமுன்வடிவுகளிலும் நீங்களே பேசிப் பழகி இருப்பதால், உங் களைக் கூப்பிட்டு இருப்பார்கள். அவ்வளவுதான். வேறொன் றும் முக்கியத்துவம் இல்லை. அமைச்சர் அவர்கள் ஒரு தீர் மானத்தை மொழிந்திருக்கிறார்கள். செலக்ட் கமிட்டிக்கு அனுப்பலாம் என்று.

திரு. அ. ரகுமான்கான்: அதன்மீது பேசலாம் அல்லவா? செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவதைப் பற்றி பேசக் கூடாதா?

திரு. துரைமுருகன்: விவாதம் நடந்து கொண்டிருக்கிற நேரத்திலே, அமைச்சர் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பலாம் என மொழிகிறார். ஆகவே, அது சம்பந்தமாகக் கூட நாங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செலக்ட் **கமிட்டியிலே** கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.



1981 ஏப்ரல் 7]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: எல்லோரும் செலக்ட் கமிட்டிக்குப் போவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்திக்கு நன்றாகத் தெரியும். செலக்ட் கமிட்டியிலே முக்கியமான எல்லா கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருப் பார்கள். ஆகவே, அவர்கள் மூலமாக, உங்கள் கருத்துக்களை செலக்ட் கமிட்டிக்குச் சொல்லி, அதன்மூலமாக, பிரச்னைகளை விவாதிக்க வேண்டும். செலக்ட் கமிட்டிக்குப் போவதற்குள்ளே நானே விவாதிக்கிறேன் என்று சொன்னால், பிறகு செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய தேவையே இல்லை. இதுவரை அப்படித்தான் இருக்கிறது, அதுதான் முறையுங்கூட.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவு கொண்டு வரப் பட்டு, அரசின் சார்பிலே செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டு மென்ற தீர்மானமும் மொழியப்பட்டதாலே, அவர்கள் அமென்ட்மென்ட் கொடுத்திருந்தாலும், இதிலே பேசுவதற்கு ஒன் றும் இல்லை. செலக்ட் கமிட்டியிலே எல்லாக் கட்சிகளின் சார்பிலும் உறுப்பினர்கள் வருவார்கள். அங்கே விவாதிக்கப் பட்டதற்குப் பின்னாலே. சட்ட முன்வடிவு சட்டமன்றத்திற்குத் திரும்ப வரும். அப்பொழுது அதிலே கேட்கவோ, அமென்ட் மென்ட் கொடுக்கவோ, விவாதிக்கிறபொழுது இடம் இருக்கிறது. செலக்ட் கமிட்டியிலும் விவாதிப்பதற்கு இடம் இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நாங்கள் எப்பொழுதும் பேச லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செலக்ட் கமிட்டியிலே. யார், யார் உறுப்பினர்கள் என்று இன்னும் அறிவிக்கவில்லை. செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் இங்கே பேசுவது மரபும் அல்ல. நீங்களே கூட செலக்ட் கமிட்டியிலே உறுப்பினராக வரலாம் ஆகவே, செலக்ட் கமிட்டி உறுப்பினர் பெயர்கள் அறிவிக்கிற வரையில் அதைப்பற்றி பேசுவது என்பது இந்தச் சட்டமன்றத் தில் மரபும் அல்ல, முறையும் அல்ல.

திரு. அ. ரகுமான்கான்: நாங்கள் அதையே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்ப்பதற்கு உங்களுக்கு முழு உரிமையும் உண்டு. அது வேறு விவகாரம். நீங்கள் எதிர்த்துக் கொண்டே இருக்கலாம்.

[நண்பகல் 12–00.]

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைக் குறித்து தொடக்கம் முதலே எதிர்க்கட்சியிலே உள்ள அத்தனைபேரும் எதிர்ப்புத்

தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரக் கூடாது, ஏனென்றால் ஆளும் கட்சியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கொள்கைக்கு இது மாறானது என்ற அடிப்படையிலும், இந்தச் சட்டம் எதிர்காலத்தில் பல்வேறு வகைகளில் தொழிலாளர்களின் உரிமையை நசுக்கிவிடும் என்று அத்தனை கட்சிகளுமே எடுத்துச் சொல்லி வாதாடிய பின்னரும் அந்தக் கருத்துக்களை எல்லாம் இந்த அரசு எந்த வகையிலும் பரிசீலிக்க முற்படாமல், ஏற்றுக் கொள்ள மறுத்து, அந்த நிலையிலேதான், பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று தீர்மானம் அல்லது திருத்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டு, அதன் அடிப்படையில் இங்கே விவாதம் நடைபெறுகிறது. இவ்வளவு நேரம் விவாதம் நடைபெற்ற பின்னால் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன்வந்திருப்பது அல்லது தலைவர் அவர்கள் மூலமாக தீர்மானம் கொண்டு வர முன்வந்திருப்பது இந்தச் சட்டத்தை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. பொறுக்குக்குழு என்று வருகிறபோது ஆளும் கட்சியில் இருப்பவர்கள் தான் பெரும்பான்மையாக இருப்பார்கள். அந்தப் பெரும்பான்மையின் அடிப்படையில் நிறைவேற்றிவிடலாம் என்ற எண்ணத்தோடுதான் இது அறிவிக்கப்படுகிறதே தவிர, இங்கேயுள்ள பெரும்பாலான கட்சிகள், தோழமைக் கட்சிகள், நேரடியான எதிர்க்கட்சிகள் மற்ற கட்சிகள் அத்தனைபேரும் எழுப்பிய அடிப்படைக் கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிற தன்மையைக் காண முடியவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று நடந்த விவாதத்தில் பொறுக்குக் குழுவிற்கு விடுங்கள் என்று தான் கோரிக்கை இருந்தது.

**திரு. க. அன்பழகன்:** இப்போது கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வாதத்தை எடுத்து வைத்தார்கள். ஒரு வாதத்தை எடுத்து வைக்கிறபோது எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லவேண்டிய கடமை ஏற்பட்டு விடுகிறது. 100-க்கு 10 பேராக இருக்கிற தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுகின்றபோது 100-க்கு 90 பேராக இருக்கிற பொதுமக்கள் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்கிற காரணத்தாலே, சுயநலமிகள் தூண்டுதல் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் பொதுநலனுக்கு மாறாகச் செயல்படுகிற காரணத்தாலே, பெரும்பாலானவர்களின நலனுக்கு பாதுகாப்புத் தருகிற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். இந்தக் கருத்துக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டிய கடமையும், அதற்கு முழு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பும் எனக்கு இருக்கிறது





100-க்கு பத்து பேராக இருக்கும் ஆர்களைகூடு லேபர் போராட்டம் நடத்தினால் 100-க்கு 90 பேராக இருக்கும் பொதுமக்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிற வாதத்திற்குப் பதிலாக நான் ஒன்றைச் சொல்கிறேன், 100-க்கு ஒருவர் அல்லது 1000-க்கு 5 பேர் அல்லது இலட்சத்துக்கு 30 பேர் என்று இருக்கக்கூடிய முதலாளிகளுக்கு சாதகமாக. அந்தத் தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கிற ஒரு சட்டமாக, முதலாளிகளுக்கு உதவிபுரிகிற ஒரு ஆயுதமாக இது இருக்கிறது என்கிற ஒரு பெரிய அபாயமும் இங்கே இருக்கிறது. ஒரு வேளை ஆளும் கட்சியில் இருப்பவர்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமான எண்ணம் கொண்டவர்களாக இருந்து, இந்தச் சட்டத்தைப் பயன் படுத்தாமல் இருப்போம் என்று சொன்னாலும் கூட, சட்டப் புத்தகத்தில் இந்தச் சட்டம் இடம் பெற்றுவிடுமானால், என்றைக்கும் அந்த அபாயம் இருக்கும் என்பதால், இந்தச் சட்டத்தை பொறுக்குக் குழுவிற்கு விடுவதற்கு இந்த அரசு முன்வந்தாலும் கூட, திராவிட முன்னேற்றக் கழகம் முதலிலே எடுத்துச் சொன்ன அந்த நோக்கத்திற்கு ஏற்றதாக இது இல்லை, ஆகவே, இந்தச் சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தைக் கைவிடுவதற்கு அரசாங்கம் மறுபரிசிலனை செய்யாவிட்டால் எங்களுடைய முழு எதிர்ப்பை, இந்த்ச் சட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை, பொறுக்குக்குழுவிற்கு விடுவதனால் கூட பயன் ஏற்படாது என்பதால். நாங்கள் சம்மதிக்கவில்லை என்கிற கருத்தை அவைக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையில் நாங்கள் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலெக்ட்ரிசிடி போர்ட், டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷன் எல்லாம் தனி முதலாளிகள் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பொறுக்குக்குழுவிற்கு விடுவதைப் பற்றிச் சொல்கிறபோது. பொறுக்குக்குழுவில் மெஜாரிட்டியாக ஆளும் கட்சியினர் இருப்பதால் முடிவு வேறுவிதமாக அமைந்து விடாது என்று சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில், எண்ணிக்கையின் அடிப்படையில் முடிவு எடுத்து விடுவது அல்ல, எண்ணம், தன்மை, அதனுடைய நோக்கம், நல்ல ஆலோசனை ஆகியவை அனைத்தையும் கருத்தில் கொண்டுதான் எந்த முடிவுக்கும் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சமாதானத்திற்காக இந்த விளக்கம் சொன்னாலும், பொறுக்குக்குழுவில் எப்போதும் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை உள்ளதாக அமைந்து விடுவது இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய நல்லெண்ணத்தை நிரூபிக்க வேண்டுமானால் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையாக உள்ள குழுவாக அமைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபையில் ஆளும் கட்சி மெஜாரிட்டியாகத்தான் இருக்கும். ஆகவே, இந்த வாதம் எப்படி அதற்குப் பொருந்தும் ?

**திரு. க. அன்பழகன் :** பொறுக்குக் குழுவிற்கு விட்டால் கூட எண்ணத்திற்குக் கிடைக்கும் வெற்றியை விட எண்ணிக்கைக்கு கிடைக்கிற வெற்றிதான் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தாலே இந்தச் சட்டம் எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்குக் கைக்கொள்ளப்படுகிற எந்த முறையையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும் என்று திருத்தம் தந்து இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பொறுக்குக் குழுவிற்கு விடுவதைப் பற்றி கவலை இல்லை, சட்டத்தையே எதிர்க்கிறோம் என்று சொல்கிறார்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னது கட்சியின் கொள்கை அல்லவா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** அந்தத் திருத்தமும் இங்கே ஏற்கனவே முறைப்படி தரப்படவில்லை என்று கூறி ஏற்றுக் கொள்ளவில்லை என்று சபாநாயகர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அந்தக்கருத்தை எடுத்துச் சொன்னார் என்றால் இப்படியெல்லாம் எடுத்துக் கூறினாலாவது தெளிவு பிறக்காதா என்ற ஒரு முயற்சியில் எடுத்துச் சொல்லப்பட்டதே தவிர, அந்த விவாதத்தில் தெளிவு பிறக்காவிட்டால் எதிர்ப்புகளை வேறு விதத்தில் தெரிவிக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, ஒரு திருத்தம் கொடுக்கும்போது 'நெகடிவ்' ஆக கொடுக்க முடியாது. ஆகவேதான் பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்று கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

'' தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1981) சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் 22 பேர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் உறுப்பினர்களின் பெயர் பின்னர் அறிவிக்கப்படும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

**திரு. க. அன்பழகன் :** சட்டமுன்வடிவை ஆய்வுக் குழுவிற்கு அனுப்பினாலும் பயன் ஏற்படாது என்பதால் எங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்.)



## ஆ. மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1981) * ஆய்வுக்கு— எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் '' என்று மொழிகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற விளம்பரச் சட்டம் தேவையற்றது, காலத்திற்கு ஒவ்வாதது. செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தாலும் செய்யத்தகாத காரியங்களிலே மின்சார வாரியம் ஈடுபடக் கூடாது என்ற கருத்தில் நான் இந்தச் சட்ட முன்வடிவை கடுமையாக எதிர்க்கிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய மிக முக்கியமான நோக்கமே மின்சாரக் கட்டணத்தைக் கட்டாதவர்களுடைய பெயர்களைப் பத்திரிகையிலே விளம்பரப் படுத்துவதாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நான் இந்த மன்றத்திலே சொல்வதெல்லாம் இன்றைய தினம் மின்சார வாரியத்திற்கு விவசாயிகளிடத்திலிருந்து வரவேண்டிய மின் கட்டணம் மட்டும்—நேற்றைக்கு முன்தினம் மின்சார வாரியத் தலைவர் அறிக்கை மூலம் தெரிவித்து இருக்கிறார்— ஏறத்தாழ 23 கோடி ரூபாய் அளவுக்கு பாக்கி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

இவ்வளவு அதிகமான தொகை மின்சார வாரியத்திற்கு கிடைக்க வில்லை என்றால் மின்சார வாரியம் சரியாக செயல்படாது என்பதிலே கருத்து வேறுபாடு கொண்டவர்கள் அல்ல நாங்கள். வரவேண்டிய பாக்கிகளை எல்லாம் முறைப்படி காலாகாலத்தில் வசூல் செய்யவில்லை ; வசூல் செய்யாமல் விட்ட குற்றச்சாட்டு ஆளும் கட்சியினரைச் சாரும். ஆகையால்தான் இந்த அளவுக்கு அதிகப்படியான தொகை வசூலிக்கப்படாமல் இருந்து விட்டது. அதற்கு நீங்கள்தான் காரணம் என்று ஆளும் கட்சியினரைப் பார்த்து எங்களால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மின்சாரம் சம்பந்தமாக 1978 டிசம்பர் மாதத்திலேயே விவசாயிகள் உயர் மட்டக் குழுவைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் பேசும்போது

---

*1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 ஏப்ரல் 7

ஒரு முடிவை மேற்கொண்டார்கள். நாங்கள் எல்லோரும் சொல்லப்பட்ட அந்த முடிவை ஏற்றுக் கொண்டோம். நிலுவையிலே உள்ள ஒரு மாத பாக்கியையும், நடைமுறையில் உள்ள ஒரு மாதக் கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டுமென்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதை அமுல்படுத்தாத குற்றம் யாரைச் சேர்ந்தது? அதை வசூல் செய்யாத குற்றம் உங்களை அல்லவா சேரும், ஆகையால் அவைகளை காலாகாலத்தில் வசூல் செய்யாமல் விட்டுவிட்டதால் இந்த 23 கோடி ரூபாய் அளவுக்கு நிலுவை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இன்றைக்கு போலீசாரையும் மற்றுமுள்ள அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு கிராம மக்களை மிரட்டி, விரட்டியடிக்கின்ற பணியில் ஈடுபட்டிருப்பதை எங்களால் நிச்சயமாக கண்டிக்காமல் இருக்க முடியவில்லை என்று நான் கூறிக்கொள்கிறேன்.

நிலுவையினை எவ்வளவு விரைவாக வசூலிக்க வேண்டுமோ விவசாயிகளுக்குத் துன்பம் இல்லாமல், தீங்கு இல்லாமல் எவ்வளவு சீக்கிரமாக வசூலிக்க முடியுமோ அவ்வள்வு சீக்கிரத்திலே வசூ-

(பிற்பகல் 12-10)

லிப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஏன் இந்த மாதிரி விளம்பரத்தைப் போடுகிறீர்கள். அதன் மூலம் வகுப்புக் கலவரங்களையும், ஜாதிக் கலவரங்களையும் தூண்டிவிடுகின்ற அளவுக்குத்தான் நிலைமை ஏற்படும். அந்த வகையிலேதான் அண்மையிலே கூட விளம்பரம் செய்யப்பட்டது. " அரிசன மக்களே உங்களுடைய வீடுகளுக்கு ஏன் விளக்கு வரவில்லை தெரியுமா, இன்னார் இன்னார் மின்சார கட்டணம் செலுத்த வில்லை அதனால்தான், விவசாயிகளே உங்களுக்கு மின்சாரக் கனெக்ஷன் கிடைக்காமல் இருப்பது எதனால் தெரியுமா? இன்னார் இன்னார் மின்சாரக் கட்டணத்தைக் கட்டவில்லை, ஆகவேதான் " என்று சொல்கின்ற வகையிலேதான் இவ்வாறு விளம்பரம் செய்யப்படுகின்றது. ஒருவர் மின்சார பாக்கி தராததால்தான் மற்றவருக்கு வீட்டுக்கு விளக்கு இல்லை என்று சொல்வது போன்று அதாவது அமைச்சருக்கு வேண்டியவர் மின்சார பாக்கியைக் கட்டாததால்தான் மற்றவர்களுக்கு மின்சாரக் கனெக்ஷன் கிடைக்கவில்லை என்று சொல்வது போன்று விளம்பரம் செய்வது நல்ல காரியமல்ல, நான் ஏன் அமைச்சர் என்று சொல்கிறேன் என்றால் அவர்கள் எங்கள் ஊருக்குப் பக்கத்திலே உள்ளவர் என்பதால்தான். ஆகவே அப்படி விளம்பரம் செய்வதன் மூலம் கலவரம் ஏற்படுத்துவதற்குத்தான் அரசாங்கம் ஏற்கெனவே முயற்சி செய்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் மின்சார கட்டண பாக்கியைக் கட்டக் கூடாது என்று என்றைக்குமே குறுக்கே நின்றதில்லை ஆனால் கடந்த மூன்றாண்டுக் காலமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மின்சாரக் கட்டணத்தை சரியாக வசூலிக்கவில்லை எப்பதை என்னால் சொல்லாமல்



1981 ஏப்ரல் 7] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

இருக்க முடியவில்லை. ஆகவே இன்றையதினம் எப்படி இந்த அளவுக்கு மின்சாரக் கட்டண பாக்கி இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. நான் தற்காலத்திலே இருக்கின்ற நிலைமையைச் சொல்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்று காலையிலே கூடச் சொன்னார்கள், 6 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படும் என்று. இது என்ன 6 மணி நேரம், 6 மணி நேரம் கொடுப்போம் என்று சொல்பவர்கள் குறைந்தபட்சம் இரவு பூராவும் அதாவது 10 மணியிலே இருந்து காலை 6 மணி வரையிலே மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா? எங்களுடைய ஆட்சிக் காலத்திலே 70 சதவீதம், 50 சதவிதம் 60 சதவீதம் என்று மின்சாரக் கட் இருந்த போதே இரவு முழுவதும் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டதே. ஆனால் இவர்கள் மின்சாரத்தை இரவு முழுவதும் கொடுத்ததே இல்லை. அடுத்து மின்சார இலாக்காவினர் மின்சாரப் பற்றாக்குறை எவ்வளவு இருக்கின்றது என்று திட்டமிடாத காரணத்தாலோ என்னவோ இப்போது 30 சதவீதம் கட் என்று சொல்கிறார்கள். 30 சதவீதம்தான் இருக்கிகின்றதா? ஆகவே நீங்கள் உண்மை நிலையை மறுக்கிறீர்கள். அதனால்தான் 30 சதவீதம் என்று சொல்கிறீர்கள். அப்படி 30 சதவீதம் என்றால் விவசாயிகளுக்கு 6 மணி நேரம் மின்சாரம் இரவிலே கொடுப்பது நியாயமா? ஒரு விவசாயி 5 ஏக்கரில் விவசாயம் செய்கிறான் என்றால் வருகின்ற மின்சாரத்தில் ஒரு ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் பாய்ச்சிவிட்டு மற்ற இடங்களுக்கு தண்ணீர் பாய்ச்சவில்லை என்றால் நிலைமை என்னவாகும்? கரும்பு, நெல் போன்றவற்றை ஒரு விவசாயி பயிரிடுகிறான் என்றால் அவனால் தன்னுடைய நிலத்தின் ஒரு பகுதிக்கு மட்டும்தானே தண்ணீர் பாய்ச்ச முடியும். மற்ற பகுதிகளின் மகசூல் பாதிக்கின்ற சூழ்நிலைதானே ஏற்படும். அந்தப் பகுதிக்கு அந்த விவசாயியால் எங்கே இருந்து தண்ணீரைக் கொண்டு வரமுடியும்? ஆகவே 5 ஏக்கரிலே ஒரு ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது என்றால் மற்ற 4 ஏக்கரிலேயும் பயிர்கள் காய்ந்துவிடுகின்ற நிலைமைதான் ஏற்படுகின்றது. அது விவசாயிகளுக்கு நஷ்டத்தை உண்டாக்காதா? இப்படி விவசாயிகளுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணி விட்டு அவன் பணத்தையும் கட்டவில்லை என்று சொன்னால் அது எப்படிப் பொருத்தமாகும்? ஆகவேதான் தயவு செய்து விவசாயிகளுக்கு கஷ்டத்தைக் கொடுக்கின்ற காரியத்தில் ஈடுபட வேண்டாம் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

நான் எற்கனவே இந்த மன்றத்திலே சொன்னேன் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரும் சொன்னார்கள். வேண்டுமானால் தொழிலாளர்களுக்கு வழங்குகின்ற மின்சாரத்தைக் குறைத்து விவசாயிகளுக்கு 6 மணி நேரம் இரவில் மின்சாரம் தருகிறேன் என்று சொன்னார்கள், 6 மணி நேரம் என்பது

நிச்சயமாக போதாது. முன்பு 70 சதவீதம் 60 சதவீதம் மின்சாரம் வெட்டு இருந்தபோதே இரவு நேரங்களில் முழுமையாக விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டது. ஆனால் உங்களுடைய ஆட்சியிலே இரவிலே கூட மின்சாரம் கிடைக்கவில்லை ஒரு வாரத்திலே காலையிலே 6 மணி நேரம், 2-வது வாரத்திலே மதியம் 6 மணி நேரம், மூன்றாவது வாரத்திலே இரவில் 6 மணி நேரம் என்று பிரித்து பிரித்து விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பது என்ற வகையில் நஷ்டத்தை தான் அவர்களுக்கு உண்டுபண்ணுகிறீர்கள். ஆகவே நான் சொல்வது என்னவென்றால் இன்னும் கொஞ்சம் அதிகமாக தொழில்களுக்கு கொடுக்கின்ற மின்சாரத்தைக் குறைத்து விவசாயிகளுக்கு தினமும் இரவு முழுவதும் மின்சாரம் கிடைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று என்னுடைய கருத்தினைக் கூற விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது விவசாயிகள் எல்லாம் இரண்டு ஃபேஸ்களில் மோட்டாரை ஓட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் மின்சார வாரியத்தில் என்ஜினியராக இருந்தவர் கிட்டத்தட்ட 10 லட்சம் மோட்டார்கள்—விவசாய மோட்டார்கள் தமிழகத்தில் இருக்கின்றன. மூன்று ஃபேஸ்களிலே ஓட்ட வேண்டிய அந்த மோட்டார்களின் ஸ்டாட்டரை தூக்கி வைத்து விட்டு, புல்வரை சுழற்றிவிட்டு இரண்டு ஃபேஸ்களில் இப்போது மோட்டார்களை ஓட்ட விவசாயிகள் ஆரம்பித்திருக்கிறார்கள், இது பரவலாக தமிழகத்தில் உள்ள சில கிராமங்களிலும், சில பகுதிகளிலும் கையாளப்படுகிறது ஆனால் இந்த முறை தமிழ்நாடு பூராவிலும் கையாளப்படுமேயானால், இருக்கக் கூடிய ஜெனரேட்டர்கள் அத்தனையும் வெடித்து விடும்—கெட்டுப்போய்விடும். அவைகள் கெடக் கூடாது என்ற காரணத்தினால் சொல்ல விரும்புகிறேன், விவசாயிகள் அப்படி இரண்டு ஃபேஸ்களில் மோட்டார் ஓட்டுவதை அனுமதிக்கக் கூடாது.

அவர்களுக்குப் போதுமான கரண்ட்டைக் கொடுத்தால் பிரச்சினை இல்லை. இருக்கக் கூடிய மின்சாரத்தை கொடுக்கக் கூடிய நிலைமையை பார்த்து அவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 30 சதவீதம் என்ற போலி வேதாந்தங்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அவைகளையெல்லாம் தூக்கி தூர எறிந்து விட்டு, 50 சதவீதம் அல்லது 60 சதவீதம் அவர்களுக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தொழிற்சாலைகளுக்கு கொடுப்பதை கொஞ்சம் நிறுத்துங்கள். அவர்களுக்கு ஒரு மாதம் ஓய்வு கொடுங்கள். விவசாயிகளுக்கு அந்தமாதிரி ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை என்றால் விளைவுகள் நிச்சயமாக நன்றாக இராது.





அதாவது 2 கோடி 3 கோடி வரி வசூல் செய்யப்பட வேண்டும் என்று சொல்கிறீர்கள். எப்படி வசூல் செய்வது ? உங்கள் மின்சார வாரியத்தை திறமையாக செயல்படுத்த வேண்டும். அதை விட்டு விட்டு, விவசாயிகளை குற்றவாளிகளாக்கி, அவர்களை ஏமாற்றுக்காரர்களாக சித்தரித்து, இவரிவர்கள் வரி கொடுக்கவில்லை என்று பத்திரிகைகளில் போடுவதினால் என்ன பயன் ஜாதி சண்டைத்தான் வளரும். ஏற்கெனவே உங்கள் ஆட்சியில் ஜாதி சண்டை அதிகமாக இருக்கிறது. அதை அன்றாடம் பேப்பரில் பார்த்து வருகிறோம். அதை அதிகமாக்க உதவும் உங்கள் செயல்.

பத்திரிகைகளில் போட்டு இவரிவர்கள் இவ்வளவு பாக்கி தர வேண்டும். கூழுக்கு உப்பில்லை, காப்பிக்கு சர்க்கரை இல்லை என்று சொல்லக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு நாங்கள் கொடுக்க விரும்புகிறோம். ஆனால், இன்னின்ன மிராசுதாரர்கள் இவ்வளவு பாக்கி தரவில்லை. அதனால் உங்களுடைய அரிசன குடியிருப்புகளுக்கும்—குடிசைகளுக்கும் ஒரு விளக்கு போட முடியவில்லை என்று சொன்னால், இது கிராமப்புறங்களில் ஜாதி சண்டைகளை ஏற்படுத்தாதா ? மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கே, வேண்டியவர்கள் இதனால் பாதிக்கப்படுவார்களேயானால், அவர்கள் கூட வெறுப்பு அடைவார்கள் ஊரிலேயேும் பெருமை ஒன்றும் வராது. இது மேடைப் பேச்சுக்கு வேண்டுமானால் சுவையாக இருக்குமே தவிர, ஏற்கனவே இருக்கக்கூடிய பிரச்சினைகளை தீர்க்க உதவாது.

அடுத்து எங்களுடைய ஆட்சிக் காலத்திலும் சரி, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, இரவு நேரத்திலே மின்சாரம் இல்லை என்று சொன்னதே இல்லை. நீங்கள்தான் அப்படிச் சொல்கிறீர்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்வது இரவு நேரத்திலே முழுமையாக மின்சாரம் வழங்க வேண்டும் பகல் நேரத்திலே வேண்டுமானால் 6 மணி நேரம் என்பதற்குப் பதிலாக 4 மணி நேரம் கொடுங்கள். ஆனால் இரவு நேரத்திலே முழுமையாக மின்சாரம் கொடுங்கள். விவசாயிகளையும், விவசாயத்தையும் காப்பாற்றுங்கள் என்று சொல்லி உரையை முடித்துக் கொள்கிறேன் வணக்கம்.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிலுவைத் தொகைகளை வசூலிக்கும் திருத்தச் சட்ட முன் வடிவின் மீது சட்ட மன்ற காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்கவிரும்புகிறேன்.

இன்றைய தினம் மின்சார வாரியத்திற்கு ஏராளமான வரி பாக்கியிருக்கிற காரணத்தினாலே, அதை வசூலிப்பதற்காக, நிலுவைகளை செம்மைபடுத்துவதற்காக உடனடியாக வாரியத்திற்கு அந்தப் பாக்கிகளை கொண்டு வருவதற்காக, பத்திரிகைகளிலே அப்படி பாக்கியிருப்பவர்களின் பெயர்களையெல்லாம்

வெளியிடுவதற்கான அளவிலே ஒரு அதிகாரத்தை பெறுவதற்கான ஒரு சட்ட முன்வடிவினை மாண்புமிகு மின்சார துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் வரி பாக்கி எப்படி வந்தது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். நிர்வாகத்தை முதலிலே சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். வாரியத்திலே இருக்கிற துறைகளில் வேலை செய்பவர்கள் சங்கங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சங்கங்கள் மூலமாக அவர்களுடைய பிரச்சினைகளை தீர்வு காண கேட்டும் கூட எதுவும் நிலைமைகள் மாறாத காரணத்தால் இஷ்டம்போல பில்களை போடுகிற நிலைமை ஏற்பட்டது 6 மாத காலத்திற்கு, அல்லது ஒரு வருட காலத்திற்கு என்று சேர்த்து வைத்து பில்களைப் போட்டு அனுப்பினால் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை விவசாயிகளினால் எப்படி அதை ஒழுங்காக கட்ட முடியும் என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்............... (குறுக்கீடு).

6. ஒழுங்குப் பிரச்சினை

கண்வலியோடு உறுப்பினர் அவைக்கு வருதல்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாய்ன்ட் ஆப் ஆர்டர் நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு கண் சிவந்துபோகின்ற அளவிற்கு கடுமையான கண்நோய் வந்திருக்கிறது. அவர் கூலிங் கிளாஸ் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம். பரவாயில்லை ஆனால் அது எங்களுக்கும் பரவும் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் தனியாகத்தான் உட்கார்ந்திருக்கிறேன். யாருக்கும் பரவாது.

(பிற்பகல் 12 20)

திரு. நா. சுந்தரராஜ் : ஒரு முன் உதாரணம் இருக்கிறது. கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் நமது சேடப்பட்டி முத்தையா அவர்களை அன்றிருந்த சபாநாயகர் அவர்கள் வெளியேற்றினார் கண்வலி என்ற காரணத்தால், இது மற்றவர்களுக்கும் பரவிவிடும் ஆகவே....

திரு. மு. அம்பிகாபதி : கண்வலி என்றால் அது காற்றிலே பரவி இம்மன்றத்தில் உள்ள அனைவரும் தாக்கப்படுகிற நிலை இருக்கிறது. எனவே, எங்களைப் பாதுகாப்பதற்காக நீங்கள் தயவுசெய்து............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் எல்லோருடைய வேண்டுகோளுக்கிணங்க நானே போய்விடுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).





5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

ஆ. (மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்த சட்ட முன்வடிவு—விவாதம் (தொடர்ச்சி)

*திரு கே. எம். தங்கமணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதலில் மின்சார வாரியத்தை, அதன் நிர்வாகத்தை சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளிய, மக்கள், சாதாரண மானவர்கள், அரை ஏக்கர் ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்கள், இவர்கள் வரி கட்ட முடியாத ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டதற்கு காரணம் அரசாங்கத்தின் நிர்வாகக் கோளாறுதான் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரண ஏழை எளிய விவசாயிகள் வரி பாக்கி என்று சொல்லும் போது அரசு தீவிரமான கடுமையான நடவடிக்கைகளை எடுக்கிறது. ஆனால் பெரிய விவசாயிகள், மிராசுதார்கள் பெரும் பணக்காரர்கள் என்று வருகிறபோது அரசாங்கம் அவர்களிடத்தில் செல்வதற்கு அஞ்சுகிற ஒரு சூழ்நிலைதான் இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே ஏழை எளியவர்களுக்கு உதவவேண்டும் என்று நீங்கள் எண்ணுவீர்களானால் முதலில் நிர்வாகத்தில் இருக்கிற கோளாறுகளை, அங்கே வேலை பார்க்கிற நிர்வாகத்தில் இருப்பவர்களையெல்லாம் ஒழுங்காக மின்சார பில்கள் போடுவதற்கான ஏற்பாட்டினை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகைகளில் இதை வெளியிடவேண்டும், பெயர்களை வெளியிட வேண்டும் என்று வருகிறபோது அவசியம் என்றால் உசிதம் என்று கருதினால் வெளியிடலாம் என்று மசோதாவில் சொல்லியிருக்கிறீர்கள். அதன் பொருள் என்ன? அவசியம் என்று நீங்கள் கருதுவீர்கள் என்றால், உசிதம் என்று நீங்கள் கருதுவீர்களானால் என்று சொன்னால் ஒரு வேளை வரி பாக்கி பெரும் பணக்காரர்களுக்கு பெரும் தொழில் அதிபர்களுக்கு இருக்கிறது என்றால், அவர்கள் உங்களுக்கு வேண்டியவர்கள் என்று சொன்னால் வெளியிடமாட்டீர்களா? உசிதம் என்றால் அதை வெளியிடாமல் நிறுத்திவிடுவீர்களா? அதற்காகத்தான் இந்தத் திருத்தத்தை கொண்டு வருகிறீர்களா என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் விருப்பு வெறுப்பு இல்லாமல் மின்சாரவாரியத்திற்கு யார் யார் வரி பாக்கி வைத்திருக்கிறார்களோ அவர்கள் பெயர்களை தாட்சண்யம் இல்லாமல் வெளியிடுவதற்கான நடவடிக்கைளை எடுத்தாக வேண்டும். அப்போதுதான் நாம் எண்ணுகிற, நாம் விரும்புகிறபடி மின்சார வாரியத்தின் நிர்வாகம் ஒழுங்காக நடக்க இயலும், ஆக, மின்சார வாரியம் வரிபாக்கிகளை வசூலித்தே தீரவேண்டும். மேலும் இந்தச் சட்டத்தின் மூலம்

[திரு. கே. எம். தங்கமணி ]   [1981 ஏப்ரல் 7

ஏழை எளிய மக்கள், சாதாரணமானவர்கள், சாதாரண விவசாயிகள் பாதிக்கப்படாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

டாக்டர் கே சமரசம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது நான் என்னுடைய உணர்வுகளை பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, இதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்தத் தொகையை வசூலிக்காத குற்றம் அரசாங்கத்தினுடையது என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள். அதே நேரத்தில் நாங்கள் வசூலிக்கவேண்டுமென்று, இந்த ஒரு நிலை மட்டுமல்லாமல், தமிழகம் மட்டும் அல்லாமல் இந்திய துணைக்கண்டத்தில் கூட எல்லாத் துறைகளிலும் நிர்வாகங்கள் பல வகைகளில் சின்னாபின்னமாகியிருப்பதை மனதிற்கொண்டு நமது அரசு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு குறித்த ஒரு சட்ட முன்வடிவை இங்கே கொண்டுவரவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் அதை எதிர்த்தவர்களும் இவர்கள்தான். அவரவர்கள் அவரவர்கள் கடமையை ஒழுங்காக செய்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை வராது. இங்கே கட்டத்தவறியவர்கள் யாரோ அவர்கள்தான் பாதிக்கிறார்களே, தவிர, ஒழுங்காகக் கட்டியவர்கள் இதனால் பாதிக்கப்படுவதில்லை. ஆக, அப்படிப்பட்டவர்கள் மீது நாம் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருகிற நேரத்தில் அதற்கும் வக்காலத்து வாங்கிப் பேசுவது என்பது இன்றையதினம் எதிர்க்கட்சிகளின் கடமையாகப் போய்விட்டது என்பதைப் பார்த்து உண்மையில் மனவருத்தமடைகிறேன்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், வசூல் செய்வதை நான் எதிர்க்கவில்லை; வசூல் செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சிலர் பெயர்களைப் போட்டிருக்கிறீர்கள். மின்சார வாரியத்திற்கு கட்ட வேண்டிய எல்லோருடைய பெயர்களையும் போடப் போகிறீர்கள் என்றால், எங்களுக்கு அதிலே ஆட்சேபணை இல்லை. அவர் இல்லை இவர் இல்லை என்று ஊரிலே நான்கு பேர் சண்டைக்கு வந்து விடுவார்கள் தகராறு ஏற்படும். அதுதான் பிரச்சினை.

டாக்டர் கே சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டுமே தவிர, குழந்தை பிறப்பதற்கு முன்பே, குழந்தைக்கு சுந்தரம் என்று பெயர் வைக்கின்ற நிலை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இரவு நேரத்திலே விவசாயத்திற்கு இந்த அரசாங்கம் தான் மின்சாரம் கொடுத்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே இல்லை என்று சொன்னார்கள்.



1981 ஏப்ரல் 7]   [டாக்டர் கே. சமரசம்]

அவருக்குத் தெரியாது. நானே ஒரு விவசாயி. இரவு நேரத்திலே ஆட்களை அழைத்து, பயிர் நட்டிருக்கக்கூடிய அளவிற்கு என்னுடைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அவருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே, நாட்டின் நிலைமை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். வல்லவன் வகுத்ததே வாய்க்காலானால், நல்லவன் கதி என்ன? நாட்டின் விதி என்ன? நாட்டின் நிலைமை என்ன என்பதுதான் பிரச்சினை வாங்கிய தாய்க்கே மகளென்றால் அதை தாங்கிய தாய்க்கு பெயரென்ன? என்ற நிலைமைதான் நாட்டிலே இருக்கிறது. விவசாயம் செய்பவர்கள் அதை உபயோகிப்பவர்களுக்கே இந்த அளவிற்கு பிரச்சினை இருக்கிறதென்றால், அதை உற்பத்தி செய்ய ஆற்றல் பெற்ற இந்த அரசுக்கு எவ்வளவு பிரச்சினை இருக்கும் என்பதை எதிர்க் கட்சிகள் இந்த நேரத்திலே உணரக்கூடாதா?

அது மட்டுமல்ல. வேலியே பயிரை மேயும் அபாயம், வேகமாக பரவியுள்ள விநோதமான இந்த நேரத்தில், அதற்கு விமோசனம் தேட வேண்டாமா? என்கின்ற அளவிலே தான், இப்போது இதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவசியம் ஏற்பட்டிருக்கிறது, இன்னும் ஏதோ தத்துவங்களை எல்லாம் சொல்லுகிறார்கள். அப்படி சொல்லும்போது, அது இப்படி இருக்கக் கூடாதா? அப்படி இருக்கக் கூடாதா? என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் பேசுவதும், இது ஜனநாயக ஆட்சி கொண்டுவரக் கூடியதா என்றெல்லாம் பேசினார்கள். ஆனால், இன்றைய தினம், தத்துவங்கள் எல்லாம் இந்த நாட்டின் வெத்து சத்தங்களாகி விட்ட பிறகுதான் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, என்ன பிரச்னையாக இருந்தாலும், இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டக் காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் சொன்னார்கள். '' வசதி உள்ளவன் வச்சதெல்லாம் சட்டமாகாது தம்பி—பிறர வாழ வைக்கும் எண்ணமெல்லாம் சட்டமாகணும் தம்பி '' என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படி '' வசதியுள்ளவன் வச்சதெல்லாம் சட்டமாகாது தம்பி—பிறரை வாழவைக்கும் எண்ணமெல்லாம் சட்டமாகும் தம்பி '' என்ற அந்த எண்ணத்தில்தான் இந்த சீர்திருத்தத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த போது, நாட்டு மக்களுக்கு என்னென்ன உத்திரவாதங்களைக் கொடுத்தோமோ, எந்தெந்த நேரத்தில் எந்தெந்த அறிவுரைகளைச் சொன்னோமோ, எப்படி எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னோமோ, அதை எல்லாம் உருவாக்குகின்ற வகையில் காலம், வாய்ப்பு, நேரம் கிடைக்கின்றபோது அதை அதை சட்டத் திருத்தங்களாகக் கொண்டுவந்து, இந்த நாட்டு மக்களை,

[டாக்டர் கே. சமரசம்] [1981 ஏப்ரல் 7

ஏழைகளை, உண்மையாக இருக்கின்ற உழைக்கின்ற உத்தமர்களை வாழவைக்கக்கூடிய வகையிலேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்றையதினம் இந்தியத் துணைக் கண்டம் சுதந்திரம் அடைந்து முழுமையாக 33½ ஆண்டுகள் ஆகியும், 3½ சதவிகிதம் நாம் உயரவில்லை என்று சொன்னால், இந்த நாட்டிலே இருக்கின்ற ரா-மெடிரியல்சை, கனி வளத்தை நாம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, கோடிக்கணக்கான அந்நிய செலாவணியைப் பெற்றும் கூட, பொருளாதாரத்தில் நம்மால் முன்னேற முடியவில்லை. ஒரு மனிதனுடைய சராசரி வருமானம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. இங்கிருக்கக்கூடியவர்கள், எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் பலர் எத்தனையோ வெளி நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். ஜப்பான் நாட்டிலே ரா-மெடிரியல்சே இல்லை. அதை அவர்கள் உலகத்தின் பல்வேறு பாகங்களிலே இருந்து வாங்குகிறார்கள். ஆனால், அவர்கள் அந்த நாட்டிலே எல்லாவற்றையும் உற்பத்தி செய்து, உலகத்திற்கே சப்ளை செய்யக்கூடிய அளவிற்கு விளங்குகிறார்கள். எந்த தத்துவத்தை பத்திரிகையிலே படிக்கிறார்களோ, எந்த தத்துவம் சித்தாந்தம் நாட்டிலே எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களோ, அப்படி தங்களை அவர்கள் மாற்றிக் கொண்டார்கள். ஆனால், அந்த அளவிற்கு நம்முடைய நிலைமை இல்லாத காரணத்தினால், இப்படிப்பட்ட திருத்தங்கள் கொண்டுவரக் கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. குற்றங்களே நடைபெறவில்லையானால், சட்டத் திருத்தங்களே தேவையில்லை என்பதை எதிர்க் கட்சிகள் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். ஆனால், குற்றங்களே நடைமுறைப்படுத்தப்பட்டு, அதற்கு தூது போகக் கூடிய வகையில் தூபம் போடக் கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தினால், இப்படிப்பட்ட திருத்தம் வருகிறது. அந்தத் திருத்தத்தை அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்த சட்ட முன்வடிவை முன்மொழிந்து, என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது, இந்த திருத்தச் சட்டம் விளம்பரம் மூலமாக நாட்டு மக்களுக்கு மாநில நிலுவையை செலுத்த வேண்டுமென்ற அறிவிப்பைச் செய்வது, ஜாதி வெறியைத் தூண்டுவதாக இருக்கிறது என்று ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள்.



1981 ஏப்ரல் 7] [திரு கோவைத்தம்பி]

[பிற்பகல் 12-30].

ஜாதி வெறியை தூண்டுகிற நிலை அவருடைய பகுதியிலே இருந்ததோ என்னவோ தெரியாது ; கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த நிலுவை தொகை அதிகமாக இருந்தது என்பதையும், பத்திரிகை மூலமாக விளம்பரப்படுத்தப்பட்டு அந்த நிலுவைத் தொகை செல்லுத்தியவர் பட்டியல் நீண்டு இருந்தது என்பதையும் ;, செலுத்தியவர்கள் மிகப் பெரிய பணக்காரர்கள், மிட்டா மிராசுகள், ஆலை அரசர்கள், சிறிய விவசாயிகளாக தங்களைப் பதிவு செய்து கொண்டு அவர்கள் எல்லாம் இருந்தகாரணத்தால் பொது மக்களுக்கு அவர்களை அடையாளம் கண்டுகொள்கிற அளவிற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருவருக்கு சென்னையில் ஏறக்குறைய 6 பங்களாக்கள் இருக்கின்றன. அந்த 6 பங்களாவிலும் அவருக்கு வாடகை மாதம் ஒன்றுக்கு 15 ஆயிரம் வருகிறது. ஆனால் அவருடைய கணக்கு மின் தொகை நிலுவை நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம் கேட்கிறபொழுது அவர் விவசாயி என்று சொல்கிறார். பல ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர், பல பங்களாக்களுக்குச் சொந்தக்காரர் கோவை மாவட்டத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். மின்சாரக் கட்டணம் பாக்கி செலுத்தாமல். நான் விவசாயி, பூமி விளையவில்லை என்று சொல்லும் நிலை இருக்கிறது. இந்த நிலையில் இருக்கிறவர்கள், 2, 3 மோட்டார் பைக்கு வைத்திருக்கிறவர்கள், கார்கள் வைத்திருக்கிறவர்கள், இவர்களுக்கு இந்த நஞ்சை நிலம் சொந்தம் ; இவருக்கு இவ்வளவு ஆலைகள் சொந்தம் ; இவ்வளவு பங்குகள் சொந்தம் என்று கணக்குகள் காட்டும் பொழுது, அந்த கிராமப்புறத்தில் அல்லது நகரங்களில் ஒதுக்குப்புற பங்களாக்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் தினகத்து என்ன செய்வது என்ற நிலையில் நிலுவைத் தொகைகளை கட்டியிருக்கிற காட்சியை கோவைமாவட்டத்திலும், தமிழகத்தில் பரவலாக பார்க்கிறோம். ஆகவே ஜாதி வெறியை தூண்டுகிறது இந்த விளம்பரம் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குற்றம் சாட்டியது ஆதாரமற்றது என்ற கருத்து என்னுடைய கோவை மாவட்டத்தை பொறுத்த வரையில் இருந்தது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயிகளுக்கு இருக்கிற கஷ்டங்களை பற்றிச் சொன்னார்கள். விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற மின்சாரம் 6 மணி நேரம் என்பது போதாது என்று அவர்கள் சொன்னார். அந்த கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாக இருக்கிறது என்பதை நானும் மனப்பூர்வமாக ஒத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகப் பெரிய தொழிற் கூடங்களுக்கு செலுத்தப்படுகிற மின்சாரத்தை கொஞ்சம் தொழிற்கூடங்களுக்கு குறைத்து, விவசாய உற்பத்தியை செய்வதற்கு இந்த மின்சாரத்தை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை மின்துறை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களென்றால் எந்தவிதமான இலாப நோக்கும் இல்லாமல், விவசாயப் பயிர்களை காப்பாற்ற

வேண்டுமென்றும், தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த
வேண்டுமென்ற நிலையில் இருக்கிற அந்த விவசாயிகளுக்கு அது
மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கும் என்பதைத் நானும்
மனம் திறந்து கூறிக். கொளளக்கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய
பஞ்சாலையானாலும், பெரிய தொழிற்கூடமானாலும் உற்பத்தி
செய்யக்கூடிய பொருள், எவ்வளவு மின்சாரத்தை பயன்படுத்தி
னால் எவ்வளவு இலாபம் கிடைக்கும் என்ற நிலையில், கிராமங்
களிலே, நகர்ப்புறங்களிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய தொழிற்
கூடங்களுக்கு இருக்கிறது. ஆனால் விவசாயிகளைப் பொறுத்த
வரையில் இந்த நிலை இல்லாத காரணத்தால் இந்த 6 மணி
நேரம் என்பதை கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்று
அமைச்சர் அவர்களை, முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டு
மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். 3 பேஸ்களில்
மோட்டார் ஓட்டுகிறார்கள், இப்போது டபிள் பேஸ் ஆகி
விட்டது, அது சிங்கிள் பேஸ் ஆகுமென்ற நிலை இருக்கிறது
என்றுசுட்டிக் காட்டி இருக்கிறார்கள். நிலுவையை கட்டாதவர்
கள் அரசாங்கத்தை ஏமாற்றுகிறவகையில் கம்பி வளையங்களைப்
போட்டு மெயின் லைன்களிலிருந்து மின்சாரத்தைத் திருடிஅந்த
மின்சாரத்தை பயன்படுத்திக் கொண்டு பலபேர் இருக்கிறார்கள்.
பல பேர் மின்பாக்கி கட்டணம் கட்ட மாட்டோம் என்று
இப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்கி இருக்கிறார்கள்.
விவசாயிகளுக்கு அரசு மின்சாரத்தை தருகிற நிலையில், இப்படி
மின்சாரத்தைத் திருடி சமுதாயத்தை, சர்க்காரை ஜனங்களை
ஏமாற்றி விவசாயிகளுடைய தோழர்கள் என்று சொல்லிக்
கொண்டிருக்கக் கூடியவரிடமிருந்து அதிகப் பாதுகாப்பைத் தர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின் துறையைப்
பொறுத்த வரையில் இன்று கோடிக்கணக்கான ரூபாயை
மதராஸ் அலுமினியம்பாக்டரி பாக்கி வைத்திருக்கிறது. அந்த
கோடிக்கணக்கான ரூபாயை வசூல் செய்வதற்கான வழி வகை
களை ஆராய்ந்து தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கிற
முயற்சிகளை மேலும் ஊக்குவிக்கும் தன்மையில் மத்திய அரசு
பல்வேறு சூழ்நிலைகளில், மாநில சர்க்கார் எடுத்திருக்கிற இந்த
முயற்சிகளிலிருந்து ஏறக்குறைய 10 கோடி அளவில் கொடுக்க
வேண்டிய பணத்தை கொடுப்பதற்கு வழி வகைகளை செய்ய
வேண்டும்; இதில் சட்டச்சிக்கல் வரும்பொழுது மாநில அரசு
அந்த சட்டச்சிக்கல் நீக்குகிற அளவில் தன்னுடைய அதிகாரத்தை
பயன்படுத்தி அதை வசூல் செய்வதற்கு வழிவகைகளை மேற்
கொண்டு துரிதமாக அரசு கொண்டிருக்கிறதைப் போல முடிவு
எடுக்க தொழில் அதிபர்களிடம் இருக்கக்கூடிய பணத்தை வசூல்
செய்ய வேண்டும் என்பதையும், இனியும் ஒரு சில கிராமப்
புறங்களில் பெரும் விவசாயிகள், விவசாயிகள் என்ற பெயரால்
அரசுக்குச் செலுத்த வேண்டிய மின்கட்டணத்தைச் செலுத்தா
மல் வைத்திருக்கிறார்கள். மறுபடியும் அவர்கள் அதைச் செலுத்
துவதற்கு வழிவகைகளை ஆராய்ந்து 3 மாத காலத்திற்கு
முன்பே எடுத்த நடவடிக்கைகளைப் போன்று தீவிரமான நட





வடிக்கைகளை எடுத்து வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து வரவேற்று விடைபெறுகி
றேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல் : மாற்றுத் தலைவர் அவர்களே
இன்றைய தினம் மின் கட்டண பாக்கியை வசூலிப்பதற்காக,
வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
மின் கட்டண பாக்கியை வைத்திருக்கின்றவர்கள் மீது நட
வடிக்கை எடுப்பதற்கும் அவர்களுடைய பெயர்களை பத்திரிகை
களிலே போட்டு விளம்பரப்படுத்துவதன் மூலம், போட்டோவை
பேர்டுவதன் மூலம் அவர்களிடமிருந்து பாக்கியை வசூலித்து
விடலாம் என்று அரசு எண்ணியிருக்கிறது. சில நாட்களுக்கு
முன்னாலே இந்த அவையிலே சொன்னார்கள். பெரும் தொழில்
நிறுவனங்கள் 13½ கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்திருக்கிறார்
கள் என்று சொன்னார்கள் குறிப்பாக, மால்கோ நிறுவனம்
9 கோடி ரூபாய்க்கு மேலே பாக்கி வைத்து இருக்கிறது என்று
சொன்னார்கள். 4, 5 ஆண்டுகளுக்கு அந்த பாக்கியை கட்டா
மல் வைத்திருப்பது, அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்காமல்
இருப்பது வருந்தத் தக்கது. அவர்கள் கோர்டிற்குப் போகாமல்
வசூலிப்பதற்கு சட்ட விதிகளை ஆராய்ந்து தொழில் நிறுவனங்
களிடமிருந்து பாக்கியை வசூலிப்பதற்கு அரசு கறாரான நட
வடிக்கை எடுக்க வேண்டும். போட்டோவை போடுவதாலோ
பத்திரிகையிலே பெயரை விளம்பரப்படுத்துவதாலோ பலன்
ஏற்படாது., அதற்கு அந்த ஆசாமிகள் அசந்தவர்கள் அல்ல
என்று நினைக்கிறேன். அவர்களிடம் கடுமையாக வசூலிப்ப
தற்கு ஆட்சேபணை இல்லை. விவசாயிகளுக்கு பாக்கி 33
கோடி ரூபாய் வரையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
பெரிய நிலப்பிரபுக்கள் ஆயிரம் ஏக்கர், நூற்றுக்கணக்கான
ஏக்கர்கள் வைத்திருக்கின்றவர்கள் 10, ஆயிரம், 20 ஆயிரம்,
30 ஆயிரம் பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்
சமீப காலத்திலே அவர்கள் செலுத்தாது மட்டுமல்ல, கொக்கி
போட்டு இழுத்து மின்சாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு
இருக்கிறார்கள். அந்த சமூக விரோதிகளிடமிருந்து பாக்கியை,
வசூலிப்பதற்கு ஆட்சேபணையில்லை. சிறு சிறு விவசாயிகள்
2 ஏக்கர், 4, 10 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் 2
ஆண்டுகளாக ஏற்பட்ட பருவக் கோளாறின் காரணமாக கடன்
தொல்லை காரணமாக உற்பத்தி செய்த விளைபொருள்களுக்கு
நியாயமான விலை கிடைக்காததன் காரணமாக கட்டாமல்
இருக்கிறார்கள். அவர்களை அவமானப்படுத்துவதாக இருக்கக்
கூடாது. பெரிய விவசாயிகள் மீது கடுமையான நடவடிக்கை
எடுங்கள், அவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்யுங்கள்.
ஏழை எளிய விவசாயிகளை அவமானப் படுத்தாமல் நீக்குப்
போக்காக அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிற முறையிலே
சட்டம் இருக்க வேண்டும். சிறு சிறு நிலம் வைத்திருக்கிறவர்கள்
எல்லாம் இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் கட்டமுடியாத

நிலைமை ஏற்பட்டு கணிசமான தொகை பாக்கியிருக்கிறது. அவர்களிடமிருந்து நீக்குப்போக்காக வசூலிக்க வேண்டும் என்றும் அவமானப்படுத்தாமல் வசூலிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு மின்சாரம் கிராமங்களிலே இன்றைக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற நிலைமையிலே 6 மணி நேரம் என்று கொடுக்கிறார்கள், அதுவும் இரவு நேரத்திலே தான் கொடுக்கிறார்கள். விவசாயிகள் தங்களுடைய பயிரைப் பாதுகாப்பதா அல்லது உற்பத்தி செய்த பொருளை வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதா என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்திலே இந்த மாதிரிச் சட்டங்களைப் போட்டு அவர்களை அவமானப்படுத்துவதற்கு ஆளாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு பெரிய விவசாயிகளுக்கு சட்டத்தைப் போட்டு வசூலிக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பெ. சு. திருவேங்கடம் : மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த அரசாங்கம் மின்சார பில்லை கட்டாத பாக்கிதாரர்களை பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தி அதன் மூலம் வசூலிப்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது அவசியமில்லை என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைச் சொல்வதினாலேயே மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டியதை விவசாயிகளானாலும் சரி, மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற மற்றவர்களானாலும் சரி, கட்ட வேண்டாம் என்று சொல்வதாக அர்த்தமல்ல.

[பிற்பகல் 12-40]

நிச்சயமாகக் கட்ட வேண்டும்; நாங்களும் கட்டிக் கொண்டு தான் இருக்கிறோம்; கட்டவேண்டுமென்றுதான் மக்களிடமும் சொல்லிக்கொண்டு இருக்கிறோம்; கட்ட வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

ஆனால் கிராமப்புறங்களிலே இன்றைய நிலையில் மின்சார வாரியத்திலே இருக்கிற அதிகாரிகளானாலும் சரி, அலுவலர்களானாலும் சரி, அவர்களுக்கும் விவசாயிகளுக்கும் நல்ல சுமுகமான உறவு இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், மின்சார பில்களுக்கான கட்டணம் கட்டப்படாமல் இருப்பதற்கு விவசாய சங்கம் ஒரு பக்கம் காரணமாக இருக்கிறது என்றாலும் கூட, பெரும்பாலும் மின்சாரத் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கும், விவசாயிகளுக்கும் சுமுகமான உறவு இல்லாததும் ஒரு காரணமாக இருக்கிறது.

எனக்கு முன்னே பேசிய பல்வேறு உறுப்பினர்களும் கூடக் கூறினார்கள். இன்றையதினம் நாட்டிலே உள்ள உணவுப் பஞ்சம் தீர வேண்டும் என்றால் விவசாயிகள் எவ்வளவுதான் அல்லல்பட்டு விவசாயம் செய்தாலும் கூட, மின்சாரம் போதிய அளவிற்குக் கிடைக்கவில்லை என்றால் நிச்சயமாகத் தமிழ் நாட்டில் உணவு உற்பத்தி பாதிக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அந்த அளவிற்கு உணவு உற்பத்திக்குத் தேவைப்படும் காரியமாக மின்சாரம் இன்றைய தினம் விளங்குகிறது. ஆனால் நிலைமை என்ன? சென்ற ஆண்டு அதிகமான மழை இருந்தது, கிணறுகளில் தண்ணீர் இருந்தது; ஆனால் அன்றும் பற்றாக்குறைதான். இன்றைக்கும் தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவுகிறது. கிணறுகளில் போதிய அளவிற்கு நீர் ஊற்றுக்கள் இல்லை. குறைந்த பட்சம் தேவைப்படும் மின்சாரத்திற்குக்கூட இன்றைக்குப் பற்றாக்குறை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதே நேரத்தில் பல்வேறு இனங்களிலே மின்சார இணைப்புகள் பராமரிக்கின்ற நிலைமை சரியில்லை என்பதையும் நான் மின்சாரத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல்வேறு இடங்களில் டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்தால் அதை உரிய காலத்தில் வந்து சரிபார்ப்பது கிடையாது. எங்கேயாவது லயன் அறுந்துவிட்டால் அவைகளை உடனடியாகப் பார்க்கும் நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை இல்லை. என்னுடைய தொகுதியிலே ஜவ்வாது மலைப் பகுதியில் மின்சார விளக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த லயனிலுள்ள கம்பிகள் திருட்டுப் போய் பல மாதங்கள் ஆகின்றன. அங்குள்ள அதிகாரிகளிடம் சொன்னாலும் கூட போடப்பட்ட விளக்குகள் எரிகின்ற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் பல்வேறு சட்டங்களை அந்தந்த நேரங்களிலே கொண்டு வந்தார்கள். மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க வேண்டும், ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்கீழ் வசூலிக்கப் போகிறோம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்ட அன்றைய தினம் கூட நாங்கள் சொன்னோம். சட்டத்தினால் மட்டும் மின்சாரக் கட்டணத்தை வசூலித்துவிட முடியாது என்று சொன்னோம்.

அதைப்போல மின்சாரம் திருட்டுப் போகிறது என்பதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுதும் சொன்னோம். இதனால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற எங்களுடைய ஐயத்தைப் பற்றிச் சொன்னோம். பெரிய தொழிற்சாலைகளிலேயும், பெரிய இடங்களிலேயும் நடக்கின்ற திருட்டுக்களைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அவையெல்லாம் கவனிப்பாரற்ற நிலைமை இருக்கிறது. ஆனால் கிராமப் புறங்களில் உள்ள சிறு விவசாயிகள் வேண்டுமென்று திருடவில்லை

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1981 ஏப்ரல் 7

என்றாலும் கூட, நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, அங்கே சுமுக உறவு இல்லை என்பதால் அவர்கள் மீது உடனடியாக வழக்குத் தொடரும் நிலைமை இருக்கிறது.

ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் வசூலிப்பதற்கான சட்டம், திருட்டுப் போகிறது என்பதற்கான சட்டம், பத்திரிகைகளிலே விளம்பரம் செய்வது எல்பதற்காகக் கொண்டு வரப்படுகின்ற சட்டம் என்றெல்லாம் கொண்டு வந்தாலும் கூட ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தின் மூலமே இவைகளையெல்லாம் செய்ய லாம். ஆன்னால் அரசாங்கமும், மின்சார வாரியமும் கடைப் பிடிக்கின்ற தவறான போக்குகளின் காரணமாகத்தான் கட்ட ணத்தை வசூலிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, ஏற்கெனவே இருக்கின்ற சட்டமே போதும். ஆனால் புதிய சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். இந்தச் சூழ்நிலையில் சட்டத்தைக் கொண்டுவருவதோடு மட் டும் நின்றுவிடாமல், பல்வேறு விவசாய சங்கங்கள் இருக்கின்ற னவே அவைகளையெல்லாம் அழைத்துப் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கெனவே 90 நாட்களில் மோட்டார் வாங்கினால் மின் சாரம் கிடைக்கும் என்று வாரியம் சொன்னதை நம்பி எங்கள் மாவட்டத்திலே ஏராளமான பேர் மோட்டார் வாங்கிவைத் திருக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்கு மின்சாரம் கிடைக்க வில்லை. ஏற்கெனவே சொன்னதைப்போல, தேவையான நேரத்தில் போதுமான அளவிற்கு மின்சாரம் கிடைக்காத காரணத்தினால் கிராமங்களில் மோட்டார்கள் தீய்ந்து இருக்கின் றன. எனவே, சுமுகமான நிலையிலே, 90 நாட்களில் மின்சாரம் கிடைக்கவும், இரவு நேரங்களில் விவசாயிகளுக்குத் தேவையான மின்சாரம் கிடைக்கவும், பகல் நேரத்தில் குறிப்பிட்ட நேரத் தில் தவறாமல் குறிப்பிட்ட அளவுக்கு மின்சாரம் கிடைக்கவும் வழி செய்ய வேண்டும்.

தெரு விளக்குகள் சரியாக எரியாத சூழ்நிலை இருக்கிறது. இதனால் பொதுமக்களுக்கு மின்சார இலாகாவினர் மீதே காழ்ப் புணர்ச்சி ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே தெருவிளக்குகள் எரிகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சட்டங்களால் மட்டும் கட்டணத்தை வசூ லித்து விட முடியாது. பொதுமக்கள, விவசாயச் சங்கத் தலைவர்கள், நிர்வாகிகள் ஆகியவர்களை அழைத்துப் பேசி சுமுகமான நிலையை உண்டாக்கி, தேவையான அளவிற்கு மின்சாரம் கிடைக்கவும், அதனால் உன்வுத் தட்டுப்பாடு ஏற் படாமல் இருக்கின்ற சூழ்நிலையை உருவாக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



1981 ஏப்ரல் 7]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, மின்சார வாரியம் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கான ஒரு சட்ட முன் வடிவை இந்த அவையில் கொண்டுவந்திருக்கிறது. இது ஒரு அத்தியாவசியமான நிறுவனம். தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சாரம் வழங்கு வதுபோன்ற நிலைகளையெல்லாம் வரவேற்கின்ற சூழ்நிலை யிலே இருக்கிறோம். இந்தச் சட்ட முன் வடிவைத் கொண்டு வருவதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்கியதன் காரணமாக, கடந்த கால நிர்வாகச் சீர்கேட்டினால் இந்தச் சட்டம் கொண்டு வரக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலை தமிழ்நாட்டிற்கு ஏற் பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடிய வில்லை. பழைய காலத்தில், தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள், 9 இலட்சம் பம்ப் செட்டுகளை வைத்துள்ள விவ சாயிகள், மின் பாக்கிகளை அதிகமாகக் கொடுக்காத காரணத் தால், விவசாயக் கிளர்ச்சி என்ற பெயரால், அதிகமான நிலுவைத் தொகைகள் இருக்கின்றன என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டு, அதன் காரணமாக, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள். இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்னால் வாரியம் என்ன, என்ன நிலைமையில் அந்த விவசாயிகளுக்குப் பாதகமான சூழ்நிலையினை உருவாக்கியது என்பதனை நாம் பார்க்கவேண்டும். வாரியம் ஒழுங்காகக் கணக்கு வைக்காத நிலையிருக்கிறது என்பதை யர்ரும் மறுக்கமுடியாது. அதற் கென இருக்கிற சங்கங்கள். ஆண்டுக்கணக்கிலே பில்களை அனுப் பாத காரணத்தால், இந்நிலை ஏற்படுகிறது. இன்ன இன்ன இனத்திற்கு இவ்வளவு, இவ்வளவு தொகைகள், இந்த, இந்த மாதத்திற்கு இவ்வளவு, இவ்வளவு தொகைகள் என்றில்லாமல், எதற்காக என்ன போடுகிறார்கள் என்ற நிலை கூட இல்லாமல், மொத்தமாக, ரூ. 400, ரூ. 300, ரூ. 200 என்று சொல்லக் கூடிய அளவிற்கு வருஷக் கணக்காக காலம் தாழ்த்தி வந்ததன் காரணமாக, குழப்பமான நிலையில் அவர்கள் பணம் கட்டாத சூழ்நிலை என்று ஒரு பக்கம் இருந்தாலும், அவைகளைச் சீர் திருத்த, நிர்வாகத்தைச் சீர்த்திருத்த அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஸ்பாட் பில்லிங் என்று கூறுகிறார்கள். அந்த விவசாயி களுக்குத் தெளிவாக, இந்த யூனிட்டுக்கு இவ்வளவு, இதற்காக சர்சார்ஜ் என்ற நிலையை ஏற்படுத்தினாலொழிய, இந்தச் சட்டத்தினால் பயன் ஏதும் ஏற்படாது. இது விவசாயிகளை மேலும் தொல்லைப் படுத்துவதாக ஆகும் என்பதை அரசும் உணர வேண்டும். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர் களும் உணர்ந்து இந்தச் சட்டத்தை இயற்ற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நிர்வாகச் சீர்கேடு மிகவும் அதிகமாகக் இருக்கக் கூடிய வாரியமாக அது இருக்கிறது. எங்கள் பகுதியிலேகூட வருஷக் கணக்காக பில் தராமல்

மொத்தமாக, தந்ததன் காரணமாகத்தான் ஒழுங்காகக் கட்டி வந்த விவசாயிகள் எல்லாம்கூட கட்டமுடியாத நிலை ஏற்பட்டது. சங்கத்தினர் கட்டவேண்டாமென்பது வேறு. நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாகவும் கட்டாமலிருக்கிற நிலையிருக்கிறது. ஆகவே, ஸ்பாட் பில்லிங் என்ற முறையை அவர்கள் கொண்டு வரவேண்டும். விவசாயம் பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய பெரிய தொழில் என்பதை உணர வேண்டும். அந்த அளவு அடிப்படையான ஒரு தொழில் என்பதை உணர்ந்து அதை நம்பியிருக்கக்கூடிய விவசாயிகள் தங்களுடைய தொழிலை அபிவிருத்தி செய்ய, மின்சாரத் துறை உறுதுணையாக இருக்க வேண்டும். அதற்கு அரசும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நமக்கு, கோடிக்கணக்கான ரூபாய் பாக்கி இருக்கும்போது, அவர்களிடம் வசூல் செய்யாதபொழுது, நம்மிடம் மட்டும் வசூல் செய்கிறார்கள்! அவர்கள் கோர்ட்டுக்குச் செல்லும்போது, நமக்குக் கோர்ட்டுக்குச் செல்ல வக்கில்லை, வழியில்லையென்ற நிலையிருக்கிறது என்று விவசாயிகள் எண்ணுகிறார்கள். இன்றையவரையில் ஒன் சைடட் அக்ரிமென்ட் என்ற முறையில், ஒன் சைடட் ஒப்பந்தம்தான் இருக்கிறது அந்த முறையில், இந்தச் சட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் தோன்றுகிறது.

அதுவும் விளக்கத்திலே அவசியம் என உத்தேசிக்கும்பொழுது அவர்களுடைய படங்களையும் பெயர்களையும் வெளியிடுவோம் என்று சொல்வது ஏதோ உள்நோக்கத்தைக் கொண்டு வெளியிடப்படுவதைப் போலிருக்கிறது. அது போல் இல்லாமல் விவசாயிகள் தங்கள் தொழிலைச் செய்ய வாரியமும் உறுதுணையாக இருக்கவேண்டும், அரசும் உறுதுணையாக இருக்கவேண்டும். ஆகவே, ஸ்பாட் பில்லிங் முறையைக் கொண்டு வரவேண்டும். இந்தச் சட்டம் ஒரு பக்கம் விவசாய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தாலும், அது விவசாய உற்பத்திக்குப் பாதிப்பில்லாத சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

[பிற்பகல் 12-50]

*திரு. சோ. அழகர்சாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற சட்டத் திருத்தத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே 1978-ம் வருஷம் இந்த மின்சார சம்பந்தமான பாக்கிகளை வசூலிப்பதற்காக ரெவின்யூ ரெகவரி ஆக்ட்படி வசூலிக்கலாம் என்று உரிமை வழங்கும் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டு, அதன் மூலம் அது வகை செய்யப்பட்டு இருக்கிறது. அதாவது மின்கட்டணம் செலுத்தவில்லையென்றால், எப்படி நில வரி





செலுத்தவில்லையென்றால் ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமுடியுமோ அப்படிச் செய்வதற்கு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மின் துண்டிப்பு செய்வதற்கும் வழி இருக்கிறது. மேலும், மின் கட்டணத்திற்கான 3 மாத அட்வான்ஸ் தொகையும் டிபாசிட்டாக வசூலிக்கிறார்கள். அப்படி 3 மாதம் கட்டாமல் இருந்தால் மின் துண்டிப்புச் செய்யலாம்.

இத்தகைய நிலைமைகள் இருந்தும் இன்றைக்கு 33 கோடி ரூபாய் அளவிற்கு மின் கட்டணத்தில் பாக்கியிருக்கிறது என்று கூறி, அந்தக் காரணத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சொல்கிறார்கள். தொழில் முதலாளிகளிடத்தில் இப்படி 3 மாத அட்வான்ஸ் வாங்காமல் மின் சப்ளை செய்யப்படுகிறதா? ஏனெனில் 3 மாத டிபாசிட் தொகையில் அந்த மின் கட்டண பாக்கியை அட்ஜெஸ்ட் செய்து அல்லது 3 மாதம் கட்டவில்லையென்று தெரிந்த உடன் மின் துண்டிப்பு நடவடிக்கை மேற்கொண்டு இருந்தால் இந்த அளவிற்கு பாக்கி நின்று இருக்காது. அதை ஏன் செய்யவில்லை? அதற்கு யார் பொறுப்பு? அரசின் அதிகாரிகளா அல்லது அந்த மின் துறையா, யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது 9½ கோடி ரூபாய் அளவிற்கு மால்கோ நிறுவனம் மின் கட்டண பாக்கி என்று சொல்கிறார்கள். அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்து இருக்கிறது. அந்த நடவடிக்கைக்கும் பிறகு கூட அந்த பாக்கி வசூலிக்கப்படாமல் இருக்கிறபோது பத்திரிகையில் விளம்பரம் செய்தால் மட்டும் வசூலாகிவிடுமா? அரசாங்கம் பத்திரிகையில் பாக்கி செலுத்தவேண்டியவர்களின் பட்டியலை வெளியிட்டால் விளம்பரச்செலவு ஆகுமே தவிர வசூல் செய்ய உதவியாக இருக்காது.

விவசாயிகள் 33 கோடி ரூபாய்க்கு மின் கட்டணம் செலுத்தாமல் பாக்கி வைத்து இருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள். சிறு விவசாயிகள், குறைந்த அளவிற்கு மின்சாரத்தை உபயோகிப்பவர்கள், அவர்கள் அதிகமாகக் கட்டணம் செலுத்தவேண்டியிருக்கிறது, அதிகமான அளவிற்கு மின்சாரம் உபயோகிப்பவர்கள் குறைந்த கட்டணம் செலுத்தும் நிலை இருக்கிறது. இந்தக் கட்டணங்களில் உள்ள பாகுபாட்டை மாற்றவேண்டும் என்கிற அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும், அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வீடுகளுக்கு, அல்லது பம்ப்செட்டுகளுக்கு என்று எடுத்துக்கொண்டால், அவர்கள் குறைவாக உபயோகிக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒரு யூனிட்டிற்கு 22 பைசா வருகிறது. ஆனால், அதிகமான அளவிற்கு மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு 16 பைசா என்கிற நிலைமையில்தான் இருக்கிறது. உதாரணமாக, ஒருவன் ஒரு

[திரு. சோ அழகர்சாமி] [1981 ஏப்ரல் 7

5 எச்.பி. மோட்டார் வைத்து இருந்தால், அதற்கு மேலே மீட்டர் வாடகை மற்றும் சர்சார்ஜ் எல்லாம் சேர்ந்து ஒரு யூனிட்டுக்கு 25 பைசா கட்டணம் வந்து விடுகிறது அவன் 100 அல்லது 200 யூனிட் உபயோகிப்பான். ஆனால் அதே நேரத்தில் 10 எச்.பி. அதற்கு மேல் வைத்து இருப்பவர்கள் 500 யூனிட், 1000 யூனிட் உபயோகிப்பார்கள். அவர்களுக்கு எல்லாம் கட்டணம் எல்லாவற்றையும் சேர்த்து 15, அல்லது 16 பைசா தான் வரும். 100 யூனிட் உபயோகிப்பவனுக்கு அதிக மின் கட்டணமும், 1000 யூனிட் உபயோகிப்பவனுக்கு குறைந்த மின் கட்டணமும் இருக்கிற நிலைமையை மாற்றவேண்டும் என்று கோரிக்கைவைத்து இருக்கிறார்கள். ஆகவே, அதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் உபயோகிக்கின்ற அளவிற்கு கூடுதலாகக் கட்டணம் செலுத்தவேண்டும் என்கிற நிலைமை தவிர்க்கப்படவேண்டும்.

விவசாயிகள் மின் கட்டணம் செலுத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் அவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அதிலே பலவிதமான அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். கருத்து மாறுபாடு இருக்கலாம். இருந்தாலும்கூட அவர்களுடைய பொருள்களுக்கு நியாயமான விலை, கடன் நிவாரணம் அநியாயவட்டி வாங்குவதைத் தவிர்த்தல், அபராத வட்டியைத் தவிர்த்தல் போன்ற அந்தக்கோரிக்கைகளை அரசு உணர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக, அந்தக்கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக அவர்கள் நிலவரி செலுத்துவது மற்றும் மின்கட்டணம் செலுத்துவது ஆகியவற்றை நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். அதனால்தான் இந்த ஏகப்பட்ட மின்கட்டண பாக்கி இருக்கிறது. அதற்குப் பின்னால் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து அது குறித்து பேசி பழைய பாக்கிகளைப் பொறுத்த வரையில் 1 பிளஸ் 1 என்கிற விகிதத்தில் கட்டலாம் என்று சொன்ன காரணத்தால் சாதாரணமாக எல்லா விவசாய சங்கங்களும் அதை ஒப்புக்கொண்டன. ஒரு சங்கம் ஒப்புக்கொள்ளவில்லை, இருப்பினும் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் மின் கட்டண பாக்கியை அந்த 1 பிளஸ் 1 அடிப்படையில் கட்டியிருக்கிறார்கள். நாங்கள் கூட இப்போது தான் கட்டினோம். 1 பிளஸ் 1 திட்டத்தின்படி தான் கட்டிவருகிறேன். அதில்கூட இன்றைக்கு சொல்வது என்னவென்றால் தமிழ்நாடு முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அதனால் சாதாரண ஏழை எளிய விவசாயிகள் 1 பிளஸ் 1 கட்டமுடியவில்லை. நடப்புப் பாக்கியைக்கூட அவர்களால் சரியாக கட்ட முடியாத நிலை இருக்கிறபோது பழைய பாக்கியைக் கட்டமுடியாது. வேண்டுமென்றே அப்படிச் செய்யவில்லை; முடியாததால்தான் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். தண்ணீர் இல்லை. அதே நேரத்தில்



1981 ஏப்ரல் 7] [திரு. சோ. அழகர்சாமி]

மின்சாரம் பகலில் 6 மணி நேரம் கொடுப்பதாகச் சொல்லி, இப்போது 4 மணி நேரம்தான் கிடைக்கிறது. அந்த நேரத்தில் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். இரவில் எப்போது மின்சாரம் வரும் என்று தெரியாததால் இரவில் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. ஆகவே, இதிலே சற்று நீக்குப்போக்காக இருந்து, இந்த வறட்சியின் விசேஷ தன்மையை கருத்தில் எடுத்துக்கொண்டு, கட்ட முடியாத சாதாரண ஏழை எளிய விவசாயிகளிடத்தில் நடப்புப் பாக்கியை மட்டும் வாங்கிக்கொள்ளவேண்டும்; பழைய பாக்கியை கட்டாததால் மின்சாரத் துண்டிப்பு, அபராதம் என்பது கூடாது. கட்ட வசதி படைத்தவர்கள் 1+1 சேர்த்து கட்டட்டும். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

சாதாரணமாக விவசாயிகள் பயன்படுத்துகின்ற பம்புசெட்டுகளுக்கு எப்போதும் அபராதக் கட்டணம் விதிக்கப்படுகிறது. அதற்கு அவர்கள் சொல்கிற காரணம். மோட்டாரின் சுவிட்ச் போர்டில் 15 வால்ட் பல்பு எப்போதும் பொருத்தியிருக்க வேண்டும்; அப்படி பொருத்தாமல் இருந்தால் தேவையானபோது 100 வால்ட் 200 வால்ட் பல்பை பொருத்தி, விளக்கு எரிப்பீர்கள், அதனால் 3 ரூபாய் 4 ரூபாய் மாத மாதம் அபராதம் விதிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். பம்பு செட் ரூமில் சுவிட்ச் போர்டில் பல்ப் பொருத்தப்படாவிட்டால் 'இரவு நேரத்தில் பல்பு போட்டு எரிப்பீர்கள் என்று கருதி அபராதம் விதிக்கப்படுகிறது' என்று போடுகிறார்கள். எனக்கு இது நீண்ட நாட்களாகத் தெரியாமல் இருந்தது. கடந்தமாதம் பார்த்தபோது எனக்கு வந்த பில்லிலும் அபராதம் போட்டிருந்தார்கள். அதுபற்றி அந்த சூப்பர்வைசரிடம் கேட்டபோது சுவிட்ச் போர்டில் பல்பு பொருத்தாமல் இருந்தால் அதில் கனக்ஷன் எடுத்து வீட்டுக்கு அல்லது சற்று தூரத்தில் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று கருதி, மேலும் 100 வால்ட், 200 வால்ட் பல்பை உபயோகிக்கலாம் என்றும் கருதி, அபராதம் விதிக்கப்படுவதாகச் சொன்னார்.

இந்த அபராதம் எரிக்காததற்குக் கட்டணமாக இருக்கிறது மட்டுமல்ல. சிறு சிறு விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகள் பயன்படுத்தாததற்கு அபராதக் கட்டணம் என்பதை நிறுத்த வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள் உயர் மட்டக் குழுவில் ஒரு கருத்து தெரிவித்து, 1 பிளஸ் 1 என்ற விகிதத்தில் மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டுமென்பதை எல்லா சங்கங்களும் நாராயணசாமி நாயுடு சங்கம் ஒன்றைத் தவிர—ஒத்துக்கொண்டன. ஆனால் மற்ற கோரிக்கைகளோடு இந்த மின்சாரக் கட்டணம் செலுத்தும் விஷயமும் சேர்ந்திருந்ததால் கட்டாமல் இருந்துவிட்டார்கள். அதனால்தான் இப்படி பாக்கி சேர்ந்து விட்டது. அது அல்லாமல் மின்சாரக் கட்டணம் செலுத்தக்கூடாது என்பது நோக்கமல்ல. இப்போது இருக்கிற

[திரு. சோ. அழகர்சாமி] [1981 ஏப்ரல் 7

வறட்சி காரணமாக பழைய பாக்கியைக் கட்டாமல் நடப்பு பாக்கியை மட்டும் கட்டினாலும் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்; மின் துண்டிப்பு செய்யக் கூடாது.

அதேநேரத்தில் பெரிய பெரிய விவசாயிகளிடம் வசூல் செய்வதற்கு இந்தச் சட்டம் போட்டால் மட்டும் வசூல் செய்துவிட முடியாது. இதை பேப்பரில் விளம்பரப்படுத்தினால் அரசாங்கத்திற்குச் செலவுதான் ஏற்படும் பேப்பரில் போட்டுவிடுவதால் யாரும் கட்டிவிடமாட்டார்கள். சிறு, சிறு விவசாயிகள் கட்டவில்லை என்றால் உடனே துண்டிப்பு செய்கிறார்கள்; ஃபீஸ் பிடுங்கப்படுகிறது. ஆனால் பெரிய, பெரிய மில் முதலாளிகளை அவர்கள் கட்டாவிட்டாலும் விட்டுவிடுகிறார்கள்; நடவடிக்கை எடுப்பதில்லை. அவர்களிடம் போய் வசூல் செய்வதற்கு அதிகாரிகள் தயங்குகிறார்கள். அதனால் 1978-ல் ஏற்கெனவே ரெவின்யூ ரெக்கவரி முறையில் வசூல் செய்ய சட்டம் போட்டிருக்கிறீர்கள்; அந்த அடிப்படையிலேயே தொழில் அதிபர்களிடம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க முடியும் என்று என் கருத்தைக் கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்,

திரு. செ. செம்மலை: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம் கொண்டு வந்திருக்கிற மின்சார வாரிய திருத்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குக் கவலைக்கிடமாகக் கிடந்த இந்த மின்சார வாரியத்தைக் காப்பாற்றிய பொறுப்பு மாண்புமிகு முதலைச்சர் புரட்சித் தலைவர் அவர்களையும் இன்றைக்கு இந்த மின்சார வாரியத்திற்கு பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் சேரும் என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படி இந்த மின்சார வாரியத்தைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றுதான் இந்த சட்ட முன்வடிவு என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மெழுகுவர்த்தி தன்னைத்தானே அழித்துக்கொண்டு பிறருக்கு ஒளி தருகிறது. அதைப்போல இன்றைக்கு மின்சார வாரியம் தன்னைத்தானே வருத்திக்கொண்டு, பல நேரங்களில் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு ஒரு தன்னலமற்ற சேவையை செய்துகொண்டிருக்கிறது. இப்படி மின்சார வாரியம் தன்னலமற்ற சேவை செய்து வருகிறபோது மக்கள் நேர்மையாக அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்ற பதிலைத்தான் என்னால் சொல்ல முடியும்.



1981 ஏப்ரல் 7] [திரு. செ. செம்மலை]

[பிற்பகல் 1-00]

காரணம் அதற்கும் சிலர் முட்டுக் கட்டையாக இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வசூல் செய்யாதது உங்களுடைய தவறு என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கத்தின் மூலம் சில நேரங்களிலே வசூல் செய்வதிலே சில சலுகைகளை அறிவிக்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த சலுகைகளை உரிமைகளாக எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அப்படி உரிமையாக எடுத்துக் கொள்கிறார்கள் என்பதுமட்டுமல்ல, அவர்களுக்கு சிலர் உதவியாகவும் பேசுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைய தினம் நாம் ஓட்டலுக்குச் சென்றால் அங்கே சாப்பிட்டுவிட்டு பில்லை தராமல் நாம் வர முடியாது. அப்படி சாப்பிட்டுவிட்டு பணம் தராதவர்களை மீண்டும் அந்த ஓட்டலிலே சாப்பிட அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் மின்சார பில்லைக் கட்டாமல் தொடர்ந்து மின்சாரத்தையும் பயன்படுத்துகின்ற அந்த சூழ்நிலை நம்முடைய தமிழ் நாட்டிலே தான் இருக்கின்றது என்பதை மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகின்றபோது இன்றைக்குத் தமிழகத்தில்தான் மின்சாரம் குறைந்தவிலைக்கு கொடுக்கப்படுகின்றது என்பதையும் மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். தமிழகத்தில் மின்சாரம் யூனிட் ஒன்றுக்கு 13·84 பைசாவுக்குக் கொடுக்கின்ற நிலைமை நடைமுறையிலே இருந்து வருகின்றது. ஆனால் மற்ற மாநிலங்களிலே இதைவிட அதிகமாக வசூலிக்கப்படுகின்றது. ஆந்திராவிலே ஒரு யூனிட்டுக்கு 19 68 பைசா. கர்நாடகத்தில்18பைசா. உத்திரபிரசேத்தில் 22 6 பைசா. மத்திய பிரசேதத்தில் 25·19 பைசா. குஜராத்திலே 25·77 பைசா. ஒரிஸ்ஸாவிலே 18·61 பைசா, ஆகவே தமிழகத்தில்தான் குறைந்த விலைக்கு மின்சாரம் வினியோகிக்கப்படுகிறது. மேலும் நமக்கு உற்பத்தி செலவு மிகவும் அதிகமாகின்றது. அதையும் தாங்கிக்கொண்டு தான் இன்றைக்கு குறைந்தவிலைக்கு கொடுக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல. நமக்கு மின்சாரம் போதாத நிலையில் மற்ற மாநிலங்களிலிருந்து அதிகமான விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கின்றது நமது அரசு. அப்படிப்பட்ட காரியங்களை நம்முடைய அரசு எடுத்துக்கொண்டு வருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இப்படி விளம்பரப்படுத்துவதன் மூலம் அமைச்சரவர்களுக்கு வேண்டியவர்களின் பெயர்கள் கூட வந்துவிடக்கூடும் ஆகவே விளம்பரம் செய்கின்ற முறை வேண்டாம் என்ற வகையிலே இந்த

சட்டத்தை வாபஸ் வாங்கவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற வகையிலே பார்க்காமல் யாருடைய பெயர் வந்தாலும் கூட பரவாயில்லை என்றும் மின்சார வாரியத்தினை நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டும் என்றும் தான் விரும்புகிறார்கள். அந்த வகையிலேதான் இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு வேளை உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே அவருக்கு வேண்டியவர்களின் பெயர்கள் வந்துவிடக்கூடுமே என்ற அச்சத்தின் காரணமாக இந்தச் சட்டமுன்வடிவை எதிர்க்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. (மணியடிக்கப்பெற்றது).

ஆனால் இந்த விளம்பரப்படுத்துகின்ற காரியத்தின் மூலமாகத்தான் நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் ஒன்று சொன்னார்கள். ஆனால் அனுபவரீதியாகப் பார்க்கின்றபோது தென்னாற்காடு மாவட்டத்திலே விளம்பரப்படுத்தியதன் மூலமாகத்தான் நல்ல பலன் கிடைத்தது என்பது நாம் அறிந்த உண்மை. ஆகவே இந்த முறையிலே நல்லபலன் கிடைக்கும் என்று இந்த சட்டமுன்வடிவை வரவேற்றுப் பேசுகின்றபோது இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த விளம்பரத்தின் மூலம் நல்ல பலன் கிடைத்தாலும் இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இவ்வாறு விளம்பரப்படுத்துவதன் மூலம் நம்முடைய பெயர் கூட விளம்பரத்திலே வருகின்றது என்று கூட சிலர் கருதக் கூடும். ஆகவே வேறுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். மின்சார பாக்கியைக் கட்டாதவர்களுக்கு பல சலுகைகளை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு கடன் வழங்குதல் போன்றவற்றை அளிக்கக்கூடாது என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மின்சார பாக்கியைக் கட்டாததை அப்படி ஒரு டிஸ்குவாலிபிக்கேஷனாகக் கருதுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

அடுத்து இன்னொன்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மின்சார பாக்கியைக் கட்டாதவர்களை கூட மன்னித்துவிடலாம். ஆனால் மின்சாரத்தைத் திருடி பயன்படுத்திக்கொண்டு பில்லும் கட்டாமல் இருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்களைச் சமூகவிரோத சக்திகளாக அறிவித்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து, ஒருமுறை ஒருவர் மின் திருட்டு செய்தார் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டால் அவருக்கு மீண்டும் மின்சார இணைப்பே கொடுக்கக்கூடாது என்று எனது கருத்தைச் சொல்லி இந்த சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி வணக்கம்.





***திரு. எல். இளையபெருமாள்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற இந்த விவாதத்திலே, மின்சார பாக்கியை கொடுக்காதவர்கள் சம்பந்தமாக அரசின் சார்பிலே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை நான் பாராட்டுகிறேன். எதிர்க்கட்சியாக இருப்பதினால் எதிர்க்க வேண்டும் என்பது அல்ல. ஒன்று மட்டும் நிச்சயம். இப்படி மின்சார பாக்கிகளைக் கொடுக்காமல் இருந்து கொண்டு, விவசாயிகள் என்ற பெயரால், பொது மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பல நன்மைகளைச் செய்வதற்கு நிதி உதவி கிடைக்காத அளவில் வேண்டும் என்றே தவறு செய்கிறார்களே இது மிகப் பாவமான காரியம்.

விவசாயச் சங்கம் என்று ஒன்று வைத்துக் கொண்டு, அதன் பெயரால், மக்களுக்கு நிரந்தரமான பல நல்ல காரியங்களை செய்வுதற்கு முன் வருபவர்களுக்கு இடையூறு செய்ய வேண்டும் என்பதற்காகவே சிலர், தெரிந்தோ தெரியாமலோ இருக்கிற சிறு விவசாயிகளை, ஏழை மக்களை தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ளலாம் என்ற அரசியல் கண்ணோட்டத்திலே சிலர் இப்படி செய்கிறார்கள். திடீரென்று ஏழை மக்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டியிருந்தால், அல்லது ஏழை மக்கள் வாழும் குடிசைகளுக்கு மின் விளக்குகள் போடுகின்ற திட்டம் நிறைவேற்றப்படவேண்டியிருந்தால், அந்தக் காரியங்களை விரும்பாதவர்கள் வெறுக்கிறவர்கள், இந்த மாதிரியான வரி கொடாத வேலைகளுக்கு ஆதரவு தந்தால், அது மிகப் பாவமான காரியம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல அரசாங்கம் மின் வரி கொடாதவர்களின் பெயர்களை பத்திரிகைகளில் விளம்பரம் கொடுப்பது பற்றி பல நண்பர்கள் பல விதமான கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் ஒன்று கேட்கவிரும்புகிறேன்? அந்தப் பாக்கிகளை எப்படித்தான் வசூல் செய்வது என்பதை நாம் யோசிக்க வேண்டும். உண்மையாக சட்டத்திற்கு மதிப்புக் கொடுப்பவர்கள் அல்லது வருங்கால இந்தியாவிலுள்ள ஏழை மக்களுக்கு நல்ல தொரு செயல்களை செய்ய வேண்டும் அல்லது நடத்த வேண்டும் என்கிற பெரு மனத்தைப் பெற்றவர்கள், இப்படி கட்ட வேண்டிய பாக்கிகளைக் கட்டாமல் இருக்கும் காரியத்தைச் செய்ய மாட்டார்கள். அப்படிச் செய்வதற்கு வெட்கப்படுவார்கள். அப்படி வெட்கப்படுவது உண்மையாக இருந்தால் ஏன் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தக் கூடாது?

கிராமத்திலே இருக்கிற ஏழை ஒருவன் ஒரு மாத வரி பாக்கி வைத்திருக்கிறான் என்று சொன்னால், அவனுடைய வீட்டில் 21-ஆம் தேதியே நடவடிக்கைமூலம் மின் துண்டிப்பை எடுத்து விடுகிறோம். ஆனால் அதே சமயத்தில், ஆலை அதிபர்களும், மில் முதலாளிகளும், அல்லது அரசியல் காரணங்களினால் பெரிய மனிதர்களாக உள்ளவர்களும், அல்லது கிராமத்திலே உள்ள

பெரிய மனிதர்களும் அல்லது நிலச்சுவான்தார்களாக பெரிய மனிதர்களாக இருந்து கொண்டு, பினாமி நிலங்களை எழுதி வைத்துக் கொண்டு, நாங்களும் ஏழை என்று சொல்லி, அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டு, அதிகாரிகளை ஏமாற்றிக் கொண்டு, ஏதாவது சட்டம் வந்தாலும் அதற்குக் குறுக்கு வழியிலே, போய் வழக்கறிஞர்களை வைத்து வாதாடி வெற்றி பெற்று விடலாம் என்ற வகையில் பல கேடான காரியங்களை, தைரியமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களை ஏன் பத்திரிகைகளில் போடக்கூடாது.

இந்த மின்சாரத்தை பொறுத்த மட்டில், வரி ஏய்ப்பு என்று மட்டும் அல்ல, மின்சாரத்தைத் திருடுவது கூட நடந்து கொண்டிருக்கிறது. அந்த மின்சார திருட்டிற்கு ஊரிலே இருக்கிற பெரிய மனிதர்கள் ஒத்துழைப்புத் தருகிறார்கள். மின்சார வாரியத்தில் உள்ளவர்களில் கடைநிலை ஊழியர்களை தங்களுக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படி கடைநிலை ஊழியர்களில் யாராவது தங்களுக்குச் சாதகமாக செயல்பட மறுத்தால், அவர்களை ஊரை விட்டே மாற்றுகிறார்கள் அந்த அளவிற்கு செல்வாக்கு இருக்கிறது. அது அமைச்சருக்கு தெரிந்தோ தெரியாமலோ அவர் பெயராலே தவறான தகவல்களை, கற்பனைகளை எல்லாம் சொல்லி, மறைக்கப் பார்ப்பது போல் நடித்து, உண்மையைத் திரித்து கூறும்படியான அந்த நிலைமைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

இங்கே கோவைத்தம்பி அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். ஏதோ தென்னாற்காடு மாவட்டத்திலே ஜாதி என்ற அடிப்படையில் பிரச்னை வந்துவிட்டதாகச் சொன்னார்கள். நானும் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் தான். அப்படி ஒன்றும் அங்கே இந்த நடவடிக்கையில் ஜாதி பிரச்னை கிடையாது. மின்சார வாரிய வரிகளை வசூல் பண்ணுவதிலே ஜாதி பிரச்சினை இல்லை. ஆனால் கிராமங்களிலே (குறுக்கீடு) நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி சொல்லியிருந்தாலும் அது தவறுதான். ஆனால் அவர் இப்போது சொல்லவில்லை என்று சொல்கிறார் (குறுக்கீடு)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர், அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நான் சொல்லாத ஒன்றை வைத்துக்கொண்டு விமரிசனம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. அரிசனங்களுக்கு ஏழை குடிசைகளுக்கு ஏன் மின் விளக்கு கொடுக்கவில்லை தெரியுமா? இந்த ஊரிலே இருக்கக்கூடிய மிராசுதார் பணம் கட்டவில்லை





ஆகையினால் உங்கள் 100 பேருக்கு லைட் இல்லை என்று சொல்கிற வாய்ப்பு அமைச்சர் அவர்களுக்கு கிடைத்துவிட்டால் அந்த ஊரிலே தகராறு தான் ஏற்படும். புதிய போலீஸ் ஸ்டேஷன் கட்ட வேண்டிவரும். அந்த நிலை வரக்கூடாது. நீங்கள் லைட் போட வேண்டுமே தவிர, ஆளைக் கட்டுகிற வேலையெல்லாம் செய்யக்கூடாது என்றுதான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

**திரு. எல். இளையபெருமாள்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். நிச்சயமாக அவர்கள் சொல்லமாட்டார்கள். அமைச்சர் அவர்கள் அது பற்றி கவலையே படத்தேவையில்லை. பத்திரிகைகளில் தாராளமாக விளம்பரம் செய்யலாம். விளம்பரம் கொடுப்பதில் குற்றம் இல்லை. ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் பிரகாரம், நிலுவைகள் அவர்களிடம் இருந்து வசூல் செய்துதான் ஆக வேண்டும். வேறு மாற்றம் கிடையாது. ஆனால் உண்மையான நிரபராதிகளாக இருந்தால் அவர்களுக்கு இதில் விதி விலக்குக் கொடுக்கலாம்.

வறட்சிப் பகுதியாக இருந்தால், கலெக்டர் அல்லது வட்ட அதிகாரிகள் பார்த்து, உண்மையிலேயே சக்தியற்றவர்களாக இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் கருணை காட்ட வேண்டும் — வறட்சிப் பகுதியாக இருக்குமேயானால். ஆனால் ஏதோ கேவலம் வந்துவிட்டதாக நினைத்தால், அல்லது அரசாங்கத்தை ஏமாற்றுவதற்காக, வரியை ஏய்ப்பதற்காக, இருக்குமேயானால் மக்களுக்கு செய்ய வேண்டிய பல நல்ல காரியங்களைக் செய்வதற்கு நிதி கிடைக்காத வகையில் தடை செய்வதான ஒரு வேலையாகத்தான் அதைக் கருத வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எத்தனையோ ஆலை அதிபர்கள், மில் முதலாளிகள் பாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களையும் விட்டு விடக்கூடாது. ஒரு சமயத்திலே அவையிலே நம்முடைய மாண்புமிகு தோழர் ரமணி அவர்கள் கேள்வி கேட்கிறபோது சொன்னார், லேண்ட் டெவலப்மெண்ட் பாங்குகளில் 927 பாங்குகளில் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத அவல நிலை இருக்கிறது என்று. காரணம் அந்தப் பாங்குகளில் விவசாயிகளுக்காக கொடுத்த கடன்கள்—பணம் திரும்பி வரவில்லை. அப்படி வேண்டுமென்றே அதைக் கட்டாமல் இருந்ததால் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத அவல நிலைமை இருக்கிறது. ஆகவே நிச்சயமாக ஒரு கடுமையான நடவடிக்கை எடுத்து அதை வசூல் செய்வதிலே யாருக்கும் வருத்தம் வராது. ஆனால் அதே சமயத்தில் ஏதாவது ஆலை அதிபர்களுக்கோ, மில் முதலாளிகளுக்கோ அல்லது அரசியல் காரணங்களுக்காக வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று, ஒருவருக்கு விட்டுக்கொடுத்து

[திரு. எல். இளையபெருமாள்] [1981 ஏப்ரல் 7

மற்றவர்களுக்கு தவருமானால் அதை இந்த அரசு செய்யுமானால், அது மிகப் பாவ காரியம்என்பது மட்டுமல்ல, அரசுக்குக் கெட்ட பெயரையும் அது ஏற்படுத்தும்.

[பிற்பகல் 1-10]

அதேபோல் குடிசைகளுக்கு மின் விளக்குகள் அளிப்பதில் சில குடிசைகளுக்கு மின் விளக்குகள் கொடுத்துவிட்டு பல குடிசைகளுக்கு கொடுக்காமலிருக்கிற ஒரு நிலை இருக்கிறது. அதற்கு பணம் இல்லை என்று காரணம்காட்டி சிலருக்கு நன்மை செய்து, ஒரு தெருவில் பத்து வீடுகளுக்கு மின் விளக்குகள் கொடுத்துவிட்டு மற்ற வீடுகளுக்குக் கொடுக்காமல் இருப்பது என்றால் அது சரியாக இருக்காது. இதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகாது. ஆகவே, ஒரு ஊரை எடுத்துக்கொண்டு அந்த ஊரில் உள்ள அத்தனை பேர்களுக்கும், அத்தனை வீடுகளுக்கும் மின் விளக்குக் கொடுத்தால்தான் அரசாங்கத்திற்கு நல்ல பெயர் கிடைக்கும். ஆகவே இதில் அரசாங்கம் தைரியமாக நடவடிக்கை எடுப்பதற்கு அஞ்சத் தேவையில்லை.

பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தி மக்களுக்கு நிலைமையை தெளிவுபடுத்தும் காரியத்தைச் செய்ய வேண்டும். ஒரு சிலரைச் சொல்லிவிட்டு மற்றவர்களை விட்டுவிட்டோம் என்ற அலட்சிய மனப்பான்மை வரக்கூடாது. யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தார்களாக இருந்தாலும் பலகீனம் என்று எண்ணாமல் செய்ய வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு சிறியதுதான் என்றாலும் சிறப்பான நல்ல பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வழங்கியிருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தை முன்மொழிகிறபோது ஒரு ஐந்து நிமிடத்தில் இது முடிந்துவிடும் என்று கருதித்தான் நான் முன்மொழிந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் மின்சார வாரியம் என்று கொடுத்தாலே அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்கிற பயிற்சியையும் பக்குவத்தையும் இயற்கையாகவே பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த விவாதம் மிகவும் நன்றாக எடுத்துக் காட்டுகிறது. அதற்குக் காரணம் இந்தத் துறை மக்களின் அன்றாட வாழ்க்கையோடு மிகவும் இணைந்த துறை என்பதுதான்.

மின்கட்டணத்தில் பாக்கி இருக்கிறது, கட்டாதவர்கள் நிறையப்பேர்கள் இருக்கிறார்கள், கட்டக் கூடாது என்று சொல்கிறவர்கள் ஒருபுறம் இருக்கிறார்கள், கட்ட மறுக்கிறவர்கள் நல்ல வசதிபடைத்த விவசாயிகள் என்று பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. நான் முதலில் இந்தப் பேரவைக்கு ஒன்றை விளக்க விரும்புகிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில்



1981 ஏப்ரல் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

மின் கட்டணம் கட்டாமல் இருந்தவர்களுடைய எண்ணிக்கை
நவம்பர் 1980 கணக்குப்படி 5,63,946 ஆகும். சுமார் ஒன்பது
இலட்சம் பம்ப்செட்டில் 5,63,946 பேர்கள் மின்கட்டணம்
கட்டாத இயக்கத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். ஆனால்
அரசாங்கம், குறிப்பாக மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர்
அவர்களும் இந்த அரசும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்
களோடும் தமிழ்நாட்டு விவசாய சங்கங்களோடும் சேர்ந்து
பேச்சுவார்த்தை நடத்தி இந்த மின் கட்டண நிலுவையை
ஒன்றுபிளஸ் ஒன்று என்ற அடிப்படையில் கட்ட வேண்டும் என்று
தீர்மானித்ததற்குப் பிறகு இந்த மன்றத்தில் இருக்கிற நாம்
அனைவரும் மகிழ்ச்சி பெறத்தக்க விதத்தில் 4,64,373
பேர்கள் நிலுவையைச் செலுத்தி வருகிறார்கள். இது 1981 ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிய கணக்கு. ஆகவே,
இன்னும் செலுத்தாதவர்கள் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது
99,573 தான். சுமார் 5·6 இலட்சம் என்ற அளவில் இருந்த
செலுத்தாதவர்கள் தொகை ஒரு இலட்சம் என்ற அளவில்
வந்திருக்கிறது. அவர்கள் இன்னும் எதை எதிர்பார்த்திருக்
கிறார்களோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் அப்படி
செலுத்தாதவர்கள் எண்ணிக்கை மிகவும் கணிசமாக குறைந்
திருக்கிறது என்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். மின்சார வாரிய நிலுவையை மட்டும் நாம் கணக்கில்
வைத்துப் பார்த்தால் சரியாக வராது. ஏனென்றால் மின்சார
வாரிய நிலுவை மொத்தமாக இருந்தாலும் அதைச் செலுத்துவ
தில் நாம் தவணைகளாக நாமே அனுமதித்திருக்கிறோம். ஆகவே
தவணைகள் அடிப்படையில்தான் அந்த நிலுவை வருமே
தவிர இவ்வளவு நிலுவை பாக்கி என்று நேராக கணக்கில்
எடுத்துக்கொள்வோமானால் அது சரியான நிலையைத்
தெரிவிக்காது. அதனால்தான் யார் யார் ஒழுங்காகச்
செலுத்தி வருகிறார்கள் என்ற விவரத்தைச் சொன்னேன்.

சுமார் 37·59 கோடிரூபாய் விவசாயிகள் மத்தியிலே பாக்கி
யிருந்தது. நமக்குக் கிடைத்திருப்பது 11.66 கோடி ரூபாய்.
கிடைத்தது குறைவுதான். தவணைப்படி வந்த காரணத்தி
னாலே, இப்படிக் குறைவாக வந்திருக்கிறது. இன்னும் வசூலிக்க
வேண்டியது 25 93 கோடி ரூபாய் என்று தெரிவித்துக்கொள்
கிறேன். இந்த சட்டமுன்வடிவுப்படி விவசாயிகள் பாக்கி
வைத்திருந்தாலும், மற்றும் யார் பாக்கி வைத்திருந்தாலும்,
இந்த சட்டமுன்வடிவு அவர்களுக்கும் பொருந்தும். தொழில்
அதிபர்களாக இருந்தாலும் சரி, அல்லது மின்சாரத்தை யார்
பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கும் சரி இது பொருந்தும்
என்று குறிப்பிட விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்
பினர் பேசுகின்றபோது, ஒழுங்காக மின் கட்டணம் கட்ட
வேண்டுமென்று விரும்புகிறவர்கள் விவசாயிகளுக்கு ஏற்றவகையில்
பில்களைத் தருவது, கட்டணத்தைச் சரியாக போடுவது, அதை
உடனுக்குடன் வசூலிப்பதற்கு நிர்வாகத்தை மேம்பாடு செய்ய
வேண்டுமென்று எடுத்துத் தெரிவித்த கருத்து வரவேற்கத்தக்க

[திரு. ச. இராமச்சந்திரன்] [1981 ஏப்ரல் 7

ஒன்று. அந்த முறையிலே மாண்புமிகு அழகர்சாமி அவர்கள்
ஒரு நல்ல கருத்தைக் குறிப்பிட்டார்கள். இப்போது விவசாயி
களுக்கு ஹார்ஸ் பவரில் நிரந்தரமான கட்டணம் இருக்கிறது.
மீட்டர் வாடகை கட்டணம் இருக்கிறது. சின்ன மோட்டார்
வைத்து குறைவான மின்சாரத்தை இயக்குகின்றவர்களுக்கு
மொத்தத்தில் கணக்குப் பார்க்கின்றபோது, இந்தமின் கட்டணம்
அதிகமாக வருகிறது. அவர்கள் பிக்சட் சார்ஜ் கொடுக்கிறார்கள்
மீட்டர் ரெண்ட் கொடுக்கிறார்கள். அதற்கும் மேலாக கரண்ட்
கன்சம்ஷன் சார்ஜ் கொடுக்கிறார்கள். 100, 200 யூனிட் பயன்
படுத்துகிறவர்களுக்கு உண்மையிலே கட்டணம் கூடுதலாக
வருகிறது. 1000, 2,000 யூனிட் பயன்படுத்துகிறவர்களுக்கு
அதாவது பிக்சட் சார்ஜ், மீட்டர் ரெண்ட் என்று வரும்போது
அவர்களுக்குக் குறைகிறது, அரசாங்கத்தின் நோக்கம், சிறு
விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது. பெரிய
விவசாயிகள் தாங்கும் சக்தி இருப்பதால், செலுத்த முடியும்.
ஆனால், இப்போது இருக்கின்ற கட்டண முறையில் சிறிய
விவசாயிகளுக்குக் கூடுதலான அளவிற்கும், பெரிய விவசாயி
களுக்குக் குறைவான அளவிற்கும் கட்டணம் வருகிறது. இதை
யெல்லாம் மின்சார வாரியம் தீவிர பரிசீலனை செய்து
வருகிறது. இதையெல்லாம் மாற்றி, ஒரே கட்டணமாக்கி கரண்ட்
கன்சம்ஷனை அடிப்படையாக வைத்துக்கொண்டு வருவோமே
யானால், சிறிய விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் என்ற
அடிப்படையில் கட்டண விகிதத்தை மின்வாரியம் அராய்ந்து
வருகின்றது என்ற நாவன்லை நான் மாண்புமிகு அழகர்சாமி அவர்கள்
மகிழ்ச்சி அடையத்தக்க வகையிலே இங்கே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்களும், இன்னும்
மாண்புமிகு மற்ற உறுப்பினர்களும் பேசுகின்ற போது, விவசா
யத்திற்கு வேண்டிய அளவு மின்சாரம் தருவது இன்றியமை
யாதது என்று குறிப்பிட்டார்கள். அது உண்மைதான்.
ஆனால், அதே நேரத்தில் நமக்கிருக்கிற சில சங்கடமான
நிலைமைகளை நாம் கவனித்தாக வேண்டும். வேறு எந்த
மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு பம்பு செட்டுகள் நமது
மாநிலத்தில்தான் 9 இலட்சம் பம்பு செட்டுகள் இருக்கின்றன.
வேறு எந்த மாநிலத்திலேயும் இந்த அளவுக்கு பம்பு செட்டு
கிடையாது. இதிலே என்ன சிரமம் இருக்கிறதென்றால், இந்த
9 இலட்சம் பம்பு செட்டுகள், ஒரே நேரத்தில், ஒரே காலத்தில்
இயக்குவார்களேயானால் அதற்குத் தேவையான மின்
உச்சத் தேவையை நாம் தர முடியாது. அத்தனை மோட்டார்
களும் ஒரே காலத்தில் வருகின்றபோது, கிரிட்டிலே இருக்கக்
கூடிய உற்பத்தித் திறன் அதிகமாகி, எல்லா ஜெனரேட்டர்களும்
அதன் விளைவாக சக்தியை இழந்து விடும். ஆகவே,
பிரித்துப் பிரித்துத் தரவேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம்.
ஏற்கனவே, இரண்டாகப் பிரித்து கிராமங்களுக்கு, மின்சாரம்
தந்தோம். அது இன்றைக்கும் பொருந்துமா என்றால், 200,
300 மெகா வாட்டாக வரும்போது, லோட் ஷெட் வருகிறது.



1981 ஏப்ரல் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

திடீரென்று 200, 300 மெகா வாட் வந்தால், ' ஆப் ' பண்ண
வேண்டியிருக்கிறது. எதிர்பாராத விதத்தில், மின்சார
சப்ளையை நிறுத்துகிறோம். இதனால் சாதனங்கள் பல சேத
மடைகின்றன. இப்போது 3 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறோம்.
இந்த 3 பிரிவுகளின் அடிப்படையில், உச்ச தேவை சமாளிக்கப்
படும் என்று கருதுகிறேனே தவிர, வேறு அல்ல. விவசாயி
களுக்கு மின்சாரம் கொடுக்கக் கூடாது என்பதல்ல.

காலையிலே கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது
பேசுகின்ற நேரத்தில், குறைந்தது 6 மணி நேரத்திற்காவது
அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கும் வகையில் இந்த உத்தர
வாதத்தைத் தரவேண்டும் என்று சொன்னேன். அவர்களுக்கு
கூடுதலாக வேண்டுமென்று கேட்டார்கள். தொழிற்சாலைகளுக்கு
வேண்டுமானால் கூட, ஒரு மாதமோ அல்லது இரண்டு
மாதங்களுக்கோ நிறுத்தி, முழு அளவு மின்சாரத்தை
வேளாண்மைக்குத் தரலாம் என்ற கருத்தைச் சொன்னார்கள்.
அதிலே இரண்டு கோணங்கள் இருக்கின்றன. விவசாயத்திற்கு
முழுவதும் மின்சாரம் தந்து, உணவுப் பொருள்களை, விவசாயப்
பொருள்களை உற்பத்தி செய்வது என்பது, பொது நன்மையை
விளைவிக்கக்கூடிய கருத்து, ஆனால், மின்சார வாரியம் நமக்கு
மின்சாரம் கொடுக்கும்போது, குறைந்த விலையில் கொடுக்கிறது.
அப்படிக் கொடுக்கும்போது, கிடைக்க வேண்டிய பணம் கிடைக்
காமல், மின்சார வாரியம் திவாலாகி விடுமே என்ற சந்தேகம்
ஏற்படுகிறது. ஓரளவுக்கு அங்கே பணி புரிகின்றவர்களுக்கு
சம்பளம் கொடுப்பதற்காகவே, தொழிற்சாலைகளுக்கு மின்
சாரம் கொடுத்துப் பணம் கிடைத்தால் தான் ஓரளவுக்கு மின்சார
வாரியத்தை இயக்க முடியும்.

[பிற்பகல் 1–20]

மின்சார வாரியம் என்பது வெறும் வணிக நிறுவனம் அல்ல
அதே நேரத்தில் வெறும் தர்ம சத்திரமும் அல்ல. இரண்டுக்கும்
பொதுவாக இயங்க வேண்டியிருக்கின்றது. அதே நேரத்தில்
பொது நன்மையைக் கருதியும் இயங்க வேண்டியிருக்கிறது. இந்த
நிலைமையில் எந்த அளவிற்கு விவசாயிகளைத் திருப்தி செய்ய
முடியுமோ அவர்களைத் திருப்தி செய்து, நம் நாட்டில் எந்த
அளவிற்கு தொழில்களை முடங்காமல் இயக்கச் செய்ய முடியு
மோ அந்த அளவிற்கு முடங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டி
யது நம்முடைய கடமையாக இருக்கிறது.

பில்களைப் பொறுத்த வரையில் நான் மின் வாரிய நிதிநிலை
அறிக்கையிலே விவாதத்தின் போதே எடுத்துச் சொன்னேன்.
இனிமேல் பில்களை நாமே அலுவலகங்களிலிருந்து அனுப்புவதாக
இல்லை. வருகிற ஜூன் மாதத்திலே இருந்து யார் ஒருவர்
வீட்டுக்கோ, பம்ப் செட்டுக்கோ ரீடிங் எடுக்கிறாரோ அந்த
கார்டிலே-அங்கே ஒரு கார்டு வைக்க இருக்கிறோம்—எழுதிவிட்டு
வந்துவிடுவார். சென்ற மாதம் 100 ஆக இருந்தது; இந்த
மாதம் 150 ரீடிங்; ஆக 50 யூனிட் அவர்கள் பயன்படுத்தியிரு
கிறார்கள். 15 பைசா யூனிட்டிற்கு என்றால் ரூபாய் 7·50

என்று அங்கே போட்டு அவரிடத்திலே கொடுத்து விட்டு வர இருக்கிறோம். அதைப் பயன்படுத்திக் கொண்டு பயனீட்டாளர்கள் மின் வாரிய அலுவலகங்களிலே பணத்தைக் கட்டிவிடலாம். பில்லே வரவில்லை என்று குறை இல்லை. பில் எப்படி போடுகிறார்கள் என்று தெரியாத சங்கடமும் இல்லை. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள், மின் வாரியப் பொறியாளர்கள் ஆகியோருடன் கலந்து பேசவிருக்கிறார்கள். இந்த முறையில் அமுல்படுத்தலாமென்று ஆலோசனையைப் பெற்று ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து அமுல் படுத்தப்படவிருக்கிறது. ஆகவே பில்கள் கிடைப்பது, பில்களை தெரிந்து கொள்வது, கொண்டு போய் கட்டுவது இவைகளில் இருக்கிற சிரமங்கள் குறையும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இந்த விளம்பரப் பிரிவைச் சொல்கிற பொழுது இந்த சட்டமுன்வடிவை எல்லோரும் வரவேற்க வேண்டும். காரணம் நாம் எவ்வளவோ பேசுகிறோம். பேசிவிட்டு மாலையிலே பத்திரிகையிலே பேசியது வந்திருக்கிறதா என்று பார்க்கிறோம். நாமே பத்திரிகையில் வந்திருக்கிறதா என்று ஆசைப்படுகிற ஒரு காரியத்தைதான் இந்தச் சட்ட முன்வடிவு செய்கிறது. சில பெயர்களைப் பத்திரிகையிலே அரசாங்க செலவிலே, மின்வாரியக் செலவிலே போடவிருக்கிறோம், நிச்சயமாக அதை எல்லோரும் வரவேற்கவேண்டுமே தவிர, கூடாது என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. அவர்கள் பெயர்கள் வரவேண்டாமா ? எவ்வளவு நிலத்திற்குச் சொந்தக்காரர்? எந்த எந்த ஆலைகளில் எவ்வளவு பங்குகள் இருக்கின்றன? எத்தனை பம்ப் செட்டுகள் வைத்திருக்கிறார் ? அந்த விவசாயிகளின் பெயர் எல்லாம் பத்திரிகைகளில் வந்தால் தானே அவர்களுக்கும் ஒரு பெருமை ; நாட்டு மக்களுக்கும் அவர்களின் அந்தஸ்து தெரியும். அதைத் தான் நாம் அரசாங்கத்தின் செலவிலே செய்வதற்கு இந்த சட்ட முன் வடிவு வழிவகை செய்கிறது. ஆகையால் எல்லோரும் அதை வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

இங்கே மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மற்றவர்களும் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். ஏன் இவ்வளவு நாள் காலதாமதமாக இருந்தீர்கள் ? அப்போதே அதை செய்திருக்கலாமே; கட்டணத்தைக் கட்டவில்லை என்றால் துண்டித்திருக்கலாமே என்று சொன்னார்கள். அவர்கள் பேசுவது, 'சொல்லுதல் யாருக்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்; ஏனென்றால் மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு தெரியாதா ? மால்கோ நிறுவனத்திலே 1974–75-ஆம் ஆண்டில் ஏன் வசூல் பண்ணமுடியவில்லை ; அரசாங்கத்திற்கு என்று சில கஷ்டங்கள் இருந்திருக்கும். அதை அவரிடம் கேட்டுப் பார்த்தால் அவருக்கும் தெரிந்திருக்கும். ஆகவே சொல்லுதல் சுலபம்; அதற்கு என்னென்ன காரணங்கள் அன்றைக்குச் சொல்லப்பெற்றனவோ அதே காரணங்கள்தான் இன்றைக்கும் இருக்கின்றன.





காலதாமதம் என்பது ஒரு குற்றச்சாட்டல்ல, அரசாங்கத்தை நடத்துகிறவர்களுக்கு இருக்கின்ற சிரமங்கள் தெரியும். அதை நடத்துகின்றவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் தெரியும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். மால்கோ நிறுவனத்தைப் பற்றிச் சொன்னார்கள். மால்கோ நிறுவனம் 9 கோடி, 8½ கோடி ரூபாய் பாக்கி வைத்து இருக்கிறார்கள். வசூல் செய்யாமல் விட்டுவிட்டார்கள் என்று ; நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத போது 1977-ல் முதலமைச்சர் அவர்கள் இதே மன்றத்திலே அறிவித்தார்கள். இந்த 3 ஆண்டு காலத்திலே 9 கோடி ரூபாய் வசூல் செய்யாமல் கால தாமதம் ஏற்படுத்தியது நீங்களா ? அல்லது வேறு யார் அல்லது உயர் நீதி மன்றத்தில் இருக்கிற வழக்கினை துரிதப்படுத்த வேண்டுமென்று சொல்ல வேண்டியது நீங்களா ? அல்லது நாங்கள் சொல்ல வேண்டுமா ? இந்த 9 கோடி ரூபாயை வசூல் செய்யாமல் இருப்பது முன்னேற்ற கழகம் அல்ல. ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை சொல்லாமல் இருக்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரை நாங்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு எந்தவிதமான நிலுவையும் இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம். எங்களுக்கு என்று சில பிதுரார்ஜித சொத்து கிடைத்து இருக்கிறது. அதை நாங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதுதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ரொம்ப பிரச்சினையை கிளப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) பிதுரார்ஜித சொத்து என்றால் முன்னாலே இருந்தவர்கள் நமக்கு விட்டுப்போன சொத்து என்று அர்த்தம். காரணம் என்ன என்பதை ஆராயாமல் விளைவை மட்டும் பற்றிப்பேசி கொண்டிருக்க முடியாது. ஏன் அவ்வளவு வந்தது ? அந்த காலத்திலேயே அவர்களும் பண்ணியிருக்கலாமே என்பதற்காகத் தான் சொன்னேன். வருவதற்கான காரணங்கள் இருக்கின்றன நம்முடைய நாட்டிலே விசித்திரமான இயக்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன கூறினார்கள் என்றால் மின் கட்டணத்தைக் கட்டாதீர்கள் என்று சொல்லிக் கொண்டே வந்தார்கள். நீண்ட நெடுங்காலமாக அவர்கள் அப்படிச் சொல்லிக், கொண்டே வந்தார்கள். 1975-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அந்த சமயம் பார்த்து அப்போது இருந்த அரசால் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. அந்த விசித்திர சங்கத்தினர் அப்போது ஒழுங்காகக் கட்டிக் கொண்டு இருந்தார்கள். அந்த வரலாற்றைக் கொஞ்சம் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதற்குப் பிறகு எமர்ஜன்ஸி முடிந்து 1977-ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து தான் நிலுவை. 1977-ஆம் ஆண்டிலே மின் கட்டணத்தைக் கட்ட

மாட்டோம் என்று முடிவு எடுக்கிறார்கள். என்ன காரணம்? 1977-ஆம் ஆண்டில் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு விட்டன. எமர்ஜன்ஸி முடிந்து தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுவிட்டன. ஆகவே 1977 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து கட்ட மாட்டோம் என்று முடிவு எடுத்தார்கள். அப்போது இருந்த அரசும் அதை ஒன்றும் செய்ய முடியவில்லை. இங்கே அப்போது கவர்னர் ஆட்சி இருந்தது. அங்கே இந்திரா காந்தி பிரதமராக இருந்தார்கள். அதற்குப் பிறகு ஜனதா ஆட்சி வந்தது. ஜனதா ஆட்சிக் காலத்திலே அவர்கள் கட்டவில்லை, கட்ட முடியாது என்று சொல்லி விட்டார்கள். ஆகவே ஜனநாயகம் வந்ததிலிருந்து கட்ட ஆரம்பிக்கவில்லை. அதற்குப் பிறகு நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு வசூலிக்க வேண்டுமென்று தீவிரமான நடவடிக்கை எடுக்க துறையின் சார்பாக நாங்கள் முயற்சித்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், முதலிலே நாம் அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி அவர்களையும் நம்மோடு இணைத்துக் கொண்டு அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு ஹைலெவல் கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் சார்பிலே மின் கட்டணத்தைப் பற்றித் தெளிவாகப்பேசி எல்லாச் சங்கத்தினரும் ஏற்றுக் கொண்டார்கள். மீண்டும் இங்கே அதை விளக்கமாக நான் சொல்லவில்லை. ஆகவே அவர்களுடைய சம்மதத்தையும் பெற்று செய்வோம் என்ற அளவிலேதான் அந்தக் காலதாமதம் ஏற்பட்டதே தவிர வேறு ஒன்றும் அல்ல. ஆனாலும் ஒரு சில பேர்கள் மட்டும் நான் ஏற்கெனவே சொன்னதை போல் அவர்கள் என்ன நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் வசந்தனுக்கு நோயும் நீடிக்க வேண்டும், வைத்தியனுக்கு வேலையும் நீடிக்க வேண்டும், விவசாயிகள் மத்தியில் பிரச்சினைகளும் போராட்டங்களும் இருக்க வேண்டும் அப்போது தான் தன்னுடைய தலைமையும் நீடிக்கும் என்கின்ற அந்தப் போக்கிலே இருந்து கொண்டு இருக்கிற காரணத்தால்தான் இன்றைக்கு இந்தச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பிரச்சினைகள் தீரக் கூடாது என்பவர்களிடத்திலே பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முடியும் என்று சொல்லவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சரியோ, தவறோ அத்தகைய ஒரு சக்தி தமிழ்நாட்டில் தேவைதானா? அவர்களுக்கு ஒரு செல்வாக்கு ஏற்படுவது முறைதானா என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்தாக வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு அரசியல் கட்சியையும் ஒவ்வொரு நேரத்திலே அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதுவும் மாநில அரசியல் கட்சிகளுக்கு வருகின்ற ஆபத்துக்களுக்குக் கணக்கே கிடையாது. ஆகவே ஒவ்வொரு நேரத்திலேயும் ஒவ்வொரு அரசியல் கட்சியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இப்போது கூட நான் அறிகிறேன். இவ்வளவு தூரம் நாமெல்லாம் பேசி முடிவுக்கு வந்து ஒன் பிளஸ் ஒன் கட்ட வேண்டுமென்று தீர்மானித்ததற்குப் பிறகும் கூட இன்னும் சில பேர்கள் எப்படியாவது இதையெல்லாம் ஏற்றுக் கொள்ளாத ஒரு குறிப்பிட்ட சங்கத்தைச் சேர்ந்தவர்களை



டெல்லிக்கு அனுப்பலாமா, டெல்லியில் இருக்கிறவர்களை சந்திக்க வைக்கலாமா என்ற முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாக அறிகிறேன். அங்கே போய் பிரதம மந்திரியை மற்ற மந்திரிகளை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து இனிமேல் தேர்தல் வந்தால், நாங்கள் உங்கள் பக்கம் இருப்போம் என்று அவரைச் சொல்ல வைத்து ஒரு தைரியத்தைப் பெற்றுக் கொண்டு அவருக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டுவதற்குக் கூட சில பேர்வழிகள் இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன்.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வி. வி. சுவாமிநாதன்) : அவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்வது, தமிழ்நாட்டை தயவு செய்து அழிவுப் பாதைக்கு அழைத்துச் சென்று விடாதீர்கள் என்பது தான். ஏனென்றால், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் பொதுமக்களின் நலன் கருதிச் செயல்படுகின்ற கட்சிகள் நாம். கொள்கை மாறி இருக்கலாம், கருத்துக்கள் மாறியிருக்கலாம். இருந்தாலும் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நினைத்துப் பாடுபடும் கட்சிகள் நாம். அதோடு மட்டுமல்ல, ஒவ்வொரு கட்சியும் ஒரு காலத்திலே, பொறுப்பிலே இருந்தது. இப்பொழுது நாங்கள் இருக்கிறோம். சில கட்சிகள் பின்னாலே பொறுப்பிலே வரலாம். ஆனால் அரசியல் கலப்பு இல்லாதவர்கள் என்று சொல்லும் இத்தகையோர் என்றும் ஆட்சிக்கு வரப் போவதில்லை. ஆகவே பொறுப்பும் இல்லை. இதை அரசியல்வாதிகளாக நாம் உணர்ந்து கொண்டால் இந்தச் சக்திகளுக்கு நிச்சயமாக இனிமேல் இடமிருக்காது. நாமும் இவ்வளவு பெரிய சட்டங்களையும், சட்டத் திருத்தங்களையும் கொண்டு வர வேண்டிய அவசியமும் இருக்காது. களை இருக்கின்ற வரை எடுத்துத்தான் ஆக வேண்டும் அதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவே தவிர வேறல்ல. ஆகவே, இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது சிறு விவசாயிகள் பற்றிக் கருணையோடு சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் பேர் பம்பு செட்டுகளை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ; அதுவும் அரசாங்கக் கடனிலே வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தர வாழ்க்கை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நடவடிக்கை எடுக்காத நிலையிருக்கிறது. இதைப்பற்றி அரசு ஆராயுமா ? இதற்கு என்னதான் செய்யப் ?போகிறீர்கள்

[1981 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

திரு. அ. ரகுமான்கான்: இந்த மாமன்றத்தினுடைய மாற்றுத் தலைவரவர்களே, நான் இந்த மசோதா குறித்து ஏற்கனவே பொதுமக்களுடைய கருத்தறிய அனுப்பப்பட வேண்டுமென்று சொல்லி ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அப்படித் திருத்தம் கொடுக்கப்படும்பொழுது, அந்தத் திருத்தத்தைக் கொடுத்தவர்களைப் பேச அனுமதிக்க வேண்டுமென்பது தான் மரபு, விதி, முறை. ஆனால் இப்பொழுது இங்கே மசோதா நிறைவேற்றப்பட இருக்கிறது. எனவே, திருத்தம் கொடுத்த உறுப்பினர் என்ற வகையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தால் சில நிமிடங்களில் என்னுடைய இரண்டொரு கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): அந்தத் திருத்தம் சம்பந்தப்பட்ட நேரம் வந்தபொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் இருக்கையில் இல்லை. ஆகவே, அதுபற்றி இப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: உறுப்பினர் இருக்கையிலே இருக்கிறாரா இல்லையா என்பதை எப்படி அறிய வேண்டுமென்றால், அமென்ட்மென்ட் கொடுத்ததற்குப் பிறகு சபையிலே வாசித்தாக வேண்டும். அமென்மெண்ட் கொடுத்த பிறகு, அதை சேர் வாசித்து, பிறகு உறுப்பினர் இருக்கிறாரா இல்லையா என்று பார்த்து, அப்பொழுது இல்லை என்றால் உறுப்பினர் இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதிலே கலந்துக் கொண்டு பேசியிருக்கிறார்கள். வாக்கவுட் நடத்தியதற்குப் பிறகுதான் அவர்கள் கலந்துக் கொண்டு பேசியிருக்கிறார்கள். இது எப்படி முடிந்தது? அடையாளத்திற்காக வாக்கவுட் செய்யப்பட்டது. ஆனால் இது பற்றிய விவாதம் வந்தவுடன் நாங்கள் வந்து விட்டோம். எனவே, நீங்கள் அறிவித்துவிட்டு, அதற்குப் பிறகு உறுப்பினர் இல்லை என்றால் அதைச் சொல்லி அவைக்குறிப்பிலே ரிக்கார்டு செய்ய வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): ஏற்கனவே இந்த இருக்கையிலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் இருந்தபொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த விவாதம் தொடங்கப்பட்ட நேரத்தில் தாங்கள் இருக்கையில் இல்லை. ஆகவே, அந்தத் திருத்தம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, இப்பொழுது அந்தத் திருத்தத்தைக் கொண்டு வர முடியாது.



1981 ஏப்ரல் 7]

திரு. துரைமுருகன்: நாங்கள் சொல்வது, அமென்மென்டைப் படிக்க வேண்டும். திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்த அமென்மெண்டைப் படித்துவிட்டு, மொழியப் பெற வேண்டுமென்று சொல்லும் பொழுது திரு. ரகுமான்கான் சபையில் இல்லை என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): உறுப்பினர் இருக்கையில் இல்லாதபொழுது அந்தத் திருத்தத்தை இப்பொழுது படிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. துரைமுருகன்: திருத்தத்தைப் படிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இருக்கையில் இல்லை என்றால் திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகப் பொருள்.

திரு. அ. ரகுமான்கான்: உறுப்பினர் இருக்கையில் இல்லை என்றால், உறுப்பினர் அவையில் இல்லை என்று சொல்ல வேண்டும்.

திரு. துரைமுருகன்: திரு. ரகுமான்கான் அவையில் இல்லை, எனவே, திருத்தம் மொழியப் பெறவில்லை என்பதை ரிக்கார்ட் பண்ண வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வி. வி. சுவாமிநாதன்): பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன், தமிழ்நாடு "1981-ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29, 1981) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

7. அரசினர் தீர்மானம்.

விதி 31 ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெறவேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ, நாளை, 8—4—1981 அன்று தளர்த்த வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

8. அறிவிப்பு.

வினாப் பட்டியல் தேதி மாற்றம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வி. வி. சுவாமிநாதன் : 8—4—1981 தேதியிட்டு, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள வினாக்கள் பட்டியல் வேறொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

அ. இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

முன்னால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவின் ஆய்வுக்குழு கீழ்க்கண்ட 24 உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

1. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.
2. திரு. ஆர். மணிமாறன்.
3. திரு. வேடந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
4. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்.
5. திரு. சி. கோபால்.
6. திரு. செ. செம்மலை.
7. திரு. எம். சின்னராஜ்.
8. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
9. திரு. கே. குப்புசாமி.



10. டாக்டர் கே. சமரசம்.
11. திரு. கோ. விஸ்வநாதன்.
12. திரு. ஆ. வெள்ளைச்சாமி.
13. திரு. மி. வின்சென்ட்.
14. திரு. சேலம் மு. ஆறுமுகம்.
15. திரு. நா. சுந்தரராஜ்.
16. திரு. கே. எம். தங்கமணி.
17. திரு. இரா. கருப்பையா.
18. திரு. மு. அம்பிகாபதி.
19. திரு. என். சங்கரய்யா.
20. திரு. ஜெ. ஹேமச்சந்திரன்.
21. திரு. ப. நெடுமாறன்.
22. திரு. குமரி அனந்தன்.
23. திரு. பி. முகமது இஸ்மாயில்.
24. திரு. எஸ். ஆண்டித் தேவர்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : பேரவையின் 131-வது விதியின் கீழ் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை இக் குழுவின் தலைவராக மாண்புமிகு பேரவைத் தலைவர் நியமித்துள்ளார்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 8—4—1981 காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·38 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

248. தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு மதுபான (உரிமம் அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தமொன்ற செய்வது குறித்து உள்துறையின் (மதுவிலக்கு—ஆயம் IV) 21—2—1981-ஆம் தேதியிடப்பெற்ற 397-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின், (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள், ஏதுவுமில்லை.

## இணைப்பு I

[273 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 670க்கான விடை]

அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் 1978–79 ம் ஆண்டில் தினசரி பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்ததற்கான செலவு ரூ. 93,87,907.

1979–80-ம் ஆண்டில் அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் தினசரி பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்ததற்கான செலவு ரூ. 1,14,22,152.

பத்திரிகைவாரியான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| வரிசை எண்ணும், பத்திரிகையின் பெயரும். | 1978–79. | 1979–80. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| I. ஆங்கிலம். | | |
| 1. இந்து .. .. .. | 31,48,009 | 34,63,032 |
| 2. இந்தியன் எக்ஸ்பிரஸ் (எல்லாப் பதிப்பும்). .. | 21,12,417 | 25,87,392 |
| 3. அமிர்த பசார் பத்திரிகா .. | 2,00,221 | 93,182 |
| 4. மெயில் .. .. .. | 1,56,662 | 1,91,348 |
| 5. இந்துஸ்தான் டைம்ஸ் .. | 1,41,960 | 1,01,710 |
| 6. டைம்ஸ் ஆப் இந்தியா (எல்லாப் பதிப்பும்). .. | 1,02,124 | 2,23,578 |
| 7. டெக்கான் ஹெரால்டு (பெங்களூர்). .. | 57,670 | 56,633 |
| 8. பைனான்சியல் எக்ஸ்பிரஸ். | 32,169 | 14,321 |



| வரிசை எண்ணும், பத்திரிகையின் பெயரும். | 1978–79. | 1979–80. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| I. ஆங்கிலம்—தொடர்ச்சி. | | |
| 9. பிரீ பிரஸ் ஜர்னல் .. .. | 27,925 | 40,344 |
| 10. டெக்கான் கிரானிக்கிள் (செகந்தராபாத்). .. | 19,478 | 4,187 |
| 11. பேட்ரியட் (டெல்லி) .. | 17,038 | 25,434 |
| 12. ஆப்டர்னூன் .. .. | 16,000 | 4,839 |
| 13. எக்கனாமிக் டைம்ஸ் (பம்பாய்). .. | 14,246 | 32,762 |
| 14. டிரிபியூன் (சண்டிகர்) .. | 13,359 | 5,570 |
| 15. பிசினஸ் ஸ்டாண்டர்ட் (கல்கத்தா). .. | 12,140 | 4,462 |
| 16. நேஷனல் ஹெரால்டு (லக்னோ, டெல்லி). .. | 10,571 | 4,329 |
| 17. இந்தியன் நேஷன் .. .. | 10,300 | .. |
| 18. ஈவினிங் நியூஸ் (பம்பாய்) .. | 3,681 | 7,387 |
| 19. பயனியர் (லக்னோ) .. | 3,556 | 12,126 |
| 20. அஸ்ஸாம் டிரிபியூன் (கௌஹாத்தி). .. | 720 | 3,240 |
| 21. இட்டவாடா .. .. | 149 | .. |
| 22. ஸ்டேட்ஸ்மேன் .. .. | .. | 2,01,008 |
| II. தமிழ்— | | |
| 1. தினத்தந்தி (எல்லாப் பதிப்பும்). .. .. | 9,01,689 | 13,24,799 |
| 2. தினமணி .. .. | 5,23,464 | 5,56,704 |

| வரிசை எண்ணும், பத்திரிகையின் பெயரும். | 1978–79. | 1979–80. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 3. தினமலர் .. .. .. | 2,82,770 | 4,72,564 |
| 4. மக்கள் குரல் .. .. | 1,53,152 | 2,18,734 |
| 5. தென்னகம் .. .. | 1,36,609 | 53,774 |
| 6. அண்ணா .. .. | 1,34,092 | 1,54,079 |
| 7. மாலை முரசு .. .. | 1,31,512 | 2,50,880 |
| 8. தினகரன் .. .. .. | 55,016 | 24,116 |
| 9. முரசொலி .. .. | 32,209 | 11,418 |
| 10. நீதியின் குரல் .. .. | 27,496 | 43,000 |
| 11. விடுதலை .. .. | 25,485 | 55,155 |
| 12. மாலை மலர் .. .. | 24,593 | 63,541 |
| 13. அலை ஓசை .. .. | 23,990 | 7,996 |
| 14. நவசக்தி .. .. .. | 22,540 | 5,152 |
| 15. தினச்சுடர் .. .. | 9,472 | 17,321 |
| 16. மக்கள் செய்தி .. .. | 6,667 | 75,726 |
| 17. நவ இந்தியா .. .. | 5,160 | 6,980 |
| 18. தீக்கதிர் .. .. .. | 650 | 6,510 |
| III. பிற மொழிகள். | | |
| தெலுங்கு — | | |
| 1. ஆந்திரப்பிரபா .. | 69,554 | 75,346 |
| [illegible] .. .. | 36,368 | 65,276 |



| வரிசை எண்ணும், பத்திரிகையின் பெயரும். | 1968–79. | 1979–80. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| III. பிறமொழிகள் — தொடர்ச்சி. | | |
| தெலுங்கு — தொடர்ச்சி | | |
| 3. ஆந்திர பத்திரிகா .. | 27,594 | 33,463 |
| 4. ஆந்திர ஜோதி .. .. | 13,312 | 9,972 |
| 5. விசாலாந்திரா .. .. | 8,535 | 1,560 |
| 6. ஆந்திர பூமி .. .. | 5,155 | .. |
| கன்னடம் — | | |
| 7. பிரஜாவாணி .. .. | 77,092 | 73,837 |
| 8. உதயவாணி .. .. | 14,398 | 15,506 |
| 9. சம்யுக்த கர்நாடகா .. | 8,917 | 2,637 |
| 10. லோகவாணி .. .. | 3,370 | 25,764 |
| 11. கன்னடபிரபா .. .. | 3,166 | 1,152 |
| மலையாளம் — | | |
| 12. மலையாள மனோரமா .. | 1,26,043 | 1,92,165 |
| 13. மாத்ருபூமி .. .. | 95,666 | 97,341 |
| 14. கேரளா கௌமதி .. .. | 13,949 | 47,100 |
| 15. ஜனயுகம் .. .. | 7,289 | 17,195 |
| 16. விக்ஷணம் .. .. | 5,250 | 3,520 |
| 17. தீபிகா .. .. .. | 3,758 | 3,926 |
| உருது — | | |
| 18. முசல்மான் .. .. | 11,044 | 19,444 |
| 19. தமிழ்நாடு டைம்ஸ் .. | 7,244 | 11,195 |
| 20. இட்ட ஹாட் .. .. | 3,592 | 11,082 |

| வரிசை எண்ணும், பத்திரிகையின் பெயரும். | 1978–79. | 1979–80. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| உருது—தொடர்ச்சி. | | |
| 21. டெய்லி மிலாப் .. | 3,147 | 3,906 |
| 22. ஹிந்த் சமாச்சார் .. | 1,001 | .. |
| 23 ஷாமா .. .. .. | 561 | .. |
| 24. டசுயிர்—ஜலந்தர் .. | 515 | .. |
| 25. தல், ஆல், உஸ்தான் .. | .. | 7,200 |
| 26. ஆல்-டி-ஜிரா .. .. | .. | 800 |
| 27. ரகுமி-இ-டெக்கான் .. | | 624 |
| இந்தி— | | |
| 28. நவ பாரத் டைம்ஸ் .. | 56,388 | 41,374 |
| 29. நவபாரத் .. .. | 20,197 | .. |
| 30. நைதுணியா .. .. | 11,462 | 714 |
| 31. இந்துஸ்தான் .. .. | 11,342 | 29,936 |
| 32. ராஜஸ்தான் பத்திரிகா .. | 5,870 | 2,153 |
| 33. பஞ்சாப் கேசரி .. .. | 4,202 | 3,150 |
| 34. டெய்லி ஜாக்ரான் .. | 1,700 | 6,866 |
| 35. டைனிக் பாஸ்கர் (போபால்) | 872 | 392 |
| 36. ஏ. ஜே. வாரணாசி .. | 641 | 1,550 |
| 37 அமர் உஜலா .. .. | 494 | 1,714 |
| 38. சுதந்திர பாரத் .. | 257 | .. |
| 39. ஆரிய வர்த்தா (பாட்னா) | .. | 1,598 |



| வரிசை எண்ணும் பத்திரிகையின் பெயரும். | 1978–79. | 1979–80. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இந்தி— | | |
| வங்காளம்— | | |
| 40. ஜுகந்தர் .. .. | 33,538 | 83,421 |
| 41. ஆனந்தபசார் பத்திரிகா .. | 32,262 | 31,313 |
| 42. சத்திய ஜுக் .. .. | 1,060 | .. |
| 43. தேஷ் .. .. | .. | 3,500 |
| 44. அமிர்த பிரபாத் .. .. | .. | 3,27 |
| மராத்தி— | | |
| 45. லோக் சத்தா .. .. | 13,958 | 23,238 |
| 46. மகாரஷ்ட்ரா டைம்ஸ் .. | 1,249 | 10,260 |
| 47. தருண் பாரத் .. .. | 542 | 3,334 |
| 48. டெய்லி சாக்கல் (புனா) | .. | 1,577 |
| குஜராத்தி— | | |
| 49. குஜராத் சமாச்சார் .. | 20,469 | 20,580 |
| 50. சந்தேஷ் .. .. | 14,019 | 5,177 |
| 51. பாம்பே சமாச்சார் .. | 5,094 | 1,080 |
| 52. குஜராத் மித்ரா .. | 285 | 144 |
| 53. புல்சாப் .. .. | .. | 624 |

| வரிசை எண்ணும் பத்திரிகையின் பெயரும். | 1978–79 | 1979–80 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அசாம்— | ரூ. | ரூ. |
| 54. டைனிக் அசாம் .. | 421 | .. |
| ஒரியா— | | |
| 55. சமாஜ் .. .. | 6,664 | 413 |
| 56. பிரஜா தந்திரா .. .. | 480 | 1,680 |
| ராஜஸ்தானி— | | |
| 57. ராஜஸ்தான் கிரானிக்கிள் | 960 | .. |
| **மொத்தம்** .. | 93,87,907 | 1,14,22,152 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**புதன்கிழமை, 1981 ஏப்ரல் 8.**

**[பங்குனி 26, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.]**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

'' அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மையவர் ''

சொற்களின் வகைகள் பலவும் அறிந்த துய்மையினையுடைய அன்பர், தம்முன்னே உள்ள அவையினரின் இயல்புகளை அறிந்து, அவ்விடத்தில் சொல்லத் தக்கனவற்றை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுதல் வேண்டும்.

### 1. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' பொதுப் பணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் குறித்த தமிழ்நாடு அரசின் 1963–64 முதல் 1965–66 வரை மற்றும் 1969–70 முதல் 1971–72 வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான குழுவின் முந்தைய அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு மேற் கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய '' பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (எட்டாவது அறிக்கை) அவைக்கு அளிக்கிறேன்.

### 2. வரவு— செலவுத் திட்டம்—1981-82 வாக்கெடுப்பு

(ஆ) கோரிக்கை எண் 18 மருத்துவம்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,22,09,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

---

குறிப்பு : ஓர் உரையின் தொடகத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, எல்லா மருத்துவ மனைகளிலும் நாய் கடிக்கான மருந்துகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன்—

" மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 66,22,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன் : Sir, To discuss the need to e s the grave unemployment problem among doctors, I move that the allotment of Rs, 66,22,09,000 under Demand No. 18, Medical be reduced by Rs. 100.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர் களே, மருத்துவ மனைகள் செயல்படும் காலதாமதம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்—

" மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 66,22,09,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. மு. அப்பாதுரை : தலைவர்வர்களே, கயத்தாறு அரசு மருத்துவ மனைக்கு புதிய கட்டிடம் கட்டுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

" மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,22,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

(ஆ) கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,85,55,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, சென்னையில் எல்லா விதமான பொதுச் சுகாதாரம் ஏற்பட மாநகராட்சிக்கு பல வசதிகளைச் செய்து கொடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

" மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 62,85,55,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".



திரு. என். எஸ். வி. சித்தன் : Sir, to discuss the need t fill up the vacancies of doctors at the Primary Health Centress a once, I move that the allotment of Rs, 62,85,55,000 under Deman No. 19,Public Health be reduced by Rs. 100,

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, வடாற்கா மாவட்டம், வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, வேலூர் இராணிப்பேட்டை தோல் ஷாப்புகளில் இருந்து வரும் கழி நீரினால் சுகாதாரம் பாதிக்கப்படுவதை தடை செய்வது குறித் விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீரமானத்தை மொ கிறேன்.—

"மானியக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,85,55,000-ல் ரூ. 10 குறைக்க வேண்டும் ".

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, திருத்துறை பூண்டி மருத்துவ மனையில் தற்போது உள்ள இரண்டு சுகாதார தொழிலாளர்கள் போதாததால் மேலும் இரண்டு சுகாதார தொழிலாளர்கள் போடுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

" மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் என்ற தலப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 62,85,55,000-ல் ரூ. 10 குறைக்க வேண்டும் ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை களும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம், மானியக் கோரிக்கை எண். 19—பொதுச் சுகாதாரம் ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்* அச்சிடப் பெற்று இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவைகளை நான் உரை யாற்றிய தாக இந்த அவைக் குறிப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களைச் சொன்ன பிறகு, இறுதியில் நான் பதில் கூறுகிறேன்.

---

* 542, 585, 594, 600, 651-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV, V ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

## 3. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்திற்கேற்ப கட்சிகளுக்கு ஒதுக்கப்பெறும் நேரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்றைய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை பேரவைக்கு அறிவிக்கிறேன். கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் :—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்—135 நிமிடங்கள், (அமைச்சரின் பதில் உட்பட). திராவிட முன்னேற்றக் கழகம்—45 நிமிடங்கள், காங்கிரஸ் (இ)—40 நிமிடங்கள், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்—கட்சி—15 நிமிடங்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி—15 நிமிடங்கள், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி, அகில இந்திய பார்வட் ப்ளாக் கட்சி, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி, மக்கள்கட்சி முஸ்லிம் லீக், குடியரசுக் கட்சி, ஆகிய கட்சிகளுக்கெல்லாம் சேர்ந்து 20 நிமிடங்கள், என நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, நேற்றைய தினம் போட்டிருந்த தீர்மானத்திற்கு மாறாக இப்போது தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இரண்டரை மணி நேரம் விவாதம் இருந்தால்தான் இந்த முறை என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இன்றுதான் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு 4½ மணி நேரம் விவாதம் நடக்கப் போகின்றதே. ஆகவே அந்த நேரங்களை அதிகமாக்கலாமே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றைய தினம் பேராசிரியர் அவர்கள் பாதி நேரம் ஆளும் கட்சிக்கும், பாதி நேரம் எதிர்க் கட்சிகளுக்கும் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு முறையினை வகுத்து இப்போது நேரங்களை அறிவித்திருக்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, நேற்றைய தினம் முடிவு எடுக்கின்றபோது இன்றைய தினம் 2½ மணி நேரம் தான் விவாதம் நடக்கப் போகின்றது என்று நினைத்திருந்தோம். ஆனால் இன்று 4½ மணி நேரம் விவாதம் நடக்கப் போகின்றதே. ஆகவே நேரத்தை அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டரை மணி நேரம் நடக்கும் என்ற வகையில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 7½ நிமிடம் தான் என்று ஒதுக்கி இருந்தோம். இன்றைக்கு 4½ மணி நேரம் விவாதம் நடக்க இருப்பதால்தான் அதற்குத் தகுந்தவாறு நேரத்தை ஒதுக்கி இருக்கிறோம். பாதி நேரம் எதிர்க்



கட்சிகளுக்கும் பாதி நேரம் ஆளும் கட்சிக்கும் என்ற வகையிலே நேரத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்கதான் இவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, நேற்றைய தினம் 2½மணி நேரம்தான் என்ற வகையில் அந்த முடிவு எடுக்கப்பட்டது. . . . . . . . . . . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது விவாதத்தை ஆரம்பிக்கலாம். பிறகு வேண்டுமானால் ஓரளவு அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இன்றைய தினம் 4½ மணி நேரம் விவாதம் நடக்க இருப்பதால் எங்கள் கட்சிக்குரிய நேரத்தை அதிகமாக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் பேசிக் கொண்டு வாருங்கள், பிறகு அட்ஜஸ்ட் பண்ண முடியுமா என்று பார்க்கிறேன். . . . . . (குறுக்கீடு). . . . . நேற்றைய தினம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார்கள். அதைத்தான் அலுவல் ஆய்வுக் குழுவிலே மாற்றி அமைத்திருக்கிறோம்.

**திரு. குமரி அனந்தன் :** தலைவரவர்களே, நேற்றைய தினம் அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதற்கு மாறாக. . . . . . . . . . .

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, அதிக நேரம் தாங்கள் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்று கேள்வி நேரத்தையே ஒத்தி வைத்து விட்டு விவாதத்தை 4½ மணி நேரத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளைய தினம் அலுவல் ஆய்வுக் குழுவினை மீண்டும் கூட்டி நாம் முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

## 2. வரவு-செலவுத் திட்டம், 1981–82 மானியக் கோரிக்கைகள் — தொடர்ச்சி

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பேரவைத் தலைவரவர்களே, பொது மருத்துவம், சுகாதாரம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரபணையை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

பொதுவான கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னதாக என்னுடைய பகுதியான தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டி போன்ற பகுதிகளில் பொது மருத்துவம், சுகாதாரம் ஆகியவை சீர்கெட்டுப் போய் இருக்கின்றன. அதைச் சரியான முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற தொகுதிப் பிரச்சினையில் முதலில் என்னுடைய கவனத்தை நான் செலுத்த விரும்புகிறேன். கடலூர், நெல்லிகுப்பம், போன்ற பகுதிகளில் உள்ள முனிசிபல் டிஸ்பென்சரிகள் பெயரளவில் ஆஸ்பத்திரிகளாக இருக்கின்றனவே தவிர அங்கே டாக்டர்களும் சரியாக வருவது கிடையாது. மருந்துகளும் கிடையாது. அது முனிசிபல் நிர்வாகத்தின்கீழ் இருக்கின்ற காரணத்தால் போதுமான மருந்துகள் அளிப்பதற்குரிய சாத்தியம் கிடையாது. இந்த மாதிரி முனிசிபல் டிஸ்பென்சரிகளை அரசாங்கம் படிப்படியாக மேற்கொள்ள வேண்டும் என்று அப்போதைக்கப்போது அறிவித்து இருந்தும் அவைகள் அரசாங்கத்தின் டிஸ்பென்சரிகளாக மேற்கொள்ளப்படாதது வருந்தத்தக்கது என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9.10.]

அதேபோலத்தான் விழுப்புரத்தை எடுத்துக் கொண்டால் நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட சென்ற வாரம் விழுப்புரம் வந்தார்கள். அந்தப் பகுதிகளில் நேஷனல் ஹைவேஸ் ரோடுகள் அதிகம் இருப்பதால், அடிக்கடி ஆக்ஸிடெண்டுகள் ஆகக் கூடிய பகுதியாகவும் இருக்கிறது. அந்த ஆக்ஸிடெண்டுகளுக்கு சிகிச்சை செய்யும் அளவிற்கு போதுமான மருத்துவ வசதிகள் அங்கே கிடையாது. பெட் ஸ்டெரங்த்தும் கிடையாது. அங்கே இருப்பது 40 படுக்கைகள் தான். அவைகளை 100 ஆக உயர்த்தினால் தான் ஓரளவிற்கு நன்றாக இருக்கும். அதே சமயத்தில் ஆக்ஸிடெண்டுகளுக்கு உடனடி ஆபரேஷன் செய்கின்ற அளவில் எல்லா வசதிகளையும் அங்கே செய்து தரப்பட வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோல மாநிலத்திலே பல இடங்களில் இப்போது ரூரல் ஆஸ்பத்திரிகள் செயல்படுகின்றன. அத்தகைய ரூரல் ஆஸ்பத்திரிகளில் பெட் ஸ்டெரெங்க்தே கிடையாது. குறைந்த பட்சம் 10 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரிகளாகவாவது அவைகளை மாற்றினால் அந்தந்தப் பகுதியில் இருக்கக் கூடிய மக்களுக்கு அது மிகவும் உபயோகமாக இருக்கும் என்று கூறி, தென்னாற்காடு மாவட்டத்தில் சங்கராபுரம், ஸ்ரீமுஷ்ணம், பாளையம் கோட்டை சின்னசேலம் ஆகிய பகுதிகளில் இருக்கக் கூடிய இந்த ரூரல் ஆஸ்பத்திரிகளை எல்லாம் 10 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரிகளாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதற்கு இந்த அரசாங்கம் இதுவரையில் முயற்சி செய்யவில்லை என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





அதேபோல பண்ருட்டி நகரத்தை எடுத்துக் கொண்டால், அது நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் தொகுதியைச் சார்ந்தது என்பது அனைவருக்கும் தெரியும். அந்தப் பகுதியிலே காடாம்புலியூர்போன்ற இடங்களில் எல்லாம் இருக்கக் கூடிய மக்கள் மருத்துவ வசதியே இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அந்தப் பகுதியில் 100 படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரி கட்டப் பெற வேண்டும் என்று நானும் கேட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். ஆகவே அதற்காக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி ஒரு மருத்துவமனை உடனடியாக வரும் என்று மன்றத்தில் கூட பேசப்பட்டது. பட்ஜெட் உரையிலே கூட சொன்னார்கள். 100 படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரி பன்ருட்டியில் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தில் நானும் தேடி தேடி துருவி துருவிப் பார்த்தாலும் அது காணவில்லை. அதைக் கண்டு பிடித்து அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலிலேயாவது அதை அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். எனவே 100 படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரியை பண்ருட்டியில் உருவாக்க வேண்டும் என்று என் சார்பிலும், அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ. அமைச்சர் மாண்புமிகு ச. இராமச்சந்திரன் அவர்கள் சார்பிலும் நானே கேட்டுக் கொள்கிறேன். அதை உடனடியாக அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கடலூரில் இருக்கக் கூடிய ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால், அங்கேயெல்லாம் போய் பார்த்தால் தெரியும். அங்கே படுக்கை வசதிகளே கிடையாது. பேஷண்டுகள் தரையிலேதான் படுத்திருக்கிறார்கள். திடீரென்று பேஷண்டுகளை யாராவது பார்க்க வேண்டும் என்று சென்றால், வழியில் படுத்திருக்கும் மற்ற நோயாளிகள் மீது மிதித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். அப்படி வாராண்டாக்களில் படுத்திருக்கும் நோயாளிகளுக்கு பாய் கூட கிடையாது. அவர்கள் தரையிலே துணியை விரித்துதான் படுத்திருக்கிறார்கள். ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிலேயே இந்த நிலைமை என்றால் தாலுக்கா ஆஸ்பத்திரிகளில், ரூரல் டிஸ்பென்சரிகளில் உள்ள நிலைமையைப் பற்றி சொல்ல வேண்டியதே இல்லை. அந்த அளவுக்கு நிர்வாகம் சீர்கேடு அடைந்திருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 ஏப்ரல் 8

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலூர் ஆஸ்பத்திரிக்கு திடீரென்று ஒருநாள், ஒயர்லெஸ் மூலம் செய்தியை அறிவிக்காமல் செல்ல வேண்டும். அதுவும் இரவு பத்து மணிக்கு வந்து ஜெனரல் வார்டுக்கு போய் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் தெரியும் அங்கே வராண்டாக்களில் படுத்திருக்கிற பேஷண்டு களின் மீதுதான் நடந்து போக வேண்டும் என்பது. ஆகவே அதை விஸ்தரிக்க வேண்டும். இன்னும் 100 படுக்கைகள் கொண்ட ஒரு கட்டிடத்தை, நிர்மாணித்து அதன் மூலம் அந்தப் பகுதி மக்க ளுக்கு படுக்கை வசதிகள் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மருத்துவத் துறையைப் பற்றி பல குற்றச் சாட்டுகளை எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத் திலேயே எடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக பல் வைத்தியம் சம்பந்தமாக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறையிலே உள்ள குறைபாடுகள் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு பதிலே வரவில்லை. வந்த பதிலும் சரியான பதிலாக இல்லை. அதேபோலத்தான் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் விஷயமாகவும் பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களை அட்மிஷன் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை பெற்றோர்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். பிளஸ் 2 பரீட்சை முடிந்த பிறகு, இந்த மெடிகல் கமிட்டி மெம்பர்களின் சிபாரிசைக் கேட்பதை விட யாரை பிடிக்க வேண்டுமோ, எந்த எக்ஸாமினரைப் பிடிக்க வேண்மோ அப்படி பிடித்து, அவர்களுடைய பிள்ளைகளுக்கு அதிக மார்க்கு போடுகின்ற ஒரு முறையை இப்போது பெற்றோர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் படித்த காலத்தில் 50 சதவீதம் 60 சதவீதம் மார்க்குகள் வாங்குவதே மிகவும் கஷ்டமான காரியம். ஆனால் இப்போது மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்காக என்ஜினீயரிங் கல்லூரி அட்மிஷனுக்காக வரும் பிள்ளைகளின் மார்க்குகளை பார்த்தால் 95 சதவீதம் 88 சதவீதம் என்று எடுத்திருக்கிறார்கள். எப்படி திடீரென்று கல்வியின் தரம் ஏறி விட்டது. 90 சதவீதம் 88 சதவீதம் என்று எப்படி மார்க்குகள் வாங்குகிறார்கள்.

There is a race for getting more marks by the parents, not by the students.

ஆகவே, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அப் படி மருத்துவக் கல்லூரிக்கு மனு செய்து கொண்ட மாணவர் களின் அட்மிஷனிலே இவ்வளவு குறைபாடுகள் இருக்கின்ற



1981 ஏப்ரல் 8] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

னத்தால், இவர்கள் பரீட்சை எழுதியவுடனே அதை திருத்து கின்ற ஆசிரியர்களை பார்க்க படை எடுக்கிறார்கள். இதனால் உண்மையாக தேர்வு பெற்ற மாணவன் இந்தத் துறைகளில் எல்லாம் முன்னேற முடியாமல் இருக்கிறது. ஆகையினால் இதிலே ஒரு மாற்றம் காண வேண்டும். இந்த மாற்றம் என்ன என்பதைப் பற்றி எல்லோரும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோலத்தான் வைவா ஓசி என்ற முறை வைத்திருப்ப தாகச் சொல்கிறார்கள். டேப் ரிகார்டுகள் வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனாலும் ஊழல்கள் நடைபெற் றிருக்கிறது. நான் 80, 90 மார்க்குகள் வாங்கியிருக்கிறேன். ஆனால் எனக்கு கிடைக்கவில்லை வைவா ஓசி என்ற பெயரில் வேறு யாருக்கோ கொடுத்துவிட்டார்கள் என்று புகார்கள் எல்லாம், ரிட் பெட்டிஷன்களாக உயர்நீதி மன்றத்தில் தேங்கிக் கிடக்கின் றன. இன்னும் அந்த இடங்கள் பூர்த்தி செய்யாமல் கூட இருக் கின்றன.

என்னதான் வைவா ஓசி என்று முறைகள் வைத்திருந்தாலும். செலக்ஷன் லிட்ஸ் வந்தவுடனே அதிலே சில பெயர்கள் எடுக்கப் படுகின்றன. சில பெயர்கள் சொருக்கப்படுகின்றன. சில பெயர்கள் வெளியிடப்படுகிறது. இதைப்பற்றிய புகார்கள் எல்லாம் 50-க்கும் மேலே ரிட்பெட்டிஷன்களாக உயர்நீதி மன்றத்திலே தேங்கிக் கிடக்கின்றன. அந்த இடங்கள் கூட இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. ஆனால் தேர்வு பெறுகிற மாண வர்கள் உண்மையான அடிப்படையில் தேர்வு பெற்றிருந்தால் அது நாட்டு மக்களுக்கும் நன்மையை பயக்கும். அந்த அடிப் படையில் குறைபாடுகளை தீர்க்க வேண்டும். அதற்கான முயற்சி களில் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

ஏன் மற்ற இடங்களில் பரீட்சைகள் வைப்பது போல — 7,000, 8,000 மாணவர்கள் மொத்தத்தில் இருந்தால், ஒரு சென்டருக்கு 3,000, 3,500 மாணவர்கள் வீதம் 2 அல்லது 3 சென்டர்களை வைத்து, என்டிரன்ஸ் எக்ஸாமினேஷனாக மிகப் பெரிய ஹாலிலே, அது வைவாஓசி எக்ஸாமினேஷனாக இருந்தாலும் சரி, ரிட்டன் எக்ஸாமினேஷனாக இருந்தாலும் சரி, கேள்வித் தாள்கள் வெளியே போகாத வண்ணம் நல்ல முறையில் தயாரித்து பரீட்சைகள் வைத்தால் —ஒரு என்டிரன்ஸ் எக்ஸாம் வைத்தால் சரியாக இருக்காதா? அல்லது என்டிரன்ஸ் எக்ஸாம் வைத்து பிறகு சென்டிரல் வேல்யூவேஷன் என்ற முறையில் அங்கேயே எக்ஸாமினர்களை அழைத்து வைத்துப் பார்த்தால் சரியாக இருக் காதா? இன்னின்னார் இன்னின்னாருடைய பிள்ளை, மந்திரிக்கு வேண்டியவர், எம்.எல்.ஏ.வுக்கு வேண்டியவர், ஐ.ஏ.எஸ். ஆபிசர்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, [1981 ஏப்ரல் 8

பிள்ளை, டாக்டருடைய பிள்ளை இவர்களுக்கு சலுகை தர வேண்டும், இவர்களுடைய பெயரை எடுக்க வேண்டும் என்றெல்லாம் பிரச்னைகள் வராமல் இருக்கும். உண்மையான நல்ல மாணவன் தகுதி அடிப்படையில் தேர்வு பெறுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்காதா? ஊழல்களை களையக்கூடிய ஒரு வழியாக இருக்காதா என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மன்ற உறுப்பினர்களுக்கென்று இப்போது ரிசர்வேஷன் இருக்கிறது. அந்த ரிசர்வேஷன்களையெல்லாம் பொதுவாக அப்படியே வைத்துக் கொண்டு, எக்ஸாமினேஷன்களில் என்டிரன்ஸ் டெஸ்ட் வைத்து, அதே நேரத்தில் சென்டிரல் வேல்யூவேஷன் வைத்தால் 5,000, 10,000 என்று ரேட்டுகள் பிக்ஸ் பண்ணுகிற ஊழல்கள் எல்லாம் இல்லாமல் இருக்கும். செலக்ஷன் ஆனதற்கு பிறகு, சாதாரணமாக விவா ஓசி எக்ஸாமினேஷனில் மார்க் வாங்கியவர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 100, 90 என்று மார்க்குகள் வாங்கிய எனக்கு இடம் கொடுக்கவில்லை என்று உயர்நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய குறைபாடுகளும் இல்லாமல் இருக்கும் என்பது என்னுடைய கருத்து, அதை வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) எங்களுடைய தலைவர் பேசவேண்டும் என்பது தெரியும். நான் சீக்கிரத்தில் முடித்துக் கொள்வேன். அதே சமயத்தில் மருத்துவத்துறை சம்பந்தப்பட்டமட்டிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரிய கருத்துக்களை செலுத்தி அதை முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் உள்ளபடியே கருதுகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரிகிறது. ஆனால் அவர்களால் அப்படிச் செய்ய முடிகிறதா? அவர்களால் சரியானபடி திட்டங்களை நிறைவேற்ற முடிகிறதா என்றால், நான் பார்த்த வரையில் நிச்சயமாக இல்லை. பல குறைபாடுகளை என்னால் சொல்ல முடியும்.

காரணம் இந்த என்டையர் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்குள்ளேயே ஒரு யூனிட்டி இல்லை. ஹெல்த் செக்ரட்டரி சொன்னால், டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் கேட்க மாட்டேன் என்கிறார். டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் சொன்னால் மருத்துவர்கள்— அதாவது டிஸ்ரிக்ட் ஹெல்த் ஆபிசர்கள் கேட்பது இல்லை. அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் முடிபிடி சண்டையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அதை சரியாக்க நிர்வாக அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக என்னிடத்திலே உள்ள தகவல்படி அரசாங்கத்தின் உத்தரவு ஒன்று இருக்கிறது.



1981 ஏப்ரல் 8] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

[முற்பகல் 9-20.]

ஜி.ஓ. 486, 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் தேதியிட்ட உத்தரவில்,

"the Government have issued orders for the reorganistion of Drectorate of Public Health and Preventive Medicine for the effective and purposeful implementation of various Health Sehemes According to the Reorganised pattern, the State will be divided in to 7 Regions and 29 Health Unit Districts. A Regional Asstant Director will be inchange of two on three Revenue Districts which will be covered by 7 Regional Offices?

இந்த அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. இந்த முடிவெடுத்து ஓராண்டு காலமாகிறது. இந்த அரசாங்க உத்தரவை, அப்போதிருந்த அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த முடிவெடுக்கப்பட்டு, ஓராண்டு காலம் ஆகிறது. அதாவது, இந்த இலாகாவை ரீ-ஆர்கனைஸ் செய்யவேண்டும். அதற்கு 7 அசிஸ்டென்ட் டைரக்டர்கள் போட்டு, அதை டீ-சென்ட்ரலைஸ் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த முடிவு செயல்படுத்தப்பட்டதா? செயல்படாததற்கு என்ன காரணம்? அதை யார் தடுத்து நிறுத்தினார்கள் என்ற பிரச்னைகளுக்கெல்லாம் நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகவேண்டும். அதேபோல், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24 ஆம் தேதியிலே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குக் கொடுத்துள்ளது, 15 நிமிஷம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழு நேரத்தையும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஜி.ஓ. எண் 279, 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24 ஆம் தேதியிட்ட அரசாணையில் நம்முடைய மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள், அதேபோல் முதலமைச்சர் அவர்கள் ஆகியோர் முடிவெடுத்து இந்த 7 அசிஸ்டென்ட் டைரக்டர்களை நியமித்து, இந்த ரீ-ஆர்கனைசேஷன் புரபோசலை இம்ப்ளிமென்ட் செய்யவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24 ஆம் தேதியிட்ட ஆணைப்படி அந்த உத்தரவை, 7 அசிஸ்டென்ட் டைரக்டர்கள் நியமித்து ரீ-ஆர்கனைசேஷன் செய்யவேண்டிய புரபோசலை இம்ப்ளிமென்ட் செய்தாரா, இல்லையா என்பதுதான் இப்போது இங்கே குற்றச்சாட்டு, எனக்கு வந்திருக்கின்ற தகவலைப் பொறுத்தவரையில், ஆர்.சி.தெ. 14101/ஈ1/பிஎச்/81, தேதி 2–3–1981-ல் இந்த அரசாங்கம் போட்ட உத்தரவு, சம்பந்தப்பட்டவருக்குப் போ

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 ஏப்ரல் 8

யிருக்கிறது. அரசாங்கம் ஜி.ஓ. போடுகிறது. அந்த ஜி.ஓ.வை, அரசாங்கம் ஸ்டே பண்ணினால் அர்த்தம் இருக்கிறது. ஆனால், அரசாங்கம் போட்ட ஜி.ஓ.வை, முதலமைச்சர் கையெழுத்து போட்ட உத்தரவை, மாண்புமிகு சுகாதார அமைச்சர் பரி சீலித்துப் போட்ட உத்தரவை, ஹெல்த் செகரட்டரி அப்ருவல் பண்ணி போட்ட உத்தரவை யார் நிறுத்தினார்கள்.

"O. de s issued in G.O. Ms. No. 279, He th d t d 24—2—8 are kept in abeyance until furtoer orders"

என்று இப்படி ஒரு டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அண்டு பிரவென்டிவ் மெடிசின்-ஆக இருப்பவர் ஒரு சாதாரண நோட் அனுப்புகிறார். ஒரு டைரக்டர், முதலமைச்சர் போட்ட உத்த ரவை, அவர் எடுத்த முடிவை தள்ளிப் போடுவதற்கு அவர் யார்? இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி அதை நிறுத்திவைத்த சக்தி எது?' அது சரியா, தப்பா என்பதற்கு நான் போகவில்லை. நிறுத்திவைத்த சக்தி ஆண் சக்தியா? பெண் சக்தியா? என்பது தெரியவேண்டும். அதைப்பற்றி சரி யான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே மலேரியா அதிகமாக இருக்கிறது. 50 சதவிகித மலேரியா இந்த மதராஸ் சிடியிலே மட்டும் இருக்கிறது.

50% of the positive cases in the whole of Tamil Nadu are from Madras City.

இப்படி மதராஸ் சிடியிலே மட்டும் மலேரியா, பைலேரியா அதிக மாக இருப்பதற்கு என்ன காரணம்? கார்ப்பரேஷனிலே இருக் கக்கூடிய என்டமாலிஜிஸ்டுகளையெல்லாம் இந்த அரசாங்கம் திருப்பி அழைத்துக் கொண்டது.

During the agitation of the Corporation employees in May 80 against the Deputationists and the consequential decision taken by the Government, six Entomologists and two Entomological Assistants of the Public Health Department who were deputed to the Corporation of Madras are with drawn.

இப்படி என்டமாலிஜிஸ்டுகளை கார்ப்பரேஷனிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டதன் காரணமாகத்தான், தமிழ்நாட்டிலே உள்ள ஜனத்தொகையில் 50 சதவீதம் பாசிடிவ் கேஸஸ் மதராஸ் சிடியிலே மட்டுமே இப்போது இருக்கிறது. இதற்கு இந்த அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும்.



1981 ஏப்ரல் 8] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

இன்னும் ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்கிறேன். டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்தில் இரண்டு டைரக்டர்கள் இருக் கிறார்கள். ஒருவர், டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அண்டு பிரவென்டிவ் மெடிசன், மற்றொன்று டைரக்டர் ஆப் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ். யார் இவர்? எப்படி நியமிக்கப்பட்டார்? அப்படி நியமிக்கப்பட்டது சரியா? தப்பா? என்பதற்குள்ளே நான் போகவில்லை. நியமனம் செய்தாகி விட்டது. முதல் அமைச்சர் நியமனம் செய்கிறார். ஹெல்த் மினிஸ்டர் சிபாரிசின் பேரில், முதலமைச்சர் நியமிக்கிறார். அந்த நியமனம் செய்தது சரியா, தப்பா என்று சட்டமன்றத்திலே கேட்பதற்கு எங்களுக்கு உரிமையிருக்கிறது. ஆனால், இந்த நியமனம் செய்தது சரியல்ல என்று சொல்வதற்கு டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசருக்கு எப்படி உரிமை வந்தது? பல டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர்கள், இந்த மாநிலத்திலே இருக்கின்றவர்கள் தந்தி அனுப்புகிறார்கள்— யாருக்கு தந்தி அனுப்புகிறார்கள்? ஹெல்த் செகரட்டரிக்கு தந்தி அடிக்கிறார்கள். என்ன சொல்லி தந்தி அடிக்கிறார்கள்?

Abolish the post of Director of Primary Health Centre.

என்று ஹெல்த் செகரட்டரிக்கு அனுப்புகிறார்கள். இங்கிருக்கக் கூடிய செகரட்டரி, மாநிலத்திலே இருக்கக்கூடிய ஒரு பெரிய அதிகாரி. நேர்மையாக இருக்கக்கூடியவர். ஸ்டிரிக்டாக இருக்கக் கூடியவர், இதை எப்படி அனுமதிக்கிறார்கள்? கலெக்டர் இன் னார்தான் இருக்க வேண்டுமென்று தாசில்தார் தேர்ந் தெடுக்க முடியுமா? அல்லது ரெவின்யூ போர்டு செகரட் டரியாக இவர் தான் இருக்கவேண்டும் என்று கலெக்டர் நியமனம் செய்ய முடியாது. எப்படி மாநிலத்தில் இருக்கக்கூடிய டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர்ஸ் எல்லோரும் ஹெல்த் செகரட்டரிக்கு டெலிகிராம் அனுப்பினார்கள். 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் நாளில் ஏறக்குறைய பல மாவட்டங்களில் இருக்கக்கூடிய டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர்ஸ் டெலிகிராம் அடிக்கிறார்கள். என்னவென்றால், "அபாலிஸ் டைரக்டர் ஆப் பி.எச்.சி. போஸ்ட்;" "அதோடு" அனெக்ஸ் செட் டு டி. பி. எச். பிரைமரி ஹெல்த் சென்டர் டைரக்டர் தனியாக அவரை எக்ஸ்டெண்ட் பண்ணக்கூடாது, அதை அபா லிஷ் செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். அதேசமயத்தில் அவர்களுடைய கடமைகளை எல்லாம் இப்போது இருக்கக்கூடிய டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அண்ட் பிரிவென்டிவ் மெடிசின் இடத்திலே சேருங்கள் என்று டிஸ்ட்ரிக் ஹெல்த் ஆபீசர்ஸ் எப்படி டெலிகிராம் அடிக்க முடியும். யார் பேரிலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிர்வாகம் சீர்கெட்டு போயிருக்கிறது. இந்த நிலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்திக்க முடியாது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் போட்ட உத்தரவை செயல்படுத்த முடியாமல் இந்த நிர்வாகத்திலே கோளாறு இருக்கிறது. காரணம்

இதை உங்களால் சரியாக செயல்படுத்த முடியவில்லை; ஆளுவதற்கு முடியவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லி, இந்த அளவிலே பேச்சினை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம், பொது சுகாதாரத் துறை மானியக் கோரிக்கைகள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அந்த கோரிக்கைகளை ஆதரித்து ஆட்சிக் கட்சியின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இங்கே இதற்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல குற்றச்சாட்டுக்களை எடுத்துக் கூறினார்கள். இந்த குற்றச்சாட்டு 20 ஆம் நூற்றாண்டில் புதுமையிலும் புதுமையாக இந்த ஆட்சியில்தான் எங்கும் காண முடியாத அளவு இருக்கிறது என்ற குற்றச்சாட்டை கண்டுபிடித்ததாக கூறுகிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறையை யாரிடம் ஒப்படைப்பது என்று அமைச்சரவையை ஏற்படுத்தக்கூடிய நேரத்திலே ''இதனை இதனால் இவன் முடிப்பான் என்று ஆராய்ந்து அதனை அவன் கண் விடல்'' என்ற வள்ளுவன் குறளுக்கு ஏற்ப இந்தத் துறையை யாரிடம் ஒப்படைத்தால், திறமையாகவும், செம்மையாகவும், அதை பரிபாலிக்க முடியும் என்று ஆய்ந்து ஆராய்ந்து, மருத்துவத் துறையில், முறையாக மருத்துவக் கல்வியை பயின்று பட்டம் பெற்ற ஒருவரிடம் இந்தத் துறையை ஒப்படைத்து இருக்கிறார்கள். அதிலேயிருந்து இந்தத் துறையை எவ்வளவு கண்ணும் கருத்துமாக தமிழக அரசு கண்காணித்து வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி நண்பர்கள் நன்கு அறிவார்கள். இன்றைக்கு நாட்டிலே தமிழக அரசின் கீழ் எத்தனையோ துறைகள் இருக்கின்றன. அத்தனை துறைகளிலும் மருத்துவத்துறை மிகவும் இன்றியமையாத துறையாகும். கல்வி பணியானாலும், மின்சார பணியானாலும், காவல் பணியானாலும் ஒரு மாதம், ஒரு வாரம், அல்லது ஒரு மணி நேரம் என்று தள்ளிவைத்து விட்டு செயல்படலாம். ஆனால் பிணி தீர்க்கக் கூடிய மருத்துவத் துறை அவ்வாறு செயல்பட முடியாது. அதை திறம்பட நிர்வகிக்கும் பொறுப்பை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆட்சியில் தவறுகள் நடந்ததாகவும், ஊழல் நடந்ததாகவும், அவை மூடி மறைக்கப்படுகின்றன என்றும் குற்றம் சாட்டினார்கள். இன்றைக்கு நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 'ஒரு தவறு செய்தால், அதை தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்'' என்பது வெறும்





திரைப்பட பாடல் காட்சி மட்டுமல்ல, இந்த ஆட்சியினுடைய கொள்கையும் ஆகும் என்பதை வலியுறுத்த விழைகிறேன். மருத்துவத் துறையில் மருத்துவ கல்லூரி தேர்வில் ஏதோ பெரிய ஊழல் நடைபெற்று விட்டதென்றும் அவர்கள் உயர் நீதிமன்றங்களுக்கு பரிகாரம் காணச் சென்றிருக்கிறார்கள். என்றும் கூறினார்கள். உயர் நீதி மன்றத்திலே என்ன கூறப்பட்டது? மருத்துவக் கல்லூரி தேர்வு முறையாகவும், சரியாகவும் நடைபெற்றிருக்கிறது என்று தீர்ப்பளித்தது. என்ன ஊழலை கண்டுபிடித்தார்கள்? எந்த ஊழலை நிரூபித்தார்கள்? கடந்த காலத்தில் நடக்காத ஊழலா? இப்போது இங்கே நடந்து விட்டது! இங்கே இருப்பது என்ன ஊழல் கரங்களா? இது உழைக்கும் கரங்களுக்குச சொந்தமான ஆட்சி. கடந்ததை எண்ணிப்பார்க்க வேண்டும். தாங்கள் நடந்து வந்த கடந்துவந்த பாதையைத் திரும்பி பார்க்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். குற்றம் சொல்வது எல்லோருக்கும் எளிது.

புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு பல மருத்துவ மனைகளுக்கு திடீரென்று சென்று பார்வையிட்டுள்ளார்கள். சமீபத்தில் கூட அண்ணா நகரில் மருத்துவ மனைக்கு சென்று அங்கே இருந்த குறைகளை உடனடியாக களைவதற்கு உத்திரவிட்டார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் மாவட்ட சுற்றுப்பயணம் செய்கிறபோது நகர மருத்துவமனைகள் மட்டுமல்லாமல், கிராமப்புறத்தில் இருக்கும் மருத்துவமனைகளுக்கும் சென்று பார்வையிட்டு அங்கே இருக்கக்கூடிய குறைகளை உடனடியாக களைவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 9-30]

டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் துறையை ஏழு மண்டலங்களாகப் பிரித்து இந்த அரசு செய்த முடிவை ஏதோ ஒரு சக்தி தடுத்து நிறுத்தியதாகச் சொன்னார்கள். அது தவறு அரசு தீவிரமா ஆராய்ந்து ஆய்ந்து நன்றாகப் பரிசீலனை செய்துதான் பொது சுகாதார துறையை 7 மண்டலங்களாகப் பிரித்து 7 துணை இயக்குநர்களை நியமித்துவிட முடிவு எடுத்து செயல்படுகின்ற முறையிலே தீவிரமாக முனைப்பாக செயலாற்றிக் கொண்டு வருகிறது. எந்த ஒரு சக்தியாலும் இந்த அரசினுடைய ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவை மாற்றவோ தடுத்து நிறுத்தவோ முடியாது.

அது மட்டுமல்ல, ய ரோ தந்தி கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். தந்திக்கும் இந்த அரசின் முடிவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1981 ஏப்ரல் 8

மருத்துவ மனைகளிலே பல படுக்கைகள் கொண்ட வசதிகள் இல்லை என்றும் சரியான வசதிகள் இல்லை என்றும் போதுமான இடம் படுப்பதற்குக்கூட இல்லை என்றும் கூறினார்கள். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு கடந்த 3 ஆண்டுக்கால அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எத்தனை கோடிக்கணக்கான ரூபாய்கள் பொதுச் சுகாதாரத்திற்காகச் செலவிடப்பட்டு, அதன் மூலமாக ஏழை எளிய மக்களுடைய நோய்கள் தடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நகராட்சி அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் காலரா நோய்களுக்கு மருந்து கொடுப்பது மட்டுமல்ல, மலேரியா நோய்களைக் கண்டுபிடிப்பதற்காக ரத்தத்தை எடுத்து பரிசோதனைக்காக அனுப்புகிற பணியையும் செய்து வருகிறார்கள். நம்முடைய தமிழக அரசு டென்மார்க் அரசின் உதவியுடன் ஒரு திட்டத்தை. டேனிடா திட்டத்தை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதன் மூலமாக ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் மருத்துவ மனைகளுக்கு சென்று மருந்து வாங்கமுடியாதவர்கள் 4 அரை காசு சொந்தமாக செலவழித்து மருத்துவம் பார்க்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் இல்லாதவர்கள், அவர்களுடைய இல்லங்களுக்கு இந்த அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் சென்று காய்ச்சல், தலைவலி போன்றவற்றிற்கு மருந்துகளைக் கொடுத்து நோயைப் போக்கக்கூடிய திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறது. வீட்டிலேயே பிணியால் வாடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு தக்க மருந்துகளைக் கொடுத்து அவர்கள் 2, 3 நாட்கள் படுத்துக் கிடக்காமல் உடனடியாகக் குணமடைந்து வேலைக்கு செல்வதால் அதன் மூலமாக அவர்களது உழைப்பு சமுதாயத்திற்கு கிடைக்கிறது. நாட்டின் உற்பத்தித் திறன் அதிகமாகிற நிலையும் பொருளாதாரம் வளர்ச்சியடைகிற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே இன்றைக்கு தமிழகம் பல துறைகளிலே இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற மாநிலமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்தத் துறையிலேயும் வழிகாட்டியாகத் திகழக்கூடிய முறையிலே நம்முடைய அரசும் அமைச்சர் அவர்களும் தீவிரமாகவும் முனைப்பாகவும் செயல்பட்டு வருகிறார்கள்.

நாம் மருத்துவத் துறைக்கு எவ்வளவுதான் செலவு செய்தாலும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதைப் போல, அதிகமாக செலவு செய்தாலும் பொது சுகாதாரத்தை மேம்படுத்தாவிட்டால் பயன் அதிகமாக இருக்காது. பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தி வியாதிகள் வராமல் தடுப்பதன் மூலமாகத்தான் மருத்துவத் துறைக்குச் செய்கின்ற செலவுகள் பயன் உள்ளதாக அமையமுடியும். பொதுச் சுகாதாரத்தைப் பொறுத்தவரைக்கும் 1942 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அந்த நார்ம்ஸ் தான் 10 ஆயிரம் பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார ஆய்வாளர் என்ற முறைதான் இருந்து வருகிறது. அதை தீவிரமாக அமுல்



1981 ஏப்ரல் 8] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

படுத்த வேண்டும். பேரூராட்சியில் 5,000 பேர்களுக்கு ஒருவர் அல்லது 3,500 பேர்களுக்கு ஒருவர் என்ற முறை ஏட்டளவில் மாற்றி நியமித்தால்தான் கிராமப்புறங்களிலே பொதுச்சுகாதாரத்தை கவனிக்கமுடியும். இன்றைக்குக் கிராமங்களிலே பொதுச்சுகாதார பணிகளைச் செய்வதற்கு ஆட்கள் போதுமானதாக இல்லாத சூழ்நிலை இருக்கிறது. காரணம் ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சி மன்றங்களிலே உள்ள நிதிநிலைமைகள் அதற்குக் குறுக்கீடாக இருக்கின்றன. தாய்சேய் நல விடுதிகளை ஆரம்பிப்பதற்காக அரசு மூன்றில் ஒரு பங்குத் தொகயை மானியமாகக் கொடுக்கிறது. குடும்ப நலத் திட்டத்தை செயல்படுத்த 100 சதவீதம் மத்திய அரசு உதவியைப் பெற்றுக் கொடுக்கிறது. அதைப்போன்றே யானைக்கால் வியாதியைப் போக்குவதற்காக மூன்றிலே ஒரு பங்கு மானியம் கொடுக்கிறது. இன்றைக்கு ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் பொதுச் சுகாதாரப் பணியை பேணுவதற்காக நல்ல முறையிலே செம்மையாக நடத்துவதற்காக சுகாதாரத் துப்புறவுப் பணிகளைச் செய்வதற்காக 75 சதவீதம் அவர்களுக்கு மானியமாக அரசு வழங்க வேண்டும். அந்த மானியத்தை படிப்படியாக குறைத்து நிதிநிலையில் நகராட்சிகள்—பேரூராட்சிகள் தன்னிறைவு அடைந்தவுடன் அந்த மானியத் தொகையை நிறுத்தி விடலாம். இன்றைக்குள்ள நிலையில் அடிப்படை சுகாதாரப் பணிகளை அவர்களால் செய்ய முடியவில்லை. மேலும் தமிழக அரசு பொதுச் சுகாதாரத் துறையிலே ஒரு புதுமையான திட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சி மன்றங்களில் மிகவும் சிராகவும் செம்மையாகவும் துப்புறவுப் பணிகளைச் செய்யக்கூடிய ஊராட்சிக்கு, பேரூராட்சிக்கு, நகராட்சிக்கு ஊக்கப்பரிசு அளிக்கின்ற திட்டத்தை கொண்டுவர வேண்டும். துப்புரவு பணிகளை எந்த ஊராட்சி அல்லது பேரூராட்சி அல்லது நகராட்சி மாநிலத்திலேயே சிறப்பாக மேற்கொள்கிறதோ அதற்கு ஊக்கப் பரிசு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அந்த நகராட்சியைப் பார்த்து மற்ற நகராட்சிகள் நடக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கக்கூடும். அந்த நகராட்சிக்கு துப்புரவுப் பணிக்காக லாரிகள், மினி டிராக்டர்கள், மாட்டு வண்டிகளை ஊக்கப் பரிசாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பரிசுகளை வழங்கும் விழாவை மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னின்று நடத்த வேண்டும். அந்த லாரிகளில் இது துப்புரவு பணிக்கு மாநில அரசின் ஊக்கப் பரிசு என்று எழுதி வைக்கலாம். ஒரு நகராட்சிக்குத் துப்புரவுப் பணிக்காகப் பரிசு கொடுத்தால் அதனால் மற்ற நகராட்சிகளுக்கிடையே போட்டி ஏற்பட்டால்கூட அதனால் நாட்டுக்குக் கேடு அல்ல ; நாட்டுக்கும், மனித சமுதாயத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய நல்ல திட்டமாகத்தான் அமையும். ஆகவே, இம்மாதிரி சுகாதா

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1981 ஏப்ரல்

ரப் பணிகளை மேம்படுத்த ஊக்கப்படுத்தி ஊக்கப் பரிசு வழங்குவதற்கான திட்டத்தை இந்த ஆண்டு முதலே அமல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த நிதி நிலையிலேயே ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1942 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அந்த நார்ம்ஸ் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பத்தாயிரம் பேர்களுக்கு ஒரு நகராட்சி சானிடரி இன்ஸ்பெக்டர் அல்லது ஹெல்த் இன்ஸ்பெக்டர் என்று இருந்தது. இன்றையதினம் இருபதாயிரம், இருபத்தைந்தாயிரம் பேர்களுக்கு ஒருவர் என்ற முறையில் இருக்கிறார். இதன் காரணமாக சானிட்டரி ஆய்வாளர்கள் துப்புரவுப் பணியைச் செம்மையாகப் பார்க்க முடியவில்லை. காரணம் என்னவென்றால் துப்புரவுப் பணி மட்டும் அவர்களது வேலை அல்ல; அவர்கள் இன்றைக்குக் கட்டிட லைசென்ஸ்களை எடுத்துச் செல்ல வேண்டும் ; அதேநேரத்தில் உணவுக் கலப்படச் சட்டத்தைப்பற்றியும் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் ; இன்சுலேஷன் மோட்டார் இயந்திரங்களை வைக்கின்ற உரிமங்களை வழங்குவதற்கான பரிந்துரை செய்ய வரைபடத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும். ஆகவே, இத்தகைய வேலைப்பளு அவர்களுக்கு இருக்கிறது.

இன்றைக்குத் தமிழகத்தில் சுமார் 350 சுகாதார உதவியாளர்கள்—ஹெல்த் அசிஸ்டென்டுகள் வேலையற்று சும்மா இருந்து கொண்டு சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது பணி என்னவென்றால், பெரியம்மைக்கு அம்மை குத்துவது என்ற பொறுப்புதான். 1976 ஆம் ஆண்டில் உலக சுகாதார ஸ்தாபனம், இந்தியாவில் பெரியம்மை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று சான்றிதழ் அளித்திருக்கிறது. ஆகவே, பெரியம்மை ஒழிக்கப்பட்டதன் காரணமாக, அம்மை வைக்கும் வேலை சுகாதார உதவியாளர்களுக்கு இல்லாமல், அவர்கள் செய்யக்கூடிய ஒரே வேலை பிறப்பு—இறப்பு பதிவு செய்தல் என்பதுதான். அதே நேரத்தில் சானிட்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது. எனவே, இந்த வேலைகளை ஹெல்த் அசிஸ்டென்ட்டுகளுக்கு சமமாகப் பங்கிட்டுக் கொடுப்பதன் மூலம், ஹெல்த் அசிஸ்டண்டுகளைச் சானிட்டரி இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வு அளிப்பதன் மூலம் சீராக்க முடியும். (மணியடிக்கப்பட்டது) நான் ஆரம்பித்துக் கொஞ்சம் நேரம் தான் ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசிக் கொண்டிருப்பதால் அவர்களுக்கு நேரம் போனது தெரியவில்லை.



1981 ஏப்ரல் 8]

*திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, நான் மேற்கூறியவாறு செய்வதால், அதாவது இந்தச் சுகாதாரப் பணியாளர்களை சுகாதார இன்ஸ்பெக்டர்களாக ஆக்குவதன் மூலம் நகராட்சிக்கோ அல்லது அரசுக்கோ நிதியிழப்பு ஏற்படாது. காரணம், சுகாதார இன்ஸ்பெக்டர்களின் அடிப்படைச் சம்பளம் 350 ரூபாய். சுகாதார உதவியாளர் அல்லது அசிஸ்டென்டுகளுக்கு 325 ரூபாய் அடிப்படைச் சம்பளம். எனவே இவர்களுக்கு இடையே அடிப்படைச் சம்பளத்தில் 25 ரூபாய்தான் வித்தியாசம் இருக்கிறது. அதிலும்கூட 100-க்கு 65 சுகாதார உதவியாளர்கள் இன்றைக்கு சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் வாங்குகின்ற சம்பளத்தையும் தாண்டிச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, இதனால் எந்தவிதமான நிதியிழப்பும், நகராட்சிக்கோ அல்லது அரசுக்கோ ஏற்படாத நிலையில் அந்த ஹெல்த் அசிஸ்டென்டுகளை இன்ஸ்பெக்டர்களைச் சானிட்டரி இன்ஸ்பெக்டர்களாக அப்கிரேட் செய்தால் சுகாதாரப் பணிகள், துப்புரவுப் பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு செலக்ஷன்கிரேட் முனிசிபாலிட்டிக்கும் அல்லது ஃபர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிட்டிக்கும் தமிழக அரசு படிப்படியாகப் பாதாளச்சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

துப்புரவுப் பணியில் ஈடுபடக்கூடிய தொழிலாளர்களுக்குப் பத்தாண்டுத் திட்டம் வகுத்தாவது படிப்படியாக அவர்கள் குடியிருப்பதற்கான குடியிருப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்க திட்டம் தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மனித சமுதாயத்தில் அவருக்குத் தக்க தொழில் என்று சொல்லக்கூடிய அந்தத் துப்புரவுப் பணியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்களுக்குக் காவல்துறையினருக்கு இப்பொழுது வழங்கப்படுவதைப்போன்று அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் குறைந்த விலைக்கு அரசு வழங்குவதற்கு முன்வர வேண்டும். காரணம் இந்தத் தொழிலைச் செய்வதற்கு குறிப்பிட்ட அந்த இனத்தைத் தவிர வேறு எவருமே வருவதில்லை. மனித சமுதாயத்தில் மிகவும் அருவருக்கத்தக்க அப்படிப்பட்ட வேலையைச் செய்து கொண்டிருக்கின்ற அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அரசு குறைந்த விலையில் உணவுப்பொருட்களை, காவல் துறையினருக்கு வழங்குவதைப் போலக் கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று டிரக் இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்த வரையில், பொதுத் துறையின் கீழ், தனி ஒரு துறையாக அமைக்க வேண்டும். திரு. ஹாத்தி அவர்களின் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்ட குழுவும் அவர்கள் தனியாக இயங்க பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

[முற்பகல் 9—40]

அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் அந்தத் துறையை உடனடியாக ஏற்படுத்த அரசு முயல வேண்டும். அந்தத் துறைக்குத் தலைவராக வரக்கூடியவர் அந்தத் துறையைச் சேர்ந்த நிபுணராக, அந்தத் துறையிலே அனுபவம் மிக்கவராக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று இன்றைய தினம் நகராட்சிகள் சில சுகாதாரத் துப்புரவுப் பணிகளுக்காக ஆட்கள் அதிகமாகத் தேவை யென்று அனுப்பினால், சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்கள் அதை உடனடியாகத் திருப்பி விடுகிறார்கள். இன்றைக்கு நகரம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஜனப்பெருக்கம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. தமிழகத்தில் வரலாறு காணாத வறட்சி இருப்பதன் காரணத்தால், குடிப்பதற்குக் கூட தண்ணீரில் லாமல், கிடைக்கக்கூடிய கண்ட, கண்ட தண்ணீரைக் குடிப் பதன்மூலம் மாநிலத்தின் பல பகுதிகளில் காலரா பரவி வருகிறது. காரணம் வறட்சிதானேயொழிய வேறொன்றும் இல்லை. ஆகவே, வறட்சியின் காரணமாக, காலராவைத் தடுக்க போர்க்கால நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இருக்கக்கூடிய வாய்ப்புகளையும், வசதிகளையும் பயன்படுத்தி, மக்களுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க, துறையைச் செம்மையாகப் பயன்படுத்த வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் இன்றைக்குப் பல மாற்றங்களைச் செய் யவிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய கொள்கை உரையிலே கூறியிருக்கிறார்கள். அந்த மாறுதலைப் படிப்படியாக, விரைவாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு மாநிலத்தில், கடந்த காலத்தைவிட இந்த அரசு மாண்புமிகு அமைச்சர் தலைமையில் சீராகவும் சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இன்றைக்கு வேண்டு மானால் எதிர்க்கட்சிக்காரர்கள், சொல்ல வேண்டுமென்ற காரணத்திற்காக, குற்றங்கள், குறைகளைச் சொல்லலாமே ஒழிய





குறைகளை களைச் செய்யக்கூடிய அரசாங்கமாக இது இருக் கிறதே ஒழிய, குறைகளை போக்கக்கூடிய அமைச்சர் இருக்கி றாரே ஒழிய குறைகளைக் களையக்கூடியஅமைச்சர் இருக்கிறாரே ஒழிய, குறைகளைச் செய்யக்கூடிய அமைச்சர் இல்லையென் பதை அவர்கள் அறிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

எல்லோருக்கும் நல்வாழ்வு என்பதுதான் இந்த அரசினு டைய திட்டம். அந்தத் திட்டத்தை மருத்துவம், பொதுச் சுகாதாரத் துறைகளின்கீழ் இந்த அரசு சிறப்பாகவும், செம்மை யாகவும் அமுல் நடத்திக்கொண்டு வருகிறது, அமுல் நடத்தும் என்பதை நான் அறிந்து, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து இந்தக் கோரிக்கையைக் கொண்டுவந்திருக்கிற அமைச்சரைப் பாராட்டிப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. மு. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே 1981—82-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது, பொதுச் சுகாதாரம், மருத்துவம், மானியங்கள் மீது பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நமது பேர வைத் தலைவர் அவர்கள் தினசரி திருக்குறளைச் சொல்லி இந்த சபையைத் துவக்கி வைப்பதைப் போலவே நமது நிதியமைச்சர் நாவலர் அவர்களும் ஒரு திருக்குறளைச் சொல்லி, நிதிநிலை அறிக்கையை இந்தச் சபையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்தத் திருக்குறளிலே நோயின்மை, செல்வம், வேளாண்மை, காவல் ஆகிய நான்கு துறைகளும் முக்கியமானவை ஒரு நாட் டிற்கு என்று சொன்னார்கள். இந்த அறிக்கையிலே பார்க்கும் போது நோயில்லாதிருத்தலை முதன்மைப்படுத்தி, நாட்டு மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டி அவர்களுக்குச் சகல மருத்துவ வசதி கிடைக்கச் செய்வது அரசின் கடமைகளில் ஒன்று என்று சொல்லி இருக்கிறார்.

பொதுவாக, தமிழ்நாட்டிலே தொத்து நோய் என்று சொல் லக்கூடியபெரியம்மை, காலராபிளேக் போன்ற சில வியாதிகள் இன் றைக்கு நாட்டிலே இல்லாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவைகள் முழுமையாகப் போக்கப்பட்டது. நமது நாட்டிலே யே நமது மாநிலத்திலே உள்ள மருத்துவர்கள், நல்லதிறமை யானவர்கள். நமது நாட்டிலே உள்ள மருத்துவ மனைகள் யாவற்றையும்விட நமது மாநிலத்திலே உள்ள மருத்துவ வசதி படைத்த மருத்துவத் துறை மிகவும் திறமையாகச் செயல்பட்டு கிறது.

(திரு. மு. சுந்தரம்) [1981 ஏப்ரல் 8

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியதைப் போல, தமிழகத்திலே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்தி மக்களுக்கு அருகாமையிலேயே மருத்துவ வசதி கிடைக்க திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் 374 பஞ்சாயத்து யூனியன்களில் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன 9 ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், அவைகளில் எத்தனை ஊராட்சி ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் இருக்கின்றன என்று தெரியவில்லை.

பொதுவாக என்னுடைய தொகுதியான ரிஷிவந்தியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு சிறிய கட்டடத்தில் இருக்கின்றது. புதிய கட்டிடம் கட்டவில்லை. அதற்காக 7 ஆண்டுகளுக்கு முன்னால் புதிய கட்டடத்திற்காக நிலம் ஒதுக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு இன்னும் அந்த ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்படவில்லை. சுகாதார அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, அந்த இடத்தில் புதிய ஆரம்ப சுகாதாரக் கட்டடத்தைக் கட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக கிராமப் புறங்களிலே உள்ள மருத்துவமனைகளிலே பொதுமக்களுக்குத் தேவையான மருந்துகள் கிடைப்பதில்லை. அப்படியே மருந்துகள் கிடைத்தாலும் அவைகள் தரமான மருந்துகளாக இருப்பதில்லை. ஒரு மருத்துவமனைக்கு மருந்துகள் வாங்குவதற்க க ஏற்கனவே 12,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது, அது தற்போது 20,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது இந்தத் தொகையும் போதாது. குறைந்தது 50,000 ரூபாயாவது ஒதுக்கினால்தான், ஆண்டு பூராவும் அந்த மருத்துவமனைக்குத் தேவையான மருந்துகளை வாங்க முடியும். மேலும் அந்த மருத்துவமனைகளில் சப்ளை செய்யப்படும் மருந்துகள் தரம் குறைந்ததாக இருக்கின்றன, போலி மருந்துகள் மலிந்துவிட்ட இந்த நாட்களில், அரசாங்கமே மருந்துகளைத் தாயரித்து, அரசாங்க மருத்துவமனைகளுக்குச் சப்ளை செய்யவேண்டும். அதற்காக வருடத்திற்கு 5 கோடி ரூபாயை ஒதுக்கி, நல்ல தரமான மருந்துகளைத் தயாரித்து, அவைகளை அரசாங்க மருத்துவமனைகளுக்கு சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்இறேன்.

அடுத்து, உள்ளாட்சி நிர்வாகத்தில், அநேக பஞ்சாயத்துக்களில், வீட்டு வரி வசூலில் ரூபாய்க்கு 5 பைசா லைப்ரரி செஸ் வசூலிக்கிறார்கள். அதைப் போலவே ஒவ்வொரு பஞ்சாயத்



1981 ஏப்ரல் 8] [திரு. மு. சுந்தரம்]

திலும் லோக்கல் செஸ் என்று $2\frac{1}{2}$ ரூபாய் வசூலிக்கிறார்கள், அதிலே ஒரு பகுதியை இந்த மருத்துவக் துறைக்காக ஒதுக்கி, அதில் இருந்து கிடைக்கும் கணிசமான தொகையில் நல்ல மருந்துகளை வாங்கி இந்த மருத்துவமனைகளுக்குக் கொடுக்க வேண்டும். இந்த லோக்கல் செஸ் $2\frac{1}{2}$ ரூபாயில் 50 பைசாவை மருத்துவமனைக்கு ஒதுக்கி அதன் மூலம் நல்ல தரமான மருந்துகளை வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது வெளியே மார்க்கெட்டிலே வாங்கக் கூடிய மருந்துகள் தரமானதாக இல்லை. எனவே அரசாங்கம் நல்ல தொழிற்சாலையை ஏற்படுத்தி, நல்ல தரமான மருந்துகளைத் தயாரித்து அவைகளை மருத்துவமனைகளுக்கு சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக அமைச்சர் அவர்கள் முனைப்பாக வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 5,000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மருந்தகம் ஏற்படுத்த வேண்டும். படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பளித்து, பிரிவென்டிவ் அன்டு க்யுரேடிவ் ஆகிய இரண்டு வேலைகளையும் அவர்களுக்குக் கொடுத்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள அனைத்து ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு மாதம் ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும். அப்படிச் செய்வதோடு அந்தப் பள்ளிப் பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்க விரிவான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேல் நாடுகளிலே அனைத்து கல்லூரிகளுக்கும் ஒரு மருந்தகம் இருப்பதைப் போல, தமிழகத்திலேயும், அனைத்துக் கல்லூரிகளுக்கும் ஒரு மருந்தகம் ஏற்படுத்த வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அடுத்து, ஒவ்வொரு தாலுகா மருத்துவமனைக்கும் கட்டாயமாக ஒரு எக்ஸ்ரே யூனிட்டும், லாப் வசதியும் செய்து தரவேண்டும். ஆபரேஷன் தியேட்டர் வசதியும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக கிராமங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளில் இந்தச் சாதனங்கள் இல்லை. அந்தக் குறையைப் போக்கி உடனடியாக எல்லா தாலூகா மருத்துவமனைகளிலும் எக்ஸ்ரே யூனிட் அமைத்துத் தரவேண்டும். மேலும் அங்கே விபத்துக்கள் நடக்கின்ற போது அதற்கு எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என்றால் அங்கே பக்கத்திலே உள்ள தனியார் மருத்துவமனையில் உள்ள எக்ஸ்ரே பிரிவில் எக்ஸ்ரே எடுக்க அனுமதிப்பதில்லை, 40 மைல் 50 மைல்கள் தள்ளி உள்ள சர்க்கார் மருத்துவமனையில் சென்றுதான் எக்ஸ்ரே எடுக்க வேண்டிய சூழ்

[திரு. மு. சுந்தரம்] [1981 ஏப்ரல் 8

நிலை இருக்கின்றது. எனவே எல்லா தாலூகா தலைமையிட மருத்துவமனைகளிலும் கட்டாயமாக எக்ஸ்ரே வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, படித்துப் பட்டம்பெற்ற டாக்டர்கள் அல்லது தனிப்பட்டவர்கள் மருத்துவமனை கட்ட முன் வந்தால், அவர்களுக்கு அரசு ஊக்கம் அளித்து கடன்வழங்கவேண்டும். அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு சப்சிடியாக 15 சதவிகிதம் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

இப்போது இருக்கும் மருத்துவமனைகள் சுத்தமாகவே இருப்பதில்லை. உள்ளே சென்றால், துர்நாற்றம் வீசுகின்றது. ஆகவே சுத்தமாகவும் கவர்ச்சியாகவும் வைத்துக் கொள்வதற்கு, காவல் நிலையங்களுக்குப் பாராட்டும் கேடயமும் வைத்து வழங்குவதைப் போன்று சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும் மருத்துவமனைகளுக்கு கேடயமும், பாராட்டும் வழங்கி, அந்தச் சிப்பந்திகளுக்குச் சான்றிதழும் வழங்கினால் அவர்கள் அந்த மருத்துவமனையை சுத்தமாக வைத்திருப்பதற்கு வழிகோலுவார்கள். அடுத்து மருத்துவமனையில் பயிற்சி பெறும் அவுஸ் சர்ஜன்களை அவர்களுக்கு மருத்துவ பயிற்சி அளிப்பதற்குப் பதிலாக, மருந்துகளை வாங்குவதற்கான இன்டென்ட் போன்றவைகளை எழுதுவதற்கு பயன்படுத்துகிறார்கள். இவைகளுக்கு வேறு சிப்பந்திகளைப் பயன்படுத்தி, இவர்களுக்குத் தேவையான பயிற்சியினை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இருந்தும், அதனுடைய குறிக்கோள் நிறைவேறவில்லை. மக்கள் வெறுப்படையாமல் கருத்தடை செய்து கொள்ள ஊக்கமளித்து, தகுந்த முறையில் பிரச்சாரம் செய்யத் திட்டம் வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவமனையில் நோயின் தன்மையைக் கண்டறிவதற்காக ஏ. டி. ஸ்கேனர், ஈக்கோ கார்ட்டியோகிராம் என்னும் விலை உயர்ந்த நவீன கருவிகள் வைக்கப்பட்டிருப்பதைப் போல மற்ற பெரிய மாவட்டங்களான மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களிலும் வைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இளமையிலேயே உடல் ஊனமுற்ற சிறார்களுக்கு தாலூக்காவிற்கு ஒரு மருத்துவமனை ஏற்படுத்தி அவர்களுக்குப் பயிற்சி அளித்து கல்வி வசதிகளையும் அளிக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் அமெரிக்கா சென்ற போது ஒரு மருத்துவ மனையைப் பார்வையிட்டபோது, அங்கே 80 உடல் ஊனமுற்றவர்கள் இருந்தார்கள்.



1981 ஏப்ரல் 8] [திரு. மு. சுந்தரம்]

அங்கே ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அந்த மருத்துவமனைக்கு 40 சிப்பந்திகள்—மருத்துவர்கள், நர்சுகள், ஆயாக்கள்—என்று இப்படி 80 பேர்கள் இருக்கிற மருத்துவ மனையில் 40 சிப்பந்திகள் இருந்தார்கள். ஆகவே, அந்த வகையில் இங்கேயும் ஒவ்வொரு தாலூக்காவுக்கும் ஒரு உடல் ஊனமுற்றோர் மருத்துவ மனை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு எத்தனைக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, இன்னும் எவ்வளவு கட்டிடம் கட்டப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். குறிப்பாக எனது ரிஷிவந்தியம் தொகுதியில் இன்னும் கட்டிடம் கட்டப்படாமல் இருக்கிறது. அதற்கு வேண்டிய இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும், டெண்டர் விடப்பட்டும் இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை. அதை கூடிய விரைவில் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே திருக்கோயிலூர் மருத்துவ மனையில் எல்லா வசதிகளும் இருக்கின்றன. எக்ஸ்ரே வசதி, லேப் வசதி மட்டும் இல்லாமல் இருக்கிறது. அவைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆபரேஷன் தியேட்டரும் வேண்டும். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோது, அவர்கள் அங்கே 16 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றை 2 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்துக் கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது குடிநீர் திட்டத்தை ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். இந்த அரசு என்னுடைய தொகுதிக்கு எந்தவிதமான வசதியையும் செய்து தரவில்லை. ஆகவே, தற்போதுள்ள நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியான ரிஷிவந்தியம் தொகுதியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு மருத்துவ மனைக் கட்டிடம் கட்டித்தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்சமயம் அந்த ஆரம்பச் சுகாதார நிலையம் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. பொது மக்களுக்கு இதனால் எந்த வசதியும் கிடைப்பது இல்லை. ஆகவே, அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ரிஷிவந்தியத்தில் விரைவில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே வட்டாரத்தில் உள்ள அரியலூரிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. சுந்தரம்] [1981 ஏப்ரல் 8

வெளிநாட்டு நிதி உதவியுடன் நடைபெறுகின்ற மருத்துவ மனைகள் சரிவர இயங்காமல் அவர்களுக்குள் கோஷ்டிகளாக பிரிந்து சுயநலத்துடன் நடந்து கொள்கிறார்கள். இவைகளை எல்லாம் கண்காணித்து நல்ல முறையில் அவைகளை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெளிநாட்டில் இருந்து வரும் நிதி உதவிகளையும் சரிவரப் பயன்படுத்தாமல் இருக்கிறது. அதையும் கண்காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பச் சுகாதார மருத்துவ மனையில் உள்ளவர்கள் கிராமங்களுக்குச் சென்று மக்களுக்குப் பணி செய்ய வேண்டும். அவர்கள் காலையில் மருத்துவமனைக்குச் சென்று வீடு திரும்புகிறார்கள். ஆகவே, அவர்களெல்லாம் மாலையில் அருகில்உள்ள கிராமங்களுக்குச் சென்று பணிசெய்ய உத்தரவிட வேண்டும். (மணி அடிக்கப்பட்டது)

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுக்கான மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

தாய்மார்கள், குழந்தைகளுக்கான சிறப்புத் திட்டங்கள், தாய் சேய் நலப்பணிகள், சிறப்புப் பள்ளி நல்வாழ்வுத் திட்டம், விரிவு படுத்தப்பட்ட நோய்த் தடுப்புத் திட்டம், தொற்று நோய்களை கட்டுப்படுத்துதல் மத்திய அரசு உதவியுடன் மலேரியா ஒழிப்புத் திட்டம், யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் போன்ற பல் வேறுபட்ட நல்ல திட்டங்களை செயலாற்றி வருகின்ற இந்த அரசுக்கும் இந்தத் துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு என்பது நோயற்ற நிலை என்பது மட்டுமல்ல ; உடல் நலன் உள்ள நலன், சமூக நலன் ஆகிய மூன்றும் நிறைந்துள்ள நிலையே நல்வாழ்வாகும். " நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் " என்பது பழந்தமிழ் மொழி.

" மக்கள் நலம் என்ற அடித்தளத்தின் மீதுதான் ஆட்சி அதிகாரம் மற்றும் அனைத்தும் எழுப்பப்படுகின்றன " என்று மேல் நாட்டுஅறிஞர் குறிப்பிட்டார். அந்த வகையிலே சமுதாயத்தினருக்கு சுகாதாரப் பாதுகாப்பு, ஊட்டச் சத்து மேம்பாடு, தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல், சுற்றுப்புறச் சுகாதாரம் பேணுதல், நோய்கள் வந்துற்ற வேளை மருத்துவப் பணி அளித்தல் முதலியவற்றிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்ற இந்த புரட்சித் தலைவர் அரசை நான் பாராட்டுகிறேன்.



1981 ஏப்ரல் 8] [திரு. என். விஜயபாலன்]

கிராமப்பகுதி மக்களுக்கு மருத்துவ வசதிகள் செய்துதர வேண்டும். மருத்துவத்திற்காக ஏழை எளிய மக்கள் வெகுதூரம் நடந்து செல்லக் கூடிய அவல நிலையைப் போக்க வேண்டும் என்ற அடிப்படையில் திட்டங்கள் வகுத்து செயல்படுத்திய பெருமை புரட்சித் தலைவரின் அரசைச் சாரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் மருத்துவ மனைகளைத் தேடி அலைவதற்குப் பதிலாக மக்கள் வாழும் இடங்களுக்கு மருத்துவக் குழுவினர் சென்று சிகிச்சை அளிக்க மக்களுக்கு நோய்த் தடுப்புப் பணியாற்ற 'மொபைல் யூனிட்' என்று சொல்லப்படுகின்ற நடமாடும் மருத்துவக் குழுவினரை ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவரைச் சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிதாக 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை துவக்கவும், இருக்கின்ற 14 நிலையங்களில் மருத்துவ மனைக்குரிய வசதிகளைச செய்து கொடுப்பதற்கும் இந்த ஆண்டிற்கான வரவுச் செலவுத் திட்டத்தில் வகை செய்திருப்பது பாராட்டுதலுக்குரிய செயலாகும். கிராமப்புறங்களில் சுகாதார வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதில் புரட்சித் தலைவரின் அரசுக்குள்ள ஆர்வத்திற்கும் அக்கறைக்கும் இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

6 முதல் 11 வயது வரையுள்ள பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யும் திட்டத்தை மேலும் 50 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் 25 நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்துவதை நான் உளமாரப் பாராட்டுகிறேன்.

200 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குவதற்கும், இந்திய மருத்துவ முறையின் வளர்ச்சிக்கு வழிகோலவும் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பது அந்தத் துறைகளின் வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

உடல் நலன் தொடர்பான அனைத்தும் இடம்பெறும் விரிவான உடல் நலப்பாதுகாப்புத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட இருப்பதும், மகப்பேறு குழந்தைகள் நலன், குடும்ப நலன், ஆகியவற்றுக்கு தனி முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கிராமப்புற மருத்துவ மனைகளில் இன்றியமையா அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க இருப்பதும் இந்தத் திட்டம் டேனிஷ் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிறைவேற்றப் பட இருப்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்த நேரத்தில் கிராமப் புற மக்கள் நலனில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு பணியாற்றுகின்ற அரசின் கவனத்திற்கு சில கருத்துக்களைக் கொண்டுவருவதும், சில கோரிக்கைகளை வைப்பதும் எனது தலையாய கடமையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் தலைமை மருத்துவமனை மாயூரம் நகரத்தில் இருக்கின்றது. சிகிச்சைக்காக சேர்க்கப்படுகின்ற நோயாளி ஆபத்தான நிலையை அடைந்துவிட்டால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க போதுமான வசதியில்லாத காரணத்தினால் சில நேரங்களில் நோயாளியை தஞ்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகின்றது. அப்படி அழைத்துச் செல்வதென்றால் ஏழை எளிய மக்கள் 'ஆம்புலன்ஸ்' வண்டியில் அழைத்துச் செல்லப்பட வேண்டும். ஆம்புலன்ஸ் வண்டிக்குரிய தொகையை முன்னதாகக் கட்டினால்தான் அந்த வண்டியை பயன்படுத்த முடியும் என்ற நிலை இருக்கிறது. ஏழை எளிய மக்களின் நல்வாழ்வில் அக்கறைக் கொண்டுள்ள நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன், ஏழை நோயாளிகளை ஒரு மருத்துவமனையிலிருந்து வேறு ஒரு மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்கின்ற நிலை ஏற்பட்டால் அதற்குரிய தொகையினை அரசே செலுத்தி, அவர்களை இலவசம க அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, என்னுடைய பூம்புகார் தொகுதியில் செம்பனார் கோயில் ஒரு பெருநகரம். அதனைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே இருக்கின்ற மருத்துவமனையை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10–00]

அதைப்போன்று எனது தொகுதியான வடகரை, அறங்கக்குடி போன்ற பகுதிகளில் முஸ்லீம்பெருமக்கள் ஏராளமான பேர் வாழ்கின்றார்கள். அதைச் சுற்றிய இடங்களில் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே அங்கே மருத்துவமனை அமைக்கின்ற முயற்சியை இந்த அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாயூரம் அரசு மருத்துவமனை மிகவும் சீர்கேடான நிலையில் பல்வேறு குறைபாடுகளுடன் இருக்கின்றது என்பதை நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் நேரிலேயே கண்டறிந்திருக்கிறார்கள். அங்கே உள்ள கட்டிடங்களின் நிலையினையும், மேலும் சுகாதாரக்கேடான





நிலைமைகளையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் நேரிலேயே கண்டறிந்திருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தை சீர்படுத்துவதற்கான முயற்சியை அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பூம்புகாரில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பூம்புகார் பகுதியில் மீனவ மக்களும், பின்தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த மக்களும் நிரம்ப வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மருத்துவ வசதி தேவை என்றால் அவர்கள் வெகுதூரம் செல்லவேண்டி இருக்கின்றது. ஆகவே அங்கேயும் ஒரு ஆரம்பச் சுகாதர நிலையத்தை உருவாக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகின்ற டாக்டர்கள் பற்றி பல காலமாகக் கேட்கப்பட்டு வருகின்ற கேள்வி என்னவென்றால் அவர்கள் பிரைவேட் கிளினிக் நடத்தலாமா, நடத்தக்கூடாதா என்பது. இப்படிப்பட்ட ஒரு வினா எழுந்துகொண்டேதான் இருக்கின்றது. அவர்கள் பிரைவேட் கிளினிக் நடத்திக்கொண்டிருப்பதன் காரணத்தால்தான் அரசு மருத்துவமனைகளில் அவர்கள் அக்கறையும், ஆர்வமும் காட்டுவது மிகவும் குறைவாக இருக்கின்றது. ஆகவே அரசு மருத்துவமனைகளில் பணிபுரிகின்ற டாக்டர்களுக்கு 8 மணிநேரம் வேலை என்று ஏற்படுத்தியாவது அவர்களுக்கு சம்பளத்தை சற்று அதிகப்படுத்திக் கொடுத்தாவது அவர்கள் பிரைவேட் கிளினிக் நடத்தாத வகையில் முழுமையாக அரசின் பொது மருத்துவமனைகளிலே பணிபுரிகின்ற ஒரு நிலையை இந்த அரசு உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசு பொது மருத்துவமனைகளிலே வசதி படைத்தவர்களுக்கு ஒரு சலுகையும், ஏழை எளிய மக்களுக்கு மாறுபாடான நிலைமையும் இருக்கின்றது என்ற சூழ்நிலையினை சில மருத்துவமனைகளில் சில டாக்டர்கள் காட்டி வருவதாகத் தகவல் கிடைத்துக்கொண்டிருக்கின்றது. அதை நான் இந்த அரசின் கவனத்திற்குக்கொண்டு வந்து அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் புரட்சித் தலைவரின் அரசு ஏழை எளிய மக்களுக்குக்காகவே அமைந்த அரசு என்பதையும், வாடுகின்ற மக்களுக்காகவே ஏற்படுத்தப்பட்ட அரசு என்பதையும் நிலைநாட்டுகின்ற வகையில் மருத்துவமனைகளில் உள்ள அப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் நீக்கி இந்தஅரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்று என்னுடைய உரையினை முடித்துக் கொள்கிறேன், நன்றி வணக்கம்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய மருத்துவம், பொதுக் சுகாதாரம் ஆகிய மானியக்கோரிக்கைகளின்மீது சட்டமன்றமார்க்ஸிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பின்வரும் கருத்துக்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்களுடைய பொறுப்பிலே தற்போது தமிழகத்தில் நடந்துவரக் கூடிய இந்த இரண்டு துறைகளிலும் ஏற்கெனவே மக்களுக்காக செய்யப்பட்டு இருக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகள் பற்றியும் இந்த அரசின் கொள்கைவிளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மருத்துவம், சுகாதாரம் பற்றிய கொள்கை பற்றிய கொள்கைவிளக்கக் குறிப்பிலே இந்திய முறை மருத்துவம் பற்றியும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த முறைகளிலே இருக்கக்கூடிய ஆக்கபூர்வமான அம்சங்களை நாங்கள் வரவேற்கிறோம். அந்த அம்சங்கள் தொடர்ந்து சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்த முறைகள் மேற்கொண்டும் தமிழ்நாட்டு மக்களுக்கு சிறப்பான சேவைகளைக் கொடுக்கவேண்டும் என்றால் பின்வரும் கருத்துக்களையும் அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முதலிலே நான் கூற விரும்புவது என்னவென்றால், மருத்துவக் கல்லூரிக்கு நடைபெறக்கூடிய தேர்வினைப்பற்றியும், அரசு மருத்துவமனைகளிலே சேவைக்காக மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய முறையினைப் பற்றியும்தான். அவர்கள் எழுதி இருக்கக்கூடிய பரீட்சைகளிலே அவர்கள் பெற்றிருக்கின்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தான் அவைகளை எல்லாம் நடத்த வேண்டும் என்பதை நான் தீவிரமாக வற்புறுத்த விரும்புகிறேன். மருத்துவக்கல்லூரிகளிலே சேர்வதற்காக வரக்கூடிய மாணவர்கள் கல்லூரிகளிலேயும், மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலேயும் சிறப்பான மதிப்பெண்கள் பெற்றவர்களாக இருந்தால் அவர்களைத் தேர்ந்தெடுப்பது தான் பொருத்தமானது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் தற்போது நடைபெறக்கூடிய தேர்வு முறைகளைப் போலி என்று சொல்லவேண்டும். அல்லது அந்தக் கல்லூரியின்தேர்வுகளை முறையாக நடத்துகிறோம் என்று சொன்னால் உண்மையிலே சிறப்பான மதிப்பெண் பெற்று சேர வருகின்ற மாணவர்களை சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்தத் தேர்வுமுறை வைக்கப்படவேண்டும். நாம் நேர்முக இன்டர்வியூலே என்ன கேட்கிறோம்?

ஒரு நிமிஷ இன்டர்வியூவிலே அவர்களுடைய திறமையை எந்த அளவுக்கு சோதிக்க முடியும்? அதிலே பாரபட்சம் காட்டப்பட்டு ஒழுங்கீனங்கள் நடைபெற்று, வேண்டியவர், வேண்டாதவர் என்று



வருகின்ற பிரச்சினையெல்லாம் இருக்கிறது. ஆகவே, மாணவர்களுக்குத் தேவையான தேர்வுகளை சற்றுக் கடுமையாக அந்தக் கல்லூரிகளிலேயே நடத்தலாம். அதிலே அதிக மார்க்குகள் வாங்கக்கூடியவர்களை, சிறப்பாகத் தேறக்கூடியவர்களை தேர்ந்தெடுததால், அது மருத்துவக் கல்லூரிக்கும் சிறப்பாக இருக்கும். இந்த அரசாங்கத்திலே பின்னால் மருத்துவ மனைகளிலே சிறப்பாக அவர்கள் பணியாற்றுவதற்கும் வசதியாக இருக்கும். அதேபோல், அவர்களை சேர்க்கும்போது ஒன்றை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் உடல்நலம் உள்ளவர்களாக இருக்கிறார்களா என்று பரிசோதித்துப் பார்த்த பிறகு, ஒரு மெடிகல் டெஸ்ட் வைத்து, அவர்களைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்கள் உடல்நலம் உள்ளவர்களாக இருக்கிறார்களா என்று கேட்கிறார்களே தவிர, வேறு என்ன இன்டர்வியூவிலே கேட்கிறார்கள். ஆகவேதான் நான் கூறுகிறேன். இந்த முறை மிகவும் தவறானது. அதிகப்படியான மார்க்குகள் எடுத்துள்ள மாணவர்களை இந்த இன்டர்வியூவிலே செலக்ஷன் செய்தால், இப்படிப்பட்ட பிரச்னைகள் வராது. இதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இதை அமுல்செய்தால், முறைகேடுகள் இருக்காது. வேறு சில மாநிலங்களும் இந்த முறையை அமுல் செய்திருக்கின்றது. இங்கே ரிசர்வேஷன் வேறு, அதாவது வகுப்புவாரி அடிப்படையிலே வேறு தேர்ந்தெடுக்கப்படுகின்றது. அந்த வகையிலே, அதிக மார்க் வாங்கியவர்களைத் தேந்தெடுத்தால், ஒரு பிரச்னையும் இருக்காது. அப்படி சிறந்த மாணவர்கள் வரும்போது, மருத்துவக் கல்லூரிக்கும், பின்னர் மருத்துவ மனைகளிலே சிறந்த முறையில் சேவை செய்வதற்கும் வசதியாக இருக்கும் என்று நான் கூற விரும்புகிறேன்,

அடுத்து, ஒரு பிரச்சினையை நான் இன்றைக்கு மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் சட்ட மன்ற உறுப்பினர்கள் குழுவின் சார்பில் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கத் துறையிலே பணியாற்றக் கூடிய மருத்துவர்கள் தனியாக மருத்துவ மனைகளில் பணியாற்றுவதற்கான உரிமை இல்லாமல் இருப்பது சரியானது, நியாயமானது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆழந்து சிந்தித்துப் பார்க்கும்போது, தமிழ்நாட்டிலே மருத்துவர்களுக்கு குறைவில்லை. பல்லாயிரக்கணக்கான பேர்கள் இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கிறார்கள். சமீபத்திலே, டாக்டர்கள் தேர்வு நடந்தபோது, அந்தத் தேர்விற்கு பல்லாயிரக் கணக்கான டாக்டர்கள் அந்தத் தேர்விலே கலந்துகொண்டு, ஒரு சிலர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்படாமல் பல்லாயிரக் கணக்கான டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தொழிலை நடத்தலாம். அவர்கள் இந்தத் தொழிலை நடத்திக் கொண்டு போகட்டும். ஆனால், அரசாங்கத்திலே பணியாற்றக் கூடிய டாக்டர்கள், அரசாங்கப் பணியிலே ஈடுபடவேண்டும்; அதற்கு அவர்கள் பயன்படவேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்தால், மருத்துவ மனை

[திரு. என். சங்கரய்யா[ [1981 ஏப்ரல் 8

களிலும், பொதுச் சுகாதார நிலையங்களிலும், இன்னும் பல ஆஸ்பத்திரிகளிலும் முறையாக மருத்துவ வசதி பெறுவதற்கு வசதியாக இருக்கும், நான் சொல்வதிலே முற்றிலும் நியாயம இருக்கிறது. உண்மை இருக்கிறது, இது சரியானது என்பதை நான் தமிழக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விருமபுஒறேன். இன்றைக்கு இரண்டுவிதமான வருமானம் சில டாக்டர்களுக்கு கிடைக்குமானல், தனியார், மருத்துவ மனைகளை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு பிரயோஜனம் இல்லை. தனியாக தொழில் நடத்தக்கூடியவர்களிடத்தில் அதிகப்படியாக போவதில்லை. அரசாங்கத்திலே பணிபுரிபவர்களிடம் சென்றால் தான், பின்னர் அரசாங்க மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை செய்துகொள்ளலாம் என்று அங்கேதான் போகிறார்கள். ஆகவே, தனியாக தொழிற் நடத்தக்கூடியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையில் நீங்கள் மருத்துவர்களை கூப்பிட்டு, அவர்களுடைய ஸ்தாபனங்களை அழைத்து, மாநாடு வைத்து, இந்தப் பிரச்சினையைப் பற்றி நிதானமாக விவாதித்து சரியான முடிவுக்கு வரவேண்டும். இப்படி நான் சொல்வதிலே அடிப்படையான நியாயம் இருக்கின்றது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால் எப்படி மற்ற அரசு ஊழியர்கள், முழுநேர ஊழியர்களாக இருக்கிறார்களோ அப்படி அவர்களும் முழுநேர டாக்டர்களாக இருக்க வேண்டும். மத்திய சர்க்கார் இதிலே முடிவெடுத்து, பாண்டிச்சேரியிலுள்ள ஜிப்மர் ஆஸ்பத்திரி யிலே பணிபுரியும் டாக்டர்கள் தனியாக தொழில் நடத்த இயலாது என்று சொல்லி, அதற்காக ஒரு அலவன்சு கொடுக்கிறார்கள். அதைப்போல், நாமும் கொடுக்கலாம். அப்படிச் செய்தால், மருத்துவமனைகள் இன்னும் சிறப்பாக செயலாற்ற, மருத்துவர்கள், பணியாற்ற முடியும் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். எனவே, அரசாங்கம் இதைப்பற்றி நிதானமாக சிந்திக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களிலே மருத்துவர்கள் பணியாற்றுவதற்கு இன்றைக்கு அரசாங்கம் டாக்டர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி பணியாற்றுவதற்கு அவர்களிடத்திலே ஒரு உறுதிமொழி வாங்கிக் கொள்வது பொருத்தமானது தான். இல்லாவிட்டால், ஏராளமான கிராமங்களில் இருக்கக்கூடிய ரூரல் ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு டாக்டரும் குறைந்த பட்சம் இரண்டு வருஷங்களாவது கிராமங்களிலே பணியாற்ற வேண்டும். ஒரு சிலர் மட்டும் அங்கே அனுப்புவதில் பயனில்லை. எல்லோருக்கும் கிராமங்களிலே பணியாற்றக் கூடிய வகையில் இதைக் கட்டாயமாக ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லோருக்கும் இதிலே பங்கிருக்கவேண்டும். அப்போது தான், கிராமங்களிலே சேவை செய்கின்ற வாய்ப்பு கிடைக்கும். அந்த அடிப்படையில் செய்தால், கிராமப்புறங்களிலே நல்ல மருத்துவர்கள் கிடைப்பார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் வசதிகள்



1981 ஏப்ரல் 8] [திரு. என். சங்கரய்யா]

கிராமப்புறத்தைக் காட்டிலும் நகரத்திலேதான் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு விசேஷ அலவன்ஸ கொடுக்கவேண்டும். கிராமங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கு சிரமங்கள் இருக்கின்றன. குழந்தைகளைப் படிக்க வைக்க பள்ளி வசதி; போக்குவரத்து வசதி போன்ற வசதிகள் அங்கில்லை. அந்த வசதிகளை செய்துதர வேண்டும். இன்றைக்கு கிராமப்புறங்கள் நகரங்களாக மாறிவருகின்ற சூழ்நிலையில், அரசாங்கம் பல்வேறு காரியாலயங்களில் பணியாற்றுகின்ற வர்களுக்கு ஒரு ஸ்மால் காம்ப்ளெக்ஸ் கட்டிக் கொடுக்கவேண்டும். அப்படி கட்டிக் கொடுத்தால்; அவர்களுடைய பல்வேறு பிரச்சினைகளுக்கு அது உதவியாக இருக்கும். தனியாக போய் இருக்கிறோம்; இங்கே காடுகளில் இருக்கிறோம் என்று சொல்ல வழியில்லாமல், அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் காரியாலயங்களில் கிராமப்புற சென்டர்களிலே வீடுகள் கட்டி கொடுத்தால் இந்தப் பிரச்சனை தீரும், இவர்களுக்குஎவ்விதமான அல்வன்சும் கொடுக்கலாம். ஆனால் கிராமங்களில் இருக்கிற மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லை என்ற காரணத்தால் வேலை செய்யாமல் இருக்கக் கூடாது என்பதை நான் உங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

[முற்பகல் 10.10]

அடுத்து, நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். கேசுவாலிட்டி டிப்பார்ட்மென்ட். அவசர கேஸ்களை பார்ப்பதற்கு இன்றைக்கு மிக முக்கியமானது. ஆனால் பல மருத்துவ மனைகளில் அது இல்லை. அவசர கேஸ்களை பார்க்க வேண்டுமென்றால் 24 மணி நேரமும் டாக்டர்கள் அங்கே இருக்கவேண்டும். நீங்கள் கூறுகிற வட்ட மருத்து மனைகள், வட்டமற்ற மருத்துவமனைகள் அனைத்திலுமே கேசுவாலிட்டி வசதிகள் இருக்க வேண்டும். காரணம் என்னவென்றுச் சொன்னால், தனியார், டாக்டர்கள், இருந்தாலும், இரவு நேரங்களில் அவர்களை மக்கள் தட்டி எழுப்பி மருத்துவம் பெறுவது மிகவும் கடினம். திடீரென்று ஏற்படக்கூடிய நோய்கள், திடீரென்று ஏற்படக்கூடிய சிரமங்களை சமாளிப்பதற்கு தனியார் டாக்டர்களை பார்த்து சிகிச்சை பெறுவது மிகவும் கடினம். அரசாங்கத்தினுடைய பொது மருத்துவமனைகளில் தான் இந்த வசதிகளை செய்ய முடியும். அறுவை சிகிச்சை செய்வதற்கு உட்பட கேசுவாலிட்டி டிப்பார்ட்மென்டில் தமிழகத்தில் இருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான மருத்துவ மனைகளில் இந்த ஏற்பாடுகளை செய்தால் தான் மக்கள் அவர்களுடைய அவசரமான நோய்களிலிருந்து பிழைப்பார்கள. ஆகவே, அரசாங்கம் ஆழந்து சிந்திக்க வேண்டும். உதாரணமாக, தாம்பரத்தில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதிலே கூட இரவு நேரங்களில் கவனிப்பதற்கு, அறுவை சிகிச்சை செய்வதற்கு வசதிகள் இல்லை. மின்சார ரெயிலிலே ஒருவர் அடிபட்டால் தாம்பரத்தில் அடிபட்ட அவரை பொது மருத்துவ மனைக்கு கொண்டு வரவேண்டும்—அதற்குள்

செத்து விடுவார்கள். தாம்பரத்தில் இருக்கிற ஆஸ்பத்திரியில் இந்த ஏற்பாடுகளை செய்தால், பக்கத்திலே அடிபட்டவரை கொண்டு போனால், ஆபத்தான நிலைமையில் உள்ள பல நோயாளிகள், அடிபட்டவர்கள் பிழைத்துக்கொள்வார்கள். இதை அரசாங்கம் சிந்தித்து ஏற்பாடுகள் பல இடங்களில் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் பாலரங்காபுரம் என்ற இடத்திலே நெசவாளிகள், ஏழை மக்கள் இருக்கக் கூடிய இடத்திலே ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறோம். ஆனால் அங்கே இரவு நேர வேலை கிடையாது. பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் பல பகுதிகளிலிருந்து அங்கு வருகிறார்கள். அங்கே கேசுவாலிட்டி டிப்பார்ட்மென்ட் இரவு நேரத்திலே பணிபுரியக்கூடிய ஏற்பாடு செய்ய வேண்டும். அறுவை சிகிச்சை அங்கு ஏற்படுத்தப்பட்டால், மதுரையில் உள்ள பொது மருத்துவமனையில் போய் ஆயிரக்கணக்கில் கூடுகிற மக்களின் எண்ணிக்கை குறையும். எனவே, மதுரை பாலரங்காபுரத்தில் உள்ள ஆஸ்பத்திரி; அதைப்போன்ற மன்ற பெரிய நகரங்களிலும் பெரிய ஆஸ்பத்திரி மட்டுமல்லாது சுற்றுப்புறங்களில் உள்ள ஆஸ்பத்திரியிலும் அந்த வசதிகளை செய்தால் பெரிய ஆஸ்பத்திரியில் மக்கள் கூட்டது குறையும என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கூறிக்கொள்கிறேன்.

மற்றொன்றை கூற விரும்புவது, மாண்புமிகு ஹாண்டே அவர்கள் கூறினார்கள். பல பெரிய டாக்டர்கள் தனியாகச் சென்று பல அறுவைச் சிகிச்சைகளை செய்வதில் ஈடுபட்டு செய்கிறார்கள் அரசாங்கத்தினுடைய சட்டத்திலே எந்த விதமான கோளாறு இருந்தாலும் அது நீக்கப்படவேண்டும். அரசாங்கத்திலே பணி புரியக்கூடிய அனுபவம் பெற்றவர்கள் முழுநேரமாக அரசாங்க மருத்துவ மனைக்கு வருகிற நோயாளிகளுக்கு அந்த அனுபவத்தை கிடைப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கவேண்டும். அது மட்டுமல்ல, டாக்டர்கள் பணம் என்பதை மட்டும் பார்க்காது, வருமானத்தை சம்பாதிப்பதை நோக்கமாக கொள்ளாமலிருந்து அரசாங்க பணி புரிய, பட்டயங்கள் கொடுங்கள், நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுங்கள். டாக்டர்களுக்கு மட்டுகல்ல, பணிபுரிய கூடிய சகல ஊழியர்களுக்கும் சிறந்த சேவையின் அடைப்படையிலே கொடுத்தால் சமுதாயத்தினுடைய கௌரவம், சமுதாயத்தினுடைய அங்கீகாரம் அவர்களுக்கு கிடைத்து சிறப்பாக சேவை செய்ய முடியும், இங்கே நான் கூற விரும்புவது, அதிகாரவர்க்க மனோபாவத்துடன் அந்த இலாக்காக்களில் இருக்கிற பெரிய அதிகாரிகள் நடந்து கொள்ளாமல், டாக்டர்களை; ஊழியர்களை தங்களுடைய நண்பர்களாக கருதி அவர்களுடைய ஆலோசனை



களைப் பெற்று, ஒவ்வொரு மருத்துவ மனையையும் எப்படி சீராக நடத்தலாம் என்பதைப் பற்றி அவர்களின் கூட்டங்களை நடத்தி; விவாதத்தின் மூலம் கிடைக்கும் ஆலோசனைகளை நிறைவேற்றுவீர்களேயானால் நிச்சயமாக மக்கள் சீறிய சேவையைப் பெறுவார்கள் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றை சொல்ல விரும்புகிறேன். ஓ. பி., அவுட் பேஷன்ட் வார்ட்; பல்லாயிரக்கணக்கானவர்கள் கூடுகிறார்கள். அங்கே, வேலை செய்ய கூடியவர்கள் மருந்து வாங்க வேண்டுமென்றால், போய் மருந்து வாங்க முடியாது. அவ்வளவு மணி நேரம் காத்திருக்க வேண்டும். கூடியிருக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் கவுண்டர்களை அதிக்கப்படுத்த வேண்டும். அப்படி செய்தால் ½ மணி நேரம், ஒரு மணி நேரத்தில் மருந்துகளை கொண்டு போனால் தானே அவர்கள் வேலைக்கு போக முடியும். இல்லை என்றால் ஆஸ்பத்திரியில் பல மணி நேரம் காத்திருந்தால் தான் ஒரு மருந்து வாங்க முடியும் என்றால் அது உண்மையிலேயே பயன் இல்லாமல் போய்விடும். ஆகவே அரசாங்கம் இதை கவனிக்க வேண்டும். சென்னை, மதுரை திருச்சி போன்ற இடங்களில் சென்று பாருங்கள். எவ்வளவு மணி நேரம் ஆகிறது என்பதை கவனியுங்கள் அந்த முறையை சீர் திருத்துவதற்கு புறநோயாளிகளுக்கு சீக்கிரத்திலே மருந்துகள் கிடைப்பதற்கு அதிகப்படியான கவுண்டர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்களுடைய பணத்திலிருந்து செலவிடப்படக்கூடிய நடத்தக்கூடிய துறையாக இது இருக்கின்றது. இதிலே எந்தவிதமான ஊழலையோ அல்லது மருந்துகளை அப்புறப்படுத்துவதையோ அனுமதிக்க முடியாது. அதை யார் செய்தாலும் அனுமதிக்கக்கூடாது. குறிப்பாக சில கம்பெனிகள், சில மருந்துக்கடைகள் தான் அதை ஊக்குவிக்கிறார்கள். அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளிலிருந்து அப்புறப்படுத்துகிற மருந்துகளை அவர்கள் வாங்கி கடைகளிலே வைத்து லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்களை தடுத்து நிறுத்த வேண்டும். இதைத் தடுப்பதற்கு முக்கியமாக சர்ப்ரைஸ் செக் செய்யப்பட வேண்டும். அதிகாரிகளை ஒரு ஜில்லாவிலிருந்து இன்னொரு ஜில்லாவிற்கு திடீரென்று போய்ப் பார்க்கச் செய்து அங்கே மருந்துகள் ஸ்டாக் சரியாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா ஊழல் நடக்கிறதா என்பதைக் கான்காணிக்கச் செய்ய வேண்டும். அதே போன்றுதான் செக்யூரிட்டி, இந்த சட்டசபைக்குள்ளே தான் செக்யூரிட்டியா, மருத்துவ மனைகளிலே செக்யூரிட்டி சிஸ்டத்தைக் கொண்டு வந்து நோயாளிகளுக்கு என்று வைத்துள்ள உணவுகளையோ அல்லது மருந்துகளையோ அப்புறப்படுத்தாமல் அவைகள் வெளியே போகாமல் கண்காணிக்கக்கூடிய முறையிலே தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதற்கு இந்த

மாநிலத்திலே உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப் பார்கள். தங்கள் ஊழியர்களிடத்திலே சொல்லி ஒத்துழைப் பைக் கோருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியாவது இந்த மருந்துகளை அப்புறப்படுத்துகிற ஊழலைப் போக்கியாகவேண்டும். அதற்காக அந்த ஊழியர்களை எல்லாம் அழைத்துவைத்துப் பேசி இந்த மாதிரி மருந்துகள் எடுத்துப் போவதைத் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். ஆகவே அரசாங்கம் இதிலே கடுமையாக இருக்க வேண்டும், எந்தவிதமான தயக்கத்தையும் காட்டக் கூடாதுஎ என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மருந்துகளிலே அடல்ட்ரேஷன், கலப்படம் செய் கின்ற நிலைமை தடுக்கப்பட வேண்டும். என்ன செய்கிறார்கள் என்றால் வசதியில்லாதவர்கள் கூட கொஞ்ச ரூபாயை முதலீடு செய்து மருந்துகளை உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை இருக் கிறது என்றால் அந்த மருந்துகள் எப்படி இருக்கும்? அவர்கள் உற்பத்திசெய்கிறார்கள் என்றால் அந்த ஊழியர்களைக் கூட சரியான முறையில் வைக்கவில்லை, பல இடங்களிலே அவர்கள் அரசாங்கத்தை வந்து அணுகி அந்த மருந்துகளை வாங்கும்படி செய்கிறார்கள். இதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். குறிப்பாக டிரக் இன்ஸ்பெக்ஷன், அந்தக் கன் காணிப்பை கடுமையாக்கவேண்டும். மருந்து உற்பத்தியைப் போதுமான அளவுக்கு மேற்கொள்ளக்கூடிய முறையிலே மத்திய அரசோ அல்லது மாநில அரசோ உற்பத்திசெய்யக் கூடிய முயற்சி களிலே ஈடுபட வேண்டும்.

மேலும், ஆங்காங்கே பொருத்தமான மக்கள் ஆலோசனைக் குழுக்களைப் போடவேண்டும். கடைசியிலே ஜனநாயக முறை யிலே பிரச்சினையைத் திர்க்கவேண்டியுள்ளது. ஆங்காங்கே மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஆங்காங்கே உள்ள அரசி யல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமுதாய நல ஊழியர்களின் பிரதிநிதிகள் இவர்களைக் கொண்ட மக்கள் குழுவை அமைக்க லாம். அந்த மருந்துவ மனைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப்பற்றி ஆலோசித்து சொல்லலாம், அந்தக் குழு அதி காரக் குழுவாக அல்ல, ஆலோசனைக் குழுவாகச் செயல்படக் கூடிய முறையில் ஏற்பாடுகளைச் செய்யலாம். அவர்களை 1, 2 மாதத்திற்கு ஒரு முறை கூடச் சொல்லுங்கள், அவர்கள் அங்கே வந்து, வரக்கூடிய புகார்களை, கம்ப்ளெயின்ட்களை பற்றி ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசனை சொல்வார்கள். அந்த வகையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்து, எம்ப்ளாயிஸ் ஸ்டேட் இன்ஸீரன்ஸ் ஆஸ்பத்திரி. அங்கே நிர்வாகம் வேறாகவும் டாக்டர்கள் போடுவது மற்ற வைகள் வேறாகவும் இருக்கிறது. அங்கே 'டயார்க்கி' என்று





சொல்லப்படுகிற இரட்டையாட்சியாகத்தான் நடைமுறை இருக் கிறது. அதை மாற்றமுடியுமா என்பதைச் சிந்திக்கவேண்டும். அங்கே மருந்துகளை மட்டும் கொடுக்கின்ற நிலைமை மாறி அந்த ஆஸ்பத்திரிகளிலே எல்லாவிதமான சிகிச்சைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளிலே சகல துறைகளையும் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இ.என்.டி. கண் சிகிச்சை, பல் சிகிச்சை போன்ற பல பிரிவு களையும் அங்கே கொண்டுவர ஏற்பாடு செய்தால் பெரிய ஆஸ் பத்திரிகளிலே, ஜெனரல் ஆஸ்பத்திரிகளிலே கூட்டம் குறை வதற்கான வழி ஏற்படும். அதைச் செய்ய வேண்டும்.

அடுத்து, இந்திய முறை மருத்துவம். எளிய முறையிலே அவர்கள் மருந்துகளைத்தயார் செய்யக்கூடிய நிலைமை இருக் கிறது. கடைகளிலே வைத்திருக்கின்ற சில மருந்துகளை பயன் படுத்தினால் காய்ச்சல், சளி, கபம் எல்லாம் போய்விடுகிறது. அப்படிப்பட்ட மருந்துகளை சித்தமுறையிலே அரசாங்கமே செய்தால் ஏழை எளிய மக்கள் வாங்கிப் பயன்படுத்தி நோய் களிலிருந்து குணம் அடையமுடியும். மருத்துவ மனைகளுக்குச் செல்லாமல் கடைகளிலேயே அந்த மருந்துகளை வாங்கி பயன் படுத்தமுடியும். ஆனால் அதற்கு போதுமான விளம்பரம் செய் யப்படவில்லை, ஏதோ ஒரு மூலையிலே தான் வைக்கப்பட் டிருக்கிறது. மக்கள்பார்வைக்குத் தென்படுகிற முறையிலே விளம் பரம் கொடுக்கப்படவேண்டும். அதற்கு முக்கியத்துவம் கொடுக் கப்படவேண்டும். அதைப்போன்று தான் ஹோமியோபதியும் ஆயுர்வேதமும். அடுத்து பிள்ளை மருந்துகள் என்று சொல்லப் படுகிற பிரமாதமான மருந்து இருக்கிறது.

[முற்பகல் 10–20]

ஒரு மாதம், இரண்டு மாதங்கள் ஆகிய பருவத்தில் உள்ள பிள்ளைகளுக்கு மாந்தம், கபம் சுரம் போன்ற வியாதிகள் வரும் பொழுது அதற்கு எண்ணெய் கொடுத்து குணப்படுத்துகின்ற நிலைமைப் பல்லாண்டுக்காலமாக இருந்து வந்திருக்கிறது. கால் ரூபாய், அரை ரூபாய் செலவிலே மூன்று அவுன்ஸ் நான்கு அவுன்ஸ் என்று வாங்கி வைத்துக் கொண்டு குணப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பெருமளவிற்கு அர சாங்கம் உற்பத்தி செய்து குழந்தைகள் மருத்துவமனைகளில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற யோசனையைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

''அகுபஞ்சர்'' என்ற முறையைத் தனியார் நிறுவனம் செய்து வந்திருப்பதாக அறிகிறோம். அந்த நிறுவன விழாவிற்கு வரச் சொல்லி எனக்குகூட அழைப்பு அனுப்பியிருந்தார்கள். அதைப்

பற்றி அரசாங்கம் ஏன் முயற்சிக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். பல்வேறு நாடுகளிலே, குறிப்பிட்ட வியாதிகளுக்கு இந்த அகுபஞ்சர் முறையைச் செய்கிறார்கள். குறிப்பாக வாத வியாதிகளுக்கு இந்தமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முறையை அரசாங்கம் தங்கள் மருத்துவமனைகளிலே ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொது சுகாதாரத்தைப் பொறுத்தவரையில், நகரங்களில் கொசுத் தொல்லையின் காரணமாக மிகவும் பயங்கரமான வேதனையாக இருக்கிறது. அதற்காக நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும்கூட, அந்தத் தொல்லை இன்னும் தீர்ந்தபாடில்லை. கோவை, சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் தேசியப் பிரச்னையாக வந்து கொண்டிருக்கின்ற மலேரியா ஓரளவுக்குக் கட்டுப் படுத்தப்பட்டிருந்தாலும்கூட கொசுத்தொல்லை இன்னும் கட்டுப்படுத்தப்படவில்லை. ஆகவே, இப்பொழுதுள்ள மருந்துகள் பயனற்றுப் போய் விட்டனவா? அடிக்கடி இந்த மருந்தை எதிர்த்து எதிர்த்து கொசுக்கள் இந்த மருந்தை எதிர்த்து நிற்கின்ற சக்தியைப் பெற்றுவிட்டனவா? அப்படியானால் புதிய சக்தி வாய்ந்த மருந்துகளைத் தயாரித்து நகரங்களையும் கிராமங்களையும் கொசுத் தொல்லையிலிருந்து பாதுகாப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுற்றுப்புற சூழ்நிலை கெடுதலைப்பற்றி எடுத்துக்கொண்டால், தொழில்கள் வளரத்தான் வேண்டும்; ஆனால் மக்கள் வாழ்க்கையைப் பயங்கரமான சேதத்திற்கு உட்படுத்தி அவ்வாறு செய்வது சரியல்ல. ஆகவே, ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் அனுமதி கொடுப்பதற்கு முன்பாக, கழிவுப் பொருட்களை அவர்கள் தங்கள செலவிலே, தங்கள் சிஸ்டத்திலே தங்கள் வளாகத்திலேயே ட்ரீட்மென்ட் செய்ய வேண்டும்; அவ்வாறான மாற்று ஏற்பாடு இருந்தால் தான் அனுமதி கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் பல்வேறு தொழிற்சாலைகளின் காரணமாக மக்களின் வாழ்க்கைதான் கெடும்.

காவேரி நதியில் ஏராளமான கெமிகல்ஸ்—இரசாயனப் பொருட்கள் சேர்கின்றன. அப்படியானால் காவேரி நதி என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நதிகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, உணவுக் கலப்படம் மிகவும் மோசமாக இருக்கிறது. இதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் மிகச் சரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





தனியார் மருத்துவமனைகளில் இருப்பவர்கள வாங்கக்கூடிய கட்டணத்தைப் பற்றி அரசாங்கம் ஏதாவது கொண்டு வர முடியாதா? பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை அவர்கள் வாங்குகிறார்களே, அரசாங்கம் அதிலே குறுக்கிட முடியாதா? அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் பெறுகின்ற சம்பளத்திற்கும் அரசாங்கத்தில் வேலை பார்க்கின்றவர்கள் பெறுகின்ற சம்பளத்திற்கும் சம்மந்தமே இல்லை. அவர்களுக்கு நீங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா? எனவே, தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு, அரசாங்க மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு இருக்கக்கூடிய அனைத்துப் பாதுகாப்புகளையும் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றபடி இரண்டு மூன்று விஷயங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நடமாடும் மருத்துவமனை நல்லதுதான். ஆனால் பொது சுகாதார நிலையத்திற்கு ஒரு ஆண்டுக்கு 20,000 ரூபாய் தான் மருந்துக்கு என்று கொடுத்தால் அங்கே என்ன மருந்து இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். சாத்தியமான வகையில் அந்த மருந்துகளை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவையில் குழந்தைகள் ஆஸ்பத்திரி அமைப்பதற்காக ஏற்கெனவே ஒரு திட்டம் இருந்ததாக அறிகிறேன். மதுரையிலும், கோவையிலும் குழந்தைகளுக்காக ஒரு ஆஸ்பத்திரியை ஆரம்பித்தால் நல்லது. சென்னையில் உள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரி சிறப்பாகப் பணியாற்றுகிறது. எனவே, அந்த இரண்டு இடங்களிலும் அவ்வாறு ஆரம்பித்தால் அந்தப் பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கு அங்கேயே சிகிச்சை செய்து விடுவார்கள் என்பதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மதுரையில் 'ஐ' டிப்பார்ட்மென்ட்தான் இருக்கிறது தனியாக ஆஸ்பத்திரி கிடையாது. சென்னையில் இருப்பதைப் போன்று மதுரையிலும் கண் ஆஸ்பத்திரி ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் தெற்குப் பகுதியில் இருக்கின்ற கண் நோயாளிகளுக்குச் சிறப்பான முறையில் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக சில ஸ்தல பிரச்சினைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வாசுதேவநல்லூர் தொகுதியிலே மருத்துவ மனை இல்லை. வாசுதேவ நல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் இடிந்து ஐந்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது. அது இன்னும் கட்டப்படவில்லை.

60,000 மக்கள் தொகை கொண்ட புளியங்குடியில் மருத்துவ மனை இல்லை.

சிவகிரி தாலூகா மையமாக இருந்தாலும் கூட மருத்துவ மனை இல்லை என்ற குறை இருக்கிறது.

கோவை மருத்துவ மனையில் உள்ள கட்டில்கள் போதுமான தாக இல்லை, அதில் போடப்படும் துணிகள் சலவை செய்யப்படுவது சீராக நடக்கவில்லை. டாக்டர்கள் ஓய்வு எடுப்பதற்கான அறைகள்போதுமானதாக இல்லை; சுத்தம் குறைவாக இருக்கிறது. இட நெருக்கடி பயங்கரமாக இருக்கிறது.

இவைகளையெல்லாம் பரிசீலித்து. பொது சுகாதார மருத்துவமனைகளில் ஏற்கெனவே பல்வேறு ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்யக்கூடிய டாக்டர் ஹண்டே அவர்களின் கீழ் இன்று இயங்கி வருகின்ற நிர்வாகம் அடுத்த ஆண்டுகளிலே தமிழ்நாட்டு மக்களுக்குச் சீரிய சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கி. பி. 2,000க்குள் உலக மக்களின் நல்வாழ்வு என்ற குறிக்கோளை அடைய தன்னை ஈடு படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்திய நாடு அல்மா ஆட்டா பிரகடனம், உலகச் சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசிய மக்கள் நல்வாழ்வுப் பட்டயம் ஆகியவற்றைத் தொடர்ந்து, தமிழக அரசு தமிழகத்திலே வாழ்கின்ற 48 மில்லியன் மக்கட் தொகைக்கும் குறிப்பாக கிராமப் புறங்களிலே வாழ்கின்ற 34 மில்லியன் மக்கட் தொகைக்கும் நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற பெரு நோக்கத்தில் இன்று ரூ. 62,85,55,000க்கு அனுமதி வழங்குகின்ற ஒரு அறிக்கையைத் தமிழக அரசு இந்த மன்றத்தின் முன்னாலே வைத்திருக்கிறது.

குறிப்பாக, நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கு ஓரளவு சுகாதார வசதிகள் செய்யப்பட்டிருந்த போதிலும், அதை ஒப்பிடும்போது கிராமத்திலே வாழ்கின்ற பெரும்பகுதி மக்கள், நகரத்திலே வாழ்கின்ற மக்கள் பெறுகின்ற அளவு இல்லாத நிலையில், கிராம மக்களுடைய மேம்பாட்டுத் திட்டத்திற்காக அரசுபல திட்டங்களைத் தீட்டி, அதிலும் குறிப்பாக, ஆரம்பச் சுகாதார நிலையங்கள், கிளைநிலையங்கள், நடமாடும் சுக தாரக் குழுக்கள், சிறு சுகாதார





நிலையங்கள் ஆகியவற்றின் மூலமாக, தாய்-சேய் பணிகள், நல்வாழ்வுத் திட்டச் சிறப்புப் பணிகள், ஊட்டச் சத்து மேம்பாட்டுத் திட்டப் பணிகள் ஆகிய பல பணிகளை மேற் கொண்டு மக்களின் முன்னேற்றத்திற்காக நல்ல முறையிலே இன்று செயல்படுத்தி வருவதை, உண்மையிலேயே கிராமப் புறத்திலே வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது கூட, இந்த அரசினுடைய செயல்முறையைக் குறிப்பாக, மருத்துவக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்க்கின்ற முறையையெல்லாம் பல குறைகளாக எடுத்துச் சொன்னார்கள், நான் அவருக்கு மெத்த பணிவன்போடு சொல்லிக் கொள்வேன், நான் மிக மதிக்கின்ற நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் அவர்கள் சுகாதார அமைச்சராக இருந்த காலத்திலே மருத்துவக் கல்லூரி அட்மிஷன்களிலே பாகுபாடு, ஊழல், இன்ப்ளூயன்ஸ் என்ற குற்றச் சாட்டுகள் ஏராளமாகச் சுமத்தப்பட்டன என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதுபோன்ற குற்றச் சாட்டுகள் பொது மக்களிடத்திலே எழாத வகையிலே, இந்த அரசு அட்மிஷனைச் சீர்படுத்தி, நெறிப்படுத்தி செய்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்த அரசைப் பொறுத்தவரை ஒன்றை நான் என்னுடைய ஆலோசனையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்று மக்களிலே பெரும்பகுதியினருக்கு ஏதாவது ஒரு நோய், ஏதாவது ஒரு நிலையிலே இருந்து வருகிறது. அந்த நோய் ஆபத்தான கட்டத்தை நெருங்கும் போது, அந்த வியாதியின் காரணத்தை அறிந்து உடனடியாக வைத்தியம் பெறாததாலே பல சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதால், ஒரு ஆரம்பக் கட்டமாக, சட்ட மன்ற உறுப்பினர்களை ஆரம்பித்து, அதாவது, அவர்கள் நல்ல நிலையிலே இருக்கிற காலத்திலேயே ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு ஹெல்த் கார்ட், ஒரு அடையாள அட்டை போன்று கொடுத்து, அவர்கள் நல்ல சுகாதாரமான நிலையில் இருக்கும்போது, அவருடைய உடல் கூறுகளைச் சோதித்து, பிளட் குரூப் என்ன ? உடலின் தன்மைகள் என்ன ? ஊட்டச் சத்து என்ன வேண்டுமென்பது போன்றவற்றைக் குறித்துக் கொடுக்கின்ற அடையாள அட்டைகளைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் வகையில், அவர்களை ஆரம்ப கட்டமாக ஆரம்பித்து, கல்லூரி மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் என்று எத்தனை பேருக்கும் கொஞ்சங் கொஞ்சமாக அந்தத் திட்டத்தைப் பரவலாக்கினால் நிச்சயமாக பயனுள்ள திட்டமாக அமைவதோடு, அது காலச் சிறந்த திட்டம், என்று மக்கள் பாராட்டுகின்ற வகையிலே அமை

யும். மேலை நாடுகளிலே குறிப்பாக மக்கள் அதைப் பயன் படுத்தி வருகிறார்கள். மருத்துவ அட்டைக் கொடுக்கின்ற முறை வளர்ந்து விட்ட நாடுகளிலே பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய துணைக் கண்டத்திலே இதர மாநிலங்களிலே இல்லாவிட்டாலும், தமிழகத்திலே இந்த அடையாள மருத்துவ அட்டைக் கொடுக்கின்ற முறையை அன்பு கூர்ந்து அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மிக்கப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[முற் பகல் 10—30]

நகராட்சி மன்றங்களிலேயும், ஊராட்சிகளிலேயும் 1972-லே போடப்பட்ட அதே எண்ணிக்கை அலுவலர்கள்தான் இன்றும், நகராட்சிகளிலேயும், பஞ்சாயத்துக்களிலேயும் உள்ள சுகாதாரப் பிரிவிலே பணிபுரிந்து வருகிறார்கள். எனவே தற்போது வளர்ந்து வருகின்ற மக்கள் தொகைக்கேற்ப அவர்களை அதிகப்படுத்தி நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மாவட்ட மருத்துவ மனைகளில் ஸ்பெசலிஸ்ட் டாக்டர்கள் நியமிக்க வேண்டும். ஆப்தா மாலஜி, இ. என். டி., சர்ஜரி போன்ற அந்தத் துறைகளிலே பயிற்சி பெற்ற மருத்துவ வல்லுநர்களை நியமிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சில அரசு மருத்துவ மனைகளில் நிரந்தரமான டாக்டர்கள் இருப்பதில்லை. என்னுடைய தொகுதியில் இடைக்கோட்டையிலும், ஒட்டன் சத்திரத்திலும் பர்மனன்ட் டாக்டர்கள், நிரந்தரமான மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. பழனியிலே இருந்தும், திண்டுக்கல்லில் இருந்தும் வந்து செல்லுகின்ற நிலை இருக்கிறது. எனவே அங்கே நிரந்தரமாக டாக்டர்களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில்

Christian Fellowship Hospital

என்ற ஒரு தனியார் நிறுவனம் உள்ளது. அதன் பொறுப்பில் 17 ஹெல்த் சென்டர்களை நடத்துகின்ற பொறுப்பை அரசு ஒப்படைத்திருக்கிறது. அதற்காக ஆண்டுக்கு 3 லட்சம் ரூபாய்கள் மானியமாக அளிக்கப்படுகிறது. ஆனால் அந்த நிறுவனத்தில் பல சீர்கேடுகள் நடை பெறுகின்றன என்ற குற்றச் சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் அந்த நிறுவனத்தை இன்ஸ்பெக்ட் செய்யும் பொறுப்பு, பரிசோதனை செய்கின்ற அதிகாரம் முன்பெல்லாம் அந்தப் பகுதியில் உள்ள பிரைமரி ஹெல்த் சென்டர் டாக்டருக்கு இருந்தது. ஆனால் தற்போது அதை எடுத்து டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிசர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது சரியல்ல. அந்த இன்ஸ்பெக்ஷன் பவர் அங்கே உள்ள டாக்டருக்கு இருந்தால்தான் நல்லது. அப்போதுதான் அடிக்கடி அங்கே சென்று சோதனை செய்ய முடியும். எனவே அந்த பவரை அவருக்கே கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் அந்த 17 சென்டர்களையும் அரசு வசம் அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் வசம் ஒப்படைத்து அந்த தனியாரிடம் இருந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.





அதேபோன்று இன்றைக்கு மாவட்ட மருத்துவ மனைகளுக்குச் சென்றால் அங்கே ஏராளமான நெரிசல்கள் இருக்கின்றன. கூட்டம் அதிகமாக வருகின்றனர். அதை டிசென்ட்ரலைஸ் செய்ய வேண்டும். மிகப் பெரிய மருத்துவ மனைகளான கோவை, மதுரை போன்ற மருத்துவ மனைகளை பிரித்து 4, 5 இடங்களில் வைக்க வேண்டும். அப்படி டி-சென்டரலைஸ் செய்து பிரித்து வைத்தால்தான் மக்கள் அதை நல்ல முறையில் பயன்படுத்துகின்ற நிலை இருக்கும். எனவே அவைகளைப் பிரிப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருந்துகள் கட்டுப்பாடு நிர்வாக அலுவலரை அதை அரசின் கீழ் இயங்கும் தனித் துறையாக பிரித்து நியமிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதை நான் பாராட்டுவதோடு, அதன் தலைவராக அந்தத் துறையைச் சேர்ந்தவரையே நியமிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஒரே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் தான் இருக்கிறது. அங்கே இன்னொரு பிரைமரி ஹெல்த் சென்டரை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஒட்டன்சத்திரத்தில் 10 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்று 3— லட்சம் ரூபாயில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அந்த 10 படுக்கைகளை உயர்த்தி 25 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக மாற்றி, வரண்டு கிடக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மருத்துவ மனையை விரைவிலே கட்டித் தர வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கீழ் நிலையிலே உள்ள ஊழியர்களை மாற்றுகின்ற அதிகாரம் மற்றும் அவர்களுக்குப் புரமோஷன் கொடுக்கின்ற அதிகாரமும் தற்போது மேல் மட்டத்தில் இருக்கின்றது. அதை டி-சென்ட்ரலைஸ் செய்து மாவட்ட அளவிலேயே கொண்டு வந்தால் காலதாமதத்தைத் தவிர்த்து ஆக்க பூர்வமான பணிகளிலே

ஈடுபட வாய்ப்பு இருக்கும் என்று கூறி இந்த மானியக் கோரிக்கையில் கோரி இருக்கின்ற தொகையை அரசுக்கு வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்து இதை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் பொதுச் சுகாதாரத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே மக்களுடைய பிறப்பு, இறப்பு பற்றிய சில புள்ளி விவரங்களை இந்த மன்றத்திலே சொல்லுவதற்கு முன் வருகிறேன். 1969ஆம் ஆண்டு பிறப்பு 34·5, இறப்பு 19·1, 1979லே பிறப்பு 28·95, இறப்பு 13·41.

1975-ல் கிராமங்களில் பிறப்பு 32.8, இறப்பு 17·7, 1975-ல் நகரங்களில் பிறப்பு 25·7, இறப்பு 8·6, 1976-ல் கிராமங்களில் பிறப்பு 32·2, இறப்பு 16·9, நகரங்களில் பிறப்பு 27·2, இறப்பு 9·8, 1977-ல் கிராமங்களில் பிறப்பு 31·0, இறப்பு 15·5, நகரங்களில் பிறப்பு 25·6, இறப்பு 9·6 ; 1978-ல் கிராமங்களில் இறப்பு 14·3, பிறப்பு 30·0, நகரங்களில் பிறப்பு 26·3, இறப்பு 9·0 ; 1979-ல் கிராமங்களில் பிறப்பு 28·8, இறப்பு 13·6, நகரங்களில் பிறப்பு 26·2, இறப்பு 8·6 என்கிற அளவில் இருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, கிராமங்களில் இருக்கின்றவர்களின் எண்ணிக்கையில் தான் அதிக அளவிற்கு இறப்பு இருக்கிறது. அங்கேதான் சாதாரண ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமான அளவிற்கு வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களிடையேதான் இந்த இறப்பு அதிகமாக இருக்கிறது என்பதை இந்த மன்றமும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் உணர வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டி, அதைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தம் தமிழகத்தின் மக்கள் தொகையில் 4 கோடியே 80 லட்சம் பேர் கிராம பகுதிகளில் வசிக்கிறார்கள். அதே நேரத்தில் நகர்புறத்தில் வசிக்கிற மக்கள் தொகையைக் கணக்கில் எடுத்தால் 5 கோடி 40 லட்சம், ஆகவே, ஒரு கோடி மக்கள்





கிராமத்தில் அதிகமாக வசிக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட அவல நிலை இருப்பதற்குக் காரணம் என்ன ? இந்திய நாடு சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் கழிந்த பின்பும் மருத்துவ வசதிகள் ஆங்காங்கு அதிகரிக்கப்பட்ட பின்பும், இந்த இறப்பு எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், நாட்டிலே மருந்து இல்லையா, டாக்டர்கள் இல்லையா, டாக்டர்கள் சிகிச்சை அளிக்க மறுக்கிறார்களா, இந்த இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதற்குக் காரணம் என்ன என்பதை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும், அந்த வகையில் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இது குறித்து என்னுடைய கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கையாகவே மக்கள் நோயால் பாதிக்கப்படுவதைவிட, இந்த நாட்டிலே உள்ள சமூக விரோதிகள் தாங்கள் குறுக்கு வழியில் அதிக பணம் ஈட்ட வேண்டும் என்கிற அடிப்படையில் மருந்துகளில் கலப்படம் செய்வதாலும் நோய்கள் அதிகரிக்கின்றன. இப்படிப்பட்ட கலப்படம் நடப்பது அரசுக்கும் தெரியும். ஆனால் அதைத் தடுக்க முடியவில்லை. அதே நேரத்தில் மனிதன் அன்றாடம் சாப்பிடுகின்ற அத்தியாவசியமான உணவுப் பொருள்களில் தேச விரோதிகள், சமூக விரோதிகள், மக்கள் விரோதிகள் கலப்படம் செய்கிறார்கள். அதுவும் சர்க்காருக்குத் தெரியும். அதைத் தடுக்க முடியவில்லை. மக்கள் சாப்பிடும் அரிசியில் கூட இரும்புத்தூளைக் கலந்து விடுகிறார்கள். கல்லைக் கலக்கிறார்கள். அதேபோல் பசு கொடுக்கும் நல்ல பாலில் மனிதன் தன்னுடைய மனசாட்சிக்கு விரோதமாகத் தண்ணீரைக் கலக்கிறான். அதன் மூலமாக நாட்டிலே நோய் பரவுகிறது. எல்லாப் பொருள்களிலும் கலப்படம் நடக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மருந்துகளில் கலப்படம். எந்த நோய் குணமாவதற்காக டாக்டரின் ஆலோசனைப்படி மருந்துகளைச் சாப்பிடுகிறோமோ அந்த மருந்தில் கலப்படம் செய்கிறார்கள். மேலும் தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் பல இடங்களில் இல்லை. தண்ணீர் பாதுகாத்துக் கொடுக்கப்படாத காரணத்தால் ஜனங்கள் மத்தியில் பல்வேறு நோய்கள் வருகின்றன ஆகவே, சர்க்கார் இதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதோடு மட்டுமல்ல, எங்கே பார்த்தாலும், கிராமங்களிலும், நகரங்களிலும் வீதிகளில் கடைகளை வைத்துக் கொண்டு, உணவுப் பண்டங்களை விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். தயாரித்துக் கொண்டு விற்பனை செய்து கொண்டு இருக்கிறார்கள். அதிலே ஏராளமான ஈ மொய்த்துக் கொண்டு இருக்கின்றன. அவற்றின் மூலமும் நோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதனால் தொத்து வியாதிகள் பரவுவதற்கு பலவிதமான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட வரையில் வால்பாறை தொகுதியைப்பற்றி மாண்புமிகு அமைச்ச ரவர்களுக்கு நன்றாகத் தெரியும் என கருதுகிறேன். என்னுடைய தொகுதி கிட்டத்தட்ட 5,000 அடி உயரத்தில் இருக்கிறது. அது ஒரு தீவுபோல் உள்ளது. அங்கே கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் இருக்கிறார்கள்; தொழிலாளர்கள் நிறைந்த பகுதி அது. இருந்தாலும் கூட அங்கே ஒரே ஒரு அரசாங்க மருத்துவமனைதான் இருக்கிறது. அந்த மருத்துவ மனை சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அந்த மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்ற குறை இருந்தது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அங்கே வந்திருந்தபோது அவரை நேரடியாக அழைத்துச் சென்று காட்டிய பிறகு அங்கே ஒரு பெண் டாக்டர் நியமிக்கப்பட்டு, அவர்கள் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லும் போது நான் அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10·40.]

அதே நேரத்தில் பல வசதி குறைவுகள் அங்கே இருக்கின்றன என்பதைச் அவரிடம் சுட்டிக் காட்டினேன்; அவைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சரவர்கள் என்னிடம் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த மருத்துவமனையில் எக்ஸ்ரே வசதி கிடையாது; ஆப்பரேஷன் தியேட்டர் கிடையாது; ஆம் புலன்ஸ் வண்டி கிடையாது. அங்கே அவசர கேஸ் ஏற்பட்டால், அல்லது ஒரு பெண் பிரசவம் செய்ய வேண்டுமென்றால் கிட்டத் தட்ட 64 மைல்களுக்கு அப்பால் இருக்கிற பொள்ளாச்சிக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. இந்த கஷ்டங்களை உணர்ந்து, என்னிடம் அமைச்சர் வாக்குறுதி கொடுத்தவாறு, அந்த மருத்துவ மனையில் உடனடியாக எக்ஸ்ரே வசதி, ஆப்பரேஷன் தியேட்டர் ஆம்புலன்ஸ் வண்டி வசதி மற்றுள்ள வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இங்கே இன்னொரு மருத்துவமனையில் நீண்டகாலமாக ஒரே ஒரு டாக்டர்தான் இருக்கிறார், எந்த விதமான வசதியும் கிடையாது, நல்ல மருந்து கிடையாது. அது மட்டுமல்ல. சோதையாறு அணைப் பகுதியில் ஆயிரக் கணக்கான மக்கள் வசிக்கிறார்கள். அங்கே ஒரு மருத்துவமனை இருக்கிறது. ஒரு டாக்டர் மட்டும் இருக்கிறார். வேறு வசதிகள் ஒன்றும் கிடையாது. நல்ல மருந்து இல்லை. அதே மாதிரி வேட்டைக் காரன்புதூரில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அங்கே கிட்டத் தட்ட 30,000 பேர் வசிக்கிறார்கள். அங்கே ஒரு பெண் டாக்டர் மட்டும் இருக்கிறார். அந்த ஆஸ்பத்திரியில் நடக்கிற கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. சமூக விரோதிகள், சாராயம் குடிப்பவர்கள்





நன்றாகக் குடித்து விட்டு அங்கே இருக்கிற படுக்கையில் வந்து படுத்துக் கொள்கிறார்கள். இது பெரிய அநியாயம், அக்கிரமம், கொடுமை. நான் அந்த மருத்துவமனைக்கு சென்றிருந்தபோது அந்த பெண் டாக்டர் என்னிடம் இதுபற்றி முறையிட்டார். இதற்கு என்ன காரணம் என்றால் அங்கே 'வாச்மேன்' கிடையாது. பியூன் கிடையாது, நர்ஸ் கிடையாது, காம்பவுண்ட் சுவர் கிடையாது. நல்ல மருந்தும் கிடையாது, லைட் வசதியும் கிடையாது. ஒரே ஒரு பெண் டாக்டர் மட்டும் இருக்கிறார். அதுவும் 'குறுகிய கண்மாயில் கொக்கு இருப்பதுபோல' இருக்கிறார். அதனால் சாராயம் குடிப்பவர்கள் போலீசுக்குப் பயந்து கொண்டு அங்கே வநது படுத்துக் கொள்கிறார்கள்' ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இப்படிப்பட்ட அநியாயத்தை ஒழித்து, அந்த மருத்துவமனைக்கு நல்ல எக்ஸ்ரே, ஆப்பரேஷன் தியேட்டர், ஆம்புலன்ஸ் வண்டி போன்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பட்ஜெட் உரையிலே எடுத்துக் காட்டிய வண்ணம் கிராமப் பகுதிகளிலே சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்ப தற்காக மேலும் 20 தொடக்க சுகாதார நிலையங்களைக் கட்டு வதற்கு அரசு அறிவித்திருக்கிறது. அதே நேரத்தில் 6 முதல் 11 வயதுவரையில் உள்ள பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யும் திட்டத்தை 50 தொடக்க சுகாதார நிலையங்களிலும், 25 நகராட்சிகளிலும் செய்து கொடுக்க அரசு முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

ஆக அந்த அடிப்படையில் 20 என்ற என்று இருப்பதை அதிகப்படுத்த வேண்டும். என்னுடைய தொகுதியில் ஜனத் தொகை மிகவும் அதிகமாக இருப்பதால் போக்குவரத்து வசதி பற்று கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் தூரம்வரை வந்துதான் தலைமை மருத்துவமனைக்கு வரக்கூடிய நிலைமை இருக்கின்றது. மருதகுளம் என்ற பெரிய கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் எனக்கு முன்னாலே பேசிய மாற்றுக் கட்சியின் உறுப்பினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஊழல் என்றும் ஏதோ பல குறைபாடுகளைக் கண்டு பிடித்தது போலவும் பேசினார்கள். ஆனால் 1977க்குப் பின்னால் இன்று நடைபெறுகின்ற

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1981 ஏப்ரல் 8

மருத்துவக் கல்லூரியின் தேர்வினைப் பார்த்தால் மாண்புமிகு மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் மருத்துவக் கல்லூரிக்கான அட்மிஷன் நியாயமான முறையிலும் நேர்மையான முறையிலும் லஞ்ச லாவண்யங்கள் அற்ற முறையிலும் நடந்து வருகின்றன என்பதை பொது மக்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட முறைகள் நடக்கின்ற இந்த நிலைமையினை வளர்க்க அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமேயொழிய நடக்காத குறைபாடுகளை நடந்ததாகக் கூறிக் கொண்டிருப்பது மக்கள் அவர்களை வெறுக்கக் கூடிய ஒரு சூழ்நிலையைத்தான் ஏற்படுத்தும்

அடுத்து இங்கே இருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவிலே சுற்றுப் பயணம் வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு தொகுதியின் அடிப்படையிலே ஒவ்வொரு கிராமப்புறத்தின் அடிப்படையிலேயும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் நேரில் சென்றிருந்தார்கள். அப்படி அடிக்கடி சுற்றுப் பயணம் மேற்கொண்டு மருத்துவமனைகளுக்குச் செல்கின்றபோது அங்குள்ள குறைபாடுகளை எல்லாம் மக்கள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருப்பதால் கிராமங்கள் எல்லாம் இன்றைக்கு புனிதமானதாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன.

எங்களுடைய நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கின்ற ஒரே பெரிய மருத்துவமனை மருத்துவக் கல்லூரி சேர்ந்த பாளையங்கோட்டை மருத்துவமனை. அந்த மருத்துவமனையிலே மருந்துகள் இல்லை என்ற ஒரு புகார் வந்தது. மாண்புமிகு மரியாதைக்குரிய அமைச்சரவர்கள் அதுபற்றிய பதிலினைத் தருகின்றபோது மருந்து தட்டுப்பாடு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அங்கே நான் சென்று பார்க்கின்றபோது பொதுமக்கள் மத்தியில் நிலவிய கருத்தினைச் சொல்கிறேன். அங்கு பணிபுரிகின்ற மருத்துவர்கள் தனியாக டிஸ்-பென்சரிகள் வைத்திருக்கின்றனர். அந்த தனி டிஸ்பென்சரிகளுக்குச் சென்றால் நல்ல முறையில் மருந்துகொடுக்கிறார்கள். நல்ல முறையில் கவனிப்பதாக மக்களும் சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அதே டாக்டர்கள் அரசு பொது மருத்துவமனையிலே பணியாற்றுகிறபோது அவர்களுடைய பராமரிப்பு நல்லமுறையில் இல்லை என்று பொதுமக்கள் சொல்கிறார்கள். ஆகவே இதற்கென்று தனியாக ஒரு குழு அமைத்து டிஸ்பென்சரி வைத்திருக்கின்ற, மருத்துவமனைகளில் பணிபுரிகின்ற டாக்டர்கள் ஏன் சரியாக பணிபுரியவில்லை என்பதைக் கண்காணிக்கவேண்டும். அவர்கள் மருந்து கொடுப்பதை நேரடியாக ஒரு குழு கண்காணிக்கவேண்டும். ஆகவே அந்த வகையிலே அதற்கென்று ஒரு குழுவையே



1981 ஏப்ரல் 8] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 40 கிலோ மீட்டர் தூரத்தில் சுற்றியுள்ள மக்கள் எல்லாம் இந்த பாளையங்கோட்டை மருத்துவமனையைத் தான் நம்பி இருக்கின்றார்கள். அதே மருத்துவமனையில் 1977-க்கு முன்னாலே பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சிலைன் ஊசி மருந்தைப் பொறுத்தவரையில் பெருத்த ஊழல் ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து அரசு உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் நாங்குநேரி டவுன் பஞ்சாயத்திலே ஒரு மருத்துவமனை இருக்கின்றது. ஆனால் அங்கே 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். அங்கே போஸ்ட்மார்ட்டம் செய்கின்ற ஒரு ரூம் இருக்கின்றது. அதற்குப் பக்கத்திலே வானமாமலை ஸ்வாமி கோவிலும் இருக்கின்றது. அங்கே போஸ்ட் மார்ட்டம் நடத்தப்படுவதால் அங்குள்ள சுகாதாரம் கேடு அடைகின்றது என்று ஊர் மக்கள் மத்தியிலே கருத்து நிலவுகின்றது. ஆகவே பல ஆண்டுகாலமாகவே அந்த போஸ்ட் மார்ட்டம் அறையினை ஊருக்கு வெளியே கட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலேயாவது போஸ்ட் மார்ட்டம் அறையினை ஊருக்கு வெளியே கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தற்போது இருக்கின்ற போஸ்ட் மார்ட்டம் அறை பக்கத்திலேயே வானமாமலை ஸ்வாமி கோயில் இருப்பதன் காரணத்தால் அங்கே வருகின்ற பக்தர்களின் மனம் புண்படுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அதை ஊருக்கு வெளியே கட்டவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடமும் நேரடியாகச் சொல்லி இருக்கிறேன். அவர்கள் அதைப் பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே அதை ஊருக்கு வெளியே கட்ட ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏர்வாடிப் பகுதியிலே கிட்டதட்ட 80 சதவீதம் முஸ்லீம் மக்கள் வாழ்கின்றார்கள். அந்தப் பகுதி கிட்டதட்ட 15 ஆயிரம் ஜனத் தொகை கொண்ட பகுதியாகும். அங்கு கோஷா போட்ட முஸ்லீம் பெண்கள் ஆண் மருத்துவரிடம் தனது வியாதியைச் சொல்ல அச்சப்படுகிறார்கள். ஆனால் அங்கே உள்ள மருத்துவமனையில் ஆண் டாக்டர்தான் பணிபுரிந்து வருகிறார். அவருக்கு கூடுதலான வேலைப்பளு வேறு இருக்கின்றது. ஏராளமான வியாதியஸ்தர்கள் அங்கே வருகிறார்கள் சிகிச்சைக்காக. ஆகவே அப்படிப்பட்ட நிலையில் அந்த முஸ்லிம் குலப்பெண்களுக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் ஏர்வாடியில் ஒரு பெண் மருத்துவரை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1981 ஏப்ரல் 8

[முற்பகல் 10—50].

அடுத்து இந்திய மருத்துவமுறையைப் பற்றி இங்கே கூறப்பட்டிருக்கிறது, பூனாவிலும், பாளையங்கோட்டையிலும் ஆக இரண்டு இந்திய மருத்துவ மனைகள், இந்தத் துறைக்கு இருக்கின்றன. பாளையங்கோட்டை மருத்துவ மனை மிக சிறப்பாக செயல்படுகிறது. அங்கே சிறந்த மருந்துகள் இருக்கின்றன. சிறப்பான மருத்துவர்கள் இருக்கிறார்கள். அங்கே வருகின்ற நோயாளிகள் உடனடியாக குணம் அடைகிறார்கள். ஆனால் மாவட்ட அளவிலே கூட அதைப்பற்றி சரியாக விளம்பரம் செய்யப்படவில்லை. சென்றால் பூரண குணம் அடையும் என்பது சென்றவர்களுக்குத்தான் தெரிகிறது. ஆனால் ஏராளமான வெளியிலுள்ள மக்களுக்கு தெரிய வாய்ப்பு இல்லை. எனவே மொபைல் வேன் என்று சொல்லக் கூடிய ஒரு வேனை அவர்களுக்கு அளித்து, சிறந்த மருத்துவர்களை அதில் அனுப்பி அந்தப் பகுதிகளில் இருக்கக் கூடிய மக்களுக்கு, இந்த சிறந்த இந்திய மருத்துவம் கிடைக்க வழி செய்ய வேண்டும். இதனால் அந்தப் பகுதி கிராம மக்கள் பயன் அடைவார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்பு வசதி கிடைக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

நாங்குனேரி தாலூக்காவை எடுத்துக் கொண்டால் ஒரே ஒரு தொழு நோய் மருத்துவ மனைதான் இருக்கிறது. ஆனால் அந்த மருத்துவ மனைக்கு போதுமான அளவு கட்டிட வசதிகள் இல்லை. பாழடைந்து இடிந்து, இருளடைந்த இடத்தில்தான் அந்த மருத்துவ மனை இருக்கிறது. குடி நீர் வசதி இல்லை. கழிப்பிடங்கள் வசதியும் இல்லை. இதனால் டாக்டர்கள் அங்கே வந்து பணிபுரிய மறுக்கிறார்கள். உள்நோயாளிகளை அட்மிட் செய்ய படுக்கை வசதியும் இல்லை. அதனால் அங்குள்ள டாக்டர்களுக்கு ஒரு ஜீப் கொடுக்கப்படுமேயானால் அவர்கள் கிராமங்கள் தோறும் சென்று கிட்டதட்ட நாங்குனேரி பகுதி முழுமைக்கும் மருத்துவம் பார்க்க முடியும். அதை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்பதோடு அந்தக் கட்டிடத்தை பழுது பார்த்து செம்மை படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மருத்துவப் பயிற்சி பெற்றவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணிபுரிய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருப்பதாக தெரிகிறது. அது வரவேற்கக் கூடிய ஒன்றுதான் என்றாலும்; அவ்வாறு கிராமங்களுக்கு பணி புரியச் செல்கிற டாக்டர்களுக்கு அங்கே வாடகைக்கு கூட வீடுகள் கிடைப்பதில்லை. ஆகையினால் அப்படி கிராமப்புறங்களுக்கு விரும்பிச் செல்கிற மருத்துவர்களுக்கு வீட்டு வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முன் வரவேண்டும். கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் பயன் அடைய வேண்டுமென்றால், அவர்களுக்கு டாக்டர்கள்



1981 ஏப்ரல் 8] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

மனப்பூர்வமாக மகிழ்ச்சியோடு பணிபுரிய வேண்டும் என்றால் அவர்களுக்கு வீட்டு வசதிகளை கிராமப் பகுதிகளிலே செய்து கொடுக்க வேண்டும்.

அதேபோல களக்காடு பகுதியைப் எடுத்துக் கொண்டால், அங்கே பிரசித்தி பெற்ற மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. சிறப்பான கட்டிடங்கள், குடிநீர் வசதி எல்லாம் இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு டாக்டர் தான் அங்கே பணிபுரிந்து வருகிறார். கூடுதலாக ஒரு டாக்டரை அங்கே போடவேண்டும் என்று என் தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நாங்குனேரி பகுதியில், ஆழ்வானேரியில் ஜோதி என்ற பெயரால் போலி மருந்து தயாரிக்கப்படுகிறது என்கிற ஒரு புகாரை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஜோதி தைலம், ஜோதி களிம்பு மருந்து என்ற போலி மருந்துகள் அங்கே தயாரிக்கப்படுகின்றன. இதுபற்றி முன்பே புகார் கொடுத்து, அந்த இடத்தில் அதிகாரிகள் வந்து பார்க்கும் போது, ஒன்றும் கிடைக்கவில்லையென்று திரும்பி வந்துவிட்டார், ஆனால் இப்போது சென்றாலும் கூட அந்த தைலமும் களிம்பு மருந்தும் போலி மருந்துகளாக அங்கே தயாரிக்கப்படுவதை பார்க்க முடியும். இப்படிப்பட்ட போலி மருந்துகளால் பொதுமக்களின் பாதுகாப்பு கெடுகிறது என்ற வகையில் அப்படி தயாரிப்பவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பாவோடும் சாவோடும் போராடும் நெசவாளி என்று சொல்வார்கள். நெசவாளர்களுக்கு அதிகமாக வரும் நோய் காசநோய். இந்தத் தொகுதியில் நெசவாளிகள் அதிகம் உள்ள இடம் வள்ளியம்மாள்புரம், மடப்புரம் மற்றும் வள்ளியூர் போன்ற சுற்றுப் பகுதிகளில் நெசவாளர்கள் அதிக அளவில் இருக்கிறார்கள். ஆகவே இந்த காசநோய் மருத்துவ மனை ஒன்று கள்ளிடக் குறிச்சி பகுதியிலே வள்ளியூரிலே ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதன்மூலம் அந்த நெசவாளர்மக்களை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையிலே இப்படி சுகாதார நலன்களை பாதுகாக்கும் அளவிற்கு பல பணிகளை புரிந்துள்ள நம்முடைய மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களையும், அந்தத் துறையில் ஊழல்களை களைந்த நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டி, நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 18, 19, மருத்துவம், சுகாதாரம் போன்ற மானியக் கோரிக்கைகளை, மாண்புமிகு

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த விவாதத்தில் தொடர்ந்து பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு, முதலிலே நன்றி கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

கி.பி. 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்திலே உள்ள அனைத்து கிராமங்களுக்கும் நல்ல சுகாதாரத்தை கொடுக்க வேண்டும். " Health for all by 2,000 A.D: " என்ற கோஷத்தை அடிப்படையாக வைத்து இந்த அரசு செயல் பட்டுக்கொண்டு வருகிறது என்பதை அறிக்கையிலே சொல்லி யிருக்கிறார்கள். சுதந்தரமடைந்து கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் காலத்திற்குப் பிறகு, நாம் எந்த அளவிலே செயலாற்றி யிருக்கிறோம் என்பதை நாம் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில், மிகத் திறமையான டாக்டர்கள் உள்ள இடம் சென்னை: நிபுணர்கள் உள்ள பொது மருத்துவ மனை என்ற பெயர், இன்றைக்கு ஓரளவுக்கு மறைந்து விட்டது என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வைஸ்ராய் வேவல் முதல், கடைசியாக ஒரிஸ்ஸா மாநிலத்து முதலமைச்சர் பிஜு பட்நாயக் வரை நமது கவர்ன்மென்ட் ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஓடோடி வந்து, சிகிச்சை பெற்றார்கள். அந்தக் காலம் போய், இன்று இந்த மாநிலத்திலே கூட டெல்லிக்கும், வேலூருக்கும், மற்றும் பம்பாய்க்கும் சென்று சிகிச்சை பெற முடியுமா' நம்மைக் காப்பாற்றிக் கொள்ளமுடியுமா என்று நமது தமிழ் மாநிலம் ஓரளவுக்கு குறைந்துவிட்டது. நாம் அதற்காக வருத்தப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய வருமானத்தில், ரெவின்யூவில் கிட்டத்தட்ட 10 சதவிகிதம் அதாவது 11 சதவீதத்தில் வாட்டர், டிரெயினேஜைக் கழித்து விட்டால் , 10 சதவிகிதத்தை நாம் சுகாதாரத்திற்கும், மருத்துவத்திற்கும் செலவழிக்கிறோம் என்பதற்கு நாம் பெருமைப்படுகிறோம். அதே நேரத்திலே நாம், சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் செலவழிக்கின்ற பணம் நல்ல முறையிலே, ஆங்காங்கே கசிந்து போகாமல் உள்ளபடியே செலவழிக்கப்பட்டு, நமக்கு பலன் கிட்டுகிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி செயலாற்றினால், நாம் நினைக்கின்ற இலக்கை அடைய முடியு என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்தில் 62 சதவீதம் பேர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள். தமிழகத்தில் டாக்டர்களுக்கு பஞ்சமில்லை. உலகத்தில் எந்த அளவுக்குச் சொல்லப்படுகிறதோ, அந்த அளவுக்கு இங்கே டாக்டர்கள் இருக்கிறார்கள். 62 சதவிகிதம் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு அரசாங்கம் தான் மருத்துவ உதவி அளிக்கவேண்டும். தமிழகத்திலுள்ள இந்த 62 சதவிகிதம் நோயாளிகள் நம்முடைய பொது





மருத்துவ மனைக்கு வருகிறார்களா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிச்சயமாக 30 சதவிகிதம் கூட வருவதில்லை. பாக்கியிருக்கிற 70 சதவிகித நோயாளிகள் எல்லாம் தனிப்பட்ட மருத்துவமனைகளைத் தான் நாடிச் செல்கிறார்களே தவிர, வேறு வழி யில்லை, சாகத்தான் போகிறோம் என்று நிச்சயமாக தெரிந்துபோனபின், அவர்களைத் தான் அரசு மருத்துவ மனைக்குத் தள்ளிவிடுகிறார்கள். எனவே, அரசு மருத்துவமனைக்கு இந்த 62 சதவிகித அல்லது 80 சதவிகித நோயாளிகள் வருவதில்லை என்பதை நாம் உணரவேண்டும். அதன் காரணம் என்ன ? யோசித்துப் பார்த்தால், அரசு மருத்துவ மனைகளில் தரும் மருத்துவ வசதி, தனியார் கொடுக்கின்ற அளவிற்கு இல்லை. இது குறைவுதான் என்பதை அரசாங்கம் ஒத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் என்ன? தனியார் மருத்துவமனைக்கு அதிகமான அளவிற்குப் போகிறார்கள், அரசு மருத்துவ மனைக்கு செல்வதில்லை என்று சொன்னால், அந்த நிலைமையை உருவாக்குகின்றவர்கள், இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்கள்தான். There must be absolute dedication. நாம் செய்கிற பணி, தலையாய பணி, சமுதாயப்பணி என்பதை அவர்கள் உணரவேண்டும். அப்படிக் கருதினால் ஒழிய, நிச்சயமாக நாம் அதை அடைய முடியாது என்பதை நாம் உணர வேண்டும்.

அதேபோல், பல துறைகளிலே முறைகேடுகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவைகளை யெல்லாம் நம்மால் முடிந்த அளவு தவிர்க்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக, மருத்துவ கல்லூரிகளிலே நண்பர் தோழர் சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். நல்ல மார்க்கு வாங்கியுள்ளவர்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று, நான் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன். சேவை மனப்பான்மை உள்ளவர்களுக்கு நாம் முதலிடம் தர வேண்டும். மக்களுக்கு நாம் சேவை செய்யவேண்டுமென்று மனப்பான்மை அவர்களுக்கு இருக்கவேண்டும். whoever is mentally and psychologically dedicated to do service to the people அவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு முதலிடம் கொடுத்தால், அவர்களால் சிறப்பாக சேவை செய்ய முடியும்.

அடுத்தபடியாக டாக்டர்களை நாம் அரசாங்கப் பணிக்கு எடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் தனியாக பணி புரிகின்றார்கள் என்றும் சொன்னார்கள்.

[முற்பகல் 11-00]

டாக்டர்களை அரசாங்கத்திற்கு ரெக்ரூட் செய்கிற காலத்திலே, தனிப்பட்ட மருத்துவம் செய்வதற்கு தயாராக இல்லை; எனக்கு இந்த அளவிற்கு ஊதியம் கிடைத்தால் போதும், அதை

வைத்துக்கொண்டு பணி செய்து மக்களுக்காக, உழைப்பேன் என்று சொல்லக்கூடியவர்களைத் தான் எடுக்க வேண்டுமே தவிர அரசாங்க சம்பளம் வாங்கிக் கொள்ளலாம்; தனியாகவும் பணம் சம்பாதிக்கலாம் என்று அந்த அளவிற்குள்ள இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளவர்கள் தான் அதிகமாக இந்த அரசு உத்தியோகத்திற்கு எடுக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகின்றன. படித்து பட்டம் பெற்ற உடனே அவன் முன்னால் உள்ள கேள்வி இரண்டு தான். ஒன்று தனியாக மருத்துவமனை நடத்தி, மக்களிடத்திலே சென்று சேவை செய்து சம்பாதிக்கப் போகிறேனா, அல்லது அரசாங்கத்தை நம்பித்தான் சம்பாதிக்க வேண்டுமா என்ற கேள்வி தான் வரும். This breaching of, he must be deciding himself on the spot படித்த உடனே அந்த அளவிற்கு யாரும் வருவதில்லை. அரசாங்க உத்தியோகத்திற்கு கொஞ்ச நாள் போவோம்; தனியாக பிராக்டிஸ் கிடைத்து விட்டால் அரசாங்க உத்தியோகத்தை விட்டுவிட்டு தனியாக போய்விடலாம் என்ற இந்த அடிப்படையில்தான் ஒவ்வொருத்தரும் இந்த அரசாங்க உத்தியோகத்தை அணுகுகிறார்களே தவிர, வாழ்க்கை எப்படி அமையப் போகிறது என்பதை எந்த மருத்துவம் படித்த டாக்டரும் முடிவு செய்வதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த படியாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் ஒதுக்கப்படும் பணம் எந்தெந்த விதத்தில் செலவு செய்யப்படுகிறது என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். கல்லூரிகளிலே நல்ல முறையிலே படிக்க வேண்டும் என்று சொன்னால் உலகத்திலே மற்ற நாடுகளில் உள்ள முன்னேற்றங்களை விஞ்ஞான வளர்ச்சியை விறிந்து கொள்ள ஏராளமான கருவிகளை தருவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த கருவிகளை எப்படி பயன்படுத்துவது என்று கூட தெரியாத அளவிற்கு பல கருவிகள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல அயல்நாடுகளில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றங்களை தெரிந்துகொள்ள 'பாரின் ஜர்னல்ஸ்' சஞ்சிகைகள் இங்கே வருகின்றன. ஆனால் சரியாக தருவித்து இங்கேயுள்ள டாக்டர்கள் படிப்பதற்குவசதியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவக் கல்லூரியில் உள்ள நூலகத்தில் அமெரிக்கா, இலண்டன் போன்ற நாடுகளிலிருந்து சஞ்சிகைகள் வருவிப்பதாக கணக்குஎழுதப்படுகிறதே தவிர புத்தகங்கள் வருவதில்லை என்று புகார்கள் என்னிடத்திலே சொல்லப்பட்டது.

அடுத்து நோயாளிகளுக்கு சாப்பாடு வழங்குவதில் எந்த அளவு சரியான முறையில் முறைகேடுகள் தவிர்க்கப்படுகின்றனவா என்றால், இல்லை, அதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக சொல்கிறேன், ரொட்டி வழங்குகிறோம். ரொட்டியிலே கூட தனியாக தனிப்பட்ட நிறுவனத்திலே



வாங்கினால் 1,75 ரூபாய்க்கு கிடைக்கும். கூட்டுறவு நிறுவனங்களில் கொடுக்கவேண்டுமென்று சட்டத்தை போட்டு, மெண்டல் ஆஸ்பத்திரியிலிருந்து தயார் செய்யப்படுகிற ரொட்டியை கொடுக்கிறார்கள். மெண்டல் ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள் 'ஆன்டி கேப்ட் பிப்பிள்' ரொட்டி தயாரிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் யாரோ வெளியிலிருந்து வந்தவர்கள் ரொட்டியை தயார் செய்து கொடுத்து, ஆஸ்பத்திரியில் சப்ளை செய்கிறார்கள். காதி கிராப்ட்டில் ரூபாய் 2·50-க்கு ரொட்டி வாங்குகிறார்கள் வெளியிலே ரூபாய் 1·75-க்கு கிடைக்கும். காதி கிராப்ட்டில் என்ன செய்கிறார்கள் என்றால் தனிப்பட்ட நிறுவனத்திலே வாங்கி வந்து, அதன்மேல் இலாபத்தை வைத்து அரசாங்கத்தின் தலையிலே கட்டுகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களேயானால் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை இதில் சேமிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் மருந்துகள் தயார் செய்வதில் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறோம். தாதா ட்ரக் அண்ட் பார்மசிட்டிக்கல் கம்பெனியைத் தவிர வேறு மருந்து தயாரிக்கும் கம்பெனியே இங்கு இல்லை. வட மாநிலங்களிலிருந்து, குறிப்பாக குஜராத், வங்காளம் போன்ற மாநிலங்களிலிருந்து பல மருந்து கம்பெனிகள் திடீர், திடீர் என்று தோன்றி, லேபிளை ஒட்டி, உண்மையான மருந்தா, கலப்படமா என்பதை தெரிந்து கொள்ள முடியாமல் நம்முடைய அரசாங்கத்தின் தலையிலேகட்டி ஏராளமான நோயாளிகளுக்கு மருந்து கிடைக்காமல், நடுவிலே உள்ளவர்கள் கொள்ளை இலாபம் அடைகிறார்கள். அரசுக்கு தேவையான மருந்துகளை அரசாங்கமே தயாரிக்க வேண்டும். தமிழகத்தில் இருப்பவர்களுடைய மூலதனத்தில் இங்கே மருந்துகள் தயார் செய்கிற தொழிற்சாலைகளை நாம் ஆரம்பிக்க வேண்டும். கொடுக்கப்படுகிற மருந்துகள் தமிழ் நாட்டிலே தயாரிக்கப்பட்டவை என்று சொல்ல வேண்டும். தமிழகத்திற்கு அது போன்ற தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். பப்ளிக் செக்டர் அண்டர்டேக்கிங்ஸ் மூலம் சாதாரண மருந்துகளை கூட இப்போது நாம் தயாரிக்காமல் இருக்கிறோம். நம்முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கிங் இன்ஸ்ட்டியூட் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே 100 குதிரைகளை வைத்துக்கொண்டு சாப்பாடு போட்டு கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நாம் அதன் மூலம் எவ்வளவு ஏ.டி.எஸ். தயார் செய்து விற்பனை செய்திருக்கிறோம். கல்கத்தாவிலிருந்து வரவழைத்து—இங்கே குதிரைகளை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம்—ஏ.டி. எஸ். ஐ. அங்கிருந்து வரவழைத்து, அதன் மேல் லேபிளை ஒட்டி 10 சத

விகிதம் இலாபம் வைத்து விற்றுக் கொண்டிருக்கிறோம், என்று சொன்னால் உள்ளபடியே வருத்தப்பட வேண்டிய விஷயம். இப்போதுதான் சொன்னார்கள் சமீபத்திலே போலியோ வியாதிக்காக இன்ஸ்டிட்யூட் ஆப் வைராலஜி ஒன்றை இங்கே நாம் வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படியானால அந்த வைரஸ் டெஸ்ட்டை, வைரஸ் இருக்கிறதா இல்லையா என்ற டெஸ்ட்டை இங்கே செய்ய முடியுமா என்று கேட்டேன். அப்போது அமைச்சர் அவர்கள் வேலூருக்கு அனுப்பவேண்டும் என்று சொன்னார்கள். கிங் இன்ஸ்டிட்யூட் ஒரு தரமான இன்ஸ்டிட்யூட்; தமிழகத்திலே உள்ள மிக முக்கியமான நிறுவனம், ஆகவே, அதை நல்லமுறையிலே கவனிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். அன்குவாலிபைட்பீப்பிள், பட்டம்பெறாதவர்கள் மயக்க மருந்தைக் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. மயக்க மருந்து கொடுப்பதிலே பயிற்சி பெற்றவர்கள், அல்லது டிப்ளமோ இன் அனஸ்திசியா படித்தவர்கள்தான் மயக்க மருந்தைக் கொடுக்க வேண்டும். ஆனால் அதிலே பயிற்சி பெறாதவர்கள் எல்லாம் அந்த மயக்க மருந்தைக் கொடுக்கிறார்கள். ஆப்பரேஷன் டேபிளிலேயே பல பேஷன்ட்கள் செத்துவிட்டார்கள். காரணம் அனஸ்திசியாவில் பயிற்சி பெறாதவர்கள் எல்லாம் அனஸ்தடிக்ஸ் ஆக நியமிக்கப்பட்டு அவர்கள் அந்த மருந்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். அனஸ்திசியா பயிற்சி பெறாதவர்கள் எல்லாம் சென்னை நகரிலேயே இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக அனஸ்தடிஸ்ட்ஸ் என்ற போர்வையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரியிலே, எக்மோர் மகப்பேறு மருத்துவ மனையிலே, கோஷா ஆஸ்பத்திரியிலே, ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்கள். அப்படி பயிற்சி பெறாதவர்கள் பட்டம் பெறாதவர்கள் எல்லாம் மயக்க மருந்தைக் கொடுத்ததால் பேஷன்ட்கள் இறந்திருக்கிறார்கள். கேட்டால் சார்டியாக் அரஸ்ட் என்று சொல்கிறார்கள். அவர்கள் அனஸ்திசியாவிலே பட்டம் பெறவில்லை சாதாரண எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அனஸ்தடிஸ்ட்ஸ் ஆக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை விசாரித்து மயக்கம் கொடுப்பதற்கு பயிற்சி பெற்றவர்களையே பயன்படுத்துகின்ற அவர்களையே நியமிக்கின்ற உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய தொகுதியிலே உள்ள குறைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். சாத்தான்குளம் மிகப் பெரிய நகரம், அங்கே பெரிய ஆஸ்பத்திரி





இல்லை, அங்கே அரசாங்கம் ஒரு ஆஸ்பத்திரியை உருவாக்கி பெட்களைப் போட்டுத்தர வேண்டும்மென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஆழவார்திருநகரி ஆஸ்பத்திரியில் பெண் டாக்டர் ஒரு வருஷமாக லீவ் போட்டு விட்டதால் அங்கே டாக்டரே இல்லாத நிலைமை இருக்கிறது, அங்கே உடனடியாக ஒரு டாக்டரை போட வேண்டும். அநேக பஞ்சாயத்து யூனியன்களிலே மருந்துகள் இல்லை, டாக்டர்கள் இல்லை என்ற நிலைமைகள் இருக்கின்றன, அதைப் போக்கி டாக்டர்களை நியமிக்க வேண்டும்,

சென்னையிலே பல கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன். அங்கே மருந்துகள் கிடைப்பதில்லை. எதற்காக

Why should two parallel hospitals be run?

என்று தெரியவில்லை, கார்ப்பரேஷன் மருத்துவ மனைகள் என்றும் அரசாங்க மருத்துவ மனைகள் என்றும் வேறு வேறாக இருக்கின்றன. கார்ப்பரேஷன் மருத்துவ மனைகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டால் ஜெனரல் ஆஸ்பத்திரியிலே உள்ள நிபுணர்கள், மருத்துவர்கள் வாந்திக்கும் பேதிக்கும் காய்ச்சலும் புளுவுக்கும் மருந்து கொடுத்து தங்களுடைய நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை, அவர்களுடைய நேரத்தை சென்னையிலே ஒரு போஸ்ட் கிராஜுவேட் எஜுகேஷன் நிலையத்தை உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். கவைக்கு உதவாத ஆஸ்பத்திரி, கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரி எதற்காக இருக்க வேண்டும் என்று தெரியவில்லை, ஆகவே எல்லாவற்றையும் அரசாங்கமே நேரடிப் பொறுப்பிலே எடுத்துக் கொண்டு அவைகளை ஒருங்கிணைத்து செயல்பட்டால் மக்கள் போதுமான மருத்துவ வசதிகளை சரியாகப் பெறமுடியும். அரசாங்கம் எடுக்கிற எந்த விதமான நல்ல முடிவுகளுக்கும் காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம், பொதுச் சுகாதாரம் மானியங்களின் மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பை அளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் இந்தத் துறையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக பல திட்டங்களைத் தீட்டி நகரத்திலே மட்டுமல்லாமல் கிராமங்களிலேயும் அவைகள் மருத்துவ சுகாதார வசதிகள் பெறவேண்டுமென்ற முறையிலே அடிப்படையிலே பல் வேறு நல்ல திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். அதன் அடிப்படையிலே குறிப்பாக திண்டுக்கல் மாவட்ட மருத்துவ மனையிலே 33 படுக்கைகள் போட்டு தந்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போன்றே திண்டுக்

கல் மாவட்ட மருத்துவ மனையிலே 1·9 லட்சம் செலவில் செவிலியர் விடுதி கட்டுவதற்காகவும், மேலும் மாற்று மின்சார உற்பத்திக் கருவிகள் வாங்குவதற்காகவும் ஏற்பாடு செய்து தந்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே ஒன்றிரண்டு கருத்துக்களையும் எடுத்துவைக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியாகிய ஆத்தூர் தொகுதியிலே சித்தையன்கோட்டையிலே ஒரு மருத்துவ மனை வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்துவருகிறது. நேற்றைய தினம் ஒரு வினாவை இங்கே எழுப்பியபோது அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் செல்கிற நேரத்திலே 30—9—1980ல் தனியார் ஒருவர் அதற்காக 5 ஏக்கர் நிலமும் 13 ஆயிரம் ரூபாயும் கொடுத்திருக்கிறார் என்றும் விரைவாக துவங்கப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் இன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே அதுகுறித்து எந்த விவரமும் இல்லை. சித்தையன் கோட்டையிலே அரசு மருத்துவ மனையை அமைப்பதற்கான சிரிய திட்டத்தை அரசு மேற் கொண்டு அதை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற் பகல் 11–10]

அய்யம்பாளையத்தில் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை இருக்கிறது. அந்த மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக ஆக்க வேண்டுமென்று அங்கே உள்ள பொது மக்கள் பத்தாயிரம் ரூபாய் பணம் கட்டி ஓராண்டுக்கு மேலாகிறது. ஊராட்சி ஒன்றியத்திலேயும் தீர்மானம் போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே வேறு நோக்கத்திற்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் காலி செய்யப்பட்டு அந்த இடங்கள் தற்பொழுது காலியாக இருக்கிறது. அதை மருத்துவ மனையாகப் பயன்படுத்திக் கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னிவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டிட வசதி குறைவாக இருக்கிறது. அங்கே மகப்பேறு பார்க்கின்ற அளவிற்குக் கட்டிடங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்னாளம்பட்டியிலே எண்பது சதவிதத்திற்கு மேற்பட்டவர்களாக நெசவாளர்கள் வாழ்கின்றார்கள். எனவே, அந்தப் பகுதியிலே காச நோய் மருத்துவ மனை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்பது அங்குள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கையையும் இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.





ஸ்ரீரங்கத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்திலே அரசு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டது. அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகின்ற இடமாக ஸ்ரீரங்கம் இருக்கின்ற காரணத்தால், அதிகமான மக்கள் வெளியூர்களிலேயிருந்து வந்து போய்க் கொண்டிருக்கின்ற காரணத்தால், அங்கே இதய நோய்த் தடுப்புப் பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மனநோய்க் காப்பகத்தில் பணியாற்றுகின்றவர்கள் சில கோரிக்கைகளை அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மன நோய்க் காப்பகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களில் முதல் நிலை, இரண்டாம் நிலை, ஆண், பெண், ஊழியர்களுக்குச் சிறப்பூதியம் தரப்படவில்லை? செலக்ஷன் கிரேட் தரப்படவில்லை என்று கூறுகிறார்கள். இதைப் பற்றி அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு உத்தரவிட்டு, தொழிலாளர்களுக்குச் சீருடை, டோபி அலவன்ஸ் ஆகியவற்றை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லோருக்கும் அபாயம் பொதுவானதுதான். இரவு, பகல் என்று 24 மணி நேரமும் மன நோயாளிகளிடத்திலே பணியாற்றுகின்ற அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸை அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத்தைப் பொறுத்தவரையில் மாநிலத்திலே உள்ளவர்களே கவனிக்கின்ற வகையிலே வாய்ப்பளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மத்தியிலே தனியாக ஒரு அமைப்பாக இருப்பதைக் காட்டிலும், மாநில அரசு மத்தியிலே இருப்பவர்களோடு தொடர்பு கொள்ளும் அளவிற்கு ஒரு லிங்காகப் பணியாற்றினால் மட்டும் போதும் என்று நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

1975 ஆம் ஆண்டிலே இங்கேயிருந்த இந்தக் குடியிருப்பை, எமெர்ஜென்ஸி காலத்திலே இடித்து விட்டு நல்ல குடியிருப்பாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லி இடித்துவிட்டார்கள். அந்தக் குடியிருப்பை மீண்டும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், மருத்துவத் துறையைப் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகள் இருக்கின்றன. அந்த மருத்துவ மனைகள் இன்னும் சிறப்பாகச் செயலாற்றுகின்ற வகையில் அரசே அவைகளை ஏற்றுக் கொண்டு அந்த ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை அரசு மருத்துவ மனைகளாக மாற்றி நல்ல முறையிலே செயல்படும் வகையிலே ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் மத்தியிலே ஒரு மருத்துவத் துறை ஏன் இருக்க வேண்டுமென்ற கேள்விக்குறியை இங்கே எழுப்புவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். மத்தியிலே ஒரு மருத்துவத் துறை, மாநிலத்திலே இன்னொரு மருத்துவத் துறை என்ற வகையில் பணியாற்றுகிறார்கள். அதை மாற்றி மாநிலத்திலே இருக்கின்ற மருத்துவ துறையினிடத்தில் முழு பெறுப் பயும் கொடுத்தால் இதை ஏன் நல்லமுறையில் செயல்படுத்த முடியாது என்று கேட்க விரும்புகிறேன். அதற்கென்று ஒரு அமைச்சர், அதற்கென்று ஒரு நிர்வாகம், அதற்கென்று ஒரு செக்ரட்டேரியட் என்று இல்லாமல் மத்தியிலே இருக்கின்ற ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கல் மருத்துவத்தைப் பொறுத்தவரையில் மாநிலத்திலே உள்ளவர்களே கவனிக்கின்ற வகையிலே வாய்ப்பளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்தியிலே தனியாக ஒரு அமைப்பாக இருப்பதைக் காட்டிலும், மாநில அரசு மத்தியிலே இருப்பவர்களோடு தொடர்பு கொள்ளும் அளவிற்கு ஒரு லிங்காகப் பணியாற்றினால் மட்டும் போதும் என்று நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போல் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்திய மருத்துவத்திலேயும் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். இந்திய மருத்துவத்தைப் பொறுத்தவரை, இன்றைய தினம் பல வகைகளில் நாம் முன்னேறியிருக்கிறோம். அதே அடிப்படையிலே, சித்தப் பிரிவுகளும், யுனானி பிரிவுகளும், ஓமியோபதி பிரிவுகளும், சிறப்பாகப் பல்வேறு மாவட்ட மருத்துவ மனைகளிலும், வட்ட மருத்துவ மனைகளிலும் துவங்கப்பட்டு, இன்று நல்லமுறையிலே மக்களுக்குப் பயன்படும் வகையிலே செயலாற்றி வருகின்றன.

நம்முடைய மருத்துவர்களைப் பொறுத்தவரை, கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுவது குறைவாக இருக்கிறது. அவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற அஞ்சுகிறார்களோ, அல்லது விருப்பம் இல்லையோ தெரியவில்லை. எனக்கு முன்னே



பேசிய நம்முடைய டாக்டர் சௌரிராஜன் அவர்கள் கூறியதைப் போல், மருத்துவர்களைப் பொறுந்தவரை, அவர்கள் சமுதாயத்திற்கு நல்ல தூய தொண்டினைச் செய்கிறார்கள், தூய பணியினைச் செய்கிறார்கள். அவர்களால் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியும். அந்த அளவுதூய பணியினை ஆற்றுகிறார்கள். அவர்கள் அந்த அளவு கடமை உணர்வோடு பணியாற்ற வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுகிறேன். காரணம், மருத்துவர்கள் அஜாக்கிரதையாகவோ, அல்லது கவனக் குறைவாகவோ இருந்தால், அதனால் உயிர் இழப்பேற்படும். ஒரு உயிர் இழப்பு, அந்த் உயிரைப் பலி கொடுத்த குடும்பத்தினருக்கு எந்த அளவு வேதனையாகவும், பாதிப்பாகவும் இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவப் பட்டம் பெற்ற காலத்திலிருந்து சென்னை நகரத்திலே இருந்து, கிராமங்களுக்குச் செல்லாத டாக்டர்கள் சென்னை நகரத்திலே இருக்கிறார்கள். நல்ல மருத்துவம் கிராம மக்களுக்கு கிடைக்க வேண்டும். இங்கே கூட, நல்ல மருத்துவக் கருவிகள் வாங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 64 இலட்சத்திற்கு மேலாக ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த மருத்துவக் கருவிகள் மாவட்ட மருத்துவ மனைகளுக்கும், வட்ட மருத்துவ மனை அளவிலும் நின்று விடுகிறது. அதிலும் குறிப்பாக, சென்னை நகரத்திற்கு மட்டும் 80 சதவீதத்திற்கு மேலாக புதிய கருவிகள், வாங்க ஒதுக்கியிருக்கிறார்கள். கிராமப் பகுதியிலே இருக்கிற மற்றும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு அதிகமாக ஒதுக்க வேண்டுமென்ற கருத்தினை வைக்கிறேன்.

கிராம மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதே நம்முடைய சீரிய பணியாக இருக்கும் என்பதை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு நேரங்களிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மக்களுக்கு அனைத்து வசதிகளும் கிடைக்க வேண்டும். முதலாவதாக, மருத்துவ வசதி அத்தனை மக்களுக்கும் கிடைக்கும் என்ற அடிப்படையிலே, இந்த மருத்துவத் துறைக்கு ரூ. 100 கோடிக்குமேல், மொத்த வரவு செலவிலே 10 விழுக்காடுக்கு மேல் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குப் பல்வேறு மாவட்ட மருத்துவ மனைகளிலே சிறப்பான முறையிலே, பல்வேறு மருத்துவப் பிரிவுகளை ஆரம்பித்து இருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் மருத்துவத் துறையும் சுகாதாரத் துறையும் சிறப்பாக, நல்ல முறையிலே பணியாற்றி வருகின்றன. ஒன்றே ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப் புறங்களிலே இருக்கிற ஆரம்பச் சுகாதார மருத்துவ மனைகளிலே பெண் மருத்துவர்கள் சில இடங்களிலே நியமிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அதனைப் போக்கி, அத்தனை இடங்களிலும் பெண் மருத்துவர்களை நியமித்து, வேலை வாய்ப்பை உருவாக்கி, நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

* திரு. க. பாரமலை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இந்த அவை முன் வைத்திருக்கின்ற மருத்துவம், பொதுச் சுகாதாரம் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்ற பழமொழிக்கு ஏற்ப கி. பி. 2,000 ஆண்டுக்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற குறிக்கோளை நிறைவேற்ற இந்த அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிக்கோளை நிறைவேற்ற இன்றைக்கு பல்வேறு சிறப்புத் திட்டங்களை தீட்டி, அமைச்சர் அவர்கள் செயல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் முனைப்பாக பல நடவடிக்கைகளை அவர் எடுத்தாக வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு நடமாடும் மருத்துவக்குழு 224 இருக்கின்றன. 1981—82 ஆண்டு மேலும் 25 குழுக்கள் துவக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதற்குச் சுற்றி இருக்கின்ற 3, 4 மைல் சுற்றளவில் உள்ள கிராம மக்கள் பயன்பெறுகிறார்கள். அனைத்து கிராம மக்களுக்கும் பயன்படும் வகையில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைப்பது மிக மிக அவசியம். அதுமட்டுமல்ல, குக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்த நடமாடும் மருத்துவக் குழுக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் இராமநாதபுரம் மாவட்டம் உள்பட ஆறு மாவட்டங்களில் கட்ட அடிப்படையில் நிறைவேற்றப்பட உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே முதல் கட்டமாக அதை இராமநாதபுரத்தில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து 1980—81 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்ட 32 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டிட வேலைகள் மானாமதுரையில் துவக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். 1979 ஆம் ஆண்டு நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த இடத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டார்கள். ஆகவே, இந்த 1981—82 ஆம் ஆண்டிலாவது அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருபுவனத்தில் 14 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்கான செயற் குறிப்பு 5 ஆண்டுகளுக்கு முன்பு அரசின் பரிசிலனையில் இருந்தது. அதற்காக, அங்கே தகுந்த இடவசதி தண்ணீர் வசதி மற்றும் பிற வசதிகள் இருக்கின்றன. எனவே மருத்துவமனையைக் கட்ட பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஒட்டன்சத்திரம் தொகுதி உறுப்பினர் தெரிவித்ததைப் போல, மனிதர்களுக்கு ஏற்படுகின்ற வியாதிகளுக்கும் இரத்தப் பிரிவுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பது மருத்துவ சோதனைகள் மூலம் தெரிய வந்துள்ளது. சிறப்பு பள்ளி நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் மாணவர்களை பரிசோதனைகள் செய்கின்ற நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சான்றிதழ்களில் அவர்களுடைய ரத்தப் பிரிவையும் குறிப்பிடுவோமானால் பின்னால் அவர்களுக்கு ஏற்படக் கூடிய வியாதிகளில் இருந்து அவர்களைக் காப்பாற்ற வசதியாக இருக்கும் என்று தெரிவித்து, அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை ராஜாஜி அரசு மருத்துவ மனையில் கண்சிகிச்சைப் பிரிவுக்காக, 1969 ஆம் ஆண்டு 5·5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு 3 மாடிக் கட்டிடம் கட்ட அரசு ஒப்புதல் அளித்தது. கட்டிடம் கட்டத் தொடங்கிய போது அதை 8 மாடிக் கட்டிடமாகக் கட்டுவதற்கான வசதியோடு பைல் பவுண்டேஷன் போடப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் கிரௌண்ட்ப்ளோர் மட்டும் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் ஆபரேஷன் தியேட்டர், போஸ்ட் ஆபரேடிவ் வார்ட்கள், அவுட் பேஷன்ட் டிபார்ட்மென்ட் போன்றவைகள் பழைய கட்டிடத்திலேயே இருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், ஆபரேஷன் செய்துகொள்ளுகின்ற வியாதிஸ்தர்களுக்கு நல்ல கவனம் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்

[திரு. க. பாரமலை] [1981 ஏப்ரல் 8

என்று சொன்னால் போஸ்ட் ஆபரேடிவ் வார்ட் ஆப்பரேஷன் தியேட்டருக்கு மிக அருகாமையில் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் உணர்வார்கள். வருஷத்துக்கு 1,70,000 பேர்களுக்கு மேல் சிகிச்சை பெறக்கூடிய பெரிய மருத்துவமனையாக இருப்பதால் அங்கே முதல் இரண்டு மாடிகளாவது கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் குறிப்பாக 1981 ஆண்டு இந்த ஆண்டு உலக ஊனமுன்றறோர் ஆண்டாக இருப்பதால் இந்த நேரத்தில் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே இராஜாஜி மருத்துவமனையில் ஸ்பெஷல் வார்டு கிடைக்க வேண்டுமானால் ஒரு வியாதியஸ்தர் பல தினங்கள் காத்துக் கிடக்க வேண்டிய நிலை உள்ளது. காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு பல மாதங்களுக்கு இடம் கிடைப்பதில்லை. எனவே அங்கே மேலும் ஒரு ஸ்பெஷல் வார்டு கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டி. பி. சானடோரியத்தைப் பற்றி நமது அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். மதுரைக்குப் பக்கத்திலே உள்ள தோப்பூரில் உள்ள மருத்துவமனை இருக்கின்ற காரணத்தால் வேறொரு மருத்துவமனை தேவையில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு தோப்பூரில் உள்ள அந்த மருத்துவமனையில் சேருவதற்காகக் காத்து இருப்போர் பட்டியல் மிக நீண்டதாக இருக்கிறது. ஆகவே அங்கே படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டும். நல்ல பெயர் பெற்றிருந்த அந்த டி. பி. சானடோரியம், இன்றைக்கு நல்ல முறையில் செயல்படவில்லை, என்ற பெயர் இருக்கிறது. உணவுகள் சரியாக கொடுக்கப்படவில்லை. அந்த டி. பி. சானடோரியத்தில் சேர்ந்தால் நிச்சயமாக 6 மாதம், 3 மாதத்தில் குணமடைந்து வரலாம் என்ற நிலை போய், அந்த மருத்துவமனையில் உணவு சரியில்லை, வைத்திய வசதி சரியில்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு இருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டு, அமைச்சர் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் டாக்டர்கள் தனி மருத்துவ மனை வைத்து இருப்பதாலே பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கின்றன. பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட மருத்துவர்களின் சம்பளங்களை உயர்த்தியும், அவர்களுக்குப் பல்வேறு இன்சென்டிவ் கொடுத்தும் இப்படிப்பட்ட தனி மருத்துவமனைகள் நடத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொல்கிறேன்.



1981 ஏப்ரல் 8] [திரு. க. பாரமலை]

கௌரவ டாக்டர்கள் பதவிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு உடன்பாடு உண்டு. பல டாக்டர்கள், திறமையானவர்கள் அரசு மருத்துவ மனைகளில் இருக்கிற போது, அவர்களைக் கொண்டு அத்தகைய சிறப்புப் பணிகளைச் செய்ய சொல்லாமல், இப்படிப்பட்ட கௌரவ டாக்டர்களை நியமித்து அவர்கள் ஒரு யூனிட்டின் தலைவர் என்கிற முறையில் வைத்து இருப்பது சரியல்ல. ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரிவில் தனித் திறமை பெற்ற டாக்டர் இருக்கிறார் என்று சொன்னால் அப்படிப்பட்ட டாக்டர்களை '' விசிட்டிங் டாக்டர்கள் '' என்கிற வகையில் நியமித்து, அவர்களுக்கு தனி ஊதியம் அளிக்கலாம். ஆகவே, இந்த கௌரவ டாக்டர் பதவிகளை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் பணியாற்றும் டாக்டர்களுக்கு சிறப்பு ஈட்டுப்படி ஊதியம் ஏதேனும் வழங்கப்பட வேண்டும். அத்தகைய முறையில் கிராமங்களில் டாக்டர்கள் சென்று பணியாற்ற ஊக்கம் அளிக்க வேண்டும். மேலும், டாக்டர்கள் பட்டம் பெற்ற உடன் கட்டாயமாக அவர்கள் இரண்டாண்டு காலம் அந்தக் கிராமப்புறங்களில் சென்று பணியாற்ற வேண்டும் என்கிற நிலைமை ஏற்படுத்த பட வேண்டும். அவர்களுக்கு மேலும் பல்வேறு ஊக்கம் அளித்து கிராமப் புறங்களில் சென்று பணியாற்ற வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மலேரியா நோய் அதிகமாக இருக்கிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சென்னைக்கு அடுத்தபடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் தான் இந்த நோய் அதிகம் இருக்கிறது என்பதைப் பார்க்கிற போது நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இந்த நிலைமையைப் போக்க மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவுக் கலப்படம் பற்றிய நடவடிக்கையை தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு விருதுநகர் சென்று இருந்தேன். அங்கே எனக்கு ஒரு அதிர்ச்சியான தகவல் கிடைத்தது. எரிசாராயம் தயாரிக்கப் பயன்படும் '' மோலாசிஸ் '' நல்லெண்ணை தயாரிக்க உபயோகிக்கப்படும் கருப்பட்டிக்குப் பதிலாக கலப்படம் செய்யப்பட்டு அதன் மூலம் லட்சக்கணக்கான ரூபாய் கொள்ளை லாபம் அடித்து இருக்கிறார்கள் என்று அறிந்தேன். சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்றும் அறிறேன். விசாரணை நடக்கிறது என்றும் தெரிகிறது. ஆகவே இப்படிப்பட்ட கலப்படம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிகளைத் தீவிரமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன வகுப்பைச் சேர்ந்த டாக்டர்களுக்கு எந்தவிதமான பாகுபாடும் காட்டப்படாமல் அவர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள். மாண்பு மிகு அமைச்சர் அவர்களை நான் நன்றாக அறிவேன். அந்தத் துறையில் உள்ள அரிசன சமுதாய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு அரசு பொறுப்பு அல்ல என்பதையும் நான் அறிகி றேன். ஒவ்வொரு நிலையிலும் இருக்கும் மேல் அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வராத வகையில் பல்வேறு கஷ்டங் களை அரிசன வகுப்பைச் சேர்ந்த டாக்டர்களுக்கு அளிக்கிறார் கள். உரிய ப்ரமோஷன் கொடுப்பது இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி இது சம்பந்தமாக தனியாக விவரங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். இப்படிப்பட்ட விஷயத்தில் அமைச்சர் அவர்கள் தனி அக்கறை எடுக்க வேண்டும் என்று கேட்டு, ஏற்கனவே அவர்கள அந்த சமுதாயத்தின் மீது பரிவோடு இருப்பவர்கள், இதை கவனிப்பார்கள் என்று நம்பிக்கை தெரி வித்து, இந்த மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவ வர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை மனதார வரவேற்று, அதில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கட மைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களது அரசு, மருத்துவப் பணிகளுக்கென ரூபாய் 66 கோடியையும், மக்கள் நல்வாழ்வுக் கென ரூபாய் 63 கோடியையும் ஒதுக்கியுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு மக்களது நல்வாழ்வில் உள்ள அக்கறையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களது சீரிய தலை மையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக் டர் அவர்களது பொறுப்பில் மருத்துவத் துறையும், சுகாதாரத் துறையும் நல்ல முறையில் செயலாற்றி வருகிறது என்பதில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லை என்பதைத் தெரி வித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(முற்பகல் 11—30.)

அண்மையிலே நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப் பில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட, அதிலும் குறிப்பாக வட மாநிலங்களைக் காட்டிலும மக்கள் தொகையில் குறைந்த



வளர்ச்சி விகிதத்தையே பெற்றிருக்கிறது என்றாலும் அதற்குக் காரணம் தமிழகத்தில் கடந்த பல ஆண்டுகளாக நாம் குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வருவதேயாகும்.

பெருகிவரும் மக்கள் தொகையின் வளர்ச்சி விகிதத்தைக் கண்டு உலகமே அஞ்சுகின்ற இந்தக் காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கிறது என்பது நமது நல் வாழ்வுத் துறைக்குக் கிடைத்துள்ள நற்சான்றிதழ் என்று கூறி னால் அது மிகையல்ல.

ஆனால், குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாக சிறப்பாக அமுல்படுத்துகிற மாநிலங்களுக்கு உற்சாகமளிக்கத் தக்க வகை யில், நல்வாழ்வுத் திட்டங்களுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டி யது மத்திய அரசின் பொறுப்பாகும்.

ஆனால், மத்திய சர்க்காரோ மக்கள் தொகையின் அடிப் படையில் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் செய்கிறார்கள். இத னால் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நாம் குறைவாகப் பெற வேண்டியிருக்கிறது. இது வெற்றிகரமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை செயல்படுத்துவதற்காக நமது மாநிலத்திற்கு மத்திய சர்க்கார் அளிக்கும் தண்டனை போல் அமைந்துவிடுகிறது.

எனவே, குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை வெற்றிகரமாக நடத்துகிற மாநிலங்களுக்கு தனியாக சிறப்பு நிதி ஒதுக்கம் செய்து, அவற்றை மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்கு பயன்படுத்த வகை செய்ய வேண்டுமென்று நமது மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் நாம் இவ்வளவு பெருந்தொகையை மக்கள் நல்வாழ்வுத் துறைக்குச் செலவழித்துக் கொண்டிருக்கி றோம். ஆனால், இதன் பலன்கள் கிராம மக்களுக்கு நல்ல முறையில் போய் சேர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் ஏமாற்றமே மிச்சமாகிறது.

கிராமப் புறங்களில் மக்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற நோய் களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னதாகவே அவர்களது வாழ்நாள் முடிந்து விடுவதாக உள்ள பரிதாபமான நிலைமைகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

மருத்துவ மேல் பட்டப் படிப்புகளையும், ஆராய்ச்சிகளையும் மேலும், மேலும் பெருக்கிக் கொண்டு, நகர்ப்புறங்களில் வாழும் மேட்டுக் குடியினரின் குழந்தைகளும், வசதி படைத்த மருத்துவர் களும் மேலும் மேலும் வளர்வதற்கான வழி வகைகளைக் காண் பதைக் காட்டிலும், கிராமப்புறங்களில் உள்ள ஏழைகள் வசதி

யற்றவர்கள் அன்றாடங்காய்ச்சிகள், சாவிற்கும் நோய்க்கும் இடையிலே படுகின்ற அவதிகளைத் துடைக்க முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பொறியியல் கல்விகளை, பயிற்சிகளை மேல்நிலைப் பள்ளிகளில் கற்றுத் தருவதைப்போல் மருத்துவ கல்வியையும் சுகாதாரக் கல்வியையும், செவிலியர் பயிற்சி போன்ற அடிப்படை மருத்துவ கல்விகளையும் முறைகளையும் மேல்நிலைப் பள்ளியிலேயே கற்றுத் தருவோமானால் அந்தப் பிள்ளைகள் மூலம் கிராமப் புறங்களில் இந்த வசதிகள் கிடைப்பது எளிதாக அமையும் ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இந்த வகையில் முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பை $5\frac{1}{2}$ ஆண்டுகளிலிருந்து $4\frac{1}{2}$ ஆண்டுகளாக குறைத்துள்ளது வரவேற்றுப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால், இந்த $4\frac{1}{2}$ ஆண்டு பட்டப் படிப்பு தேவைதானா ? இதை, மேலும் குறைக்க முடியாதா ? குறைக்கக் கூடாதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும், என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த $4\frac{1}{2}$ ஆண்டு கால பயிற்சியை 3 ஆண்டுகளாக குறைத்தால், இதே செலவில் நாம் மேலும் 50 சதவிகிதம் அதிகமான மருத்துவ பட்டதாரிகளை உருவாக்கலாம். அதனால் மேலும் கிராம மக்களுக்குச் சென்று பணியாற்றுவதற்கு அதிகமான டாக்டர்கள் கிடைப்பார்கள். செலவைக் குறைத்து அதிகமான பலன்களைப் பெற்று அந்தப் பலன் கிராம மக்களுக்குச் சென்றடையச் செய்யலாம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டுள்ளேன்.

தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் முக்கால் பங்கு மக்கள் கிராமங்களில்தான் வசித்து வருகிறார்கள். அவர்கள்தான் புரட்சித் தலைவரை தெய்வமாக மதித்து வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்தான் புரட்சித் தலைவரை மீண்டும் அரியாசனத்தில் அமர்த்தி மகிழ்ச்சியுற்றவர்கள், எந்த விதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் மக்கள் திலகத்தின் ஆட்சியில் தங்களது வாழ்வு வளம் பெறும் என்ற மன நிறைவோடு இருந்து வருகிறார்கள். நாம் போடுகிற எந்தத் திட்டமாக இருந்தாலும், நாம் செலவழிக்கின்ற எந்தத் தொகையாக இருந்தாலும் அதில் முக்கால் பங்கு கிராமத்தைச் சேர்ந்தது. கிராம மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும் என்பதைப் பணிவன்போடு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இதை நாம் செய்ய வில்லை என்றால் நாம் நன்றி மறந்தவர்கள் என்று கருதப்படுவோம். எனவே, இன்னும் சில ஆண்டுகளுக்காவது





நாம் பெரிய பெரிய மருத்துவ மனைகளையும் மருத்துவக் கல்லூரிகளையும், உயர் பட்டப் படிப்புக்கான செலவுகளையும் குறைத்து அடிப்படை மருத்துவ வசதிகள் எல்லா கிராமங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டங்களை நாம் போட்டிருக்கிறோம் அந்த தன்னிறைவுத் திட்டங்களில் நாம் சாலைகள் குடிநீர் வசதிகள், மின் விளக்குகள் போன்றவற்றை மட்டும் அமைத்தால் போதாது. இந்தத் தன்னிறைவுத் திட்டங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் அரசு மருத்துவ மனைகள் அமைக்கப்பட்டாகவேண்டும். ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒவ்வொரு ஊராட்சியிலும் இருந்தாக வேண்டும். இந்தத் திட்டத்தோடு எல்லா ஒன்றியங்களிலும் மருத்துவமனைகளை அமைக்க புரட்சித் தலைவரது அரசு முயற்சிகளைச் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இளம் டாக்டர் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்பதைக் கட்டாயமாக்க வேண்டும்.

கிராம ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறிப்பிட்ட காலம் வரை பணியாற்றினால்தான் அவர்கள் பணியில் நிரந்தரப்படுத்தப் படுவார்கள் என்று அரசு அறிவிக்க வேண்டும். இதில் எந்த விதமான சலனத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது.

அப்படி கிராமங்களில் பணியாற்றுகிற டாக்டர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு மாதம் ரூபாய் 200 வரை சிறப்பு ஊதியம் தர வேண்டுமென நான் மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் நமது அரசு, அரசு தேர்வாணைக் குழுவின் மூலம் ஏறத்தாழ 1,000-க்கும் மேற்பட்ட டாக்டர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த 1,000 டாக்டர்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கிராம மருத்துவ மனைகளிலும்தான் வேலை அளிக்கப்படும் என அரசு உறுதியாக அறிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் கிராமப்புறங்களுக்கு டாக்டர்கள் கிடைப்பார்கள். இல்லாவிட்டால் அவர்கள் அத்தனைபேரும் ஆட்களைப் பிடித்துக்கொண்டு நகரங்களையே நாடி ஓடுவார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

மேலும், எம். பி. பி. எஸ். பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுவது மிகவும் நல்ல முறையில் குறை சொல்ல முடியாத முறையில் நடைபெற்றுவருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால், இந்த முறையின் மூலம் எவ்வளவு பேர் நகரத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? எவ்வளவு பேர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற கணக்கைப் போட்டுப் பார்த்திருக்கிறோமா ?

தமிழக மக்கள் தொகையில் முக்கால் பங்கு உள்ள கிராமத்து மக்களுக்கு 10 இல் ஒரு பங்கு இடங்கள் கூடக் கிடைத்திருக்காது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். ஏன் இந்த நிலை? கிராமங்களி இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? லிருந்து வருகிறவர்களுக்காக இவ்வளவு இடங்கள் என்று ஒதுக்க முடியாவிட்டாலும், அவர்களுக்காக சில மதிப்பெண்களையாவது அதிகப்படியாக தரக்கூடாதா ?

'' இந்த நாடு கிராமங்களில் தான் இருக்கிறது '' என்றார் மகாத்மா காந்தியடிகள். புரட்சித் தலைவர் அவர்களின் தன்னல மற்ற தொண்டினை அவரது பெருமைகளை, அவரது தயாள குணத்தை அவரது இதயத்தைப் புரிந்துகொண்ட மக்கள் வாழ்வது கிராமங்களில்தான். அப்படிப்பட்ட கிராம மக்களினுடைய அவல நிலையைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன். எனவே மக்கள் நல்வாழ்வுத் திட்டமாக இருந்தாலும், சுகாதாரத் திட்டமாக இருந்தாலும் குடும்ப நலத் திட்டமாக இருந்தாலும் அவைகள் அனைத்தும் கிராமங்களை நாடியே இருக்கவேண்டும். அதுதான் இந்த அரசுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து எனது தொகுதியான இடைப்பாடியில் அரசு மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. இடைப்பாடி ஒரு நகராட்சி. இந்த நகராட்சியில் மட்டும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். இந்த நகரத்தைச் சுற்றியுள்ள 20 கிலோ மீட்டர்தூரம் வரையில் நல்ல அரசு மருத்துவமனையே இல்லை. மேலும் இந்த நகரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிப் பகுதி மக்களும் இந்த மருத்துவ மனைக்குத்தான் வருகிறார்கள். இந்த நகராட்சி, க்கு அருகிலே உள்ள சட்ட மன்றத் தொகுதியாகிய குஞ்சாம்பாடி, குள்ளப்பட்டி மற்றும் சில பகுதிகளிலிருந்தும் இந்த மருத்துவ மனைக்குந்தான் மக்கள் வருகின்றார்கள். ஆகவே இந்த மருத்துவ மனையை நாடி வரக்கூடிய மக்கள் தொகை ஏராளம். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மருத்துவமனை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டது. இன்னமும் அது ஆங்கிலேயர் ஆட்சி யை நினைவுபடுத்தும் நினைவுச் சின்னமாகத்தான் காட்சி தரு கிறதே தவிர சுதந்திர நாட்டில் அமைக்கப்பட்ட ஒரு மருத்துவ மனையாக காட்சி தரவில்லை. அந்த மருத்துவமனையில் சேர்க்கப்





படும் நோயாளிகள் மேலும் பல நோய்களுக்கு ஆளாகும் வகை யில்தான் மருத்துவமனை அமைந்துள்ளதே தவிர, நோய்களைக் குணப்படுத்தும் ஆரோக்கிய நிலையமாக இல்லை. மருத்துவ மனைக்குச் சுற்றுச் சுவர் இல்லை. அங்குள்ள கழிப்பிடம், கழித்து விட வேண்டிய நிலைமையிலேயே தான் உள்ளது. குடிநீர் வசதி யும் தண்ணீர் வசதியும் வாரத்திற்கு சில நாட்கள் தான் வரும் என்ற நிலையில் உள்ளது.

இடைப்பாடி மருத்துவமனை வழியாகச் செல்லும்போதெல் லாம் எனது நினைவுகள் சென்னையில் உள்ள பெரிய பெரிய கட்டிடங்களையும், மருத்துவ மேல் பட்டப்படிப்பிற்கான கட் டங்களையும் நினைவுபடுத்துவதாக உள்ளது. நகரங்களி செலவழிக்கப்படும் தொகையில் நூற்றில் ஒரு பங்கை அங்கே செலவு செய்தால், அந்த மருத்துவமனையும் புதிய பொலிவினைப் பெறும். மக்களுக்கும் நல்ல வைத்திய வசதிகள் கிடைக்கும். ஏனென்றால் இந்த மருத்துவ மனைக்கு அந்த நகரப் பகுதியில் மக்கள் மட்டுமல்ல சுற்றியுள்ள பல்வேறு வட்டாரப் பகுதி மக்க ளும் வருகிறார்கள். வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11—40]

இடைப்பாடி மருத்துவ மனையில் சராசரி ஒரு நாளைக்கு 500-க்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் வருகிறார்கள். அவர்களில் 300-க்கும் மேற்பட்டவர்கள் ஊசி போடவேண்டிய நிலையில் உள்ளார்கள். மேலும் இரவு நேரங்களில் நான்கைந்து அவசர பிரசவ கேஸ்கள், ஆக்சிடென்ட் கேஸ்கள், காச நோயாளிகள், போலீஸ் கேஸ்கள் முதலியன வருகின்றன. ஆனால் அப்படி வருகின்ற நேரத்திலே, அங்கே 10 படுக்கைகள் வசதி தான் இருப்பதால், உள் நோயாளிகளாக 10 பேர்கள் தான் அனுமதிக்கப்படுகிறார்கள். குழந்தை பிறந்த மறுநாளே தாய்மார்களை வெளியே அனுப்புகின்ற அவல நிலை இடம் இல்லாத காரணத்தால், படுக்கை வசதி இல்லாத காரணத்தால் அங்கே இருக்கிறது.

கடந்த ஜூலை மாதம் 18 ஆம் தேதி, இது போன்ற மருத்துவ மானியக் கோரிக்கை மீது நான் பேசியபோது அந்தப் படுக்கை வசதிகளை இடைப்பாடியில் 50 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்டிருந்தேன். அதற்குப் பதில் அளிக்கையில் அமைச்சர் அவர் கள் இடைப்பாடி மருத்துவ மனைக்கு அருகில் உள்ள அந்த மருத்துவ மனையைச் சேர்ந்த இடத்தை யாரோ வெளியார்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்றும் அந்த ஆக்கிரமிப்பை வெளி யேற்றி அந்த நிலத்தைப் பெற்றுத் தந்தால், அங்கே டாக்டர் களுக்கு புதிதாக குடியிருப்புகள் கட்டமுடியும் என்றும் சொன்னார் கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு

[திரு. இ. கணேசன்] [1981 ஏப்ரல் 8

கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இடைப் பாடி மருத்துவமனைக்கு அருகிலே டாக்டர்கள் குடியிருப்புக்காக பழைய கட்டிடம் ஒன்று எப்போதோ கட்டப்பட்டது. அது பாழ்டைந்த நிலையில் அங்கே இருக்கிறது. அந்த குடியிருப்பை அகற்றி, பக்கத்திலே உள்ள பெரிய பெரிய புளிய மரங்களை வெட்டி, அந்த இடத்திலே ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டினால், அது மிகப் பெரிய ஆஸ்பத்திரியாக இருக்கும். அந்த அளவு இடம் இருக்கிறது; அதேபோல் அங்கே ஆக்கிரமித்து உள்ள மக்களுக்கு தகுந்த மாற்றிடங்களை கொடுத்துவிட்டு, வெளியேற்றி அந்த இடத்தையும் சேர்த்துக் கூட பிரம்மாண்டமான ஒரு ஆஸ்பத்திரியாகக் கட்டலாம். ஆனால் அவ்வளவு பெரிய ஆஸ் பத்திரி தேவையில்லை. 50 படுக்கைகள் கொண்ட, நவீன வசதிகள் படைத்த ஒரு ஆஸ்பத்திரியாக இருந்தால் போதும். அப்படிப்பட்ட ஒரு ஆஸ்பத்திரியை அங்கே அமைத்துதர வேண் டும் என்று அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள் கிறேன்.

அங்கே இருக்கும் தற்போதைய அவல நிலையை மாற்றி வரக் கூடிய நிதியாண்டிலாவது அங்கே 50 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியாக கட்டித் தரவேண்டும். மாற்றித் தர வேண் டும். நிச்சயமாக மாற்றித் தருவார்கள் என்று என் மனம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் புன்சிரிப்பிலிருந்து தெரிந்துக் கொண்டு சொல்கிறது. ஆகவே அது நிச்சயமாக நடக்கும். தற்போது 10 படுக்கைகள் தான் இருக்கின்றன. வருகின்ற நோயாளிகளுக்கு அது போதவில்லை. ஆதலால், இதை அவசர மான அவசியமான வேண்டுகோளாக ஏற்று செய்து தரவேண்டும் என்று வேண்டுகிறேன்.

இது மட்டும் அல்ல, இரவு நேரத்தில் அவர்களை நன்கு கவனித்துக் கொள்ள செவிலியர்களை உடனடியாக நியமிக்க வேண்டும். அவர்களுக்கு தரமான உணவை தயார் செய்ய சமையல் பணியாளர்களையும், சமையல் கூடங்களையும் அமைத்து ஏற்பாடு செய்து தரவேண்டும். அத்தோடு அந்த மருத்துவ மனையில் கீழ்க்கண்ட பணியாளர்களையும் உடனடியாக நிய மிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| டாக்டர்கள்—மேலும் | .. | 2 பேர்கள். |
| ஸ்டாப் நர்ஸ்கள் | .. .. | 4 பேர்கள். |
| ஏ. என். எம். | .. .. | 2 பேர்கள் |
| எம். என். ஏ. | .. .. | 2 பேர்கள் |
| ரத்தம், மலம் பரிசோதகர் | .. | 1 (ஒருவர்). |

**ஆக மொத்தம் 11 பேர்களை நியமிக்க வேண்டும்.**



1981 ஏப்ரல் 8] [திரு. இ. கணேசன்]

அதே போல எங்களுடைய இடைப்பாடி மருத்துவ மனையிலே ஒரு ஆபரேஷன் தியேட்டர் இருக்கிறது. அந்தக் கட்டிடம் மிக்வும் பாழடைந்த நிலையில் உள்ளது. அதை நல்ல முறையில் புதுப்பிக்க வேண்டும். ஒயர்களை எல்லாம் மாற்ற வேண்டும். மின் கம்பிகள் மின் இணைப்புகள் எல்லாம் பழுதடைந்திருக் கின்றன. அவைகளை செம்மையாக பழுது பார்த்து, ஆப ரேஷன் தியேட்டர் இயங்கக் கூடிய நிலைமையில் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இடைப்பாடி நகராட்சியிலே கொசுத் தொல்லை மிக அதிகமாக உள்ளது. அந்த நகராட்சியிலே 40,000 மக்கள் வாழ்கிறார்கள். இந்த 40,000 மக்களுக்கும் அந்த நகராட்சி 20,000 ரூபாய் வருடத்திற்கு செலவு செய்வதாகச் சொல்கிறார் கள். 40,000 ஜனத் தொகை உள்ள நகராட்சியில் 20,000 ரூபாய் ஆண்டுக்கு செலவு செய்தால் தலைக்கு என்ன வரும்? ஆகவே அந்த முறையில் இதை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த மக்களின் நலம் கருதி, இந்த நகராட்சியில் கொசு ஒழிப்பு 'திட்டத்தை மத்திய அரசின் மான்ய திட்டத்தில்' எடுத்துச் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் 10,000 மக்களுக்கும், அதிகமாக வசிக்கும் இடங்களை சாலை வைகுந்தம், கன்னந்தேரி, அபுதூர் ஆகிய இடங்களில் மினி ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்து தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல சேலம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி யை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் சித்த வைத்திய ஆரய்ச்சி செய்யலாம். ஏனென்றால் கொல்லிமலை, பாலமலை, சேர்வராயன் மலை போன்ற மலைகளில் எண்ணற்ற அரிய மூலிகைகள் இருக்கின்றன. ஆகவே சேலம் மாவட்டம் சித்த வைத்திய ஆராய்ச்சிக்கு மிக் சிறந்த இடமாகும். ஆகவே சித்த வைத்திய ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவுவதுடன், சித்த வைத்திய மருத்துவ மனை ஒன்றையும் சேலம் மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். நமது கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் குறை வற்ற செல்வம் பெறத்தக்க வகையில், நோயற்ற வாழ்வு பெறத் தக்க வகையில் பல சிறப்பு திட்டங்களை கொண்டு வந்துள்ள இந்த அரசை பாராட்டி, இந்த மான்யக் கோரிக்கைகளை வரவேற்று விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஏ. கிருட்டிணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டில் மருத்துவத் துறை மானியத் தின்மீது எனது கருத்துக்களை எடுத்து இயம்புகிறேன்.

கிராமப்புற ஏழை மக்களுக்கு எட்டும் வகையில் அர
மருத்துவப் பாதுகாப்பு வழங்கும் முறையை மேம்படுத்த வே
டும் என்பதே, கிராம தன்னிறைவு கண்டு தன்னிகரற்று விளங்கு
தமிழக முதல்வரின் சீரிய எண்ணங்கள். இந்த எண்ணத்தி
அடிப்படையிலேயே அரசு சிறிய சுகாதார நிலையங்களை ம.
லத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிறுவவேண்டும் என்ற திட்டத்தை
தீவிரமாக செயல்படுத்த கருதியுள்ளது. இதன் முன்னோடிய
ஆரம்ப சுகாதார நிலையங்களையும், அதன் கிளை நிலைய
களையும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிறுவ வேண்டு
மென்ற எண்ணத்தினுடைய செயலாகத்தான் இது அமைந்
திருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். அது
மட்டுமல்ல. நடமாடும் சுகாதார குழுக்களை ஏற்படுத்தியதில்
இருந்தும், சுகாதார நிலையங்களை தோற்றுவித்ததிலிருந்தும்
இந்த எண்ணம் தெளிவாகப் புரிகிறது. அடுத்த ஆண்டில் தன்
னிறைவுத் திட்டமுள்ள 20 இடங்களில் 20 சுகாதார நிலையங்
களை நிறுவும் எண்ணத்தில் உள்ள இவ்வரசு, எனது தொகுதி
யின் மையப் பகுதியிலுள்ள, அதாவது ஆண்டிமடம் தொகுதியில்
மையப் பகுதியிலுள்ள மாத்தூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலை
யத்தை அமைக்க வேண்டும் என்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்
கொள்கிறேன். தற்போது, 14 நிலையங்களை 83 இலட்சம்
ரூபாயில் தரமுயர்த்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.
எனது தொகுதியிலுள்ள ஆண்டிமடம், செந்துறை ஆகிய
இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தி,
படுக்கைகளை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று நான் இந்த
அரசை மெத்தப் பணிவோடு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்
கிறேன்.

சிறார்களின் வளர்ச்சியிலே நாட்டம் கொண்டு, இலக்கியச் செல்வர் சொல்வது போல், பத்து மாத வசந்தத்திற்குப் பிறகு பாத்தியதை கொண்டாடும், மன்மதப் பூக்கள், ஆண்மையும் பெண்மையும் பிணைந்து வளர்க்கும் நெடிய இரவுகளின் கண் விழிப்பு, இல்லற பள்ளியறை வெளியிடும் ஆண்டு மலர்கள், தங்கப் படகுகள், தளிர் நிலவுகள் ஆகிய பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவ பரிசோதனை அமைத்துத் தரவேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் அடுத்த ஆண்டில் 50 தொடக்க சுகாதார நிலையங்களிலும், 25 நகராட்சிகளிலும் மேற்கொள்ளும் இந்தத் திட்டத்தைப் பாராட்டி வரவேற்கிறேன். எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





ஊனமுற்றோர் நலனில் அக்கறை கொண்டு புரட்சித் தலைவர்
அரசு இவ்வாண்டில் மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவ
மனையில் உறுப்பு பொருத்தும் மறு வாழ்வு அளிக்கும் நிலையம்
ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளது பாராட்டக் கூடியது.
பெற்றதைக் காப்போம், பெறுவதைத் தடுப்போம் என்ற
குறிக்கோளை உடைய புரட்சித் தலைவர் அரசு, மாவட்ட
தலைமை இட மருத்துவ மனைகளில் குழந்தைகளுக்கென்று
15 படுக்கைகள் கொண்ட வார்டு ஏற்படுத்த திட்டமிட்டு உள்
ளதைப் பாராட்டி வரவேற்கிறேன். பல நோக்கு சுகாதார பணி
யாளர்கள் திட்டம் எல்லா கிராமங்களுக்கும் வர வேண்டும்
என்பது நம்முடைய சர்க்காரின் குறிக்கோள். அதனுடைய
அடிப்படையில் எல்லா ஒன்றியங்களிலும் இந்தத் திட்டத்தைப்
பரவலாக்க வேண்டும். அடுத்து, இந்தத் துறையை சிறப்பாக
ஏற்று, புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையில்
இன்றைக்கு அந்தத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கின்ற மாண்பு
மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான்
பணிவோடு, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நான்
இந்த அரசுக்கு சில வேண்டுகோள்களை விடுக்க ஆரம்பிக்கிறேன்.

கிராமங்களில் 3,000-க்கும், அதற்கு மேலும் மக்கள்
தொகை உள்ள கிராமங்களில் ஆங்கில முறை மருத்துவம் ஆரம்
பிக்க வேண்டும். அதோடு, ஆண்டிமடத்திலுள்ள என்னுடைய
பகுதியில், குறிப்பாக, பேரூராட்சியாக இருக்கின்ற தென்னூர்
கிராமதநில் ஒரு குழந்தைகள் காப்பகம் அமைக்க வேண்டுகிறேன்.
எல்லா மருத்துவமனைகளிலும் நாய்க் கடிக்கான மருந்துகள்
தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். எதிர்கால மக்கள்
தொகையை கணக்கில் கொண்டு, மருத்துவ மனைகளை விரிவு
படுத்த வேண்டும். கிராம மக்களின் நலன் கருதி ஒவ்வொரு
பஞ்சாயத்தின் முக்கிய பகுதிகளிலும் ஒரு டிஸ்பென்சரி அமைத்துக்
கொடுக்க வேண்டும்.

சுத்தம் சுகம் தரும். சுத்தம் சுற்றுபுறத் தூய்மையால்
அமையும். சமுதாய வாழ்க்கை முறைகள் விரைந்து மாற்றம்
பெற்றுவரும்இக்கால கட்டத்தில் சுற்றுப்புறதூய்மையைகாப்பதே
தொற்று நோய்களை துரத்தி அடிக்கும் வழியாகும் என்ற அடிப்
படையில், தன்னிறைவுத் திட்டத்திலே துவக்க இருக்கும் 69
ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு 2 ஊராட்சிகள் வீதம் தேர்ந்
தெடுத்து, மொத்தம் 138 ஊராட்சி ஸில் பெண்களுக்கு கழிப்
பிடங்கள் கட்டியுள்ள ஒரு சீரிய திட்டத்தைப் பாராட்டி வர
வேற்கிறேன். அதே நேரத்தில் எல்லா ஒன்றியங்களிலும், இது
போன்ற செயல்களை இந்த அரசு செய்ய வேண்டும் என்று
வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்
துக் கொள்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11–50]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மருத்துவம் பற்றிய இந்த கோரிக்கைகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக சுகாதாரத் துறை இது மக்களுடைய நல்வாழ்வை பேணிக் காக்க வேண்டிய துறை. மக்கள் அனைவரும் நீண்ட நாள் வாழ்வதற்கான வழிவகைகளைக் காட்ட வேண்டிய துறை. நம் நாட்டில் அண்மைக் காலத்தில் பிறப்பு விகிதமும், இறப்பு விகிதமும் குறைந்திருக்கிறது; மாண்புமிகு அமைச்சர் அவர்களின் குறிப்புகளிலிருந்து இது தெரிகிறது. 1975-க்கும், இன்றைக்கு 1981-க்கும் இடையில் நாம் பார்க்கின்றபொழுது அன்றைக்கு இறப்பு இருந்த அளவிற்கும், இன்றைக்கு இருக்கிற அளவிற்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை. காரணம், தேவையான அளவு சுகாதார வசதிகளை, மருத்துவ வசதிகளை, கொடுக்கவில்லை. குறிப்பாக கிராமங்களில் வசிக்கக் கூடிய 3 கோடி 40 இலட்சம் மக்கள் போதுமான சுகாதார வசதிகள் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். 383 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருந்தாலும் அவைகளின் மூலமாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய மருத்துவ வசதிகள் கிடைக்காமல், இன்னும் அதிகமாக செய்யப்பட வேண்டும் என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. கிராமங்களில் அதிகமான டாக்டர்கள் சென்று தங்குவதற்கான வழிவகைகள் காணப்பட வேண்டும். கிராமங்களில் தங்குகின்ற, டாக்டர்களுக்கு வசதி, வாய்ப்புகள் மேலும் கொடுத்து, சில சலுகைகளை அளித்து, அவர்கள் கிராமங்களில் தங்குவதற்கான வசதிகளைச் செய்ய வேண்டும். கிராமங்களையும் நகர்ப்புறங்களாக மாற்றுவதற்கான திட்டம் நாம் மேலும், மேலும் வலிவாக உருவாக்க வேண்டும். மின்சாரமாக இருந்தாலும் சரி, குடி, தண்ணீர் வசதியாக இருந்தலூாம் சரி, போக்குவரத்து வசதியாக இருந்தாலும் சரி, மேலும் செயல்படுத்தி, மக்களுடைய வாழ்க்கை மேம்பட செய்தால்தான் நல்வாழ்வு என்பது அவர்களுக்குக் கொடுக்க முடியும்.

சோவியத்யூனியன் போன்ற சோஷலிச நாடுகளில் கிட்டதட்ட மக்கள் 80 ஆண்டு, 90 ஆண்டு என்று வாழ்கிறார்கள். மருத்துவ மனைகளிலும் படுக்கைகள் காலியாக இருக்கின்றன. காரணம், படுக்கையில் படுக்க நோயாளி இல்லை அங்கே. நம் நாட்டில் பார்க்கிறபொழுது மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை காட்டிலும், நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இருக்கிற படுக்கைகளும் தொட்டிலாக மாறிக் கொண்டிருக்கின்றன. மன்னார்குடியில் மருத்துவமனையில் படுக்கை தொட்டிலாக ஆகி, நோயாளிகள் கீழே தரையை இடித்துக் கொண்டு படுத்திருக்கிறார்கள் தாலாட்டுவதற்குத்தான



ஆட்கள் வேண்டும். அப்படி ஒரு நிலைமை இருக்கிறது. வேறு மருத்துவமனைகளுக்கு வருகிறது. மன்னார்குடி மருத்துவ மனையை எடுத்துக்கொண்டால் அங்கே தண்ணீர் இல்லை, கரண்ட் இல்லை, மோட்டாரும் வேலை செய்யவில்லை பெருந்து மக்கள் ஆயிரக்கணக்கில் வருகிறார்கள். எந்த வியாதிக்குமே மருத்துவமனைக்கு போகவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்களில் 1 கோடியே 40 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். சென்னை போன்ற இடங்களில் 'ஈகாலாஜிக்கல் கிரைசிஸ்' இயற்கை சூழல் பாதிக்கப்பட்டிருப்பதாலே ஹெல்த் பாதிக்கப்படுகிறது. வடசென்னைப் பகுதிகளில் இது ரொம்ப மோசம். கடுமையாக ஹெல்த் பாதிக்கப்படுகிறது. ஹார்ட் அட்டாக் போன்ற பல்வேறு வியாதிகள் வருகின்றன. சென்னையில் உள்ள சாலைகளின் இருபுறங்களிலும் மரங்களை வைத்து வளர்ப்பதற்கு அண்மையில் நியமிக்கப்பட்டிருக்கின்ற தனி அதிகாரி அவர்கள் சிறப்பான கவனத்தை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரங்களில் காற்றில் ஏற்படக்கூடிய அசுத்தத்தின் விளைவு ஆயிரக்கணக்கான பேர்கள் பாதிக்கப்படும் அபாயம் ஒன்று: தண்ணீரிலே சாக்கடை கலக்கிறது. குடிதண்ணீரிலே சாக்கடை கலந்ததாக பத்திரிகையிலே தகவல் வந்தது—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார், தெரியும்—சென்னை சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே கொசு வந்து எம்.எல்.ஏக்களையே தூக்கிக் கொண்டு போய்விடும்போல் இருக்கிறது. கூவத்திலே இருந்து கிளம்பி வருகிறது. கூவத்தை மணக்க வைப்போம் என்றுச் சொல்லி, கூவத்திலேயிருந்து கொசு கிளம்பி வந்து கொண்டிருக்கிறது. அடிக்கின்ற மருந்துகளை கொசுவே குடித்துவிட்டு, கொழு, கொழுவென்று நன்கு பெருத்து இருக்கிறது. இந்த கொசுக்களை முரட்டு முரட்டுக் கொசுக்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் சொன்னார். எனவே, இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. கொசு மருந்தை அடித்து, அந்த மருந்திலே இருக்கக்கூடிய பாய் னை அந்த கொசு எடுத்துக்கொண்டு, தாக்குகிற வீரியம் அதற்கு உண்டாகி, ந்த மருந்தை அது சாப்பிடுகிற அளவு அதற்கு சக்தி வந்துவிடுகிறது.

ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை நம்முடைய நாட்டிலே இருக்கிறது. மருத்துவத் துறையிலே இன்னும் பல்வேறு விஷயங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். சென்னையிலே குடிநீர் வாரியத்திலே கடந்த 28 மாத காலமாக எம்.டி. நிரந்தரமற்றவராக இருக்கிறார். அவரை நிரந்தரமாக்க வேண்டும். அவருக்குப் பொறுப்பு கொடுத்து, டெம்பரரியாக இருப்பதாக எனக்குத் தகவல் இருக்கிறது. அவரை நிரந்தரமாக்க வேண்டும். பல்வேறு பொறுப்புக்களிலிருந்து விடுவித்து, நல்ல அதிகாரிகளாக இருந்தால் அவர்களுக்குப் பல பொறுப்புக்களைக் கொடுத்தால் சிக்கல்கள் வரும், ஆகவே; நல்ல முறையிலே பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. மு. அம்பிகாபதி] [1981 ஏப்ரல் 8

சென்னை போன்ற இலட்சக்கணக்கான மக்கள் வாழ்கின்ற இடங்களில் இப்படிப்பட்ட சிக்கல்களை நீக்குவதற்கு அரசு முன்வர வேண்டும். மதுரை மாவட்டத்திலே ஆயக்குடியில் உள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்கும் திட்டம் 3 ஆண்டுகளாக காலதாமதமாகிறது. அதை உடனடியாக விஸ்தரிக்க வேண்டுமென்றும் அங்கே 20 ஆயிரம் மக்கள் மருந்துகள் வாங்குகிறார்கள் என்பதால் உடனடியாக விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே உள்ள விபரத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே அவினாசி தாலுகா தலைநகராக இருக்கிறது. அப்படித் தாலுகா தலைநகராக மாற்றப்பட்டிருக்கிற அவினாசியிலே மருத்துவ மனையே கிடையாது. மருத்துவ மனையே அங்கே கிடையாதே நான் எதற்காக எம்.எல்.ஏ-வாக இருக்க வேண்டுமென்று திரு. ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். இப்படிப்பட்ட கோரிக்கைகள் நிரம்ப இருக்கின்றன.

திருத்துறைப்பூண்டியிலே மக்கள் கூட்டமே தாங்கமுடியவில்லை மருத்துவ மனையிலே. அங்கே உள்ள மருத்துவமனையை பக்கத்திலே உள்ள மார்க்கெட்டிங் சொசைட்டி இடத்திற்கு மாற்ற வேண்டும், விரிவாக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொ. உத்திராபதி அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். மருத்துவ மனையிலே பெண் டாக்டர்கள் கிடையாது என்று சொல்லி எங்களுடைய தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். அவர் சட்டமன்ற உறுப்பினராக 15 ஆண்டு காலம் இருந்திருக்கிறார், எட்டயபுரத்திலே மருத்துவ மனையை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லிகொண்டு வந்தும் நடக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இவைகளை நிறைவேற்றித் தர வேண்டும். திருவேங்கடத்திலே உள்ள மருத்துவ மனையை விஸ்தரிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அதைப்போலவே பெருந்துறை தாலுகா தலைநகராக இருக்கிறது. பெரியார் மாவட்டத்திலே உள்ள பெருந்துறை தாலுகாவினுடைய தலைநகராக மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கே மருத்துவ மனையே கிடையாது. அங்கே மருத்துவ மனை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப்போன்று தாலுகா தலைநகர்களிலே உள்ள இடங்களிலே எல்லாம் மருத்துவ மனைகளை ஏற்படுத்தி, அரசாங்கம் ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து அமலாக்க வேண்டும். இது ஒன்று. இரண்டாவது, தாலுகா மருத்துவ



1981 ஏப்ரல் 8] [திரு. மு. அம்பிகாபதி]

மனைகள் அனைத்திலும் ஜெனரேட்டர்கள் வைப்பதாக அமைச்சர் அவர்கள் என்னிடத்திலே உறுதி கொடுத்தார்கள். அதுபற்றிய திட்டமோ செயற் குறிப்போ இங்கே எதிலேயும் காணோம். அது மட்டுமல்ல, இன்றைக்குப் பல மருத்துவ மனைகளிலே தண்ணீர் இன்றி, படுக்கைகள் இன்றி, காற்றின்றி, மோசமான நிலைமைகள் இருக்கின்றன. மருத்துவ மனைகளிலே ஜெனரேட்டர்கள் கிடையாது. ஆனால், சினிமா கொட்டகையிலே ஜெனரேட்டர் ஓடுகிறது. சினிமா கொட்டகைக்கு ஜெனரேட்டர் மோஸ்ட் இம்பார்ட்டன்ட்ட அங்கே ஜெனரேட்டர்கள் இல்லையென்றால் யாரும் செத்துவிட மாட்டார்கள். ஆனால், மருத்துவ மனைகள் அப்படியல்ல. நான் சினிமாவுக்கு எதிரியல்ல. ஜெனரேட்டர் சினிமா கொட்டகையிலே இருக்கட்டும், ஏர்கண்டிஷன் இருக்கட்டும். ஆனால், எங்கே வேண்டுமோ அங்கே இல்லை, உடனடியாக—அரசாங்க மருத்துவ மனைகளி[illegible]—தனியார் மருத்துவ மனைகளிலே வைத்திருக்கிறார்கள்.—ஜெனரேட்டர்கள் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆப்பரேஷன் நடக்கும்போது கரண்ட் இல்லாமல் போய்விட்டால் என்னசெய்ய முடியும்? தண்ணீர் இல்லை' மோட்டார் [illegible] மோட்டார் வரவில்லை என்று சொல்கிறார்கள். குளித்தலை தொகுதியிலே உள்ள இனுங்கூரிலே இந்த நிலைமை இருக்கிறது. தலைமை மருத்துவ மனைகளிலே போதுமான வசதிகள் இல்லை. இளையான்குடி மருத்துவ மனையை விஸ்தரிக்க வேண்டுமென்றும் பரமக்குடி மருத்துவ மனையிலே பல் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்றும் திரு. சிவசாமி அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒட்டப்பிடாரத்திலே மருத்துவ மனையிலே பெண் டாக்டர்கள் இல்லை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை மருத்துவ மனையிலே எக்ஸ்ரே யூனிட் வாங்கி ஒன்றரை, இரண்டு ஆண்டு காலம் ஆகிறது. ஏதோ சான்றிதழ் வரவேண்டுமாம், அதற்காக அது இயங்காமல் இருக்கிறது. கும்பகோணம் மருத்துவ மனையிலே ஜெனரேட்டர் கொடுக்கப்பட்டாலும் அதைப் பொருத்துவதிலே காலதாமதம் ஏற்பட்டு கடைசியாக அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து ஸ்பெஷல் அட்டன்ஷன் கொடுத்த பிறகு, இப்போது அது நடந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

(நண்பகல் 12—00)

ஆகையால், யாராவது காண்ட்ரிபியூஷனாக ஜெனரேட்டர் வாங்கிக் கொடுத்தால் கூட அதைப் பொருத்துவதற்குக் கூட காலதாமதம் ஏற்படுகிறது என்றால் அதற்கு என்ன காரணம்? அவ்வளவு தூரம் பொறுப்பற்ற நிலை இருக்கிறது. அங்கேயுள்ள என்ஜினியரைக் கேட்டால் அவர் இன்னொருவரைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார். காலரா என்றால் அதற்குக்

கொட்டகை போடுவது ஒரு பிரிவு, ஊசி போடுவது ஒரு பிரிவு என்று தனித் தனியாகச் செய்து எல்லாம் ஒன்று சேர்ந்து காலரா வுக்கு வைத்தியம் பார்ப்பதற்குள் காலரா நோய் கண்டவரே காலாவதியாகி விடுவார். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக் கின்றன. எனவே, இதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சிக்குச் சேர்க்கப்படுகின்ற பெண்கள் அனை வருக்கும் ஸ்டைபன்ட் கொடுக்கப்பட வேண்டும். தஞ்சையிலே 35 பேர்களைச் சேர்க்கிறார்கள் என்றால் ஒரு சிலருக்குத்தான் ஸ்டைபன்ட், மற்றவர்கள் ஸ்டைபன்ட் வேண்டாமென்று எழுதிக் கொடுத்து விடவேண்டுமென்று சொல்லி, அவர்களும் அவ்வாறு எழுதிக் கொடுத்துவிட்டுச் சேர்கிறார்கள். ஏழை, எளியவர்களாக இருக்கின்ற அவர்கள் பிறகு சாப்பாட்டிற்கும், தங்குவதற்கும் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, எவ்வளவு பேர்களைச் சேர்க்கிறோமோ அவ்வளவு பேர்களுக்கும் பணம் கொடுக்கின்ற முறையை மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலேயே எல்லோருக்கும் கொடுக் கப்படும் என்று அறிவிக்க வேண்டும் : அதற்குச் சில இலட்சங்கள் தான் செலவாகலாம் என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவம், பொதுச் சுகாதாரம் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தலைவ ரவர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். இந்த மருத்துவ மானியத்தை பொறுத்த வரையில், மருத்துவர்கள் ஆண்டவனுக்கு அடுத்த நிலையிலே இருப்பவர்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அப்படி, ஆண்டவனுக்கு அடுத்தபடியாக இருக்கின்ற மருத்துவர்கள் மூலமாக இந்த நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கத்தக்க வகையிலே பல நல்ல திட்டங்கள் இந்த மருத்துவ மானியத்தில் உள்ளடங்கிய நிலையில் இது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தாயன்போடு செய்திருக்கிறார்கள் என்று பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தாயன்போடு அவர்கள் செய்திருந்தாலும் சட்டமன்ற உறுப் பினர்களைப் பொறுத்த மட்டிலும் அவரவர்கள் தொகுதிகளுக் காகச் சில கோரிக்கைகளை எடுத்து வைக்கின்ற நேரத்தில், நாங்கள் புரட்சித் தலைவரின் எங்கள் வீட்டுப் பிள்ளைகளாக அந்த நிலையிலே இருந்துதான், அழுத பிள்ளைதான் பால் குடிக் கும் என்ற நிலையில் தாயன்பு கொண்ட அமைச்சரவர்களிடத்தில் இந்த நேரத்தில் சில கோரிக்கைகளை வைக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.



பவானிசாகர் தொகுதியைப் பொறுத்தவரையில் நெசவாளர் களும், விவசாயத் தொழிலாளர்களும் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியிலே பவானிசாகர் பகுதியிலே மைய பகுதியாக இருக்கின்ற புஞ்சைப்புளியம்பட்டியான இதயப் பகுதி யைச் சுற்றிலும் ஏறக்குறைய 17 பஞ்சாயத்துக்கள் உள்பட 150 கிராமங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. அதிலே நெசவாளர் களும் மிக அதிகமாக இருக்கிறார்கள். விவசாயத் தோழர்களும் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. ஆனால் போதுமான அளவிற்கு மருத்துவ வசதி பெறத்தக்க நிலை இன்றுவரை இல்லாமல் இருக்கிறது. எனவே, அங்கே அரசு பொது மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே பவானிசாகர் உட்பட, அரசூர், கூடக்கரை, சாவக் கட்டுபாளையம், மேலாண்டம்பாளையம் போன்ற இடங்களில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால் அருகிலே உள்ள சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் போன்ற இடங்களுக்குச் சென்றுதான் பெற வேண்டியிருக்கிறது. பிரசவ வேதனை ஏற்பட்டு விட்ட அவசர நேரத்தில் உடனடியாகப் போவதற்கான வசதியில்லாத நிலைமை இருக்கிறது. திடீர் விபத்துக்கள் ஏற்பட்டாலும் உடனே போவதற்கான உடனடி வசதிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது.

நெசவாளர்கள் அதிகமாக இருக்கின்ற பகுதி. அங்கே அதிக மாகக் காசநோய் தொற்றிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் பஞ்சாயத்து ஒன்றியங்களில் இந்தக் காசநோய் மருத்துவத்திற் காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற படுக்கைகளின் எண்ணிக்கையை இப் பொழுது இருப்பதைவிட இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும். அதன் மூலமாக பலர் பயன் பெற முடியும் என்று சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மருத்துவத் துறையிலே நடமாடும் மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது பாராட்டத்தக்க ஒன்று. அதில் நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதிக்கு அதிக முன் னுரிமை கொடுத்து, சாவக்கட்டுபாளையம், மேலாண்டம்பாளை யம் போன்ற இப்படிப்பட்ட இடங்களில் நெசவாளர்கள் அதிக மாக இருக்கின்ற காரணத்தால் அந்த இடங்களுக்கு முன்னுரிமை வழங்கி வாரத்திற்கு ஒரு முறையாவது அங்கே சென்று அவர் களுக்கு உதவிகரமாக நடமாடும் மருத்துவ மனை பணியாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவர்களைக் கிராமப் பகுதிகளுக்கு மாற்றம் செய்யும் பொழுது அவர்கள் அங்கே போய்ப் பணியாற்றுவதற்கு அச்சப் படுகிறார்கள். எல்லோருமே நகரத்தில் இருக்க விருப்பப்படு

கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தமட்டிலும் கிராம மக்களுக்கு நல்ல நன்மைகள் பயக்கத் தக்க வகையிலே, நல்ல திட்டங்களை, இந்த மருத்துவத் துறையிலே அமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். ஆனால், மருத்துவர்கள் கிராமப் பகுதிகளுக்குப் போக அச்சப்படுகிறார்கள். அச்சப்படுகிறார்களா அல்லது, அவர்களுக்குத் தேவையான வசதிக் குறைவுகள் காரணமாக போக மறுக்கிறார்களா என்று தெரியவில்லை. அப்படிப்பட்ட மருத்துவர்கள் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்து அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்குக் கிராமங்களிலே குவார்ட்டர்ஸ் கொடுத்து, கிராமப் பகுதிகளுக்கு அதிகமான மருத்துவர்களை அனுப்புகிற நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து மலேரியா நோய் ஒழிப்புப் பணியாளர்கள் முன்பெல்லாம் வீடுகளுக்குச் சென்று எழுதி, அந்தப் பணியினைச் செய்து வந்தார்கள். 1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளுடைய கணக்கைப் பார்த்தால், அவர்கள் வீட்டுச் சுவற்றிலே எழுதி ஒழித்ததை விட, எழுதாமலே ஒழித்தது நன்கு தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட முறை தேவையற்றது என்று நான் கருதுகிறேன். ஆகவே அவர்களுக்கு இதிலிருந்து விடுதலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, சுகாதாரக் குடிதண்ணீர் வசதி குறைவாக இருக்கிறது. புளியம்பட்டி மருத்துவ மனையை எடுத்துக் கொண்டால் ஒரே ஒரு பைப் வைத்து, தண்ணீரில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மருத்துவமனை என்பதால், இன்னும் இரண்டு மூன்று பைப்களைப் போட்டு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி காச நோய் மருத்துவ மனைக்கு, இங்கிருந்து பரிந்துரை செய்து, அல்லது அமைச்சரிடம் சொல்லி, ஆட்களை அனுப்பினால், சேர்த்துக் கொள்வதில்லை. அங்கேயிருக்கிற எல்லோரையும் குறிப்பிடவில்லை. சில மருத்துவர்கள் பணம் பெற்றுக்கொண்டு அனுமதிப்பதாகப் புகார்கள் வருகின்றன. ஆப்பரேஷன் செய்யக்கூட பணம் பெறுகிறார்கள் என்ற புகார்கள் வருகின்றன. அப்பேர்ப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அம்மாதிரி தவறுகள் நடைபெறாத வகையில், மக்களுக்கு வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வின்னப்பள்ளியில் பிச்சைக்காரர் விடுதி இருக்கிறது. பிச்சை எடுத்ததாம் பெருமாள், அதைப் பிடுங்கித்தாம் அனுமான் என்று சொல்வார்கள். அவனே மறுவாழ்வு வேண்டுமென்று தன்னுடை வாழ்க்கையை ஒப்படைத்துக் கொள்கிறான். விதியின் கையில்



உயிரை ஒப்படைத்துவிட்டு, நான் நடந்து போய்க் கொண்டிருக்கிறேன் என்று அவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். ஆனால் அங்கே பணி புரிகின்ற மருத்துவர்கள், ஊழியர்கள் சிலர், உணவு விநியோகம் செய்கின்றபொழுது, உணவை சுயநலத்திற்கு எடுத்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட புகார்கள் வருகின்றன. அவ்வப்பொழுது பிச்சைக்காரர்களை முன்னேற்றுவதற்கான, அவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கான திட்டங்களை நாம் சிந்தித்து வருகிறோம். அந்நிலையில், இவ்வாறு நடைபெறுவது தவிர்க்கப்பட வேண்டும். அப்படிப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், இன்றைக்கு எல்லா வகையிலும் நல்ல முறையிலே இருக்கிற இந்த மானியக் கோரிக்கையிலே, எவ்வளவோ திட்டங்களுக்கு அமைச்சர் அவர்கள் நல்ல நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை யாருக்காகப் போட்டிருக்கிறோமோ அவர்களுக்குப் பயன்படும் வகையில், மேல் மட்டத்திலேயிருக்கிற அதிகாரிகள், கீழேயிருக்கிற குறைபாடுகளைத் தவிர்த்து, இன்னும் பரவலாக அந்த வசதிகள் கிராம மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பை அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. சு. முத்துக் கிருஷ்ணன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையைப் பொறுத்த அளவிலே, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இந்தத் துறை ஏழை, எளிய மக்களுக்கு நல்ல முறையிலே சேவையினை செய்து கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பேசுகின்றபொழுது கூட சென்னையிலே இருக்கிற மருத்துவ மனையினுடைய புகழ் மங்கி வருவதாகக் குறிப்பிட்டார்கள். நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன், சென்னையைப் பொறுத்த அளவிலே, மருத்துவத் துறையைப் பொறுத்த அளவிலே, அதிலே மருத்துவம் பெறுவதற்காக, தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து கூட குறிப்பாக, மொரிஷியஸ் தீவிலிருந்து, மலாய் தீவிலிருந்து, இன்னும் அதுபோன்ற இடங்களிலிருந்து, அமைச்சர்களும், ஜனாதிபதிகளும் கூட, இந்தியாவிலே வேறு எங்கும் இல்லாமல், சென்னைக்கு வந்து, மருத்துவ வசதியைப் பெற்றுச் செல்கின்றார்கள் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, சென்னை மருத்துவ மனையிலேதான் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே, சி.டி. ஸ்கேன், என்ற கருவியை ஏறத்தாழ ரூ. 80 இலட்சம் செலவிலே அரசு வாங்கி வைத்து, அதிலே குறிப்பாக, சாலை விபத்துக்களிலே காயமுறுகிறவர் யாராக இருந்தாலும், தலையிலே அடிபட்டிருந்

தாலுங்கூட, எல்லாவகையிலும் அதைப்பற்றி அறிந்து, உடனடியாக அவர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்கு, சென்னையிலேதான் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு, மருத்துவ வசதி கூடுதலாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-10]

அது மட்டுமல்ல. சி. டி. ஸ்கேன் கருவி மட்டுமல்ல. பாடி ஸ்கேன் வாங்குவதற்குக் கூட இந்த அரசு உத்தேசித்துக் கொண்டு இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் கூட சம்மதித்து விட்டதாக நான் அறிகிறேன். அப்படி வாங்குகிற போது அந்தக் கருவியை தமிழகத்திலே உள்ள மதுரை மருத்துவ மனையிலே அமைத்துக் கொடுத்து இன்னும் தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்கு உதவி புரிகிற வகையிலே அந்த வசதியைச் செய்து கொடுக்கவேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நடமாடும் மருத்துவமனையைப் பொறுத்த வரையில், புரட்சித் தலைவர் அவர்கள்தான் தமிழகத்திலே இந்த நடமாடும் மருத்துவமனைகள் என்ற அந்த திட்டத்தை கொண்டு வந்து ஏழை எளிய மக்களுக்கு, அவர்களுடைய வீட்டிலே போய் மருத்துவ வசதியைச் செய்கின்ற அளவுக்கு, கிராமப் புறங்களுக்குச் சென்று மருத்துவம் செய்து வருகிறது என்று சொன்னால் அதற்காக இந்த அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், விலை உயர்ந்த மருத்துகள் மற்றும் எல்லா மருந்துகளும் ஏழை மக்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே இந்த அரசு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வது, இந்திய மருத்துவத்தைப் பொருத்தவரையிலும் குறிப்பாக சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையில், மூலிகையை வளர்ப்பதற்கு, அதன் மூலம் மருந்துகள் பெறுவதற்கு இந்த அரசு மூலிகைத் தோட்டங்களை தொடங்கி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கே ஏராளமான மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. விவசாயக் கல்லூரிகளுக்கு விவசாயப் பல்கலைக் கழகம் இருக்கின்றது. எனவே இந்த மருந்துவக் கல்லூரிகளுக்கு தனியாக மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



மாவட்டந்தோறும் டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர்கள் இருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் சுகாதார வசதிகளைப் பொறுத்தவரையில் துப்புரவுத் தொழிலாளர்களை அவர்கள் நியமிப்பது இல்லை. குமரி மாவட்டதைப் பொருத்தவரையில் அந்தப் பகுதிகளிலே இதுபோன்ற தொழில்களைச் செய்வதற்கான பணியாளர்கள் போதாது. அதை நான் ஏற்கனவே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். குறிப்பாக ஒரு தொழிலாளி இறந்துவிட்டால்கூட, மறு தொழிலாளியை அந்த இடத்திலே நியமிப்பதற்குக் கூட இன்று முடியாத அளவிலே மாவட்ட சுகாதார அதிகாரி இருந்துகொண்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உடனடியாக குமரி மாவட்டத்தில் இந்தத் துப்புரவுத் தொழிலாளர்களை போதுமான அளவுக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் இங்கே அவைமுன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளான பொதுச் சுகாதாரம், மருத்துவம் ஆகியவற்றின் மீது பல்வேறு வகையான விளக்கங்களைப் புத்தக வடிவில் இங்கே கொடுத்து இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் எங்களுடைய கட்சியின் சார்பில் நான் கருத்துக்களைக் கூறக்கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் பேசுகின்றபோது பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரசுத் துறையைப் பராட்டினாலும், கடைசியாக தங்களுடைய தொகுதியில் இந்தந்த ஊர்களில் மருத்துவ மனைகள் தேவை என்கிற கோரிக்கைகளை வலுவாகவும், பலமாகவும் வைத்துப் பேசினார்கள். இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது என்றால். நாம் எவ்வளவு தான் நிதியை ஒதுக்கி இந்த மருத்துவத் துறையில் வசதிகளை ஏற்படுத்தித் தருகிறோம் என்று சொன்னாலும் கூட இத்தகைய நிலைமைகள் தொடர்ந்து இருக்கின்றன என்பதாகும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு ஊருக்குப் போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று சொல்கிறோம் என்றால் அந்த ஊரிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் குற்றங்கள் அதிக அளவிலே நடைபெறுகின்றன என்று பொருள். அதைப்போலவே, ஒரு ஊரில் மருத்துவமனை தேவை என்று கோரிக்கை வருகிறது என்று சொன்னால் அந்த ஊரிலும், அதைச் சார்ந்து இருக்கின்ற

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 ஏப்ரல் 8

சுற்றுப்புற கிராமங்களிலும் நோய் அதிக அளவில் உருவாகி வருகின்றது என்பதை நாம் உணரவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சுமார் 66 கோடி ரூபாய் அளவிற்கு கோரிக்கை வைக்கிற நேரத்தில், நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்னலே பேசிய டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சென்னை நகரத்தில் உள்ள பொது மருத்துவ மனையில் சிகிச்சை சரியாகக் கிடைக்காத காரணத்தால், தமிழ் நாட்டில் உள்ளவர்கள் வெளிமாநிலங்களுக்கு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அந்த மருத்துவ மனை எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல்படவில்லை என்று சொல்வதற்கு முற்படுவதற்கு முன், ஒன்றைத் தெரிவிப்பது கடமை என்று கருதுகிறேன். அந்த மருத்துவமனையில் சாதாரணமாக ஒரு மனிதன் மூக்கைப் பிடித்துக் கொண்டு தான் உள்ளே செல்லவேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு நாற்றம் அடிக்கிறது. அசுத்தம் அளவுக்கு மீறி இருக்கிறது. எங்கே பார்த்தாலும் எச்சில் இலைகள் இருக்கின்றன; எங்கே பார்த்தாலும் குப்பை. எந்த வார்டில் நடந்தாலும் துர்நாற்றம். இதையெல்லாம் கட்டுப்படுத்த முடியாதா என்றால் முடியும். தனியார் மருத்துவ மனைகள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. அங்கேயெல்லாம் இப்படிப்பட்ட துர்நாற்றம் இல்லை. கோடிக்கணக்கில் அரசு அந்தத்துறைக்கென செலவு செய்கிறபோது, அதை ஒழுங்காகப் பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கக் கூடாதா என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு சந்தர்பங்களில் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்த மருத்துவ மனைக்கு திடீர் விஜயம் செய்து இருக்கிறார்கள். இப்படி மிகுந்த பொறுப்பு வாய்ந்த நிலையில் இருப்பவர்கள் அங்கே விஜயம் செய்தபின்பும் அந்த நிலைமைகள் மாற்றப்பட வில்லை, என்றால் அந்த மருத்துவ மனைகளில் சீர்கேடுகள் நிலைபெற்று இருக்கின்றன என்று சொன்னால், இப்படிப்பட்ட நாற்றம், அசிங்கம் இருந்தால் யார்தான் அந்த மருத்துவ மனையை சோதனையிட்டு திருத்தப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன், அங்கேயிருக்கும் சுற்றுப்புற சூழ்நிலையை— என்விரான்மென்டை சீராக்குகின்ற வகையில், அதை நல்ல முறையில் திருத்தியமைக்கிற முறையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 8] [திரு. நா. சுந்தரராஜ்]

நம்முடைய மருத்துவ மேல் பட்டப் படிப்பு சம்பந்தமாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, ஒரு மாதத்திற்கு மேல் ஆகியும் இன்னும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கபடவில்லை. சாதாரணமாக ஜூன் மாதத்தில் அந்தப் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டு விடும். இந்த ஆண்டு அதற்கான இன்டர்வியூ கூட இதுவரையில் நடைபெறவில்லை. எப்போது அந்த கோர்ஸை நீங்கள் ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்று தெரியாமல் இருக்கிறது. பிரசித்தி பெற்ற நம்முடைய எழும்பூர் மருத்துவ மனையின் டைரக்டர் பதவி 3 மாத காலமாக நிரப்பப்படாமல் இருக்கிறது. ஆதற்கு யார் காரணம்? சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவ மனையில் உள்ள டீன் ஓராண்டு காலமாக லீவில் இருப்பதால் அந்தப் பதவி நிரப்பப்படாமல் இருக்கிறது. ஒருவர் டெம்பரரியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார் என்றும் அறிகிறேன். இதுபோன்ற குறைபாடுகள் தவிர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நர்சஸ் செலக்ஷன் லிஸ்ட் இன்னும் வெளிவரவில்லை. ஆனால் அடுத்த ஆண்டு நடந்த இருக்கும் நர்ஸஸ் கோர்ஸுக்கு விண்ணப்பங்கள் கேட்டு அறிவிப்பு வந்து இருக்கிறது. முதல் ஆண்டு தேர்வு லிஸ்ட் வராத நிலையில் இரண்டாவது தேர்வுக்கான முயற்சி எடுக்கப்படுவது வேடிக்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, அசிஸ்டெண்ட் சர்ஜனுக்கும், ஹானரரி சர்ஜனுக்கும் இடையே உள்ள டிஸ்பேரிடியை பற்றியதாகும். அங்கே மருத்துவ மனைகளில் பணிபுரிகின்ற அசிஸ்டென்ட் சர்ஜன்கள் 20 ஆண்டு காலம் தொடர்ந்து பணிபுரிந்தாலும், சீப் சர்ஜனாக ஆக முடியவில்லை. ஆனால் இடையிலே ஹானரரி உதவி சர்ஜனாக வந்தவர்கள் பல்வேறு சந்தர்பங்களில் தலைமை மருத்துவாக வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. இதனால் பல நேரங்களில் ஆஸ்பிட்டல்களில் உதவி சர்ஜெனாக பணிபுரிகின்றவர்களுக்கு ஜூனியராக இருப்பவர்கள் கூட, குறைந்த ஆண்டு அனுபவத்தில் சீனியராக ஆகிவிடுகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட முறைகளைத் தவிர்க்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். 20 ஆண்டுகள் பணிபுரிந்தபின்பும் ப்ரமோஷன் இல்லை என்கிற நிலைமை தவிர்க்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்கபல் 12—20)

அதைப்போல கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள் மருத்துவப் படிப்பு, எம். பி. பி. எஸ்., படித்து வெளிவர வாய்ப்பு இருக்க வேண்டும். இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற

மாணவர்களுக்கு இந்த எம். பி. பி. எஸ். தேர்வில் சரியான விகிதாச்சாரம் கிடைக்கவில்லை; அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. காரணம், ஹையர் செகன்டரி, பி.யு.சி. படிப்பில் நல்ல மார்க் வாங்கியவர்களைத்தான் தேர்வு செய்கிறார்கள். அப்படிப் பார்த்தால் கிராமப்புறங்களில் இருக்கின்ற மாணவர்களுக்கு நல்ல படிப்பு வசதி இல்லை; கான்வென்ட்' வசதி இல்லை. அதனால் அவர்கள் குறைந்த மார்க்தான் வாங்க முடியும். ஆனால் நகரங்களில் இருக்கிறவர்களுக்கு படிப்பதற்கு நல்ல வாய்ப்பு வசதிகள் இருக்கின்ற காரணத்தால் அதிகமாக மார்க் வாங்க முடிகிறது, ஆகவே, நகரப்புறங்களில் உள்ளவர்களே அதிகமாக எம். பி. பி. எஸ். படிப்புக்கு வரமுடிகிறது. அதனால், பாக்வார்டு கிளாஸ், ஷெட்யூல்டு காஸ்ட், பழங்குடி மக்களுக்கு விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்கின்றதைப்போல கிராமப்புற மாணவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாவட்ட வாரியாக இவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு கோட்டா என்ற அடிப்படையில் நகரத்திற்கும் கிராமத்திற்கும் விகிதாச்சார அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்தால் கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கும் மருத்துவக் கல்லூரியில் சேர வாய்ப்பு ஏற்படும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை பரிசீலிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதைப்போல பெண்களுக்கு என்று தனி ஒதுக்கீடு இல்லை, பெண்களுக்கு தனியாக ஒதுக்கீடு செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

அதைப்போல நம்முடைய அரசாங்கம் 'இன்டர் காஸ்ட் மேரேஜ்' செய்தவர்களுடைய குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் இட ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும். இன்டர் காஸ்ட் மேரேஜை ஊக்குவிக்க வெறும் தங்கப்பதக்கம் மட்டும் கொடுத்தால் போதாது. இன்னும் கூடுதல் ஊக்கமளிக்க, உற்சாகமளிக்க, அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மருத்துவக் கல்லூரியில் இட ஒதுக்கீடு நீங்கள் செய்தாக வேண்டும். அதனால் நல்ல ஊக்கம் கொடுப்பதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் கிராமப்புறங்களில் பணியாற்றும் டாக்டர்கள் தொடர்ந்து கிராமங்களிலே பணியாற்றும் நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஒருமுறை கிராமத்திற்கு பணியாற்ற சென்றுவிட்டால் அவர் அங்கேதான் இருக்க வேண்டியிருக்கிறது; நகரத்திற்கு வந்து பணியாற்றும் வாய்ப்பு அவருக்கு கிடைப்பதில்லை. ஆனால் சென்னை



மாநகரம் போன்ற பெரிய நகரங்களில் ஒருமுறை பணியாற்றத் தொடங்கியவர்களை கிராமப்புறங்களுக்கு மாற்ற வேண்டிய சூழ்நிலை வந்தால், அமைச்சரே நினைத்தால் கூட முடியவில்லை. அமைச்சருடைய முயற்சியையும் தடுக்கின்ற சக்தி அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதற்குக் காரணம் பல்வேறு 'புல்லிங்ஸ்' இருக்கிறது. அதனால் அவர்களுடைய சேவை கிராம மக்களுக்கு கிடைக்காமல் போவதோடு, கிராமப்புறத்தில் பணியாற்றும் டாக்டர்கள் நகரங்களில் கிடைக்கின்ற வசதியைப் பெறமுடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி, கிராமம்-நகரம் என்ற வேற்றுமை இல்லாமல் சமநிலையில் டாக்டர்கள் பணியாற்ற ஏற்பாடு செய்தால் நிச்சயமாக இந்த சுகாதார இலாகா மக்களுக்கு பணிபுரியும் ஒரு இலாகாவாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் பல்வேறு மருத்துவ மனைகளில் பல மருந்துகள் கிடைக்காத நிலை இருந்து கொண்டிருக்கிறது. நான் கூட சில நாட்களுக்கு முன்பு சென்னை மருத்துவமனை டீனை சந்தித்தேன். காரணம் எஞ்சினியரிங் கல்லூரி பேராசிரியர் ஒருவர் அங்கே சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு 'ஹார்ட் அட்டாக்' சம்பந்தப்பட்ட நோய். அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு ஒரு மாதமாக அங்கே இருக்கிறார். அவருக்குத் தேவையான ஒரு மருந்து அங்கே இல்லை; வெளியிலே இருந்து கொண்டு வர வேண்டும். அந்த மருந்தின் விலை 1,500 ரூபாய், பம்பாயிலிருந்து வரவேண்டும் என்று சொல்கிறார்கள். அதை வாங்க அந்த டாக்டர்கள் தயங்குகிறார்கள். 1,500 ரூபாய் விலையுள்ள மருந்தை வாங்கி அவருக்கு கொடுக்க முடியுமா என்று நினைக்கிறார்கள். அந்த மருந்து கொடுத்தால்தான் அவருக்கு இருக்கின்ற நோயை சரியாக 'டயக்னஸ்' செய்ய முடியும் என்றும் சொல்கிறார்கள். அந்த மருந்து கொடுக்கப்பட்டு ஒரு எஞ்சினியரிங் கல்லூரி பேராசிரியர் குணமடைந்து விட்டால் அவரால் எத்தனையோ எஞ்சினியர்களை உருவாக்க முடியும் என்பதையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு பார்க்க வேண்டும். பணத்தின் அடிப்படையிலேதான் மருந்து வழங்கப்படும் என்று பார்த்தால் இந்த நாட்டில் மருத்துவத் துறை தேவை இல்லாமல் போய்விடும். ஆகவே, மருந்தின் தேவையைப் பொறுத்து, ஏழை பணக்காரர் என்று பார்க்காமல் யாருக்கு எந்த உதவியை செய்ய வேண்டுமோ அந்த உதவியைச் செய்வதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. குறிப்பாக தஞ்சையில் இருக்கிற பெரிய மருத்துவமனையில் உயிர்க்கொல்லி வியாதியான ஹார்ட் அட்டாக் போன்ற வியாதிகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கத்

தேவையான மருந்துகள் இல்லை. ஹார்ட் அட்டாக் தீவிர சிகிச்சைப் பிரிவில் மாரடைப்பு நோய்க்கு முக்கியமாகத் தேவைப்படும் 'டெக்கட்ரான்', 'கார்டிசான்' போன்ற அத்தியாவசியமான மருந்துகள் இல்லை. நோயாளிகள் வெளியிலே இருந்துதான் வாங்கிவர வேண்டியிருக்கிறது. அந்த மருந்துகளை எழுதி கொடுப்பதற்குக் கூட டாக்டர்களுக்கு அதிகாரம் இல்லை. எழுதிக் கொடுக்கக்கூடாது என்பது அரசின் உத்தரவு. அடுத்து அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு சலைன் ஏற்றுவதற்கு தேவையான உபகரணங்கள் ஐ.வி. செட் கிடையாது. நோய் பரவாமல் தடுக்க தடுப்பு மருந்தான டெட்ராசைக்கிளின் போன்ற மருந்துகள் கூட கிடையாது. பொதுவாக இந்த மருத்துவமனையில் எந்தவிதநோய்த்தடுப்பு மாத்திரைகளும் கிடையாது. தஞ்சாவூர் போன்ற பெரிய நகரத்திலே இருக்கின்ற மருத்துவமனையிலேயே இவ்வாறு போதிய மருந்துகள் இல்லை என்று சொன்னால் கிராமங்களிலேயும் மற்ற நகரங்களிலேயும் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் மருந்துகள் நிச்சயமாக கிடைக்காதுதான்.

அடுத்து பல்வேறு குறைபாடுகளைப் பற்றி இங்கே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார்குடி தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸாக மாற்றப்பட்டது. அப்படி மாற்றப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் 50 படுக்கையுடன் கூடிய மருத்துவமனையாக அங்குள்ள மருத்துவமனையை ஆக்கவேண்டும் என்ற நீண்ட நாளைய கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அங்கே பெண் மருத்துவர் இல்லை. ஆகவே, அதற்கெல்லாம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சோழவந்தான் தொகுதியில் பி.எச்.சி. இல்லை. என்று சொல்கிறார்கள். அதுபோல பாலமேடு என்ற இடத்தில் பப்ளிக் ஹெல்த் சென்டர் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும்.

அடுத்து திண்டிவனம் தொகுதியிலே உள்ள மருத்துவமனையிலே குழந்தைகள் நல வார்டு இல்லை. அடுத்து புதுக்கோட்டையில் இருப்பது ஒரு பெரிய மாவட்ட மருத்துவ மனை. அங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட பலமுறை சென்று பார்த்திருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தொழில்துறை அமைச்சர் அவர்களிடமும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்குள்ள மருத்துவமனைக்குச் செல்கின்ற குழந்தைகளுக்கு என்று குழந்தைகள் நல வார்டு இல்லாத காரணத்தால் அங்குள்ள குழந்தைகளை எல்லாம் தொட்டிலில் கட்டி மரத்திலே தொங்க விட்டிருக்கிறார்கள்.





அடுத்து நிரந்தரமான சித்த வைத்தியரை நியமிக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் செய்து தரவேண்டும்.

அடுத்து கள்ளக்குறிச்சி மருத்துவமனையில் நோயாளிகள் தங்கும் வசதி இல்லை. இரத்த சேமிப்பு நிலையம் இல்லை. ஆகவே அதற்கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சின்னசேலம் என்ற பகுதியிலே அரசினர் மருந்தகம் என்று இருப்பதை மாற்றி மருத்துவமனையாக உருவாக்கித்தரவேண்டும் என்று அங்குள்ள மக்கள் கேட்டிருக்கிறார்கள்.

அடுத்து செங்கிப்பட்டியிலே நடத்தப்படுகின்ற டி. பி. சேனிட்டோரியத்தை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டு வருகின்றது. அது தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலே செயல்பட்டு வருகின்றது. அதற்குப் பதிலாக அரசாங்கம் தன்னுடைய நிர்வாகத்திலேயே அந்த சேனிட்டோரியத்தை ஏற்று நடத்த வேண்டும். அப்போதுதான் நோயாளிகளுக்கு முழுமையாக உதவி கிடைக்க வழி ஏற்படும்.

இதைப்போல இன்றைக்கு பல்வேறு பிரச்சினைகள் குறித்து மருத்துவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த நல்ல திறமையான டாக்டராக இருக்கலாம். ஆனால் மக்கள் எதிர்பார்ப்பது மருத்துவத் துறைக்கு பொறுப்பு ஏற்று இருப்பவர் ஒரு நல்ல டாக்டராக இருக்கவேண்டும் என்பதல்ல. ஆனால் ஒரு சிறந்த நிர்வாகியாக இருக்க வேண்டும் என்பதுதான் மக்களுடைய கோரிக்கை. ஒரு சிறந்த டாக்டர் என்று சொன்னால் சுமார் 500 பேர்களுக்கு நல்ல முறையில் மருத்துவம் செய்யக்கூடிய ஒருவராக இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டிலே இருக்கின்ற 4½ கோடி மக்களுக்கும் பலனளிக்கக்கூடிய வகையிலே நல்லதொரு நிர்வாகத்தினை செயல்படுத்துகின்ற வகையிலே ஒரு துறையாக மருத்துவத்துறை உருவாக வேண்டும் என்றால் அதற்கு பொறுப்பு ஏற்று இருப்பவர்கள் சிறந்த நிர்வாகியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தத் துறை சிறப்பாக இருக்கும். ஆகவே அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோனார்பட்டி என்ற ஊரிலே சுமார் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு 50 ஆயிரம் ரூபாய் பொதுமக்கள் சேர்த்து கொடுத்து மருத்துவமனை வேண்டும் என்று கேட்டார்கள்

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 ஏப்ரல் 8

அரசாங்கத்தினிடத்திலே. 1977-வது ஆண்டிலே பல்வேறு சங்கடங்களுக்கிடையே மருத்துவமனை அமைக்கப்பட்டு ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டார். ஆனால் இன்று அந்த மருத்துவமனை இயங்கவில்லை. காரணம் பணம் இல்லை என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

அடுத்து பொன்னமராவதியில் உள்ள மருத்துவமனையில் எக்ஸ்ரே யூனிட் வேண்டும் என்று கேட்டு அதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்காக தனியான கட்டிடம் கட்டப்படாமல், இருக்கின்ற கட்டிடத்திற்குள்ளேயே ஒரு இடத்தைப் பிரித்து ஒரு பகுதியிலே எக்ஸ்ரே யூனிட்டை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே இருக்கின்ற குறையினைப் போக்க வேண்டும் என்று கேட்டால் இருக்கின்ற வசதியினைக் குறைக்கின்ற நிலைமைதான் இருக்கின்றது. ஆகவே, நான் கேட்டுக் கொள்ள விரும்புவது ; புதிதாக திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று விரும்புகின்றபோது என்வயரான்மென்ட் என்று சொல்லப்படுகின்ற சுற்றுப்புறச் சூழ்நிலையினை கருத்தில் கொண்டு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து சென்னையில் சுகாதாரம் மிகவும் மோசமாக இருக்கின்றது. நாம் காரிலே செல்கிறோம் என்று வைத்துக்கொண்டால் பக்கத்திலே ஒரு லாரி வருகின்றது என்றால் அங்கே உள்ளே உட்கார்ந்துகொண்டிருக்க முடியாத நிலைதான் இருக்கின்றது. அவ்வளவு புகையையும் நாம் சுவாசிக்க வேண்டி இருக்கின்றது. அது போன்று பல இடங்களிலே சாணி போன்றவற்றை சுவரிலே தட்டி சுகாதாரக்கேடான நிலைமை பல இடங்களிலும் இருக்கின்றது. இங்கே உறுப்பினர்கள் பேசுகின்றபோது முரட்டுக் கொசு மிகப் பெரியதாக இருப்பதாகச் சொன்னார்கள். அது உண்மைதான் அந்த அளவுக்கு கொசு உற்பத்தி ஆகின்ற இடமே இப்படிப்பட்ட சுகாதாரமற்ற இடங்களில் இருந்துதான். வெளிநாடுகளிலே எல்லாம் மிகச் சிறந்த முறையிலே சுகாதாரத்தைப் பேணுகிறார்கள். அதுபோன்ற முயற்சிகளை வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பி வருகின்ற அமைச்சர்கள் இங்கே சொல்லி மேற்கொள்ள வேண்டும். அங்கே போய் உல்லாசமாக இருந்து விட்டு வருவது பெரிதல்ல. அங்குள்ள நல்ல திட்டங்களை இங்கே நடைமுறைப்படுத்த முடியுமா என்று யோசிக்க வேண்டும். திட்டங்களை சிறப்பான முறையிலே தீவிரமாக இங்கே செயலாற்ற முடியுமா என்று பரிசீலிக்க வேண்டும்.



1981 ஏப்ரல் 8] [திரு. நா. சுந்தரராஜ்]

(பிற்பகல் 12-30)

அதன்மூலமாக தமிழ்நாட்டில் நீங்கள் ஏற்படுத்த இருக்கிற ஒரு புதிய மாற்றத்திற்கு, நீங்கள் எதிர்பார்க்கிற அளவு மாற்றம் செய்வதற்கு மருத்துவத் துறை ஒரு முக்கியமான இடத்தை பெற முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் முன்னாலேயே சொன்னேன், வருகிற நல்ல திறமைப் படைத்த டாக்டர்களை எல்லாம், நல்ல நிபுணத்துவம் பெற்றவர்களையெல்லாம், வெறும் கிளரிகல் போஸ்டுகளில் போட்டு அவர்களுடைய திறமையை வீணடிக்கிறீர்கள். இதனால் அவர்களுக்கு என்று அரசாங்கம் செலவழித்த பணமும் வீணாகிறது அவர்களுடைய திறமையும் வீணாகிறது. அவர்கள் வெறும் மேஜை, நாற்காலிகளில் உட்கார்ந்துக் கொண்டு, சும்மா கையெழுத்துப் போடக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அவர்கள் மீண்டும் மருத்துவத் துறையிலேயே நிபுணர்களாக வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும், அட்மினிஸட்ரேஷன் சைடு, கிளரிகல் சைடு, மினிஸ்டீரியல் சைடு என்று தனியாக பிரிவுகளை ஏற்படுத்தி அதிலே தேவையான வேறு நபர்களைப் போட்டு, டாக்டர்களை, திறமை மிகுந்த மருத்துவர்களை, மருத்துவத் துறைக்கே பயன்படுத்தினால், நிச்சயமாக தமிழ்நாட்டில் மருத்துவத்துறை ஒரு சிறந்த இடத்தைப் பெற முடியும் என்பதைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. க. அன்பழகன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு சார்பிலே மருத்துவத் துறைக்காகவும், நல்வாழ்வுத் துறைக்காகவும் அதனோடு ஒட்டி குடிநீர் வழங்குவது, கழிவுநீர் அகற்று திட்டங்களை உருவாக்குவது ஆகிய பணிகளுக்காகவும் ஏறத்தாழ 129 கோடி ரூபாய்க்குக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மானியங்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை தெரிவிக்கும் வாய்ப்பிற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கடந்த 2 ஆண்டுகளின் ஒதுக்கப்பெற்ற தொகையை விட, இந்த ஆண்டு அதிகமாக தொகை ஒதுக்கப்பெற்றிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி, அதிக தொகை ஒதுக்கியிருக்கிற காரணத்தால் அதிகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் விவாதிக்கக் கூடும். அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொன்னாலும் கூட, அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்கிறபோது. இந்தத் துறையில் செலுத்தப்பட வேண்டிய முழு கவனமும், முழு பொறுப்புணர்ச்சியோடு

கூடிய கவனமும் துறையினுடைய பிரச்னைகளை முழு அளவில் புரிந்து கொண்டு செலுத்த வேண்டிய முழு கவனமும் செலுத்தப் பட்டிருப்பதாக என்னால் கருத முடியவில்லை.

காரணம் குறைபாடுகள் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை இந்த அவையிலே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் களானாலும் சரி, ஆளும் கட்சி உறுப்பினர்களானாலும் சரி, தங்கள் தங்கள் தொகுதிகளுக்காக வேண்டுகிறபோதும், மாவட்டத்திற்காக வாதாடுகிறபோதும் அந்தக் குறைகளையெல் லாம் எடுத்துச் சொல்லி, இவைகளையெல்லாம் மாற்றவேண்டும் என்று அவரவர்கள் தங்கள் தங்கள் கோணத்திலே வலியுறுத்தி இங்கே வாதிட்டிருக்கிறார்கள்.

அமைச்சரிடத்திலே சிரித்துப் பேசிக்காரியம் சாதிப்பதா, கண்டித்துப் பேசி காரியம் சாதிப்பதா என்பதிலேதான் வேறு படுகிறதே தவிர வேறு அல்ல. அமைச்சர் அவர்களைப் புகழ்ந்து சொன்னால் நம் தொகுதிக்கு மருத்துவ மனை கிடைக்கும் என்றால், டாக்டர் ஹண்டே அவர்கள் அற்புதமான திறமை படைத்தவர்கள், ஆற்றல் படைத்தவர்கள், இப்பொழுது கூட சிரிக்கிறார்கள், எனவே என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்வார்கள் என்று சொல்லலாம். அல்லது அமைச்சர் அவர்களுக்கு என்ன சொன்னாலும் புரியவில்லை. அவர் எதையும் செய்வது இல்லை. இதையாவது செய்யத் தெரியுமா என்று பார்க்க விரும்புகிறேன் என்று கேட்பதன் மூலமாகக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாமா என்பதில்தான் வேறு பாடே தவிர, புகழ்ந்து கூறுபவர்கள் எல்லாம் உண்மையாகவே புகழ்ந்துரைத்ததாகக் கருத வேண்டாம், கண்டித்து உரைப் பவர்கள் எல்லாம், எதிர்ப்புத் உணர்ச்சியால்தான் கண்டித் துரைக்கிறார்கள் என்றும் கருத வேண்டாம். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்பை நானும் ஏற்றுக் கொண்டிருந்தவன் என்ற காரணத் தால், இதில் இருக்கிற குறைபாடுகளைப் புரிந்து கொள்கிற வாய்ப்பு எனக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் உறுதி மொழி கொடுப்பதிலே மிகுந்த வல்லமை பெற்றவர்களாக இருக்கிறார்கள். கேட்ட உடனேயே எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறார்கள். இல்லை என்று சொல்லாத வள்ளலாக இருக் கிறார்கள். அதுவும் முதலமைச்சர் அவர்களே அப்படி ஒரு வள்ளலாக நாட்டிலே பெயர் பெற்று விட்ட காரணத்தால்— இல்லை என்று சொல்லாத ஒரு வள்ளலாக அனைவரும் இருக் கிறார்கள். அந்த மனமாவது இருக்கிறதே என்ற காரணத்திற் காக நான் பாராட்டலாம். ஆனால் பின்னர் மக்களுக்கு



ஏற்படுகிற ஏமாற்றத்தின் விளைவைப் பார்க்கிறபோது, முன்னாலே இல்லை என்று சொல்லாமல், பின்னாலே இல்லை என்று சொல்கிற நிலைமையை உருவாக்குகிறார்களே என்று மக்கள் சார்பிலே கண்டிக்க வேண்டிய கடமை எனக்கு ஏற் படுகிறது.

ஏறத்தாழ 3. 4 திங்கள்களுக்கு முன்னால், நம்முடைய அமைச் சர் அவர்கள் ஏறத்தாழ 500 ஜூனியர் டாக்டர்கள் அரசாங்கத் தால் அண்மையில் நியமிக்கப்படுவார்கள் என்று சொன்னார். அவர்கள் எல்லாம் மாவட்ட மருத்துவமனைகளிலே ஒரு 3 மாத காலம், வட்ட மருத்துவமனைகளிலே 3 அல்லது 6 மாத காலம், ஆரம்ப சுகாதார நிலையங்களிலே 6 மாத காலம் இப்படி ஏறத்தாழ ஓராண்டு காலம் ரூ. 500 ஊதியம் பெற்று, பணியாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். வெளியிலே அப்படித் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலே, இந்த அறிக்கையிலே எங்காவது அந்தக் கருத்து இடம் பெற்றிருக்கிறதா என்று பார்த்தால், அந்தக் கருத்து இடம் பெறவில்லை, அப்படி சொல்லப்பட்ட கருத்து ஏன் நிறைவேற்றப்பட முடியவில்லை என்பதற்கான காரணமும் இங்கே இடம்பெறவில்லை.

இன்றையதினம் மாநிலத்திலே இருக்கின்ற மிகப் பெரிய அளவிலே பரவலாக இருக்கின்ற அசிஸ்டெண்ட் சர்ஜன்கள், அதாவது அலோபதி துறையிலே பணியாற்றுகின்ற அந்தத்துறை மருத்துவர்கள் 5,000 பேர்கள் அளவுக்கு பணியாற்றுகின்றார் கள் என்று சொன்னால், ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மட்டும் 400 இடங்களுக்கு மேல் நிரப்பப்படாமல், ஏறத்தாழ ஓராண்டு காலமாக இருக்கிறது. 400 இடங்களுக்கு மேல் நிரப் பப்படாததினால், மிச்சப்படும் தொகை எவ்வளவு இருக்கும். அந்த 400 டாக்டர்கள் பணியில் இல்லாத காரணத்தினால் மக்களுக்கு செய்யவேண்டிய பணி எவ்வளவு தடைப்படும், எந்த அளவுக்கு ஆரம்ப சுகாதாரப் பணியில் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது இதனால் விளங்கும். மாநிலத்தில் 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன; ஏறத்தாழ 400 டாக்டர்கள் இல்லை. சில இடங்களில் 2,3 மருத்துவர்களும், சில இடங்களில் ஒரு டாக்டரும் இருக்கின்ற காரணத்தினால், சில மருத்துவமனைகளில் ஒருவர்கூட இல்லை. பல இடங்களில் பெண் டாக்டர்கள் நியமிக்கப்படவில்லை. தாலுகா மருத்துவமனைகளிலும் மாவட்ட மருத்துவமனைகளில் கூட இன்றையதினம் உரியஎண்ணிக்கையில் டாக்டர்கள் இல்லை. இந்த எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது, ஏறத்தாழ 700 டாக்டர்கள் பணியில் குறைவாக இருக்கிறார்கள். 700 டாக்டர்கள் குறைவாக இருக்கிறபோது, 3,500 டாக்டர்கள்

வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த இரண்டுக்கும் இடையே
இந்த அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது என்று
கேட்டால், அமைச்சர் வருத்தப்பட வேண்டாம். வேண்டு
மானால், இது அமைச்சரவையின் கூட்டுத் பொறுப்பு என்று
ஒரே பதிலிலே சொல்லிவிடக் கூடும்; சொல்லட்டும், 3,500
டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். 700
இடங்களில் டாக்டர் பணி நிரப்பப்படாமல் இருக்கிறது.
தமிழ்நாடு பொதுப்பணித் தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்
படுவதிலே காலதாமதம் ஏற்படுகின்றது என்று சொன்னால்
தற்காலிகமாக நியமிக்கின்ற முறையை அரசாங்கம் மேற்கொள்
ளும் முறை இருக்கிறபோது, ஏன் இந்த அரசு இந்த டாக்டர்களை
தற்காலிகமாக நியமித்து விட்டு, அவர்களுக்குவாய்ப்புக்கொடுத்து
பின்னர் தேர்வுக் குழு மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம்
அல்லவா? தாற்காலிக வேலைக்கு வருவதற்கு டாக்டர்கள்
யாரேனும் மறுத்தார்களா? அந்தக் கடமையை இந்த அரசு
ஏன் செய்யவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மற்றொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் துறை
யிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் மன நிறைவோடு
பணியாற்றுகின்றபோது தான், அவர்களுடைய அந்த பணியின்
பயன் மக்களிடத்திலே போய்ச் சேரும், மனக் குறையோடு
பணியாற்றுகின்ற டாக்டர்கள், செவிலியர்கள் மக்களுக்கு
தொண்டாற்றும்போது, அவர்களுடைய பணி நிறைவான பலன்
தராமல் போய்விடுகிறது. அதனால் ஏற்படுகின்ற குறைகள் பல.

இப்படி 5,000 டாக்டர்கள் இந்தத் துறையிலே பணியாற்று
கின்ற போது, வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு ஒரு டாக்டர்
விண்ணப்பம் போட்டால், அது ஒரு மாத காலமாக இருந்தாலும்
சரி, ஓராண்டுக் கால அளவு செல்வதாக இருந்தாலும் சரி,
அவர் 50,000 ரூபாய் அரசாங்கத்திற்கு செலுத்துவதாக ஒரு
உறுதிமொழியைக் கொடுத்து. அதை எழுதி கொடுத்துவிட்டு,
அதன்மீது அமைச்சர் மட்டுமல்ல, முதலமைச்சர் அவர்களும்
கையெழுத்து போட்ட பின்னர்தான் வெளிநாட்டிற்குப்
போகலாம் என்ற ஒரு நிலைமை இருக்குமானால், அது ஒரு
அனக்கிரானிசம், என்று சொல்ல விரும்புகிறேன். அதைவிட
அநாகரிகம் என்று சொல்ல விரும்புகிறேன்.

படித்த டாக்டர்களுக்கு மூவாயிரம் பேருக்கு மேல் வேலை
கொடுப்பதற்கு வாய்ப்பு உருவாக்கப்படாத நிலையில், ஒரு
100, 200 டாக்டர்கள் வெளி நாடுகளுக்குச் செல்வதால்,
இந்த அரசுக்கு லாபமே தவிர, இழப்பு இல்லை. சமுதாயத்
திற்கு லாபமே ஒழிய, இழப்பு இல்லை. வேண்டுமானால்,
யாராவது ஸ்பெஷலிஸ்ட் பட்டம் பெற்றவர்கள், உ[illegible]





இங்கே பயிற்சி அளிக்க
பட்டப் படிப்பு படித்தவர்கள். வெளிநாடுகளுக்குச்
வேண்டிய பொறுப்பில் உள்ளவர்கள், இந்த உறுதிமொழியை
செல்லவேண்டுமானால், அவர்களுக்கு மேல்படிப்பு
அரசாங்கம் கேட்பது தவிர, அரசாங்கச்செலவில் ஒரேயடியாகத்
படித்தவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதை திரும்பி வருகின்ற
தடுப்பதைவிட்டு, முறைப்படுத்தி, அவர்கள் வேண்டுமென்று
போது இங்கே இவ்வளவுகாலம் பணியாற்ற எல்லோரு(ம
கேட்கலாமே தவிர பொதுவாக டாக்டர்கள் ஆன டாக்டர்
தமிழ்நாட்டைக் காப்பற்றவேண்டியவர்கள் என்று கூறி, நிலைமையை
கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாத
ஏற்படுத்துவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

20 ஆண்டு காலமாக அசிஸ்
இதேபோல் இன்னொன்று. இருப்பவர்கள் சிவில் சர்ஜனாக
டென்ட் சர்ஜன் பணியிலே மேல்நிலைப் பதவிக்கு போக
ஆகமுடியாமல் அடுத்த இருக்கின்ற
வாய்ப்பு இல்லாமல் இன்றையதினம் எடுத்துக்காட்டப்
நிலைமை மிகவும் வருந்தத்தக்கது என்று ஆண்டுகள்
படுகிறது. வேண்டுமானால், அவர்கள் 10,12 பெறக்கூடிய
பணியாற்றிய பின்னர் சிறிது சம்பளம் உயர்வு பணியாற்றிய
வாய்ப்பு இருந்தாலும்கூட, 20 ஆண்டு காலம் ஆபீசர்
பின்னும், சிவில் சர்ஜனாக அல்லது சீப் மெடிகல் இருக்குமானால்
என்ற தகுதியைப் பெற முடியாத நிலைமை ஒரு மாநாட்டைக்
அது நல்லதல்ல. அண்மையில் அவர்கள் அமைச்சர் அவர்
கூட்டி நம்முடைய நல்வாழ்வுத்துறை சென்றிருந்தனர். ''உங்
களும், நிதியமைச்சர் அவர்களும் உங்களுக்கு அதிக
களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும், வாதாடு
வருத்தம் இல்லாத வகையில் நான் உங்களுக்காக சொன்னார்.
கிறேன் என்று நல்வாழ்வுத்துறை அமைச்சர்

(பிற்பகல் 12.40)

அவர்கள் வாதாடவே
நிதி அமைச்சர் அவர்கள், ஹண்டே இருக்கிறேன். உங்களுடைய
தேவையில்லை. நானேகூட இங்கே எல்லாம் செய்வேன்
குறைகளைப் போக்குவதற்கு முடிந்ததை பதவியிலே மொத்த
என்றார். அப்படிப்பட்ட சிவில் சர்ஜன் பெறத்தக்க அளவிற்கு,
டாக்டர்களில் 100-க்கு 10 பேர் இடம் அளவிற்கு வாய்ப்பு
5,000 பேருக்கு 500 பேர் இடம் பெறத்தக்க அளவிற்கு
இல்லாவிட்டாலும் கூட 250 பேர் இடம் பெறத்தக்க துறையிலே
அந்த எண்ணிக்கையை உயர்த்துவது என்பது அந்த வழிகாட்டு
பணிபுரிகின்றவர்கள் ஒரு ஆர்வத்தோடு பணியாற்ற 20 ஆண்டு
வதாகும். இல்லையென்றாலும் அரசு உடனடியாக உயர்வை அளிக்க
களுக்கு மேலுள்ள 100 பேர்களுக்கு அந்த பதவி மனைகளிலே
முன்வரவேண்டும், அதன்மூலம் மாவட்ட மருத்துவ அல்லது
எப்படி சிவில் சர்ஜன் தலைவராக இருக்கிறாரோ

மாவட்ட மருத்துவ மனையில் தலைவராக இருக்கிற வாய்ப்பு இருக்கிறதோ, அதைப்போல ஐந்து, ஆறு டாக்டர்கள் பணி புரிகின்ற வட்ட மருத்துவமனைகளில் எல்லாம், நோயாளிகள் எண்ணிக்கையைப் பொறுத்து சிவில் சர்ஜன் பதவியை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் குறைகளைப் போக்க முடியும். அதில் ஏற்படக்கூடிய பொருள் இழப்பு அதிகமில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கிற நண்பர்கள் எந்த அளவிற்குத் தந்திருக்கிறார்கள் என்றால், தங்கள் வட்டாரங்களில் தகுந்த மருத்துவ மனை இல்லை; படுக்கை வசதி இல்லை; ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதாக ஒப்புக் கொண்டும் ஏற்படுத்தவில்லை; இந்த அரசுக்கு நிதி கட்டவேண்டிய நேரத்திலே, நிதி கட்டியும் அந்த குறை போக்கப்படவில்லை, என்று தெரிவித்திருக்கிறார்கள்.

உதாரணமாகச் சொல்கிறேன். பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் வேளச்சேரியில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. வேளச்சேரி பகுதி சென்னை மாநகரப் பகுதியிலே சேர்க்கப்பட்டுவிட்டதால், அதற்குப் பதிலாக மேடவாக்கத்திலே அந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவேண்டுமென்று 1½ ஆண்டு காலமாகக் கேட்கப்படுகிறது. இப்படி ஒரு அமைப்பு முறையிலே மாற்றம் வருகின்ற பொழுது, உடனடியாக அந்த குறையை நிவர்த்திப்பதற்கு அரசாங்கமே, அரசாங்கத்தினுடைய அந்தத்துறையே முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதே போல பூந்தமல்லி ஒன்றியத்தில் ஆவடி நகரியமாக மாறிவிட்ட காரணத்தால் ஏற்கனவே ஆவடியிலே அமைந்திருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம், இன்னொரு கிராமத்தில் அமையவேண்டுமென்று கேட்டு ஏறத்தாழ 4 ஆண்டுக் காலம் ஆகிறது. அப்படி கேட்கப்படுவதை நான் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னாலே கூட எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த எந்தவிதமான ஆணையும் பிறப்பித்ததாக எனக்குத் தெரியவில்லை. அதேபோல தண்டராம்பட்டு பகுதியிலே அரசு மருத்துவ மனை ஏற்படுத்தக் கேட்டு, 10 ஆயிரம் ரூபாய் பணம் கட்டி—அந்த பணம் கட்டி இரண்டு ஆண்டு காலமாகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே கூட ஒப்புக் கொண்டும், அது எந்த இடத்திலே அமைப்பது, அந்த இடத்திலேயா? அல்லது பக்கத்திலே மூன்று மைல் தொலைவில் ஒரு ரூரல் டிஸ்பென்சரி இருக்கிற அந்த இடத்திலா? என்று சந்தேகம் வந்ததாகச் சொல்லி, அதுபற்றி ஆய்வு செய்வதாக அமைச்சர் சொல்கிற பொழுது, நான் கேட்க விரும்புகிறேன், ரூரல் டிஸ்பென்சரி என்பது மிகச் சிறிய அமைப்பு. அந்த ரூரல் டிஸ்பென்சரி இருக்கிற காரணத்தைக் காட்டி 10 ஆயிரம் பணம் கட்டி ஒரு ஊருக்கு மருத்துவ மனை கேட்கிற பொழுது அரசு இந்த மருத்துவ மனை அமைக்க முடியுமா என்பதை நேரடியாகப் பரிசீலனை செய்ய வேண்டுமே தவிர, பக்கத்திலே ஒரு ரூரல் டிஸ்பென்சரி இருக்கிறதே, இதை எப்படி ஏற்படுத்துவது என்று ஒரு சாக்குப்போக்கு



காட்டுவது போல பதில் சொல்வது முறை அல்ல என்பதையும், உடனடியாக அமைக்க முன் வரவேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு வட்டத்தில், வட ஆற்காடு மாவட்டத்தில் மாமண்டூரில் அரசு மருத்துவமனை நிறுவ மக்கள் 1978 ஆம் ஆண்டு 20 ஆயிரம் நிதி கொடுத்திருக்கிறார்கள். 2 ஏக்கர் நிலம் தந்திருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை ஏற்றுக்கொண்டு விட்டதாக அமைச்சர் சொல்லுகிறார். அமைச்சர் ஏற்றுக் கொண்ட பிறகு அது நடைமுறையிலே வருவதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்பதும் எனக்கு தெரியும். ஆகவே அமைச்சர் அவர்கள் அந்த நடைமுறை காலத்தையும் சேர்த்து ஏற்றுக்கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்திலே வருவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்னஎழாச்சேரியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தும் அது நடைமுறைக்கு வரவில்லை. தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பற்றி மாண்புமிகு சுந்தரராஜன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அது ஒரு வட்டத் தலைநகராக ஆனதற்கு பின்னாலும் கூட அந்த வட்டத்திற்குரிய ஒரு மருத்துவமனை ஏற்படுத்தப்படவில்லை. அதே போல பெரம்பலூரில் வட்ட மருத்துவ மனையில் சில பகுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று அந்த சட்ட மன்ற உறுப்பினர் திரும்பத் திரும்பக்கேட்டு, பல் மருத்துவப் பகுதியாவது ஏற்படுத்துங்கள் என்று கேட்கிறார்கள். இன்னும் பல்வேறு பகுதிகளிலே இருக்கிற குறைகளை இங்கே சட்டமன்ற உறுப்பினர் பேச முடியாத காரணத்தால் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அவைகளில் பல இந்த வெட்டுத் தீர்மானங்களில் தரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இந்த மருத்துவப் பணியைச் செம்மையாக நடத்துவதற்கு செவிலியர்களுக்குப் பயிற்சி தருவதை பற்றி அரசின் அறிக்கையில் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த அரசு அறிக்கை தருகிறபோது எந்த முறையை கையாள்கிறது என்பதற்காக மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். செவிலியர் பயிற்சியை அதிகப்படுத்துவதற்கான புள்ளி விவரம் பக்கம் நான்கிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. அடுத்து அதிலே செவிலியர் 3 ஆண்டுப் பயிற்சி பெற்றதற்குப் பின்னர் மகப் பேறு உதவிப் பணியாற்ற 6 மாத பயிற்சி பெறுவதற்காக அந்த மகப்பேறு மருத்துவ மனைகளிலே பெறுகிற பயிற்சியினுடைய எண்ணிக்கையும் இருக்கிறது. தமிழிலே அதை எழுதுகிறபோது உதவித் தொகை பெறும் செவிலியர் இடங்களை 135லிருந்து 340 ஆக பின்வருமாறு உயர்த்த அரசு ஆணையிட்டுள்ளது என்று அந்த விளக்கத்திற்கு நேர் மாறான

கருத்து இடம் பெற்றிருக்கிறது. செவிலியர் பயிற்சிக் காலம் முழுவதும் இந்த உதவித் தொகை கிடைக்கும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

" The Government have sanctioned the increase in the stipendary seats for the mid-wifery training from 135 to 340 as follows."

என்று தான் ஆங்கிலத்தில் உள்ள அறிக்கையில் இருக்கிறது. அது தமிழிலே வருகிறபோது இந்தக் குறைபாடு அங்கேயும் வருகிறது. ஐந்தாவது பக்கத்திலே கீழே 125 மாணவர்கள் டி. பார்மசி வகுப்பிலே சேர்க்கப்பட்ட விவரம் பற்றிச் சொல்கிற போது திருச்சியிலே டி. பார்மசி வகுப்பு தொடங்க அரசு அனுமதி வழங்கியது. இட வசதி இல்லாத காரணத்தினால் மதுரையில் இவ்வகுப்பு நடத்தப்பட உள்ளது என்று தமிழிலே கொடுக்கப்பட்டுள்ளது.

The course is being conducted in Madurai

என்று ஆங்கிலத்திலே இருக்கிறது. ஆகவே தமிழிலே வரும்போது காரியம் நடக்க மாட்டேன் என்கிறது. ஆங்கிலத்திலே வந்தால் நடப்பதாக இருக்கிறது. எது உண்மை என்று எனக்கே சந்தேகம் வருகிறது. அமைச்சர் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதைப் போல் இந்த அறிக்கையில் முதலிலே எடுத்தவுடனே சென்னை மருத்துவக் கல்லூரியை பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக மேம்படுத்த தக்க நடவடிக்கை எடுக்க அரசு கருதியுள்ளது என்று வருகிறது. இது எத்தனை ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது என்பதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன். 1977-78 ஆண்டுகளிலே சொல்லப்பட்டது. விளக்கங்கள் எல்லாம் சொல்லப்பட்டது. எப்படி எப்படி உயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டது. போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்டியூட்டாக வரும் என்று சொல்லப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் மருத்துவப் பல்கலைக் கழகமாக ஆவதற்காக பல துறைகள் உயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டது. துறைவாரியாக (up g d) உயர்வு செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. இவ்வளவும் செய்யப்பட்டு வந்திருக்கிற ஒரு கால கட்டத்திலே தக்க நடவடிக்கை எடுக்கக் கருதியுள்ளது என்று இன்னும் சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லப்படுகிற கட்டத்திலேதான் இருக்கவேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப் போல் பல்வேறு துறைகளிலே 'ரீ ஓரியன்டேஷன்' கோர்ஸ் நடத்துவதைப் பற்றி இதன் கடைசி வரியிலே தமிழில் தரப்பட்டிருக்கிற கருத்து குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் வாழும் நலிவுற்ற பிரிவினரின் தேவைக்கேற்ப " மருத்துவச் சார்பற்ற பணியாளர்களுக்காக" எனப்படுகிறது. 'பேரா மெடிகல் ஒர்க்கர்ஸ்' என்றால்



மருத்துவ சார்பற்ற என்று இருக்கிறது ; இன்னும் சொல்லப் போனால் ' பயிற்சி புத்தறிவு ' ஆக்கப்படும் என்று இருக்கிறது. 'ரீ ஓரியன்டேஷன் ' என்று சொல்கிறபோது பயிற்சி புத்தறிவு ஆக்கப்படும் என்று இருக்கிறது. அப்படி எல்லாம் ஆக்குவதாகக் கொள்ள முடியாது. ஆகவே தமிழிலே சொல்கிறபோது கருத்துக்கள் தடுமாறுகிற அளவுக்கு உள்ளது. கடந்த ஆண்டு கூட இதைவிடச் செம்மையாக அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அதிலே குழப்பங்கள் சற்று குறைவாக இருந்தன. அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் கவனிக்க முற்பட வேண்டும்.

பெரம்பூரில் ஒரு பெரிபரல் மெடிகல் ஹாஸ்பிடல். புறநகர் மருத்துவ மனை ஏற்படுத்துவதற்காக 170 இலட்சம் செலவிடப் படவிருக்கிறது என்று சொல்லப்படுகிறபோது இந்த மொத்தச் செலவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன என்று இருக்கிறது. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. பிளான் சாங்க்ஷன் ஆகியிருக்காது. கட்டடம் கட்டுவதற்கு 3 ஆண்டுக் காலமாகும். அதற்குக் குறைந்து எந்தக் கட்டடமும் வருவதில்லை. ஆக இன்னும் 5 ஆண்டுக் காலம் கழித்து மருத்துவ மனை வரக்கூடும். நான் வரவேற்கிறேன். இப்போதே மருத்துவ மனையை ஆரம்பிப்பதாக, கட்டடம் கட்டுவதற்கான முயற்சியிலே தொடக்க நிலையில் ஈடுபட்டிருக்கிறோம் என்று சொல்லப்படவேண்டிய கருத்து அப்படி இடம் பெற்றிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் சொல்லவேண்டியதை தெளிவாக சொல்லாமல் அறிக்கை தந்து அதனால் குழப்பமான கருத்துக்கள் இந்த அவையிலே சொல்லப்படுவதற்கு அரசாங்கமே காரணமாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

பொதுவாக விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதை அமைச்சர் உணர்வார். ஏராளமான விபத்துக்கள், மிகப் பெரிய விபத்துக்கள் நம்மால் ஈடு செய்ய முடியாத விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த விபத்துக்கள் எற்படுகிற பல்வேறு இடங்களை ஓரளவுக்கு அரசாங்கம் காவல் துறையின் மூலமாகப் புள்ளி விவரம் சேகரித்து கடந்த 10 ஆண்டுக் காலத்திற்குப் புள்ளி விவரங்களைச் சேகரித்து இந்த விபத்துக்கள் ஏற்படக் கூடிய வட்டாரங்களை யொட்டி 10 மைல், 20 மைல்களுக்கா தாலுகா தலைநகரத்தில் விபத்து முதலுதவி வழங்கக்கூடிய முறையிலே விபத்திலே சிக்குண்டவர்களைக் காப்பாற்றக்கூடிய முறையிலே அப்படிப்பட்ட அமைப்புகளை தமிழ்நாடு முழுவதிலும் 10, 20 மைல்களுக்கு ஒன்றாக ஏற்படுத்த வேண்டும். அந்த வகையிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விழுப்புரத்திலே அந்த விபத்துக்களுக்கு ஆளானவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து செயல்படக்கூடிய இடத்தில் உள்ள மருத்துவ மனையாக இருந்தும் அது பல ஆண்டுக் காலமாக கவனிக்கப் படாத நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது

[திரு. க. அன்பழகன்] [1981 ஏப்ரல் 8

[பிற்பகல் 12-50]

அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரும்பத் திரும்ப அந்த மருத்துவ மனையின் முக்கியத்துவத்தைப் பற்றி வெட்டுத் தீர்மானம் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். விழுப்புரம் போன்று வேறு பல இடங்களில் அத்தகைய நிலைமைகள் இருக்கக்கூடும். முக்கியமான நெடுஞ்சாலைகளிலேயெல்லாம், பக்கத்திலே இருபது மைல்கள் தொலைவிலேயிருந்து விபத்துக்களுக்கு ஆளாகியவர்களைக் கொண்டுவந்து சிகிச்சை தந்து பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளை அரசு செயற்படுத்த அந்த மருத்துவமனைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல, மற்றொரு முக்கியமான கருத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் தரமாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாகப் பலரால் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்படுகிறது. ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்குச் செலவிடப்படுகிற பணத்தின் அளவு சாதாரணமானது அல்ல. பெருந்தொகை செலவிடப்பட்டும் கூட தொழிலாளர்களுக்காக, அவர்கள் கான்ட்ரிபியூஷன் செலுத்திய பிறகும் கூட அவர்களுக்குச் செய்ய வேண்டிய மருத்துவச் சிகிச்சை வழங்கப்படுவது தரமானதாக இல்லை என்று சொல்லும் நிலை இருப்பது உள்ளபடியே அந்தத் தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய வேதனையை, வெறுப்பை, எரிச்சலை ஏற்படுத்தக்கூடும். சென்னையிலே, அயனாவரத்திலே உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையிலே இரத்த ஒழுக்கைக் கட்டுப்படுத்துவதற்கான (Premel.t-N) மருந்து இல்லை என்று சொல்லப்படுகிறது. இரத்த ஒழுக்கை நிறுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் மருந்து அது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, அறுவை சிகிச்சை பெற்றவர்களை உறங்கச் செய்வதற்கான (Compos i j.ction) என்ற அந்த மருந்தும் இல்லை என்று சொல்லப்படுகிறது. குளுகோஸ் கூட ஏற்றுவதற்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. (Dist ll d w t ,) போதுமான சப்ளை இல்லை என்று சொல்லப்படுகிறது. அவசர உடனடி அறுவை சிகிச்சை இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன் 'Patholog st பதவியில் யாரும் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆம்புலன்ஸ் வண்டிகள் இயங்கக்கூடிய நிலையில் இல்லை என்று சொல்கிறார்கள்

எனவே, இங்கே நான் எடுத்துச் சொல்வதில் ஏதாவது ஒன்றிரண்டு முழு அளவும் சரி இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் இத்தகைய குறைபாடுகள் இருந்தால் அவைகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 ஏப்ரல் 8] [திரு. க. அன்பழகன்]

கோவை ஈ. எஸ். ஐ. மருத்துவமனையில் தகுந்த மருத்துவ வசதி கிடைப்பதில் குறைபாடு இருக்கிறது என்று சட்டமன்ற உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

சேலத்திலே உள்ள ஈ. எஸ். ஐ. தொழிலாளர்களுக்கான மருத்துவம் மாவட்ட மருத்துவமனையில் தர வேண்டியிருக்கிறது என்ற நிலையில் மருத்துவர்கள் விடுமுறையில் 15 நாட்கள், ஒரு மாதம் போனால், ஸ்பெஷலிஸ்ட்டுகள் இல்லை என்று சொன்னால் அந்தத் தொழிலாளர்களுக்குச் சிகிச்சை கிடைக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 15 நாட்கள், ஒரு மாதம் தாமதமாகிறது என்ற குறையை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் எப்படிச் சீர் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் துறையைச் சேர்ந்த துணை இயக்குநரோ அல்லது உதவி இயக்குநரோ அவ்வப்பொழுது சென்று இது பற்றி இன்ஸ்பெக்ஷன் நடத்த வேண்டும். இன்ஸ்பெக்ஷன் நடத்துவது என்பது ஏதோ அதிகாரி வந்தார், டாக்டர்களைப் பார்த்தார், செவிலியர்களைச் சந்தித்துப் பேசினார், திரும்பிப் போனார் என்ற அளவில் இல்லாமல், குறைகளை நிவர்த்திப்பதற்காக என்ன செய்வது என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர்களை மட்டும் குற்றம் சொன்னால் போதாது. செயல் வழிமுறைகளை எப்படிச் செய்து தருவது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்வாறு செய்து ஈ. எஸ். ஐ. மருத்துவமனைகள் முழு அளவிற்குச் செம்மையாக இயங்குவதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிக நேரம் இல்லாத காரணத்தினால் இங்கே சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மருத்துவக் கல்வியைப்பற்றி எடுத்துச் சொல்லலாம், இன்னும் வேறு பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் கூட எடுத்துச் சொல்லலாம். மாணவர்கள் சேர்க்கப்படுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்பொழுது, மார்க்குகளின் எண்ணிக்கை அடிப்படையை வைத்துச் சேர்க்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். ஒரு வேளை அப்படியும் ஒரு கருத்து நிலவுகிறது என்பதை அவர்கள் சொன்னார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், இது கம்யூனிசம் ஆகாது என்று நான் மனதாரக் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதையொட்டி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. அன்பழகன் : என்னைப் பொறுத்த வரையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நகரங்களிலே பயிலும் மாணவர்கள் ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்டு, வசதியான, சிறந்த பயிற்சி அளிக்கின்ற, ஆற்றல் மிக்க ஆசிரியர்களைப் பெற்றிருக்கின்ற, தகுந்த கவனம் செலுத்தப்படுகின்ற அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்பைத் தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகப் பெற்றிருக்கின்ற மாணவர்களுக்கு நம்மால் அளிக்க முடியவில்லை ; நாம் அளிக்கவில்லை. இந்தக் குறையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதற்கு ஈடாகக் கல்வித்துறையிலே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கும் அந்தப் பயிற்சியை அளிக்கின்ற பெரு முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். நகரத்திலே இருக்கின்ற மாணவர்கள் பெறுகின்ற அரிய வாய்ப்பை கிராமத்திலே உள்ள மாணவர்கள் பெற முடியாத நிலை இருக்கிறது. இன்னும் மேல் ஜாதிக்காரர்கள் பெறுகின்ற அந்த வாய்ப்பு, வசதி ஆகியவைகள் தாழ்ந்த ஜாதியிலே பிறந்துவிட்ட நிலையில் உள்ள பிள்ளைகள் பெற முடியாத நிலை இருக்கிறது. பங்களாக்களிலேயிருந்து, படிக்காமல் ஊர் சுற்றுகின்ற பிள்ளைகளைத் தவிர, மற்றபடி படிக்கக்கூடிய பிள்ளைகள் பெறுகின்ற அந்த வாய்ப்பைக் குடிசையிலே பிறக்கின்ற பிள்ளை பெறவில்லை. எனவே, சமுதாயத்திலே அப்படிப்பட்ட ஒரு அநீதி இருக்கின்றபொழுது உயர்தர மருத்துவத் துறை, பொறியியல் துறை ஆகியவற்றிற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது வகுப்புரிமை அடிப்படையிலே உள்ள விகிதாச்சாரத்தை மட்டுமல்ல, அவர்களுடைய ஏழ்மை, கிராம அடிப்படை, பின் தங்கிய அடிப்படை, படித்த பள்ளிகளின் அடிப்படை ஆகியவற்றைப் பார்த்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன். இது இன்னும் இருபது ஆண்டுகளுக்காவது, இன்னும் ஒரு தலைமுறைக்காவது நிச்சயமாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படைக் கொள்கையை மறந்துவிட்டு, வேறு விதமான நோக்கத்திலே, அரசாங்கம் ஏமாந்துவிடக் கூடாது, அரசாங்கம் வேறு விதமாக செயல்பட்டு விடக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட பொழுது ஒதுக்கப்பட்ட மக்களுக்கென்று ஒரு விகிதாச்சாரமும், பிற்பட்ட மக்களுக்கென்று ஒரு விகிதாச்சாரமும் இருக்கிறது. அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கும்போது, அந்த வகுப்பினரிடையிலே தேர்ந்தெடுக்கும்போது எந்த அடிப்படையிலே தேர்ந்தெடுப்பது? மார்க்குகளின் அடிப்படையிலே தேர்ந்தெடுப்பது ஒன்றுதான், அந்த நேர்முக இன்டர்வியூவிலே ஊழல்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான வழி என்று சொல்கிறேன். ஆகவே, ரிசர்வேஷன் என்பது நீடிக்க வேண்டும். ஆனால், அந்த கோட்டாவிற்குள்ளே எப்படி தேர்ந்தெடுப்பது ; இன்றைக்கு நேர்முக இன்டர்வியூ



என்று சொல்லும்போது, நல்ல மார்க்குகள் வாங்கியுள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டு, சாதாரண மார்க்குகள் வாங்கியவர்கள் வந்து விடுகிறார்கள் என்ற புகார்கள் இருக்கிற காரணத்தால்தான் அதைக் குறிப்பிட்டேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் புகார் இல்லாத நியாயமான வழியை, அவர்களுடைய கடமையை நிறைவேற்றுகிறபொழுது மேற்கொள்ள வேண்டும். புகாரைகூட எந்த அளவு குறைக்க முடியுமோ அந்த அளவு குறைக்கும் முறையை மேற்கொள்ள வேண்டும். ஆனால், சமுக நீதியை, மேற் கொள்வதற்காக எந்தக் குற்றச்சாட்டையும் அரசு தாங்கிக் கொள்ளலாம். ஆனால், நேர்மை இருக்குமானால்தான் தாங்கிக் கொள்ள முடியும்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புகிறேன், இன்றைக்கு இந்த மருத்துவத்திற்காக நாம் செலவிடுகிற தொகையின் அளவை வைத்துப் பார்க்கும்பொழுது, அதே நேரத்தில் இந்த நாட்டினுடைய வறுமை நிலை, பின்தங்கிய நிலைமைகளைக் கவனித்து, எல்லா மக்களுக்கும், அதுவும் கி.பி. 2000-லே எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதிகளையெல்லாம் செய்து முடித்து விட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் ஹண்டே அவர்களுக்கு நிம்மதியான ஒரு எண்ணம் இருக்கும். அவ்வளவுதான் நாம் இந்த பொறுப்பிலே இருக்க மாட்டோம், இப்பொழுது சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைக்கக்கூடும். நானும் கூட, 2000-லே நாம் இருந்தால்தானே அந்தக் கவலை என்று எண்ணலாம். ஆனால், அப்படியெல்லாம் ஒரு பெரிய இலட்சிய வார்த்தைகளைச் சொல்லுகிறபொழுது, நடைமுறையிலே, 5 ஆண்டுகள், 3 ஆண்டுகளுக்கு "டோட்டல் அவுட்லுக்" என்ற முறையில் திட்டங்கள் வரையறுக்கப்பட வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். தொழு நோய் தடுப்புத் திட்டத்தில் தமிழ்நாட்டிலே 100-க்கு 90 பங்கு மக்களை ஏறத்தாழ, 'கவர்' செய்திருக்கிறோம் என்று சொல்லக் கூடும். ஆனால், நூற்றுக்கு நூறு, மக்களையும் 'கவர்' செய்யும் அளவுக்கு அதை ஓராண்டிற்குள் கொண்டுவர வேண்டும். தொழு நோய் தடுப்புப் பணியைத் தொடங்குவதற்கு முன்னர் அதனால் பாதிக்கப்பட்டோர் நூற்றுக்கு 2 பேர், ஒருவராக இருந்தால்கூட, எல்லா வட்டாரத்திலும் அப்பணி முடிந்துவிட்டது என்ற நிலைமை இருக்க வேண்டும்.

அதேபோல், ஆரம்பப் பள்ளிக்கூடப் பிள்ளைகளிடையே, மருத்துவ சோதனை என்பது எல்லாப் பள்ளிகளிலும் இரண்டு ஆண்டுக்காலத்திற்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும். ஏனென்றால், அதன் மூலம்தான் தீய பின்விளைவுகளான நோய்களைத் தடுக்க முடியும். ஆரம்பப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு ஒரு முறை, சோதனை செய்து, உயர்நிலைப் பள்ளிப் பயிற்சிக்

கட்டத்திலே ஒரு முறை சோதனை செய்து அந்தப் பள்ளிப்பிள்ளைகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிப்பது மூலமே சமுதாயத்திலே ஏற்படக்கூடிய நோய் பரவுகிற அந்த நிலைமைகளைத் தடுக்க முடியும். அவைகளைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, சென்னை போன்ற பெரு நகரத்திலே எவ்வளவோ திட்டங்கள் செயல்பட்டாலும் எப்படிப்பட்ட தோல்வி ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் தந்திருக்கிற புள்ளி விவரங்களிலே பார்க்க முடியும். மலேரியா மிக அதிகமாகப் பரவி இருப்பது சென்னை நகரத்திலேதான், கடந்த 3 ஆண்டுகளாக. அதே போல், குடல் அழற்சி நோய் சென்னையிலே தான் அதிகம். இதனால் பாதிக்கப்பட்டோர் 2,120 பேர். அடுத்து தஞ்சையிலே சற்று அதிகம், 2,584 பேர். அதிலே 29 பேர் சென்னையிலே இறந்து போயிருக்கிறார்கள். காலரா—வாந்திபேதி—சென்னையிலேதான் 2,684 பேருக்கு ஏற்பட்டிருக்கிறது. சென்னைக்கு அடுத்து வருகிற மாவட்டம், மலேரியாவிலே இராமநாதபுரம். குடல் அழற்சி நோயிலே தஞ்சை மாவட்டம். பொதுவாக, வட ஆற்காடு மாவட்டம், இந்தக் காலரா உட்பட சென்னையிலே வந்திருக்கிற நிலையை வைத்துக் பார்க்கும்போது, சென்னையிலே குடிநீர் வழங்குகிற முறையிலே இருக்கிற குறைகள் பொது நலனுக்காக உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்காலத்திலே பழைய குழாய்களை மாற்றி புதுக் குழாய்களை அமைக்கிற திட்டங்களெல்லாம் இருக்கின்றன என்று சொன்னாலுங்கூட, இந்தத் திட்டங்களாலே, எதிர்காலத்திலே நல்ல விளைவு ஏற்பட அவர்கள் நல்ல முறையிலே பிளான் செய்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தாலும்கூட நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மிக நெருக்கமான முறையில், கழிவுநீர்க் குழாய்களும், குடிநீர்க் குழாய்களும் பக்கத்திலே இருப்பதற்கு வாய்ப்பில்லாமல் கவனிக்க வேண்டும். அந்த வாய்ப்பு இல்லாமல் இருப்பதுடன், குறுக்கும் நெடுக்குமாகப் போக வேண்டிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுவிடுமானால், கழிவு நீருக்காக அமைக்கப்படுகிற குழாய்களுக்கு மேலே குடிநீர்க் குழாய்கள், இருக்கும் வகையிலே அமைத்திட வேண்டும். அப்படிச் செய்தால்தான் பெரிய திட்டங்களாலே எதிர்பாராத வகையில் கொடிய நோய்கள் பரவும் வாய்ப்பு குறையும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றுமொன்று, காச நோய், யானைக்கால் நோய், இவைகள் இன்னுங்கூட முழு அளவு கட்டுப்படுத்தப்படாத நிலைதானிருக்கிறது. அதிலே மலேரியாவுக்காகப் பணியாற்றுகிற ஊழியர்கள் அப்படிப் பணியாற்றுகிற இடங்களிலே, தற்காலிகமாக வேலையிலிருந்து பின்னர் நீக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது என்று இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் எடுத்துச் சொல்லி, என்னிடத்திலே தெரிவித்தார்கள். அப்படி அவர்களெல்லாம் நிரந்தர வேலையில்லாமல், 6 மாதம், 1 வருடம் என்று வேலை பார்க்கிற நிலைமை இருக்குமானால், அவர்கள் பெற்ற பயிற்சி வீணாகி விடும். எனவே, அப்படிப்பட்ட மலேரியா துறையிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு தொடர்ந்து பணியாற்றுகிற வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.





இன்னும் ஒன்று. டானிடா திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டம் மருத்துவத் துறை மூலமாகத் தான் இயக்கப்படுவதாகக் குறிப்பிலே காணப்படுகிறது. அது தாலுகா மருத்துவ மனை, மாவட்ட மருத்துவ மனைகளின் மூலம் இயங்குவது போல் காணப்படுகிறது.

(பிற்பகல் 1—00)

ஆனால் அதிலே சொல்லப்பட்டிருக்கிற குறிப்புகளைப் பார்க்கிறபோது ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைக்கப்படுவது பொருத்தமாக இருக்குமோ என்று எனக்கு ஐயம் ஏற்படுகிறது. ஏனென்றால் தாய்மார்களுடைய, கர்ப்பவதிகளுடைய நலன்களைக் கவனிப்பதற்கும் குழந்தைகளுடைய நலனைக் கவனிக்கவும் டானிடா திட்டம் வருமானால் பரவலாக கிராம மக்களுக்கு அது பயன்படவேண்டுமானால், அது ஆரம்ப சுகாதார நிலையத்தின் பணியோடு சேர்த்து அமைக்கப்படுகிற நிலை இருக்குமானால் அது வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

அடுத்து, ஹோமியோபதி கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு காலத்திலே தொடங்கப்பட்டு ஒரே ஒரு கல்லூரிதான் அதுவும் மதுரையில் தனியார் நடத்திய கல்லூரி சரியாக, நடத்தப்படவில்லை என்று அது சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு அந்தக் கல்லூரிக்குக்கூட—நான் அப்போது அமைச்சராக இருந்த காரணத்தினால் கூட அல்ல—என்னுடைய மனைவி ஹோமியோபதி டாக்டராக இருந்த காரணத்தால், அவருக்கு அந்த ஹோமியோபதி மருத்துவத்திலே இருந்த தொடர்பு காரணமாக, அவர் மறைந்து போன நிலையில் அவருடைய பெயரை வைக்க முன் வந்தார்கள். அதை இடையிலே வந்த அரசு எடுத்து விட்டது.

(குறுக்கீடு) இடையிலே வந்த அரசு என்றுதான் சொன்னேன். எடுத்துவிட்டார்கள். ஆகவே இப்போது இருக்கிற அரசு அவர்கள்தான் செய்தார்கள் என்றால், தாங்கள் ஏதோ பெயரை வைக்க ஒப்புக் கொள்பவர்கள் போல ஒரு தவறான கருத்தை உருவாக்க வேண்டாம் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அதற்காகக் கட்டப்பட்ட நிதி கூட 42,000 ரூபாய் அளவு திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஏனென்றால், மறைந்து போன

வருடைய பெயரை நாமா காப்பாற்றப் போகிறோம். அதுவல்ல. ஆனால், அந்தக் கல்லூரிக்காக ஒரு கட்டடம் கட்ட வேண்டும் என்று ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாயில் கட்ட வேண்டும் என்று 1975—76-ஆம் ஆண்டில் யோசிக்கப்பட்டு இதுவரையில் கட்டடம் கட்டப்படவில்லை. அந்தக் கல்லூரியிலே பயில்கிற மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் ஏறத்தாழ 22 பேர்கள்தான் இப்போது பயிலுகிறார்கள் என்றாலும் ஏற்கனவே ஒரு வகுப்பில் 40 பேர்கள் கூடப் பயின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலேயும் வட்ட மருத்துவ மனைகளிலேயும் நியமிக்கப்பட்டிருக்கலாம். அவர்களுக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இந்த 4 ஆண்டுகளிலே திண்டுக்கல், சேலம் ஆகிய 2 இடங்களிலே தான் 2 ஹோமியோபதி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இது மிகவும் வருந்தத்தக்கதாகும். ஏனென்றால், ஹோமியோபதி பயிற்சி என்பது நல்ல முறையிலே பயன்படுத்தப்படுமானால், அலோபதிக்கு ஆகின்ற செலவிலே ஏறத்தாழ 100-க்கு 30 அல்லது 40 விகிதம்தான் செலவாகும். அதிக படுக்கை வசதிகளும் தேவையில்லை. புற நோயாளியாகவே பெரும்பாலான நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க முடியும். அந்த மருந்துகளிலே கிடைக்கக் கூடிய தனி சிறப்பை பயன்படுத்திக் கொள்ள முடியும். அந்த ஹோமியோபதி கல்லூரிக்கு ஒரு பஸ் வாங்கித் தந்திருக்கிறோம் என்று சொல்வதோடு விட்டு விடாமல் ஒரு 30, 40 இடங்களுக்கு அந்த ஹோமியோபதி மருத்துவர்களை நியமிக்க வேண்டும். அந்த ஹோமியோபதி மருத்துவம் என்பது வெஸ்டர்ன் மெடிசன் என்று சொல்வதற்கும் இடமுண்டு. அதனுடைய மூலத் துவக்கம் ஓரியண்டல் மெடிசனிலே அதற்குத் தொடர்பு உண்டு. கீழ்த்திசை நாடுகளினுடைய மருத்துவங்களோடு தொடர்புடையதாகத்தான் இது உருவாக்கப்பட்டது. அதனாலே கிடைக்கின்ற சில நற் பலன்களை மற்ற மருத்துவத்திலே பெற முடியாது. அதைக் கவனிக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும் நான் பல விரிவான குறிப்புகளை வைத்திருந்தாலும் இன்றைக்குப் பேசுவதற்கு நேரமில்லை. சித்த மருத்துவத்திற்கு நீங்கள் அதிகத தொகையை ஒதுக்கி இருக்கிறீர்கள். ஏற்கனவே கடந்த 2 ஆண்டுகளிலே ஒதுக்கிய தொகையை நீங்கள் முறைப்படி செலவிட்டீர்களா ? அந்தக் காரியங்கள் நடைபெற்றனவா? அந்தக் காரியங்கள் நடைபெறவில்லை என்று சொல்லுகிறபோது நீங்கள் தொகையை மட்டும் அதிகமாக ஒதுக்குகிறோம் என்று சொன்னால் என்ன பொருள்? 1980—81 ஆம் ஆண்டிலே புதிதாக 15 சித்த மருத்துவ டாக்டர்கள், "பி.எஸ்.எம்.எஸ். அல்லது பி.ஐ.எம். பட்டம் படித்தவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தும் அந்த 15 பேர்கள் நியமிக்கப்படவில்லை. நியமிக்கப்படாதது மட்டுமல்ல. அதைப்பற்றிச் சொல்லப்படுகிறபோது இங்கே தெரிவிக்கப்படுகிறது, 'பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்ந்தெடுக்காத காரணத்தால் இந்தப் பதவிகள் நியமிக்கப்படவில்லை.'



These Siddha wings are yet to be started functioning for want of selection of Assistant Medical Officers by Tamil Nadu Public Service Commission.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனங்கள் எல்லாம் சர்விஸ் கமிஷன் மூலம்தான் தொடங்க வேண்டும் என்று சொன்னால் அந்தக் காரியங்கள் காலத்தில் தொடங்காது. அதிலே காலதாமதம் ஏற்பட நியாயமான காரணங்கள் இருக்கலாம். அந்த செலக்ஷன் வேறு. அரசாங்கம், அரசாங்கத்தினுடைய ஒரு கல்லூரியாக இருக்கக்கூடிய கல்லூரியிலே பட்டம் பெற்று வெளியே வருகிறவர்களுக்கு முன்னுரிமை தந்து, எப்படி எம்.பி.பி.எஸ். பட்டியல் வைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல வைத்துக் கொண்டு, நியமித்திருந்தால் இந்த 15 இடங்களிலே அது இயங்கி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கடந்த 3 ஆண்டுகளாக சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த ஒரு ஆலோசனை திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு இந்த ஆண்டும் அந்த ஆலோசனைதான் சொல்லப்பட்டிருக்கிறது.

அது கூட அமைச்சர் அவர்களுடைய உரையிலே இல்லை. அதை ஆலோசிக்கவே முடியாது என்று அமைச்சர் நல்லவேளையாக விட்டு விட்டார். ஆனால் அவர் தந்திருக்கின்ற பெர்பார்மன்ஸ் பட்ஜெட் என்பதிலே. சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று உருவாக்குவது என்ற ஒரு ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால் அப்படி இடம் பெற்றிருக்கிறது. அப்படி சித்த மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதனுடைய அவசியம் எவ்வளவு என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சித்த மருத்துவத்தை பாளையங்கோட்டை கல்லூரியிலே நாம் பயிற்றுவித்தாலும் கூட, சென்னையிலே ஒரு கல்லூரி இருக்குமானால் சித்த மருத்துவத்தினுடைய முக்கியத்துவத்தை மற்றத் துறைகளிலே உள்ளவர்கள் உணருவதற்கான நல்வாய்ப்பை உருவாக்க முடியும். ஏற்கனவே ஒரு காலத்திலே நீதிக் கட்சி ஆட்சி நடத்தியபோது சென்னையிலே ஏற்படுத்தப்பட்ட இந்திய மருத்துவக் கல்லூரிதான் அதற்குப் பிறகு, இன்டக்ரேடட் மெடிகல் கல்லூரியாகி, அதற்குப் பின்னர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியாக மாறிவிட்டது. எனவே அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை இருக்கிற இடத்திலாவது ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைச் செய்வது, சித்த மருத்துவத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மூலிகைப் பண்ணை ஏற்படுத்துவதற்காக 1979—80 ஆம் ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என்பதையெல்லாம் நாம் படித்துப் பார்த்து இருக்கிறோம். இங்கே ஆளும்

[திரு. க. அன்பழகன்] [1981 ஏப்ரல் 8

கட்சியைச் சேர்ந்த திருவில்லிபுத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கூட அடிக்கடி கேள்வி நேரத்தில் கேட்டு இருக்கிறார். அந்த செண்பகத் தோப்பு, துளசித் தோட்ட மூலிகைப் பண்ணை என்ன ஆயிற்று, வீரப்புலி ஒதுக்கக்காடு பண்ணை என்ன ஆயிற்று என்றெல்லாம் கேட்டு இருக்கிறார். அவைகள் பற்றி ஏற்கனவே இங்கே குறிப்பிடப்பெற்று இருக்கிறது. வீரப்புலி ஒதுக்கக்காடு பண்ணைக்காக 1974 ஆம் ஆண்டில் ஆலோசிக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டில் அது குறித்த ஆய்வுகள் தொடங்கப்பட்டு, அதற்கு அரசு அனுமதி வழங்கி, 1977 ஆம் ஆண்டில் விரிவாகச் செய்வதாகச் சொல்லி, பின்னர் 1979 ஆம் ஆண்டில் உருவாகி வருவதாகச் சொல்லி, பின்னர் 1980ஆம் ஆண்டில் வரும் என்று குறிப்பிட்டு, இப்போதும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்த இடத்தில் மூலிகைப் பண்ணை அமைப்பதைப் பற்றி கருத்து ஆராய முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரசாங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நிதி ஒதுக்கம் செய்ததாகச் சொன்ன ஒரு திட்டம் இப்போதுதான் ஆய்வு செய்யப்படுகிறது என்று சொன்னால், அது எந்த அளவிற்கு குறைபாடு உடைய முறையில் அரசால் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. நான் இந்த அறிக்கையில் இருக்கின்ற விவரங்களைப் படித்துக் காட்டுகிறேன். இந்திய முறை மருத்துவம் என்கிற புத்தகத்தின் 5—6 பக்கங்களில் அது குறித்து கூறப்பட்டு இருக்கிறது. (‘ கொல்லிமலையில் ஒரு மூலிகைத் தோட்டம் ஏற்படுத்துவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. அடியிற்குறிப்பிட்டுள்ள இடங்களில் மூலிகைத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டங்களைச் செயலாக்கம் பெறச் செய்வதற்கு முனைப்புடன் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. 1. கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்கக்காடு, 2. மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகம், 3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவரங்கம் என்று கூறப்பட்டுள்ளது.)

இந்த வீரப்புலி ஒதுக்கக்காடு பண்ணை ஆரம்பிக்க இப்போது தான் முனைப்புடன் பரிசீலிக்கப்படுகிறது என்று சொன்னால் கடந்த 3 ஆண்டுகாலமாக அரசாங்கச் சார்பாகச் சொல்லப்பட்டு வந்த கருத்துக்கள் என்ன ஆவது ? இந்த அரசாங்கம் முன்னால் சொன்ன அறிவிப்பைப் பின்னால் மாற்றிக் கொள்வது என்பது சரியானதல்ல. அந்தத் துறையில் உள்ளவர்களும் அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்பு அதைச் செயலாற்ற முன்வரவில்லை என்றால் அது சரியல்ல. ஒரு முடிவு எடுக்கப்பட்ட பின்பு, அந்தத் திட்டம் பற்றி மீண்டும் பரிசிலிக்கப்படும் என்று சொல்வது சரியானதல்ல. அதைப்போலவே மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகத்திலும் மூலிகைப் பண்ணை ஆரம்பிக்கப்படும் என்று 2—3 ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. அதுவும் பரிசீலிக்கப்படும் என்று சொன்னால் முடிவு எடுத்துவிட்ட பிறகு காரியங்களைச் செய்வதற்குப் பொறுப்பான முறையில் செயப்



1981 ஏப்ரல் 8] [திரு. க. அன்பழகன்]

படாத நிலைமையை நாம் காண்கிறோம். அரசாங்கம் ஒரு கருத்தைச் சொல்லிவிட்ட பிறகு அதை நிறைவேற்றுவதற்கு ஊக்கம் அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது பயன் உள்ளதாக இருக்கும். அப்படிச் செய்யாமல் இருந்தால் அதனுடைய விளைவுகள் நன்றாக இருக்காது. சித்த மருத்துவத்தை செம்மையாக வளர்க்க முடியாது உங்களால் என்கிற ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதற்குக் காரணமாகி விடும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

சித்த மருத்துவ அறிவு வளர்ச்சி மேம்பாட்டுக் குழு கிட்டத்தட்ட இந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனைச் சுவடிகளை, எத்தனைக் கையேடுப் பிரதிகளை அச்சிட்டு இருக்கிறார்கள் ? அவற்றால் ஏற்பட்ட பலன் என்ன ? தட்டச்சு செய்து வைத்திருப்பது எத்தனை ? அவைகளையெல்லாம் அச்சிட எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன ? அவற்றை எந்த அளவிற்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள் ? என்னைப் பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை, நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், பழனி அறங்காவலர் குழுவோடு தொடர்புகொண்டு, அவர்கள் ஒப்புக் கொண்ட காரணத்தால் 40 புத்தகங்கள் சித்த வைத்திய முறை பற்றியவை வெளிவந்தன. ஆனால் பிறகு ஆண்டுக்கு இரண்டு மூன்று புத்தகங்கள்தான் வெளி வருகின்றன. அதற்குக் காரணம் என்ன ? அந்தப் பிரதிகளுக்கு உரை எழுதுகிற ஆற்றலுள்ள அறிஞர்கள் வயதானவர்களாக ஆகி வருகிறார்கள். அவர்கள் எதிர்காலத்தில் நீண்ட நாள் வாழ முடியாத நிலையில் இருப்பதால் பிறகு அந்த நூல்கள் வெளிவராமல் போக நேரிடும். ஆகவே, எவ்வளவு விரைவாக அந்த வேலைகளைச் செய்ய முடியுமோ, அவற்றை அச்சிடச் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

இந்தப் பெரிய புத்தகம் ‘ஹிஸ்டரி ஆப் சித்தா மெடிசின்’ என்பதை இப்போது தான் அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து நான் பெற்றேன். இதற்கு முன்பு இருந்த அமைச்சர் ஒரு பகுதியைக் கொடுத்தார். இன்றைய அமைச்சர் முழுவதையும் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொள்கிற நல்வாய்ப்புப் பெற்றேன் நான். இப்படிப்பட்ட ஒரு பெரிய புத்தகம் அச்சிடப் பெற்று இருக்கிறது. இந்தப் புத்தகம் அச்சிடப் பெற்று ஓராண்டுக் காலம் ஆகியிருக்கிறது. இது அச்சிடப்படுவதற்கான காரணங்கள் அரசாங்கத்தின் செயலாளருக்குத் தெரிந்து இருக்கும். அப்போது இருந்தவர் மாறியிருக்கலாம். ஆனால் அரசாங்கத்திடம் இதற்கான குறிப்புகள் இருக்கின்றன. 1972 ஆம் ஆண்டில் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு 1973 ஆம் ஆண்டில் அதற்

[திரு. க. அன்பழகன்] [1981 ஏப்ரல் 8

கான குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டில் திரு. கந்தசாமி பிள்ளை என்பவர் ஒரு மாபெரும் அறிஞர், பல்வேறு துறைகளிலும் வல்லவர் என்ற காரணத்தாலே அவரிடத்தில் நீங்கள் தான் ஆங்கிலத்தில் இந்த நூலை எழுதித் தரவேண்டும் என்று கேட்டு, அவர் 2—3 ஆண்டுக் காலம் இரவு-பகல் பாடுபட்டு இவ்வளவு பெரிய அரிய நூலை அலோபதி நூலுக்கு ஈடாகத் தொகுத்து தயாரித்து அளித்துள்ளார்கள்.

இதைக் குறித்து சுருக்கமாகச் சொல்வதானால், An introduct on of Siddha Medic.nc to International Medic l World என்று கூறலாம். இந்த நூலைப் பற்றி, நூலின் அருமை பெருமை பற்றி இந்த அரசாங்கம் இன்னும் கூட உணரவில்லை. அச்சிட்டு வைத்து இருக்கிறார்கள். பி.ஐ.எம்., பி.எஸ்., எம். அண்டு எஸ்., படிப் பவர்கள் இதைப் படித்துப் பார்த்துப் பயன் பெறக்கூடும். அந்த அளவிற்கு ஒரு 'General History of Siddha Medcine என்கிற வகையில் இது இருக்கிறது. ஆகவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், அந்தத் துறையில் உள்ளவர் களுக்கு இது தயாரிக்கப்பட்ட நோக்கம் தெரியாமல் இருக்கலாம்.

[பிற்பகல் 1—10]

முதலிலே இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டதன் நோக்கத்தை உணரவேண்டும். அந்த அறிஞர் 75 வயதிலிருந்து 78 வயது வரையில் தன்னுடைய வாழ்க்கையின் கடைசி காலத்தில் இதை எழுதி முடித்துவிட்டு, தன்னுடைய மூச்சை யும் முடித்து விட்டார். இந்த அருமையான பணி எதற்காக மேற்கொள்ளப்பட்டது என்றால் மத்திய அரசிலே இருக்கிற நல்வாழ்வுத் துறை அமைச்சர் இந்த மருந்துவத்தைப்பற்றி எந்தவிதமான விளக்கமும் பெற முடியாமல் இருந்தார். அப் போது டாக்டர் கரன்சிங் அமைச்சராக இருந்தார். பல்வேறு சந்தர்ப்பங்களிலே அவரிடம் இதுபற்றி எடுத்துச் சொல்லப் பட்டது. அப்போது அவர் சொன்னது, இதுபற்றி எதுவும் சரியாகத் தெரியவில்லை; விளக்கமாகத் தெரிந்துகொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் உள்ள நூலைத் தாருங்கள் என்று கேட்டார், அதற்காகத்தான் முதலில் இந்த புத்தகம் எழுத திட்டமிடப்பட்டது.

இதுபற்றி விரிவான முறையிலே அகில இந்தியாவிலும், ஏன், உலகிலேயும் உள்ள மருத்துவத் துறையினர் தெரிந்து கொள்ளும் வகையில் இந்தப் புத்தகத்தை அகில இந்தியாவிலும் இருக்கிற அனைத்து மருத்துவ நிறுவனங்களுக்கும் அனுப்ப வேண்டும். அகில இந்தியாவிலும் இருக்கிற ஆர்வேதிக் ரிசர்ச் இன்ஸ்டிட்டியூஷன்ஸ், யுனானி ரிசர்ச் இன்ஸ்டிட்டியூஷன்ஸ்



1981 ஏப்ரல் 8] [திரு. க. அன்பழகன்]

ஹோமியோபதி ரிசர்ச் இன்ஸ்டிட்டியூஷன்ஸ் ஆகியவைகளுக்கு எல்லாம் அனுப்ப வேண்டும். அலோபதி முறையில் படிக்கின்ற மாணவர்கள் கூட இதைப்பற்றித் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். இதன் விலையைப்பற்றி கவலைப் படாமல் அகில இந்தியாவிலும் இருக்கிற அலோபதி மருத்துவக் கல்லூரிக்கும் அனுப்ப வேண்டும். எல்லா பல்கலைக் கழகங் களுக்கும் அனுப்ப வேண்டும். இந்தப் புத்தகத்திலே விலை போடவில்லை; குறைந்தது 50 ரூபாயாவது மதிக்கப்படும் என்று கருதுகிறேன்.

டாக்டர் உத்தமராயன் அவர்கள், சித்த மருத்துவத் துறையிலே பணியாற்றியவர் என்பதால், இந்த புத்தகத் திற்கு முன்னுரை வழங்கியிருக்கிறார்கள், புத்தகத்தின் 'கண்டன்ட்' பற்றி விவரமாகச் சொல்லவில்லை. ஆனால் அரசாங்கத்தின் தரப்பிலே வேறு குறிப்புகள் எதுவும் இதிலே இடம்பெறவில்லை. இந்தப் புத்தகத்தின் நோக்கம் அரசினுடைய முயற்சி, இந்தப் புத்தகத்தை உருவாக்கித் தந்த கந்தசாமி பிள்ளைக்கு அரசாங்கம் செலுத்த வேண்டிய நன்றி ஆகிய அனைத்தையும் இடம்பெறச் செய்திருக்க வேண்டும். இங்கே இடம்பெறவில்லை.

அகில இந்திய மருத்துவத்துறை வல்லுநர்களும் ஓரளவுக்கு திருப்தி அடைகிற வகையில் இன்றைய தினம் சித்த மருத்துவம் பற்றியவிளக்கம் இதில் சிறப்பாக அமைந்திருக்கிறது. இதனு டைய சிறப்புகளை எல்லாம், பெருமைகளை எல்லாம் இங்கே எடுத்துச்சொல்லி விளக்குவதற்கு நேரம் இல்லை; அதனுடைய அவசியத்தை விரிவாக எடுத்துச் சொல்ல நேரம் இல்லை. அலோபதி மருத்துவத் துறையிலே இருக்கிற சில குறைபாடு களைக்கூட இன்றைக்கு சித்த மருத்துவத்தில் ஈடுசெய்யக் கூடிய நிலை இருக்கிறது. இதனுடைய நோக்கமும், முறையும் அலோபதிக்கு ஈடுகொடுக்கின்ற வகையிலே அமைந்திருக்கின்றன. சித்த வைத்திய முறை, அலோபதி, ஹோமியோபதி, யுனானி ஆகிய எல்லா முறைகளுக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது, அத்தகைய சிறப்பு மிக்கதாக இருக்கிறது. இதிலே 100-க்கு மேற்பட்ட அரிய பயன்தரும் மருந்துகள் இருக்கின்றன.

இந்தப் புத்தகத்திற்கு ஒரு வெளியீட்டு விழா கூட நடத்தி யிருக்கலாம். வேறு எது எதற்கோ விழா நடத்துகிறீர்கள். நான் அரசு விழாக்களுக்கு வருவதில்லை என்றாலும், இதற்கு ஒரு விழா நடத்துவதாக இருந்தால் நான் முன்வரிசையிலே வந்திருந்து நீங்கள் ஆற்றும் உரையைக் கேட்கத் தயாராக இருக்கிறேன்.

சித்த வைத்தியத்தின் நோக்கு, முறை சாதாரண மக்களுக்கு தெரியாமல் இருக்கலாம்; புரியாமல் இருக்கலாம். ஆனால் அரசியலிலே இடம்பெற்று இருக்கிற டாக்டர் ஹண்டே அவர்களுக்கு நிச்சயமாக இதைப் பயன்படுத்த, வெளி உலகுக்கு தெரிவிக்க வாய்ப்பு இருக்கும்; அந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சித்த வைத்தியத் துறையில் ஆர். ஐ. எம். பி. களாக உள்ளவர்கட்குப் பெரும் குறை இருக்கிறது. 3,4 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள், பரம்பரை மருத்துவர்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே, அமைச்சரிடம் கேட்டபோது பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதை மீண்டும் வலியுறுத்துகிறேன். நாங்கள் பதவியில் இருந்தபோது சித்த மருத்துவத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் விவரத்தைக் கொடுங்கள், கவுன்சிலில் பதிவு செய்து சொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கேட்டது. அப்போது. 1974—75-ல் இயக்குநர் மூலம் ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டது, கவுன்சிலில் சேர்ப்பதற்காக அந்தக் காலகட்டத்திற்குள் பட்டியல் வேண்டுமென்று மத்திய அரசு கேட்டதால் அப்போது அவசரம் அவசரமாக அவர்களைப் பதிவு செய்து ஒரு பட்டியல் போட்டுக்கொடுத்தோம். இப்போது மேலும் பதிவு செய்துகொள்ள அனுமதி இல்லை என்கின்றனர். ஆகவே, மீதி இருக்கின்ற பயிற்சி பெற்ற மருத்துவர்களையும். பதிவு செய்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஆர். ஐ. எம். பி. தேர்வு எழுதி, அவர்களும் பதிவு செய்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்படுவதின் மூலந்தான் இந்த சித்த மருத்துவத் துறையை அழியாது காப்பாற்ற முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆர். ஐ. எம். பி.யாக, கிராமப் புறங்களில் ரூரல் டிஸ்பென்சரிகளில், பஞ்சாயத்து டிஸ்பென்சரிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு 225 ரூபாய்தான் ஊதியம் கொடுக்கப்படுகிறது. இந்த ஊதியம் 5 ஆண்டுகளுக்கு முன்னால் நியாயமாக இருந்திருக்காம். இன்றைக்கு குறைந்தது 300 ரூபாயாவதுக் அவர்களுக்குக் கொடுக்க முன்வர வேண்டும்.

சித்த மருத்துவம் இந்த நாட்டுக்கு ஏற்ற சிறந்த மருத்துவம். இந்தத்துறையிலே இருக்கிறவர்களின் இடுக்கண்களை நீக்கி மேலும் இதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டும். இதிலே பல பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி, அவர்களுடைய எண்ணங்களைக்கேட்டு, போராட்டத்





திற்கு இடமில்லாமல் ஏற்பாடுகளைச் செய்வதோடு அவர்கள் அத்தனை பேருக்கும் ஏதாவது ஒரு வகையிலே சித்த மருத்துவம் வளர்கின்றது என்ற நம்பிக்கையினை ஏற்படுத்துகின்ற வகையிலே செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைய இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது மிக நல்ல முறையிலே பல கருத்துக்களைச் சொல்லி அமர்ந்திருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இன்று ஏறத்தாழ 120 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை வேண்டும் என்று கேட்டிருந்தாலும் பேராசிரியர் அவர்கள் சொன்னதற்கிணங்க அதிலே வாட்டர் சுவரேஜ் என்ற செக்ஷனுக்காக 33 கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்டது போக மீதி கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்தான் மக்களுடைய நல்வாழ்வுக்கு என்று நாம் செலவழிக்க இருக்கிறோம். இப்படி 100 கோடி ரூபாயினை நாம் செலவழிக்கவேண்டும் என்று அதற்காக எழுப்பப்பட்ட மானியக் கோரிக்கையில் பல நண்பர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்திருக்கின்ற தீர்மானங்களிலே இன்க்ரீஸ் தி பெட் ஸ்ட்ரென்த் என்பதற்காக கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் 10. கட்டிடங்களை நல்லமுறையிலே விரிவுபடுத்தவேண்டும், ஜெனரேட்டர் வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் 28. மருத்துவர்களை ஏராளமாக நியமிக்கவேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் 18. புதிதாக மருத்துவ மனை அமைக்க வேண்டும் என்பதற்காக 15 பேர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அடுத்து தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற மருத்துவ மனைகளிலே வெவ்வேறு துறைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் 10. இப்படிப் பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட மானியக் கோரிக்கையினைப் பற்றிப் பேசுகின்றபோது நாம் முக்கியமான ஒன்றைக் கவனிக்கவேண்டும். ஏறத்தாழ 3, 4 ஆண்டுகளாக நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு ஒரு புதுமையான திருப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்லவேண்டும் என்றால் நகரப்புறங்களைவிட கிராமப்புறங்களுக்குத்தான் ஜாஸ்தியாக வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்ற வகையிலே அதாவது அர்பன்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1981 ஏப்ரல் 8

ஓரியன்டட் பட்ஜெட் என்பதற்குப் பதிலாக ரூரல் ஓரியன்ட்டட் பட்ஜெட் என்ற வகையிலே நிலைமையை மாற்றி அமைத்து அந்த வகையிலே ஒரு பட்ஜெட்டைத் தயாரித்து இந்த இரண்டு மானியக்கோரிக்கைகளும் வந்திருக்கின்றன என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இந்த நிலையினை கிராமப்புறங்களில் இருந்து வருகின்றவர்களும், நகரப்புறங்களில் இருந்து வருகின்றவர்களும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு மாவட்டத்துக்கு ஒன்று என்ற வகையில் நாம் இந்த ஆண்டு 15 ஆரம்ப சுகாதார நிலயங்களை ஏற்படுத்தி அந்த ஆரம்ப சுகாதார நிலயங்களின் தரத்தை உயர்த்தி தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ் என்ற லெவலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று ஒரு புரட்சிகரமான திட்டத்தையே ஏற்படுத்தி இருக்கிறோம். இதிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மிகவும் அக்கறைகாட்டி நிச்சயமாக கிராமங்களுக்கு நன்மை செய்தாகவேண்டும் என்று செயல்பட்டு வருகிறார்கள். அண்மையிலே மத்திய அரசிலே இருந்து இங்கே வந்திருந்த திரு. சங்கரானந்தம் அவர்கள் 'நீண்ட நாட்களாக நான் சொல்லிகொண்டு வந்த கருத்து இது, இதை நீங்கள் நடைமுறைப்படுத்தியதற்காக மகிழ்ச்சியடைகிறேன்,' என்று பாராட்டினார்கள். அடுத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்பட்ட காலத்திலே எதற்காகக் கட்டப்பட்டது என்றால் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்காகவும் அதாவது வாசக்டமி, ட்யூபக்டெமி போன்றவற்றைச் செய்வதற்காகவும், நார்மல் டெலிவரி போன்ற பிரசவ உதவிக்காகவும் கட்டப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு வாசக்டெமி செய்துகொள்வதற்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை குறைந்த நிலையில் அதை மினி ஹெல்த் சென்டராக ஆக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் அதற்கு பிறகு ஹெரினியா, ஹைட்ரோசில் போன்ற வியாதிகளுக்கெல்லாம் தலைமை மருத்துவ மனைக்கும் தாலுக்கா மருத்துவ மனைக்கும் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே தான் கிராமங்களிலே மருத்துவமனைகளை ஆரம்பித்தும் அது சரியாகப் பயன்படாத காரணத்தால் பரீட்சார்த்தமாக 15 இடங்களில் ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

[பிற்பகல் 1-20]

அப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணுகிற நேரத்திலே பல இடங்களில் இருந்து அது முடியுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இருந்தாலும் கூட அது முடியும், செய்து காட்டுவோம் என்று நாம் இந்த முயற்சியை தைரியமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். எந்த மாநிலத்திலேயும் சரியான முறையில் எடுத்துக்கொள்ளாத ஒரு முயற்சியாக இருந்திருக்கிறது. அதை நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே அதை நாம் நல்ல வகையிலே செய்தாக வேண்டும்.



1981 ஏப்ரல் 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

தாலுக்கா மருத்துவ மனையிலே என்னென்ன வசதிகள் இருக்குமோ அத்தனையும் செய்தாக வேண்டும். எத்தனை படுக்கை வசதிகள் கொண்டவை என்பது பொருள் அல்ல. நம்முடைய குறிக்கோளின் படி ஒரு தாலுக்கா தலைமை மருத்துவ மனையிலே 100 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியாக அமைய வேண்டும் என்று இருக்கிறது. ஆனால், தற்போது எடுத்துக்கொண்டிருக்கிற இந்தத் திட்டத்திலே 20 படுக்கைகள் தான் வைக்கப் போகிறோம். படுக்கைகளுடைய எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் இதிலே பிரச்சினை இல்லை. நாம் அங்கே கொடுக்கக்கூடிய சிகிச்சையின் தரம் தான் முக்கியம் இது நல்ல முறையில் பயன் அளிக்கக்கூடிய வகையில் அமையுமேயானால், இன்னும் கொஞ்சம் அதிகமாக நல்ல முறையில் விஸ்தரிக்கலாம் என்பது எண்ணம்.

இதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்ன போது, நீங்கள் அதை எடுத்துச் செய்யுங்கள், அதன் முழு விளைவையும் பார்க்கிறேன், நல்ல முறையில் வெற்றிகரமாக முடித்தீர்களேயானால், இன்னும் நல்ல முறையில் பல்வேறு கிராமங்களிலிருந்து வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வகையில் அதை நாம் விரிவு படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் எல்லாம் செய்யவிருக்கிறோம்.

அது மட்டும் அல்லாமல் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை நாங்கள் புதிதாக துவக்கவிருக்கிறோம். அந்த 20 நிலையங்களில், 10 நிலையங்கள் அமைக்கப்பெறும் இடங்கள், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் இடங்கள். வெவ்வேறு கிராமங்களில் அவ்வாறு துவக்க இருக்கிறோம். இந்த 20 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் ஆரம்பத்திலேயே நல்ல தரமானதாக, நன்கு செயல்படக்கூடியதாக தரமான மருத்துவ வசதிகள் கிடைக்கும் இடங்களாக அமைக்கவிருக்கிறோம். சாதாரணமாக பழைய ஆரம்ப சுகாதார நிலையங்களைப்போல் அல்லாமல் ஆரம்பக் கட்டத்திலேயே சற்று தரமானதாக துவக்கிவிடலாம் என்ற கருத்தில் அதை நடைமுறைப்படுத்த இருக்கிறோம். அதைப்பற்றி விவரமாக அறிக்கையில் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டும் அல்லாமல் இன்னும் கிராமங்களுக்காக 383 பிரைமரி ஹெல்த் சென்டர்களில் சில வசதிகள் செய்யவிருக்கிறோம். அதிலே 191 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஸ்டாப் குவார்ட்டர்ஸ்களுடன் கூடியதாக ஏற்கெனவே இருக்கிறது. 75 பிரைமரி ஹெல்த் சென்டர்களில் டிஸ்பென்சரி பில்டிங் மட்டும்தான் இருக்கிறது. ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்னதாக சில லட்சியங்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சுகாதார நிலையங்களில், இன்னும் அந்த லட்சி

யங்கள் முழுமையாக நிறைவேறாத காரணத்தால், உடனடியாக அவைகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களைத் துவங்க இருக்கிறோம்.

கிராமங்களில் டாக்டர்கள் தங்க இடம் இல்லை என்று இங்கே கூட சுட்டிக்காட்டினார்கள். அந்தக் குறையைப் போக்க டாக்டர்கள் அங்கே தங்குவதற்கு வசதியாக டிஸ்பென்சரி பில்டிங்குடன், ஸ்டாப் குவார்ட்டர்ஸ்களும்—காம்பவுண்ட் வால்களும் கட்ட—அதுவும் உடனடியாக 75 பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு அவ்வாறு கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். அதே போல காம்பவுண்ட் வால்கள் மட்டும் 191 இடங்களில் கட்டுவதற்கான திட்டம் ஒன்றும் வைத்திருக்கிறோம். இந்த விஷயங்கள் நிச்சயமாக மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும், அவர்கள் இதை வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக இங்கே ஒரு விஷயத்தைச் சொல்லாம் என்று கருதுகிறேன். மினி ஹெல்த் சென்டர்களைப் பற்றியது அது. இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில், சென்றக் கூட்டத் தொடரிலே, சென்ற மானியக் கோரிக்கையிலே பேசும்போதே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். இந்த மினி ஹெல்த் சென்டர் என்பது புதிதான ஒரு திட்டம். மத்திய அரசாங்கத்தின் ஸ்கீம். இதற்கு கிராமங்களிலே வாலண்டரி அசோசியேஷன்கள் தேவை. அப்போதுதான் மத்திய அரசு அதற்கு மானியம் கொடுப்பார்கள். அவர்கள் கொடுப்பது 9,000, நாம் போடுவது 9,000 இதில். இந்த ஸ்கீமிற்காக நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வது உங்களுடைய தொகுதியைச் சுற்றிப்பார்த்து, அதை ஏற்படுத்த உதவி செய்யுங்கள். எந்தெந்த இடங்களில் அசோசியேஷன்களை அமைக்க முடியும் என்று பாருங்கள். அதன் அடிப்படையில் தான் இந்த மினி ஹெல்த் சென்டர்களை அமைக்க முடியும் என்று ஏற்கெனவே கேட்டேன். இப்போதும் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் ஏற்கெனவே 114 இடங்களில் இத்தகைய மினி ஹெல்த் சென்டர்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட இத்தகைய மினி சென்டர்களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, உங்களுடைய முழு ஒத்துழைப்பும் இதிலே தேவை. நாம் அனைவரும் இதில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தடியாக நம்முடைய மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சென்ற ஆண்டு ஜூனியர் டாக்டர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு ஸ்கீமை



அறிவித்தீர்களே, இந்த ஆண்டு அது என்னவாயிற்று என்று கேட்டார்கள். அந்த விஷயத்திலே நிச்சயமாக நம் கொள்கையை சற்று மாற்றிக்சொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால், அந்தக் கொள்கையைப் பொறுத்த அளவிலே, அது அரசினால் ஏற்றுக்கொண்ட ஒரு கொள்கையாக இருந்தாலும் கூட, மருத்துவத் துறையிலே இருப்பவர்கள், அஸிஸ்டெண்ட் சர்ஜன்களாக இருந்தாலும் சரி, வேறு டாக்டர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம் ஜூனியர் டாக்டர்கள் என்ற இந்த ஸ்கீம் ஆரம்பித்து விட்டால் நன்றாக வெற்றிகரமாக வருமா என்பதிலே சந்தேகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏனென்றால் கொடுக்கக் கூடிய சம்பளம் அவ்வளவு அதிகமாக ஒன்றும் இல்லை. மொத்தமாக 500 ரூபாய் என்று வைத்திருந்தோம். அது இப்போது ஹவுஸ் சர்ஜன்களுக்கு ஸ்டைபெண்டாக கொடுக்கப்பெறுவதை விட சற்று அதிகம்—ஒரு 150 ரூபாய் ஜாஸ்தியாக இருக்கும்.

It will mean under-employment and extracting more work for less remuneration.'—

ஆக, ஒரு குற்றச்சாட்டை, ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். அது மட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு யோசனை சொல்லி, தாற்காலிகமாக நியமிக்கப் படுவதைவிட நிரந்தரமான அடிப்படையிலே நியமிப்பது நல்லது என்று ஒரு நல்ல யோசனையைச் சொன்னார். ஆண்டுக்கு 700 டாக்டர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் தேவையைக் கணக்கிட்டு, மொத்தமாக 1,400 டாக்டர்கள் தேவை என்று பார்த்த பிறகு, 1,400 டாக்டர்கள் நேரடியாக தேர்வாணைக் குழு மூலமாக எடுத்து கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். பேராசிரியர் அவர்கள்கூட அவர்கள் சொல்லவேண்டிய கருத்தைச் சொன்னார்கள். இருந்தாலும், அவருடைய மனதிலே ஓரளவு நிச்சயமாக பாராட்டுதல் இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால், தாற்காலிகமான முறையில் நியமிக்காமல், ஒரேயடியாக எடுத்த எடுப்பிலேயே நிரந்தரமாக 1,400 டாக்டர்களை தேர்வாணைக் குழு மூலமாக எடுத்திருக்கிறோம். இந்த நிலை இந்தியாவில், எந்த மாநிலத்திலும் இல்லை என்பதை என்னால் சொல்ல முடியும்.

திரு க. அன்பழகன் : மருத்துவத் துறையை பட்டினி போட்டுவிட்டு, வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவர்களின் வாய்ப்பைத் தடுத்துவிட்டு, உடனடியாக வேலையில் வைக்காமல், தடுத்து நிறுத்தி, இன்னும் 2 ஆண்டுகள் கழித்து 3,000 பேர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேராசிரியர் அவர்கள் எதிர்க் கட்சி உணர்வோடு பேச வேண்டுமென்பதற்காக பேசிக்கொண்டிருக்கிறார். அவருக்குத் தெரியும். ஆண்டு தோறும் நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். யாரையும் பட்டினி போடவில்லை. மோர் சாதம் கேட்கிறவர்களுக்கு பாயசம் கொடுக்கிறோம். பேராசிரியர் அவர்கள் சொல்லக்கக்கூடிய கருத்திற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. ஆண்டுதோறும், 700 650 டாக்டர்களை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 1,400 பேர்கள் எடுத்திருக்கிறோம்; இது ஒரு பெரிய சாதனை.

பல்வேறு இடங்களில் டாக்டர்கள் இல்லாமல் மருத்துவ மனைகள் காலியாக இருக்கின்றன என்ற குறைபாட்டை பல நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு இந்த 1,400 டாக்டர்கள் நியமித்து, பயன்படுத்தப் போகிறோம். இதிலே இன்னொரு குறையை நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கூறினார்கள். அது என்னவென்று சொன்னால், பல டாக்டர்கள் சென்னையிலேயே இருக்கிறார்கள். கிராமங் களுக்குப் போவது கிடையாது. இங்கேயே இருக்கிறார்கள். எப்படியோ ஒரு பெரிய சக்தியை உருவாக்கிக் கொண்டு, அமைச்சர் முடிவு செய்தாலும், அதைத் தடுத்து நிறுத்தி இங்கேயே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து எனக்கு சாதகமாக இருக்கிறது. எங்கள் கரங்களை பலப்படுத்துவ தாக இருக்கிறது. காரணம் அந்தக் கருத்தின் அடிப்படையில், நாங்கள் படிப்படியாக செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்கு முழு ஒத்துழைப்பையும் எல்லாக் கட்சிகளின் சார்பிலும் தரவேண்டும். அதோடு படிப்படியாக நீண்ட காலமாக, பல்லாண்டுகளாக சென்னையிலே இருக்கக்கூடிய மருத்துவர்களை, மபஷியலுக்கு மாற்றுகிறோம். மதுரை, திருநெல்வேலிக்கு அனுப்பலாம். போஸ்ட் கிராஜுவேட் படித்தவர்களையும் மற்றவர்களையும்கூட கிராமங்களுக்கு அனுப்பலாம். படிப் படியாக கிராமங்களிலே பல்லாண்டுகளாக பணியாற்றுகிற வர்களை இங்கே நகரப்புறத்திற்கு கொண்டுவரலாம்; அது நன்றாக இருக்கும். அது வரவேற்கத்தக்க கருத்து. அந்த அடிப்படையிலே இந்த அரசு செயலாற்றும் என்பதை திட்ட வட்டமாக நான் நண்பர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.



அடுத்தபடியாக, நம்முடைய மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் இன்னொரு கருத்தை அதாவது ஆக்சிடெண்ட் பற்றிய கருத்தை சொன்னார்கள். விழுப்புரத்திலே நடைப் பெற்றதைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே நானும் சென் றிருந்தேன். அங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினரும் வந்திருந்தார். அந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரை அது தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. படிப்படியாக மாவட்டந்தோறும் ஆக்சிடென்ட் அண்டு எமர்ஜென்சி சர்வீசை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஏற்கனவே 4 மாவட்டங்களில் மதுரை, திருநெல்வேலி, முகவை, கன்னியாகுமரி, மாவட்டங் களில் எடுத்திருக்கிறோம். பிறகு, இப்போது கோவை, நீலகிரி, பெரியார், திருச்சி மாவட்டங்களுக்கு, ஆக மொத்தம் 8 மாவட்டங்களில் ஆக்சிடென்ட் அண்டு எமர்ஜென்சி சர்வீஸ் திட்டத்தை ஒரு பெரிய, புதிய திட்டத்தை, பல மாநிலங் களிலே இல்லாத ஒரு திட்டத்தை இங்கே நிறைவேற்றுவதற்காக தீட்டியிருக்கிறோம். அதை நிச்சயமாக வரவேற்பார்கள். அடுத்தமுறை வாய்ப்பு கிடைக்கின்ற நேரத்தில், விழுப்புரத் திற்கு நாம் என்ன செய்யலாம் என்பதைச் சொன்னேன். சட்ட மன்ற உறுப்பினர் இருக்கும் சூழ்நிலையை அவரிடத்திலே சொல்லி யிருப்பார்கள். அதைத்தான் பேராசிரியர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

'Accident and Emergency Service'

இது தேசிய நெடுஞ்சாலையிலே இருக்கிறது. யாரும் சொல்ல வில்லை. நான் சொன்னேன்.

(பிற்பகல் 1-30)

அந்தக் கருத்தைதான் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்லி யிருப்பார் என்று நினைக்கின்றேன். அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக இருந்தாலும், நம்முடைய நிதிநிலையைப் பொறுத்து அதை எடுத்துக் கொள்கிறோம் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஈ. எஸ். ஐ. மருத்துவ மனையைப் பற்றிச் சொன்னார்கள். ஈ. எஸ். ஐ. மருத்துவ மனை பொதுவாக மிகவும் தீவிரமாக கண்காணிக்க வேண்டிய பகுதியாக இருக்கிறது. ஏனென்றால், ஈ. எஸ். ஐ. மருத்துவ மனையைப் பொறுத்தவரை யில் எனக்கும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கும் அதிலே பங்கு உள்ளது. அதிலே மருத்துவர்கள் நியமிக்க வேண்டிய அந்த பொறுப்பு நல்வாழ்வுத் துறையிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனு மதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, அதிலே பல இடங்களுக்கு இரண்டு பேரும் சென்று பார்த்து என்னென்ன குறைகள் என்று பார்த்து பரிகாரங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். அது தனி கவனம் செலுத்த வேண்டிய இடம். அப்படிப்பட்ட இடத்தில் முதல் கட்டமாக நமக்கு கிடைத்திருக்கக் கூடிய 1,400 டாக்டர்களில், f rst pr fer nc கிராமங்களுக்குக் கொடுத்து ; Sceond prcfre cc ஈ.எஸ்.ஐ. கொடுத்து பிறகுதான் நகரங்களுக்கு கொடுப்பதாக இருக்கிறோம். ஆகவே, ஈ.எஸ்.ஐ. க்களில் அந்த குறைபாடுகள் நீக்கப்படும்.

அடுத்து மருந்துகள் ஈ.எஸ்.ஐ.-க்களில் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். மருந்துகள் கிடைப்பதில்லை என்பது, பொதுவாக இருக்கக் கூடிய பிரச்சினை ; அங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகளை நான் சொல்கிறேன். மருந்துகள் கிடைக்கவில்லை என்று தகவல்கள் கொடுக்கின்றவர்கள், ஒரு மருந்து கிடைக்கவில்லை என்று சொல்வார்கள். அதற்கு வேறு ஒரு மருந்து இருக்கிறது. உதாரணமாகச் சொல்கிறேன். காம்பே..ஸ் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். காம்போஸ் என்றால், '' தைசப்பான் டேப்ளெட் ''. அது கெமிக்கல் பெயர். இதை அய்ந்து ஆறு கம்பெனிகள் தயார் செய்கின்றன. அந்த Particular brand இத்தாலியன் கம்பெனியினுடையது மாத்திரம் கிடைப்பதில்லை. அந்த காம்போஸ் கிடைக்கவில்லை, அதற்கு பதிலாக இன்னொரு '' தைசப்பான் '' இருக்கின்றது.......

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்ற கருத்து நியாயமான கருத்து, நிலைமை என்னவென்றால் அந்த மருந்தும், அதற்கு ஈடான மருந்தும் மருத்துவ மனைகளில் இல்லை. அதற்கு ஈடான மருந்தும் இல்லாத காரணத்தால் மருந்தை நீங்கள் வெளியே வாங்கி வாருங்கள் என்று சொல்லி, மூன்று நன்கு மருத்துவ மனைகளிலே வாங்கி வரச் சொன்ன விவரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றமே நடைபெறவில்லை, குறைகள் இல்லை என்று சொல்லவில்லை. அதை விளக்குவதற்காகத்தான் இந்த மன்றத்தை நான் பயன்படுத்துகின்றேன். ஒரு மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன், பழக்கப்பட்டவர்கள் எனக்குத் தெரியும். இதில் பல்வேறு டாக்டர்கள் இருக்கிறார்கள். அதே பிராண்ட் வேண்டும்; வேறு எந்த பிராண்டும் வேண்டாம். காம்போஸ் தான் வேண்டும் என்று சொல்கிறவர்களுக்கு, இங்கே மருத்துவர்க கொடுள்பதற்கு ஒரு சங்கடமான நிலைமை ஏற்படும். இதேபோல '' பிரிமோல்டின் '' என்ற மருந்து. '' ப்ளீடிங் '' நிறுத்துவதற்காக கொடுப்பது. இதற்கு வெவ்வேறு மருந்துகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் பயன்படுத்தச் சொல்கிறோம். இதனால் எல்லா மருந்துகளும் இருக்கின்றன என்று ஒட்டுமொத்தமாக அந்த மருத்துவ மனைகளுக்கு வக்காலத்து வாங்க வேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. இது சாதாரண குற்றச்சாட்டு ; என்னிடத்திலேயும் பலர் சொல்லியிருக்கிறார்கள் ; அது நடைபெறுகிறது ; அப்படி மோசமாக இல்லை என்பதற்காக நான் சொன்னேன்.



அடுத்தபடியாக, மாண்புமிகு சௌரிராஜன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மருந்துகள் வாங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். உணவு பற்றி சொன்னார்கள். நாம் இதில் எந்த அளவு செலவழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்வது நன்றாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். நாம் மெடிகல் எஜூகேஷன் துறையிலே, அங்கே இருக்கக் கூடிய மருத்துவ மனைகளிலே 6 கோடியே, 22 இலட்சம், '' டையட்டிற்காக '' மட்டும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அதே மாதிரி சென்ற ஆண்டு ஐந்து கோடியே 93 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கின்றது ; அதேபோல் இண்டியன் மெடிசன் மருத்துவம் கொடுக்கக் கூடிய அந்த மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்காக கொடுக்கக்கூடிய '' டையட் சார்ஜ் '' 39 இலட்சம் செலவு செய்து கொண்டிருக்கிறோம். அடுத்து Medical Serv cc and F. mily Well re மாவட்டங்களில் இருக்கக்கூடிய அந்த மருத்துவ மனைகளிலே எட்டு கோடியே, ஏழு இலட்சத்து, 97 ஆயிரம் நாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். பப்ளிக் ஹெல்த் பிரிவெண்டிவ் அன்ட் பிரைமரி ஹெல்த் என்பவற்றிற்கு 1 கோடியே 40 ஆயிரம் ரூபாய் அளவிலே அதற்காக செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இப்படிச் செலவழிக்கிறபோது இது கொஞ்சம்கூட போதாது, இன்னும் அதிகமாக நல்ல முறையிலே டயட்டுக்கு செலவழிக்க வேண்டுமென்ற பிரச்சினை இருந்தாலும்கூட, மெண்டல் ஆஸ்பிடலில் மைதா மாவு எல்லாம் கொண்டுவந்து யாரோ வேறு ஆட்கள் பிரட் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏறத்தாழ நான்காண்டுகள் நான் அந்த கமிட்டியிலே இருந்திருக்கின்றேன். நம்முடைய மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபோது நான்காண்டுகள் அந்தக் கமிட்டியிலே இருந்த நேரத்திலே ஒவ்வொரு மாதமும் நான் சென்று பார்த்தேன். அதிலே கொஞ்சம் எனக்கு அனுபவம் இருக்கின்ற காரணத்தினாலே கொஞ்சம் பர்ஸ்ட் ஹாண்ட் இன்பர்மேஷன் கொடுக்க முடியும். ரொம்பவும் ஆச்சரியமாக இருக்கும். டாக்டர் சௌரிராஜன் அதைப் போய் பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மெண்டல் பேஷண்ட் அவர்களாகவே நல்ல முறையிலே பயிற்சி பெற்றுக் கொண்டு வேலைகளையெல்லாம் செய்து கொண்டு பல்வேறு பொருட்களைத் தயாரித்து வெளி உலகத்திற்கு

அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அது பாராட்டுக் குரியது. அதை மிகைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னார்கள். இந்த அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில் மருத்துவ மனையிலே ஏனென்றால் அநாவசயமாக பீதி உண்டாக்கக் கூடாது, டாக்டர் சௌரிராஜன் சொல்லி விட்டார் அவரே சொல்லிவிட்டார் என்று யாராவது பயந்து பீதி ஏற்படுவது தேவையில்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன். லெட் அஸ் நாட் அன்னெசசரிலி பிரைட்டன் தி பீபிள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். டிப்ளமோ இன் அனஸ்திசியா படிக்காதவர்கள் டாக்டர்கள் ஆக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள் அங்கே என்ன நிலைமை இருக்கிறது என்பதை விளக்குகிறேன். எதிர்க்கட்சியிலே இருக்கின்றபோது நமக்குத் தகவல் கொடுக்கிற போது அப்படியெல்லாம் இருக்கிறது என்று சொல்கிற போது நமக்குப் பயங்கரமாகத் தோன்றும், ஆனால் போய்ப்பார்த்ததற்குப் பிறகு அந்த அளவிற்கு இல்லை என்று நமக்குத் தெரிகிறது. அங்கே என்ன நிலைமை என்றால் அனஸ்திசியாவிலே மொத்தம் 50 டாக்டர்கள் நல்ல வகையிலே பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள், டிப்ளமோ இன் அனஸ்திசயா அஸ்வெல் அசிஸ்ஸம். டி. அவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 13 பேர்களுக்கு அங்கே அவர்கள் பார்வையிலே பயிற்சி கொடுக்கப்பட்டுவருகிறது. எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்று சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அங்கே விமன் அன்ட் சில்ரன் ஆஸ்பிடலில் ஒருவர் இறந்துபோனார். விவரம் எல்லாம் இருக்கிறது கார்டியாக் அரஸ்டு என்று. டிப்ளமோ இன் அனஸ்திசியா பெற்றிருக்கிறவர்களாலே அனஸ்திசியா கொடுக்கக் கூடிய நேரத்திலே அது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தான் சொல்கிறேன். பயங்கரமான பீதியை ஏற்படுத்த வேண்டாம். மருத்துவ மனைகளுக்குப் போகிறவர்களுக்கு அச்சம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டி டெட்டனஸ் ஆக்ஸைடு இருக்கிறது. டெட்டனஸ் ஆக்ஸைடு எளிதாக கிடைக்கும். ஏ.டி.எஸ். கிடைப்பதில்லை. ஏ. டி. எஸ். கியூரேடிவ் ஆக இருக்கிறது. அதற்காக கிங் இன்ஸ்டிடியூட் என்ற பெரிய அமைப்பு இருக்கிறது. பல்லாண்டுகாலமாக இருக்கிற பெரிய அமைப்பு அது அங்கே நடப்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1979-80-ஆம் ஆண்டு 69,620 டோஸஸ் ஆப் ஏ.டி.எஸ். பிரிவெண்டிவ் ஆக 1,500 யூனிட்டுகள் செய்திருக்கிறார்கள்



அதற்கடுத்தபடியாக 10 ஆயிரம் யூனிட் கியூரேடிவ் ஆக ஆதாவது டெட்டனஸ் வந்த பிறகு பயன்படுத்தக்கூடியது என்ற முறையிலே ஒரு டியூப் 14 ரூபாய் 15 ரூபாய் கொடுத்தாலும் கிடைப்பதில்லை. கிடைப்பது கஷ்டம், மருத்துவ மனையிலே இல்லையென்றால் வேறு பிரச்சினை. கிங் இன்ஸ்டிட்யூட்டிலே இல்லை என்றால் நமக்கு வேறு வழியே கிடைப்பதற்கு இல்லை. சென்ற ஆண்டு 24,701 இந்த வருடம் 6 மாதங்களுக்குள்ளாகவே 15,635 டோஸஸ் அங்கே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே,

Kind Institute of functioning in a very very fine manner. நான் பல தடவைகள் அங்கே போய்ப் பார்த்திருக்கிறேன். அநாவசியமாக குறைகூறுவதன் காரணமாக நல்ல முறையிலே அங்கே வேலை செய்கிறவர்களுக்கு உற்சாகம் இல்லாமல் போய்விடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இப்போது இருக்கக் கூடிய ஆட்சியிலே 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயும். நமக்கு இருக்கின்ற குறிக்கோள் எல்லாம், 5 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பகுதிக்கு மெட்டர்னிடி சென்டர், சப் சென்டர் கொடுக்க வேண்டுமென்ற பெரிய திட்டம், அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே 7,500 மெட்டர்னிடி சென்டர்ஸ் தமிழ்நாடு முழுவதும் அமைக்க வேண்டுமென்று பெரிய புரட்சிகரமான திட்டத்தை நாம் வெகு வேகமாக அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் 3,623 அதிலே கொண்டு வந்து விடுவோமானால் நம்முடைய குறிக்கோளை எட்டமுடியும். 50 சதவீதத்திற்கு மேலாக நம்முடைய குறிக்கோளை எய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-40]

அடுத்தப்படியாக நம்முடைய மதிப்பிற்குரிய திரு. பாரமலை அவர்களும், நம்முடைய மாண்புமிகு மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் ஆக இந்த இரண்டு பேரும் ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். மோட்டார் வெஹிகில்ஸ் என்று சொல்லப்படும், நடமாடும் மருத்துவமனை என்றும் சொல்லலாம். இல்லாவிட்டால் அங்காங்கு போய் பணியாற்றும் ஊர்திகள்—மொபைல் ட்ரீட்மென்ட் கொடுக்க அதற்காகப் பெரிய வகையிலே திட்டத்தைத் தீட்டிக்கொண்டு வந்தோம். அதில் பல்லாண்டுக்காலமாக 1,528 வண்டிகள் நம்முடைய இலாக்காவின் மேற்பார்வையில் இருக்கின்றன. 823 வண்டிகள் பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டவைகளாக இருக்கின்ற வண்டிகளாக இருக்கின்றன. அந்த வண்டிகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. ஆனால் நேரம் இல்லாத காரணத்தால் அவைகளைப்பற்றியெல்லாம் சொல்ல முடியவில்லை. அந்த வண்டிகளில் எதை

யெதை கன்டெம் செய்யலாம், எதையெதைப் பழுது பார்க்க வேண்டும் என்று அதற்காக தனி டிப்பார்ட்மென்ட், இத்தனை ஆண்டுகள் இந்த மோட்டார் வெஹிகில்ஸினுடைய State Health Off cer Office under Publ c Health Departmeaı Offce இன் கீழ் இயங்கிக்கொண்டு வந்தது. ஆனால் இப்பொழுது அப்படி அல்ல. இப்பொழுது தனியாக ஒரு டிப்பார்ட்மென்ட், Dtrect yunder the Secretary, Health, இயங்குவதற்கு, ஏனென்றால் we are trying to speed up these Mobile centres அந்த வகையிலே செய்ய இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள் இருபதாயிரம் ரூபாய் மருந்துகளை இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் கொடுப்பது எங்கே போதும் என்று கேட்டார்கள். நான் ஒரு நல்ல செய்தியை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். 15,000 ரூபாய் வருஷத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருந்தின்செலவுக்காக கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அது 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 14,000 இந்த நடமாடும் மருத்துவ மனைகள், இந்த மோட்டார் வண்டியிலே போகும் அந்த மருத்துவமனைகளுக்கு 14,000 தனியாக, இந்த இருபதாயிரம் ரூபாய் இல்லாமல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அது 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. யானைப் பசிக்குச் சோளப்பொறி போல என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் இது ஓரளவுக்கு அவர்களுக்கு திருப்தியளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது படுக்கைகளின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்தையும் நான் படித்திருக்கிறேன். எந்த நேரத்தில் எந்த அங்கத்தினர் கேட்டாலும் விவரம் சொல்லலாம்; பதில் சொல்லலாம். நான் அவற்றைப் படித்திருக்கிறேன். ஆனால் அவைகள் எல்லாவற்றையும் பற்றிச் சொல்வதாக இருந்தால் நேரம் இல்லை. ஆனால் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரையிலே நீங்கள் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களுக்குப் படுக்கை வசதியை உயர்த்தியதே கிடையாது முன்பெல்லாம். இப்பொழுது இந்த ஆண்டு, ஒரு ஆண்டுக்குள்ளேயே 420 படுக்கைகள் கிராமப்புறங்களிலே, உட்கிராமங்களிலே, Primery Health Centres என்று சொல்வோமே



420 படுக்கைகள் உயர்த்தியிருக்கிறோம். அதேநேரத்திலே Medical Education Department Metrcpolitan area லே அது அங்கே 381 உயர்த்தியிருக்கிறோம். கிராமப்புறங்களிலே 420. டிஸ்ட்ரிக்டிலே

| | | |
|---|---|---|
| District Headquarters | | 507 |
| Post Partum programme | இலே | 280 |
| Taluk Headquerters | இலே | 157 |

ஒட்டுமொத்தமாக 1,745 படுக்கைகள் ஒரு ஆண்டிலே உயர்த்தியிருக்கிறோம் என்றால் இதைவிட எந்த மாநிலத்திலே வேண்டுமானாலும் புள்ளி விவரத்தைக் கொண்டு வந்து காட்டுங்கள் எந்த மாநிலத்திலேயும் இந்த அளவிற்கு உயர்த்தவில்லை, என்பதை நான் தைரியமாக, without any fear of contradiction மறுப்பு இல்லாத வகையிலே சொல்ல என்னால் இயலும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்

அடுத்தபடியாக, இங்கே மலேரியாவைப் பற்றி நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் சொன்னார்கள். மலேரியாவைப் பொறுத்த வரையிலே நாம், integreat டு approach செய்து கொண்டிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் மலேரியா காய்ச்சலினுடைய பேஷன்டுகளின் எண்ணிக்கையைக் குறைக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். சென்ற மூன்றாண்டுகளில் பார்க்கின்ற நேரத்திலே, இந்த ஆண்டு பரவாயில்லை ஓரளவிற்கு முன்னேறியிருக்கிறோம்; கொஞ்சம் குறைவாக இருக்கிறது. இரண்டு இடங்களில்;, ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்றால், The two pl ces which are endem c for malleria இரண்டு இடங்கள். இராமேஸ்வரம் ஐலன்ட். அதிலே ஒரு இடம். சென்னை மாநகரத்திலே உள்ள இடம். இந்த இரண்டு இடங்களும் மலேரியா ஜாஸ்தியாக வரக்கூடிய இடங்களாக இருக்கின்றன. அந்த எண்ணிக்கையை நாம் பார்க்கின்ற நேரத்தில், 1979 ஆம் ஆண்டு, இராமேஸ்வரத்திலே 29,474 மலேரியா காய்ச்சல் கேஸ்கள் வந்தன. இப்பொழுது, 1980 ஆம் ஆண்டு 9,369 ஆக Reduction by 70% The who e thing வந்திருக்கிது இங்கே சென்னையைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடியது, கொடுக்கக்கூடிய மருந்துகளெல்லாம் மத்திய அராசாங்கத்திலிருந்து கொடுக்கிறார்கள். அதில் ஒட்டுமொத்தமாக most of them are oil p oducts அதிலே ரேஷன் இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்று கொடுத்துவிடுவார்கள். அந்த மருந்தை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே இராமேஸ்வரத்திற்குக் கொஞ்சம், சென்னை நகரத்திற்குக் கொஞ்சம் என்று பயன்படுத்துகிறோம். அப்படிச் செய்கிற நேரத்தில், சென்னையிலே நமக்கு இன்னும்கூட மருந்து

தேவைப்படுகிறது என்று நாம் எழுதியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே 9 சதவீதம் சென்னையிலே உயர்ந்திருக்கிறது. 33,460 ஆக இருந்தது சென்ற ஆண்டு. இந்த ஆண்டு 36,193 ஆக வந்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக இந்த இரண்டு இடங்களைப் பார்க்கிற நேரத்திலே, 62,900 ஆக இருக்கக் கூடிய எண்ணிக்கை 45,462 ஆகக் குறைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சித்த மருத்தவத்தைப் பற்றி மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். அவர் சொல்லியிருக்கக்கூடிய அத்தனை கருத்துக்களையும் அந்த உணர்வுகளையும் நானும் பகிர்ந்து கொள்கிறேன் என்று சொன்னால், அவர்கள் அதை ஒத்துக்கொள்வார்கள். அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும்கூட, அவரே சொன்ன மாதிரியாக நாம் சிலவற்றைச் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறோம். இடையிலே பல்வேறு பிரச்னைகள் வரத்தான் செய்யும்? அப்ஜக்ஷன்ஸ் என்று சொல்வார்கள்., ஆடிட் அப்ஜக்ஷன்ஸ் என்று சொல்வார்கள். பல்வேறு வகையான இடையூறுகள் வந்தாலும்கூட, அதிலே ஒன்றை நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலே அதிலே முழுமையாக நாம் கவனம் செலுத்தி, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த அடிப்படையிலே எல்லாவகையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கிறோம். இந்த ஆண்டு ரூ. 2 கோடிக்கு மேலாக நாம் ஒதுக்கத் தயாராக இருக்கிறோம். அந்தப் புள்ளி விவரம் கூட இருக்கிறது: சென்ற ஆண்டை விட, ஏறத்தாழ 75 சதவீதம் ஜாஸ்தியாக, சித்த மருத்துவத்திற்காக — இந்தியன் மெடிசினுக்காக — நாம் ஒதுக்கியிருக்கிறோம். அதிலே, சரண்டர் செய்வோமா என்று கேட்டார்கள். அதைச் செய்யாமல், நல்ல வகையிலே நடவடிக்கை எடுப்போம்.

மதிப்பிற்குரிய திரு.கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதிய நூலைப் பற்றிச் சொன்னர்கள். அவர்கள் கேட்டார்கள், நான் உடனடியாக வரவழைத்துக் கொடுத்தேன். அவர்களுக்கு. அதிலே இருக்கிற அக்கறை, அந்த அனுபவம் கூட நன்றாக இருக்கிறது. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள், இப்படி ஒரு விழா நடத்துங்கள், நான் முன்வரிசையிலே வந்து உட்காருகிறேன் என்று. அந்த விழாவுக்கு அவரே பொறுப்பு எடுத்து, தலைமை தாங்குகிற மாதிரியாகக் கூடச் செய்யலாம், என்னைப் பொறுத்தவரையிலே எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற பாகுபாடெல்லாம் பார்ப்பது கிடையாது. இப்பேர்ப்பட்ட நல்ல காரியங்களுக்கு முன் வரக்கூடிய நேரத்தில், உங்க



ளுடைய அறிவு, ஆற்றல், அனுபவம், உங்களுடைய ஒத்துழைப்பு அனைத்தையும் முழுமையாக நாங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, அவருடைய அந்த உணர்வுகளுடைய அடிப்படையிலே இதிலே காரியம் ஆற்ற இருக்கிறோம் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையிலே ஒரு கருத்தை, இங்கே மாண்புமிகு கம்யூனிஸ்ட் அங்கத்தினர் திரு கருப்பையா சொன்னார்கள். அதிலே, Bi t. and Death எத்தனை, பிறப்பு, இறப்பு என்கிற விகிதாச்சாரத்தைச் சொன்னார்கள், நிலைமை என்னவென்றால், சராசரியாக, 1975 ஆம் ஆண்டு State death 15 per 1,000

1976 ஆம் ஆண்டு 14.7 per 1,000.

1977 ஆம் ஆண்டு 13.7 per 1,000.

1978 ஆம் ஆண்டு 12.8 per 1,000.

1979 ஆம் ஆண்டு 12 per 1,000

இது இறப்பு, பிறப்பு (Birth) தற்போது எப்படி இருக்கிறது என்றால், சராசரியாக, 30.7 இருந்தது. இப்பொழுது 28.2 என்ற அளவிற்கு வந்திருக்கிறது. ஆக, இடையிலே 16 ஆயிரத்திற்குத்தான். அகில இந்தியாவிலே பெரிய அளவிலே இப்பொழுது சென்சஸ் நடந்திருக்கிறது. சென்சஸ் நடந்து, அகில இந்தியாவிலே நாம் 'டெத்ஸ்' குறைத்திருக்கிறோம். 'பெர்த்ஸ். குறைத்திருக்கிறோம், இடைவெளியைக் குறைத்திருக்கிறோம் (1·6 p r ye r escl tion of popuiat on) என்று வருகிற நேரத்திலே, இந்தியாவிலே ஆந்திரப் பிரதேசம், அசாம் என்றெல்லாம் பட்டியல் இருக்கிறது. எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு, இந்த சென்சஸ் எடுத்தது, அகில இந்தியாவில் எவ்வளவு (esalat on of popul tion) என்பது இப்பொழுது நான் கொடுத்திருக்கிறபுள்ளி விவரம் நம்முடைய தமிழகத்தில் எடுத்தது. ஆகவே தமிழக சர்க்கார் தந்திருக்கிற புள்ளி விவரம், குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்த அளவிலே மிக நல்ல வகையிலே, உண்மையான புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறது என்பது பாராட்டுக்குரிய ஒரு அம்சமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே அப்படி கிடையாது. மாநில சர்க்கார் கொடுத்த புள்ளி விவரத்திற்கு நேர் மாறாக, (escalat or of population) அங்கே இருக்கிறது. அந்த மாதிரியாக இல்லாமல், மத்திய சர்க்கார் குழு என்ன சொல்கிறதோ, அதே அளவு நாம் நல்லமுறையிலே உண்மையான புள்ளி விவரத்தைக் கொடுத்து, இந்தத் துறையிலே நல்ல வகையிலே

வெற்றிகரமாக செயல் பட்டிருக்கிறோம் என்று (Tamil Nadu spectacular achievements in Family Planning) என்றெல்லாம் வட நாட்டிலேயிருந்து வந்திருக்கக்கூடிய பல்வேறு பத்திரிகை நிருபர்கள் எல்லாம் வந்து பார்த்து, அதைப் பாராட்டியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஒரு சுவையான பிரச்னை. ஏனென்றால், கொஞ்சம் பசிக்கிற நேரத்தில் சுவையான பிரச்னை. பல நண்பர்கள் இங்கே எழுப்பியிருக்கிறார்கள், (Medical College Admission) அது ஒரு பெரிய பிரச்னை (Head ache) அதிலே, பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு வி. கிருஷ்ணமூர்த்தி ஒரு கருத்தைச் சொன்னார். சொல்கின்ற நேரத்தில், எனக்குத் தெரியும் அந்தக் கருத்து, அவருடைய கட்சியினுடைய கருத்தாக இருக்காது, வேறு கருத்தாகக் கூட இருக்கலாம். தனிப்பட்ட வகையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதோடு கவனிக்கத்தக்க ஒரு கருத்தாக இருக்கிறது.

(பிற்பகல் 1-50)

இருந்தாலும் அதிலே இருக்ககூடிய பல்வேறு சங்கடங்களை எல்லாம் மிக அழகாக, அந்தத் துறையிலே அனுபவம் பெற்றிருக்கிற மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுதான் நமக்குச் சங்கடம். ஒரு வகையிலே மெரிட் என்று போனால் அங்கே பிரச்சினை வருகிறது. வேறு வகையிலே சென்றாலும் பிரச்சினை வருகிறது. கோர்ட்டிலே ஏராளமான கேஸ்கள் போயிருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூட, ஆளுநர் உரையில் பேசுகின்ற நேரத்தில் என்று நினைக்கிறேன், சொன்னார்கள். ஏராளமான கேஸ்கள் போயிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் இதிலே என்ன வேடிக்கை என்றால், இதலே மகிழ்ச்சிகரமான செய்தி என்னவென்றால், ஏறத்தாழ 50 கேஸ்களுக்கு மேல் போனதில் 25, 30 கேஸ்கள் பேக்வேர்டு காஸ்டுக்கு நீங்கள் அலாட் பண்ணக்கூடாது என்பதற்காக இந்த கேஸ்கள் எல்லாம் போனது ஹைகோர்ட்டிலே இது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கடைசியில் ஜட்ஜ்மென்ட் சொல்லப்பட்டது, அந்த காப்பியை நான் எழுதி வைத்திருக்கிறேன் அந்த ஜட்ஜ்மென்டிலே மிகத் தெளிவாக சொல்லி இருக்கிறார்கள்.





Reservation of seats for Special categories மாண்புமிகு உறுப்பினர் கலப்புத் திருமணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்என்று சொன்னார்கள். அந்த வகையிலே (Clubbing of .P.U.C. Candidates with Plus 2 Higher Secondary candidates. Increase of quota reservation for B.Cs. from 31% to 50%

ஒவ்வொரு தலைப்பின் கீழ் கூட உயர்நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்து இருக்கிறது. இதிலே எந்தவிதமான குழப்பமும் இல்லை, இதிலே எந்தவிதமான ஊழலும் இல்லை. இது நியாயமானதுதான் என்று நல்ல வகையிலே பாராட்டி, இதுவரையில் இப்படி ஒரு பாராட்டுக்குரிய வாய்ப்பு கிடைத்திருக்கும், இல்லை என்று சொல்லக் கூடாது, இருந்தாலும் தைரியமாக நான் சொல்வது என்னவென்றால், நாம் கடைபிடித்து இருக்கக்கூடிய முறை நியாயமானது. அதிலே எந்தவிதமான ஊழலும் இல்லை என்று ( The High Court has given a perfect chit to our Government ) இதைவிட நமக்கு என்னதேவை என்று இந்த நேரத்தில் நான் கேட்கவிரும்புகிறேன். இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தி என்னவென்றால், நாம் எல்லாம் பூரிப்படையக் கூடிய செய்தி என்னவென்றால், இத்தனை மார்க்குகள் இருக்கின்றன. அதிலே யார் முதளீடம் பெற்றிருக்கிறார்கள். யார் முதலில் வந்திருக்கிறார்கள் என்றால், நாம் ரொம்பவும் ஆச்சரியப் படத்தக்கவகையில் பார்வார்ட் கிளாஸ் இருக்கின்றது, பேக்வார்டு கிளாஸ் இருக்கின்றது செடியூல் கிளாஸ் இருக்கின்றது. செடியூல் டுடிரைப் இருக்கின்றது, ஆனால் இவர்கள் அத்தனைபேர்களிலும் ஹையஸ்ட் மார்க்கு யாருக்குக் கிடைத்திருக்கிறது என்று கேட்டால் செடியூல்ட் கிளாசைச் சேர்ந்த ஒரு பையனுக்குத்தான் கிடைத்திருக்கிறது.

(Highest mark by merit he has got ) கிடைத்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்கூட என்னிடத்திலே சொன்னார்கள். அந்தப் பையனை நான் பார்க்கவேண்டும். என்று சந்தோஷமாகச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் சர்க்காரிலே எந்த அளவுக்குத் தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்குமானால், எப்பேற்பட்ட தாழ்த்தப்பட்ட வர்களாகஇருந்தாலும் முற்பட்டவர்களை விட நல்ல சிறந்த வகையிலே வாய்ப்பு இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாக இருக்கிறது. அந்தப் பையனுக்குப் பரிசு கூட கொடுக்கவேண்டும் என்று கூட புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இது ஒரு பாராட்டுக்குரிய சம்பவம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,

இன்னொரு கட்டத்தில் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். என்னுடைய இனிய நண்பர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்குப்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1981 ஏப்ரல் 8

பிறகு நம்முடைய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட இப்படி குற்றச்சாட்டு எல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் பதிலே இல்லை என்று சொன்னார்கள். நான் அப்படியே எடுத்து வைத்திருக்கிறேன். ஏனென்றால் வாய்ப்பு கிடைக்கும்போது சொல்லாம் என்று நினைத்திருந்தேன். அவர் எழுப்பிய குற்றச் சாட்டை நான் படித்துவிடுகிறேன், 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 24 ஆம் நாள் மணிமேகலை—எண் 2846 மதிப்பெண் 919-80சதவிகிதம் முன்னாள் ராணுவத்தினர் அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் கொடுத்திருக்க வேண்டும். அது 6 சதவிகிதம் ஒதுக்கீடு செய்தும் இடம் கிடைக்கவில்லை ஆனால் இன்னொருவருக்கு கிடைத்திருக்கிறது என்று தன் கொடுத்தார்கள், இன்னொருவர் யார் ஜீவா வேதமணி ஆனால் இவருக்கு கிடைக்கவில்லை இதிலே என்னவென்றால் மணிகலை—மதிப்பென்919—80. 6%ஒதுக்கீடு செய்தும் கிடைக்க்வில்லை என்று சொன்னார்கள் 6 சதவிகிதம் என்றால் 1000 சீட்டுக்கு அவர்களுக்கு 60 இடங்கள் ஆகும். ஆனால் முன்னாள் ரானுவத்தினருக்கு ஒதுக்கப்பட்ட இடம் 6 இடங்கள்தான். 6 சதவிகிதம் கிடையாது. 6 சதவிகிதம் என்றால் அது பெரிய தொகை ஆகும் 6 இடங்கள்தான். இதிலே 2 இடங்கள் ராணுவத்திலே பணி. ஆற்ம்போது அந்த நேரத்தில் இறந்தவர்களுக்குத்தான் கிடைக்கும்.

(Died in action)

4 பேர்களுக்கு பின்னர் இறந்தவர்களுக்குத் கிடைக்கும். மற்றவர் களுக்கும் மதிப்பெண் என்ன என்று சொல்லிவிடுகிறேன்.

பெட்ரிக் மாதவன் 87.4 சதவீதம், ஜெயந்தி மூர்த்தி 85.25 சதவீதம். அவர் சொன்னது 80 சதவீதம். இதிலே என்ன வென்றால் 919—1200-ல். நான் எடுத்துக்கொண்டது எல்லாம் நேர்ட் பார்ட்டில் எடுத்துக் கொண்டோம். ஏனென்றால்

We must place the cards on the table

நாங்கள் ஏதோ குற்றம் செய்து விட்டதாக வரக்கூடாது என் பதற்காகச் சொல்கிறேன். நான் அவர் மீது எதுவும் தவறாகச் சொல்லவில்லை. நானும் இந்த மாதிரி எதிர்க்கட்சியில் இருந்த போது சொல்லி இருக்கிறேன். விவரம் சொல்வது என்னுடைய கடமை என்கிற வகையில் இதைத் தெரிவிக்கிறேன். பெட்ரிக் மாதவன் 87.4 சதவீதம், ஜெயந்தி மூர்த்தி 85.25 சதவீதம், ஜே. மீனாட்சி 90.25 சதவீதம், சந்திரகாந்தா 86.75 சதவீதம் இத்தனை பேரும் ராணுவ வீரர்ளுடைய குழந்தைகள் தான். அடுத்து......



1981 ஏப்ரல் 8]

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த பாயின்ட்டிற்குச் செல்வதற்கு முன் ஒரு விளக்கம் பெறுவதற்கு விரும்புகிறேன். என்னுடைய குற்றச் சாட்டுக்கு பதில் சொல்லியிருக்கிறார். ஒரு ராணுவ வீரருடைய மகள் என்று சொல்லி, அவருடைய மார்க்குகளைச் சொல்லி, அவர் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் (பேக் வார்ட் கிளாஸ்) என்று சொல்லி—இந்த இரண்டு நிலைமை களையும் விளக்கி, ஒன்று ராணுவ வீரருடைய மகள் என்கிற முறையில் கொடுத்து இருக்கலாம், அல்லது பேக்வார்ட் கிளாஸ் என்கிற அடிப்படையில் கொடுத்து இருக்கலாம், அப்படிக் கொடுக்காமல் குறைந்த மார்க் வாங்கியர்களுக்குக் கொடுக்கப் பட்டது என்று நான் சொன்னேன். அப்படிக் கொடுக்கப்பட்ட வரின் நம்பரையும் சொல்லி, அவர் எடுத்த மார்க் என்ன என்று சபையில் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். நம்முடைய அமைச்சர் அவர்கள்ராணுவ வீரர்களின் கோட்டாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற கான்டிடேட்களின் மார்க்கைப் படித்துக் காட்டினார்கள். என்னுடைய குற்றச்சாட்டு, அந்தக் கான்டிடேட் பேக் வார்ட் கிளாஸ், அதோடு ராணுவ வீரரின் மகள் என்பதாகும். அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லி மற்றொன்றைச் சொல்லாமல் இருப்பது, நான் சொல்லிய குறைந்த மார்க் கான்டிடேட்டின் நம்பர் பெயர் சொல்லாமல் இருப்பது சபைக்குத் தவறான தகவல் ஆகும்.

Hon. Dr. H. V. HANDE : Sir, out of sheer consideration and respect for the Hon. Member நான் சொல்கிறேன். நான் அவர் தவறான தகவல் தந்ததாகச் சொல்லவில்லை. அவருக்குக் கிடைத்த தகவலை அவர் தந்து இருக்கலாம். (குறுக்கீடு) உங்களோடு சத்தம் போட்டு சண்டை போட எனக்கு முடியாது. இருக்கிற நிலைமையைத்தான் நான் சொல்ல முடியும். கொஞ்சம் அமைதியாகக் கேளுங்கள். நான் சொல்லவந்தது, மணிமேகலை என்ற கான்டிடேட் 80 சதவீதம் எடுத்தார்கள் என்று ஒட்டு மொத்தமான மார்க் சொன்னார்கள். நான் சொன்னது, இரண்டு கேட்டகரியாக பிரித்து இருக்கிறோம். ஒன்று, டையிட் இன் ஆக்ஷன், அத்தகையவர்களின் குழந்தை களுக்கு 2 சீட் கொடுக்கிறோம், அப்புறம் 4 சீட் கொடுக்கிறோம். அவர்கள் 80 சதவீதம் எடுத்தவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். 87.4, 85.25, 90.25, 86.75 மார்க் எடுத்தவர்களுக்குக் கொடுத்திருக்கும்போது எப்படி இவர் களுக்குக் கொடுக்கமுடியும்.

இன்னொரு வேடிக்கை இதில் என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மார்க் அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று சொல்வார்களா என்று எனக்குத் தெரியவில்லை. அந்த மார்க்கின் அடிப்படையில் என்றால்—

We are strong. We are on a strong wicket. On the basis of the marks itself we are on a very strong wicket. மார்க்கின் அடிப்படையில் கொடுங்கள், இன்டர்வியூ அடிப் படையில் வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல் வார்களா என்று எனக்குத் தெரியாது, ஆனால் நிச்சயமாகப் பேராசிரியர் சொல்லமாட்டார், அது வேறு விஷயம்.

[பிற்பகல் 2.00]

அடுத்த குற்றச்சாட்டு, இது இன்னும் கொஞ்சம் இன்ட ரெஸ்டிங்காக இருக்கும். ஜீவா வேதமணி, எண். 10285, மதிப்பு எண். 863/1200. We take only third part இடம் கிடைக்கவில்லை. சேகர், எண். 10286, மதிப்பு எண். 769/1200. இடம் கிடைத்துவிட்டது. இது அடுத்த குற்றச் சாட்டு, 863-க்கு கிடைக்கவில்லை; 769-க்கு கிடைத்திருக்கிறது. இது என்ன பெரிய கொடுமை, பயங்கர குற்றச்சாட்டு என்று சொல்லியிருக்கிறார். குற்றச்சாட்டு என்னவென்றால், அடுத்த சேகர்

belongs to Scheduled Caste. The first one belongs to backward Class இந்தக் குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்கிறேன். சில விவரங்கள் எல்லாம் குறிப்பிலே வந்திருக்கின்றன. குற்றச் சாட்டைச் சொல்லும்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒன்றை இங்கே சொன்னார்கள். அவர்கள் சொல்லும் போது 'சவாலை விடாதீர்கள், அந்த சவாலை நீக்கிவிட்டு மற்றவைகளைச் சொல்லுங்கள்' என்றார்கள். அப்போது திரு. அ. ரகுமான்கான்—It is my birth right. Because of the evidence I have such confidence. I am prepared to resign my post in the interest of the people, it is not proved.

Mr. Speaker: I welcome your confidence and I receive the acknowledgement.

என்று சொல்லப்பெற்றது. இதில் நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன், அவர் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று. அவர் களுடைய கஷ்டம் எனக்குத் தெரியும். நானும் எதிர்க்கட்சியில் இருந்து பல்லாண்டு காலமாகப் பணியாற்றியிருக்கிறேன். எனக்கு கிடைக்கின்ற தகவல்களை வைத்துகுற்றச்சாட்டைச் சொல்வேன். அது சரியல்ல என்று பின்னால் பேராசிரியர் பதில் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அதற்காக வருத்தப்படக்கூடாது.

It is all a give and take as a sort of sportsman-spirit. குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லையே, குற்றச்சாட்டை ஆதாரத்தோடு மறுத்துவிட்டாரே என்று வருத்தப்பட





வேண்டிய அவசியம் இல்லை. இது குற்றச்சாட்டு. ஆனால் இதிலே 'ப்ராடர் இஷ்யூ' ஒன்று இருக்கிறது. We have to think about it. I am prepared to abide by the decision of the House. ''ப்ராடர் இஷ்யூ'' என்றால், நீங்கள் மார்க் அடிப்படையில் எடுங்கள், இன்டர்வியூ வேண்டாம் என்று சொன்னால், இதிலே இருக்கிற சங்கடங்களை எல்லாம் ஆராய்ந்து, நாம் சிந்தித்து எடுக்க வேண்டிய முடிவு அது. உதாரணத்திற்குச் சொல்லு கிறேன். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். அவனுக்கு என்ன 'ஆட்டிட்யூட்' இருக்கிறது கிராமத்தில் போய் வேலை செய்ய என்று சொல்லும்போது, பிரச்சனை வருகிறதே என்று பார்க்கும்போது, என்னுடைய தொகுதி சிட்டி, பட்டதாரி தொகுதி, ஆகவே நான் தொகுதிக் காகக்கூட வேலை செய்யலாம், ஆனால் அப்படிச் செய்யவில்லை.

இங்கே ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் அநேகமாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கிராமத்திலிருந்துதான் வரு கிறார்கள். அங்கே இருக்கிற சங்கடங்கள் அவர்களுக்குத் தெரியும். எவ்வளவு செலவு செய்து, கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறார்கள். எவ்வளவு பொருளாதாரத்தில் நலிந்தவர் களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சந்தர்ப்பமும் வசதியும் கிடைத்தால் அவர்களை யாரும் தோற்கடிக்க முடியாது என்பதற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பு மாண வர் மெடிக்கல் காலேஜ் அட்மிஷனில் 'ஃபெர்ஸ்ட் கிளாஸில்' வந்தார் என்பது ஒரு நல்ல சான்று, இதை விட வேறு சான்று தேவையில்லை. எங்களுடைய கட்சியின் அல்லது கழகத்தின் திட்டங்களுக்கு மாறாக போகக் கூடாது என்பதால் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் ஆணைப்படி நாம் இங்கே காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

நேரம் ஜாஸ்தி ஆகிவிட்டது. மேலும் பல அறிவிப்புகளை எல்லாம் இங்கே சொல்லவேண்டியிருக்கிறது. உங்களுடைய பொறுமையை நான் மேலும் சோதிக்க விரும்பவில்லை. ஆகையால் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

ஏற்கனவே 'டிரக்ஸ் இன்ஸ்பெக்டரேட்' ஒன்று தனியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம். அது விரைவில் ஏற்படுத்தப்படும். இன்னும் பல்வேறு குறைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்கெல்லாம் இங்கே பதில் கொடுத்தால் நேரம் ஆகும். இருந்தாலும் வெட்டுத் தீர்மானங்களுக்காவது பதில் சொல்ல வேண்டுமென்ற முறையில் சுருக்கமாகச் சொல்கிறேன்.

[டாக்டர். எச். வி. ஹண்டே] [1981 ஏப்ரல் 8

திரு. சு. பாலன் அவர்கள் எல்லா மருத்துவ மனைகளிலும் நாய் கடிக்கான மருந்துகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றி ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பொறுத்த வரையில் இங்கே ஒரு நல்ல செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். கிண்டி, கிங் இன்ஸ்டிட்யூட்டில் ஏ. ஆர். வி. ஆரம்பித்திருக்கிறோம். அங்கே இந்த 'ஆண்டி ரேபிஸ் வாக்சின்' தயாரிப்பது நல்ல முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. இங்கே கேள்வி எழுப்பினார்கள். இப்படிப்பட்ட மருந்துகள் எல்லாம் 'பாஸ்டர் இன்டிட்யூட்டில்' இருந்துதான் வர வேண்டுமா, அது மத்திய அரசு நிறுவனம், நாம் ஏன் தயாரிக்கக் கூடாது என்று கேட்டார்கள். அங்கிருந்து வரும் வரையில் நாம் காத்திருக்க வேண்டுமா என்றும் கேட்டார்கள். ஏற்கெனவே கிங் இன்ஸ்டிடியூட்டை பெரிய நிறுவனமாக்கி, அதனால் நமக்கு நல்ல வருமானம் வருகிறது. மற்றெல்லாம் செலவு ஏற்படக் கூடியதுதான். இந்த ஏ. ஆர். வி.-ஐ நாம் தயாரித்துக் கொண்டிருப்பதால் திரு. பாலன் அவர்கள் நிச்சயமாக வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த மாட்டார் என்று கருதுகிறேன்.

திரு. சித்தன் அவர்கள் இங்கே இல்லை.

To discuss the need to ease the grave unemployment problem among doctors. என்று அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். It has been eased very much by 1,400 அந்தப் பிரச்சினை எழவில்லை அதற்கடுத்ததாக நம்முடைய உறுப்பினர் திரு. சொரணம் அவர்கள் மருத்துவமனைகள் செயல் படும் விதங்களைக் கண்காணிக்க மக்கள் கமிட்டி நியமனம் செய்யவேண்டும் என்றும் டாக்டர்கள் நியமனத்தில் காலதாமதம் பற்றியும் வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்கள் தாமதம் ஏற்பட்டது உண்மை. இனிமேல் அந்தப் பிரச்சினை எழாது என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். ஆகவே இனிமேல் அந்தக் குறையும் இருக்காது.

அடுத்து, திரு. மு. அப்பாதுரை அவர்கள் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்டுவது பற்றி வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானம் வந்தவுடனே ஒருவரை அந்த மருத்துவமனைக்கு அனுப்பி எல்லா விவரங்களையும் அறிந்து வர வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறேன்.

அடுத்து To discuss the need to control unauthorised Homeopathy Doctors indulging in Family Planning operation என்று திரு. சித்தன் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.



1981 ஏப்ரல் 8] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஆகவே இதிலே நான் கேட்டுக்கொள்வது, இதிலே 100 கோடி ரூபாய்க்கு மேலாக பணம் கேட்டிருந்தாலும் அத்தனை பேரும் ஆங்காங்கே மருத்துவமனைகள் இல்லை வசதிகள் இல்லை என்று பல குறைபாடுகளைச் சொல்லி இருக்கிறார்கள். ஹெல்த் கேர் டெலிவரி சிஸ்டம் என்பதை மீண்டும் ஆராய வேண்டுமா என்ற கட்டத்திற்கு நாம் வந்திருக்கின்றோம்.

தற்போது நாம் இலவசமாக மருத்துவ உதவி செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் வசதி படைத்தவர்கள் பலர் கூட இலவசமாக மருந்துகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வசதியற்றவர்களுக்கு மருந்துகள் கிடைக்காமல் போகின்ற ஒரு நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே வசதி படைத்தவர்களிடம் ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை வாங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதாவது அப்படி வாங்கி வசதியற்றவர்களுக்கு அதை டிரான்ஸ்பர் செய்யலாமா என்ற அளவுக்கு வந்திருக்கிறோம். அப்படி டிரான்ஸ்பர் என்று சொல்கின்றபோது ட்ரான்ஸ்பர் ஆப் டெக்னாலஜியும் வேண்டி இருக்கின்றது.

We are not only to transfer money from surplus to a place where there is no money, but also transfer technology. Transfer of technology is a big art. அதாவது கிராமங்களிலே இருக்கக் கூடியவர்கள் நல்ல தரமான மருத்துவ உதவியினைப் பெற வேண்டும் என்பதற்காக ஏற்பாடுகள் செய்துகொண்டு இருக்கிறோம். நகரங்களில் உள்ள தலைமை மருத்துவர்களை எல்லாம் கிராமங்களுக்கு அனுப்பி கிராமங்களில் நல்ல தரமான வைத்தியத்தைக் கொடுப்பதற்கு என்றுநாம் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறோம். பல நிபுணர்களை எல்லாம் கிராமங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

Experts from Madras City are going to Tiruthani இன்னும் பல தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸுக்கும் கூட சென்று கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி மாவட்டத்தில் உள்ள பெரிய மருத்துவமனைகளிலிருந்து உதாரணமாக வேலூர் போன்ற தலைமை மருத்துவமனையிலிருந்து ப்ரைமரி ஹெல்த் சென்டர்ஸ்-க்கு எல்லாம் மருத்துவர்கள் ஹைட்ரோசீல் போன்றவற்றைச் செய்வதற்கு அனுப்பப்படுகிறார்கள். ஏப்சஸ், செல்லுலைட்டிஸ் போன்றவற்றை எல்லாம் செய்வதற்காக அனுப்பப்படுகிறார்கள். இது எல்லாம் ஒரு புதுமையான முறை. சமீபத்திலே மத்திய அரசிலே இருந்து இங்கே வந்திருந்த ஒரு அதிகாரி It is a wonderful idea

என்று கூறி இந்த ஸ்கீம் பற்றிய விவரங்களைத் தாருங்கள் அப்போதுதான் மற்ற மாநிலங்களில் இதைக் கடைப்பிடிக்கச் சொல்ல முடியும் என்று சொன்னார். அந்த அளவுக்கு புரட்சிகரமான திட்டங்களை புரட்சித்தலைவரின் இந்த ஆட்சியில் தான் செயல் படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் எதுவும் வீணாகவில்லை. எல்லாவற்றையும் பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். மேலும் இங்கே தனியாக முன் மொழிந்திருக்கக் கூடிய வெட்டுத் தீர்மானங்களையும் பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. ஆகவே கோரிய தொகையிலே வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கவில்லை என்ற நல்ல செய்தியின் அடிப்படையிலே இன்னும் கொஞ்சம் பணத்தை வாங்கிக் கொடுக்கின்ற வகையிலே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள், ஏற்பாடு செய்கின்ற வகையிலே அத்தனைபேரும் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களிடம் நான் ஒன்று மட்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அரசு அங்கீகாரம் பெற்ற பத்திரிகைகளின் நிருபர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படும் என்று சென்ற முறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது வரையில் அது நிறைவேற்றப்பட வில்லை. ஆகவே இந்த ஆண்டாவது அப்படி அரசு அங்கீகாரம் பெற்ற பத்திரிகைகளின் நிருபர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்க அமைச்சரவர்கள் உத்தர விடுவார்களா?

[பிற்பகல் 2.10]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன பிரச்சினை என்றால், எதிர்க் கட்சியிலே இருக்கும் போது எப்பவும் இதை நாம் கேட்டுக் கொண்டுதான் வருகிறோம். இதிலே என்ன பிரச்சினை என்றால், 3, 4 இலாக்காக்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. நிதி சம்பந்தப்பட்டது. இப்போது வறட்சி அதிகமாக நம் மாநிலத்தில் இருப்பதால், அந்தப் பணிகளுக்கே பணம் நிறையத் தேவைப்படும் காலத்தில், இங்கே திடீரென்று ஏதாவது அறிவித்து விட்டால் நிதித் துறைக்கு அது பெரிய சங்கடத்தைக் கொடுக்கும். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய கருத்து கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



மானியக் கோரிக்கை எண். 18.

மருத்துவம்.

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மு. அப்பாதுரை ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 66,22,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மானியக் கோரிக்கை எண்: 19.

பொதுச் சுகாதாரம்

திருவாளர்கள் சு. பாலன், கே. ஆர். சுந்தரம், பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—"மானியக் கோரிக்கை எண். 19—பொதுச்சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,85,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

]1981 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 9—4—1981 அன்று காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—13 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

249. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 27-6-1980 ஆம் தேதியிடப் பெற்ற 1578 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (குடியரசுத் தலைவரின் சட்டம் 31/1976) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

250. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் 1979—80 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

109. கோரிக்கை எண் 18—மருத்துவம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் உரை 1981—82 (தமிழ், ஆங்கிலம்).

110. இந்திய முறை மருத்துவம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1981—82 (தமிழ், ஆங்கிலம்).

111. கோரிக்கை எண் 18—தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறு வாழ்த் திட்டம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1981—82 (தமிழ், ஆங்கிலம்).

112. கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் உரை, 1981—82 (தமிழ், ஆங்கிலம்).



1981 ஏப்ரல் 8]

113. கோரிக்கை எண் 19-க்கான துணைக் குறிப்பு—கழிவு நீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல், 1981—82 (தமிழ், ஆங்கிலம்).

114. 1981—82 ஆம் ஆண்டில் மருத்துவப் பணி, மற்றும் குடும்ப நலம் பற்றிய செயல் வினை முறைத் திட்டம். (ஆங்கிலம்).

115. 1981—82 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வி பற்றிய செயல் வினை முறைத் திட்டம். (ஆங்கிலம்).

116. 1981—82 ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவம் பற்றிய செயல் வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

117. 1981—82 ஆம் ஆண்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து, ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றிய செயல் வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

118. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டமுன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1981).

119. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மாவட்டக் காவல் சென்னை மா நகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1981).

120. பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் குறித்த தமிழ்நாடு அரசின் 1963—64 முதல் 1965—66 வரை மற்றும் 1969—70 முதல் 1971—72 வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான குழுவின் முந்தைய அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு மேற் கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை.

## இணைப்பு I.

403 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை 18—மருத்துவம்—1981–82.

பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை 18—மருத்துவம் என்பதன்கீழ் ரூ. 66,22,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்குவழங்கப்பட வேண்டும் என முன் மொழிகிறேன்.

### 1. தோற்றுவாய்.

இவ்வரசு, நல்வாழ்வினை மேம்படுத்துகிற பணிகளையும் நோய்த்தடுப்பு, நோய் தீர்ப்பு, மறுவாழ்வுப் பணிகளை வலுப் படுத்தியும் விரிவுபடுத்தியும் கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற இயக்கத்தை தீவிரமாகச் செயல் படுத்துவதை தன்னுடைய அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சில நிறுவனங்களில் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக் கையை அதிகரித்தும், எங்கெல்லாம் கூடுதல் இடவசதி தேவையோ அங்கெல்லாம் புதிய கட்டிடங்கள் கட்டியும், கருவிகள், கல்வி யளிக்க தேவையான சாதனங்கள் மற்றும் இதர வசதிகளை அளித்தும் இந்த நிறுவனங்களின் கூடுதல் பணியாளர்களின் தேவையை நிறைவு செய்ய பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தும் மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் இதர மருத் துவ சார்பற்ற பணியாளர்கள் கல்வி கற்கும், பயிற்சி பெறும் நிறுவனங்களை மேம்பாடு அடையச் செய்கிறது. சென்னை மருத்துவக் கல்லூரியை பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக மேம்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கக் கருதியுள்ளது மேலும் தனியாக மருத்துவ பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான வழிமுறைகளை தொடங்கக் கருதியுள்ளது. சமுதாயத்தின், குறிப்பாக கிராமப் புற பகுதிகளில் வாழும் நலிவுற்ற பிரிவினரின் தேவைக் கேற்ப மருத்துவ மற்றும் மருத்துவ சார்பற்ற பணி யாளர்களுக்கான பயிற்சி புத்தறிவு ஆக்கப்படும்.

2. விரிவுபடுத்தப்பட்ட மற்றும் சிறப்புத் தன்மை வாய்ந்த மருத்துவப் பணிகள் கிராமப்புற ஏழை மக்களுக்கு எட்டும் வகை யில் அரசு மருத்துவப் பாதுகாப்பு வழங்கும் முறையை மேம் படுத்த வேண்டும் என்ற குறிக்கோளின் தொடர்பாக மாவட்ட வட்ட மற்றும் வட்டமில்லா மருத்துவ மனைகளையும், மருந்த கங்களையும் மேம்பாடு அடையச் செய்யக் கருதியுள்ளது.







3. சமுதாயத்தில் ஏழ்மையான பிரிவினருக்கு, குறிப்பாக கிராமப்புறங்களில் வாழ்பவருக்கு குறைந்தபட்ச பாதுகாப்பு அளிக்கும் திட்டம் தீவிரமான சமுதாய ஈடுபாடினால் மட்டுமே நிறைவேறும். இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே அரசு சிறிய சுகாதார நிலையங்களை மாநிலத்தின் எல்லாப் பகுதி களிலும் நிறுவ வேண்டும் என்ற திட்டத்தை தீவிரமாக செயல் படுத்தக் கருதியுள்ளது.

4. குடும்பநலத் திட்டத்தினை செயல்படுத்தி வருவதில் தமிழ்நாடு என்றும் முன்னணியில் நின்று வருகிறது. இவ்வுண்மை கடந்த பத்தாண்டு காலத்தில் நாடு முழுமைக்கும் ஆண்டொன் றுக்கு ஏற்பட்ட மொத்த மக்கள் தொகை வளர்ச்சி விகிதமான 2.475 சதவீதத்திற்கு எதிராக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மக் கள் தொகை வளர்ச்சி விகிதம் மிகக் குறைவானது. (அதாவது 1.723 சதவீதம் என்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்) இக் குடும்ப நலத் திட்டம் நமது மாநிலத்தில் ஆண்டு முழுவதும் நிலையாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு செலவினம் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை 1-ல் தரப்பட்டுள்ளது.

### II. மருத்துவக் கல்வித்துறை

(1) மருத்துவக் கல்லூரிகள் அவற்றுடன் இணைந்த மருத்துவ மனைகள்.

தற்சமயம், மாநிலத்தில் 8 அரசு மருத்துவக் கல்லூரிகளும் அரசு பல்மருத்துவக் கல்லூரியும் இருக்கின்றன. அவைகளில் 3 மருத்துவக் கல்லூரிகளும், அரசு பல் மருத்துவக் கல்லூரியும் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 5 மருத்துவக் கல்லூரிகளும் மாவட்டங்களில் உள்ளன.

மருத்துவப் பட்டப் படிப்பு, மருந்தாக்கியல் பட்டப் படிப்பு பல் மருத்துவப் பட்டப் படிப்பு, செவிலியர் பட்டப்படிப்பு முதலி யன இந்த நிலையங்களில் நடத்தப்படுகிறது. எம்.பி.பி.எஸ்., பி. பார்மசி, பி.டி.எஸ், பி.எஸ்ஸி (செவிலியர் பயிற்சி) போன்ற வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பட்ட மேற் படிப்பும் நடத்தப்பட்டு வருகிறது.

பட்டமேற் படிப்பு, பட்டயப் படிப்பு, உயர் நிலை சிறப்புப் படிப்பு, எம். பி. பி. எஸ், பி. பார்மசி, பி.டி.எஸ் பி.எஸ்.ஸி. (செவிலியர்), செவிலியர் பயிற்சி, இயன்முறை மருத்துவப் பயிற்சி, டி. பார்மசி, துப்புறவு ஆய்வாளர், ஆர்த்தோப்டிஸ்ட், அத்தாட்சி பெற்ற கதிரியக்க உதவியாளர் படிப்பு, டி.ஆர்.ஏ. தொழில்நுட்ப

பயிற்சி நிலை, தொழில் நுட்ப விஞ்ஞானம் கண், வரைவியலாளர் பயிற்சி II, மேல் நிலைக் கல்வி ஆகியவை பற்றிய விவரங்களை பிற்சேர்க்கை இரண்டில் காணலாம்.

மேல் நிலைக் கல்வி (+2 வகுப்புகள்) அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பிற்கான காலம் தற்போதுள்ள 5½ ஆண்டுகளிலிருந்து 4½ ஆண்டுகளாக (கட்டாய சுற்றிருப்புப் பயிற்சிக் காலம் 1 ஆண்டு நீங்கலாக) திருத்தியமைக்கப்பட்டுள்ளது.—

தற்போது 8 செவிலியர் பயிற்சிப்பள்ளிகள் உள்ளன. ஒவ்வொரு வருடமும் 675 மாணவிகள் சனவரி, சூலை ஆகிய மாதங்களில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1980 ஆம் ஆண்டு ஜூலை மாத வகுப்பில் 270 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு சனவரி மாத பயிற்சிக்கு 405 மாணவிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இட நெருக்கடியை குறைக்கும் வகையில் உதவித் தொகை பெறும் 675 செவிலியர் மாணவர்களுக்கான வகுப்புகளை இரண்டு பிரிவுகளாக, சனவரி, ஜூலை என்று பின்வருமாறு பிரிக்கப்பட்டது:

| | செவிலியர் பயிற்சிப் பள்ளி. | சனவரி வகுப்பு. | ஜூலை வகுப்பு. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | அரசினர் பொது மருத்துவமனை | 60 | 60 |
| 2 | சென்னை பெண்கள் குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை. | 25 | 20 |
| 3 | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர். | 35 | 35 |
| 4 | கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 35 | 35 |
| 5 | அரசு தலைமையிட மருத்துவமனை, திருச்சி. | 50 | 50 |
| 6 | அரசு தலைமையிட மருத்துவமனை, சேலம். | 50 | 50 |
| 7 | அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை. | 40 | 45 |
| 8 | அரசினர் ராஜாஜி மருத்துவமனை, மதுரை. | 45 | 40 |
| | | 340 | 335 |



இப்பயிற்சியின் காலம் 3½ ஆண்டுகளாகும். பொது செவிலியர் பயிற்சி, மூன்று ஆண்டுகள் முடிந்தவுடன் 6 மாத கால மகப்பேறு பயிற்சிக்காக செவிலியர் மாணவிகள் மகப்பேறு பயிற்சி நிலையங்களில் நியமிக்கப்படுவர். உதவித் தொகை பெறும் செவிலியர் இடங்களை 135 லிருந்து 340 ஆக பின் வருமாறு உயர்த்த அரசு ஆணையிட்டுள்ளது.

| | தற்போதுள்ள இடங்கள். | கூடுதல் இடங்கள். | மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|---|
| குழந்தை நல நிறுவனம் குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை. | 54 | 35 | 89 |
| அரசு கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை. | 41 | 35 | 76 |
| அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனை, தஞ்சாவூர். | 20 | 30 | 50 |
| அரசு ராஜா சர் ராமசாமி முதலியார் மகப் பேறு மருத்துவ மனை, சென்னை. | 14 | 25 | 39 |
| அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை. | 6 | 45 | 51 |
| கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர். | ... | 35 | 35 |
| | 135 | 205 | 340 |

வெற்றிகரமாக பயிற்சியை முடித்தபின் செவிலியப் பயிற்சியில் பட்டயமும், மகப்பேறு பயிற்சியில் சான்றிதழ்களும் வழங்கப்படும்

125 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, மதுரை மருத்துவக் கல்லூரியில் டி. பார்மசி வகுப்பு நடந்து வருகிறது. 1979—80 ஆம் ஆண்டில் 100 மாணவர்கள் சேர்ப்புடன் திருச்சிராப்பள்ளியில்

டி. பார்மசி வகுப்பு தொடங்க அரசு அனுமதி வழங்கியது. இட வசதி இல்லாத காரணத்தினால் மதுரையில் இவ்வகுப்பு நடத்தப் பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளைச் கொண்டு கிராம நகர்ப்புற மக்களுக்கு நேரடியாக சுகாதாரப் பாதுகாப்புப் பணிகளை வழங்கவும், சமுதாயப் பணிகளில் நேரடி ஈடுபாடு ஏற்படும் வகையில் மருத்துவக் கல்வியை புத்தறிவாக்கவும் ஆகிய இரட்டை குறிக்கோள்களைக் கொண்டு இந்திய அரசு மருத்துவக் கல்வியை புத்தறிவாக்குதல் என்றொரு திட்டத்தை கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநில அரசுகள் கருத்தரங்கு, சொற்பொழிவு, அறைகளுக்கு கட்டிடங்கள் மற்றும் தங்குமிடங்கள் கட்டவேண்டும். ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் முதலியவைகளில் திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் செய்யவேண்டும். மேலும் கூடுதலாக துறை அதிகாரிகளையும், பணியாளர்களையும் நியமிக்க வேண்டும். சமுதாயத்தின் சுகாதார நிலை பற்றிய அடிப்படை புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்டதை சேகரிக்க வேண்டும். ஆராய்ச்சி வேலையை துரிதப்படுத்த வேண்டும். இத்திட்டத்தை செயல் படுத்த 24 நடமாடும் மருத்துவ ஊர்திகள் கீழ்க்கண்ட மருத்துவக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | சென்னை மருத்துவக்கல்லூரி | 3 |
| 2 | ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி | 3 |
| 3 | கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி | 3 |
| 4 | செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி | 3 |
| 5 | கோவை மருத்துவக்கல்லூரி | 3 |
| 6 | தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி | 3 |
| 7 | மதுரை மருத்துவக்கல்லூரி | 3 |
| 8 | திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி | 3 |

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்ட ரூ. 32.20 இலட்சமும் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் தொடரா செலவினமாக ரூ. 4.79 இலட்சமும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த திட்டத்தினை செயல் படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றத்தை பரிசிலனை செய்ய, அரசு மண்டல குழுக் களையும், மாநில அளவில் ஒருங்கிணைந்த குழுக்களையும் நியமித்துள்ளது. மருத்துவக் கல்லூரிகளின் முதல்வர் களிடம் இத்திட்டத்தினை நிறைவேற்றும் பொறுப்பினையும் அரசு ஒப்படைத்துள்ளது.



2) மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் சிறப்புப் பிரிவுகள்

(i) வெளியூர்களில் சிறப்பு சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்தும் பொருட்டு கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தனியாக இதய நோய் சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவிற்கு பேராசிரியர் நிலையில் மருத்துவரும் தேவையான இதர அலுவலர்களும் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன. இந்த ஏற்பாட்டினால் இம்மாவட்டத்தைச் சார்ந்த இதய நோயினால் அவதியுறும் நோயாளிகள் கோவை மருத்துவக் கல்லூரியிலேயே சிறப்புச் சிகிச்சை பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

(ii) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பல் அறுவை சிகிச்சைத் துறையில் அனுபவம் மிக்க மருத்து வரைக் கொண்டதாயிருக்கும் பொருட்டும் பல்கலைக் கழகத்தின் பரிந்துரைகளை நிறைவேற்றவும் பல் அறுவை சிகிச்சை விரிவுரை யாளர் பதவியை பேராசிரியர் பதவியாக மாற்றி உத்தரவிடப் பட்டுள்ளது. செங்கற்பட்டு, தஞ்சாவூர், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பால்வினை நோய்த்துறையில் அனு பவமுள்ள உயர் நிலை மருத்துவர்கள் இல்லாத நிலையை போக் கும் பொருட்டு இம்மருத்துவமனை ஒவ்வொன்றிலும் பால் வினை நோய்த்துறை பிரிவிற்கு பேராசிரியர் நிலையில் மருத்துவர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

(iii) சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவ மனையில் மார்புப் பகுதி நோய்க்கு மருத்துவச் சிகிச்சை யினை அளிக்கும் பொருட்டு மார்புப் பகுதி மருத்துவச் சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்த பேராசிரியர் நிலையில் மருத்துவர் பணி யிடம் தோற்றுவிக்கப்பட்டது.

(iv) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மார்புப் பகுதி அறுவை சிகிச்சைப் பிரிவு ஏதும் தற்சமயம் இல் லாததால் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மார்புப் பகுதி அறுவை சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்த பேராசிரி யர் நிலையில் அறுவைச் சிகிச்சை மருத்துவர் உள்ளிட்ட தேவை யான அலுவலர் பதவிகளை ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள் ளது, இதனால் மார்புப் பகுதி அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் இதர மருத்துவ மனைகளுக்கு மாற்றப்படாமல் தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலேயே சிகிச்சை யளிக்கும் வசதிகள் ஏற்பட்டுள்ளன.

(v) சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவ மனை யிலுள்ள முடநீக்கியல் பிரிவில் வேலைப்பளுவினைக் குறைக்க கூடுதல் பிரிவினை ஏற்படுத்த முடநீக்கியல் நோய் சிகிச்சைப் பேராசிரியர் நிலையில் மருத்துவர் பதவியுடன் இதர அலுவலர் பதவிகளையும் ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

(v) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் உடற்கூற்றியல் பிரிவினை வலுப்படுத்த இணைப் பேராசிரியர் பணியிடமும் உதவிப் பேராசிரியர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உட்சுரப்பிடல் மற்றும் வளர்ச்சிதை மாற்றத்தில் சிகிச்சை அளிக்க தற்சமயம் வசதி இல்லாததால் மதுரை மருத்துவக் கல்லூரியில் இதற்கென ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்த பேராசிரியர் நிலையில் மருத்துவர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(vi) அரசு இராசாசி மருத்துவ மனையில் நடமாடும் கண் மருத்துவக் குழுவினை ஏற்படுத்த ரூ. 1.37 இலட்சங்கள் செலவில் அலுவலர் பதவிகளையும் ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேலும் இராசாசி மருத்துவ மனையிலுள்ள கண்நோய் பிரிவினை மேம்படுத்தும் பொருட்டு ரூ. 4.0 இலட்சங்கள் தொடரா செலவினத்தில் முறைப்படுத்தப்பட்ட கண் சிகிச்சை சாதனங்களை வாங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் பின்தங்கிய மாவட்டங்களில் கண்நோயால் அவதியுறும் மக்களின் மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மத்திய அரசு அளித்த நிதி உதவியான ரூ. 5.00 இலட்சத்தை தொடரா செலவினமாக அரசு இராசாசி மருத்துவ மனையின் கண்நோய்ப் பிரிவினை உயர் நிலைப்படுத்த ஒப்புதலளித்திருக்கிறது.

கடந்த 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவ மனைகளிலுள்ள உதவி மருத்துவர் பதவிகளை உதவி ஆசிரியர் பதவிகளாக மாற்றியமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(3) புறநகர் மருத்துவ மனைகள்

சென்னை மாநகரின் சுற்றுபுறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு மருத்துவப் பணிகள் வழங்குவதற்காகவும் மாநகரில் உள்ள பெரிய மருத்துவ மனைகளில் உள்ள மக்கள் நெருக்கடியை குறைக்கவும் கருதப்பட்ட 5 புறநகர் மருத்துவ மனைகளில், அண்ணாநகர், கே. கே. நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள 3 மருத்துவ மனைகள் 100 படுக்கை வசதிகளுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பெரம்பூரில் இன்னொரு மருத்துவ மனையை ரூ. 170.91 இலட்சம் மொத்தச் செலவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தண்டையார்பேட்டை, அண்ணாநகர் ஆகிய இடங்களில் உள்ள புறநகர் மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிற்கும் ஆம்புலன்ஸ் ஊர்தி வழங்க கருதப்பட்டுள்ளது. அண்ணா நகரில் அமைந்திருக்கும் புறநகர் மருத்துவ மனையிலுக்கு 7.2[illegible] லட்சம் மதிப்புள்ள மருத்துவக்கருவிகள் வழங்கவும் கருதப்பட்டுள்ளது.



(4) கே. கே. நகர் புனர்வாழ்வு மற்றும் செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையம்

மேற்சொன்ன நிலையத்திற்கான கட்டிடப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு, தற்சமயம் சென்னை, கே. கே. நகரில் உள்ள வளாகத்தில் தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. 14–11–79 அன்று வெளிப்புற நோயாளி சிகிச்சை வசதி ஆரம்பிக்கப்பட்டது. 10–9–80-லிருந்து உள்ளிருப்பு நோயாளி சிகிச்சை வசதி ஆரம்பிக்கப்பட்டது.

உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாக கொண்டாடுவதை முன்னிட்டு, மதுரை அரசு இராஜாஜி மருத்துவ மனையின் புறநகர் செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையத்தில் ஊறுபாடு உற்றவர் காலில் அழுத்தம் ஏற்படாமல் நடப்பதற்கு உதவும் கருவிகள் (C[illegible]) மற்றும் ஏனைய செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பதை அதிகப்படுத்த கருதப்பட்டுள்ளது.

(5) மருத்துவக்கல்லூரிகள், மருத்துவ மனைகளுக்கு மேம்பாடுகள்.

1. மருத்துவக் கருவிகள் :

1980–81 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு ரூ. 88.32 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு முக்கிய மருத்துவக் கருவிகள் வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 64.72 இலட்சம் மதிப்புள்ள மருத்துவக் கருவிகள் வாங்க ஒப்புதல் அளிக்க கருதப்பட்டுள்ளது. இம்மருத்துவக் கருவிகள் பட்டியல் பிற்சேர்க்கை 3-ல் தரப்பட்டுள்ளது. ரூ. 40.00 இலட்ச செலவில் தொடர் கதிர் வீச்சியக்க முப்பரிமாண உருப்பதிவு கணிப்பொறி (Sc[illegible]) ஒன்றினையும் ரூ. 7.71 இலட்சம் செலவில் பல வழி இதயத்துடிப்பு பதிவுப்பொறி (Multi channel -Echo cardiogram) ஒன்றினையும் சென்னை அரசு பொது மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தகுந்தது.

2. கட்டிடங்கள்;

இம்மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளை மேம்படுத்த 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 84.97 இலட்சம் மதிப்பில் பல்வேறு கட்டிடப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 235.06 இலட்சம் மதிப்பில் கட்டிடப் பணிகள் மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் விபரங்கள் பிற்சேர்க்கை 4-ல் தரப்பட்டுள்ளது.

(6) கிண்டி கிங் நிறுவனம்: இம்மாநிலத்தில் இந்நிறுவனம் தான் மிகப் பெரிய பொதுச் சுகாதார சோதனைக் கூடமாகும். இது ஒரு கல்வி போதனை மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனத்தில் பலவகைப்பட்ட தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட மருத்துவக் கருவிகள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. அல்ட்ரா காபினெட் மைனஸ் 70சி மற்றும் ஏனைய துணைக் கருவிகள் | 1.50 |
| 2. மையப்படுத்தப்பட்ட இரத்த வங்கிக்கு உரைய வைத்து உலர வைக்கும் பிளாஸ்மா யூனிட். | 2.50 |
| 3. ரெவிகோ மைனஸ் 70சி உறைய வைக்கும் கருவி. | 1.30 |

கீழ்க்கண்ட கட்டிடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. இரண்டு கோபர்காஸ் பிளாண்ட்ஸ் கட்டுதல் | 0.80 |
| 2. 250 கே. வி. ஏ. ஆல்டர்நேட்டர்செட் (மின் உற்பத்திக் கருவி) அமைத்தல். | 6.78 |

III. மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத்துறை.

1. மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவமனைகள்—

(1) மாவட்ட, வட்ட, வட்டமல்லாத மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவைகளை மேம்படுத்துவது மக்களுக்கு சுகாதார பாதுகாப்புபணிகள் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இவ்வாறு மேம்படுத்துவது விரிவாக்கப்பட்ட சிறப்பு மருத்துவ சிகிச்சைபணிகள் கிராமப்புறங்களின் வாழும் ஏழை மக்களுக்கு மிக அருகிலேயே கிடைப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.



இம்மாநிலத்தில் 4631 மொத்தப் படுக்கைகளுடன் 15 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. 1981–82-ம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில் 507 படுக்கைகள் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (1) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருப்பூர். | 196 |
| (2) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தர்மபுரி. | 150 |
| (3) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம். | 85 |
| (4) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திண்டுக்கல். | 33 |
| (5) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, கிருஷ்ணகிரி | 43 |
| மொத்தம் .. | 507 |

5,995 மொத்த படுக்கைகளுடன் 116 வட்ட மருத்துவ மனைகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அரசு மருத்துவ மனைகளில் 157 படுக்கைகள் சேர்க்க கருதப்பட்டுள்ளது—

| | |
|---|---|
| (1) அரசு மருத்துவமனை, அரூர் .. .. | 24 |
| (2) அரசு மருத்துவமனை, ஹாசூர் .. | 57 |
| (3) அரசு மருத்துவமனை, பல்லடம் .. | 6 |
| (4) அரசு மருத்துவமனை, உடுமலைப் பேட்டை. .. | 10 |
| (5) அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம். .. | 10 |
| (6) அரசு மருத்துவமனை, கோபிசெட்டி பாளையம். .. | 10 |
| (7) அரசு மருத்துவ மனை, கரூர் .. | 10 |
| (8) அரசு மருத்துவமனை, சத்தியமங்கலம் .. | 10 |
| (9) அரசு மருத்துவமனை, மணப்பாறை .. | 10 |
| (10) அரசு மருத்துவமனை, பெரம்பலூர் .. | 10 |
| மொத்தம் .. | 157 |

2,097 மொத்த படுக்கைகளுடன் 110 வட்டமல்லாத மருத்துவ மனைகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. 230 மொத்த படுக்கைகளுடன் 188 மருந்தகங்கள் இயங்கிக் கொண்டு வருகின்றன.

(2) மாவட்ட வட்டமல்லாத மருந்துவமனைகள் அரசு மருந்தகங்களுக்கு மேம்பாடுகள் —

மாவட்ட, வட்ட, வட்டமல்லாத மருத்துவமனைகள் மற்றும் அரசு மருந்தகங்களை மேம்படுத்த 1980–81 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிறப்புத்துறைகள் திறப்பது உட்பட்ட பல்வேறு திட்டங்களும் 1981–82 ஆம் ஆண்டில் மேற்கொள்ள கருதப்பட்டுள்ள திட்டங்களும் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை 5-ல் தரப்பட்டுள்ளது.

(3) விபத்து மற்றும் அவசரப்பணிகள்—

விபத்தில் காயமுற்றவர்களுக்கு சரியான முறையில் பயன் அளிக்கக்கூடிய சிகிச்சையினை வழங்க வேண்டுமென்ற கருத்தில் விபத்து மற்றும் அவசர மருத்துவப்பணிகள் என்ற திட்டத்திற்கு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய நான்கு தென் மாவட்டங்களில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது. 1981–82ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 172·64 இலட்சம் மொத்தச் செலவில் இரண்டாம் கட்டமாக கோயம்புத்தூர், நீலகிரி, பெரியார், திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு விரிவு படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(4) குறிப்பிட்ட மாவட்டங்களில் குடும்ப நலம் மகப்பேறு மற்றும் குழந்தை நலம் ஆகிய பணிகளை பலப்படுத்துதல்—

ஊரக மருத்துவ மனைகள், வட்டத் தலையிட மருத்துவ மனைகள், வட்டத் தலைமையிடமல்லாத இடங்களிலுள்ள மருத்துவ மனைகள் மற்றும் ஏனைய மருத்துவ மனைகள் ஆகியவற்றில் ஏற்கெனவே அமைந்துள்ள வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்திடவும் குறிப்பாக மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம், குடும்ப நலம், நோய் தடுப்புப் பணிகள் ஆகியனவற்றைப் பலப்படுத்திடவும் அனைத்து நலப்பணிகளையும் உள்ளடக்கிய தெளிவமைந்த திட்டமொன்று சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் டேனிடா எனப்படும் டென்மார்க் நாட்டிலுள்ள அனைத்து நாடுகளின் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்துவதற்கு விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். 1981–82 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ ரூபாய் 14 கோடி மதிப்பீட்டுச் செலவில் 5 ஆண்டுகளுக்கு இத்திட்டத்தினை மேற்படி இரு மாவட்டங்களிலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒரு திட்ட இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.



(5) அரசு இலவச கண் சிகிச்சை முகாம்—

பார்வை இழந்தோருக்கு குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு நிவாரணம் அளித்து கண் ஒளியிழத்தல், புரை நோய் மற்றைய கண் நோய்களால் அவதிக்குள்ளாகும் மக்களின் துயர் துடைப்பதற்கும் 1972-ல் அரசு இலவச கண் சிகிச்சை முகாம் திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் ஐந்து நடமாடும் கண் மருத்துவ பிரிவுகள் அமைக்கப் பெற்று சென்னையிலே இரண்டும், கோவை, மதுரை மற்றும் தஞ்சாவூர் பகுதிகளில் ஒரு பிரிவு வீதம் மூன்றும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் இந்த ஐந்து பிரிவுகள் பணி புரிந்து வருகின்றன.

உடனடி மற்றும் விரிவான சிகிச்சை அளிக்க 1972 ஆம் ஆண்டு சில மேம்பாட்டு முறைகள் அமுலுக்கு வந்தன. இம்மருத்துவ முகாம்களிலே சிகிச்சை பெற்று அனுப்பப்பட்டவர்களுக்கு மூன்று ரூபாயிலிருந்து அய்ந்து ரூபாய் பெறுமான தற்காலிக கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. இம்முகாம்களிலே சிகிச்சை பெற்றவர்கள் ஆறு வாரங்களுக்குப் பின்னர் பரிசோதிக்கப்பட்டு நிரந்தரமான கண்ணாடிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கு முன்னர் சென்னை அரசு கண் மருத்துவமனை கண்காணிப்பாளர் ஐந்து நடமாடும் கண் மருத்துவ பிரிவுகளுக்கும் கண்ணாடிகள் அளிக்கும் அதிகாரத்தினை பெற்றிருந்தார். இம்முறையில் காலதாமதம் ஏற்பட்டதாலும், கண் அறுவை சிகிச்சை பெறுவோருக்கும் உடனடியாக கண்ணாடிகள் வழங்க இயலாமற் போனதாலும் கண்ணாடிகள் வாங்கி வழங்கும் அதிகாரம் மற்ற பிரிவு கண்காணிப்பாளருக்கு பரவலாக்கப்பட்டது.

1980–81 ஆம் ஆண்டு (1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் வரை) 10,774 புரை அறுவை சிகிச்சைகள் நடத்தப்பட்டுள்ளது.

(6) பார்வைக் கோளாறு மற்றும் கண் பார்வை இழந்தலை தடுத்தலும் கட்டுப்படுத்தலும் ஆகிய தேசிய திட்டம்—

மைய அரசின் பார்வைக் கோளாறு மற்றும் பார்வை இழத்தலை தடுத்தலும், கட்டுப்படுத்தலும் ஆகிய தேசிய திட்டத்தின்கீழ் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகள் இவ்வரசால் நிறைவேற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

1. நடமாடும் கண்நோய் தடுப்பு மருத்துவப் பிரிவு ஒன்று மதுரை மருத்துவ மனையில் தொடங்கப்பெற்றுள்ளது. மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் இப்பிரிவின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

2. மதுரை மருத்துவக் கல்லூரியில் உள்ள கண் மருத்துவ பிரிவு 75 படுக்கைகள் கொண்ட பிரிவாக உயர்த்தப்பட்டுள்ளது.

3. கண் மருத்துவப் பிரிவு, மாநில ஆலோசனைக் குழு வட்ட பிராந்திய ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு போன்றவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கண் மருத்துவத் திட்டம் மதுரை, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள ஐந்து மருத்துவ மனைகளிலும் நிறைவேற்றிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டம் நிறைவேற்றிட மைய அரசு பொருட்களையும், உபகரணங்களையும் மாநில அரசுக்கு இலவசமாகவே அளிக்கும்.

3. இத்திட்டத்தின் கீழ் கண் மருத்துவ சலுகைகள் கிடைக்கப் பெறாத கிராமப்புறங்களில், "கண் மருத்துவ சிகிச்சை முகாம்" நடத்திடும் தனியார் மற்றும் சமூக நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டமும் அடங்கும். இந்த முகாம்கள் இது தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின் படி நடத்தப் பெற வேண்டும். இவ்வாறு தனியார் மற்றும் சமூக நிறுவனங்களுக்கு அவர்கள் ஆற்றியுள்ள பணியின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கும் திட்டம் நல்ல முறையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. கண் மருத்துவ அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நபர் ஒன்றுக்கு ரூபாய் 60-ம் ஒவ்வொரு "கண் சிகிச்சை முகாமுக்கும்" ரூபாய் 12,000-மும் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்பெறும்.

## 7. தொற்றுநோய்கள் கட்டுப்பாடு

### 1. தொழுநோய் கட்டுப்பாடு திட்டம்—

தமிழ்நாடு தொழுநோய் பரவியுள்ள மாநிலங்களில் ஒன்று என கருதப்படுகிறது. தேசிய தொழுநோய்க் கட்டுப்பாடு திட்டத்தின் மூலம் அளித்த தீவிர சிகிச்சையின் விளைவாக இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1977-ல் 1,000 நபர்களுக்கு 20.40 நபர் என்பதிலிருந்து 15.5 ஆக நிறைவு தரும் வகையில் குறைந்துள்ளது. இத்திட்டம் தேசிய தொழுநோய் கட்டுப்பாடு திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினை மைய அரசும் மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன.



1980–81 ஆம் ஆண்டில் மத்திய அரசு குறிப்பிட்ட குறிக்கோள் அடிப்படையில் மாநில அரசு கீழ்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது :—

(1) ஒரு தொழுநோய் மறுவாழ்வு அபிவிருத்திப் பிரிவு.

(2) இரண்டு நகர தொழுநோய் நிலையத்தையும் 6 மாவட்ட தொழுநோய் அலுவலர் அலுவலகத்தையும் மேம்படுத்துதல்.

(3) 22 தற்காலிகமாக தங்கி சிகிச்சைபெறும் வார்டுகள் கட்டுதல்.

(4) 6 பழைய தொழுநோய் கட்டுப்பாடு பிரிவுக்கு கட்டிடம் கட்டுதல்.

தமிழ்நாட்டில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 48 மில்லியன் மக்கள் தொகையில், 38 மில்லியன் மக்கள் தொழுநோய்க் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் சாதனைகள் கீழ்வருமாறு :—

| | (இலட்சம்). |
|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொழுநோயாளிகள் | 7.50 |
| 1980 அக்டோபர் வரை பதிவு செய்யப்பட்டு உள்ள நோயாளிகள் .. .. .. | 7.30 |
| மொத்தம் சிகிச்சையின் கீழ்வரும் நோயாளிகள் | 5.25 |
| தொழுநோயிலிருந்து விடுவிக்கப்பட்ட மொத்த நோயாளிகள் .. .. .. .. | 0.87 |

இத்திட்டத்தின் கீழ் 1978–79 ஆம் ஆண்டிலிருந்து 11 வயதுக்குட்பட்ட பள்ளி சிறுவர்களிடையே இந்நோயின் அறிகுறி உள்ளதா எனக் கண்டறியப்படும். பள்ளி மருத்துவ பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1980-81 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட 18,06,851 சிறுவர்களில் 24,371 சிறுவர்கள் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களும் தொழுநோய் கட்டுப்பாட்டில் சிறந்த பணி புரிகின்றார்கள். இந்த நிறுவனங்களில் களப் பணியாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும், 20,000 மக்கள் தொகை உட்பட்ட பகுதிகளில் பரிசோதனை செய்கிறார்கள். மாவட்ட தொழுநோய் அலுவலர்களாலும், மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நல இயக்குநர் அவர்களாலும் இந்த தனியார் நிறுவனங்களின் பணிகள் காலகிரமத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. உள்ளிருப்பு சிகிச்சைகள் அளிக்கக்கூடிய வசதி உள்ள தனியார் நிறுவனங்களுக்கு, மூலதன மானியமும் நோயாளிகளுக்கு அளிக்கப்படுவதற்காக டி.டி.எஸ். (D.D.S.) என்ற மாத்திரையும் இலவசமாக வழங்கப்படுகிறது.

(2) காசநோய் கட்டுப்பாடு திட்டம்.

அரசு மருத்துவ மனைகளில் புறநோயாளியாக வருபவர்கட்கும் காசநோய் அறிகுறிகள் இருக்கிறதா என கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளித்தும், மற்றும் சிறு குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் இந்நோயிலிருந்து பாதுகாப்பு அளிக்க பி.சி.ஜி. தடுப்பு ஊசி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்சமயம் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட காசநோய் கட்டுப்பாடு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எல்லா அரசு மருத்துவ மனைகளிலும் காசநோயாளிகளுக்கு சிகிச்சை வசதிகள் உள்ளது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 9.97 இலட்சம் காச நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

பி. சி. ஜி. குழுக்களின் மூலம் தடுப்பு முறைக்காக பி.சி.ஜி. தடுப்பு ஊசி போடப்படுகிறது. தற்சமயம் 23 பி.சி.ஜி. குழுக்கள் தமிழ் நாட்டில் உள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் இந்த சிகிச்சையை அளித்து வருகிறது. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 168 இலட்சம் நபர்களுக்கு பி.சி.ஜி. தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இரண்டு காசநோய் விளம்பரப் பிரிவுகள் இருக்கின்றன. கல்வி நிலையங்களில் குடிசைப்பகுதிகளிலும் காச நோய் பற்றி கூட்டங்களும், திரைப்படக் காட்சிகளும் நடத்தி காச நோய் வந்துள்ளதை விரைவில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்பட்டுவரும் வசதிகள் பொதுமக்களை அறியும்படி செய்கின்றன.

1980–81 ஆம் ஆண்டில் பீடி சுற்றும் தொழிலாளர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களிடையே காச நோய் இருக்கிறதா என கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு ஒருங்கிணைந்த சுகாதார கவனிப்பு திட்டத்தை அமுலாக்கியுள்ளது. இத்திட்டத்தில் 5 நடமாடும் மருத்துவப் பிரிவுகளும், 5 சிறிய ஊடுகதிர் பிரிவுகளும், சேலம், ஈரோடு, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் வேலூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும். இத்திட்டம் தற்சமயம் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தாம்பரத்திலுள்ள அரசு காசநோய் மருத்துவமனை 32 வார்டுகளுடன் 776 படுக்கை வசதிகளுடன் செயல்படுகிறது. இந்நிலையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். மின்சார விநியோகம் அடிக்கடி சரியான முறையில் கிடைக்காத காரணத்தினாலும், அதிலும் முக்கியமாக அறுவை சிகிச்சை செய்யும்போது இவ்வாறான நிலை ஏற்படுவதால் 1981–82 ஆம் ஆண்டில் டீசல் மின் உற்பத்தி சாதனம் ஒன்றை நிறுவ அரசு தீர்மானம் செய்துள்ளது.



இந்நிதியாண்டிலிருந்து தஞ்சாவூருக்கு அருகில் செங்கிப்பட்டியிலுள்ள இராஜாஜி காசநோய் மருத்துவமனைக்கு அளித்துவந்த மானியத் தொகையை ரூபாய் 58,000-லிருந்து ரூபாய் 1 இலட்சத்திற்கு அரசு உயர்த்தியுள்ளது.

3. தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்.

தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியம், கட்டிடம் கட்டுவதற்கான மானியம், கருவிகள் வாங்குவதற்கான மானியம் மற்றும் மூலதன மானியம் போன்ற பலவித மானியங்கள் வழங்கப்படுகின்றன.

1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 27.00 இலட்சம் அளவில் பராமரிப்பு மானியம் வழங்கப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவ நிறுவனங்களுக்கு மானியங்கள் உயர்த்தப்பட்டுள்ளது :

(1) இராமலிங்கம் காச நோய் நிலையம், பெருந்துறை (ரூபாய் 2.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 5.00 இலட்சம்).

(2) தின் காரா தலீப் அறக்கட்டளை மருந்தகம், சென்னை (ரூபாய் 8,000-த்திலிருந்து ரூபாய் 12,000).

1980–81 ஆம் ஆண்டில் அடையாற்றிலுள்ள சுகாதாரத் தொண்டு நிறுவனத்திற்கு ரூபாய் 3.53 இலட்சம் கட்டிட மானியமாக வழங்கப்பட்டுள்ளது. திண்டுக்கல்லில் உள்ள காந்திகிராமம் அறநிறுவனத்திற்கு கருவிகள் மானியமாக, ஒரு அவசர சிகிச்சை ஊர்தி வாங்குவதற்காக ரூபாய் ஒரு இலட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தானே முன்வரும் தொழுநோய் சிகிச்சை நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக ரூபாய் 2.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(4) அலுவலகக் கட்டிடம்.

மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நல இயக்கத்திற்கு ரூபாய் 200 இலட்சம் மொத்தச் செலவில் தனியாக ஒரு கட்டிடம் கட்ட கருதப்பட்டுள்ளது.

2. ஹோமியோபதி.

ஹோமியோபதி கல்வியும் ஹோமியோபதி மருத்துவ முறையும் தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவ முறை மற்றும் ஹோமியோபதி நடைமுறை பயிற்சியாளர்கள் சட்டம், 1971-ன் படி செயல்பட்டு வருகின்றன.

ஹோமியோபதி மருத்துவ முறைக்கு முக்கியத்துவம் கொடுக் கவும், இம்மாநிலத்தில் இம்மருத்துவமுறையை விரிவாக்கவும் இவ்வரசு ஹோமியோபதி மருத்துவ முறையை அங்கீகரிக்கப்பட்ட முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி சட்டத்தின் கீழ் இவ்வரசு கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி வளாகத்தில் 25 படுக்கை கள் கொண்ட ஒரு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனையை நடத்தி வருகிறது. இக் கல்லூரி யில் வருடந்தோறும் 21 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர். மத்திய ஹோமியோபதி கௌன்சிலால் அங்கீகரிக்கப் பட்ட பாடத்தின்படி இங்கு நடத்தப்படும் பட்டயப்படிப்புக்கும் பாட திட்டம் அமைந்துள்ளது. இங்கு சிகிச்சைக்காகவும் வியாதி களை கண்டுபிடிப்பதற்காகவும், ஒரு எக்ஸ்ரே துறை செயல் பட்டு வருகிறது. திண்டுக்கல், சேலம் ஆகிய அரசு தலைமையிட மருத்துவமனைகளில் இரண்டு ஹோமியோபதி மருந்தகங்கள், செயல்பட்டு வருகின்றன.

1980—81 ஆம் ஆண்டில் இவ்வரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

(1) மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஹோமி யோபதி பிரிவுக்காக ஒரு கண்காணிப்பாளர் இரண்டு உதவி யாளர்கள் பதவிகள் புதியதாக ஏற்படுத்தப்பட்டன.

(2) ஹோமியோபதி மாணவர்களுக்காக ஒரு கல்லூரி பஸ் வாங்க அனுமதிக்கப்பட்டது.

(3) கீழ்க்கண்ட 6 மாவட்டத் தலைமையிட மருத்துவமனை களில் ஹோமியோபதி மருந்தகம் ஏற்படுத்த உத்தரவிடப்பட் டுள்ளது.

1. தூத்துக்குடி.
2. இராமநாதபுரம்.
3. வேலூர்.
4. கடலூர்.
5. நாகப்பட்டினம்.
6. திருச்சிராப்பள்ளி.





## 3. குடும்பநலத் திட்டம்

குடும்ப நலத்திட்டம் மையஅரசின் நிதிஉதவியால் நடத்தப் படுகின்ற திட்டமாகும். இந்த மாநிலத்தில் இத்திட்டம் 100 சதவீதம் மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. திட்டமிட்ட வளர்ச்சியின் ஓர் அங்கமாக இத்திட்டம் உள்ளது. மக்கள் தொகை, கொள்கை, மற்றும் குறிக்கோளை திட்டமிட்ட படி அடையாவிட்டால் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களை, நிறைவேற்ற இயலாது. எனவே, குடும்ப நலத் திட்டம், அரசியல் இனம் மற்றும் சமயப் பிரிவுகளுக்கு அப்பாற்பட்ட ஆதரவு பெற வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை, தனிப்பட்ட துறை களில் எல்லைகளைத் தாண்டி தொண்டு நிறுவனங்கள் மற்றும் அதிக அளவிலான பொதுமக்களின் ஈடுபாட்டுடன் இத்திட்டம் அரசின்முழுநிர்வாக இயந்திரத்தால் செயல்படுத்தப்படவேண்டும். இத் திட்டம் குறைந்தபட்சத் தேவைகள், தாய்-சேய் நலத் திட் டங்களிலிருந்து பிரிக்க முடியாத மொத்த உடல் நலப் பராமரிப் பின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும். பிரதம மந்திரி அவர்கள் சமீபத்தில் எல்லா முதலமைச்சர்களுக்கும் எழுதிய கடிதத்தில் மற்ற செய்திகளிடையே நம்முடைய பெண்கள் குடும்ப நலத் திட்டத்தை விரும்புகிறார்கள் என்றும், அவர்களில் பெரும்பா லோர் மக்கள் பெருக்கத்தைப் பற்றி கவலை கொள்ளாவிடினும் குடும்ப நலத் திட்டத்தைத் தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்து கின்ற மற்றும் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல வாழ்க்கை வசதி களைத் தருகின்ற வழிகளில் ஒன்றெனவும் எண்ணுகிறார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார்கள். இத் திட்டத்தை உறுதியான நிலையில் செயல்படுத்த இம்மாநிலத்தில் அடிக்கடி நிலைமைகளை கண்காணிக்குமாறு முதலமைச்சர்களைக் கேட்டுள்ளார்கள்.

குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் எப்போதும் முன்னணியில் உள்ளது. நடந்து முடிந்த பத்தாண்டு கால மக்கள் தொகை கணக்கெடுப்பின் பூர்வாங்க எண்ணிக்கை இந்நாட்டில் தமிழகம் மட்டும்தான் ஆண்டொன்றுக்கு, மிகக் குறைந்த 1.723 சதவீதம் மக்கள் தொகை வளர்ச்சியைக் காட்டு கிறது. இது இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட குடும்பநலத் திட்டத்தின் விளைவுதான். இது சாதாரண செயல் அல்ல.

எந்தவிதக் கட்டாயமும் இன்றி மக்களைத் தூண்டுவதன் மூலம் குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொண்டு மக்கள் தொகையை கட்டுப்படுத்துவது, தமிழகத்தில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற சிறந்த முறையாகும்.

குடும்ப நலத் திட்டத்தில் இப்பொழுதுள்ள நிலை அதிக அளவில் தாய்மார்கள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய முன் வருவதுதான். எனவே, மாவட்ட மருத்துவ மனைகளில் கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிக்கும் கூடங்களில் கூடுதலான படுக்கைகளின் தேவை ஏற்படுகிறது. பிரிட்டன் உதவித் திட்டத்தின் கீழ் 31 தொடக்க நல்வாழ்வு நிலையங்

களிலும், 15 வட்ட மருத்துவமனைகளிலும், கருத்தடை அறுவை சிகிச்சைக்குப் பின் அளிக்கப்படுகின்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தவிர, மருத்துவக் கல்லூரிகள் இணைந்த 9 மருத்துவமனைகளும், 2 தொண்டு நிறுவனங்களும், மற்றும் 13 மாவட்ட மருத்துவமனைகளும், கருத்தடை அறுவை சிகிச்சைகளுக்குப்பின் உள்ள திட்டங்களைச் செயல்படுத்துகின்றன. வட்டம் மற்றும் வட்டம் அல்லாத 11 மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்குப் பின் அளிக்கப்படுகின்ற வசதிகளை அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சைக்குப் பின் உள்ள கூடங்களில் மற்ற நோயாளிகளுக்கு அளிக்கப்படுகின்ற சிகிச்சைகளில் எந்தவித பாதிப்பும் இல்லாத அளவில் மாவட்ட மருத்துவமனைகளில் தற்போதுள்ள 10 படுக்கைகளுக்கு மேலாக இன்னும் கூடுதலாக 10 படுக்கைகள் ஏற்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தவிரவும் 14 மாவட்ட மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்குப்பின் சிகிச்சை அளிக்கின்ற 20 படுக்கைகள் கொண்ட கூடங்களை ரூபாய் 28.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அரசு அனுமதியளித்துள்ளது.

ஆய்வுக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட ஒழுங்கினங்களையும், தவறுகளையும் களைவதற்காகவும், அறுவை சிகிச்சையின் தரத்தை உயர்த்துவதற்காகவும், இந்த ஆண்டில் குடும்ப நல தீவிர இயக்கம் நடத்துவதை அரசு நிறுத்த ஆணை பிறப்பித்துள்ளது. திட்டம் ஆண்டு முழுவதும் திறமையாகவும், தொடர்ந்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண் அறுவை சிகிச்சைக்கும், பெண் அறுவை சிகிச்சைக்கும் மைய அரசு ஒரே அளவாக ரூ. 70 அனுமதித்துள்ளது. ஆனால், இவ்வரசு ஆண் அறுவை சிகிச்சைக்கு ரூ. 75-ம் பெண் அறுவை சிகிச்சைக்கு ரூ. 85-ம் வழங்குகிறது.

நடப்புஆண்டில் மைய அரசு நிர்ணயித்துள்ள இலக்குகளில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதிவரை எய்தியவை பின்வருமாறு:—

| குடும்பநலத் திட்ட முறைகள். | மைய அரசால் நிர்ணயிக்கப் பட்ட இலக்கு. | 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை எய்தியவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| அறுவை சிகிச்சைகள். | 1,82,000 | 1,16,646 |
| கருத்தடை வளையங்கள். | | |
| பொருத்துதல் .. .. | 47,800 | 27,974 |
| மரபு முறையிலான கருத்தடை சாதனங்களை பயன்படுத்துவோர் .. | 1,58,300 | 70,746 |
| கருத்தடை மாத்திரைகள் உட்கொள்வோர் .. | 31,960 | 3,023 |



குடும்ப நலத்திட்டத்தின் வெற்றிக்கு ஊக்கமாக தாய்-சேய் நலத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தாய் சேய் ஆகியவர்களுக்கு ஊட்ட சத்துணவின்மையால் ஏற்படும் இரத்த சோகைத் தடுத்தல், குழந்தைகளுக்கு கண் குருடாவதைத் தடுத்தல் ஆகிய திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் தொடர்ந்து அளிக்கப்படும். தவிர பச்சிளங் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுதல், பள்ளிச் செல்லாத குழந்தைகளுக்கு தொண்டை அடைப்பான், கக்குவான், நரம்பிசிவு நோய் ஆகிய நோய்களை தடுக்க தடுப்பூசி போடுதல், கருவுற்ற தாய்மார்களுக்கு நரம்பிசிவு நோய் ஏற்படாமல் இருக்கத் தடுப்பூசி போடுதல் போன்றவைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல்—

தாய்மார் தொடர்ந்து கருவுறுவதால் அவர்கள் உயிருக்கு ஆபத்து விளையும், ஆகவே தொடர்ந்து கருவுறுவதைத் தடுக்கும்படி அவர்களுக்கு ஆலோசனை வழங்க தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ முறையில் கருவைக் கலைப்பதற்கான வசதிகள் 1971 ஆம் ஆண்டு மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளன.

தற்போது 117 அரசு மருத்துவ நிலையங்களிலும் 32 தனியார் மருத்துவ நிலையங்களிலும் இவ்வசதிகள் உள்ளன. மருத்துவ முறையில் கருவைக் கலைப்பதற்கு மேலும் 41 அரசு மருத்துவ நிலையங்களில்இவ்வசதிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1981 சனவரி வரை 21,453 பேர் மருத்துவ முறையில் கருவைக் கலைத்துள்ளனர்.

டெலஸ்கோப் கருவியின் மூலம் மகளிர் அடிவயிற்றுப் பகுதியை பார்த்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல்—

டெலஸ்கோப் கருவியின் மூலம் மகளிரது அடிவயிற்றைப் பார்த்து கருத்தடைஅறுவைச் சிகிச்சை செய்யும் நவீன தொழில் நுட்ப முறையில் சில மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை ஆர். எஸ். ஆர். எம். மருத்துவ மனையில் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

தனியார் மருத்துவர்கள், மருத்துவ நிலையங்களின் பங்கு—

குடும்பநலத் திட்டத்தை ஊக்குவிப்பதில் தனியார் மருத்துவர்களையும் ஈடுபடுத்தும் இத்திட்டம் மைய அரசால் வகுக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவர்களும் குடும்ப நலப் பணிகளைப் புரிந்து அதற்கான தொகையை

அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஆண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சை, மகளிருக்குக் கருத்தடை வளையம் பொருத்தல் ஆகியவற்றுக்காக மருத்துவர்களுக்கு முறையே ரூ. 30, ரூ. 3, அனுமதிக்கப்படுகிறது. மருந்து கட்டு கட்ட ஆகும் செலவு தொடர் சிகிச்சை ஆகியவற்றுக்காக இத்தொகை வழங்கப்படுகிறது. தேவையான கைச்சாத்துகள் ஆவணங்கள் சான்றிதழ்கள் முதலியவற்றைக் கொடுப்பதன் பேரில் மாவட்டக் குடும்பநல மகப்பேறு குழந்தை நல அலுவலர்கள் தொகையை வழங்குவர். தற்போது 144 தனியார் மருத்துவ நிலையங்களை அரசு இதற்கென ஏற்பளித்துள்ளது.

உதவி மானியங்கள் —

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் மாநில அரசு மூலமாக மைய அரசு உதவி மானியங்களை வழங்கி வருகிறது.

குடும்ப நலப் பிரச்சாரமும், கருத்தடை ஆதரவாளர்களுக்கு அளிக்கப்படும் புத்தறிவு பயிற்சி முகாம்களும்.

குடும்பநலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் குடும்பநலக் கல்வியும் பிரச்சாரமும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பிரச்சாரப் பணியையும், விளம்பரப் பணியையும் தீவிரப்படுத்துவதற்காக 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் தேதி முதல் அக்டோபர் 15ஆம் தேதி வரையில் தமிழ்நாடெங்கிலும் குடும்பநல இருவார விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா அக்டோபர் 1 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரையில் நீட்டிக்கப்பட்டது. தகுதி வாய்ந்த தம்பதியரை அறிவுறுத்தி ஊக்குவிப்பதற்காக விளம்பரங்கள், பொருட்காட்சிகள், படக்காட்சிகள் மூலமாகவும், கருத்தடை ஆதரவாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலமும் பிரச்சாரப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு.

1979-80 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு ரூ. 762 இலட்சமாகும். 1980-81 ஆம் ஆண்டு மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 902 இலட்சமாகும். 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் ரூ. 939 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



பிற்சேர்க்கை — 1

மாநில வரவு-செலவுத் திட்டமும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு செலவினங்களும்.

1981-82 ஆம் ஆண்டுக்கான கோரிக்கை 18. மருத்துவம் மற்றும் கோரிக்கை 19. மக்கள் நல்வாழ்வு இவைகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 129 கோடியாகும். இதில் கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவற்றின் கீழ் 33 கோடியும் அடங்கும். 1980-81 ஆம் ஆண்டிற்கான செலவினத்தை வைத்து பார்க்கும் போது சுமார் 12 விழுக்காடு மிகுதியாக உள்ளது. இது வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 1,138 கோடியில் 11 விழுக்காடாகும். இச் செலவினம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பதை கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் மூலம் அறியலாம்.

| ஆண்டு. | வருவாய்க்கணக்கில் செலவினம். (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1978-79 ... ... ... ... | 85 |
| 1979-80 ... .. .. ... | 87 |
| 1980-81 (திருத்திய மதிப்பீட்டின்படி) | 113 |

மருத்துவக் கோரிக்கையின் கீழ் 1981-82-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப்பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

1981-82-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | | திட்டச் செலவினம். | | | |
|---|---|---|---|---|---|
| | திட்ட மல்லாத செலவினம். | மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். (50 : 50). | மத்திய அரசு உதவி செய்யும் திட்டங்கள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 259. அரசு மருத்துவ நிலையங்களின் கட்டட பராமரிப்பு, சீர் செய்தல் பணிகளுக்கான செலவு .. | 95,00 | .. | .. | .. | 95,00 |
| 280. மருத்துவம்— | | | | | |
| (i) கல்வி .. .. .. | 6,79,43 | 15,01 | .. | 3,32 | 6,97,76 |
| (ii) பயிற்சி .. .. .. | 28,11 | 19,88 | .. | 11 | 48,10 |
| (iii) ஆராய்ச்சி .. .. .. | 3,64 | 2,70 | 1,26 | .. | 7,60 |
| (iv) மருத்துவ நிவாரணம் (மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ மனைகளைச் சேர்த்து) .. | 41,69,39 | 4,02,08 | 40 | 43,29 | 46,15,16 |
| (v) ஹோமியோபதி மருத்துவம் .. | 8,29 | 1,53 | .. | .. | 9,82 |
| (vi) இந்திய முறை மருத்துவம்† .. | 67,02 | 90,63 | 4,00 | .. | 1,61,65 |
| (vii) பிற இனங்கள் .. .. | 8,68,91 | 36,07 | .. | — | 9,04,98 |
| 288. சமூக பாதுகாப்பு மற்றும் நலம். | 62,30 | 2,97 | — | .. | 65,27 |
| திருப்பி வசூலிப்பவை .. .. | .. | .. | — | .. | 16,75 |
| பெரு மொத்தம் — கோரிக்கை 18. மருத்துவம். | 59,82,09 | 5,70,87 | 5,66 | 46,72 | 66,22,09 |

† இந்திய மருத்துவம் பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.

** மக்கள் நல்வாழ்வுக் கோரிக்கையின் கீழ் 1981–82-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பல்வேறு நிலைப் பணிகளுக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு :—

1981-82-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

| | | திட்டச் செலவினம். | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டமில்லாத செலவினம். | மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். | மத்திய அரசு உதவி செய்யும். திட்டங்கள். (50:50) | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 259. மக்கள் நல்வாழ்வு நிலையங்களுக்கான கட்டட பராமரிப்பு, சீர் செய்தல் பணிகளுக்கான செலவு .. | 6,81 | .. | ... | ... | 6,81 |
| 280. மருத்துவம்—ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதலியன .. .. | 7,20,59 | 3,00,59 | ... | 31.19 | 10,52,37 |
| 281. குடும்பநலம் | | | 9,39.13 | | 9,39,13 |
| 282. (1) மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு .. | 4,93,34 | 59,05 | .. | 1,03,76 | 6,56,15 |
| (2) கழிவு நீரகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல் (—) | 2,82,79 | 30,82.52 | 5,00,00 | .. | 32,99,73 |
| கூட்டுக—திருப்பி வசூலிப்பவை | .. | .. | .. | .. | * 3,31,36 |
| பெருமொத்தம், கோரிக்கை 19 மக்கள் நல்வாழ்வு .. .. | 9,37,95 | 34,42,16 | 14,39,13 | 1,34,95 | 62,85,55 |

** மக்கள் நல்வாழ்வு பற்றிய குறிப்பு தனியாக அவையில் வைக்கப்பட்டுள்ளது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காக செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1981–82-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

| (1) | திட்டமில்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம்: மாநிலத் திட்டம். (3) | மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். (4) | மைய அரசு உதவி செய்யும் திட்டங்கள். (50;50). (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| வருவாய்க் கணக்கில் செலவு மானியக் கோரிக்கை. | | | | | |
| 37 பொதுப்பணி-மருத்துவம் மக்கள் நல்வாழ்வு கட்டிடங்கள். | 6.69 | 4.39 | .. | .. | 11,08 |
| வருவாய்க்கணக்கின் கீழ் வராத செலவு. | | | | | |
| மருத்துவம், குடும்பநலம், மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, குடிநீர் வழங்கல் கட்டிடப் பணிகள் .. | 14,30 | 13,55,69 | 26,38 | 48,50 | 14,44,87 |
| 680. மருத்துவம் குறித்த கடன்கள் .. | 23 | .. | .. | .. | 23 |
| 682. மக்கள் நல்வாழ்வு துப்புரவு குடிநீர் வழங்கல் குறித்த கடன்கள் .. | 6,11,31 | 16,98,35 | .. | .. | 23,09,66 |
| மொத்தம் .. | 6,32,53 | 30,58,43 | 26,38 | 48,50 | 37,65,84 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1981–82-ல் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 167 கோடியாகும்.



5. எல்லா தலைப்புகளின் கீழும் (280, மருத்துவம், 281 குடும்பநலம் 282, மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு 480 மருத்துவ மூலதனச் செலவு, 481 குடும்ப நல மூலதனச்செலவு 482. மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவு மூலதனச் செலவு) மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மற்றும் துப்புரவுக்கான(குடிநீர் வழங்கலைச் சேர்க்காமல்) 1981–82 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு :—

| | 1981–82-ல் பொறுப்பேற்ற செலவினம். | புதிதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள் | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்). | | |
| மாநிலத் திட்டம் .. | 16,83,48 | 6,07.11 | 22,90,59 |
| மத்திய அரசு பொறுப்பு ஏற்பவை .. .. | 9,71.17 | .. | 9,71.17 |
| மத்திய அரசு உதவி செய்பவை (50:50) | 1,58,98 | 71,19 | 2,30;17 |

6. 1981–82-ஆம் ஆண்டில் புதிதாக ஒப்பளிப்புவழங்கக் கருதப்பட்டுள்ள திட்டங்களின் விவரம் துறைவாரியாக கீழே தரப்படுகிறது :—

| துறை. | மொத்தச் செலவு. | 1981–82-ல் செலவு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) மருத்துவக்கல்வி .. .. | 470.25<br>£2.75 | 1,72,34<br>£2.75 |
| (2) மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலம் .. .. .. .. | 516.60 | 234·00 |
| (3) ஆரம்ப சுகாதார நிலையங்கள் .. | 239.17<br>0.34 | 1,64.24<br>£0.29 |
| (4) மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்து. | £30.47<br>3.39 | ¿2.76<br>11.64 |
| (5) இந்திய மருந்துவம் .. .. | 103.13 | 11.64 |
| | 1,359.62<br>–16.48 | 678.30<br>–14.68 |
| மொத்தம் .. | 1,376.10 | 6,92.98 |

£ குறியீடு திட்டமில்லாத செலவினத்தைக் குறிக்கும்.

[1981 ஏப்ரல் 8

1981–82 ஆம் ஆண்டில் ரூ. 692.98 இலட்சம் இத்துறைக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை எல்லா துறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட தொகைகளைவிட அதிகமாகும். ஏது எல்லா துறைகளுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 8,873.93 இலட்சத்தில் 18 விழுக்காட்டினைக் காட்டும்.



1981 ஏப்ரல் 8]

பிற்சேர்க்கை 2

பட்ட மேற்படிப்பு மற்றும் உயர்நிலை சிறப்பு வகுப்புகளுக்கான பட்டியல்.

பட்டப்படிப்பு

| படிப்பின் பெயர். | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| எம். டி. | 229 |
| எம். எஸ். | 128 |
| எம். சி. எச். | 29 |
| டி. எம். | 13 |
| எம். டி. ஏ. | 16 |
| எம். பார்மசி. | 3 |

பட்ட மேற்படிப்பு பட்டயத் தகுதி வகுப்புகள்.

| | |
|---|---|
| டி. ஜி. ஓ. | 82 |
| டி. எல். ஓ. | 48 |
| டி. ஓ. | 32 |
| டி. எம். ஆர். டி. | 8 |
| டி. எம். ஆர். டி. | 24 |
| டி. ஏ. | 48 |
| டி. ஆர்த்தோ. | 26 |
| டி. சி. எச். | 74 |
| டி.டி. சி. டி. | 12 |
| டி. வி. | 20 |
| டி. சி. பி. | 9 |
| டி.டி. | 16 |
| டி. பி. எம். | 14 |
| டி. ஐ.பி. எம். | 4 |
| டி. பி. எச். | 10 |
| எல். பி. எச். | 1 |

பட்டப்படிப்புக்கான வகுப்புகள்.

| படிப்பின் பெயர். | | கால அளவு. | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| எம்.பி.பி.எஸ். | .. | 5½ ஆண்டுகள் (உட்பணி பயிற்சி உட்பட). | 1,049 |
| பி. பார்மசி | .. | 4 ஆண்டுகள் | 46 |
| பி. டி. எஸ். | .. | 4 ஆண்டுகள் | 40 |
| பி.எஸ்ஸி. (செவிலியம்). | .. | 2½ ஆண்டுகள் | 20 பணி புரிவோர் 10 மற்ற இடங்கள். |

சான்றிதழ் வகுப்புகள்.

| படிப்பின் பெயர். | | கால அளவு. | ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| செவிலியர் படிப்பு | .. | 3½ ஆண்டுகள் | 675 |
| இயன் மருத்துவர் | .. | 3 ,, | 10 |
| டி. பார்மசி | .. | 2 ,, | 125 |
| துப்புரவு ஆய்வாளர்கள். | .. | 1½ ,, | 350 |
| ஆர்த்தோப்டிஸ்ட் அத்தாட்சி பெற்ற | .. | 2 ,, | 6 பெண்கள் |
| கதிரியக்க உதவியாளர். | .. | 12 மாதங்கள் | 40 |
| டி. ஆர். ஏ. | .. | 6 மாதங்கள் | 20 |
| தொழிற்நுட்ப ஆய்வுகூட பயிற்சியாளர் நிலை II | .. | 1 ஆண்டு | 8 |
| தொழில்நுட்ப விஞ்ஞானம் | .. | 1 ஆண்டு | 17 (பயிற்சி உதவித் தொகை பெறுபவர்). |
| கண்பார்வை வரை வியலாளர் பயிற்சி | .. | 2 ஆண்டு | 30 |



பிற்சேர்க்கை 3

1980--81 ஆம் ஆண்டில் வாங்க அனுமதிக்கப்பட்ட கருவிகளின் பட்டியல்

| | | ரூபாய் லட்சத்தில். |
|---|---|---|
| 1. | கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையிலுள்ள தீக்காயங்கள் பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் .. | 1.50 |
| 2. | தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவ மனையிலுள்ள பல் சிகிச்சைப் பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் .. | 1.19 |
| 3. | இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு பிலிம் சேஞ்சர்கள் வழங்குதல் .. | 2.50 |
| 4. | அரசு ஸ்டான்லி மருத்துவமனையிலுள்ள ரண சிகிச்சைப் பிரிவிற்கு காலனாஸ் கோப் வழங்குதல் .. | 0.60 |
| 5. | ஆர். எஸ். ஆர். எம். மகளிர் மகப்பேறு மருத்துவ மனைக்கு சலவை இயந்திரம் மற்றும் ஹைடிரோ எக்ஸ்ட்டிராக்டர் வழங்குதல் .. | 0.92 |
| 6. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள நோய்க் குறியியல் மருத்துவ பிரிவிற்கு மைக்ரோ போட்டோகிராபி மற்றும் மைக்ரோ புரொஜக்ஷன் கருவிகள் வாங்குதல் .. | 0.65 |
| 7. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள நோய்க் குறியியல் பிரிவிற்கு இரண்டு ப்ஃளோரசண்ட நுண் உருப்பெருக்கி வாங்குதல் .. | 0.65 |
| 8. | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த பல் பிரிவுகளுக்குக் கருவிகள் வாங்குதல் .. | 7.95 |
| 9. | மதுரை மருத்துவக் கல்லூரி பார்மகாலஜி பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் .. | 0.26 |
| 10. | கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கு எண்டஸ்கோப் வழங்குதல் .. | 1.42 |

[1981 ஏப்ரல் 8

(ரூபாய் இலட்சத்தில்.

| | | |
|---|---|---|
| 11. | சென்னை அரசு பொது மருத்துவ மனைக்கு காஸ்டிராஸ்கோப் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல் .. | 1.42 |
| 12. | அரசு பொது மருத்துவமனைக்கு மல்டிசானல் எக்கோ கார்டியோ கிராம் வாங்குதல் .. | 7.17 |
| 13. | சென்னை மருத்துவக் கல்லூரிக்கு ஹைபிரஷர் லிக்விட் குரோமோட்டோகிராபி வாங்குதல். | 4.54 |
| 14. | சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு வால்யூம் கன்ட்ரோலர் வென்டிலேட்டர்கள் 3 வாங்குதல் .. | 3.02 |
| 15. | சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு மல்டிசானல் மானிட்டர் சிஸ்டம் வாங்குதல். | 2.23 |
| 16. | சென்னை மருத்துவக்கல்லூரிக்கு ஒலிம்பஸ் பைபிராஸ்கோப் வழங்குதல் .. | 1.08 |
| 17. | அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு கோபால்ட் 60 தெரபி யூனிட் வழங்குதல் .. | 10.50 |
| 18. | சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு மல்டிசானல் மானிட்டரி சிஸ்டம் மற்றும் ரேடியோ ப்ரீக்வன்ஸி வழங்குதல் .. | 4.43 |
| 19. | சென்னை அரசு மகப்பேறு மகளிர் நோய் நிலையம் மற்றும் பெண்கள்-குழந்தைகள் மருத்துவ மனைக்கு ஆட்டோ மாட்டிக் லிக்விட் ஸ்கின்டிலேஷன் கௌன்ட்டர் .. | 3.54 |
| 20. | அரசு ஸ்டான்லி மருத்துவ மனைக்கு எவோக்ட் பொட்டென்ஷியல் மெஷின் வழங்குதல் .. | 5.58 |
| 21. | சென்னை மருத்துவக் கல்லூரிக்கு ஸ்பெக்ட்ரோ ப்ளுரோ மீட்டர் வழங்குதல் .. | 1.40 |
| 22. | அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு மல்டிசானல் மானிட்டரி சிஸ்டம் வழங்குதல் .. | 1.50 |
| 23. | அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு கிரிட்டிக்கல் கேர் வால்யூம் வென்டிலேட்டர் வாங்குதல்.. | 1.06 |



1981 ஏப்ரல் 8]

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 24. | சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு டீப்பிரீஸர் வழங்குதல் .. | 1.23 |
| 25. | அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு எக்கோ கார்டியோ கிராம் போனோ கார்டியோ கிராம் வழங்குதல் .. | 7.18 |
| 26. | அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு மின்கோகிராப் 34 வாங்குதல் .. | 1.23 |
| 27. | சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவ மனைக்கு எலக்ட்ரோ ஹைட்ரோகிராபி வாங்குதல் .. | 1.66 |
| 28. | சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு இ.எம்.ஜி. கருவி வாங்குதல் .. | 3.99 |
| 29. | சென்னை மருத்துவக் கல்லூரிக்கு ஒலிம்பஸ் பைபிராஸ்கோப்புக்கு உதிரிப்பாகங்கள் வாங்குதல் .. | 1.08 |
| 30. | மதுரை மருத்துவக் கல்லூரிக்கு ரெவ்கோ டீப் பிரீஸர் 70 வாங்குதல் .. | 1.12 |
| 31. | சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவ மனைக்கு பைனாகுலர் மைக்ராஸ்கோப் வாங்குதல் .. | 1.27 |
| 32. | சென்னை பல் மருத்துவக் கல்லூரிக்கு லாப ரட்டரி எஞ்சின் வாங்குதல் .. | 1.38 |
| 33. | சென்னை அரசு கண் சிகிச்சை மருத்துவ மனைக்கு விட்டிரியஸ் இன்ப்யூஷன் சக்ஷன் கட்டர் வாங்குதல் .. | 1.07 |
| 34. | சென்னை அரசு கண் சிகிச்சை மருத்துவ மனைக்கு கால் ஜீயஸ் பண்ட்ஸ்காமரா வாங்குதல் .. | 2.00 |

1981 ஏப்ரல் 8

(ரூபாய் இலட்சத்தில்)

1981–82 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு கருவிகள் வாங்குவதற்கு ஆணையிட கருதப் பட்டுள்ளது :—

1. பேச்சு மற்றும் காது கேளாத ஊனமுற்றவர் களுக்கு சிகிச்சை அளிக்கும் நிலையத்திற்கு கருவிகள் வாங்குதல் .. 2.57

2. கீழ்க்கண்ட 8 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள் ஒவ்வொன்றும் ஒரு அல்ட் ராஸானிக் கருவி வாங்குதல் :—

(1) ஆர்.எஸ்.ஆர்.எம். மகப்பேறு மருத் துவ நிலையம், சென்னை

(2) கஸ்தூரிபாய் காந்தி பெண்கள்-குழந்தை கள் மருத்துவமனை, சென்னை

(3) மகப்பேறு மகளிர் நோய் இயல் நிலை யம் மற்றும் பெண்கள்-குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை.

(4) தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனை, தஞ்சாவூர்.

(5) திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத் துவ மனை, திருநெல்வேலி.

(6) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் ..

(7) செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி மருத் துவ மனை, செங்கல்பட்டு.

(8) அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை 16·96

3. கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கு பின்வரும் கருவிகள் வாங்குதல்:—

கார்டியோஸ்கோப்
ரெஸ்பிரேட்டர்
காஸ்ட்ரோஸ்கோப் .. 3·25

4. சென்னை அரசு மகப்பேறு மகளிர் நோய் நிலையம் மற்றும் பெண்கள்–குழந்தைகள் மருத்துவ மனைக்கு லாப்ராஸ்கோப், கால் போஸ்கோப் போன்ற கருவிகள் வாங்குதல். 2.75



1981, ஏப்ரல் 8]

(ரூபாய் இலட்சத்தில்)

5. அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையி லுள்ள தீவிர சிகிச்சை பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் .. 2.55

6. அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலுள்ள முடநீக்கியல் மருத்துவ சிகிச்சை பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் .. 0.95

7. காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா புற்று நோய் சிகிச்சை நிலையத்திற்கு கருவிகள் வாங்குதல் 10.58

8. சென்னை அரசு பொது மருத்துவ மனையில் செயற்கை சிறுநீரகம் பொருத்தும் சிகிச்சை அளிப்பதற்காக கருவிகள் வாங்குதல் 16.60

9. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யிலுள்ள நரம்பியல் பிரிவிற்கு கருவிகள் வாங்குதல் .. 2.86

10. மதுரை மருத்துவக் கல்லூரியில் நச்சுக்கிருமி யியல் ஆய்வகப் பிரிவு ஏற்படுத்துதல் .. 5.25

மொத்தம் .. 64.72

பிற்சேர்க்கை 4

1981-82 ஆம் ஆண்டில் கீழ்கண்ட கட்டடத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

1. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் விளை யாட்டு மைதானம் அமைத்தல் .. 2.30

2. மதுரை மருத்துவ கல்லூரியில் வெள்ளி விழா நினைவு அரங்கம் கட்டுதல் .. 27.00

3. சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் உள்ள நுழைவாயிலிருந்து நூலகம் மற்றும் கூவக்கிடங்குகளை இணைத்து சாலை போடுதல் .. 0 37

(ரூபாய் இலட்சத்தில்)

4. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள பெண்கள் விடுதியின் மேல் கூடுதல் அறைகள் கட்டுதல் .. 2.10

5. சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவ மனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரி முதலியவைகளுக்கான தண்ணீர் விநியோகத்தை சீர்படுத்துதல் .. 4.99

6. சென்னை ஓட்டேரியிலுள்ள திருவொட்டீஸ்வரர் காச நோய் மருத்துவமனையில் ஒரு மின் தூக்கி சாதனம் அமைத்தல் .. 1.90

7. மதுரையிலுள்ள அரசு ராஜாஜி மருத்துவ மனையில் உள்ள சாலைகளை செப்பனிடுதல் 0.69

8. மதுரையிலுள்ள அரசு ராஜாஜி மருத்துவ மனையிலிருக்கும் கண் பிரிவு மற்றும் நுண் கதிர் பிரிவுகளை இணைக்கும் இணைப்பு அமைத்தல் .. 0.27

9. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள 30 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சைக்குப் பின் சிகிச்சையளிப்பதற்கான பிரிவு மற்றும் குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கு முதலியவைகள் கட்டுதல் .. 5.50

10. கோயமபுத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் உள்ள சவக்கிடங்கிற்கு குளிர் சாதன வசதி அமைத்தல் .. 2.00

11. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலுள்ள ரத்த சேமிப்பு வங்கி மற்றும் கேட்பியல் அறை முதலியவைகள் குளிர் சாதன வசதியுள்ளதாக அமைத்தல் .. 0·74

12. சென்னையிலுள்ள ராயப்பேட்டை மருத்துவ மனைக்கு மின் உற்பத்தி சாதனம் வழங்குதல் 2·35



(ரூபாய் இலட்சத்தில்)

13. சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவமனை, மகப்பேறு மருத்துவ நிலையம் மற்றும் பெண்கள் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கு மின் உற்பத்தி சாதனம் வழங்குதல் .. 9·91

14. சென்னையிலுள்ள ஸ்டான்லி, மருத்துவமனை கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ராயப்பேட்டை மருத்துவமனை மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் இருக்கும் அறுவை அரங்குகளை குளிர் சாதன வசதி செய்தல் .. 15·70

15. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள குளிர் சாதன அறையின் மேல் முதல் மாடி கட்டிடம் கட்டுதல் .. 5 36

16. செங்கல்பட்டு மருத்துவ கல்லூரியிலுள்ள பெண்கள் தங்கும் விடுதியை விரிவு படுத்துதல் .. 3.26

17. மதுரையிலுள்ள அரசு ராஜாஜி மருத்துவ மனையில் கடமையாற்றுகின்ற மருத்துவர்கள் தங்கும் அறை முதலியவைகள் கட்டுதல் 0.50

மொத்தம் .. 84·97

1981–82 ஆம் ஆண்டு அமுல் படுத்தப்படவிருக்கும் திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

1. மதுரையிலுள்ள அரசு ராஜாஜி மருத்துவ மனையில் வெளிவட்டார செயற்கை அவயங்கள் பொருத்தும் நிலையம் கட்டுதல் 24·50

2. தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் பயக் கிருமி ஒழிப்புப் பிரிவு கட்டுதல் 2.76

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 3. | சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில் தனியாக குழந்தைகள் பிரிவு கட்டுதல் .. | 199·00 |
| 4. | தாம்பரத்திலுள்ள காசநோய் நலம்பேண் நிலையத்தில் டீசல் மின் உற்பத்தி சாதனம் அமைத்தல் .. .. | 1.10 |
| 5. | செங்கையிலுள்ள கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாற்று மின் உற்பத்தி இயந்திரமும் மின் உற்பத்தி அறையும் அமைத்தல் .. .. | 4·00 |
| 6. | சென்னையிலுள்ள அரசு கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனையிலுள்ள சவக்கிடங்கை குளிர்சாதன வசதி செய்தல் .. .. | 3·71 |
| | மொத்தம் .. | 235 07 |

பிற்சேர்க்கை 5

1980—81-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை அரசு அங்கீகரித்துள்ளது :—

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள்—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 3·32 இலட்சத்திற்கு இரட்டை அறுவை சிகிச்சை அரங்குகளை குளிர்சாதன வசதியாக்குதல்.

(ஆ) சேலம், வேலூர் மற்றும் ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலுள்ள அறுவை சிகிச்சை அரங்குகளை குளிர் சாதன வசதியுள்ளதாக ரூ. 19·34 இலட்சம் செலவில் மாற்றுதல்.

(இ) இராமநாதபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் ரூ. 5·25 இலட்சம் செலவில் தீவிர செறிவு கவனச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்தல்.

(ஈ) திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் ரூ. 1·95 இலட்சம் செலவில் செவிலியர்கள் தங்கும் விடுதி கட்டுதல்.





(உ) புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் ரூ. 2·53 இலட்சம் செலவில் நவீன சமையல் கூடம் கட்டுதல்.

(ஊ) தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கடலூர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ரூ. 9 இலட்சம் செலவில் மின் உற்பத்தி சாதனம் அமைத்தல்.

வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பத்மநாபபுரம் அரசு மருத்துவ மனையை ரூ. 2.00 இலட்சம் செலவில் விரிவுபடுத்துதல்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள உடுமலைப் பேட்டை அரசு மருத்துவமனையை ரூ. 5 50 இலட்சம் செலவில் விரிவுபடுத்துதல்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட கட்டிடம் ரூ. 2·50 இலட்சம் செலவில் கட்டுதல்.

(ஈ) திருச்சி மாவட்டத்திலுள்ள லால்குடி அரசு மருத்துவ மனையில் கட்டியிருக்கும் மருத்துவ அலுவலருக்கான தங்கும் அறை ரூ. 0·61 இலட்சம் செலவில் கட்டுதல்.

வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகள்—

(அ) வத்தலகுண்டு அரசு மருத்துவமனைக்காக ரூ. 2·58 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

(ஆ) பள்ளிபாளையம் அரசு மருத்துவமனைக்காக ரூ. 8·50 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுதல்.

(இ) வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கர் அரசு மருத்துவ மனைக்காக கூடுதல் 30 படுக்கைகள் கொண்ட பிரிவு, அறுவை அரங்கம், மகப்பேறு அறை, பிரேத பரிசோதனை கிடங்கு முதலியவைகள் ரூ. 4·35 இலட்சம் செலவில் கட்டுதல்.

(ஈ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அரசு மருத்துவ மனைக்காக ரூ. 4·00 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுதல்.

(உ) மதுரை மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவ மனைக்காக ரூ. 3·20 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுதல்.

(ஊ) இராமேஸ்வரம் அரசு மருத்துவ மனையில் பணி புரியும் அலுவலர்களுக்கான குடியிருப்பு ரூ. 6·40 இலட்சம் செலவில் கட்டுதல்.

[1981 ஏப்ரல் 8

அரசு மருந்தகங்கள்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம் அரசு மருந்தகத்தில் ரூ. 8·50 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கீவளூர் அரசு மருந்தகத்தில் ரூ. 1·56 இலட்சம் செலவில் சிறிய அறுவை அரங்குடன் கூடிய 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.

(இ) கொத்தமங்கலத்தில் 8 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை அமைத்தல்.

சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் திறப்பது—

(1) இரத்த சேமிப்பு வங்கி வாணியம்பாடி, உளுந்தூர்பேட்டை ஆகிய அரசு மருத்துவ மனைகளில் ஏற்படுத்துதல்.

(2) பல்நோய் மருத்துவப் பிரிவு, சீர்காழி, வாணியம்பாடி, கம்பம், விருத்தாசலம், திருச்செங்கோடு ஆகிய மருத்துவமனைகளில் ஏற்படுத்துதல்.

(3) முடநீக்கியல் சிகிச்சைப் பிரிவு தூத்துக்குடி, தர்மபுரி, காஞ்சிபுரம், திருப்பூர், ஒசூர், இராமேஸ்வரம் ஆகிய மருத்துவ மனைகளில் திறத்தல்.

(4) கண், மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவு திருப்பத்தூர், திருவண்ணாமலை, கூனூர், பழனி, கும்பகோணம் ஆகிய அரசினர் மருத்துவமனைகளில் ஏற்படுத்துதல்.

(5) பால் வினை நோய்ப் பிரிவு திருப்பூர், துறையூர், ஒசூர், இராமேஸ்வரம் ஆகிய அரசினர் மருத்துவ மனைகளில் ஏற்படுத்துதல்.

(6) கண் நோய்ப் பிரிவு திருப்பூர், திருப்பத்தூர், சிதம்பரம் நாமக்கல், ஒசூர், தென்காசி ஆகிய அரசினர் மருத்துவ மனைகளில் நிறுவுதல்.

(7) மனநோய் சிகிச்சைப் பிரிவு தர்மபுரி, திருப்பூர், உதகமண்டலம், நாகர்கோவில் ஆகிய மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் ஏற்படுத்துதல்.

(8) குழந்தைகள் நோய் சிகிச்சைப் பிரிவு திருப்பூர், விருது நகர், பொள்ளாச்சி, ஒசூர், ஆசூர், இராமேஸ்வரம் ஆகிய அரசு மருத்துவமனைகளில் ஆரம்பித்தல்.



1981 ஏப்ரல் 8]

1981—82 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ள திட்டங்கள்.

மாவட்ட மருத்துவ மனைகள்—

(அ) ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 4·35 இலட்சம் செலவில் உயர் அழுத்த மின் சக்தி அமைத்துக் கொடுத்தல்.

(ஆ) திண்டுக்கல், உதகமண்டலம், தருமபுரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மாற்று மின்சார உற்பத்தி சாதனங்கள் ரூ. 13·00 இலட்சம் செலவில் அமைத்தல்.

(இ) ஈரோடு, காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் உள்ள சவக்கிடங்குகள் ரூ. 8·80 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதியாக மாற்றுதல்.

(ஈ) ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு ரூ. 5·12 இலட்சம் செலவில் கட்டுதல்.

(உ) திருப்பூர், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல், காஞ்சீபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலுள்ள படுக்கைகளை ரூ. 61·34 இலட்சம் செலவில் குறைந்தது 300 ஆக உயர்த்துதல்.

(ஊ) தருமபுரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் இருதய செறிவு கவன சிகிச்சைப் பிரிவு ரூ. 3·20 இலட்சம் செலவில் ஆரம்பித்தல்.

(எ) தூத்துக்குடி. இராமநாதபுரம், புதுக்கோட்டை, தர்மபுரி, திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கு பிண ஊர்தி வழங்குதல்.

(a) வட்ட மருத்துவ மனைகள்—

(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள ஆரூர் மருத்துவ மனைக்கு ரூ. 10·63 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுதல்.

(ஆ) தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒசூர் மருத்துவ மனைக்கு ரூ. 9·93 இலட்சம் செலவில் கூடுதலாக 57 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மணப்பாறை அரசு மருத்துவமனையில் ரூ. 0·97 இலட்சம் செலவில் அறுவை சிகிச்சை அரங்கம் கட்டுதல்.

(ஈ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவ மனையிலுள்ள மகப்பேறு சிகிச்சைப் பிரிவை ரூ. 0·80 இலட்சம் செலவில் விரிவுபடுத்துதல்.

அரசு மருந்தகங்கள்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் அரசு மருந்தகத்தில் ரூ. 0·86 இலட்சம் செலவில் ஆறு படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்டுதல்.

(ஆ) வட ஆர்க்காடு மாவட்டம், கரடிகுப்பம் அரசு மருந்தகத்திற்காக ரூ. 1·70 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுதல்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அனுக்கூர், தர்மபுரி மாவட்டம், அஞ்செட்டி, திருநெல்வேலி மாவட்டம் முக்கூப்பேரி தஞ்சாவூர் மாவட்டம், அம்மா பட்டினம் ஆகிய ஊர்களில் ரூ. 1 82 இலட்சம் செலவில் புதிய மருந்தகங்கள் திறத்தல்.

சிறப்புத் துறைகள் திறப்பது—

(1) தாராபுரம், பல்லடம் மற்றும் லக்கோட்டை மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் ஆரம்பிப்பிரிவு பது.

(2) விருதுநகர், திருப்பத்தூர் மற்றும் தென்காசி அரசு மருத்துவமனைகளில் பால்வினைப் நோய் பிரிவுகள் ஆரம்பிப்பது.

(3) கரூர், பட்டுக்கோட்டை மற்றும் பெரியகுளத்தில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பது.

(4) பத்மநாபபுரம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைகளில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிப்பது.



## இணைப்பு II.

(403-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### இந்திய மருத்துவம்.

1. கொள்கை.—இந்திய மருத்துவம் பற்றிய தேசியக் கொள்கை வழி நின்று, மிகக் குறைந்த செலவில் குறிப்பாக கிராம மக்களுக்கு மருத்துவ நிவாரணமளிப்பதையும் அகில இந்திய அளவில் வரையறை செய்யப்பட்ட பாடத்திட்டங்களின் வாயிலாக மருத்துவக் கல்வியளித்து வரும் பள்ளிக்கூடங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் மூலமாக மருத்துவப் பயிற்சி மிக்க மனித ஆற்றலை அதிகரிப்பதையும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவிப்பதையும் இன்றியமையாத மருந்துச் சரக்குகளை உற்பத்தி செய்வதோடு, மருந்து மூலிகைகளை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதையும் தரத் திற்சிறந்த பயிற்சி நிலையங்கள் உருவாகும் நிலையினைக் கட்டுப்படுத்துவதையும் அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2. சித்த மருத்துவத்தின் வளர்ச்சி.—தமிழகத்திற்கே உரித்தான சித்த முறை மருத்துவம், தொன்மை வாய்ந்த நமது பாரம்பரியம் மற்றும் நாகரிகத்தின் ஓர் அங்கமாக திகழ்கின்றபடியால், அதனை எல்லா வகையிலும் மேம்படுத்துவதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

(அ) மருத்துவ நிவாரணம்.—தற்போது சித்த முறையில் கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்கள் வாயிலாக மருத்துவ நிவாரண மளிக்கப்பட்டு வருகிறது :—

(i) பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள 208 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை.

(ii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலுள்ள 51 படுக்கைகள் கொண்ட சித்தா பகுதி.

(iii) 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இயங்கி வரும் சித்தா பிரிவுகள்.

(iv) 1980–81 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள 15 சித்தா பிரிவுகளையும் சேர்த்து வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடம் அல்லாத ஊர்களிலுள்ள 87 சித்தா பிரிவுகள்.

(v) 8 அரசு சித்தா மருந்தகங்கள்.

(vi) உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் 395 சித்தா மருந்தகங்கள்.

(ஆ) திட்டங்கள்.—(i) ஊர்ப்புற மக்களுக்கு, அவர்கள் வசிக்கும் இடங்களில் சித்தா முறையில் மருத்துவ நிவாரண மளிக்கும் பணியினை தொடங்கும் பொருட்டு மாநிலத்திலுள்ள எல்லா தொடக்க நல்வாழ்வு நிலையங்களிலேயும் சித்தா பிரிவுகளைப் படிப்படியாக தொடங்கலாமென்று அரசு தீர்மானித்துள்ளது. முதல் கட்டமாக, 1981—82 ஆம் ஆண்டில், ரூபாய் 62 இலட்சம் செலவில் 200 தொடக்க நல் வாழ்வு நிலையங்களில் சித்தா பிரிவுகள் தொடங்கப்படும்.

(ii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலுள்ள 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு, 1981—82இல் செயல்படத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

(iii) இராமநாதபுரம், ஈரோடு, நாகப்பட்டினம், தர்ம புரி, சிதம்பரம் ஆகிய இடங்களில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஒவ்வொன்றும் 15 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவுகள் 1981—82இல் செயல்படத் தொடங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

(iv) ரூபாய் 5 இலட்சம் செலவில், திண்டுக்கல், வேலூர் ஆகிய இடங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளுக்கென்று தனியாக கட்டிடங்களை கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) மருத்துவக் கல்வி.—பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில், கீழ்க்கண்ட படிப்புகளில் கல்வி அளிக்கப்படுகின்றது.—

(i) 5½ ஆண்டு கால பி.எஸ்.எம். & எஸ். சித்த மருத்துவப் பட்டப் படிப்பு.

இப்படிப்பிற்கான இடங்கள் 1980—81 முதல் 44 இல் இருந்து 75 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 75 வீதம், 53 மாணவர்களுக்கு படிப் புதவித் தொகை வழங்கப்படுகிறது.

(ii) குணபாடம், மருத்துவம் ஆகிய பிரிவுகளில் நடத் தப்படும் 3 ஆண்டுகால எம்.டி. (சித்தா) பட்ட மேற்படிப்பு.

இப்படிப்பு மைய அரசின் ஆதரவிலுள்ள திட்டத்தில் அடங்கும். இப்படிப்பிற்கான மொத்த இடங்கள் 20 ஆகும். ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 325 படிப்புதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

(iii) 2 ஆண்டுகால சித்த மருத்துவ மருந்தாக்கியல் பட்டப் படிப்பு.



இப்படிப்பில் மொத்தம் 8 இடங்கள் உள்ளன. ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 படிப்புதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

மேலும் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலும், இரண்டாண்டு கால சித்த மருத் துவ மருந்தாக்கியல் பட்டயப் படிப்பு நடத்தப்படுகிறது. இப்படிப்பிற்கான மொத்த இடங்கள் 7, மாணவர் ஒவ்வொரு வரும் மாதந்தோறும் ரூபாய் 30 படிப்புதவித் தொகை பெறுகின்றனர்.

சித்த மருத்துவ முறைக்கேற்றவாறு செவிலியர் பயிற்சி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது. இப் பயிற்சிக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்காக 1981—82 வரவு—செலவு மதிப்பீட்டில் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி உடல் கூற்றியல் பகுதிக்கு பணியாளர்களை நியமனம் செய்திடவும் கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்கிடவும் 1981—82 வரவு—செலவு மதிப்பீட்டில் ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) ஆராய்ச்சி.—

சித்த அறிவியல் வளர்ச்சிக் குழு இதுகாறும் சித்த மருத் துவ இலக்கியங்கள் அடங்கிய 848 சுவடிகளையும், 699 அச் சிடப்பட்ட அரிய நூற்களையும், 102 கையேட்டுப் பிரதி களையும், முப்பு பற்றிய தட்டச்சுப் பிரதிகள் 2 பாகங்கள், 308 தட்டச்சுப் பிரதிகளையும் சேகரித்துள்ளது. அவற்றில் சில புத்தகங்கள் மறு அச்சு செய்யப்பட்டுள்ளன. மேற்கூறி யனவற்றை எடுத்து எழுதும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. சித்தா மற்றும் ஆயுர்வேதா மைய ஆராய்ச்சிப் பிரிவு, பாளையங்கோட்டையில் நடத்தி வரும் சித்தா இலக் கிய ஆராய்ச்சிப் பிரிவு சித்த மருத்துவ இலக்கியங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறது.

மாநில அளவில் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு, சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள நோய்க் குறியியல் மற்றும் உயிர்வேதியியல் ஆய்வுக் கூடங்களுக்குத் தேவையான கருவிகள் வாங்கவும் ஊடுகதிர் சாதனம் வாங் கவும் ரூபாய் 5.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள சித்த மருத்துவ மத்திய நிலையம் புற்றுநோய் முதலியனவற்றைக் குணமாக்கும் முறைகளில் பயனுள்ள ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றது.

மத்திய சித்தா மற்றும் ஆயுர்வேதா ஆராய்ச்சிக் குழு ஒரு மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவை, சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையிலும் பிரிதொரு மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவை, பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தி வருகின்றது.

(உ) மருந்துசெய் நிலையங்கள்.—

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையிலும் பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியிலும் இயங்கிவரும் மருந்துசெய் நிலையங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்து, அரசு மருத்துவ நிலையங்களின் தேவைகளை நிறைவாக்கும் வகையில் இம்மருந்து செய் நிலையங்களை எந்திரமயமாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையிலுள்ள மருந்துசெய் நிலையத்தினை விரிவாக்கம் செய்வதற்கு, மைய அரசின் ஆதரவுத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூபாய் 3 இலட்சங்களை இந்திய அரசு தந்துள்ளது.

(ஊ) மூலிகைத் தோட்டங்கள்—

மருந்துகள் செய்யத் தேவையான மூல மருந்துச் சரக்குகள் மற்றும் நல்ல மருந்துச் செடிகள் தட்டுப்பாடின்றி எப்போதும் கிடைக்கும் வகையில், மூலிகைத் தோட்டங்களை ஏற்படுத்துதல், மூல மருந்துச் சரக்குகளைச் சேகரித்தல் ஆகியனவற்றுக்காக ஒரு வணிக நிறுவனம் தொடங்குமுகமாக, பொருளாதார நுட்ப அறிக்கை ஒன்றினைத் தயாரிக்க அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது. இந்த அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருந்துவமனையில் ஒரு மூலிகைத் தோட்டம் உள்ளது. மேலும் மலைவாழ் பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ், கொல்லிமலையில் ஒரு மூலிகைத் தோட்டம் ஏற்படுத்துவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. அடியிற் குறிப்பிட்டுள்ள இடங்களில் மூலிகைத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டங்களைச் செயலாக்கம் பெறச் செய்வதற்கு முனைப்புடன் பரிசீலிக்கப்பட்டு வருகிறது:—

(i) கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்கக் காடு.

(ii) மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகம்.

(iii) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவரங்கம்.





மூலிகைத் தோட்டங்கள் ஏற்படுத்தவும், அவற்றை முறையாகப் பராமரிக்கவும் ஒரு தனி அதிகாரியை அரசு நியமனம் செய்துள்ளது.

மாறுபடுகின்ற தட்ப, வெப்ப நிலைகளிலும், வேறுபட்ட உயரங்களிலும் மற்ற நிலைகளிலும் மூலிகைச் செடிகள் வளரும் விதத்தினை ஆராயும் பொருட்டு, பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில், பசுமை வீடு எனப்படும் மூலிகை ஆராய்ச்சி ஆய்வுக்கூடமொன்று கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

ஆயுர்வேதா, மற்றும் சித்தா மத்திய ஆராய்ச்சிக்குழுவின் ஆதரவில், பாளையங்கோட்டை, அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் மூலிகைகள் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் செயல் பட்டு வருகிறது.

3. யுனானி மருத்துவ முறை.—

(அ) மருத்துவ நிவாரணம்.—

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையிலுள்ள 49 படுக்கைகள் கொண்ட யுனானி பகுதியிலும் உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் 14 மருந்தகங்களிலும் யுனானி முறையில் மருத்துவ நிவாரணம் அளிக்கப் பட்டு வருகிறது.

(ஆ) மருத்துவக் கல்வி—

(i) அரசு 7½ ஆண்டுகால யுனானி மருத்துவ பட்டப்படிப்பினைத் தொடங்கியுள்ளது. இப்படிப்பிற்கு ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதில் 10 மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூபாய் 75 விதம் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. முதல் இரண்டு ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள் புகுமுக யுனானிடிப் வகுப்புப் பாடங்களை சென்னையில் உள்ள இரண்டு தனியார் கல்லூரிகளில் படித்து வருகின்றனர். யுனானி மருத்துவக் கல்லூரிக்குத்தேவையான கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

(ii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையில் இரண்டாண்டு கால யுனானி மருந்தாக்கியல் பட்டயப்படிப்பில் ஆண்டுதோறும் 5 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மாணவர் ஒருவருக்கு மாதம் ரூபாய் 30 படிப்புதவித் தொகையாகத் தரப்படுகிறது.

(இ) ஆராய்ச்சி.

யுனானி ஆராய்ச்சி மத்தியக் கழகம், சென்னையில் ஓர் யுனானி மருத்துவ மண்டல ஆராய்ச்சிப் பிரிவினைத் தொடங்கியுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம் தற்போது அரசுக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. நிலையான கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் பற்றிய செயற்குறிப்பினை அரசு ஆய்ந்து வருகிறது. யுனானி ஆராய்ச்சி மத்தியக் கழகம் நடத்தும் மருத்துவ ஆராய்ச்சிக் பிரிவு ஒன்றும் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் இயங்கி வருகிறது.

(ஈ) மருந்துசெய் நிலையம் :

சென்னை, அறிஞர் அண்ணா மருத்துவமனையுடன் இணைந்துள்ள மருந்துசெய் நிலையம், அம் மருத்துவமனைக்குத் தேவையான யுனானி மருந்துகளையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

(உ) யுனானி முறை மேம்பாட்டுக் குழு :

தமிழகத்தில் தற்போதுள்ள யுனானி மருத்துவ வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தவும் இவ்வசதிகளை மேலும் பெருக்குவதற்கும் உரிய வழிமுறைகளைக் கண்டறிந்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஒரு நிபுணர் குழுவினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

4. ஆயுர்வேத மருத்துவமுறை :

(அ) மருந்துவ நிவாரணம் :

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்து மனையிலுள்ள 50 படுக்கைகள் கொண்ட ஆயுர்வேத பகுதியிலும் உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் 90 மருந்தகங்களிலும் ஆயுர்வேத முறையில் மருத்துவ நிவாரண வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) மருத்துவக் கல்வி :

( ) கேரள மாநில அரசுடன் செய்துள்ள பரிமாற்று உடன்படிக்கையின்படி, கேரளாவிலுள்ள ஆயுர்வேதக் கல்லூரிகளில் பி.ஏ.எம்.எஸ். என்னும் ஆயுர்வேதப் பட்டப்படிப்ப படிப்பதற்கு ஆண்டுதோறும் தமிழக மாணவர் நால்வரை அரசு அனுப்பி வைக்கிறது.



சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள ஆயுர்வேதத் தனியார் கல்லூரிகளில் ஆயுர்வேதப் பட்டப்படிப்பு கற்பிக்கப்பட்டு வருகிறது.

( ) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் இரண்டாண்டு கால ஆயுர்வேத மருந்தாக்கியல் பட்டயப் படிப்பில் ஆண்டுதோறும் 5 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். மாணவர் ஒருவருக்கு மாதம் ரூபாய் 30 படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

(இ) ஆராய்ச்சி

ஆயுர்வேத மற்றும் சித்தா ஆராய்ச்சி மத்தியக் கழகம் கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தினை சென்னையில் ஏற்படுத்தி மலேரியா போன்ற நோய்கள் பற்றிய பயனுள்ள ஆராய்ச்சிகளைச் செய்துவருகின்றது. சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் மைய அரசின் ஆதரவுத் திட்டத்தின்கீழ் ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது.

(ஈ) மருந்துசெய் நிலையம்

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையுடன் இணைந்துள்ள மருந்துசெய் நிலையத்தில் அம் மருத்துவ மனைக்குத் தேவையான ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

(உ) ஆயுர்வேத முறை மேம்பாட்டுக் குழு

தமிழகத்தில் தற்போதுள்ள ஆயுர்வேத மருத்துவ வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தவும் இவ்வசதிகளைப் பெருக்குவதற்கும் தேவையான வழிவகைகளைக் கண்டறிந்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு, அரசு ஒரு நிபுணர் குழுவினை அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

5. இயற்கை மருத்துவம்

இயற்கை முறை மருத்துவத்தினை ஒரு சிகிச்சை முறையாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஐதராபாத்தில், இயற்கை முறை மருத்துவத்தில் பட்டப்படிப்பு படிக்கும்பொருட்டு ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து நான்குபேர் அனுப்பப்படுகிறார்கள். இவர்களுக்கு ஒருவருக்கு மாதம் ரூபாய் 250 வீதம் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.

**6. யோகாசன சிகிச்சை முறை**

அரசு நியமனம் செய்துள்ள குழு சமர்ப்பித்துள்ள யோகாசன முறை பற்றிய ஆரம்ப அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. யோகாசன முறையினை ஊக்குவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளைப் பற்றியும் அரசு ஆய்ந்து வருகிறது.

**7. வரவு-செலவுத் திட்டங்கள்**

1981–82 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 231·20 இலட்சம் இந்திய மருத்துவ முறைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒதுக்கீடு 1980–81 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 130·74 இலட்சமாக இருந்தது 1979–80 இல் இம்முறைகளுக்காக ஏற்பட்ட மொத்த செலவினம் ரூபாய் 82·77 இலட்சம் ஆகும். 1981–82 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களின் பட்டியல் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை.

இந்திய மருத்துவத் துறைக்கு 1981–82 இல் அங்கீகரிக்கப் பட்டுள்ள **புதிய திட்டங்கள்.**





| வரிசை எண். | திட்டத்தின் பெயர் | 1981–82 ஆம் ஆண்டில் செலவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | [ரூபாய் ஆயிரங்களில்] |
| 1 | 200 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் சித்தா பிரிவுகள் தொடங்குதல். | 6,200 |
| 2 | சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனை வளாகத்தில் செவிலியப் பயிற்சிக்கான கட்டிடங்கள் கட்டுதல். | 300 |
| 3 | இராமநாதபுரம், தர்மபுரி மாவட்ட மருத்துவமனைகளிலும் சிதம்பரம் வட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும் கட்டப்பட்டுள்ள 15 படுக்கைகள் கொண்ட சித்தா பிரிவுகளுக்கு பணியாளர்களை நியமனம் செய்யவும் இதர வசதிகள் செய்யவும். | 236 |
| 4 | சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் 24 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவுக்கு பணியாளர் நியமனம் செய்து இதர வசதிகளைச் செய்தல். | 166 |
| 5 | சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையோடிணைந்துள்ள நோய்குறியியல் மற்றும் உயிர் வேதியல் ஆய்வுக் கூடங்களுக்கு பணியாளர் நியமனம் முதலியன. | 302 |
| 6 | சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனைக்கு ஊடு கதிர் சாதனம் வாங்குதல். | 244 |
| 7 | பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியிலுள்ள உடற் கூற்றியல் பகுதிக்குத் தேவையான சாதனங்கள் வாங்குதல். | 100 |
| 8 | சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையிலும் பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியிலும் மின் வினைஞர், குழாய்க் கம்மியர், ஆகிய பதவிகள் தோற்றுவித்தல். | 18 |
| 9 | சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவ மனையில் உயர் அழுத்த மின் இணைப்புகள் கொடுத்தல். | 430 |
| 10 | மதுரை மாவட்டத் தலைமையிட மருத்துவமனை அமைந்துள்ள திண்டுக்கல், வடார்க்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் ஆகிய இடங்களில் சித்தா பிரிவுகள் கட்டுதல் | 500 |
| | மொத்தம் .. | 8,436 |

## இணைப்பு III

[403-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கொள்கை விளக்கம் 1981—82

### தமிழ்நாட்டின் அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் மறுவாழ்வு இல்லங்கள் அமைத்துள்ளது. இவ்வில்லங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள நாட்களில் ஆரம்பிக்கப்பட்டன :—

| | மறுவாழ்வு இல்லம் உள்ள இடம். | திறக்கப்பட்ட நாள். |
|---|---|---|
| 1 | பரணூர், செங்கல்பட்டு மாவட்டம் .. | 2—10—1971 |
| 2 | உளுந்தூர்பேட்டை, வடதென் ஆற்காடு மாவட்டம். | 22—1—1972 |
| 3 | பர்கூர், தருமபுரி மாவட்டம் .. .. | 18—6—1972 |
| 4 | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம். | 7—1—1973 |
| 5 | மனையேரிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம். | 17—2—1973 |
| 6 | புதுப்பட்டி, மதுரை மாவட்டம் .. | 22—4—1973 |
| 7 | மல்லவாடி, வட ஆற்காடு மாவட்டம் .. | 4—7—1979 |
| 8 | விண்ணப்பள்ளி, பெரியார் மாவட்டம் | 15—2—1377 |
| 9 | தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம் .. | 23—10—1933 |
| 10 | செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் | 19—10—1937 |

**இல்லங்களின் அமைப்பு :**

பர்கூர் இல்லத்தைத் தவிர மற்றெல்லா இல்லங்களும் பகுதிகளாக (பிளாக்ஸ்) அமைக்கப்பட்டுள்ளன. இல்லங்களின் பரப்பளவு 16 முதல் 77 ஏக்கர்கள் வரை பரந்துள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள திறந்த வெளிகள், தோட்டங்களுக்கும், காய்கறிகள் மற்றும் நுகர் பொருட்கள் பயிரிடவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.



**உள்ளிருப்போருக்கு அளிக்கப்படும் வசதிகள் :**

ஒவ்வொரு இல்லமும் பெரியவர்கள் 400 பேரும், சிறுவர்கள் 25 பேரும் தங்க வசதி உள்ளது. வயது வந்த ஒவ்வொருவருக்கும் அன்றாடம் வழங்கப்படும் உணவுக்கான செலவு ரூ. 2·30ம் 12 வயதுக்குட்பட்ட சிறுவருக்கு ரூ 1.15-ம் செலவு செய்யப்படுகிறது. எலும்புருக்கி தொழுநோயாளிக்கு ஒரு நாளைக்கு உணவிற்காக ரூ 3.77 செலவிடப்படுகிறது. ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியோர்களும், 25 சிறார்களும் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். அதன் விபரங்கள் நவம்பர் 1980 வரையுள்ளது அட்டவணை (அ)-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

உணவு இலவச மருத்துவ வசதி ஆகியவற்றோடு உடை ஆண்டுக்கு இருமுறையும், பாய், செருப்பு ஆண்டுக்கு ஒரு முறையும், சோப்பு, பற்பொடி, எண்ணெய் முதலானவைகளும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் கண் நோய்களுக்குச் சிகிச்சையும் கண்ணாடி மற்றும் கருப்புக் கண்ணாடிகளும் வழங்கப்படுகின்றன.

விளையாட்டுக்களுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. வருடாந்திரத்திற்கு ரூ. 200 வரை விளையாட்டுக்காகச் செலவிட அரசு அனுமதித்துள்ளது ரூ 250 வரை புத்தகங்களும் இரு தினச் செய்தித் தாள்களும் வாங்க அரசு அனுமதித்துள்ளது. கலைத் துறையில் ஆர்வம் உள்ளவர்களை ஊக்குவிக்க அது சம்பந்தப்பட்ட இன்னிசைக் கருவிகள் ஒவ்வொரு இல்லத்திற்கும் வாங்க ரூ. 400-க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

முதியோர் கல்விக்குரிய புத்தகங்களை அளித்து பொதுக் கல்வி அறிவை வளர்க்கிறது. பரணூர் இல்லத்தில் அறநெறி விரிவுரை அளிக்கப்படுகிறது.

மனையேரிப்பட்டியிலுள்ள அரசு மறுவாழ்வு இல்லம் நீங்கலாக மற்ற 9 அரசு மறுவாழ்வு இல்லங்களிலுள்ள இல்லவாசிகளுக்குக் குளிர் காலத்தில் உதவும் பொருட்டு ரூ. 20 செலவில் ஒவ்வொருவருக்கும் போர்வைகள் வழங்க அரசு அண்மையில் அனுமதி அளித்துள்ளது. மனையேரிப்பட்டியிலுள்ள இல்லவாசிகளுக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற போர்வைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.

முக்கியமான நாட்டு சிறப்பு நாட்களில், சிறப்பு உணவுடன் இனிப்பும் சேர்ந்து அளிக்கப்படுகின்றது. இல்லங்களின் ஆண்டு விழாக்களின் போது நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தி ஊக்குவிக்கப்படுகிறது.

[1981 ஏப்ரல்

உள்ளிருப்போரின், பிணியற்ற குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளில் படிக்க முதன்மை செலவினங்களுக்கான உடை, பெட்டி முதலானவைகள் வாங்க ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 75 அரசு செலவிட அனுமதித்துள்ளது. அரசு மறுவாழ்வு இல்லங்களிலிருக்கும் பள்ளி செல்லும் சிறுவர்களுக்கு அரசு தற்போது படிப்பிற்காகச் செலவு செய்ய கீழ்க்கண்டவாறு அனுமதித்துள்ளது :—

1. ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) 2-ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரை (ரூபாய் 120 ஆறு வருடங்களுக்கு).

2. ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) 8-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை (ரூபாய் 60 இரண்டு வருடங்களுக்கு).

3. ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) 10-ம் வகுப்புக்கு.

4. ரூ. 75 (ரூபாய் எழுபத்து ஐந்து மட்டும்) 11-ம் வகுப்பு 12-ம் வகுப்புக்களுக்கு (ரூபாய் 150 இரண்டு வருடங்களுக்கு).

**மருத்துவ வசதிகள் :**

உள்ளிருப்போர் அனைவருக்கும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் இரு மருத்துவர்கள், இரு செவிலியர்கள், ஒரு தாய்சேய் மருத்துவத் துணை செவிலி, ஒரு ஆண் துணை செவிலி, ஒரு பெண் துணை செவிலி, ஒரு ஆய்வுக் கூட தொழில் ஈடுபாட்டுப் பணியாளர் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் ஆகியோர் உள்ளிருப்போருக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்காக உள்ளனர். தொழுநோயுடன் மற்ற எல்லா உடல் நலக் குறைவுகளுக்கும் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றது. தனி மருத்துவக் கவனம் தேவை உள்ளவர்களுக்குத் தனியாகப் பிரிவுகளில் (வார்டுகளில்) சேர்க்கப்பட்டு நோய்ச் சிறப்புணவு அளிக்கப்பட்டு குணப்படுத்தப்படுகின்றனர். 10 உள்ளிருப்புப் பிணியாளர் தங்கி சிகிச்சை பெற வசதியுள்ளது. பரனூர், உளுந்தூர்பேட்டை இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களிலும் வசதிகள் நிறைந்த அறுவை சிகிச்சை அறை ஒன்றுள்ளது. தற்போது தொழுநோய்க்கான தனித் தன்மையுடைய கை வளைவு தொங்கிய பாதங்கள் மற்றும் உடற் கூறு குறைபாடுகளுக்கு, புதுப்பட்டி இல்லத்தில் அறுவை சிகிச்சை செய்யப்படுகின்றது. காரிகிரியிலுள்ள செபிலின் தொழுநோய் ஆராய்ச்சி பயிற்சிக்கூடத்திற்கு இல்லத்தில் உள்ளிருப்போர் அனுப்பப்பட்டு அவர்களுக்கு வேண்டிய காலணிகள், செயற்கை உறுப்புகள் வழங்குவதற்கு ஒவ்வொரு இல்லத்திற்கும் ரூ. 300-க்கு செலவு செய்ய அனுமதித்துள்ளது.



1981 ஏப்ரல் 8]

**உடற்கூறு பணியாளர்கள் :**

ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். உள்ளிருப்போரின் ஊனமுற்ற உறுப்புகள் மின் தூண்டுக் கருவி (Elect ic Srim ilator), மெழுகுத் தொட்டி (Wax Bath) ஆகியவற்றின் துணைகளால் ஊனமுற்ற உறுப்புகளுக்கு பயிற்சிகள் அளிக்கிறார். உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உள்ளிருப்போர் அனைவருக்கும் இவர் பயிற்சி அளிக்கிறார்.

**தொழில் ஈடுபாட்டுப் பயிற்சியாளர் :**

மூன்று தொழில் ஈடுபாட்டுப் பயிற்சியாளர் முறையே பரனூர், புதுக்கோட்டை, தேவியாக்குறிச்சி ஆகிய இல்லங்களில் நியமிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. தற்போது பரனூரில் மட்டும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் தங்கள் இல்லங்களுக்கு அருகாமையில் உள்ள இல்லங்களுக்குச் சென்று தொழில் ஈடுபாட்டு முறைப் பயிற்சி அளிப்பார். இவர்களுக்கு வழிமுறைகள் வகுத்து அளித்திட தலைமை அலுவலகத்தில் ஒரு தலைமைத் தொழில் ஈடுபாட்டுப் பயிற்சியாளர் உள்ளார்.

**மறுவாழ்வுப் பணிகள் :**

இத்திட்டத்தில் மறுவாழ்வுப் பணி ஒரு சிறப்பு அம்சமாகும். நல்ல உடற்கட்டோடு உள்ள உள்ளிருப்போருக்குத் துணி நெய்தல், பாய்கள் பின்னுதல், செருப்பு செய்தல், தையல், விவசாயம், தச்சுவேலை முதலிய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு, வெளியில் அனுப்பப்படுகிறார்கள். அவ்வாறு வெளியில் செல்பவர்கள் பிச்சை எடுக்காமல் தொழில் செய்து பிழைக்க உதவுவதே இதன் நோக்கமாகும். இது வரையிலும் 95 உள்ளிருப்போர் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

தையற் தொழிலில் பயிற்சி பெற்ற அரசு மறுவாழ்வு இல்லங்களில் இருந்து வெளியனுப்பப்படும் ஒவ்வொருவருக்கும் தையல் இயந்திரம் இலவசமாக வழங்க அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. இதனால் அவர்கள் பிச்சை எடுக்காமல் மறு வாழ்வு பெறுவர்.

காகித உறை தயார் செய்வதற்கான தொழிற் பிரிவு புதுக்கோட்டை மறுவாழ்வு இல்லத்தில் நிறுவப்பட்டு உள்ளது. காகித உறை தயாரிக்கும் தொழிற் பிரிவு 1—2—1978 முதல் இயங்கி வருகிறது. இவ்வில்லத்திலுள்ள ஒரு உள்ளிருப்போரை இளநிலை கட்டுக்கோப்பாளராக (ஜூனியர் பைண்டர்) பணியாற்ற நியமிக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக இரண்டாம் பணியிடம் நிறைவு செய்யப்பட்டது.

[1981 ஏப்ரல் 8

அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 51,000 க்கு காய்கறி விதைகள், உரங்கள், விவசாயக் கருவிகள், ஊதியம் முதலானவைகள் காலியான பரந்த நிலங்களில் விவசாயத்தில் முழு ஈடுபாடு செய்வதற்கு கீழே குறிப்பிட்ட ஐந்து மறுவாழ்வு இல்லங்களுக்கு வழங்கி உள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| பரனூர் .. .. .. .. .. | 5,000 |
| மல்லவாடி .. .. .. .. .. | 4,000 |
| புதுக்கோட்டை .. .. .. .. | 2,000 |
| விண்ணப்பள்ளி .. .. .. .. | 5,000 |
| தேவியாக்குறிச்சி .. .. .. .. | 35,000 |
| மொத்தம் .. | 51,000 |

**மறுவாழ்வு நடவடிக்கைகள் :**

தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுப் பணிகளில் முக்கியமாக பண்ணைத் தொழில், பாய் பின்னுதல், துணி நெய்தல், தையல் தொழில், தச்சு வேலை, பட்டுப்புழு வளர்ப்பு, கயிறு திரித்தல் முதலியன அடங்கும். பத்து மறுவாழ்வு இல்லங்களிலும் மொத்தம் 138 தறிகள் இயங்கி வருகின்றன. 77 பாய்த் தறிகளும் இயங்குகின்றன. பாய்கள் மாவட்ட மருத்துவ மனைகளுக்கும் அரசு நிறுவனங்களுக்கும் விற்கப்படுகின்றன. புதுப்பட்டியில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள கிராமப் புற நூற்பு நிலையம் மாதந்தோறும் 10,000 நூற் சிட்டங்களை உற்பத்தி செய்கின்றது. உளுந்தூர்பேட்டையிலுள்ள கிராமப்புற நூற்பு நிலையம் மாதந்தோறும் 9,000 சிட்டங்களை உற்பத்தி செய்கிறது. எல்லா இல்லங்களிலும் 34 தையல் மிஷின்கள் உள்ளன. உள்ளிருப்போரின் உடைகள் வருடத்திற்கு இருமுறை வழங்கப்படுவது அவர்களாலேயே தைத்து அளிக்கப்படுகிறது.

காட்பாடியிலுள்ள ஸ்வீடன் நாட்டு செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் பரனூரில் உள்ள மறுவாழ்வு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலை பணிக்கூடங்களில் பயிற்சியளிக்கப்பட்ட 23 பேர் திருச்சி, காட்பாடி ஆகிய இடங்களில் அவர்களது தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். முக்கியமாக இத்தொழிற்சாலைகளில் உள்ள உள்ளிருப்போரின் ஆக்கத் திறனையும் அவர்களின் நம்பிக்கையையும் வளர்க்க உதவுகிறது.



1981 ஏப்ரல் 8]

ஒவ்வொரு இல்லத்தின் உற்பத்தித் திறனும், உள்ளிருப்போரின் வேலை வாய்ப்பு நியமனமும் அட்டவணை 'இ' மற்றும் 'உ' வில் கொடுக்கப்பட்டுள்ளது.

| அலுவலர் பற்றிய குறிப்பு. | 1980–81. | 1981–82. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. தனி சிறப்பு அதிகாரி (மறுவாழ்வு) | 1 | 1 |
| 2. உதவி சிறப்பு அதிகாரி (மருத்துவம்) | 1 | 1 |
| 3. மற்ற அரசு பதிவு அதிகாரிகள் .. | 11 | 11 |
| 4. மருத்துவர்கள் .. .. | 20 | 20 |
| 5. அமைச்சுப் பணியாளர்கள் .. | 37 | 37 |
| 6. செவிலித்தாய்மார்கள் .. .. | 30 | 30 |
| 7. பொறியியல் பணியாளர்கள் .. | 44 | 44 |
| 8. அடிப்படை ஊழியர்களும் மற்றவர்களும். .. | 208 | 208 |
| மொத்தம் .. | 352 | 352 |

உள்ளிருப்போர் நூலை எடுத்து வெளியில் சென்று பாவும், கஞ்சி போடுதலும் சிரமமாகவும், நிறைய செலவினமாவதாலும், கீழே குறிப்பிட்ட இல்லங்களுக்கு பாவு, கஞ்சி போடக் கூடிய கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுள்ளன. முறையான படிவம் செய்வதற்கான கருவிகள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. உளுந்தூர்பேட்டை
2. மல்லவாடி
3. பரனூர்
4. யா. புதுப்பட்டி
5. மனையேறிப்பட்டி
6. புதுக்கோட்டை

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ரூ. 500 நன்கொடையாக தேவியாக்குறிச்சி இல்ல கண்காணிப்பாளரால் பெறப்பட்டு, பாவு கஞ்சி போடும் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 'அ'.

பத்து மறுவாழ்வு இல்லங்களில் 1980 டிசம்பர் வரை தங்கி உள்ள உள்ளிருப்போரின் எண்ணிக்கை.

| வரிசை எண்ணும் இல்லத்தின் பெயரும். | ஆண். | பெண். | சிறுவர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 அரசினர் மறுவாழ்வு இல்லம், பரனூர். | 294 | 152 | 90 | 536 |
| 2 அரசினர் மறுவாழ்வு இல்லம், உளுந்தூர்பேட்டை. | 250 | 101 | 40 | 391 |
| 3 அரசினர் மறுவாழ்வு இல்லம், பர்கூர். | 213 | 107 | 38 | 358 |
| 4 அரசினர் மறுவாழ்வு இல்லம், புதுக்கோட்டை. | 261 | 76 | 56 | 393 |
| 5 அரசினர் மறுவாழ்வு இல்லம், மனையேறிப்பட்டி. | 312 | 90 | 17 | 419 |
| 6 அரசினர் மறுவாழ்வு இல்லம், யா. புதுப்பட்டி. | 277 | 100 | 46 | 423 |
| 7 அரசினர் மறுவாழ்வு இல்லம், மல்லவாடி. | 186 | 86 | 23 | 295 |
| 8 அரசினர் மறுவாழ்வு இல்லம், தேவியாக்குறிச்சி. | 222 | 93 | 31 | 346 |
| 9 அரசினர் மறுவாழ்வு இல்லம், விண்ணப்பள்ளி. | 142 | 73 | 27 | 242 |
| 10 அரசினர் மறுவாழ்வு இல்லம், செல்லியம்பட்டி. | 150 | 55 | 8 | 213 |
| மொத்தம் .. | 2,307 | 933 | 376 | 3,616 |



அட்டவணை 'இ'.

கீழே குறிப்பிட்டுள்ள மறுவாழ்வு இல்லங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விவரம் நவம்பர் 1979 முதல் அக்டோபர் 1980 வரை:—

| | |
|---|---|
| 1. 10 மறுவாழ்வு இல்லங்களில் உள்ள பாய் தறியில் முடையப்பட்ட மொத்தப் பாய்கள். | 8,559 |
| 2. தையற்கூடத்தில் தைக்கப்பட்ட மொத்த உடைகளின் எண்ணிக்கை— | |
| சட்டைகள் .. .. | 3,613 |
| பாவாடைகள் .. .. | 2,078 |
| ரவிக்கைகள் .. .. | 1,618 |
| சிறார் உடைகள் .. | 797 |
| 3. விவசாய உற்பத்தித் திறன்— | |
| சமையற் கூடத் தோட்டத்தில் விளைவிக்கப்பட்ட காய்கறிகளின் மொத்த அளவு. | 24,587 கிலோ |
| தானியங்கள் விளைவிக்கப்பட்ட மொத்த அளவு. | 9,791 கிலோ |
| 4. 10 செருப்பு தைக்கும் தொழிற் கூடங்களில் தைக்கப்பட்ட செருப்புகளின் எண்ணிக்கை. | 2,156 ஜதை. |
| 5. 10 நெசவுத் தொழிற் கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை— | |
| (1) மொத்தப் புடவைகள் .. | 1,508 |
| (2) மொத்த வேட்டிகள் .. | 3,930 |
| (3) மொத்தத் துண்டுகள் .. | 7,460 |
| (4) கட்டுக் கட்டும், மருந்து கட்டும் துணியும். | 42,931 மீட்டர் 9,283 மீட்டர் |
| (5) காடாத்துணி .. .. | 5,048 மீட்டர் |
| (6) மொத்த நூற்பு சிட்டங்கள், கிராமப்புற நூற்பு நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. | 1,82,329 |
| (7) மொத்த காகித உறைகள், காகித உறை தயாரிக்கும் தொழிற் கூடத்தில் தயாரிக்கப்பட்டது. | 13,89,000 |

## 'அட்டவணை உ'

அ ா சு மறுவாழ்வு இல்லங்களில் பயிற்சிகளில் நியமிக்கப்பட்ட உள்ளிருப்போரின் எண்ணிக்கை

| | பரனூர். | | | உளுந்தூர் பேட்டை. | | பர்கூர். | | புதுக் கோட்டை. | | மனை யேரிப்பட்டி. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ. | பெ. | சிறார். | ஆ. | பெ. | ஆ. | பெ. | ஆ. | பெ. | ஆ. | பெ. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 1. விவசாயமும் தோட்டக் கலையும். | 8 | 5 | .. | 15 | 10 | 5 | 3 | 11 | 10 | 21 | 10 |
| 2. உதவி சமையலாளர். | 6 | 2 | 1 | 6 | 3 | 11 | .. | 8 | 2 | 10 | .. |
| 3. தினப்படி பராமரிப்பு பகுதி. | 5 | .. | .. | 6 | .. | 6 | .. | 5 | .. | 11 | .. |
| 4. பகுதி மருத்துவர். | 4 | 1 | .. | 6 | 3 | 5 | 2 | 6 | 2 | 6 | 2 |
| 5. துப்புரவாளரும் சுத்திகரிப்பாளரும். | .. | 5 | .. | 3 | 3 | 6 | 2 | 2 | 5 | 3 | 3 |
| 6. தச்சுத் தொழில். | 3 | 1 | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 7. கைத்தறி | 13 | 8 | 1 | 5 | 1 | .. | .. | 6 | .. | 8 | 1 |
| 8. செருப்பு செய்தல். | 3 | 1 | .. | 3 | 1 | 1 | .. | 1 | .. | 5 | .. |
| 9. பாய் பின்னுதல். | 8 | 2 | 1 | 7 | .. | 1 | .. | .. | .. | 5 | 2 |
| 10. தையல் | 2 | 1 | .. | 1 | .. | 1 | .. | 3 | .. | 5 | .. |
| 11. அலுவலக உதவியாளர். | 2 | .. | .. | 1 | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 12. சவரத் தொழிலாளி. | 2 | .. | .. | 2 | .. | 2 | .. | 2 | .. | 2 | .. |
| 13. சலவைத் தொழிலாளி. | .. | .. | 2 | 2 | .. | 2 | .. | 2 | .. | 2 | .. |
| 14. ஆசிரியர் | 1 | .. | .. | 1 | .. | 1 | .. | 1 | .. | 1 | .. |
| 15. காவலாளி. | 6 | 3 | .. | 10 | .. | .. | .. | 10 | .. | 9 | .. |
| 16. கட்டிட வேலை. | .. | .. | .. | .. | .. | .. | .. | | | 78 | .. |
| 17. ஆர்.டி.சி. | .. | .. | .. | 20 | 11 | .. | .. | .. | .. | .. | .. |
| 18. பட்டுப்புழு வளர்ப்பு. | .. | .. | .. | .. | .. | .. | .. | 7 | .. | .. | .. |

ஆ— ஆண்கள். பெ =பெண்கள்.

அட்டவணை 'உ' தொடர்ச்சி

அரசு மறுவாழ்வு இல்லங்களில் பயிற்சிகளில் நியமிக்கப்பட்ட உள்ளிருப்போரின் எண்ணிக்கை.

| | யா. புதுப் பட்டி. | | மல்லவாடி. | | தேவியாக் குறிச்சி. | | விண்ணப் பள்ளி. | | செல்லியம் பட்டி. | | மொத் தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ. | பெ. | ஆ. | பெ. | ஆ. | பெ. | ஆ. | பெ. | ஆ. | பெ. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (6) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 1. விவசாயமும் தோட்டக் கலையும். | 11 | 11 | 26 | 4 | 20 | 6 | .. | .. | 11 | 7 | .. |
| 2. உதவி சமைய லாளர். | 9 | 1 | 6 | 2 | 4 | 4 | 4 | 2 | 6 | 2 | .. |
| 3. தினப்படி பராமரிப்பு பகுதி. | 2 | 4 | 6 | .. | 3 | .. | 3 | .. | 2 | .. | .. |
| 4. பகுதி மருத்துவர். | 4 | 4 | 3 | 2 | 6 | 2 | 3 | 2 | 2 | 2 | .. |
| 5. துப்புர வாளரும் சுத்திகரிப் பாளரும். | 4 | 3 | 6 | 1 | 7 | .. | 2 | 2 | 6 | 1 | .. |
| 6. தச்சுத் தொழில். | 1 | .. | 1 | .. | 2 | .. | .. | .. | - | .. | |
| 7. கைத்தறி | 9 | .. | 8 | 1 | 6 | .. | 4 | .. | 9 | 1 | |
| 8. செருப்பு செய்தல். | 2 | .. | 1 | .. | 2 | .. | 2 | .. | 2 | .. | |
| 9. பாய் பின்னுதல். | 5 | .. | 5 | 1 | 7 | .. | 7 | .. | .. | .. | |
| 10. தையல். | 2 | .. | 2 | .. | 3 | 5 | 1 | .. | 1 | .. | |
| 11. அலுவலக உதவியாளர். | 4 | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 1 | .. | |
| 12. சவரத் தொழிலாளி. | 2 | .. | 2 | .. | 2 | .. | 1 | .. | 1 | .. | |
| 13. சலவைத் தொழிலாளி. | 2 | .. | 2 | .. | 2 | .. | .. | .. | 1 | .. | |
| 14. ஆசிரியர். | 1 | .. | 1 | .. | 1 | .. | 1 | .. | .. | .. | |
| 15. காவலாளி | 7 | 2 | 7 | 2 | 5 | .. | 5 | .. | 4 | 1 | |
| 16. கட்டிட வேலை. | 3 | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 1 | |
| 17. ஆர்.டி.சி. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | |
| 18. பட்டுப்புழு வளர்ப்பு. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | |

ஏறக் குறைய 1,671 உள்ளிருப்போர் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆ.—ஆண்கள். பெ.—பெண்கள்.

## இணைப்பு IV.

[403 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை 19—மக்கள் நல்வாழ்வு 1981–82.

பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை 19—மக்கள் நல்வாழ்வின்கீழ் ரூ. 62,85,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் என முன்மொழிகிறேன்.

### 1 தோற்றுவாய்.

#### தேசிய மக்கள் நல்வாழ்வுத் திட்டம்.

இந்திய நாடு அல்மா ஆட்டா பிரகடனத்திலும் உலக சுகாதார
நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசிய மக்கள் நல்வாழ்வு பட்ட
யத்திலும் கையெழுத்திட்டு, கி.பி. 2000-க்குள் அனைவருக்கும்
நல்வாழ்வு என்ற குறிக்கோளை அடைய தன்னை ஈடுபடுத்திக்
கொண்டுள்ளது. மனித வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும்
உடல், மன நலம் நன்றாக இருப்பது அவசியம் ஆகும். சிலரின்
தேவைகளைவிட பலரின் தேவைகள் மேலோங்க வேண்டும்.
குறைவான சலுகைகளும், போதிய உணவுமில்லாத சத்துக்
குறைந்த உணவைப் பெறும் கிராமப்புற மற்றும் நகர குடிசைப்
பகுதிகளில் வாழும் பெரும்பாலான மக்களுக்கு ஆரம்ப சுகாதாரப்
பாதுகாப்பும் மருத்துவப் பாதுகாப்பும் எட்ட வேண்டும்.

#### விரிவான மாநிலக் கொள்கை.

1981ஆம் ஆண்டுக்கான மக்கட் தொகை கணக்கெடுப்பில்
கொடுக்கப்பட்டுள்ள தற்காலிக புள்ளி விவரங்களின்படி இம்
மாநிலத்தின் மக்கட் தொகை 48 மில்லியன் ஆகும். அவர்
களில் 34 மில்லியன் மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்.
விவசாயத் தொழிலாளர்கள், ஏனைய தொழிலாளர்கள்,
மாணவர்கள் இவர்களிடையே உள்ள வராதத்தன்மை,
நோய் இவைகளைக் குறைப்பதின் மூலம் அவர்களுடைய சமூக
பொருளாதார நிலைமைகளை உயர்வுபடுத்த முடியும் எனக்
கருதி கிராம சமுதாயத்தினருக்கு சுகாதார வசதியை மேம்
படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்து இந்த பரந்த என்
ணிக்கை கொண்ட கிராம சமுதாய மக்களுக்கு மிகச் சிறந்த
மருத்துவ வசதிகளும் சுகாதார பாதுகாப்பும் அளிக்கப்படுவதை
உறுதிப்படுத்த இவ்வரசு கண்ணுங்கருத்துமாய் இருக்கிறது.
ஆரம்ப சுகாதார நிலையங்களையும், அதன் கிளை நிலையங்
களையும் அமைத்ததிலிருந்தும் நடமாடும் சுகாதாரக் குழுக்களை



### 2. விரிவான மாநிலக் கொள்கை—தொடர்ச்சி

ஏற்படுத்தியதிலிருந்தும், சிறு சுகாதார நிலையங்களை தோற்றுவித்ததிலிருந்தும் இந்த எண்ணம் மிகத் தெளிவாக பிரதிபலிக்கிறது.

இதைத் தவிர, மக்கள் நல்வாழ்வுப் பணிச் செயல்பாடுகளின் முக்கிய குறிக்கோள் நோய்கள் ஏற்படுவதற்கு சாதகமாக இருக்கும் சூழ்நிலைகளை அறவே நீக்குவதையும், நலமான முறையில் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதற்கு உதவும் சூழ்நிலைகளை வளர்ப்பதையும் கொண்டு விளங்குகிறது. இதைக் கீழ்க்கண்டவைகளை எய்துவதின் மூலம் அடைய முடியும்.—

(1) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்.

(2) நல்ல சாக்கடை திட்டம்

(3) சுற்றுப்புற மாசினைக் கட்டுப்படுத்தி, சுற்றுப்புற துப்புரவினை நிலையான அளவில் பராமரித்தல்.

(4) சமூகத்தின் மிகத் தாழ்ந்த இன மக்களின் சத்துணவுத் தரத்தினை மேம்படுத்துதல்.

(5) சிறந்த தனி நபர் உடல் நலம்.

(6) மக்கள் தொகை பெருக்கக் கட்டுப்பாடு.

(7) சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சத்துணவு, குடும்பநலம், உட்பட்ட சுகாதாரக் கல்வியினைக் கொண்டு, அறியாமை, மூடநம்பிக்கைகளை நீக்குதல்.

சாதாரணநோய் நீக்கப் பணிகள் எளிதில் மக்களுக்குக் கிடைக்க பெற வேண்டும். மக்கள் நல்வாழ்வுப் பணிகளின் அமைப்பில் எளிதில் பரவக் கூடிய மற்றும் பரவாத நோய்களைத் தடுத்தலும், கட்டுப்படுத்தலும் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். சமுதாயத்தின் மக்கள் நல்வாழ்வுத் தரம் மேம்பாடு அடைவதற்கான இந்த குறிக்கோளை எய்துவதற்கு சமூகத்தின் அனைத்துத் தரப்பட்ட மக்களின் ஈடுபாடும், ஒத்துழைப்பும் அவசியம் ஆகும். சமுதாயத்தின் மக்கள் நல்வாழ்வுத் தரத்தினை காலக் கிரமமாக மதிப்பீடு செய்ய, மக்கள் நல்வாழ்வு நற்பணிகளின் தொகுப்பினைச் சேகரிப்பதும், மதிப்பீடு செய்வதும் அவசியமாகும்.

மேலே சொன்ன குறிக்கோள்களை கருத்திற் கொண்டு, கடந்த காலத்தில் இவ்வரசு அநேக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அவைகளில் தாய்-சேய் நலம் அடங்கிய சமுதாய மக்கள் நல்வாழ்வு பாதுகாப்பு வழங்குதல், மக்களின் சத்துணவுத் தரங்களை உயர்த்துதல், தொற்று நோய்களை தடுத்தலும் கட்டுப்படுத்தலும், உணவுக் கலப்படத்தைத் தடுத்தல், கலப்படம் மருந்துகளின் விற்பனையைத் தடுத்தல், மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களின் உற்பத்தியையும் விற்பனையையும் கட்டுப்படுத்தி தரத்தை நிலை நிறுத்தல்

2. விரிவான மாநில கொள்கை—தொடர்ச்சி

சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் சுற்றுப்புறம் மாசு அடைவதை குறைத்தல், பிறப்பு இறப்பு பதிவு செய்வதை கட்டாயப்படுத்தல் மற்றும் மக்களின் நல்வாழ்வுத் தரத்தை உயர்த்தும் பொருட்டு நல்வாழ்வுடன் வாழ்வதைப் பற்றிய தகவல்களை விளம்பரப்படுத்துதல் முதலியவை அடங்கும்.

II ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயக்குநரகம்.

(1) ஆரம்ப சுகாதார நிலையங்கள்:

நமது மாநிலத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்கள (சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள்) இருக்கின்றன. இவைகளில் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளோடு 9 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக நமது மாநிலத்தில் மொத்தம் 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட) இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தோடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மகப்பேறு நிலையங்கள சேர்க்கப்பட்டுள்ளன. இவைகள் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கிளை நிலையங்களாகும். மொத்தம் 3,377 கிளை நிலையங்கள் இருக்கின்றன.

மருத்துவ சிகிச்சை அளிப்பது ஆரம்ப சுகாதார நிலையங்களின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். நோயாளிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களின் வெளிப்புற நோயாளிகள சிகிச்சைப் பிரிவுகளுக்கு வருகின்றனர். மருத்துவப் பரிசோதனை, ஆலோசனை, மருந்துகள் முதலியன பெறுகின்றனர். ஆரம்ப சுகாதார நிலையங்களில் இவ்வாறான பணிகளைப் பெற்று வருகின்ற வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் ஆண்டு ஒன்றிற்கு 14,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைப் பெற்று வந்தது. இது போதவில்லை என கண்டறிந்ததாலும், உள்ளூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும் 1980–81 ஆம் ஆண்டு 6,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கூடுதலாக்கப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தற்சமயம் ரூ. 20,000 மதிப்பிற்கு மருந்துகள் ஆண்டொன்றுக்கு வழங்கப்படுகின்றது.



II ஆரம்ப சுகாதார நிலையங்கள இயக்குநரகம்.—தொடர்ச்சி

1981–82 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணிகளை மேம்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க கருதப்பட்டுள்ளது :—

| | (ரூபாய். இலட்சத்தில்) |
|---|---|
| (1) 383 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சாதனங்கள், துணி, படுக்கைகள் ஆகியவற்றை வழங்குதவதற்கு .. .. .. | 2.27 |
| (2) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், கோட்ட, வட்டார அலுவலகங்களுக்கும் குளிர்ப்பதனப் பெட்டிகள், உறை வைக்கும் இயந்திரம், அம்மைப்பால் குப்பிகள் ஆகியவற்றை வழங்குவதற்கு .. .. .. | 4.38 |
| (3) ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 4 ஊர்திகளுக்குப் பதில் புதிய ஊர்திகள் வாங்குவதற்கு .. .. .. | 3.20 |

இதைத்தவிர ரூ. 71.19 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் புதிதாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறக்க கருதப்பட்டுள்ளது. இவைகளில் பத்து தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் அமைக்கப்படும். மாவட்டத்திற்கு ஒன்றுவீதம், 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துமனைகளாக உயர்நிலைப்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இவ்வாறு உயர்நிலைப்படுத்தப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ. 63 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 20 படுக்கைகள், கூடுதல் பணியாளர்களுடனும், சாதனங்களுடனும் அமையும்.

கட்டிடப் பணிகள்

மொத்தம் உள்ள 383 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 192 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டிடங்களும், பணியாளர் குடியிருப்புகளும் இருக்கின்றன. எஞ்சியுள்ள 191 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 75 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தக கட்டிடங்கள் மட்டும் உள்ளது. 1978–79 ஆம் ஆண்டிலிருந்து 1980–81 ஆம் ஆண்டுவரை 41 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. 75 ஆரம்ப சுகாதார நிலையங்களும்

1978–79 ஆம் ஆண்டிலிருந்து 1980–81 ஆம் ஆண்டு வரை ஊழியர் குடியிருப்புகள் கட்ட அனுமதிக்கப்பட்டுளள 41 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 238 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஊழியர் குடியிருப்புகள் உள்ளன. எஞ்சியுள்ள 145 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஊழியர் குடியிருப்பு கட்ட வேண்டியுள்ளது. இதுவரை 47 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச் சுவர்கள் எழுப்ப அனுமதிக்கப்பட்டுள்ளது. 336 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டியுள்ளது.

(2) நடமாடும் மருத்துவ பணிகள்

இவ்வரசு நாட்டிலேயே முதலாவதாக 1977–78-ல் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து அப்பகுதிகளின் பின்தங்கிய கிராமங்களுக்கு சென்றுவர நடமாடும் மருத்துவக் குழுக்கள் வடிவில் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

கிராமப்புற மக்களுக்கு விரிவான மருத்துவப்பணிகள் வழங்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். 1978–79-ல் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில், இன்னும் 100 ஆரம்பசுகாதார நிலையங்களில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டது. இவ்வாறு 224 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளது. நடமாடும் மருத்துவ குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பட்டியல் பிற்சேர்க்கை 1-ல் தரப்பட்டுளளது.

மூன்று மருத்துவ அலுவலர்கள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. ஒரு மருத்துவ அலுவலர் வெளிப்புற நோயாளிகளை ஆரம்ப சுகாதார நிலையங்களில் தங்கியிருந்து காலையிலும், மாலையிலும் கவனித்துக் கொண்டிருப்பார். எஞ்சியுள்ள 2 மருத்துவ அலுவலர்கள் நோய்த் தீர்ப்பு, நோய்த் தடுப்பு பணிகளை கிராமங்களுக்குச் சென்று கவனிப்பார்கள். இவ்வாறாக ஒரு வார காலத்திற்குள் முழு வட்டாரமும் கவனிக்கப்படும். சிக்கலான நோய் உளளவர்கள் மருத்துவமனைகளில் உள்ள சிறப்பு மருத்துவர்களிடம் காண்பிக்கும்படி அனுப்பப்படுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும், கிராம நலக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இக்குழுவின் உறுப்பினர்கள் சுகாதார கல்வியை பரப்புவதிலும் மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்கு ஒருமித்த மக்கள் ஆதரவை திரட்டுவதிலும் உதவி புரிவர்.

நடமாடும் சுகாதாரக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தற்சமயம் ரூ. 15.000 மருந்துகளுக்காக வழங்கப்படுகிறது. இத்தொகை 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 20,000-த்திற்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகளுக்காக வழங்கப்படுகின்ற 20,000 ரூபாய்களோடு சேர்த்துத் தரப்படுவதாகும்.



1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் ஆறு இலட்சம் மொத்த செலவில், மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

(3) சிறு சுகாதார நிலையங்கள்

கூட்டுறவு அடிப்படையில் மக்களுக்கு விரிவான சுகாதார பாதுகாப்பு பணிகளை வழங்க தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள தொண்டு நிறுவனம் 5,000 மக்களுக்கு ஆண்டொன்றுக்கு சிறு சுகாதார நிலையத்திற்கு ரூ. 18,000 மொத்தச் செலவில் தெளிவமைந்த சுகாதாரப் பணிகள் வழங்கும்படி ஏற்பாடு செய்யும். ஒரு சிறு சுகாதார நிலையத்தில் ஒருபகுதி நேர மருத்துவ அலுவலரும் ஒரு முழுநேர ஆண் மற்றும் பெண் சுகாதார பணியாளரும், மூன்று முதலுதவியாளர்களும் அமர்த்தப்படுவர். மருந்துகளுக்காக ரூ. 3,000 ஒதுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு, மொத்தச் செலவில் உயர்ந்த அளவு 9,000 ரூபாய்க்கு உட்பட்டு 50 சதவீதத்தொகையை மானிய உதவியாக மாநிலம் மற்றும் மைய அரசுகள் சமமாக பகிர்ந்து வழங்குகின்றன. தொண்டு நிறுவனம் நன்கொடைகள் பெறுவதன் மூலமோ அல்லது பயனடைபவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதின் மூலமோ எஞ்சியுள்ள 9,000 ரூபாய் செலவை ஏற்கும். சிறு சுகாதார நிலையம் ஒன்றினைத் தொடங்க, தொண்டு நிறுவனங்கள் தேவையான கட்டிடம், சாதனங்கள், மேசை, நாற்காலிகள் முதலியவற்றை தங்கள் நிதியிலிருந்து ஏற்படுத்திக் கொள்வார்கள். தொண்டு நிறுவனங்களின் நிதிப்பற்றாக் குறையைத் தவிர்க்கக் கருதி அரசு பின்கண்டவாறு 3 தவணைகளில் ரூ. 9,000 மானியத் தொகையை வழங்குமாறு ஆணையிட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1. முதல் தவணைத் தொகையான ரூ. 3,000. | ஏப்ரல், மே மாதங்களில். |
| 2. இரண்டாவது தவணைத் தொகையான ரூ. 3,000. | செப்டம்பர், அக்டோபர் மாதங்களில். |
| 3. மூன்றாவதும் இறுதியுமான தவணைத் தொகை ரூ. 3,000. | கணக்குகள் ஆய்வு செய்யப்பட்ட பிறகு. |

இதுவரை அரசு 214 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணை வழங்கியுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் அரசு ரூ. 3.00 இலட்சம் மொத்த செலவில் மேலும் 50 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

## பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்ககம்

### 1. மருத்துவம் மற்றும் பொது சுகாதாரப் பணிகளை திருத்தி அமைத்தல்

நல்வாழ்வுத் துறை, மக்களின் பொது நல்வாழ்வு நிலையை மேம்படுத்தவும் தொற்று நோய்கள் மற்றும் தடுப்புப் பணிகள் மேம்பட்டிற்காகவும், 1923 ஆம் ஆண்டில் முதன் முதலாக அமைக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டு இத்துறையும் மருத்துவப் பணித் துறையும் ஒன்றாக இணைக்கப்பட்டு, நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையாக அமைக்கப்பட்டது. பிறகு, இத்துறை 1976 ஆம் ஆண்டு நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்துத் துறையாகவும் மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலத் துறையாகவும் பிரிக்கப்பட்டது. இந்த அமைப்பின் கீழ் நல்வாழ்வுத் துறையில் மகப்பேறு மற்றும் சேய் நலம், மலேரியா ஒழிப்பு மற்றும் தடுப்பு யானைக்கால், தொற்று நோய்க் கட்டுப்படுத்துதல் முதலான பல்வேறு தொழில் நுட்பப் பிரிவுகள் அடங்கியுள்ளன. மேலும் தொழிற்சாலை துப்பரவு, ஊட்டச்சத்து மேம்பாடு மற்றும் கல்வி, நல்வாழ்வுக் கல்வி மற்றும் பிறப்பு, இறப்புப் புள்ளி விவரம், மருந்துக் கட்டுப்பாடு, உணவுக் கலப்படத் தடுப்பு, பொது நீர் வழங்கு துறைகளில் நீரின் தரம் கண்காணித்தல், உணவுப் பொருள் பகுப்பாய்வு, காற்று மற்றும் நீர் தூய்மை கெடுதலைக் கண்டறிய கண்காணிப்பு, நல்வாழ்வுப் போக்குவரத்து முதலான பிரிவுகளும் இத்துறையில் உள்ளன. இந்நடவடிக்கைகள் கிராமப் புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களாலும், நகரப் பகுதிகளில் நகராட்சி நல்வாழ்வுப் பணியாளர்களாலும் நிறைவேற்றப்படுகின்றன.

பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை மேலும் திறம்பட நிறைவேற்றுவதற்காக நல்வாழ்வுத் துறையைத் திருத்தி அமைப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. அப்படி திருத்தி அமைக்கப்பட்ட அமைப்பு விரைவில் செயல்படுத்தப்படும். இத்திருத்தி அமைக்கப்பட்ட அமைப்பின்படி தமிழ்நாடு 7 மண்டலங்களாக பிரிக்கப்படும். ஒவ்வொரு மண்டலத்திலும் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றும் பொறுப்பில் நல்வாழ்வு உதவி இயக்குநர் தரத்தில் ஓர் அலுவலர் இருப்பார். ஒவ்வொரு மண்டலத்திலும் இரண்டு அல்லது மூன்று வருவாய் மாவட்டங்கள் அடங்கியுள்ளன. இப்புதிய அமைப்பில் 29 நல்வாழ்வு மாவட்டமும், 10 முதல் 15 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அடங்கிய பகுதியாக மாவட்ட நல்வாழ்வு அலுவலரின் கீழ் செயல்படும். ஓட்டுநர்களுடன் 14 ஜீப் கார்கள் புதிதாக தொடங்கப்படும் 14 மாவட்ட நல அதிகாரிகளுக்கு ரூபாய் 11 64 இலட்சத்தில் 1981–82 ஆம் ஆண்டில் வழங்கப்படும். மண்டலத்தில் பல்வேறு நல்வாழ்வு மாவட்டங்கள் மற்றும் நகராட்சி நல்வாழ்வுப் பணிகள் ஆகியவற்றை மண்டல உதவி இயக்குநர் ஒருமுகப்படுத்துவார்.



அவர் பல்வேறு நல்வாழ்வு திட்ட முன்னேற்றத்தை மேற்பார்வையிட்டு வழிநடத்துவதுடன் திட்ட முன்னேற்றம் குறித்து சீராய்வு நடத்தி குறைகளை நீக்குவதற்கும் தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

### 2. தாய்மார்கள் குழந்தைகளுக்கான சிறப்புத் திட்டங்கள்

#### (1) தாய் சேய் நலப்பணிகள்

தாய்மார்களுக்குப் பேறுகாலம், பிரசவகாலம், பேறு காலத்திற்குப் பின்னுள்ள காலங்களில், ஊட்டச்சத்துக் கல்வி, உடல்நலப் பரிசோதனை உட்பட நல்வாழ்வுக் கல்வி விளக்கம் அளித்தலும், குழந்தைகள் கவனம், பள்ளி செல்லா வயதுடைய குழந்தைகள் கவனம், பள்ளி நலப்பணிகள் வழங்குதல், மற்றும் தாய்மார்கள் குழந்தைகளிடையே இறப்பையும் நலிவையும் குறைப்பதற்காக தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தடுப்பு ஊசி போடுதல் மூலம் நோய்த் தடுப்பு பராமரிப்பு அளித்தல் ஆகியவை தாய்சேய் நலப்பணிகளின் குறிக்கோள்களாகும்.

கிராமப்புறங்களில், தாய்சேய் நலப் பணித்திட்டம் 383 ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமும், ஆரம்ப சுகாதார நிலையங்களின் 2,814 கிளை நிலையங்கள் மூல்மும், பின் தங்கிய பகுதிகளில் உள்ள 95 மகப்பேறு நிலையங்கள் மூலமும், பூந்தமல்லியில் உள்ள பொது சுகாதார நிறுவனத்தாரால் பராமரிக்கப்பட்டுவரும் நிலையங்கள் மூலமும், செயல்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலயங்கள் ஒவ்வொன்றிலும், மகப்பேறுப் பணிகளுக்கென்று தனியாக 4 மகப்பேறு படுக்கைகள் உள்ளன. சிக்கலான பிரசவங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்கள். கூடுதல் வசதிகள் உள்ள அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைத்து பின்னர் தொடர்ந்து கவனித்துக் கொள்கின்றனர். பல நோக்கு நல்வாழ்வுப் பணியாளர்கள் திட்டத்தின் கீழ் 10,000 மக்கட் தொகைக்கென தற்சமயம் இருப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு 5,000 மக்கட் தொகைக்கு கிளை நிலையங்களை அரசு அமைத்துக் கொண்டு வருகிறது. 31—3—1980 அன்று செங்கற்பட்டு, தென்னாற்காடு, மதுரை, கன்னியாகுமரி சேலம் ஆகிய மாவட்டங்களில் 460 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்சமயம் கிராமப்பகுதிகளில் 3,877 மகப்பேறு நிலையங்கள் உள்ளன.

நகரப்பகுதிகளில், மகப்பேறு நிலையங்களையும் இல்லங்களையும் நிறுவி நடத்துகின்ற பொறுப்பு நகரமன்றங்களைச் சார்ந்தது. இதற்காக அவை அரசிடமிருந்து 25 சதவிகி நிதி உதவி பெறத்தகுதி பெற்றுள்ளன. மதுரை மற்றும் சென்னை மாநகராட்சிகளால் நடத்தப்படும் நிலையங்கள் உட்பட, மாநிலத்தில் 128 மகப்பேறு இல்லங்களும், 372 மகப்பேறு நிலையங்களும் உள்ளன.

(2) சிறப்புப் பள்ளி நல்வாழ்வுத் திட்டம்.

சிறப்புப்பள்ளி நல்வாழ்வுத் திட்டம் நமது மாநிலத்தில் 1965 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

பள்ளி நலப் பணிகளில் கீழ்க்கண்ட பணிகள் இடம் பெறுகின்றன:—

(1) 6—11 வயது பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை.

(2) பள்ளிகளிலேயே சிறு நோய்களுக்குச் சிகிச்சை.

(3) மேலும் சிறந்த மருத்துவ வசதி தேவைப்படுபவர்களை பெரிய மருத்துவ நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல்.

(4) மாணவர், பெற்றோர், ஆசிரியர் ஆகியோருக்கு நல்வாழ்வுக் கல்வி.

இச்சிறப்புத் திட்டம் 103 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 5 நகராட்சிகளிலும் செயல்பட்டு வருகின்றது. கிராமப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அலுவலர்கள் இத்திட்ட அலுவலர்களாக பணிபுரிகின்றனர். அவர்களுக்கு உதவியாக, இத்திட்டத்திற்கென்று அமர்த்தப்பட்டுள்ள நல்வாழ்வுப் பார்வையாளர் உதவி புரிகின்றனர். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் ஆண்டொன்றுக்கு 2,000 பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்.

இத்திட்டத்திற்கு உட்படாத பிற எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையத்தின் சாதாரணமான பணிகளில் ஒன்றாக பள்ளி நல்வாழ்வுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 1,000 குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், கடலூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 5 நகராட்சிகள் அடங்கிய நகர்ப் பகுதிகளில் ஒரு பள்ளி மருத்துவ அலுவலர், இரண்டு நல்வாழ்வுப்பார்வையாளர்கள், ஒரு அடிப்படை பணியாளர் அடங்கிய முழுநேரப் பள்ளி மருத்துவ ஆய்வுப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நகராட்சியிலும், 10,000 ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1981—82 ஆம் ஆண்டில் மேலும் 50 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 25 நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்த கருதப்பட்டுள்ளது.



இத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு சமநிலையாய் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. 1980—81 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1980 வரை) இத்திட்டத்தின் கீழ் கொணரப்பட்ட குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 1,23,639 ஆகும்.

(3) விரிவுப்படுத்தப்பட்ட நோய் தடுப்பூசித் திட்டம்

கீழ்க்காணும் நோய்களின் மூலம் நோயுற்ற அளவும் இறப்பு வீதமும் ஏற்படுகிறது:

1. தொண்டை அடைப்பான், 2. இசிவு நோய், 3 கக்குவான், 4. இளம்பிள்ளைவாதம், 5. தட்டம்மை, 6. காசநோய், 7. டைபாய்டு காய்ச்சல்.

இந்நோய்கள் கண்ட 2 வருடங்களுக்கு குறைந்த வயதுடைய அதிக எண்ணிக்கை கொண்ட குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதின் மூலமும் கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கு இசிவு நோய் வராமல் பாதுகாப்பதற்காக, இசிவு நோய் தடுப்பூசி போடுவதின் மூலமும் குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மூன்று நோய் தடுப்பூசி போடுதல், பி.சி.ஜி. ஊசி போடுதல், அம்மைப்பால் வைத்தல், குடல் நோய் தடுப்பூசி மற்றும் கொள்ளை நோய் தடுப்பூசித் திட்டங்களின் பணிகளை ஒருங்கிணைத்து பொதுவான தடுப்பூசித் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1980—81 ஆம் ஆண்டு (நவம்பர் வரை) இந்திய அரசு இலவசமாக 3·8 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அம்மைப்பால் அளித்துள்ளது. இதை நகராட்சிப் பகுதிகளில் பயன்படுத்துவதற்காக நகராட்சி சுகாதார அலுவலர்களுக்கும், கிராமப்புறப் பகுதிகளில் பயன்படுத்துவதற்காக மாவட்ட நல அலுவலர்களுக்கும், மாவட்ட நல மற்றும் குடும்பநல அலுவலர்களுக்கும், மதுரை மாநகராட்சிக்கும், 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இளம்பிள்ளை வாத நோய்க்குத் தடுப்பூசி போடும் திட்டம் ஒருகட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது. இம்மருந்துகள் தக்க பாதுகாப்பில் வைக்கப்பட்டு, குளிர்சாதன வசதியுடன் ஏனைய இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. முதலாவதாக, கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில், நகர்ப்புற கிராமப்புறப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டம் நீலகிரி மாவட்டம், மதுரை மாநகராட்சி, வடற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

(4) முத்தடுப்பு ஊசித் திட்டம்.

1964-ல் 142 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் தொடங்கப்பட்ட மூன்றுநோய் தடுப்பூசித் திட்டம் தற்போது எல்லா ஆரம்பசுகாதார நிலையங்களிலும் செயல்படுத்தப்பட்டுவருகிறது கக்குவான், தொண்டை அடைப்பான், இசிவு நோய் ஆகிய நோய்களிலிருந்து குழந்தைகளுக்கு தடுப்பூசி போட்டு காப்பதே இத்திட்டத்தின் குறிக்கோள். 4லிருந்து 8 வார இடைவெளியில் மூன்று முறை ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த தடுப்பு மருந்து அளிக்கப்படுகிறது. இந்த மூன்று நோய் தடுப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்த சென்னை மாநகரம் நீங்கலாக மற்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மாவட்ட பொதுச் சுகாதார செவிலியர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை மேம்படுத்த படிப்படியாக ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஒவ்வொரு கூடுதல் சுகாதாரப் பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதுவரை 150 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இந்த கூடுதல் பார்வையாளர்களைப் பெற்றுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் மேலும் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கூடுதல் சுகாதாரப் பார்வையாளரை நியமிக்க கருதப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மேற்பார்வையிடும் பணியில் மாவட்டநல அலுவலர்களுக்கு பொது சுகாதார செவிலியர்கள் உதவுகிறார்கள். மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 15 பொது சுகாதார செவிலியர்கள் உள்ளனர். பொது சுகாதாரப் துறையானது 29 சுகாதார மாவட்டங்களாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதால் 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 1·29 இலட்சம்செலவில் 14 கூடுதல் பொது சுகாதார செவிலியர் பதவிகள் தோற்றுவிக்க கருதப்பட்டுள்ளது. விரிவாக்கப்பட்ட நோய் தடுப்புஊசித் திட்டத்தின் கீழ் கொணரப்பட்டுள்ள இளம் பருவத்தினருக்குத் தோன்றக்கூடிய ஏழு வகை தொற்று நோய்களை குறிப்பாக கண்டறியும் பொருட்டும் குழந்தைகளுக்கு தடுப்புஊசி போடும் திட்டத்தை மேம்படுத்த வேண்டி தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் பணிகளையும் ஒருங்கிணைக்கவேண்டி பொது சுகாதாரத் துறை கொள்ளை நோய் கண்டறியும் பணிகள் வலுத்தப்படுத்தப்பட்டுள்ளது.



தடுப்புஊசி போடப்பட்டதின் விவரங்கள் பின்வருமாறு:

| | | 1977–78. | 1978–79. | 1979–80. | 1980–81. |
|---|---|---|---|---|---|
| 1 | மூன்றுமுறை மூன்று நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ள ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.51 | 2.81 | 3.73 | 2 32 1980 டிசம்பர் வரை) |
| 2 | இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை. | .. | 6,642 | 22,081 | 33,122 (மூன்று முறை) |
| 3 | பி.சி.ஜி. நோய் தடுப்புஊசி போடப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 17.67 | 15·76 | 15·46 | 9·87 |
| 4 | பெரியம்மை நோய் தடுப்புஊசிபோடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை. | 11·28 | 9·0 | 9·5 | 8·27 |
| 5 | டைபாய்டு காய்ச்சல் தடுப்புஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை. | | | I 52,643<br>II 16,606 | 13,154<br>7,050 |

சென்னை மாநகரத்தில் இந்த ஆண்டு பிப்ரவரி-மார்ச்சு மாதங்களில் இளம்பிள்ளை வாதத்தினால் அதிக அளவு குழந்தைகள் பாதிகப்பட்டதின் காரணமாக பொது சுகாதாரத்தினை மேம்படுத்தவும், சுற்றுப்புற சுகாதாரத்தினை பேணிக் காக்கவும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள், மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறையின் பணிகளை ஒருங்கிணைக்க சென்னை மாநகராட்சிக்கு ஒன்றும் மதுரை மாநகராட்சிக்கு ஒன்றும், ஏனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இந்திய அரசு தமிழ் நாட்டில் 1,70,000 குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மருந்து அளிக்கும் ஒரு சிறப்பு திட்டத்தை ஒட்டியுள்ளது. இத்திட்டம் அம்மாநிலத்தில் பெருத்த அளவில் செயல்படுத்தப்படும்.

(8 மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தல்

ஊட்டச்சத்து திட்டம், மக்கள் தொகையில் நலிந்த பிரிவினர்களுக்கென்றே அமைந்தது. பொதுச் சுகாதாரத் துறை மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு முக்கிய நல்வாழ்வு பெருக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது அனைவருக்கும் தடுப்பு ஊசி போடுவதன் மூலம் போதுமான நல்வாழ்வு நிலையை ஏற்படுத்தி காலப்போக்கில் ஊட்டச்சத்து மேம்பாட்டுக்கு உதவியாக அமைய வழி செய்யப்படுகிறது. குறிப்பாக தாய்மார்களுக்கு தாய்-சேய் நல நிலையங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், பாலவாடிகள் மற்றும் பள்ளிகளில் அளிக்கப்படும் ஊட்டச்சத்து கல்வி விளக்கம் ஊட்டச்சத்து திட்டத்தின் முக்கிய அங்கமாக அமைந்துள்ளது.

தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்குமென்று கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது:—

(1) ஒருங்கிணைந்த சேய் நலத்திட்டம்.

(2) தென்னாற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலையில் மலைவாழ் மக்கள் நல திட்டம்.

(3) வைட்டமின் 'ஏ' சத்து குறைப்பட்டால் குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

(4) சிறப்பு ஊட்டச் சத்து திட்டம், திருத்தப்பட்ட சிறப்பு ஊட்டச்சத்து திட்டம்.

(5) ஊட்டச்சத்து நடைமுறைத் திட்டம்.

(6) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.

(6) ஒருங்கிணைக்கப்பட்ட சேய் நல வளர்ச்சி திட்டம்

இத்திட்டம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் 1976 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தள்ளி வட்டாரத்திலும் (1.13 இலட்சம் மக்கட் தொகை) நிலக்கோட்டை வட்டாரத்திலும் (2.14 இலட்சம்) மக்கட் தொகை மற்றும் சென்னை நகரில் சில குடிசைப் பகுதிகளிலும் தொடங்கப்பட்டது.

(1) 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து, நல்வாழ்வு நிலையை மேம்படுத்துதல்.

(2) குழந்தையின் முறையான மன, உடல் சமூக வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தல்.

(3) குழந்தை இறப்பு நலிவு ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிடுதல் ஆகியவற்றைக் குறைத்தல்.





(4) குழந்தை நல வளர்ச்சியை மேம்படுத்த இத்திட்டத்தை திறம்பட நிறைவேற்றுவதற்கு பல்வேறு துறைகளையும் ஒருமுகப்படுத்துதல்.

(5) தாய்மார்களுக்கு உரிய ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி விளக்கம் அளிப்பதன் மூலம் குழந்தையின் ஊட்டச்சத்து தேவைகளையும் சாதாரண நல்வாழ்வுத் தேவைகளையும் திறம்பட நிறைவு அடையச் செய்தல்.

இக்குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன :—

(1) பள்ளிப் பருவ முன்னிலைக் கல்வி

(2) குறை நிரப்பு ஊட்ட உணவு

(3) தடுப்பு ஊசி

(4) மருத்துவப் பரிசோதனை

(5) சிறப்புச் சிகிச்சைக்கு அனுப்புதல்

(6) ஊட்டச்சத்து நல்வாழ்வுக் கல்வி விளக்கம்

(7) தாய்மார்க்கு முதியோர் கல்வி வழங்கி அதன் மூலம் அவர்களை தேசிய வாழ்வில் ஈடுபடுத்தல்.

இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

(7) தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன் குன்றுகளில் மலை வாழ் மக்கள் நலத் திட்டம்

கல்ராயன் குன்றுகளில் உள்ள 103 ஊர்களில் வாழும் 24,000 மலைவாழ் மக்களின் மருத்துவ நல்வாழ்வுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மருத்துவ நல்வாழ்வுப் பணியாளர்கள் அடங்கிய நடமாடும் மருத்துவப் பிரிவிற்குப் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இப்பிரிவு ஊர்தோறும் சென்று மலைவாழ் மக்களுக்குத் தேவையான மருத்துவப் பணிகளைச் செய்கிறது. இப்பிரிவு இப்போது சேலம் மாவட்ட நல்வாழ்வு அலுவலர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

கீழ்க்கண்ட பணிகளுக்கென்று கல்ராயன் குன்றுகளில் நல்வாழ்வு ஆய்வாளர்கள் மூவர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(1) தடுப்பு ஊசித் திட்டம்.

(2) சுற்றுப்புறத் துப்புரவு மேம்பாடு.

(3) சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல்.

இத்திட்டம் 1981—82லும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

(8) ''வைட்டமின் ஏ'' மற்றும் ஊட்டச் சத்து குறைபாடு காரணமாகக் குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் :—

இத்திட்டம் சமூக நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் (நடைமுறைச் சத்துணவு திட்டம் செயல்படாத) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் நிறைவேற்றப்படுகிறது. தாய்மார்கள் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து உணர்வு தொடர்ந்து இருக்கத் தேவைப்படும். கல்வி விளக்கத்தை அளிப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் வைட்டமின் 'ஏ' திரவம் குடும்பநலத்திட்டத்தின்கீழ் இந்திய அரசினரால்வழங்கப்படுகிறது.

நல்வாழ்வுப் பணியாளர்களும், சமுதாய நலப்பணியாளர்களும் ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் உள்ளூரிலேயே கிடைக்கத்தக்க கீரைகள், பழங்கள், காய்கறிகள், மீன், முட்டை முதலானவை வைட்டமின் 'ஏ' உயிர்ச்சத்து மிக்க உணவுப் பொருளின் தேவை பற்றி கல முறைப்படி அவ்வப்போது எடுத்து விளக்குவார்கள். அவர்கள் சத்துக் குறைபாட்டு நோய்களைக் கண்டறிந்து 6 மாதங்களுக்கொருமுறை வைட்டமின் 'ஏ' திரவம் வழங்குகின்றனர். ஊரகப் பகுதி வாழ் மக்களின் நலனுக்குத் தேவைப்படும் கல்விச் சாதனங்களும் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

(9) சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டம்

இத்திட்டம் 2 மாநகராட்சிகள், 33 நகராட்சிகள், 25 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது. நகர குடிசைப் பகுதிகளிலும், பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளிலும், கருவுற்றிருக்கும் மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், ஆறு மாதம் முதல் ஆறு வயது வரையுள்ள பள்ளி பருவமடையா குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 1,46,530 பேர் பயனடைகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 80 கிராம் பாலாகர் கோதுமை மற்றும் 7 கிராம் குழம்பு எண்ணெய் வீதம் மாதத்தில் 25 நாட்களுக்கு அல்லது ஆண்டில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கு இவ்வுணவுப் பொருட்கள் வழங்குவது மட்டுமின்றி அவர்களின் உடல் நலம் பரிசோதனை, தடுப்பு ஊசி போடுதல், இரும்புச் சத்து, போலி திரவச்சத்து மாத்திரைகள் வழங்குதல், வைட்டமின் 'ஏ' சத்துத்திரவம் வழங்குதல் முதலான பணிகளும் அளிக்கப்படுகின்றன.



இத்திட்டம் முழுவதும் தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் சமூக நலத்துறையினரால் சம்பந்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நல்வாழ்வுப் பணியாளர்களின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றது.

(10) திருத்தப்பட்ட சிறப்பு ஊட்டச் சத்துத் திட்டம்—

திருத்தப்பட்ட சிறப்பு ஊட்டச் சத்துத் திட்டம், சென்னை, மதுரை மாநகராட்சிகள், கோயம்புத்தூர், புதுக்கோட்டை நகராட்சிகள் ஆகியவற்றில் 1,41,000 பேர் பயனடைகின்ற வகையில், 79 நிலையங்களில் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்தினால் 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள் கருத்தரித்த, மற்றும் மகப்பேறு பெற்ற தாய்மார்கள் ஆகியோர் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் ஒரு வார காலத்திற்கு வீட்டுக்கு எடுத்துச் செல்லத்தக்க உணவுப் பொருளாக 700 கிராம் பாலகார் கோதுமை கொடுக்கப்படுகிறது. மருத்துவப் பரிசோதனை, வைட்டமின் 'ஏ' திரவம், இரும்புச் சத்து, போலிக் மாத்திரைகள், தடுப்பு ஊசிகள் மற்றும் அடிப்படை மருந்துகள் ஆகியவை உட்பட மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.

(11) நடைமுறை ஊட்டச்சத்துத் திட்டம்

இத்திட்டம் 37 வட்டாரங்களில் நிறைவேற்றப்படுகிறது. ஊரகப் பகுதி குழந்தைகள், தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தில் செறிவான நல்வாழ்வுக் கல்வியின் மூலம் சமுதாய மக்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உற்பத்தி செய்து நலிந்த பிரிவினர்க்கு கிடைக்கச்செய்ய உதவுகின்றது, வட்டார நல்வாழ்வுப் பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்து நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

(12) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்

கருத்தரித்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து வசதிகள் சிறந்த பலனளிக்கும் வகையில் நல்வாழ்வுப் பணிபுரிவதே தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் நல்வாழ்வு அம்சமாகும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்திற்கு உலக வங்கி உதவி அளிக்க முன்வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நல்வாழ்வுப் பணிகளை நிறைவேற்றுவது பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரிடமும், ஊட்டச் சத்துத்திட்ட நிறைவேற்றும் சமூகநலத்துறையிடமும் பதப்படுத்தப்பட்ட உணவு தயாரிப்பு, தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் நிறுவனத்திடமும், திட்டப்பயன் மதிப்பீடு செய்தல், மதிப்பீடு

கள் மற்றும் நடைமுறை ஆராய்ச்சி இயக்குநரிடம் ஊட்டச் சத்து தொடர்பு மற்றும் திட்டங்களில் ஒருங்கிணைப்பு திட்ட ஒருங்கிணைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய ஆறு மாவட்டங்களில் உள்ள ஊரகப் பகுதிகளில் கட்ட அடிப்படையில் நிறைவேற்றப்பட உள்ளது. ஊரகப் பகுதி மக்களைக் கணக்கெடுத்தல், ஊட்டச் சத்து குறைபாடுள்ள பிரிவினரைக் கண்டறிதல், எடை, வயது, அடிப்படையில் அவர்களைத் தரம் பிரித்தல், மூன்று மாத காலத்தில் அவர்களுடைய எடைகளைக் கண்காணித்து, எடை மிகாதவர்களைக் கண்டறிதல், ஊட்டச் சத்து குறைபாடு உள்ளவர்களிடையே திட்டப் பயன் பெறவேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்தல். அவர்களைப் பற்றி செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் ஊட்டச்சத்துக் கல்வி விளக்கம் பெற வேண்டியவர்களைக் குழுக்களாக அமைத்து, அவர்களுடைய ஊட்டச்சத்து நிலையை உயர்த்துத்லை இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டு உள்ளது.

தொழில்நுட்பப் பயிற்சி அமைப்பு முறை மேம்பாடு, 5,000 மக்கள் தொகைக்கு ஒன்று வீதம் புதிய கிளை நிறுவனங்கள், கட்டுதல், ஊர்திகள், கருவிகள் தட்டுமுட்டுப் பொருட்கள், மருந்துகள் வழங்குதல் திருத்தப்பட்ட முறையில் பணிகளை கிராம மக்களின் வீடுகளைத் தேடிச் சென்று செய்தல் இத்திட்டத்தின் நல்வாழ்வு அம்சமாக உள்ளது.

சமுதாய ஊட்டச்சத்து பணியாளர்கள் எனப்படும் உள்ளூர் பகுதி நேரப் பணியாளர்களால் கிராமப் பகுதிகளில் அனைவருக்கும் ஊட்டசத்துக் கல்வி விளக்கம் அளிக்க பயன்படுத்தப்படும் சமுதாய ஊட்டச்சத்து நிலையங்களுக்கு தகுந்த கட்டிடங்களை வாடகைக்கு எடுப்பதன் மூலம் அமைப்பு முறை வசதிகளைப் பெருக்குதல் இத்திட்டத்தின் சமூக நல அம்சமாகும்.

பிறந்த குழந்தை ஒவ்வொன்றும் மகப்பேறு பராமரிப்புக்கு உட்பட்ட ஒவ்வொரு மகளிரைப் பற்றியும் தனித்தனி கண்காணிப்புக்கு உதவி செய்கின்ற வகையில் இந்நிலையங்களில் எடை அட்டவணை முதலான பொருத்தமான பதிவேடுகள் எழுதி வைக்கப்பட்டிருக்கும். 170 ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் இப்பகுதி மக்களின் பிரதிநிதிகளாக இத் திட்டத்தில் பங்கேற்கின்றன. வட்டார வளர்ச்சி அதிகாரி, சுகாதாரம் மற்றும் சமூக நலத்துறைகளுடன் ஒருங்கிணைந்து கிளை நிலையங்களை அமைப்பதற்கும் அங்கு தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கு தேவையான மனைகளை தேர்ந்தெடுப்பதற்கும் உதவி செய்வார். இந்த மனைகள் கையகப்படுத்தப்பட்டோ அல்லது ஒப்படைப்பு



செய்யப்பட்டோ அல்லது நன்கொடையாகவோ அளிக்கப்பட்டநடக்கும். பொதுப்பணித் துறையும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறையும் கட்டிடம் கட்டும் பணிக்குப் பொறுப்பாவார்கள்.

இத் திட்டம் மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி வட்டாரத்தில் முன்மாதிரி திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 13 மகப்பேறு கிளை நிலையங்கள் கட்டப்பட உள்ளன. 66 சமுதாய ஊட்டச்சத்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடிப்படைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. திட்டப் பலன் பெறுவோர் கண்டறிந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தேவையான பணிகள் நடைபெற உள்ளன. இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கோரிக்கை எண் 30 சமூக நலத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளது.

### 3. தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்.

குடல் சார்ந்த நோய்களான வாந்திபேதி, குடற் அழற்சி நோய், டைபாய்டு, மஞ்சக்காமாலை, மலேரியா மற்றும் யானைக்கால் போன்றவை தமிழ்நாட்டில் பரவுகின்ற பெரிய தொற்று நோய்களாகும். இது தவிர, நரம்புச் சிலந்தி, காலா ஆஜர் விலங்கினத்திற்கு ஏற்படும் பிளேக், மற்றும் மூளைக் காய்ச்சல் இவைகளினால் தமிழ்நாட்டில் சிலர் பாதிகசப்படுகின்றனர்.

(1) வாந்திபேதி மற்றும் குடல் அழற்சி நோய்—

வாந்திபேதி, மஞ்சகாமாலை மற்றும் குடல் அழற்சி நோய்கள் பெரும்பாலும் நோய் பரவக்கூடிய நீர்நிலைகளின் மூலம் ஏற்படுகின்றது. இந்நோயினால் பாதிப்பு அடைந்தவர்களை கண்டறியவும், ஆரம்பத்திலேயே தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவும், இதற்கான கண்காணிப்பு முறை அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு குறையினால் இந்நோய்களால் பாதிப்பு அடைந்தவர்களை அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் 1978, 79, 80 ஆம் ஆண்டுகளில வாந்திபேதி மற்றும் குடல் அழற்சி நோய்களால் பாதிப்பு அடைந்தவர்களின் எண்ணிக்கை பற்சேர்க்கை 2.2 அளவில் தரப்பட்டுள்ளது.

(2) பிளேக்

தமிழ்நாட்டில் 1965 முதல் மனிதர்களை பாதிக்கும் பிளேக் நோய் முற்றிலும் எங்கும் இல்லை. இருந்தாலும், இந் நோய், தமிழ்நாடு எல்லைக்குட்பட்டிருக்கும் ஆந்திரப்பிரதேசம், கர்நாடக மாநிலங்களில் காட்டியல்பான பொறி விலங்குகளின் மூலம் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது. பிளேக் நோய் மனிதர்க

இடையே பரவுவதாக கருதப்படும் வடாற்காடு, கோயம்புத்தூர், தர்மபுரி, உதகமண்டலம் மாவட்டங்களில் மனிதர்களிடையே பரவும் பிளேக் நோயைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிளேக் நோய் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டிய அவசியம் உள்ளது. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பிளேக் நோய் பரவக்கூடிய மாவட்டங்களில் பிளேக் நோய் தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

(3) நரம்புச் சிலந்தி நோய்—

நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் இந்நோய் காணப்படுகிறது. எனவே நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட கிராமங்களில் குடிநீர் நிலைகளில், 5-லிருந்து 6 வாரத்திற்கொரு முறை 50 சதம் டி.டி.டி. (D.D.T.) நீர் உலராத பொடி தெளிக்கப்படுகிறது. இந்த முறையால், இந்த நோயைப் பரவச் செய்யும் சைக்ளோப் என்னும் ஒருவகை நத்தைகளின் அடர்த்தியைக் குறைத்து இந்த நோய் மேலும் பரவாமல் தடுக்கப்படுகிறது. 1980 ஆம் ஆண்டில் 4 கிராமங்களில் இந்த நோய் பரவி, அதனால் 4 பேர்கள் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இத்திட்டம் இந்த நோய் பரவுவதற்கு வாய்ப்புள்ள கிராமங்கள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழி ஏற்படுத்தும் வரையிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீரையே மக்கள் பயன்படுத்தும்படி ஆர்வம் ஏற்படுத்தும் வரையிலும் தொடரப்பட இருக்கிறது.

(4) மூளைக் காய்ச்சல்—

மூளைக் காய்ச்சல் என்றழைக்கப்படும் (Viral Encephalitis) எனும் நோய் 1977 ஆம் ஆண்டிலிருந்து சில பகுதிகளில் கொள்ளை நோயாக உருவெடுத்து பரவியது. இந் நோய் நீர்ப்பறவைகள் பன்றிகள் போன்ற மிருக இனங்களிலிருந்து க்யூலெக்ஸ் என்ற ஒருவகை கொசு இனத்திடம் பரவி அதன் மூலம் மனிதர்களிடம் பற்றிக்கொண்டு பரவுகிறது. 1980 ஆம் ஆண்டு, மே, சூன் மாதங்களில் தென்னாற்காடு மாவட்டத்தில் சிலர் இந் நோயால் பாதிக்கப்பட்டனர் ஆனால் அதற்குப் பின் நவம்பர் வரை இந்த மாவட்டத்தில் மூளைக் காய்ச்சலால் யாரும் பாதிக்கப்பட்டதாக தகவல் இல்லை. மீண்டும் டிசம்பர் 1980-லிருந்து திருநெல்வேலி, வடாற்காடு மாவட்டங்களில் இந்நோயினால் சிலர் பாதிக்கப்பட்டனர். இந்நோயைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாக பலன் தரக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொண்டது. தீவிர கொசுக் கட்டுப்பாடு மக்கள் நல்வாழ்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு, இந் நோய் பரவாமல் தடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அரசு மருத்துவ நிலையங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந் நோயைத் தடுப்பதற்காகவும், நோய் வந்தவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு தெரிவிக்கும் குறிக்கோளுடன் விளம்பர நடவடிக்கைகள் செய்தித் தாள்களின் மூலமாகவும் அகில இந்திய வானொலி மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டது.



ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகப் பாதிக்கப்பட்ட இடங்களில் துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகள் வெளியிடப்பட்டன. மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஏனையோருக்கு இம்மாதிரி நோய் கண்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வழிகாட்டி நெறிகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன. எந்தவகை நுண் கிருமிகளால் இந்நோய் பரவுகிறது என்று கண்டறிவதால் இந்தக் கொடுமையான நோய் மேலும் பரவாமல் தடுக்கும் பணிகளை மேற்கொள்ள இயலும் ஆதலாலும், அதற்குத் தற்போது நமது மாநிலத்தில் தேவையான வசதிகள் இல்லாமை காரணமாகவும் 1981-82 ஆம் ஆண்டு மதுரை மருத்துவக் கல்லூரியில் ஒரு நுண்கிருமிகள் ஆய்வுக்கூடம் அமைக்க கருதப்பட்டுள்ளது.

(5) யாஸ் (சரும) நோய்—

யாஸ் (சரும) நோய் ஒழிப்புத் திட்டம் சேலம் மாவட்டத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1980 ஆம் ஆண்டில் 134 கிராமங்களில் ஆய்வு நடத்தப்பட்டு 57 யாஸ் (சரும) நோயாளிகள் கண்டறியப்பட்டு, 38 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

4. மத்திய அரசு உதவித் திட்டங்கள்—

(1) மலேரியா

தமிழ்நாட்டில் 1958 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு உதவியுடன் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வந்தது. 1977-லிருந்து மத்திய அரசின் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் திருத்தப்பட்ட செயல் திட்டம், தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

நகர்ப்புறப் பகுதிகளில் நகர்ப்புற மலேரியாத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற்சேர்க்கை 3-ல் 1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில் மலேரியா நோய் என கண்டறியப்பட்டவர்கள் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தில் சென்னை மாநகரம் நீங்கலாக மற்றப் பகுதிகளில் மலேரியாவினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இராமேஸ்வரம் தீவில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை போற்றத்தக்க

வகையில் குறைந்துள்ளது. ஆயினும், இப் பகுதியில் இந்நோய் தொடர்ச்சியாக இருப்பதின் காரணமாக மைய அரசின் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்ட இயக்குநரகம், மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பூச்சியியல் ஆராய்ச்சிப் பிரிவின் ஒத்துழைப்புடன், இப் பிரச்சினையை அதன் எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுத்து, இத்தீவில் மலேரியா நோய் முற்றிலும் ஒழிக்கக் கருதப் பட்டுள்ளது.

அண்மையில் கூடிய மாநில மலேரியா செயற்குழு மலேரியா பிரச்சினையை அதன் எல்லா கோணங்களிலிருந்தும் பரிசீலித்தது. அக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினையை மறு சீராய்வு செய்து தக்க தீர்வு காண தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைச் செயலாளரின் தலைமையில் ஒரு செயலாக்கக் குழு அமைக்க முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

**(2) யானைக்கால் நோய்—**

யானைக்கால் நோய் ''க்யூலக்ஸ்'' என்ற கொசுக்களினால் ஏற்படுகிறது. நம் மாநிலத்தில் இந்நோய் உள்ளது. இது அதிகமாகப் பரவும் பகுதிகளில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தை 1958 ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றி வருகிறோம். இதுவரை 15 யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டு பிரிவுகள், ஒரு ஆய்வுப் பிரிவு, 13 யானைக்கால் நோய் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில் நோய் கண்டறியப்பட்டவர்களது விவரம் கீழே தரப்படுகிறது:—

| ஆண்டு. | எண்ணிக்கை. |
|---|---|
| 1977 .. .. .. | 10,060 |
| 1978 .. .. .. | 10,020 |
| 1979 .. .. .. | 10,897 |
| 1980 .. .. .. | 9,416 |

1980-81 ஆம் ஆண்டில் மேலும் 4 யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளும், 20 யானைக்கால் நோய் சிகிச்சைப் பிரிவுகளும் ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியில் செயல்பட்டுவந்த ஆய்வுப் பிரிவு அங்கு பணிகள் முடிந்தவுடன் 1981 சனவரியிலிருந்து கோயம்புத்தூருக்கு மாற்றப் பட்டுள்ளது.





**(3) பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டம்—**

பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் திட்டத்தின்கீழ் அனைத்துப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு கிராமப்புறங்களில் 5,000 மக்கள் தொகைக்குஆண் சுகாதாரப் பணியாளர் ஒருவரும் பெண் சுகாதாரப் பணியாளர் ஒருவரும் அமர்த்தப் படுவர். 4 ஆண் சுகாதார பணியாளர்களுக்கு ஆண் சுகாதார மேற்பார்வையாளர் ஒருவரும், 4 பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு பெண் சுகாதார மேற்பார்வையாளர் ஒருவரும் நியமிக்கப்படுவர். கன்னியாகுமரி, மதுரை, தென்னாற்காடு, சேலம், செங்கல்பட்டு மாவட்டங்களில் இத் திட்டத்தைத் தொடர்ச்சியாகச் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் இந்த ஐந்து மாவட்டங்களில் அமர்த்தப்படுவதற்கென்று அரசு 718 கூடுதல் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பதவிகளையும், 177 கூடுதல் சுகாதாரப் பார்வையாளர் பதவிகளையும் ஏற்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை 482 துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களும், 142 சுகாதாரப் பார்வையாளர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒருவர் வீதம் தேவைப்படும் பெண் நல்வாழ்வுப் பணியாளர்களில் தேவையை நிறைவு செய்ய திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல், வேலூர் ஆகிய இடங்களிலுள்ள துணைச் செவிலியர் பயிற்சி நிலையங்களில் சேர்க்கைத் தொகையை 30-லிருந்து 60 ஆக இரட்டித்தும் கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், காஞ்சீபுரம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஆண்டுதோறும் 60 பேருக்குப் பயிற்சி அளிக்கக் கூடிய 5 புதிய பயிற்சி நிலையங்களைத் தொடங்கவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் கூடுதல் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் (பெண்) 500 பேரும், கூடுதல் சுகாதார மேற்பார்வையாளர் (பெண்) 100 பேரும், அமர்த்தப்படுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆண் சுகாதாரப் பணியாளர்களாகவும் ஆண் சுகாதார மேற்பார்வையாளர்களாகவும் அமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் ஏற்கெனவே பல திட்டங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் பலநோக்கு சுகாதாரத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட உள்ளனர். இத் திட்டத்தை செயல்படுத்தும் முதற்கட்டமாக பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. இதுவரை பயிற்சி அளிக்கப் பட்ட சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (ஆண், பெண் உட்பட) விவரம் கீழ்வருமாறு:—

| | |
|---|---|
| ஆண் சுகாதாரப் பணியாளர்கள் .. .. .. | 1,905 |
| பெண் சுகாதாரப் பணியாளர் .. .. .. | 1,769 |
| ஆண் சுகாதார மேற்பார்வையாளர் .. | 602 |
| பெண் சுகாதார மேற்பார்வையாளர் .. | 526 |

இராமநாதபுரம், வடாற்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள ஆண், பெண் பணியாளர்களுக்கு நடப்பாண்டில் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது, வருங்காலத்தில் இத்திட்டம் இதர மாவட்டங்களில் படிப்படியாக விரிவாக்கப்படும்.

சிறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் பலநோக்கு சுகாதாரப் பணியாளரின் பணிகளில் ஒன்றாக குறிக்கப்பட்டிருப்பதால் பலநோக்கு சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள கிளை நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகளுக்கென்று ஏற்கனவே வழங்கப்படும் 800 ரூபாயுடன் கூடுதலாக 1,200 ரூபாய் அளிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் 1,050 கிளை நிலையங்கள் பயன் பெறுகின்றன. இந்த ஐந்து மாவட்டங்களிலும் பலநோக்கு சுகாதார பணியாளர் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட 500 கூடுதல் கிளை நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் 2,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

4. மருந்துக் கட்டுப்பாடும் உணவில் கலப்படம் செய்வதை தடுத்தலும்

(1) மருந்து கட்டுப்பாடு—

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரி ஆவார். அவருக்கு ஒரு இணை மாநில மருந்துக்கட்டுப்பாடு அதிகாரியும், இரண்டு உதவி மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரிகளும் 59 மருந்து ஆய்வாளர்களும் 10 முதுநிலை மருந்து ஆய்வாளர்களும் உதவி புரிகின்றனர். மருந்து கட்டுப்பாடு நிறுவனத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு :—

(i) மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு விற்பனை விநியோகம் (ஹோமியோபதி, ஆயுர்வேதம், சித்த மருந்துகள் உட்பட) முதலியவற்றை ஒழுங்குபடுத்தி 1940 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களின் சட்ட விதிகளை அமுல் செய்வது ;

(ii) மருந்துப் பொருட்களின் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படுகின்ற 1955 ஆம் ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட 1970 ஆம் ஆண்டு மருந்துகள் (விலைக் கட்டுப்பாடு) விதித் துறைகளை செயல்படுத்துதல் ;

(iii) 1954 ஆம் ஆண்டு மருந்து மற்றும் மாந்திரிக நிவாரணங்கள் (தடைசெய்யப்பட வேண்டிய விளம்பரங்கள்) சட்டப் பிரிவுகளை அமுல் படுத்துதல் ;



(iv) 1930 ஆம் ஆண்டு அபாய மருந்து சட்டத்தின்கீழ் அபாய மருந்துகளை கைவசம் வைத்திருத்தல், தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவைகளை ஒழுங்குபடுத்துதல்;

(v) மருந்து இறக்குமதியை கவனித்தல் ;

(v) சாராயம் மற்றும் கிளர்ச்சி யூட்டும் மருந்துப்பொருள், மயக்க மற்றும் மனவியல் மருந்துப் பொருட்கள் அடங்கிய மருத்துவ மற்றும் ஒப்பனைப் பொருள் தயாரிப்புகளில் மோசடி செய்தலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(vi) பொது மக்களுக்கு அவசியமான மருந்துகள் கிடைக்குமாறு கண்காணித்தல். தட்டுப்பாடு எதிர்பார்க்கப்படும் போது தீர்வு நடவடிக்கை எடுத்தல்.

(vi) பொது மக்களுக்கு அவசியமான மருந்துகள் கிடைக்குமாறு கண்காணித்தல்.

( ) மருந்துகள் பற்றிய புகார்களைப் புலனாய்தல்.

ஹாத்திக்குழுவின் பரிந்துரையின்படி, மருந்துகள் கட்டுப்பாடு நிர்வாக அலுவலரை அதை அரசின்கீழ் இயங்கும் தனித் துறையாக அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைப்பற்றிய விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

மருந்து ஆய்வாளர்களால் கொண்டுவரப்படுகின்ற மருந்துகள் ஒப்பனைப் பொருட்களின் மாதிரிகள், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கிண்டி, கிங் நிலையத்தில் தற்சமயம் இயங்கி வருகின்ற உணவு மற்றும் மருந்துகள் பகுப்பாய்வகத்தில் பரிசோதிக்கப்படுகின்றன. தேனாம்பேட்டையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உணவு மற்றும் மருந்து பரிசோதனைக் கூடத்தில் கருவிகள் நிறுவப்பட்டு, அவைகள் சோதனையிடப்பட்டிருக்கின்றன. சட்டப்படி எடுக்கப்படும் மருந்து மாதிரிகள் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த பரிசோதனைக் கூடத்தில் 22—2—1981 வரை 391 மருந்து மாதிரிகளும், 22 பூச்சிக்கொல்லி மருந்து மாதிரிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. மாநில மருந்துக் கட்டுப்பாடு அதிகாரியின்கீழ் ஒரு புலனாய்வுக்குழு அமைக்க கருதப்பட்டுள்ளது.

(2) உணவில் கலபபடம் செய்வதைத் தடுத்தல்—

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வது சமூகத்திற்கு இழைக்கப்படும் கடுமையான தீங்கு ஆகும். சுகாதாரம்பற்றிய சட்டத்தின் வாயிலாகவும், சுகாதாரக் கல்வி மூலமாகவும் இத் தீங்கினைக் கட்டுப்படுத்த முயற்சிக்கப்படுகிறது. மக்கள் தரமான உணவுப் பொருள்களை மட்டுமே வாங்க வேண்டும்; தரம் குறைந்த, கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருள்களை விற்பனைச் செய்யப்படுவதாக சந்தேகிக்கின்ற போது அது குறித்து தகவல் அளிக்க வேண்டும். மேலும் இவைகளின் மூலம் நல்ல உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதற்கு, ஊக்கம் அளிக்க வேண்டும். இவைகளின் முக்கியத்துவம் குறித்து அவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் கிராமப்புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் பணியாற்றும் சுகாதார துப்புறவு ஆய்வாளர்கள் ஏனைய மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்கள் மூலமாக சுகாதாரம் பற்றிய அறிவுரை எடுத்துரைக்கப்படுகிறது. உணவில் கலப்படம் செய்பவர்கள், அவற்றைச் சேமித்து வைத்திருப்பவர்கள், விற்பவர்கள் ஆகியோர் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளாக பரி சோதிக்கப்பட்ட உணவு மாதிரிகளின் புள்ளிவிவரம் கீழே தரப் படுகிறது :—

| | 1978–79 | 1979–80 | 1980–81 (30–9–80 வரை) |
|---|---|---|---|
| பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 17,513 | 16,994 | 9,632 |
| கலப்படம் என்று கண்டு அறிந்த மாதிரிகளின் எண்ணிக்கை. | 2,809 | 2,404 | 1,148 |
| அபராதம் விதிக்கப்பட்ட எண்ணிக்கை. | 1,183 | 725 | 212 |
| சிறைத்தண்டனை விதிக் கப்பட்ட எண்ணிக்கை. | 300 | 304 | 114 |
| வசூலிக்கப்பட்ட அப ராதத் தொகை மொத் தம். | ரூ 6,44,391 | 4,54,932 | 1,96,68 |



உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழான உணவு மாதிரிகளின் பகுப்பாய்வு கிண்டி, உணவு மற்றும் மருந்துப் பகுப்பாய்வகம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூரில் உள்ள உணவு பகுப்பாய்வு கூடங்களிலும் சென்னை மாநகராட்சி உணவு பகுப்பாய்வு கூடத்திலும் செய்யப்படுகின்றன. மேலும் மிகுதியான உணவு மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு வசதியாக சேலத்திற்கு ஒன்றும் பாளையங்கோட்டைக்கு ஒன்று மாக மேலும் இரண்டு ஆய்வகங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. பாளையங்கோட்டையில் உணவு பகுப்பாய்வகம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. கருவிகள் அமைக்கப்பட்டுவிட்டன. 1978-லிருந்து மருத்துவமனை உணவுகளும், பகுப்பாய்வு செய்யப் படுகின்றன. 1980 ஆம் ஆண்டில் (டிசம்பர் திங்கள் 1980 வரை) இத்தகைய மாதிரிகள் 803 பகுப்பாய்வு செய்யப்பட்டன. விரைவில் இவ்வாய்வகம் சட்டபூர்வமான உணவு மாதிரிகளை பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ள உள்ளது. சேலத்தில் உணவுப் பகுப்பாய்வகம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆய்வகத்துக்கு வேண்டிய கருவிகள் அமைக்கபட உள்ளது.

1980 ஆம் ஆண்டில் 11 உள்ளாட்சி நிறுவனங்கள் புதிதாக உணவு மாதிரிகளை எடுக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தை நமது மாநிலத்தில் மிகவும் தீவிரமாக நிறைவேற்ற, உணவு ஆய்வுப்பிரிவில் நல் வாழ்வு அலுவலருக்கு பதில் துணை இயக்குநர் ஒருவர், ஒரு சட்ட அறிவுரையாளர், புள்ளியியல் அலுவலர் ஒருவர், முழுநேர உணவு ஆய்வாளர்கள் மூவர் ஆகியோர் அமர்த்தப்பட்டு இப்பிரிவு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

6. சுகாதாரக் கல்வி:

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்கத்தின் மாநில சுகாதாரக் கல்வி நிலையம் கீழ்க்கண்ட இலட்சியங்களை கொண்டு அமைக்கப்பட்டது :—

(1) மக்கள், தங்களின் சுகாதாரப் பிரச்சினைகள் அறிந்து கொள்ள உதவுவது ;

(2) மக்கள் சிறந்த சுகாதார தரங்களை விரும்ப உதவுவது;

(3) மக்கள் தங்களின் சொந்த முயற்சி, செய்கைகளின் மூலம் தங்களின் சுகாதாரக் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள உதவுவது;

(4) சுகாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிறை வேற்றுவதில் மக்களின் தீவிர ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் திரட்டுவது ;

(5) சுகாதாரக் கல்வியின் கொள்கை நடைமுறையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது.

மேற்சொன்ன இலட்சியங்களை அடைய அந்நிலையத்தைச் சார்ந்த பல்வேறு பிரிவுகள் அநேக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மாநில சுகாதாரக் கல்வி அமைப்பின் நடவடிக்கைகளின் சிறந்த தன்மைகள் சில வருமாறு :—

(1) சென்னை மாநகரையொட்டிய ஒரு நகர்ப்புறப் பகுதி மேல்நிலைப்பள்ளிமாணவரிடையே புகைப்பழக்கம் பற்றிய ஆய்வு. இவ்வாய்வின் அடிப்படையில் ஒரு பள்ளியில் கல்வி விளக்கத் திட்டமொன்று முன் மாதிரித் திட்டமாக நிறைவேற்றப்பட உள்ளது ;

(2) கீழ்குறித்த மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்க்கு நல்வாழ்வுக் கல்வியில் பயிற்சி மற்றும் செய்முறை விளக்கம்: (1) மதுரை, (2) இராமநாதபுரம், (3) செங்கற்பட்டு, (4) தர்மபுரி, (5) தென் ஆற்காடு, (6) திருநெல்வேலி, (7) திருச்சிராப்பள்ளி, (8) வட ஆற்காடு, (9) சேலம் மற்றும் (10) கோயமுத்தூர்;

(3) திருவொற்றியூர் நகராட்சி நல்வாழ்வுப் பணியாளர்க்கு நல்வாழ்வுக் கல்வியில் பயிற்சியும் செய்முறை விளக்கமும்;

(4) சென்னை எழும்பூர் சேய் நல நிறுவனம், மகப்பேறு மருத்துவ மனை ஆகிய மருத்துவ மனைகளில் நல்வாழ்வுக் கல்விப் பயிற்சி மற்றும் செய்முறை விளக்கமளித்தல்;

(5) 73 பள்ளி ஆசிரியர்களுக்கு 4 தொகுதிகளாக பள்ளி நல்வாழ்வுக் கல்வியில் பயிற்சி ;

(6) திருநெல்வேலி மாவட்டத்தில், பள்ளி நல்வாழ்வுக் கல்வித் திட்டத்தின்கீழ் ஒரு தொகுதி ஆசிரியர்களுக்கு பயிற்சி;

(7) நல்வாழ்வு விளக்கம் பற்றிய நூல் தயாரிப்பதில் கேர் மற்றும் பள்ளிக் கல்வி ஆய்வு பயிற்சி நிறுவனம் ஆகியவற்றிற்கு உதவி.

இக்கல்வி விளக்க நடவடிக்கைகள் மட்டுமின்றி, மாநில நல்வாழ்வுக் கல்வி அமைப்பைச் சேர்ந்தவர்கள் பல்வேறு பொது நல மன்றங்கள், முதியோர் கல்வி முகாம்கள், தேசிய மாணவர் பணிகள் முதலான நிலையங்கள் ஆகியவற்றின் வாயிலாக மக்களுக்கு நல்வாழ்வுக் கல்வி விளக்கமளிப்பதில் முக்கிய பங்கேற்றுள்ளனர்.





7. பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் :

மாநிலத்தில் அநேக பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் நடத்தப்பட்டன. இப்பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும் செய்யப்பட்ட துப்புரவு ஏற்பாடுகள் பொது சுகாதாரத் துறை அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டன. இப்பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும், செய்யப்பட்ட விரிவான துப்புரவு ஏற்பாடுகள் காரணமாக, கொள்ளை நோய்கள் ஏதும் பரவாமல் எல்லா பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் நடைபெற்றன.

1981 ஆம் ஆண்டு சனவரியில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது உணவு விடுதிகளில் சுகாதாரத்தை பேணிக்காப்பது உட்பட தேவையான அளவில் துப்புரவுப் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாநாட்டிற்கு வந்த பார்வையாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை எதிர்பார்த்ததை விட கூடுதலாக இருந்தும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் போதுமான அளவு இருந்தது. மாநாடு நடக்கும் காலத்திலும், அதற்குப் பிற்பட்ட காலத்திலும், குடல் அழற்சி நோய் மற்றும் நச்சுணவினாலோ எவரும் பாதிக்கப்படவில்லை என்பது மிகுந்த மன நிறைவைத் தருகிறது. மாநாட்டின் போது முதல் உதவி மருத்துவ வசதிக்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் போதுமான அளவு இருந்தது.

8. பிறப்பு-இறப்பு பதிவு :

பிறப்பு-இறப்பு, கைக்குழந்தை இறப்பு, இறந்து பிறத்தல், தாய்மார் இறப்பு போன்ற புள்ளி விவரங்கள் பல்வேறு சுகாதார திட்டங்களை நன்கு வகுப்பதற்கு அவசியமாகும். நமது மாநிலத்தில் பிறப்பு-இறப்பினை பதிவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டு மத்திய சட்டம் 18-ன் கீழ் பதிவுப் பணி நடைபெற்று வருகிறது. குடிமை பதிவு முழுமை பெறவில்லை. பிறப்பு-இறப்பு பற்றிய நம்பத் தகுந்த மதிப்பீடுகளை சேகரிக்கும் பொருட்டு மாதிரி பதிவுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இம்மாதிரி பதிவுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பிறப்பு-இறப்பு விகிதம் பின்வருமாறு :—

| ஆண்டு. | கிராமங்கள். | | நகரங்கள். | | மாநிலம். | |
|---|---|---|---|---|---|---|
| | பிறப்பு | இறப்பு. | பிறப்பு | இறப்பு. | பிறப்பு | இறப்பு |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1975 .. | 32·8 | 17·7 | 25 7 | 8·6 | 30·7 | 15.0 |
| 1976 .. | 32·2 | 16 9 | 27 2 | 9·8 | 30·7 | 14.7 |
| 1977 .. | 31 0 | 15·5 | 25·6 | 9·6 | 29·3 | 13·7 |
| 1978 .. | 30 0 | 14·3 | 26 3 | 9·0 | 28 9 | 12·8 |
| 1979 .. | 28·8 | 13·6 | 26·2 | 8·6 | 28·0 | [illegible] |

9. மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனம்:

பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்கத்தைச் சேர்ந்த மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனம் மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நலம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து, மருத்துவக் கல்வி மற்றும் இந்திய மருத்துவ இயக்குநரகங்களைச் சார்ந்த பல்வேறு ஊர்திகளைப் பராமரித்தும் பாதுகாத்தும் வருகிறது. இம் மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனத்தினரால் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு திட்டங்களின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற ஊர்திகளின் எண்ணிக்கை 1,528 ஆகும். இதனைப் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை 4-ல் தரப்பட்டுள்ளது. இந்நிறுவனம் சென்னை, சேலம், மதுரை இடங்களில் உள்ள ஊர்திகள் பராமரிப்பு நிறுவனத்தின் வளாகத்தினுள் 3 வட்டார பணிமனைகளைக் கொண்டுள்ளது. மேலும் திருச்சிராப்பள்ளியில் மைய பணிமனை ஒன்றினையும் கொண்டுள்ளது. மாவட்ட சுகாதார அலுவலர்களின் அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட பல்வேறு மாவட்டத் தலைமையகங்களில் மாவட்டங்களில் இயங்கி வருகின்ற ஊர்திகளின் சர்வீசுக்காகவும் சிறிய அளவிலான குறைகள் பழுது பார்ப்பதற்காகவும் 15 நடமாடும் பராமரிப்புப் பணிமனைகளையும் கொண்டுள்ளது. உதிரிப் பாகங்களின் தொடக்கப் பட்டியலுக்காக 7·50 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் போக்குவரத்து நிறுவனத்தில் ஊர்திகளின் பராமரிப்பு மற்றும் எளிதில் இயங்கும் தன்மையையும் மேம்படுத்த வேண்டி மாநில சுகாதார போக்குவரத்து அலுவலர்களின் கீழ் ஒரு தனித்துறையை நிறுவ கருதப்பட்டுள்ளது.

10. சுற்றுப்புறம் மாசடைவதை கட்டுப்படுத்துதல்:

அண்மை ஆண்டுகளில் மாநிலத்தில் தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக தொழிற்சாலைகளிலிருந்து கண்டபடி வெளிப்படுத்தப் படுகின்ற நச்சுத் தன்மையுள்ள திட, திரவ ஆவி வடிவிலான கழிப்புப் பொருட்களினால் நீர், நிலம் சுற்றுப்புறக் காற்று முதலியன மாசடையும் பேரிடர் வளர்ந்து வருகிறது. இத்தகைய கழிவுப் பொருட்கள் குறிப்பாக, சிமிட்டி, மருந்து, அட்டை, தாள், நெசவு, சர்க்கரை, பிளாஸ்டிக், செயற்கை நூல், உரங்கள் மற்றும் தோல் பதனிடுதல், எண்ணெய் வடிகட்டுதல், வெல்ல பாகு வடிகட்டுதல் முதலான தொழில்களிலிருந்தே வெளிப்படுகின்றது.



பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறையின் நீர் பகுப்பாய்வு, கூடங்களில், நகராட்சிகள், பேரூராட்சிகள், முக்கிய புகை வண்டி நிலையங்கள், விமான நிலையங்கள், சிறைச் சாலைகள், மருத்துவ மனைகள், கிராம நீர் வழங்கும் திட்டங்கள் முதலியவற்றின் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்களிலிருந்து நீர் மாதிரிகளை, சுகாதாரத் தரத்தை மதிப்பிடுவதற்காக பரிசோதித்து வருகின்றது. ஒவ்வோராண்டும் புதிய நீர் வழங்கல் காலமுறை சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன. தூய்மை கெடத்தக்க கழிவுப் பொருட்களை வெளியேற்றும் தொழிற்சாலைகள் கால முறைப்படியும், முன்னறிவிப்பின்றி திடீரென்றும் சென்று புலனாய்வு செய்யப்பட்டு அத்தொழிற்சாலைக் கழிவுகளை அப்புறப்படுத்தி முடிவு செய்யும் ஏற்பாடுகள் போதுமான அளவு செய்யப்படுகின்றனவா இல்லையா என்றும், நிலம் மேல்மட்ட நீர் மற்றும் சுற்றுப்புறக் காற்று தூய்மை கெடுகிறதா என்றும் மதிப்பிடப்படுகின்றன. இவ்வாய்வுகளில் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் மூலம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு தூய்மை கேடுகளைத் தடுப்பதற்கான வழிகளை மேம்படுத்துமாறோ உரிய விதிகளை நிறைவேற்றுமாறோ அறிவுறுத்துகிறார். மேலும் இந்த இயக்குநர் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான விண்ணப்பங்களை மக்கள் நல்வாழ்வு கண்ணோட்டத்தில் பரிசிலித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மாசு தடுப்பு நடவடிக்கைகள் போதுமானதா இல்லையா என்பது பற்றியும், சுற்றுப்புறம் மாசடையாமல் தடுக்கும் பொருட்டு எந்த நிபந்தனைகளுக்குக் கீழ் இந்த தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும் என்று அறிவுரை வழங்குகிறார். வளர்ந்துவரும் சுற்றுப்புறம் தூய்மை கெடும் பிரச்சினையைத் தமிழ்நாடு அரசு முழுவதுமாக உணர்ந்துள்ளதுடன் சட்டமியற்றுவது (தூய்மை கெடுதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் சட்டம்) குறித்து பரிசீலனை செய்து வருகிறது.

மத்திய அரசின் பரிந்துரையின்படி இவ்வரசு தமிழ்நாட்டில் உள்ள விமான நிலையங்கள், அமைந்திருக்கும் பகுதிகளுக்கு அருகே பறவைகளினால் ஏற்படும் ஆபத்து, அங்கீகரிக்கப்படாத குடிசைகள், உணவு விடுதிகள், இறைச்சி கடைகள், குப்பைகளை கொட்டுதல், பிணங்கள், திறந்த வெளி சாக்கடை முதலியன மூலம் ஏற்படும் சுற்றுப்புற மாசடையும் பிரச்சினையை கவனிக்க விமான நிலைய சுற்றுப்புற நிர்வாகக் குழு அமைத்துள்ளது.

## பிற்சேர்க்கை

நாமடும் சுகாதாரக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியல்.

### செங்கல்பட்டு மாவட்டம் (தெற்கு).

1. திருக்கழுகுன்றம்
2. அச்சரப்பாக்கம்
3. உத்திரமேரூர்
4. நந்திவரம்
5. திருப்புக்குடி
6. எழிச்சூர்
7. மதுரமங்கலம்
8. பவஞ்சூர்
9. ஜமீன் எண்டத்தூர்

### செங்கல்பட்டு மாவட்டம் (வடக்கு)

10. புதூர்
11. கும்மிடிபூண்டி
12. பீரகுப்பம்
13. கச்சூர்
14. நாரவாரிகுப்பம்
15. பேரம்பாக்கம்

### தென்னாற்காடு மாவட்டம்.

16. ஒரத்தூர்
17. கண்டமானடி
18. ஒலக்கூர்
19. கிளயனூர்
20. கெடார்
21. தியாகதுர்கம்
22. சிவக்கம்
23. மங்களூர்
24. கச்சிராபாளையம்
25. புதுப்பேட்டை
26. எளவனசூர்
27. முகையூர்
28. மைலம்
29. சத்தியமங்கலம்
30. சிறுவந்தாடு
31. திருநாவலூர்

### தஞ்சாவூர் மாவட்டம்.

32. ஆக்கூர்
33. தலைஞாயர்
34. பூதலூர்
35. கபிஸ்தலம்
36. காளி
37. திருவெண்காடு
38. பூந்தோட்டம்
39. ஆலங்குடி
40. தேலூர்
41. உள்ளிக்கோட்டை
42. ஆலத்தம்பாடி
43. அதிச்சபுரம்
44. கோனேரிராஜபுரம்
45. கொனுலம் பள்ளம்
46. முருக்கன்குடி
47. பட்டீஸ்வரம்

### புதுக்கோட்டை மாவட்டம்.

48. விராலிமலை
49. பொன்பேத்தி
50. அன்னவாசல்
51. மலையூர்
52. நற்சாந்துப்பட்டி
53. நாகுடி
54. அண்டாகுளம்
55. காடியாப்பட்டி
56. திருவரங்குளம்

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

57. லெப்பைகுடிக்காடு
58. சின்னதாராபுரம்
59. உப்பிமங்கலம்
60. உப்பிலியாபுரம்
61. மீன்சுருட்டி
62. திருமானூர்



### திருச்சிராப்பள்ளி மாவட்டம் —தொடர்ச்சி.

63. டி. புதூர்.
64. இனாம் கொளத்தூர்
65. வையப்பட்டி
66. துவரங்குறிச்சி
67. அம்மாபாளையம்
68. காரை
69. புதூர் உத்தமனூர்
70. வல்லிகொண்டபுரம்
71. வீரமச்சான்பட்டி
72. தொட்டியம்

### மதுரை மாவட்டம்.

73. எழுமலை
74. பாப்பம்பட்டி
75. வேடசந்தூர்
76. வாடிப்பட்டி
77. கடலூர்
78. ஓடைப்பட்டி
79. வீருவீடு
80. கள்ளிக்குடி
81. செக்கனூரணி
82. அலங்காநல்லூர்
83. நத்தம்
84. அம்மயநாயக்கனூர்
85. டொம்புசேரி
86. தேவதானப்பட்டி
87. கண்டமனூர்
88. கல்லந்திரி
89. கன்னிவாடி
90. கருங்காலகுடி
91. மன்னவனூர்
92. தாடிகொம்பு
93. புல்வலூர்

### இராமநாதபுரம் மாவட்டம்.

94. பேரையூர்
95. குன்னூர்
96. கல்லம நாயக்கன்பட்டி
97. கீழ்த்தூவல்
98. சாலைகிராமம்
99. திருவேகம்பட்டு
100. முத்துநந்தல்
101. செம்பனூர்
102. காரியப்பட்டி
103. எம். புதுப்பட்டி
104. போகலூர்
105. தேவிபட்டினம்
106. கடலாடி
107. கன்னிசேரிபுதூர்
108. பாண்டுகுடி
109. ஆர். ரெட்டியபட்டி
110. ஆர். எஸ். மங்கலம்,
111. திருஉத்திரகோசமங்கை
112. ஜமீன் கொல்லகொண்டான்.

### திருநெல்வேலி மாவட்டம்.

113. ஏரல்
114. வாசுதேவநல்லூர்
115. எலத்தூர்
116. ஆலங்குளம்
117. நாகலாபுரம்
118. ஒட்டநத்தம்
119. ரெட்டியப்பட்டி
120. திருக்கரன்குடி
121. திசையன்விளை
122. முக்கூடல்
123. கீழ ஈரால்
124. கரிவலம் வந்த நல்லூர்
125. பத்தமடை
126. பெரிலோவன்பட்டி
127. சேந்தமரம்
128. வல்லநாடு
129. முனைஞ்சிப்பட்டி

[1981 ஏப்ரல் 8

கன்னியாகுமரி மாவட்டம்.

130. கோத்தநல்லூர்
131. அகஸ்தீஸ்வரம்
132. சென்பகராமன்புதூர்
133. முட்டம்
134. ஆருதேசம்
135. கரிங்கல்
136. ராஜக்கமங்கலம்

வடார்க்காடு மாவட்டம்.

137. ஆலங்கயம்
138. வானாபுரம்
139. நரியம்பட்டு
140. குனிச்சி
141. காரப்பட்டு
142. மங்கலம்
143. தச்சூர்
144. பெருங்காட்டூர்
145. லால்பேட்டை
146. புன்னை
147. களம்பூர்
148. ஆண்டியப்பனூர்
149. கடலாடி
150. கீழ்பென்னாத்தூர்
151. வேட்டவலம்
152. கொம்மநேந்தல்
153. கொழப்பலூர்
154. காட்டம்பூண்டி
155. நார்த்தாம்பூண்டி
156. புதுப்பாடி
157. எஸ்,வி,நகரம்

சேலம் மாவட்டம்.

158. கொளத்தூர்
159. கங்கவல்லி
160. அரியாம்பாளையம்
161. மேச்சேரி
162. வாழவந்தி
163. பனமரத்துப்பட்டி
164. நயினம்பட்டி
165. எலத்தைகுட்டை
166. நல்லூர்
167. பாலப்பட்டி
168. பேறுகுறிச்சி
169. சித்தூர்
170. எருமைப்பட்டி
171. இராயமங்கலம்
172. கடயம்பட்டி
173. காரபட்டி
174. நாமகிரிப்பேட்டை
175. நங்கவல்லி
176. சரக்க பிள்ளையூர்
177. தலைவாசல்
178. வாழவந்திநாடு
179. மாணிக்கம்பாளையம்

தர்மபுரி மாவட்டம்.

180. பர்கூர்
181. சூளகிரி
182. கீளமங்கலம்
183. பெண்ணாகரம்
184. கடத்தூர்
185. தீர்த்தமலை
186. பாரூர்
187. பாகலூர்
188. கக்கதாசம்
189. மேகலசின்னம்பள்ளி
190. பாப்பிரெட்டி பட்டி



1981 ஏப்ரல் 8]

கோயம்பத்தூர் மாவட்டம்.

191. அவனாசி.
192. எரிசனம்பட்டி
193. குடிமங்கலம்
194. காரமடை
195. சர்க்கார் சாமகுளம்
196. புளுவபட்டி
197. நல்லாட்டி பாளையம்
198. அரிசிபாளையம்
199. அன்னூர்
200. கனியூர்
201. கோளார்பட்டி
202. பெருமாநல்லூர்

பெரியார் மாவட்டம்.

203. மூலனூர்
204. சிவகிரி
205 சிறுவளூர்
206. உக்கரம்
207. சென்னிமலை.
208. சித்தோடு

பெரியார் மாவட்டம்—தொடர்ச்சி.

209. சாவடிப்பாளையம்
210. மொடக்குறிச்சி
211. குருவாரெட்டியூர்
212. கவந்தபாடி
313. கோலநல்லி
214. தாளவாடி
215. தூக்கநாயக்கன் பாளையம்.
216. பெருந்துரை
217. வெள்ளக்கோயில்
218. நம்பியூர்.

நீலகிரி மாவட்டம்.

219. நெடுங்குளம்
220. பந்தலூர்
221. கேட்டி
222. டி. ஓரநல்லி
223. துனேரி
224. நெல்லக்கோட்டை

## பிற்சேர்க்கை--2.

### மாநிலத்தில் வாந்தி பேதி (காலரா) நோயாளிகளின் எண்ணிக்கை

| மாவட்டங்கள். | 1978. பாதிப்பு. | 1978. இறப்பு. | 1979. பாதிப்பு. | 1979. இறப்பு. | 1980. பாதிப்பு. | 1980. இறப்பு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| சென்னை | 2,207 | 43 | 867 | 21 | 2,684 | 42 |
| செங்கல்பட்டு (வடக்கு) | 226 | 4 | 160 | 6 | 155 | 0 |
| செங்கல்பட்டு (தெற்கு) | 50 | 1 | 41 | 0 | 20 | 1 |
| தென்னாற்காடு | 78 | 5 | 31 | 0 | 68 | 12 |
| தஞ்சாவூர் | 9 | 0 | .. | .. | 49 | 1 |
| புதுக்கோட்டை | 1 | 0 | 1 | 0 | 2 | 0 |
| திருச்சிராப்பள்ளி | 87 | 0 | 25 | 1 | 31 | 1 |
| மதுரை | 112 | 4 | 44 | 2 | 19 | 0 |
| இராமநாதபுரம் | 20 | 0 | 11 | 2 | 6 | 0 |
| திருநெல்வேலி | 15 | 0 | 29 | 1 | 16 | 1 |
| கன்னியாகுமரி | .. | .. | 1 | 0 | 2 | 0 |
| வடார்காடு | 94 | 5 | 85 | 4 | 255 | 15 |
| சேலம் | 18 | 1 | 31 | 1 | 102 | 0 |
| தர்மபுரி | 18 | 1 | 6 | 0 | 13 | 0 |
| கோயம்புத்தூர் | 3 | 1 | 4 | 0 | 11 | 1 |
| பெரியார் | .. | .. | .. | .. | 8 | 0 |
| நீலகிரி | 1 | 0 | .. | .. | .. | .. |
| மொத்தம் | 2,933 | 65 | 1,336 | 38 | 3,441 | 74 |

பிற்சேர்க்கை 2 (அ).

மாநிலத்தில் கடுமையான குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.

| மாவட்டங்கள். | 1978 | | 1979 | | 1980 | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிப்பு. | இறப்பு. | பாதிப்பு. | இறப்பு. | பாதிப்பு. | இறப்பு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| சென்னை .. .. .. .. | 3,007 | 79 | 2,246 | 35 | 2,120 | 29 |
| செங்கல்பட்டு (வடக்கு) .. .. | 465 | 5 | 391 | 25 | 476 | 27 |
| செங்கல்பட்டு (தெற்கு) .. .. | 866 | 0 | 217 | 1 | 504 | 19 |
| தென்னாற்காடு .. .. .. | 773 | 35 | 383 | 15 | 726 | 70 |
| தஞ்சாவூர் .. .. .. | 289 | 22 | 48 | 1 | 2,584 | 54 |
| புதுக்கோட்டை .. .. .. | 37 | 7 | 38 | 1 | 1 | 0 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 986 | 20 | 826 | 3 | 1,492 | 8 |
| மதுரை .. .. .. .. | 1,826 | 36 | 1,251 | 27 | 1,508 | 13 |
| இராமநாதபுரம் .. .. .. | 173 | 15 | 171 | 15 | 241 | 28 |
| திருநெல்வேலி .. .. .. | 146 | 7 | 551 | 32 | 142 | 22 |
| கன்னியாகுமரி .. .. .. | 60 | 0 | 69 | 9 | 18 | 0 |
| வடார்காடு .. .. .. | 984 | 71 | 697 | 61 | 2,389 | 136 |
| சேலம் .. .. .. .. | 1,575 | 43 | 1,259 | 49 | 1,209 | 65 |
| தர்மபுரி .. .. .. .. | 139 | 38 | 85 | 10 | 169 | 29 |
| கோயம்புத்தூர் .. .. .. | 556 | 17 | 303 | 9 | 206 | 9 |
| பெரியார் .. .. .. | .. | .. | .. | .. | 116 | 9 |
| நீலகிரி .. .. .. .. | 23 | 0 | 105 | 2 | 127 | 9 |
| மொத்தம் .. | 11,905 | 395 | 8,640 | 295 | 14,028 | 527 |

பிற்சேர்க்கை.

மலேரியாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.

| மாவட்டங்கள். (1) | 1978. (2) | 1979. (3) | 1980. (4) |
|---|---|---|---|
| சென்னை .. .. .. .. | 29,953 | 33,460 | 36,193 |
| செங்கல்பட்டு (வடக்கு) .. .. | 199 | 271 | 313 |
| செங்கல்பட்டு (தெற்கு) .. .. | 248 | 431 | 239 |
| தென்னாற்காடு .. .. .. | 995 | 1,350 | 1,346 |
| தஞ்சாவூர் .. | 610 | 320 | 342 |
| புதுக்கோட்டை .. | 24 | 29 | 14 |
| திருச்சிராப்பள்ளி .. | 2,482 | 777 | 599 |
| இராமநாதபுரம் .. .. | 17,699 | 40,235 | 20,867 |
| மதுரை .. .. .. | 1,565 | 1,053 | 1,122 |
| திருநெல்வேலி .. .. .. | 1,787 | 1,699 | 848 |
| கன்னியாகுமரி | 591 | 520 | 164 |
| வடார்காடு | 3,794 | 2,814 | 1,551 |
| சேலம் .. | 7,038 | 8,229 | 4,241 |
| தர்மபுரி .. | 3,647 | 1,674 | 995 |
| கோயம்புத்தூர் | 5,538 | 177 | 152 |
| பெரியார் | .. | 1,917 | 3,634 |
| நீலகிரி .. | 57 | 54 | .. |
| மொத்தம் .. | 76,227 | 95,009 | 72,651 |

பிற்சேர்க்கை 4.

மாநில சுகாதார போக்குவரத்து நிறுவனம்.

ஆண்டு மற்றும் திட்டவாரியான ஊர்திகளின் பகிர்மான அறிக்கை.

| ஆண்டு. | ஆரம்ப சுகாதார நிலையங்கள். | மலேரியா. | கொள்ளை நோய். | தடுப்பு ஊசி. | யானைக்கால் | நடமாடும் தொழில் பட்டறை. | நல்வாழ்வுக் கல்வி. | நரம்புச் சிலந்தி நோய். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 0—2 .. | 50 | 7 | .. | .. | 2 | .. | .. | .. |
| 2—4 .. | 51 | 14 | 1 | .. | 2 | .. | .. | .. |
| 4—6 .. | .. | 1 | 2 | 10 | 6 | .. | .. | .. |
| 6—8 .. | 45 | 4 | 2 | 2 | .. | .. | .. | .. |
| 8—10 .. | 85 | 1 | 2 | 6 | .. | 9 | .. | .. |
| 10—12 .. | 49 | .. | 2 | .. | .. | .. | .. | .. |
| 12—14 .. | 39 | .. | 2 | .. | .. | .. | .. | .. |
| 14—16 .. | 8 | .. | 6 | .. | .. | .. | 1 | .. |
| 16—18 .. | 12 | .. | 2 | 4 | .. | .. | 1 | .. |
| 18—20 .. | 22 | 5 | 4 | 5 | .. | 6 | 1 | 4 |
| 20-க்கு மேல் .. | 95 | 128 | 6 | 2 | 8 | .. | 7 | 2 |
| மொத்தம் .. | 456 | 160 | 29 | 29 | 18 | 15 | 13 | 6 |

| ஆண்டு. | ஊட்டச்சத்து. | மகப்பேறு மற்றும் சேய் நலம். | பால் நோய். | இங் நிலையம். | புள்ளி விவரம். | காளா ஆஜர். | மா. க. போ. தி. | குடும்ப நலம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 0—2 .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 |
| 2—4 .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 4—6 .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 6—8 .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | 13 |
| 8—10 .. | 1 | 1 | .. | .. | .. | .. | .. | 265 |
| 10—12 .. | 1 | .. | .. | 1 | .. | .. | .. | 65 |
| 12—14 .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 8 |
| 14—16 .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | 16 |
| 16—18 .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 3 |
| 18—20 .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 |
| 20 மற்றும் மேலும். | .. | 1 | .. | .. | .. | 1 | .. | .. |
| மொத்தம் .. | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 374 |

| | | காசநோய். | தொழுநோய். | தொ. சு. உ. | கண்முகாம் | ஆர். எச். | ம. க. இ. | இ. ம. இ. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) |
| 0—2 | .. | 1 | .. | 1 | .. | .. | 24 | .. | 87 |
| 2—4 | .. | 6 | 22 | 7 | .. | .. | 4 | .. | 107 |
| 4—6 | .. | 12 | 23 | 5 | .. | .. | 38 | .. | 82 |
| 6—8 | .. | 9 | 14 | 2 | 13 | 8 | 13 | 12 | 107 |
| 8—10 | .. | 7 | 6 | 3 | 4 | 3 | 28 | 1 | 422 |
| 10—12 | .. | 8 | 5 | 1 | .. | .. | 18 | .. | 152 |
| 12—14 | .. | 13 | .. | 4 | 1 | .. | 12 | .. | 80 |
| 14—16 | .. | 12 | 1 | 11 | .. | .. | 19 | .. | 76 |
| 16—18 | .. | 8 | 2 | .. | .. | .. | 6 | .. | 40 |
| 18—20 | .. | 4 | 7 | 4 | .. | .. | 16 | .. | 80 |
| 20 மற்றும் மேலும் | | 20 | 10 | 2 | .. | .. | 13 | .. | 295 |
| மொத்தம் | .. | 100 | 90 | 40 | 18 | 11 | 156 | 3 | 1,528 |



## இணைப்பு V

[103 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

1981–82 ஆம் ஆண்டுக்கான கோரிக்கை எண் 19-ன் துணைக் கோரிக்கை.

நிதி மதிப்பீடு ரூபாய் 3,299.73 இலட்சங்கள்.

### முன்னுரை.

குடிநீர் மனித இனத்திற்கு மிகவும் அவசியம். பாதுகாக்கப் பட்ட குடிநீர் மனித வளர்ச்சிக்கும் சுகத்திற்கும் மிகவும் தேவை. அனைத்து மக்களுக்கும் வேண்டியபொழுது குடிநீர் வழங்குவதே இவ்வரசின் கொள்கையாகும். இக்கொள்கையினை நிறைவேற்ற ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற இவ்வரசு போதிய நிதியினை ஒதுக்கீடு செய்து வருகிறது.

### கிராமப்புற குடிநீர்த் திட்டங்கள் :

கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களை கீழ்க் கண்ட ஆறு வகைகளாகப் பிரிக்கலாம் :—

| வகை. | விளக்கம். | குடியிருப்பு எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | குடியிருப்புக்குள் எவ்வித நீர் ஆதாரமும் இல்லாத குடியிருப்புகள். | 3,454 |
| 2. | நீர் ஆதாரங்கள் இருந்தும் அவை குடிநீருக்குத் தகுதியற்ற உவர் நீராக மட்டும் உள்ள குடியிருப்புகள். | 1,966 |
| 3. | குடிநீர் ஆதாரங்கள் இருந்தும் அவை வற்றாத தன்மை இல்லாதனவாக உள்ள குடியிருப்புகள். | 6,487 |
| 4. | வற்றாத தன்மையுடையதும் குடிநீருக்குப் பயன்படக்கூடியதும் அவை தனியார் உடைமையாகவோ அல்லது பாதுகாக்கப்படாமலோ உள்ள குடியிருப்புகள். | 4,955 |

| வகை. | விளக்கம். | குடியிருப்பு எண்ணிக்கை. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 5. | குடியிருப்புக்குள்ளேயே குடிநீர் ஆதாரங்கள் இல்லாதன. ஆனால், ஒரு கி.மீ. தொலைவிற்குள் நல்ல குடிநீர் ஆதாரத்தைக் கொண்டுள்ள குடியிருப்புகள். | 1,107 |
| 6. | நல்ல குடிநீர் ஆதாரங்கள் உடைய குடியிருப்புகள். | 29,106 |
| | | 47,075 |

மேலே கூறப்பட்ட முதல் நான்கு வகைகளுக்கும் ஒரு கி.மீ. தொலைவிற்குள் குடிநீர் ஆதாரங்கள் இல்லை. குடிநீர் வழங்கு திட்டங்கள் இந்த வரிசையில் நிறைவேற்றப்பட வேண்டும் இன்னும் அடிப்படையில் குடியிருப்புகள் மேலே கண்டுள்ள வரிசையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முதல் இரண்டு வகை குடியிருப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. 1977–78 ஆம் ஆண்டில் 1,2 வகைகளின்கீழ் வரும் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் 1981 பிப்ரவரி முடிய 18.16 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 4,401 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பணி முடிவுற்றுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன. மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குதல், சாலை போடுதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்ய " தன்னிறைவுத் திட்டத்தினை " அரசு மேற்கொண்டு அவைகளை கால அளவில் நிறைவேற்றி வருகிறது. முதல் இருவகைகள் தவிர முதற்கட்ட கால அளவில் 3,4 மற்றும் 5 ஆம் வகையைச் சார்ந்த 2,262 குடியிருப்புகள் குடிநீர் வசதிகளைப் பெறும் வாய்ப்புள்ளது.

இரண்டாவது கால அளவிலான 1981–82-ல் 2,000 குடியிருப்புகள் இத்திட்டத்தின்கீழ் பல வசதிகளைப் பெறும் வாய்ப்புள்ளன. இத் திட்டங்களை இந் நிதியாண்டில் நிறைவேற்ற ரூபாய் 1,100 இலட்சங்களை ஊரகக் குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மத்திய அரசும் துரிதகால குடிநீர் வழங்கும் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு மாநில அரசுக்கு நிதி உதவி அளித்து வருகின்றது. தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ரூபாய் 221.37 இலட்சங்கள் 1980–81 ஆம் ஆண்டிற்கு அனுமதி அளித்தது. இத்திட்டங்களுக்கென நடப்பு ஆண்டான 1981–82 ஆம் ஆண்டில் ரூபாய் 500 இலட்சங்கள் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

வறட்சி நிவாரணப் பணிகள் :

வறட்சி நிலவி வரும் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு 1,500 குழாய்க் கிணறுகள் வீதம் ஆறு மாத கால அளவில் 9,000 குழாய்க் கிணறுகள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிளை நிறைவேற்ற போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊரகக் குடிநீர்த் திட்ட பராமரிப்பு முறை :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாது அத்திட்டங்களைப் பராமரிக்கும் பொறுப்பையும் மேற்கொண்டுள்ளது. தமிழகத்தில் சுமார் 22,072 கையிறைப்பான்களும் (Hand pumps) 10,570 மின்விசை இறைப்பான்களும் உள்ளன. கையிறைப்பான்கள் பராமரிப்பை 1976–77 முதல் வாரியம் மேற்கொண்டு வருகின்றது. மின்விசை இறைப்பான் பராமரிப்புத் திட்டத்தினை, சோதனை முறையாக (Experimental basis) செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் 1978–79 ஆம் ஆண்டு வாரியம் மேற்கொண்டது. தற்போது தமிழகத்திலுள்ள அனைத்து சிற்றூர்களிலுமுள்ள மின்விசை இறைப்பான் பராமரிப்பையும் (Power pumps maintenance) வாரியமே 1980 ஜனவரி திங்கள் முதல் வாரியத்தின் வேலை என ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாநிலத்தில் பல இடங்களில் வறட்சி நிலவுவதால் கையிறைப்பான்களையும் மின்விசை இறைப்பான்களையும் பழுது பார்க்கும் வேலையை வாரியம் மேற்கொண்டு உள்ளது.

நகர்புற குடிநீர் வழங்கும் பராமரிப்புகள் :

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்று வாரியம் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கி வருவதோடு அத்திட்டங்களை இவ்வாரியமே பராமரித்து வருகின்றது. அத் திட்டங்கள் பின்வருமாறு :—

| வரிசை | திட்டத்தின்பெயர். | 1981–82 நிதி மதிப்பீடு. (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|---|
| 1 | பாதுகாப்புத் தொழிற்சாலை, ஆவடி குடிநீர் வழங்கும் திட்டம். | 9.00 |
| 2 | திருவான்மியூருக்குத் தெற்கே கடலோர நீரோட்டத்திலிருந்து சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம். | 3.00 |
| 3 | திருச்சி வட்டார பொறியியல் கல்லூரிக்கான குடிநீர் வழங்கும் திட்டம். | 2.00 |
| 4 | வெங்கூர் சிறிய போர்கருவி திட்டத்திற்கு குடிநீர் திட்டம். | 2.00 |
| 5 | தூத்துக்குடி மூன்று மில்லியன் காலன்கள் குடிநீர்த் திட்டம். | 4.00 |
| 6 | தூத்துக்குடி துறைமுகத்திற்கான 20 மில்லியன் காலன்கள் குடிநீர்த் திட்டம். | 17.50 |
| | மொத்தம் .. | 3[illegible].50 |

முன் முதலீட்டுப் பணிகள் :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உலக வங்கி நிதி உதவியுடன் 69 நகரங்களில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றும் பூர்வாங்க பணிகளை மேற்கொண்டுள்ளது. இத் திட்டங்களை நிறைவேற்ற 1981–82 ஆம் ஆண்டில் அரசு நிதி ரூபாய் 90 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.



சென்னை நகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றும் திட்டங்கள்.

சென்னை நகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் அரசு உதவியுடன் தனது திட்டங்களை நிறைவேற்ற 1981–82 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 1,061.44 இலட்சங்களை ஒதுக்கி உள்ளது. இந்த ஒதுக்கீட்டில் இரு முக்கிய திட்டங்கள் அடங்கி உள்ளன.

''உடனடி பணிகள் திட்டம்'' (Immidiate Works Programmes) என்று முதல் பகுதி ''சென்னை புறநகர் மேம்பாட்டு திட்டத்தின்'' (Madras Urban Development Project) ஒரு பகுதியாக உலக வங்கியிடமிருந்து ரூ. 954 இலட்சம் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இரண்டாவது பகுதியான அரசின் உதவியுடன் குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்றுதல் துறைகளைச் சீர்படுத்தி அபிவிருத்தி செய்யும் திட்டமாகும்.

1. உடனடி பணிகள் திட்டம் :

(அ) குடிநீர்ப் பிரிவு :

உடனடி பணிகள் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கலில் தற்போது கிடைக்கும் நீரை முழுமையாக உபயோகித்துக் கொள்வதற்காக நீர்ச்சேதத்தையும், நீர்க்கசிவையும் தவிர்த்து தற்போதுள்ள விநியோக முறையைச் சீர்படுத்துவதில் முக்கியத்துவம் தரப்படுகிறது. 25,000 வீட்டு இணைப்புகளுக்கு நீர் அளவைக்கருவிகள் பொருத்துவது, 11,000 பழுதடைந்த மீட்டர்களைப் பழுது பார்ப்பது, விநியோக முறையிலுள்ள நீர்க்குழாய்களில் அளவைக் கருவிகள் மற்றும் தடுக்கிதழ்கள் பொருத்துவது, தொழிலாளர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சிக்கூடம் கட்டுதல், நீரளவைக் கருவிகளைப் பழுதுபார்க்கும் பணிமனை கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் உள்ள சில முக்கியப் பணிகளாகும்.

(ஆ) கழிவு நீர்ப் பிரிவு:

கழிவுநீர் பிரிவில் 15 கழிவு நீரேற்று நிலையங்களை அவை மேலும் சிறந்த முறையில் செயல்பட 5.50 கோடி ரூபாய் செலவில் புதுப்பித்தலுக்கான ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மனிதக் கழிவுகளை ஊழியர்களின் நேரடி தொடர்பின்றி அகற்றுவதற்கான கருவிகளை 1981–82 ஆம் ஆண்டில் வாங்கும் பணி நிறைவேற்றப்படும். இதனால் துப்புரவுத் தொழிலாளர்கள் நேரடியாகக் கழிவுகளை அகற்றும் முறை ஒழிக்கப்படும்.

2. மற்ற திட்டங்கள்:

அ) குடிநீர்ப் பிரிவு.

தற்போது நாளொன்றுக்கு 23 மில்லியன் காலன்,, 32
மில்லியன் காலன், குடிநீர் வழங்கும் பாதாள குழாய்கள்
செயல்பட்டு வருகின்றன. 23 மில்லியன் காலன் வழங்கும்
குடிநீர் பாதாள குழாய்கள் 60 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்
பட்டதாலும் அவைகள் எந்நேரமும் பழுதடையலாம். அவைகள்
பழுதடைந்தால் சென்னை நகரில் குடிநீர் வழங்குவதில் சிக்கலும்
அவதியும் நேரலாம். இக்குறைகளை போக்கிட 42 மில்லியன் நீர்
காலன்வழங்கும் பாதாள குழாய்கள் ரூ. 288 லட்சம் செலவில்
செய்ய அரசு அனுமதி வழங்கி உள்ளது. செங்குன்றத்தில் இருந்து
கீழ்ப்பாக்கத்திற்கு குடிநீரை எடுத்துச் செல்வதற்காக மூன்றாவது
நீரேற்றும் குழாய்களை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்
பட்டுள்ளது. 40 அல்லது 50 ஆண்டு காலமாக நடைமுறையி
லிருக்கும் குடிநீர் குழாய்களை ரூ. 100 லட்சங்கள் செலவு
செய்து பழுது பார்க்கும் திட்டங்களை மேற்கொள்ள சென்னை
நகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் முயன்றும்
வருகிறது. சென்னை புறநகர்களாகிய கருணாநிதி நகர், வேளச்
சேரி, போன்ற இடங்களில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்கு
வதற்கான திட்டங்களைத் துரிதப்படுத்தவும் முயற்சி மேற்கொள்
ளப்படும்.

தற்பொழுது சென்னை நகருடன் இணைக்கப்பட்ட ஊராட்சி
களுக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ. 206 லட்சம் செலவு செய்ய
இவ்வாரியம் மேற்கொண்டுள்ளது. திருவான்மியூர் பஞ்சாயத்
திற்கு 1981-82 ஆம் ஆண்டில் குடிநீர் வழங்குவதற்கான வேலை
கள் செயல்படுத்தப்படும். சென்னை நகரில் இதுவரை குடிநீர்
வசதிப்பெறாத இடங்களுக்கு இத்திட்டத்தை நிறைவேற்ற
ரூ. 175 லட்சம் செலவு செய்து நீரேற்றும் குழாய்களை அமைக்கும்
பணியும் செய்யப்படும். மின்சார தடை ஏற்படும் காலத்தில்
சென்னை நகருக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்க மின்சார
ஜெனரேட்டர்களை தெற்கு பிராந்திய பணியிடத்திலும் ராபின்
சன் பூங்கா நீரேற்றும் நிலையத்திலும் அமைக்கப்பட இருக்
கிறது.

(ஆ) கழிவுநீர்ப் பிரிவு.

நகரத்தில் ஏற்கெனவே இல்லாத சில இடங்களில் பாதாள
கழிவு நீர் அகற்றும் முறை செயல்படுத்தப்படும். மக்கள்
அதிகமாக வசிக்கும் ஜார்ஜ் டவுன் பகுதியில் நீண்ட 70 ஆண்டு
காலமாக இருந்து வரும் கழிவு நீர் அகற்றும் முறையை மாற்ற
ரூ 47·25 லட்சம் செலவில் ஒரு திட்டம் இந்த நிதி ஆண்டில்
செயல்படுத்தப்படும். மாம்பலம் குளக்கரைப் பகுதியில் ரூபாய்
60 லட்சம் செலவிலும், மற்றும் கோட்டூர்புரம், பள்ளிப்பட்டு



மேலபட்டாடை பகுதியில் ரூ. 100 லட்சம் செலவிலும் கழிவுநீர்
அகற்றும் பணி ஆரம்பிக்கப்படும். மற்றும் ஒரு கழிவு நீர்
சுத்திகரிப்பு நிலையம் ரூ. 750 லட்சம் செலவில் கொடுங்கை
யூரிலும் மற்ற நிலையங்கள் சென்னை-வடக்கு, சென்னை-மேற்கு
பகுதிகளில் ரூ. 800 லட்சம் செலவு செய்து கழிவு நீரை
கூவம் ஆற்றில் விழாமல் தடுக்கப்படும். அடையாறு நதியில்
கழிவுநீர் போய்ச் சேருவதை தடுக்க சைதாப்பேட்டை அசோக்
நகரை சுற்றியுள்ள நீரேற்று நிலையங்களில் சில அபிவிருத்தி
கள் ரூபாய் 90 லட்சம் செலவில் செய்யப்படும்.

நகரத்தில் குடிநீர் வசதி அதிகரித்தல்:

பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஏரிகளிலிருந்து சென்னை
நகரம் தற்போது நாளொன்றுக்கு 250 மில்லியன் லிட்டர் குடி
நீர் பெற்றுவருகிறது. வளர்ந்து வரும் மக்கள் தொகை, தொழில்
அபிவிருத்தி, தொழில் வளர்ச்சி தற்போது தனி மனிதன் ஒரு
வருக்கு நாளொன்றுக்கு வேண்டிய 70 லிட்டர் நீரின் அளவை
கருத்தில் கொண்டு கி.பி. 2002 ஆம் ஆண்டில் சென்னை
நகருக்கு தேவைப்படும் தண்ணீரின் அளவு நாளொன்றுக்கு 1,294
மில்லியன் லிட்டர் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு முக்கிய
மாகக் குறிப்பிட வேண்டியது சென்னைக்கு காவேரி நீரைக்
கொண்டு வருவது பற்றியதாகும். காவேரி நீரை திருச்சி
மாவட்டத்திலுள்ள கட்டளைக் கால்வாயிலிருந்து செங்கை
மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கத்திலுள்ள ஏரிக்கு கொண்டு
வந்து பின்னர் அதனைச் சென்னைக்கு குடிநீராக வினியோகிக்கப்
படும். இத்திட்டத்தை மாநில பொதுப்பணித்துறையினரால்
நிறைவேற்றப்பட்டு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு
நீர் அகற்று வாரியத்தால் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கப்
படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 459 கோடியாகும்.
இதற்கான செயற்குறிப்பினை உலக வங்கியிலிருந்து நிதி உதவி
பெற மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை நகரில் குடிநீர் வழங்கலை மேம்படுத்த கொரட்ட
லியார் கரையோரப் பகுதியிலுள்ள நிலத்தடி நீர், மேல்மட்ட
நீர் இவற்றினை ஒருங்கிணைந்து உபயோகப்படுத்துவதற்காக
ஐக்கிய நாடு அபிவிருத்தித் திட்டத்துடன் ஒரு விரிவான ஆய்வுத்
திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்
வாயிலாக நாளொன்டுக்கு 200 மில்லியன் லிட்டர் அதிகத்
தண்ணீர் கிடைக்கலாம்.

[1981 ஏப்ரல் 3

சென்னையில் மழைத் தண்ணீர் வடிகால் திட்டங்கள்.

சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் கழிவுநீர் அகற்றல் வாரியம் ஏற்பட்ட பின்பும், சென்னை நகர மழைநீர் வடிகால் திட்டங்கள் தொடர்ந்து சென்னை மாநகராட்சியால் நிறுவப் பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன. இத்திட்டத்திற்காக அரசு 1980–81 ஆம் நிதியாண்டில் ரூ. 20 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

V211,31 N81
N83·(83)
122192